வெளியீடு—12—9—1974]
Issued—12—9—1974]

B. III

தமிழ்நாடு சட்டப் பேரவை நடவடிக்கைகள்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEBATES

# பணித்துறை வெளியீடு

## OFFICIAL REPORT

வெள்ளிக்கிழமை 1974 மார்ச் 15

Friday 15th March 1974

தொகுதி L—எண் 1

Volume L—No. 1

©
தமிழ் நாடு அரசு
1974
GOVERNMENT OF TAMIL NADU
1974

சட்டப் பேரவைத் துறை
சென்னை-9.

*Legislative Assembly Department*
*Fort St. George, Madras-9*

விலை 50 காசுகள்]
PRICE 50 PAISE]

V211,31 N74
3/N74.50
61647

# Tamil Nadu Legislative Assembly Debates.

TENTH SESSION OF THE FIFTH LEGISLATIVE ASSEMBLY UNDER THE CONSTITUTION OF INDIA.

---

15*th*, 16*th*, 18*th and* 19*th March* 1974.

---

VOLUME L (Nos. 1 to 4).

---

TABLE OF CONTENTS.

*Friday*, 15*th March* 1974.


| | PAGES |
|---|---|
| Personnel of the Government of Tamil Nadu ... | i–vi |
| Principal Officers of the Tamil Nadu Legislative Assembly ... ... ... ... ... | vii |
| List of Members of the Tamil Nadu Legislative Assembly with their Constituencies ... ... | ix–xv. |
| 1. Questions and Answers ... ... ... ... | 1–28 |
| 2. Voting on Demands for Advance Grants for the year 1974–75 (Vote on Account) ... ... | 29–35 |
| 3. Announcement— The Tamil Nadu Appropriation (Vote on Account) Bill, 1974 ... ... ... | 36 |
| 4. Government Bill— The Tamil Nadu Appropriation (Vote on Account) Bill, 1974 ... ... ... | 36–37 |

*Friday, 15th March 1974—cont.*


| | | Pages |
|---|---|---|
| 5. | Voting on Demands for Grants for the year 1974-75—*cont.* | |
| | (i) Demand No 3—Motor Vehicles Acts—Administration. | |
| | (ii) Demand No. 39—Road Transport Schemes. | |
| | (iii) Demand No. 53—Capital Outlay on Road Transport Schemes. | |
| | (iv) Demand No. 43—Stationery and Printing | 37-122 |
| 6. | Papers laid on the Table ... ... ... | **122-123** |


*Saturday, 16th March 1974.*


| | | |
|---|---|---|
| 1. | Questions and Answers ... ... ... | **143-172** |
| 2. | Government Motions— | |
| | (i) Election to the Committee of Privileges ... | 173 |
| | (ii) Election to the House Committee ... ... | 173-174 |
| 3. | Announcements— | |
| | (i) Election to the Committee of Privileges ... | 173 |
| | (ii) Election to the House Committee ... | 174 |
| 4. | Government Bill— | |
| | The Tamil Nadu Appropriation (Vote on Account) Bill, 1974 (L.A. Bill No. 9 of 1974) ... ... | 174-176 |
| 5. | Point of Order— | |
| | Circulation of Performance Budgets and connected papers ... ... ... ... | 176 |
| 6 | Voting on Demands for Grants for the year 1974-75—*cont.* | |
| | Demand No. 31—Welfare of the Backward Classes, etc. | |
| | Demand No. 6—Registration Department ... | 176-243 |
| 7. | **Papers laid on the Table** ... ... ... | **244-245** |




*Monday, 18th March 1974.*


| | | Pages |
|---|---|---|
| 1. | Questions and Answers ... ... ... ... | 293-321 |
| 2. | Point of Order— | |
| | Alleged threatening of a Member by another | 322-326 |
| 3. | Voting on Demands for Grants for the year 1974-75—*cont.* | |
| | (i) Demand No. 18—Medical ... ... | |
| | (ii) Demand No. 19—Public Health ... ... | |
| | (iii) Demand No. 47—Capital Outlay on Public Health, Sanitation and Water Supply ... | |
| | (iv) Demand No. 33—Urban Development ... | 326-417 |
| 4. | Papers laid on the Table ... ... ... | 417-418 |


*Tuesday, 19th March 1974.*


| | | |
|---|---|---|
| 1. | Questions and Answers ... ... ... | 499-527 |
| 2 | Statement by Minister— | |
| | Correction to answer given to a supplementary question by the Minister for Education and Tourism — ... ... ... | 528 |
| 3 | Adjournment Motion— | |
| | Strike in Basin Bridge Thermal Station and the consequent fall in production of electricity | 528-533 |
| 4. | Announcement— | |
| | The Tamil Nadu Motor Vehicles Taxation Bill, 1974 ... ... ... ... ... | 534 |
| 5. | Government Bill— | |
| | The Tamil Nadu Motor Vehicles Taxation Bill, 1974 ... ... ... ... | 534 |
| 6. | Voting on Demands for Grants for the year 1974-75—*cont.*— | |
| | (i) Demand No. 20—Agriculture ... ... | |
| | (ii) Demand No. 48—Capital Outlay on Agriculture ... ... ... ... ... | |
| | (iii) Demand No. 22—Animal Husbandry ... | 534-648 |
| 7 | Papers laid on the Table ... ... ... | 649-650 |

## HOW TO USE THE INDEX.

The Index is arranged alphabetically. The Main Headings are printed from the margin and the sub-headings are indented from the main headings.

Under every Main Heading including various names, entries pertaining to proceedings other Questions are indicated by printing immediately after the subject-matter within brackets, e.g., (M) for Motion, (C.A.) for Calling Attention, (R) for Resolution. (St.) for Statement, etc. An entry without any such indication will mean that it pertains to a question, except in the case of Bills and Financial Business, the entry in which cases will be self-explanatory.

All the Bills are alphabetically arranged under the Main Heading ' Bill(s) '.

Various bodies like Committees, Councils, Boards, Corporations etc., are consolidated under the said Main Headings, i.e., ' Committee(s) ', ' Council(s) ', ' Corporation(s) ', etc.

Various subjects like Schools, Colleges, Conferences, Ports, Temples and similar other broad subjects are shown in alphabetical order under these very Main Headings.

All the Papers laid on the Table of the House are indexed only under the Main Heading " Papers Laid on the Table ".

Rulings and Observations from the Chair are indexed under the Main Heading " Chair ".

A list of abbreviations used in the Index is given below :—

| | | |
|---|---|---|
| A.M./Ad. Motion | ... | Adjournment Motion. |
| Am. | ... | Announcement. |
| B.O.H. | ... | Business of the House. |
| C.A. | ... | Calling Attention to a matter of urgent public importance. |
| C.A. (St.) | ... | Celling Attention Statement. |
| Consid | ... | Consideration stage of a Bill. This stage includes : (i) Motion to refer to Select/Joint Select Committee. (ii) Amendment to refer to Select/Joint Select Committee. (iii) Amendment to circulate. (iv) Motion to consider as reported by Select/Joint Select Committee. (v) Amendment to re-commit to Select/Joint Select Committee, etc. |
| Consid. Cl. | ... | Consideration of clauses of a Bill. |
| D.E.E. | ... | Demands for Excess Expenditure. |
| Dis. S.D. or D.S.D. | ... | Discussion for Short Duration on an urgent matter of administration. |
| D.S.G. | ... | Demand for Supplementary Grants. |
| G.A. | ... | Governor's Address. |
| G.D. | ... | General Discussion. |
| H.A.H Dis./H.H.D. | ... | Half-hour Discussion. |
| Int. | ... | Introduction stage of a Bill |
| L.A. | ... | Legislative Assembly. |
| L.C. | ... | Legislative Council. |
| M. | ... | Motion. |
| P.M. | ... | Privilege Motion. |
| R/Res. | ... | Resolution. |
| St. | .. | Statement. |

## தமிழ் நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும்

---

### தமிழ் நாடு ஆளுநர்.

### மேதகு திரு. கோதர்தாஸ் காளிதாஸ் ஷா

---

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1. **மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** *(முதலமைச்சர்)* கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: பொதுத் துறை, நிதி, திட்டம், பொது நிர்வாகம், இந்திய சிவில் பணியாளர் தொகுதி (ஐ.சி.எஸ்.), இந்திய ஆட்சிப் பணியாளர் தொகுதி (ஐ.ஏ.எஸ்.) அதிகாரிகள், மாவட்ட வருவாய்த் துறை அதிகாரிகள், காவல் துறை, தேர்தல்கள், படச்சுருள் தொழில் நுட்பவியல்.

2. **மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்.** *(கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர்)* கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: தொழில் நுட்பக் கல்வி உட்பட கல்வி, ஆட்சி மொழி, சட்டமன்றம், சுற்றுலா, சுற்றுலா அபிவிருத்திக் கழகம்.

3. **மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** *(மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்)* கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: பொதுச் சுகாதாரம், மருத்துவம், தமிழ்நாடு கழிவு நீர்—குடிநீர் வாரியம், நகர அமைப்பு.

4. **மாண்புமிகு திரு. என். வி. நடராசன்:** *(பின்தங்கிய வகுப்பினர் நலத் துறை அமைச்சர்)* கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: பின்தங்கிய வகுப்பினர் நலன், செய்தி-விளம்பரம், பத்திரப் பதிவு, முன்னாள் இராணுவ வீரர்கள், சீரணி, இளைஞர் அணி, பூதான—கிராமதான இயக்கங்கள்.

5. **மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** *(அரிசன நலத் துறை அமைச்சர்)* கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: அரிசன நலம், மகளிர்-சிறுவர் நலம், மீனளம், இரவலர்கள் விடுதி, அனாதை இல்லங்கள், சீர்திருத்தப் பள்ளிகள், கண்காணிப்புப் பணிகள், வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள், இடம் பெயர்ந்தவர்கள், பத்திரிகைக் காகிதக் கட்டுப்பாடு, பயண அனுமதிச் சீட்டுகள்.

6. **மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** (பொதுப்பணித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: பொதுப் பணிகள், சிறு பாசனச் சிறப்புத் திட்டங்கள் உட்பட சிறு பாசனம், நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள்.

7. **மாண்புமிகு திரு. செ. மாதவன்:** (தொழில் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: தொழில்கள், ஆலைத் துணிகள், நூல், கைத்தறி, கனிப் பொருள்கள், சுரங்கங்கள், இரும்பு—உருக்குக் கட்டுப்பாடு, வேலை வாய்ப்பும் பயிற்சியளித்தலும், கம்பெனிகள், சட்டம், நீதி மன்றங்கள், சிறைச்சாலைகள்.

8. **மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** (வருவாய்த் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: வருவாய், வருவாய்த் துறை வாரியம், மாவட்ட வருவாய் நிறுவனங்கள், மாவட்டத் துணை ஆட்சித் தலைவர்கள், வணிக வரிகள், மதுவிலக்கு, ஆயத் துறை வருவாய், முகம்மதியர் அறக் கட்டளைகள்.

9. **மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** (வேளாண்மைத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: வேளாண்மை, உணவு உற்பத்தி, வேளாண்மைப் பொறியியற் பிரிவு, கால்நடை வளர்ப்பு.

10. **மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** (உள்ளாட்சித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: நகராட்சி நிர்வாகம், சமுதாய நல வளர்ச்சி ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள்.

11. **மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** (உணவு—கூட்டுறவுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: உணவு, கூட்டுறவு, வேளாண்மை மறு நிதி உதவி.

12. **மாண்புமிகு திரு. க. இராசாராம்:** (தொழிலாளர் நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: தொழிலாளர், வீட்டு வசதி-இட வசதிக் கட்டுப்பாடு, எடைகள் அளவைகள் குறித்த சட்டம், புள்ளிவிவரம், குடிசை மாற்று வாரியம்.

13. **மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** (மின்சாரத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: மின்சாரம், கடன் கொடுத்தல் குறித்த சட்டம், கிராமவாசிகள் கடன்பட்டிருத்தல், சீட்டுகள் குறித்த சட்டம், காடுகள், சின்கோனா, திரைப்படச் சட்டம்.

14. **மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** (போக்குவரத்துத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, மோட்டார் வண்டிகள் வரி, எழுதுபொருள்—அச்சுத்துறை, அரசு அச்சகம்.

15. **மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** (அறநிலையத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: அறக் கட்டளைகள், கதர்-கிராமத் தொழில்கள், கிராமத் தொழில்கள் திட்டம், பால் வழங்கு துறை, பால்வள முனைப்புத் திட்டம், தமிழ்நாடு பாற்பண்ணை வளர்ச்சிக் கழகம்.

PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

GOVERNOR OF TAMIL NADU.

THIRU KODARDAS KALIDAS SHAH.

*Members of the Council of Ministers.*

1. THE HON. DR. M. KARUNANIDHI (Chief Minister) in-charge of Public, Finance, Planning, General Administration, Matters relating to Indian Civil Service and Indian Administrative Service Officers, District Revenue Officers, Police, Elections and Film Technology.

2. THE HON. DR. V. R. NEDUNCHEZHIYAN (Minister for Education and Tourism), in-charge of Education including Technical Education, Official Language, Legislature and Tourism and Tourist Development Corporation.

3. THE HON. THIRU K. ANBAZHAGAN (Minister for Health), in-charge of Public Health, Medicine, Tamil Nadu Drainage and Water Board and Town-Planning.

4. THE HON. THIRU N. V. NATARAJAN (Minister for Backward Classes) in-charge of Backward Classes, Information and Publicity, Registration, Ex-Servicemen, Prosperity Brigade, Youth Service Corps, Bhoodan and Gramdan.

5. THE HON. THIRUMATHI SATHYAVANIMUTHU (Minister for Harijan Welfare), in-charge of Harijan Welfare, Women's and Children's Welfare, Fisheries, Beggars' Home, Orphanages, Approved Schools and Vigilance Services, Indian Overseas and Refugees and Evacuees, Newsprint Control and Passports.

6. THE HON. THIRU P. U. SHANMUGAM (Minister for Public Works), in-charge of Public Works, Minor Irrigation including Special Minor Irrigation Programme Works, Highways and Ports.

7. THE HON. THIRU S. MADHAVAN (Minister for Industries), in-charge of Industries, Textiles, Yarn, Handloom, Mines and Minerals, Iron and Steel Control, Employment and Training, Companies, Law, Courts and Prisons.

8. THE HON. THIRU S. J. SADIQ PASHA (Minister for Revenue), in-charge of Revenue, Board of Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Commercial Taxes, Prohibition and Excise Revenue and Waqfs.

9. THE HON. THIRU Si. Pa. ADITANAR (Minister for Agriculture), in-charge of Agriculture, Food Production, Agricultural Engineering Wing and Animal Husbandry.

10. THE HON. THIRU A. P. DHARMALINGAM (Minister for Local Administration), in-charge of Municipal Administration, Community Development and Panchayats and Panchayat Unions.

11. THE HON. THIRU MANNAI P. NARAYANASWAMY (Minister for Food and Co-operation), in-charge of Food, Co-operation and Agricultural Refinance.

12. THE HON. THIRU K. RAJARAM (Minister for Labour) in-charge of Labour, Housing and Accommodation Control, Legislation on Weights and Measures, Statistics and Slum Clearance Board.

13. THE HON. THIRU O. P. RAMAN (Minister for Electricity), in-charge of Electricity, Legislation on Money Lending, Rural Indebtedness, Legislation on Chits, Forests, Cinchona and Cinematograph Act.

14. THE HON. THIRU S. RAMACHANDRAN (Minister for Transport), in-charge of Transport, Nationalised Transport, Motor Vehicles Tax, Stationery and Printing and Government Press.

15. THE HON. THIRU M. KANNAPPAN (Minister for Religious Endowments), in-charge of Religious Endowments, Khadi and Village Industries and Rural Industries Project, Milk Operation Flood Project and Tamil Nadu Dairy Development Corporation.

## தமிழ் நாடு சட்டப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்.

---

### பேரவைத் தலைவர்.

மாண்புமிகு புலவர் கா. கோவிந்தன், பி.ஓ.எல்., எம்.ஏ.

### மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

1. திரு. துரைமுருகன்.
2. திரு. வை. பாலசுந்தரம்.
3. திருமதி ஜோதி வெங்கடாசலம்.
4. திரு. குழ. செல்லையா.
5. திரு. கே. எ. வகாப்.
6. திரு. கோ. இளங்கோவன்.

### சட்டப் பேரவைச் செயலாளர்.

திரு. மா. சண்முகசுப்பிரமணியம், பி.ஏ., பி.எல்.

### துணைச் செயலாளர்.

திரு. சி. கு. இராமசாமி, பி.ஏ., பி.எல்.

### உதவிச் செயலாளர்கள்.

திரு. த. இராதாகிருஷ்ணன் (எஸ்டேட் அதிகாரி)
திரு. பெஞ்சமின் நெல்சன், பி.ஏ. ,
திரு. கே. பாலகுரு, பி.ஏ.

### விவாதப் பதிப்பாளர்.

திரு. கே. சுந்தரராசன்.

## தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டப் பேரவை உறுப்பினர்களின் (அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல்

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 1 அண்ணாமலை, திரு. சி.வி. எம். .. .. | காஞ்சிபுரம். |
| 2 அபுசாலி, திரு. எம். ஏ. .. .. .. | புவனகிரி. |
| 3 அப்துல் ஜப்பார், திரு. வா. மை .. .. | அரவக்குறிச்சி. |
| 4 அரங்கண்ணல், திரு. இராம. .. .. | எழும்பூர். |
| 5 அரங்கநாயகம், திரு. செ. .. .. | கோயம்பத்தூர்—மேற்கு. |
| 6 அழகமுத்து, திரு. து. ப. .. .. (அரசாங்க தலைமைக் கொறடா). | உப்பிலியப்புரம். |
| 7 அழகர்சாமி, திரு. சோ. .. .. .. | கோவில்பட்டி. |
| 8 அழகுத் தேவர், திரு. எஸ். .. .. | சாத்தூர். |
| 9 அனந்தநாயகி, திருமதி த. ந. .. .. | மயிலாப்பூர். |
| 10 அன்பழகன், மாண்புமிகு திரு. க. (அமைச்சர்). | புரசைவாக்கம். |
| 11 அன்புச்செழியன், திரு. நீ. .. .. | பெரியகுளம். |
| 12 ஆண்டி அம்பலம், திரு. எம். .. .. | மேலூர் வடக்கு. |
| 13 ஆண்டி என்ற குருசாமி, திரு. கு. .. | ஸ்ரீவில்லிபுத்தூர் (செ. வ.) |
| 14 ஆதித்தனார், மாண்புமிகு திரு. சி. பா. (அமைச்சர்). | ஸ்ரீவைகுண்டம். |
| 15 ஆலடி அருணா, திரு. வி. .. .. | ஆலங்குளம். |
| 16 ஆல்டா எம். பௌலர், திருமதி .. | நியமன உறுப்பினர் |
| 17 ஆறுமுகம், திரு. அ. .. .. .. | எடப்பாடி. |
| 18 ஆறுமுகம், திரு. எஸ். .. .. | வீரபாண்டி. |
| 19 ஆறுமுகம், திரு. சி. .. .. .. | மதுராந்தகம். |
| 20 இரத்தினசபாபதி, திரு. மு. .. .. | விளாத்திக்குளம். |
| 21 இராசகோபால், திரு. க. மு. .. .. | உத்திரமேரூர். |
| 22 இராசகோபால், திரு. வீ. .. .. | வந்தவாசி. |
| 23 இராசமாணிக்கம், திரு. அ. .. .. | நாகப்பட்டினம். |
| 24 இராசமாணிக்கம், திரு. கு. .. .. | ஆடுதுறை. |
| 25 இராசரத்தினம், திரு. டி. .. .. | ஸ்ரீபெரும்புதூர். |
| 26 இராசாராம், மாண்புமிகு திரு. க. (அமைச்சர்). | சேலம்-2. |
| 27 இராசு, திரு. ஜே. எஸ். .. .. .. | பெரம்பலூர் (செ. வ.) |
| 28 இராதாகிருட்டிணன், திரு. எம். .. | தண்டராம்பட்டு. |
| 29 இராமச்சந்திரன், திரு. எம். ஜி. .. | பரங்கிமலை. |
| 30 இராமச்சந்திரன், மாண்புமிகு திரு. ச. (அமைச்சர்). | பண்ருட்டி. |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி (2) |
|---|---|
| 31 இராமநாதன், திரு. சி. | அறந்தாங்கி. |
| 32 இராமலிங்கம், திரு. இரா. | தூத்துக்குடி. |
| 33 இராமலிங்கம், திரு. செ. | கடலாடி (செ.வ.). |
| 34 இராமன், மாண்புமிகு திரு. ஓ. பி. (அமைச்சர்). | மேலூர் தெற்கு (செ.வ.). |
| 35 இராமன், திரு. மூ. | கண்டமங்கலம் (செ.வ.). |
| 36 இராஜாங்கம், திரு. என். | குறிஞ்சிப்பாடி (செ.வ.). |
| 37 இராஜாப்பிள்ளை, திரு. வீ. கே. | கன்னியாகுமரி. |
| 38 இளங்கோவன், திரு. கோ. | திருவையாறு. |
| 39 இளஞ்செழியன், திரு. வீ. சா. | விராலிமலை. |
| 40 எட்டியப்பன், திரு. பூ. | பெரணமல்லூர். |
| 41 எட்மண்ட், திரு. க. உரொ. | திருச்செந்தூர். |
| 42 கணபதி, திரு. என். | பாபநாசம். |
| 43 கணபதி, திரு. டி. | நாங்குனேரி. |
| 44 கணேசன், திரு. எல். | ஒரத்தநாடு |
| 45 கணேசன், திரு. சி. | குற்றாலம். |
| 46 கண்ணப்பன், மாண்புமிகு திரு. மு. (அமைச்சர்). | கிணத்துக்கடவு. |
| 47 கண்ணன், திரு. எம். ஆர். | பேஸின் பிரிட்ஜ். |
| 48 கதிரவன், திரு. கா. மு. | தென்காசி. |
| 49 கந்தசாமி, திரு. கே. | உசிலம்பட்டி. |
| 50 கந்தசாமி, திரு. கே. பி. | சாத்தான்குளம் |
| 51 கந்தசாமி, திரு. எம். | குளித்தலை. |
| 52 கந்தப்பன், திரு. செ. | திருச்செங்கோடு. |
| 53 கரிவேங்கடம், திரு. மா. வெ. | பாலக்கோடு. |
| 54 கருணாநிதி, மாண்புமிகு டாக்டர் மு. (முதல் அமைச்சர்). | சைதாப்பேட்டை. |
| 55 கருணாநிதி, திரு. தாழை மு. | திருவாரூர் (செ.வ.) |
| 56 கருணைநாதன், திரு. சோ. | கூனூர். |
| 57 கருப்பையா, திரு. ஆ. | கங்கைகொண்டான் (செ.வ. |
| 58 காசிராமன், திரு. நா. | கும்பகோணம். |
| 59 காதர் பாஷா என்ற வெள்ளைச்சாமி | முதுகளத்தூர். |
| 60 காமாட்சி, திரு. கு. | திருவரம்பூர். |
| 61 கார்த்திகேசன், திரு. வீ. | இராதாபுரம். |
| 62 காவேரிமணியம், திரு. சொ. | திருப்பரங்குன்றம். |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 63 காளிமுத்து, திரு. கா. | சிவகாசி. |
| 64 கிட்டப்பா, திரு. என். | மாயூரம். |
| 65 கிருட்டிணன், திரு. நா. | பேரணம்பட்டு (செ. வ.). |
| 66 கிருஷ்ணமூர்த்தி, திரு. வி. | நெல்லிக்குப்பம். |
| 67 கிருஷ்ணமூர்த்தி, திரு. வ. | திருச்சிராப்பள்ளி-1. |
| 68 கிருஷ்ணன், திரு. கே. ஆர். | ஊத்தங்கரை. |
| 69 குப்பல் ராமகிருஷ்ணன், திரு. கே. எஸ். | மதுரை (கிழக்கு). |
| 70 குமாரசாமி, திரு. அ. சே. | திருக்கோயிலூர். |
| 71 குமாரசாமி, திரு. கே. என். | பல்லடம். |
| 72 குருசாமி, திரு. நா. வெ. | ஆண்டிப்பட்டி. |
| 73 கேசவலு, திரு. தே. | கள்ளக்குறிச்சி. |
| 74 கோதண்டராமய்யா, திரு. கே. எஸ். | உதனப்பள்ளி. |
| 75 கோபால், திரு. எம். | குன்னத்தூர் (செ. வ.). |
| 76 கோபால், திரு. கே. பி. | கம்பம். |
| 77 கோவிந்தசாமி, திரு. வி. செ. | காவேரிப்பட்டினம். |
| 78 கோவிந்தராசன், திரு. ஆர். | கடலூர். |
| 79 கோவிந்தராசன் துரை, திரு. | கந்தர்வகோட்டை. |
| 80 கோவிந்தன், புலவர் கா. (மாண்புமிகு பேரவைத் தலைவர்). | செய்யாறு |
| 81 கோவை செழியன், திரு. | காங்கேயம். |
| 82 சகாதேவன், திரு. எஸ். | செஞ்சி. |
| 83 சங்குமுத்து தேவர், திரு. ச. | அம்பாசமுத்திரம். |
| 84 சதாசிவம், திரு. செ. | ஆண்டிமடம். |
| 85 சண்முகசுந்தரம், திரு. அ. ப. | பொள்ளாச்சி. |
| 86 சண்முகம், மாண்புமிகு திரு. ப. உ. (அமைச்சர்). | திருவண்ணாமலை. |
| 87 சண்முகம், திரு. பெரி. | திருவாடானை. |
| 88 சண்முகம், திரு. மு. | விழுப்புரம். |
| 89 சத்தியமூர்த்தி, திரு. மு. | புதுக்கோட்டை. |
| 90 சத்தியவாணிமுத்து, மாண்புமிகு திருமதி (அமைச்சர்). | பெரம்பூர் (செ.வ.). |
| 91 சத்தியேந்திரன், திரு. எம்.எஸ். கே. | இராமநாதபுரம். |
| 92 சம்பத், திரு. டி. வி. | செம்பனார் கோவில். |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதி. (2) |
|---|---|---|
| 93 | சாதிக் பாட்சா, மாண்புமிகு திரு. எஸ்.ஜே. (அமைச்சர்). | உடுமலைப்பேட்டை. |
| 94 | சாரதி, திரு. மா. பா. | வேலூர். |
| 95 | சிதம்பரம், திரு. சித. | காரைக்குடி. |
| 96 | சிவப்பிரகாசம், திரு. தி. சி. ஆ. | சேரன்மகாதேவி. |
| 97 | சிவபெருமாள், திரு. கோ. | அரியலூர். |
| 98 | சிறைமீட்டான், திரு. தொ. க. | பரமக்குடி (செ.வ.) |
| 99 | சீனிவாசன், திரு. பெ. | விருதுநகர். |
| 100 | சீனிவாசன், திரு. தொ. ப. | போளூர். |
| 101 | சின்னசாமி, திரு. அ. | செயங்கொண்டம் (செ.வ.) |
| 102 | சின்னசாமி, திரு. ஆர். | தர்மபுரி. |
| 103 | சின்னசாமி திரு. மு. | மொடக்குறிச்சி. |
| 104 | சின்னசாமி, திரு. வ. | ஏற்காடு (ஆ. வா.) |
| 105 | சின்னராசு, டாக்டர் ச. அ. | ஹரூர் (செ. வ.) |
| 106 | சின்னவெள்ளையன், திரு. சி. | சேந்தமங்கலம் (ஆ. வா.) |
| 107 | சுந்தரம், திரு. ஓ. என். | திண்டுக்கல். |
| 108 | சுப்பிரமணியம், திரு. எ. | சிங்கநல்லூர். |
| 109 | சுப்பிரமணியம், திரு. எஸ். கே. | சத்யமங்கலம். |
| 110 | சுப்பிரமணியம், திரு. கே. எம். | தியாகராயநகர். |
| 111 | சுப்பிரமணியன், திரு. மா. | ஈரோடு. |
| 112 | சுப்பிரமணியன், திரு. வீ. | உளுந்தூர்பேட்டை. |
| 113 | சுப்பு, திரு. க. | ராஜபாளையம். |
| 114 | சுப்பையா, திரு. ஆ. கு. | கோட்டூர் (செ. வ.) |
| 115 | சுப்பையா, திரு. கே. வி. | ஆலங்குடி. |
| 116 | சுப்பையா, திரு. ச. | சங்கரன்கோயில் (செ. வ.) |
| 117 | சுப்பையா, திரு. எ. ஆர். | கடயநல்லூர். |
| 118 | சுருளிவேல், திரு. மு. | போதிநாயக்கனூர். |
| 119 | சுரேந்திரன், திரு. எம். | மேட்டூர். |
| 120 | சுவாமிதாஸ், திரு. எ. | பதமநாபபுரம். |
| 121 | செபமாலை, திரு. கோ. | மங்களூர் (செ. வ.) |
| 122 | ஜெயராமன், திரு. இ. | சேலம்–1. |
| 122 | செல்லத்துரை, திரு. வீ. | ஓமலூர்.(செ. வ.) |
| 124 | செல்லையா, திரு. குழ. | பேராவூரணி. |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதி (2) |
|---|---|---|
| 125 | செல்வராஜ், திரு. எம். | விருத்தாசலம். |
| 126 | சேதுராமன், திரு. சி. | சிவகங்கை. |
| 127 | சோணையா, திரு. த. | மானாமதுரை. |
| 128 | சோமசுந்தரம், திரு. ந. | வலங்கைமான் (செ. வ.) |
| 129 | சௌடி சுந்தரபாரதி, திரு. எஸ். | அருப்புக்கோட்டை. |
| 130 | சௌந்தரபாண்டியன், திரு. பெ. | கிருஷ்ணராயபுரம் (செ.வ.) |
| 131 | டென்னிஸ், திரு. என். | கிள்ளியூர். |
| 132 | தங்கமணி, திரு. கே. டி. கே. | மதுரை–மேற்கு. |
| 133 | தர்மலிங்கம், மாண்புமிகு திரு. அ. பெ. (அமைச்சர்). | திருச்சிராப்பள்ளி-2. |
| 134 | தருமலிங்கம், திரு. ந. | ரிஷிவந்தியம் (செ.வ.) |
| 135 | தவமணித்தேவர், திரு. வி. | சேடப்பட்டி. |
| 136 | திம்மராயக் கவுண்டர், திரு. டி. சி. | நாட்றாம்பள்ளி |
| 137 | தியாகராசன், திரு. அ. | திருமயம். |
| 138 | தியாகராசன், திரு. இ. எஸ். | திருத்தணி. |
| 139 | திருப்பதி, திரு. கு. | மதுரை (சென்ட்ரல்). |
| 140 | துரைசாமி திரு. எ. க. | குடியாத்தம். |
| 141 | துரைசாமி, திரு. சு. | திருப்பூர். |
| 142 | துரைமுருகன், திரு. | காட்பாடி. |
| 143 | துரைராஜ், திரு. சு. ம. | திருவள்ளூர் (செ.வ.) |
| 144 | தூயமணி, திரு. மே. சி. | மேட்டுப்பாளையம். |
| 145 | தேவராசன், திரு. எம். | உதகமண்டலம். |
| 146 | தேவேந்திரன், திரு. அ. | நன்னிலம் (செ. வ.) |
| 147 | தோப்பூர் திருவேங்கடம், திரு. | கணியம்பாடி. |
| 148 | நடராசன், திரு. ஈ. எம். | அந்தியூர். |
| 149 | நடராசன், திரு. எஸ். | தஞ்சாவூர். |
| 150 | நரசிம்மன், திரு. எ. சி. | ஆரணி. |
| 151 | நல்லசாமி, திரு. எஸ். | கரூர். |
| 152 | நாகராஜன், திரு. க. | வடமதுரை. |
| 153 | நாகலிங்கம், திரு. பா. | பொன்னேரி (செ.வ. |
| 154 | நாச்சிமுத்து, திரு. நா. | ஒட்டஞ்சத்திரம். |
| 155 | நாச்சியப்பன், திரு. எ. எம். டி. | ஆத்தூர். |
| 156 | நாச்சியப்பன், திரு. ந. | சங்கராபுரம். |
| 157 | நாராயணசாமி, திரு. மா. வே. | திருவொற்றியூர். |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 158 நெடுஞ்செழியன், மாண்புமிகு டாக்டர் இரா. (அமைச்சர்). .. | திருவல்லிக்கேணி. |
| 159 நைனுமலை, திரு. இரா. .. .. | ராசிபுரம். |
| 160 பத்மநாபன், திரு. பொ. .. .. | திருநெல்வேலி. |
| 161 பத்மாவதி, திருமதி. எ. கோ. .. .. | முகையூர். |
| 162 பரந்தாமன், திரு. ஆ. .. .. .. | கடம்பத்தூர். |
| 163 பரமசிவம், திரு. எம். .. .. | தாரமங்கலம். |
| 164 பலராமன், திரு. என். எஸ். .. .. | அரக்கோணம். |
| 165 பழனிசாமி, திரு. நா. .. .. .. | பொங்கலூர். |
| 166 பழனிசாமி, திரு. என். கே. .. .. | பெருந்துறை. |
| 167 பழனிசாமி, திரு. மு. .. .. .. | வெள்ளக்கோயில். |
| 168 பழனிச்சாமி, புலவர் சி. .. .. | பழனி (செ.வ.) |
| 169 பழனியப்பன், டாக்டர் ச. மு. .. .. | கோபிசெட்டிபாளையம். |
| 170 பழனியம்மாள், திருமதி வி. ப. .. | தாராபுரம். |
| 171 பழனிவேலன், திரு. க. .. .. | வரகூர். |
| 172 பழனிவேலன், திரு. மு. .. .. | நாமக்கல். |
| 173 பழனிவேலு, திரு. பி. .. .. .. | ஆத்தூர் |
| 174 பழனிவேல் ராஜன், திரு. .. .. | தேனி. |
| 175 பன்னீர் செல்வம், திரு. எம். .. .. | ஆம்பூர் (செ. வ.) |
| 176 பாண்டுரங்கம், திரு. சி. .. .. .. | செங்கம் (செ. வ.) |
| 177 பாலகிருட்டிணன், திரு. கு. .. .. | மன்னார்குடி. |
| 178 பாலசுந்தரம், திரு. வை. .. .. | அச்சரபாக்கம் (செ.வ.). |
| 179 பாலையா, திரு. எ. .. .. .. | கொளச்சல். |
| 180 பெரியசாமி, திரு. கு. .. .. .. | கொடவாசல். |
| 181 பெரியசாமி, திரு. தி. ஒ. .. .. | அவிநாசி. |
| 182 பெருமாள், திரு. செ. .. .. .. | காட்டுமன்னார்கோயில். |
| 183 பெருமாள், திரு. எ. ஆர். .. .. | காரியப்பட்டி. |
| 184 பொம்மன், திரு. கு. அ. .. .. | கூடலூர் (செ. வ.) |
| 185 பொன் சொக்கலிங்கம், திரு. பி. .. | சிதம்பரம். |
| 186 பொன்னப்ப நாடார், திரு. ஆர். .. .. | விளவங்கோடு. |
| 187 பொன்னுமலை, திரு. தி. .. .. | பனைமரத்துப்பட்டி. |
| 188 பொன்னுரங்கம், திரு. எ. எம். .. | சோளிங்கபுரம். |
| 189 மணலி கந்தசாமி, திரு. சி. .. .. | திருத்துறைப்பூண்டி. |
| 190 மணியன், திரு. பி. எஸ். .. .. | சோழவந்தான். |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 191 மதியழகன், திரு. கே.எ. .. .. | ஆயிரம் விளக்கு. |
| 192 மருதாசலம், திரு. என். .. .. | பேரூர் (செ. வ.). |
| 193 மலைக்கண்ணன், திரு. வீ. .. .. | இளையாங்குடி. |
| 194 மன்னியப்பன், திரு. சி. .. .. .. | கிருஷ்ணகிரி. |
| 195 மாணிக்கம், திரு. என். .. .. | பென்னகரம். |
| 196 மாணிக்கவாசகம், திரு. இரா. .. .. | தொண்டாமுத்தூர். |
| 197 மாதவன், மாண்புமிகு திரு. செ. (அமைச்சர்). | திருப்பத்தூர். (இராமநாதபுரம் மாவட்டம்) |
| 198 மாரிமுத்து, திரு. எ. ஆர். .. .. | பட்டுக்கோட்டை. |
| 199 மாரிமுத்து, திரு. மு. .. .. | தலைவாசல் (செ.வ.) |
| 200 மீனாட்சிசுந்தரம், திரு. மா. .. .. | வேதாரண்யம். |
| 201 முகமது கோதர் முகைதீன், திரு. எஸ். .. | மேலப்பாளையம். |
| 202 முத்தமிழ்ச் செல்வன், திரு. வெ. ந. .. | லால்குடி. |
| 203 முத்து, திரு. வ. .. .. | சங்கரி (செ. வ.) |
| 204 முத்துசாமி, திரு. ப. .. .. .. | வேடசந்தூர். |
| 205 முத்துச்செல்வன், திரு. பு. செ. .. | முசிறி. |
| 206 முத்துவேல், திரு. ந. .. .. .. | வானூர் (செ. வ.) |
| 207 முத்தையா, திரு. கே. கே. .. .. | கடலூர். |
| 208 முத்தையா, திரு. எம். .. .. .. | ஒட்டப்பிடாரம் (செ. வ.) |
| 209 முருகையன், திரு. எஸ். .. .. | கலசப்பாக்கம். |
| 210 முனியாண்டி, திரு. ஆ. .. .. .. | நிலக்கோட்டை (செ. வ.) |
| 211 முனு ஆதி, திரு. மு. .. .. .. | திருப்போரூர். |
| 212 முனுசாமி, திரு. ரா. ரா. .. .. | மேல்மலையனூர். |
| 213 மொய்தீன், திரு. திருப்பூர் எ. எம். .. .. | துறைமுகம் (சென்னை நகரம்). |
| 214 மோசஸ், திரு. ம. .. .. .. | நாகர்கோயில். |
| 215 ரங்கநாதன், திரு. கே. .. .. .. | கோயம்புத்தூர் (கிழக்கு). |
| 216 ராமசாமி, திரு. இ. .. .. .. | வால்பாறை. |
| 217 ராமசாமி, திரு. ஜி. .. .. .. | திருப்பத்தூர் (வட ஆர்க்காடு மாவட்டம்). |
| 218 ராமராசன், திரு. வ. க. .. .. | பவானிசாகர் (செ. வ.) |
| 219 ராஜா, திரு. எ. எம். .. .. | பவானி. |
| 220 ராஜாராம், திரு. ஜி. .. .. .. | திண்டிவனம். |
| 221 ரெத்தினசாமித் தேவர், திரு. மூ. சி. ஆ. | திருமங்கலம். |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 222 லத்தீப், திரு. எம். எ. .. .. .. | வாணியம்பாடி. |
| 223 வகாப், திரு. கே. எ. .. .. .. | ராணிப்பேட்டை. |
| 224 வடிவேலு, திரு. சீ. க. .. .. | தொட்டியம். |
| 225 வடிவேல், திரு. எஸ். .. .. .. | சீர்காழி (செ. வ.) |
| 226 விசுவநாதன், திரு. செ. கோ. .. | செங்கல்பட்டு. |
| 227 வீராசாமி, திரு. நா. .. .. .. | ஆற்காடு. |
| 228 வெங்கடசாமி, திரு. பி. .. .. | ஹோசூர். |
| 229 வெள்ளத்துரை, திரு. அ. .. .. | வாசுதேவநல்லூர். |
| 230 வேதாசலம், திரு. மு. .. . .. | வண்ணாரப்பேட்டை (சென்னை நகரம்). |
| 231 வேலப்பன், திரு. சி. வே. .. .. | கபிலமலை. |
| 232 வேழவேந்தன், திரு. கா. .. .. | கும்மிடிபூண்டி. |
| 233 ஜேம்ஸ், திரு. ஜே. .. .. .. | திருவட்டார். |
| 234 ஜோதி வெங்கடாசலம், திருமதி. .. | ஸ்ரீரங்கம் (செ. வ.) |
| 235 ஹாண்டே, டாக்டர், எச். வி. .. .. | பார்க் டவுன் (சென்னை நகரம்). |

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்கள்.

1 மாண்புமிகு திரு. என். வி. நடராசன்—அமைச்சர்.

2 மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி—அமைச்சர்.

3 திரு. கோவிந்த் சாமிநாதன்—தலைமை வழக்கறிஞர்.

## தமிழ் நாடு சட்டப் பேரவை.

---

### வெள்ளிக்கிழமை, 1974 மார்ச் 15.

---

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்—விடைகள்.

### வெளிக்குறியிட்ட வினாக்கள்.

### *Course in Television.*

* 371 *Q.*—THIRU N. DENNIS:
THIRU N. K. PALANISAMY: } Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to introduce a course in Television in the Film Institute at Adyar in this State; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) ஆம்.

(இ) இதுபற்றிய விவரங்கள் ஆய்வில் உள்ளன.

திரு. என். டென்னிஸ்: தலைவர் அவர்களே, டெலிவிஷன் மாடர்ன் மெதட் ஆப் டெவலப்மென்ட்டாக இருப்பதால், டெலிவிஷன்பற்றிக் கற்பதற்கு வேண்டிய வசதிகளைச் செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: ஏற்கெனவே இந்தத் துறை பற்றிய பல்வேறு பயிற்சி முறைகள் நடைபெற்று வருகின்றன. இப்பொழுது புதிதாக டெலிவிஷன் பற்றிய பாட முறையை எடுத்துக்கொள்வதா, இல்லையா என்பதைப்பற்றி யோசித்து வருகிறது. அதற்கென்று இருக்கின்ற குழு அதுபற்றி ஆராய்ந்து அடுத்த கூட்டத்தில் அதுபற்றி முடிவு எடுக்கலாம் என்று ஒத்திவைத்திருக்கிறது.

திரு. என். கே. பழனிசாமி: இப்பொழுது இந்த டெலிவிஷன் ஜனங்களுக்கு மிகவும் அத்தியாவசியமான பொருளைப் போல் ஆகிவிட்டதன் காரணமாக, எங்கு பார்த்தாலும் ரேடியோ அண்டு டெலிவிஷன் என்றுதான் சொல்லுகிறார்கள். ஆகவே, இதைச் சரியான முறையில் கற்பதற்கு நம் மாநிலத்திலிருந்து தகுந்த என்ஜினியர்களை டில்லிக்கு அனுப்பி அங்கே அவர்கள் சரியான முறையில் கற்றறிந்து இங்கே மாணவர்களுக்குச் சொல்லிக்கொடுக்கக் கூடிய முறையில் சர்க்கார் ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: டெலிவிஷன் பாட முறை ஏற்றுக்கொள்ளப்பட்டு, அது கற்றுத்தரப்பட வேண்டுமென்று பிறகு மேற் கொள்ளப்படுமானால் அந்தப் பயிற்சி அளிப்பவர்கள் எவ்வளவு திறமை பெற்றவர்களாக இருக்கவேண்டும் என்பதிலே அரசு தனக்குள்ள அக்கறையை மறந்துவிடாமல், மாண்புமிகு உறுப்பினர் சொன்ன யோசனை யையும் மனதில் கொண்டு அவ்வாறு செயல்படும்.

திரு. கு காமாட்சி: இந்தத் திரைப்படக் கல்லூரியில் எத்தனை பேர் இப்பொழுது பயனாறு கொண்டிருக்கின்றார்கள்? அவர்களுக்கு எந்த எந்த முறையிலே பயிற்சி அளிக்கப்படுகிறது? நடிப்பு மட்டும்தான் கற்றுக் கொடுக்கப்படுகிறதா? அல்லது கேமிராவை இயக்குவது என்கிற முறையெல்லாம் சொல்லிக்கொடுக்கப்படுகிறதா? அதில் பயிலுகின்ற மாணவ மாணவிகள் இந்த மாநிலத்தை மட்டும் சேர்ந்தவர்களா? மற்ற மாநிலங்களிலிருந்து வருகிறவர்களுக்கும் இங்கு பயிற்சி அளிக்கப்படு கிறதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: ஒரு ஐந்தாறு கேள்வி களைச் சேர்த்துக் கேட்டிருக்கிறார்கள். பயிற்சி பெறும் மாணவர் களுடைய மொத்த எண்ணிக்கை 107 பேர். நடிப்பு மாத்திரம் அல்லாமல் திரைப்படப் பிடிப்பில் 36 பேரும், ஒலிப் பதிவு, ஒளிப் பதிவு, பொறி யியலில் 24 பேரும், திரைப்படத் தொகுப்பில் 7 பேரும், திரைப்பட முறை வைப்பில் (ப்ரோஸஸிங்) 14 பேரும், நடிப்பில் 13 பேரும், டைரக்ஷன் திரைக் கதை எழுதுதலில் 13 பேரும் இதில் ஈடுபட்டிருக் கிறார்கள். மற்ற மாநிலத்தைச் சேர்ந்தவர்களுக்கும் இந்தக் கல்லூரி யில் பயிற்சிக்காக இடம் அளிக்கப்பட்டுள்ளது.

திரு. கே. எ வகாப்: சென்னையில் கட்டப்பட்டு வருகின்ற டெலி விஷன் நிலையம் குறிப்பிட்ட காலத்தில் முடியாது இன்னும் ஓராண்டு ஈராண்டுகள் தாமதம் ஆகும் என்று கூறப்படுகிறதே அதற்கான காரணம் என்ன என்பதை நமது அரசு ஆராய்ந்து உடனடியாக செயல்பட முயற்சி செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: டெலிவிஷன் நிலையத்தைத் துரிதமாக முடித்திடவேண்டுமென்று 7—1—1974-இல் நான் பிரதமருக்கு ஒரு கடிதம் எழுதினேன். அதற்கு 19—1—1974-இல் பிரதமர் பதில் எழுதி இருக்கிறார். சென்னை டெலிவிஷன் நிலையத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது, அதுகுறித்த வேலைகள் விரைவில் முடிக்கப்பெறுவதற்கு எல்லாவிதமான ஆக்கபூர்வமான காரியங் களும் மேற்கொள்ளப்படுகின்றன, சில தொழில் நுட்பப் பிரச்சினை காரண மாகத்தான் தாமதம் ஏற்படுகிறது என்று பிரதமர் அவர்கள் பதில் எழுதியிருக்கிறார்கள். ஆகவே, விரைவில் அது முடியும் என்று நாம் எதிர்பார்க்கலாம்.

திரு. வை. பாலசுந்தரம்: தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் டெலி விஷன் நடைமுறைக்கு வந்தபின்னர், எல்லோருடைய வீட்டிலும் ரேடியோ இருப்பதைப்போல எல்லோருடைய வீட்டிலும் டெலிவிஷன் இருக்க வேண்டும் என்ற சிறப்புத் திட்டத்தை தமிழ்நாடு அரசு தயாரிக்க முன்வருமா?



மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: எல்லோருடைய வீட்டிலும் இப் பொழுது ரேடியோ எந்த அடிப்படையில் இருக்கிறதோ அந்த அடிப் படையில் எல்லோருடைய வீட்டிலும் டெலிவிஷன் இருக்கும் என்று நான் கருதுகிறேன். (சிரிப்பு).

## சிறுவர்களுக்கான திரைப்படங்கள்.

* 372 வினா— திரு என். கிட்டப்பா: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சிறுவர்களுக்கென திரைப்படங்களை தமிழ்நாடு அரசு தயாரிக்க உத் தேசித்துள்ளதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இல்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசு சார்பாக தற்போது எந்த எந்த வகையான திரைப்படங்கள் தயாரிக் கப்பட்டு வருகின்றன என்பதை அறியலாமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசின் பல்வேறு துறைகளின் சார்பாக பல விளக்கப் படங்கள் எடுக்கப் பட்டுள்ளன. "கல்லும் சொல்லாதோ கவி" என்ற தலைப்பில் சிற்பம் பற்றிய படம் ஒன்று எடுக்கப்பட்டிருக்கிறது. உயர் விளைச்சல் ரகங்கள், பயிர் பாதுகாப்பு, உரங்கள், நெடுங்கடல் மேலே, குடும்பக் கட்டுப்பாடு ஆகிய தலைப்புகளில் படங்கள் எடுக்கப்பட்டுள்ளன. நீர் அணைப்பு, சீரணி, நெற்பயிர் வேளாண்மை, வாழ்க்கை வளம் பெற, மனம் ஒரு குரங்கு, அன்னையர் இருவர், இரண்டு வீடு, வளமான வாழ்வு, எந்த நாளும் காப்போம், புரட்சி செம்மை, விஷ செளிப்பூச்சு பராமரிப்பு கிராம முன்னேற்றம், சுற்றுலா, விவசாயப் பயிற்சி விற்பனைக்கூடம் பரிசுச் சீட்டு, ரூரல் டெவலப்மெண்ட் என்று இப்படிப்பட்ட தலைப்புகளில் தமிழ்நாடு அரசில் உள்ள பல்வேறு இலாகாக்களின் சார்பாகப் படங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

திரு. எம். சுரேந்திரன்: திரைப்படங்கள் கல்வி போதிப்பிலே சிறந்த பணியைச் செய்ய முடியும் என்று பல அறிஞர்கள் கூறியிருக்கின்றார்கள். அந்த வகையில் சிறுவர்களுக்கென திரைப்படங்களைத் தயாரிப்பது மிகவும் பயன் உள்ளதாக இருக்கும் என்று கருதப்படுகிற நோக்கில் இந்த அரசாங்கம் இதுசம்பந்தமாக வருங்காலத்தில் ஆலோசனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: ஏற்கெனவே எடுக்கப்பட்டுள்ள, சிறுவர்களுக்கு அறிவுரை போதிக்கும் படங்கள் ஆங்காங்கே இருந்து வரவழைக்கப்பட்டு சிறுவர்களுக்கு போட்டுக் காட்டப்படுகிற முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி : "குழந்தைக்காக" என்று ஒரு சினிமாப் படம் வந்ததே அது குழந்தைகளுக்குப் போட்டுக் காண்பிக்கத்தக்க படமா? அல்லது "குழந்தைக்காக" என்ற பெயர் மட்டும்தான் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அதை மாண்புமிகு உறுப்பினர் பார்த்திருப்பார் என்று கருதுகிறேன். நான் அந்தப் படத்தைப் பார்க்கவில்லை.

திரு. ஆ. பரந்தாமன் : தலைவர் அவர்களே, ஒழுக்கத்தைக் கற்றுக் கொடுக்கின்ற வகையில் இப்பொழுது திரைப்படக் கல்லூரியில் இருக்கின்ற மாணவர்களை வைத்து, குழந்தைகளுக்காக எடுக்கப்படுகின்ற படத்தைத் தயாரிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இப்போதே திரைப்படக் கல்லூரி மாணவர்களை வைத்து பல்வேறு தலைப்புகளில் படங்கள் தயாரிக்கப்படுகின்றன. இங்கே எழுந்துள்ள கேள்வியின் அடிப்படையில் சிறுவர்களுக்கு அறிவு போதிக்கும் படம் எடுக்கலாமா என்பதைப்பற்றி யோசித்து அதற்குப் பிறகு முடிவு எடுக்கப்படும்.

திரு. நா. வீராசாமி : சிறந்த தமிழ் படங்களுக்கு பரிசு வழங்கக் கூடிய ஒரு திட்டம் தமிழ்நாட்டில் இருந்ததே, அந்தத் திட்டம் இப்பொழுது இருக்கிறதா? அப்படியானால், குழந்தைகளுக்கென்று தனியார் யாராவது நல்ல படங்கள் எடுத்தால் அந்தப் படங்களுக்கு அப்படிப்பட்ட பரிசுகள் வழங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : சிறந்த தமிழ்ப் படங்களுக்கும் அதிலே பணியாற்றிய தொழில் நுட்ப வல்லுநர்களுக்கும் பரிசு அளிக்கும் திட்டம் ஒன்று கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளாகத் தொடர்ந்து நடைபெற்று வந்தது. ஆனால், அதிலே பரிசு பெறுபவர்கள் அந்தத் திட்டத்தைச் சரியான முறையில் மதிக்காத காரணத்தால் என் நமக்கு இந்த வம்பு என்று இதை சிறிது காலமாக நிறுத்தி வைத்திருக்கிறோம்.

திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, தமிழக அரசு தயாரித்திருக்கிற குடும்ப நலம் குறித்த படம் மிகச் சுவையாக இருக்கிறது, ஆனால், குடும்ப நலப் படங்களை குழந்தைகள் வேண்டாம் என்றாலும் உள்ளே வந்து பார்க்கிறார்கள். ஆகவே, குழந்தைகளுக்கு முன்பெல்லாம் சிவிக்ஸ் பாடமுறையினை கற்பிப்பதுபோல், சுகாதாரமுறை, சாலை விதிகள் ஆகியவற்றை 16 எம்.எம். படத்திலே காண்பிக்க உரிய வகையில் அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இப்போதே இதுபோன்ற படங்கள் இருக்கின்றன. அவற்றை நாமே தயாரிப்பதா என்பதுதான் பிரச்சினை பற்றாக்குறையாக இருக்குமானால் அப்படிப்பட்ட படங்களைத் தயாரிப்பதில் அரசு முயற்சிகளை மேற்கொள்ளும்.

திரு. எஸ். ஆறுமுகம் : நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள் அரசு எடுக்கின்ற படங்கள் ஒழுக்கத்தைப்பற்றி போதிக்கும் வகையில் எடுக்கிறோம்



என்று குறிப்பிட்டார்கள். திரைப்பட உலகில் ஒழுக்கமே இல்லாத விதத்தில் இன்றைக்கு தமிழ்நாட்டில் தனியாரகளால் படங்கள் எடுக்கப்படுகின்றன. ஒரு வரம்புக்குள், ஒரு ஒழுங்குக்குள் கொண்டுவர அரசாங்கம் முயற்சிக்குமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : சில படங்களால் பொதுமக்களிடத்தில் அமைதிக்குப் பங்கம் ஏற்படும் என்ற சூழ்நிலை வந்தால்தான் மாநில அரசைப் பொறுத்தவரையில் அவைகளைத் தடுத்து நிறுத்த முடியும். அதற்கான பரிந்துரைகளைக்கூட மத்திய அரசுக்குச் செய்ய முடியும். ஆனால், படங்களில் ஆபாசமான காட்சிகள் இவைகள் வருவதைத் தவிர்ப்பதற்கு பொறுப்பு இன்றைக்கு தணிக்கைத் துறைக்குத்தான் இருக்கிறது. தணிக்கைத் துறை மாநில அரசின் வரம்புக்கு உட்பட்டதல்ல. மத்திய அரசின் வரம்புக்கு உட்பட்டதாகும். அதுபற்றி நேற்றையதினம் முஸ்லிம் லீக் கட்சித் தலைவர் திருப்பூர் திரு. மொய்தீன் அவர்கள் வெகு விரிவாகப் பேசியிருக்கிறார்கள். ஆனால், கூடுமான வரையில் அந்தப் படங்களைத் தணிக்கை செய்தாலும்கூட, அந்தப் படங்கள் சம்பந்தமான போஸ்டர்கள் சுவர்களில் ஒட்டப்படுவதை ஒரு சட்டம் போட்டுத் தடுக்கலாமா என்பதைப் பற்றி அரசு யோசித்துக் கொண்டிருக்கிறது.

திரு. நா. வெ. குருசாமி : நமது சட்ட மன்ற நிகழ்ச்சியைத் தொகுத்து ஒரு திரைப்படம் எடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : சட்டமன்ற நிகழ்ச்சியைத் தொகுத்து படமாக்குவது என்றால் சில நேரங்களில் ஸ்டண்டு படம் போல இருக்கும்.

திரு. எம். தேவராசன் : அடையார் திரைப்படக் கல்லூரியில் பயின்று தேறுகிறவர்கள் பலர் வேலையில்லாமல் அவதிப்படுகிறார்கள். என் மைத்துனர் ஒருவரே காமராமென்னாக அங்கே தேறி இன்றையதினம் வேலையில்லாமல் அவதிப்பட்டுக்கொண்டிருக்கிறார். ஆகவே அங்கே பயின்று தேறுகிறவர்களுக்கு வேலைவாய்ப்பைத் தேடித் தரும் திட்டம் ஏதேனும் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அங்கே பயிற்சி பெற்று தேறியுள்ள திறமையானவர்கள் பலருக்கு வேலைவாய்ப்புக் கிடைத்திருக்கிறது என்று அறிகிறேன். (சிரிப்பு).

### *Educational concessions to children of Political sufferers.*

* 431 *Q.*—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state the expenditure incurred by the Government by way of granting educational concessions to sons and daughters of Political sufferers for the periods 1971–72 and 1972–73?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :

அரசியல் தியாகிகளின் மக்களுக்கு கல்விச் சலுகை வழங்குவதால் அரசுக்கு ஏற்பட்ட செலவு :—

| | | ரூ. |
|---|---|---|
| 1. 1971–72 | .. .. | 33,397·77 |
| 2. 1972–73 | .. .. | 34,288·16 |

திரு. என். கே. பழனிசாமி : என்னென்னவிதமான சலுகைகள் கொடுக்கப்படுகின்றன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இந்தத் திட்டம் மத்திய அரசால் ஏற்படுத்தப்பட்டு, மாநில அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாகும். மாநில அரசு பாதித் தொகையை ஏற்றுக்கொள்கிறது. மாநில அரசு ஏற்றுக்கொள்கிற அளவு மத்திய அரசு பணம் தருகிறது. அதிலும் மத்திய அரசால் உச்சக்கட்டமாக ரூ. 43,750 தருவதாக ஒப்புக்கொள்ளப் பட்டது. இதில் விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்று 6 மாதம் சிறைதண்டனை பெற்றவர்களது குழந்தைகளுக்கு, போராட்டத்தில் மரித்து, தூக்குத் தண்டனை பெற்றவர்களுடைய குழந்தைகளுக்கு, அதுவும் அந்தக் குழந்தைகளின் குடும்ப பொருளாதார நிலையைக் கணக்கில்கொண்டு, திறமையின் அடிப்படையில் இந்தத் தொகை வழங்கப்பட வேண்டுமென்ற நிபந்தனைகளை விதித்திருக்கிறது.

திரு. கு.அ. பொம்மன் : தியாகிகளின் குழந்தைகளுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதில் முன்னுரிமை வழங்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தனியாகக் கவனிக்க வேண்டிய ஒன்று.

திரு. த. சோனையா : இந்தத் தியாகிகளுடைய பிள்ளைகளுக்கு கல்விச் சலுகை கொடுக்கிறபோது, சில தியாகிகளுடைய மனைவிகள் உத்தியோகங் களில் இருக்கிற காரணத்தினால், அவர்களது குழந்தைகளுக்கு கல்விச் சலுகை அளிப்பதற்கு இல்லை என்பதாக உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருப்ப தாகத் தெரிகிறது. இதுபோல அந்தத் தியாகிகளுக்கும், தியாகி களின் பிள்ளைகளுக்கும் சலுகை அளிக்க அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : நான் முதலிலேயே குறிப்பிட்டேன். இந்தத் திட்டம் பொருளாதார நிலையைக் கணக்கில் கொண்டுதான் திறமையானவர்களுக்கு உதவி அளிக்கப்படுகிற ஒன்று. இதில் குடும்ப வருமானம் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 3,600-க்கு மேற்படாத தியாகிகளின் குடும்பப் பிள்ளைகளுக்குத்தான் சலுகை அளிப்பது என்கிற விதி இருக்கிறது.



திரு. எம். சுரேந்திரன் : அரசியல் தியாகிகள் என்பதாக பென்ஷன் பெறுகிறவர்களுடைய குடும்பத்தைச் சேர்ந்த எவ்வளவு பேர்களுக்கு இந்தச் சலுகை அளிக்கப்படுகிறது ? அப்படி அளிக்கப்படுகிற சலுகை அவர்கள் எவ்வளவு தூரம் படிக்க விரும்பினாலும் அளிக்கப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : எவ்வளவு பேர்களுக்கு தரப்படுகிறது என்கிற விவரம் என்னிடம் இல்லை. நமக்கு மொத்தமாகிற செலவில் பாதியை மத்திய அரசு தருகிறது. மற்ற பாதியை மாநில அரசே ஏற்றுக்கொள்கிறது.

திரு. என். டென்னிஸ் : தியாகிகளின் குழந்தைகளுக்கு கொடுக்கப்படு கிற புக் அலவன்ஸ் ஏற்ற காலத்தில் கொடுக்கப்படுவதில்லை. அப்படி யின்றி ஏற்ற காலத்தில் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : காலத்தாழ்வு ஏற்படு மானால் அது கவனிக்கப்படும்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தியாகிகளின் குழந்தைகளுக்கு கல்விச் சலுகை அளிக்கிற இந்தத் திட்டத்தின் கீழ் ஆண்டு ஒன்றுக்கு ஒரு மாணவனுக்கு எவ்வளவு ரூபாய் கொடுக்கப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இது அந்த மாணவர் எந்த வகுப்பில் படிக்கிறார் என்பதற்கு ஏற்றாற் போல அமைந்திருக்கிறது. குறிப்பாக 9-வது வகுப்பு முதல் 11-வது வகுப்புவரை விடுதியில் தங்கிப் படிக்கிற மாணவராக இருந்தால் ஒரு ஆண்டுக்கு உணவுக்காக ரூ. 300-ம் புத்தகத்திற்காக ரூ. 35-ம் ஆக ரூ. 335 அளிக்கப்படுகிறது. புகுமுக வகுப்பு படிக்கிற மாணவராக இருந்தால் மொத்தம் ரூ. 385 அளிக்கப்படுகிறது. பட்டப்படிப்பு என்றால் முதலாண்டு மொத்தம் 525 ரூபாயும், இரண்டாம் ஆண்டு 450 ரூபாயும், மூன்றாம் ஆண்டு 440 ரூபாயும் அளிக்கப்படுகிறது.

விடுதியில் தங்கிப் படிக்காத மாணவராக இருந்தால் 9 முதல் 11-வது வகுப்புவரை ரூ. 35 அளிக்கப்படுகிறது. புகுமுக வகுப்பு படிக்கிற மாணவ னுக்கு ரூ. 85 அளிக்கப்படுகிறது. பட்டப்படிப்பு என்றால் முதலாண்டு ரூ. 125-ம், இரண்டாம் ஆண்டுக்கு ரூ. 50-ம், மூன்றாம் ஆண்டுக்கு ரூ. 40ம் அளிக்கப்படுகிறது.

தங்கிப்படிக்கும் மாணவர்களுக்கு—தொழிற்கல்வி நிலையங்களில் படிக் கிறவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 40 அளிக்கப்படுகிறது. தொழிற் பயிற்சிப் பள்ளியில் படிக்கிறவர்களுக்கு மாதம் ரூ. 25 அளிக்கப்படுகிறது.

விடுதியில் தங்கிப் படிக்காத மாணவர்களுக்கு புத்தகங்கள் வாங்கிக் கொள்வதற்காக—மருத்துவக் கல்வி பயில்கிறவர்களாக இருந்தால் ரூ. 1,081-ம், பல் வைத்தியக் கல்வி பயில்கிறவர்களாக இருந்தால் ரூ. 1,087-ம்,

பி. பார்மஸி படிக்கிறவர்களுக்கு ரூ. 487-ம் அளிக்கப்படுகிறது. சட்டக் கல்வி பயில்கிறவர்களுக்கு முதல் வருடம் ரூ. 51-ம், பி.எல். படிக்கிறவர்களுக்கு ரூ. 73-ம், பொறியியல் கல்லூரியில் படிக்கிறவர்களுக்கு ரூ. 550-ம், கால்நடை மருத்துவக் கல்லூரியில் படிக்கிறவர்களுக்கு ரூ. 1,000-ம், அறிவியல் (வேளாண்மை)-க்கு ரூ. 650-ம், தொழிற் பயிற்சி வகுப்புக்கு ரூ. 35-ம் அளிக்கப்படுகிறது.

திரு. எ. ஆர். மாரிமுத்து : மத்திய சர்க்கார் உயர்ந்த கட்டமாக ரூ. 43,750 அளிக்கிறது என்றால் அந்த முழுத்தொகையைக்கூட மாநில சர்க்கார் பயன்படுத்திக்கொள்ளாது, அதில் ரூ 20 ஆயிரத்தைச் செலவழிக்க வில்லையே, இப்படி அந்தத் தொகையை சரண்டர் செய்யாது, காலத்திற்கு ஏற்ற முறையில் இந்த உதவித்தொகையை அதிகப்படுத்தியாவது பயன் படுத்திக்கொள்ள அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : உச்சக்கட்டமாகத்தான் ரூ. 43,750 என்று சொன்னேன். நாம் எவ்வளவு செலவு செய்கிறோமோ அதில் பாதியை அவர்கள் தருகிறார்கள். முதலில் 31,397 தான் செலவாயிற்று. போன ஆண்டு ரூ. 34,288 ஆகியிருக்கிறது. 1974-இல் மத்திய அரசு எந்தத்தொகையும் வழங்காது, அந்தச் செலவை மாநில அரசே ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் பங்கை தொடர்ந்து தரவேண்டுமென்று நாம் சொல்லியிருக்கிறோம்.

திரு .எ. ஆர். மாரிமுத்து : இப்போது அமைச்சர் அவர்கள் செலவழிந்திருப்பதாகச் சொன்ன தொகையில் மத்திய அரசு பாதி தந்திருக்கிறதா ? அல்லது மாநில அரசேதான் முழுத்தொகையையும் செலவிட்டிருக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : நான் சொன்னது மத்திய அரசும், மாநில அரசும் சேர்ந்து செலவழித்திருக்கிற தொகை. இதுவும் தேசிய விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்று ஆறு மாத காலம் சிறைதண்டனை பெற்றோ அல்லது சிறையிலடைக்கப்பட்டோ அல்லது போராட்டத்தில் மரித்தோ அல்லது தூக்கு தண்டனை பெற்றோ அல்லது துப்பாக்கிச் சூட்டினாலோ, லத்தி அடியினாலோ நிரந்தரமாக உடல் ஊனமுற்றோ அல்லது வேலையை இழந்து தன் வருவாயை இழந்து அல்லது தன் செல்வத்தின் பகுதியையோ, முழுவதையுமோ இழந்து அல்லலுற்றவர்களாக இருந்தால் அவர்கள் பிள்ளைகளுக்கு அளிப்பது என்கிற நிபந்தனைகள் எல்லாம் வகுக்கப்பட்டிருக்கின்றன.

திரு. கு. காமாட்சி : தலைவர் அவர்களே, இந்த விடுதலை வீரர்களுடைய குழந்தைகளுக்கும் அளிக்கப்படும் கல்விச் சலுகை போல் எல்லைப் போராட்டம், மொழிப் போராட்டம் ஆகியவற்றிலே உயிர்நீத்த தியாகிகளுடைய குடும்பக் குழந்தைகளுக்கும் உதவி அளிக்கப்படுமா ? அப்படி பரிசீலனையில் இல்லையென்றால், மொழிப் போராட்ட வீரர்கள், எல்லைப் போராட்ட வீரர்களுக்கெல்லாம், மானியம் வழங்க இருப்பதாக முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள், அதைப் போல் இதுவும் பரிசீலனை செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.





மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இந்தத் திட்டமே மத்திய அரசினுடைய திட்டம். அதை மாநில அரசு ஏற்றுக்கொண்டு ஈட்டுத் தொகை தருகிறது. மாண்புமிகு உறுப்பினர் கூறுகின்ற திட்டத்திற்கான செயற்குறிப்பு இப்பொழுது இல்லை.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : தலைவர் அவர்களே, பல கல்வித் துறைகளிலே ஈடுபட்டிருக்கின்ற இந்தத் தியாகிகளுடைய குழந்தைகளுக்கு சில நிபந்தனைகளுடைய அடிப்படையிலே இந்த மானியம் கொடுக்கப்படுகிறது. 1971–72-ம் ஆண்டில், 1972–73-ம் ஆண்டில், எத்தனை குழந்தைகள் இதிலே பயன அடைந்திருக்கிறார்கள் என்பதை அறியலாமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, எல்லாத் துறைகளிலேயும் 138 மாணவர்கள் இந்தப் பலனை அடைந்திருக்கிறார்கள்.

திரு. முனு ஆதி : தலைவர் அவர்களே, 6 மாதங்களுக்கு மேலே சிறைச்சாலை சென்றவர்களுக்குக் கொடுக்கப்படுகின்ற சலுகை என்று சொன்னால், தேசிய விடுதலைக்கு மட்டும்தானா ? அல்லது இந்தி எதிர்ப்புப் போராட்டத்திலே பேரறிஞர் அண்ணா போன்றவர்கள்கூட 6 மாதத்திற்கு மேலே சிறையிலே இருந்திருக்கிறார்கள். நாட்டு விடுதலைக்குப் போராடுவதுதான் போராட்டமென்றில்லாமல், ஜனநாயகப் பாதுகாப்புக்காக, ஜனநாயக விடுதலைக்காகப் போராடியவர்களுக்கு, திராவிட முன்னேற்றக் கழகத்தினர் போராட்டத்திலே சிறை சென்றவர்கள் இருக்கிறார்கள், அவர்களுக்கு மாநில அரசு ஏன் தரக்கூடாது ? மத்திய அரசு தராவிட்டால் பரவாயில்லை. மாநில அரசே ஒரு திட்டம் தீட்டி, அப்படி தியாகம் செய்த குடும்பங்களுக்கு ஏன் தரக்கூடாது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நான் முதலிலேயே குறிப்பிட்டேன், இது வெள்ளையர்களை எதிர்த்து, இந்திய விடுதலைப் போராட்டத்திலே ஈடுபட்ட தியாகிகளுக்கென்று மத்திய அரசு வகுத்த திட்டமென்று. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய அத்தகைய தன்மைகளில், எல்லைப் போராட்டங்கள், இந்தி எதிர்ப்புப் போராட்டங்கள், ஆகியவற்றில் ஈடுபட்டவர்களைப் பற்றிய விவரங்களைச் சேகரித்துக் கொண்டிருப்பதாக முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள், அவர்களுக்கு மானியம் வழங்குவது என்றால், அதற்குப் பிறகுதான் இதுபற்றி பரிசீலிக்க வேண்டி வரும். இது ஒரு கொள்கைப் பிரச்னை.

திரு கே. கந்தசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, தியாகிகளின் குழந்தைகளுக்கு கல்விச் சலுகைகள் அளிப்பதைப் போல், பாரதியார், வ.உ.சி. போன்றவர்களின் குடும்பங்களில் வந்தவர்களுக்கு சலுகை அளிக்கும் திட்டம் அரசிடம் இருக்கிறதா ? இல்லையென்றால், அதை நிறைவேற்ற அரசு முயலுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அது தனிச் சலுகையின்பாற்படும். இது மத்திய அரசாங்கம் வகுத்துத் தந்திருக்கிற திட்டத்தை மாநில அரசு நடைமுறைப்படுத்துகிற திட்டமாகும். அதுபற்றி விவரம் வேண்டுமானால், தனிக் கேள்வி போடவும்.

வெள்ளக்கோவில் ஒன்றியப் பள்ளிகளில் ஆசிரியர்கள்.

* 432 வினா—திரு. மு. பழனிசாமி : மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1972–73-ம் கல்வி ஆண்டில், வெள்ளக்கோவில் ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் எத்தனை இளநிலை ஆசிரியர் பதவிகள் முதுநிலைப் பதவிகளாகத் தரம் உயர்த்தப்பட்டன ?

(இ) அப்பதவிகளுக்கு உரிய காலத்தில் ஆசிரியர்கள் நியமனம் செய்யப்பட்டனரா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :

(அ) இரண்டு பணியிடங்கள்.

(இ) ஆம்.

கும்முடிப்பூண்டி உயர்நிலைப்பள்ளி.

* 433 வினா—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு கல்வி-சுற்றுலாத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்முடிப்பூண்டி அரசினர் உயர்நிலைப்பள்ளிக்கு இட வசதியைப் பெருக்கும்பொருட்டு புதிதாக ஆறு வகுப்பறைகள் கட்டுவதற்கான திட்டம் காலதாமதப்படுவதன் காரணம் என்ன ?

(இ) எப்போது அவை கட்டி முடிக்கப்படும் ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :

(அ) & (இ).—

கும்முடிப்பூண்டி அரசினர் (கழக) உயர்நிலைப்பள்ளிக்காக ஆறு அறைகள் கட்டும் நோக்குடன் ரூ. 1,07,000 மதிப்பீட்டில் முன்னதாக திட்டம் தயாரிக்கப்பட்டது. நிதிப்பற்றாக்குறையினால் ரூ. 36,000 மதிப்பீட்டில் துணைக்கட்டிடம் கட்டலாமென்று தீர்மானித்து, மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர் அதற்கான வரைபடமும் மதிப்பீடும் அனுப்பியுள்ளார். அவை அரசின் பரிசீலனையில் உள்ளன.



திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, இந்த உயர்நிலைப் பள்ளியில் அதிகமான மாணவர்கள் வகுப்பில் படிக்காமல், வெட்ட வெளியேயிருந்து படிக்கின்ற காரணத்தால், குறைக்கப்பட்ட தொகையையாவது உடனடியாக ஒதுக்கி, கட்டிடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, ரூ. 36,000 செலவில் கட்டிடம் கட்ட ஒரு பிரேரணை வந்திருக்கிறது. அது அரசின் பரிசீலனையில் இருக்கிறது. விரைவில் முடிவு எடுக்கப்படும்.

*Symposium on ground water*

* 434 *Q.* Thiru R. R. MUNUSAMI : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(*a*) whether any International Symposium on Development of Ground Water Resources was held at Madras during November 1973, and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :

(அ) & (இ) நிலத்திற்குக் கீழே புதையுண்ட நீரின் வளம் பற்றிய அனைத்து நாட்டு கருத்தரங்கு ஒன்று 1973-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 26-ம் நாளிலிருந்து 29-ம் நாள் வரை கிண்டி பொறியியல் கல்லூரியில் நடந்தேறியது. இக்கருத்தரங்கு நில நீர் துறையில் பணியாற்றும் பல்வேறு அறிவியல், புவியியல் வல்லுநர்களையும் ஒருமிக்கக்கூட்டி நிலநீர் வளத்தைப் பயன்படுத்துவதில் அவர்களை எதிர்நோக்கிய பல்வேறு சிக்கல்களை விவாதிக்க உதவியதோடு இப்பொருள் பற்றிய தற்போது நிலவிவரும் புதிய கருத்துக்களை அறியவும் உதவிற்று. இதையொட்டி ஒரு பொருட்காட்சியும் நடைபெற்றது.

திரு. எம். சுரேந்திரன் : சார், நிலத்திற்குக் கீழுள்ள நீரைக் கொண்டு வருவது பற்றிய கருத்தரங்கின் காரணமாக நம்முடைய மாநிலத்திற்கு எந்த அளவிற்கு, என்னென்ன அதிகமான பயன்கள் கிடைத்திருக்கின்றன ? நம்முடைய மாநிலத்தைப்பற்றி ஏற்கெனவே ஆராயப்பட்டு, நிலநீர் சம்பந்தமாக ஒரு முடிவை அரசாங்கம் எடுத்திருப்பதாகத் தெரிகிறதே, அதற்கு ஊக்கம் அளிக்கின்ற வகையிலே, அதை இன்னும் விரைவுபடுத்துகின்ற வகையிலே இந்தக் கருத்தரங்கு அமைந்திருந்ததா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இந்தக் கருத்தரங்கு 3, 4 நாட்கள் நடைபெற்று மிகப் பயன் அளித்துள்ளது என்றுதான் குறிப்பு உள்ளது. பல்வேறு நாடுகளைச் சேர்ந்த

292 பிரதிநிதிகள் இக்கருத்தரங்கில் கலந்து கொண்டார்கள். இந்தியாவைத் தவிர 13 வெளிநாடுகளிலிருந்து 34 அண்டர்கிரவுண்டு வாட்டர் எக்ஸ்பர்ட்ஸ் கலந்துகொண்டு ஆலோசனை கூறி இருக்கிறார்கள் இக் கருத்தரங்கில் 12 தொழில் நுட்பக் கட்டுரைகள் படிக்கப்பட்டுள்ளன. அவற்றில், புதிதாகவகுக்கப்பட்டிருக்கின்ற நவீன முறைகளையெல்லாம் நடைமுறைப்படுத்துவதுபற்றி வல்லுநர்கள் கருத்து தெரிவித்து, நன்கு ஆராயப்பட்டிருக்கிறது.

பொருட்காட்சியை பொருத்தமட்டில், தமிழ் நாட்டிலே எங்கெங்கு நிலநீர் இருக்கிறது என்பதற்கான வரைபடங்கள் வைக்கப்பட்டிருந்தன. இந்தக் கருத்தரங்கு, தமிழகத்திலே அடித்தளத்திலே இருக்கிற நீரை மேலே கொண்டுவருவதற்குப் பெரிதும் பயன்பட்டது என்று குறிப்பு கூறுகிறது.

திரு. ஆ. பரந்தாமன் : தலைவர் அவர்களே நிலத்தடி நீர் வளத்தை கண்டுபிடிக்க தமிழ்நாட்டிலே கிரவுண்ட் வாட்டர் டிவிஷன் இருக்கிறது. அவர்கள் சில ஆண்டுகளுக்கு முன்னால் ஒரு அறிக்கையைத் தந்திருக்கிறார்கள். ஆனால் நடைமுறையில், அந்த அறிக்கை பல இடங்களிலே தவறான தகவலைத் தந்திருக்கிறது. அந்த அறிக்கையைப் புதிதாக மாற்றி அமைத்து, எங்கெங்கு உண்மையாக நீர் வளம் இருக்கிறது என்று கண்டு பிடிக்க இந்த சிம்போசியம் பயன்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அந்த அறிக்கை சரியானதா, தவறானதா, என்று நாம் யாரும் கூறுவதற்கில்லை அத்துறை வல்லுநர்கள்தான கூறவேண்டும். இந்தக் கருத்தரங்குக்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை புதிய கருத்துக்கள், புதிய போக்குகள், புதிய முறைகள் ஆகியவற்றைப் பற்றி கலந்துகொள்கின்ற அளவுக்கு வல்லுநர்கள் இதில் கலந்துகொண்டு உரையாடியிருக்கிறார்கள். நிலத்தடி தண்ணீரைப் பற்றிய பொறி இயல் வல்லுநர்கள், பொதுப் பணியைச் சேர்ந்தவர்கள், மின்சாரத் துறையைச் சேர்ந்தவர்கள், வேளாண்மைத் துறையைச் சேர்ந்தவர்கள், தொழில் நுட்பக் கல்வியைச் சேர்ந்தவர்கள், இப்படிப்பட்ட பல்வேறு துறையினர் கலந்துகொண்டு ஆராயப்பட்ட கருத்துக்கள் எதிர்காலத்திற்கு வழிகாட்டியாக அமையும் என்று கூறப்பட்டுள்ளது.

திரு. கே. எ. வகாப் : தலைவர் அவர்களே, இந்த தமிழகத்திலே உள்ள நலந்தீட்ட ஆறுகாடு போன்ற இடங்களிலே, விவசாயிகள் கடன் வாங்க.... ..........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கருத்தரங்கு பற்றிய கேள்வி இது. அதுபற்றி கேள்வி கேளுங்கள்.

திரு. கே. எ. வகாப்: விவசாயிகள் கடன் பெறுவதிலே....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பி. டபிள்யூ. டி. பற்றி வேண்டாம். அமைச்சரவர்கள் கருத்தரங்கு பற்றித்தான் என்று.. ..



திரு. கே. எ. வகாப்: இந்தக் கருத்தரங்கினால் விவசாயிகளுக்கு பலன் ஏற்பட்டிருக்கின்றதா என்று அறிய விரும்புகிறேன். சில தவறான முடிவுகளினால் விவசாயிகள் கடன் பெறுவதில் தாமதம் ஏற்படுகிறது. கடன் கொடுக்க மறுக்கிறார்கள். அவர்கள் கருத்தரங்கில் கலந்துகொண்டார்களா? அவர்களுக்கு ஏதாவது நல்ல ஆலோசனை கூறப்பட்டதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, இந்த நிலத்தடி நீரை வெளிக்கொண்டுவருகிற முயற்சியை மேற்கொள்கிற துறை வேறு. அறிவியல் கருத்துக்கள், தொழிலியல் கருத்துக்கள் பெறுவது வேறு. தொழில் நுட்பக் கருத்துக்களை பரிமாறிக் கொண்டு நல்ல முறைகளை எப்படிக் கையாளலாம், எப்படி அவற்றைக் கையாண்டு வெற்றி பெறுகிறார்கள் என்பதைப்பற்றி ஆராய நடத்தப்பட்ட கருத்தரங்கு இது. இக்கருத்தரங்கு, தமிழகத்திலே தீவிரமாகவும், மிக நல்ல முறையிலேயும் திட்டங்களை நிறைவேற்றப் பயன்படுவனவாக அமையும். அறிக்கைகள், மேற்கொண்டிருக்கிற நடைமுறைகள் பற்றி, அதற்கென்று தனியாக இருக்கிற துறை என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பனதப் பற்றிய விவரங்களுக்குத் தனிக்கேள்வி போடவும்.

## "தமிழ் அரசு"

*435 வினா—திரு. தி.சி. மு. சிவப்பிரகாசம் : மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) "தமிழ் அரசு" மாதம் ஒன்றுக்கு எத்தனை பிரதிகள் அச்சடிக்கப் படுகிறது?

(இ) அப்பிரதிகளில் எத்தனை இலவசமாக வழங்கப்படுகிறது?

(உ) அப்பத்திரிகை பிரசுரம் செய்வதில் அரசுக்கு எவ்வளவு லாபம் கிடைக்கிறது?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் (அ)—(உ) மாதம் ஒன்றுக்கு தமிழ் 38,500 பிரதிகளும், ஆங்கிலம் 3,000 பிரதிகளும் அச்சடிக்கப்படுகிறது.

இலவசப்பட்டியல் மூலம் சுமார் 1,150 இதழ்கள் இலவசமாக வழங்கப் படுகிறது.

அரசு நடத்தும் ஏடு லாபநஷ்டத்தைக் கருதி நடத்தப்படும் ஏடு அல்ல. அரசின் பல சாதனைகளைப் பற்றிய கட்டுரைகள், கவிதை, வெண்பாப் போட்டி போன்ற பல செய்திகளைத் திரட்டி குறைந்த விலையில் எல்லாத்தரப்பட்ட மக்களும் படித்துப் பயன்பெறும் நோக்கத்தோடு நடத்தப்படுவதாகும். இதற்கு முன் அரசால் நடத்தப்பட்ட மேழிச் செல்வம், சிரணி, பாக்கியலட்சுமி போன்ற இதழ்கள் குறைந்த விலையில்

விற்கப்பட்டன. மேற்கண்ட ஏடுகள் லாப நஷ்டத்தைக் கருதி வெளியிடப்படவில்லை. உதாரணமாக ஆரோக்கியமார்க்கம் ஹெல்த் எஜுகேஷன் என்ற இதழ்கள் அரசுச் செலவில் அச்சடிக்கப்பட்டு இலவசமாகவே வெளியிடப்பட்டுள்ளன. தற்போது மக்கள் நல்வாழ்வுத்துறையில் வெளியிடும் "குடும்ப நல செய்திக் கதிர்" என்னும் இதழ் மக்களுக்கு இலவசமாகவே வழங்கப்படுகிறது.

முற்பகல் 9-30

திரு. எம். சுரேந்திரன்: சார், தமிழ் அரசு 38 ஆயிரம் பிரதிகள் அச்சிடப்படுவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படி அச்சிடப்படுவதின் மூலமாக அரசாங்கத்திற்கு எவ்வளவு வருவாய் வருகிறது? அதை விநியோகிப்பதின் மூலமாக எவ்வளவு வருவாய் வருகிறது? எவ்வளவு துண்டு விழுகிறது? இந்த தமிழ் அரசிலே பல பேர்கள் கட்டுரைகள் எழுதிக்கொண்டிருக்கிறார்கள். எல்லோரும் கட்டுரை எழுதி அனுப்ப அனுமதிக்கப்படுகிறார்களா?

மாண்புமிகு திரு. என்.வி. நடராசன்: தலைவர் அவர்களே, சந்தாதாரர்கள் மூலமாக 1—7—1970 முதல் 16—9—1973 வரையில் விற்பனையானது சுமார் 6 லட்சத்து 88 ஆயிரத்து 378 ரூபாய். ஏஜண்டுகள் மூலமாக தமிழ், ஆங்கில இதழ்கள் விற்பனை செய்தது சுமார் 4 லட்சத்து 36 ஆயிரத்து 679 ரூபாய். இதிலே தனியார் நிறுவனங்களாலும், அரசு நிறுவனங்களாலும் விளம்பரங்கள் செய்யப்பட்டதன் மூலம் சுமார் 5 லட்சத்து 19 ஆயிரத்து 950 ரூபாய் கிடைத்தது. இது வரவு குறித்து தெரிவிக்கும்படியான குறிப்பாகும். இதை சட்டப் பேரவை, மேலவை, பாராளுமன்ற உறுப்பினர்கள் அங்கீகரிக்கப்பட்ட துறையாளர்கள், துறைச் செயலாளர்கள், துணைச் செயலாளர்கள் ஆகியவர்களுக்கு இலவசமாக வழங்குகிறோம்.

திரு. ந. சோமசுந்தரம்: லாப நஷ்டம் கருதி இது நடத்தப்படவில்லை என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள், மேலும் அரசினுடைய சாதனைகளை மக்கள் அறியத்தக்கவகையிலே ஊராட்சி, பேரூராட்சி மன்றங்களுக்கும் இது இலவசமாக வழங்கப்படுமா?

மாண்புமிகு திரு. என்.வி. நடராசன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தனிக் கேள்வி போட வேண்டும்.

திரு. எ.ஆர். சுப்பையா: சபாநாயகர் அவர்களே, மேழிச் செல்வம் என்று முன்னாலே வந்தது விவசாயிகளுக்கு மிகவும் பயன்படக்கூடியதாக இருந்தது. அதில் இருக்கக்கூடியவையெல்லாம் இதில் வரும் என்பதால் இதனை வரவேற்றுக் கொண்டிருந்தோம். மேழிச் செல்வத்திலே அதிகமாக விவரங்கள் வந்தன. இதிலே இப்பொழுது வருவதில்லை. ஆகவே விவசாயப் பகுதிக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க அரசு யோசிக்குமா?

மாண்புமிகு திரு. என்.வி. நடராசன்: அதைப்பற்றி பரிசீலனை செய்யலாம்.



திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவர் அவர்களே, தமிழ் அரசிலே முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றத்திலே ஆற்றிய உரைகள் எல்லாம் அச்சிடப்பட்டு பிரசுரம் செய்யப்படுகின்றன. அந்த உரைகள் எல்லாம் ஏற்கனவே சட்டமன்ற நடவடிக்கை புத்தகங்களிலும் பத்திரிகைகளிலும் வருகின்றன. ஆக, தமிழ் அரசிலும் அதை பிரசுரிக்க வேண்டிய அவசியம் இருக்கிறதா? எதிர்க்கட்சித் தலைவர்களுடைய உரைகளையும் அதிலே பிரசுரிக்க அரசு முயற்சி எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: எதிர்க்கட்சியினர் இந்த அவையிலே எழுப்புகின்ற சந்தேகங்கள், கோருகின்ற விளக்கங்கள் இவைகளுக்குப் பதிலாக முதலமைச்சர் உரை அமைந்திருக்கின்ற காரணத்தினால் எதிர்க்கட்சியினர் உரையும் அதிலே கலந்திருக்கிறது. ஆகவே தனியாக அச்சிடப்பட வேண்டிய அவசியமில்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தமிழ் அரசு பிரதிகள் தனியார்கள் மூலம் விற்பனைக்குக் கொடுக்கப்படுகின்றனவா? அதன்மூலம் எவ்வளவு வருவாய் வந்திருக்கிறது என்பதை அறியலாமா?

மாண்புமிகு திரு. என்.வி. நடராசன்: நான் ஏற்கெனவே பதில் சொன்னேன். தனியார் துறையிடம் தரப்படுகிறது. அதன் மூலமாகக் கிடைத்த ரூபாய் சுமார் 22 லட்சத்து 60 ஆயிரத்து 475 ரூபாய் 20 காசுகள்.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, the Journal 'Tamil Arasu' is attractive and its get-up is good and it contains also very good articles and people are able to understand the Government's schemes. Since there are a large number of Telugu speaking people in this State, may I know whether the Government will be pleased to publish it in Telugu or include Telugu articles in the Tamil Journal ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : மாண்புமிகு உறுப்பினரின் கருத்தை ஆராயலாம்.

அரிசனங்களுக்கு வீட்டு மனைகள்.

*436 வினா.—திரு. த. சோனையா: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், திருப்புவனம் 3-வது வார்டு அரிசனங்களுக்கு, மடப்புறம் உயர்நிலைப்பள்ளிக்கு அருகில் நில ஆர்ஜிதம் செய்யப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், மொத்த மதிப்பீடு எவ்வளவு?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: (அ) ஆம்.

(இ) ரூபாய் 4,590·70.

திரு. த. சோணைபா : தலைவர் அவர்களே, இந்த நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டு பட்டாக்கள் வழங்கப்படுவதற்கான விழாவும் நடைபெற்று விட்டது. ஆனால் அந்த இடத்திற்குள் அரிசன மக்கள் சென்று வீடு கட்டிக்கொள்ளுவதற்கு நுழைய முடியவில்லை. காரணம் நிலச்சொந்தக்காரர்களுக்குப் பணம் போய்ச் சேரவில்லை என்று ஆட்சேபிக்கிறார்கள். அதிலே என்ன தகராறு என்பதை அரசு தெரிந்து அவர்கள் வீடு கட்டிக் கொள்வதற்கான ஏற்பாடுகளைச் செய்யுமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: நிலச் சொந்தக்காரர்கள் நிலம் கொடுக்க மறுத்தார்கள். அவர்களுக்கு 2 லட்சத்து 80 ஆயிரம் ரூபாய் அளவிற்குச் சொத்து இருப்பதால் அவர்களுடைய மறுப்பு ஏற்றுக்கொள்ளப்படவில்லை. அந்த நிலத்தை எடுத்து அரிசன மக்களுக்குக் கொடுக்க வேண்டுமென்ற முறையிலே வாரியம் உத்திரவிட்டிருக்கிறது. ஆனால் பணம் இன்னும் கொடுக்கவில்லை. பணம் கொடுத்தபிறகுதான் பட்டா செய்யமுடியும். பணம் கொடுத்தபிறகு பட்டா செய்துகொடுக்கப்பட்டு அது அந்த மக்களுக்கு வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: அரிசனங்களுக்கு வீடுகள் கட்டிக்கொள்வதற்காக மனைகள் வழங்குவதற்காக நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டு—நிலங்களை ஆர்ஜிதம் செய்வது அரிசன நலத் துறையாக இருந்தாலுங்கூட, மனைக் கட்டு வழங்குகின்ற அதிகாரிகளிடம் கொடுத்து விநியோகம் செய்ய சொல்வதாலே அவர்கள் 2 சென்ட்டுக்கு மேல கொடுக்க மறுக்கிறார்கள், இரண்டு சென்ட்டுகள் தான் கொடுக்கப்படுகிறது. ஆகவே, அரிசன நலத் துறையினரே கொடுத்தால் 3 சென்ட்டுகள் கொடுக்கலாம். அரிசன நலத் துறையினரே ஆர்ஜிதம் செய்கின்ற மனைக்கட்டுக்களை அவர்களே விநியோகிக்கச் செய்யக்கூடிய முறையைக் கொண்டுவருவார்களா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: நலத் துறையின் மூலமாக நிலம் ஆர்ஜிதம் செய்யப்படுகிறது. ஆனால் ரெவின்யூ இலாகாவினால்தான் இது செய்யப்படுகிறது. நலத் துறையானது எத்தனை ஏக்கர்கள், எந்த இடத்திலே, எவ்வளவு பேர்களுக்கு எடுத்துக் கொடுக்கப்படுகிறது என்ற கணக்குகளை வைத்துக்கொண்டிருக்கிறது. மிக அதிகமாகப் பணம் கொடுத்து எடுத்து இருந்தால் அங்கே இரண்டு சென்ட்டுகள்தான் கொடுக்கப்படுகிறது. ஆனால் குறைந்த பணம் கொடுத்து எடுத்திருந்தால் 3 சென்ட்டுகள் கொடுக்கப்படுகிறது, சில இடங்களிலே 5 சென்ட்டுகள் கூட கொடுக்கப்பட்டிருக்கிறது. சில இடங்களிலே எடுக்கப்படுகின்ற இடத்தின் விஸ்தீரணத்தைப் பொறுத்தும், மக்கள் இருக்கின்ற எண்ணிக்கையைப் பொறுத்தும் கொடுக்கின்ற விலையைப் பொறுத்தும் 2 சென்ட்டுகள், 3 சென்ட்டுகள், 5 சென்ட்டுகள் என்று இந்த இலாகாவிலிருந்து நிர்ணயித்து கொடுக்கப்படுகிறது.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களிடத்திலே நான் கேட்பது அரிசன நலத் துறையிலே ஒவ்வொரு அரிசனனுக்கும் 3 சென்ட்டு என்று கொடுக்கிறபோது இப்பொழுது நிலம் இல்லாத



ஏழைகளுக்கு எல்லாம் நிலம் கொடுக்க வேண்டுமென்ற முறையிலே அரிசன நலத் துறையின் மூலமாக ஆர்ஜிதம் செய்யப்படுகிற நிலங்கள் எல்லாவற்றையும் வேறு ஒரு துறையினிடத்திலே கொடுத்தால் அவர்கள் 2 சென்ட்டுகள்தான் கொடுக்கிறார்கள், அக்வயர் பண்ணிய நிலமே மீதம் ஆகிவிடுகிறது என்ற நிலைமை இருப்பதால் அரிசன நல இலாகாவனுலேயே அக்வயர் செய்த நிலத்தை விநியோகிக்கின்ற பொறுப்பையும் கொடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : மூன்று சென்ட்டு கொடுக்கிறோம் சில இடங்களிலே , சில நேரங்களிலே அவர்கள் இந்த இடத்திலேயே தான் கொடுக்கப் படவேண்டுமென்று குறிப்பிட்ட இடத்தையே கேட்கிறார்கள் ஆனால் அந்த இடம் நஞ்சை நிலமாக இருக்கும் அல்லது அதிக விலையுள்ளதாக இருக்கும் அல்லது குறைந்த விஸ்திரணம் உள்ளதாக இருக்கும். நானே சில இடங்களிலே 2 சென்ட்டுதான் கொடுக்கமுடியும் என்று உத்திரவிட்டிருக்கிறேன். காரணம் அந்த இடத்திலே இருக்கக்கூடிய விஸ்தீரணம், அதிக விலை அதிகமான மக்கள் எண்ணிக்கை இவற்றைப் பொறுத்து 2 சென்ட்தான் கொடுக்கமுடிகிறது. ஆனால் முறையாகக் கொடுப்பது 3 சென்ட்டு சென்ட்கூட கொடுக்கப்படுகிறது.

*437. வினா : திரு. என். இராஜாங்கம் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ?

கடலூர் வட்டத்தில், கண்ணாடி, கன்னியங்குப்பம், குண்டியமல்லூர், பூவாணிக்குப்பம், பொட்டவெளி, தானஞ்சேரி, குப்பம்-குறிஞ்சிப்பாடி, அகரம் காலனி, தங்கலிக்குப்பம் (வடக்கு), ஆயிக்குப்பம் ஆகிய கிராமங்களுக்கு (அரிசனங்களுக்கு) மனைப்பட்டா வழங்க 1961-ம் ஆண்டு நடவடிக்கைகள் மேற்கொண்டும் இன்றுவரை மனைகள் வழங்கப்படவில்லை என்பதற்கு காரணம் என்ன ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : கண்ணாடி, பொட்டவெளி, குண்டியமல்லூர், குப்பம்-குறிஞ்சிப்பாடி, பூவாணிக்குப்பம், அகரம், தங்கவிக்குப்பம், ஆயிக்குப்பம்—

இக்கிராமங்களின் அரிசனங்களுக்கு வீட்டுமனைக்காக நில ஆர்ஜிதம் செய்ய மாவட்ட ஆட்சியரிடமிருந்து பிரிவு 4 (1) முன்மொழிவுகள் எதும் வரவில்லை. முன்மொழிவுகள் எதிர்பார்க்கப்படுகின்றன.

கண்ணையங்குப்பம் : இக்கிராமத்தில் நில ஆர்ஜிதத்திற்கான உறுதி மொழி விளம்பரம் வெளியிடப்பட்டு தீர்ப்பு விசாரணை நடத்தப்பட்டது. விரைவில் நிலங்கள் கையகப் படுத்தப்பட்டு பட்டாக்கள் வழங்கப்படும்.

தானஞ்சேரி : இக்கிராமத்தில் நில ஆர்ஜிதத்திற்கான பிரிவு 4 (1) கீழ் முன்மொழிவு அறிக்கை வெளியிடப்பட்டு விட்டது. மேல் நடவடிக்கை தொடரப்படும்.

[1974 மார்ச் 15

## *Mukhya Sevikas.*

* 438 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state whether it is a fact that Mukhya Sevikas of the Women's Welfare Department are serving the Department without any rise in their emoluments and getting their basic pay alone according to the recommendations of the Pay Commissions of 1960 and 1970?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : ஆம்.

திரு. என். டென்னிஸ் : தலைவர் அவர்களே, விமன்ஸ் வெல்பேர் டிபார்ட்மெண்ட் கான்ஸ்ட்டிட்டியூட் செய்தபோது சோஷியல் வெல்பேர் போர்டிலே வேலைசெய்துவரக்கூடிய முக்கிய சேவிகாக்களுக்கு 1961-ஆம் ஆண்டு 1433 ஜி.ஒ. பிரகாரம் பாதுகாப்பு அளிக்கப்பட்டும்கூட அந்த பாதுகாப்பு அமல் நடத்தப்படவில்லை என்பது உண்மையா ? அதை அமல் படுத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : முதலிலே 73 வரையிலும் அப்படிப்பட்ட நிலைமைதான் இருந்தது. ஆனால், 17, அக்டோபர் 1973 லிருந்து ஏறத்தாழ 308 முக்கிய சேவிகாக்கள் ரெகுலரைஸ் செய்யப்பட்டு அவர்களுக்கு சம்பளம் கொடுக்க அரசு ஆணையிட்டிருக்கிறது. கணக்கு எடுத்து அதற்குத் தகுந்தாற்போல் அவர்களுக்கு சம்பளம் கொடுக்கப்படும் என்பதைக் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : தலைவர்களே, பே கமிஷனுக்கு முக்கிய சேவிகாக்களுடைய பே ஸ்கேலைப்பற்றி டிபார்ட்மெண்ட் எடுத்துக் கூறாததால்தான் இது உயர்த்தப்படாமல் இருக்கிறது என்பது உண்மையா ? அதற்கு என்ன ஆவன செய்யப்பட்டிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : தலைவரவர்களே, அந்த நிலைதான் இருந்தது. ஆனால் 1973-ஆம் ஆண்டு அக்டோபரிலே அந்த நிலை மீண்டும் பரிசீலிக்கப்பட்டு அவர்களுக்குச் சம்பளத்தை உயர்த்திக் கொடுப்பதற்கு உத்திரவு பிறப்பித்திருக்கிறது.

### நொய்யல் ஆற்றின் குறுக்கே அணை.

*439. வினா.—திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நொய்யல் ஆற்று அணைக்கட்டுத் திட்டத்தின் ஆய்வு அறிக்கைகள் (Investigation and Estimates) அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்டு விட்டனவா ?

(இ) இப்பணி எப்பொழுது துவங்கும்?



1974 மார்ச் 15]

மாண்புமிகு. திரு ப. உ. சண்முகம் : (அ) இல்லை.

(இ) இத்திட்ட பணிகள் மத்திய நீர் மற்றும் மின் குழுவின் தொழில் நுட்ப ஒப்புதலும் அரசின் அனுமதியும் கிடைத்த பின்னர் துவங்கப் படும்.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : தலைவரவர்களே, ஈரோடு நிர்வாகப் பொறியாளர் அவர்கள் வலையம்பாளையத்திற்கருகில் நீர்த்தேக்கம் கட்டினால் சுமார் 5,000 ஏக்கர்களில் பயன் கிடைக்கும் என்பதாக நொய்யல் ஆற்று திட்டம் பற்றி தலைமைப் பொறியாளருக்கு அனுப்பியிருப்பதாகச் சொன்னார்கள். இது குறித்து நடவடிக்கை எடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, நொய்யல் ஆற்றின் குறுக்கே அணைக்கட்டி தண்ணீரை வலைபம்பாளையம் அருகில் நீர்த்தேக்கம் அமைக்கலாம் என்று தயாரித்து அனுப்பப்பட்டது. ஆனால், தொப்பம்பட்டி நீர்த்தேக்கத் திட்டத்தில் சேர்க்கப்பட்டிருந்த 7,000 ஏக்கர் ஆயக்கட்டை தற்போது செயலாக்கப்பட்டு வரும் புகளூர் கூட்டுறவு நீரேற்று திட்டத்தின் பாசனத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. ஆகையால் தற்போது நீரேற்று திட்டத்தின்மூலம் பயனடையும் ஆயக்கட்டைத் தவிர்த்து, புதியதாக திட்டத்தை தயாரிக்குமாறு கோரப்பட்டுள்ளது. அது முடிந்த பிறகு அரசு பரிசீலித்து முடிவெடுக்கும்.

### மானாமதுரை ஒன்றியத்திலிலுள்ள கண்மாய்கள்.

440. வினா.—திரு. த. சோனையா : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) இராமநாதபுரம் மாவட்டம், மானாமதுரை ஊராட்சி ஒன்றியம் கீழப்பசலைக் கண்மாயை ஆழப்படுத்தும் திட்டம் ஏதேனும் ஆய்விலுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் மொத்த மதிப்பீடு எவ்வளவு ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :

(அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. த. சோனையா : தலைவரவர்களே, மானாமதுரை ஊராட்சி ஒன்றியத்திலுள்ள கீழப்பசலை என்ற கிராமத்தில் உள்ள கண்மாய் பெரிய கண்மாயாகும். அது நீண்ட நாட்களாக ஆழப்படுத்தப்படாமல் இருப்பதால் விவசாயிகளுக்குப் போதுமான தண்ணீரைத் தேக்குவதற்கு வசதியில்லாமலிருக்கிறது. எனவே அரசாங்கம் மீண்டும் இதைப் பரிசீலித்து அதை வெட்ட, மராமத்து செய்ய உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, இந்த கண்மாய் 1971–72-ல் மராமத்து செய்யப்பட்டது. இந்தக் கண்மாயை தூர் வாரும் திட்டத்தின் கீழ் எடுத்துக்கொண்டால் ஏரியின் எதிர்வாயிலில் உள்ள நிலங்களின் சொந்தக்காரர்கள் பலத்த ஆட்சேபனை செய்வார்கள். ஆகவே, தூர் வாரும் வேலையை ஒத்தி வைத்து, தேவையில்லை என்று கருதி, மராமத்து மட்டும் செய்யலாம் என்று யோசித்துக்கொண்டிருக்கிறோம்.

*441. வினா.—திரு. த. சோனையா : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) இராமநாதபுரம் மாவட்டம், மானாமதுரை ஊராட்சி ஒன்றியம், மிளகனூர் கண்மாயை ஆழப்படுத்தும் திட்டம் ஏதேனும் ஆய்விலுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் மொத்த மதிப்பீடு எவ்வளவு ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு த. சோனையா : தலைவரவர்களே, மானாமதுரை ஊராட்சி ஒன்றியம் மிளகனூர் கண்மாய் அந்தப் பகுதியிலே பெரிய கண்மாயாகும். அந்தக் கண்மாய் ஏற்கெனவே ஜமீன்தார் காலத்தில் வெட்டப்பட்டது என்றும் அதற்குப்பிறகு அந்தக் கண்மாயை ஆழப்படுத்தவில்லை என்று அந்தப் பகுதி மக்கள் சொல்கிறார்கள். அதை ஆழப்படுத்தினால் தீவிரத் திட்ட சாகுபடிக்கு ஏற்ப அதிகமான விளைச்சல் உண்டாகும். அதை மனதில் கொண்டு அதில் தீவிர முயற்சியில் அரசு ஈடுபடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, இந்தக் கண்மாயை ஆழப்படுத்தும் திட்டம் எதுவும் ஆய்வில் இல்லை. ஆனால் மராமத்து செய்ய மதிப்பீடு ஒப்புதல் அளிக்கப்பட்டு, வேலை நடந்து வருகிறது.

*442. வினா.—திரு. த. சோனையா : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) இராமநாதபுரம் மாவட்டம், மானாமதுரை ஊராட்சி ஒன்றியம், கட்டிக்குளம் கண்மாயை ஆழப்படுத்தும் திட்டம் ஏதேனும் ஆய்விலுள்ளதா

(இ) ஆம் எனில், மொத்த மதிப்பீடு எவ்வளவு ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. த. சோனையா : தலைவரவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்தில் பெரிய கண்மாய் இராமநாதபுரம் கண்மாய். அதற்கு அடுத்தபடியாக உள்ள இரண்டாவது பெரிய கண்மாய் இந்த கட்டிக்குளம் கண்மாயாகும்.





இது மானாமதுரை ஊராட்சி ஒன்றியத்தில் இருக்கிறது என்பது நம்முடைய அமைச்சரவர்களுக்கு நன்கு தெரியும். இந்தப் பெரிய கண்மாயில் இன்னும் மராமத்து செய்யவில்லை என்ற பெருங்குறை அந்தப் பகுதியிலுள்ளவர்களுக்கு இருக்கிறது. இந்த அரசாங்கம் எத்தனையோ கண்மாய்களை வெட்டிக் கொடுத்து எவ்வளவோ உதவிகளைச் செய்திருக்கும்பொழுது இந்தக் கண்மாயைமட்டும் ஏனோ மறந்துவிட்டது. இனிமேலாவது இதை மராமத்து செய்து அல்லது ஆழப்படுத்தி அதிகத் தண்ணீரை தேக்கிக் கொள்வதற்குத் தீவிரத் திட்டத்தை ஏற்படுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, ஆழப்படுத்துவது என்பது வேறு. தூர் வாருவது வேறு. கண்மாயை வெட்டுவது என்பது வேறு. இந்த ஆண்டு மராமத்து செய்ய எடுத்துக்கொள்ளப்படும்.

## தொட்டியம்-சீனிவாசநல்லூர் சாலை.

* 443வினா :— திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) முசிறி வட்டம், தொட்டியத்திலிருந்து சித்தூர் வழியாக சீனிவாச நல்லூர் வரை செல்லும் சாலை மிகவும் பழுதடைந்திருப்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதை செப்பனிடுவதற்கான நடவடிக்கை ஏதேனும் எடுக்கப் பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, பொதுப்பணித் துறையின் சார்பாக அந்தச் சாலையைச் செப்பனிடுவதற்கு ஒரு திட்டம் இருந்ததே, அது கைவிடப்பட்டதா ? அப்படியென்றால் இனிமேலாவது அதைச் சேர்க்க உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் முயற்சிப்பார்களா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : பேரவைத் தலைவரவர்களே, முசிறி வட்டம் தொட்டியத்திலிருந்து சித்தூர் வழியாக சீனிவாசநல்லூர் வரை செல்லும் இந்தச் சாலை தொட்டியம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்தது. அவர்கள் நிதிநிலை பற்றாக்குறையாக இருப்பதால் செய்ய இயலவில்லை என்று சொன்னதால் மேற்படி சாலையை ஏறத்தாழ 5 இலட்சம் ரூபாயில் திட்டம் தயார் செய்யப்பட்டு, இந்த ஆண்டு சிறப்பு கிராமச் சாலை திட்டத்தின்கீழ் போட ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

[1974 மார்ச் 15

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, இந்தச் சாலை என்னுடைய சொந்த ஊருக்குப் போகும் சாலை. அந்த ஊர் மக்கள் எம்.எல்.ஏ.யினுடைய சொந்த ஊருக்குப் போகும் சாலையே இப்படியிருந்தால் மற்றப் பகுதிகள் எப்படி இருக்கும் என்று கேலி செய்கிறார்கள். எனவே இதை அனுதாபத்தோடு கவனித்து விரைவில் நடவடிக்கை எடுக்க முயற்சிப்பார்களா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : பேரவைத் தலைவரவர்களே, சில ஆண்டுக்காலமாக உறுப்பினரவர்கள் அந்த ஊரைச் சொந்த ஊராக ஆக்கிக்கொள்ளாமல் வேறு ஊரை எடுத்துக்கொண்டு விட்டாலும், அவர்கள் செல்லாவிட்டாலும் நான் சமீபத்தில் அதைப் பார்வையிட்டு அதைப் பழுது பார்க்க வேண்டுமென்று உத்தர்விட்டு வந்திருக்கிறேன்.

திரு. சி. க. வடிவேலு : தலைவரவர்களே, 5 இலட்சம் ரூபாய் மதிப்பீடு என்று அமைச்சரவர்கள் கூறினார்கள். சென்ற ஆண்டே இந்தத் திட்டத்தை எடுப்பதாக இருந்தது. ஆனால் பண நெருக்கடி இருந்ததால், இந்த ஆண்டாவது அதைத் துரிதமாகச் செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : இந்த ஆண்டு எடுத்துக் கொள்வதற்குத்தான் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்பதைக் குறிப்பிட்டேன்.

## ஆலடியூரில் சாலை அமைப்பு.

*444 வினா :—திரு. ச. சங்குமுத்துதேவர் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) அம்பாசமுத்திரம் தாலுகா, ஆலடியூர் பக்கம் தாம்பரபரணி நதியின் குறுக்கே கட்டப்பட்டுள்ள பாலத்திற்கு அணுகுசாலை அமைப்பதற்கெனப் பொது மக்களிடமிருந்து நஞ்சை புஞ்சை நிலங்களை அரசு எடுத்துக் கொண்டதா ?

(இ) ஆம் எனில், மொத்தம் எத்தனை ஏக்கர் எடுத்துக்கொள்ளப் பட்டது ?

(உ) அதன் மொத்த மதிப்பீடு எவ்வளவு ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) ஆம்.

(இ) 6.04 ஏக்கர்.

(உ) ரூபாய் 48,496·01.



1974 மார்ச் 15]

## *Supply of sooji.*

* 445. *Q.*—Thiru N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state the steps taken by the Government to make available good variety of sooji in the State ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : நல்லதரமான ரவை பொது மக்களுக்கு வழங்கப்படுகிறது.

திரு. என். கே. பழனிசாமி : சார், சென்னையிலே மட்டும்தான் ஜனங்களுக்கு ரவை விநியோகம் செய்யப்படுகிறது. மற்ற மாவட்டங்களில் இம்மாதிரி ஒரு விநியோக முறை இல்லை. எவ்வளவு ரவை நமக்குக் கிடைக்கிறது ? ஏன் இதை மாவட்டங்களிலுள்ள சூப்பர் மார்க்கெட்டுகளுக்கு விநியோகம் செய்யக்கூடாது ? காரணம் என்னவென்றால் கிராமப்புறங்களில் கல்யாணம் போன்ற காரியங்களுக்கு ரவை முக்கியமாக இருக்கிறது. ஆனால் இப்பொழுது அங்கே கிடைப்பதில்லை. எனவே இதை எல்லா இடங்களுக்கும் கொடுக்க சர்க்கார் ஏன் ஏற்பாடு செய்யக்கூடாது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவரவர்களே, நான் இங்கே பலமுறை சொல்லியிருக்கிறேன். நமக்குக் கிட்டத்தட்ட 5,359 டன் இங்கே உற்பத்தி செய்யப்பட்டு வந்த அந்த ரவை இப்பொழுது 1,200 டன்னுக்கு வந்துவிட்டது. காரணம், 35,000 டன் கோதுமை கொடுக்கப்பட்டு வந்தது. ஆனால் இப்பொழுது 10,000 டன் என்று குறைந்துவிட்டதால் ரவை தயாரிப்பு குறைந்து இருப்பதால் எந்த அளவிற்கு நாம் விநியோகம் செய்ய முடியுமோ அந்த அளவிற்கு இந்த நகரத்திலேயும் இன்னும் சில சூப்பர் மார்க்கெட்டுகளுக்கும் எப்படிக் கொடுக்க முடியுமோ அந்த முறையில் இருப்பதை நல்ல முறையில் விநியோகம் செய்யப்படுகிறது.

## மண்ணெண்ணெய் பதுக்கல் வழக்குகள்.

*446 வினா :—திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம் : மாண்புமிகு உணவு-கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

1973–74-ல், திருநெல்வேலி மாவட்டத்தில், மண்ணெண்ணெயை பதுக்கி வைத்ததாகவும், அதிக விலைக்கு விற்றதாகவும் பிராசிக்யூஷன் செய்யப்பட்ட வியாபாரிகள் எத்தனை பேர் ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : 13—11—1973 வரையில் 39 பேர்கள் மீது வழக்கு தொடர்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

### *Nandanam-Kottur boat service.*

* 447 Q.—Thiru R. R. MUNUSAMI: Will the Hon. the Minister for Labour be pleased to state:

(a) whether it is a fact that the Slum Clearance Board is operating Boat Service between Nandanam and Kottur Adyar in Madras; and

(b) if so, the details thereof?

<u>மாண்புமிகு திரு. க. இராசாராம்</u>: (அ and இ): தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்றுவாரியம் சென்னை நந்தனத்திற்கும் கோட்டூர்புரத்திற்கும் இடையே படகுப்போக்குவரத்து ஒன்றை செயல்படுத்தி வந்தது. 19—10—73 முதல் இப்படகு போக்குவரத்து தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் நிறுத்தப்பட்டுள்ளது. அந்நாள் முதல் சென்னை மாநகராட்சி இப்படகு போக்குவரத்தை செயல்படுத்தி வருகிறது.

<u>திரு. நா. வெ. குருசாமி</u>: தலைவரவர்களே, அந்தப் படகு விடுவதில் பொதுமக்களிடமிருந்து பணம் வசூல் செய்யப்படுகிறதா?

<u>மாண்புமிகு திரு. க. இராசாராம்</u>: தலைவரவர்களே, 5 காசுகள் வசூல் செய்யப்படுகிறது.

### *Labour Welfare Fund.*

* 448 Q.—Thirumathi T. N. ANANDANAYAKI: Will the Hon. the Minister for Labour be pleased to state:

(a) the amount available at present in the Labour Welfare Fund; and

(b) the details of the operation and working of that fund?

<u>மாண்புமிகு திரு. க. இராசாராம்</u>: (அ) தொழிலாளர் நல நிதியில் 25—1—74 வரையிலும் உள்ள இருப்புத் தொகை ரூ. 16,74,792·95 ஆகும்.

(இ) தொழிலாளர்கள், அவர்களைச் சார்ந்துள்ளோர் ஆகியோரின் நலனை மேம்படுத்த அவ்வப்போது அரசால் குறிப்பிடப்படக்கூடிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதற்காக தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் நிதியில் நிலைபெற்றுள்ள பணத்தைப் பயன்படுத்தலாம்.



<u>திரு. என். கே. பழனிசாமி</u>: இதற்காகச் சட்டம் வந்து ஒரு வருஷந்தான் ஆகிறது. இந்தப் பணம் எவ்வாறு செலவு செய்யப்படுகிறது? அதற்கு ஏதாவது திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறதா?

<u>மாண்புமிகு திரு. க. இராசாராம்</u>: இந்த நிதி சமுதாய-சமூக நலக் கல்வி நிலையங்கள்; வாழ்க்கைத் தொழிற் பயிற்சி, சமுதாயத் தேவைகள்; கேளிக்கை-ஏனைய பொழுதுபோக்கு முறைகள்; உடல் நலந்தேறி வரும் காச நோயாளிகளுக்கு நலம்பேண் இல்லங்கள், நலவிழைவிடங்களில் விடுமுறை இல்லங்கள்; தொழிலாளர் மனைவியர்க்கு பகுதிநேர வேலை வாய்ப்பு; பாலர் பள்ளிகள்; தொழிலாளர்களின் குழந்தைகளுக்குச் சத்துணவளித்தல்; உடல் ஊனமுற்ற தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்புகள்; இச்சட்டத்தின் பணிகளுக்காக நியமிக்கப்படும் பணியாளருக்காகும் ஊதியங்கள்; படிகள் உட்பட இச்சட்டத்தினைச் செயற்படுத்தலுக்கு ஆகும் செலவு; தொழிலாளரின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவனவும் அவர்களின் சமூக நிலையைச் சீராக்குவதுமானவை என்று வாரியம் கருதுகின்ற பிற நோக்கங்கள் ஆகியவற்றுக்குப் பயன்படுத்தலாம் என்று வரையறுக்கப்படுகிறது.

<u>திரு. ஜே. ஜேம்ஸ்</u>: தொழிலாளர் நல நிதிக்கு தொழிலாளர்களிடமிருந்து வசூல் செய்யும் பங்குத் தொகைக்கு அரசாங்கத்திலிருந்து ரசீது வழங்கப்படுகிறது. இப்போது அவர்களிடையே ஒரு எண்ணம் இருக்கிறது. பணம் கொடுத்ததற்கு எதும் சான்று இல்லாமல் போவதால் அதற்கு ஏதாவது ஒரு முறையை அரசாங்கம் வகுக்குமா?

<u>மாண்புமிகு திரு. க. இராசாராம்</u>: அரசிடத்திலிருந்து ஒவ்வொரு நிதி பெறும்போதும் ரசீதும் தரப்படுகிறது. கணக்குகள் வைக்கப்படுகின்றன.

<u>திரு. கே. எ. வகாப்</u>: இப்படிப்பட்ட தொழிலாளர் நல நிதிகள் கைத்தறி நெசவாளர்கள், பீடித் தொழிலாளர்களுக்கும் அளிக்கப்படுகிறதா? அப்படி இருந்தால் அதனுடைய விவரங்கள் என்ன?

<u>மாண்புமிகு திரு. க. இராசாராம்</u>: இந்தத் தொழிலாளர் நல நிதியைப் பொறுத்த வரை தொழிற்கூடங்களில் வேலை செய்பவர்களுக்காக ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. தொழில் அதிபர்களிடமிருந்தும் தொழிலாளர்களிடமிருந்தும் தொகைகள் பெற்று காரியங்களை ஆற்றி வருகிறது. அரசு ஐந்து லட்சம் ரூபாய் மானியமாகத் தந்திருக்கிறது.

### *Employees State Insurance Hospital for Mettur.*

* 449 Q.—Thiru N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Labour be pleased to state the stage at which the proposal to construct a hospital under the Employees' State Insurance Scheme at Mettur stands at present?

[1974 மார்ச் 15

மாண்புமிகு திரு. க. இராசாராம் : சேலம் மாவட்டத்திலுள்ள மேட்டூரில் அரசு தொழிலாளர் ஈட்டுறுதித் திட்டத்தின் கீழ் மருத்துவமனை கட்டுவதற்கான செயற் குறிப்பு எதும் ஆய்வில் இல்லை.

திரு. என். கே. பழனிசாமி : மேட்டூர் கெமிகல்ஸ், டெக்ஸ்டைல்ஸ் போன்ற ஏராளமான தொழில்கள் அங்கு இருக்கின்றன. ஏராளமான தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். ஆகவே, அங்கு இனியாவது ஒரு மருத்துவ மனை தொழிலாளர்களுக்காகக் கட்ட அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தனியான மருத்துவ மனை இல்லையென்றாலும் மேட்டூர் அப்பர் ; மேட்டூர் லோயர் , கோனூர் மேட்டூர் III ஆகிய மூன்று இடங்களில் இ.எஸ்.ஐ. மருத்துவமனைகள் உள்ளன. அதோடு கூட அரசாங்கப் பொது மருத்துவ மனையில் தொழிலாளர்களுக்காக 17 படுக்கைகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

*Domestic power consumption.*

* 450Q.— THIRU N. K. PALANISAMY : Will the Hon' the Minister for Electricity be pleased to state :

(a) whether it is a fact that the Government have raised the restrictions on domestic power consumption ; and

(b) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) ஆம்.

(இ) திங்கள் ஒன்றுக்கு 150 யூனிட்டுகளுக்கு மேல் மின்சக்தியைப் பயன்படுத்தினால் சாதாரண கட்டணத்தைப் போல் இரு மடங்கு கட்டணம் வசூலிக்கப்படும். ஒரு தனிப்பட்ட மீட்டரிலிருந்து ஒன்றுக்கு மேற்பட்ட வீட்டுக்காரர்கள் மின்சக்தியை விட்டு உபயோகத்திற்கு பயன்படுத்தும் நேர்வில், 1—9—1971 முதல் தொடர்ச்சியான எந்த மூன்று மாத காலத்தில் சராசரியாக பயன்படுத்தப்பட்ட மின்சக்தியின் அடிப்படையில் மின்சக்தி அளவு (quota) முடிவு செய்யப்படும். அந்த அளவுக்கு மேல் அதிகப்படியாக பயன்படுத்தப்படும் மின்சாரத்திற்கு இரட்டிப்புக் கட்டணம் வசூலிக்கப்படும்.

திரு. என். கே. பழனிசாமி : ஒரே மீட்டர் நாலைந்து வீடுகளுக்கு சேர்ந்து இருக்கிறது. 150 யூனிட்டுக்கு மேல் பயன்படுத்தும்போது இரு மடங்கு கட்டணம் என்று சொன்னால் அதிகமாக ஆவதால் சலுகை கொடுக்கும் முறையில் ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : அவர்களுக்கு எந்தவிதமான நஷ்டமும் ஏற்படாதவாறு மூன்று மாதத்திற்கான சராசரி பார்த்து அப்படியே கொடுக்கப்படுகிறது.



1974 மார்ச் 15]

திரு. எம். தேவராசன் : நீலகிரி அணைக்கட்டுகளில் நீர்த் தேக்கம் திருப்திகரமாக உள்ளதா ? மின்சார வெட்டு மேலும் வருமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : அதுபற்றி ஒவ்வொரு மாதமும் பரிசீலனை செய்து வருகிறோம். இந்த மாத இறுதியில் பரிசீலனை செய்து தான் சொல்லப்படும்.

திரு. எஸ். வடிவேல் : லைட்டை வீடுகளில் எரிக்காவிட்டாலும் பணம் கட்ட வேண்டியிருக்கிறது. நான் வீட்டைப் பூட்டி விட்டு வந்திருக்கிறேன். லைட் எரிக்காவிட்டாலும் பணம் கட்ட வேண்டுமென்று சொல்லுகிறார்கள். லைட் எரியவில்லை என்றால் பணம் வசூலிக்கக்கூடாது என்று அரசு உத்தரவிடுமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : குறைந்த அடிப்படைக் கட்டணம் கட்டித்தான் ஆகவேண்டும். சர்வீஸ் கொடுத்துவிட்டால் அதைக் கட்டித்தான் ஆகவேண்டும். வேறு ஏதேனும் எரியாமலே அதிகமாகக் கட்டணம் வசூலிக்கின்ற நிலை இருந்தால் அதுபற்றி கவனத்திற்குக் கொண்டு வந்தால் நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : வேனல் காலங்களில் மராமத்து வேலைகளை மதிய நேரங்களில் செய்கிறார்கள். மின்சார வெட்டு இருக்கும்போதும் மதிய நேரங்களில் மின்சாரத்தை கட் செய்கிறார்கள். இதனால் வீடுகளில் இருப்பவர்கள் மின்விசிறியைப் பயன்படுத்த முடியாமல் கஷ்டப்படுகிறார்கள். இதற்குத் தனியாக ஒரு உத்தரவை அரசு பிறப்பிக்குமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : அப்படிக் குறிப்பிட்டு மதிய நேரத்தில் செய்யக் கூடாது என்று சொல்லுவதற்கு இயலாது. எந்தெந்த நேரத்தில் எடுத்துக் கொள்ள வேண்டுமென்பது அவ்வப் போது பார்த்துச் செய்யப்படும்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : பில் கொடுக்கிற நேரத்தில் பல இடங்களில் சரியான வகையில் கொடுக்கப்படவில்லை. பயன்படுத்தப்பட்ட மின்சாரத்தைவிட அதிகமாகக் கட்டணங்கள் போடப்பட்டிருக்கின்றன. அம்மாதிரியான புகார்கள் கொடுக்கக் கூடிய நேரத்தில் எந்த இடத்தில் அணுக வேண்டுமென்றே தெரியவில்லை. இலாகாவில் சரியான முறையில் பதில் கிடைக்கவில்லை. இம்மாதிரியான, புகார்களைக் கவனிக்க தனி அதிகாரியைப் போட அமைச்சர் அவர்கள் உத்தரவு போடுவார்களா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : பில்கள் எல்லாம் இப்போது ஒழுங்காகக் கொடுக்கப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது போல் உபயோகப்படுத்தப்பட்ட மின்சாரத்திற்கு மேல் அதிகமாகக் கட்டணம் போடப்பட்டிருந்தால் தனிப்பட்ட புகாராகக் கொடுத்தால் விசாரித்துப் பதில் சொல்லலாம்.

திரு. கு. இராசமாணிக்கம் : தஞ்சை மாவட்டத்தில் ஆடுதுறை தொகுதியில் திருப்பனந்தாள், திருவிடைமருதூர் பஞ்சாயத்து யூனியன் கிராமங்களுக்கு மின்சார இணைப்பு இல்லாமல் இருக்கிறது. அவைகளுக்கு இந்த ஆண்டு மின்சார இணைப்பு கொடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரை கிராமங்களுக்கு மின்சார விஸ்தரிப்புத் திட்டம் இந்த ஆண்டு இறுதிக்குள்ளாக முடிக்கப்படும் என்று கருதுகிறேன். பம்ப் செட்டுகளுக்கு மின்சாரம் கொடுப்பதில் சில கட்டுப்பாடுகள் இருக்கின்றன. பொதுவாக ஒவ்வொரு மாவட்டத்திற்கும் எவ்வளவு கொடுக்க வேண்டுமென்று திட்டமிட்டு மின்சார உற்பத்தியைப் பொறுத்து கொடுக்கப்பட்டு வருகிறது.

திரு. என். கே. பழனிசாமி : நாம் மின்சாரத்தைக் கேரளத்திலிருந்தும் மைசூரிலிருந்தும் வாங்குகிறோம். யூனிட்டுக்கு 8 பைசா, 12 பைசா கொடுத்து வாங்கி கன்ஸ்யூமர்சுக்கு 34 பைசா வசூலிப்பது அதிகமாக இல்லையா ? டொமஸ்டிக் சர்வீசுக்கு கன்செஷன கொடுக்கக் கூடாதா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : வாங்கிய விலையை மட்டும் கணக்கில் வைத்துச்சொல்லுகிறார்கள். விநியோகத்திற்கு 20, 22 பைசா யூனிட்டுக்கு செலவாகிறது. இப்போது வீடுகளில் மின்சாரம் பயன்படுத்துவதற்கு வசூலிக்கப்படுகிற கட்டணம் மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டு பார்க்கும்போது சுமாராக விதிக்கப்பட்டிருக்கிறது என்றுதான் கூறவேண்டும்.

திரு. எம். சுரேந்திரன் : மின்சாரப் பற்றுக் குறை இருக்கிறது என்பது மட்டுமல்லாமல் பல இடங்களில் வோல்ட்டேஜ் குறைவாக இருப்பதால் விளக்குகள் சரியாக எரிவதில்லை. இயந்திரங்கள் ஓடுவதில் சிரமங்கள் ஏற்படுகின்றன. 1971-ல் போடப்பட்ட கம்பங்கள் அப்படியே இருக்கின்றன. ஆனால் மோட்டாருக்குக் கனெக்ஷன் கொடுக்கவில்லை என்ற புகார்கள் இருக்கின்றன. இவற்றை ஆராய்ந்து விரைவில் நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தெளிவாகச் சொல்லியிருக்கிறேன். பம்ப் செட்டுக்கு மின்சாரம் வேண்டுமென்று இரண்டு மூன்று லட்சம் இப்போது கொடுப்பதற்காக காத்துக் கொண்டிருக்கிறது. ஆனால், ஒரு ஆண்டுக்கு 50,000 பம்ப் செட்டுகளுக்கு மின்சாரம் கொடுத்து விட்டோம். இனி மேற்கொண்டு விஸ்தரிப்பதை உற்பத்தியைப் பொறுத்து தான் செய்ய வேண்டும். எந்த அளவுக்கு மின்சாரம் உற்பத்தியாகிறதோ அந்த அளவுக்குத்தான் எல்லாவற்றுக்கும் தொழிற் துறைக்கும், விவசாயத் துறைக்கும் விஸ்தரிக்க உத்தரவிடப்படும். இந்த ஆண்டு முடிவில் இதுபற்றிப் பரிசீலனை செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக் குறி *இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]



## (2) 1974-75-ம் ஆண்டிற்கான முன்பண மானியக் கோரிக்கைகள் (செலவினக் கணக்கின்) மீது வாக்கெடுப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—" முன்பண மானியக் கோரிக்கைகளடங்கிய 15—3—1974 தேதியிட்ட அறிக்கையில் இரண்டாவது வரிசையில் 1 முதல் 56 முடிய எண்ணுள்ள மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றுக்கும் எதிரே நாலாவது வரிசையில் குறிப்பிட்டுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள் 1975-ம் ஆண்டு மார்ச் திங்கள் 31-ம் நாள் முடிய உள்ள ஆண்டிற்கான செலவுக் கணக்கில் அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பட்டது.

பேரவையினால் நிறைவேற்றப்பட்ட நிதிக் கோரிக்கைகளுக்கான தீர்மானங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

### நிதிக் கோரிக்கை எண் 1—நிலவரித் துறை.

" நிதிக் கோரிக்கை எண் 1—நிலவரித் துறை என்ற தலைப்பின்கீழ் ரூ. 89,00,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

### நிதிக் கோரிக்கை எண் 2—மாநில ஆயத் தீர்வை.

" நிதிக் கோரிக்கை எண் 2—மாநில ஆயத் தீர்வை என்ற தலைப்பின்கீழ் ரூ. 24,00,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும் ."

### நிதிக் கோரிக்கை எண் 3—மோட்டார் வண்டிகள், சட்டங்கள் நிர்வாகம்.

" நிதிக் கோரிக்கை எண் 3—மோட்டார் வண்டிகள், சட்டங்கள் நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 19,00,000-க்கு மேற்படாதத் தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

### நிதிக் கோரிக்கை எண் 4—பொது விற்பனை வரிகளும் ஏனைய வரிகளும், தீர்வைகளும்—நிர்வாகம்.

" நிதிக் கோரிக்கை எண் 4—பொது விற்பனை வரிகளும், ஏனைய வரிகளும், தீர்வைகளும்—நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 89,00,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

### நிதிக் கோரிக்கை எண் 5—முத்திரைத்தாள்கள்—நிர்வாகம்.

" நிதிக் கோரிக்கை எண் 5—முத்திரைத்தாள்கள்—நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 10,00,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும். "

நிதிக் கோரிக்கை எண் 6—பத்திரப் பதிவு.

" நிதிக் கோரிக்கை எண் 6—பத்திரப் பதிவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 39,00,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும். "

நிதிக் கோரிக்கை எண். 7—மாநிலச் சட்ட மன்றம்.

" நிதிக் கோரிக்கை எண். 7—மாநிலச் சட்டமன்றம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 10,00,000க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை எண். 8—தேர்தல்கள்.

" நிதிக் கோரிக்கை எண். 8—தேர்தல்கள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 5,00,000க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக்கோரிக்கை எண். 9—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள்.

" நிதிக் கோரிக்கை எண். 9—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள் தலைமையிடப் பணியாளர்கள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 2,84,000க்கு, மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை எண். 10—பால் வழங்குத் திட்டங்கள்.

" நிதிக் கோரிக்கை எண். 10—பால் வழங்கு திட்டங்கள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 75,00,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை எண். 11—மாவட்ட நிர்வாகம்.

" நிதிக் கோரிக்கை எண். 11—மாவட்ட நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 3,25,00,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை எண். 12—1959-ம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்டத்தின் நிர்வாகம்.

" நிதிக் கோரிக்கை எண். 12—1959-ம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்டத்தின் நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 28,00,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை எண். 13—நீதி நிர்வாகம்.

" நிதிக் கோரிக்கை எண். 13—நீதி நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 91,00,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."





நிதிக் கோரிக்கை எண். 14—சிறைச்சாலைகள்.

" நிதிக் கோரிக்கை எண். 14—சிறைச்சாலைகள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 88,00,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை எண். 15—காவல்துறை.

" நிதிக் கோரிக்கை எண். 15—காவல் துறை என்ற தலைப்பின்கீழ் ரூ. 6,110,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை எண். 16—இயைப்புப் பணிகள்.

" நிதிக் கோரிக்கை எண். 16—இயைப்புப் பணிகள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 42,00,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை எண். 17—கல்வி.

" நிதிக் கோரிக்கை எண். 17—கல்வி என்ற தலைப்பின்கீழ் ரூ. 28,00,00,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை எண். 18—மருத்துவம்.

" நிதிக் கோரிக்கை எண். 18—மருத்துவம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 7,10,00,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை எண். 19—பொதுச் சுகாதாரம்.

" நிதிக் கோரிக்கை எண். 19—பொதுச் சுகாதாரம் என்றதலைப்பின் கீழ் ரூ. 3,95,00,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை எண். 20—வேளாண்மை.

" நிதிக் கோரிக்கை எண். 20—வேளாண்மை என்ற தலைப்பின்கீழ் ரூ. 6,86,00,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை எண். 21—மீனளம்.

" நிதிக் கோரிக்கை எண். 21—மீனளம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 44,00,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை எண். 22—கால்நடை வளர்ப்பு.

" நிதிக் கோரிக்கை எண். 22—கால்நடை வளர்ப்பு என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,15,00,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை எண். 23—கூட்டுறவு.

"நிதிக் கோரிக்கை எண். 23—கூட்டுறவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,10,00,000-க்கு மேற்படாதத் தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை எண். 24—தொழில்கள்.

"நிதிக் கோரிக்கை எண். 24—தொழில்கள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,26,00,000-க்கு மேற்படாதத் தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை எண். 25—சின்கோனா.

"நிதிக் கோரிக்கை எண். 25—சின்கோனா என்ற தலைப்பின் கீழ் ரூ. 18,00,000-க்கு மேற்படாதத் தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை எண். 26—கைத்தறியும்-துணித்தொழிலும்.

"நிதிக் கோரிக்கை எண். 26—கைத்தறியும், துணித் தொழிலும் என்ற தலைப்பின் கீழ் ரூ. 49,00,000-க்கு மேற்படாதத் தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை எண். 27—கதர்.

"நிதிக் கோரிக்கை எண். 27—கதர் என்ற தலைப்பின்கீழ் ரூ. 15,00,000-க்கு மேற்படாதத் தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை எண். 28—சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் முதலியன.

"நிதிக் கோரிக்கை எண். 28—சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் முதலியன என்ற தலைப்பின்கீழ் ரூ. 7,22,00,000-க்கு மேற் படாதத் தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை எண். 29—தொழிற்சாலைகள் உட்பட தொழிலாளர்.

"நிதிக் கோரிக்கை எண். 29—தொழிற்சாலைகள் உட்பட தொழிலாளர் என்ற தலைப்பின்கீழ் ரூ. 92,00,000-க்கு மேற்படாதத் தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை எண். 30—பழங்குடி மக்கள், அரிசனங்கள் முதலியோர் நலன்.

"நிதிக் கோரிக்கை எண். 30—பழங்குடி மக்கள், அரிசனங்கள் முதலியோர் நலன் என்ற தலைப்பின் கீழ் ரூ. 2,25,00,000-க்கு மேற்படாதத் தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."





நிதிக் கோரிக்கை எண். 31—பின்தங்கிய வகுப்பினர் நலன்.

"நிதிக் கோரிக்கை எண். 31—பின்தங்கிய வகுப்பினர் நலன் என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,52,00,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்."

நிதிக் கோரிக்கை எண். 32—வீட்டு வசதி.

"நிதிக் கோரிக்கை எண். 32—வீட்டு வசதி என்ற தலைப்பின்கீழ் ரூ. 98,00,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை எண். 33—நகர்ப்பகுதி வளர்ச்சி.

"நிதிக் கோரிக்கை எண். 33—நகர்ப்பகுதி வளர்ச்சி என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,08,00,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை எண். 34—உணவுப்பொருள் வழங்கல்.

"நிதிக் கோரிக்கை எண். 34—உணவுப் பொருள் வழங்கல் என்ற தலைப்பின்கீழ் ரூ. 55,00,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்.

நிதிக் கோரிக்கை எண். 35—பாசனம்.

"நிதிக் கோரிக்கை எண். 35—பாசனம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 3,97,00,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை எண். 36—பொதுப்பணிகள்-கட்டடங்கள்.

"நிதிக் கோரிக்கை எண். 36—பொதுப்பணிகள்-கட்டடங்கள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 59,00,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்."

நிதிக் கோரிக்கை எண். 37—பொதுப்பணிகள்-பணியாளரும் கருவிகளும் இயந்திர சாதனங்களும்.

"நிதிக் கோரிக்கை எண். 37—பொதுப்பணிகள்-பணியாளரும், கருவிகளும் இயந்திர சாதனங்களும் என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,03,00,000 க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை எண். 38—சாலைகளும், பாலங்களும்.

"நிதிக் கோரிக்கை எண். 38—சாலைகளும், பாலங்களும் என்ற தலைப்பின் கீழ் ரூ. 4,97,00,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்."

நிதிக் கோரிக்கை எண். 39—சாலைப் போக்குவரத்துத் திட்டங்கள்.

"நிதிக் கோரிக்கை எண். 39—சாலைப் போக்குவரத்துத் திட்டங்கள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 2,75,00,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை எண். 40—இயற்கையின் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு.

"நிதிக் கோரிக்கை எண். 40—இயற்கையின் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு என்ற தலைப்பின் கீழ் ரூ. 39,00,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை எண். 41—ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வு கால நன்மைகளும்.

"நிதிக் கோரிக்கை எண். 41—ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வு கால நன்மைகளும் என்ற தலைப்பின் கீழ் ரூ. 2,05,00,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்.".

நிதிக் கோரிக்கை எண். 42—பல்வகை.

"நிதிக் கோரிக்கை எண். 42—பல்வகை என்ற தலைப்பின் கீழ் ரூ. 6,12,00,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை எண். 43—எழுதுபொருள்-அச்சுத்துறை.

"நிதிக் கோரிக்கை எண். 43—எழுது பொருள்-அச்சுத் துறை என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,27,00,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்."

நிதிக் கோரிக்கை எண். 44—காட்டு வளத் துறை.

"நிதிக் கோரிக்கை எண். 44—காட்டுவளத் துறை என்ற தலைப்பின்கீழ் ரூ. 76,00,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை எண். 45—இழப்பீடுகளும், ஒதுக்கீடுகளும்.

"நிதிக் கோரிக்கை எண். 45—இழப்பீடுகளும், ஒதுக்கீடுகளும் என்ற தலைப்பின் கீழ் ரூ. 2,61,00,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்."



நிதிக் கோரிக்கை எண். 46—ஜமீன்தார்களுக்கு இழப்பீடு.

"நிதிக் கோரிக்கை எண். 46—ஜமீன்தார்களுக்கு இழப்பீடு என்ற தலைப்பின் கீழ் ரூ. 44,00,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்."

நிதிக் கோரிக்கை எண். 47—பொதுச் சுகாதாரம் துப்புரவு, நீர் வழங்கல் குறித்த மூலதனச் செலவு.

"நிதிக் கோரிக்கை எண். 47—பொதுச்சுகாதாரம், துப்புரவு, நீர் வழங்கல் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 43,00,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை எண். 48—வேளாண்மை குறித்த மூலதனச் செலவு.

"நிதிக் கோரிக்கை எண். 48—வேளாண்மை குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 7,93,00,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை எண். 49—தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு.

"நிதிக் கோரிக்கை எண். 49—தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 60,00,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக்கோரிக்கை எண் 50—பாசனம் குறித்த மூலதனச் செலவு.

"நிதிக் கோரிக்கை எண். 50—பாசனம் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 3,74,00,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை எண். 51—பொதுப் பணித்துறைக் கட்டடங்கள் குறித்த மூலதனச் செலவு.

"நிதிக்கோரிக்கை எண். 51—பொதுப் பணித்துறை கட்டடங்கள் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 2,51,00,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்."

நிதிக் கோரிக்கை எண். 52–சாலைகள்-பாலங்கள் குறித்த மூலதனச் செலவு.

"நிதிக் கோரிக்கை எண். 52–சாலைகள்-பாலங்கள் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,17,00,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்."

நிதிக் கோரிக்கை எண். 53—சாலைப் போக்குவரத்துத் திட்டங்கள் குறித்த மூலதனச் செலவு.

"நிதிக் கோரிக்கை எண். 53—சாலைப் போக்குவரத்துத் திட்டங்கள் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 79,00,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை எண். 54—காட்டுவள மூலதனச் செலவு.

"நிதிக் கோரிக்கை எண் 54—காட்டுவள மூலதனச் செலவு தலைப்பின் கீழ் ரூ. 65,00,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்."

நிதிக் கோரிக்கை எண். 55—பல்வகை மூலதனச் செலவு.

"நிதிக் கோரிக்கை எண். 55—பல்வகை மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 2,60,00,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்."

கடன்கள் முன்பணங்கள் வழங்குதலும், கடனைத் திருப்பிக் கொடுத்தலும்.

நிதிக் கோரிக்கை எண். 56—மாநில அரசு வழங்கும் கடன்களும் முன் பணங்களும்.

"நிதிக் கோரிக்கை எண். 56—மாநில அரசு வழங்கும் கடன்களும், முன் பணங்களும் என்ற தலைப்பின் கீழ் ரூ. 8,99,00,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

(3) அறிவிப்பு.

தமிழ்நாடு 1974-ம் ஆண்டு நிதி ஒதுக்க (செலவினக் கணக்கின் மீது வாக்கெடுப்பு) சட்ட முன் வடிவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு 1974-ம் ஆண்டு நிதி ஒதுக்க (செலவினக் கணக்கின்மீது வாக்கெடுப்பு) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்வதற்கும், ஆய்வுக்கு எடுத்துக் கொள்வதற்கும் ஆளுநர் அவர்கள் தம் இசைவைத் தெரிவித்திருக்கிறார்கள்.

(4) அரசினர் சட்ட முன்வடிவு.

தமிழ்நாடு 1974-ம் ஆண்டு நிதி ஒதுக்க (செலவினக் கணக்கின் மீது வாக்கெடுப்பு) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தமிழ்நாடு 1974-ம் ஆண்டு நிதி ஒதுக்க (செலவினக் கணக்கின் மீது வாக்கெடுப்பு) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.



தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இச்சட்ட முன் வடிவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச் சட்டமுன் வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

[முற்பகல் 10-00]

(5) 1974-75-ம் ஆண்டுக்காக நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு.

(அ) நிதிக் கோரிக்கை எண். 3—மோட்டார் வண்டிகள் சட்டங்கள்—நிர்வாகம்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:—

"நிதிக் கோரிக்கை எண். 3—மோட்டார் வண்டிகள் சட்டங்கள்—நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 74,99,100-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

THIRU M.A. LATHEEF: Mr. Speaker Sir, to discuss about the regular supply of tyres to all fleet owners at the fixed price, I move the following cut-motion:—

"That the allotment of Rs. 74,99,100 under Demand No. 3—Motor Vehicles Acts—Administration be reduced by Rs. 100."

டாக்டர் எச். வி. ஹாண்டே: தலைவர் அவர்களே, சாலை விபத்துக்கள் அதிகமான அளவு நடைபெறுதல் குறித்து விவாதிக்க—

நிதிக் கோரிக்கை எண். 3—மோட்டார் வண்டிகள் சட்டங்கள்—நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 74,99,100-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

திரு. எ. சுவாமிதாஸ்: தலைவர் அவர்களே, மோட்டார் வண்டிகள் விபத்துக்குள்ளாகிக் கிடக்கும்போது இலாகா அதிகாரிகள் உடனடியாக அங்கு சென்று விசாரணை செய்ய முற்படாமையால் நாள் கணக்காக பழுதுபட்ட வண்டிகள் அகற்றப்படாமல் இருக்கும் நிலையைக் குறித்து விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண். 3.—மோட்டார் வண்டிகள் சட்டங்கள்—நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 74,99,100-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

[1974 மார்ச் 15

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவர் அவர்களே, லாரி விபத்துக் களைத் தடுக்க இரவு 12 மணி முதல் அதிகாலை 4 மணி வரை லாரிகள் ஓடுவதைத் தடை செய்ய வேண்டுமென்று விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 3—மோட்டார் வண்டிகள் சட்டங்கள்—நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 74,99,100-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

திரு. எம். சுரேந்திரன் : தலைவர் அவர்களே, மோட்டார் வண்டி களில் இருக்கைகளும், தளமும் சுத்தமாக வைத்திருக்கப்படவேண்டும் என்பது பற்றி விவாதிக்க—

"நிதிக்கோரிக்கை எண். 3—மோட்டார் வண்டிகள் சட்டங்கள்—நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 74,99,100-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, to discuss the need to provide more bus routes in Dharmapuri district, I move—

"That the allotment of Rs. 74,99,100 under Demand No. 3—Motor Vehicles Acts—Administration be reduced by Rs. 100."

(ஆ) நிதிக் கோரிக்கை எண். 39—சாலைப் போக்கு வரத்துத் திட்டங்கள்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன் மொழிகிறேன்—

"நிதிக் கோரிக்கை எண். 39—சாலைப் போக்குவரத்துத் திட்டங்கள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 10,98,67,100-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்."

THIRU K.S. KOTHANDARAMIAH : Sir, to discuss the Policy I move—

"That the allotment of Rs. 10,98,67,100 under Demand No. 39—Road Transport Schemes be reduced by Rs. 100."



1974 மார்ச் 15]

திரு. கே. எ. வகாப் : தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துத் துறையிலும் மற்றும் இதர கழகப் போக்குவரத்துத் துறையிலும் உள்ள பழைய பேருந்துகளுக்குப் பதிலாக புதிய பேருந்துகள் விடுவது பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண். 39.—சாலைப் போக்குவரத்துத் திட்டங்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 10,98,67,100-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவர் அவர்களே, எல்லா அரசுப் போக்குவரத்து பஸ் நிலையங்களிலும் பொது மக்களுக்கு (பயணிகளுக்கு) உதவி செய்ய தகவல் அளிக்கும் ஒரு தனி அலுவலர் நியமிக்கப்பட வேண்டு மென்று விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண். 39—சாலைப் போக்குவரத்துத் திட்டங் கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 10,98,67,100-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, சென்னை-கன்னியாகுமரி, சென்னை-திருவனந்தபுரம் செல்லும் மின்னல் வேகப் போக்குவரத்தின் நேரத்தைக் குறைக்க வேண்டியதின் அவசியம்பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண். 39—சாலைப் போக்குவரத்துத் திட்டங்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 10,98,67,100-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு கே. பி. கோபால் : தலைவர் அவர்களே, கிராமப்புறங்களில் அதிகப் பேருந்துகள் விட வேண்டியதின் அவசியம்பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண். 39—சாலைப் போக்குவரத்துத் திட்டங் கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 10,98,67,100-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

திரு எம். சுரேந்திரன் : தலைவர் அவர்களே, துரித வண்டிகளில் குடி தண்ணீரும், காற்று வசதியும் தவறாமல் இருப்பதற்கு வழி செய்ய வேண்டும் என்பதுபற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண். 39—சாலைப் போக்குவரத்துத் திட்டங்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 10,98,67,100-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

(இ) நிதிக் கோரிக்கை எண். 53—சாலைப் போக்குவரத்துத் திட்டங்கள் குறித்த மூலதனச் செலவு.

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

"நிதிக் கோரிக்கை எண். 53—சாலைப் போக்கு வரத்துத் திட்டங்கள் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 3,12,81,400-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

திரு எஸ். வடிவேல் : தலைவர் அவர்களே, கட்டபொம்மன் போக்கு வரத்துக் கழகத்திற்கு திருநெல்வேலியில் இடம் வாங்கியதைப்பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண். 53—சாலைப் போக்குவரத்துத் திட்டங்கள் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 3,12,81,400-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

THIRU J. JAMES : Sir, to discuss the necessity to replace the old Express buses, by new buses I move—

"That the allotment of Rs. 3 12,81,400 under Demand No. 53 —Capital outlay on Road Transport Schemes be reduced by Rs. 100".

(ஈ) நிதிக் கோரிக்கை எண். 43—எழுது பொருள்—அச்சுத்துறை.

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

"நிதிக் கோரிக்கை எண். 43—எழுதுபொருள்—அச்சுத் துறை என்ற தலைப்பின்கீழ் ரூ. 5,05,69,900-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

திரு பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, அரசினர் அச்சகங்களில் சட்ட மன்ற நடவடிக்கைப் புத்தகங்களை அச்சிட்டு வழங்குவதில் ஏற்படும் காலதாமதத்தைத் தவிர்க்க வேண்டும் என்பது பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண். 43—எழுதுபொருள்—அச்சுத் துறை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 5,05,69,900-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.



திரு கே. டி. கே. தங்கமணி : தலைவர் அவர்களே, எல்லா மாவட்டத் தலைநகரங்களிலும் அரசு அச்சுக்கூடங்கள் நிறுவ வேண்டுமென்பது பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண். 43—எழுதுபொருள்—அச்சுத் துறை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 5,05,69,900-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

THIRU J. JAMES : Sir, to discuss the necessity to start a Government Press in each district, I move—

" That the allotment of Rs. 5,05,69,900 under Demand No. 43 —Stationery and Printing be reduced by Rs. 100".

THIRU M. A. LATHEEF : Sir, to discuss about the rationalisation of the Government Press and to ensure prompt delivery of the printed matters, I move—

" That the allotment of Rs. 5,05, 69,900 under Demand No. 43—Stationery and Printing be reduced by Rs. 100".

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் அவைமுன் விவாதத்திற்கு வைக்கப்படுகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கைபற்றி நான் ஆற்றவேண்டிய உரையும்* இலாகா சம்பந்தமான ஆய்வுரைகளும்* ஏற்கனவே மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன. ஆகவே அவற்றை எல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் ஏற்கனவே படித்து அவர்களுடைய வாதத்தை இந்த சட்ட மன்றத்தில் வழங்குவார்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன். இருந்தாலும் சுருக்கமாக சில கருத்துக்களை மட்டும் நான் உறுப்பினர்களின் கவனத்திற்கு மீண்டும் கொண்டுவருவது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

முதலாவதாக, போக்குவரத்துத் துறையைப் பொறுத்தவரையில் கடந்த பத்தாண்டுக் காலமாக அரசின் மானியத்தில்தான் நடத்தவேண்டிய நஷ்டகரமான சூழ்நிலையில் இருந்து இன்றையதினம் போக்குவரத்துத் துறை மூலம் அரசுக்கு வருமானம் அளிக்கக்கூடிய அளவிற்கு நிலைமைகள் வளர்ந்திருக்கின்றன. இந்த ஆண்டு மட்டும் பல்லவன் போக்குவரத்துக் கழகத்தினுடைய நஷ்டத்தையும் எடுத்துக் கொண்டு மற்றப் போக்கு வரத்துக் கழகங்களினுடைய லாபத்தையும் கணக்கில் எடுத்துக்கொண்டு பார்க்கிறபோது நிகர லாபமாக முதன்முதலாக நம்முடைய அரசுக்கு 91 லட்சம் ரூபாய் லாபம் வந்திருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

*124–142-ம் பக்கங்களில் இணைப்புகள் I & II ஆக அச்சிடப்பட்டுள்ளன.

[திரு. ச. இராமச்சந்திரன்] [1974 மார்ச் 15

தொண்ணூற்றொரு லட்சம் ரூபாய் என்று நான் சொல்லுகிறபோது சில வழித்தடங்களை நாம் நஷ்டத்தில் வேண்டுமென்றே விட்டுக்கொண்டிருக்கிறோம் மக்களின் நன்மையை முன்னிட்டு. தனியார்களாக இருந்தால் அந்த வழித்தடங்களை விடமாட்டார்கள். ஏனென்றால் நஷ்டம் வரும். இருந்தாலும் நாம் மக்கள் நன்மையைக் கருதிப் பல்வேறு போக்குவரத்துக் கழகங்கள் மூலம் 239 வழித்தடங்களில் நஷ்டம் வரும் என்று தெரிந்திருந்தும்கூட நாம் அவற்றில் பஸ்கள் விடுகிறோம். அதன் மூலமாக நமக்கு ஏற்படுகிற இழப்பு ஆண்டு ஒன்றுக்கு ஒரு கோடியே ஆறு லட்சம் ரூபாயாகும். நாம் தனியார்களைப்போல் அல்லது தனிப்பட்ட பஸ் முதலாளிகளைப்போல் அவைகளை விடாமல் இருந்திருப்போமானால் இந்த 106 லட்சம் ரூபாய் லாபம் வந்திருக்கிற 91 லட்சம் ரூபாய் ஆக இரண்டையும் சேர்த்துப் பார்க்கும்போது கிட்டத்தட்ட இரண்டு கோடி ரூபாய் அளவிற்கு நமக்கு லாபம் கிடைத்திருக்கும். ஆனால் அரசு லாபத்தை மட்டும் நோக்கமாகக் கொள்ளவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர்.

இரண்டாவதாக, ஒரே ஒரு ஆய்வினை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். ஏ. பி. டி. பஸ் கம்பெனியை எடுத்து சேரன் போக்குவரத்துக் கழகம் என்ற அமைப்பை ஏற்படுத்தினோம். அதனுடைய பெர்பாமன்ஸை, எப்படி அது இயங்குகிறது என்று பார்க்கும்போது நம் மாநிலத்தில் நடைபெறுகிற பொதுத்துறை என்பது மட்டுமல்ல, இந்திய சர்க்கார் அல்லது இந்தியத்துணைக் கண்டத்தில் இந்திய அரசானாலும்சரி அல்லது இன்னும் இதர மாநில அரசுகளானாலும் சரி எல்லாக் கம்பெனிகளையும் சேர்த்து எடுத்துக்கொண்டாலும் எல்லாவற்றையும்விட முதல்தரமாக சேரன் போக்குவரத்துக் கழகம் இயங்கிக் கொண்டு வருகிறது. உதாரணத்திற்குச் சொல்லப்போனால் சேரன் போக்குவரத்துக் கழகத்தில் அரசாங்கத்தின் முதலீடு கிட்டத்தட்ட ரூ. 35 லட்சம். கடனாகக் கொடுத்தது 10 லட்சம் ரூபாய். ஆகமொத்தம் ரூ. 45 லட்சம். ஆனால் இந்த ஆண்டு மட்டும் அந்தப் போக்குவரத்துக்கழகத்தில் கிடைத்து இருக்கும் லாபம் 45 லட்சம் ரூபாய். போட்ட முதலையும், கொடுத்த கடனையும் ஒரே ஆண்டில் பெறக்கூடிய ஒரு தொழில் இருக்கிறது என்றால் அது போக்குவரத்துத் துறைதான், அது எவ்வளவு பெரிய தங்கச் சுரங்கம் என்பதை நாம் மறந்து விடக்கூடாது, அதையும் மாண்புமிகு உறுப்பினர்கள் கவனத்தில் கொள்வார்கள் என்று நான் கருதுகிறேன்.

மூன்றாவதாக, தொழிலாளர்கள் நலனைப் பொறுத்தவரையில் இந்தியாவிலேயே "இன்டஸ்டிரியல் ஒர்க்கர்" தொழிலிலே பணியாற்றுகின்ற ஊழியர்களுக்கு ஓய்வூதியத் திட்டம் அமலாக்கப்படவில்லை. முதலில் போக்குவரத்துத் துறையில் பணியாற்றும் 35,000 தொழிலாளர்களுக்கு "பேமிலி பென்ஷன் ஸ்கீம்" அமலாக்கிய முதலாவது அரசு நம்முடைய அரசுதான் என்று பார்க்கிறபோது, தொழிலாளர்களுக்கு நிம்மதியான வாழ்வையும், நிலையான, உறுதியான ஒரு குடும்ப மேம்பாட்டையும்



1974 மார்ச் 15] [திரு ச. இராமச்சந்திரன்]

பெறுவதற்கு நிச்சயமாக இந்த அரசு வழிவகை செய்து இருக்கிறது என்று பார்க்கிறபோது, அதிலும் முதலாவதாக இருக்கிறோம் என்பதையும் எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

அதற்கு அடுத்தபடியாக, உப பொருள்களை, மோட்டார் வண்டிகளுக்குத் தேவையான துணைப்பொருள்களை பெறுவதில் பல சங்கடங்கள் இருக்கின்றன. அந்தச் சங்கடங்கள் நம்முடைய மாநில அரசுக்கு மட்டுமல்ல, மத்திய அரசுக்கு மட்டுமல்ல, இன்னும் சொல்லப்போனால் இந்தியா முழுவதிலுமே ஏற்பட்டு இருக்கின்றது. அதற்குக் காரணம் மத்திய அரசின் பொருளாதாரக் கொள்கை தான் என்று எல்லோரும் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். போக்குவரத்துத் துறை சீராக, சிறப்பாக இயங்க வேண்டுமானால் அதற்குச் சரியான ஒரு பொருளாதாரக் கொள்கை வேண்டுமென்பதை எடுத்துச் சொல்லியிருக்கிறோம்.

அதற்கு அடுத்தபடியாக, பல்லவன் போக்குவரத்துக் கழகத்தைப் பொறுத்தவரையில், மாநகராட்சிப் பகுதிகளில் ஓடுவதால் நஷ்டத்தில் இயங்க வேண்டியிருக்கிறது என்பது இங்கே மட்டுமல்ல உலகத்திலுள்ள மற்ற பெரிய நகரங்களிலும் இருக்கிற ஒரு குறை. அதற்காக அவர்கள் மானியம் வழங்கி, அந்த பஸ்களை நல்ல முறையில் விடுவதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். ஆனால் இந்திய சர்க்காரோ, டெல்லியில் இருக்கும் சர்க்காரோ, இன்னும் சொல்லப்போனால் பிரதம மந்திரி அவர்களோ எத்தகைய முறையில் மானியம் வழங்க வேண்டுமென்று குழு பரிந்துரை செய்திருந்தபோதிலும், அதன் மீது இன்னும் முடிவு எடுக்காதது மட்டுமல்ல, மேலும் மேலும் வரியை உயர்த்திக் கொண்டே இருப்பதால், மேலும் 2 கோடி ரூபாய் சென்னை நகராட்சியில் ஓடும் பேருந்துகளைப் பொறுத்தவரையில், மத்திய அரசின் காரணமாக, இழக்க வேண்டியிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

அதற்கு அடுத்தபடியாக, இன்றையதினம் ஏற்பட்டு இருக்கும் பெட்ரோலியம் பொருள்களின் நெருக்கடியைக் கடக்க சில பரிசுத் திட்டங்களை போக்குவரத்துத் துறை மூலம் நாம் கொண்டு வருகிறோம். ("ஃப்யூயல் எகானமி") எந்த விதத்தில் டீசல் செலவைக் குறைக்கலாம் தவிர்க்கலாம் என்பதைப்பற்றி மூன்று முறைகளில் அவைகளை நாம் பிரிக்கலாம் என்று கருதுகிறேன்.

முதலாவதாக, அங்காங்கு பணியாற்றுகின்ற போக்குவரத்துத்துறையைச் சேர்ந்த ஊழியர்கள் எத்தனை சதவிகிதம் டீசலை மிச்சப்படுத்துகிறார்களோ, எவ்வளவு பணம் அதன் மூலம் மிச்சம் ஆகிறதோ, அதிலே 3-ல் ஒரு பங்கு அந்த ஊழியர்களுக்கு கொடுப்பதற்கு வழி செய்யப்படும் என்பது திட்டம்.

இரண்டாவது திட்டம், என்ஜினில் ஏதாவது "மாடிபிகேஷன்" கண்டுபிடித்து அல்லது டீசலில் வேறு பொருள்களை ஏதேனும் சேர்த்து அதனால் டீசலை மிச்சப்படுத்த முடியும் என்றால், அந்த மிச்சப்படுத்தக்

கூடிய அந்த யோசனையை, அரசாங்கத்திலே இருக்கிறவர்கள் மட்டுமல்ல, பொதுமக்களில் யாராவது கூறுவார்களானால், அவர்களுக்கு ரூ. 1 லட்சம் பரிசு வழங்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மூன்றாவதாக, அதே போல் பாடி கட்டுவதில், பாடியின் வெயிட் அதிகமாக இருந்தால் டீசல் எண்ணெய் அதிகமாக செலவாகிக் கொண்டு வருகிறது—லைட் பாடி பஸ்களைச் செய்து தருவார்களானால் அவர்களுக்கு ரூ. 50,000 பரிசாக வழங்கப்படும்.

அந்தப் பணம் எல்லாம் சட்டமன்றத்திலே அல்லது சர்க்காரிடமிருந்து, கட்டாயமாக உங்களிடத்திலிருந்து வற்புறுத்திப் பெறவேண்டுமென்ற நிலையில் இல்லை. ஏனெனில் சேரன் போக்குவரத்துக் கழகத்தின் லாபத்திலிருந்து அந்தத் தொகையை எடுத்து வழங்க இருக்கிறோம்.

அதே போல் மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரியும். கப்பல் போக்குவரத்துக் கழகம் அமைப்பதற்கு இருக்கிறோம். அதற்கான எல்லா நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. முதலாவதாக இரண்டு அல்லது மூன்று கப்பல்களை வாங்குவதாக இருக்கிறோம். ஓரிரு மாதங்களில் அதற்கான நடவடிக்கைகள் எடுப்பதாக இருக்கிறோம்.

அதோடு மட்டுமல்ல, "செய்லிங் வெஸ்ஸல்ஸ்", பாய்மரக் கப்பல்கள் பயன்படுத்தலாமா—ஆயில் நெருக்கடி காரணமாக—எந்த அளவுக்குப் பயன்படுத்தலாம் என்பதற்கு வேண்டிய முறைகளை சிந்திப்பதற்கும், செயல்படுவதற்கும் வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்வதாக இருக்கிறோம். இதிலே மத்திய சர்க்காரும் முழு உதவி தருவார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

இப்படி பல வகையான நன்மைகளையும், பல வகையான பொறுமைகளையும் செய்து காட்டியிருக்கிற அரசுப் போக்குவரத்து அதிகாரிகளுக்கும், அதிலே பணியாற்றுகின்ற 35,000 தொழிலாளர்களுக்கும், நான் மட்டுமல்ல, இந்த மன்றமே நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறது என்று கூறி என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, மாண்புமிகு போக்குவரத்து இலாகா அமைச்சரவர்கள் இந்த மன்றத்திலே வைத்து இருக்கின்ற மானியக் கோரிக்கைகள் மீது எங்கள் கட்சியின் சார்பாக கொடுத்து இருக்கும் வெட்டுத் தீர்மானங்களை ஆதரித்து ஒரு சில வார்த்தைகளைக் கூற விரும்புகிறேன்.

அமைச்சர் அவர்கள் எடுத்த எடுப்பிலேயே கூறினார்கள். இது வரையிலும் நஷ்டகரமாக ஓடிக்கொண்டிருந்த போக்குவரத்து இலாகா இப்போது லாபத்தை அடைந்து இருக்கிறது என்ற நல்ல செய்தியை இந்த மன்றத்திற்குக் கொடுத்தார்கள். ஆனால் அதோடு சேர்த்து அமைச்சர் அவர்கள் ஒன்றைக் கூறினார்கள். லாபத்தைப் பெற்றாலும் கூட, லாப நோக்கம் மட்டுமே அந்த இலாகாவிற்கு இல்லை என்று கூறி வேறு ஏதோ சொல்ல வந்ததைச் சொல்லாமல் விட்டு விட்டார்கள். எனக்கு



இருக்கிற ஐயப்பாடு எல்லாம் லாப நோக்கத்தைத் தவிர இன்று இங்கே சொல்லப்பட்டிருக்கிற போக்குவரத்து இலாகா வேறு என்ன நோக்கத்தோடு செயல்படுகிறது என்பது தான். நிச்சயமாக ஒரு தனி முதலாளி லாப நோக்கத்தோடு போக்குவரத்து இலாகா நடத்துகின்றதை விட, அதிக மோசமாக இந்த நாட்டில் இந்த இலாகா செயல்படுகிறது. அந்த இலாகாவில் இருக்கிற தொழிலாளர்களோ, அல்லது அந்த இலாகாவோ இந்த நாட்டிலுள்ள பொதுமக்களுக்கு நன்மை பயக்கவேண்டுமென்பதற்காக ஏற்படுத்தப்பட்டது. இது ஒரு "யுடிலிடி" சர்வீஸ் என்ற எண்ணம் எள்ளளவும் இல்லை என்பதை நான் முதற்கண் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

1972-ம் ஆண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த மன்றத்தில் மானியக்கோரிக்கையை தாக்கல் செய்தபோது கூறினார்கள். இன்னும் 5 ஆண்டு காலத்தில் மாநிலம் முழுவதும் உள்ள பேருந்துகள் தேசியமயமாக்கப்படும் என்று கூறினார்கள். இன்று இருக்கும் நிலையை நாம் சற்று சிந்திக்கவேண்டும். ஏறத்தாழ 4,000 பஸ்கள் மட்டுமே தேசிய உடைமையாகியிருக்கிறது. இன்னும் எஞ்சியுள்ள பகுதி எந்த அளவுக்கு இருக்கிறது என்று நான் கூறத் தேவையில்லை. இந்த மாநிலத்தில் எந்தெந்தப் பகுதிகளில் பஸ்கள் ஏற்கெனவே ஓடிக்கொண்டிருந்தனவோ அங்கே பஸ்களை ஓட்டிக்கொண்டிருக்கிறார்களே தவிர பஸ்கள் பல ஆண்டுகளாக இல்லாத ஊர்களில் உள்ள மக்களுக்கு பஸ்கள் போடாமல் இருக்கிற நிலை தான் இருக்கிறது. அவர்களால் அந்த மக்களுக்கு எந்த விதமான பஸ் வசதியும் செய்து தரமுடியவில்லை. ஒரு வேளை கூறுவார்கள், நாங்கள் இந்த மன்றத்தில் நிறைவேற்றிய சட்டமானது, எதிர்க்கப்பட்டு, அது உச்சநீதி மன்றத்தில் இருப்பதால் விஸ்தரிக்க இயலவில்லை என்று சொல்வார்கள். நான் கேட்பது அதுவல்ல. ஒரு வேளை தனியார் ஓட்டிக் கொண்டிருக்கிற பஸ்களை எடுப்பதற்கு வேண்டுமானால் அது இடையூறாக இருக்கலாமே தவிர புதிய பேருந்துகளை விடுவதற்கோ அல்லது பஸ்கள் இல்லாத கிராமங்களுக்கு பஸ்களை விடுவதற்கோ தடையாக இருக்காது என்று நினைக்கிறேன். பின் ஏன் இந்த அரசு அந்தக் காரியங்களைச் செய்யக்கூடாது என்று கேட்கிறேன். யாராவது நடத்திக்கொண்டிருக்கிற பஸ்களை நாட்டுடைமையாக்கிக் கொண்டிருக்கிறபோது, பல ஆண்டுகாலமாக பஸ் வசதி இல்லாத கிராமங்களுக்கு, அப்படி எந்தெந்த பகுதி இருக்கின்றதோ அவற்றிற்கு பஸ் வசதி செய்து கொடுக்கவேண்டுமென்று இப்போது குறிப்பாக கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து ஐந்து ஆண்டு என்று கூறினார்கள். இரண்டு ஆண்டுகள் ஆகிவிட்டன. மூன்று ஆண்டுகள் இருக்கின்றன. இந்தப் போக்கில் போனால் 10 ஆண்டுகள் ஆனாலும் கூட இந்த அரசு இந்த மாநிலத்தில் உள்ள பஸ் ரூட்டுகளை தேசியமயமாக்க இயலாது என்பதனை கூறிக்கொள்ள விரும்புகிறேன். உணவு அருந்தும்போது உணவு உள்ளேயும் போகாமல், வெளியேயும் வராமல் தொண்டையில் சிக்கிக்கொள்வது போல, அரசுக் கொள்கைகளின் காரணமாக விழுங்க முடியாத நிலையில் அரசு திண்டாடிக் கொண்டிருக்கிறது என்பதைத் தான் சொல்லவேண்டும்.

[திரு. ஜே. ஜேம்ஸ்] [1974 மார்ச் 15

அமைச்சர் அவர்கள் வியாபார நோக்கம் இல்லை என்று கூறினார்கள். வியாபார நோக்கம் இல்லாமல் இந்தத் தொழிலில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிற தொழிலாளர்களின் நன்மைக்காக இந்த அரசு என்ன செய்திருக்கிறது என்பதைச் சற்று சிந்திக்கவேண்டும். நிச்சயம் இதற்கு இரவு பகலாக உழைத்து இன்று பெரிய லாபத்தை அடைவதற்கு காரணமாக இருந்த தொழிலாளர்கள் மிகவும் பரிதாபகரமான நிலையில் இருக்கிறார்கள். அவர்களுடைய ஊதிய நிலை, உத்தியோக நிலைமைகள், மற்றும் காரியங்களைப் பார்த்தால் இந்த மாநிலத்தில் இதைவிட அதிக மோசமான நிலையில் எந்தத் தொழிலாளர் இனமும் இல்லை என்று கூறினால் நிச்சயம் அது மிகையாகாது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பல திட்டங்களை வகுத்திருக்கிறார்கள். தொழிலாளர்களை சொந்தக்காரர்களாக ஆக்கியிருக்கிறேன். இந்த இலாகாவிற்கு அவர்கள் சொந்தக்காரர்களாகி விட்டார்கள். இந்த இலாகாவின் உடைமைதாரர்கள் யார் என்று சொன்னால் தொழிலாளர்கள் தான் என்று பெருமைப்பட்டுக் கொள்ளலாம்.

இன்னும் ஊக்க போனஸ், அட்டெண்டன்ஸ் போனஸ், கலெக்ஷன் போனஸ் என்று பல போனஸ் திட்டங்களை வைத்திருக்கிறேன் என்றெல்லாம் அமைச்சர் அவர்கள் கூறினால் கூட, அன்றாட வாழ்க்கையில் தொழிலாளர்கள் திருப்தியாக இருக்கிறார்களா, தொழிலாளர்கள் தங்களுடைய வாழ்க்கைத் தரத்தை நடத்துவதற்கு இந்த இலாகா அவர்களுக்குக் கொடுக்கிற ஊதியம் போதுமா என்று சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

பல்வேறு சந்தர்ப்பங்களில் அமைச்சர் நமது அண்டை மாநிலங்களைச் சுட்டிக் காட்டுவார்கள். பஸ் ஃபேரைச் சொல்லப்போனால், பார்த்தீர்களா, அந்த மாகாணத்தில் 5 பைசா, இந்த மாநிலத்தில் 6 பைசா, நமது மாநிலத்தில் தான் 3 காசு என்று கூறுவார்கள். நான் கேட்கிறேன். தொழிலாளர்களைப் பொறுத்த வரையில் கேரள மாநிலத்தின் நிலையை நீங்கள் சற்று ஒப்பிட்டுப் பார்த்தீர்களா? அங்கு அவர்கள் கொடுக்கிற ஊதியத்தைக் கொடுக்க நீங்கள் கடமைப்படவில்லையா? லாபத்தை அடைந்திருக்கிறீர்கள். யார் காரணமாக லாபத்தை அடைந்தார்கள். தொழிலாளிகளை உறிஞ்சி லாபம் சம்பாதிக்கும் பிற்போக்கு முதலாளிகளைவிட அதிக பிற்போக்குக் கொள்கையை தொழிலாளர்களின் மீது கடைப்பிடிப்பதன் காரணமாகத் தான் இந்த லாபத்தை அடைந்திருக்கிறீர்கள்.

தொழிலாளர்களைப் பிசைந்து இந்த சமதர்ம சமுதாயத்தில் இந்த மாநிலத்தில் இந்த லாபம் தேவை தானா என்று நான் கேட்கிறேன். வியாபாரத்தை லாபத்தை பெருக்கிக் கொள்ளலாம். ஆனால் அரசுக்கு லாபம் வருகிறது என்றால், நியாயமான முறையில் லாபம் கிடைத்தால் தான் பாராட்ட முடியுமே தவிர வேறு இல்லை. இந்த லாபம் அரசாங்கத்தின் திறமையினால் கிடைக்கவில்லை. அன்றிருந்த போக்குவரத்து இலாகா அமைச்சர் தாங்கள் ஒரு கோடி ரூபாய் லாபம் அடைந்துவிடுவோம் என்று சொன்னார்கள். இன்றிருக்கும் அமைச்சர் அதை நிறைவேற்றிவிட்டார்கள். அந்த அமைச்சரைப்பற்றி நாம் எண்ணலாம், அவர் வியாபாரம் தெரிந்தவர், மக்களுடைய நலனைக் கருதாமல் அவர் அப்படி கூறியிருக்கலாம், ஆனால்,



1974 மார்ச் 15] [திரு. ஜே. ஜேம்ஸ்]

இன்றைய அமைச்சர் தொழிலாளர்கள் மீது, மக்கள் மீது முற்போக்கு கருத்துக்களைக் கொண்ட அமைச்சர் என்றாலும் கூட, இந்தக் கொள்கையை நான் நிச்சயம் பாராட்டுவதற்கில்லை என்று கூறிக் கொள்கிறேன்.

இன்னும் கூறப்போனால் லாபம் அடைந்தாலும், போக்கு வரத்து இலாகாவில் மக்களுக்கு வசதிகள் இருக்கின்றனவா, தனியார் துறையின இந்தத் போக்குவரத்து செயல்பட்டுக் கொண்டிருந்தபொழுது அதில் பிரயாணம் செய்த பொது மக்கள் அன்றிருந்த அளவுக்கு திருப்தியோடு இருக்கிறார்களா, அந்த அளவுக்காவது திருப்தி அடைந்திருக்கிறார்களா என்று சற்று சிந்தித்துப் பார்க்கவேண்டும். அன்று 50 பிரயாணிகளை ஏற்றிச் சென்ற பஸ்—இன்று கூட தனியார் பஸ்களில் 50 ஸீட்கள் என்றால் 50 பிரயாணிகள் தான் அதில் பிரயாணம் செய்கிறார்கள். இன்று 200 பிரயாணிகளை ஏற்றிச் செல்கிறது.

நமது மாநிலத்தில் உள்ள அரசு நிறுவனத்தில் ஓடுகின்ற பஸ்களைப் பார்த்தால் யார் யாத்திரை செய்கிறார்கள். மனிதர்களா என்று தோன்றுகிறது. சாக்கு மூட்டைகளை அடைத்துக்கொண்டு லாரிகளில் போகிறார்களா என்ற சந்தேகம் வரக்கூடிய அளவுக்கு 60 ஸீட்கள் உள்ள பஸ்ஸில் 200 பாஸெஞ்சர்ஸ் ஏற்றிக்கொண்டு போகிறார்கள், அந்த நிலைமையில் உள்ளே இருக்கிறவர்கள் மூச்சு விடுவதற்குக் கூட இடம் இருக்கிறதா என்று சற்று சிந்தித்து பார்க்க வேண்டும். இந்த லாபம் எதற்காக? நாட்டுமக்களுக்குக்காக நாம் லாபத்தை அடைகிறோம் என்று சொன்னால் எந்த முறையில் நாம் அந்த லாபத்தைப் பெற்றிருக்கிறோம் என்ற சற்று சிந்திக்கவேண்டும். அமைச்சர் அவர்கள் தாராளமாகக் குறிப்பிட்டார்கள், லாப நோக்கம் மட்டும் இல்லை என்று வேறு எந்த நோக்கம் இருக்கிறது? மக்கள் நன்மை நோக்கம் இல்லை, தொழிலாளர்கள் நன்மை நோக்கம் இல்லாமல் அடைந்திருக்கிற லாபத்தை நிச்சயம் வரவேற்க இயலாது என்று நான் கூற விரும்புகிறேன்.

அடுத்தபடியாக பல்வேறு கழகங்களை தாங்கள் அமைத்திருக்கிறோம் என்று கூறினார்கள். அவைகள் திறமையாக செயல்படுகின்றன என்றும் கூறினார்கள். அயல் நாட்டிலும் இண்டர்நேஷனல் ரிகார்டு சிருஷ்டித்திருப்பதைப் பற்றிக் கூறினார்கள். சேரன் போக்குவரத்துக் கழகத்தைப் பற்றிக் கூறினார்கள். சேரன் போக்குவரத்துக் கழகம் ஆரம்பிக்கும்பொழுது 122 பஸ்கள் இருந்தன, 122 பஸ்களில் இப்பொழுது 60 பஸ்கள் ஓடாமல் ஷெட்டில் நிற்கின்றன என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா?

அதுமட்டுமல்ல. கட்டபொம்மன் கார்ப்பரேஷன் இருக்கிறது. 400 பஸ்கள் என்று ரிகார்டில் இருக்கிறது. ரோடில் ஓடுகின்ற பஸ்கள் எத்தனை என்று அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? நிச்சயமாக இல்லை. இது வரையிலும் கட்டபொம்மன் கார்ப்பரேஷன் அரசு நிறுவனமாக இருந்த பொழுது ஜாயிண்ட் டைரக்டர் அலுவலகத்தில் ஒரு போர்டு இருந்தது. அதாவது 400 பஸ்கள், ஷெட்யூல்டு பஸ்கள் எத்தனை, டிரிப்கள் எத்தனை என்ற விவரங்களைக் குறிக்கின்ற ஒரு போர்டு இருந்தது. சாதாரணமாக

[திரு. ஜே. ஜேம்ஸ்] [1974 மார்ச் 15

பிரேக்டவுன் ஆன பஸ்கள், ஓடாத பஸ்கள் என்று சொன்னால், 400-ல் 5, 10 பஸ்கள் தான் இருக்கும். இன்றையதினம் 400 பஸ்களில் 80, 100 பஸ்கள் ஓடாத நிலையில் இருக்கிறது. ஒரு வேளை அந்த எண்ணிக்கையை போர்டில் காட்டவேண்டிவரும், சொல்லவேண்டிய அவசியம் ஏற்படும் என்று கருதி, அந்த போர்டையே அகற்றிவிட்டார்கள் என்ற நிலை உருவாகிறது என்று சொன்னால் எந்த அளவுக்கு இந்தக் கார்ப்பரேஷனை நாம் பாராட்டுவது என்று நான் கேட்கிறேன். அமைச்சரவர்கள் சிறப்பாக கார்ப்பரேஷன்கள் செயல்படுகின்றன என்று சொன்னாலும், நிச்சயமாக அப்படி இல்லை என்பதனை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல. அடிக்கடி இப்பொழுது நாம் பார்க்கிறோம். ஒரே நம்பர் உள்ள பல டிக்கட்டுகள் போடப்படுகின்றன. இது எங்கிருந்து வருகிறது? இந்த முறையிலே போய்க்கொண்டிருந்தால் இது எங்கே நம்மைக் கொண்டுபோய் விடும் என்று நாம் சற்று சிந்திக்க வேண்டும். இந்த அரசு டிக்கட்டுகளை அடிக்கிறது. அது போன்று இன்னொரு மெஷினரி டிக்கட்டுகளை அடித்து விநியோகம் செய்துகொண்டிருக்கிறது. இந்த நிலை பப்ளிக் செக்டாரில் இருந்தால், அது நாட்டுக்கு நல்லதா இந்த கார்ப்பரேஷனுடைய கதி என்ன ஆகும் என்று சற்று சிந்திக்க வேண்டும்.

அடுத்தபடியாக, எக்ஸ்பிரஸ் பஸ்களைப் பற்றிச் சொன்னார்கள். 1967 வரையிலும் எக்ஸ்பிரஸ் பஸ்கள் தேசியமயமாவது மிகவும் மெதுவாகச் சென்று கொண்டிருந்தது. அடிக்கடி அறிக்கையில் பார்க்கிறோம், இப்பொழுதும் இருக்கிறது. 1967 வரையிலும் இந்த மாநிலத்தில் ஓடின எக்ஸ்பிரஸ் பஸ்களுக்கும், இன்று ஓடுகின்ற எக்ஸ்பிரஸ் பஸ்களுக்கும் "ஈஸ் தேர் எனி கம்பாரிஸன்" என்று நான் அமைச்சர் அவர்களைக் கேட்கிறேன். இந்த நாட்டு மக்கள் அதைப்பற்றி சொல்வார்கள். அன்று எந்த அளவுக்கு பாராட்டக்கூடிய அளவுக்கு எக்ஸ்பிரஸ் பஸ்கள் இந்த மாநிலத்தில் ஓடிக்கொண்டிருந்தன? கரெக்ட் டைம், டிரிப் ஷெட்யூல், டிரிப்களெல்லாம் எந்த அளவுக்கு ஒழுங்காக செயல்பட்டுக்கொண்டிருந்தன. இன்று எக்ஸ்பிரஸ் பஸ் ஸ்டாண்டைப் பார்த்தால் சில சமயங்களில் ஒரு திருவிழா போல் காட்சி அளிக்கிறது.

காலை 5 மணிக்கு பஸ் புறப்பட வேண்டுமென்றால், மாலை 4 மணி வரையிலும் போகவில்லை. காரணம் என்னவென்று சொன்னால் வர வேண்டிய பஸ் வரவில்லை. கன்னியாகுமரியிலிருந்து பஸ் வரவில்லை. சென்னையிலிருந்து பஸ்ஸை கோவைக்குத் திருப்பி விடுகிறார்கள். சேலத்திற்கு திருப்பிவிடுகிறார்கள். அதற்கு ஒரு ஷெட்யூல் இருக்கிறது. அந்த ஷெட்யூலை ஒழுங்காக கடைப்பிடிக்க வேண்டும். இந்த பஸ்களில் போகும் மக்கள் பல காரியங்களுக்காகச் செல்கிறார்கள். அவர்களுடைய பிஸினஸுக்காக வேண்டி செல்கிறார்கள். குறிப்பிட்ட டயத்தில் பஸ்கள் புறப்படவில்லை என்று சொன்னால், அதனால் ஏற்பட இருக்கும் நஷ்டத்திற்கு யார் உத்தரவாதம்? இந்த அரசு உத்தரவாதம் செய்யுமா? அவர்களுக்கு ஏற்படுகின்ற நஷ்டத்தை அரசாங்கம் கொடுக்குமா? (மணி அடிக்கப்பட்டது).



1974 மார்ச் 15]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பத்து நிமிடங்களுக்கு மேலே கொடுக்க முடியாது.

திரு. ஜே. ஜேம்ஸ்: கவர்ன்மெண்டுக்கு பிரயோசனமாக இருக்கக்கூடிய காரியங்களைச் சொல்லுகிறேன். பிரயோசனப்பட வேண்டாம் என்றால் நிறுத்தி விடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்த டிமாண்டு விவாதத்திற்கு ஒரு நாள் தான் டைம். எல்லோரும் பேசவேண்டியிருக்கிறது. இருக்கிற நேரத்தை பேசுகிறவர்களுக்கு பகிர்ந்து கொடுக்க வேண்டியிருக்கிறது. சீக்கிரம் முடித்துவிடுங்கள்.

திரு. ஜே. ஜேம்ஸ்: இவற்றையெல்லாம் நான் எடுத்துச் சொல்கிறேன் என்றால் மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் குறைகூறவேண்டும் என்று சொல்லவில்லை. அவர்களுடைய கொள்கைகளை நான் வரவேற்கிறேன். முற்போக்குக் கருத்துக்களை நான் வரவேற்கிறேன். ஆனால், இன்று இருக்கிற செயல்முறைகளைப் பார்த்தால், நிச்சயம் எந்த அளவுக்கு உயர்ந்த எண்ணங்கள் இருக்கின்றனவோ அந்த அளவுக்கு செயல்முறை தாழ்ந்து இருக்கிறது என்று நான் குறிப்பிட்டுச் சொல்வதற்குத் தான் இவற்றையெல்லாம் நான் கூறினேன். (மணி அடிக்கப்பட்டது). இன்னும் 10 நிமிடங்களில் முடித்துவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முடியாது. உங்களுக்கு மாத்திரம் 15 நிமிடம் கொடுக்கிறேன். சீக்கிரம் முடித்துவிடுங்கள். மற்றவர்களுக்கெல்லாம் இனி 10 நிமிடங்கள்தான் கொடுக்கப் போகிறேன்.

(முற்பகல் 10·30)

திரு. ஜே. ஜேம்ஸ்: இன்று 4, 5 டிமாண்டுகள் இருக்கின்றன. ஆகவே, கொஞ்சம் அதிக நேரம் கொடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பிஸினஸ் அட்வைஸரி கமிட்டியில் முடிவு செய்தபடிதான் அலுவல்களை நடத்த முடியும். இவ்வளவு டிமாண்டுகளும் இன்றைக்கு முடியவேண்டும். அதற்குத் தகுந்தமாதிரி தான் நேரம் ஒதுக்க முடியும்.

திரு. ஜே. ஜேம்ஸ்: அடுத்தபடியாக, அடிக்கடி வேலை நிறுத்தம் ஏற்படுகிறது என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். போக்குவரத்துத் துறையில் அடிக்கடி வேலை நிறுத்தம் நடைபெறுகிறது என்றால் உண்மையில் அது வரவேற்கத்தக்கது அல்ல. தொழிலாளர்கள் அவஸ்தை படுவதினால்தான் வேலை நிறுத்தம் செய்கிறார்கள் என்பதையும் அமைச்சரவர்கள் உணரவேண்டும். ஆகவே, தொழிலாளர்களின் பிரச்னைகளை மனிதாபிமானத்தோடு அணுகி, பிரச்னைகள் தீருவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

[திரு. ஜெ. ஜேம்ஸ்] [1974 மார்ச் 15

நேற்றையதினம் பேசும்போதுகூட தொழிலாளர்கள் பிரச்னைகளை கருணையோடு அணுகுகிறோம் என்று சொன்னார்கள். நான் கேள்விப்பட்ட வரையில், தண்டையார்ப்பேட்டையில் 7 மாதங்களுக்கு முன்னால் ஒரு சிறிய சச்சரவு ஏற்பட்டு, அதன் காரணமாக 98 தொழிலாளர்களை போலீஸார் கைது செய்து, வழக்கு பதிவு செய்து, இன்னும் வழக்கு முடியவில்லை ; தொழிலாளர்களை சஸ்பெண்ட் செய்திருக்கிறார்கள். இந்த அளவுக்கு அரசாங்கம் போனால் நிச்சயமாக இதை தொழிலாளர்கள் அரசாங்கம் என்று சொல்ல முடியாது. ஒன்றில், வழக்கு பதிவு செய்திருந்தால், விரைவிலே அதை டிஸ்போஸ் செய்திருக்க வேண்டும். இல்லாவிட்டால் வழக்கை வாபஸ் வாங்கியிருக்க வேண்டும். எந்தவிதமான காரணமும் இல்லாமல் 7 மாத காலமாக வழக்கை பெண்டிங்கில் வைத்திருப்பது பாராட்டுக்குரியது அல்ல என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, டயர் போன்ற பொருட்கள் தட்டுப்பாடு இல்லாமல் கிடைப்பது பற்றி பரிசீலனை செய்ய பல கமிட்டிகள் இருப்பதாக இந்த அறிக்கையில் இருக்கிறது. எந்த அளவுக்கு இந்தக் கமிட்டிகள் செயல்படுகின்றன என்பதை அமைச்சரவர்கள் சிந்திக்க வேண்டும். லாரி, கார் போன்றவைகளுக்கு டயர் ஒரு குறிப்பிட்ட விலைக்கு கிடைக்கவில்லை. ஆனால், பிளாக்மார்க்கெட்டில் நிறைய கிடைக்கிறது. குறிப்பாக நாகர்கோவில் பகுதியில் லாரிகளுக்கு டயர் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. அங்கு இருக்கிற கமிட்டி ஒழுங்காகச் செயல்படவில்லை. டீலர்ஸ் அக்கவுண்ட் ஒழுங்காக சப்மிட் செய்யவில்லை. அதையெல்லாம் அரசாங்கம் கவனித்து, இப்படிப்பட்ட பற்றாக்குறையாக இருக்கின்ற பொருட்கள் எல்லாம் ஒழுங்காக கிடைப்பதற்கு வழிவகைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, டாக்சி வைத்திருப்பவர்கள் இன்றையதினம் எந்த அளவுக்கு சிரமப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்பதை நாம் பார்க்கிறோம். அவர்களைப் பாதுகாக்க வேண்டியது இந்த அரசாங்கத்தின் கடமையாகும். மத்திய அரசாங்கம் ஆயில், பெட்ரோல் போன்றவைகளுக்கு விலையை ஏற்றுகிறது. மாநில அரசாங்கம் டாக்ஸ்களை கூட்டியிருக்கிறது. அதனால் டாக்சிக்காரர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அவர்களுடைய கஷ்டத்தைப் போக்கவேண்டியது அரசின் கடமை. அதற்கு அரசாங்கம் அவர்களுக்கு "சப்சிடைஸ்ட் ரேட்டில்" பெட்ரோல் முதலியவற்றை வழங்கவேண்டும்.

THE HON. THIRU S. RAMACHANDRAN : The hcn. Member says that the State Government have enhanced the tax for the taxis and auto-rickshaws. It is nct the case.

திரு. ஜே. ஜேம்ஸ் : டயர், ஆயில், பெட்ரோல் போன்ற பொருட்களுக்கு மத்திய அரசாங்கம் விலையை உயர்த்துகிறது. மாநில அரசாங்கம் விலையை உயர்த்தாவிட்டாலும் வரியை உயர்த்துகிறது. அதனால் டாக்சிகாரர்கள் மிகவும் அவல நிலையில் இருக்கிறார்கள். லாரிகளிலும், பஸ்களிலும் ஓரளவு கட்டணத்தை உயர்த்தி சரிக்கட்டிவிடலாம் ; ஆனால்



1974 மார்ச் 15] [திரு. ஜே. ஜேம்ஸ்]

டாக்ஸியில் இப்படி செய்வது அவ்வளவு சாத்தியமல்ல இன்றைய சூழ்நிலையில் டாக்சி ஒரு எசன்ஷியல் பொருளாக மாறியிருக்கிறது. ஏழைகள்தான் அதிகமாக டாக்சிகளை உபயோகப்படுத்துகிறார்கள். ஆகவே, அரசாங்கம் டாக்சிகளுக்கு சப்சிடைஸ்ட் ரேட்டில் அத்தியாவசியப் பொருட்களை சப்ளை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஸ்டேஷனரி அண்டு பிரிண்டிங் பற்றி சில வார்த்தைகளை கூற விரும்புகிறேன். அரசாங்க அச்சகங்களில் குறிப்பிட்ட காலத்திற்குள் அரசாங்க ரிக்கார்டுகளை இப்போது அச்சிட்டு வழங்க முடியாத நிலை இருக்கிறது ; மிகவும் காலதாமதம் இருக்கிறது. ஆகவே, இப்போது இருக்கின்ற அச்சகங்கள் போதாது. அச்சடிக்கும் வேலையை துரிதப்படுத்தி, குறிப்பிட்ட காலத்தில் அரசாங்க ரிக்கார்டுகள் கிடைப்பதற்கு ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு பிரஸ் அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக நான் குறிப்பிட விரும்புவது, இந்த அச்சு நிலையங்களில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு இப்போது கொடுக்கின்ற ஊதியம் நிச்சயமாக போதாது. அதை ரிவைஸ் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்று 14 பேர்கள் பேசுவதற்கு பெயர் கொடுத்திருக்கிறார்கள். இந்த 14 பேர்களும் பேசிய பிறகு அமைச்சர் பதிலளிக்க வேண்டும். இருப்பது இன்னும் 3 மணி நேரம். ஆகவே, ஒவ்வொருவருக்கும் 10 நிமிடங்களுக்கு மேல் வராது ; அதற்குள் தங்களுடைய உரையை முடித்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

*திரு. எ. ஆர். சுப்பையா : தலைவரவர்களே, இன்றைக்கு இந்த மன்றத்திலே மாண்புமிகு அமைச்சரவர்களால் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்ற மானிய கோரிக்கைகள் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இந்த போக்குவரத்துத் துறையில் 97 லட்சம் ரூபாய் லாபம் வந்திருக்கிறது என்று அமைச்சர்வர்கள் சொன்னார்கள். அதற்குக் காரணத்தையும் சொன்னார்கள். சேரன் போக்குவரத்துக் கழகத்தினால்தான் லாபம் வந்திருக்கிறது என்று சொன்னார்கள். டெக்னோகிராப்டுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தால்தான் போக்குவரத்துத் துறையில் லாபம் கிடைக்கும் என்பதையே நீண்டகாலமாக நான் சொல்லியிருக்கிறேன். நம்முடைய அமைச்சரவர்கள் டெக்னோகிராப்டைப்பற்றித் தெரிந்தவர்கள். ஆகையால் அதற்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பார்கள் என்று நினைக்கிறேன். அப்படிச் செய்தால்தான் பல நல்ல காரியங்களைச் செய்ய வாய்ப்பு இருக்கும்.

போக்குவரத்து இலாகாவில் இன்று பல கார்ப்பரேஷன்கள் இருக்கின்றன. இந்த கார்ப்பரேஷன்கள ஒழுங்காகச் செயல்பட ஆங்காங்கே ஒரு அட்வைசரி கமிட்டி போட வேண்டும். இன்றைக்கு இருக்கிற நிலைமை,

மனு கொடுத்தாலும், வேறு குறிப்பு காகிதம் கொடுத்தாலும் பதில் வர மிகுந்த காலதாமதம் ஏற்படுகிறது. ஆங்காங்கே அட்வைசரி கமிட்டி இருந்தால் இந்த காலதாமதம் தவிர்க்கப்பட்டு, தகுந்த நடவடிக்கை எடுக்க ஏதுவாகும்.

பிரயாணத்திற்கு எந்த நேரத்திலும் தடை இருக்கக்கூடாது. இன்றைக்கு போக்குவரத்திற்காக பேருந்துகளை அதிகமாக நம்பியிருக்கிறோம். அதிலும் டாக்சிகளில் போவதற்குள்ள வாய்ப்பு குறைந்துவிட்டது. காரணம் "ஃபியூயலின் விலை ஏற்றம்" அதுமட்டுமல்லாமல் டயர் போன்ற பொருட்களும் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. அவைகளுக்கு அதிக விலை கொடுக்க வேண்டியிருக்கிறது. இந்த டயர் இல்லாத காரணத்தால் பல பஸ்கள் கூட ஓட முடியவில்லை. இவைகளை. எல்லாம் சரி செய்வதற்கு நம்மிடம் ஒரு திட்டம் இருக்க வேண்டும் டி.வி.எஸ். நிறுவனத்தில் 7 தடவை "ரீ ட்ரீட்" செய்கிறார்கள். அம்மாதிரியான ஒரு திட்டத்தை அரசாங்கம் வகுத்து, டயர் இல்லாமல் பஸ்கள் ஓடவில்லை என்ற குறையைப் போக்க வேண்டும்.

இன்றைக்கு பல பஸ்களை ஓடவிட்டிருக்கிறோம். போகிற பஸ்கள் எப்போது வரும் என்று தெரியவில்லை. டயர் இல்லை; தளவாடம் இல்லை என்ற காரணத்தைச் சொல்கிறார்கள். இந்தத் தட்டுப்பாட்டினால் ஆங்காங்கே பேருந்துகள் நின்றுவிடுகின்றன; அதனால் பிரயாணிகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். இந்தக் கஷ்டத்தை நீக்குவதற்கு "ஹயரிங் பஸ் இன் நீடி டைம்ஸ்" என்ற முறையை கையாள வேண்டும். எங்காவது பஸ் நின்று விட்டால் உடனே ஹையர் பஸ்ஸை பிடித்து பிரயாணிகளுக்கு கஷ்டம் இல்லாமல் செய்துவிடலாம். தடையில்லாமல் பிரயாணம் செய்வதற்கு ஒரு வழி ஏற்படும். அதை பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு பஸ்களிலே ஏற்படுகின்ற இட நெருக்கடியினாலும், காலாகாலத்தில் தடையில்லாமல் பிரயாணம் செய்வதற்கு வழியில்லாமலும் இருப்பதினால் மக்களுக்கு ஒரு வெறுப்பு ஏற்படுகிறது. அவர்களுக்கும் "ஃப்ரஸ்டிரேஷன்" உண்டாகிறது. ஆகவே, மக்களுக்கு சௌகரியம் இல்லை என்ற எண்ணம் ஏற்படக்கூடாது. அதற்கு ஆவன செய்ய வேண்டும். அவர்களின் வெறுப்பை தவிர்க்க வேண்டும்.

இன்றைக்கு போக்குவரத்தில் 7 யூனிட்டுகள் இருக்கின்றன. ஒன்று அரசாங்கத்திடமும் மற்றுமுள்ள 6 கார்ப்பரேஷன்களாகவும் இருக்கின்றன. இந்த ஒன்று மட்டும் ஏன் தனியாக இருக்க வேண்டும் என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும். அதுமட்டுமல்லாமல் இன்னும் தனியார் பஸ்களும் இருக்கின்றன. இவை இல்லாமல் எல்லாவற்றையும் நாட்டுடைமையாக்கி, ஒரே மாதிரியான அமைப்பின்கீழ் கொண்டு வந்துவிட வேண்டும். இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். 1972-ல் இருந்து நாட்டுடைமையாக்கப்பட்ட இந்தத் திட்டத்திற்கு இன்னும் "சர்வீஸ் ரூல்ஸ்" எதுவும் இல்லை. ஆகவே, இதற்கு உடனடியாக சர்வீஸ் ரூல்ஸ் வைத்தாக வேண்டும்.



இன்னொன்று சொல்ல வேண்டும். போக்குவரத்து இலாகாவில் பணியாற்றுவதற்கு எலக்ட்ரிசிட்டி போர்டு, ஹவுசிங், லேபர் டிப்பார்ட்மெண்ட், பிஷரிஸ் டிப்பார்ட்மெண்ட் போன்ற இடங்களிலிருந்து உயர் பதவிகளுக்கு ஆளை நியமனம் செய்கிறார்கள். அப்படி 31 பேர்கள் வந்திருப்பதாகத் தெரிகிறது. அது கூடாது. அதனால் இந்தத் துறையிலே பணியாற்றுகிறவர்களுக்கு பதவி உயர்வு கிடைப்பதற்கு வாய்ப்பு இல்லாமல் போய்விடுகிறது. ஆகவே, இந்த முறையை தவிர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தப்படியாக, இந்த பஸ் கார்ப்பரேஷன்களுக்கு எல்லாம் ஒரே "ஹோல்டிங் கம்பெனி" இருக்க வேண்டும். இல்லை என்றால் ஏதாவது ஒரு இடத்தில் இருக்கக்கூடியவர்கள் அதிக பயனடைவார்கள்; மற்றவர்களுக்கு அந்த பயன் கிடைக்காமல் போய்விடும். உதாரணமாக சேரன் போக்குவரத்தில் 45 லட்சம் லாபம் என்றார்கள். மற்ற இடங்களிலும் நல்ல முன்னேற்றம், லாபம் இல்லை. ஆதலால் எல்லா கார்ப்பரேஷன்களையும் இணைத்து ஒரு ஹோல்டிங் கம்பெனியாக வைத்தால் தகுதியானவர்களைப் பரிமாறிக் கொள்வதின் மூலம் ஒரேவிதமான பலன் கிடைக்கும். ஆகவே, இந்த முறையை அமல்படுத்த முடியுமா என்பதை ஆராய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பாடி பில்டிங் செய்கிறோம். இப்போது. டி.வி.எஸ். போன்ற நிறுவனங்களிடம் கொடுத்து இந்த வேலையைச் செய்ய சொல்கிறோம். இந்த முறை அவ்வளவு பொருத்தமுடையதாக இல்லை. நாம் படித்தவர்களுக்கு வேலை கொடுக்க வேண்டும். அவர்களை ஊக்குவிக்க வேண்டும். அதற்காக நம்முடைய பஸ்களுக்கான பாடி பில்டிங்கை நாமே செய்ய வேண்டும். அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இதுபோக இன்னும் நமக்கு வொர்க்ஷாப் அதிகம் இல்லாததால் பல கஷ்டங்கள், குறைபாடுகள் இருக்கின்றன. தனியார் வொர்க்ஷாப் வைக்க அனுமதி கேட்டால் அனுமதி இல்லையென்று சொல்கிறார்கள். அநேக ஜீப்புகள் இன்றைக்கு இருக்கிற வொர்க் ஷாப்புகளில் ஆறு, ஏழு மாதங்களாக கிடக்கின்றன. குறைந்த பட்சம் ஆட்டோமோபைல் என்ஜினியரிங் படித்தவர்கள் வொர்க் ஷாப் வைக்க முன்வந்தால், அவர்களுக்கு உதவிசெய்து நிறைய தனியார் வொர்க்ஷாப்புகளை ஏற்படுத்தினால்தான் காலதாமதத்தைத் தவிர்க்க முடியும். அதற்கு வேண்டிய ஏற்பாடுகளை செய்வதோடு, டெக்னோகிராப்ட் புகுத்தப்படுவதன் மூலமாகத்தான் இந்த இலாகா மேலும் நல்ல முறையில் செயல்படும் என்று சொல்லிக்கொண்டு என் பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

**Dr. H. V. HANDE**: Hon. Mr. Speaker, Sir, in support of the cut motions given on behalf of our party, I would like to state a few things.

[Dr. H. V. Hanke] [1974 மார்ச் 15

First of all, the Hon. Minister for Transport has attempted to give a rather rosy picture of the state of affairs but I would like to submit that while I appreciate the efforts he has been making to improve the working conditions of the transport system, I cannot share his enthusiasm that things are as fine or as rosy as he has attempted to paint. The Hon. Minister has stated in his speech that the financial year 1973–74 would close with a pre-tax profit of Rs. 91 lakhs. I would like to state that if you were to deduct the tax, the profit would be very much less. What is the ultimate sacrifice which the poor passengers have to undergo for the transport system getting this profit ? Is the Hon. Minister aware of the fact that lakhs of passengers utilising the transport system are undergoing great sacrifices, they are packed like sardines in buses ? With great difficulty they have to travel in the bus. That is why I have also given a cut-motion No. 79 which states :

அரசாங்க நகரப் பேருந்துகளில் அதிகமான அளவு நெரிசல் ஏற்படுவதால் பயணிகளுக்கு ஏற்படும் இன்னல்கள் பற்றி எடுத்துக் கூற

Lot of troubles are taking place. Lot of complaints. I have received. I have raised this question before also. But the Hon. Minister for Transport does not seem to have given thought to this problem. He seems not to be bothered about it. Has he bestowed thought to reduce the discomfort to the travelling public ? Has any sincere effort been made in that direction No, nothing. But yet he has given a rosy picture.

Has he told us the steps he was going to take to modernise the entire transport system. He is not only Minister for transport in the City but Minister for the entire transport system in the State. What are his plans to modernise the system? Has he got plans to diversify the transport system ? Is it not necessary that the Transport Minister should face the problem of diversification of transport system ? Can he solve the problem only by increasing buses ? Increasing the buses is one part of the problem. Diversification of traffic is another. Go to any place, Mount Road, General Hospital or any part of Madras City. During the peak hour, buses go at snail speed, fully packed. What are the concrete steps which the Hon. Minister has in mind to modernise the transport system ?



1974 மார்ச்] [Dr. H. V. Hande]

What is the allotment under the Plan for tube railway in Madras City, for a different method of transport? What is the provision for providing link roads ? Are they going to be formed ? All these things should have been covered, with details and concrete plans, in the speech of the Hon. Minister. But nothing like that had been done. If it had been done, we would have been happy.

The Hon. Minister says that some profit has been made. But that is not sufficient. The Transport Department has failed in its duty. For the past several years I have been mentioning this. But the Hon. Minister and the Transport Department do not seem to be bothered over it.

On the other hand he has given some figures, just to divert the attention of legislators and public. I would like the Hon. Minister to answer some specific charges which I am making. So far as the working of the Transport system for this year is concerned, we will get the revised figures only next year or a couple of years later. I am taking the performance for previous years. The combined account of the State Transport showed a loss of Rs. 46·49 lakhs in 1968–69 and loss of Rs. 106·67 lakhs in 1970–71. The cumulative loss for 3 years is Rs. 206·74 lakhs. What is the reason for the loss ? The Government ought to have placed a note on the subject on the table. Have they made any post-mortem examination and found out the causes for loss and have they taken action to see that the loss is not repeated. What they have done is to pack the buses with passengers resulting in untold discomfort to the passengers. Yet the transport in the City shows a loss of Rs. 84 lakhs.

I would like to pinpoint certain other things. The Kanyakumari branch and Central Workshop, Chromepet are progressively losing. The net profit in Kanyakumari branch during 1968–69 was Rs.4·44 lakhs. It came to just Rs. 50,000 by 1970–71. For the Central Workshop, Chromepet the profit came down from Rs. 4·11 lakhs to Rs. 1·61 lakhs in three years. For Ranithottam there was profit for one year but later on it got decreased. The Hon. Minister has to consider these things. These are the specific problems he has to solve. The fleet strength in Kanyakumari was 304 in

1969–70; it was increased to 320 in 1970–71 but the effective kilometre operated came down from 270·83 lakhs to 270·1 lakhs. The average vehicle kilometre per day also came down from 280 to 275. This shows that in spite of increase in fleet strength, the vehicle utilisation was unsatisfactory. What are the steps taken to improve vehicle utilisation? The number of vehicles available went up from 1·5 per cent to 5·8 per cent (it increased four times) but the number of scheduled trips was increased by 1·2 per cent. Besides, the number of trips missed and the percentage of trips missed went up substantially? I do not know the mystery. Even last year I made this point. But the Hon. Minister does not seem to be bothered about this. That is another aspect. What I want to pinpoint is that the Department is not at all efficient. It is the duty of the Hon. Minister to see that he tones up the department. That is the specific point I am making.

There is lot of discontent among workers. Has any attempt been made to solve the problem by the Hon. Minister. For instance, I have given a cut motion on Pallavan Pokkuvarathu Kazhagam.

பல்லவன் போக்குவரத்துக் கழக தண்டையார்பேட்டை பணிமனையைச் சேர்ந்த 98 தொழிலாளர்கள் கடந்த செப்டம்பர் முதல் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டு இருத்தல் பற்றி எடுத்துக் கூற

We have represented the matter to the Hon. Minister number of times. But he does not seem to have taken action to solve the problem of 98 persons who have been thrown out of employment. They were victimised by the Police Department people. Some were arrested and some were kept under lock up. This was brought to the attention of the Hon. Minister. There was a traffic hold up. Later on the buses were allowed to go. An assurance was given that the concerned people in the Police Department would be properly dealt with. But what happened was to the contrary. Instead of taking action against the concerned people in Police Department, these poor workers had been proceeded with and they had been thrown out of employment.

<u>மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன்:</u> தலைவர் அவர்களே, நான் ஏதோ அஷ்யூரன்ஸ் கொடுத்திருப்பதாகச் சொல்கிறார்கள். அப்படி ஒன்றும் நான் தரவில்லை.



Dr. H. V. HANDE: I did not say it was the Minister, it was an officer; I think, it was the Director of Transport and an understanding was arrived at between the officer and the workers. I would like to know why in spite of the assurance by the Hon. Minister, 98 workers are victimised. Is it not necessary on the part of the Government to bring the persons responsible to book? I am not saying there is a rivalry between the Transport Minister and the Minister in-charge of Police, that is, the Chief Minister. I am not saying that and let him not get panicky or worried. Should not the Hon. Minister for Transport see to it that he gets in touch with the Chief Minister on this issue and tries to solve the problem and see that the suspension orders are cancelled?

Then, we have got the workers petition to the Minister. The Anna Kazhagam has given a number of demands. I have also given a cut motion:

பல்லவன் போக்குவரத்துக் கழக அண்ணா தொழிலாளர்கள் சங்கத்தின் சார்பில் கொடுக்கப்பட்ட கோரிக்கை மனு குறித்து பரிசீலனை செய்ய வேண்டிய அவசியத்தைப் பற்றி விவாதிக்க என்று கொடுத்திருக்கிறேன்.

I would like to know what steps have been taken with regard to these demands which they have made. One of their requests is:

பல்லவனில் ஓடும் யாவும் பேருந்துகள். எனவே பேருந்துகளில் பணியாற்றுவோரின் அடிப்படைச் சம்பளத்தை ரூ. 200—210 என்று வழங்கவேண்டும்.

That is one. Another request they have made is— தற்பொழுது வழங்கப்படும் ஊக்கப் படி incentive bonus about which the Hon. Minister is making a big issue: ஊக்கப் படி கொடுக்கப்படும்போது, நிரந்தரப் படி சேர்க்கப்படாமல் கொடுக்கப்படுகிறது. They want permanent batta. If there is a reduction in the number of passengers, the conductors and drivers have to lose the normal facilities. I would like the Hon. Minister for Transport to go into that and see what could be done.

Then again in the matter of nationalisation, he has shown good speed. I would like to know when all routes have been taken up and why the route between Rajapalayam and Madurai operated by, Jayavilas Bus Service, Aruppukottai is alone left out. Why do

[Dr. H. V. Hande] [1974 மார்ச் 15

they give this protection to this Bus Service? Are the Government interested in this individual is a question which the Hon. Minister has to answer in his reply.

Then, there is the S.M.T. Service, operating in Thanjavur district. It was closed. At the time, an assurance was given by the Hon. Minister that all the employees who have lost their jobs would be taken back by the Cholan Transport. But my information is many of the employees have not been taken back and only those who have been recommended by the S.M.T. have been taken. This is in spite of the fact that the Hon. Minister has given an assurance that all persons would be taken back.

With regard to Printing Press, the Hon. Minister Thiru N. V. Natarajan told in this House when he was in charge of Printing, he gave an assurance on two occassions that a Printing Press would be started in Choolai. But now they have found out a place on an abnormal rent. But for some reason that Press also has not been opened. I would like to know why the Hon. Minister during his reply should not at least give an assurance that the Press would be opened within one or two months. (Mr. Speaker sounded the gong) I trust our Deputy Leader would like to speak about Katta Bomman Transport problems...............

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எட்மண்ட்டிடம் சொல்லி விட்டேன், ஒரு பார்ட்டிக்கு ஓர் உறுப்பினர்தான் வரும் என்று, அவரும் ஒத்துக்கொண்டார்.

Dr. H. V. HANDE: I would once again stress the fact that in spite of all these things—the buses are overcrowded—though there may be profit just now, ultimately it will result in damage to buses. The springs and spare parts will be spoiled very quickly and the life of the buses will be shortened, halved and the ultimate damage would be much greater than the initial profit. Therefore, my earnest request is that the Hon. Minister for Transport should tone up the whole administration and see to it that the losses are avoided. Otherwise, in a short time, we will have to make capital investment and buy more buses. I am afraid the Department has not properly briefed the Hon. Minister on this subject. It should be seen that the life of the bus is not disturbed.



1974 மார்ச் 15] [Dr. H. V. Hande]

Unless these things are attended to immediately, ultimately there will be loss. I hope and trust that somethimg will be done about these things. Thank you, Sir.

திரு எம். செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரவர்கள் கோரி இருக்கிற இந்த மானியத்தின் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். பொதுவாக, நம்முடைய அரசு எடுத்திருக்கின்ற நடவடிக்கைகளிலே இந்த அரசினுடைய கொள்கையை நிறைவேற்றுகின்ற முதலிடமாக இன்றைய தினம் போக்குவரத்துத் துறை செயல்பட்டு வருவதை நாம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். நம்முடைய அரசின் கொள்கையான சோஷலிசத் சித்தாந்தங்களை இந்தத் துறையிலே நிறைவேற்ற வேண்டுமென்பதை முதல் அடிப்படையாக வைத்து, இன்றைய தினம் பாராட்டக்கூடிய அளவுக்கு நாம் அவைகளிலே வெற்றி பெற்றிருக்கிறோம்.

(திரு. துரைமுருகன்—தலைமை.)

நம்முடைய அமைச்சரவர்கள் இங்கே கோரிக்கையை பிரேரேபித்தவுடனேயே கடந்த 10 ஆண்டுகளுக்குப் பிறகு நாம் ஏறத்தாழ ரூ. 91 லட்சத்தை ஆதாயமாகப் பெற்றிருக்கிறோம் என்ற நல்ல செய்தியை இந்த அவையிலே தெரிவித்திருக்கிறார்கள். பொதுவாக நாட்டிலே ஒரு அபிப்பிராயம், எந்தத் தொழிலைத் தேசியமயமாக்கினாலும் அந்தத் தொழில் நல்ல முறையில் நடைபெறவில்லையென்ற குற்றச்சாட்டை நாட்டு மக்கள் மத்தியிலே சொல்லிவருவதை நாம் பார்க்கிறோம். அதையெல்லாம் தீவிரமாக எதிர்க்கின்ற வகையிலே, நம்முடைய போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள், எல்லோரும் பாராட்டக்கூடிய அளவுக்கு இந்தத் துறையிலே செயல்பட்டு, மற்ற மக்களுக்கு எடுத்துக் காட்டாகக் காரியங்களைச் செய்து காட்டியிருக்கிறார்கள். அவர்களை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதுமாத்திரமல்லாமல், பல்வேறு கழகங்களை அமைத்து, அதன்மூலமாக இந்தியத் துணைக்கண்டத்திலே மற்றவர்களுக்கு எடுத்துக்காட்டாக, தொழிலாளிகளுக்குப் பங்கு அளித்து, அவர்களுடைய பிற்காலத்திலே, ஓய்வுக்காலத்திலே, அவர்களுடைய குடும்பம் நிம்மதியாக நடைபெறுவதற்கு வேண்டிய திட்டங்களை எல்லாம் வகுத்திருக்கிறார்கள், செயல்படுத்தி இருக்கிறார்கள். எனவே அப்படிப்பட்ட திட்டங்களை வரவேற்பதை விட்டுவிட்டு, இங்கே சில குறைகளையெல்லாம் எதிர்கட்சி நண்பர்கள் எடுத்துச் சொன்னார்கள். அவற்றிற்கு அமைச்சர் அவர்கள் இறுதியிலே பதில் சொல்வார்கள் என்று நான் நம்புகிறேன்.

இந்தத் துறையிலே அவர்கள் செய்யவிருக்கிற காரியங்களை எடுத்துச் சொல்லிவிட்டு, இருக்கிற சில சிக்கல்களையும் எடுத்துச் சொன்னார்கள், அமைச்சர் அவர்கள். இன்றிருக்கிற விலைவாசி காரணமாக நாம் எந்த அளவுக்குப் பாதிக்கப்பட்டிருக்கிறோம் என்றும் சொன்னார்கள். மத்திய

சர்க்கார் சில புதிய வரிகளைப்போட்டிருப்பதன் காரணமாக வருகின்ற நாட்களிலே பல கஷ்டங்கள் ஏற்படும் என்று சொன்னார்கள். உபயோகப் படுத்துகின்ற சில பொருள்களின் வரி செண்ட் பர்செண்டாக உயர்ந்திருக்கிறது.

அது மாத்திரமல்லாமல், உதிரி உறுப்புகளுக்கெல்லாம் விலை ஏற்றப் பட்டிருக்கிறது. இப்படிப் பல்வேறு சங்கடங்களிருக்கின்றன. இவற்றை எல்லாம் நிறைவு செய்தாக வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். இதனால், எதிர்காலத்திலே ஆதாயம் குறைந்துவிடும் என்ற சந்தேகம் இருந்தாலும், இந்தத்துறையிலே நல்ல முறையிலே நம்முடைய அமைச்சரவர்கள் பணியாற்றி, நல்ல ஆதாயத்தைக் கொண்டுவருவார்கள் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது.

சென்னையிலே ஓடுகின்ற பஸ்கள் நட்டத்திலே ஓடுவதைப் பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். மற்ற மாநிலங்களைப் பார்க்கும்போது, நம்முடைய மாநிலத்திலே நாம் முன்னேறி இருக்கிறோம். தனியார் துறையிலே ஓடுகின்ற பஸ்ஸாக இருந்தாலும்கூட நட்டத்திலேதான் ஓடிக்கொண்டிருக்கின்றது. நகர்ப்புறங்களிலே குறிப்பிட்ட மைலேஜ் அவர்களால் ஓட்ட முடியாத காரணத்தால், அம்மாதிரி நட்டத்திலே ஓடிக்கொண்டிருக்கின்றன. ஏறத்தாழ 239 தடயங்களிலே ரூட்டுகளிலே நாம் ரூ. 106 இலட்சம் நட்டத்திதிற்குப் பொதுமக்களுடைய சௌகரியத்தைப் முன்னிட்டு, பேருந்துகளை விட்டுக்கொண்டிருக்கிறோம் என்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். தனியார்களாக இருந்தால் நிச்சயம் விடமாட்டார்கள், நிறுத்திவிடுவார்கள். அப்படி நம்முடைய நாட்டுடைமையாக்கப்பட்ட பேருந்துகளும் நிறுத்தப்படுமானால் 106 இலட்சம் ரூபாய் வரையிலும் நம்முடைய கார்ப்பரேஷனுக்கு ஆதாயமாக வந்திருக்கும். ஆனால் ஆதாயத்தை மாத்திரம் குறிக்கோளாகக் கருதாமல் பொது மக்களுடைய சௌகரியத்தையும் கவனித்தாக வேண்டுமென்ற முறையிலேதான் இயக்கிக்கொண்டிருக்கிறோம் என்று அமைச்சர் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள்.

[முற்பகல் 11-00]

நாட்டுடமையாக்கப்பட்டதற்குப் பிறகு நமக்கும் தனியாருக்கும் போட்டிகள் இருக்கின்றன. ஏறத்தாழ 10 ஆயிரம் பேருந்துகள் ஓடிக்கொண்டிருப்பதில் ஏறத்தாழ 4,500 பேருந்துகளை அரசின் சார்பிலே ஓடிக்கொண்டிருக்கின்றன. 5 ஆயிரம் பேருந்துகளைத் தனியார் துறையிலே ஓட்டிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவையெல்லாம் முழுமையாக ஓடுகிறதா என்றால் சந்தேகம்தான். நாட்டுடமையாக்கப்படுகின்ற சட்டம் கொண்டுவந்தோம். அதற்குப் பிறகு வழக்குமன்றத்திற்கு அவர்கள் செல்கிறார்கள். வழக்குமன்றங்களுக்குச் சென்று ஸ்டே வாங்கி விடுகிறார்கள். ஸ்டே அவர்கள் கொடுத்துவிடுகின்ற காரணத்தினால் இரண்டு பஸ்களும் ஓடலாம் என்ற நிலைமை வருகிறது. அதன் காரணமாகத் தனியார் துறைக்கும் நட்டம் ஏற்படுகிறது, பொதுத் துறைக்கும் நட்டம் ஏற்படுகிறது என்பதை அவர்கள் கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள்.



இந்த நேரத்திலே நான் ஒரு யோசனை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். பேருந்து உரிமையாளர்கள் சமரஸம் ஏற்படுத்திக்கொள்வதற்குத் தயாராக இருக்கிறார்கள். உங்களுக்கும் நட்டம் ஏற்படும். நமக்கும் நட்டம் ஏற்படும் என் வழக்கு மன்றங்களுக்குச் செல்ல வேண்டும், நாம் சமரஸம் செய்துகொள்வோம் என்று சொல்லி அவர்களோடு பேசித் தீர்ப்பதற்கு நம்முடைய அமைச்சர் அவர்கள் முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும். அவர்கள் சமரஸம் செய்து கொள்ளத் தயாராக இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். தனியார்கள் அநேக தடயங்களை விட்டுக்கொடுத்துவிட்டு வருகிறார்கள்.

போக்குவரத்துத் துறைத் தொழிலாளர்களுக்கு பங்கும் 35 ஆயிரம் தொழிலாளர்களுக்கு ஒய்வூதியச் சலுகையும் கொடுக்கப்பட்டு இருக்கிறது.

அதுமட்டுமல்ல, வேலைவாய்ப்புகளை ஏற்படுத்திக்கொடுக்கின்ற முறையிலே எஞ்ஜினியரிங் பட்டதாரிகளுக்கும், டிப்ளமா படித்தவர்களுக்கும் ஏறத்தாழ மூவாயிரம் பேர்களுக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுத்து இருக்கிறார்கள்.

நம்முடைய அமைச்சர் அவர்கள் பொதுவாக இந்தத் துறையிலே பல நல்ல அம்சங்களை ஏற்படுத்தியிருக்கிறார்கள், எடுத்துக்காட்டாக போக்குவரத்துத் துறை லாபகரமாக ஓடுவது மற்ற மாநிலங்களுக்கு எடுத்துக்காட்டாக இருக்கிறது. மற்ற மாநிலங்களிலே இருந்து நம்முடைய மாநிலத்திற்கு வந்து கண்டு கேட்டு அறிந்துபோகிறார்கள் என்பதை நாம் கண்கூடாகக் காண்கிறோம்.

இறுதியாக நான் சொல்லிக்கொள்ள விரும்புவது எல்லாம் முதல் அமைச்சர் அவர்கள் நிதிநிலை அறிக்கையிலே பஸ் கட்டணத்தை உயர்த்துவதற்கான நிலைமை இருக்கிறது என்பதைக் கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள். சாமான்களின் விலை ஏறியிருக்கிறது, டீஸல் எண்ணெய் விலை ஏறி இருக்கிறது, ஆயில் விலை ஏறியிருக்கிறது, அதையெல்லாம் மத்திய சர்க்கார் செய்திருக்கிறார்கள், மாநில சர்க்கார் தனியார்களுக்கும் நமக்கும் வரி போட்டிருக்கிறது. இவைகளையெல்லாம் பார்த்தால் ஆதாயம் வருமா என்பது சந்தேகமாகத்தான் இருக்கிறது. பேருந்து உரிமையாளர்கள் எல்லாம் அரசாங்கத்தினிடத்திலே இதைப்பற்றிச் கேட்டுக்கொண்டு இருக்கிறார்கள். இந்தக் கட்டணத்தை 6 பைசா அல்லது 7 பைசா என்று உயர்த்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். பொருள்கள் விலையேறியிருப்பதன் விளைவாக ஏற்பட்டுள்ள நிலைமைகளை வைத்து இதை அரசு பரிசிலனை செய்ய வேண்டும். இதைச் செய்யாத நிலையில் நாமும் பாதிக்கப்படுகிறோம், தனியார்களும் பாதிக்கப்படுகிறார்கள்.

என்னுடைய சொந்தத் தொகுதியிலே ஒரு சர்க்கார் அச்சகம் இருக்கிறது. அங்கே தொழிலாளர்களுக்குள்ள சில குறைபாடுகளைப் பற்றிச் சொல்லி அவற்றை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அங்கே பணியாற்றுகின்ற பல பேர்கள் கன்பர்மேஷன் ஆகாமல் இருக்கிறார்கள். அவர்களுடைய வேலை வாய்ப்பை உறுதி செய்துதர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, 3-வது ஷிப்டை அந்த அச்சகத்திலே ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தமிழ்நாட்டிலே பல ரீஜனல் பிரஸ்களிலே 3-வது ஷிப்டு இல்லாமல் இருக்கிறது, அங்கேயெல்லாம் அதை ஏற்படுத்தினால் வேலை வாய்ப்பைப் பெருக்க முடியும். அதைச் செய்ய வேண்டும்.

இந்தியத் துணைக் கண்டத்தின் அமைச்சரவையில் அமைச்சராக இருந்த மோகன் குமாரமங்கலமும், பெரியார் அவர்களும் இயற்கை எய்தியதால் அன்றைய தினம் விடுமுறை விடப்பட்டது. ஆனால் விருத்தாசலத்திலுள்ள அந்தத் தொழிலாளர்களுக்கு விடுமுறை விடாததால் அவர்கள் அன்றைக்கு வேலைக்கு வரவில்லை. ஆனால் அவர்கள் வேலைக்கு வரவில்லை என்பதால் அந்த இரு தினத்திற்கும் சம்பளத்தைப் பிடிப்போம் என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அதையும் விடுமுறையாக அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தொழிலாளர்களின் மற்றப் பிரச்சனைகளையெல்லாம் நான் நேரிலே தெரிவித்துக்கொள்கிறேன். பல சிக்கல்கள் ஏற்பட்ட நேரத்திலே பல தொழிலாளர்கள் போராட்டங்களுக்கு இடையிலேயும் வெற்றிகரமாக இதனை நடத்திக்கொண்டிருக்கின்ற அமைச்சர் அவர்களுக்குப் பாராட்டைத் தெரிவித்துக்கொண்டு அவருக்குத் துணையாக நின்ற அதிகாரிகளுக்கும் பாராட்டை தெரிவித்துக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* <u>திரு. எம். ஏ. லத்திப்</u>: தலைவர் அவர்களே, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் இந்தத் துறையைச் செம்மையாக நிர்வகித்து வருகிறார்கள் என்பது நாடறிந்த உண்மையாகும். அவர்கள் இந்தப் பொறுப்பினையேற்றுக் கொண்டதற்குப் பிறகு இந்தத் துறையிலே நாம் பல்வேறு முன்னேற்றங்களைக் கண்டிருக்கிறோம் என்பதை இன்றைக்கு நாடும் ஏடும் ஏற்றுக்கொண்டிருப்பது உண்மையாகும். இந்தத் துறையை இன்றைக்கு முழுமையாக ஒரு பொதுத் துறையாக மாற்ற வேண்டுமென்ற ஒரு கொள்கையை எங்களைப் போன்றவர்கள் ஆதரிக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

சமுதாயத்திலே ஒரு மாபெரும் மாற்றத்தைக் கொண்டுவருகின்ற பொழுது அதனுடைய விளைவுகளையெல்லாம் முன்கூட்டியே அறிந்து அதற்கான தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதுதான் செம்மையாக இருக்கும் என்ற வகையிலே என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைச்



சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இன்றைக்குத் தனியார் துறையிலிருந்த பல பேருந்துகளை சர்க்கார் பேருந்துகளாக மாற்றிக்கொண்டிருக்கிறோம். இது பொதுவாக நாட்டிலே ஒரு உயிரோட்டகமாவுள்ள எண்ணத்தின் எதிரொலியாக இருக்கிறது என்பதை யாரும் மறுக்கவில்லை. ஆனால், அப்படி மாற்றம் செய்கிற நேரத்திலே விளைவுகளை முன்கூட்டியே ஆராய்ந்து பொருளாதார சிக்கல்களைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்தோமா என்றால், நான் சொல்வேன், போதிய அளவிற்கு எடுக்கவில்லை என்று. அதனால் பல சிக்கல்கள் ஏற்பட்டு இருக்கின்றன. எத்தனையோ துறைகளிலே நாம் இன்றைக்குப் பார்க்கிறோம். சமுதாயத்திலே ஏற்படுகின்ற வருமானம், சமுதாயம் ஈட்டுகின்ற லாபம் சமுதாய மக்கள் அனைவருக்கும் சமமாகப் பகிர்ந்தளிக்கப்பட வேண்டுமென்பதுதான் எல்லோருடைய நோக்கம். ஆனால், பல துறைகளிலே பார்க்கிறோம். இன்றைக்கும் ஏகபோக உரிமையாளர்கள் இந்த நாட்டிலே இருந்து கொண்டுதான் இருக்கிறார்கள். அவர்கள் சமுதாயத்தின் லாபத்தையெல்லாம் அவர்களே வைத்துக்கொண்டு சுகபோகமாக இருக்கிறார்கள். அவர்கள் பெறுகின்ற லாபத்தை சமுதாயத்திலே இருக்கின்ற மக்களுக்குக் கொடுத்து சமமாகப் பகிர்ந்தளிப்பதிலே ஆட்சேபணை இருக்க முடியாது. பஸ் முதலாளிகளை மட்டும், என்னவோ தெரியவில்லை, அவர்களுடைய நலன்களை அதிகமாகப் பெறமுடியாமல் அவர்களை அதிகமாக வாட்டிக் கொண்டிருக்கிறோம். இதை அமைச்சர் அவர்கள் எண்ணிப்பார்க்க வேண்டும்.

பெரிய பஸ் முதலாளிகளாக இருந்தவர்கள் எல்லாம் இன்றைக்கு என்ன நிலைமையிலே இருக்கிறார்கள் என்று பார்க்க வேண்டும். நானூறு பஸ்களை வைத்துக்கொண்டிருந்த முதலாளிகளை வீட்டுக்கு அனுப்பிவிட்டு நாட்டுடமைப் புரட்சி செய்தோம். இன்றைக்குப் பல பஸ் அதிபர்கள் 2 பஸ்களை வைத்துக்கொண்டு, 4 பஸ்களை வைத்துக்கொண்டு இருக்கிறார்கள். அவர்கள் எப்படி வாழ்க்கையை நடத்திக்கொண்டிருக்கிறார்கள் என்று பார்த்தால் வேதனையாக இருக்கிறது. ஒரு துறையை சர்க்கார் நாட்டுடமையாக்குகிறது என்றால், அந்தப் புரட்சியைச் செய்வதற்கு முன்னாலே சில ஏற்பாடுகளை, சமுதாயத்திற்குப் பலன்களைத் தருவதற்கான முயற்சிகளை, அந்தத் துறையினை மேலும் வளர்ச்சியுற்றதாக ஆக்குவதற்காக மேன்மேலும் வளர்ச்சியடையச் செய்து அதன் மூலம் பல துறைகள் வளர்ச்சியடையக்கூடிய முறையிலே முயற்சிகளை எடுக்க வேண்டுமே தவிர ஏதோ ஒரு கோஷமாக, ஒரு எண்ணமாக மட்டும் கொண்டு இருக்கக்கூடாது.

சர்க்கார் துறையிலே பஸ்கள் நடத்தப்படுகின்றன. ஏற்கெனவே பஸ்களை வைத்துக்கொண்டிருந்தவர்கள் டிரைவராக, கண்டக்டராக மாறக் கூடிய நிலைமை ஏற்பட்டு அவர்கள் மார்வாடியிடம் கடனை வாங்கி ஒன்றிரண்டு பஸ்களை வைத்துக்கொண்டு கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். எவ்வளவு வேகமாக அவர்கள் மீது பளுவைச் சுமத்திக் கொண்டிருக்கிறோம் என்பதைப் பார்க்கும்பொழுது மிகவும் வேதனையாக இருக்கிறது.

[திரு. எம். ஏ. லத்தீப்] [1974 மார்ச் 15

இன்றைய தினம் ஜனப்பெருக்கம் அதிகமாக ஏற்பட்டிருக்கிறது. அதே நேரத்தில் மக்களிடத்திலே போக்குவரத்துப் பழக்கமும் அதிகமாகி இருக்கிறது. இந்த நிலையிலே பஸ்களின் எண்ணிக்கை அதிமாக ஆகியிருக்கிறதா என்றால், விகிதாச்சாரப்படி அதிகமாகவில்லை என்பதுதான் என்னுடைய தாழ்மையான கருத்தாகும். இரயில்வே துறை அதிகமாக முன்னேற்றம் காணவில்லை என்ற அடிப்படையிலே, இரயில்வே துறையில் எதிர்பாராத நேரங்களில் வேலை நிறுத்தங்கள் ஏற்பட்டு பிரயாணிகள் அவதிக்கு ஆளாக்கப்படுகிறார்கள், அந்த நேரத்திலே நம்முடைய அரசுத் துறையிலே நடத்தப்படுகின்ற, பொதுத் துறையிலே நடத்தப்படுகின்ற இந்தத் துறை மக்களிடத்திலே உள்ள போக்குவரத்துச் சிக்கலைத் தவிர்ப்பதற்காக முயற்சிகளை எடுத்திருக்கிறதா என்று பார்த்தால் போதுமான அளவில் இல்லை என்பதுதான் என்னுடைய கருத்து.

1972-73-ஆம் ஆண்டிலே உள்ள புள்ளிவிவரங்களைத் தந்திருக்கிறார்கள் இன்றைக்குத் தனியார் துறையை எடுத்துக்கொண்டால் 1972- ஆம் ஆண்டிலே இருந்ததைவிட குறைவாகத்தான் 1973-லே இருப்பதை நாம் பார்க்கிறோம். தனியார் துறையில் உள்ள குறைபாடுகளைப் போக்குகின்ற முறையில் பொதுத் துறையில் என்ன மாற்றத்தைக் கண்டிருக்கிறோம். எவ்வளவு பஸ்களை விகிதாச்சாரப்படி உயர்த்தியிருக்கிறோம் என்று பார்த்தால், வேதனையோடு நான் தெரிவித்துக் கொள்கிறேன், ஏமாற்றம் தான் ஏற்படுகிறது.

இன்றைக்கு அமைச்சரவர்கள் சொல்லும்பொழுது இது ஒரு தங்கச் சுரங்கம் என்று குறிப்பிட்டார்கள். ஒவ்வொரு சுரங்கத்திற்கும் point of exhaustion, முடிவு காலம் என்று இருக்கிறது. கோலார் தங்கச் சுரங்கத்தை எடுத்துக்கொண்டால் இப்பொழுது அங்கே தோண்டித் தோண்டி எடுக்கிறார்கள். தங்கம் கிடைக்கவில்லை. கோலார் தங்கச் சுரங்கத்தை எடுத்துக்கொண்டால் தங்கம் தங்கம் என்று சொல்லிக் கொண்டிருந்தார்கள். ஆனால், இன்றைக்குப் பார்த்தால் அங்கே தங்கம் இல்லை. மண்தான் வருகிறது. அந்த முறையில் தனியார் பஸ் முதலாளிகள் இன்றைக்கு மிகப் பெரிய அவதிக்குள்ளாகியிருக்கிறார்கள். பஸ்களை நடத்துவதற்கு மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

டயர்களை உற்பத்தி செய்கின்ற இடங்களிலே சர்க்கார் கொள்முதல் செய்து சர்க்காரின் மூலம் நியாயமான விலையில் கொடுக்கவேண்டுமென்ற ஒரு திட்டத்தைக் கொண்டு வந்தால் நல்லது.

இன்றைய தினம் நாம் 4 பஸ்களையோ, 2 பஸ்களையோ வைத்து நடத்துகின்ற முதலாளிகளுடைய லாபத்தைக் குறைக்க வேண்டுமென்று சொல்லுகிறோமே தவிர, இடையிலே உள்ள இரத்தம் உறிஞ்சுகின்ற கொடுமைக்காரர்களை, சமூக விரோதிகளை, வியாபாரிகள் என்று சொல்லப்படுபவர்களை, நச்சுப் பாம்புகளாக இருப்பவர்களைக் கவனிக்கவில்லை. அவர்களெல்லாம் அந்த டயர் உற்பத்தி செய்யப்படும் இடங்களிலேயிருந்து டயர்களைப் பெற்று லாபத்தில் விற்கிறார்கள்.



1974 மார்ச் 15] [திரு. எம். ஏ. லத்தீப்]

ஒரு டயருக்கு 1,000 ரூபாய் அதிகமாகக் கொடுத்து ஒரு பஸ் முதலாளி தன்னுடைய பஸ்ஸை நடத்த வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறார். ஏப்ரல் மாதத்திலிருந்து மத்திய சர்க்காரின், மகானுபாவர்களின் பட்ஜெட்டின் காரணமாக, கருணையைக் கொண்டுள்ள நம்முடைய மத்திய சர்க்கார் இந்த மாதத்திலேயிருந்து மிகப் பெரிய ஒரு மாறுதலைச் செய்திருக்கிறார்கள். நம்முடைய பொருளாதாரச் சிக்கலைத் தீர்ப்பதற்குப் பதிலாக சிக்கலை எப்படியெல்லாம் முடிச்சுப் போட்டால் தீராதோ அந்த அளவில் ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

டீசல் விலையில் 16 பைசா அதிகமாகக் கொடுத்து வாங்க வேண்டியவர்களாக இருக்கிறோம். ஆயில் விலை மத்திய சர்க்காரின் இந்த வரி விதிப்பின் காரணமாக 20 ரூபாய் அதிகமாகக் கொடுத்து வாங்குகிறோம். அதே நேரத்தில் தமிழக சர்க்காரின் வரி உயர்வால் ஒரு நாளைக்கு நாம் 25 ரூபாய் அதிகமாகக் கொடுக்கிறோம். அதுமட்டுமல்லாமல் சேல்ஸ் டாக்ஸ், இன்னும் மற்றவை என்ற அளவில் 20 ரூபாய். அந்த அளவில் மார்ச் மாதம் வரையில் இருந்ததைவிட கிட்டத்தட்ட 85 ரூபாய் அதிகமாகச் செலவு செய்ய வேண்டிய அளவில் பஸ் முதலாளிகள் இருக்கிறார்கள். அதேநேரத்தில் பஸ் கட்டணத்தையும் நாம் பார்க்க வேண்டும். 1964-லே பஸ் ஃபேர் நிர்ணயிக்கப்பட்டது. 1964-லிருந்து இன்றுவரையில் ஏதாவது ஏற்றப்பட்டிருக்கிறதா என்றால் இல்லை. 1964-லிருந்து 1974 வரையில் இந்த 10 ஆண்டுக் காலத்தில் இந்த நாட்டின் பொருளாதாரத்தின் உருவத்தையே சிதைக்கும் வகையிலே மாறுதல் ஏற்பட்டிருக்கிறது.

இன்றைய தினம் டாக்சிகாரர்கள் மிகவும் பரிதாபத்திற்குரிய நிலையில் இருக்கிறார்கள். ஒரு காலத்தில் டாக்சிகாரர்களைக் கூப்பிட்டால் ராஜாவைப் போல் பார்த்து விட்டுச் சென்றுவிடுவார்கள். ஆனால், இன்றைக்கு அதை வேண்டுவோர் யாருமில்லை என்ற அளவில் இருக்கிறது. சட்டமன்ற ஹாஸ்டலுக்கு அருகில் டாக்சிகள் வரிசையாக நிற்கின்றன. அந்த அளவிற்கு அவர்கள் கஷ்டப்படுகிறார்கள். அதன் ரேட்டை அதிகமாக்க வேண்டுமென்று சொன்னதால் 1 ரூபாய் என்றிருந்தது 1 ரூபாய் 50 காசாக ஆகி, இன்றைய தினம் 1 ரூபாய் 70 காசு என்று ஆகியிருக்கிறது. ஒரு சில மாதங்களுக்குள்ளாக (மணியடிக்கப்பட்டது) நான் ஒருவன்தான் எங்கள் சார்பில் பேசுகிறேன். நாட்டிலே உள்ள நிலைமைகளை நான்தான் தைரியமாகப் பேசுகிறேன். இன்னும் கொஞ்சம் நேரங் கொடுங்கள்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரை முருகன்) :—நேரம் இல்லை. ஒன்றரை மணிக்கெல்லாம் அமைச்சரின் பதில் முடிந்து வாக்கெடுப்புக்கு எடுத்துக்கொள்ள வேண்டும். இன்னும் இரண்டு நிமிடங்களிலே முடித்துக்கொள்ளுங்கள்.

திரு. எம். ஏ. லத்தீப் : ஆகையால் 1964-லே ஏற்படுத்தப்பட்ட நிர்ணயம் என இல்லாமல் மாற்றம் செய்யப்படவில்லை. இன்றைக்கு சர்க்கார் துறையில் பஸ்கள் இருக்கின்றன. அவர்கள் "வெல்ஃபேர் மெஷர்" என்று சொன்னார்கள். அதை நான் ஏற்றுக்கொள்கிறேன்.

திரு. எஸ். வடிவேல் : தலைவரவர்களே, பஸ் முதலாளிகள் சிரமப்படுவதாக மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்கிறார்கள் அந்தச் சிரமத்திற்கு உட்படாமல் அரசிடமே பஸ்களை அவர்கள் ஒப்படைத்துவிட்டால் அவர்களுக்குத் தொந்தரவு இல்லாமல் இருக்கும் என்பது என்னுடைய எண்ணம்.

திரு. சி. ஆறுமுகம் : பாயிண்ட் ஆஃப் கிளாரிபிகேஷன் சார். அரசாங்கத்திடம் ஒப்படைக்க வேண்டுமென்று கூறப்படும் கருத்தை நான் மறுப்பவன் அல்ல. ஆனால், அகில இந்திய அளவில் உள்ள கம்யூனிஸ்ட் கட்சி .. .. ..

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரை முருகன்) : அவர் உங்களைக் கேட்கவில்லை, நீங்கள் உட்காருங்கள்.

திரு. எம். ஏ. லத்தீப் : எல்லா பஸ்களையுமே சர்க்கார் ஏற்றுக் கொண்டு போக்குவரத்துச் சிக்கலைத் தீர்க்கும் முறையில் நாட்டிற்குத் தேவையான அளவில் சர்க்கார் செய்தால், தனியார் நடத்துவதைவிட லாபத்தோடும், திறமையோடும் செய்ய முடிந்தால் எல்லா பஸ்களையும் தேசியமயமாக்குவதை நான் வரவேற்கிறேன். உடனடியாக அதை சர்க்கார் செய்யட்டும்.

ஆனால், திரிசங்குசொர்க்கத்தில், மேலேயும் இல்லாமல் கீழேயும் இல்லாமல் அவர்கள் தவித்துக்கொண்டிருக்கும் நிலைமையை மாற்ற வேண்டும். அவர்களெல்லாம் தொழிலாளிகள், ஏழைகள். அவர்கள் மிகப்பெரிய அதிபர்கள் அல்ல. அங்கே கூட பஸ் முதலாளி என்று சொல்லப்படுபவர்களைப் பார்க்கிறோம். அவர்களெல்லாம் மார்வாடிக் கடைகளிலே நன்றாகச் சிக்கிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய கட்டணம் 3 பைசா என்று இருக்கிறது. இதுவரைக்கும் 3 பைசா என்று தான் இருக்கிறது. ஒரு ஆண்டுக்கு முன் 1 ரூபாய் என்றிருந்த டாக்சி கட்டணம் 1 ரூபாய் 70 காசு என்று மாறிவிட்டது. இன்றைக்கு இங்கேயிருந்து சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதிக்குச் சென்றால் 3 ரூபாய் 60 காசு கொடுக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். ஆனால், அந்த பஸ்களுக்கு 64-ஆம் ஆண்டிலிருந்து 3 பைசாவாகவே வைத்திருப்பது எந்த அடிப்படையில் நியாயம் என்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். குறைந்தபட்சம் அதை 6 பைசா என்றாவது உயர்த்தித் தர வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்வேன். "ஆப்பரேஷனல் மெஷினரி" நன்கு நடக்கவும், "கேபிடல் ஃபார்மேஷன்" செய்ய வாய்ப்பும் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமர்கிறேன்.





திரு. தே. கேசவலு : மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, 1974-75- ஆம் ஆண்டுக்கான போக்குவரத்துத் துறை மானியத்தின்மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு முதற்கண் என்னுடைய நன்றிகலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றையதினம் எனக்கு முன்னால் பேசியவர்களெல்லாம் தமிழக அரசினுடைய போக்குவரத்துத் துறையின் சாதனைகளை மிகவும் நல்ல முறையிலே எடுத்துக்கூறி, எப்படியும் ஆளுங்கட்சியைக் குறை சொல்ல வேண்டுமென்பதற்காகச் சில குறைபாடுகளை எடுத்துச் சொல்லி, இங்கே இறுதியாக அவர்கள் போக்குவரத்துத் துறை அமைச்சரவர்களைப் பாராட்டிப் பேசியிருக்கிறார்கள். அதே முறையில் நான் இந்தப் போக்குவரத்துத் துறை மானியத்தின்மீது பேசுகின்றபொழுது இந்த அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்றதற்குப் பிறகு 6 புதிய கழகங்களை கடந்த ஜனவரித் திங்கள்வரையில் புதியதாகத் தோற்றுவித்து அவைகளெல்லாம் மிகவும் நல்லமுறையிலே நடைபெறுவதை நாம் யாரும் மறந்துவிடவோ அல்லது மறைத்து விடவோ முடியாது. அப்படிப்பட்ட கழகங்கள் இன்னும் நல்லமுறையில் செயல்படுவதற்கு அமைச்சரவர்கள் நல்லமுறையிலே அவைகளை முன்னுக்குக் கொண்டுவருவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு, இந்த கார்ப்பரேஷன், கழகங்களிலேயிருக்கும் பேருந்து வண்டிகளில் சிலபல வண்டிகள் தற்காலிகமாக நிறுத்தப்படுகின்ற நேரத்தில் அந்தப் பேருந்து வண்டிகளுக்கான வழித்தடங்களில் தனியார் உதவி பெற்று வண்டித் துறையினருக்கு தற்காலிகமாக வாய்ப்புக் கொடுத்து இட நெரிசல் என்ற பிரச்சினையைப் போக்குவதற்கு முன் வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இந்த ஆட்சி வந்த பிறகுதான் கிராமங்களுக்குப் பேருந்துகள் செல்லுகிற சிறப்பான திட்டத்தை நம்முடைய அமைச்சர் அவர்கள் கொண்டு வந்தார்கள். அந்தத் திட்டத்திலே வழங்கப்பட்ட பேருந்து வழித் தடங்களில் செல்லவேண்டிய பேருந்துகள் எல்லாம் இன்றையதினம் நெடுஞ்சாலை வழியாகச் செல்லுகின்ற அளவுக்கு தங்களுடைய வழித் தடங்களை மாற்றியதன் விளைவாக கிராமங்கள் பயன் அடைய முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அவர்கள் ஏற்கனவே கொடுக்கப்பட்ட வழித்தடங்களில் தான் பேருந்துகளை விட வேண்டுமென்று அரசு உத்தரவிட வேண்டும்.

அண்ணன் செல்வராஜ் அவர்கள் உதிரி உறுப்புகள், டயர்கள் பற்றியெல்லாம் சொன்னார்கள். இன்றையதினம் பேருந்து உரிமையாளர்களுக்கு இருக்கக்கூடிய சங்கடங்கள் எல்லாம் விலைவாசி ஏற்றம் ஒரு பக்கம், பற்றாக்குறை ஒரு பக்கம் இருந்தாலும், அதே நேரத்தில் அரசு விதித்த வரியும், உதிரி உறுப்புகளுக்குப் போடப்பட்ட விற்பனை வரியும்

மிக அதிகமாக இருந்தாலும் கூட அவைகள் எல்லாம் நியாயமான விலைக்கு பேருந்து உரிமையாளர்களுக்குக் கிடைக்கிறதா என்றால் இல்லை என்பதை அமைச்சர் அவர்கள் மிக நன்றாக உணர்ந்திருப்பார்கள் என்று கருதுகிறேன்.

ஆகவே, அத்தகைய முறைகளை எல்லாம் மாற்றி ஒவ்வொரு மாவட்டத்திலும் கூட்டுறவு சிறப்பு அங்காடிகள் மூலமாக பேருந்து வண்டிகளுக்கு வேண்டிய உதிரி உறுப்புகளும், டயர்களும் நியாயமான விலையில் கிடைக்க அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று பேருந்து உரிமையாளர்கள் சார்பில் இந்த மன்றத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மூன்று மாதத்திற்கு ஒருமுறை கட்டுகின்ற வரியை இதற்கு முன்பு தாலுகா அலுவலகங்களில் உள்ள கஜானாவில் செலுத்தி காசோலை ரசீதை மண்டலப் போக்குவரத்து அதிகாரிகளுக்கு அனுப்பி வந்தோம். ஆனால் இன்றையதினம் ஸ்டேட் பாங்கு மூலமாகவும், மற்றைய வங்கிகள் மூலமாகவும் டிராப்ட் வாங்கி நேரடியாகக் கொடுக்க வேண்டிய நிலைமை இருக்கிறது. அந்த முறையை மாற்றி முன்பு இருந்தது போலவே கஜானாவில் செலுத்துகிற முறையை அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து வழங்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

இன்றையதினம் பேருந்து வண்டியின் செலவுகள் எந்த அளவுக்கு அதிகரித்திருக்கிறது என்பதையெல்லாம் அமைச்சர் அவர்கள் நன்றாக அறிந்திருப்பார்கள் என்று கருதுகிறேன். ஆகவே, பேருந்து வண்டிகளை ஆய்வு செய்வது 6 மாத காலம் என்று இருப்பதை ஒரு வருஷ காலம் என்று மாற்றினால் அதிலே ஏற்படுகிற சில சிக்கல்கள் பேருந்து உரிமையாளர்களுக்குக் குறையும் என்று கருதுகிறேன். அதையும் அமைச்சர் அவர்கள் புனராலோசனை செய்து நல்ல வழியைக் காட்டுவார்கள் என்று நம்புகிறேன்.

இரண்டாவது, இந்தப் பேருந்து வண்டிகளை ஆய்வு செய்யும்போது வரி பாக்கி இருக்கிறதா என்பதை ஆய்வு செய்வதற்கு முன்பாக ஒவ்வொரு வண்டிக்கும் தலைமை இடத்தில் சென்று வாங்கி வரக்கூடிய இக்கட்டான சூழ்நிலை இருக்கிறது. அவற்றை மாற்றி மாதந்தோறும் எந்த ஒரு மாவட்டத்திலும் இருக்கும் கிளை அலுவலகத்திற்கு மண்டலப் போக்குவரத்து அலுவலகத்திலிருந்து எந்த வண்டிகளுக்கு வரி பாக்கி இருக்கிறது என்பதை மாதாமாதம் ரிட்டர்ன்ஸ் போட்டு அனுப்ப ஏற்பாட்டைச் செய்தால் பேருந்து வண்டிகளை ஆய்வு செய்வது எளிதாக இருக்கும்.

பேருந்து வண்டிகளுக்கு இன்றையதினம் ஏற்பட்டிருக்கும் செலவுகளைப் பற்றியெல்லாம் எனக்கு முன்பு பேசியவர்கள் தெளிவாக எடுத்துச் சொன்னார்கள். இந்த ஆட்சி வந்த பிறகு 1967-ல் பேரறிஞர் அண்ணா





அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்று ஒரு நபருக்குப் பத்து ரூபாய் என்று வரியை உயர்த்தினார்கள். மீண்டும் ஒருமுறை நபருக்கு 10 ரூபாய் வரி உயர்த்தப்பட்டு இன்றையதினம் 25 ரூபாய் அளவுக்கு வரி உயர்ந்திருக்கிறது. 1965-ம் ஆண்டிலே வாங்கப்பட்ட வண்டியின் விலைக்கும் இன்றைய தினம் அதே வண்டியின் விலைக்கும் இருக்கிற வித்தியாசத்தைப் பார்க்கும் போது 100 மடங்கு விலை அதிகமாக்கப்பட்டிருக்கிறது. அப்படி விலை அதிகம்கொடுத்து வாங்கினாலும் கூட நீண்ட காலம் உழைக்கக்கூடிய தன்மை இல்லை. மூன்று மாத காலத்திற்குக் கூட நல்ல முறையில் ஓட முடியவில்லை. தனியார் துறையிலேயே இயலவில்லை என்று சொல்லும் போது அரசுத் துறையில் எவ்வளவு நஷ்டம் இருக்கும் என்பதை அமைச்சர் அவர்கள் உணர்ந்திருப்பார்கள்.

விலைவாசிகள் இந்த அளவுக்கு உயர்ந்திருக்கும்போது ஒரு வண்டிக்கு ஒரு நாளைக்குக் கட்டுகின்ற வரியின் உயர்வு மட்டும் 25 ரூபாய் அதிகமாகிறது. 60 பேர் அமரக்கூடிய வண்டிக்கு மூன்று மாதத்திற்குக் கட்டக்கூடிய வரி அதிகப்படுத்தப்பட்டது. 2,100 ரூபாய் ஆகும். இதைப் போலவே உதிரி உறுப்புகளின் மேல் போடப்பட்டிருக்கும் வரிகளினால் விலை உயர்ந்திருக்கிறது. 500 சதவிகிதம் அதிகமாக்கப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட இக்கட்டான நிலையில் பேருந்துகளை அரசு நடத்துவது என்று சொன்னாலும் தனியார் துறை நடத்துவது என்று சொன்னாலும் நஷ்டம் வருவதோடு மட்டுமல்லாமல் சிரமங்களும் அதிகமாகி இருக்கின்றன.

ஏனைய மாநிலங்களில் மைசூர் மாநிலத்தில் இன்றையதினம் 3 மாதத்திற்கு ஒரு நபர் உட்காரக்கூடிய இடத்திற்குக் கொடுக்கிற வரி 115 ரூபாயாகவும், ஆந்திரத்தில் 110 ரூபாயாகவும் இருக்கிற நிலையில் கிலோ மீட்டருக்கு 4 பைசா என்று மூன்று ஆண்டுகளுக்கு முன்பே அறிவித்திருக்கிறார்கள். நம்முடைய அரசாங்கம் இந்தச் சூழ்நிலையில் போக்குவரத்துத் துறையை மிகச் செம்மையாக நடத்திச் செல்ல, சிறப்புற நடத்திச் செல்ல அரசு ஒத்துழைப்புத் தருகிற வகையில் ஒரு கிலோ மீட்டருக்குக் குறைந்தது ஐந்து பைசா என்ற அளவுக்காவது உயர்த்தித் தந்தால் தான் இந்தப் போக்குவரத்துத் துறை நல்ல முறையில் செயல்பட முடியும் என்பதை இந்த நேரத்தில் அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொண்டு வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

<u>* திரு நா. வெ. குருசாமி :</u> தலைவர் அவர்களே, போக்குவரத்து மானியக் கோரிக்கையின் மீது என்னுடைய சில கருத்துக்களைக் கூற முற்படுகிறேன். அரசு இப்போது பல பேருந்து நிறுவனங்களை அரசுடைமையாக்கி இருக்கிறது. அப்படி அரசுடைமை ஆக்கினால் மட்டும் போதாது, மக்களுக்கு வசதி செய்து கொடுப்பதிலும் அரசு முற்பட்டால்தான் அரசுடைமையாக்கப்பட்டதன் குறிக்கோள் நல்ல முறையில் இருக்குமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக் கொள்ளுகிறேன்.

குறிப்பாக, பல போக்குவரத்துக் கழகங்கள் சரியாக இயங்குவது இல்லை. பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தை எடுத்துக்கொண்டால் முன்பு டி. வி. எஸ். நிறுவனம் நடத்தி வந்த வழித்தடங்களில் இன்று பேருந்துகளை விடுகிறார்கள். இன்றைக்கு பாண்டியன் போக்குவரத்துக் கழகம் அவர்கள் இஷ்டத்திற்குத் தகுந்தாற்போல் நேரத்தையே மாற்றிக் கொள்ளுகிறார்கள். அப்படி மாற்றி பிரைவேட் பஸ் உரிமையாளர்கள் சரியான நேரத்தில் போக விடாமல் நேரத்தை மாற்றிக் கொண்டிருக்கிறார்கள். இதனால் குறுகிய தூரங்களிலே செல்லக்கூடிய தனியார் பஸ்களை எல்லாம் நிறுத்திவிட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அப்படி நிறுத்தப்பட்டால் உடனடியாக அரசு அந்த இடங்களுக்கு பஸ்கள் விட முற்பட வேண்டும். அதுவும் இல்லாமல் இதுவும் இல்லாமல் மக்கள் கஷ்டப்படவேண்டிய சூழ்நிலைதான் இருக்கிறது.

இந்தப் போக்குவரத்துக் கழகங்கள் பல மாதிரியாக நடக்கின்றன. பல்லவன் போக்குவரத்துக் கழகத்தை எடுத்துக் கொண்டால் டிரைவர்கள், கண்டக்டர்களுக்கு கலெக்‌ஷன் பேட்டா கொடுக்கப்படுகிறது. அதன் காரணமாக அங்கு மக்களை விட்டு விடாமல் ஏற்றிக்கொண்டு போகிறார்கள். ஆனால் மற்றப் போக்குவரத்துக் கழகங்களில் குறிப்பாக எங்கள் மதுரை மாவட்டத்தில் பாண்டியன் போக்குவரத்து பஸ்களில் இப்போது இடைவெளியில் நின்று கொண்டிருக்கும் மக்களை பஸ்ஸை நிறுத்தி ஏற்றிக் கொண்டு போவதில்லை. அரசாங்க பஸ் என்ற நிலையில் அவர்கள் நிற்காமலே போய்விடுகிறார்கள். மக்கள் அதனால் மிகவும் கஷ்டப்படுகிறார்கள்.

(முற்பகல் 11-30)

ஆதலால் அவர்களுக்கும் கலெக்‌ஷன் பாட்டா என்ற முறையை ஏற்படுத்தி, இடம் இருக்கிற வரையில் ஏற்றிக்கொண்டு போகக் கூடிய முயற்சியையும் எடுக்கவேண்டும்.

இப்போது அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் சில விபத்துக்கள் ஏற்படுகின்றன. அப்படி விபத்துக்கள் ஏற்படும்போது வண்டிகள், மாடுகள், அல்லது மனிதர்கள் கூட விபத்துக்கு உள்ளாகும்போது எந்தவிதமான நன்மையும் செய்து தருவதாகத் தெரியவில்லை. சில நேரங்களில் மக்கள் பேசிக்கொள்கிறார்கள், அரசாங்கப் பஸ்கள் வந்த பிறகு அவைகளைப் பார்த்து யமன் தான் வருகிறது என்று கூடக் கூறிக்கொள்கிறார்கள். ஆகவே நான் கேட்டுக்கொள்ள விரும்புவது என்னவென்றால், பஸ்களால் மக்களுக்கு அல்லது உடமைகளுக்கு விபத்து ஏற்படும்போது உடனடியாக அதற்காக நஷ்டயீட்டைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பிறகு, விரைவுப் பேருந்துகளை எடுத்துக்கொண்டால் 11 மணிக்குப் புறப்பட வேண்டிய பஸ் 2 மணிக்குத்தான் புறப்படுகிறது. இந்த நிலை தவிர்க்கப்பட வேண்டும். இதுகுறித்து நாங்கள் சில நேரங்களில் புகார்கள்





கூறினால் அவற்றிற்கு எந்தவிதமான பதிலும் சரியான முறையில் கிடைப்பதில்லை. ஒரு பஸ் ஸ்டாண்டுக்குச் சென்று நான்கு மணி நேரம் நின்றுகொண்டிருக்க வேண்டிய ஒரு அவல நிலை இருக்கிறது. ஆகவே, இது குறித்து ஒரு சட்டமன்ற உறுப்பினர் அல்லது மற்றவர்கள் புகார்ப் புத்தகத்தில் எழுதினால் அல்லது அதுபற்றிப் புகார் சொல்லப்பட்டால் அதுகுறித்து நல்லமுறையில் ஒழுங்காக விரைவில் நடவடிக்கைகள் எடுத்தால்தான் அப்படிப்பட்ட கோளாறுகளைத் தீர்க்க முடியும்.

பின்னர், மதுரைக்கும் குமுளிக்கும் இடையே இரவு சர்வீஸ் பஸ்கள் விடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். திண்டுக்கல்-குமுளிக்கும் இரவு சர்வீஸ் பஸ்கள் விடப்பட வேண்டும். தேனி-இராஜபாளையத்திற்கு எக்ஸ்பிரஸ் பஸ் சர்வீஸ் விடவேண்டும். ஏற்கனவே குமுளியில் இருந்து கோவைக்குச் சென்று கொண்டிருந்த எக்ஸ்பிரஸ் சர்வீஸ் இப்போது நிறுத்தப்பட்டிருக்கிறது. ஆகவே மீண்டும் இது இயங்கச் செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சிலயிடங்களில் தனியார்கள் ஓட்டிக்கொண்டிருந்த பஸ்கள் நிறுத்தப்பட்டிருக்கின்றன. அங்கு அரசு பஸ்களை விடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டும்.

பின்னர், அரசுடைமையாக்கப்பட்ட பஸ்களில் குழந்தைகளுக்கு அரைக் கட்டணம் வசூலிப்பதில்லை, முழுக் கட்டணமும் வசூலிக்கப்படுகிறது. ஆகவே இதனால் ஏழை மக்கள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். எனவே முன்பிருந்ததுபோல் குழந்தைகளுக்கு அரசுடைமையாக்கப்பட்ட பஸ்களில் அரைக் கட்டணம் வசூல் செய்வதற்கு ஏற்பாடு செய்யவேண்டும்.

இப்போது டவுன் சர்வீஸ்களுக்கு அதிகபட்சமாக தூரம் 24 கிலோ மீட்டர் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அதனால் பல கிராமங்களை விட வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே இந்த 24 கிலோ மீட்டர் என்பதை 40 கிலோ மீட்டர் என்று வைத்து டவுன் பஸ் சர்வீஸ் போவதற்கான ஏற்பாட்டினைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. சி. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற இந்த மானியக் கோரிக்கையை நான் முழுமனதோடு ஆதரித்து ஒருசில கருத்துக்களைச் சொல்லக் கடமைப்பட்டுள்ளேன்.

எனக்கு முன்பு பேசிய நண்பர்கள் போக்குவரத்துத் துறை இன்று எந்த அளவிற்கு சங்கடமானதொரு சூழ்நிலையில் இயங்கிக் கொண்டு வருகிறது என்பதை எதிர்வரிசையில் இருப்பவர்கள் புள்ளிவிவரங்களோடு எடுத்துக் கூறினார்கள். நமது போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் அரசுடைமையாக்கப்பட்ட அல்லது போக்குவரத்துக் கழகங்

[திரு. சி. ஆறுமுகம்] [1974 மார்ச் 15

களினால் நடத்தப்படுகிற பஸ்கள் எல்லாம் எந்தளவிற்கு நல்ல முறையில், சாமர்த்தியமாக, ஜாக்கிரதையாக நடத்தப்பட்டு செல்கின்றன, தனியார் துறையில் இருப்பவர்கள் நடத்தமுடியாத அளவிற்கு எப்படி நன்கு நடத்தப்படுகின்றன என்பதை எடுத்துச் சொன்னார்கள். அதற்காக இந்தத் துறையைச் சார்ந்த அமைச்சர் அவர்களையும் இத்துறையில் பணியாற்றுகிற அதிகாரிகளையும் பாராட்டத்தான் வேண்டும்.

அப்படி பாராட்டு தெரிவிக்கும் நேரத்தில் நான் ஒன்றை அவையின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். பஸ்கள் அரசுடைமை யாக்கப்படுவதற்கு முன்னால் இந்த பஸ் தொழிலில் அதிகாரிகளுக்கு அவ்வளவு அக்கறை இருந்திருக்காது. ஆனால் இன்றையதினம் அரசாங்கம் ஐயாயிரம் பஸ்கள், தனியார் துறையினர் ஐயாயிரம் பஸ்கள் என்று வைத்து நடத்தும்போது இந்தப் போக்குவரத்துத் துறை நிர்வாகத்தில் எவ்வளவு சங்கடங்கள் உள்ளன என்பதை அதிகாரிகள் உணருவார்கள். எங்களுக்குள்ள சங்கடங்களில் ஒரு பகுதியை அவர்கள் பங்கிட்டுக்கொள்கிறார்கள்.

தேசியவுடைமையாக்குவதற்கு எதிராக நான் பேசுவதாக யாரும் கணக்குப் போட வேண்டாம். என்னைப் பொறுத்தவரையில் அதை நான் ஆதரித்துப் பேச கடமைப்பட்டுள்ளேன். காரணம் அந்தத் தொழில் ஒட்டுமொத்தமாக அரசின் கைக்கு வந்துவிட வேண்டும் என்பதினால்தான். அமைச்சர் அவர்கள் வாதத்தின்போது ஒரு வார்த்தை தையைக் குறிப்பிட்டார்கள். இது எப்படிப்பட்ட தங்கச் சுரங்கம் பார்த்தீர்களா என்று சொன்னார்கள். அதற்கு நான் உள்ளபடியே மறுப்பு சொல்லத் தயாராயில்லை. அந்தத் தங்கச் சுரங்கம் என்பது அன்றாடம் இரவு வந்து காலையில் வடிந்துவிடுகிற தங்கச் சுரங்கம் என்பதை நான் பணிவுடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன். வேறு எந்தத் தொழிலிலும் அன்றாடம் பணத்தைப் பார்க்க முடியாது, உண்மைதான். இந்த ஒரு தொழிலில் மட்டும்தான் மாலை நேரத்தில் பணம் வந்துவிடும். ஆனால் காலையில் ஒன்றும் இருக்காது. இதில் உள்ள ஒரு வசதி அன்றாடம் கடன் வாங்கலாம், வாங்கிய கடனைக் கொடுத்துவிடலாம் திரும்ப.

எதிர்வரிசையில் உள்ள நண்பர்களுக்கு நான் ஒன்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். மத்திய அரசு நடப்பாண்டில் போட்டிருக்கும் வரிகள் எந்த அளவிற்கு இந்த மோட்டார் தொழிலைப் பாதிக்கிறது என்பதைச் சற்று கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மோட்டார் வண்டியில் எவ்வளவு உறுப்புக்கள் இருக்கின்றனவோ அவை எல்லாவற்றிற்கும்—மத்தியில் உள்ள அமைச்சரவை அந்த ஷெட்யூலை எடுத்து வைத்துக்கொண்டு வரி போட்டார்களோ என்று சந்தேகப் படுகிறேன்—வரி போட்டிருக்கிறார்கள், ஒரு பொருளைக் கூட விட்டு விடாமல். அதன் விளைவு, ஒரு லிட்டர் ஆயில் ஐந்து ரூபாய் என்று இருந்தது, இன்று 11 ரூபாயாக உயர்ந்திருக்கிறது.



1974 மார்ச் 15] [திரு. சி. ஆறுமுகம்]

இந்த நிலையில் டீஸலாக இருந்தாலும் சரி, அல்லது ஆயிலாக இருந்தாலும் சரி, பஸ்களுக்குத் தேவைப்படும் எல்லா உபபொருள்களுக்கும் இன்று விலைகள் உயர்ந்திருக்கின்றன. நான் ஏற்கெனவே சொன்னதுபோல் தனியார் 50 சதவிகிதம், அரசு 50 சதவிகிதம் என்று பணிகளை வைத்திருப்பதால் இதிலே ஏற்படுகிற நஷ்டம் அரசுக்கும் 50 சதவீதம் உண்டு என்பதை மறந்து விடக்கூடாது. மத்திய அரசு, மாநில அரசு இரண்டு அரசுகளும் வைத்திருக்கிற வரிகளைப் பார்க்கும்போது தனியார்கள் பஸ் தொழிலை நடத்துவதா நடத்தக்கூடாதா என்று நினைக்கக்கூடிய கட்டத்தில் இருக்கிறார்கள். போக்குவரத்துக் கழகங்களுக்கு நஷ்டம் வரும் என்று நினைத்தால் அல்லது நஷ்டம் வந்தால் கழகங்களுக்கு அரசு நிதி கொடுத்து உதவலாம்.

ஆனால், தனிப்பட்ட பஸ்காரர்களுக்கு மார்வாடி பணம் கடனாகக் கொடுக்கிறான். எப்படிக் கொடுக்கிறான் என்றால் அது அதிகாரிகளுக்கும் தெரியும். கண்ணை மூடிக்கொண்டு ஸ்டாம்ப் ஒட்டிய இடங்களில் 42 கையெழுத்துக்கள் போடவேண்டும். அதில் ஒன்றும் எழுதியிருக்க மாட்டான். பஸ் சொந்தக்காரர்கள் ஒழுங்காக, நாணயமாக நடத்து கொண்டால் போட்ட கையெழுத்துக்களுக்கு மரியாதை உண்டு.

சில அயோக்கியர்கள் பஸ் சொந்தக்காரர்களாக இருப்பார்கள், பஸ் முதலாளிகளாக இருப்பார்கள், அவர்கள் தவறு செய்யவேண்டுமென்று விரும்புவார்களேயானால் அவர்கள் வாழ்நாள் முழுவதும் வருத்தப்பட நேரிடும். காரணம், ஒன்றும் எழுதாமல் கையெழுத்துப் போட்டு பணம் வாங்கியிருப்பதால்.

இன்று சேஸிஸின் விலை என்ன? உபபொருள்களின் விலை என்ன? இன்று டயர் வேண்டுமென்றால், டீஸல் வேண்டுமென்றால் வேண்டிய அளவு கிடைக்கிறதா? அவற்றை உற்பத்தி செய்வது என்றால் மத்திய அரசின் லைசென்ஸ் பெற்றுத்தான் ஆரம்பிக்கவேண்டும். மாநில அரசுக்கு அதற்கான அதிகாரம் இருக்கிறதா என்று பார்த்தால் இல்லை. அதற்குத்தான் மாநில சுயாட்சி கேட்கிறோம்.

இந்தத் தொழிலைக் கணக்கிட்டுப் பார்த்தால் மாநில சுயாட்சி அவசியம் தேவைதானா? தேவைதான் என்ற கருத்து ஏற்படும். காரணம், எல்லாப் பொருள்களையும் மாநில அரசு செய்வதற்கு அதிகாரம் இல்லை. மத்திய அரசுக்குத்தான் இருக்கிறது. இப்படி மத்திய அரசு எல்லாவற்றையும் வைத்துக்கொண்டிருக்கிற போது, நாமே அதை ஆக்கம் செய்கிற தொழிலாளர்களை ஆதரிக்கவேண்டும் என்ற கட்டத்தில் இருந்து கொண்டிருக்கிறோம். இது எந்த வகையில் நியாயம் என்பதை கட்சிக் கண்ணோட்டம் இல்லாமல் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நாளைக்கு யார் சபையில் உட்கார்ந்து ஆட்சி செய்தாலும் இதைத் தகுந்த முறையில் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த நிலையில் அவர்களும் வரி போடுகிறார்கள். நாமும் வரி போடுகிறோம். ஆனால், இந்தத் தொழில்களை நடத்துபவர்கள் வாங்கவேண்டிய சாமான்களின் விலையைக் கட்டுப்படுத்த நமக்கு அதிகாரம் இல்லை.

இன்றைக்கு டயர் விலை (கன்ட்ரோல் விலை) ரூ. 1,000 என்றால் வெளி மார்க்கெட்டில் ரூ. 2,000 என்று விற்கிறது. இவற்றைக் கட்டுப் படுத்தும் அதிகாரம் இந்திரா காந்தி அவர்களிடத்தில் இருக்கிறது, கலைஞர் அவர்களிடத்தில் இல்லை. போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் எவ்வளவு சாமர்த்தியமாக இதை நடத்துகிறார்கள் என்பதை நானும் பஸ் அதிபர் என்பதால், நன்றாகப் புரிந்து கொள்ள முடிகிறது.

நம்முடைய மாநிலத்தில் இருக்கும் பஸ் பொருள்கள் தயாரிக்கும் கம்பெனிகள் அத்தனையையும் நாம் தேசவுடைமையாக்க வேண்டும். அசோக் லேலண்டு, டி.வி.எஸ்., சிம்சன் - செம்பியம், அம்பத்தூரில் இருக்கும் தனியார் தொழிற்சாலைகள், பிரேக் லைனிங், செல்ப-மோட்டார் டைனமோ, ரப்பர் பொருள்கள், இன்டியா பிஸ்டன் ஆகிய அத்தனை கம்பெனிகளையும் நாம் தேசியமயமாக்க வேண்டும். நாம் இப்போது இவர்கள் தயாரிக்கும் பொருள்களையெல்லாம் கிட்டத்தட்ட 1,000 பஸ் களுக்கு வெளிமார்க்கெட்டிலிருந்துதான் வாங்குகிறோம். நாங்கள் ஏதோ 2—3 பஸ் வைத்து இருக்கிறோம். எங்களைவிட நீங்கள் கூடுதலாக வாங்குவீர்கள். நாங்கள் பழைய பார்ட்ஸ் போட்டு கூட வண்டி ஓட்டுவோம். ஆனால், அரசுப் போக்குவரத்தில் பழைய பார்ட்ஸ் எடுத்து விட்டால் போடுவது இல்லை. புதிய பார்ட்ஸ்தான் போடவேண்டும். இப்படி இருந்தும் 2 கோடி லாபம் காட்டியிருக்கிறீர்கள். அப்படியிருந்தபோதிலும், பொதுமக்களுக்கு நன்மை செய்யவேண்டுமென்பதற்காக பஸ் விட்டதால் 1 கோடி நஷ்டம் ஏற்பட்டு 1 கோடி தான் லாபம் கிட்டியிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தத் துறையைப் பற்றிக் குறிப்பிடும்போது ஒரு தங்கச் சுரங்கம் என்று சொன்னார்கள். அந்தத் தங்கச் சுரங்கம் வடியாமல் இருப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அமைச்சர் அவர்கள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது.) தலைவரவர்களே, எனக்கு ஒரு 5 நிமிடம் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரை முருகன்) : எல்லோருக்கும் 10 நிமிடம் தான். அதிலே யாருக்கும் மாறுதல் கிடையாது. எதிர்க் கட்சிகளுக்கும் 10 நிமிடம் தான் என்று குறிப்பிட்டுக் கொடுக்கப் பட்டிருக்கிறது. இன்னும் இரண்டு நிமிடத்தில் முடித்துவிடுங்கள்.

திரு. சி. ஆறுமுகம் : இந்தத் தொழிலை நிரந்தரமாக நடத்த வேண்டுமென்பதற்காகத்தான் இந்தச் சர்க்கார் திட்டம் போட்டு இருக்கிறது. இது ஒரு நிரந்தரமாக நடத்தப்படும் தொழில் என்பதால் அதற்குத் தக்க நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சேல்ஸ் டாக்ஸைப் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். வியாபாரிகள் எங்களிடமிருந்து வரிகளை வசூலித்து விட்டு, ஒரு 1 மாதம் 2 மாதம் கழித்து, அதுவரை அந்தப் பணத்தை கையாடல் செய்துவிட்டு அரசுக்குக் கட்டுகிறார்கள்.



ஆனால், பஸ் சொந்தக்காரர்களைப் பொறுத்தவரையில் 90 நாளைக்கு, உண்டான கட்டணத்தை முன்பணமாக அரசுக்குக் கட்டவேண்டும். வியாபாரிகள் கை புரட்டிக்கொண்டு அப்புறம் கட்டுகிறபோது, அதுவும் அவர்கள் கணக்கையெல்லாம் சரி செய்துவிட்டு, கை புரட்டலுக்குத் தகுந்த மாதிரி கணக்கை செய்து விட்டு, பிறகு அப்பீல் என்று போட்டு, அதற்குப் பின் பல மாதங்கள் கழித்துத்தான் பணம் கட்டுகிறார்கள்.

ஆகவே, பஸ் தொழிலைப் பொறுத்தவரையிலும் இந்த முறை மாற்றப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

போட்ட கட்டணத்தில் பெரும் பகுதியை இன்றைக்கு மாநில அரசும், மத்திய அரசும் எடுத்துக்கொண்டு விடுகின்றன. இந்தத் தொழிலில் இருந்த பெரிய பஸ் அதிபர்கள் எல்லாம் போய்விட்டார்கள். இன்று இருப்பவர்கள் 2—3 பஸ் வைத்திருப்பவர்கள்தான். இவர்களெல்லாம் டிரைவர்களாக, கண்டக்டர்களாக, கிளீனர்களாக இருந்து முன்னுக்கு வந்தவர்கள். பலர் எழுத்தறிவு இல்லாத நிலையில், படிக்காத நிலையில் கூட இருக்கிறார்கள். நல்ல பெரிய முதலாளிகள் வேறு திசையில் தங்கள் கவனத்தைத் திருப்பிக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில், இந்த சிறு அதிபர்கள் இந்தத் தொழிலை நடத்துகிற கொஞ்ச காலத்திற்காகவாவது பிழைத்து இருக்க வேண்டிய நிலையில் அரசு அவர்களைக் காப்பாற்றவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த மாமன்றத்தின் மூலம் இன்னொன்றையும் கேட்டுக்கொள்கிறேன். மாவட்ட வாரியாக அச்சு அலுவலகம் வைக்கவேண்டுமென்று கேட்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரை முருகன்) : திரு. கே. பி. கந்தசாமி அவையில் இல்லை. திரு. போடி சுருளிவேல்.

திரு. மு. சுருளிவேல் : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவரவர்களே, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரவர்கள் கோரியிருக்கக்கூடிய இந்த மானியத்தின் மீது பேசுவதற்கு நான் பெருமையடைகிறேன்.

சோசலிச சமுதாயம் அமைக்கப் பாடுபடுகிற திராவிட முன்னேற்றக் கழகத்தின் எழுச்சிமிக்க, உணர்ச்சிமிக்க முறையிலே சோசலிசக் கொள்கையிலே மட்டுமல்லாமல், அதை நடைமுறைப்படுத்துவதிலும் எடுத்துக்காட்டாக விளங்குகிற மாண்புமிகு அமைச்சர் அவர்களின் மானியத்தின்மீது பேசுவதற்கு சோசலிச சமுதாயத்தை அமைக்கப் பாடுபடுகிற திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டன் என்ற முறையில் நான் பெருமைப்படுகிறேன்.

இந்த மானியத்தைப் பிரேரேபித்துப் பேசிய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 1971-க்குப் பிறகு பல்லவன் போக்குவரத்துக் கழகத்தில் ஏற்பட்டு இருக்கும் மாற்றங்களையும், தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களை

தலைநகரமாகக் கொண்டு அமைக்கப்பட்டிருக்கும் போக்குவரத்துக் கழகங்கள் பற்றியும், பொதுமக்களுக்கு நன்மை செய்கிற காலத்தில் ஏற்படுகிற இன்னல்களைச் சமாளித்து எந்த அளவுக்கு லாபம் பெற்று இருக்கிறது என்று தெளிவாகச் சுட்டிக்காட்டினார்கள்.

என்னைப் பொறுத்தவரையில் இன்றைய தினம் தமிழ்நாடு தொழில் துறையைப் பெருக்கி, வேலை வாய்ப்பை அதிகப்படுத்தி தமிழகத்தை ஒரு தொழிலகமாக ஆக்குவதற்காக பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் என்று ஒன்று ஆரம்பிக்கப்பட்டிருப்பதற்காக நான் பாராட்டாமல் இருந்தால், இதைப்பற்றி நான் குறிப்பிடாமல் இருந்தால் நான் தமிழ்க் குடிமகன் என்ற முறையில் நன்றி மறந்தவன் ஆவேன். ஆனால் இதைக் கூறுகிற நேரத்தில் தமிழகத்தின் அரசு பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்தை அமைக்கிற நேரத்தில் மாண்புமிகு அம்மையார் திருமதி அனந்தநாயகி அவர்கள் இந்த முயற்சி ஏதோ அவர்கள் கட்சி ஆட்சி புரிகிற மத்திய சர்க்காருக்குச் சவால் விடுவதாகத் தோன்றுகிறது என்று கூறியது தமிழ் நாட்டின் துர்பாக்கியமேயாகும்.

அவர்கள் அறிவார்களோ, அறியமாட்டார்களோ நான் அறியேன். அவர்கள் ஏதோ இந்தக் கப்பல் போக்குவரத்து முழுவதும் இந்திரா காந்தி அம்மையார் கையில் வைத்து இருப்பதாகக் கருதியிருந்தால் நான் பணிவோடு அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்வேன், அது தவறான ஒரு கருத்து. அதை உங்கள் உள்ளத்திலிருந்து எடுத்து விடுங்கள். திருமதி இந்திராகாந்தி அம்மையார் தலைமை வகித்திருக்கும் காங்கிரஸ் கட்சிக்குத் தேர்தல் நிதி கொடுப்பதன்மூலம் தங்களுடைய பொருளாதாரத்தைக் காப்பாற்றி வருகிற இந்த நாட்டின் பிர்லாக்களும், மற்றவர்களும்தான் தங்கள் கையில் இந்தக் கப்பல் போக்குவரத்துத் துறையை வைத்திருக்கிறார்களே ஒழிய, மாறுதல் பிராண்ட் சோஷலிசத்தைக் கடைப்பிடிக்கும் இந்திரா காந்தியின் கரத்தில் இல்லை என்பதை அந்த கட்சியின் உறுப்பினர் என்ற முறையில் திருமதி அனந்தநாயகி அவர்கள் தெரிந்து கொள்ள வேண்டுமென்று பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அந்த நேரத்தில் தமிழகத்திலுள்ள மக்களின் மானத்தைக் காப்பாற்றுவதற்குச் சவால் விடுவதற்காக அல்ல, தமிழர்களின் உரிமையைக் காப்பாற்றுவதற்காக, தமிழ் சமுதாயம் முன்னேற்றம் அடைவதற்காக அமைக்கும் பணியில் இந்திரா காந்தி அவர்களை மட்டும் அல்ல, மத்திய அரசுக்கு எதிராகக் களத்தில் குதிக்கும் சூழ்நிலை வந்தால் களத்தில் குதித்து அந்த மத்திய சர்க்காரை எதிர்த்து, இந்த நாட்டின் கண்ணியத்தை, மானத்தைக் காப்பாற்றவும், அதனால் ஏற்படும் விளைவுகள் எதுவானாலும் பயங்கரமாக இருந்தாலும் துணிந்து திராவிட முன்னேற்றக் கழகம் மத்திய சர்க்காரை எதிர்த்து இந்த நாட்டின் உரிமையைக் காப்பாற்றுவதற்காகக் களத்தில் குதிப்பதற்குத் தயாராக இருக்கிறது. இது வெறும் சவால் மட்டும் அல்ல. உண்மையிலேயே களத்தில் சந்திக்கும் ஆற்றல் படைத்த இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம் என்பதை தயவு செய்து அம்மையார் அவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும். இப்படியெல்லாம் மிரட்டினால் தமிழக அரசு முயற்சிகளை கைவிட்டுவிடும்....



திருமதி த. ந. அனந்தநாயகி: பாயிண்ட் ஆப் ஆர்டர் சார். இவர்கள் என்ன மறைமுகமாக பிரிவினை கோஷத்தை எழுப்புகிறார்களா? தமிழரின் மானத்தை காப்பாற்ற ஒரு இயக்கம் இருக்கிறது என்று சொன்னால் தேசிய ஒற்றுமையைக் காப்பாற்றுவதற்கும் ஒரு படை இருக்கிறது என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரைமுருகன்): இது ஒன்றும் பாயிண்ட் ஆஃப் ஆர்டர் இல்லை.

திரு. மு. சுருளிவேல்: நாங்கள் இந்தியாவின் ஒற்றுமையைக் காப்பாற்ற விரும்புகிறோம் அதைத் திருமதி அனந்தநாயகி அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும், நாங்கள் டாட்டா, பிர்லா அங்கம் வகிக்கும் அந்த இந்தியாவைக் காப்பாற்றத் தயாராக இல்லை. பெரும் முதலாளிகள், பணக்காரர்கள், நிலச் சொந்தக்காரர்கள், வேறு அக்கிரமக்காரர்கள் குடிகொண்டுள்ள இந்தியாவைக் காப்பாற்ற திராவிட முன்னேற்றக் கழகம் தயாராக இல்லை. நாளெல்லாம் உழைத்துவிட்டு, மாடாக வாழ்கிற கோடிக்கணக்கான தொழிலாளர்கள் வாழும் இந்தியாவை முழுக்க முழுக்கக் காப்பாற்ற தயாராக இருக்கிறது என்பதையும் அதிலே அவசியமில்லாமல் இரண்டுவிதக் கருத்திற்கு இடமில்லாமல் அம்மையார் அவர்கள் தெரிந்துகொள்ள வேண்டும். எங்களை பிரிவினைவாதி என்று கூறுவதால் உங்களுக்கு இந்திரா காந்தியின் தயவு கிடைக்கும் என்றால் அதைப் பற்றிக் கவலையில்லை.

நீங்கள் வெற்றிபெற்ற கட்சி ஒன்று, இப்பொழுது இருக்கிற கட்சி ஒன்று. நீங்கள் நல்ல பெயர் வாங்க வேண்டுமென்றால் திருமதி இந்திரா காந்தி அவர்களிடமிருந்து சர்ட்டிபிக்கேட் வாங்க வேண்டும். எங்களுடைய கோஷத்தை பிரிவினை கோஷம் என்றோ, அல்லது திராவிட நாடு கோஷம் என்றோ கூறினால் அதைப்பற்றி நாங்கள் கவலைப்படவில்லை. நாங்கள் எங்களுடைய அரசியல் கொள்கையைத் தெளிவாக வைத்துக்கொண்டிருக்கிறோம்.

கப்பல் போக்குவரத்துக் கழகம் அமைப்பதன்மூலம் திருமதி இந்திரா காந்தியினுடைய தவறான சோஷலிச முகமூடியைக் கிழித்திருக்கிறது தமிழக அரசு கப்பல் போக்குவரத்துக் கழகம் ஏற்படுவதனால் நம்முடைய நாட்டில் மின் பற்றாக்குறை இருக்கிறது, அதைத் தீர்ப்பதற்கு நிலக்கரி தேவைப்படுகிறது. அதைக் கப்பல் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் துரிதமாகக் கொண்டுவருவதினால் மின் உற்பத்தியைப் பெருக்கிக் கொள்ளலாம். அதனால் பல தொழிலாளர்கள் பயனடைவார்கள். தமிழ் நாட்டினுடைய தொழில் வளத்தைப் பெருக்கிக்கொள்ளலாம். தொழில் வளத்தைப் பெருக்குவது மட்டுமல்ல, வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்கலாம். இப்படி ஒரு பெரிய செயலாக வரக்கூடிய, ஒரு சைக்கிளாக வரக்கூடிய பல்வேறு நன்மைகளை அடையமுடியும். ஆகவே, பூம்புகார்

[திரு. மு. சுருளிவேல்] [1974 மார்ச் 15

கப்பல் போக்குவரத்துக் கழகம் ஏற்படுத்த இருப்பது ஒரு நல்ல முயற்சி. சோஷலிஸ சமுதாய அமைப்பில் எதிர்காலத் தமிழகத்தில் ஒரு நல்ல சமுதாயத்தை ஏற்படுத்த முடியும். வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்க, வறுமையை வென்று, சுபிட்சமாக வாழக்கூடிய சமுதாயத்தை அமைக்கும் ஒரு பணிக்கு பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் மிகவும் உதவிப் படியாக இருக்கும் என்று மிகவும் தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதே நேரத்தில் நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலும் அமைச்சர் அவர்களிடத்திலும் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். தென் இந்திய மாலுமிகள் சங்கம் ஏறத்தாழ 15,000 உறுப்பினர்களைக் கொண்டது. அந்த சங்கத்திற்கு லட்சிய நடிகர் எஸ். எஸ். ராஜேந்திரன் தலைவர். நான் அதனுடைய துணைத் தலைவராக இருந்து வருகிறேன். அதற்கு முன்பு நாடாளுமன்ற உறுப்பினர் திரு நாஞ்சில் மனோகரன் தலைவராக இருந்தார். பம்பாய் கல்கத்தாவில் கப்பல் மாலுமிகளாக வேலைக்கு சேர்த்துக்கொள்ளும் ரெக்ரூட்மெண்ட் ஆபீஸ் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். நாங்கள் எத்தனையோ காலமாக திருமதி இந்திராகாந்தி அம்மையார் சர்க்காரிடம் 8 ஆண்டு காலமாக வாதாடியும் போராடியும் அவர்கள் அந்த ரெக்ரூட்மெண்ட் ஆபீசை சென்னையில் வைப்பதற்குத் தயாராக இல்லை. அந்த அளவுக்கு அவர்கள் வடநாட்டு மனப்பான்மையை மனதில் வைத்திருக்கிறார்கள். திராவிட இனத்தை, திராவிட நாட்டை எப்படி குலைக்கிறார்கள் என்பதற்கு இது ஒரு அருமையான, கையிலே இருக்கக்கூடிய உதாரணம் ஆகும்.

எட்டு ஆண்டுக்காலமாக போராடி வருகிறோம். பம்பாய் இந்திராக் காங்கிரஸ் மையமாகிய லியோ பான்சேலாவை தலைவராக வைத்துக்கொண்டு கல்கத்தாவிலும் பம்பாயிலும் ஆபீஸ் வைத்துக்கொண்டு ரெக்ரூட்மெண்டு நடத்துகிறார்களே தவிர இங்கே ஒரு ஆபீஸ் வைக்க முன்வரவில்லை. இதுவரையில் தமிழ் தொழிலாளியோ மலையாளத் தொழிலாளியோ, தெலுங்குத் தொழிலாளியோ அல்லது கன்னடத் தொழிலாளியோ அங்கே வேலைக்குச் சேர வேண்டுமென்றால் தன்னுடைய குடும்பத்தினுடைய பணத்தை எடுத்துக்கொண்டு, பம்பாய், கல்கத்தாவில் நாள் கணக்கில் காத்திருக்க வேண்டியிருக்கிறது. வடநாட்டு அதிகாரிகளிடம் கெஞ்சிக் கூத்தாடி வேலை பெற வேண்டிய நிலை இருக்கிறது. அந்த நிலையைப் போக்குகின்ற வகையிலே இப்பொழுது தமிழகத்தில் நாம் அமைத்திருக்கக்கூடிய கப்பல் போக்குவரத்துக் கழகத்தில்—நான் ஏற்கெனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலும் மாண்புமிகு போக்குவரத்து அமைச்சர் அவர்களிடத்திலும் அந்த சங்கத்தின் துணைத்தலைவர் என்ற முறையில் ஒரு பட்டியலை அளித்திருக்கிறேன். திறமையுள்ள மாலுமிகளை எங்களுடைய சங்கத்தைச் சேர்ந்தவர்களை இந்தக் கழகம் தன்னுடைய பணியினைத் துவங்குகின்ற நேரத்தில் எங்களுடைய சங்கத்தின் உறுப்பினர்களை நீங்கள் சேர்த்துக்கொள்ள வேண்டும். சென்னையில் இருக்கக்கூடிய ஏறத்தாழ



1974 மார்ச் 15] [திரு. மு. சுருளிவேல்]

1,000 மாலுமி தொழிலாளிகளுக்கு இந்திராகாந்தி அரசினால் இருளில் வாழ்ந்துகொண்டிருக்கக்கூடிய இருள் படிந்திருக்கிற அந்த மக்களுக்கு ஒரு விளக்கை ஏற்றி வைக்கவேண்டுமென்று விடைபெறுகிறேன்.

திரு கே. கந்தசாமி : தலைவர் அவர்களே, தமிழகப் போக்குவரத்துத் துறையின் சார்பாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள 1974-75-ஆம் வருட நிதிநிலை அறிக்கையை வரவேற்று பார்வேடு பிளாக் கட்சியின் சார்பாக என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல முயற்சிக்கிறேன்.

தமிழகத்தில், இந்தியாவில் தலைசிறந்த தலைவராக முதல்வராக இருந்து கொண்டு தமிழக அரசு பல சோஷலிச திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருவது குறித்து நான் மனமார வாழ்த்துகிறேன். எதிர் கட்சியில் இருப்பவர்களும் இதை உணர்கிறார்கள் என்றாலும் கூட திட்டங்கள் உயர்ந்த நோக்கத்தைக் கொண்ட திட்டங்கள், மிக நன்மை பயக்கக் கூடிய திட்டங்கள் என்று அத்தனைபேரும் ஒத்துக்கொண்டாலும் கூட நடைமுறையில் பார்க்கிறபொழுது சில பேதங்கள் காணப்படுகின்ற காரணத்தினால் அந்தத் திட்டத்தையே குறைகூறி வருகிறார்கள் என்பதையும் நாம் உணரக் கடமைப் பட்டிருக்கிறோம்.

போக்குவரத்துக் கழகத்தைப் பொறுத்த அளவுக்கு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு மிகத் துணிச்சலோடு, நிதி பற்றாக்குறை போன்ற பல்வேறு சிக்கல்கள் இருந்தாலும் கூட நமது மாநில அரசு மாண்புமிகு போக்குவரத்து அமைச்சர் அயரா உழைக்கும் விதத்தில் கழக அரசு நல்ல பல திட்டங்களை நிறைவேற்றுவதற்காக தனியார்த்துறை போக்குவரத்தை எல்லாம் அரசுடைமையாக்கி அவை சரிவர செயல் படுவதற்காக பல கழகங்களை ஏற்படுத்தி அந்தக் கழகங்களில் வேலை செய்கின்ற தொழிலாளிக்கு அவர்கள் தங்களுடைய உழைப்பு நல்குவது மாத்திரமல்லாமல் அதன் வாயிலாக வரும் ஊதியத்தை அவர்களையும் பங்குதாரர்களாக ஆக்கவேண்டும் என்ற அடிப்படை சோஷலிச திட்டத்தை நடைமுறைக்கு கொண்டு வந்ததை நான் பாராட்டுகிறேன். உழைப்பவனுக்கே ஊதியம் வேண்டும் என்ற நிலையிலே உருவாக்கப்பட்ட இந்தத் திட்டம் செயல்படுகின்ற முறையில் நாம் இதை நடைமுறையில் கொண்டுவருவதில் இருக்கிற சில சிக்கல்களை உணர்ந்து அவற்றை நிவர்த்தி செய்ய கடமைப்பட்டிருக்கிறோம். Independence without economic independence is worse than slavery என்று சொல்கிறார்களே, அதைப் போல போக்குவரத்து நிறுவனங்களை நாம் எடுத்தோமே ஒழிய பஸ்களைச் சரியாக பழுது பார்க்கக்கூடிய வகையில் ஒர்க்ஷாப் நிறுவனங்களை நாம் மேற்கொள்ளவில்லை. அவைகளை நாம் மேற்கொண்டிருந்தால் மிகச் சிறந்த முறையில் பஸ்களை எல்லாம் நாம் ஓட விட்டுக்கொண்டிருக்கலாம்.

பஸ்கள் எப்பொழுது பழுதடையும் என்பதை யாரும் ஊகிக்க முடியாது. அவ்வப்பொழுது பழுதடையும்பொழுது அந்தக் குறைகளை உடனுக்குடன் நிவர்த்தி செய்யத்தக்கத் தொழில் நுட்ப அறிஞர்களையும் பொறியாளர்

களையும் வைத்து அதை ஓடச்செய்வதில் சிக்கல் ஏற்படுகிறது. ஆனால், ஒர்க்ஷாப் இருந்தால், ஸ்பேர் பார்ட்ஸ் தேவைப்படுகின்ற பொருள்களை அங்கேயே உற்பத்தி செய்ய முடியும். உடனுக்குடன் பஸ்களை பழுது பார்த்து பழுதடைந்த பாகத்தை நீக்கி அல்லது சரி செய்து பஸ்களை சரியான நிலையில் வைத்துக்கொள்ளலாம்.

மதுரையில் பாண்டியன் ரோட்வேஸ் கார்ப்பரேஷன் டி. வி. எஸ். ஸ்தாபனத்திடமிருந்து பஸ்களை எடுத்த பொழுது அவர்களுடைய ஒர்க் ஷாப்பை நாம் எடுத்திருந்தோமானால் மிக நல்ல முறையில் பணியாற்ற முடியும். மதுரைவாசி என்ற முறையில் அங்கே நடைமுறையில் இருப்பதை நான் உணருகிறேன். டி. வி. எஸ். ஸ்தாபனம் பஸ் போக்குவரத்தை நடத்தும் பொழுது பஸ்—நீட்நெஸ் என்று ஆங்கிலத்தில் சொல்லுவார்கள் பஸ்கள் சுத்தமாக இருக்கும். இந்த பஸ்ஸில் பிராயாணம் செய்யக் கூடிய பிரயாணிகளோ அல்லது பொதுமக்களோ குறை கூறுவதற்கு பஸ் டிரைவரோ, கண்டக்டரோ அனுமதித்தது கிடையாது. ஏதாவது ஒரு சிறு தவறு இருக்குமேயானால் அதைச் சரிப்படுத்துவதற்கு மேல் அதிகாரி இந்த இடத்திற்கே வந்து விசாரணை செய்து தவறைக் களைய தக்க நடவடிக்கை எடுப்பார். ஆனால் இன்று அரசியல் காரணங்களுக்காக பல தொழிலாளர்களின் சங்கங்களை ஊக்குவிப்பதன் காரணமாக தொழிலாளர்களுக்கு உழைப்பிற்குத் தகுந்த ஊதியம் வேண்டும். அவர்களுடைய உரிமைகளைப் போராடி பெறுவதற்கு சங்கங்கள் தேவை என்ற நிலை கான்ஸ்டிட்யூஷன் ரீதியாக இருந்தாலும் நடைமுறையில் அவர்களுடைய மனோபக்குவ நிலை சரியான முறையில் இல்லை. சிறு குழந்தைகளுக்கு அதிக உரிமைகளை வழங்குவது போன்ற நிலைமை ஏற்படுகிறது.

எல்லாத் துறைகளிலும் "இன்டிஃபரன்ஸ் டுவேர்ட்ஸ் வொர்க்" என்ற நிலையும், "டிஸ்ரெஸ்பெக்ட் டு தி பப்ளிக்" என்ற நிலையும் இருப்பதைப் பார்க்கிறோம். இந்த நிலை போக்குவரத்துத் துறை பணியாளர்களிடத்தில் மாத்திரம் இடம் பெற்றிருக்கிறது என்று குறிப்பிடவில்லை. எல்லாத் துறைகளிலும் நாம் காண்கிறோம் என்பதை மிகவும் வேதனையோடு சொல்லிக் கொள்ளுகிறேன். போக்குவரத்துத் தொழிலாளிகள் பல தரப்பட்ட குணநிசயங்களைக் கொண்ட மக்களைச் சந்திக்க வேண்டியிருக்கிறது. அவர்களுடன் பழக வேண்டிய நிர்ப்பந்தமான நிலையில் அவர்கள் இருக்கிற காரணத்தினால், அங்குள்ளவர்களை சைகலாஜிகலாக நல்ல முறையில் நடந்து கொள்ளுகிறவர்களாக வைத்திருந்தார்கள், டி.வி.எஸ். ஸ்தாபனத்தினர். ஒரு நாள் மதுரையில் ஸ்டேட் பஸ்ஸில் ஏறிக்கொண்டிருந்த 9 வயதுக் கர்ப்பிணி புட்போர்டில் கைக்குழந்தையோடு திடீரென்று ஏறியபொழுது தவறிக் கீழே விழுகின்ற நிலைமையில் விசில் கொடுத்தபொழுது அதைத் தடுத்து நிறுத்தி அந்த அம்மையாரை உள்ளே போகச் செய்தார்கள், பக்கத்தில் இருந்தவர். அப்படிப்பட்ட சம்பவங்கள் சர்வ சாதாரணமாக நடந்து கொண்டிருக்கின்றன.





திரு. நா. வெ. குருசாமி : ஆன் எ பாயிண்டு ஆப் ஆர்டர், கர்ப்பிணி என்று சொன்னார்கள். 9 மாத கர்ப்பிணி என்று நினைக்கிறேன். 9 வயது கர்ப்பிணியா, 9 மாத கர்ப்பிணியா என்பதை தெளிவு படுத்த வேண்டும்.

திரு. கே. கந்தசாமி : 9 மாத கர்ப்பிணிதான். அவர்கள் வேண்டுமென்றே செய்கின்ற அந்த அளவுக்கு அரசியல் நோக்கத்தோடு செயல்படுகின்ற சங்கங்கள் இருக்கிற காரணத்தினால் அவர்கள்மீது தக்க நடவடிக்கை எடுக்க முயன்றால், சங்கத் தலைவர்கள் அதிகாரிகளைச் சந்தித்து, அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கக்கூடிய நிலை இருக்கிறது.

(நண்பகல் 12-00)

அதேபோல வெளி ஊர் போகிற பஸ்களில் இடம் இருக்கிறது. ஆயினும் பஸ் டிரைவரும் சரி, கண்டக்டரும் சரி ஆங்காங்குள்ள பயணிகளுக்கு நிறுத்தாமல் போய்விடுகிறார்கள். டி.வி.எஸ். ஆக இருந்தபோது பஸ் நம்பரை குறித்து புகார் செய்தால் உடனடியாக நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். நான் தற்போது மானேஜிங் டைரக்டரிடமே நேரில் புகார் எழுதிக் கொடுத்தேன். என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பது இது வரை தெரிவிக்கப்படவில்லை.

மிகச் சிறந்த சோஷலிச திட்டத்தைத்தான் நாம் நிறைவேற்றுகிறோம் என்றாலும், இதிலுள்ள ஒரு சில குறைபாடுகள் அகற்றப்பட்டால்தான், மக்களுக்கு இது மிகவும் பயனுடையதாக இருக்கும் என்கிற காரணத்தினால் நான் இவற்றைக் குறிப்பிடுகிறேன். மாண்புமிகு குருசாமி போன்றவர்கள் —எதிர்க்கட்சிக்காரர்கள் வேண்டுமென்றே குறை சொல்வதைப்போல நான் சொல்லவில்லை. டாக்டர் கலைஞர் அவர்கள் கொண்டுவந்துள்ள இந்த நல்ல திட்டத்தை ஆதரிப்பதோடு கூட இது இன்னும் நல்லமுறையில் செயல்பட என்ன என்ன செய்ய வேண்டும் என்பதற்கு யோசனை சொல்லுகிற வகையில்தான் நான் சிலபல குறைபாடுகளை எடுத்துக் காட்டினேன்.

திரு நா. வெ. குருசாமி : பாயின்ட் ஆப் ஆர்டர், பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பேசும்போது என் பெயரைக் குறிப்பிட்டு நாங்கள் வேண்டுமென்றே குறைசொல்வதைப் போலச் சொன்னார்கள். ஆனால் ஆதரிப்பதாகச் சொன்ன உறுப்பினர் முழுக்க முழுக்க குறைகளையேதான் சொல்லியிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

திரு கே. கந்தசாமி : நாங்கள் ஆதரிக்கிறோம் என்பதற்காக சும்மா இரண்டு கைகளைத் தூக்குவதும் இல்லை. பாராட்ட வேண்டியவைகளையும் கூட எதிர்க்கட்சியினர்களைப் போல பாராட்டாமல் இருப்பதில்லை. நாங்கள் ஆளும் கட்சியை ஆதரிக்கக் கடமைப்பட்டிருக்கிற காரணத்தினால் உயர் மட்டத்தில் இருக்கிற அமைச்சர்கள் செய்கிற நல்ல காரியங்களை எல்லாம் பாராட்டுவதோடு நில்லாமல், கீழ்மட்டத்தில் ஏற்படுகிற குறைபாடுகளைச் சுட்டிக்காட்டுகிறபோதுதான், ஜனநாயகக் கடமைகளைப் பூரணமாக ஆற்றியவர்களாகிறோம். குறைசொல்ல வேண்டுமென்ற நோக்கத்தோடு அல்ல. பொது மக்களுக்கு ஏற்படுகிற ஒன்றிரண்டு இன்னல்களும் நீக்கப்பட வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன்.

இன்னொன்று, நான் மதுரையில் பி.ஆர்.சி. மானேஜிங் டைரக்டருடன் பேசிக்கொண்டிருந்தபோது சில தொழிலாளர்கள் வந்தார்கள். அங்கே பல கட்சிகளின் பெயரால் தொழிற்சங்கங்கள் இருக்க, இவர்கள் தாங்கள் எவ்விதக் கட்சி சார்பும் இல்லாமல் தொழிற்சங்கம் வைத்துக் கொண்டிருப்பதாகச் சொன்னார்கள். அது நல்ல அம்சம். டைரக்டர், உங்கள் பிரதிநிதியும் இங்கே இருக்கிறார் என்று என்னைச் சுட்டிக்காட்டினார்கள். நானும் அவர்களது முயற்சியைப் பாராட்டினேன். இப்படி கட்சி சார்பற்ற முறையில் தொழிற்சங்கங்களை அமைத்து, தொழிலாளர்களது நலன்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்கிற என்னுடைய ஆலோசனையைக் கூறி, இது சிறந்த திட்டம், இதைக் கொண்டு வந்ததற்காக என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன் என்று கூறி என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : கனம் சபாநாயகர் அவர்களே, இன்று கொண்டுவந்திருக்கிற சாலை போக்குவரத்து மானிய அடிப்படையிலே நான் என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு போக்குவரத்து இலாக்கா தன்னுடைய கையில் ஏராளமான பஸ்களை வைத்துக் கொண்டிருக்கிறது. சாலைப் போக்குவரத்தின் மூலமாக நான் இந்த ஆண்டுதான் லாபத்தைக் காட்டுகிறேன் என்பதாக நாலாயிரம் பஸ்களை ஓட்டி—அதுவும் எக்கச்சக்கமாக ஓவர்லோடு ஏற்றி பயணிகள் பஸ்களில் தொங்கிக் கொண்டு போகிறார்கள்—ஒரு வாரத்திற்கு முன் இரண்டு பையன்கள் அப்படித் தொங்கிக் கொண்டுபோகிறபோது லாரி மோதி செத்திருக்கிறார்கள்—அப்படித் தொங்கிக் கொண்டு போகிறவர்களுக்கு 500 ரூபாய் அபராதம் போடுவதாகச் சொல்லியிருக்கிறார்களே தவிர—இன்றைக்கும் கூட பஸ்களில் தொங்கிக்கொண்டுதான் போகிறார்கள். இப்படி ஓவர்லோடாக பஸ் போயும் கூட வரி கட்டாமல் நமக்கு வந்திருக்கிற லாபம் 90 லட்சம் என்கிறார்கள். வரியைக் கட்டிவிட்டால் என்ன மிஞ்சப்போகிறது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : எந்த வரியை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிறார்கள் ?

திருமதி த. ந. அனந்தநாயகி : 'Pre-tax Profit' என்பதாக நீங்கள் எந்த வரியைக் குறிப்பிட்டிருக்கிறீர்கள் ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : Income-tax. We have to pay to centre tax by the corporation.

திருமதி த. ந. அனந்தநாயகி : It is 50 per cent out of the 90 lakhs. If 45 lakhs go as tax, what is your net profit? It is only 45 lakhs. நாலாயிரம் பஸ்களை வைத்துக்கொண்டு நீங்கள் நாற்பது லட்சத்தைக் காட்டுகிறீர்கள். ஆனால் ஒரு பஸ்ஸுக்கு ஒரு லட்சம் என்றாக 40 கோடிக்கு மேல் தனியார்களிடம் இருந்தால் லாபம் காட்டுவார்கள். நீங்கள் என்ன திறமையாக நடத்துகிறீர்கள் ?





உங்கள் நிர்வாகத்தில் திறமை இல்லை என்பதை எடுத்துக்காட்ட திரு. ஜேம்ஸ் அவர்கள் ஒரே நம்பரில் இரண்டு டிக்கட் இருப்பதைப்பற்றிச் சொன்னபோது அதற்கு ஆதாரம் இருக்கிறதா என்று கேட்டீர்கள். நான் ஆதாரத்தோடு கொண்டுவந்திருக்கிறேன். ஐயம்பாளையத்தில் இருந்து குமளிக்குப் போகிற வழித்தடத்தில் கொடுக்கப்பட்ட டிக்கட் ஒரே நம்பர் இரண்டு டிக்கட்டுகளில் இருப்பதை நீங்களே பார்க்கலாம். இதோ இருக்கிறது.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் : (திரு. துரை முருகன்) : எதையும் நீங்கள் பேரவைத் தலைவர் மூலமாகத்தான் கொடுக்கவேண்டும். நீங்களே அமைச்சரிடம் கொடுக்கக்கூடாது.

திருமதி த. ந. அனந்தநாயகி : நான் தங்கள் மூலமாகவே கொடுக்கிறேன். பேரவை மாற்றுத்தலைவர் உஷாராக இருப்பது பாராட்டத்தக்கது.

இன்னும் நமக்கு உதிரி பார்ட்டுகள் தேவை. உதிரி பார்ட்டு இல்லாமல் ஒரு வண்டியை ஷெட்டில் விட்டால் இதிலுள்ள மற்ற பார்ட்டுகளை எல்லாம் கழட்டி மற்றவற்றுக்கு மாற்றிவிடுகிறார்கள். பெரிய சமதர்மத்தைப் பேசுகின்ற நீங்கள்—பென்ஷன் கொடுக்கப்போகிறோம் என்றெல்லாம் சொல்லிக்கொண்டு 5,200 பஸ்களை வைத்துக்கொண்டு நீங்கள் எந்தமுறையில் இந்த நிர்வாகத்தை நடத்துகிறீர்கள் ?

ஆக, 2, 3 பஸ்களை வைத்திருக்கின்ற முதலாளிகள் சாவதா, வாழ்வதா என்று தெரியாமல் திண்டாடிக்கொண்டிருக்கிறார்கள். பெரிய பஸ் முதலாளிகளை சௌகரியமாக வாழ வைத்திருக்கிறீர்கள். அவர்கள் வைத்திருந்த பஸ்களை உடனடியாக எடுத்துவிட்டு, காம்பன்சேஷன் கொடுத்து அவர்களுக்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்துகொடுத்து விட்டீர்கள். ஆனால் 2, 3 பஸ்களை வைத்திருப்பவர்களை திணற அடித்துக் கொண்டிருக்கிறீர்கள். இதுதான் உங்களுடைய சோஷலிசம். இப்போது விட்டுவைத்திருக்கின்ற 5,500 பஸ்களையும் உடனடியாக தேசியமயமாக்குவதில் உங்களுக்கு என்ன கஷ்டம் இருக்கிறது ? பெரிய பெரிய பஸ் கம்பனிகளை எல்லாம் தேசியமயமாக்கியபோது என் இவைகளையும் தேசியமயமாக்கக்கூடாது ?

திரு. கே. கந்தசாமி : சார், பாயிண்ட் ஆஃப் ஆர்டர். மாண்புமிகு உறுப்பினர் அம்மையார் அவர்கள் பேசும்போது 1976 வரையில் மீதி இருக்கின்ற பஸ்களை தேசியமயமாக்கமாட்டீர்கள் அவர்களுடைய ஆதரவு உங்களுக்கு வேண்டியிருக்கிறது என்று சொன்னார்கள். 1952-லே ஆட்சியில் அமர்ந்து 67 வரையில் இருந்தவர்கள் ஒரு பஸ்ஸைக் கூட தேசியமயமாக்கவில்லையே. அப்படியானால் அது பஸ் முதலாளிகளின் ஆதரவைப் பெறுவதற்காகத்தானா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரை முருகன்) : இது பாயிண்ட் ஆஃப் ஆர்டர் அல்ல. நீங்கள் பேசுகிறபோது விளக்கம் சொல்லியிருக்கலாம் ; உங்களுடைய கருத்தைச் சொல்லியிருக்கலாம்.

<u>திருமதி த. ந. அனந்தநாயகி</u> நாங்கள் ஒன்றும் தேசியமயமாக்காமல் இல்லை. எக்ஸ்பிரஸ பஸ்களையும், சிட்டி பஸகளையும் அப்போது அரசாங்கம்தான் நடத்திக்கொண்டிருந்தது. தேசியமயமாக்குகிறோம் என்று சொல்கிறவர்கள் ஏன் இந்த 5500 பஸ்களை மட்டும் விட்டு வைக்கவேண்டும். நீங்கள் போட்ட வரி, மத்திய அரசாங்கத்திலே போட்ட வரி ஆகியவைகளினால் அவர்கள் நசுக்கப்பட்டிருக்கிறார்கள், 'ரேஷனலைசேஷன் ஆஃப் மோட்டார் வேகில்ஸ் டாக்ஸ்'' என்று கொண்டுவந்து, 120 ரூபாய், 150 ரூபாய் டாக்ஸ் என்று சொல்லியிருக்கிறார்கள்.

எந்த முறையிலே இந்தக்கணக்கை போட்டீர்கள் என்று புரியவில்லை. உங்கள் வரவு – செலவுத் திட்டத்திலேயே சரியான கணக்கை நீங்கள் கொடுக்கவில்லையே. அப்படி இருக்கும்போது இதிலே மட்டும் எப்படி கணக்கைக் காட்டப்போகிறீர்கள்.

வாகன வரி இனத்தில் 1973–74-ம் ஆண்டு திருத்திய மதிப்பீட்டில் 27 கோடி வருமானம் என்று காட்டியிருக்கிறீர்கள். 1974–75-ம் ஆண்டு பட்ஜெட்டில் வாகன வரி 23 கோடி, இன்னொரு 5 கோடி—ஆக 28 கோடி என்று போட்டிருக்கிறீர்கள். வாகன வரி சீர்திருத்தத்தின்படி 6½ கோடி ரூபாய் அதிகம் கிடைக்கும் என்று நேற்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். அப்படியானால் 33 கோடி கிட்டத்தட்ட வருகிறது. ஆனால் பட்ஜெட்டில் 28 கோடி என்று காட்டியிருக்கிறீர்கள். ஆகவே, வருகின்ற வருமானத்தை நீங்கள் குறைத்துக் காட்டியிருக்கிறீர்கள் என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

மொபசல் ரூட்டுகளில் ஓடுகின்ற பஸ்களுக்கு ஒரு சீட்டுக்கு 30 ரூபாய், 40 ரூபாய் குவார்ட்டர்லி வரி என்று போட்டிருக்கிறீர்கள். அப்படிப் பார்க்கும்போது 60 சீட்டு உள்ள ஒரு பஸ்ஸின் மூலம் சீட்டுக்கு 40 ரூபாய் வைத்துப் பார்த்தால் 2,400 ரூபாய் ஒரு குவார்ட்டருக்கு கிடைக்கும். வரியைக் கட்டும்போது டாக்ஸ், சர்சார்ஜ் இரண்டையும் சேர்த்துக் கட்ட வேண்டுமென்று சொல்கிறீர்கள். அதனால் ஒவ்வொரு 3 மாதம் வரும் போது அவர்கள் கழுத்து நெரிகிறது. இந்த இரண்டையும் தனித்தனியாக வசூல் செய்யலாம். அதைவிட்டு விட்டு அவர்கள் கழுத்தை நெரிப்பது உங்கள் கொள்கையாக இருக்கிறது. அவர்களை வாழ விடுங்கள் அல்லது சாகவிடுங்கள். கழுத்தை நெறித்து சித்திரவதை செய்யாதீர்கள்.

டீசல் ஆயில் விலை ஏறியிருக்கிறது. எஞ்சின் ஆயில் விலை ஏறியிருக்கிறது. டயர் கிடைப்பதில்லை. ஸ்பேர் பார்ட்ஸ் கிடைப்பதில்லை; கிடைத்தாலும் மிக அதிக விலை கொடுக்க வேண்டியிருக்கிறது. இந்த நிலையில் சிறு சிறு பஸ் முதலாளிகள் என்ன செய்வார்கள்? பெரிய பெரிய முதலாளிகள் பஸ்களை எடுத்துவிட்டு, அவர்களுக்கு சௌகரியம் செய்து கொடுத்ததைப்போல இந்த சிறு முதலாளிகளுக்கும் செய்து கொடுத்தால் நீங்கள் கெட்டா போய்விடுவீர்கள்? சோசலிஸ கொள்கையை உருவாக்குவது இப்படித்தானா? இதுதானா உங்கள் சோசலிஸ கொள்கை? ஒன்றையுமே புரிந்துகொள்ள முடியவில்லை.





பக்கத்திலே இருக்கிற மைசூர், ஆந்திரா மாநிலங்களைப் பாருங்கள். இங்கே இருப்பதைவிட அங்கே வரி குறைவாக இருக்கிறது. அந்த அளவுக்காவது உங்கள் வரியைக் குறைத்துக் கொள்ளக்கூடாதா? நியாயமாகப் பார்த்தால் பக்கத்து மாநிலங்களிலே இருக்கின்ற அளவுக்குத்தான் இங்கேயும் வரி போட வேண்டும். லாபம் வரவேண்டும், லாபம் வரவேண்டும் என்ற நோக்கத்தில் வரியைக் ஏற்றிக்கொண்டுபோய், சிறு சிறு முதலாளிகளை சித்திரவதை செய்வது உங்களுக்கு நல்லதல்ல.

திண்டுக்கல்-திருச்சி கொட்டாம்பட்டி வழியில் 48 சிங்கிள் போகிறது. அந்த ரூட்டில் ஒரு காங்கிரஸ்காரர் பஸ் விட்டுக்கொண்டிருக்கிறார். அவருக்குப் போட்டியாக இப்படி விட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் மதுரை ராஜபாளையம் ரூட்டில் அதிக வசூல் கிடைக்க வசதி இருந்தும், உங்களைச் சேர்ந்தவர்கள் அங்கே பஸ் விடுவதால் அந்த ரூட்டை எடுத்துக் கொள்ளவில்லை. இந்த உங்கள் கொள்கையை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். வருமானமே இல்லாமல் இருந்தும் 48 சிங்கிள் விடுகிறீர்கள்.

<u>மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன்:</u> மதுரை-திருச்சி பாதையில் பஸ் விடுவதைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் அம்மையார் அவர்கள் சொன்னார்கள். 48 சிங்கிள் விட்டாலும் 400, 450 ரூபாய் வசூலாகிறது. மாண்புமிகு உறுப்பினர் ஹாண்டே அவர்கள் பேசும்போது மதுரை-ராஜபாளையம் ரூட்டிலும் நல்ல வசூலாகும் என்று சொன்னார்கள். வசூலாகும் என்றால், நிச்சயமாக பஸ் விடப்படும்.

<u>திருமதி த. ந. அனந்தநாயகி</u>: ஒரு பஸ்ஸில் எப்படி 450 ரூபாய் வசூலாகும். நிச்சயமாக ஆகாது. நான் வேண்டுமானால் "சாலஞ்ச்" பண்ணுகிறேன்.

<u>மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன்</u>: நாள் ஒன்றுக்கு ஒரு பஸ்ஸுக்கு வருகின்ற வசூலை சொன்னேன்.

<u>திருமதி த. ந. அனந்தநாயகி</u>: 48 சிங்கிள் விட்டு, 450 ரூபாய் வருமானம் வருகிறது என்று சொன்னால் ஆச்சரியமாக இருக்கிறது. எனக்கு வந்த தகவல் பஸ் காலியாகவே செல்கிறது என்பதுதான்.

தேசியமயமாக்கப்போகிறோம் என்று சொல்லி "டிராப்ட் ஸ்கீம்" போட்டிருக்கிறீர்கள். அந்த பஸ் முதலாளிகளுக்கு ஒவ்வொரு மாதமும் டெம்பரரி பெர்மிட் கொடுக்கிறீர்கள். ஒவ்வொரு மாதமும் பெர்மிட் வாங்க அவர்கள் ஆர்.டி.ஓ. ஆபீசுக்குப் போகவேண்டும். தேசியமயமாவதற்கு இன்னும் எத்தனை ஆண்டு ஆகுமோ தெரியாது. ஆனால் டிராப்ட் ஸ்கீம் என்ற பெயரால் டெம்பரரி பெர்மிட் வாங்கச் சொல்கிறீர்கள். இந்தக் காலத்தில் ஆர்.டி.ஓ. ஆபீசுக்கு போய்விட்டு மீள முடியுமா? அங்கே போனால் அவர்கள் சும்மாவிடுவார்களா? அந்த பஸ் முதலாளிகள் தாங்குவார்களா? எப்போது எடுக்கவேண்டுமோ அப்போது எடுத்துக்

[திருமதி. த. ந. அனந்தநாயகி] [1974 மார்ச் 15

கொள்ளுங்கள். அதுவரையிலும் ஏன் அவர்கள் கழுத்தை நெரிக்க வேண்டும்? ஒரு வருஷத்திற்கு பெர்மிட் கொடுங்கள். இல்லை என்றால் 4 மாதத்திற்கு ஒருமுறை ரின்யூவல் செய்ய வேண்டுமென்றாவது வைத்துக் கொள்ளுங்கள். ஓட்டை உடைசலான கொள்கைகளை வைத்துக்கொண்டு தொந்தரவு செய்யாதீர்கள்.

எக்ஸ்பிரஸ் பஸ்களிலே போனால் தெரியும். ஒரு கிளின்லினெஸ் இல்லை. அசுத்தமாக இருக்கிறது. போய்ச் சேருவதற்குள் சட்டை எல்லாம் அழுக்கடைந்து போகிறது. சுத்தமாக வைத்துக்கொள்ள தகுந்த ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். இந்த பஸ்களை ஓட்டுகின்றவர்களுக்கு மெக்கானிக்கல் எஞ்சினீயரிங், ஆட்டோமொபைல் எஞ்சினீயரிங் பற்றித் தெரிந்திருக்க வேண்டும். அதைத் தெரிந்தவர்களை வைத்து ஓட்டினால்தான் பஸ்ஸிலே என்ன குறைபாடு இருக்கிறது, எப்படித் தீர்க்கவேண்டுமென்று என்று அறிந்து வேலை செய்வார்கள். இல்லை என்றால் நிச்சயமாக இந்தத் துறையிலே நஷ்டம்தான் வரும் என்று கூறி, முடித்துக் கொள்கிறேன்.

திரு. பெ. சீனிவாசன்: அமைச்சரவர்கள் சொன்ன பதிலிலிருந்து ஒரு சின்ன கிளாரிபிக்கேஷன் மட்டும் கேட்க விரும்புகிறேன். மதுரை-ராஜபாளையம் ரூட்டில் ஒரு மொனாபலி இருக்கிறது. பி.ஆர்.சி. பஸ் எப்போது அங்கே விடப்படும்? அந்த ரூட்டில் ஏராளமான வருமானம் வந்துகொண்டிருக்கிறது. ஆகவே, பி.ஆர்.சி. பஸ் எப்போது விடப்படும் என்று அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன்: ஏற்கெனவே நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோதே பதில் கொடுத்திருக்கிறேன். சீனிவாசன் அவர்கள் அதையே கேள்வி மூலமாக எழுப்புகிறார்கள். இது கேள்வி நேரமல்ல.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை).

திரு. நா. வீராசாமி: பேரவைத் தலைவரவர்களே, போக்குவரத்துத் துறை அமைச்சரவர்கள் இந்த மன்றத்தின் முன் வைத்திருக்கின்ற மானியக் கோரிக்கைகள்மீது என்னுடைய சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

இன்றையதினம் நாட்டுடைமையாக்கப்பட்ட பஸ்களில் நல்ல லாபம் வந்து கொண்டிருக்கிறது என்ற கணக்கைக் காட்டினாலும் சிலருக்குக் கோபம் வருகிறது. இத்தனை ஆண்டு காலமாக நஷ்டம் வந்துகொண்டிருந்தது இப்போது லாபம் வருகிறதே. அதைப் பாராட்டக்கூடாதா? 4,000 பஸ்களை விட்டுவைத்து, அதனால் தனியார்கள் 30 கோடி ரூபாய் லாபம் பெறுகிறார்கள். ஆனால் அரசாங்கத்திற்கு 91 லட்சம் ரூபாய்தான் லாபம் வருகிறது. இந்த லாபம் வரக்கூடாதா? தனியார் வேண்டுமானால் 30 கோடி சாப்பிடலாம்; அரசாங்கம் 91 லட்சம் சாப்பிடக்கூடாதா? அதிலே தானா கஷ்டம் வந்துவிட்டது? இன்றையதினம் அம்மையார் அவர்கள் பேசும்போது "கையாலாகாத தனம்" என்ற வார்த்தையை ரொம்ப சாதாரணமாகப் பயன்படுத்தினார்கள்.



1974 மார்ச் 15]

திரு. பெ. சீனிவாசன்: சார், ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர். மாண்புமிகு உறுப்பினர் அம்மையார் அவர்கள் பேசும்போது தனியார் நடத்தினால் 30 கோடி ரூபாய் லாபம் வரும், அரசாங்கத்திற்கு 91 லட்சம் தான் லாபம் வருகிறது என்று சொன்னார்கள். சாப்பிடலாம் என்று சொல்லவில்லை.

திரு. நா. வீராசாமி: இது பாயிண்ட் ஆப் ஆர்டரா?

திரு. பெ. சீனிவாசன்: ஆம். பாயிண்ட் ஆப் ஆர்டர்தான். ஒரு உறுப்பினர் கூறிய கருத்தை "ட்விஸ்ட்" பண்ணக்கூடாது. திரித்துக் கூறக் கூடாது. அரசாங்கத்திற்கு 91 லட்சம்தான் வருகிறது; தனியார் நடத்தினால் 30 கோடி வரும் என்றுதான் சொன்னார்கள்.

திரு. நா. வீராசாமி: அதையேதான் நானும் சொல்கிறேன். அரசாங்கத்திற்கு 91 லட்சம் லாபம் வந்திருக்கிறது என்றும் தனியாருக்கு 30 கோடி வரும் என்றார்கள். நான் அம்மையார் அவர்களை ஒன்று கேட்க விரும்புகிறேன். அந்த அம்மையார் கட்சி ஆளுகின்ற ஆந்திராவிலே என்ன கோடிக்கணக்கிலா லாபம் வந்துகொண்டிருக்கிறது! மகாராஷ்டிரத்திலே வருகின்ற வருமானத்தை எங்கே கொண்டு வைப்பது என்று இடம் கிடைக்காமலா இருக்கிறார்கள்! இதிலே வேடிக்கை என்னவென்றால், பம்பாய் நகரத்திலே பஸ்களை ஓட்ட முடியவில்லை என்று டில்லிக்கு படையெடுத்து, இரண்டு கோடி ரூபாய் இந்திரா காந்தி அம்மையாரிடம் மானியம் கேட்கிறார்கள். டில்லி நகரத்திலே பஸ்கள் நஷ்டத்தில் ஓடுகின்றன என்று $1\frac{1}{2}$ கோடி ரூபாய் கடந்த ஆண்டில் மானியம் கொடுத்திருக்கிறார்கள். இப்படிப் பல மாநிலங்களிலும் நிலைமை இருக்கும்போது இங்கே இருக்கின்ற அதிகாரிகள் இரவு பகல் என்று பாராமல் உழைத்து, தொழிலாளர்களும் உண்மையாக உழைத்து அதன் காரணமாக இந்தத் துறையை லாபத்திலே செயல்படச் செய்த மாண்புமிகு அமைச்சரவர்களுக்கு இவ்வளவுதானா பாராட்டு என்று கேட்க விரும்புகிறேன்.

இன்னும் ஒன்று, இன்றைய தினம் சென்னை நகரத்திலே, ஓரளவுக்கு மக்களுடைய தேவையைக் கருதி, மக்களுடைய தேவைதான் முக்கியம் என்ற அடிப்படையில், நஷ்டம் வந்தாலும் பரவாயில்லை என்று, நிறைய பஸ்களை ஓட்டுகிறோம். அதற்குப் பின்னாலும், இப்பொழுது மத்திய அரசு போட்டிருக்கிற வரிகளாலே எந்த அளவுக்கு அரசாங்கத்திற்கு வரக்கூடிய லாபம் தடைப்படும் என்பதைக் கணக்கிட வேண்டும். இங்கு இந்திரா காங்கிரஸிற்காக வாதாடுகிறவர்கள், இந்திரா காந்தியிடம் சொல்லி, அக்கிரமமாக வரிகளைப் போட்டிருக்கிறீர்கள், இதனால் அரசாங்கத்திற்கு வரவேண்டிய லாபம் பாதிக்கப்படுகிறது என்று அங்கே சொன்னால் பரவாயில்லை.' ஆனால் சொல்லமாட்டார்கள். தனியார்களுக்கு வாதாடுவது போல் வாதாடுகிறார்கள்.

இந்த அரசாங்கம் மட்டும் பஸ்களைத் தேசியமயமாக்காமல் இருந்திருந்தால், ஏழைகள் எவ்வளவு பாதிக்கப்பட்டிருப்பார்கள்? மத்திய அரசாங்கம் ஒரு கிலோவுக்கு 6 பைசா ஏற்றுங்கள் என்று சொல்கிறது. அதுவும்

இந்த வரி உயர்வு, விலை உயர்வு காலத்தில், 1967-க்கு முன்னாலே இருந்த ஆட்சி இப்பொழுது இருந்திருக்குமானால் இந்த நாட்டு மக்கள் போக்குவரத்துத் துறையிலே தாங்கமுடியாத தொல்லையை அனுபவித் திருப்பார்கள். இந்த நிலையிலும் நாம் விலையை ஏற்றாமல்.

திருமதி ந. ந. அனந்தநாயகி : விலையை கண்ட்ரோல் பண்ணும் அதிகாரம் அரசாங்கத்திடமிருக்கிறது. அந்த பஸ்காரர் என்ன செய்ய முடியும்?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேரம் குறைவாக இருக்கிறது, இப்படிப்பட்ட இண்டரப்ஷன் தேவையில்லை.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு உறுப்பினர் அனந்தநாயகி அவர்கள் தனியார் நடத்தினால் நல்ல லாபம் வரும், 4,000 பஸ்கள் ஓடுகின்றனவே. ரூ. 20 கோடி, 30 கோடி, லாபம் வரவேண்டாமா என்று கேட்டார்கள். 5,000-க்கு மேலான பஸ்களை தனியார் துறையினர் நாட்டிலே நடத்துகிறார்கள். குறைந்தது ரூ. 50 கோடியாவது லாபம் வரும். ஆகவே, கட்டணத்தை அவர்கள் உயர்த்த வேண்டியதில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அனந்தநாயகி அவர்கள் ஒப்புக்கொள்கிறார்களா?

திருமதி ந. ந. அனந்தநாயகி : கட்டணத்தை உயர்த்துவதா, இல்லையா என்பது உங்களுடைய பிரச்சினை. நீங்களும் ஓட்டுகிறீர்கள், அவர்களும் ஓட்டுகிறார்கள். இரண்டு பேரும் சேர்ந்து பேசி முயற்சி எடுங்கள்.

திரு நா. வீராசாமி : திருச்சியிலிருந்து மதுரைக்கு ஓடுகிற பஸ்களுக்காக இங்கே வாதாடுவதை எங்களாலே புரிந்துகொள்ள முடிகிறது. ஆனால், மொத்தமாக தேசியமயமாக்கிய கொள்கையிலே அரசாங்கத்திற்கு செல வழித்து போக என்ன லாபம்......

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் உயர்த்தவில்லையென்ற கொள்கையை நாங்கள் கொண்டு வந்தால், அதற்கு மாண்புமிகு உறுப்பினர் அனந்தநாயகி அவர்கள் சொல்வது என்ன ? எங்களைப் பொறுத்தவரையில் உயர்த்த வேண்டிய அவசியமில்லை யென்ற முடிவு எடுத்தால் அது சரிதானா?

திருமதி ந. ந. அனந்தநாயகி : எனக்கு அதைப்பற்றிக் கவலையே கிடையாது. அது உங்கள் தலைவலி.

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, விவாதம் எங்கேயோ திசைமாறிக்கொண்டிருக்கிறது. இந்தச் சமுதாயம் மொத்தமாகப் பெறு கின்ற சௌகரியங்கள் என்ன என்பதை நாம் பார்க்க வேண்டும். உண்மையிலே, தனியார் துறையிலே எந்தத் தொழிலாளியாவது நிம்மதி



யாக இருக்கிறானா? காலையிலே எழுந்த உடன் முதலாளி வீட்டுக்குப் போய், அவனுக்கு ஒரு சலாம் போட வேண்டும். அப்படிப் போடவில்லை யென்றால், அவன் அடுத்த நாள் வேலைக்குச் செல்ல முடியுமோ, முடி யாதோ? அதற்கு ஆபத்து வந்துவிடும். அந்த முதலாளியினுடைய வீட்டுக்காரி சொல்வதைச் செய்யவில்லையென்றால், அவன் வேலையில் தொடருவானா என்பது கேள்விக்குறி. அப்படிப்பட்ட உத்தரவாதம் இல் லாத நிலையிலே தனியார் துறையிலே இந்தப் போக்குவரத்துத் தொழி லாளிகள் இருக்கிறார்கள் என்பதை நாம் மறந்துவிடமுடியாது ; அது மறுக்க முடியாத உண்மையும் கூட.

இன்றைய தினம் போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு நாம் சம்பளத்தை உயர்த்திக் கொடுத்திருக்கிறோம். சேரன் போக்குவரத்துக் கழகம் போன்ற கழகங்களிலே, தனியார் துறையிலே இருப்பதை விட மாதம் ஒன்றுக்கு ரூ. 60 உயர்த்திக் கொடுத்திருக்கிறோம். அன்றாடம் கலெக்ஷனை அதிகப் படுத்துவதற்கு அவர்களை ஊக்கப்படுத்த முன்பு, கையைக் காட்டினால் தொழிலாளி நிறுத்தாமலிருந்தான். அந்தக் குறை முன்பு இருந்தது, உண்மைதான் அதைப் போக்க அரசாங்கம் என்ன என்ன செய்யவேண்டுமோ அதை அதைச் செய்து கலெக்ஷன் போனஸ் புகுத்தியபிறகு, அவர்கள் பஸ்களை நிறுத்தினார்கள், அவற்றில் அக்கறை காட்டினார்கள். அப்படிப்பட்ட நல்ல திட்டத்தை அறிவித்து செயல்படுத்துகிறது அரசு. அந்த கண்டக்டர், டிரைவர் இல்லாதவர்களுக்கும் இன்சென்டிவ் போனஸ் கொடுத்திருக்கிறது.

இவைகளல்லாமல், சேரன் போக்குவரத்திலேயும் மற்ற போக்கு வரத்துக்களிலேயும் கடந்த ஆண்டு 14 சத விதம் போனஸ் கிடைத்திருக் கிறது. இதல்லாமல், ஏறத்தாழ 35,000 தொழிலாளர்களுக்கு இப் பொழுது பென்ஷன் ஸ்கீம் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு அமைச்சரவர்கள் அதைப்பற்றி சொன்னார்கள். இந்தி யாவிலேயே வேறு எந்த மாநிலத்திலும் ஒரு இண்டஸ்டிரியல் ஒர்க்கருக்கு ஃபாமிலி பென்ஷன் அறிவித்திருக்கிறார்களா? நாம் கேள்விபட்டிருக் கிறோமா? நான் கேட்கிறேன், இதைப்போல் பலவற்றையும் தொழி லாளர்களுக்குச் செய்கிறோம். ஃபாமிலி பெனிபிட் ஸ்கீம், மாதாமாதம் ரூ. 10 கட்டி, திடீரென்று 6 மாதம் கழித்து அவர் தவறி இறந்து விட்டாலோ, அல்லது ஆக்ஸிடெண்டிலே இறந்துவிட்டாலோ, அவரது குடும் பத்திற்கு ரூ. 10,000 கிடைக்கும். இந்தத் திட்டத்தையும் நாம் கொண்டு வந்திருக்கிறோம். அதல்லாமல் வீடு கட்டும் திட்டத்தையும் கொண்டு வந்திருக்கிறோம். சேரன் போக்குவரத்துக் கழக தொழிலாளிகள் 500 பேர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கின்ற திட்டத்தை இன்றைய தினம் அமல்படுத்தி இருக்கிறோம்.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக, 24 சதவீதம் பங்குதாரர்களாக ஆகின்ற வாய்ப்பையும் தொழிலாளிகளுக்குக் கொடுத்திருக்கிறோம். இதைத் தானே சோஷலிச அரசாங்கம் என்று சொல்ல முடியும். யார், யாரோ சோஷலிசத்திற்கு என்ன என்னவோ பொருள் தருகிறார்கள். இதைவிட வேறு என்ன சோஷலிசத் திட்டத்தை வேறு எந்த அரசாங் நிறைவேற்ற டியும் என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

உள்ளபடியே இந்த நாட்டிலே, இந்த அதிகாரிகளைப் பொறுத்த வரையில் கொடுத்துவைத்தவன் என்று ஒருவன் இருந்தால், அது போக்குவரத்துத்துறை தொழிலாளிதான். சட்டமன்ற உறுப்பினரை விட நிம்மதியான வாழ்க்கை போக்குவரத்துத் தொழிலாளிக்கு இருக்கிறது. அந்த அளவு பெருமையோடு அவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

அடுத்து, பல கார்ப்பரேஷன்களை......

திரு. பெ. சீனிவாசன் : மற்றத் துறை களிலேஉள்ளவர்களை இன்சல்ட்—குறை—சொல்வது மாதிரி இருக்கிறது.

திரு நா. வீராசாமி : அந்த அந்த இலாகாவைப்பற்றி பேசும்பொழுது அப்படி அப்படிப் பேசுவோம்.

இங்கே, பூம்புகார் கப்பல் போக்குவரத்தைப் பற்றி, கப்பல் விடுவதைப் பற்றிக் கேள்வி கேட்டார்கள். இரண்டு மூன்று தினங்களாக விவாதம் நடைபெறுகிறது. எப்படி விட்டாலும், கப்பல் சென்ட்ரல் லிஸ்டில்தான் இருக்கிறது, ஸ்டேட் லிஸ்டிலே இல்லையே என்று அனந்த நாயகி அவர்கள் கேட்கிறார்கள். இதிலே என்ன வேடிக்கை என்று கேட்டால், ஹாஜா ஷெரிப் கப்பல் விடலாம், அரசாங்கம் விடக் கூடாது. இப்படி ஒரு வாதத்தை அனந்தநாயகி அவர்கள் கொடுக்கிறார்கள். இந்த நாட்டு மக்களுக்கு நன்மை செய்வதற்காக, இப்படி சட்டத்திற்கு உட்பட்டு ஒரு தொழில் செய்வது தவறா?

நிலக்கரி வராததாலே, இந்த அரசாங்கத்திற்கு ஏற்பட்ட இன்னல்களை நாம் பார்க்கிறோம். மின்சார வெட்டிற்குக் காரணம், தேவையான அளவு நிலக்கரி கிடைக்கவில்லையென்பதுதான். ஆக, தேவையான நிலக்கரியைக் கொண்டு வருவதற்கு, சரக்குகளைக் கொண்டு வருவதற்கு கப்பல் விடலாமென்றால், மாநில சுயாட்சியா என்று கேட்கிறார்கள். நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நாட்டு மக்களுக்கு நன்மை செய்வதற்காக கப்பல் என்ன, ஆகாயவிமானம் கூட விடுங்கள். அதன் மூலம் இந்த நாட்டு மக்களுக்கு நன்மை ஏற்படுமானால் அந்தத் தொழிலைச் செய்யுங்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த நம்முடைய கே. டி. கே. தங்கமணி அவர்கள் அவருடைய வெட்டுத் தீர்மானத்திலே ஒன்றைச் சொல்லியிருக்கிறார்கள். இத்தனை கார்ப்பரேஷன்கள் தேவைதானா என்று கேட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு நான் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன், அவர்கள் கொஞ்சம் விவரம் தெரிந்தவர். இத்தனை கார்ப்பரேஷன்கள் இருப்பதால்தான் நிர்வாகம் செம்மையாக நடைபெறுகிறது. சென்னை நகரத்திலே மட்டும் ஒரு இலாகா இருக்குமானால், கன்னியாகுமரியிலே இருக்கிற தொழிலாளி தன்னுடைய குறையைப் போக்க சென்னை வரவேண்டியிருக்கும். மதுரையிலே, திருச்சியிலே இருக்கிற ஒவ்வொரு தொழிலாளியும் சென்னைக்கு வந்து கொண்டிருக்க முடியாது. அவர்கள் போக்குவரத்துத் துறையிலே இருக்கும் சிறு சிறு





பிரச்சினைகளுக்காக சென்னையோடு தொடர்பு கொள்வதைவிட, அங்கங்கே கார்ப்பரேஷன்கள் அமைத்திருப்பதால், தொழிலாளிக்கும் அதிகாரிக்கும் அங்கங்கே தொடர்பு ஏற்படுவதால், இப்படிப்பட்ட கார்ப்பரேஷன்கள் இருப்பது வரவேற்கத்தக்கது.

இவ்வளவு கார்ப்பரேஷன்கள் அமைத்திருக்கிறார்கள், எல்லா ஊர்களுக்கும் அமைத்திருக்கிறார்கள். ஆனால், இந்த வட ஆற்காடு என்ன செய்தது என்று தெரியவில்லை. வட ஆற்காடு தென் ஆற்காடு இரண்டுக்கும் சேர்த்து ஒரு கார்ப்பரேஷனை அமைத்து, இரண்டு பெயர்களுக்கும் ஆற்காடு பொதுவாக இருப்பதால், ஆற்காடு கார்ப்பரேஷன் என்று பெயர் வைத்து, ஆற்காடு கார்ப்பரேஷனை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியிலே ஒன்றே ஒன்று, என்னுடைய தொகுதியிலே பல இடங்களுக்கு பஸ்கள் வேண்டுமென்று கேட்டிருந்தோம். குறிப்பாக, விளாப்பாக்கம் என்ற ஊருக்கு பஸ் போய்க் கொண்டிருந்தது. திடீரென்று ஒரு நாளிலிருந்து அந்த ஊருக்குப் போகாமல் ஆரணிக்கு போகின்ற நிலைமையை உருவாக்கியிருக்கிறார்கள். நேற்றைய தினம் அந்த ஊர் பூராவும் கூட, 20-ந் தேதிக்குள் அந்த ஊருக்கு பஸ் செல்ல நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால், அந்த ஊரின் வழியாக எந்த பஸ்ஸையும் போக விடமாட்டோம், மறியல் செய்யப் போகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆரணிக்குப் போகின்ற பஸ்களை விளாப்பாக்கத்திற்கு திருப்பி விட வேண்டும் என்றும் அதேபோல், வாழைப்பந்தல், சக்கரநல்லூர் பகுதிகளுக்கும் பஸ்களைவிட வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன.

இறுதியாக, பத்திரிகை நிருபர்களுக்கு நாம் பாஸ் வழங்கி இருந்தோம். அது ஏப்ரலுக்குப் பின்னாலே இருக்கப்போவதில்லையென்று நான் கேள்விப்பட்டேன். மக்களுக்குச் செய்திகளைத் திரட்டித் தருகிற அந்தப் பத்திரிகை நிருபர்களுக்குத் தொடர்ந்து பாஸ்கள் தர வேண்டுமென்று கேட்டு, இந்த மானியக் கோரிக்கையை ஆதரித்து, முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

[பிற்பகல் 12-30]

*THIRU K. S. KOTHANDARAMIAH : Hon. Speaker, Sir, in support of the Cut Motions that I have given notice of under two Demands, I wish to offer a few remarks.

One of the Cut Motions is to discuss the need to provide more bus routes in Dharmapuri District and the other is to say something about the policy in regard to Transport sector.

The Hon. Minister for Transport has really stated a sentence in his review which reads as " ......The Transport Sector would no more be a drag on the general tax payer who has been contributing

[Thiru K. S. Kothandaramiah] [1974 மார்ச் 15

to its maintenance with monotonous regularity year after year for the last 10 years ". It is really an appreciable thing. He has removed the tax burden from the backs of the travelling passengers and the passengers are all grateful to him. He is technically qualified and naturally interested and emotionally suitable for his department. He has brought several revolutionary changes. The Department is also doing yeonmen service to the country. Since I have no time, I will say a few words with regard to the Transport needs of Dharmapuri District.

It has been stated in the Policy Note that the Government is running buses in a number of unremunerative routes to give service to the public and that they have been treating the cost of such running as social costs. This is one thing for which I appreciate the Government for bearing such a huge cost. Under this head, it has been stated that the Pandyan Roadways Corporation was plying its buses in 47 unremunerative routes and incurring a loss of about Rs. 30 lakhs a year. The Pallavan Transport Corporation has been operating in 63 unremunerative routes in the Metropolitan area of Madras and 38 unremunerative routes in Chingleput District. They are getting huge loss.

I am glad to see that Dharmapuri does not find a place in it and I think the routes in Dharmapuri District are remunerative and profitable and that they are not a drag on the Government. So, I have got a right to request the Hon. Minister for Transport to introduce more number of buses to help the travelling people there because the District of Dharmapuri is a backward area. Dharmapuri District is on the eve of the Industrial and Agricultural Revolutions. The success of these revolutions depend largely on the introduction of more number of buses in Dharmapuri District. I therefore appeal to the Hon. Minister for Transport to introduce more number of buses in that district and help for the removal of the backwardness of the area.

The next thing is this. There are certain difficulties and drawbacks. which I have to point out. The business of the Regional Transport Officer is to check the overloads in buses and also to issue permits for new buses. His business is to often check the overloads in buses and to award punishments to them. What



1974 மார்ச் 15] [Thiru K S Kothandaramiah]

I say is this. There is a lot of overloading in private buses and also in the Government buses. It may be due to paucity of buses in that area. If there are sufficient number of buses, the overcrowding will not be there.

In Hosur Taluk, people have to travel long distances. The main bottleneck is Hosur is a border area. The number of passengers that have to pass through it is more and the number of buses is less. Hosur is in a hilly area and the roads are undulating. So, small buses have to be put on the roads. The Government buses are also overloaded. I think there are two reasons for this. One is the paucity of buses and the other is introduction of bonus system. I am not finding fault with the bonus system. Since the drivers and conductors are paid some extra amount as bonus, perhaps, they may in order to get more amount take more number of passengers.

THE HON. THIRU S. RAMACHANDRAN: In fact, the real difficulty is in getting chassis for new buses both for the private operators and as well as for the Government buses. It is not exactly the collection incentive is the reason for overloading in buses. The real difficulty is in getting sufficient number of chassis. Sufficient number of chassis are not produced in our country.

THIRU K. S. KOTHANDARAMIAH: Another thing is this. Very often we find the rash driving by the drivers. I do not say that all the drivers are like that. Only some drivers are like that. I think in areas like Dharmapuri where the roads have curves and hair-pin bends it is better to appoint conductors and drivers above 30 or 35 years ; because they will understand the difficulties and they will not be rash as young people would be.

The next difficulty is with regard to appointment of drivers and conductors in bilingual areas like Dharmapuri District. In our area, people speak a number of languages. It is better to appoint local people as conductors and drivers because they will understand the needs of the passengers and the passengers can also ask the drivers and conductors about the particulars as to

[Thiru K. S. Kothandaramiah] [1974 மார்ச் 15

where the bus goes etc. But unfortunately the drivers and conductors are coming from interior Tamil areas and they do not know the languages of the local people. There are a lot of difficulties. I therefore ask the Hon. Minister for Transport to see that preference is given to the people of Dharmapuri District in the matter of appointment of conductors and drivers.

With regard to certain necessities of Dharmapuri District, I would like to say a few words. The private buses are very irregular and they are not reaching their destinations in time and properly is so, there is need for more number of buses in certain routes. Further there is need for bus from Hosur to Mysore (via) Bangalore. A number of passengers are going from Tamil Nadu to Mysore because many work in the coffee plantation and the Bhadravathi Steel Works.

Similarly a bus from Hosur to Kolar Gold Fields ; from Hosur to Kolar ; Hosur to Tirupati in Andhra Pradesh and Bangalore to Vepanapalli (via) Berigai. I have already explained and I am sure the Hon. Minister for Transport will consider all these things. In the Dhenkanikota hill area if more number of buses are introduced it would be helpful to the passengers. There is a bus from Nilgiris to Hosur. The bus comes from Ooty and stops there. If it goes as far as Bangalore, it will help many of the passengers. Another bus that is required is from Ootacamund to Bangalore (via) Kanakapur. There is huge traffic and the hon. Member representing that area also told me, about this. If all these buses are introduced, the people will be very happy there and those areas will rapidly progress.

Thank you, Sir.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார் .. .. .. ..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எவ்வளவு நேரம் உங்களுக்கு வேண்டும் ?

திரு. கே. டி. கே. தங்கமணி : 20 நிமிடத்திற்குள் முடித்துக் கொள்கிறேன். சபாநாயகர் அவர்களே, இன்று போக்குவரத்துத் துறை அமைச்சரின் இரண்டு இலாகாக்களின் பேரில் கொண்டு வந்திருக்கின்ற மானியத்தில் நடத்தக் கூடிய விவாதத்தில் ஏற்கெனவே நாங்கள் சில வெட்டுப் பிரேரணைகளைக் கொடுத்து இருக்கிறோம். அது சம்பந்தமாக நான் ஒரு கருத்தைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.



1974 மார்ச் 15] [திரு. கே. டி. கே. தங்கமணி]

எதிர்க்கட்சிகள் இம்மாதிரி சட்ட மன்றத்தின் மூலமாக வெட்டுப் பிரேரணைகளைக் கொடுப்பது நல்ல வாய்ப்பாக இருக்கிறது என்றாலும்கூட எல்லா வெட்டுப் பிரேரணைகளைப் பற்றியும் எங்களால் பேச முடியாது. நம்முடைய விதிமுறைகளைப் பொறுத்தவரையில் கூட ஒவ்வொரு கட்சியும் ஒரு வெட்டுப் பிரேரணை தான் பிரேரேபிக்க வேண்டுமென்று இருக்கிறது. அதைப்பற்றி சில கருத்துக்களை நாங்கள் பேசலாம், எல்லா வெட்டுப் பிரேரணைகளைப்பற்றியும் பேசமுடியாது. ஆகவே அந்த இலாகாவிலே நாங்கள் கொடுத்திருக்கின்ற வெட்டுப் பிரேரணை களைப் பற்றிய கருத்துக்கள் என்ன என்பதைப்பற்றி அமைச்சர் அவர்களும் முழுமையாகப் பேச முடியாவிட்டாலும் குறிப்பாக அதைப் பற்றி என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது என்பதைப்பற்றி குறிப்பு அந்தந்த உறுப்பினருக்கு அனுப்பப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இதே சட்டமன்றத்திலே ஹெல்த் மினிஸ்டரைப் பொறுத்தவரையில் அந்த முறை பின்பற்றப்படுகிறது. அந்த முறை யைப் பின்பற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதற்கு அவர் களுடைய இலாகாவும் ஒத்துழைக்கும் என்று நினைக்கிறேன்.

சிறு மானியமாக இருந்தாலும் அச்சகத் துறையைப்பற்றி ஒன்றிரண்டு விஷயங்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்த அச்சகத் தொழிலிலே ஈடுபடக்கூடிய தொழிலாளர்களுக்கு சட்டம் மாற்றியமைக்கப் பட வேண்டும் அதற்காக ஒரு கமிஷன் போட வேண்டும் என்று பல உறுப்பினர்கள் வெட்டுப் பிரேரணைகள் கூட கொடுத்திருக்கிறார்கள். அதை நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

நாங்கள் சொல்லியிருக்கக்கூடிய மற்றொரு விஷயம் மாவட்டத் திலேயுள்ள எல்லா தலைநகரங்களிலேயும் மதுரை, கோயம்புத்தூர் போன்ற இடங்களிலே அரசாங்கத்தினுடைய அச்சகங்களை ஏற்படுத்த வேண்டுமென்று. அந்தக் கொள்கையை ஏற்றுக்கொண்டு தலைநகரங் களிலே கொண்டுவரப் போகிறார்களா என்பதையும், சிறு அச்சக மிருக்கிற இடங்களிலே புதுக்கோட்டை இப்பொழுது தலைநகரமாக மாற்றப்பட்டிருக்கிறது. அங்கேயுள்ள அச்சகத்தை பெரிய அச்சகமாக மாற்றியமைக்கக் கூடிய நிலைமையை ஏற்படுத்தப் போகிறார்களா என்பதையெல்லாம் அவர்கள் சொல்ல வேண்டும்.

மதுரை நகரத்திலே மூன்றாண்டுக் காலமாக வற்புறுத்தி கடைசியிலே ஒரு அச்சகத்தை அமைக்கப் போகிறோம் என்று சில லட்சம் ரூபாய்கள் செலவழிக்கப்பட்டது. ஆனால் அது என்றைக்குச் செயல்படப் போகிறது என்பது தெரியவில்லை. அதை அறிய ஆசைப் படுகிறேன்.

அடுத்து, முக்கியமாக இருக்கும் பிரச்னை இந்த டிரான்ஸ்போர்ட்டில் தான். 15 கோடி ரூபாயைச் செலவழிப்பதற்கு அவர்களுக்கு இந்தச் சபை அங்கீகாரம் கொடுக்கிறது. அப்படிப்பட்ட இந்த இலாகாவைப் பற்றி பல கருத்துக்களை ஏற்கெனவே சொல்லிவிட்டார்கள். நான் அவைகளை திரும்ப சொல்வதற்கு ஆசைப்படவில்லை. இந்த இலாகா

நடத்தும் ஆலோசனைக் குழுவில் நானும் உறுப்பினராக இருக்கிறேன். பல சிறந்த யோசனைகள் அங்கே வருகின்றன. ஆனால் அவைகள் சரியான முறையில் அமல் நடத்தப்பட்டதா என்றால் இல்லை என்றுதான் சொல்ல ஆசைப்படுகிறேன்.

ஒரே ஒரு உதாரணம் மட்டும் சொல்கிறேன். இன்றைக்கு சென்னையிலுள்ள பிரச்னையை எடுத்துக்கொண்டால், "பாட்டில் நெக்கை"க் குறைக்கவும், குறைந்த பஸ்களை வைத்துக்கொண்டு அதிக வசதிகளைச் செய்யவும் முடியும் என்ற கருத்தை ஐயாசாமி அவர்கள் ஒரு திட்டத்தைக் கொடுத்தார்கள். அந்தத் திட்டத்தை அமல்படுத்த ஒரு முயற்சி எடுக்கப்பட்டது. அந்த முயற்சி எந்த நிலையில் இருக்கிறது. அந்த முயற்சி இருக்கிறதா அல்லது கைவிடப்பட்டதா என்று தெரியவில்லை. மே மாதத்திலே அந்த முயற்சி ஆரம்பிக்கப்படும் என்று சொல்லப்பட்டது. அது என்ன ஆனது என்று தெரியவில்லை. எனவே எடுக்கப்படும் சில முடிவுகளை அமல் நடத்துவதற்கு முயற்சி எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, 4,000 பஸ்கள் அரசுத் துறையிலே இருந்து இந்த இலாக்கா செயல்படுவதால், இந்த இலாக்காவினால், இந்த அமைச்சருடைய திறமையினால்கூட இன்றைக்கு லாபத்தில் ஓடிக்கொண்டிருக்கிறது என்பதை ஒத்துக்கொள்கிறேன். இந்த முறையிலேயே மேலும் மேலும் போனால் அதிக லாபத்தைக்கூட சம்பாதிக்க முடியும். ஆனால் இந்த லாபத்தைச் சம்பாதிப்பதற்கு இன்றைக்கு எடுத்துக்கொண்டிருக்கின்ற இந்த முறைதான் காரணம் என்று சொல்வதை நான் ஏற்றுக்கொள்ளவில்லை. இந்த நான் சொல்வதற்குக் காரணம் என்னவென்றால், தனித்தனி கார்ப்பரேஷன்களை அமைத்திருக்கிறோம், அதனால்தான் நமக்கு லாபம் அதிகமாக வந்திருக்கிறது என்று சொல்கிறார்கள். கணக்கைப் பார்த்தால்கூட, பி. ஆர். சி.-யை எடுத்துக்கொண்டால் நஷ்டத்தில் ஓடுகிறது, லாபம் கொடுத்திருப்பதெல்லாம் ஸ்டேட் டிரான்ஸ்போர்ட்டும், சேரன் டிரான்ஸ்போர்ட்டும்தான்.

சேரன் டிரான்ஸ்போர்ட்டைப் பற்றி ஒன்றைச் சொல்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். 35 லட்சம் ரூபாய் நஷ்ட ஈடு கொடுத்தோம். 10 இலட்சம் ரூபாய் கடனாகக் கொடுத்தோம். ஓராண்டில் 45 இலட்சம் ரூபாய் கொடுத்தது என்று சொல்கிறார்கள். இதை அப்படியே வைத்துக்கொண்டு பார்த்தால் அந்த முதலாளி வருஷா வருஷம் 45 இலட்சம் ரூபாய் சம்பாதித்திருப்பார் அல்லவா ? ஆனால் அந்த முதலாளி காட்டியதெல்லாம் நஷ்டம் நஷ்டம் என்று. நாம் நஷ்ட ஈடு கொடுக்கும்பொழுது டி.வி.எஸ்-க்கு அந்த அளவுக்குக் கொடுக்கவில்லை. டி.வி.எஸ்.-க்கு புக் வேல்யூ போதும் என்று சொன்னார்கள். ஆனால் இவர் அதற்கு மேலாக வாங்கினார் என்று சொல்லும்பொழுது எந்த அளவுக்கு பெரிய முதலாளி லாபத்தைப் பெற்றிருக்கிறார் என்று பார்த்தால............





மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, அந்தச் சட்டத்தின்படி நாம 50 பெருந்துகளுக்கு மேல் உள்ள நிறுவனங்களை மேற்கொண்டபொழுது எல்லோருக்கும் ஒரே ஃபார்முலா, ஒரே வகை அடிப்படையிலேதான் நஷ்ட ஈடு தரப்பட்டது.

திரு. கே. டி. கே. தங்கமணி : நான் பழைய விஷயத்தைச் சொல்கிறேன். நான் டி.வி.எஸ்.-க்காகப் பரிந்து பேசவில்லை. எனக்கு என்ன பயம் ஏற்படுகிறது என்றால் நான் கருமுத்து தியாகராஜ செட்டியாரைப் பற்றிப் பேசினால் அமைச்சர்களேகூட என்னை கருமுத்து தியாகராஜ செட்டியாருடைய ஆள் என்று பேசுகிறார்கள். ஆனால் நான் கேட்பதெல்லாம் டி.வி.எஸ்.க்கு நஷ்ட ஈடு எவ்வளவு கொடுக்கப்பட்டது ? அந்த நேரத்தில் எ.பி.டி.யை எடுத்த நேரத்தில் அந்த முறையில் கொடுக்கப்பட்டதா ? அதில் அவர்களுக்குத் திருப்தி என்றால் எனக்கும் திருப்திதான். ஆனால் என்னுடைய கருத்து அந்த அளவில் கொடுக்கப்படவில்லை என்பதுதான்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, அதே அடிப்படையிலேதான் கொடுக்கப்பட்டது. ஆனால் எ.பி.டி.-க்குக் கொடுத்ததிலே மொத்த பஸ்களுக்கும், தொகைக்கும் வித்தியாசம் இருக்கிறது என்ற கருத்தில் கூறுகிறேன். எ.பி.டி.-யில் ஒர்க் ஷாப் மெஷினரி, நிலம் இவைகளைச் சேர்த்து எடுத்தோம். ஆனால் டி.வி.எஸ். அதைத் தரவில்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி : பஸ்களை வைத்துப் பார்த்தால், சட்டமன்ற நிகழ்ச்சியிலேகூட முதலமைச்சரவர்கள் பதில் சொல்லியிருக்கிறார்கள். பஸ் அமைப்பில் மாறுதல் இருக்கிறது, பஸ்ஸுக்கு பஸ் விலை மாறுதல் இருக்கிறது என்று சொன்னதாக ஞாபகம். இல்லையென்றால், எல்லோருக்கும் ஒன்றாகக் கொடுத்தால் எனக்குத் திருப்திதான். ஆனால் என்ன இருந்தாலும் லாபம் அதிகமாக இருந்த பஸ் சர்வீஸ் என்பது இன்றைக்காவது நிரூபிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அவர்கள் நஷ்டத்தைத்தான் காட்டிக்கொண்டிருந்தார்கள் என்பதைத்தான் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால் இந்த பஸ்களை, சீக்கிரமாக 6,000 பஸ்களையும் அரசாங்கமே ஏற்று நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். நான் ஆரம்பித்த விஷயம் என்னவென்றால் இப்படித் தனித் தனி கார்ப்பரேஷன் என்றில்லாமல் சென்ட்ரலிலே ஒரு கார்ப்பரேஷனை மட்டும் வைத்து ஒவ்வொரு பகுதியிலேயும் அதற்காக பொறுப்புள்ள அதிகாரியை வைத்து, அவர்களே முடிவெடுக்க வேண்டுமென்று ஆரம்பித்தால் இன்றைக்கு இந்த கார்ப்பரேஷன்களினால் என்ன நன்மைகள் கிடைக்கின்றனவோ அதே நன்மைகள் அதன்மூலம் கிடைக்கும். அப்படியில்லாமல் தனித்தனி கார்ப்பரேஷன் என்று வைத்து, 500 பஸ்தான் இருக்க வேண்டுமென்றாலும் அங்கேயுள்ள தொழிலாளர்கள் பூராவையும்

ஜெனரல் மேனேஜர் பார்ப்பதற்கு முடியுமா? பெரும்பெரும் தொழிற்சாலைகளை நானும் பார்த்து விஷயங்களைப் புரிந்துகொண்ட நிலையில்தான் இது தெரிகிறது. எனவே ஒரு கார்ப்பரேஷனை வைத்துக்கொண்டு, பல ரீஜன்களாகப் பிரித்து, அந்த ரீஜனில் உள்ள அதிகாரிக்கு முழு அதிகாரத்தையும் கொடுத்து அட்டாதிசி செய்தால் இன்றைக்கு உள்ள அந்த அனுபவத்தை அந்த முறையில் பயன்படுத்துவதாக இருக்கும். இல்லையென்றால் ஒவ்வொரு ஜில்லாவிற்கு ஒரு கார்ப்பரேஷன் என்று போய்விடுமோ என்ற அச்சம் இருக்கிறது.

அடுத்தபடியாக, இந்த பஸ்களைத் தேசியமயமாக்கியதைப் போன்று அந்த முறையிலே லாரிகளையும் தேசிய மயமாக்குகின்ற நடவடிக்கைகளில் இறங்க வேண்டும். இதில் படிப்படியாகப் போகலாம். இல்லையென்றால் எனக்கு ஏற்படுகின்ற அச்சமெல்லாம், 1975-76 வரையிலே தேசிய மயமாக்கப்படும் என்று சொல்லிவிட்டு எங்கே தேசியமயமாக்காமல் போய்விடுமோ என்ற அச்சம் இருப்பதால்தான் இந்த ஆண்டிலேயிருந்தாவது எடுப்பார்களா என்று அறிய ஆசைப்படுகிறேன்.

தேசிய மயமாக்குவதில் சீரியசாக இருந்தால் புதிதாக, டெம்பரரி பர்மிட் கூட கண்டிப்பாகத் தனியாருக்குக் கொடுக்கப்பட மாட்டாது என்று திட்டவட்டமாக அறிவிக்க வேண்டும். ஆனால் நிலைமை அப்படி இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, ஜனங்களுடைய நன்மைகள் சம்பந்தமாக நான் சில வார்த்தைகளைச் சொல்ல ஆசைப்படுகிறேன். இன்றைக்கு பஸ் போக்குவரத்தில் அதிகமான ஜனங்கள் பயணம் செய்கிறார்கள் என்பதில் சந்தேகமே இல்லை. இன்றைக்கு இரவு பஸ்கள் நன்றாகத்தான் ஓடுகின்றன. அப்படி ஓடும்பொழுது பாசஞ்சர்களுக்குப் போதுமான வசதி செய்து கொடுக்கப்படவில்லை. மதுரையிலே பிரயாணிகளுக்கு வசதி கிடையாது. எனவே முக்கியமான இடங்கள் என்று மட்டும் இல்லாமல் "எல்லா அரசுப் பஸ்போக்குவரத்துப் பஸ் நிலையங்களிலும் பொதுமக்களுக்கு (பயணிகளுக்கு) உதவி செய்ய தகவல் அளிக்கும் ஒரு தனி அலுவலர் நியமிக்கப்பட வேண்டும்" என்று 49-வது வெட்டுத் தீர்மானத்தில் கொடுத்திருக்கிறோம். யாரையோ புதிதாகப் போட வேண்டுமென்று சொல்லவில்லை. இப்பொழுது செக்கிங் இன்ஸ்பெக்டராக இருப்பவர்களை, அந்த ரூட்டைப் பற்றி நன்றாகத் தெரிந்தவர்களை முழு நேர ஊழியர்களாகப் போட்டு—8 மணி நேரத்தில் ஒரு ஷிப்ட் என்று போட்டு ஜனங்களுக்கு வசதி செய்து கொடுக்க வேண்டும். இல்லையென்றால் செக்கிங் இன்ஸ்பெக்டராக இருப்பவரே டைம் கீப்பராகவும் இருப்பார், அவரே கணக்கையும் எழுத வேண்டியதாக இருக்கிறது. அவர் ஜனங்கள் மத்தியில் கோபம் காட்டாமல் பதில் சொன்னார் என்று சொன்னால் அது அவருடைய பொறுமையைத்தான் காட்டுவதாக இருக்கும். இன்னும் ஜனங்களுக்கு என்னென்ன வசதிகளைச் செய்ய வேண்டுமென்பதைப்பற்றி ஆலோசனைக் குழுவில் கொடுத்திருக்கிறோம். அவைகளையும் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





இப்பொழுது பத்திரிகைகளிலே படிக்கும்பொழுது பாசஞ்சர்களாகப்போனவர்களில் இரண்டு பேர்கள் விழுந்து செத்துவிட்டார்கள், ஓடிப்போய் ஏறியவர்கள் கீழே விழுந்து இறந்தார்கள் என்ற செய்திகள் வருவது ரொம்ப வழக்கமாகப் போய்விட்டது. இனிமேல் பஸ்ஸில் பிராயணம் செய்தபொழுது இறந்துவிட்டார்கள் என்ற நிலைமையை வராமல் இருக்க வேண்டும் இந்த இலாக்காவைப் பொறுத்தவரையில்.

அடுத்து தொழிலாளர்கள் சம்பந்தமாக இருக்கும் ஒன்றிரண்டு முக்கியமான விஷயங்களைச் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு லாரி ஓட்டுபவர்கள் "ஹெவி வெகிகில்ஸ்" லைசென்ஸ் வைத்துக்கொண்டுதான் ஓட்டுகிறார்கள். ஆனால் பஸ் அதைவிட ஹெவி வெகிகிளாக இருந்தும், நம்முடைய தொழிலாளர்களுக்கு இந்த முனிசிபாலிட்டியிலே, பி. டபிள்யூ. டி. இலாக்காவிலே லாரி ஓட்டுபவர்களுக்குக் கூட 210 ரூபாய் பேசிக் வேஜ் என்று இருக்கிறது, ஆனால் இங்கே 160 ரூபாய்தான். அதேபோல் அங்கே கண்டக்டருக்கு 200 ரூபாய், இங்கே 150 ரூபாய்தான். எனவே இவர்களுக்கு என்ன பாதுகாப்பு இருக்கிறது? இதில் நுழைந்து பார்த்தால்தான் மாற்றிவிட முடியும் என்பதில் சந்தேகமில்லை.

அதேபோல் தண்டையார்பேட்டையிலே சஸ்பென்ஷனில் வைக்கப்பட்டிருக்கும் 78 தொழிலாளர்கள் திரும்ப வேலைக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து பஸ் ரூட் சம்பந்தமாக ஒன்றிரண்டு விஷயம் வந்தது, எனக்குத் தெரியும். நானும் முயற்சித்தேன். மதுரையிலிருந்து கொண்டு, எப்படியாவது டி.வி.எஸ்., பஸ்களை அரசு ஏற்று நடத்த வேண்டும் என்று இருபதாண்டுகளுக்குமேல் பெரியக்கம் நடத்தியவர்களில் நானும் ஒருவன் என்ற முறையில் சொல்கிறேன். டி.வி.எஸ் தேசியமயமாக்கப்பட்டிருக்கிறது.

ஆனால் அதே நேரத்தில் டி.வி. எஸ்ஸை விட பலமாக இருக்கிற பஸ் டிரான்ஸ்போர்ட்டைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். அரசாங்கம் உண்மையிலேயே இன்றைக்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று விரும்பினால் பஸ் டிரான்ஸ்போர்ட்டில் கோடிக் கணக்கான ரூபாயை சம்பாதித்து ஒதுக்கி வைத்திருக்கக்கூடிய ஜெயவிலாஸ் பஸ் நிறுவனத்தை, மதுரை, ராஜபாளையம், அருப்புக்கோட்டை சர்வீஸில் போகக் கூடிய நிறுவனத்தை எடுத்துக் கொள்ளாக வேண்டும். அவர்கள் காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலேயே காங்கிரஸ் அமைச்சர்களைக் கையில் போட்டுக் கொண்டிருந்தார்கள். அதே மாதிரி இன்றைக்கும் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் சம்பந்தப்பட்ட அமைச்சர்களைக் கையில் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் தொழிலாளர்களுக்கு சட்டப்படி எதையுமே கொடுப்பது கிடையாது.

<u>மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்</u>: சம்பந்தப்பட்ட அமைச்சர் யாருடைய கையிலும் இல்லை, பையிலும் இல்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி: யார் அமைச்சர் என்று நீங்களே விசாரித்துக்கொள்ளுங்கள். நீங்கள் இல்லையென்றால் வேறு யாராவது இருக்கலாம். நான் அந்த அமைச்சரின் பெயரைச் சொல்லக்கூடாது. தனிப்பட்ட அமைச்சரைக் குறைசொல்ல வேண்டுமென்று விரும்பவில்லை. அந்த மாவட்ட அமைச்சராக இருக்கலாம் என்று வைத்துக்கொள்ளுங்களேன். அல்லது வேறு அமைச்சராக இருக்கலாம். அவர்கள் ஓவர் லோட் ஏற்றினாலும் சரி, யாராவது அவர்களை சார்ஜ் பண்ணினாலும் சரி ஒன்றும் செய்ய முடியாது. இப்படி ஒரு தனி ராஜ்யம் நடத்த வேண்டுமா? இது மதுரை நகர மக்களுக்கு அவமானம். மதுரை ராமநாதபுரத்து மக்களை அவமானப்படுத்துவதாக உள்ளது.

அவர் டெக்ஸ்டைல் யூனிட் ஒன்று நடத்தினார். அதிலும் தொழிலாளிகள் கொடுமைப்படுத்தப்படுகிறார்கள். நாடு பூராவிலும் இருக்கக்கூடிய ஒப்பந்தத்தை அவர் ஏற்றுக்கொள்ள மாட்டார். இந்த அளவுக்கு ஒரு எம்ப்ளாயர்—

An employer who is indulging in unfair labour practices and unsocial things, is being encouraged and that monopoly should be broken and if that monopoly is broken, that will be a real feather in the cap of the Hon. Minister .

என்று மட்டும் அதைப் பற்றிச் சொல்லவிரும்புகிறேன்.

இதே மாதிரி நம்முடைய மாண்புமிகு மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். 40 சிங்கிள் சம்பந்தமாகச் சொன்னார்கள். மதுரை திருச்சி ரூட்டில் ரொம்ப நல்ல முறையில் 400 ரூபாய் கிடைத்து வருகிறது. எவ்வளவு பஸ் போட்டாலும் ஓடும், வசூலாகும். ஆனால் 48 டைமில் ரூட் நம்பர் 390, 391 அதே மதுரையிலிருந்து பழனிக்கு போகக்கூடிய பஸ்கள் கான்சல் ஆகி வருகின்றன. மதுரை—இராமநாதபுரம் பஸ்கள் கான்சலாகியிருக்கின்றன. மதுரை—கன்னியாகுமரி பஸ்கள் கான்சலாகியிருக்கின்றன. மதுரை—செங்கோட்டை கான்சலாகியிருக்கின்றன. அவையெல்லாம் கான்சலாக்கப்பட்டு இந்த 48 சிங்கிள் மட்டும் கான்சலாகாமல் போவதால் எனக்கு [illegible] சந்தேகம் ஏற்படுகிறது. ஏதோ நோக்கத்தோடு செய்கிறார்களோ என்ற எண்ணம் ஏற்பட்டிருக்கிறது. இதற்குப் பதிலாக மற்ற இடங்களுக்குப் போடுவது என்ற நிலை ஏற்பட்டால் ரொம்ப உதவிகரமாக இருக்கும் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். குறிப்பாக, மொனாபலியை உடைக்கவேண்டும்; மொனாபலியை அனுமதிக்கக் கூடாது. அதே நேரத்தில் லாரி சர்வீசையும் அரசு ஏற்று நடத்துவது உதவிகரமாக இருக்குமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:—மதுரை-திருச்சி வரை இருக்கும் மொனாபலியை உடைக்க வேண்டுமா? வேண்டாமா?



D
VRII,31 N74.
31 N74. 9



திரு. கே. டி. கே. தங்கமணி: 48 சிங்கிளை 30 ஆக்கட்டும். 48 சிங்கிள் போட்டு மற்றத் தேவைகளைப் பூர்த்தி பண்ணும் அளவுக்கு வெகிகிள்ஸ் இருக்குமென்று சொன்னால் பரவாயில்லை.

It is to the detriment of the other people அந்தமாதிரி வருகிறது.

இன்னொரு முக்கியமான விஷயம்—டயர் சம்பந்தமாக சிவியராக எக்ஸ்பர்ட்ஸ் சொல்லட்டும். எக்ஸ்பிரஸ் பஸ்களுக்குப் போடப்படக்கூடிய டயர்கள் புதிதாக இருந்தால் 20 நாளைக்குமேல் வராது; ரீட்ரீட் பண்ணியதாக இருந்தால் 14 நாளைக்குமேல் வராது. இன்றைக்கு ஓப்பன் மார்கெட்டில் டயர் ஸ்கார்சிடி இருக்கலாம். ஆனால் ஒரு டயருக்கு 500 ரூபாய் அதிகமாகக் கொடுத்தால் எவ்வளவு டயர் வேண்டுமானாலும் கிடைக்கிறது. டயர் இல்லையென்ற காரணத்தால் பல பஸ்கள் கான்சலாக கூடிய நிலைமை இருக்கிறது.

61647

நான் அதிகமாக டிரான்ஸ்போர்ட் பஸ்ஸில் போகக்கூடியவன். என்னுடைய பாஸைப் பார்த்தாலே பழைய [illegible] வக்கீலின் கவுன் போல இருக்கிறது. அந்த அளவுக்கு [illegible] கவுன் பழசாகி இருந்தால் நல்ல வக்கீல் என்ற அர்த்தம் [illegible] என்ற அர்த்தம்; அவ்வளவு சர்வீஸ் உள்ளவர் என்ற அர்த்தம். நான் என்னை பெரிய மனிதன் என்று வைத்துச் சொல்லுகிறேன். அதிகமாக டிரான்ஸ்போர்ட்டை பயன்படுத்துபவன் என்ற முறையில் சொன்னேன்.

மதுரையிலிருந்து மெட்ராஸுக்கு 551 லேட்னிக் சர்வீஸ் இரவு 9-20க்கு புறப்பட்டு காலை 7-00 மணிக்கு வந்துவிடும். குடும்பத்தோடு காத்திருக்கிறார்கள். 9-20, 10-20, 11-00 ஆகிறது. ஆனால் ஆர்டினரி பஸ் வருகிறது. லேட்னிங் கான்சலாகிவிடுகிறது. ரயிலில் செல்லுவதை விட குடும்பத்தோடு பஸ்ஸில் செல்லக்கூடியவர்கள் அதிகமாகிக் கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையில் லேட்னிங் பஸ்கள் கான்சல் செய்யப்படுவதைத் தவிர்க்க வேண்டும். அவர்கள் முன் கூட்டியே ரிசர்வ் செய்கிறார்கள். அப்படி கான்சல் பண்ணுவதாக இருந்தால் முன் கூட்டியே சொல்ல வேண்டும். சில ரூட்டுகளில் கண்டிப்பாக பஸ் ஓட்டுவோம் என்ற நிலைமை ஏற்பட வேண்டும். மதுரை-தூத்துக்குடி பல தடவை கான்ஸலாகி இருக்கிறது. மதுரை-செங்கோட்டை பலதடவை கான்சலாகி இருக்கிறது. ரூட்டுகளில் பஸ்கள், கான்சலாகாமல் இருக்க டயர்களை ஸ்டாக் பண்ண வேண்டும்.

நம்முடைய அமைச்சர் அவர்கள் எலக்ட்ரிகல் என்ஜினியராக இருந்தாலும் மெயின்டனன்ஸ் சம்பந்தமாக அதிகமாகக் கவலை எடுத்துக் கொண்டிருப்பவர்கள். இன்றைக்கு டெப்போ சூப்பரின்டென்டுகளாக நல்ல திறமைசாலிகளை கவனமாகப் பார்த்து நியமித்திருக்கிறார்கள். மெயின்டனன்ஸ் சம்பந்தமாகவும், டயர் சம்பந்தமாகவும் விசேஷ கவனம் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்வதோடு பிரஸ்ஸுக்கு பாஸ் கொடுக்க வேண்டுமென்பதை ஒத்துக்கொண்டு 10 பேருக்குத்தான் கொடுக்கப்பட்டிருப்பதாகச் சொல்லுவதையும் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

[1974 மார்ச் 15

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இந்த மானியத்திலே பல்வேறு மாண்புமிகு உறுப்பினர்கள் கலந்துகொண்டு நல்ல ஆலோசனைகளையும், பாராட்டுதல்களையும் தெரிவித்ததற்காக முதலில் என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கு வெட்டுத் தீர்மானங்கள் பலவற்றை விளக்கங்கள் பெறவேண்டுமென்று கொடுத்திருந்தாலும் எல்லா வெட்டுத் தீர்மானங்களுக்கும் விளக்கம் அளிப்பது என்பது இயலாத காரியம். ஆகையினாலே சில வெட்டுத் தீர்மானங்களையொட்டி என்னுடைய பதில் விளக்கங்கள் இல்லையென்ற காரணத்தால் அதைப்பற்றி எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கமாட்டார்களோ என்று எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ஐயப்படத் தேவையில்லை.

இங்கே மாண்புமிகு உறுப்பினர் கே. டி. கே அவர்கள் எடுத்துச் சொன்னதுபோல் அத்தகைய வெட்டுத் தீர்மானங்களுக்குத் துறையின் மூலம் பதில் அனுப்பப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முதலாவதாக, போக்குவரத்துத் துறையை பற்றி மொத்தமாக எடுத்துக் கொண்டால்-அரசாங்கம் நடத்துகிற போக்குவரத்துத் துறையினைப் பற்றிப் பின்னால் பேசுகிறேன்-கழக அரசு பொறுப்பேற்ற 1967-ம் ஆண்டில் கழக அரசுக்குப் போக்குவரத்துத் துறையின் மூலம் கிடைத்த வருவாய் 15 கோடி. ஆனால் இன்றைய தினம் கழக அரசுக்குப் போக்குவரத்து மூலம் கிடைக்கின்ற வருவாய் 35½ கோடி ரூபாய் ஆகும். 1967-ல் இருந்து 1974 வரை இப்போது வாகன வரி உயர்த்துவதாகக் குறிப்பிட்டிருக்கிறோமே அதையும் சேர்த்துப் பார்க்கும்போது 15 கோடி ரூபாயிலிருந்து 35½ கோடி ரூபாய்க்கு வரி உயர்ந்திருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். ஆனால் அதே நேரத்தில் கட்டணத்தைப் பார்க்கிறபோது 1964-ஆம் ஆண்டில் 3 பைசா என்று நிர்ணயிக்கப்பட்டது 1974-ஆம் ஆண்டு வரை அதே 3 பைசாதான் தொடருகிறது. கட்டணத்தைப் பொறுத்தவரை ஒரே நிரந்தரமான நிலைமை இருக்கிறது என்பதோடு மட்டுமல்ல; இன்னும் சொல்லப்போனால் 1964-ல் 3 பைசா என்று கொடுத்தால் 1974-ல் அதனுடைய மதிப்பு 1½ பைசாதான்.

(பிற்பகல் 1·00.)

ஏன் இதைக் குறிப்பிடுகிறேன் என்றால் பொதுமக்கள் பயணம் செய்கிறபோது அவர்களுக்கு எந்தளவிற்கு போக்குவரத்துத் துறை மூலம் சலுகை கிடைத்திருக்கிறது கடந்த பத்தாண்டுகளில் என்பதை எடுத்துக் காட்டுவதற்காகத்தான்.

வரி உயர்வை பஸ் அதிபர்களும் அதேபோல் அரசுப் போக்குவரத்து நிறுவனங்களும் கட்டியிருக்கிறதே தவிர பயணிகளைப் பொறுத்தவரையில் அவர்களது கட்டணத்தைக் குறைத்திருக்கிறது என்பதை எடுத்துக்



1974 மார்ச் 15] [திரு. செ. இராமச்சந்திரன்]

காட்ட விரும்புகிறேன். இதைக் குறைப்பதற்குக் காரணம் அதில் பயணம் செய்கிறவர்கள் அவர்கள் அலுவலகங்களில் பணியாற்றுகிறவர்களானாலும் சரி அல்லது தொழிற்சாலைகளில் பணியாற்றுகிறவர்களானாலும் சரி அவர்களுக்கெல்லாம் ஊதியம் உயர்ந்திருக்கும், பஞ்சப்படி உயர்ந்திருக்கும், அடிக்கடி சம்பளம் அதிகம் பெற்றுக்கொண்டிருப்பார்கள்.

1964 வாழ்க்கைச் செலவுப் புள்ளி 547. ஆனால் 1974 ஜனவரியில் 1133. வாழ்க்கைச் செலவுப் புள்ளிக்கு ஏற்ப அவர்கள் வருமானம் உயர்ந்துள்ளதைக் கணக்கிட்டு போக்குவரத்துக் கட்டணத்தை நாம் உயர்த்திருப்போமானால் இன்றையதினம் கிட்டத்தட்ட ஆறு பைசா அளவிற்கு வந்திருக்குமானால் அதுவே சரியாக இருந்திருக்கும். ஆக கடந்த பத்தாண்டுக் காலத்தில் பொதுமக்களைப் பொறுத்தவரையில், பயணிகளைப் பொறுத்தவரையில் சாதாரண ஏழை எளிய மக்கள் பயன்படுத்துகிற பேருந்து என்ற காரணத்திற்காக கட்டணத்தை உயர்த்தாதது மட்டுமல்ல கட்டணச் சலுகையும் இந்தப் போக்குவரத்துத் துறை பொதுமக்களுக்கு அளித்திருக்கிறது.

நேற்றைய தினம் எதிர்க் கட்சித் தலைவர் திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் பேசுகிறபோது பேரறிஞர் அண்ணா அவர்கள் 1967-ல் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன் நாங்கள் வரியே போடமாட்டோம் என்று சொல்லவில்லை. tap the rich and pat the poor. என்ற அந்தத் தத்துவத்தின்படி தாங்கப்பட்டவர்கள் மீது வரி விதித்து தாங்க இயலாதவர்களுக்கு நன்மை செய்வோம் என்று அன்று அவர்கள் எடுத்துச் சொன்னார்கள் என்பதைக் குறிப்பிட்டார்கள். அந்தத் தத்துவத்தின் நடைமுறைதான், தாங்குகிறவர்கள் மீது வரி விதித்து தாங்க முடியாத ஏழை எளிய மக்களுக்கு கட்டணச் சலுகை என்ற முறை கடைப்பிடிக்கப்பட்டது என்றால் அண்ணாவின் கொள்கைகளை கடைப்பிடிக்கக்கூடிய, நிறைவேற்றக்கூடிய அரசு. இதைவிட வேறு எந்த அரசு இருக்கிறது என்பதை நீங்கள் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்.

அதேபோல் போக்குவரத்துத் துறையைப் பொறுத்த வரையில் பல்வேறு விபத்துக்கள் நடைபெறுகின்றன. விபத்துக்கள் நடந்த இடங்களுக்கு மோட்டார் வாகன ஆய்வாளர்கள் உடனடியாக வருவதில்லை என்றும் இரவில் எல்லாம் வண்டிகளும் சரியாக பராமரிக்கப்படுகின்றனவா என்றும், பழுதுபார்த்து பிட்னஸ் சர்டிபிகேட்டுக்கு வரும்போது அதை ஒழுங்காகக் கவனித்து அனுப்புகிறார்களா என்றும் இப்படி பல்வேறு வகையில் பல்வேறு பிரச்னைகளை மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள்.

போக்குவரத்து இலாகாவைப் பொறுத்தவரையில் ஒரு நிர்வாகச் சீரமைப்பை மேற்கொள்வதற்கு இருக்கிறோம். இதுவரையில் இருந்து வந்த அமைப்பு முறைகளை எல்லாம் மாற்றி முக்கியமான நகரங்கள் என்று பார்த்து அந்தந்த வட்டாரங்களில் எவ்வளவு வண்டிகள் இயங்குகின்றன, வண்டிகளின் தொகை என்ன, போக்குவரத்து வண்டிகளின் தொகை

[திரு. ச. இராமச்சந்திரன்] [1974 மார்ச் 15]

என்ன, என்ற கணக்கைப் பார்த்து அதற்குத் தகுந்த முறையில் தமிழ் நாடு முழுவதும் போக்குவரத்துத் துறையைப் பொறுத்தவரையில் மாற்றி யமைப்பதற்கான நிர்வாகச் சீரமைப்பு ஒன்று அரசின் பரிசீலனையில் உள்ளது.

இப்போது ஒரு மாவட்டத்திற்கு கலெக்டர், ஆர்.டி.ஏ. ஆகவும், அவரிடம் ஒரு ஆர்.டி.ஓ. என்று இப்போதுள்ள அமைப்பு இருக்கிறது. இந்த அமைப்பை மாற்றி ஆங்காங்கு வட்டார அளவில் ஆர்.டி.ஓ.-க்கள், இன்னும் மோட்டார் வெகிக்கில்ஸ் இன்ஸ்பெக்டர்கள் வண்டிகளின் தொகைக்கு ஏற்ப இருக்கும் விதத்தில் அறிவியல் கருத்துப்படி 'On a Scientific basis' என்று சொல்வதுபோல் நிர்வாகச் சீர்திருத்தத்தை இந்த ஆண்டு மேற்கொள்வதாக இருக்கிறோம். அதன் மூலம் போக்குவரத்துத் துறை யில் ஒரு புதிய மாற்றத்தை, ஒரு புதிய விழிப்புணர்ச்சியை மாண்புமிகு உறுப்பினர்கள் எதிர்பார்க்கிறபடி கொண்டு வரமுடியும் என்று நான் கருதுகிறேன்.

தேசியவுடைமையாக்குகிற வேகத்தைப்பற்றி எதிர் கட்சித் தலைவர் அவர்கள் இங்கு பேசுகிறபோது எடுத்துச் சொன்னார்கள். இந்த ஒரு துறையை மட்டுந்தான் எடுத்துக்கொள்ள வேண்டுமா என்று கூட மாண்பு மிகு உறுப்பினர். திரு. லத்திப் அவர்கள் பேசுகிறபோது குறிப்பிட்டார்கள். பயணிகளுக்கு, சொல்லப்போனால் பொது மக்களுக்கு இன்றியமையாத ஒரு துறையாக இருக்கக்கூடியது போக்குவரத்துத் துறை, அன்றாடம் அவர்களுக்குத் தேவைப்படுகிறது போக்குவரத்துத் துறை, அதைத் தனியா ரிடம் ஒப்படைத்துவிட்டு நாம் இந்தச் சீரான போக்குவரத்து வசதியையும் பொதுமக்களுக்கு ஏற்படுத்தித் தரவில்லை என்றால் அது சரியாகாது.

சொல்லப்போனால், முதலாளித்துவ பொருளாதாரம் உள்ள நாடுகளில் கூட போக்குவரத்து அரசாங்க மேற்பார்வையில் இயங்குகிறது. எஸன் ஷியல் சர்வீஸ் என்று சொல்வார்கள். அந்த வகையில் பேரறிஞர் அண்ணா அவர்களும் போக்குவரத்துத் துறை அரசின் கையில் இருக்க வேண்டும், பஸ்கள் தேசியவுடைமையாக்கப்பட வேண்டும் என்று இன்று நேற்றல்ல, 1959-ல் இருந்து வற்புறுத்தி வந்தார்கள் என்பதை அனைவரும் அறிவோம். அவர்களது கொள்கை சொல்லப்போனால், அவர்கள் மிக அழகாகச் சொல்லியிருக்கிறார்கள். "வரிகளைப் போட்டுத் தான் நாட்டை ஆளவேண்டும் என்றால் சர்க்காருக்கும், சத்திரம் சாவடிகளுக்கும் ஒரு வித்தியாசமும் இல்லை. ஒரு சர்க்காருக்குள்ள வருவாய் இரண்டு விதத்தில்தான் இருக்க வேண்டும். ஒன்று, வரி மூலம், இரண்டாவது, வருவாய் தரக்கூடிய எல்லாத் துறைகளையும் சர்க்கார் கைப்பற்ற வேண்டும். தனியார் கையில் இருக்கிறதே தனவந்தர் கையில் இருக்கிறதே என்று பற்றோ பாசமோ குறுக்கிடக்கூடாது." இது 24—7—1957-ம் நாளில் இதே மன்றத்தில் பேரறிஞர் அண்ணா அவர்கள் பேசிய பேச்சின் ஒரு பகுதியாகும். ஆகவே வருவாய் தரக்கூடிய தொழில் கள் அரசின் கைக்கு வரவேண்டும்.



1974 மார்ச் 15]

திரு. எம். ஏ. லத்தீப்: நான் சொல்வது, பஸ் தொழிலை மட்டும் ஏன் எடுத்துக்கொண்டீர்கள் என்று கேட்டு பஸ் தொழிலை தேசிய மயமாக்கியது தவறு என்றோ அல்லது எதிர்த்தோ சொல்லவில்லை. அந்தத் துறை முழுமையையும் தேசியமயமாக்காமல் ஒரு சிலரிடம் சில வற்றினை விட்டு வைத்து இருக்கிறீர்களே, அது ஏன் என்றுதான் கேட் டேன். 64-ல் ஏற்படுத்தப்பட்ட கட்டணத்தை இன்றும் வைத்துக்கொண்டு மற்றத் துறைகளிலுள்ள கட்டணங்களை உயர்த்துகிறீர்களே, இந்த பஸ் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு மட்டும் அந்தச் சலுகை கொடுக்காமல் அவர்களை மிகுந்த இன்னல்களுக்கு ஆளாக்கியிருக்கிறீர்களே, இது காப் பிட்டல் பார்மேஷன், அல்லது ஆப்பரேஷனல் மெஷினரியை சரியாக நடத்துவதற்குப் பாதகமாக இருக்கிறதே, அது ஏன் என்று கேட்டேனே தவிர பஸ்களை தேசியமயமாக்குவதை நான் எதிர்க்கவில்லை. முழுமையாக தேசியமயமாக்கி விடுங்கள், இந்த மாதிரியான இரண்டும் கெட்டான் நிலையில் வைக்காதீர்கள் என்றுதான் சொன்னேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: உறுப்பினர் அவர்கள் கொடுத்த விளக்கத்திற்கு நன்றி. முழுமையாக பஸ்களை தேசியமய மாக்க வேண்டும் என்பதுதான் இந்த அரசின் கொள்கை, அரசாங்கக் கொள்கை மட்டுமல்ல. இந்தச் சட்ட மன்றத்தில் நிறைவேற்றியிருக்கிற ஒரு சட்டமும் கூட. 76 வரையில் நாங்கள் பஸ்களை தேசியமயமாக்க மாட்டோம் என்று திருமதி அனந்தநாயகி அவர்கள் சொன்னார்கள். திரு. ஜேம்ஸ் அவர்கள் இன்னும் பத்தாண்டுகள் ஆகும் என்று சொன் னார்கள்.

தேசியமயமாக்கும் திட்டத்தில் காலதாமதம் ஆவதற்குக் காரணம் என்ன என்பதை இந்தச் சபை உறுப்பினர்களின் கவனத்திற்கு நான் கொண்டு வருவது என் கடமை என்று கருதுகிறேன். மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் 1967-ம் ஆண்டு பொதுப்பணித் துறை அமைச்சராக இருந்தபோது 75 மைல்களுக்கு மேல் உள்ள வழித் தடங்களையும், சென்னை மாநகரத்தையும், கன்னியாகுமரி மாவட்டத்தையும் தொடுகிற வழித்தடங்களையும் அரசு மேற்கொள்ளும் என்று அறிவித் தார்கள்.

1967-ல் இருந்து 1974 வரையில் பார்க்கிறபோது இந்த ஏழாண்டு களில் அந்த பஸ்களையெல்லாம் தேசியவுடைமையாக்கியிருக்க வேண்டும். ஆனால் அறிவித்த பிறகும்கூட, கொள்கையை எடுத்துச் சொல்லிய பிறகும் கூட அந்த பஸ்களை தேசியவுடைமையாக்கப்படாததற்கு காரணம் என்னவென்பதை இந்தச் சபை நன்கு உணர்ந்துகொள்ள வேண்டும்.

419 வழித்தடங்கள் அந்தக் கொள்கைப்படி அரசாங்கம் மேற்கொண் டிருக்கவேண்டும். எவ்வளவோ வழக்குகளுக்குப் பிறகு, வம்புகளுக்குப் பிறகு அரசாங்கம் மேற்கொண்டிருக்கிற வழித்தடங்களின் எண்ணிக்கை 126 தான். இன்னும் 293 வழித்தடங்களை மேற்கொள்வதில் நீதி

மன்றங்களானாலும் சரி, அல்லது உயர்நீதி மன்றமானாலும் சரி, அல்லது உச்ச நீதிமன்றங்களானாலும் சரி பல்வேறு வகைகளில் சட்ட நுணுக்கங்களைக் காட்டி தடை செய்துகொண்டிருக்கிறார்கள் என்பதையும் இந்த மன்றம் கணக்கில் எடுத்துக்கொள்ளுமானால் இந்த பஸ்களை தேசிய வுடைமையாக்குவதில் ஏன் நாம் விரைவாகச் செல்லமுடியவில்லை என்பதை உணர்ந்து கொள்ளமுடியும்.

இந்தக் கணக்குப்படி பார்த்தால் இந்த 293 வழித்தடங்களுக்குமே இன்னும் பத்து பதினைந்து ஆண்டுகளாகுமோ என்ற நிலை இருந்து கொண்டிருக்கிறது. இதையெல்லாம் உணர்ந்த காரணத்தினால்தான் ஐந்தாண்டுகளுக்குள் பஸ்கள் அனைத்தையும் எடுத்துக்கொள்ள வேண்டிய ஒரு உறுதியான, நல்ல, தெளிவான, முழுமையான சட்டத்தை இந்தியத் துணைக்கண்டத்திலேயே முதன்முதலாக இந்த மன்றத்தில் தான் நிறைவேற்றினது. ஆனால் அந்தச் சட்டத்தை சென்னை உயர் நீதிமன்றம் செல்லாது என்று தீர்ப்பு கூறிவிட்டார்கள். அந்த சட்டப் படி நாம் நீலகிரி மாவட்டத்திலுள்ள பெருந்துகளை எடுத்தோம். அந்தச் சட்டம் உச்ச நீதிமன்றத்தில் இன்னும் தூங்கிக் கொண்டிருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது. நாம் எவ்வளவோ தடவை வற்புறுத்தியும் கூட அதை ஏனோ உடனடியாக எடுத்துக்கொள்ள மறுக்கிறார்கள், மர்மம் தெரியவில்லை.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : I think the Supreme Court has decided in your favour. You have power to nationalise.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : 5 ஆண்டுகளுக்குள் பஸ்களை தேசியவுடைமையாக்க வேண்டுமென்று இந்த சட்டமன்றம் நிறைவேற்றிய சட்டத்தை சுப்ரீம் கோர்ட் இன்னும் பரிசிலனைக்குக் கூட எடுத்துக்கொள்ளவில்லை என்பதை மாண்புமிகு அனந்தநாயகி அம்மையார் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

இன்னும் சொல்லப்போனால், இந்த வழக்கில் மத்திய அரசும், மாநில அரசும் சேர்ந்து வாதாட வேண்டியிருக்கிறது. மாநில சர்க்காரின் வக்கீல் தயாராக இருந்தாலும், மத்திய சர்க்கார் வக்கீல் தவணை கேட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு அம்மையார் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்வதோடு, இந்த நிலைமை நீடிக்குமானால் இன்னும் எவ்வளவு நாளைக்கு காலதாமதம் ஆகும் என்று சொல்ல முடியாது. இந்தச் சட்டம் செல்லும் என்று சொன்னால், இந்த அரசாங்கம் எவ்வளவு விரைவில் செயல்படும் என்பதை நாம் உணர்ந்துள்ளோம். ஆனால், நல்லவேளை 50 பெருந்துகள், அல்லது அதற்கு மேல் பெருந்துகள் வைத்து இருந்தால் அவற்றை தேசியமயமாக்குவோம் என்று நிறைவேற்றிய சட்டம் முழுவதும் செயல்படுத்தப்பட்டிருக்கிறது. ஏ.பி.டி., டி.வி.எஸ்., எஸ்.ஆர்.வி.எஸ்., சக்தி விலாஸ் கம்பெனி, இராமன் அண்டு இராமன் கம்பெனிகள், நல்லவேளை, அவர்களே





அந்தச் சட்டத்தை ஒப்புக்கொண்டு அந்தப் பெருந்துகளைத் தொடர்ந்து நிறுவனங்கள், அந்தப் பணியாளர்கள் அத்தனை பேரையும் ஒப்படைத்து விட்டார்கள். அதனை காரணமாக அந்த ஒரு சட்டத்தை, இந்த சட்ட மன்றத்தில் நிறைவேற்றிய அந்தச் சட்டத்தை, முழுமையாக நிறைவேற்றியிருக்கிறோம் என்று திருப்தி பெற முடியும்.

நான் இன்னொன்றையும் சொல்கிறேன். 10 பஸ்களுக்கு மேல் வைத்துக் கொள்ளக் கூடாது என்று பெருந்துகளுக்கு உச்சவரம்புச் சட்டம் கொண்டு வந்தோம். அந்தச் சட்டத்திற்கும் நீதி மன்றத்திலிருந்து தீர்ப்பு கிடைக்கவில்லை என்பதையும், இந்தச் சட்டமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். எண்ணங்கள் நல்ல எண்ணங்களாக இருந்தாலும் கூட நிறைவேற்றக்கூடிய சட்டங்கள் முற்போக்கான சட்டங்களாக இருந்தாலும் கூட, இன்னும் தனி நபர் உரிமைகள் என்ற கருத்தின் அடிப்படையில், தனி நபர் உரிமை என்ற பெயரில் சமுதாயத்தின் நன்மைகள் பாதிக்கப்படுவதும், அதற்குத் தக்க பாதுகாப்பை நீதி மன்றங்கள் அளிப்பதற்கும் அரசியல் சட்டம் வழிவகை செய்து இருக்கிறது, என்பதையும் நாம் கவனத்தில் வைத்துக் கொள்ளவேண்டும்.

1966–67–ல், கழகம் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தபோது, இந்த நாட்டிலே ஓடிக்கொண்டிருந்த பெருந்துகள் 6,824. அதிலே தனியாரிடம் ஓடிக்கொண்டிருந்த பெருந்துகளின் எண்ணிக்கை 5,451. அரசாங்கத்திடம் இருந்த பெருந்துகளின் எண்ணிக்கை 1,373. இந்த நாட்டிலே அப்போது 1967–ல் 20 சதவிகிதம் பஸ்கள் தான் அரசாங்கத்தின் கையில் இருந்தது. மீதி 80 சதவிகிதம் பஸ்கள் தனியாரிடத்தில் இருந்தன. அது காங்கிரஸ் சர்க்காரின் சோசலிச பாணி என்று பாராட்ட விரும்புகிறேன். அதற்குப் பிறகு 1973–74ம் ஆண்டு 9,452 பஸ்கள் ஓடிக்கொண்டிருப்பதில் 5,550 பஸ்கள் தனியாரிடத்திலும், 3,902 பஸ்கள் அரசாங்கத்தினிடத்திலும் இருக்கின்றன. 5,451 என்று 1966–67–ல் தனியாரிடத்தில் இருந்த பஸ்களின் எண்ணிக்கை 1973–74–ல் 5,550 தான் இருக்கின்றன. 5,451–லிருந்து 5,550 உண்மையிலேயே அது வளர்ந்து இருக்கிறது என்பது அல்ல. ஆனால் பொதுத் துறையைப் பொறுத்த வரையில் 1,373–லிருந்து 3,902 வரை வளர்ந்து இருக்கிறது என்றால், அரசாங்கத்துறை வளர்ந்திருக்கிறது, தனியார் துறை தாழ்ந்து இருக்கிறது என்பதை நாம் தெளிவாக தெரிந்துகொள்ளலாம்.

திருமதி த. ந. அனந்தநாயகி : 5,451 -லிருந்து 5,550 வளரவில்லை என்று சொல்கிறார்கள். இவர்கள் வளர்ந்தால் வளர்ச்சி, அவர்கள் வளர்ந்தால் அது வளர்ச்சி இல்லையா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : ஒரு வேளை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு விருப்பம் இருக்குமானால், அதை வளர்ச்சி விகிதம் என்று மாற்றிக்கொள்வார்களானால், சரியான விளக்கம் கிடைக்கும் என்று நினைக்கிறேன். இவ்வளவு தடைகளுக்குப்

பிறகும் கூட, இவ்வளவு சிக்கல் களுக்குப் பிறகும் கூட, இவ்வளவு சிரமங்களுக்குப் பிறகும் கூட, இவ்வளவு ஓயாத போராட்டங்களை நீதி மன்றங்களோடு நடத்தியும் கூட, பொதுத்துறையை பொறுத்த வரை யில் நாட்டுடமையாக்கப்படுவதில் வேகம் இருக்கிறது., குறிப்பிடத்தக்க அளவிற்கு வளர்ந்து இருக்கிறோம் என்பதை நான் இந்த நேரத்தில் எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

அடுத்து, போக்குவரத்துத் துறை அரசாங்கமே பேருந்துகளை நடத்து கிற போக்குவரத்துத்துறை நிர்வாகம் பற்றி இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் பல கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். நான் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு இதே மன்றத்தில் பேசிய போது குறிப் பிட்டேன். டாக்டர் ஹாண்டே அவர்கள் அப்போது சுதந்திரா கட்சியின் தலைவராக இருந்தார்கள். அன்றைய தினம் நான் பேசுகிறபோது, அரசாங்கம் நடத்துகிற போக்குவரத்து நிறுவனங்கள் லாபத்தின் அடிப் படையில் இயங்காது என்று சொன்னபோது, பின்னர் லாபமே வராதா என்று கேட்டார்கள். அப்போது நான் அவர்களுக்குச் சொன்னதாக ஞாபகம், முதலாவதாக, பொதுமக்களின் திருப்தி. அதுதான் முதல் அடிப்படை. போக்குவரத்துக் கழகங்கள், நிறுவனங்களைப் பொறுத்த வரையில் முதலாவதாக பொது மக்களுக்கு அது திருப்தி அளிக்க வேண்டும். (பப்ளிக் சாடிஸ்பேக்ஷன்). இரண்டாவதாக அதிலே பணியாற்றும் அலுவலர்கள் அவர்கள் நல்ல குடும்பத்தில் வளமான குடும்பத்தில் உள்ளதுபோல் அவர்கள் வாழ்க்கை முறை அமைய வேண்டும். மூன்றாவதாக நமக்கு இலாபம் கிடைக்குமானால் அது நல்லது என்ற கருத்தை எடுத்துச் சொன்னேன். முதலில் மக்களுக்கு நாம் செய்யும் தொண்டு. இரண்டாவதாக, அந்தத் தொழி லில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு நலம். மூன்றாவதாக அந்தத் தொழிலில் வருவாய் கிடைக்குமானால், அதுவும் சிறந்ததுதான். இந்த மூன்று அடிப் படையின் கீழ் தான் அந்த நிறுவனங்கள் பணியாற்றும் என்று நான் எடுத்துச் சொன்னேன். அந்த அடிப்படையில் பார்க்கிறபோது இந்தப் பேரவைக்கு நான் தெரிவிக்க விரும்புகிறேன். நாமும் அந்தக் போக்குவரத்துக் கழகங்களை அமைத்து, இன்று பல்லவன் போக்கு வரத்து கழகத்திலிருந்து நாள் ஒன்றுக்கு 13 லட்சம் பேர் பயணம் செய்கிறார்கள். தமிழக அரசு பேருந்துகளில் $7\frac{1}{2}$ லட்சம் பேர் நாள் ஒன்றுக்குப் பயணம் செய்கிறார்கள். மற்ற போக்குவரத்துக் கழகங் களின் நாள் ஒன்றுக்கு $11\frac{1}{2}$ லட்சம் பேர் பயணம் செய்கிறார்கள். ஆகவே, இன்றைக்கு அரசாங்கம் இயக்குகிற பேருந்துகளின் மூலம் தமிழ் நாட்டில் உள்ள 32 லட்சம் பேர் நாள் ஒன்றுக்கு பயணம் செய்யும் வசதியை நாம் ஏற்படுத்தித் தந்து இருக்கிறோம்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது பிரயாணிகளுக்குத் திருப்தி அளித்து இருக்கிறது என்றார்கள். பிரயாணிகளுக்கு எந்த விதமான திருப்தியும் கிடை யாது ஏராளமாக ஒரு பஸ்ஸில் பிரயாணிகள் ஏற்றிச் செல்லப் படுவதால் அவர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அந்தத் திருப்தி அளிப்பதில் நீங்கள் தோல்வி அடைந்து இருக்கிறீர்கள்.





திருமதி த. ந. அனந்தநாயகி: 60 பேர் கபாசிடி கொண்ட ஒரு பஸ்ஸில் 100 பேர் ஏற்றிக்கொண்டு, புளிமூட்டை அடைப்பது போல் அடைத்துக்கொண்டு செல்கிறார்கள். அவர்களுக்கு ஒரு ரூபாய்க்கு 5 பைசா இன்சென்டிவ் கிடைக்குகிறது என்பதற்காக இப்படி புளிமூட்டை போல் அடைத்துக்கொண்டு பிரயாணிகளை ஏற்றிச் செல்வதால "சஃப கேட்" ஆகும்நிலை ஏற்படுகிறது. அதற்கு இந்த அரசாங்கம் என்ன செய்யப்போகிறது ?

திரு. சி. ஆறுமுகம்: குறிப்பிட்ட அளவுக்குமேல் பிரயாணிகளை ஏற்றிச் செல்வதாக குறிப்பிட்டார்கள். எங்கேயும் பொது மக்களை அப்படி ஏற்ற வில்லை. நான் ஒவ்வொரு நிலையத்திலும் பார்த்திருக்கிறேன். இடம் இல்லை என்று சொன்னாலும், பொதுமக்களே புட்போர்ட்டில் நின்றுகொண்டு தொங்கிக்கொண்டு வருகிறார்கள். பொது மக்கள் சர்க்கார் பஸ்ஸில் பிரயாணம் செய்ய வேண்டுமென்ற ஆர்வத்தால் தான் இப்படி ஏறி வருகிறார்கள் என்று சொல்லிக்கொள்கிறேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: ஏறுகிறார்கள். இடமே இல்லை என்றாலும் மக்கள் ஏறுவதற்கு காரணம் வேறு வழியில்லை. அதற்கு வழி உண்டாக்குங்கள் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: அரசாங்கம் நடத்தும் பேருந்துகள் மூலம் 32 லட்சம் பேர் ஒரு நாளைக்குப் பயணம் செய் கிறார்கள். மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர் சொல்வது போல் அவர்களுக்குத் திருப்தியில்லாமல் போனால் அந்த 32 லட்சம் மக்களும் அந்தப் போக்கு வரத்துத் துறையை சும்மா விட்டு இருப்பார்களா என்று கேட்க விரும்புகிறேன். சென்னை நகரத்தை பொறுத்த வரை யில், நெரிசல் நேரம் என்று ஒரு நேரம் இருக்கிறது. (பீக் அவர்ஸ்) சென்னை நகரத்திலுள்ள நிலையை வைத்துக்கொண்டு, பொதுவாக போக்குவரத்துத்துறை இயங்கும் நிலையை குறைகூறுவது நிச்சய மாக சரியாகாது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்னை நகரத்தைப் பொறுத்த வரையில் அது மாநகர வழித் தடங்களை நடத்துவது என்ற அடிப்படையில் பார்க்கிறபோது, அதிலே பல்வேறு விதமான பிரச்சினைகள் கிளம்புகின்றன என்பதையும் நான் உங்களின் கவனத்திற்குப் கொண்டுவர விரும்புகிறேன். ஏற்கெனவே என்னுடைய முன்னுரையில் எடுத்துச் சொன்னதுபோல், இந்தப் போக்கு வரத்து நிறுவனங்கள் இப்போது லாபத்தைச் சம்பாதிப்பதுக் கொண் டிருக்கின்றன. இங்கே கூட பேசுகிற போது சொன்னார்கள், இது என்ன பெரிய லாபம் என்று கேட்டார்கள். நான் உண்மையிலேயே நினைத்துக்கொண்டேன்., நஷ்டம் வந்தாலும் அவையில் கண்டிக்கிறார்கள் லாபம் வந்தாலும் அதையும் கண்டிக்கிறார்கள், பின்னர் இந்தத் துறையை எப்படி நடத்துவது என்பது எனக்கு உண்மையிலேயே புதி ராக இருந்தது. ஆனால், எதிர்க்கட்சியில் அங்கம் வகிக்கிறோம் என்ற

காரணத்திற்காக ஏதாவது எடுத்துச் சொல்ல வேண்டிய அவசியம் இருக்கும் சூழ்நிலையில் இருப்பதால், இந்த பரிதாபத்திற்கு அவர்கள் எல்லாம் ஆளாகி இருக்கிறார்கள் என்று கருதுகிறேனே தவிர வேறு அல்ல.

ஆனால் லாபம் மட்டும் என்ற கணக்கைப் பார்க்கக்கூடாது. போக்கு வரத்து நிறுவனங்களை நாம் எடுத்து கடந்த இரண்டு ஆண்டுகளாக மேற்கொண்டபொழுது 681 பேருந்துகளை மேற்கொண்டோம். இப்பொழுது 681 பேருந்துகள் தான் இருக்கிறதா என்றால் இல்லை. இரண்டு ஆண்டுகளில் 1,283 பேருந்துகள் அதிகமாக ஆகியிருக்கின்றன. வந்திருக்கக்கூடிய வருமானத்தை புதிய பேருந்துகளை வாங்கவும், புதிய பணிமனைகளைக் கட்டவும், புதிய இடங்களை வாங்கவும், அதே போல மற்ற வேலைகளுக்கு செலவிடவும் பயன்படுத்தியிருக்கிறோம். டி.வி.எஸ். நிறுவனத்தை எடுத்துக்கொண்டால் 30, 32 ஆண்டுகளாக நடத்தி அவர்கள் 340 பஸ்களை வைத்துக்கொண்டிருந்தார்கள். ஆனால், அரசாங்கம் மேற்கொண்ட இரண்டு ஆண்டுகளில் "It has doubled its capacity" அந்த அளவுக்கு "ப்ளீட் ஆஃப் எக்ஸ்பான்ஷன் விரிவாகி இருப்பதை நாம் பார்க்கிறபொழுது வருமானம் மக்களுடைய வசதிக்காக, நன்மைக்காக பயன்படுத்தப்பட்டிருக்கிறது. அதை அப்படியே வைத்திருந்து இரும்புப் பெட்டியில் பூட்டி வைக்கவில்லை என்பதையும் கவனத்தில் எடுத்துக் கொண்டால், எந்த அளவுக்கு அந்தத் துறை வருவாயை ஈட்டி த்தந்திருக்கிறது என்பதை நாம் உணர்ந்துகொள்ள முடியும்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஹாண்டே அவர்கள் பேசுகின்ற பொழுதுகூட நஷ்டக் கணக்கையெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். அந்த நஷ்டத்திற்கெல்லாம் என்ன காரணங்கள் என்று ஏன் நீங்கள் கண்டு பிடிக்கவில்லை என்று கூட கேட்டார்கள். நஷ்டத்திற்கெல்லாம் என்ன காரணங்கள் என்பதைக் கண்டு பிடித்ததன் காரணமாகத் தான், அவைகளில் என்ன ஓட்டை உடைசல்கள் இருக்கின்றன, அவற்றை எப்படி செப்பனிடமுடியும் என்பதைப்பற்றி சிந்தித்ததன் காரணமாகத்தான், நன்றாகச் செய்த சிரமத்தின் மூலமாக ,நிர்வாக சீர்திருத்த அமைப்புகள் மூலமாக, பல்வேறு போக்குவரத்துக் கழகங்களை உருவாக்கியதன் மூலமாக, அதிகாரங்களை பரவலாக ஆக்கியதன் மூலமாக, தொழிலாளிகளுடைய ஒத்துழைப்பை பெற்றதன் மூலமாக, இரண்டாண்டு காலத்தில் இருந்ததை நாம் இன்றைக்கு நிலைக்குக் கொண்டு வந்திருக்கிறோம். இதுவரையில் நஷ்டத்தில் ஓடிக்கொண்டிருந்ததை லாபத்துக்கு நாம் கொண்டு வந்திருக்கிறோம் என்பதை நான் தெளிவாக்க விரும்புகிறேன்.

குறிப்பாகச் சொல்லப்போனால், 1971-72-ல் போக்குவரத்துத் துறையின் மூலம் ரூ. 132 லட்சம், ஒரு கோடி 32 லட்சம் நஷ்டம் இருந்தது. இன்றையதினம் ரூ. 91 லட்சத்திற்கு வந்திருக்கிறது லாபத்தில். ரூ. 132 லட்சம் நஷ்டத்தையும் சரிகட்டி, ரூ. 91 லட்சம் கூடுதலாக வந்திருக்கிறது என்ற கணக்கைப் பார்க்கிறபொழுது, கிட்டத்தட்ட ரூ. $2\frac{1}{4}$ கோடி இரண்டு ஆண்டுகளில் லாபகரமாக ஆக்கியிருக்கிறது என்பதை நம்மாலே





புரிந்துகொள்ளமுடியும். அந்த வகையிலே பார்க்கிற பொழுது போக்கு வரத்துக் கழகங்கள் பொதுவாக நல்ல முறையில் இயங்கி வருகின்றன என்ற கருத்தை நான் தெளிவாக்க விரும்புகிறேன்.

இந்த டிக்கெட்டுகளைப் பற்றிச் சொன்னார்கள், மாண்புமிகு உறுப்பினர்கள். அவர்களுக்கு நிச்சயம் அதைப்பற்றி வினா எழுப்புவதற்கு உரிமை உண்டு. ஆதலால் தான் நானும் சட்டமன்றத்தில் அதற்கான பதிலை தெரிவிக்கலாம் என்று காத்துக்கொண்டிருந்தேன். நல்ல வேளையாக இங்கே அதையும் எழுப்பினார்கள். நாள் ஒன்றுக்கு சென்னை மாநகரத்தில் மட்டும் விநியோகம் ஆகின்ற டிக்கெட்களின் எண்ணிக்கை 180 லட்சம். இந்த டிக்கெட்களை அச்சடிக்கின்ற இயந்திரங்கள் இந்த ஸீரியல் நம்பரை ஒவ்வொரு டிக்கெட்டுக்கும் போட்டுக் கொண்டே வரும். அந்த இயந்திரங்களை நாம் வெளிநாடுகளிலிருந்து வாங்கி வைத்திருக்கிறோம். அவைகளில் சில நேரங்களில் ஏற்படுகின்ற மெகானிகல் டிஃபெக்டினால், ஸ்பிரிங்கில் இருக்கின்ற வீக்னஸினால் கிராங் ஷாப்ட் ஸ்டக் அப் ஆகிவிடுகிறது. அதனால் இப்படிப்பட்ட தவறுகள் நடப்பது உண்டு. இவற்றை அவ்வப்பொழுது பார்த்து பிரித்து எடுத்துவிடுவது சாதாரணமாக செய்யக்கூடிய காரியம். ஆனாலும் அந்த அளவுக்கு டிக்கெட்கள் ஏராளமாக புழக்கத்தில் இருக்கிற காரணத்தினால், ஒன்றிரண்டு நம்பர்களில் இப்படி ஆகிவிடுகிறது. இதனால் யார் யாரோ வேறு போலி டிக்கெட்களை அடித்து விற்று அதன் மூலம் வருமானம் குறைகிறது என்று கூறுவது, மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன், சரியானது அல்ல.

ஆனாலும், அரசாங்கப் போக்கு வரத்துத் துறையைப் பொறுத்த வரையில் டிக்கெட்களை அடிப்பதற்காக சில தனியார் அச்சகங்களில் இது வரையில் கொடுத்து வந்திருக்கிறார்கள். எங்களைப் பொறுத்தவரையில் தனியார் அச்சகங்களில் இனிமேல் டிக்கெட்கள் அச்சடிக்கின்ற தன்மையை, டிக்கெட்கள் அடிக்கக் கொடுப்பதைக் குறைத்துக்கொண்டு, அரசு அச்சகத்தின் மூலமாகவும், அதேபோல அரசாங்கப் போக்குவரத்துக் கழகங்கள் தங்களுடைய சொந்த அச்சகத்தை நிறுவுவதன் மூலமாகவும் டிக்கெட்களை அச்சடித்துக்கொள்ளலாம் என்று கருதுகிறேன். இவற்றையெல்லாம் ஆள் போட்டுப் பார்த்து சரி செய்துகொள்ளவேண்டும் என்று கூறினால், எத்தனையோ கிளார்க்குகளை வேலைக்கு அமர்த்தவேண்டியிருக்கும், அவர்களுக்காக ஆகும் செலவு இதைவிட அதிகமாகும். ஆகவே, இதைக் கண்டு மாண்புமிகு உறுப்பினர்கள் அஞ்சத் தேவையில்லை. இன்னும் சொல்லப்போனால் வருமானம் அதிகரித்துக்கொண்டே இருக்கிறது, வருமானம் குறையவில்லை. ஆகவே இதைப்பற்றி அஞ்சத் தேவையில்லை என்று நான் முதலில் தெளிவாக்க விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, சென்னை மாநகரைப் பொறுத்தவரையில் என்ன திட்டங்கள் என்றெல்லாம் எடுத்துச் சொன்னார்கள், ஐயாசாமி அவர்களுடைய பரிந்துரைகளையெல்லாம் ஏன் செயல்படுத்தவில்லை என்பதையும் எடுத்துச் சொன்னார்கள். அவற்றை ஒவ்வொன்றாக நாம் செய்து வருகிறோம். ஒரு வழித்தடத்தில் அந்த முறை செயல்படுத்தப்பட்டு

வருகிறது. மேலும் இரண்டு வழித் தடங்களில் அந்த முறையை செயல் படுத்தச் சொல்லி அனுமதித்திருக்கிறோம். திடீரென்று ஒரே நாளில் எல்லா வற்றையும் அமுலுக்குக் கொண்டுவந்துவிட்டால், என்ன நிலைமை என்று அறிவது கடினமாக இருக்கும். பயணிகளுக்கு எந்த பஸ் எங்கே போகிறது என்பதைத் தெரிந்துகொள்வது பிரச்னையாக ஆகிவிடும். மேலும், தொழிலாளர்களுடைய ஒத்துழைப்புத் தேவை. அதற்குத் தகுந்த டிரெயினிங் தேவை. பயணிகளுக்கு அதைப்பற்றி முழு விளக்கங்களும் தேவைப்படுகின்றன. ஆகவே இதைப் படிப்படியாகச் செய்யவேண்டும் என்று அரசு செய்து கொண்டுவருகிறது. அவற்றை புறக்கணிக்கும் நோக்கம் நிச்சயம் இல்லை என்பதை மாண்புமிகு கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. [illegible] அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல மாநகரத்திலிருக்கிற போக்குவரத்து நெரிசலை தவிர்ப்பதற்கு வேறு வழியில்லையா என்று மாண்புமிகு டாக்டர் ஹாண்டே அவர்கள் கேட்டார்கள். உண்மையாக, அது கேட்கப்பட வேண்டிய கேள்வி. இந்த வழியே இல்லையா என்று டாக்டர் ஹாண்டே அவர்கள் மட்டும் கேட்கவில்லை. நாங்களும் கேட்டோம். நாங்கள் கேட்டது மட்டுமல்ல. இந்த நாட்டினுடைய பிரதமர் இந்திரா காந்தி அவர்களும் கூட கேட்டார்கள். ஆனால் இன்னும் வழி பிறக்கவில்லையே என்று கருதுகிறபொழுது, ஏன் இன்னும் வழி பிறக்கவில்லை என்று நினைத்துக் கொண்டிருக்கும்பொழுது "மாஸ் ராபிட் டிரான்ஸிட் சிஸ்டம்" ஒன்றை நாம் கொண்டு வரவேண்டும் என்று நம்முடைய அரசு வற்புறுத்தி வருகிறது. அதற்கும் மத்திய சர்க்காரின் பதிலைக் காணோம்.

அதோடுமட்டுமல்ல. மாநகரங்களைப் பொறுத்தவரையில், அங்கே எந்தப் போக்குவரத்து நிறுவனம் நடத்தினாலும், நஷ்டத்தில்தான் நடக்க வேண்டும். டெல்லி மாநகரத்தை எடுத்துக்கொண்டாலும் கூட, அவர்கள் நடத்த முடியாமல் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 3 கோடி, 4 கோடி என்று மத்திய சர்க்காருடைய பணத்தைக் கொண்டுதான் அங்கே பணியாற்றுகின்ற ஊழியர்களுக்குச் சம்பளம் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால், அந்த மாபெரும் நகரப் போக்குவரத்தைச் சரி செய்வதற்குச் சென்னையிலிருந்து யாராவது நீங்கள் ஆட்களை தர முடியுமா என்று நம்மைக் கேட்டபொழுது, நம்மிடத்திலே பணியாற்றிய தொழில் நுட்ப வல்லுநனர் இன்றைக்கு டெல்லிக்கு அனுப்பப்பட்டு, அவர்களும் டெல்லி மாநகர போக்குவரத்தை எப்படி சரிசெய்வது என்பதைப்பற்றி செயலாற்றிக்கொண்டு வருகிறார்கள் என்ற செய்தியையும் நான் இந்த மன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

சரி, பம்பாய் மாநகரத்தில் ஏதாவது கொஞ்சம் சீர்திருத்தம் செய்திருப்பார்களா என்று நாம் பார்த்தால், பத்திரிகையில் செய்தி வந்திருக்கிறது, அவர்கள் அரசுக்குக் கட்டவேண்டிய 6 கோடி ரூபாய் வரியையே கட்ட முடியாமல் தவித்துக்கொண்டிருக்கிறார்கள் என்ற செய்தியும் நமக்குக் கிடைத்திருக்கிறது.





கல்கத்தாவை நிச்சயம் நம்மால் காப்பி அடிக்க முடியாது என்பதை நீங்கள் நன்றாக அறிவீர்கள்.

இன்னும் ஒரு வேடிக்கை. எல்லா வகைகளிலுமே முன்னேறிய, இன்னும் சொல்லப் போனால், உலக நாடுகளில் அமெரிக்காவோடு சரி சமமாக மட்டுமன்றி, சின்னஞ்சிறு நாடாகிய ஜப்பான் நாட்டில் என்ன நிலைமை என்று பார்ப்போமேயானால் டோக்கியோ நகரத்தில் அவர்களுக்கு நஷ்டம் ரூ. 20,36,000—743 ஆயிரம் என்ஸ் 1966-ல். 1973-ல் அது இரண்டு மடங்காக ஆகிக்கொண்டிருக்கிறது.

லண்டன் டிரான்ஸ்போர்ட்டை பொறுத்தவரையில் ஏற்கெனவே மன்றத்தில் அதற்கான தகவல்களைக் கொடுத்திருக்கிறேன். ஆகவே, பெரு நகரங்களாக ஆங்காங்கு இருக்கிற நகரங்களில் பேரரசு மான்யம் கொடுப்பதன் மூலமாகவும், உதவி செய்வதன் மூலமாகவும், அதிக பஸ்களை வாங்கி விடுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமே தவிர, அந்தந்த மாநகரப் போக்குவரத்தே தானே இயங்குகின்ற தன்மையிலே அதை விட்டுவிடுவது நிச்சயம் சரியாகாது.

அந்த வகையிலே தான் நம்முடைய அரசைப் பொறுத்தவரையில் பிரதமர் இந்திராகாந்தி அவர்களுக்குக் கூட கடிதம் எழுதியிருக்கிறோம். சென்னை மாநகரத்தில் டீஸெல்லுக்கு வரி விலக்கும், அதேபோன்று டயர் போன்ற பொருள்களை வாங்குகின்ற போது விதிக்கப்படுகின்ற எக்சைஸ் டியூட்டியிலிருந்து விலக்கும் அளிக்க வேண்டும் என்று கேட்டுள்ளோம். ஆனால், எந்தவிதமான பதிலும் இன்னும் நமக்குக் கிடைக்கவில்லை. பணம் கிடைக்குமானால் ஓரளவுக்கு நாம் அதிகமாக பஸ்களை வாங்கி விடலாம். நிரந்தரமான பரிகாரம் என்னவென்றால், "மாஸ் ராபிட் டிரான்ஸிட் சிஸ்டம்" இன்னும் கொஞ்சம் தற்காலிக பரிகாரம் கொஞ்சம் ரயில்வே எலக்ட்ரிபிகேஷனை, தாராளமாக மத்திய சர்க்கார் மாநில சர்க்காருக்குச் செய்து கொடுக்க வேண்டும்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> இன்னும் கொஞ்சம் நேரம் எடுத்துக் கொண்டு முடித்து விடுங்கள்.

<u>மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :</u> பொதுவாக மாநகரங்களைப் பொறுத்தவரையில் அது அந்தந்த மாநிலத்துக்குச் சொந்தம் என்ற மனப்பான்மை நிச்சயம் கூடாது. மாநகரங்கள் ஒரு நாட்டிற்கே சொந்தம். கல்கத்தாவானாலும் சரி, பம்பாய் ஆனாலும் சரி, டெல்லியானாலும் சரி, சென்னையானாலும் சரி, ஏதோ கல்கத்தா மேற்கு வங்காளத்துக்குச் சொந்தம் என்றோ, பம்பாய் மராட்டியத்திற்குச் சொந்தம் என்றோ, அல்லது சென்னை தமிழகத்திற்குச் சொந்தம் என்றோ நிச்சயம் விட்டுவிடக்கூடாது. இந்த மாநகரங்கள் இந்திய துணைக் கண்டத்தின், இந்திய பெருநாட்டின் நாகரிகத்தினுடைய சின்னங்களாக அமையக் கூடிய இடங்கள், நாகரிகம் வளரக்கூடிய இடங்கள் என்பதை கவனத்தில் கொண்டு பார்க்கும்பொழுது, இந்த மாநகரங்களை நல்ல முறையில்

பாதுகாக்க வேண்டியது, இங்கெல்லாம் போக்குவரத்தை சீரான முறையில் அமைத்துத்தர வேண்டியது இந்திய பேரரசினுடைய பெருங்கடமை என்பதையும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

[பிற்பகல் 1-30.]

அடுத்தபடியாக இங்கே பேசுகின்றபோது வரி அதிகமாக்கப்பட்டிருக்கிறது ; வட்டிக்குப் பணம் வாங்கித்தான் பஸ்களை ஓட்டவேண்டியிருக்கிறது ; ஆகையால் கட்டண உயர்வு இல்லாவிட்டால் இந்தத் தொழிலை நடத்த முடியாது ; அதனால் ஒன்றில் அரசாங்கமே எல்லா பஸ்களையும் எடுத்துக் கொள்ள வேண்டும் ; இல்லாவிட்டால் விட்டுவிடுங்கள் என்று அம்மையார் அவர்கள் சொன்னார்கள். அதே அடிப்படையில்தான் திரு. ஆறுமுகம் அவர்களும் சொன்னார்கள்.

இந்தக் கட்டண உயர்வு அதிகப்படுவதற்கு அடிப்படைக் காரணம் ஏதோ பஸ் முதலாளிகளுக்காகத்தான் என்று நிச்சயமாக நம்பவேண்டிய தேவை இல்லை. உண்மை என்னவென்றால் விலைவாசி கூடியதன் காரணமாக, பஸ் முதலாளிகள் இந்தக் கூடுதல் கட்டணத்தை வசூலித்து யார் ஸ்பேர் பார்ட்ஸ் கொடுக்கிறார்களோ, அவர்களுக்குக் கொடுக்கின்ற சூழ்நிலைதான் ஏற்பட்டிருக்கிறது. உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமானால், அரசாங்கம் போக்குவரத்தை நடததுகிறது. விகிதாச்சார முறைப்படி ஒப்பிட்டுப்பார்க்கும்போது இந்த உண்மை தெரியும். பல்லவன் போக்குவரத்துக் கழகத்தில் 43 சதவிகிதம் டயர், ஸ்பேர் பார்ட்ஸ் வாங்குவதற்காக ஒதுக்கப்படுகிறது. சேரன் போக்குவரத்துக் கழகத்தில் 43·6 சதவிகிதம் வருகின்ற வருமானத்திலிருந்து செலவிடுகிறார்கள். அதாவது 10 கோடி ரூபாய் வருமானம் என்றால் 4½ கோடி ரூபாய் ஸ்பேர் பார்ட்ஸ் வாங்குவதற்காகச் செலவிட வேண்டியிருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்கள் சொன்னதைப்போல, ஸ்பேர் பார்ட்ஸ் தயாரிப்பவர்கள் அதைத் தங்களுடைய சொந்த ஆதிக்கத்திலே வைத்துக் கொண்டிருக்கிறார்கள். உதாரணமாக அசோக் லேலண்ட் நிறுவனம் இருக்கிறது. அவர்கள் நமக்கு சேசிஸ் தயாரித்துத் தருகிறார்கள். ஆனால் அதற்கான உப பொருட்களை உற்பத்திச் செய்கிறார்களா என்றால் இல்லை. சேசிஸ் மட்டும் செய்து தருகிறார்களே தவிர ஓடுகின்ற பஸ்களுக்கு உப பொருட்களை உற்பத்தி செய்யவேண்டுமென்ற எண்ணம் அவர்களுக்கு இல்லை.

இன்னொரு வேடிக்கை என்னவென்றால், துணைப் பொருட்களை அவர்கள் பல தொழிற்சாலைகளில் செய்துவருகிறார்கள். அங்கிருந்து நாம் நேரடியாக வாங்கிக்கொள்ள முடியாது. அசோக் லேலண்ட் போன்ற நிறுவனங்களுக்குத்தான் கொடுக்கிறார்கள். ஒருமுறை அசோக் லேலாண்ட் நிறுவனத்தில் வேலை நிறுத்தம் ஏற்பட்டதால், அந்த நிறுவனத்தை மூடிவிட்டார்கள். அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய பொருட்களை, தயாரித்த தொழிலதிபர்களே வைத்திருந்தார்கள். அவர்களுக்குக் கொடுக்கவேண்டியதை எங்களுக்குத் தாருங்கள் என்று கேட்டோம்.



அதற்கு எங்களுக்கு உரிமை இல்லை ; அவர்களுக்குத்தான் கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். எங்களுக்குத் தேவைப் படுகின்ற பொருட்களைத் தாருங்கள் ; அதற்கான றாயல்டியை வேண்டுமென்றால் அவர்களுக்குக் கொடுங்கள் என்று சொன்னோம். அதற்குக்கூட கொடுக்க முடியாது என்று சொல்லிவிட்டார்கள். மத்திய அரசுக்கு அதைப்பற்றிச் சொன்னோம். தனிப்பட்ட முதலாளிகள் இந்தத் துணைப் பொருட்களை உற்பத்தி செய்து, அவர்கள் கட்டுப்பாட்டிலேயே வைத்துக்கொள்கிறார்கள். அவர்கள் எந்த அளவுக்கு உற்பத்தி செய்ய வேண்டுமோ, அந்த அளவுக்குச் செய்வதில்லை. They are creating an artificial scarcity வேண்டுமென்றே ஒரு பற்றாக்குறையை உருவாக்குகிறார்கள் அது மாத்திரமல்ல மார்க்கெட்டை கன்ட்ரோல் பண்ணுகிறார்கள். அதனால் அவர்கள் வைத்தது சட்டம் என்ற நிலைமை வந்துவிடுகிறது.

மத்திய அரசின் "இன்டஸ்டிரியல் டெவலப்மெண்ட் மினிஸ்டிரியின் சார்பில் நடைபெற்ற எல்லா போக்குவரத்துத்துறை அமைச்சர்கள் மாநாட்டில் இதைப்பற்றி சொன்னோம். தனிப்பட்ட முதலாளிகள் இதை ஒரு வர்த்தகச் சூதாட்டமாக நடத்திக்கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னோம். தேவையான அளவுக்கு உற்பத்தி செய்யாமல், அரசு கேட்டாலும் பொருட்களைத் தராமல் மார்க்கெட்டை அவர்கள் கன்ட்ரோலில் வைத்துக்கொண்டு, இப்படி விலை ஏற்றத்தை உண்டுபண்ணுகிறார்கள் என்று சொன்னோம். 3, 4 மடங்கு விலையை கூட்டிவிடுகிறார்கள். அவர்களிடம் ஏன் இப்படி விலையைக் கூட்டுகிறீர்கள் என்றால் எங்களுக்கு வேண்டிய சாமான்கள் கிடைக்கவில்லை என்கிறார்கள். இல்லை என்றால் நாம் கேட்கும் பொருட்கள் இல்லை என்று சொல்லிவிடுகிறார்கள். ஆனால் வெளியே 3, 4 மடங்கு கூட்டி விற்கிறார்கள். இதுதான் இன்றைக்கு இருக்கின்ற நிலைமை. அதனால் ஏழை எளிய மக்களுக்குக் கட்டணத்தை உயர்த்த வேண்டியிருக்கிறது. இந்தக் கட்டண உயர்வை அரசாங்கம் வசூல் செய்து முதலாளிகளுக்குத்தான் கொடுக்க வேண்டியிருக்கிறது.

ஐந்தாண்டுத் திட்டங்களைப் போடுகிறோம். பணக்காரர்கள் பணக்காரர்களாகவும், ஏழைகள் ஏழைகளுமாகவே இருப்பதற்கு இதுதான் காரணம். மார்க்கெட்டை அவர்களே கன்ட்ரோல் செய்கின்ற நிலைமை இருப்பதால், அவர்கள் சொல்லுவதுதான் சரி என்று "டிக்டேட்" செய்கிறார்கள். பப்ளிக் செக்டாராக இருந்தாலும், பிரைவேட் செக்டாராக இருந்தாலும் கூடுதல் கட்டணத்தை வசூல் செய்து அவர்களிடம்தான் கொடுக்க வேண்டியிருக்கிறது. இந்த உண்மையை சில புள்ளிவிபரங்கள் மூலம் மேலும் விளக்க விரும்புகிறேன். சேசிஸ் 1964-ல் விலை 54,850 ரூபாய். ஆனால், இன்றைக்கு அதன் விலை 1,05,275 ரூபாய். 1964-ல் டீசல் விலை—ஒரு பஸ்ஸுக்கு 11,700 ரூபாய், இன்றைக்கு அதற்கு 20,000 ரூபாய் ஆகிறது. 1964-ல் ஒரு பஸ்ஸுக்கு டயருக்கு ரூ. 2,100. ஆனால், இன்றைக்கு அதற்கு 5,500 ரூபாய் ஆகிறது. 1964-ல் ஸ்பேர் பார்ட்ஸ் விலை—ஒரு ஆண்டுக்குச் செலவானது 7,600 ரூபாய் ; இன்றைக்கு 13,700 ரூபாய் இப்படிக் கணக்கை பார்க்கிறபோது யாருக்கு இந்தப் பணம் போகிறது என்பதும், அரசாங்கம் போடுகின்ற வரிப்பணம் அரசாங்க கஜானாவுக்குப் போகவில்லை என்பதும் தெளிவாகும்.

[திரு. ச. இராமச்சந்திரன்] [1974 மார்ச் 15

இப்படிப்பட்ட பொருட்களை உற்பத்தி செய்கின்ற தனியாருக்குத் தமிழ்நாட்டு மக்கள் மட்டுமல்ல ; இந்தியா பூராவிலும் இருக்கின்ற மக்களும் பெனல்டி—இந்த அபராதத்தை முதலாளித்துவ பொருளாதார கொள்கைக்குச் செலுத்திதான் தீரவேண்டியிருக்கிறது ; வேறு வழியில்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்த விபரங்களை எல்லாம் மத்திய அரசுக்குச் சுட்டிக் காட்டினோம். அவர்களுக்கு இருக்கின்ற தர்ம சங்கடம் என்னவென்றால் அவர்களும் இதில் தலையிட முடியவில்லை. ஏனென்றால் அவர்களுக்கு வேண்டியவர்கள் அப்படிப்பட்ட கம்பெனிகளுக்குத் தலைவர்களாக இருக்கிறார்கள். அந்தத் தலைவர்கள் காங்கிரஸ் கட்சி வேட்பாளர்களாகவும் வருகிறார்கள் என்பதைப் பார்க்கும் இந்தச் சிக்கலிலிருந்து நிச்சயமாக இந்த நாடோ அல்லது பொருளாதார நெருக்கடியோ விடுபட முடியாது என்பதை மட்டும் என்னால் உணர்ந்து கொள்ள முடிகிறது.

TIHRU M. A. LATHEEF: The Hon. Minister has just now pointed out that the complete right of production has been monopolised by the concerned entrepreneurs and also the right of distribution has been completly held by them. In order to ensure optimum production in the important industries and also to ensure proper judicious and equitable distribution so that the products may reach the consumers, will the Government examine the feasibility and possibility, constitutionality and legality, to bring in a comprehensive legislation to completely control the right of production and right of distribution so that all the difficulties that have been enumerated may be removed and surmounted ?

THE HON. THIRU S. RAMACHANDRAN: Unfortunately Government is not so sovereign to bring in a comprehensive legislation to control means of production and distribution. At the same time absolute powers are vested with the Government of India. Under the present set-up, the Government of India is also conniving with such forces. So, there is no hope nor futere for such ideas.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: I strongly object to the word ' conniving with such forces '. We are also step by step introducing socialism. You cannot say that we are conniving. You have not done well in your sphere. How can you blame the Centre that they are conniving, with such forces ?



1974 மார்ச் 15 திரு. ச. இராமச்சந்திரன்

THE HON. THIRU S. RAMACHANDRAN: We are going up step by step. No doubt the Congress is going down step by step.

அரசு அச்சகத்தைப் பொறுத்தவரையில், ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் அரசு அச்சகம் நல்லமுறையில் நிறுவப்பட வேண்டுமென்ற யோசனை அரசின் பரிசீலனையில் இருந்துவருகிறது. மதுரையில் இருக்கிற அச்சகத்தைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் கே. டி. கே. தங்கமணி அவர்கள் குறிப்பிட்டார்கள். உடனடியாக அந்த வேலை தொடங்க இருக்கிறது என்பதை அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனைக்கரை அச்சகத்தைப்பற்றி டாக்டர் ஹாண்டே அவர்கள் சொன்னார்கள். அது இந்த எப்ரல் மாதம் 1-ந் தேதி வேலையைத் தொடங்கவேண்டுமென்று சொல்லியிருக்கிறோம் ; அந்த நாளில் வேலை தொடங்கப்பட்டுவிடும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அச்சகத்திலே பணியாற்றுகின்ற தொழிலாளர்களின் வேண்டுகோள்களையும் நாங்கள் சீரான முறையிலே பரிசீலனை செய்துவருகிறோம். ஓவர் டைம் என்ற பெயரால் தொழிலாளர்கள் கஷ்டப்பட்டு உழைக்கத் தயாராக இருக்கிறார்கள். அதையும் மூன்று ஷிப்ட் ஆக்குவதற்கு ஒரு ஒப்பந்த அடிப்படையில் விரைவிலே நடவடிக்கை எடுக்கப்பட இருக்கிறது. அதனால் எல்லாத் தொழிலாளர்களும் ஊக்கத்தோடு பணியாற்றத் தயாராக இருக்கிறார்கள். ஆகவே, அரசு அச்சகங்கள் எல்லா வகையிலும் நல்ல முறையில் இயங்கும். அங்கிருக்கிற தொழிலாளர்கள் மிகுந்த ஊக்கத்தோடு பணியாற்றத் தயாராய் இருக்கிறார்கள். உங்கள் நம்பிக்கைக்கேற்ற முறையில் இந்தத்துறையில் உள்ள தொழிலாளர்கள் ஊக்கத்தோடு, நல்லமுறையில் பணியாற்றத் தயாராய் இருக்கிற போது இந்த மானியத்திற்கு வெட்டுத் தீர்மானம் கொடுப்பதில் பயன் இல்லை.

கப்பல் போக்குவரத்துக் கழகத்தைப்பற்றி ஒன்று கூற விரும்புகிறேன். இதற்கு மத்திய சர்க்காருடைய நேரடிப் பார்வையில் கப்பல் போக்குவரத்தை நடத்துவதற்கான சட்டங்களை இயற்ற அதிகாரம் இருக்கிறது. ஆனால் இன்றையதினம் கப்பல் கம்பெனிகள் தனியாரிடத்தில் இருக்கின்றன. நாம் இதைப் பொதுத்துறையில் வர வேண்டும் என்று சொல்லுகிறோம். சொல்லப்போனால் இன்றைக்குத் தமிழகம் தான் முதன் முதலாக பொதுத்துறையில் பூம்புகார் போக்குவரத்துக் கழகம் என்பதாகத் துவங்கி கப்பல் போக்குவரத்தைப் பொதுத்துறையில் கொண்டுவர முன்வந்திருக்கிறது. இதற்கும் உங்கள் எல்லோருடைய ஆசியும், ஒத்துழைப்பும் தேவை. ஆகவே இந்த மானியக் கோரிக்கைகளுக்குக் கொடுத்திருக்கிற வெட்டுத் தீர்மானத்தைத் திரும்பப் பெற்று, இதனை ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டி முடித்துக்கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தண்டையார்பேட்டை பணிமனையில் கழிந்த 7 மாதங்களாக 98 தொழிலாளர்கள் தற்காலிகமாக வேலைநீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள்.

[1974 மார்ச் 15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: புதியதாக விவரம் கொடுக்கக்கூடாது.

திரு ஜே. ஜேம்ஸ்: அவர்கள் மீது கருணை வைத்து அவர்களை வேலையில் அமர்த்த அரசு முன் வருமா ? -

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு உறுப்பினர் அந்தக் கருத்தைச் சொன்னார்கள். தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் தொழிற்சங்கம் அமைத்து ஊர்வலம் போய், போராட்டம் நடத்தித்தான் சலுகை பெறவேண்டுமென்ற நிலையில் நாம் அவர்களை விட்டுவைக்கவில்லை. ஊக்கபோனசு, வருடாந்திரபோனசு, ஆண்டு வருமான உயர்வு, வீட்டுப்படி, என்பதாக நாம் இப்படி அவர்களுக்குப் பல விதமான சலுகைகளை முன்மாதிரியாக இருந்து செயலாற்றி வருகிறோம். ஆனால் வேண்டுமென்றே எங்கோ போலீசாருடன் தகராறை ஏற்படுத்திக் கொண்டு—சென்னை நகர பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுகிற வகையில் அங்கங்கே பஸ்களை நிறுத்தி இடைஞ்சல் செய்வது என்றால் அது சரியல்ல. மக்கள் நலனுக்கு அது ஏற்றது அல்ல. காவல் துறையினர் வழக்குத் தொடர்ந்து இருக்கிறார்கள். என்ன நடவடிக்கை எடுக்கலாம் என்பதைப் பரிசீலிக்கிறோம்.

திருமதி த.ந. அனந்தநாயகி: மினி பஸ், இன்னும் பட்பட் என்று டெல்லியில் 4 பேர்கள் ஏறிப்போகிற சின்ன ஆட்டோ ரிக்ஷா போன்றவற்றை இங்கேவிட முன்வருவார்களா ? டாக்சி கட்டணங்கள் உயர்ந்து விட்டன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது. வெட்டுத் தீர்மானங்கள். திரு லத்தீப் அவர்கள் அவரது வெட்டுத் தீர்மானத்தை திரும்பப்பெறுகிறாரா?

THIRU M. A. LATHEEF : Sir, I have given a cut motion with regard to distribution of tyres. The point is this. Out of the reply of the Hon. Minister, I am unable to........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் வற்புறுத்துகிறீர்களா? உங்கள் வெட்டுத் தீர்மானத்தைத் திரும்பப்பெறுகிறீர்களா?

THIRU M. A. LATHEEF : Out of the reply given by the Hon. Minister, I have to draw the attention of the Minister and point out..........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது முறை அல்ல. வெட்டுத் தீர்மானத்தை வற்புறுத்துகிறீர்களா இல்லையா என்பதைமட்டும்தான் சொல்லவேண்டும்.



1974 மார்ச் 15]

THIRU M. A. LATHEEF : Such a thing has happened in the House several times.

MR. SPEAKER : No, no.

THIRU M. A. LATHEEF : May I be heard, Sir, ? In this House, it has happened several times and that is this. When a member is asked whether the particular cut motion is withdrawn or pressed the Member gets a clarification from the Hon. Minister, if the Minister had not answered his point..............He is entitled to it.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது முறையே அல்ல.

THIRU M. A. LATHEEF : It has happened in this House.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது முறை அல்ல, அதை அனுமதிக்க முடியாது.

THIRU M. A. LATHEEF : Sir, I am raising a point of order. The Member's right is there ; when a particular cut motion given by a member is to be withdrawn or put to vote, he wants to draw the Minister's attention to the particular problem raised by him in his cut motion, if that problem is not met by the reply given by the Minister and he can do so when the Chair asks the concerned Member whether he presses or withdraws his cut motion. He is entitled to get a clarification from the Minister. That right is denied to me now.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்படி வெட்டுத் தீர்மானம் கொடுத்தவர்கள் எல்லோரும் கேட்பது என்றால், அவையை நடத்தி முடிக்க முடியாது. ஓட்டுக்கு வருகிற நேரத்தில் நீங்கள் உங்கள் வெட்டுத் தீர்மானத்தை வற்புறுத்துகிறீர்களா இல்லையா என்பதைத்தான் சொல்ல வேண்டும். அதில் புதுக்கருத்தைச் சொல்ல முடியாது. அல்லது தாம் சொன்ன கருத்துக்கு எல்லாம் அமைச்சர் அவர்கள் பதிலளிக்கவில்லை, அதற்கு அமைச்சர் பதிலளிக்க வேண்டும் என்றும் வற்புறுத்த முடியாது.

திரு எம்.எ. லத்தீப் : அமைச்சர் அவர்கள் பேசும்போது ஒரு சிலரிடத்திலே உள்ள மெனுபலி காரணமாக இன்றைக்கு அவர்களைக் கட்டுப்படுத்த முடியாத நிலையில் இருக்கிறோம் என்றார்கள். அதற்குத்தான் என் சட்டம் கொண்டு வரக்கூடாது என்று நான் கேட்கிறேன்.

நாம் சட்டத்தைக் கொண்டுவர முடியும். அப்படிப்பட்ட சட்டத்தைக் கொண்டுவர தாம் ஆவன செய்வதாக அமைச்சர் அவர்கள் வாக்குறுதி அளிக்கவேண்டும். இதை வற்புறுத்தத்தான் நான் சொல்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் டிஸ்டிரிப்யூஷனை அரசாங்கமே எடுத்துக்கொள்ளலாம் என்று சொன்னார்கள். ப்ரொடக்ஷன் அவர்கள் கையில் இருக்கிறது. நாம் டிஸ்ட்ரிப்யூஷனை மட்டும் எடுத்துக்கொண்டு என்ன பயன்?

திரு எம்.எ. லத்தீப்: ப்ரொடக்ஷனைத்தான் எடுத்துக்கொள்ள வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் உங்கள் வெட்டுத் தீர்மானத்தை திரும்பப் பெறுகிறீர்களா, இல்லையா ?

THIRU M. A. LATHEEF : I do not press my cut motion.

திரு. எம். ஏ. லத்தீப், டாக்டர் எச். வி.ஹாண்டே அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டன.

திரு. ஏ. சுவாமிதாஸ் : பஸ்ஸில் பயணம் செய்கிறபோது தமிழ் படித்த கண்டெக்டர்கள் கூட "வாய்யா, போய்யா" என்று பேசுகிறார்கள். அப்படியே பேசக்கூடாது. டிக்கெட் கொடுக்கும்போது எச்சில் தொட்டு இழித்துக்கொடுக்கக்கூடாது.

கோரிக்கை எண் 3-க்கு திருவாளர்கள் ஏ. சுவாமிதாஸ், கே. டி. கே. தங்கமணி, கே. எஸ். கோதண்டராமையா ஆகியோர் கொடுத்திருந்த வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டன.

திரு. எம். சுரேந்திரன் : அவர்கள் இருக்கையில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டதாகக் கருதப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி:

"நிதிக் கோரிக்கை எண். 3—மோட்டார் வண்டிகள் சட்டங்கள்—நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 74,99,100-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.



கோரிக்கை எண் 39-க்கு திருவாளர்கள் கே. எஸ். கோதண்டராமையா, கே. ஏ. வகாப், கே. டி. கே. தங்கமணி, பெ. சௌந்தரபாண்டியன், கே. பி. கோபால் ஆகியோர் கொடுத்திருந்த வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டன.

திரு. எம். சுரேந்திரன் அவர்கள் இருக்கையில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டதாகக் கருதப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி:

"நிதிக் கோரிக்கை எண். 39—சாலைப் போக்குவரத்துத் திட்டங்கள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 10,98,67,100-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக்கோரிக்கை எண். 53-க்கு திரு. ஜே. ஜேம்ஸ் அவர்கள் கொடுத்திருந்த வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன், திரும்பப்பெற்றுக்கொள்ளப்பட்டது.

திரு. எஸ். வடிவேல் அவர்கள் இருக்கையில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பட்டதாகக் கருதப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன்னுள்ள கேள்வி:

"நிதிக் கோகை எண். 53—சாலைப் போக்குவரத்துத் திட்டங்கள் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ 3,12,81,400—க்கு மேற் படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக் கோரிக்கை எண் 43-க்கு திருவாளர்கள் பெ. சௌந்தரபாண்டியன், கே. டி. கே. தங்கமணி, ஜே. ஜேம்ஸ், எம். ஏ. லத்தீப் ஆகியோர் கொடுத்திருந்த தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ப்பட்டன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி:

"நிதிக் கோரிக்கை எண். 43—எழுதுபொருள் அச்சுத் துறை என்ற தலைப்பின்கீழ் ரூ. 5,05,69,900-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

[1974 மார்ச் 15

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல் கள் இத்துடன் முடிவுற்று, நாளைக் காலை 9 மணி அளவில் பேரவை மீண்டும் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-52 மணிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

6. பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

*A. Statutory Rules and Orders.*

172. Notification issued with G. O. Ms. No. 2670, Rural Development and Local Administration, dated the 29th November 1973 in regard to division of Chingleput Municipality into twenty-four wards and reservation of two seats for Scheduled castes and three seats for Women in the Chingleput Municipal Council. [*Laid on the table of the House under section* 304(d) *of the Tamil Nadu District Municipalities Act*, 1920 (*Tamil Nadu Act V of* 1920).]

173. Notification issued with G. O. Ms. No. 851, Labour and Employment, dated the 27th December 1973 in regard to certain amendments to the Tamil Nadu Weights and Measures (Enforcement) Rules, 1967. [*Laid on the table of the House under section* 43(4) *of the Tamil Nadu Weights and Measures* (*Enforcement*) *Act*, 1958 (*Tamil Nadu Act XX of* 1958).]

174. Notification issued with G. O. Ms. No. 2416, Agriculture, dated the 12th December 1973 in regard to declaration of notified market area for Kivalur market in respect of paddy in Thanjavur district. [*Laid on the table of the House under section* 29(4) *of the Tamil Nadu Agricultural Produce Markets Act*, 1959 (*Tamil Nadu Act* 23 *of* 1959).]



1974 மார்ச் 15]

175. Notification issued with G. O. Ms. No. 2833, **Rural Development and Local Administration**, dated the 26th December 1973 in regard to division of Rajapalayam Municipality into thirty-two wards and reservation of two seats for Scheduled Castes and one seat for Women in the Rajapalayam Municipal Council. [*Laid on the table of the House under section* 304(d) *of the Tamil Nadu District Municipalities Act*, 1920 (*Tamil Nadu Act V of* 1920).]

176. Notification issued with G. O. Ms. No. 95, Rural Development and Local Administration, dated the 18th January 1974 in regard to division of Kuzhithurai Municipality into sixteen wards and reservation of one seat for Women in the Kuzhithurai Municipal Council. [*Laid on the table of the House under section* 304(d) *of the Tamil Nadu District Municipalities Act*, 1920 (*Tamil Nadu Act V of* 1920.)]

B. *Reports, Notifications and Other Papers.*

@ 65. A Review on Nationalised Transport in Tamil Nadu, 1973-74 (English and Tamil).

---

@ **Despatched to Members on 13th March 1974.**

## இணைப்பு–I

(41-ம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

### சாலைப் போக்குவரத்துத் திட்டங்கள் குறித்த மானியக் கோரிக்கைகள் பற்றி மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் உரை.

பேரவைத் தலைவர் அவர்களே,

"கோரிக்கை எண் 39—சாலைப் போக்குவரத்துத் திட்டங்கள்" என்பதன்கீழ் ரூ. 10,98,67,100 மானியத்தையும், கோரிக்கை எண் 53—சாலைப் போக்குவரத்துத் திட்டங்கள் குறித்த மூலதனச் செலவு" என்பதன்கீழ் ரூ. 3,12,81,400 மானியத்தையும் அரசுக்கு வழங்குமாறு நான் வேண்டுகிறேன்.

2. நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்துத் துறை செயல்படுவது குறித்த ஆய்வுரை ஒன்று பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

3. 1972-ஆம் ஆண்டு மார்ச் திங்களில் சாலைப் போக்குவரத்துத் திட்டங்கள் குறித்த மானியக் கோரிக்கையை முன்வைத்தபோது, "குகையின் இருளைக் கடந்துவிட்டோம். இப்போது நாம் ஒளியைக் காணத் தொடங்கியிருக்கிறோம்" என்று நான் குறிப்பிட்டேன். போக்குவரத்துத் துறையைப் பொறுத்த வரையில் நாம் குகையைக் கடந்து விட்டோம் என்றும், 1973-ஆம் ஆண்டில் ஆதாயமோ விரயமோ இல்லையென்றும் நான் கடந்த ஆண்டில் குறிப்பிட்டேன். கடந்த பத்தாண்டுகளாக போக்குவரத்துத் துறை சீராகச் செயல்படுவதற்காக ஆண்டு தோறும் முறை தவறாமல் வரிகளைச் செலுத்திவரும் மக்களுக்கு இந்தப் போக்குவரத்துத் துறை இனியும் சுமையாக இராது என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறேன். 1973-74-ஆம் ஆண்டில் முடியும் நிதியாண்டில், வரி விதிப்புக்கு முன்னர் ரூ. 91 லட்சம் ஆதாயம் கிடைக்கும்.

4. இந்நாட்டின்—உலகத்தின் ஏனைய பகுதிகளில் இயங்கிவரும் போக்குவரத்து அமைப்புக்கு இணையாகச் செயல்பட்டு வரும் சென்னைப் பெருநகர்ப் போக்குவரத்து தொடர்ந்தாற்போல் விரயத்தில் இயங்கி வருவதை இம்மன்றம் அறியும். சென்னை பெருநகர்ப் போக்குவரத்து அமைப்பிற்கு 1973–74-ஆம் ஆண்டில்





சுமார் ரூ. 84 லட்சம் விரயம் ஏற்படுமென்பது எனது மதிப்பீடு. இதற்கு மாறாக, தமிழ் நாடு போக்குவரத்துத் துறை ரூபாய் ஒரு கோடி ஆதாயம் பெறுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. சேரன் போக்குவரத்துக் கழகம் ரூ. 45 லட்சமும் ஏனைய போக்குவரத்துக் கழகங்கள் அனைத்தும் சேர்ந்து ரூ. 30 லட்சமும் ஆதாயம் பெறுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. போக்குவரத்துத் துறைக்குக் கிட்டும் ரூ. 1.75 கோடி மொத்த ஆதாயத்தில் ரூ. 84 லட்சம் விரயம் போக அதற்கு ரூ. 91 லட்சம் நிகர இலாபம் கிடைக்கும்.

5. போக்குவரத்துத் துறை மக்களின் நன்மை கருதி ஆதாயமற்ற வழித்தடங்களிலும் பேருந்துகளைச் செலுத்துவதால் ஏற்படும் சாதாரண நலச் செலவுகளையும் உள்ளடக்கியதே என்பதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் கவனத்தில் எடுத்துக்கொண்டால் நான் இந்தப் போக்குவரத்துத் துறையின் நிதி நிலையின் தன்மையை முழுமையாக உணர்ந்தவர்களாவார்கள். இப்பேரவையில் நான் ஏற்கெனவே கூறியுள்ளவாறு, ஆதாயமற்ற வழித்தடங்களில் பேருந்துகளை இயக்குவதில் தனியார் உரிமையாளர்கள் அக்கறை கொள்ளவுமில்லை; அவ்வாறு அவர்கள் இயக்குவது சாத்தியமுமில்லை. பேருந்துகள் செல்லக்கூடிய சாலை அமைந்துள்ள ஒவ்வொரு கிராமத்திற்கும் பேருந்துப் போக்குவரத்து வசதி செய்து தருவதே நாட்டுடைமையாக்கும் திட்டத்தின் நோக்கங்களில் ஒன்றாகும். எனவேதான், மேற்சொன்ன பல்வேறு போக்குவரத்துக் கழகங்களும் பொது மக்களின் நன்மையைக் கருதி ஆதாயமற்ற வழித்தடங்களிலும் பேருந்துகளை இயக்கி வருகிறது. இவ்வகையில் ஏற்படும் செலவுகளை அவை சமுதாயச் செலவுகளாகக் கணக்கிற் கொள்கின்றன.

6. நமது போக்குவரத்துக் கழகங்களில் சில, எந்த அளவுக்கு அக்கறையுடன் ஆதாயமற்ற வழித்தடங்களில் பேருந்துகளை இயக்கி வருகின்றன என்று பார்க்கும் வகையில், பாண்டியன் சாலைப் போக்குவரத்துக் கழகமானது ஆண்டொன்றுக்கு சுமார் ரூ. 30 லட்சம் விரயத்தில் 47 ஆதாயமற்ற வழித்தடங்களில் பேருந்துகளை இயக்கி வந்திருக்கிறது. இது அக் கழகம் இயக்கி வந்த வழித்தடங்களில் 15 சதவீதமாகும். பல்லவன்

1974 மார்ச் 15]

போக்குவரத்துக் கழகமானது, சென்னைப் பெருநகர்ப் பகுதியில், 63 ஆதாயமற்ற வழித்தடங்களிலும், செங்கற்பட்டு மாவட்டத்தில் 38 ஆதாயமற்ற வழித்தடங்களிலும் பேருந்துகளை இயக்கி வருகிறது. இத்தகைய ஆதாயமற்ற வழித்தடங்களில் பேருந்துகளை இயக்கி வருவதால் ஆண்டொன்றுக்கு ரூ. 50 லட்சம் விரயம் ஏற்படுகிறது. சேரன் போக்குவரத்துக் கழகம், ஆண்டொன்றுக்கு ரூ. 11 லட்சம் விரயத்தில், 17 ஆதாயமற்ற வழித்தடங்களில் பேருந்துகளை இயக்கி வருகிறது. சோழன் போக்குவரத்துக் கழகம், ஆண்டொன்றுக்கு ரூ. 15 லட்சம் விரயத்தில், 74 ஆதாயமற்ற வழித்தடங்களில் பேருந்துகளை இயக்கி வருகிறது.

7. நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்துத் துறையானது, ஆண்டொன்றுக்கு ரூ. 106 லட்சம் விரயத்தில், 239 ஆதாயமற்ற வழித்தடங்களில் பேருந்துகளை இயக்கி வருகிறது.

8. கடந்த ஆண்டு, போக்குவரத்து மானியக் கோரிக்கையை முன்வைத்து, இம் மாநிலத்தின் பயணிகள் போக்குவரத்துத் தேவைகள் அனைத்தையும் நிறைவு செய்ய பெரும் நிறுவனமொன்று இருப்பதற்குப் பதிலாக, அந்தந்த வட்டார மக்களின் போக்குவரத்துத் தேவைகளை நிறைவு செய்யும் வகையில் தனித்தியங்கும் சிறு நிறுவனங்கள் பலவற்றை வைத்துக்கொள்ளலாம் என்று அரசு மேற்கொண்ட சீரிய முடிவைப்பற்றி நான் குறிப்பிட்டேன். இம் மாநிலம் முழுவதற்கும் பெரியதொரு நிறுவனம் இருப்பது சிறந்ததா அல்லது அதற்கு மாறாக, சிறு நிறுவனங்கள் பல இருந்து அவை ஒன்றோடொன்று போட்டியிடுவது சிறந்ததா என்பது குறித்து மாறுபட்ட கருத்துக்கள் இருப்பதை நானறிவேன்.

9. அரசின் சீரிய கொள்கை காரணமாக அமைக்கப்பட்ட சிறு நிறுவனங்களுள் ஒன்றாகிய சேரன் போக்குவரத்துக் கழகம், சாதகமான சூழ்நிலையில் பொதுத் துறை எய்தக்கூடிய சாதனைகளுக்குப் புத்தாக்கம் கொடுத்துள்ளது. செயல்பட்ட இரண்டாவது முழு ஆண்டில் இக் கழகம் 1973–74-ஆம் ஆண்டிற்காக 10 சதவீதம் இடைக்கால ஆதாயப் பங்குத் தொகையை அறிவித்துள்ளது.



[1974 மார்ச் 15

1973–74-ஆம் ஆண்டுக்கான தனது ஆதாயத்திலிருந்து ரூ. 25 லட்சம் தொகையை தொழிலாளர்களுக்கான ஓய்வூதிய நிதிக்கு ஒதுக்கியுள்ளது.

10. ஆனைமலை பேருந்துப் போக்குவரத்தினை மேற்கொண்ட போது அரசு இக் கழகத்தில் ரூ. 45 லட்சம் (நிலையான வட்டியில்லாப் பங்குத் தொகை வகையில் ரூ. 35 லட்சமும், கடன் வழங்கும் வகையில் ரூ. 10 லட்சமும்) முதலீடு செய்தது. அப்படியிருக்க, 1973—74-உடன் முடியும் நிதியாண்டில் வரி விதிப்புக்கு முன்னர் ரூ. 45 லட்சம் இக் கழகத்திற்கு ஆதாயம் கிட்டும்.

11. இச்சாதனை எவ்வாறு சாத்தியமாயிற்று? இதற்கான காரணங்களில் சிலவற்றை நான் குறிப்பிட விரும்புகிறேன். போக்குவரத்துத் துறையில், மாநில அரசுக்குச் சொந்தமான கழகங்களின் நிர்வாகத்தில் தொழிலாளர்களுக்குப் பங்களிக்கும் திட்டம் பற்றி சென்ற ஆண்டு நான் அறிவித்தேன். இது, முதலில் இக் கழகத்தில் சோதனை அடிப்படையில் செயல்படுத்தப்பட்டது. இக் கழகத்தின் தொழிலாளர்களில் ஏறத்தாழ அனைவரும் இதன் சொந்தக்காரர்களாவர். இக்கழகத்தின் தொழிலாளர் நிலையில் இருவர், ஓட்டுநர்கள் (Drivers) இந்தக் கழகத்தின் இயக்குநர்கள் குழுவில் (Board of Directors) தொழிலாளர் பிரதிநிதிகளாகச் செயல்படுகின்றனர். ஆதாயத்தைப் பங்கிடும் திட்டமொன்றும் இக் கழகத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. ஏதாவதொரு மாதத்தில் ஆதாயம் கிலோ மீட்டருக்குப் பத்து காசுக்கு மேற்பட்டால் அந்த மாதத்திற்கான ஆதாயத்தில் ஒரு பகுதி தொழிலாளர்களிடையே பங்கிடப்படுகிறது. இக் கழகத்தில் ஒரேயொரு தொழிற்சங்கம்தான் உள்ளது. தொழிலாளர்களுக்கும் நிர்வாகத்தினருக்குமிடையே மிகவும் நல்ல சீரான உறவு இருந்து வருகிறது.

12. பொதுத் துறை தொழிலை தொழிலாளர்களது உடைமையாக ஆக்கும் வகையில் முதலீட்டில் தொழிலாளர்கட்குப் பங்களிக்கும் திட்டத்தைக் கடந்த ஆண்டில் முன்மொழிந்து பொதுத் துறைத் தொழில்களின் அமைப்பு முறையில் ஒரு புதிய சகாப்தத்தைத் தமிழகம் ஏற்படுத்தியிருந்தது. இவ்வாண்டில் தொழிலாளர்களுக்கு

தொழிற்சாலையில் பங்கு அளித்த முதல் பொதுத் துறை சேரன் போக்குவரத்துக் கழகமாகும். இக் கழகம் ஈடு இணையற்ற, சிறப்பான நற்சாதனையை எய்தியுள்ளது. இக் கழகம் இந்திய பொதுத் துறை வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயத்தை ஏற்படுத்தியுள்ளது.

தனது சொந்த இலாபத்தைப் பெருக்கிக்கொள்ள வேண்டும் என்கிற நோக்கத்திற்கு அப்பாற்பட்ட உணர்வுகளும் இலட்சியங்களுமகூட தொழிலில் ஊக்க சக்தியையும் ஈடுபாட்டுணர்வையும் ஏற்படுத்தவல்லன என்பது மெய்ப்பிக்கப்பட்டுள்ளது. இந்த வெற்றி எனக்கோ, தமிழக அரசுக்கோ அல்லது ஆளும் கட்சிக்கோ உரியதாகச் சொல்லத் தயாராக இல்லை. காரணம் இது தமிழக மக்களின் மகத்தான வெற்றியாகும். இந்த மகத்தான பணியைச் செய்த சேரன் போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களையும் தன்னை அர்ப்பணித்துக் கொண்ட சேரன் போக்குவரத்துக் கழகத்தையும் பாராட்டுவதில், நான் மட்டுமின்றி, என்னோடு இந்த அவையில் அனைவரும் கலந்துகொள்வர் என்பதில் எனக்கு எள்ளளவும் ஐயம் இல்லை.

13. கடந்த ஆண்டில், போக்குவரத்துத் துறையின் தொழிலாளர்களை அத்தொழிலின் பங்குதாரர்களாக்கினோம். இந்த ஆண்டில் 35,000 போக்குவரத்துத் துறைத் தொழிலாளர்களை, மற்ற அரசுத் தொழிலாளர்களைப் போல ஓய்வு ஊதியம் பெறுவதற்குத் தகுதியுடையவர்களாகப்பட்டுள்ளனர். இந்த ஓய்வு ஊதியம், தற்போது கொடுக்கப்பட்டுள்ள உதவித் தொகை பெறும் வருங்கால வைப்பு நிதிக்குப் பதிலாகத் தொழிலாளர்களுக்கு கொடுக்கப்படும். பொதுத் துறை மற்றும் தனியார் துறைகளின் தொழிலாளர்களுக்கென்றுள்ள உதவித் தொகை பெறும் வருங்கால வைப்பு நிதி விதிகள், வரலாற்றுச் சின்னமாகும். தொடக்கக் காலத்தில் இந்நாட்டில் கூட்டு இருப்பு நிறுவனங்களாக இருந்த ஆங்கிலேய இரயில்வே நிறுவனங்களால் ஏற்படுத்தப்பட்டதுதான் உதவித் தொகை பெறும் வருங்கால வைப்பு நிதி அமைப்பு. துரதிருஷ்டவசமாக, அரசு பொதுத் துறையில் தொழிற்சாலைகளை நிறுவும்போது, தனது பணியாளர்களுக்கு ஓய்வு ஊதியம் வழங்கிப் பாதுகாப்பு





அளித்ததைக் கருத்தில் கொள்வதற்குப் பதிலாக, தனியார் துறையைச் சேர்ந்த பணியாளர்களுக்கு அத்துறை தொழிலதிபர்களால் என்ன பாதுகாப்பு அளிக்கப்படுகின்றன என்பதை அரசு பார்த்தது. அதிக வருமானமுள்ள தனியார் துறைத் தொழில் அதிபர்கள் தங்கள் தொழிற்சாலையில் பணி புரியும் நிர்வாகப் பணியாளர்களுக்கும் முதுநிலை நிர்வாகிகளுக்கும் ஓய்வு ஊதியம் அளித்தனர். ஆனால், உதவித் தொகை வருங்கால வைப்பு நிதித் திட்டத்தின்கீழ் உள்ள பயனை பெரும்பாலான தொழிலாளர்களுக்கு அளித்தனர்.

14. அரசுப் பணியாளர்களுக்கு இருப்பதைப் போலவே, போக்குவரத்துத் துறைகள் அனைத்திலும் உள்ள தொழிலாளர்கள் ஓய்வு ஊதியம் பெறத் தகுதியுடையவர்கள் என்று செய்யப்பட்டதன் மூலம் இந்தியத் தொழிலாளர்களின் சமூக பாதுகாப்புக்கான திட்டத்தை தொடங்கியுள்ளோம். தொழிலாளர்களுக்கு, அவர்கள் ஓய்வு பெற்ற பின்னர் குறிப்பிட்ட தொகை பணம் கொடுக்கப்படுகிறது. சற்றும் முன்னெண்ணம் இல்லாத வகையில் ஓய்வு பெற்ற ஒரு சில ஆண்டுகளில் இப்பணத்தை செலவு செய்து விடுகிறார்கள். பின் வாழ்க்கையில் இடருகின்றனர். இது நாம் அனுபவத்தால் கண்ட உண்மையாகும். ஒரு தொழிலாளர் பணியில் இருக்கும் போதே இறந்துவிட்டால் அவர் குடும்பத்திற்குப் பாதுகாப்பு இல்லை. ஓய்வு ஊதியத் திட்டத்தின் மூலம் தொழிலாளருக்கும் அவர் குடும்பத்திற்கும் பாதுகாப்பு அளிக்கப்படுகிறது. மற்ற மாநிலங்களும் பிரபல தொழில் அதிபர்களும் நமது செயல்முறை மாதிரியைக் கையாளுவார்கள் என எதிர்பார்க்கிறோம்.

15. உங்களுடன் உங்கள் மூலமாக நாட்டு மக்களுடனும் தேசிய மயமாக்கப்பட்ட போக்குவரத்துத் தொழில் சம்பந்தமான பிரச்சினைகளை ஆய்வதற்கு இதை ஒரு நல்ல வாய்ப்பாக எடுத்துக் கொள்கிறேன்.

16. முதன்மையான பிரச்சினை பேருந்துப் போக்குவரத்தை நடத்துவதற்குத் தேவையான அளவு உதிரிப் பாகங்களைப் பெறுவதாகும். பல சந்தர்ப்பங்களில் பல்வேறு அமைப்புகளின் கூட்டங்களிலும் டில்லியிலுள்ள தகுதியானவர்களிடமும்

இதுபற்றி நான் பலமுறை வலியுறுத்திக் கூறியுள்ளேன். திட்டம் தீட்டுபவர்கள், கொள்கைகளை வகுப்பவர்கள் ஆகியவர்களின் கவனத்தை இப்பிரச்சினைகள் குறித்து ஈர்க்க முயற்சி செய்துள்ளேன். இதுவரையில் எந்தப் பலனும் ஏற்படவில்லை என்பதை மிகுந்த வருத்தத்தோடு தெரிவிக்கக் கடமைப் பட்டுள்ளேன்.

17. தயாரிக்கப்படுகின்ற ஒவ்வொரு வண்டியைப் பொறுத்த வரையில், முக்கியத் தளவாடத் தயாரிப்பாளர்கள் சில உறுப்புக்களை தயாரிக்கின்றனர். வண்டிக்குத் தேவையான மற்ற உறுப்புக்களை விநியோகஸ்தர்களிடமிருந்து ஒப்பந்த அடிப்படையில் பெறுகிறார்கள். இதை இச்சபை நன்கு அறியும். சில சிக்கலான உறுப்புக்களைப் பொறுத்தவரையில், அவற்றைத் தயாரிப்பதற்கான நுணுக்கமும் போதிய அளவில் அவை சம்பந்தமான தொழில் நுட்ப அறிவும் இல்லாததால் இரண்டாம் நிலைத் தொழிற்சாலைகளில் இந்த உறுப்புக்களைத் தயாரிக்க இயலவில்லை. கிராங்க் சாப்ஃட் (Grank Shafts) , ப்ரொபெல்லர் சாப்ஃட் (Propellor Shaft) பிஸ்டன், எஞ்சின் வால்வுகள், மெல்லிய சுவருடைய பேரிங்குகள், கிரவுன் வீல் பினியன்கள் (Crown wheel Pinion) போன்ற சிக்கலான உறுப்புகள் கிடைக்காததால் பல வண்டிகள் ஓட இயலா நிலையில் உள்ளன.

18. தளவாட தயாரிப்பாளர்கள் உற்பத்தி செய்யப்பட வேண்டிய வண்டிகளின் எண்ணிக்கையைத்தான் முக்கியமாகக் கருதுகிறார்கள். அவர்களால் விலைக்கு விற்கப்பட்ட வண்டிகள் தரமான நிலையில் உள்ளவை என்பதை நிரூபிக்கும் வகையில் போதுமான அளவில் உதிரி உறுப்புக்களை உற்பத்தி செய்யத் தவறி விடுகிறார்கள்.

19. அதிக வண்டிகளை உற்பத்தி செய்வது தேசிய பொருளாதாரத்திற்கு தேவையானதாக இருக்கும். அதே சமயத்தில் அரிதாகக் கிடைக்கின்ற பொருள்களைக் கொண்டு செய்யப்பட்ட அந்த வண்டிகள் நீண்ட காலம் பயன்படுத்தப்பட வேண்டும். உற்பத்திச் செலவு, பராமரிப்பு ஆகிய அனைத்துச் செலவையும் கருத்தில் கொண்டு நாம் அந்த வண்டியின் மூலம் எதிர்பார்க்கப்படும் வருவாய் கிடைக்க வேண்டும் என்பவையும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். சில முக்கிய உதிரிப் பாகங்கள்





கிடைக்காமையால் ஓட இயலா நிலையில் நிறுத்தப்பட்டிருக்கும் வண்டிகளின் கணக்கெடுப்பு ஒன்றை எடுக்குமாறு டில்லியில் உள்ள வண்டிகள் உற்பத்தித் திட்டத்திற்குப் பொறுப்பானவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன். வண்டிகளின் உற்பத்தி, உதிரிப் பாகங்களின் உற்பத்தி ஆகிய இரண்டிலும் சரிசமமான நாட்டம் செலுத்த நாம் தயங்க வேண்டியதில்லை.

20. உற்பத்தியாளராலோ அல்லது அவருக்காக உரிம ஏற்பாடுகளின்கீழ் வேறு நபராலோ தயாரித்து விற்பனை செய்யப்பட்ட உதிரி உறுப்புக்கள் போதிய அளவுக்குக் கடைகளில் கிடைப்பதை உறுதி செய்வதற்கான பொறுப்பு, உற்பத்தியாளரையே சாரும் என்ற கொள்கையை தொடர்புடைய மத்திய அமைச்சகங்கள் ஏற்க வேண்டுமென நான் வேண்டுகிறேன்.

21. வரையறுக்கப்பட்ட அளவில் உற்பத்தி செய்யப்பட்ட உதிரிப் பாகங்கள் கூட, தங்களை விநியோகஸ்தர்கள் என்று கூறிக்கொள்பவர்கள் மூலமாக கடைகளுக்கு வழங்கப்படுகின்றன. சில உதிரிப் பாகங்கள் கடைகளில் விநியோகஸ்தர்கள் மற்றும் வியாபாரிகள் மூலம் அதிக விலைக்கு விற்கப்படுகின்றன. முக்கிய பாகங்கள் கிடைக்காமல் வண்டிகளை ஓடாது நிறுத்தி வைத்திருப்பதா அல்லது சிக்கலான உதிரிப் பாகங்களை அதிக விலை கொடுத்து வாங்குவதா என ஆராயும்போது அரசுப் போக்குவரத்து நிறுவனங்கள் அந்த உதிரிப் பாகங்களை அதிக விலை கொடுத்து வாங்குவதைத் தவிர வேறு வழி இல்லை.

22. தொடர்புடைய அனைவருக்கும் இந்தப் பிரச்சினைகள் நன்கு தெரியும். ஆனால், ஏதோ சில காரணங்களுக்காக, உற்பத்தியாளர்கள் எல்லா வண்டிகளும் ஓடுவதற்கு ஏற்ற வகையில் உதிரிப் பாகங்களை போதுமான அளவிற்கு உற்பத்தி செய்வதற்குப் பொறுப்பும் கடமையும் உடையவர்கள் என்பதை இதுவரை நிர்ணயம் செய்யப்படவில்லை. இந்த நிலைமையைச் சீர்ப்படுத்துவதற்கான அரசியல் துணிவையும் உறுதியையும் தலைமை பெறுமென எதிர்பார்க்கிறேன்.

23. நிலையான பயணக் கட்டண அமைப்பை வைத்து வருவதிலுள்ள இடர்ப்பாடு என் முன்னுள்ள இரண்டாவது பிரச்சினையாகும்.

[1974 மார்ச் 15

24. பயணிப் போக்குவரத்துக்கான நிலையான கட்டண அமைப்பு ஒன்றை வைத்து வருவதன் அவசியத்தை நாம் அனைவரும் உணர்வோம். நாட்டிலுள்ள குறைந்த பயணக் கட்டண அமைப்பைத் தமிழ் நாடு பின்பற்றி வந்துள்ளதை அவையினர் அறிவர். ஆதலால், கட்டணங்களை உயர்த்தும்போது நாம் மிகவும் விழிப்புடன் இருக்க வேண்டியுள்ளது. இந்த உயர்வு பொது மனிதனின் வாழ்க்கைச் செலவுப் புள்ளிவிவரம் உயர்வதற்கும் வழிகோலும் என்பதை நாம் உணர்கிறோம். மேலும், நகரங்கள், மாநகரங்களிலுள்ள பெரும்பாலான தொழிலாளர்கள் பணி புரியும் இடத்திற்குச் சென்று வர பேருந்துப் போக்குவரத்தையே நம்பி இருக்கின்றனர்.

25. சென்னை மாநகரைப் பொறுத்தமட்டில், பெருநகரப் பேருந்துப் பணிக்கு இந்திய அரசு உதவி புரியும் என்ற நம்பிக்கை நமக்கு இருந்தது. 1970 மார்ச் திங்களில் பிரதமர் கேட்டுக்கொண்டதன் பேரில், பெருநகர்ப் போக்குவரத்துப் பணிகள் குறித்து பணிக் குழு ஒன்றைத் திட்ட ஆணைக் குழு அமைத்தது. "நகர்ப்புறப் பகுதிகளில் தொழிலாளர்கள், நடுத்தர வகுப்பினர் ஆகியோரது கடினமான வாழ்வை ஓரளவு எளிதாக்கவும், பொதுப் போக்குவரத்துப் பிரச்சினைக்கு ஒருங்கிணைந்த வகையில் உடனடியாக தீர்வு காணத் திட்டம் ஒன்று வகுக்கவும், பெருநகரங்களில் பொதுப் போக்குவரத்துப் பணிகளைக் குறித்த காலத்திற்குள் மேம்படுத்துவதற்கான திட்டம் ஒன்றை வகுக்கவும்" மேற்படி பணிக் குழு அமைக்கப்பட்டது. பெருநகரங்களில் ஓடும் ஒரு பேருந்துக்கு ஆண்டுதோறும் மத்திய வரியாக ரூ. 16,407 செலவாகிறது என்று இக்குழு மதிப்பிட்டது. இதில் ரூ. 11,000 டீசல் எண்ணெய் வகையில் விதிக்கப்படும் ஆயத் தீர்வையாகும். டயர்கள், டியூபுகள் ஆயத் தீர்வையாக ரூ. 5,000 செலுத்தப்படுகிறது. பெருநகர்ப் போக்குவரத்து குறித்த பணிக் குழுவின் அறிக்கையைப் பரிசீலித்த பின்னர், மத்திய வரிகள், ஆயத் தீர்வைகள் ஆகியவை குறித்து உதவியளிக்க இந்திய அரசு முன்வருமென்று எதிர்பார்க்கப்பட்டது. இதற்குப் பதிலாக, H.S.D. எண்ணெய் விலையை 18 சதவீதம் உயவு எண்ணெய்; மசகு ஆகியவற்றின் விலையை 100 சதவீதத்திற்கு மேலும் இந்திய அரசு அண்மையில் உயர்த்தியுள்ளது. இத்துடன், மத்திய வரவு-செலவுத்



1974 மார்ச் 15]

திட்டத்தில் அறிவித்துள்ளவாறு பொருள்களின் விலை உயருமென்று நாம் எதிர்பார்க்கிறோம். இதனால் போக்குவரத்துத் தொழில் பாதிக்கப்படும். அதன் விளைவாக உதிரி பாகங்களின் விலை உயரும். இந்த வகை உயர்வானது, சென்னை பெருநகர்ப் போக்குவரத்து முறைக்கு மட்டும் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 150 இலட்சமாக இருக்கும். இம்மாநிலத்தில் பல்வேறு போக்குவரத்துக் கழகங்களால் நடத்தப்படும் மாவட்ட வழித் தடங்கள், ஏனைய வழித் தடங்கள் குறித்தும் இத்தகைய உயர்வு இருக்கும். இதனால் தொழிலாளர்கள், நடுத்தர வகுப்பினர் ஆகியோரது வாழ்வு எளிதாக இராது என்பது உறுதி.

26. மாண்புமிகு முதல்வர் அவர்கள் தனது வரவு-செலவுத் திட்ட உரையில் மோட்டார் வாகன வரி விதிப்பில் மாறுதலும், சீரமைப்பும் ஏற்படுத்தப்படும் என அறிவித்ததை இம்மாமன்றம் அறியும். அதற்காக சட்டம் விரைவில் கொண்டுவரப்படும்.

27. பயணிப் பேருந்துகளின் தற்போதையக் கட்டண விகிதங்கள் 1964-ஆம் ஆண்டில் நிர்ணயிக்கப்பட்டவையாகும். பேருந்து அடிச்சட்டங்கள், டீசல் எண்ணெய், உதிரி உறுப்புகள், மற்றுமுள்ள சாமான்கள் ஆகியவற்றின் விலையேற்றத்தினால், கிலோ மீட்டருக்கு 3 காசுகள் என்கின்ற கட்டணம் போதுமானதல்ல எனவும் இந்தக் கட்டண விகிதங்களை உயர்த்த வேண்டுமெனவும் பயணிப் பேருந்துகளின் உரிமையாளர்கள் அரசாங்கத்தை வேண்டியுள்ளனர். ஆழ்ந்த சிந்தனைக்குப் பிறகு கடந்த 1973-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 14-ஆம் நாளன்று அரசு இதற்கான நகல் திட்டத்தை அறிவித்தது. அதில் கிலோ மீட்டருக்கு ½ காசு உயர்வு முன்மொழியப்பட்டிருந்தது. அதன் பேரில் ஆலோசனைகளும் மறுப்புகளும் கோரப்பட்டு அவைகளும் வந்துள்ளன. சம்பந்தப்பட்டவர்களின் பிரதிநிதிகள் நேரில் விசாரிக்கப்பட்டனர். அண்மையில் டீசல் எண்ணெய்க்கும், உயவு எண்ணெய்க்கும் ஏற்பட்டுள்ள விலையேற்றத்தினால் இந்தக் கட்டண விகிதங்களை மேலும் உயர்த்த வேண்டுமென பேருந்து உரிமையாளர்கள் வேண்டியுள்ளனர். இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

28. அண்மையில் ஏற்பட்டுள்ள எண்ணெய் தட்டுப்பாடு பற்றியும், அதன் விளைவாக நம் நாட்டில் ஏற்பட்டுள்ள இடர்ப்பாடு குறித்தும் நாம் ஆழ்ந்த கவலை கொண்டுள்ளோம். பெட்ரோலியப் பொருட்களை இறக்குமதி செய்வதற்காகும் செலவை ஈடு செய்ய நமது ஏற்றுமதி வருமானங்கள் முழுவதையும் செலவிட வேண்டிய கட்டத்தில் நாம் உள்ளோம். இதனால் நமது திட்டங்களும் முன்னுரிமையோடு எடுத்துக் கொள்ளும் நடவடிக்கைகளும் பெரிதும் பாதிக்கப்படலாம். ஆகவே, எரிபொருள் சிக்கனத்தைத் தவிர வேறு எந்தப் பொருளிலும் நமது தலைவர்கள் உடனடி நாட்டம் செலுத்த வேண்டிய பொருள் இருக்காது எனலாம். இந்த எரிபொருள் சிக்கனத்தை எட்டுவதற்கு நாம் மாநில அரசு என்கிற அளவில் கணிசமான அளவுக்குச் செய்வதற்கு ஏதுமில்லை என்று நான் கருதுகிறேன். இவ்வாறு நிலைமைகள் செல்வதை மாற்றியமைக்க நாம் ஒன்றும் செய்வதற்கில்லை. அதிகாரம் வேறு இடத்திலுள்ளது. இந்தக் காரணங்களுக்காகவன்றி மற்றப்படி, இப்பொருள் குறித்து நன்கு ஆய்ந்து வெளிப்படையாக கூறுவதில் நமக்குள்ள பொறுப்பை நாம் உதறித் தள்ளிவிட முடியாது.

29. இந்த எண்ணெய் தட்டுப்பாடு சிக்கலின் உட்கிடக்கைகள் பற்றியும், நமது பொருளாதாரத்தை எந்தவிதத்தில் அது பாதிக்கின்றது என்பது பற்றியும் நாம் உணர்ந்துள்ளோமா என்று நான் சில சமயங்களில் வியப்படைவதுண்டு.

30. பொருளாதார வகையில் பார்க்கும்போது, ஒரு பேருந்தில் ஒரு இடம் காலியாக இருந்தாலும் அதனால் நமக்கு ஏற்படுவது விரயமே. ஒரு பயணத் தடவையில் ஒரு இருக்கை காலியாக இருந்தால் அது வீண்தான். வீணான போட்டியைத் தவிர்ப்பதன் மூலம் சிறந்த, சிக்கனமான முறையில் பேருந்துப் போக்குவரத்துப் பணியை இயக்க மோட்டார் வண்டிகள் சட்டத்தின் விதிமுறைகள் உறுதி செய்யும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. ஆனால், நடைமுறையில் வழித்தடங்களில் அதிக எண்ணிக்கையில் பேருந்துகளை விடுவதால் வீணான போட்டிதான் எழுகின்றது. இந்த வழித்தடங்களில் பொதுவாக குறைந்த எண்ணிக்கையில் பேருந்துகளை விட்டாலே அதுவே பயணிகள் போக்குவரத்துத் தேவைகளை நிறைவு செய்ய போதுமானவையாய் இருக்கும். ஒரு வழித்தடம் நாட்டுடைமையாக்கப்படும்போது,



அந்த வழித்தடம் குறித்து உயர் நீதிமன்றத்தில் அந்த வழித்தடம் நாட்டுடைமையாக்கப்படுவதன் தேவை, அது சட்டப்படி முறையானது என்று தீர்ப்பளிக்கப்படும் வரை அந்த வழித் தடத்தில் தனியார் பேருந்து உரிமையாளருக்கும், நாட்டுடைமை யாக்கப்பட்ட போக்குவரத்து நிறுவனத்திற்கும் பேருந்துப் பணிகளை இணையாக நடத்த அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

31. இதைவிட பெரிய அளவிலான வினா ஒன்றை எழுப்ப நான் விரும்புகிறேன். பொருளாதார நெருக்கடியில் தவித்துக் கொண்டிருக்கும் நாடு ஒன்று வீணான போட்டியையும் இணைப் பேருந்துப் பணிகள் என்ற ஆடம்பரத்தையும் தொடர்ந்து செயலில் வைத்துக்கொண்டு, கிடைப்பதற்கு அரிதாகிவிட்ட எரிபொருளைப் பயன்படுத்தலாமா? அவ்வாறு எரிபொருளைப் பயன்படுத்துவதனால், பொருளாதார வளர்ச்சியில் எரிபொருளை அடிப்படையாகக் கொண்டுள்ள பிற தொழில்களின் முன்னுரிமை பாதிக்கப்படாதா?

32. போர்க்கால அடிப்படையில் கவனிக்கப்பட வேண்டியது என்று ஒன்று இருந்தால், அது ஒரே வழித்தடத்தில் இரு நிறுவனங்கள் பேருந்துப் பணியை நடத்துவது என்பதாகும். நாட்டின் நலனைக் கருதி இரு நிறுவனங்கள் ஒரே வழித்தடத்தில் பேருந்துப் பணியை இயக்கக்கூடாது. சமுதாயத்திற்குக் கேடு விளைந்தாலும் தனிப்பட்டவரின் உரிமையைக் காப்பதில் நீங்கள் கவலை கொள்பவராக இருந்தால், அதே வழித்தடத்தில் அரசுப் போக்குவரத்து நிறுவனங்கள் பேருந்துப் பணியை நடத்துவதைத் தாராளமாக நிறுத்திவிடுங்கள். அப்போது, அரியபொருளாகி விட்ட எரிபொருளை நாடு முழுவதும் வீணாக்காது. பேருந்துகளை நாட்டுடைமையாக்கும் திட்டம் முழுமைக்கும் இடையூறின்றி இதை நிறுத்த மாநில அரசாகிய நம்மால் இயலாது. வீணான போட்டியையும், தனியார் நிறுவனத்திற்கு இணையாகப் பேருந்துப் பணி நடத்துவதையும் அகற்றுவதில் நடவடிக்கை எடுக்குமாறு நான் இப்பேரவை மூலம் மத்திய அரசை வேண்டுகிறேன். இந்நாட்டில் ஓடும் 100.000 பேருந்துகளில், பயணிப் போக்குவரத்துப் பணி ஒரே நாளில் நாட்டுடைமை யாக்கப்பட்டு உரியவாறு சீரமைக்கப்பட்டால் 20 சதவீதப் பேருந்துகள் எடுத்துவிடப்படலாம்.

33. எரிபொருளை இயன்றவரை சிக்கனமாகப் பயன்படுத்துவதற்குக் கீழ்க்கண்ட நடவடிக்கைகளை எடுக்கக் கருதியுள்ளோம்.

34. எரிபொருளைச் சிக்கனமாகப் பயன்படுத்துவது குறித்து தேசிய அளவில் போட்டி ஒன்று தமிழ் நாடு அரசால் நடத்தப்படும். பேருந்துகளில் பயன்படுத்தப்படும் எரிபொருளைக் குறைப்பதற்கு குறிப்பிடத் தகுந்த நாட்டம் செலுத்தியவருக்கு அல்லது அமைப்பிற்கு 1974–75 நிதி ஆண்டில் ரூ. 1 லட்சம் பரிசுத் தொகை அளிக்கப்படும். டீசல் எண்ணெய்க்குப் பதிலாக வேறொன்றைக் கண்டுபிடிக்கும் ஒருவர் அந்த நேரத்திலேயே கோடீஸ்வரர் என்பது அனைவரும் ஒப்புக்கொண்டதாகும். அவருக்கு ரூ. 1 லட்சம் பரிசுத் தொகை தேவைப்படாது. இயந்திரங்களை வடிவமைப்பில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் குறித்து பொது மக்கள் நினைத்துப் பார்க்கச் செய்வதே இதன் நோக்கமாகும். இதனால் டீசல் எண்ணெய் பயன்படுத்துவதில் சிக்கனம் ஏற்பட்டுள்ளது. டீசல் எண்ணெய்க்கு சில இரசாயனப் பொருள்களைச் சேர்ப்பது போன்ற பிற சாத்தியக் கூறுகளும் உள்ளன. இதன் காரணமாக பேருந்துகளில் பயன்படுத்தப்படும் எரிபொருள் அளவு குறைக்கப்படும் அல்லது டீசல் எண்ணெயுடன் மலிவாக உள்ள திரவம் கலந்து பயன்படுத்தலாம்.

35. நமது மக்களின் உள்ளார்ந்த திறமையை வெளிக்கொணர நாம் முயன்று வருகிறோம். இன்று நான் அறிவித்துள்ள ரூ. 1 லட்சம் பரிசுத் தொகைத் திட்டம், நமது மக்களின் கற்பனைத் திறனையும், ஆற்றல் திறனையும் தூண்டிவிட தமிழ் நாட்டு மக்கள் அளித்த ஒரு பரிசே ஆகும்.

36. பேருந்தின் சுமை எரிபொருள் பயன்படுத்துவதை அதிகமாக்குகிறது. கடந்த ஆண்டுகளில் பேருந்துகளை வடிவமைப்பதில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. ஆனால் தோற்றத்திலே மாற்றம் ஏற்பட்டிருக்கிறதே ஒழிய பணிவகையில் மாற்றம் ஏற்படவில்லை. எடைக் குறைவான புதிய வகைப் பேருந்துகளைக் கட்டுவதற்கு ஊக்கம் அளிப்பது அவசியமாகிறது. இதற்குப் பயன்படுத்தப்படும் பொருள்கள் உள்நாட்டில் போதிய அளவு கிடைக்க வேண்டும். புதிய பேருந்துகளைக் கட்டுவதற்காகும் செலவு மற்ற மாநிலங்களைக் காட்டிலும் குறைவானதாக இருக்க வேண்டும். நாட்டின் பருவநிலைகளை ஒட்டியும், மலிவு விலைகளில்





பொருள்கள் கிடைப்பதை ஒட்டியும், லேசான பேருந்துகளை வடிவமைப்பதில் ஏற்படும் போட்டியை தமிழ் நாடு அரசு வளர்க்கும். பயன்படுத்தப்படும் எரிபொருள் அளவைக் குறைக்கும் சிறந்த முறையில் வடிவமைக்கப்பட்ட புதிய பேருந்தை தயாரித்தவருக்கு அல்லது அமைப்பிற்கு 1974–75 நிதி ஆண்டில் ரூ. 50,000 பரிசாகக் கொடுக்கப்படும்.

37. எரிபொருளைச் சிக்கனமாகப் பயன்படுத்துவதிலும், நவீன பேருந்து கூடு வடிவமைப்பதிலும் ஏற்பட்ட போட்டிகளை தமிழ் நாடு அரசால் அமைக்கப்பட்ட தேசிய வல்லுநர்கள் குழு ஒன்றால் தீர்மானிக்கப்படும். இதற்குரிய விதிகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. இவை குறித்து பத்திரிகைகளில் பரவலாக விளம்பரப்படுத்தப்படும்.

38. இரண்டு பரிசுத் தொகைகளுக்கு ஆகும் ரூ. 1.5 லட்சம் செலவும், விளம்பரச் செலவு போன்ற போட்டிகளை நடத்துவதற்கு ஆகும் ஏனைய செலவுகளும் ஆக சுமார் ரூ. 3 லட்சத்தை 1973–74 ஆம் ஆண்டில் சேரன் போக்குவரத்துக் கழகம் தான் ஈட்டிய ஆதாயத்திலிருந்து தமிழக அரசின் வசம் அளிக்கும்.

39. மேலும் தங்களுக்குள்ளேயே எரிபொருளைச் சிக்கனமாகப் பயன்படுத்தும் இயக்கத்தை ஊக்குவிக்க அரசு போக்குவரத்துத் துறையும், 6 போக்குவரத்துக் கழகங்களும் போட்டிகளை நடத்தும். கடந்த கால அடிப்படையில் பேருந்துகள் வாரியாக அல்லது பணிமனை வாரியாக பேருந்து ஒன்றுக்கு தற்போது கிலோ மீட்டர் ஒன்றுக்குச் சராசரியாகப் பயன்படுத்தப்படும் எரிபொருள் அளவு இதற்குரிய அடிப்படை அளவுகளாக அமையும். ஒவ்வொரு மாத இறுதியிலும், ஒவ்வொரு பேருந்துத் தொகுதியில் அல்லது பணிமனையில் சேமிக்கப்பட்ட எரிபொருளைக் கணக்கிடுவதற்குத் தேவையான நடைமுறையை இத்திட்டம் அளிக்கும். மிச்சப்படுத்தப்பட்ட எரிபொருளுக்கு ஆகும் செலவில் மூன்றில் ஒரு பகுதி தொகை அந்தச் சிக்கனத்திற்கு காரணமானவர்களுக்கு ஊக்கத் தொகையாகக் கொடுக்கப்படும்.

40. தமிழ்நாடு பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் ஏற்படுத்தியுள்ளது பற்றி முதலமைச்சர் தமது வரவு-செலவுத் திட்ட உரையில் அறிவித்தார். இந்தியக் கடற்கரையில் பாய்மரக்

கப்பல் தொழிலுக்குப் புத்துயிரளிக்கவும் பாய்மரக் கப்பல்களில் சரக்குகளை ஏற்றிச் செல்வதற்குமான சாத்தியக்கூறுகளை இயன்ற அளவு கண்டறிய அரசு இக்கழகத்திற்கு கட்டளையிட்டுள்ளது. இந்த அணுசக்தி யுகத்தில் பாய்மரக் கப்பல்களைப் பற்றிப் பேசுவது காலத்திற்கு ஒவ்வாததாகத் தெரியலாம். ஆனால் தட்டுப்பாடு ஏற்பட்டபோது, நாடுகள் தங்களுடைய கடந்த கால நினைவுகளை நினைத்துப் பார்ப்பது அடிக்கடி நிகழ்வதொன்றாகும். நமது மூதாதையர்களின் பாய்மரக் கப்பல்களைக் கொண்டு உலகத்தில் உள்ள எல்லா கடல்களிலும் பவனி வந்த காலம் ஒன்று இருந்தது. நீராவி யுகமும், எண்ணெய் யுகமும், பயிற்சி பெற்ற கப்பல் மாலுமிகளின் எண்ணிக்கையையும் இந்தியாவில் கட்டப்பட்ட பாய்மரக் கப்பல்களின் எண்ணிக்கையையும் குறைத்து விட்டன. எண்ணெய்த் தட்டுப்பாடு ஏற்பட்ட இச்சமயத்தில் தமிழ்நாடும், இந்தியாவின் எஞ்சிய பகுதியும் மீண்டும் பாய்மரக் கப்பல்களைப் பயன்படுத்துவதற்கான அவசியம் ஏற்பட்டிருக்கிறது. உலகம் முழுவதும் தங்கள் பாய்மரக் கப்பல்களின் மூலம் வாணிகம் நடத்தி புகழ் பெற்ற நமது மக்கள், தங்களுடைய பாய்மரக் கப்பல்கள் மூலம் இந்தியக் கடற்கரையில் வாணிகம் செய்வது இயல வேண்டும். அதனால் இந்தியக் கடற்கரையில் சரக்குகளைக் கொண்டு செல்வதில் எரிபொருள் பயன்படுத்துவதை பெருமளவு தவிர்க்க முடியும்.

41. தற்போதுள்ள நிலையில் பாய்மரக் கப்பல் தொழிலை மீண்டும் தொடங்குவதற்கு பெரிய அளவில் சிறந்த முறையில் வடிவமைக்கப்பட்ட பாய்மரக் கப்பல்களைக் கட்ட வேண்டும். மேலும் அதிகமான மாலுமிகளுக்குப் பயிற்சியளிக்கப்பட வேண்டும். பாய்மரக் கப்பல்களைக் கட்டுவதற்கும், பாய்மரக் கப்பல்களைச் செலுத்துவதற்கும் தாராளமாக நிதி வழங்குவதன் மூலம் மத்திய அரசு இப்பணியை முன்னின்று நடத்தவேண்டும். பாய்மரக் கப்பல் தொழிலை மீண்டும் தொடங்குவதை அது விரைவுபடுத்தும். எரிபொருளைச் சிக்கனமாகப் பயன்படுத்தும் பணியில் ஒரு பகுதியாக இந்தியக் கடற்கரையை பாய்மரக் கப்பல் போக்குவரத்துப் பணிக்குப் பயன்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகளை கடற்கரையோர மாநிலங்களும், புதுடில்லியும் உணரும் என்று நான் நம்புகிறேன்.



42. பேரவைத் தலைவர் அவர்களே, இந்த உரையில் குறிப்பிடப் பட்டுள்ள சில முக்கியமான பிரச்சினைகளின் பேரில் பயன் தரத்தக்க விவாதத்தை நான் எதிர்பார்க்கிறேன். நான் எனது உரையை முடிப்பதற்கு முன்னதாக போக்குவரத்துத் துறையில் புதியதோர் சகாப்தத்தை ஏற்படுத்துவதற்கு தங்களது தளராத உழைப்பையும், ஆர்வத்தையும், தன்னலமற்ற முயற்சியையும் இந்தத் துறையின் முன்னேற்றத்திற்காக அர்ப்பணித்துள்ள 35,000 போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு எனது பாராட்டுதல்களையும் நன்றியையும் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

## இணைப்பு – I

[41-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

**"கோரிக்கை எண் 43—எழுதுபொருள் அச்சுத் துறை" குறித்த மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் உரை.**

மாண்புமிகு தலைவர் அவர்களே,

"கோரிக்கை 43—எழுதுபொருள்-அச்சுத் துறை" என்பதன்கீழ் ரூ. 5,05,69,900க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென்று நான் முன்மொழிகிறேன். எழுதுபொருள்-அச்சுத் துறை செயல்படுவதை விளக்கும் ஆய்வுரை ஒன்று பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளதை மதிப்பிற்குரிய உறுப்பினர்களின் நாட்டத்திற்கு நான் கொண்டு வருகிறேன்.

2. ஆயினும், இத்துறை செயல்படுவதை மேம்படுத்துவதற்காக அரசு மேற்கொண்ட அல்லது மேற்கொள்ளக் கருதியுள்ள முக்கியமான நடவடிக்கைகளைக் குறித்து மதிப்பிற்குரிய உறுப்பினர்களுக்குத் தெரிவிக்க இந்த வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொள்ள நான் விழைகிறேன்.

மூன்று வட்டார அச்சகங்களையும், கிளை அச்சகங்களையும் கொண்டுள்ள தமிழ் நாடு அரசு அச்சகத்தில் ஏறக்குறைய 4,000 தொழிலாளர்கள் பணியாற்றுகின்றனர். இவர்களில், 3,000 தொழிலாளர்கள் சென்னை நகரிலுள்ள முக்கிய அச்சகத்திலேயே பணிபுரிந்து வருகின்றனர். தமிழ் நாடு அரசு அச்சகம்

[1974 மார்ச் 15

இந்நாட்டிலே உள்ள மிகப் பெரிய அச்சகங்களில் ஒன்றாகும். எழுது பொருள்-அச்சுத் துறையை "வணிக முறையில்" நடத்தும் கொள்கையை அரசு ஏற்றுக்கொண்டுள்ளது.

3. இத் துறையை விரிவுபடுத்த வேண்டியதன் காரணமாக, சென்னை சூளையிலுள்ள ஆனைக்கார் எஸ்டேட்டில் கிளை அச்சகம் ஒன்றைத் தொடங்குவதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. இந்த அச்சகம் விரைவில் செயல்படத் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அரசின் நிதி நிலையைப் பொறுத்து, எல்லா மாவட்டத் தலைமையிடங்களிலும் வட்டார அச்சகங்களை அமைக்க அரசு ஆவல் கொண்டுள்ளது. முதற்கண், மதுரையில் அச்சகம் ஒன்றைத் தொடங்குவதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. இப் புதிய அச்சகத்தைத் தொடங்குவதற்கான தொடக்க ஏற்பாடுகள் நடந்தேறி வருகின்றன.

4. எழுதுபொருள்-அச்சுத் துறை பற்றி அடங்கல் முறையில் ஆய்வதற்கென, சீரமைப்புக் குழு ஒன்றை அரசு அமைத்துள்ளது. இக்குழு இதுவரை, நிர்வாக அமைப்பு, அதிகாரப் பிரிவினை, அச்சுப் பொருள்களின் தேவைப்பட்டியல்கள் தயாரிக்கும் நடைமுறையிலும் அச்சுப் பட்டியல்கள் முதலியவற்றை நிறைவேற்றும் நடைமுறையிலும் மேம்பாடுகள் செய்தல் போன்ற 203 பரிந்துரைகளைக் கொண்ட ஐந்து இடைக்கால அறிக்கைகளை அளித்துள்ளது. 74 பரிந்துரைகள் குறித்து இறுதி ஆணைகளை அரசு பிறப்பித்தது.

5. தொழிலாளர் நலத்திற்கான வசதிகளை அளிப்பது குறித்துச் சிறப்பான நாட்டம் செலுத்தப்பட்டது. விளையாட்டுகள் போன்ற பல்வேறு நல வளர்ச்சி நடவடிக்கைகளுக்காக நல நிதியிலிருந்து ரூ. 2,253 வழங்கப்பட்டுள்ளது. தற்போதுள்ள சிற்றுண்டி விடுதிக்கு மேல் ஓய்வுக் கூடம் கட்டும் பணி பரிசீலனையில் உள்ளது. அச்சகத்துடன் இணைந்துள்ள மருந்தகம் அன்றாடம் சுமார் 175 தொழிலாளர்களுக்குச் சிகிச்சை அளிக்கின்றது. அச்சகவளவில் செயல்பட்டு வரும் தமிழ் நாடு அரசு அச்சகம்-எழுதுபொருள் துறைத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் தொழிலாளர்களின் கடன் தேவையை நிறைவு செய்கிறது. இச்சங்கத்தில் 1,877 உறுப்பினர்கள் உள்ளனர். தண்டையார்பேட்டை, காமராஜ் நகரில் உள்ள அரசு அச்சகத் தொழிலாளர்



1974 மார்ச் 15]

குடியிருப்புகளில் 500 குடியிருப்புகள் உள்ளன. அரசு அச்சகத்தின் தொழில் நுட்ப அதிகாரிகளும், மேற்பார்வைப் பணியாளர்களும், மேற்பார்வைப் பணியில நவீன அறிவியல் தொழில் நுட்ப உத்திகளைப் பின்பற்றி மேற்பார்வை வளர்ச்சித் திட்டப் பணியைக் கவனிக்கின்றனர். துறையைச் சேர்ந்த சுமார் 25 மேற்பார்வையாளர்களும் 4 அதிகாரிகளும் இப் பயிற்சி பெற்றனர்.

6. உடல் ஊனமுற்றவர்களை வேலைக்கமர்த்தியுள்ள தன்னிகரற்ற பணிக்காகத் தேசிய விருதைப் பெறுவதற்கு எழுதுபொருள்-அச்சுத் துறை தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. 1972 ஆம் ஆண்டிற்கான தேசியப் பாதுகாப்பு விருதையும் இந்த அச்சகம் பெற்றது. உடல் ஊனமுற்றவர்களுக்குப் புது வாழ்வு அளிப்பதில் இத்துறை அதிக நாட்டம் செலுத்தி வருகிறது. இத்துறையில் தற்போது உடல் ஊனமுற்றோர் 57 பேர் பணியாற்றுகின்றனர்.

7. தொழிலாளர்கள் வசதியுடன் வேலை செய்வதற்கேற்ற மனநிறைவான வேலை நிலைமைகளை உருவாக்கித் தருவதன் அவசியத்தை அரசு முற்றிலும் உணர்ந்துள்ளது. இன்றியமையாத வசதிகள் தொழிலாளர்களுக்குத் தொடர்ந்து அளிக்கப்பட்டு வருகின்றன. கூடுதலாகப் பல வசதிகள் கொடுக்கப்பட்டுள்ளன. கையச்சு, தனியச்சு, யந்திர (லைனோ, மோனோ, மெஷின்) துறைகளில் தொழிற்சாலை வகை மின்சார விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளதோடு, விளக்குகளும் மின் விசிறிகளும் போடப்பட்டுள்ளதால் தொழிலாளர்களுக்கு ஏற்படும் இடையூறுகள் குறைந்துள்ளன.

8. கடந்த ஆண்டில் மிக முக்கியமான அச்சுப் பணிகளைப் பெருமளவில் அரசு அச்சகம் மேற்கொள்ள வேண்டியிருந்தது. அச்சகப் பணியாளர்களும் தொழிலாளர்களும் தம் அபார ஒத்துழைப்பை நல்கி, பொறுப்புணர்வுடனும், ஒழுங்குணர்வுடனும் அந்த அச்சுப் பணிகளை உரிய காலத்திற்குள் நிறைவேற்றினர் என்பதை இம் மாமன்றத்திற்கு எடுத்துரைப்பதில் நான் மட்டிலா மகிழ்ச்சியடைகிறேன். அரசு அச்சகமும், தனியார் அச்சகங்களும் செய்துள்ள பணியின் மதிப்பு முறையே 96 சதவீதமும், 4 சதவீதமும் ஆகும். இவ்வாண்டில் சட்ட மன்றப் பேரவை,

[1974 மார்ச் 15

பேரவை நடவடிக்கைக் குறிப்புகள் அச்சிடப் பெறுவதற்குச் சிறப்பான நாட்டம் செலுத்தப்பட்டது. சட்ட மன்றத்தில நடைபெற்ற விவாதங்களின் பிரதிகள் உரிய காலத்தில் அச்சிடப் பட்டு சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டன என்பதை ஈண்டு குறிப்பிடலாம்.

9. காகிதம், அட்டைகள், அச்சகத்தில் செய்யப்படும் பொருள்கள், தட்டச்சு இயந்திரங்கள், படி எடுக்கும் இயந்திரம், கணக்கிடும் கருவி போன்ற எழுதுபொருள்-அச்சுத் துறைக்குத் தேவைப்படும் பொருள்களை வாங்குவதற்கும் வழங்குவதற்கும் எழுதுபொருள் கிடங்கு மத்திய அமைப்பாக விளங்குகிறது. சம்பந்தப்பட்ட காகித ஆலைகளிடமிருந்து காகிதங்களை வழங்கப் பெற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

10. நிர்வாக அமைப்பின் அன்றாடப் பணியுடன் எழுதுபொருள்-அச்சுத் துறையின் பணி நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளது. தொழிலாளருக்கும் நிர்வாகத்தினருக்கும் இடையே சுமுகமான நல்லுறவு நிலவுகிறது. தொழிலாளர்களின் ஒத்துழைப்புடன் துறை செவ்விய முறையிலும் மனநிறைவு அளிக்கும் வகையிலும் தொடர்ந்து செயல்படுமென்று நான் உறுதியாக நம்புகிறேன்.

இந்த அவை இத் தீர்மானத்தை ஏற்க வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

## தமிழ்நாடு சட்டப் பேரவை.

### சனிக்கிழமை, 1974 மார்ச் 16.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினுக்கள்—விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினுக்கள்.

### Police Academy.

* 451 *Q.* —Thiru N. DENNIS: Will the Hon. The Chief Minister be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to locate a Police Academy at Alamadi near Avadi; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) ஆம்.

(இ) சென்னை மாநகர் அருகே உள்ள அலமாதியில் காவலர் பயிற்சிக் கழகத்திற்காகக் கட்டிடங்கள் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. என். டென்னிஸ்.—தலைவரவர்களே, அதற்கான நடவடிக்கைகள் எப்பொழுது மேற்கொள்ளப்படும்? எப்பொழுது அந்த அக்காடமி அங்கு அமைக்கப்படும்?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: ஐ. ஜி. அவர்களிடமிருந்து அதற்கான "பிரப்போசல்" இப்போதுதான் வந்து சேர்ந்திருக்கிறது. அவைகளையெல்லாம் ஆராய்ந்து பரிசீலித்து, விரைவில் அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

திரு. ஆ. பரந்தாமன்: தலைவரவர்களே, இப்பொழுது துவங்கப் பெற இருக்கும் காவலர் பயிற்சிக் கழகம் வேலூரில் இருக்கும் அளவுக்கு அமையுமா? பெண்கள் கூட இந்தப் பயிற்சிக் கழகத்தில் பயிலுவார்களா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : வேலூரில் இருக்கிற நிலையிலேயே இது அமைய வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் விரும்ப மாட்டார் என்று நினைக்கிறேன். ஏனெனில், வேலூரில் இருக்கும் பயிற்சி நிலையத்தில் காற்று வசதி, மற்ற சுகாதார வசதிகள் எதுவும் இல்லாத காரணத்தினாலும், அந்தப் பயிற்சி நிலையத்திற்கான கட்டடம் திப்பு சுல்தான் காலத்திலிருந்து இருந்து வருகிற பழைமையான கட்டடம் என்பதாலும், அவர்கள் நல்ல காற்றை சுவாசிப்பதற்கும் நல்ல திறந்த வெளியில் பயிற்சிகளைப் பெறுவதற்கும் ஏற்றவாறு அலமாதியில் இந்தப் பயிற்சிக் கழகத்தைத் தொடங்குவதாக இருக்கிறோம். காவல் துறையில் பெண்களும் சேர்த்துக்கொள்ளப்படுகிற காரணத்தால் அவர்களுக்குப் பயிற்சி அளிக்கவேண்டிய அவசியம் இருப்பதால் அந்த இடத்தில் அதையும் பயன்படுத்திக்கொள்வதற்கான சூழ்நிலை உருவாக இயலும்.

திரு. எம். சுரேந்திரன் : தலைவரவர்களே, அமைக்கவிருக்கும் பயிற்சிக் கழகத்தில் மாமூலாகப் பயிற்சி சொல்லிக் கொடுப்பதுடன் மனோ தத்துவ முறை பயிற்சியும் அவர்களுக்குத் தரப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மனோ தத்துவப் பயிற்சி எதுவும் அங்கே அளிக்கப்படுவதில்லை இப்பொழுது "கராத்தே" என்ற வேறு ஒரு பயிற்சி காவல் துறையினரால் அளிக்கப்பட்டு வருகிறது. அதிலே ஓரளவு மனோதத்துவமும் அடங்கியிருப்பதாகச் சொல்லப்படுகிறது.

திரு. நா. வீராசாமி : முதலில் சொன்ன பதிலிலிருந்து வேலூரில் இருக்கக்கூடிய காவலர் பயிற்சிக் கழகத்திற்கு ஏதோ ஆபத்து இருப்பதாக அறிகிறேன். அப்படி ஏதாவது ஆபத்து இருக்கிறதா ? அங்கிருக்கும் பயிற்சிக் கழகத்தை அங்கே தொடர்ந்திருக்க விட்டுவிட்டு மற்றொரு பயிற்சிக் கழகத்தை வேண்டுமானால் அலமாதியில் புதிதாகத் திறந்து அங்கும் பயிற்சியளிக்க ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : வெளிநாட்டிலிருந்து கூட இப்படிப் பட்ட பயிற்சி அளிக்க இங்கே சிலர் வருகிறார்கள். அவர்களுடைய அனுபவங்களையும் அந்த முகாமிலே பயன்படுத்திக் கொள்ளக்கூடிய நிலைமை இருக்கிறது. அப்படி வருகிறவர்கள் சென்னைக்கு வந்து, மறுபடியும் வேலூருக்குச் செல்வது என்பதெல்லாம் சிரமமான காரியமாக இருப்பதால், வேலூரிலிருந்து அதை அலமாதிக்கு மாற்றுவதற்கான திட்டம் இருக்கிறது. வேலூரில் ஆபத்து வருவதாக எண்ணத் தேவை இல்லை. வேலூரில் ஒரு பழைய கட்டடம் காலி செய்யப்படுகிறது என்று நிம்மதிப் பெருமூச்சு விடலாம்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, துவக்கப்பட இருக்கிற அந்தப் பயிற்சிக் கழகத்தில் எத்தனை பேர் பயிற்சி பெற வழிவகை செய்யப்படுகிறது என்பதை அறியலாமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இப்பொழுது வேலூரில் கிட்டத் தட்ட ஐ.பி.எஸ். அதிகாரிகள் மூன்று பேர், டெபுடி சூப்பரின்டெண்ட்கள் 4 பேர், சப்-இன்ஸ்பெக்டர்கள் 185 பேர், சப்-இன்ஸ்பெக்டர் பதவி





உயர்வு கிடைக்கப்பெறும் அசிஸ்டெண்ட் சப்-இன்ஸ்பெக்டர்கள்-ஹெட்-கான்ஸ்டபிள்கள் 193 பேர் பயிற்சி பெறுகிறார்கள். இவர்கள்தான் அங்கே பயிற்சி பெறுவார்கள் என்பதல்ல. எண்ணிக்கையிலே கொஞ்சம் கூடுதல் குறைவு இருக்கலாம்.

### *Doubling of currency notes.*

* 452 *Q*.—THIRU N. DENNIS : Will the Hon. the Chief Minister be pleased to state :

(a) whether Police personnel have been apprehended for doubling currency notes in Madras around 12th March 1973 ; and

(b) if so, the details thereof ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) & (இ).—சென்னை பெரம்பூர் பாரக்ஸ் சாலையிலுள்ள ஒரு கடையின் சொந்தக் காரரை அவரது கடையில் முன்பின் தெரியாத ஒருவர் அணுகி 5 ரூபாய் நோட்டுக்களை இரட்டிப்பு செய்து கொடுப்பதாக வாக்களித்தார். பணத்தைக் கொடுக்க அந்த முன்பின் தெரியாத நபரை குறிப்பிட்ட ஓரிடத்தில் சந்திக்குமாறு கடைக்காரர் கேட்டுக் கொள்ளப்பட்டார். அவ்வாறு குறிப்பிடப்பட்ட இடத்திற்குச் சென்று கடைக்காரர் பணத்தைக் கொடுக்கப்போகும் நேரத்தில், இரண்டு காவலர்கள் அந்த இடத்திற்கு வந்து கடைக்காரரைப் பிடித்துக்கொண்டனர் முன் பின் தெரியாத நபர் அந்த இடத்திலிருந்து மறைந்துவிட்டார். அவரைக் கண்டுபிடிக்க முடியவில்லை. கடைக்காரர் புகார் செய்ததன் பேரில் அந்த இரண்டு காவலர்களும் கைது செய்யப்பட்டு, தாற்காலிகமாக வேலையிலிருந்து நீக்கி வைக்கப்பட்டார்கள். இரண்டு காவலர்களில் ஒருவர், 3—6—1973 அன்று நடந்த சாலை விபத்து ஒன்றில் இறந்து விட்டார். கடும் ஒழுங்கீன நடத்தைக்காக மற்றொருவர்மீது துறை அளவில் நடவடிக்கை எடுக்கப்பட்டு "டிஸ்மிஸ்" செய்யப்பட்டுள்ளார்.

திரு. என். டென்னிஸ் : தலைவர் அவர்களே, காவலர்கள் இம்மாதிரி குற்றகரமான காரியங்களில் ஈடுபடுவதால், ரெக்ரூட் செய்யப்படும்போது , அல்லது அப்பாயின்ட்மெண்டுக்கு முன்னால், அவர்களுடைய நன்னடத்தை த பற்றி சரியாக விசாரித்து அவர்களை ரெக்ரூட் செய்வதற்கும், ரெக்ரூட் செய்யப்பட்டு அவர்கள் வேலைக்கு அமர்ந்தபின் அவர்களுக்கு ஒழுங்கு முறைகளைப் பற்றி போதிக்கவும் வசதி அளிக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : உத்தியோகங்களில் இருப்பவர்களும் மனிதர்கள்தான். மனிதர்களில் எல்லோருமே எப்படிப்பட்டவர்கள் என்று முன்கூட்டியே அறிந்து அவர்களைத் தேர்ந்தெடுப்பது என்பது முடியாத காரியம். தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு சிலபேர் இப்படிப்பட்ட

[1974 மார்ச் 16

காரியங்களில் இறங்கிவிடுகிறார்கள். அந்தக் காரணத்தினாலேதான் அவர்கள் எப்படிப்பட்ட அதிகாரியாக இருந்தாலும், எந்த அலுவலில் இருந்தாலும், தயவு தாட்சண்யம் இல்லாமல் நடவடிக்கை எடுக்கப் படுகிறது. அதற்கு உதாரணமாகத்தான் இந்தக் காவலர் டிஸ்மிஸ் செய்யப்பட்டிருக்கிறார்.

திரு. வை. பாலசுந்தரம் : தலைவர் அவர்களே, ரூபாய் நோட்டுகளை இரட்டிப்பு செய்வதிலும், கள்ள நோட்டு அச்சடிப்பதிலும் ஈடுபட்டுள்ளவர்களைக் கண்டுபிடித்து நடவடிக்கை எடுப்பதற்கும் தமிழ்நாட்டில் பறக்கும் போலீஸ் படையொன்றை அமைத்து விரிவான முறையில் செயல்படுத்த தமிழக அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : எற்கெனவே இதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, போலீசார் மிகத் தீவிரமாக இந்தக் கண்காணிப்பைச் செய்து வருகின்றார்கள்.

திரு. ஆ. கு. சுப்பையா : அரசாங்க அலுவலர்கள் அல்லாத மற்றவர்கள் இம்மாதிரியாக ரூபாய் நோட்டுகளை இரட்டிப்பு செய்வதாக அரசுக்குத் தகவல் வந்திருக்கிறதா? அப்படியானால், அவர்கள்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்படுகிறது?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இரட்டிப்பு செய்வதாகச் சொல்லி மோசடியில் ஈடுபட்டவர் அரசாங்க அலுவலர் அல்லர். ஆனால், அவர்களுக்குத் துணையாக இருந்தவர்கள் இரண்டு காவலர்கள். உதாரணத்திற்கு சொல்ல வேண்டுமானால்—நீ 1,500 ரூபாய் எடுத்துக்கொண்டு இந்த இடத்திற்கு வந்தால் அங்கே மூவாயிரம் ரூபாய் தருகிறேன் என்று சொல்லி அந்தக் கடைக்காரர் அழைக்கப்பட்டிருக்கிறார். 1,500 ரூபாயை எடுத்துக்கொண்டு அந்த இடத்திற்கு கடைக்காரர் போயிருக்கிறார். திட்டம் என்னவென்றால், மூவாயிரத்துக்கான இரட்டிப்பு நோட்டுகள் என்ற பெயரில் மேலே ஒரு நோட்டு, கீழே ஒரு நோட்டு வைத்து இடையில் வெள்ளைப் பேப்பரை வைத்து அவர்கள் தருவதாகத் திட்டம். அப்படித் தருகிற நேரத்தில் போலீசார் பாய்ந்து ஓடிவர வேண்டுமென்பதும், 1,500 ரூபாயை வாங்கிக்கொண்டு மோசடிக்காரர் மூவாயிரம் ரூபாயைக் கொடுத்துவிட்டு ஓடிவிடுவது என்பதும் திட்டம். கடைக்காரர், தான் மோசடியிலே ஈடுபட்ட காரணத்தால் தன்னைக் காவலர்கள் கைது செய்தார்கள் என்று நினைத்து வெளியே சொல்ல முடியாமல் ஏமாந்துவிட, அதற்கு இந்தக் காவலர்களைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அந்த வகையில் கடைக்காரர் கொஞ்சம் புத்திசாலித்தனமாக முதலில் மூவாயிரத்தை வாங்கிக்கொண்டு 1,500 ரூபாயைக் கொடுப்பதற்குள்ளாகக் காவலர்கள் அவசரப்பட்டு அந்த இடத்திலே நுழைந்துவிட்டார்கள். கடைக்காரர் புத்திசாலித்தனமாக 1,500 ரூபாயைக் கொடுக்காமல் காவலர்களைப் பிடித்துக் கொடுத்துவிட்டார். மோசடிக்காரர் தப்பித்து விட்டார். காவலர்களில் ஒருவர் சாலை விபத்தில் இறந்துவிட்டார். இன்னொருவர் டிஸ்மிஸ் செய்யப்பட்டிருக்கிறார்.



1974 மார்ச் 16]

திரு கே. டி. கே. தங்கமணி : இம்மாதிரியாகக் கள்ள நோட்டுகளைக் கொடுத்து நல்ல நோட்டுகளை ஏமாற்றி எடுத்துக்கொண்டு போவதான சில சம்பவங்கள் நடைபெற்றதாக முன்பு செய்திகள் வந்தன. இரட்டிப்பதாகச் சொல்லி ஏமாற்றிய செய்திகளும் வந்திருந்தன. இப்பொழுது அம்மாதிரி ஏதாவது நடக்கிறதா? அப்படியானால், அதைத் தடுக்க போலீசார் என்ன நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்கள்?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : கள்ள நோட் அச்சடித்துப் புழக்கத்தில் விடுவது, ஒன்றுக்கு இரண்டாகத் தருகிறேன் என்று சொல்லி ஏமாற்றுவது போன்ற காரியங்களெல்லாம் ஏற்கனவே போலீசாருடைய கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டு மிக விரைவில் நடவடிக்கை எடுக்கப் பட்டு வருகிறது. ஓரளவு இந்தக் குற்றங்கள் நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில் இப்பொழுது குறைந்துவருகின்றன என்றே கூறலாம்

திரு. கு. காமாட்சி : காவலர்களைப்போல் உடை அணிந்துகொண்டு பலர் இந்த வேலைகளில் ஈடுபடுவதாகத் தெரிகிறது. ஆகவே, காலவர்கள் உடைகளை யாரும் அணியக்கூடாது, அடையாளங்கள் போடக்கூடாது என்ற அளவிற்கு சட்டத்தை இன்னும் தீவிரப்படுத்தி, அப்படி அணிந்தால் அவர்களுக்குக் கடுமையான தண்டனை விதிக்கப்படுவதற்கான செயற் குறிப்பு அரசிடம் இருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : காவலர்கள் போல் உடைகள் போட்டுக் கொள்ளக் கூடாது என்பதற்கு ஏற்கனவே சட்டம் இருக்கிறது. இக் காரியத்தில் ஈடுபட்டவர்கள் காவலர்கள் உடை அணிந்தவர்கள் அல்லர் காவலர்களேதான்.

திரு அ. தேவேந்திரன் : தலைவர் அவர்களே, கள்ள நோட்டு அச்சடிக்கும் வேலை செய்கிறவர்கள், இரட்டிப்பு செய்வதாகச் சொல்லி ஏமாற்றுகிற வேலை செய்கிறவர்கள் கேரள ராஜ்யத்திலிருந்து வருகிறவர்கள் அதிகமாகச் செய்கிறார்கள் என்று சொல்லப்படுகிறதே அது உண்மையா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இப்பொழுது பிடிக்கப்பட்ட சில வழக்குகளில் கேரளத்தைச் சேர்ந்தவர்கள்தான் அதிகமாக இருக்கிறார்கள் என்பதும், அத்தகைய அச்சகங்கள் அங்கேதான் இருக்கின்றன என்பதும் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

திரு கே. ஏ. வகாப் : தலைவர் அவர்களே, இந்த நோட்டு இரட்டிப்பு விஷயத்திலே பல கண்ணியமானவர்கள்கூட சில நேரங்களிலே ஏமாற்றப் படுகிறார்கள், அவர்கள் ஆசையின் காரணமாக 10 ஆயிரம் ரூபாய் தந்தால் 20 ஆயிரம் ரூபாய் கிடைக்கிறது என்று ஆசை காட்டப்படுவதன் காரணமாக ஏமாறிவிடுகிறார்கள், திருடனுக்குத் தேள் கொட்டியதைப் போல் அவர்களும் அவர்கள் ஏமாந்த விஷயத்தை அரசாங்கத்திடத்திலோ போலீசாரிடத்திலோ சொல்லமுடியாத நிலைமையிலே இருக்கிறார்கள். அரசாங்கம் ஒரு அறிக்கைவிட்டு அப்படி ஏமாற்றப்பட்டவர்கள்

எல்லாம் போலீசாரை அணுகினால்—அவர்களுடைய பெயர்களை அரசாங்கம் ரகசியமாக வைத்துக்கொண்டால்—பல பேர்கள் வருவார்கள் என்று நினைக்கிறேன், அதைப்பற்றிய கண்டுபிடிப்புகளைச் செய்யக்கூடிய முறையிலே அரசாங்கம் நடவடிக்கை எடுக்க முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, 10 ஆயிரம் ரூபாயை ஒரே நொடியிலே 20 ரூபாயாக ஆக்க வேண்டுமென்று எண்ணுகிறவர்கள் கண்ணியமானவர்கள் பட்டியலிலே வரமாட்டார்கள் (சிரிப்பு).

தொல் பொருள் ஆராய்ச்சி.

9 வினா. 453.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வி—சுற்றுலா துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ?

தமிழ்நாடு அரசின் தொல் பொருள் ஆராய்ச்சித்துறை இந்த ஆண்டில் எந்தெந்த இடங்களில் தமது ஆராய்ச்சிப் பணியை மேற்கொண்டுள்ளது ?

*Archaeological excavations.*

*** 453 Q.—THIRU N. KITTAPPA : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state the places where the department of Archaeology of the Government of Tamil Nadu has undertaken excavation programme?**

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : 1973-ம் ஆண்டு திருச்சிராப்பள்ளி மாவட்டம் கரூரிலும் மற்றும் ஐயர் மலையிலும் தொல்பொருள் ஆய்வுத்துறை ஆராய்ச்சிப் பணியை நடத்தியுள்ளது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, இந்த ஆராய்ச்சியிலே கண்டுபிடிக்கப்பட்ட குறிப்புகளை வைத்துக்கொண்டு அவையெல்லாவற்றையும் தொகுத்து புத்தகமாக வெளியிடுவதற்கு அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இந்த ஆராய்ச்சிகள் எல்லாம் முடிந்ததற்குப் பின்னால்தான் அந்தக் கண்டுபிடிப்புகளின் தொகுப்பையெல்லாம் வெளியிட வேண்டும்.

5 வினா. 454.—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு கல்வி—சுற்றுலா துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மத்திய அரசின் பாதுகாப்பில் இருக்கும் கல்வெட்டுப் படிகளை தமிழ்நாடு அரசின் தொல்பொருள் துறையினரைக் கொண்டு புதுப்பிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இப் பொறுப்பு மத்திய அரசிடம் உள்ளது. மாநில அரசு இப்பணியை மேற்கொள்வது குறித்து மத்திய அரசுத் துறைகளுடன் நடத்திய பேச்சு வார்த்தைகள் பலனளிக்கவில்லை.



*வினா. 455.—திரு. அ. தேவேந்திரன் : மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தமிழகத்தில் உள்ள பழமையான கோட்டைகளை பாதுகாக்கும் வகையில் புதுப்பிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஆம்.

திரு. அ. தேவேந்திரன் : தலைவர் அவர்களே, நம்முடைய முன்னோர்களால் நிறுவப்பட்ட அந்தக் கோட்டைகள் எல்லாம் பெரிய விஞ்ஞான சிறப்புடையனதாகவும் சிமிண்ட் இல்லாத அந்தக் காலத்திலேயே எப்படியெல்லாம் கோட்டை கட்டியிருக்கிறார்கள் என்று ஆச்சரியப்படுகிற அளவிற்கும் நாமெல்லாம் தமிழர்கள் என்ற உணர்வினை அதிகமாகச் சொல்ல வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டிருக்கின்ற அளவிற்கும் அப்படிப்பட்ட கோட்டைகளை விரிவுபடுத்தவும், சிறப்புச் செய்யவும் அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, பழங்காலத் தன்மைகள் கெடாதவாறு பாதுகாக்கப்படுவதற்கும் வரலாற்றுச் சிறப்புகள் பாதுகாக்கப்படுவதற்கும் தொல்பொருள் ஆராய்ச்சித் துறையினர் நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறார்கள்.

திரு. எம். சுரேந்திரன் : தலைவர் அவர்களே, பழங்கோட்டைகளைப் புதுப்பித்து, செப்பனிட்டு ஒழுங்குபடுத்துவதன் மூலம் மேற்கொண்டு செலவாவதை அந்த முன்னேற்றத்தின் மூலமாகப் பயன்படுத்திக் கொண்டு அதிலிருந்து வருமானம் வருகின்ற முறையில் அதைப் பயன் படுத்திக்கொள்ள ஆலோசனை இருக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, வருமானத்திற்குரிய வகையிலே எப்படிக் கொண்டுவர முடியும் என்று சொல்ல முடியாது. சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கவும் அதனுடைய சிறப்புகளை மேம்படுத்தவும் முயற்சிகளை மேற்கொள்ளலாம். அந்த வகையில்தான் மதுரையில் திருமலை நாயக்கர் கோட்டையை புதுப்பித்து அங்கு கலைக்கூடங்களை வைப்பதன் மூலமாக சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கவும் வருமானத்தை அதன் மூலம் பெருக்கவும் வழிவகை செய்யப்படுகிறது. அதைப்போன்று வேறு பல கோட்டைகள் இருந்தாலும் வருமானத்தைப் பெருக்குவதற்கு ஏற்றவையாக அவை இருக்குமா என்பதைச் சொல்ல முடியாது. சுற்றுலாப் பயணிகளை ஈர்த்து அவர்கள் அதைக் கண்டுகளிக்க வேண்டுமென்ற ஆர்வத்தை ஏற்படுத்தினால் அதன் மூலம் பொதுவாக வருமானத்தை ஈட்டி, நாட்டு மக்களின் வருமானத்தை ஏற்படுத்துவதற்கு வழியேற்படும்.

திரு. த. சோனையா : தலைவர் அவர்களே, கமுதியிலே பழமையான கோட்டை ஒன்று இருக்கிறது. அது மருதுபாண்டியன் கோட்டை என்று சொல்கிறார்கள். கட்டபொம்மன் கோட்டையென்றும் சொல்கிறார்கள். அது பாழ்பட்டிருக்கிறது. அபூர்வமான அமைப்போடு கூடியிருக்கிற அந்த கோட்டையைப் புதுப்பித்தால் பயணிகள் வந்து பார்க்கக்கூடிய அளவிற்கும் அதைப் பாதுகாப்பதற்கும் ஏற்பாடு செய்த மாதிரி இருக்கும், ஆகவே, அதைச் செய்வதற்கு அரசு முன் வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, பாஞ்சாலங்குறிச்சியிலே உள்ள கோட்டைகளை தொல்பொருள் ஆராய்ச்சித் துறையினர் கவனித்து வருகிறார்கள். கமுதியிலே இருக்கிற வீர பாண்டிய கட்டபொம்மன் கோட்டையும் அவர்களுடைய பார்வையிலே தான் இருக்கிறது. வந்தவாசி, தியாகதுர்கம், ஓமலூர், செங்கற்பட்டிலே உள்ள மதுராந்தகம், தாரம்பாடி, பழவேற்காட்டிலே உள்ள டச்சுக்காரர்களின் கோட்டை ஆகியவையெல்லாம் அந்தத் துறையினரால் தான் பாதுகாக்கப்பட்டுக்கொண்டு வருகின்றன.

திரு. ஜி. ராமசுவாமி : தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்திலே உள்ள வேலூர் கோட்டையை சீர்திருத்துவதற்கு அரசாங்கம் முன் வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, ஏற்கனவே வேலூர் கோட்டை மத்திய அரசினுடைய தொல் பொருள் ஆராய்ச்சித் துறையின் கண்காணிப்பிலே இருக்கிறது. சதுரங்கப் பட்டணம், செஞ்சி, கிருஷ்ணகிரி, ராயகோட்டை, தஞ்சை நகரிலே உள்ள கோட்டை, வட ஆற்காடு மாவட்டத்திலே உள்ள முப்பிடுப்பட்டி ஆகிய இடங்களிலே உள்ளவை எல்லாம் மத்திய அரசின் தொல்பொருள் ஆராய்ச்சித் துறையினரால் பாதுகாக்கப்படுகின்றன.

## *Research on epilepsy.*

*456 Q.—Thiru R. R. MUNUSWAMY : Will the Hon. the Minister for Health be pleased to state —

(a) whether any research into the incidents and cure of Epilepsy has been undertaken in the State ; and

(b) if so, the details thereof.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) & (இ) : விவர அறிக்கை மன்றத்தின் முன் வைக்கப்பட்டுள்ளது.

45-ம் பக்கத்தில் இணைப்பு I-ஆக அச்சிடப்பட்டுள்ளது.



திரு. எ. ஆர். மாரிமுத்து : தலைவர் அவர்களே, இந்த அறிக்கையிலே காக்காய் வலிப்பு நோய்ப்பற்றி செய்த ஆராய்ச்சிகளைப்பற்றியெல்லாம் சொல்லப்பட்டிருக்கிறது. அது அலோபதி முறையிலே செய்யப்பட்டதாக இருக்கிறது. மற்ற மருத்துவ முறைகளிலே குறிப்பாக ஹோமியோபதி முறையிலே இந்த காக்காய் வலிப்பு நோயை கட்டுப்படுத்த முடியும் என்று சொல்கிறார்கள், அதைப்பற்றிய ஆராய்ச்சியையும் மேற்கொள்வார்களா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, தமிழ் நாட்டிலே ஹோமியோபதி மருத்துவ முறை ஏற்றுக்கொள்ளப்பட்ட முறையாக இருந்தாலும் கூட அதுவே சிறப்பான முறையிலே ஆராய்ச்சிகள் செய்யப்படுகின்ற அளவிற்கு கல்லூரி எதுவும் இல்லை. அகில இந்திய அளவிலே ஹோமியோபதி மருத்துவ முறை பல்வேறு மாநிலங்களில் சிறப்பான இடத்தை பெற்று இருக்கிறது. அப்படிப்பட்ட இடங்களிலே ஆராய்ச்சிகள் இது குறித்து நடத்தி அவர்கள் நமக்கு உண்மைகளை தெரிவித்தால் நாம் இங்கே அவற்றைப் பயன்படுத்த முடியும் ஆனால், தமிழக அரசு இப்பொழுது அந்தத் திட்டத்தை மேற்கொள்வதற்கான உடனடி வாய்ப்பு இல்லை.

திரு. ஆ. பரந்தாமன் : தலைவர் அவர்களே, இந்த காக்காய் வலிப்பு நோய் பெண்களைவிட ஆண்களுக்குத்தான் அதிகமாக வருகிறது, அவர்கள் அதிகமாக பாதிக்கப்படுகிறார்கள். கிராமங்களிலே கிணற்றிலே இறங்கும்பொழுது குட்டையிலே இறங்கும் பொழுது அவர்கள் இந்த நோயால் பாதிக்கப்படுகிறார்கள், இறந்துவிடுகிறார்கள். ஆகவே, பி.எல். 480 மூலம் அதற்கான ஆராய்ச்சிகள் நடத்தப்படுவதாக அறிகிறோம். அதன்மூலம் காக்காய் வலிப்பு நோயைக் குணப்படுத்துவதற்காக மூளையிலே ஒன்றிரண்டு இடங்களிலே அறுவை சிகிச்சை செய்தால் குணமாகிவிடலாம். என்று தெரிகிறது., ஆகவே இந்த நோயை அடியோடு குணப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, அதிலே சொல்லப்பட்டிருக்கக்கூடிய கருத்து மூளையிலே நுண்ணணுக்கள் போன்ற இயற்கையான உயிரினங்களின் குறைபாடுகளினால் குறைபாடு ஏற்பட்டு பாதிக்கப்படுகிறது என்று சொல்லப்படுகிறது. ஒரு இடத்திலே அறுவை சிகிச்சை செய்தால் குணமாகிவிடும் என்று சொல்லப்படவில்லை. இன்னொரு இடத்திலே அறுவை சிகிச்சை செய்யப்படவேண்டிய நிலைமை ஏற்படுகிறது. அப்படியே போய்க்கொண்டிருந்தால் மூளையை அடியோடு எடுத்துவிட்டால்தான் குணப்படுத்த முடியும் என்ற நிலைமைகூட வரலாம். ஆகவே, தகுந்த வழிமுறைகள் இதற்கு இன்னும் காணப்படவில்லை. சரியான காரணம் இதற்கு எது என்று தெரியவில்லை. எந்தக் குறைபாடு உண்மையென்பது இன்னும் தெளிவாக்கப்படவில்லை. ஆகவே ஆராய்ச்சி இன்னும் இதிலே வளரவேண்டிய கட்டத்திலேதான் இருக்கிறது.

திரு. வை. பாலசுந்தரம் : தலைவர் அவர்களே, காக்காய் வலிப்பு நோய் வருகின்ற நேரத்திலே கையிலே சாவி, அல்லது இரும்புத் துண்டைக் கொடுத்தால் சரியாகி விடுகிறது என்ற நிலைமை இருக்கிறது, சாவிக்கும் காக்காய் வலிப்புக்கும் ஏதாவது சம்பந்தம் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, சில பேர்கள் கையிலே சாவி இருக்கும்பொழுதே அந்த நோய் வந்துவிடுகிறது என்று சொல்கிறார்கள் இரும்புப் பெட்டியைத் திறக்கும் பொழுதே அந்த நோய் வந்து விடுகிறது என்றும் சொல்கிறார்கள் எது உண்மை என்பது அனுபவத்திலேதான் தெரிய வேண்டும்.

திரு. த. சோனையா : தலைவர் அவர்களே, இங்கே வைத்திருக்கின்ற குறிப்பிலே காக்காய் வலிப்பு நோய் வந்ததற்குப் பிறகு அதை போக்குவதற்காக பல ஆராய்ச்சிகள் செய்யப்பட்டிருக்குகின்றன. வந்ததற்குப் பிறகு செய்ய வேண்டிய சிகிச்சைகள் பற்றித்தான் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. இந்த நோய் எதனால் ஏற்படுகிறது என்று ஆராய்ச்சி செய்யப்பட்டதா ? அப்படி ஆராய்ச்சி செய்து அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, ஒரு நோயைப் பற்றி அது எதன் காரணமாக ஏற்படுகிறது என்பதை ஆராய்வதற்காக எந்த சிகிச்சையின் மூலமாக அது குணப்படுத்தப்படுகிறது என்பது தெளிவாகிறது. அந்தச் சிகிச்சையிலே எந்தக் குறைபாட்டிலிருந்து அந்தச் சிகிச்சை வழங்கப்பட்டது என்பதைக் காணமுடியும். பொதுவாக ஒருவிதமான அறிவு அல்லது மூளை இயங்குகின்ற தன்மைகளிலே இடர்பாடுகள், அல்லது உடற் கூறுகளிலே இடர்பாடுகள் இருந்தால் அந்த இடர்பாடுகளின் மூலம் இந்த நோய் ஏற்படுகிறது என்று சொல்ல வேண்டும். இதற்குக் காரணம் மூளையிலே இயங்கும் தன்மை அற்றுப்போய்விடுகின்ற காரணத்தினாலோ காக்காய் வலிப்பு இன்னும் பலவிதமாகன வலிப்புகளும் ஏற்படுகின்றன. எந்த வலிப்பாக இருந்தாலும் என்ன காரணம் என்று சரியாக இன்னும் காணப்படவில்லை.

திரு அ. தேவேந்திரன் : தலைவர் அவர்களே, இந்தக் காக்காய் வலிப்பு நோய் பொதுவாக ஒரு ஸ்டெடினெஸ் இல்லாதவர்களுக்குத்தான் வருவதாகச் சொல்லப்படுகிறதே, இந்த நோய் 1972-73 ஆம் ஆண்டில் அதிகமாக வந்ததாகக் கூறப்படுவது உண்மையா ?

மாண்புமிகு திரு க. அன்பழகன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் அப்படிப்பட்டவர்களிடத்தில் அதிகமாகப் பழகியிருந்தால்தான் அதைப்பற்றிச் சொல்ல முடியுமே தவிர, நான் நிலையாக இல்லாதவர்களிடத்தில் அதிகமாகப் பழகாத காரணத்தால் சொல்வதற்கில்லை.

## இந்திய மருத்துவ நிலையங்கள்.

* வினா. 457.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :





(அ) தமிழக அரசினால் அங்கீகரிக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ள நாட்டு வைத்திய மருத்துவ மனைகள் தற்போது எத்தனை உள்ளது ?

(இ) அவை எங்கெங்கு இருக்கின்றன ?

(உ) அவைகளுக்கு மானியத்தொகை ஏதேனும் வழங்கப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு க. அன்பழகன் :

(அ)
(இ)
(உ) } ஓர் விவர அறிக்கை * சட்டப் பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

திரு பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, தமிழ் நாட்டில் நாட்டு வைத்தியர்கள் நிறைய இருக்கிறார்கள். ஆனால் அங்கீகாரம் சிலருக்குத்தான் அளிக்கப்பட்டிருக்கிறது. மற்றவர்கள் மனுப்போடவில்லையா, அல்லது அவர்களுக்கு அங்கீகாரம் அளிக்க பரிசீலிக்கப்பட்டு வருகிறதா ?

மாண்புமிகு திரு க. அன்பழகன் : தலைவரவர்களே, நாட்டு மருத்துவர்கள் இந்திய வைத்திய முறை சட்டத்தின்கீழ் ஏறத்தாழ ஆயிரக் கணக்கானவர்கள் பதிவு செய்து மருத்துவ உரிமை பெற்றிருக்கிறார்கள். அந்த நாட்டு வைத்தியர்களுக்கு அங்கீகாரம் வழங்குவது என்பது அல்ல இது. மக்களுக்கு இலவசமாக உள்ள மருத்துவ நிலையமாக அமைத்து அதன்மூலம் ஒரு ஆண்டுக்கு இவ்வளவு செலவாகிறது, இலவச சிகிச்சை வழங்குகிறோம் என்று தெரிவிக்கும் அடிப்படையில், அது 2 பேர் 3 பேர் 4 அல்லது 5 பேர்களுக்கு என்ற அளவின் சிறியதாகவும் இருக்கலாம், அல்லது 40 பேர்களிலிருந்து 400 பேர்கள் வரை செய்யக்கூடிய அளவில் பெரிதாகவும் இருக்கலாம். செலவில் அடிப்படையிலே கட்டணம் வசூலிக்கிறார்கள். மிகுதிச் செலவு என்ற அடிப்படையில் ஓரளவு உதவி செய்யும் முறையில் அங்கீகாரமே தவிர மருத்துவம் செய்ய உரிமை வழங்கும் அங்கீகாரம் அல்ல.

திரு கே. டி. கே. தங்கமணி : சார், சித்த வைத்தியத்தில் பயிற்சி பெறுவதற்காக பாளையங்கோட்டையிலே கல்லூரி இருக்கிறது. 100 பேர் வரையில் வேலை கொடுக்கப்படுகிறது என்றாலும் கூட அமைச்சரவர்கள் சொன்னது மாதிரி ஆயிரம் பேர்களுக்கு, சித்த வைத்தியர்களுக்கு லைசென்ஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது, அவர்களுக்கு மேலும் என்ன உதவி கொடுக்கப்படுகிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு க. அன்பழகன் : தலைவரவர்களே, இது வியாபாரம் என்ற முறையிலே வழங்கப்படும் லைசென்ஸ் அல்ல. ஆகவே, உதவி செய்வது என்பது பொருத்தமாக வராது ஆனால் இயற்கையாகவே அவர்கள் குடும்பத்தின் பாரம்பரியம் காரணமாகவோ, அல்லது ஆசிரியர்

* 246—248-ம் பக்கங்களில் இணைப்பு II-ஆக அச்சிடப்பட்டுள்ளது.

களுடன் இருந்து பழகிய காரணத்தாலோ மருத்துவத் தொழிலை மேற்கொண்டிருந்தால் அந்தத் தொழிலை மேற்கொள்வதைச் சட்டப்படி, முறைப்படி நடத்த வேண்டும். அது தவறாக நடத்தக் கூடாது என்பதற்காக உரிமை வழங்கப்படுகிறதே தவிர, அதற்காக அளிக்கப்படும் அங்கீகாரமே தவிர, அது உண்மையாகவே தொழில்முறையிலே வளர்த்துவிடுவதற்காக அல்ல. அதை முறைப்படுத்தவும், கட்டுப்படுத்தவும், தவறான முறையில் பயன்படுத்திக்கொள்ளாமல் இருப்பதற்காகவும், உரியவர்கள் யார் என்று தெரிவிக்கும் அங்கீகாரம்தான் அது.

DR. H. V. HANDE: Sir, from the paper placed on the table of the House, it is seen that Rs. 3,000 per annum is granted to the Venkataramana Ayurvedic Dispensary, Mylapore. In view of the fact that this institution has been rendering yeomen service for the last so many years may I know whether it is possible for the Government to comply with the request of this Institution to increase the grant amount and make it a public institution helping more and more people in the area?

மாண்புமிகு திரு க. அன்பழகன்: தலைவரவர்களே, ஏற்கனவே இருந்த விதிமுறைகளின்படி அவர்களுக்கு வரும் வருமானத்திற்கு மேல் ஆகும் செலவில் 100-க்கு 50 பங்கு அரசு மானியமாகத் தர வேண்டுமென்ற முறை மேற்கொள்ளப்பட்டது. வரவு செலவுக் கணக்கைப் பார்க்கும் முறையும் இருந்தது. அதில் சிக்கல் இருக்கிறது என்பதால் குறிப்பிட்ட தொகையை, 3,000 ரூபாய் என்ற தொகையை வழங்கலாம் என்று தீர்மானித்திருக்கிறது. ஆனால் நடத்தும் முறைகளில் நிச்சயமாக அதிக உதவி தேவையானால் பின்னர் பரிசீலிக்கலாம். ஆனால் தமிழகத்தில் இப்படிப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட மருத்துவ மனைகளிலே அதிகத் தொகை வழங்கப்படும் நிலையமாக இந்த நிலையம்தான் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஆயுர்வேத முறையில் கருத்தடை.

* வினா. 458.—திரு. வை. பாலசுந்தரம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

ஆயுர்வேத முறையில் கருத்தடை செய்யும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு க. அன்பழகன்: இல்லை.

திரு வை. பாலசுந்தரம்: தலைவரவர்களே, இந்த ஆயுர்வேத முறையில் கருத்தடை செய்யும் முறை கல்கத்தா நகரில் ஆராய்ச்சியாளர்களால் கண்டுபிடிக்கப்பட்டு வெற்றி பெற்றிருக்கிறது என்று கூறப்படுகிறது. அந்த முறையிலே நம்முடைய தமிழக அரசும் பின்பற்றும் நிலைமைகள் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.





மாண்புமிகு திரு க. அன்பழகன்: தலைவரவர்களே, கல்கத்தா நகரத்திலே வெற்றி பெற்றிருப்பதாகச் சொன்னாலும், பம்பாய் நகரத்திலே வெற்றி பெற்றிருந்தாலும் அகில இந்தியாவில் குடும்ப நலத்திட்டத்திற்காக கருத்தடைக்கான மருந்து எவை, அதன் பின் விளைவுகள் எவை என்று ஆராய்வதற்காக அமைப்பை ஏற்படுத்தி உள்ளார்கள். அதில் ஏற்றுக்கொள்ளப்பட்டால், பிறகு அவர்கள் அதை நமக்குத் தெரிவித்தால் நாம் பின்பற்றலாமே தவிர ஒவ்வொருவரும் தனித்தனியாகத் தெரிவிக்கும் முறையில் ஒவ்வொரு கட்டத்திலேயும் பரிசீலித்துப் பார்ப்பது என்பது இயலாத ஒன்று.

திரு எ. ஆர். மாரிமுத்து: தலைவரவர்களே, தமிழ் நாட்டில் சித்த வைத்திய முறையில் வைத்தியம் செய்பவர்கள் இந்தக் கருத்தடை மாத்திரைகள் தங்களால் தயார் செய்யப்பட்டிருக்கிறது, அதற்கு அங்கீகாரம் வேண்டுமென்று கேட்டிருக்கிறார்களா, அப்படிக் கேட்கப்பட்டு அது பரிசீலிக்கப்பட்டிருக்கிறதா, இல்லையென்றால் அப்படி இனிமேல் அனுப்பப்பட்டால் அது பரிசீலனை செய்யப்படுமா?

மாண்புமிகு திரு க. அன்பழகன்: தலைவரவர்களே, சித்த மருத்துவர்கள் சிலர் தங்களிடத்திலே உள்ள மருந்து குடும்பக் கட்டுப்பாட்டிற்கு நிரந்தரமான பலன் அளிப்பததாகத் தெரிவித்திருக்கிறார்கள். அப்படியுள்ள ஒன்றிரண்டு மருந்துகளையும் அனுப்பியிருப்பதாக நான் கேள்விப்படுகிறேன். ஆனால் குறித்த பலனை அளிக்கத் தகுதியானதுதானா என்று பரிசீலிப்பதற்கான வாய்ப்பு சித்த வைத்திய ஆராய்ச்சி முறையிலே இல்லை. அதை அலபதி முறையில் பார்க்கும் பொழுது அவர்கள் வைத்துள்ள இலக்கண்ப்படி பல மருந்துகள் வெற்றிகரமாக இருப்பதாக ஒத்துக்கொள்ளவில்லை. ஆனால் சித்த வைத்தியம் அனுபவத்தில் சிலயிடங்களில் வெற்றி பெற்றிருப்பதாகத் தெரிகிறது, ஆனால் ஆராய்ச்சி துறையில் வெற்றி தருவதில்லை. ஆகவே நீண்ட நாட்களாக இப்படிப்பட்ட நிலைமை இருக்கிறதே தவிர ஆராய்ச்சிககுப் போதுமான வசதிகளோ வாய்ப்புகளோ இந்திய மருத்துவ முறையில் இல்லை, இங்கு ஏற்படவில்லை,

திரு ப. முத்துசாமி: தலைவரவர்களே, இப்பொழுது இந்தக் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டம் அறுவை சிகிச்சை முறையில் நடைபெறுவதால் அதிகம் பேர் செய்து கொள்வதற்குத் தயக்கம் காட்டுகிறார்கள். ஆகவே, மாத்திரைகள் மூலமாக நிரந்தரமாகக் குடும்பக்கட்டுப்பாட்டுத் திட்டத்தை அமல் படுத்த ஏதாவது முயற்சியெடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு க. அன்பழகன்: தலைவரவர்களே, மாத்திரை மூலம் எதுவாக இருந்தாலும் குறிப்பிட்ட காலத்திலே அந்த மாத்திரையைச் சாப்பிடவில்லை என்றால் குடும்பக்கட்டுப்பாடு தோல்வியுற்றதாகத்தான் அர்த்தம். இல்லையென்றால் ஒரு மாத்திரையைச் சாப்பிடுவதால் நிரந்தரமாக குடும்பக் கட்டுப்பாட்டிற்கு உதவி அளிக்கின்ற ஆற்றலைப் பெற்றிருந்தாலும், அதன் காரணமாக வேறுவிதமான விளைவுகள் ஏற்படும் தன்மையுடையனவாக இருக்கும். ஆனால் அறுவை சிகிச்சையில் குறைந்த

பட்சம் வேறுவிதமான விளைவுகளை ஏற்படுத்தாத அளவிற்கு குடும்பக் கட்டுப்பாட்டுக்கு நிரந்தரமான முறையில் இருப்பதாக விஞ்ஞான முறையில் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. இந்த அறுவை சிகிச்சையால் ஏற்படும் அளவில், வேறு குறைப்பாட்டை ஏற்படுத்தாத அளவில் மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டு அதை உலகம் ஏற்றுக்கொண்டால் நாமும் பயன் படுத்தலாம்.

திரு ஆ. கு. சுப்பையா : தலைவரவர்களே, கருத்தடை செய்து கொள்வது குழந்தைகள் பிறப்பதைத் தடுப்பதற்காகத்தான். எனவே திருமண வயது வரம்பை உயர்த்துவதால் குழந்தைகள் பிறப்பது குறையும் என்ற அடிப்படையில் அரசு ஆராயுமா ?

மாண்புமிகு திரு க. அன்பழகன் : தலைவரவர்களே, திருமண வயது வரம்பை உயர்த்த வேண்டுமென்ற கருத்தை பலமுறை அகில இந்திய நலத்துறை அமைச்சர்கள் மாநாட்டிலே சொல்லியிருக்கிறோம், நாடாளு மன்றத்திலேயும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். பொதுவாக இது குழந்தைகள் பிறப்பதைத் தடுப்பதற்காக மட்டுமல்லாமல், சமூகத் திலுள்ள மக்களின் உடல் நலம் பாதிக்கப்படக்கூடாது, அவர்களது நல் வாழ்வு நசித்துவிடக்கூடாது என்பதற்காகவும் பெண்களுக்கு குறைந்தது 21 வயதிற்கு மேல் திருமணம் செய்ய வேண்டுமென்றும், ஆண்களுக்குக் குறைந்தது 24 அல்லது 25 வயதிற்குமேல் திருமணம் செய்ய வேண்டு மென்றும் அகில இந்தியச் சட்டம் வந்தால் நிச்சயமாக அதைத் தமிழக அரசு வரவேற்கும்.

திரு. எஸ். முருகையன் : தலைவரவர்களே, சித்த வைத்தியத் துறையிலே இதுபோன்ற கருத்தடை மாத்திரைகளைத் தயார் செய்தால் அதை ஆராய்ச்சி செய்வதற்கு உரிய ஸ்தாபனம் இல்லை என்று அமைச்சரவர்கள் கூறினார்கள். ஆனால் இனிமேலாவது சித்த வைத்தியத் துறையிலே ஆராய்ச்சி செய்வதற்கு ஏற்பாடு செய்யப்படுமா, இதுவரையில் அப்படிச் செய்யாததற்குக் காரணம் என்ன என்பதை அறியலாமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, சித்த மருத்துவத்துறை ஆராய்ச்சி என்று சொல்லும்பொழுது ஒரு மருந்து தருகின்ற பலனை வைத்துத்தான் நினைக்கிறார்கள். அந்த மருந்தினால் ஏற்படும் குறைபாடுகளையோ அல்லது வேறு விளைவுகளையோ உடனடியாகக் கண்டு பிடிக்க முடியவில்லை. ஆனால் அலோபதி முறையிலே அதில் உட்பொருளாக இருக்கும் தன்மைகள் முதலியவைகளை ஆராய்ச்சிக்கு எடுத்துக் கொண்டு என்றைக்கும் இந்தப் பலன் கிடைக்குமா என்று காண்கிறார்கள். ஆகவே, இரண்டு வகையான ஆராய்ச்சி முறைகளிலேயும் வேறுபாடு இருக்கிறது. அண்மையிலே சித்த வைத்தியர் ஒருவர், பாம்பு கடித்தால் மருந்திருக்கிறது என்று வழங்கினார்கள். அந்த மருந்தை ஒன்றியங்களில் வாங்கி வைக்க வேண்டுமென்றும் தெரிவித்தார்கள். மறுபடியும் அந்த மருந்தை எல்லாயிடத்திலும் வைத்திருக்க வேண்டும், பாம்பு கடித்த வுடனே அந்த மருந்தினால் குணமாகும். அதற்காகும் செலவை அரசே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டார்கள். நாங்கள் அலோபதி





ஆராய்ச்சியாளர்களிடம் அந்த மருந்தின் தன்மையை ஆராயும்படி கேட்டோம். அவர்களுடைய ஆராய்ச்சியில் அந்தப் பலன் அவர்களுக்குக் கிடைக்கவில்லை. அதேபோல், பாம்பு கடித்தால் வாழைப்பட்டையை நசுக்கி வாயிலே கொடுத்தால் பாம்புக் கடியின் விஷம் இறங்கிவிடும் என்று தெரிவித்தார்கள். இந்த முறையையும் அலோபதி ஆராய்ச்சியில் ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால் செயல்முறையில் ஏதோ பலன் இருப்பதாகக் காணப்படுகிறது. அதை மேலும் ஆராய்ச்சியில்தான் கண்டுபிடிக்க வேண்டும்.

அதேபோல் கருத்தடை மருந்தை ஏற்றுக்கொள்வதில் பல்வேறு துறை களில் உள்ளவர்கள் ஆராய்ந்து ஒப்புக்கொள்ள வேண்டும். அதன் பின்னர்தான் அது நாடு முழுவதற்கும் பயன்பட ஏதுவாக இருக்கும்.

*Investigation charges for water supply schemes.*

* 459 *Q.*—THIRU A. PARANDHAMAN : Will the Hon. the Minister for Health be pleased to state whether there is any proposal under the consideration of the Government to reduce the investigation charges collected by the water Board from the Minor Panchayats for the Drinking Water Supply Schemes?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இது குறித்து தமிழ்நாடு குடிநீர் வழங்கு வடிகால் வாரியம் பரிசீலனை செய்து வருகிறது.

(முற்பகல் 9·30.)

திரு. ஆ. பரந்தாமன் : ஊராட்சிமன்றங்கள் குடிநீர் வசதி செய்து தரவேண்டுமென்று வாரியத்தைக் கேட்டால் 5,000, 10,000, 20,000 ரூபாய் என்று இன்வெஸ்டிகேஷன் சார்ஜஸ் கேட்கிறார்கள். பெரும்பாலான ஊராட்சி மன்றங்களிடத்தில் அந்த அளவிற்கு நிதி வசதி இல்லை. அப்படி ஒருவேளை ஊராட்சிமன்றங்கள் தந்தாலும் சில நேரங்களில் குடிநீர் கிடைக்காமல் போய்விடுகிறது. ஆகவே, ஒன்று இந்தக்கட்டணத்தை அடியோடு எடுத்துவிட வேண்டும் அல்லது குறைத்து விடவேண்டும் என்று இந்த அரசு யோசனை சொல்லுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இந்தக் கட்டணம் உறுப்பினர்கள் அவர்கள் கேட்டதுபோல் ஒரு குத்துமதிப்பாக 5,000, 10,000, 20,000 ரூபாய் என்று கொடு என்று கேட்கிற முறையில் வைக்கப்பட்ட கட்டணம் அல்ல. இந்தக் கட்டணத்திற்கு சில முறைகள் இருக்கின்றன. அதில் பணியாற்றக் கூடியவர்களுக்கு மூன்று மாதம் சம்பளம், நிலஅளவை சமப்படுத்துதல் முதலியவற்றிற்கான மொத்த நிதி ஒதுக்கம் பெஞ்ச் மார்க், கற்களைப் போடுவதற்கும் சோதனைக் குழிகளை வெட்டுவதற்கான மொத்த நிதி ஒதுக்கம், பயணப்படி, அலுவலக வாடகை, எழுதுபொருள், ஆகியவற்றிற்கான மொத்தநிதி ஒதுக்கம், $7\frac{1}{2}$ சதவிகிதம் சென்டேஜ்

[1974 மார்ச் 16

கட்டணம், மாதம் ஒன்றுக்கு ரூ. 1,300 என்ற விகிதத்தில் கோட்டம், உட்கோட்டம் இவற்றின் பணியாளர் அமைப்பிற்கான விகிதாசாரச் செலவு ஜீப் வண்டிக்கான செலவு என்று முறைப்படுத்தி தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஒரு பஞ்சாயத்து ஐயாயிரம் ரூபாய் செலுத்த முடியும் என்றிருந்தால் அது பத்தாயிரம் என்று வரும்போது அந்தப் பஞ்சாயத்திற்கு இடர்ப்பாடு வரலாம். ஆகவே இந்தக் கட்டணத்தை ஏதாவது குறைத்து அமைக்க முடியுமா அல்லது எந்த அளவிற்குப் பஞ்சாயத்துக்களின் தாங்கும் சக்திக்கேற்ப அமைக்க முடியும் என்பது பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது. சக்திக்கேற்ப கட்டணத்தைத் தருவதை பஞ்சாயத்துக்கள் வரவேற்கும் என எதிர்பார்க்கிறேன்.

திரு. மு. இரத்தினசபாபதி : 1974–75-ம் ஆண்டுக்கு கிராமக் குடிநீர் வழங்குவதற்காக இரண்டரைக்கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இப்போது கிராமங்கள் இந்த இன்வெஸ்டிகேஷன் சார்ஜஸ்க்கே பணம் கொடுக்க முடியவில்லை என்ற நிலை இருக்கும்போது இந்தப் பணத்தைச் செலவழிக்க முடியாத ஒரு சூழ்நிலை ஏற்படும். ஆகவே கிராமங்களுக்கு இந்த இன்வெஸ்டிகேஷன் சார்ஜஸை அறவே இல்லாமல் செய்வதற்கு அரசு ஏற்பாடு செய்ய முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : ஏற்கனவே இன்வெஸ்டிகேஷன் முடிந்திருப்பது ரூ. 15 கோடி. இரண்டரைக் கோடி ரூபாயை செலவழிக்க முடியாது என்ற நிலை வராது. வேகமாகச் செயல்பட வேண்டுமென்று விரும்புகிறோம். அந்த அளவிற்கு நிதி கிடைப்பதில்தான் இன்றைக்கு இடர்ப்பாடு இருக்கிறதே தவிர பணியாற்றுகிற வேகம் தடைப்படுகிறது என்று கருதவில்லை. ஆகவே, வசதி இல்லாத பஞ்சாயத்துக்களுக்கு எந்தளவிற்கு உதவி செய்ய முடியும், மக்கள் தொகை அடிப்படையில் விகிதாச்சாரத்தை, கட்டணத்தை வைப்பதன் மூலம் இந்தத் தொகையைக் குறைக்க முடியுமா என்பதைப் பரிசீலனை செய்யலாம்.

கல்லணைப் பாலம்.

* 460. வினா.—திரு. கோ. இளங்கோவன் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கல்லணையில் அமைந்துள்ள காவிரிப் பாலத்தை பேருந்துகள் செல்லுகின்ற வகையில் அகலப்படுத்துகின்ற செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. ப.உ. சண்முகம் : இல்லை.

திரு. கோ. இளங்கோவன் : அணையின் அடித்தளத்தை பல லட்சம் ரூபாய் செலவு செய்து அரசு பலப்படுத்திக் கொண்டிருப்பதாகக் கேள்விப்படுகிறேன். அதேபோல் மேல்பகுதியையும் விரிவுபடுத்தி திருச்சியிலிருந்து வருகிற பேருந்துகள் திருக்காட்டுப்பள்ளி, திருவையாறு செல்வதற்கு வசதியான முறையில் அந்த மேல் பகுதியை அகலப்படுத்த மீண்டும் பரிசீலனை செய்யப்படுமா ?



1974 மார்ச் 16]

மாண்புமிகு திரு. ப.உ. சண்முகம் : அத்தகைய செயற்குறிப்பு இல்லை. இதற்கு அதிகப் பணம் செலவாகும் என்பதால் அரசு அதைப் பரிசீலிப்பதற்கில்லை.

திரு. கு. காமாட்சி : அது திருச்சிப் பகுதியையும் தஞ்சைப் பகுதியையும் இணைக்கும் ஒரு பாலமாகும். அங்கில்லாவிட்டாலும் பக்கத்தில் வேறு இடத்திலாவது பாலம் கட்டித்தந்து அந்தப் பகுதிகளில் உள்ள மக்கள் தொடர்பை அதிகப்படுத்த அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : புதிதாகக் கேட்கிறார்கள். அதுபற்றி அரசுக்கு எழுதியனுப்பினால் அரசு பரிசீலிக்கும்.

திரு. கோ. இளங்கோவன் : புதிதாக மேகனத்தூரில் வெண்ணாற்றில் ஒரு பாலம் கட்டப்படுகிறது. அந்தச் சாலையையாவது தொடர்புபடுத்தித் தர அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப.உ. சண்முகம் : அதுபற்றித் தகவல் இல்லை.

பழவாற்று உபரி நீர்.

* 461 வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மாயூரம் தாலுக்கா பழவாற்றின் மிகுதி நீரை மாயூரம் நகராட்சியிலிருந்து கொள்ளிடத்தில் சேர்ப்பித்திடுவதற்கான திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பழவாற்றிலிருந்து உபரித் தண்ணீரைக் கொள்ளிடத்தில் சேர்ப்பித்திடுவதற்கான திட்டம் ஏதும் பரிசீலனையில் இல்லை.

திரு. அ. தேவேந்திரன் : இந்தப் பழவாற்றில் வெள்ளக் காலத்தில் வருகிற தண்ணீரால் பழவாற்றுக்கரை உடைந்து விடுகிறது. அதைத் தவிர்க்கும் வகையில் இந்த ஆண்டு அல்லது அடுத்த ஆண்டிலாவது அந்தத் தண்ணீரை கொள்ளிடத்தில் சேர்ப்பிக்கக்கூடிய விதத்தில் புதிய ஒரு ஏற்பாட்டினைச் செய்வதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப.உ. சண்முகம் : அது சாத்தியக்கூறல்ல என்பதைத் தான் தெரிவித்தேன். அதிகாரிகளும் தெரிவித்திருக்கிறார்கள். பழவாற்றைவிட கொள்ளிடத்தில் உள்ள நீர்மட்டம் உயரமாக இருப்பதால் நீரை ஏற்றித்தான் கொண்டு சேர்க்க வேண்டும். அது இயலாது. பழவாற்றங்கரையைச் செப்பனிடுவதற்கும், தேவையான இடங்களில் வடிகால்கள் அமைக்கவும் வேலைகள் தொடங்கப்பட்டு பெரும்பாலும் முடிவடைந்து கொண்டிருக்கின்றன.

## கோயம்புத்தூர்—சென்னை நெடுஞ்சாலை

* 462 வினா.—திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

கோயம்புத்தூர்—சென்னை—தேசிய நெடுஞ்சாலையில் நடைபெறும் சீரமைப்புப் பணி எப்பொழுது முடிவுபெறும்?

மாண்புமிகு திரு. ப.உ. சண்முகம்: இப்பணிகள் 1974-ம் ஆண்டு ஜூன் மாத இறுதியில் முடிவுபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: இந்த தேசீய நெடுஞ்சாலை ஒட்டு மொத்தமாக ஏறக்குறைய கேரள எல்லையில், கர்நாடக எல்லையில் இந்த வேலை தொடர்ந்து நடைபெறுகிறது. அதன் காரணமாக பல சாலைகள், உபசாலைகள், வண்டிகள் செல்வதற்கு சீரான முறையில் இல்லாமல் இருக்கும் நிலை கடந்த இரண்டாண்டுகளாக இருந்து வருகிறது. ஆகவே இதற்குப் பதிலாக திட்டு திட்டாக எடுத்துக் கொண்டு 15 மைல், 20 மைல் என்று எடுத்துக்கொண்டு எல்லா வேலைகளையும் குறிப்பிட்ட காலத்திற்குள் ஆறுமாத காலத்திற்குள் முடித்து விட்டு அடுத்த திட்டுக்குச் செல்லும் வகையில் ஒரு திட்டத்தை மேற்கொண்டால் பிரயாணிகளுக்கு இடைஞ்சல் இன்றி செல்லவும் முடியும் அதோடுகூட அதே சமயத்தில் சீரமைப்பு வேலையும் நடைபெறும் அல்லவா? எப்படியாவது இந்த வேலையை சீக்கிரம் முடித்து பிரயாணிகளின் அசௌகரியத்தைக் குறைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப.உ. சண்முகம்: இவ்வளவு வேகமாகச் செய்தே இரண்டு ஆண்டுகள் ஆகின்றன. இன்னும் திட்டு திட்டாக எடுத்தால் 12 ஆண்டுகளாகிவிடும். சீக்கிரமாக முடிக்க அரசு நடவடிக்கைகள் எடுக்கும். இந்த வேலைகளில் 70 சதவிகிதம் 1974 ஜூன்-க்குள் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. வை. பாலசுந்தரம்: பொதுவாகவே தேசீய நெடுஞ்சாலைகளில் நடைபெறுகிற பணிகள் மந்தமாக இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. இதற்குக் காரணம் மத்திய அரசு தான் என்று பரவலாகக் கூறப்படுகிறதே, அதைத் தவிர்க்க தேசீய நெடுஞ்சாலைகளில் செய்யப்படுகிற அத்தனை பணிகளையும் மாநில சர்க்காரே செய்வதற்கான அங்கீகாரத்தைப் பெற மத்திய அரசிடம் வற்புறுத்தியிருக்கிறதா தமிழக அரசு என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப.உ. சண்முகம்: தேசீய நெடுஞ்சாலையைப் பொறுத்த வரையில் தமிழக அரசுதான் செய்கிறோம். நாம்தான் செய்கிறோம். அதற்காக சென்டேஜ் 7½ சதவிகிதம் தருகிறார்கள். இருக்கிற காலதாமதம் எல்லாம் எஸ்டிமேட் தயாரிக்கப்பட்டு அல்லது டெண்டர்கள் வாங்குவது இவற்றிற்கெல்லாம் அவர்களிடம் ஒப்புதல் வாங்குவதில் ஏற்படும் தாமதமே தவிர ஒரு தடவை டெண்டர்கள் முடிவடைந்துவிட்டால் வேலைகளைத் துரிதமாக நடத்துவதற்கு பொறுப்பு தமிழக அரசுக்குத்தான் இருக்கிறது.



## *Half a Million Jobs Programmes.*

* 463 *Q.*—THIRU N. K. PALANISWAMY: Will the Hon. the Minister for Industries be pleased to state:

(*a*) whether the Central Team which is entrusted with evolving jobs schemes in the State has invited this Government during 1973 regarding on the spot clearance to all viable employment schemes and to suggest modifications; and

(*b*) if so, the details of the same?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) & (இ): ஆம். 1973 ஜனவரித் திங்களில் மத்திய அரசு ஐந்து லட்சம் பேருக்கு வேலைவாய்ப்புத் திட்டத்தை அறிவித்து, மாநில அரசுகளை வேலைவாய்ப்புக்கான திட்டங்களை உருவாக்கி அனுப்பக் கோரியது. அதன்படி, இந்த அரசு 25 திட்டங்களைத் தீட்டி மத்திய அரசின் ஏற்புக்கு அனுப்பியது. 7—3—1973 அன்று தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறையின் செயலாளர், புதுடில்லி சென்று மத்திய திட்டக்குழு அலுவலர்களோடு இத்திட்டங்கள்பற்றி விவாதித்தனர். பின்னர் 7—4—1973 அன்று மத்திய திட்ட அமைச்சர் திரு. மோகன் தாரியா சென்னை வந்து, முதல்வருடனும் இத்திட்டங்கள் பற்றிக் கலந்துரையாடினார். மீண்டும் 12—6—1973 அன்று திட்டக் குழுவின் இணைச் செயலாளர் சென்னை வந்து மாநில அலுவலர்களுடன் விவாதித்தார்.

இவ்விவாதங்களில் முடிவு செய்தபடி, சில திட்டங்கள் மாற்றியமைக்கப்பட்டன. மேலும் சில திட்டங்கள் உருவாக்கப்பட்டன. இவையெல்லாம் திட்டக் குழுவுக்கு ஏற்புக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

இதுவரை மத்திய திட்டக்குழு, இந்த அரசு அனுப்பிய 48 திட்டங்களில் 6·65 கோடி ரூபாய் மதிப்பீடு உள்ள, 42 திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்துள்ளது.

* 464 வினா.—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழகத்தில் வேலையில்லாத் திண்டாட்டத்தினைப் போக்கிட ரூ. 10 கோடியில், அரசு, திட்டம் ஏதேனும் வகுத்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு செ. மாதவன்: (அ) & (இ) ஐந்து லட்சம் பேருக்கு வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் இந்த அரசு 1973–74-ம் ஆண்டில் ரூ. 6·65 கோடி ரூபாய் செலவில் 10,200 ஆசிரியர்கள் நியமனம், ஐந்து போக்குவரத்துக் கழகங்களின் கீழ் தனிப் பொறியியல் இணையங்கள் தொடங்குதல், மீன்வளப் பெருக்கத்திற்கான திட்டங்கள், 300 விவசாயப் பணி நிலையங்கள் அமைத்தல், 13 கூட்டுறவு மருத்துவமனைகள்

ஏற்படுத்துதல், பல தொழில்களில் பொறியியல் பட்டதாரிகள், (பட்டயதார்கள்) டிப்ளமா தகுதி பெற்றவர்கள் (Diploma Holders) கைவினைஞர்கள் முதலியோருக்குப் பயிற்சி அளித்தல் போன்ற பல வேலை வாய்ப்புத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது.

திரு என். கே. பழனிசாமி : 48 திட்டங்கள் கொடுத்திருப்பதாகச் சொன்னார்கள். பொதுவாக இப்போது அமலில் இருக்கும் திட்டங்கள் ஐந்து வருஷம் நடக்கிறது என்றால் அதிலே வேலைக்குச் சேர்ந்திருக்கும் எஞ்சினியர்கள், சூப்பர்வைசர்கள் ஐந்து வருஷங்கள்தான் இருக்க முடியும். பத்தாயிரம் ஆசிரியர்கள் என்று சொன்னால் இன்று ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனில் இருக்கக்கூடிய பள்ளிகளையும் பிள்ளைகள் இல்லையென்று காரணம் காட்டி மூடிக்கொண்டிருக்கும் நிலையில் இதனால் பயன் ஏற்படுவதில்லை. ஆகவே, இம்மாதிரித் திட்டங்களை விட உற்பத்தியின் அடிப்படையில் (ப்ரொடக்ஷன் ஓரியன்டட் ஸ்கீம்ஸ்) திட்டங்கள் போட சர்க்கார் முன்வருமா ?

மாண்புமிகு திரு செ. மாதவன் : இது ஒரு நல்ல கருத்து. ஆனால் மத்திய அரசாங்கத்தின் கொள்கை ஒரு நபருக்கு இந்த ஆண்டுத் திட்டத்தின்கீழ் வேலை கொடுத்தால் அவர்கள் அதற்குப் பணத்தைத் தருகிறார்கள். அவர்கள் நம்மிடத்தில் உறுதி கேட்கிறார்கள். அந்த நபருக்கு ஓராண்டுக்குப் பின்னால் நம்முடைய நிதியிலிருந்து பணம் கொடுக்கிறோம் என்ற உறுதியைத் தரவேண்டும். இதுதான் இந்தத் திட்டத்தினுடைய குறைபாடு. இதனால்தான் நாம் சங்கடப்படுகிறோம்.

நாங்கள் கேட்பது தொழில் திட்டங்களுக்கு ஏராளமாக வாய்ப்பு இருக்கும்போது அந்தத் தொழில்களுக்கு ஒரு பகுதி உதவி தருவார்களேயானால் ஏராளமான தொழில் வாய்ப்பு ஏற்படும் என்று வாதிடுகிறோம். அதிலும் ஒரு முட்டுக் கட்டை. அவர்கள் கொடுக்கும் பணத்தில் முக்கால் பங்கை நாமே போட வேண்டுமென்ற நியதி இருக்கிறது. அப்படி ஏராளமாகப் பணம் போட நம்மிடத்தில் பணம் இல்லை. இந்த வேலை வாய்ப்புத் திட்டத்தில் இந்தக் குறைபாடுகள் இருப்பதால் பாதிக்கப்பட்டிருக்கிறது என்ற கருத்தை மத்திய அரசுக்கு வலியுறுத்திக் கூறியிருக்கிறோம்.

திரு எ. ஆர். மாரிமுத்து : ஒட்டுமொத்தமாக ஐந்து லட்சம் பேருக்கு வேலை வாய்ப்பளிக்கும் திட்டத்தில் தமிழகத்தில் எவ்வளவு பேருக்கு வேலை வாய்ப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது என்ற விபரத்தை அமைச்சர் அவர்கள் பதிலிலிருந்து புரிந்து கொள்ள முடியவில்லை. இரண்டு மூன்று தினங்களுக்கு முன் செய்திப் பத்திரிகையைப் பார்க்கிற நேரத்தில் மற்ற மாநிலங்களை விட நம்முடைய மாநிலத்தில் இந்தத் திட்டத்தின் கீழ் குறைந்த அளவுதான் வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது என்று தெரிகிறது. அதை அதிகரிக்கும் முயற்சியை அரசாங்கம் எந்த வகையில் செய்திருக்கிறது ?



மாண்புமிகு திரு செ. மாதவன் : அகில இந்திய அளவில் 5 லட்சம் பேர்—நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரை கிட்டதட்ட 34,980 பேர் வேலை வாய்ப்புப் பெற்றிருக்கிறார்கள். இந்தத் திட்டம் முழுமை பெற்றதற்குப் பின்னால்தான் புள்ளி விவரத்தைச் சரியாகக் கொடுக்க முடியும். 10,200 ஆசிரியர்கள் என்று இப்போது கையில் இருக்கின்ற விவரத்தைக் கொடுக்கிறேன். எண்ணிக்கை இப்போது சரிவர வராது. அதற்கு நான் சொன்ன காரணந்தான். இந்தத் திட்டத்தை ஏற்றுக் கொண்டால் ஓராண்டுக்கு அவர்கள் பணம் கொடுக்கிறார்கள். மீதிப் பணத்தை நம்முடைய அரசு போடவேண்டும். ஆசிரியர்களைப் பொறுத்த வரை ஆண்டுதோறும் வாய்ப்பு ஏற்படுகிறது. மற்றவற்றைப் பொறுத்த வரை சரிவர நடக்க வாய்ப்பில்லை என்பது அரசாங்கத்தின் கருத்து.

டாக்டர் எச். வி. ஹாண்டே : அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகின்ற நேரத்தில் மத்திய அரசாங்கம் முதலாண்டு பணம் கொடுக்கிறது, பிறகு வருகிற ஆண்டுகளுக்கு நாமே பணம் செலவழிக்க வேண்டுமென்றும் நம்மிடம் நிதிப் பற்றுக்குறை இருக்கிறது என்றும் சொன்னார்கள். நிதிப் பற்றுக்குறை என்ற காரணத்தால் அவர்கள் கொடுக்கிற பணத்தை இழந்து விடக்கூடாது. அதனால் ஓரளவு வேலை வாய்ப்புத் திட்டத்தை நிறைவேற்றுகிற வாய்ப்பை இழந்து விடக்கூடாது. சராசரியாக 10 சதவீதம் தமிழ்நாட்டுக்கு என்றால் 50,000 பேராவது வேலை வாய்ப்புப் பெற்றிருக்க வேண்டும். ஆகவே, இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதில் மத்திய அரசு கொடுக்கிற பணத்தை முழுவதும் பயன்படுத்திக் கொள்வதற்கு நிதியமைச்சர் அவர்களும் தொழிலமைச்சர் அவர்களும் தயாராக இருக்கிறார்களா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அவர்கள் கொடுக்கக் கூடிய பணத்தை ஒருகாலும் விட்டுவிட மாட்டோம். இந்த ஆண்டைப் பொறுத்த வரை 6 கோடி ரூபாய் அளவுக்கு அனுமதி பெற்றிருக்கிறோம். 5·6 கோடி ரூபாய்க்கான திட்டம் அமலுக்கு வந்து விட்டது. அவர்கள் கொடுக்கக்கூடிய பணத்தை விட்டு விடலாமா என்று ஒரு பிரச்சினை. உண்மையாகவே இந்தத் திட்டம் சரிதானா இல்லையா என்பது வேறு ஒரு பிரச்சினை.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்) : தமிழகத்தில் படித்த பட்டதாரிகள் ஆயிரக் கணக்கில் வேலை இல்லாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கு வேலை வாய்ப்பு உண்டாக்குகின்ற விதத்தில் விற்பனை வரி இலாகாவில் அசிஸ்டெண்ட் சேல்ஸ் டாக்ஸ் ஆபிசருக்குக் கீழ் இன்ஸ்பெக்டர்கள் என்று போடுவதன்மூலம் வரி ஏய்ப்பைத் தடுக்க முடிவதோடு இரண்டாயிரம் மூவாயிரம் பட்டதாரிகளுக்கும் வேலை வாய்ப்புக் கொடுக்க முடியும். இது பற்றி அரசாங்கம் பரிசீலிக்குமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இது ஒரு யோசனை.

திருமதி. ஜோதி வெங்கடாசலம் : இந்த ஸ்கீமின்படி மத்திய அரசாங்கம் ஓராண்டுக் காலத்திற்குத்தான் பணம் கொடுக்கிறார்கள் ; அதன் பிறகு மாநில அரசுதான் பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டிய நிலை இருக்கிறது என்று சொன்னார்கள். நம்முடைய அரசுக்கு அவர்கள் 75 சதவிகித எக்ஸ்பெண்டிச்சரைக் கொடுப்பதற்கும் நாம் 25 சதவிகிதத்தைக் கொடுப்பதற்குமான சஜ்ஜெஷனை மத்திய அரசுக்கு நம்முடைய அரசு எடுத்துக் கூறுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அப்படிப்பட்ட முறையை அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. ஆசிரியர்கள் போடுவதில் ஆண்டு தோறும் திட்டம் இருப்பதால் 117·2 லட்சம் ரூபாய் செலவழிக்கிறோம். அந்தத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்றி வருகிறோம். தொழில் தொடங்குவதற்கு 66 லட்சம் ரூபாய்க்குத் திட்டம் போட்டிருக்கிறார்கள். 15 சதவிகிதம் கொடுக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது போல் மொத்தமாக 6 கோடி ரூபாயில் 75 சதவிகிதத்தை அவர்கள் தந்து விட்டால் நாம் எப்படி வேண்டுமானாலும் உபயோகித்துக் கொள்ளலாம் என்பது நல்ல கருத்து. அவர்கள் இந்தக் கொள்கையை ஏற்றுக் கொள்ளவில்லை.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்): நான் கேட்ட கேள்விக்கு அது ஒரு யோசனை என்று அமைச்சர் அவர்கள் பதிலளித்தார்கள்......

திருமதி ஜோதி வெங்கடாசலம் : இந்த சஜ்ஜெஷனை மத்திய அரசாங்கத்தில் எடுத்துக்கூறி வற்புறுத்துவார்களானால் எதிர்க் கட்சிகளின் சார்பில் நாங்களும் தீவிரமாக ஆதரவு கொடுக்க முடியும்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : முதலமைச்சர்களோடு விவாதம் நடத்திய நேரத்தில் இதிலுள்ள குறைபாடுகளை எடுத்துச் சொன்னோம். நியாயமான பரிகாரம் கிடைக்காது என்று சொன்னோம். இதற்கு மாற்றுத் திட்டமாகத் தொழிற்துறைத் திட்டம் தந்திருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி எண் 465........

திரு. நா. வீராசாமி : இது முக்கியமான கேள்வி. இரண்டு கேள்விகள் இணைந்தது. எதிர்க்கட்சி உறுப்பினர்களைத்தான் கூப்பிடுகிறீர்களே தவிர, ஆளும் கட்சி உறுப்பினர்களுக்கு வாய்ப்பு இல்லை கேள்வி கேட்க ............

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்) : இது முக்கியமான கேள்வி. அன் எம்ப்ளாய்மெண்ட் காரணமாக இலங்கையில் ரெவல்யூஷன் ஏற்பட்டதைப் படித்திருக்கிறோம். ஆயிரக்கணக்கான பட்டதாரிகள் வேலையில்லாமல் இருக்கிறார்கள்......



திரு கு. அ. பொம்மன் : கிராஷ் ப்ரொகிராம் முடிவடைந்து விட்டதாகச் சொல்லப்படுகிறது. இதுகாறும் அதில் பணி புரியும் சூப்பர்வைசர்களுக்கு மாற்று வேலை அளிக்க சர்க்கார் உறுதி அளிக்குமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்படிப்பட்ட ஒரு கொள்கையும் இந்தத் திட்டத்தில் இருந்தது. இந்தத் திட்டம் சரிதானா சரி இல்லையா என்பதில் மத்தியத் திட்டக் குழுவிலேயே கருத்து வேறுபாடு இருக்கிறது. திட்டக் குழு உறுப்பினர்கள் இந்தத் திட்டத்திற்குப் பணம் ஒதுக்க வேண்டுமென்று வற்புறுத்தி வருகிறார்கள். இந்தத் திட்டம் தொடர்ந்து இருக்குமா இருக்காதா என்ற சந்தேகம் இருப்பது உண்மைதான்.

திரு. ஏ. ஆர். சுப்பையா : அமைச்சர் அவர்கள் இதுபற்றிய விரிவான பதில்களை — இங்கு அளித்த பதில்களையும் சேர்த்து உறுப்பினர்களுக்கு அச்சடித்துக் கொடுக்க முன்வந்தால் பின்னால் ஒத்துழைக்கக் கூடிய நிலை ஏற்படும். இதுபற்றி அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்வார்களா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இது அகில இந்தியத் திட்டம் : திட்டக் குழுவின் திட்டம். நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரை என்ன செய்கிறோம் என்று வேண்டுமானால் அச்சடித்துக் கொடுக்கலாம்.

திரு எம். ஏ. லத்தீப் : வேலை வாய்ப்பை ஏற்படுத்தக்கூடிய திட்டங்களுக்காக 6 கோடி ரூபாய் அளவுக்குத் திட்டங்கள் தீட்டப்பட்டு 5 கோடி ரூபாய் அளவுக்குத்தான் மாநில அரசு பெற்று நடவடிக்கை தொடங்கியிருக்கிறது என்ற விவரத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்தத் திட்டத்தின் முழு விவரங்களையும் அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ? எந்தெந்தத் துறைகளில் வேலை வாய்ப்புக்கு ஏற்பாடு பண்ணியிருக்கிறார்கள் ? 6 கோடி ரூபாய்க்கு எந்த எந்தத் துறைகளில் வேலை வாய்ப்பு ? இப்போது பெற்றுள்ள 5 கோடி ரூபாயில் எந்தெந்தத் துறைகளில் வேலை வாய்ப்பு ?

மாண்புமிகு திரு செ. மாதவன் : ஏற்கெனவே சொன்னேன். அவர்கள் கவனிக்கவில்லை போல் இருக்கிறது. 48 திட்டங்கள் பல்வேறு வகைகளில். 117 லட்சம் ரூபாய் ஆசிரியர்களுக்கு வேலை கொடுப்பதற்காக ; 66 லட்சம் ரூபாய் தொழில் தொடங்குவதற்காக. தொழில் தொடங்குவதற்கு ஒரு பகுதி கடனாக அந்தத் தொகையிலிருந்து கொடுக்கப்படுகிறது. இந்த ஆண்டு அவர்களுடைய பணத்தைப் பயன்படுத்திக் கொண்டு வருகிற ஆண்டுகளில் அதை அப்சார்ப் செய்வது அடிப்படை.

திரு நா. வீராசாமி : தமிழ் நாட்டில் எவ்வளவு பேர் வேலை இல்லாமல் இருக்கிறார்கள் ? வேலை இல்லாமல் இருக்கிற மக்களிடையே சாப்பாட்டுக்குக் கூட வழி இல்லாமல் இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுடைய பிரச்சினையைத் தீர்க்க அரசாங்கம் சிறப்பான திட்டத்தை வகுத்திருக்கிறதா ?

[1974 மார்ச் 16

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவரவர்களே, வேலையில்லாத் திண்டாட்டம் அகில இந்தியாவிலும் பயங்கரமான நிலையில் இருப்பதை அறிவோம். நம்முடைய மாநிலத்தில் உள்ள வேலை வாய்ப்புத் தேடித் தரும் நிறுவனங்களில் பதிவு செய்துள்ளவர்கள் 5 லட்சம் பேர். பெரும்பாலும் எஸ்.எஸ்.எல்.சி. படித்தவர்கள், பட்டதாரிகள் இருக்கிறார்கள். இன்ஜினீரிங் பொறுத்தவரை பட்டதாரிகள் 2,000-லிருந்து 3,000 வரை இருக்கிறார்கள். ஐ.டி.ஐ. படித்தவர்கள் சுமார் 8,000 பேர் இருக்கிறார்கள். டிப்ளமா ஹோல்டர்ஸ் சுமார் 4,000 பேர். ஆசிரியர் படிப்புப் படித்தவர்கள் 14,000-த்திற்கு மேல் இருக்கிறார்கள். குறிப்பிட்ட படிப்புக்குப் படித்து விட்டு, வேலையில்லாமல் இருக்கும் கொடுமையான நிலை இந்த நாட்டில் இருக்கிறது. திட்டக்குழுவில் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் வலியுறுத்தும்போது அதைச் சந்திப்பதற்கு மத்திய அரசும், மாநில அரசுகளும் துணிந்து செயல்படாவிட்டால், சீரிய திட்டங்களை உருவாக்காவிட்டால், பயங்கரமான சூழ்நிலை, தீவிரவாதிகளுக்கு இடம் கொடுக்கும் சூழ்நிலை இந்த நாட்டில் உருவாகும் என்பதை மாநில அரசின் சார்பில் அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

திரு. எம். சுரேந்திரன்: சார், அமைச்சரவர்கள் ட தில் சொல்கிறபோது 48 திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டு இருக்கின்றன என்று கூறினார்கள். இதேபோல், இந்த வேலைவாய்ப்புத் திட்டத்தைக் கணிப்பதற்காக நமது மாநிலத்தில் ஏற்படுத்தப்பட்டிருக்கிற திட்டக் குழு என்ன யோசனையை கூறி இருக்கிறார்கள். அந்த யோசனையும், மத்திய அரசு திட்டக்குழு கொடுத்த யோசனையும் ஒத்து வருகிறதா அல்லது அவர்கள் சொன்ன யோசனையை அவ்வப்போது மாற்றி, அதிலே தவறு இருக்கிறது, இதிலே தவறு இருக்கிறது என்று சொல்லப்படுகிறதா, திட்டக்குழுக்களிடையே கருத்து ஒற்றுமை இருக்கிறதா, இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்குத் திட்டக்குழு முயற்சியின் அடிப்படையிலே இப்போது 48 திட்டங்கள் இருப்பதாகச் சொன்னார்கள். அது என்ன மாதிரியான திட்டங்கள் என்பதை சபைக்கு அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தரப்படும் என்று ஏற்கனவே சொல்லிவிட்டேன். அகில இந்தியாவிலும் இருக்கிற வேலையில்லாத்திண்டாட்டப் பிரச்சினையை ஆராய்வதற்காக மத்திய அரசு திறமைபடைத்தவர்களைக் கொண்ட ஒரு நிபுணர் குழுவைப் போட்டு, அவர்களும் ஒரு அறிக்கை சமர்ப்பித்து இருக்கிறார்கள். அந்த அறிக்கையும் மாநில அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. அதை நானும் படித்துப் பார்த்தேன். அதிலே வேலை இல்லாத் திண்டாட்டத்தைப் போக்க வேண்டுமானால் திட்டங்களுக்கு ஏராளமான பணம் ஒதுக்கப்பட வேண்டும். நிறைய அணைக்கட்டுத் திட்டங்கள் கட்டவேண்டும். நிறைய பணிகள், ரோடுகள் போன்றவற்றில் செய்யவேண்டும். மருத்துவ வசதி போன்ற பணிகள், கட்டடங்கள் கட்டுதல், இது போன்ற பணிகள் ஆகியவற்றிற்கும் பணம் ஒதுக்கப்படவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இப்படி வளர்ச்சித் திட்டங்கள் தொடர்ந்து நடைபெற்றால் வேலை வாய்ப்புத் தானாகவே வரும் என்றும் சொல்லியிருக்கிறார்கள்.



1974 மார்ச் 16]

திரு வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்): தலைவரவர்களே, படித்த பட்டதாரிகள் வேலையில்லாமல் சிரமப்படுகிறார்கள் என்பது மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்களுக்கே தெரியும். ஒரு படித்த ஹரிஜனப் பெண்—பி.ஏ. பட்டம் பெற்றவள்—புல் வெட்டிக்கொண்டு ஒரு ரூபாய் கூலி வாங்கிக்கொண்டு இரண்டு ஆண்டுகளாக வாழ்க்கை நடத்தும் நிலை இருக்கிறது என்றால், இதைத் தவிர்க்க அரசாங்கம் திட்டங்களைத் தயாரிக்குமா என்று கேட்டதற்கு யோசிப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சேல்ஸ் டாக்ஸ் இன்ஸ்பெக்டர்கள் போடுவதன் மூலம் ஒரு 5,000 பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்புத் தர முடியும் என்று சொன்னேன். அதை ஒரு யோசனை என்று சொன்னார்கள். அந்த யோசனையை யோசனை என்று விட்டு விடாமல், அந்த யோசனையை ஏற்று, எதிர்காலத்தில் அதை நடைமுறைப்படுத்துவதற்கு என்ன தயக்கம் என்பதற்கு அமைச்சர் அவர்கள் பதில் கூறுவார்களா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவரவர்களே, புல் வெட்டுகிற பி.ஏ. அரிசன பெண்ணைப் பற்றியும், இந்த வருமான வரி இலாகாவில் வேலை வாய்ப்பு உருவாக்குவது பற்றியும், நானும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் நீண்ட நேரம் விவாதித்து இருக்கிறோம். அதனால்தான் யோசனை என்று சொன்னேனே தவிர வேறு அல்ல.

### *Industrial Cadre of Officers.*

* 465 *Q.*—THIRU N. K. PALANISWAMY: Will the Hon. the Minister for Industries be pleased to state:

(*a*) whether there is any proposal under the consideration of the Government to create an Industrial Cadre of officers to man the public Sector concerns; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) ஆம்.

(இ) விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன.

திரு. என்.கே. பழனிசாமி: தலைவரவர்களே, இப்போது பொதுத்துறையில் இன்ஜினீர் போன்றவர்களுக்குச் சரியான முறையில் கல்வி கொடுத்து மறுபடியும் அவர்களை உத்தியோகத்தில் உயர்த்துவதற்குப் பதிலாக, இந்த ஐ.ஏ.எஸ். படித்தவர்களைப் பொதுத்துறையில் போடுவதன் காரணமாக அவர்களுக்கு அதிகமான பரிச்சயம் அந்தத் துறையில் இல்லை. உதாரணத்திற்கு எடுத்துக்கொண்டால் எலெக்ட்ரிசிடி போர்ட்டில் சிவில் இன்ஜினீர் தலைவராக இருக்கிறார். மெகானிகல் இன்ஜினீர்க்கு சரியான முறையில் பயிற்சி கொடுத்து செய்வதற்கு பதிலாக, இந்த மாதிரி ஐ.ஏ.எஸ். படித்தவர்களைப் போடாமல், அந்தத் துறையில் பயிற்சி பெற்றுள்ளவர்கள் அதன் நிர்வாகத்தின் பொறுப்பில் வைப்பதற்கு இந்த மாதிரித் திட்டங்களை அமல் செய்தால் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு செ. மாதவன்: எலெக்ட்ரிசிடி போர்ட் சேர்மன் சிவில் இன்ஜினீர் இல்லை. ஆனால் இது போன்ற கருத்தை அரசாங்கம் ஏற்றுக்கொண்டு இருக்கிறது. இப்போது புதிய தொழிற்சாலைகளை நாம் ஏராளமாகத் தொடங்குவதால், ப்ரொபஷனல்ஸ், தொழில் நுட்பப் பயிற்சி பெற்ற ஒரு கேடர் உருவாக்கவேண்டுமென்று அரசாங்கத்தின் கொள்கை. அதன் விவரங்கள் இப்போது பரிசீலிக்கப்பட்டு வருகின்றது.

சோப்புத் தொழிற்சாலைகள்

ஒ வினா. 466.—திரு. கே. ஏ. வகாப்: மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரச:

(அ) தமிழகத்தில் சோப்பு சேய்யும் தொழிற்சாலை அமைக்க மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளதா ?

(இ) ஆம் எனில், எந்த ஊரில் ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) & (இ): ஆம். தமிழ்நாட்டில் சோப்பு செய்யும் தொழிற்சாலை அமைக்க கீழ்க்கண்ட நிறுவனங்களுக்கு மத்திய அரசு உரிமம் வழங்கியுள்ளது:—

| நிறுவனத்தின் பெயர். | உரிமம் வழங்கின வருடம். | உற்பத்தி செய்யும் பொருட்கள். |
|---|---|---|
| ரெமி பர்ஃப்யூம்ஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை-1. | 1956 | சோப்—24 டன்கள்.<br>முகப்பவுடர்—60 டன்கள்.<br>பற்பசை—18 டன்கள். |
| ஈஸ்ட் ஏஷியாடிக் கம்பெனி (இந்தியா) (பிரைவேட்) லிமிடெட், சென்னை-1 (தற்பொழுது டாடா ஆயில் மில்ஸ், கம்பெனி லிமிடெட் வாங்கி நடத்துகிறது). | 1962 | டிமெக்ஸ் சோப்—300 டன்கள். சலவை சோப், வாசனை சோப், சோப்புத்தூள் முதலியன—1,350 டன்கள். |
| | 1967 | நிலக்கரித்தாரில் இருந்து செய்யப்படும் சோப்—120 டன்கள். |

திரு. கே.ஏ. வகாப்: தலைவரவர்களே, இப்போது சந்தன சோப்புகளுக்கு உள் நாட்டிலும் வெளி நாட்டிலும் நல்ல கிராக்கி இருக்கிறது. ஆகவே, வடாற்காடு மாவட்டத்தில் இருக்கும் ஜவ்வாது மலையில் விளையும் சந்தனக் கட்டைகளைக் கொண்டு, சந்தன சோப்புத் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றை ஆரம்பிக்கும் செயற்குறிப்பு தற்போது இருக்கிறதா, மத்திய அரசின் அனுமதியோடு தொடங்குவதற்கு அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா?





திரு. க. மு. இராசகோபால்: பாயின்ட் ஆப் ஆர்டர் சார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள். இப்போது பாயின்ட் ஆப் ஆர்டர் கேட்கக்கூடாது.

திரு. க. மு. இராசகோபால்: நான் கையைத் தூக்கிக் கொண்டே இருக்கிறேன். எனக்கு நீங்கள் வாய்ப்புக்கொடுக்கவில்லையே?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர் பதில் சொல்லிவிடட்டும்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அது பற்றிப் பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. க.மு. இராசகோபால்.

திரு. க. மு. இராசகோபால்: நான் கேட்க விரும்பிய கேள்வி போய் டடுட்வி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள் 467, 468, 469 ஆகியவை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்தி வைக்கப்படுகின்றன.

ஜீப்பு வண்டிகள் வாங்கல்.

* 389 வினா.—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) 1972–73 ஆம் ஆண்டில் மத்திய அரசிடமிருந்து நமது மாநில அரசு எத்தனை ஜீப் மோட்டார்களை கோரியிருந்தது ?

(இ) அவற்றில் இதுவரை எத்தனை கிடைத்துள்ளன ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) and (இ): 1972-73-ம் ஆண்டில் மாநில அரசு துறைகள் உபயோகத்திற்காக சென்னை போக்குவரத்து ஆணையர், 280 ஜீப்புக்களுக்கு புதுடில்லி வழங்கல் ஒருவகை செய்தல் தலைமை இயக்குநரிடம் தேவைப்பட்டியல் அனுப்பியிருந்தார். அதில் சனவரி 1974 வரை 273 ஜீப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

திருமதி ஜோதி வெங்கடாசலம்: தலைவரவர்களே, அந்த ஜீப்புகள் எந்தெந்த இலாக்காக்களுக்குக் கொடுக்கப்பட்டன என்பதை அறியலாமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, அந்த விவரம் என்னிடத்தில் இல்லை.

திரு ப. முத்துசாமி: தலைவரவர்களே, முன்பெல்லாம் ஊராட்சி ஒன்றியங்களுக்கு 4-வீல் டிரைவ் ஜீப்புகள் தான் தரப்பட்டன. இப்போது அப்படிப்பட்ட ஜீப்புகள் கொடுக்காத காரணத்தினால் பல இடங்களில் கிராமப் புறங்களில் நடைபெறும் வேலைவாய்ப்புத் திட்டங்களைப் பார்க்கும் நேரத்தில் காலதாமதம் ஆகிறது. காரணம், மலைப்பகுதி, மணற்பாகானங் பகுதிகளில் செல்ல முடியவில்லை. ஆகவே, முன்போலவே ஊராட்சி ஒன்றியங்களுக்கு 4-வீலர் ஜீப் தரஅரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றியங்கள் சாலைகளை மேம்படுத்தி இருக்கும் என்ற நம்பிக்கை எனக்கு நிச்சயமாக உண்டு.

திரு. எ.எம். இராஜா: தலைவரவர்களே, இப்போது பெட்ரோல் விலை எட்டிப் பிடிகக முடியாத நிலையில் சென்று கொண்டு இருப்பதால்—போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களும் இதை நன்றாக அறிவார்கள். நேற்று பேசுகிறபோது கூடச் சொல்லியிருக்கிறார்கள், அந்த எரி பொருளை மிச்சப்படுத்த யோசனை தெரிவிப்பவர்களுக்கு 1 லட்சம் பரிசு கொடுப்பதாகச் சொன்னார்கள்—அந்த ஜீப்புகளை வாங்குவதற்கு பதிலாக "மெடடோர் வேன்" போன்றவற்றை வாங்கிக்கொடுத்து, அந்த ஜீப்புகளையும் வாபஸ் பெறுவதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, ஒரு காலத்தில் சாலைகள் எல்லாம் போடாத காலத்தில்—இன்னும் குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால் வெள்ளைக்கார அதிகாரிகளுக்கு வாகனங்கள் கொடுக்க வேண்டுமென்பதற்காக—ஜீப் வண்டிகள் வாங்கப்பட்டன. ஆனால் இப்போது ஓரளவிற்குச் சாலை அமைப்புகள் எல்லா இடங்களிலும் ஏற்பட்டு இருப்பதால், இன்னும் அந்த ஜீப்புகளை வாங்கவேண்டுமா என்ற நிலையை அரசுத் துறை பரிசீலித்துக்கொண்டு வருகிறது. அதற்குப் பதிலாக கார், அல்லது வேன்கள் வாங்கிக் கொடுக்கலாமா என்பதைக் குறித்தும் பரிசீலனை நடந்து வருகிறது. மேலும், எந்த அளவுக்கு பெட்ரோலியப் பொருள்களை மிச்சப்படுத்தலாம் என்பதையும் அரசு ஆலோசித்துக்கொண்டு வருகிறது.

திரு எம். சுரேந்திரன்: தலைவரவர்களே, பெட்ரோல் பற்றாக்குறை இருக்கிற நேரத்தில் பல இலாக்காக்களில் ஜீப்புகள் குறிப்பிட்ட தேவைகளுக்கு மட்டுமல்லாமல் வேறு பல காரியங்களுக்கும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. ஆகவே, அதை நிறுத்த, பெட்ரோல் பற்றாக்குறையை எடுத்துக்காட்டி, குறிப்பிட்ட காரியங்களுக்குத்தான், இலாகா சேர்ந்த காரியங்களுக்குத்தான் ஜீப்புகள் பயன்படுத்தப்படவேண்டுமென்று எடுத்துக் காட்டி, இதனால் அதிகம் பெட்ரோல் செலவாகிறது என்பதையும் கருத்தில் கொண்டு, அதற்கான உறுதியான நடவடிக்கை எடுக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் எடுத்துச் சொல்லியிருக்கிற கருத்தின்படி ஏற்கெனவே அரசுத் துறை அதிகாரிகளுக்கு ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது. அதிலும் நிச்சயமாகச் சொந்த உபயோகத்திற்காகப் பயன்படுத்தக்கூடாது என்று ஏற்கெனவே விதி முறைகள் இருக்கின்றன.

திரு. ந. சோனையா: தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றியங்கள் ரோடுகளை நல்ல முறையில் செப்பனிட்டு இருப்பார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ரோடுகள் நல்ல முறையில் செப்பனிடப்பட்டு இருந்தாலும், சில இடங்களில் ஆறுகளைக்





கடந்து செல்ல வேண்டியிருக்கிறது. என்னுடைய பகுதியில் சில இடங்களில் வைகை அணையைக் கடந்து செல்ல வேண்டியிருக்கிறது. ஆற்று மணலில் 2 வீல் டிரைவ் ஜீப்கள் போக முடிவது இல்லை. ஆகவே, வைகைப் பகுதியில் இருக்கும் ஊராட்சிகளுக்கு மட்டும் 4 வீல் ஜீப்கள் கொடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா ?

முற்பகல், 10-00

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: அத்தகைய தனிப்பட்ட நிலைமைகள் குறித்து நிச்சயமாகத் தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மாயூரத்தில் பேருந்துப் பணிமனை.

* 390 வினா.—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்கண்ட **வினா**வுக்கு விடையளிப்பாரா ?

மாயூரத்திலுள்ள சோழன் போக்குவரத்துக் கழகக் கிளைக்காக புதிய பணிமனைக் கட்டிடும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : ஆம்.

திரு. அ. தேவேந்திரன் : தலைவர் அவர்களே, சோழன் போக்குவரத்துக் கழகம் புதிய பணி மனையை மாயூரத்தில் கட்ட இருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அது எந்த இடத்தில் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : முதலில் தாற்காலிக ஷெட் ரூ. 25,400 செலவில் மாயூரத்தில் கட்டி, அந்தப் பணிமனையைத் துவக்குவதாக ஏற்பாடாகியிருக்கிறது.

*Sale of eggs in Milk Depots.*

* 470 *Q.*— Thiru N. DENNIS: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state:

(*a*) whether there is any proposal under the consideration of the Government to sell eggs at the Milk Kiosks in Madras City; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) ஆம்.

(இ) தமிழ் நாடு கோழி வளர்ப்புக் கழகம் சென்னை மாநகரில் உள்ள 300 பால் விற்பனை நிலையங்களில் 21 விற்பனை நிலையங்களைத் தெரிந்தெடுத்து அவற்றின்மூலம் முட்டைகளை விற்பனை செய்து வருகிறது.

[1974 மார்ச் 16

திரு. என். டென்னிஸ் : வாங்குவதற்கு வசதியாகவும் லாபகரமாகவும் இந்த முறை இருக்கிற காரணத்தினால் இந்த முறையை வேறு இடங்களுக்கும் விஸ்தரிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தமிழ் நாடு கோழி வளர்ப்புக் கழகம் 300 பால் விற்பனை நிலையங்களில் 21 இடங்களை தேர்ந்தெடுத்து விற்பனை செய்து வருகிறார்கள். விற்பனை செய்கின்ற விற்பனையாளர்களுக்கு முட்டை ஒன்றுக்கு ஒரு காசு தரகுத் தொகை தருகிறார்கள். மேற்கொண்டு அப்படிப்பட்ட இடம் தேவைப்படும் என்று அந்தக் கோழி வளர்ப்புக் கழகத்தினர் கருதினால் பால் துறை தருவதற்கு தயாராக உள்ளது.

திரு. கோவை. செழியன் : பால் விற்பனை நிலையங்களில் முட்டைகள் விற்பதை சைவர்கள் யாராவது ஆட்சேபித்திருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன : முட்டையும் சைவ உணவாகத் தான் இப்பொழுது கருதப்படுகிறது.

திரு. சோ. அழகர்சாமி : சென்னையிலே முட்டை விற்பதற்கு பால் விற்பனை நிலையங்களில் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். நெல்லை மாவட்டத்தில் சிறு விவசாயிகள் மேம்பாடு திட்டத்தின்கீழ் பல இடங்களில் கோழிப் பண்ணை ஆரம்பிக்கப்பட்டு முட்டைகள் அங்கு குறைந்த விலையில் விற்கப்படுகின்றன. அதிக விலைக்கு வாங்குவதற்கு ஆள் இல்லை. ஆகவே, அந்த முட்டைகளை அதிக விலைக்கு வாங்குவதற்கு — இங்கே முட்டை அதிக விலை விற்கிறது—அந்த முட்டைகளை அதிக விலைக்கு வாங்கி விற்பதற்கு இந்த வாரியத்தின்மூலம் ஏற்பாடு செய்ய ஏதாவது அரசுக்கு உத்தேசமுண்டா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : முட்டைகளை பால் விற்பனை நிலையங்கள் மூலமாக விற்பதற்கு பால் துறையிலே அனுமதி தந்திருக்கிறோம். அங்கே தேங்கி இருக்கிற முட்டைகளை வாங்கி விற்பதைப்பற்றிக் கோழி வளர்ப்புக்கழகத்தை நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்ள வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

குறிப்பு— ஓர் உரையின தொடக்கத்தில் *வெள்ளிக்குறி இடப்பட்டிருந்தால் கல்புரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது எனபதைக் குறிக்கும்.

1974 மார்ச் 16]

## 2. அரசினர் தீர்மானங்கள்.

(அ) அவையுரிமைக் குழுவிற்கு பதினைன்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல்.

மாண்புமிகு டாக்டர் திரு. இரா. நெடுஞ்செழியன் : நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

"தமிழ்நாடு சட்டப் பேரவையின் 183-வது விதியின்கீழ், 1974—75-ம் நிதியாண்டிற்கான அவையுரிமைக் குழுவின் உறுப்பினராக இருக்கும்படி பதினைன்கு உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று, இப்பேரவை தேர்ந்தெடுக்கும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

## 3. அறிவிப்புகள்.

(அ) அவையுரிமைக் குழுவிற்கான தேர்தல் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த அவைக்கு ஓர் அறிவிப்பு. ஒற்றை மாற்று வாக்கு முறைப்படி தேர்தல் நடத்துவதற்கு பேரவைத் தலைவர் வகுத்துள்ள விதிமுறைகளின் கீழ், அவை உரிமைக் குழுவிற்கு (Committee of Privileges) 14 உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க, வேட்பாளர்கள் நியமனத்தாள்களை 22—3—1974-ம் நாள் வெள்ளிக் கிழமை, முற்பகல் 11 மணிக்குள் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நியமனத்தாள் வேண்டுவோர் செயலாளரிடம் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.

நியமனத்தாள்கள், 22—3—1974-ம் நாள், வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும். விலகிக் கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் 23—3—1974-ம் நாள் சனிக்கிழமை, காலை, 11 மணிக்குள் விலகிக் கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை, நிரப்பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு அதாவது 14-க்கும் மேற்படின் 26—3—1974-ம் நாள், செவ்வாய்க்கிழமையன்று காலை 9 மணிக்கும் பிற்பகல் 1 மணிக்கும் இடையே சட்டப் பேரவை குழுக்கள் கூடும் அறையில் (உறுப்பினர்கள் முன்னுள் ஓய்வு அறையில்) வாக்கெடுப்பு நடைபெறும்.

(2) அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி.

(ஆ) அவையினர் குழுவிற்கு பதிமூன்று உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1974 மார்ச் 16

"தமிழ்நாடு சட்டப்பேரவையின் 221(1)-வது விதியின்கீழ் 1974–75-ம் நிதியாண்டிற்கான அவையினர் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி பதின்மூன்று உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று இப்பேரவை தேர்ந்தெடுக்கும்."

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(3) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) அவையினர் குழுவிற்கான தேர்தல் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு "ஒற்றை மாற்று வாக்கு முறைப்படி தேர்தல் நடத்துவதற்கு பேரவைத் தலைவர் வகுத்துள்ள விதிமுறைகளின்கீழ், அவையினர் குழுவிற்கு (House Committee) 13-உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க, வேட்பாளர்கள் நியமனத்தாள்களை 22—3—1974-ம் நாள் வெள்ளிக் கிழமை, முற்பகல் 11 மணிக்குள் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நியமனத்தாள் வேண்டுவோர் செயலாளரிடம் இருந்து பெற்றுக் கொள்ள லாம்.

நியமனத்தாள்கள், 22—3—1974-ம் நாள், வெள்ளிக் கிழமை, பிற் பகல் 3 மணிக்கு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும். விலகிக் கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் 23—3—1974-ம் நாள் சனிக்கிழமை காலை 11 மணிக்குள் விலகிக் கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை, நிரப்பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு, அதாவது 13-க்கும் மேற்படின் 26—3—1974-ம் நாள், செவ்வாய்க்கிழமையன்று காலை 9 மணிக்கும் பிற்பகல் 1 மணிக்கும் இடையே சட்டப் பேரவை குழுக்கள் கூடும் அறையில் (உறுப்பினர்கள் முன்னுள் ஒய்வு அறையில்) வாக்கெடுப்பு நடைபெறும்.

(4) அரசினர் சட்ட முன் வடிவு.

தமிழ்நாடு, 1974-ம் ஆண்டு நிதி ஒதுக்க (செலவினக் கணக்கின் மீது வாக்கெடுப்பு) சட்ட முன்வடிவு (சட்டப்பேரவை சட்ட முன் வடிவு எண். 9/74).

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தமிழ்நாடு, 1974-ம் ஆண்டு நிதி ஒதுக்க (செலவினக் கணக்கின் மீது வாக்கெடுப்பு) சட்ட முன் வடிவு (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 9/74) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் என்று கோருகிறேன்.

அப்படிக் கோருகிற நேரத்தில் இந்த அவைக்கு ஒரு செய்தியை அறிவிக்க விரும்புகிறேன்.



1974 மார்ச் 16] [டாக்டர் மு. கருணாநிதி]

ஓய்வூதியம் பெறுபவர்களுக்குத் தற்போது அகவிலைப்படி 15 ரூபாய் என்று இருப்பது. 1—4—1974 முதல் 20 ரூபாயாக உயர்த்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஓய்வு பெறும் ஆசிரியர்களுக்குத் தற்பொழுது அக்கவுண்டண்ட்—ஜெனர லின் உத்தரவு கிடைத்த பிறகுதான் ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது. இதனால் காலதாமதம் அதிகமாக ஏற்படுகிறது. ஓய்வு பெறும் அரசு அலுவலர்களுக்கு அந்தந்த அலுவலகத்தின் தலைமை அதிகாரியே 80 சதவிகிதம்வரை தற்காலிகமாக (ப்ரொவிஷனலாக) ஓய்வூதியம் வழங்கலாம் என்று முடிவு செய்து இரண்டு ஆண்டுகளாக அவ்விதம் செயல்பட்டு வருகிறது. இந்தச் சலுகையை ஆசிரியர்களுக்கும் விரிவு படுத்தி, ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட கல்வி அதிகாரியே ஆசிரியர் களுக்கு 80 சதவிகிதம்வரை தற்காலிகமாக ஓய்வூதியம் கொடுக்கலாம் என முடிவெடுத்துள்ளதை இந்த அவைக்கு அறிவிக்கின்றேன்.

Dr. H. V. HANDE : Mr. Speaker, while we are thankful to the Hon. Chief Minister for these concessions he has given for the retired people and the teachers, may I know whether it is possible to graciously grant the request of the N. G.Os. also they have been asking for some increases in Dearness Allowance and announce at this context of time the grant of at least two or three rises in D.A. so that it may be brought on a par with the D.A. increases granted by the Centre to its employees and whether it is possible to announce at least one or two rises now?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நான் அது பற்றி ஏற்கனவே நிதி நிலை அறிக்கையில் விவரமாகக் கூறியிருக்கிறேன் எந்த அளவுக்கு நாம் அதில் அக்கறை கொண்டிருக்கிறோம் என்பது மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த மாநில அரசு மாத்திர மல்ல, இந்தியாவிலுள்ள மற்ற எல்லா மாநில அரசுகளும் இந்த ஊதிய விகிதங்களில் மாநில அரசுக்கும் மத்திய அரசுக்கும் இருக்கிற வேறுபாட்டை எடுத்து விளக்கி, அதைச் சரி செய்வதற்கு மத்திய அரசின் ஒத்துழைப்பு நிரம்பத் தேவை என்பதை எடுத்துக் கூறியிருக்கின்றன. அந்த அளவுக்கு நாமும் மத்திய அரசிடம் போராடி வருகிறோம். இதற்கு இடையிலே நம்முடைய நிதி ஆதாரத்தைக்கொண்டு, நல்லெண்ணத்தின் அடிப்படையில் என்.ஜி.ஓ-க்களுக்கு வழங்கியது நமது நிதி ஆதாரத்துக்கும் மேற்பட்ட அளவுக்கு மீறி செய்யப்பட்ட செயல். அந்த அளவுக்கு அதையும் நண்பர் அவர்கள் பாராட்ட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன்னுள்ள கேள்வி : "1974-ம் ஆண்டு, நிதி ஒதுக்க (செலவினக் கணக்கின்மீது வாக்கெடுப்பு) சட்ட முன் வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 9/74) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2, 3, அட்டவணை பிரிவு 1, முகப்புரை நெடுந்தலைப்பு. ஆகியவை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தமிழ்நாடு, 1974-ம் ஆண்டு நிதி ஒதுக்க (செலவினக் கணக்கின் மீது வாக்கெடுப்பு) சட்ட முன்வடிவு (சட்டப்பேரவை சட்ட முன்வடிவு எண் 9/74) நிறைவேற்றப்பட வேண்டும் என்று கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

## (5) நடைமுறைக் கேள்வி.

### விவாதத்திற்கு வரும் கோரிக்கைகளைப்பற்றிய விவரங்கள் முதல் நாளே உறுப்பினர்களுக்கு அளிக்கப்பட வேண்டும் என்பது குறித்து.

THIRU K. T. K. TANGAMANI : Sir, I am rising on a point of order. Already there are directions from the Hon. Speaker that whenever Demands are taken up, the Performance Budget and other connected papers be circulated to us the previous day itself. Now, in the case of the Backward Classes' Demand, the performance Budget is given to us only today, How, can we be expected to make our contributions to the debate? There has been clear direction from the Speaker. In other cases, the Performance Budget was circulated the previous day.. At least now a direction may be given to the other Ministers so that in future at least whenever a Demand is taken up, the Performance Budget and other connected papers are circulated to us the previous day itself.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் தெரிவித்த கருத்தினை நான் மாண்புமிகு அமைச்சரவர்களுடன் கலந்து பேசி, இப்படிப்பட்ட நிலை ஏற்படாமலிருக்கும்படி பார்த்துக்கொள்ளச் சொல்கிறேன்.

## (6) 1974–75-ம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி

### (அ) நிதிக் கோரிக்கை எண் 31—பின்தங்கிய வகுப்பினர் நலன்

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்.



"நிதிக் கோரிக்கை எண் 31—பின்தங்கிய வகுப்பினர் நலன் என்ற தலைப்பின்கீழ் ரூ. 6,08,06,200-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, பின்தங்கிய வகுப்பினர் நலன்கள் சம்பந்தப்பட்ட காரியங்களைக் கவனிக்க ஒவ்வொரு மாவட்டத்திலும் தனி அலுவலர்கள், பணியாளர்கள் நியமித்துச் செயல்பட வேண்டிய அவசியம் பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 31—பின்தங்கிய வகுப்பினர் நலன் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 6,08,06,200-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. கு. அ. பொம்மன் : தலைவரவர்களே, நீலகிரி மாவட்டம், கூடலூர் தாலுக்காவில் வாழும் மாவுண்டன் செட்டியார் சமூகம் பின்தங்கிய பட்டியலில் சேர்க்கப்பட்டிருந்தும் பள்ளியில் அவர்களின் குழந்தைகளுக்கு உபகாரச் சம்பளம் கொடுக்கப்படாததைப் பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 31—பின்தங்கிய வகுப்பினர் நலன் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 6,08,06,200-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

THIRU K. T. K. TANGAMANI : Sir, to discuss the need to implement the decisions of the State Advisory Committee which meets once in six months, I move—

"That the allotment of Rs. 6,08,06,200 under Demand No. 31—Welfare of the Backward Classes, etc., be reduced by Rs. 100."

திரு. ஆ. கு. சுப்பையா : தலைவரவர்களே, படிப்பு உதவித் தொகை வழங்குவதில், வருமான வரம்பை உயர்த்துவதுகுறித்து விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 31—பின்தங்கிய வகுப்பினர் நலன் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 6,08,06,200-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. கே. பி. கோபால் : தலைவரவர்களே, மதிய உணவிற்கு, 1960-ல் நிர்ணயிக்கப்பட்ட பதினைந்து பைசாவை இன்றைய விலைவாசி உயர்வைக்கருத்தில் கொண்டு முப்பது பைசாவாக உயர்த்த வேண்டியதின் அவசியத்தைப் பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 31—பின்தங்கிய வகுப்பினர் நலன் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 6,08,06,200-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

[1974 மார்ச் 16

THIRU M. A. LATHEEF : Sir, to press for the proportionate representation for the backward Muslims in Government jobs, promotions and in the technical and medical colleges in the State, I move—

'That the allotment of Rs. 6,08,06,200 under Demand No. 31—Welfare of the Backward Classes, etc., be reduced by Rs. 100".

(ஆ) நிதிக் கோரிக்கை எண் 6—பத்திரப் **பதிவுத்**துறை.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : **தலைவரவர்களே,** ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:

" நிதிக் கோரிக்கை எண் 6—பத்திரப் பதிவுத்துறை என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,55,81,700-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

THIRU N. DENNIS : Sir, to discuss policy, I move—

'That the allotment of Rs. 1,55,81,700 under Demand No. 6 —Registration Department be reduced by Rs. 100."

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, **பத்திரப் பதிவுத்** துறையில் கோப்பு முறையை மாற்றி பழைய முறையையே கொண்டுவர வேண்டுமென்று விவாதிக்க—

" நிதிக் கோரிக்கை எண் 6—பத்திரப் பதிவுத் துறை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 1,55,81,700-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. கே. ஏ. வகாப் : தலைவரவர்களே, பதிவாளர் அலுவலகங்களில் பத்திரப்பதிவின் போது காலதாமதம் ஏற்படுவதைத் தவிர்த்தல் பற்றி விவாதிக்க—

" நிதிக் கோரிக்கை எண் 6—பத்திரப் பதிவுத் துறை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 1,55,81,700-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. ஆ. மு. சுப்பையா : தலைவரவர்களே, வில்லங்க சர்ட்டிபிகேட்டுகள், பத்திர நகல்கள் போன்றவைகளைப் பதிவு செய்து கொடுப்பதில் காலதாமதம் ஆவதைப் பற்றி விவாதிக்க—

" நிதிக் கோரிக்கை எண் 6—பத்திரப் பதிவுத் துறை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 1,55,81,700-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.



1974 மார்ச் 16]

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, தமிழகத்தில் உள்ள எல்லாத் துணைப் பத்திரப் பதிவாளர் அலுவலகங்களுக்கும் நிரந்தரக் கட்டடம் கட்டித் தருவதின் அவசியம் பற்றி விவாதிக்க—

" நிதிக் கோரிக்கை எண் 6—பத்திரப் பதிவுத் துறை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 1,55,81,700-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, to discuss policy, to discuss about the need to revise the valuation rates for various types of houses in rural areas for registration purposes, to discuss about certain difficulties experienced by the people in Hosur and Denkanikotta taluks in the matter of registration of documents and also to discuss the urgent need to open one more sub-Registrar's Office in Sulagiri Block of Hosur taluk, I move—

" That the allotment of Rs. 1,55,81,700 under Demand No. 6 Registration Department be reduced by Rs. 100."

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நிதிக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் அவைமுன் விவாதத்திற்கு வைக்கப்படுகின்றன.

*மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவரவர்களே, பின் தங்கிய வகுப்பினர் நலத்துறைக்கான மானியத்தை இங்கே கோரி, விளக்கக் குறிப்பு† ஒன்றும் அவை முன் வைக்கப்பட்டிருக்கிறது. அதைப் போலவே பத்திரப் பதிவுத் துறையில் தமிழக அரசு செய்து வரும் முன்னேற்றத் திட்டங்களும், வாய்ப்பு வசதிகளும் ஏற்கனவே மக்கள் அறிந்துகொண்டிருப்பதாகும். மாண்புமிகு உறுப்பினர்களும் அதை நன்ருக அறிந்திருப்பார்கள் என்று நம்புகிறேன். அதைப் பற்றிய விளக்கக் குறிப்பு‡ ஒன்றும் இங்கே வைக்கப்பட்டிருக்கிறது. இந்த இரு குறிப்புகளையும் என்னுடைய உரையாக ஏற்று, சபையின்நடவடிக்கைக் குறிப்பில் பதிவு செய்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன். முடிவில் பிற விளக்கங்களைப்பற்றிக் கூறுகிறேன்.

திரு பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, நடப்பாண்டுக்காக பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சரவர்கள் கொண்டுவந்திருக்கின்ற மானியக் கோரிக்கைகள் மீது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என்னுடைய வெட்டுத் தீர்மானங்களை ஒட்டி சில கருத்துக்களைச் சொல்வதற்கு வாய்ப்பு கிடைத்தமைக்காக முதலில் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

---

† 249—279ம் பக்கங்களில் இணைப்பு-III ஆக அச்சிடப்பட்டுள்ளது.

‡ 280—291ம் பக்கங்களில் இணைப்பு -IV ஆக அச்சிடப்பட்டுள்ளது.

என்னுடைய வெட்டுத் தீர்மானத்தில் பின்தங்கியோர் நலத்துறையில் அதிகமான அலுவலர்களை நியமித்து—அதாவது மாவட்டந்தோறும் தனியாக அதிகாரிகள் நியமிக்கப்பட்டு, அவர்களுக்கு உதவிப் பணியாளர்களை அமர்த்தி இந்தத் துறையில் பணியை மேலும் விரிவாக்கவும், விறுவிறுப்பாக்கவும் வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

இந்த பின்தங்கிய வகுப்பினர் நலத்துறையைப் பொறுத்தவரையில் 1949–ஆம் ஆண்டு முதல் இந்த அரசாங்கமும் மத்திய அரசாங்கமும் பல திட்டங்களைத் தீட்டி பணிகளை நிறைவேற்றிக்கொண்டிருக்கிறார்கள். இருந்தாலும் 1969–ஆம் ஆண்டு மே மாதம் 2-ம் நாள் அன்று பிற்பட்டோர் நலத்துறை என்ற துறையை பிற்பட்ட மக்களின் நலனுக்காக மேலும் பல நல்ல திட்டங்களைத் தீட்டி விரைவாக நிறைவேற்றுவதற்காக மாண்புமிகு முதலமைச்சரவர்கள் துவக்கி வைத்தார்கள். துறையைத்துவக்கியதில் எந்த விதமான கருத்து வேறுபாடும் எனக்கு இல்லை. ஆனால், மேற்கொண்டு விரிவாக்கப்படாததினால் செய்யப்படுகின்ற பணிகள் காலதாமதம் ஆகின்றன; அதனால் பல சிரமங்கள் ஏற்படுகின்றன.

பிற்பட்ட மக்களுக்கு செய்யப்பட வேண்டிய வசதிகள் ஒழுங்காகக் கிடைக்கவில்லை என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். பிற்பட்ட மக்களுக்கு, நலிந்த மக்களுக்கு உரிய நேரத்தில் சலுகைகள் சென்றடைய வேண்டுமென்ற நோக்கத்தில்தான் இத்துறை தொடங்கப்பட்டது. அந்த நோக்கத்தை நான் வரவேற்கிறேன். ஆனால் அதற்குத் தகுந்த அளவுக்கு துறை விரிவாக்கப்படவில்லை; அதனால் இது ஒரு மந்தப் போக்கில் இருக்கிறது என்பதை வருத்தத்துடன் குறிப்பிட விரும்புகிறேன்.

1969-ம் ஆண்டு துவக்கப்பட்ட இத்துறை 1974-ம் ஆண்டு வரையில் மாநில அளவிலேதான் ஒரு இயக்குநரை வைத்து செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. மாவட்ட அளவில் இதற்கு என்று தனிப்பட்ட நல அதிகாரிகள் இதுவரையில் நியமிக்கப்படவில்லை. மாவட்ட அளவில் தனி அலுவலர்களும் இல்லாமல் இதரப் பணியாளர்களும் இல்லாமல் எப்படிப்பணியாற்ற முடியும் என்பதை ஏன் இந்த அரசு சிந்திக்கவில்லை என்று எண்ணும்போது உள்ளபடியே வருத்தப்பட வேண்டியதாகத் தான் இருக்கிறது.

மாவட்ட நல அதிகாரி என்று ஒருவர் அரிசன நலத் துறைக்கும், பிற்பட்டோர் நலத் துறைக்கும் சேர்த்து இருக்கிறார். இந்த இரண்டு துறைகளையும் ஒரே அதிகாரியே கவனித்து வருவதால் அவருக்கு இரண்டு துறைகளையுமே சரியாகக் கவனிக்க முடியவில்லை. அதனால் இந்த இரண்டு பிரிவு மக்களுக்கும் செய்ய வேண்டிய வாய்ப்பும் வசதியும் செய்து கொடுக்க முடியவில்லை. அவர்களும் பெற முடியவில்லை. இது எவ்வளவு தொல்லைகளைக் கொடுக்கும், எவ்வளவு கஷ்டங்களைக் கொடுக்கும் என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு பின்தங்கிய நல அமைச்சர் அவர்களும் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஆகவே ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தனியாக பிற்பட்டோர் நலத் துறை அதிகாரியையும் அவருக்கு கீழுள்ள பணியாளர்களையும் இந்த ஆண்டிலாவது அமைத்து உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



சமுதாயத்தில் பின்தங்கியோர் எத்தனையோ பேர் இருக்கிறார்கள். நம்முடைய நாட்டிலே ஜாதி பாகுபாட்டிலும் கல்வி பாகுபாட்டிலும் பிற்பட்டோர்கள் ஏராளமானவர்கள் இருக்கிறார்கள். அவர்களையெல்லாம் முன்னுக்குக்கொண்டுவர இப்போது இருக்கின்ற நடைமுறையில் கொஞ்சம் மாற்றம் செய்யவேண்டும். சட்டத்தின் போக்கு ஒரு பக்கம் இருந்தாலும், சமுதாயத்தில் இருக்கின்ற பொருளாதாரச்சூழ்நிலையைக் கவனித்து எந்தெந்த சமுதாயத்தினர் பொருளாதாரத்தில் சீர்கெட்டிருக்கிறார்கள் என்று கண்டறிந்து அவர்களுக்கும் அரசாங்கம் உதவிகளைச் செய்யவேண்டும். எந்தச்சமுதாயத்தினராக இருந்தாலும் பொருளாதாரத்தில் நலிந்திருக்கிறவர்கள், பின்தங்கியவர்கள் ஆகியோருக்கும் உரிய வசதிகளைச் செய்து கொடுத்தால்தான் அவர்களும் முன்னேற முடியும். இந்த அரசு அதில் அக்கறை செலுத்த வேண்டுமென்று வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

பின் தங்கியோர் பட்டியலில் சாதி பாகுபாடு மட்டுமல்ல மத பாகுபாடும் ஏராளமாக இருக்கிறது. கிருஸ்த்துவர்கள், முஸ்லிம்கள், இந்துமதத்தைச் சேர்ந்தவர்கள் என்று அவர்களுக்குள்ளே பாகுபாடு இருக்கிறது. ஒரே மதத்திலுள்ள கிருஸ்த்துவர்களுக்குள்ளும் அங்கிருக்கிற சாதி பாகுபாடு இன்னும் மாற்றப்படவில்லை. ஆனால், அவர்களை பின்தங்கியோர் பட்டியலில் சேர்க்கிற முறையில் ஏராளமான மாறுபாடுகளும், கருத்து வேறுபாடுகளும் இருப்பதை நாம் நன்றாக அறிவோம் ஆகவே எந்த மதத்தினராக இருந்தாலும் அவர்களை ஒருங்கிணைத்து பின் தங்கியோர் பட்டியலில் சேர்க்க இந்த அரசாங்கம் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய திட்டப்படி இந்தச்சமுதாயத்திற்கு கல்வி வசதியை அதிகப்படுத்துவது, நிறைவேற்றுவது என்பதற்காக அளிக்கப்படுகிற உதவி உயர்ந்து கொண்டே வந்திருப்பதை அறிகிறோம். இதற்காக ஒவ்வொரு ஆண்டும் பின் தங்கியோர் நலத்துறை எவ்வளவு செலவிடுகிறது என்கிற குறிப்பு இங்கே கூறப்பட்டிருக்கிறது. குறிப்பாக அமைச்சரது உரை என்று அளிக்கப்பட்டிருக்கிற புத்தகத்தில் இரண்டாம் பக்கத்தில் 1968-69-ம் ஆண்டில் இந்த நலத்துறை ஆரம்பிக்கப்பட்டதற்கு முதல் ஆண்டில் செலவழிக்கப்பட்டது ரூ 187 இலட்சம் ஆகும்.

அது படிப்படியாக உயர்ந்து 1974-75-ம் ஆண்டிற்கு ரூ. 608 இலட்சமாக ஒதுக்கப்பட்டுள்ளது என்று கூறப்பட்டுள்ளது. பிறகு இன்னொரு பக்கத்தில் (பக்கம் 19) 1974—75-ம் ஆண்டிற்கான மொத்த ஒதுக்கீடு ரூ. 618.81 இலட்சங்களாகும் என்று கூறப்பட்டிருக்கிறது. எது உண்மை? ஒதுக்கப்பட்டிருப்பது ரூ. 608 இலட்சமா? அல்லது ரூ. 618.81 இலட்சமா? இதை அமைச்சர் அவர்கள் தெளிவு படுத்த வேண்டுமென்று விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். குறை சொல்ல வேண்டும் என்பதற்காக சொல்லவில்லை. அச்சுப் பிழை என்றாலும் எது சரி என்பதை விளக்க வேண்டுமென்றுதான் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. பெ. சௌந்தரபாண்டியன்] [1974 மார்ச் 16

மேலும் இந்த சமுதாயத்தின் வளர்ச்சிக்கு இவர்களது பொருளாதார நிலையை உயர்த்திட நாம் பல்வகையிலும் மிகுந்த அக்கறை காட்டியாக வேண்டும். ஆகவே பெருகி வரும் இந்தச் சமுதாயத்தின் தேவையை ஒப்பிடுகிறபோது, நாம் இவர்களுக்காக ஒதுக்கியிருக்கிற தொகை மிகவும் குறைவாகும். கூடுதலாக ஒதுக்கவில்லை என்று நான் குறை சொல்லவில்லை 1969-க்கு முன்பு நாம் எவ்வளவு செலவழித்தோமோ அதைவிட அதிக மாகத்தான் இந்த அரசாங்கம் ஒதுக்கியிருக்கிறது. இருந்தாலும் ஒதுக்கப் பட்ட தொகையும் ஓரளவு பாதி நிலையில்தான் இருக்கிறது என்பதை நாம் அத்தனைபேரும் ஏற்றுக்கொண்டாக வேண்டும் இதற்குப் பரிகாரம் காண இன்னும் கூடுதல் தொகை ஒதுக்கித்தர வேண்டிய பொறுப்பு இந்த அரசுக்கு இருக்கிறது.

மேலும் சமுதாயத்தில் யார் யார் பின்தங்கிய நிலையில் பயன்பெறத் தகுதி படைத்தவர்களாக இருக்கிறார்கள் என்கிற பட்டியலை மாவட்ட அளவிலும் வட்ட அளவிலும் தயாரிக்கிற ஒரு சூழ்நிலையை நாம் உருவாக்க வேண்டும் அப்படி உருவாக்கி ஆங்காங்கு உள்ளவர்கள் யார் யாரை அணுகி எத்தகைய உதவியைப் பெற முடியும் என்பதை விளக்கினால் தான் மிகுந்த பயன் ஏற்படும் அதற்கான வழிமுறைகளை அரசாங்கம் பின்பற்ற வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பின்தங்கிய வகுப்பு மாணவர்களுக்கு நாம் கல்விக்காக ஒன்பதாவது வகுப்புக்கு மேல்தான் உதவி அளிக்கிற நிலைமை இருக்கிறது. ஆறாவது வகுப்பு முதல் 9-வது வகுப்புவரை படிக்கிற ஏழை எளிய மாணவர்கள் புத்தகம் வாங்கக்கூட பணமின்றி அவதிப்படுகின்ற சூழ் நிலையைப் பார்க்கிறோம் அதை கருத்தில் கொண்டு ஆறுவது வகுப்பு முதல் படிக்கிற ஏழை, பின்தங்கிய வகுப்பு மாணவர்களுக்கும் இந்தச் சலுகையை நீட்டித்துக் கொடுக்க வேண்டுமென்று நான் வலியுறுத்திக் கூற ஆசைப்படுகிறேன்.

இன்னொன்றையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். பின்தங்கிய வகுப்பு என்பதாக சான்றிதழ் வாங்குகிற நேரத்தில் சிலசிக்கல்கள் சிலபல நேரங்க ளில் விண்ணப்பத்தையே திருப்பி விடுகின்ற சூழ்நிலை ஏற்படுவதை நடை முறையில் பார்க்கிறோம். அவர்களுக்கு வழங்கப்படுகிற எஸ்.எஸ்.எல்.சி புத்தகத்தில் அல்லது டி.சி.-யில் அவர்கள் எந்த வகுபைச் சேர்ந்தவர்கள் என்பது குறிக்கப்படுவதில்லை. அதன் காரணமாக தாசில்தாரிடமோ, வேறு அரசாங்கப் பதிவு பெற்ற அதிகாரியிடமோ கம்யூனிட்டி சர்ட்டிப் பிக்கேட் பெறப்போகும்போது பலவிதமான சங்கடங்கள் ஏற்படுகின்றன. "உங்கள் புத்தகத்திலேயே குறிப்பிடப்பட வில்லை. நாங்கள் எப்படிக் கொடுப்பது ?" என்று திருப்புகிறார்கள். ஆகவே பள்ளிகளிலேயே அந்தந்த மாணவர்கள் எந்தப் பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்தவர் என்பது பற்றி சர்ட்டிப்பிக்கேட்டிலேயே குறிக்கப்பட வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன் அல்லது வேறு ஏதாவது சுலபமான வழி முறையைக்கண்டுபிடித்து அதிகாரிகளுக்கு அறிவித்தாகவேண்டும் என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.



1974 மார்ச் 16] [திரு. பெ. சௌந்தரபாண்டியன்]

மேலும் பின்தங்கிய வகுப்பு மாணவர்களுக்கு சம்பளச் சலுகை அளிக்க இப்போதுள்ள வருமான வரம்பு 2 ஆயிரம் ரூபாயாக இருக்கிறது. விலைவாசியேற்றம் அதிகமாகவும், வருவாய் குறைந்தும் இருக்கிற இந்த நேரத்தைக் கருத்தில் கொண்டு இந்த ஆண்டு வருமான உச்ச வரம்பை 3 ஆயிரமாக உயர்த்துவது எவ்வளவோ பொருத்தமாக இருக்கும். இதையும் அரசாங்கம் கருத்தில் வைக்க வேண்டும்.

மேலும் உபகாரச் சம்பளம் வழங்குகிற நேரத்தில், உபகாரச் சம்பளம் வழங்குவதற்கு முதல் ஆண்டில் நடந்த தேர்வில் 40 சதவீதம் மார்க் வாங்கியவர்களுக்கே இது அளிக்கப்படுகிறது. ஏற்கெனவே அது கூடுதலாக இருந்தது. இந்த அரசாங்கம் வந்து அதை 40 சதவிதமாகக் குறைத்தது என்றாலும், இதையும் மறுபரிசீலனை செய்து, முதலாண்டில் தேர்ச்சி பெற்ற எல்லா மாணவர்களுக்கும் உபகாரச் சம்பளத்தை அளிக்கத் தக்க ஏற்பாடு செய்யவேண்டும், எந்தவிதமான பாகுபாடும் இருக்கக் கூடாது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

உதவி பெறுகின்றவர்கள் அதனால் எந்தவகையில் பயன்பெறுகிறார் கள், விடுதியில் இருக்கிற நேரத்தில் எவ்வளவு நேரம் படிக்கிறார்கள், அவர்களுடைய முன்னேற்றம் என்ன என்பதை எல்லாம் அவர்களுடைய முன்னேற்றத்தில் அக்கறை செலுத்தி பார்த்துக்கொள்ள வேண்டியது அரசாங்கத்தின் கடமை என்பதை வலியுறுத்திக் கூறக் கடமைப் பட்டிருக்கிறேன்.

ஆசிரியர்களுக்கு நாம் இன்னும் போதுமான வீடுகள் கட்டித் தரவில்லை. வீட்டுப் பிரச்சினைதான் கிராமாந்திரங்களில் பெரும் பிரச்சினையாக இருக் கிறது. ஆகவே, ஆசிரியர்கள் மீது அதிக அக்கறை காட்டி, கிராமப்புறங் களில் அவர்களுக்கு வீடுகள் கட்டித்தர ஆவன செய்யவேண்டும்.

அடுத்து, இன்றையதினம் பின்தங்கிய மாணவர்கள் விடுதிகள் பல வாடகைக் கட்டடங்களிலேயே இருந்துகொண்டிருக்கின்றன. இன்றைய தினம் ஆண்டுக்குப் பல லட்சம் ரூபாய் வாடகையாகவே கொடுத்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே ஒரு தீவிர திட்டத்தை ஏற்படுத்தி, ஆண்டுக்கு இவ்வளவு விடுதிகளைக் கட்டுவது என்கிற முறையில் எல்லா விடுதிகளும் சொந்தக் கட்டிடத்தில் இயங்கும்படியாகச் செய்யவேண்டும்.

படித்த மாணவர்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்திக்கொடுப்பதில் நாம் எவ்வளவுதான் 31 சதவீதம் பிற்பட்ட இனத்து மாணவர்களுக்குக் கொடுக்கவேண்டும் என்கிற விதியை வைத்திருந்தாலும் அரசுத்துறை யிலும், தனியார் துறையிலும் இந்த அளவுக்கு இன்னும் தரப்படவில்லை. ஏதோ காரணங்களைச் சொல்கிறார்கள். அப்படியின்றி கண்டிப்பாக இந்த 31 சதவீதத்தமாவ ஆவது இவர்களுக்குத் தருவதற்கான நடவடிக்கையை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்பு கிறேன்.

[திரு. பெ. சௌந்தரபாண்டியன்] [1974 மார்ச் 16

[முற்பகல் 10.30]

நம்முடைய உள்ளாட்சித் துறையைப் பொறுத்தமட்டில், அங்கே அளிக்கப்படுகின்ற வேலை வாய்ப்பு பின்தங்கிய மக்களுக்கு உரிய சதவிகிதம் தரப்படுவதில்லை. இந்தச் சூழ்நிலைபற்றி பல்லாண்டு காலம் பேசப்பட்டு வருகிறது. ஆசிரியர் பணியாக இருந்தாலும், அலுவலர் பணியாக இருந்தாலும், பியூன் வேலைக்காக இருந்தாலும், அங்கே சிபாரிசு உள்ளவர்களுக்கும், பெருந் தலைவர்கள், ஆணையாளர்கள், பஞ்சாயத்து போர்டு தலைவாகள், இவர்களுக்கு வேண்டியவர்களுக்கும்தான் வாய்ப்பு அளிக்கப்படுகிறதே தவிர, விகிதாசாரப்படி வேலை அளிக்கிற முறை அங்கே இல்லை.

ஆகவே, இந்த அரசாங்கம் உள்ளாட்சி மன்றங்களைப் பொறுத்த வரையிலும் கண்டிப்பாக இருந்து நாம் ஒதுக்கியிருக்கிற சதவிகிதத்தை அவர்கள் அளிக்கிறார்களா என்பதைக் கண்காணிக்க, ஒரு கண்காணிப்புக் குழுவை அமைத்தாலும் சாலப் பொருத்தமாக இருக்கும். அப்படி எந்த எந்த ஊராட்சி மன்றங்களில் அளிக்கப்படவில்லையோ, அதை எல்லாம் ஆராய்ந்து, மீண்டும் அளிக்கப்பட தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பின்தங்கிய சமுதாயத்தினரைப் பொறுத்தமட்டிலும், என் பின்தங்கியவர்கள் என்று வைத்திருக்கிறோம் என்றால், அவர்கள் பொருளாதாரத் துறையில் மிகவும் பின்தங்கி, வருவாய் இல்லாமல் மிகவும் சிரமப்படுகிறார்கள். பொருளாதாரத் துறையில் பின்தங்கியவர்களாக, தொழிலில் முன்னேற முடியாதவர்களாக இருப்பவர்களை நாம் கருத்திலே கொண்டு, தனிச் சலுகை கொடுத்து உதவி செய்து வருகிறோம். நம்முடைய நாட்டைப் பொறுத்தவரையிலும் தனித்தனியாகப் பிரித்து, எது எது பின்தங்கிய பகுதி, எங்கெங்கு பின்தங்கிய சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் வாழ்கிறார்கள், என்னென்ன தொழில்கள் செய்கிறார்கள் என்பதைக் கண்டறிந்து, அவர்களது வருவாயைப் பெருக்க தக்க வழிமுறைகளைக் காணவேண்டும்.

தொழிற்சாலை துவங்க வேண்டுமா, தொழிற்கூடங்களைத் துவங்க வேண்டுமா, அவர்கள் சிறுதொழில் செய்ய உதவ வேண்டுமா என்பதைக் கண்டறிந்து, அதற்கு வழிவகைகளை உண்டாக்கி, அவர்களுக்கு வேலை வாய்ப்பை உண்டாக்கவும், அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் வருவாயைப் பெருக்கவும், பின்தங்கிய பகுதிகளில் தொழிற்சாலைகளையும், தொழிற்கூடங்களையும் உருவாக்குவதில் இந்த அரசாங்கம் மிகுந்த கவனம் செலுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

வேளாண்மைத் துறையைப் பொறுத்தவரையில், இப்பொழுது கொடுக்கப்படுகின்ற விவசாயக் கடன்கள் பின்தங்கிய சமுதாயத்தினருக்கு வழங்கப்படுவதில்லை. அதற்கு என்ன காரணம் என்பதை இந்த அரசாங்கம் எண்ணிப் பார்க்க வேண்டும். பின்தங்கியவர்கள் வேளாண்மையில் ஈடுபட்டு இருந்தால், அவர்களுக்கு எந்த எந்த வகையில் உதவி அளிக்க முடியுமோ, அந்தந்த வகையில் உதவி அளிக்க வேண்டும். ஒவ்வோர்



1974 மார்ச் 16] [திரு. பெ. சௌந்தரபாண்டியன்]

ஆண்டும் கிணறு வெட்டவும் வேறு பல காரியங்களுக்கும் மானியம் தருவதையும் கடன் அளிப்பதையும் மீண்டும் மறுபரிசீலனை செய்ய வேண்டிய அவசியம் இருக்கிறது என்பதை நான் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

நம்முடைய நாட்டைப் பொறுத்தவரையிலும் பின்தங்கியவர்கள் ஏராளம் இருக்கிறார்கள். நாம் மிகுந்த அக்கறையோடு கவனிக்க வேண்டியது நம்முடைய சமுதாயத்திற்கு ஊழியம் செய்கின்ற சமுதாயத்தின் கீழுள்ள சவரத் தொழிலாளர்களையும் சலவைத் தொழிலாளர்களையும் மறந்துவிட முடியாது. ஆகவே, சலவைத் தொழிலாளர்கள், சவரத் தொழிலாளர்கள் எத்தனை பேர் என்ற ஒரு பட்டியலைத் தயாரித்து, புள்ளிவிவரம் தயாரித்து, யார் யாருக்கு இருக்க இடமில்லை, வீட்டு வசதி இல்லை என்பதை முதலிலே கண்டறிந்து அவர்கள் வசிக்க வீடளிப்பது நம்முடைய கடமையும் பொறுப்புமாகும். இதை உடனடியாகச் செய்ய முடியாது. அந்த அளவுக்கு இந்த நாட்டிலே பொருளாதாரம் இல்லை. ஆகவே, படிப்படியாக அதை நிறைவேற்றுவதற்கு ஒவ்வோர் ஆண்டும் கூடுதலாக தொகை ஒதுக்கி இந்த சவரத் தொழிலாளர்கள், சலவைத் தொழிலாளர்கள் வாழ்வில் மிகுந்த அக்கறை செலுத்த வேண்டுமென்று நான் விரும்பி வேண்டிக் கேட்டுகொள்கிறேன்.

நாம் ஒவ்வோர் ஆண்டும் சலவைத் தொழிலாளர்களுக்கும் சவரத் தொழிலாளர்களுக்கும் கருவிகள் அளிப்பதிலே கண்ணும் கருத்துமாக இருக்கிறோம். அந்தத் துறைகளில் ஆரம்பத்தில் கொடுத்த கருவிகளைவிட, ஆரம்பத்தில் செலவிட்ட தொகைகளைவிட, ஒவ்வோர் ஆண்டும் படிப்படியாக உயர்த்திக்கொண்டுதான் வருகிறோம். இருந்தாலும், அவர்களுடைய தேவைகளை நாம் முழுவதுமாக நிறைவேற்ற பொருளாதார வசதி இல்லை. ஆகவே, இதைக் கருத்திலே கொண்டு எத்தனை பேர் மனுக்கள் போடுகிறார்களோ, அவர்களிலே எத்தனை பேர்களுக்குக் கொடுக்க முடியும், எத்தனை பேர்களுக்குக் கருவிகளை வழங்க முடியும் என்பதை திட்டவட்டமாக அறிந்து கொண்டு அத்தனை பேர்களுக்கு மட்டும் அதற்கு வேண்டிய மனுக்களை நாம் வழங்க வேண்டும்.

வீணாக ஆயிரக்கணக்கானவர்கள் மனு செய்கிற நேரத்தில், பல பேருக்குத் கிடைக்காத சூழ்நிலை ஏற்படுகிறது. ஆகவே, அதற்கென்று ஒரு பட்டியல் தயாரித்து, இந்த ஆண்டு இத்தனை பேருக்கு வழங்குகிறோம், அடுத்த ஆண்டு இத்தனை பேருக்கு வழங்குவோம், அதற்கு அடுத்த ஆண்டு இத்தனை பேருக்கு வழங்குவோம் என்று முன்னாலேயே அறிவித்து, அந்தத் திட்டத்தை அமுல் நடத்தினால்தான் அவர்களது ஏமாற்றத்தைப் போக்க வழிவகை ஏற்படும். ஆகவே, இந்த அரசாங்கம் அப்படி திட்டம் போட்டு,அவர்களது ஏமாற்றத்தைப் போக்க வழிவகை காணவேண்டும்.

இந்தப் பின்தங்கியவர்களிலே முக்கியமானவர் மீனவர் சமுதாயத்தினர். கடலோரப் பகுதிகளில் வசிக்க வீடில்லாமல், வருவாயைப் பெருக்க வழியில்லாமல், வாழப் போதுமான வசதியில்லாமல், மீனவ.

சமுதாயம் சிரமப்பட்டுக் கொண்டிருப்பதை நாம் மறந்து விடக்கூடாது. கடலிலே சென்று, கடல் வளத்தையும், கடல் உணவையும் இந்த நாட்டு மக்களுக்குத் தருகின்ற அந்த மக்கள் ஆண்டாண்டுக் காலமாய் நலிந்து கொண்டிருப்பதை கருத்திலே கொண்டு அவர்களுக்கு எந்த எந்த வகையிலே உதவ முடியுமோ, அந்த வகையில் உதவ, கல்வி வசதியையும், இன்னும் பல வசதிகளையும் அளிப்பதற்கு நாம் முன்னோடி திட்டம் தீட்டி செயல்பட வேண்டுமென்பதை இந்த அரசாங்கம் கருத்திலே கொள்ளவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பொற்கொல்லர்களைப் பற்றி குறிப்பிடாமல் இருப்பது நல்லதல்ல. சமுதாயத்திற்குத் தேவையான அணிகலன்களையும் ஆபரணங்களையும் செய்து தருகின்ற பொற்கொல்லர்களுக்கு எந்த வகையில் உதவி இருக்கிறோம் என்பது கொஞ்சம் கேள்விக் குறியாகத்தான் இருக்கிறது. மத்திய அரசாங்கம் எந்த எந்த வகையில் உதவி செய்கிறோம் என்று வாக்களித்ததோ, மாநில அரசாங்கம் எந்த எந்த வகையில் உங்களுடைய வருவாயைப் பெருக்க, கைதூக்கிவிடக் காத்திருக்கிறோம் என்று சொன்னதோ, அத்தனையும் கொஞ்சம் ஆறப்போடப்பட்டிருக்கிறது என்பதைக் காணும் போது நாம் மிகுந்த கவனம் செலுத்த வேண்டியவர்களாக இருக்கிறோம். வாழ வழியில்லாமல், போதுமான வருவாய் இல்லாமல், கிராமங்களில் பல பொற்கொல்லர்களது குடும்பங்கள் சிரமப்பட்டுக் கொண்டிருப்பதை நாம் பார்க்கிறோம். ஆகவே, பொற்கொல்லர்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதிலும், கல்வியில் சலுகை அளிப்பதிலும், அவர்களது பொருளாதார வசதிகளைப் பெருக்குவதிலும், அதற்காக தொழிற்கூடங்களைத் துவக்கி, அவர்களை வேலைக்கு அமர்த்த எந்த எந்த வகையில் திட்டம் தீட்ட வேண்டுமோ அந்தந்த வகையில் திட்டம் தீட்டி செயல்படுத்த வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பின்தங்கியோர் நலக் குழு வருடத்திற்கு இருமுறைதான் கூடிக் கொண்டிருக்கிறது. இரண்டு முறை கூடி ஆய்வு செய்கின்ற நேரத்தில் அவற்றை மறுபரிசீலனை செய்ய இன்னும் 6 மாதம் ஆகிறது. ஆகவே, உரிய காலத்தில் அவர்கள் பணியைச் செவ்வனே செய்ய வேண்டுமென்றால் ஓராண்டுக்கு மூன்று முறையாவது கூடி விவாதிக்க வேண்டும், நம்முடைய செயல் திட்டத்தை வகுக்க வேண்டும். ஆகவே 6 மாதம் என்பதை 4 மாதத்திற்கு ஒருமுறை பின்தங்கிய குழு கூடுகின்ற வகையில் அதற்கு வேண்டிய ஏற்பாடுகளை நம்முடைய அமைச்சரவர்கள் செய்ய வேண்டுமென்று விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

பின்தங்கிய சமுதாயத்தில் இருக்கிறவர்கள் பட்டியலைத் தொகுத்து, ஒவ்வொரு மாவட்டத்திலும், ஒவ்வொரு வட்டத்திலும் மக்கள் பார்க்கக் கூடிய அளவுக்குப் பகிரங்கமாக அதனை வெளிப்படுத்த வேண்டும். அப்படி செய்வோமானால், யார் யார் எந்த எந்த ஜாதியினர் பின்தங்கியோர் பட்டியலில் இடம் பெற்றிருக்கின்றனர் என்பதை அனைவரும் தெரிந்து கொள்ள வாய்ப்பு வசதி இருக்கும். ஆகவே, அந்த முறையை அரசு பின்பற்ற வேண்டும்.



இந்த அரசாங்கம் எடுப்பது நல்ல முயற்சியாக இருந்தாலும், ஒதுக்குகின்ற பணம் குறைவாக இருக்கிறது. சமுதாயத்தின் அடித்தளத்திலே உள்ள, பாதிக்கப்பட்ட மக்கள் மென்மேலும் பொருளாதாரத் துறையிலே உயர்வதற்கு இன்னும் சுறுசுறுப்பாகவும் விறுவிறுப்பாகவும் பொருளாதாரத்தில் கொஞ்சம் தாராளம் காட்ட வேண்டுமென்று கேட்டு, இந்த அளவோடு முடிக்கிறேன். வணக்கம்.

திரு. என். கணபதி : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் அவர்கள் கோரி இருக்கிற மானியத்தை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விழைகின்றேன்.

முதன்முதலாக, பிற்பட்டோர் நலத்துறை என்கிற ஒரு துறையை அமைத்து, அந்தத் துறைக்கென்று ஒரு தனி அமைச்சரை அமைத்து, அந்த அமைச்சர் அந்தத் துறையிலே தன்னுடைய முழு கவனத்தையும் செலுத்தி, தீவிரமாக ஈடுபட்டிருந்த அந்த நேரத்தில் அவர் இடையிலே மாற்றப்பட்டிருந்தாலும் மீண்டும் அக்கறையுள்ள அந்த அமைச்சர் அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு பிற்பட்டோர் நலனைப் பாதுகாக்க முன் வந்ததற்காக நம்முடைய பாராட்டை நாம் தெரிவித்துக்கொள்ள விழைகிறோம்.

அடுத்தபடியாக, பொற்கொல்லர்களின் நீண்ட நாளைய கோரிக்கையாக இருந்த தங்கக் கட்டுப்பாடு கடன்களைத் தள்ளுபடி செய்யவேண்டுமென்ற கோரிக்கையை தமிழக அரசு மனமுவந்து ஏற்றுக்கொண்டு டாக்டர் கலைஞர் அவர்கள், நம்முடைய பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர், தொழில் துறை அமைச்சர் ஆகியவர்கள் எல்லாம் கூடி வெகு துணிச்சலோடு அந்தக் கடன்களைத் தள்ளுபடி செய்வதாக அறிவித்திருக்கிறார்கள். அதைப்பற்றி ஏற்கனவே சட்டமன்றத்திலே வெகு சூசகமாகச் சொல்லியிருந்தாலும்கூட கொடுக்கப்பட்ட கடனை வசூல் செய்வீர்களா அல்லது மாட்டீர்களா என்று கேட்ட நேரத்திலே தகுதியுடையவர்களிடமிருந்து கடனை வசூல் செய்வோம், தகுதியில்லாதவர்களிடமிருந்து வசூல் செய்ய மாட்டோம் என்ற பதிலை அளித்தார்கள். அந்தப் பதிலின் அடித்தளத்திலே இந்தப் பொற்கொல்லர்களின் கடனைத் தள்ளுபடி செய்யப் போகின்ற எண்ணத்தை அன்றைக்கே நாங்கள் புரிந்துகொண்டிருந்தோம்.

நேற்றையதினம் டாக்டர் கலைஞர் அவர்கள் தெளிவாக அறிவித்திருக்கிறார்கள், மத்திய அரசு அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டாலும் சரி, ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் சரி அந்தக் கடனைத் தள்ளுபடி செய்வதாக தெளிவாக உறுதியாக அறிவித்திருக்கிறார்கள். அதற்காக நான் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும் தமிழக அரசிற்கும் பாராட்டைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆனால், அதே நேரத்திலே தங்கக் கட்டுப்பாடு சட்டத்தைக் கொண்டு வந்து பொற்கொல்லர்களுக்கு துன்பத்தை ஏற்படுத்திய பெருந்தலைவர் உண்ணாவிரதத்திலே இருந்துகொண்டு இருக்கிறார். ஆனால் அந்தக் கட்சியிலே அவர் இன்றைக்கு இல்லை. மத்திய அரசாங்கத்தின் நடவடிக்கையால்

தான் இம்மாதிரியாக பொற்கொல்லர்கள் நடுத்தெருவிலே நிறுத்தப் பட்டார்கள், அந்த நேரத்திலே அவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கக்கூடிய முழுப் பொறுப்பையும் மத்திய அரசு ஏற்றுக்கொண்டது என்பதை யாரும் மறுக்க முடியாது. அந்தத் திட்டத்தின் அடிப்படையிலே வழங்கப் பட்ட கடன் பணத்தை அத்தனையும் மத்திய சர்க்கார் பொறுப்பேற்றுக் கொண்டு தள்ளுபடி செய்திருக்க வேண்டுமே அல்லாது மாநில அரசுக்கு மேலும் ஒரு சுமையாக அதை ஆக்கிடக்கூடாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏதோ பாதிக் கடன் பொறுப்பை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம் மீதிப் பொறுப்பை மத்திய அரசு ஏற்றுக் கொள்ளவேண்டுமென்ற நிலைமையைச் சொல்லி அதை ஏற்றுக்கொள்கிற நேரத்திலே தகுதி யுள்ளது, தகுதியற்றது என்று பாகுபாடுபடுத்தி தகுதியுள்ள கடன்களை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருப்பதைப்போலவும், தகுதியற்ற மற்ற கடன்களை அப்படிச் செய்ய முடியாது என்பதைப்போலவும் மத்திய அரசின் நிலைமை இருந்துகொண்டிருக்கிறது. அந்த நிலைமையிலே அத்தனை பொற்கொல்லர்களுக்கும் கடன்கள் தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்று தமிழக அரசு நிலையெடுத்திருக்கிறது, அதற்காக நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பல்வேறு கருத்துக்களை இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. சௌந்தர பாண்டியன் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். அவர்கள் சொன்ன கருத்துக்களிலே ஒன்றிரண்டை நானும் ஏற்றுக்கொள்கிறேன். உதவித் தொகை வழங்குவதற்காக இரண்டாயிரம் என்று உச்சவரம்பு கட்டி யிருக்கிறோம். ஆனால் ஒரே ஒரு நிலைமையைப்பற்றி நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். மத்திய அரசாங்கமானாலும் சரி, மாநில அரசாங்க மானாலும் சரி, குடும்பக் கட்டுப்பாடு, குடும்பக் கட்டுப்பாடு என்று சொல்லி இன்றைக்கு பல்வேறு தொகைகளைச் செலவு செய்தும் பல்வேறு விளக்கங்களை எடுத்துச் சொல்லியும் நம்முடைய நாட்டிலே குடும்பக் கட்டுப்பாடு அமலுக்கு வரவில்லை. ஒவ்வொரு குடும்பமும் பஞ்சம் இல்லாத அளவிற்கு பிள்ளைகுட்டிகளை உற்பத்தி செய்து கொண்டிருக் கின்றன, அதிலும் நடுத்தரத்திலே திரிசங்கு சொர்க்கத்திலே நின்று கொண்டிருக்கின்ற நடுத்தர மக்களுக்கு வேறு எதுவும் கிடைக்காவிட்டால் குடும்பத்தைப் பெரிதுபடுத்திக் கொண்டே போகிறார்கள். அரசு அலுவலர் களோ அல்லது ஆசிரியர்களோ 4, 5 குழந்தைகளைப் படிக்கவைக்க வேண்டிய நிலைமையிலேதான் இருக்கிறார்கள்.

எனக்குத் தெரிந்த உதாரணத்தைச் சொல்ல விரும்புகிறேன். எனக்குத் தெரிந்த ஒருவர் டெபுடி தாசில்தாராக இருக்கிறார் அவருக்கு மாதம் சம்பளம் 300 ரூபாய்தான். அவருக்கு நான்கு குழந்தைகள் இருக்கின்றன. ஒரு பையன் அவன் பி.எஸ்ஸி. படித்துக்கொண் டிருக்கிறான், இன்னொரு மகன் எம்.பி.பி.எஸ். இரண்டாவது வருடம் படித்துக்கொண்டு இருக்கிறான், மூன்றாவது மகள் பி.யு.சி. படித்துக் கொண்டிருக்கிறாள், நான்காவது பையன் எஸ்.எஸ்.எல்.ஸி. படித்துக் கொண்டிருக்கிறான். இப்படி நான்கு குழந்தைகளைப் படிக்கவைக்கின்ற



நேரத்திலே எப்படி முந்நூறு ரூபாய் சம்பளத்தில் நல்ல கல்வியை அவர்களுக்குக் கொடுக்க முடியும் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

ஆகவே சலுகைகள் கொடுக்கின்ற உச்ச வரம்புத் தொகையை அதிகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல. அதிகமாகக் குழந்தைகள் உள்ளவர்களுக்கு தனிச்சலுகைகள் கொடுக்க வேண்டும். வெளிநாடுகளிலே அப்படிப்பட்ட முறை இருக்கிறது. குழந்தை பிறந்தவுடன் அந்தக் குழந்தைக்கு தனி அலவன்ஸ் கொடுக்கப் படுகிறது. நம்முடைய நாட்டிலேயும் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை அமலாக்க முடியாவிட்டாலும் பிறந்து விட்ட குழந்தைகளைக் காப்பாற்ற வேண்டுமென்ற முறையிலே அந்தச் சலுகைகளைக் கொடுக்கவேண்டு மென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

(திரு. துரைமுருகன் தலைமை.)

நம்முடைய கலைப் பொக்கிஷங்கள் தமிழ் நாட்டிலேயுள்ள பல்வேறு கோயில்களிலே இருக்கின்றன. அந்தக் கோயில்களிலே தமிழ் நாடு முன்னாலே செழிப்புற்று இருந்த காலத்திலே இருந்தவர்கள் தங்கத் தையும் பொன்னையும் என்ன செய்வது என்று தெரியாமல் பெரிய பெரிய கோயில்களிலே கொட்டிவைத்து தமிழகத்தின் பெருமையை, புகழை உயர்த்தியிருக்கிறார்கள். அந்தச் சிலைகள் பாதுகாக்கப்பட்டிருந் தாலும்கூட ஒரு சிலை மாற்றப்பட்டு அந்தச் சிலை வெளிநாட்டிற்கு எடுத்துச் செல்லப்பட்டபிறகுதான் அது அங்கேயிருப்பது உண்மையான சிலையா என்பதைக் கண்டுபிடிக்க வேண்டிய நிலைமையிலே இருக்கிறோம்.

தமிழ்நாட்டிலே திறமைமிக்க ஸ்தபதிகள், பொற்கொல்லர்கள் இருக்கிறார்கள், அவர்களை ஒவ்வொரு கோயிலுக்கும் அல்லது ஒவ்வொரு வட்டத்திலே உள்ள கோயில்களுக்கும் வாரத்திற்கு ஒரு முறை அல்லது மாதத்திற்கு ஒரு முறை என்ற அளவிலே அனுப்பி அது அசல் சிலைகள் தானா என்று பார்க்கக்கூடிய கண்காணிப்பு முறையை ஏற்படுத்த வேண்டும். அதற்காக பொற்கொல்லர்களை, ஸ்தபதிகளை அப்ரைஸர்களாகப் போட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படிச் செய்வதன் மூலம் பொற்கொல்லர்களுக்கு வேலை வாய்ப்பும் கிடைக்கும், அதே நேரத்திலே தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய பொக்கிஷங்கள் பாதுகாப்பாகவும் இருக்கக் கூடிய நிலைமையை ஏற்படுத்தலாம்.

நம்முடைய மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் மிக அக்கறையோடு இந்த சிலை சம்பந்தப்பட்ட விவகாரங்களிலே ஈடு பட்டிருந்தார்கள். சிற்பிகளுக்கு நல்ல ஆதரவு கொடுத்து வருகிறார்கள். மகாபலிபுரத்திலே பெரிய சிற்பி, ஸ்தபதி இருக்கிறார். அவர் அங்கே சிற்பக்கூடத்திலே தலைமையாசிரியராகப் பணியாற்றிக்கொண்டு இருக்கிறார். மத்திய அரசாங்கம்கூட அவருக்கு பாராட்டுத் தெரிவித்து இந்த ஆண்டு சிறந்த சிற்பி என்று அவரைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். இப்படிப் பட்ட திறமையான சிற்பிகள் நம்முடைய தமிழ்நாட்டிலே இருக்கிறார்கள். அவர்களுக்கு, பல்வேறு கட்டடங்களை நாம் கட்டும்பொழுது, கோயில்களைக் கட்டும்பொழுது, புதுப்பிக்கும்பொழுது அல்லது புனரமைப்புச்

செய்கின்றபோது நம்முடைய பண்பும், கலாச்சாரமும், நாகரிகமும் பேணிப் பாதுகாக்கப்படுகின்ற முறையிலே பணிகள் கொடுக்கப்படவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படிச் செய்தால் அவர்களுடைய யோசனைகளைக் கேட்டு நல்ல முறையிலே கலைப்பொக்கிஷங்களை உருவாக்கலாம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய தமிழ்நாட்டிற்கு ஒரு ஆஸ்தான சிற்பியை நியமிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால் அதிகமாக கோயில்கள் இல்லாவிட்டாலும் கூட ஆந்திரத்திலே ஆஸ்தான சிற்பி நியமிக்கப்பட்டு கௌரவிக்கப்படுகிறார். நம்முடைய நாட்டிலே கலைப் பொக்கிஷங்கள், கோயில்கள் நிறைந்திருக்கின்ற நாட்டிலே ஆஸ்தான சிற்பியை நியமித்து கௌரவப்படுத்துவதோடு மட்டுமல்லாமல் கலைப் பொக்கிஷங்களைக் காப்பாற்றுவதிலே யோசனைகளையும் கேட்டுக்கொள்ளலாம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பட்டோர் நலத்துறை குழு அமைக்கப்பட்டு சட்டநாதன் அதற்கு தலைவராக இருந்து பல்வேறு சிபாரிசுகளைச் செய்திருக்கிறார். அதிகமாக அவர்கள் வலியுறுத்தியிருப்பதில் ஒன்று பொற்கொல்லர்களைப் பற்றியதாகும். பாதிக்கப்பட்ட பொற்கொல்லர்களுக்கு, அவர்கள் கண்ணார், கருமார் என்று இருக்கின்ற அந்த சமுதாயத்தைச் சேர்ந்த மக்களுக்கு—அவர்கள் கொண்டுவந்த சட்டத்தின் காரணமாக வேலையிழந்து தொழிலை விட்டுவிட்டு வேலைவாய்ப்பு இழந்து பட்டினியிலும் பசியிலும் நடுத் தெருவிலே நிற்கக்கூடிய நிலைமையிலே உள்ளவர்களுக்கு—அவரவர்கள் பகுதிகளிலே தொழிற்சாலைகள் ஏற்படுத்தப்படும்பொழுது, இருக்கின்ற தொழிற்சாலைகளிலே இத்தகைய முறையிலே பாதிக்கப்பட்டவர்களுக்கு முன்னுரிமை தந்து அவர்களை நியமித்துக்கொண்டால் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவது மட்டுமல்ல, பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் அளிப்பதாகவும் அது அமையும். அந்த சிபார்சை நம்முடைய அரசு உடனடியாக அமல்படுத்த வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொரு கருத்தைச் சென்ற ஆண்டு நான் பேசும்பொழுதே சொன்னேன். மாவட்ட நலத்துறை என்று மாவட்ட அளவில் இருக்கும் துறை இரண்டு துறைகளையும் கவனிக்க வேண்டியதாக இருக்கிறது. பிற்பட்டோர் நலத்துறைக்கும் ஒரே அதிகாரி, அரிசன நலத்துறைக்கும் ஒரே அதிகாரி என்ற நிலை மாவட்ட நிலையில் இருப்பதால் நடைமுறைச் சிக்கல்கள் ஏற்படுகின்றன. அவைகளைத் தவிர்ப்பதற்காக மாவட்ட அளவில் பிற்பட்டோர் நலத்துறைக்கு என்று தனிப்பட்ட ஒரு அதிகாரியை நியமிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மற்றபடி பல்வேறு பிரச்னைகளில் நம்முடைய அரசு பிற்பட்டோர் நலத்திற்காக அக்கறை செலுத்தி பல்வேறு துறைகளில் அவர்களுடைய மேம்பாட்டிற்காக முயற்சியெடுத்துக்கொண்டிருக்கிறது. சென்ற ஆண்டுகூட பிற்பட்டோர் நலத்துறையின் அக்கறையினால் அவர்கள் நடத்தும் அந்தப் பள்ளியிலே பயிற்சி பெற்றவர்களில் 6 பேர் ஐ.எ.எஸ். நேர்



முகத் தேர்விற்குச் செல்லும் நிலைமை ஏற்பட்டது. அது மேலும் மேலும் வளர்ந்து, பிற்பட்டோர் இனத்திலிருந்து ஐ.எ.எஸ். அதிகாரிகளாக அதிகமாக வரும் வாய்ப்பை நமது தமிழக அரசு மேலும் மேலும் ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

1967–68–ல் 161 இலட்சம் ரூபாய் செலவு செய்த நாம் இந்த ஆண்டு 608½ இலட்சம் ரூபாய் செலவு செய்கிறோம் என்றால் எந்த அளவிற்கு இந்த அரசுக்கு பிற்பட்டோர் நலனில் அக்கறையிருக்கிறது என்பது மட்டுமல்லாமல் செலவழிக்கக்கூடிய பணம் வீணாகப் போகவில்லை என்றுதான் நம்முடைய அறிக்கைகள் தெளிவாகக் கூறுகின்றன. மேலும் இது வெற்றிபெறும் விதத்தில் பிற்பட்டோர் நலனை உயர்த்துவதற்கு நம்முடைய அரசு பாடுபட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

*திரு. சோ. கருணைநாதன்: தலைவரவர்களே, மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நலத்துறை அமைச்சரவர்களால் கொண்டுவரப்பட்ட மானியத்தை ஆதரித்து இரண்டொரு கருத்துக்களை வழங்கவிருக்கிறேன்.

பின்தங்கிய வகுப்பினர் நலத்துறை 1969 மே திங்கள் 2–ஆம் நாளன்று கழக அரசால், டாக்டர் கலைஞர் அவர்களால் ஆரம்பிக்கப்பட்டு, பிற்பட்ட மக்கள் நலனுக்கென்று ஒரு அமைச்சரையே நியமித்திருப்பதை பின்தங்கிய மக்கள் எப்பொழுதும் மறக்க மாட்டார்கள்.

எங்களுடைய நீலகிரி மாவட்டத்தைப் பொறுத்தவரையிலே, அங்கே பின்தங்கிய வகுப்பினரைச் சேர்ந்த படகர் சமுதாயத்தின் நிலைமை மிகவும் மோசமாக உள்ளது. அந்த படகர் சமுதாயத்தை ஏன் பின்தங்கிய மக்கள் பட்டியலில் சேர்த்தார்கள் என்று தெரியவில்லை. அவர்களை பழங்குடி மக்கள் பட்டியலில் சேர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நீலகிரி மலையில் வாழ்கின்ற ஏனைய பழங்குடியினரான தோடர், கோத்தர், இருளர், குறும்பர் போன்றவர்களுடன் படகர் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களும் பழங்குடி மக்கள் பட்டியலில் இருந்தார்கள். படகர் சமுதாயம்போல் மற்றவர்களுக்கு இனப்பெருக்கம் அதிகமில்லை. எல்லோரும் பழங்குடி மக்களாகத்தான் வாழ்ந்து வந்தார்கள். தற்பொழுதுதான் படகர் சமுதாயத்தில் உள்ள சிலர் பட்டப் படிப்பைப் பெற்று ஓரளவு உத்தியோகங்களில் ஈடுபட ஆரம்பித்துள்ளார்கள். ஆனால் அவர்கள் தக்க சமயத்தில் உத்தியோகத்தை அடைவதற்கு மிகவும் சிரமப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அகில இந்திய சர்வீசிலே படகர் என்று சொல்லப்படுபவர்கள் ஒருவருமே இல்லை. ஆகவே, கோத்தர், இருளர் போன்ற ஆதிவாசிகளுக்கு அளிக்கப்படும் சலுகையை இந்த படகர் சமுதாயத்தினருக்கும் அளிக்குமாறு மத்திய சர்க்காரை நமது மாநில அமைச்சரவர்களும் அரசும் சிபாரிசு செய்து வற்புறுத்த வேண்டுமென்று பணிவன்போடு இந்த நேரத்தில் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

நான் என் இதைக் கூறுகிறேன் என்றால் படகர்கள் ஆதிவாசிகள்தான் என்பதற்குப் பல சான்றுகள் உள்ளன. பள்ளிப் பாடப் புத்தகங்களிலும், இன்னும் மானிட இயல் வரலாற்று நூல்களிலும் அதைக்காணலாம். ஆனால் சுதந்திரம் பெற்றுப் பல ஆண்டுகளாகியும் சிறுபான்மையோர் பட்டியலில் சேர்ந்துள்ள இந்த படகர் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களில் யாரும் மேல்மட்டத்தில் ஒரு பதவியிலேயும் இல்லாமல் இருந்தார்கள். ஆனால் கழக அரசு பொறுப்பேற்ற பிறகுதான், டாக்டர் கலைஞர் அவர்களால், உதய சூரியன் உதிப்பதைப்போன்று, ஒரேயொரு டெப்டி கலெக்டர் பதவி அளிக்கப்பட்டிருக்கிறது. அதற்காக டாக்டர் கலைஞர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் நீலகிரி மாவட்டத்தில் உள்ள படகர் சமுதாயத்தின் நிலை வருங்காலத்தில் மோசமான நிலைக்குப் போகாமல் நல்ல முறையில் காப்பாற்றப்பட வேண்டும். அந்த சமுதாயத்தைச் சேர்ந்த இளைஞர்களுக்கு வேண்டிய அளவிற்குப் பதவி வாய்ப்புகள் கொடுக்கும் அளவில் அவர்களையும் ஆதிவாசி மக்களோடு சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொண்டு, தோடர்களோடு தொடர்ந்து, இருளர்களோடு இணைந்து, கோத்தர்களோடு கூடியிருந்த அந்தச் சமுதாயத்தை என் பின்தங்கிய சமுதாயப் பட்டியலில் சேர்த்தார்கள் என்று புரியவில்லை. மூன்று லட்சம் மக்கள் தொகை கொண்ட அந்தப் படகர் சமுதாயத்தை அவர்கள் மலைஜாதி மக்கள் என்று அறிவிக்க வேண்டுமென்று இந்த அரசைப்பணிவன்போடு கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* திருமதி ஜோதி வெங்கடாசலம் : தலைவரவர்களே, பின்தங்கிய வகுப்பினருக்காக நிதி ஒதுக்கப்படும் இந்த நேரத்தில் கனம் அமைச்சரவர்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்த மானியத்தையொட்டி என்னுடைய கட்சியின் சார்பாகக் கொடுத்திருக்கக்கூடிய வெட்டுத் தீர்மானத்தை ஒட்டி நான் பேச விரும்புகிறேன்.

குறிப்பாக, தனிப்பட்ட ஒரு துறையை அமைத்து பிற்பட்ட மக்களுக்கு என்று ஏற்படுத்தியிருப்பதை வரவேற்கின்ற இந்த நேரத்தில் பிற்பட்ட மக்களுக்காக இந்த "பர்ஃபார்மன்ஸ் பட்ஜெட்"டிலே இருப்பதைப் போல் சில முக்கிய குறைகளைத் தீர்க்கின்ற வகையிலே அது இங்கே வைக்கப்பட்டிருக்கிறது. பிற்பட்ட வகுப்பினரைச் சேர்ந்த மாணவர்களெல்லாம் இன்றைக்குப் படித்து முன்னேறி மற்றவர்களோடு சரிசமமாக. அவர்கள் உத்தியோகத் துறையிலே வர வேண்டுமென்ற காரணத்தால் அவர்களுக்குக் கொடுக்கப்படுகின்ற சலுகையை நினைத்துப் பார்க்கும்பொழுது அந்தச் சலுகைகள் மிகவும் குறைவானதாகத்தான் இருக்கின்றன என்று கூற விரும்புகிறேன்.

அவர்கள் பள்ளிகளிலே படித்தபிறகு, கல்லூரியிலே படித்தபிறகு உத்தியோகத்துறையிலே போகும் நேரத்தில் அடிப்படையாக அவர்களுக்குக் கொடுக்கப்படும் கல்வியின் துறையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள், பிற்பட்ட வகுப்பினரைச் சேர்ந்தவர்களுக்கும், மலை ஜாதியினருக்கும், அவர்களுடைய தாழ்ந்த நிலைமையை ஒட்டி அவர்களுக்கு என்று அவர்களுடைய



பெற்றோர்களுக்கு 2,000 ரூபாய் ஆண்டு வருமானம் உள்ளவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கு பள்ளியிலே ஸ்காலர்ஷிப் கொடுக்க வேண்டுமென்று. அப்படி இரண்டாயிரம் ரூபாய் என்று நீங்கள் வைத்துக்கொண்டிருப்பீர்களேயானால் இந்த பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கும், மலைஜாதியைச் சேர்ந்த மாணவர்களுக்கும் அரசு நன்மை செய்யக் கூடிய அளவிலே இருக்காது என்பதை நான் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

எனவே, பெற்றோர்களுடைய வருமானம் இரண்டாயிரம் ரூபாய் என்று இருப்பதை உயர்த்தி ஆறாயிரம் ரூபாய் என்று ஆக்க வேண்டுமென்று வற்புறுத்திக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இரண்டாயிரம் ரூபாய்க்கு மேல் வருமானம் பெறுபவர்களை முற்போக்கானவர்கள் என்று நீங்கள் நினைத்துக்கொண்டிருந்தால் அந்தப் பிள்ளைகளுக்குப் பாதகம்தான் ஏற்படும் என்பதால்தான் நான் இதை வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

அடுத்து, இந்தப் பிள்ளைகளுக்கு என்று இருக்கின்ற ஹாஸ்டல்கள் மிகவும் மோசமான நிலையில் உள்ளன. பல ஹாஸ்டல்கள் வாடகைக் கட்டிடங்களிலே இருக்கின்றன. இதை ஒவ்வொரு முறையும் இந்த நிதிநிலை அறிக்கை வரும்பொழுதும், இந்த மானியம் வரும்பொழுதும் பல அங்கத்தினர்கள் எடுத்துக் கூறியிருக்கிறார்கள்.

முற்பகல் 11.00

என்வயர்ன்மெண்ட் மிகவும் அவசியம். சொந்தமான கட்டடங்கள் அவர்களுக்கென்று கட்டிக் கொடுக்கப்பட வேண்டும். அதிலே எல்லா விதமான வசதிகளும் இருந்தால்தான் அவர்கள் படிக்கின்ற சூழ்நிலை ஏற்பட்டு எதிர்காலத்திலே நல்ல மனிதர்களாக, நாட்டுக்கு உகந்தவர்களாக ஆவதற்கு வழி கோலும். இன்றைக்கு ஹாஸ்டல்கள் என்ற முறையில் பிள்ளைகளை நாம் அடைத்து வைத்திருக்கிறோம்.

அவர்களுக்குக் கொடுக்கப்படுகிற உணவுக்காக அரசு ஒரு ரூபாய் அதிகப்படுத்தியிருக்கிறது. 49 ரூபாயாக இருந்தது 50 ரூபாயாக ஆக்கப்பட்டிருக்கிறது. இன்றைக்கு விலைவாசிகள் உயர்ந்திருக்கின்ற நிலையில் எந்த வார்டனும் தற்போது கொடுக்கப்படுகிற கிராண்டை வைத்துக்கொண்டு கண்டிப்பாக நல்ல உணவு அவர்களுக்குக் கொடுக்க இயலாது.

கள்ளர் ரெக்ளமேஷன் பள்ளிகள் மதுரையில் இருக்கின்றன. அங்கிருக்கும் வாத்தியார்கள் அடிக்கடி மாற்றப்படுகிறார்கள். மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறைதான் அவர்களை மாற்றுகின்ற நிலைமை இருக்க வேண்டும். அடிக்கடி மாற்றுவதன் காரணமாக அது மாணவர்களுக்கும் கெடுதலை ஏற்படுத்தும், வாத்தியார்களுக்கும் கெடுதியை ஏற்படுத்தும். இதுபற்றி அரசு கவனிக்க வேண்டும்.

மாமண்ட செட்டியார் சமூகம் பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்கப்பட்டிருந்தும் கூட அந்தப் பிள்ளைகளுக்கு பள்ளிச் சலுகை கொடுக்கப்படாமல் இருக்கிறது. அவர்கள் அந்த இனத்தில் சேர்க்கப்பட்ட பிறகு

இந்தச் சலுகை கொடுக்க ஏன் மறுக்கப்படுகிறது என்று கனம் அமைச்சர் அவர்கள் பதிலளிக்கும்போது விளக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வீடு கட்டுவதற்கு மானியமாக 900 ரூபாயும், கடனாக 300 ரூபாயும் ஆக 1,200 ரூபாய் கொடுக்கிறார்கள். வீடு கட்டிக் கொடுப்பது பற்றி மகிழ்ச்சி. ஆனால் இந்த 1,200 ரூபாயில் வீடு கட்டிக் கொடுக்க முடியுமா? அப்படிக் கட்டிக் கொடுக்கப்படுகிற வீட்டில் வசதிகள் என்ன இருக்க முடியும் ? இந்த எஸ்டிமேட் இப்போது போடப்பட்டதாக இருக்காது. இப்போது ரிவைஸ்டு எஸ்டிமேட் போடுவார்களானால் அந்தத் தொகை உயரத்தான் செய்யும். இதுபற்றி யோசிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நல்ல தரமான வீடு கட்டிக் கொடுக்க வேண்டும்.

என்னுடைய தொகுதியிலுள்ள சலவைத் தொழிலாளர்கள் பற்றி பல முறை எடுத்துச் சொல்லியிருக்கிறேன். காவிரியாற்றின் கரையிலுள்ள சலவைத் தொழிலாளர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அவர்களுக்கு எந்தவிதமான சலுகையும் கொடுக்கப்படவில்லை. இதுபற்றி அமைச்சர் அவர்கள் ஆராய்ந்து ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு ஸ்ரீரங்கம் முனிசிபாலிடிக்கு இதற்காக தனிப்பட்ட நிதியும் ஒதுக்கித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் கட்சியின் சார்பாக திரு. ஜேம்ஸ் அவர்கள் ஒரு வெட்டுத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள்—

'To discuss the necessity to include the Backward Communities such as C.S.I. Latin Catholics, etc., of Kanyakumari district in the prospectus of Agricultural Colleges, Engineering Colleges as Backward Communities and to allot seats for admissions'

இந்த சர்ச் ஆப் சவுத் இந்தியாவைச் சேர்ந்தவர்கள், லட்டின் கத்தோலிக் என்று கூறப்படுபவர்கள் சிறுபான்மையினர். ஏற்கனவே அவர்கள் அந்தப் பட்டியலில் சேர்க்கப்பட்டு எடுக்கப்பட்டிருக்கிறார்கள் என்று நான் கருதுகிறேன். அதை மறுபடியும் பட்டியலில் சேர்த்து அவர்களுக்கும் பின்தங்கியவர்களுக்குக் கிடைக்கக்கூடிய சலுகைகளைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு சட்டநாதன் குழு 1969–ல் அமைக்கப்பட்டு 1971-ல் ரிப்போர்ட் வைக்கப்பட்டது. இன்றைக்கு 1974-ல் இருக்கிறோம். அவருடைய ஒரு ரெகமன்டேஷனைப் பற்றி மட்டும் நான் வலியுறுத்த விரும்புகிறேன். பத்து ரூபாய் ஃப்ரீ போர்டிங் சார்ஜஸ் கொடுப்பதை 20 ரூபாயாக உயர்த்த வேண்டுமென்று அவர்கள் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் அந்த 20 ரூபாயையும் அதிகப்படியாக உயர்த்த வேண்டுமென்ற யோசனையை நான் கூற விரும்புகிறேன்.

இவர்கள் ஐ. பி. எஸ்., ஐ. ஏ. எஸ். பப்ளிக் சர்விஸ் கமிஷன் எக்ஸாமினேஷனுக்குச் செல்வதற்காக தனிப்பட்ட முறையில் ட்ரெயினிங் கொடுப்பதற்கு தனியாக ட்ரெயினிங் சென்டர்கள் ஆரம்பித்து 12 பேரை





ஏற்கனவே அட்மிட் செய்து பரிட்சைக்குச் சென்றவர்களில் 3 பேர் தேர்ச்சி பெற்றிருக்கிறார்கள். இந்த மூன்று பேரும் இண்டர்வியூவில் செலக்ட் செய்யப்படவில்லை. இதற்குக் காரணம் என்ன என்று புரியவில்லை. செலக்ஷன் கமிட்டியில் யார் யார் இருந்தார்கள் ? அதிலே இருந்தவர்கள் இந்த மாணவர்கள் மீது விருப்பு வெறுப்பு கொண்டு தேர்ந்தெடுக்கவில்லை என்றால் ரிட்டன் பரிட்சையில் தேர்ச்சி பெற்றாலும் இண்டர்வியூவில் ஒவ்வொரு சமயமும் முட்டுக்கட்டை ஏற்படும் என்று எடுத்துக்கூற விரும்புகிறேன்.

பல அங்கத்தினர்களும் கூறினார்கள். பொற்கொல்லர்களுக்கு சலுகை கொடுக்கிறார்கள் என்று சொல்லும்போது அவர்களுடைய பிள்ளைகளுக்கு பர்சன்டேஜ் ரிசர்வேஷன் ஒதுக்கும்போது அவர்களுக்குக் கொடுக்கப்படுகிற வேலைகளுக்கு கலெக்டர் ஆபீசானாலும் சரி, மற்ற அரசாங்க உத்தியோகமானாலும் சரி, இவர்களுக்கு கொடுக்க வேண்டிய சலுகைகளைத் தப்பாமல், தவறாமல் பராமுகமாக இருக்காமல் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ரிஜிஸ்ட்ரேஷன்பற்றிச் சில வார்த்தைகள் கூறி முடித்துக் கொள்கிறேன். பட்ஜட் ஜெனரல் டிஸ்கஷனின்போதே நான் எடுத்துக் கூறினேன். சப் ரிஜிஸ்ட்ரார் ஆபீஸ் எல்லாம் பல இடங்களில் வாடகைக் கட்டடங்களில் இருக்கின்றன. அந்தக் கட்டடங்கள் புதுப்பிக்கப்படுவதுமில்லை, ஒயிட்வாஷ் கூட அடிக்கப்படுவதில்லை. பார்ப்பதற்கு மிகவும் பரிதாபமாக இருக்கிறது. இதுபற்றிப் பலரும் வெட்டுத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். சப்-ரிஜிஸ்ட்ரார் ஆபிசில் ரிஜிஸ்டர் செய்யச் சென்றால் காலதாமதமாகிறது என்றால் அங்கு போதிய அளவுக்கு ஸ்டாஃப் இல்லாததோடு மட்டுமல்லாமல் நிற்பதற்குகூட இடம் இல்லாதிருப்பதால் அவரவர்கள் திரும்பிச் சென்று நிதானமாக வரக்கூடிய வாய்ப்பு இருப்பதால் இந்த நிலை ஏற்படுகிறது. இந்த நிலையை மாற்ற வேண்டும். புதுக்கட்டடங்களைக் கட்டப் போவதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஃபேஸ்டு ப்ரோகிராமாக ஆண்டுக்கு இரண்டு மூன்று கட்டடங்களைக்கட்டினால் போதாது. மேலும் அதிகமான கட்டடங்களை ஓராண்டில் கட்ட ஏற்பாடு செய்ய வேண்டும்.

நான் அன்றைக்கே எடுத்துச் சொன்னேன். தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த ஒருவருக்கு சப்-ரிஜிஸ்ட்ரார் கிரேடு 2 தரப்படவில்லை என்று அப்பீல் செய்து இன்னும் தரப்படவில்லை என்று சொன்னபோது அவருக்கு ஆர்டர் அனுப்பப்பட்டு விட்டதாக ஆளுங்கட்சியைச் சேர்ந்த அங்கத்தினர் கூறினார். ஆனால் இன்றுவரை ஆர்டர் செல்லவில்லை. ஏற்கனவே 1969-ம் ஆண்டு கொடுத்த ஆர்டர் பிரகாரம் அவருக்கு கிரேடு 2 சப்-ரிஜிஸ்ட்ரார் பதவி கொடுக்கப்பட்டிருக்க வேண்டும். அதை இந்தச் சந்தர்ப்பத்தில் வற்புறுத்திக் கூற விரும்புவதோடு, கொடுக்க வேண்டும் என்று வற்புறுத்துகின்றேன்.

சப்–ரிஜிஸ்ட்ரார் ஆபீசில் பணியாற்றக்கூடிய கடைநிலை ஊழியர்களுக்கு கொடுக்கக்கூடிய சலுகைகள் மிகவும் குறைவாக இருக்கின்றன. வசதிகள் குறைவாக இருக்கின்றன. குடிக்கும் தண்ணீருக்காக மாதம் 5 ரூபாய் கொடுப்பதாகச் சொல்லுகிறார்கள்.

தண்ணீர் வைக்க ஒரு எவர்சில்வர் பாத்திரம் வாங்கிப்போடவேண்டுமென்றால்கூட அதற்கே ரூ. 50 அல்லது 60 ஆகும். அப்படி இருக்கும்போது எந்த அடிப்படையில் இந்த ஐந்து ரூபாயை ஒதுக்கியிருக்கிறார்கள் என்று தெரியவில்லை. அரசே பொறுப்பெடுத்து நல்ல ட்ரிங்கிங் வாட்டர் பில்டர் போட்டு வைத்தால் நலமாக இருக்கும். அங்கு பல குறைகள் உள்ளன. நேரமில்லாததால் அவற்றை எடுத்துக் கூற முடியவில்லை. அந்தக் குறைகளை எல்லாம் தீர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. கே.எ. வகாப் : தலைவர் அவர்களே, இங்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற இந்த பின்தங்கிய வகுப்பினர் நலத்துறை மானியத்தின்மீது பேச வாய்ப்புக் கிடைத்தமைக்கு நான் மகிழ்ச்சியடைகிறேன்.

இந்த அவையில் நான் முன்பு இஸ்லாமிய சமுதாயத்தினரின் கோரிக்கைக்காக காத்திருந்தோம் காத்திருந்தோம் காலமெல்லாம் காத்திருந்தோம் காத்திருந்த நல்ல அரசு பாராள வந்த பின்பும் காத்திருக்கவைப்பீர்களா என்று கேட்டதற்கு, காலம் கனியட்டும் காத்திருங்கள் என்றார்கள் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள்.

அன்று அவர்கள் கொடுத்த வாக்குறுதி நிறைவேற்றப்பட்டு உருது பேசுகிற முஸ்லிம் மக்கள் பின்தங்கியவகுப்பினர் பட்டியலில் சேர்க்கப்பட்டு இருப்பதற்காக முதலில் என் நன்றியை எங்கள் முஸ்லிம் சமுதாய மக்களின் சார்பில் தெரிவித்துக் கொள்கிறேன். உருது பேசும் மக்களை அந்தப் பட்டியலில் சேர்த்து அவர்களுக்கு நல்லதொரு எதிர்காலத்தை அளித்ததற்காக நன்றி தெரிவிக்கிற அதே நேரத்தில் அந்த உத்தரவு சரியான முறையில் சேர வேண்டிய அலுவலகங்களுக்குச் சேராத காரணத்தினால் இன்றும்கூட அப்பகுதி மக்கள் தங்களை பின்தங்கியோர் என்று நிரூபித்துக் கொள்வதில் பல இடர்ப்பாடுகள் உள்ளன. ஒரு தாசில்தாரிடமோ அல்லது மற்ற அதிகாரிகளிடமோ செல்லும்போது நீங்கள் உருது பேசுகிற தக்காணி முஸ்லிம் என்பதற்கு ஆதாரம் என்ன என்று கேட்கிறார்கள். அதற்காக குறைந்தபட்சம் சில ஏற்பாடுகளை அரசு செய்யலாம். அந்தந்த ஊர்களில் உள்ள முஸ்லிம் சமுதாய மக்கள் பெரும்பான்மையாக வாழும் இடங்களில் ஜமாத் இருக்கிறது, பள்ளி வாசல் இருக்கிறது. முத்தவல்லி போன்ற பெருதனக்காரர்கள் இருப்பார்கள். அவர்களிடமிருந்து ஒரு நற்சான்று வாங்கிக்கொடுதால் அல்லது அந்தப் பகுதி சட்டமன்ற உறுப்பினரோ அல்லது நகரசபைத் தலைவர்களோ ஒரு சர்டிபிக்கேட் கொடுத்தால் அதை தாசில்தார் அல்லதுசம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்ற ஒரு நிலையை ஏற்படுத்தினால் அந்த மக்களுக்கு நாம் நினைக்கிற உதவிகளைச் செய்ய முடியும். ஆகவே இப்படி ஒரு ஏற்பாட்டை குறிப்பாக ரெவன்யூ டிப்பார்ட்மெண்ட் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்போதுதான் அளிக்கப்பட்டிருக்கிற அந்தச் சலுகை அந்த சமுதாய மக்களுக்கு நல்ல முறையில் பயன்படமுடியும். அதற்காக அவர்கள் அரசுக்கு நன்றி செலுத்தவும் கடமைப்பட்டிருப்பார்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.





இந்தியத்துணைக் கண்டத்திலேயே பின்தங்கிய வகுப்பினருக்காக ஓர் தனி அமைச்சர் ஒரு தனி இலாகா அமைத்து செயல்படும் பெருமை இந்த தமிழகத்திற்குத்தான் உண்டு. அந்தப் பெருமை நம் முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு உண்டு என்பதை பெருமையோடு தெரிவித்துக் கொள்கிறேன். அப்படி நான் கூறுகிறபோது எங்கள் முஸ்லிம் லீக் கட்சி ஆளும் கட்சிக்கு ஒத்துபோடுகிறது என்று எத்தனையோ பாஷைகளில் பேசப்படுகிறது. தோழமைக்கட்சி என்ற முறையில் பாராட்ட வேண்டியவற்றை நாங்கள் பாராட்டத்தான் வேண்டும்.

அம்மையார் அவர்கள்கூட அடிக்கடி சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஒத்து ஊதுகிறார்கள், ஜாலரா போடுகிறார்கள் என்றெல்லாம் இங்கு சொல்லப்பட்டது. அதற்குக்கூட மணலி அவர்கள் பேசும்போது பதில் அளித்தார்கள். ஜாலரா போடுவது அவ்வளவு குறைவான ஒன்றல்ல, டமாரம் அடிப்பதைவிட அது ஒன்றும் குறைவானதல்ல என்று அவர்கள் சொன்னார்கள். நல்லதொரு பாட்டுக் கச்சேரிக்கு ஜாலரா போடுவது என்பதற்கு சந்தோஷப்படுகிறோம். அல்லது ஒத்து ஊதுகிறோம் என்பதற்கு சந்தோஷப்படுகிறோம். எம்.எஸ். சுப்புலட்சுமி அவர்களின் பாட்டுக் கச்சேரிக்கு பக்கவாத்தியம் வாசிப்பதற்கு போட்டி போட்டுக்கொண்டு போகிறார்கள் என்றால் அது பெருமைப்பட வேண்டிய ஒன்று. அதுகுறித்து பெருமைப்படலாம். ஆனால் ஒரு ஊமையன் பாட்டுக்கு ஒத்து ஊதுவது அல்லது வேறு விதமான பக்கவாத்தியம் வாசிப்பது என்றால் அதில் பெருமைப் படுவதைவிட நல்லதொரு கச்சேரிக்கு பக்கவாத்தியம் வாசிப்பதில் நாம் கவலைப்படவில்லை. நல்ல காரியங்களைப் பாராட்டுவது என்பதுதான் நல்ல அரசியல் பண்பாகும்.

சோஷலிஸம் பற்றி இங்கு பேசப்பட்டது. சோஷலிஸம் என்றால் என்ன? இந்த அரசு சோஷலிஸம் சம்பந்தமான காரியங்களை அமல்படுத்துவதில்லை என்று குறை கூறினார்கள். இன்றையதினம் மக்களுக்கு என்னென்ன தேவையோ அந்தத் தேவைகளை ஏராளவிற்கு நிறைவேற்றுவது என்பது தான் சோஷலிஸத்தின் அடிப்படைத் தன்மையாக இருக்க முடியும். இன்று நாட்டு மக்களுக்கு உண்ண உணவு வேண்டும். அதற்கு வேண்டிய நல்ல ஏற்பாடுகளை அரசு செய்து வருகிறது. அடுத்து, உடை வேண்டும். அதற்கும் அரசு எல்லாவிதமான ஏற்பாடுகளையும் செய்து வருகிறது.

ஆனால், அப்படி வேண்டிய ஏற்பாடுகளை நம் அரசு செய்து வருகிற நேரத்தில் மத்திய அரசு துணிமணிகளுக்கு எந்தவிதத்தில் எல்லாம் வரிகளை அதிகம் போடமுடியுமோ அந்த அளவிற்குப் 'போடுகிறார்கள் என்பது மட்டுமல்ல, இங்கு நாம் நூற்றுத்தருகிற நூலைக்கூட நம் கைத்தறி நெசவாளர்கள் உபயோகிக்க முடியாத அளவில் அவர்கள் எடுத்துக் கொள்கிற இந்தச் சூழ்நிலையை குறை கூறுபவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

பின்னர், இருப்பதற்கு இடம். அதிலும் நம் தமிழக அரசு பசுமைப் புரட்சியில் எப்படி வெற்றி பெற்றிருக்கிறதோ அதேபோல் இருக்க இடம் அளிப்பதிலும் நம் அரசு வெற்றி பெற்றிருக்கிறது. சமுதாயத்தில் சிலர் மேல்மட்டத்திலும் மற்றவர்கள் அடித்தளத்தில் அடக்கப்பட்டு,

[திரு. கே. எ. வகாப்] [1974 மார்ச் 16

ஒடுக்கப்பட்டு, தாழ்த்தப்பட்டுக் கிடக்கும் நிலையை அகற்றி எல்லோரையும் சமமான நிலையில் வைப்பதற்கு பாடுபட்டுக் கொண்டு வருகிறது தமிழக அரசு.

இதைக்கூறும்போது நாங்கள் இன்று மைனாரிட்டி மக்கள் என்ற நிலையில் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். எங்களுக்கு வேண்டிய சலுகைகள் அல்லது நியாயமான உரிமைகளை எல்லாம் இந்த ஆட்சி கொடுத்துக் கொண்டு வருகிறது. இருந்தபோதிலும் எங்களுக்கு இன்னும் பல குறைபாடுகள் உள்ளன. அவற்றையெல்லாம் தீர்ப்பதற்கு நான் ஒருவழி சொல்ல ஆசைப்படுகிறேன்.

பின்தங்கிய வகுப்பினர் நலத்துறையில் மைனாரிட்டிகளுக்கு என்று ஒரு கமிஷன் அல்லது ஒரு போர்ட் என்று ஒரு தனி நிறுவனம் அமைக்கப் பட வேண்டும். இந்த நாட்டில் மைனாரிட்டியினராக முஸ்லிம்கள் இருக்கிறார்கள், கிருத்தவர்கள் இருக்கிறார்கள். இந்த மைனாரிட்டி சமுதாயத்தினரை பகுதி பகுதியாகப் பிரித்து அவர்களை அணுகி அவர்களின் குறைகளைக் கேட்டு அவர்களின் கோரிக்கைகள் நிறைவேறும் விதத்தில் நடவடிக்கை எடுக்க வேண்டும். போர்ட்கள் அமைப்பது பற்றி கருத்து வேறுபாடுகள் இருந்தாலும், போர்ட்கள் அமைப்பது சிலருக்கு தலைமைப் பதவி கொடுப்பதற்காகத்தான் என்ற அடிப்படையில் எதிர்க்கட்சியினர் சொன்னாலும், உண்மையிலேயே விஷயங்களை நுணுக்கமாக ஆராய்ந்து பரிசீலிப்பதற்கு அது ஒரு நல்ல வழியாகும் என்பதுதான் என் கருத்து. ஆகவே மைனாரிட்டிகளுக்காக ஒரு தனி கமிஷன் அல்லது போர்ட் என்ற ஒரு ஸ்தாபனத்தை தமிழக அரசு ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு நாங்கள் முஸ்லிம் லீக் உறுப்பினர்கள் ஆறுபேர்கள் இருக்கிறோம். கிருத்துவ சமுதாயத்தைச் சேர்ந்த ஒரு அம்மையார் அவர்களும் இருக்கிறார்கள். தமிழகத்தில் நான்கு கோடி மக்களில் 40 லட்சம் பேர்கள் முஸ்லிம்கள். அவர்கள் பிரச்னைகள் எதுவாக இருந்தாலும்சரி அவர்கள் எங்களைத்தான் அணுகுகிறார்கள். நாங்கள் அவர்களுக்காக அதிகாரிகள் அல்லது அமைச்சர்களைச்சந்தித்து அவர்களது குறைபாடுகளை எடுத்துச் சொல்லித் தீர்க்க வேண்டிய நிலையில் இருக்கிறோம்.

அவர்கள் மட்டுமல்ல, எங்கள் தொகுதியைச் சேர்ந்த எல்லாக் கட்சிக் காரர்களும் எங்களை அணுகுகிறார்கள் அவர்களது பிரச்னைகளைத் தீர்த்து வைக்க. (மணியடிக்கப்பட்டது). ஆகவே மைனாரிட்டிகளுக்காக ஒரு கமிஷன் அல்லது ஒரு போர்ட் அமைக்கப்பட வேண்டும் அவர்களது நலன்களைக் கவனிப்பதற்காக. நாங்கள் 40 லட்சம் முஸ்லிம்கள் இருக்கிறோம். ஆனால் மக்கள் விகிதாச்சார அடிப்படையில் எங்களுக்கு உத்தி யோகங்கள் போன்றவற்றில் பிரதிநிதித்துவம் அளிப்பதுபற்றி இந்த அரசு சிந்திக்க வேண்டும். பின்தங்கிய வகுப்பினர்பட்டியலில் எங்களைச் சேர்த்திருப்பதால் எங்கள் விகிதாச்சார பிரதிநிதித்துவம் அடிபட்டுப்போய் விடுகிறது. குறிப்பாக இன்று இந்த நாட்டில் 50 ஐ.எ.எஸ். அதிகாரிகள் இருந்தால் ஒன்றிரண்டு பேர்கள் கூட முஸ்லிம் சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் வரமுடியாத சூழ்நிலை எல்லாம் ஏற்பட்டு விடுகிறது.



1974 மார்ச் 16] [திரு. கே. எ. வகாப்]

அது மட்டுமல்லாமல், போலீஸ் இலாகாவில் போதிய பிரதிநிதித்துவம் இல்லை என்பதை உணர்கிறோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்பெல்லாம் இருந்த அரசாங்கங்கள் செய்த அடிப்படையை மாற்றி, முஸ்லிம்களும் இந்த நாட்டின் குடிமகன், இந்தத் தாய்நாட்டின் மீது பற்றுக்கொண்டவன், விஸ்வாசம் உள்ளவன், அவர்களும் இன்று நன்றி உணர்ச்சியோடு நடந்து கொள்ளும் சமுதாயம் என்பதை உணர்ந்து இன்றையதினம் போலீஸ் இலாகாவில் அவர்களுக்கு இடம் அளித்து இருந்தாலும் போதிய இடம் அளிக்கவில்லை என்ற குறை இருக்கிறது.

ரெவின்யூ இலாகா, மருத்துவ இலாகா போன்ற துறைகளிலும் திறமை படைத்தவர்கள், இந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு பதவி உயர்வு அளிப்பதிலும் இந்த அரசாங்கம் தீவிர கவனம் செலுத்த வேண்டும்.

கல்வியை எடுத்துக் கொண்டால், இன்று கல்லூரிக் கல்வி அதிகாரியாக தலைமைப் பொறுப்பேற்க ஒரு முஸ்லீம் இருந்தும்கூட அவர்களுக்கு சீனியாரிட்டி இருந்தும்கூட, அவர்களுக்கு தகுதி இருந்தும்கூட, அவரை தலைமைப் பதவியில் நியமிக்கவில்லை என்று நினைக்கிறபோது நான் முதலமைச்சர் அவர்களையும் சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்களையும் கேட்டுக் கொள்கிறேன். உண்மையான, நியாயமான கோரிக்கையாக இருந்தால் அதைச் செய்து கொடுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். சீனியாரிட்டி மூலம் பதவி உயர்வு வருகிறபோது முஸ்லீம்கள் என்ற காரணத்திற்காக தர மாட்டேன் என்று சொல்லாமல் வேறு ஏதாவது காரணங்கள் இருந்தால் சொல்லலாம். ஆகவே, எங்களுடைய கோரிக்கைகளை நியாய உணர்வோடு பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவர்களுக்கு சலுகை கொடுத்துக் கொடுக்க வேண்டுமென்று சொல்லவில்லை. நியாயமாக சட்டத்தில் கண்டுள்ள தகுதியின் அடிப்படையில் இருந்து, சீனியாரிட்டியும் இருந்தால் அவர்களுக்கு எந்தவிதமான தயக்கமும் இல்லாமல் பதவி கொடுங்கள் என்றுதான் கேட்கிறோம்.

நீதித்துறையை எடுத்துக் கொண்டால், 5—6 ஆண்டுகளில் சுமார் 10 மாவட்ட நீதிபதிகள் ஓய்வு பெற்று இருக்கிறார்கள். அதிலே முஸ்லீம்களாக இருந்தவர்கள் 10 பேர் இருக்கிறார்கள். அந்த இடத்தில் மறுபடியும் நியமிக்கப்பட்டதில் ஒருவர்தான் முஸ்லீமாக இருக்கிறார்.

**Thiru N. GANAPATHY**: On a point of Order, Sir .. — With your permission......

**MR. CHAIRMAN (Thiru DURAI MURUGAN)**:—Is it a point of Order, point of clarification, or point of elucidation?

**Thiru N. GANAPATHY**: Point of clarification, Sir.

இப்போது உயர்நீதி மன்றத்தில் பப்ளிக்பிராசிகியூட்டராக அப்புல்லா பாட்சா நியமிக்கப்பட்டு இருக்கிறார்கள். அது அங்கத்தினர் அவர்களுக்குத் தெரியுமா?

திரு கே. எ. வகாப் :—நன்ருகத் தெரியும். அவர்கள் எந்த விதமான சிபார்சின் அடிப்படையிலும் நியமிக்கப்பட்டவர் அல்ல என்பதும் தெரியும். நீதித் துறையின் நியாயமான சிபார்சின் அடிப்படையில் நியமிக்கப்பட்டு இருக்கிருர். அவர்கள் எல்லாவிதத் தகுதியும் பெற்றவர்கள் என்பதும் தெரியும். அப்படிப்பட்ட தகுதி படைத்திருப்பவர்களுக்குத் தகுந்த இடம் கொடுங்கள் என்றுதான் கேட்கிருேம். சில இடங்களில் அரசியல் குறுக்கிடு காரணமாக அப்படிப்பட்டவர்கள் வரமுடியாமல் போகிறது என்பதற்குத்தான் அரசாங்கத்திடம் இந்தக் கோரிக்கையை எடுத்துச் சொல்கிருேம். அதற்குக் கூட நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கிருேம். அங்கே நியாயமான தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. அதிலே எந்தவிதமான அரசியல் குறுக்கீடும் இல்லை. நண்பர் கணபதி அவர்கள் சொன்னதற்காகச் சொல்கிறேன், 10 பேர் ரிடையர் ஆகி இருக்கிருர்கள், ஆனல் ஒருவர்தான் நியமிக்கப்பட்டு இருக்கிருர். ஆகவே, தகுதியுடையவர்களுக்கு வாய்ப்புத் தராமல் இருக்கக்கூடாது என்ற கருத்தை அவர்கள் சிந்திக்கவேண்டுமென்று எடுத்துக்கூற ஆசைப்படுகிறேன். (மணியடிக்கப்பட்டது) இன்னும் கொஞ்ச நேரம் தாருங்கள்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரைமுருகன்) :—உங்களுக்குக் கொடுக்கப்பட்ட நேரம் முடிந்து விட்டது. 15 நிமிடத்திற்கு மேல் ஆகி விட்டது. திரு. எட்டியப்பன்.

திரு. எம். ஏ. லத்திப் :—உடனடியாக எட்டியப்பனுக்கு எட்டிபபோய் வீட்டீர்களே !

திரு. பூ. எட்டியப்பன் :—தலைவரவர்களே, தமிழக அரசு பின் தங்கிய நல அமைச்சரால் கொண்டு வரப்பட்டிருக்கிற மானியத்தை வரவேற்று என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

பின் தங்கியவர்கள் நலத்திற்கு என்று 1969-ல் தனியாக ஒரு துறை பிரிக்கப்பட்டு, ஒரு அமைச்சர் அவர்களின் நிர்வாகத்தின் கீழே அது கொண்டு வரப்பட்டிருக்கிறது. அன்று 187 லட்சம் ஒதுக்கப்பட்டு இருந்ததை, இன்றைக்கு 1974–75-ம் ஆண்டிலே 608 லட்சமாக அதிகப் படுத்தியிருக்கிருர்கள் என்ருல் இந்த அரசு பின் தங்கியோர் நலனிலே எவ்வளவு அக்கறை கொண்டிருக்கிறது என்பதை யாராலும் மறுத்துக் கூறுவதற்கு முடியாது. அப்படிப்பட்ட நல்ல திட்டங்களை வகுத்து இருந்தபோதிலும், செயல்படுத்துகிற செயல்களில் ஒரு சில குறைபாடுகள் இருக்கத்தான் செய்கின்றன. இதற்குக் காரணம் தமிழகத்திலே பின் தங்கிய பகுதி மக்களின் குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்டவர்களின் நலத்திற்காக இந்த இலாகா இருக்கிறது, செயல்பட்டு வருகிறது; என்ருலும், ஜாதி அடிப்படையிலே, தந்தை பெரியார் அவர்கள் நீண்ட நெடு நாட்களாக சொல்லிக் கொண்டு வந்த அடிப்படையிலே, கல்வி, பதவி உயர்வு, மற்ற எல்லாவற்றிலும் செய்வதற்கு இந்த அரசு முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



எனக்கு முன்பு பேசிய மாண்புமிகு உறுப்பினர் ஒருவர்கூடச் சொன்னர், மிகக் குறைந்த எண்ணிக்கையுள்ள சமுதாயத்தைச் சேர்ந்த எங்களுக்கு இப்போது சரியான பிரதிநிதித்துவம் இல்லையே என்று. மிக அதிகமாக, தமிழக மக்கள் தொகையிலேயே 25-க்கு மேலே 30 சத விகிதத்திற்குள் உள்ள ஒரு குறிப்பிட்ட வன்னியர் வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கு ஹைகோர்ட் நீதிபதி பதவி இதுவரை கொடுக்கவில்லை. இது எல்லாப் பத்திரிகைகளிலும் வந்து இருக்கிறது. அதற்காகப் போராட்டம் கூட நடத்தி இருக்கிருர்கள். எனவே, தந்தை பெரியார் அவர்களின் எண்ணம் நிறைவேற்றப்படுகிற முறையில், அந்த பிற்பட்ட நலத்துறை ஜாதியின் அடிப்படையில் கல்வி மற்றும் பதவி உயர்வு, வேலைவாய்ப்பு இவைகளைச் செய்வதற்கு வழிவகை செய்யவேண்டுமென்று மிகப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். ஏனென்ருல் வெளியே இதைப் பற்றி நிறையப் பேசிக் கொண்டிருக்கிருர்கள். இது அரசின் கவனத்திற்கு வந்ததோ இல்லையோ, என்னுடைய கடமை இதைப் பற்றி இங்கே குறிப்பிடவேண்டுமென்ற எண்ணத்தில் குறிப்பிடுகிறேன்.

இன்று 9-ம் வகுப்பு முதல் இந்த பிற்பட்டோர் நலத்துறையிலே மாணவர்களுக்கு சலுகைகள் வழங்கப்படுகின்றன. அதை 5-ம் வகுப்பு முதல் என்று வைப்பது சாலச் சிறந்ததாக இருக்கும் என்று கருதுகிறேன். ஏனெனில் கிராமங்களில் இருக்கும் தாழ்த்தப்பட்ட மக்கள், குற்றப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட மக்கள்தான் புத்தகங்களை வாங்க முடியாத நிலையில், நாட்டில் விலைவாசி ஏறியிருக்கும் இந்த நிலையில் இருக்கிருர்கள். விவசாயிகள் பூச்சி கொல்லி மருந்து, உர வகைகள் இவைகளை வாங்குவதற்கு முடியாத நிலையில் பாடப்புத்தகங்கள் வாங்கித் தர இயலவில்லை. ஆகவே, அவர்களுக்கு 5-ம் வகுப்பிலிருந்து இந்த பாட புத்தகங்கள் வாங்கிக்கொடுக்கும் சலுகையைக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆண்டுதோறும் ரூ. 2,000-க்குக் குறைவாக வருமானம் உள்ளவர்களுக்குத்தான் படிப்பு உதவிச் சலுகைகள் வழங்கப்படுகின்றன. தற்போது இருக்கும் விலைவாசியில் அந்த லிமிட்டை ரூ. 4,000 அல்லது ரூ. 5,000-க்கு உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்போதுதான் அந்தச் சலுகைகளை மேலும் பல மக்கள் பெற முடியும் என்றும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் அந்த மாணவர்கள் 40 சத விகிதம் மதிப்பெண்கள் வாங்கியிருந்தால் இந்தச் சலுகை பெற முடியும். அதையும் 35 சத விகிதம் என்று குறைத்தால் பல பின்தங்கிய மாணவர்கள் பயன் அடைய நல்ல வாய்ப்பு ஏற்படும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

(முற்பகல் 11·30)

பின் தங்கிய மாணவர்கள் தங்கும் விடுதிகளிலே தங்கிப்படிக்கக்கூடிய எல்லோருக்கும் ஒரு ஆண்டுக்கு இரண்டு தடவை உடை வழங்கப்படுகிறது. அது மேலும் விரிவாக்கப்பட்டு நல்ல முறையில் செயல்படவேண்டும். அதற்கு மீண்டும் நிறைய நிதி ஒதுக்கீடு செய்யவேண்டும் என்று மிக்க

[திரு. பூ. எட்டியப்பன்]

[1974 மார்ச் 16

பணிவன்போடு வேண்டி விரும்பி கேட்டுக் கொள்கிறேன். காரணம் என்னவென்றால், சென்ற ஆண்டை விட இந்த ஆண்டில் அதிக மாணவர்கள் அந்த விடுதிகளிலே சேர்ந்து படிக்க வாய்ப்பு இருக்கிறது. மேலும் பின்தங்கியோருக்கு பின்தங்கியோர் நல விடுதிகள் உயர்நிலைப் பள்ளி அளவில் 21 விடுதிகளும், கல்லூரி படிப்பு அளவிலே 10 விடுதிகளும் இந்த ஆண்டு புதியதாக துவக்க இருப்பதைப் பாராட்டுகிறேன். பெரணமல்லூர் மிகவும் தாழ்த்தப்பட்ட, பின்தங்கிய, பிற்படுத்தப்பட்ட வட்டாரமாக இருக்கிற காரணத்தினால், உயர்நிலைப் பள்ளியில் 600-க்கு மேலாக மாணவர்கள் படிக்கின்ற காரணத்தினால் அங்கு ஒரு பின்தங்கியோர் விடுதியைத் துவக்கிவைக்க வேண்டும் என்று மிகவும் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக, ஆறு மாதங்களுக்கு ஒரு முறை பின்தங்கியோர் நலக் குழு கூடுவதாகச் சொல்கிறார்கள். அந்தக் குழுவில் யார் யார் னர்களாக இருக்கிறார்களோ அவர்களிடத்தில் சட்டமன்ற உறுப்பினர்களுடைய வேண்டுகோள்களையும் அவர்களுடைய யோசனைகளையும் கேட்டு உந்தக் குழுவில் ஆராயப்பட வேண்டும் என்று சொல்லவேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

1969-ல் பின்தங்கிய நலக் குழு ஏற்பாடு செய்யப்பட்டு, அது தமிழகம் பூராவும் சென்று, பிற்படுத்தப்பட்ட மக்களுடைய வாழ்க்கைத்தரத்தை ஆய்வு செய்து பரிந்துரைகளைச் செய்துள்ளது. சட்டநாதன் பிள்ளை அவர்களுடைய குழுவின் அறிக்கையை தவறாமல் உடனுக்குடன் எல்லா பரிந்துரைகளையும் அமுல்செய்வதற்கு துரிதப்படுத்தி தக்க நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளவேண்டும் என்று மிகப் பணிவன்போடு வேண்டி விரும்பி கேட்டுக்கொண்டு, விடைபெறுகிறேன். வணக்கம்.

* திரு. கு. அ. பொம்மன் : பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, பின் தங்கிய வகுப்பு நலத் துறை மான்யத்தின் பேரில் எங்கள் கட்சியின் சார்பாக நான் கொடுத்துள்ள வெட்டுப் பிரேரணையை அதாவது நீலகிரி மாவட்டம், கூடலூர் தாலுகாவில் வாழும் மாவுண்டன் செட்டியார் சமூகம் பின் தங்கிய பட்டியலில் சேர்க்கப்பட்டிருந்தும் பள்ளியில் அவர்களின் குழந்தைகளுக்கு உபகாரச் சம்பளம் கொடுக்கப்படவில்லை என்பதை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன்.

கூடலூர் தாலுகாவில் மாவுண்டன் செட்டியார் சமூகத்தின் ஜனத்தொகை 5,000-க்கும் குறைவாகத்தான் இருக்கிறது. இந்தச் சமூகத்தில் படித்தவர்கள் மிகவும் குறைவு. 25 பேர்கள்தான் குறைந்தது S.S.L.C. வரை படித்து இருக்கிறார்கள். அதிலே ஒரே ஒரு பெண் தான் எஸ்.எஸ்.எல்.ஸி. வரையிலும் படித்திருக்கிறாள். இந்த 25 பேரில் ஒருவர் பஞ்சாயத்து போர்டில் எக்ஸிக்யூடிவ் ஆபிஸர், ஒருவர் அப்பர் டிவிஷன் கிளார்க், ஒருவர் குமாஸ்தா ஆகிய மூன்று பேர்கள்தான் வேலை செய்துகொண்டிருக்கிறார்கள்.



1974 மார்ச் 16]

[திரு. கு. அ. பொம்மன்]

அந்த ஊரில் படித்தவர்கள் பல பேர்களுக்கு இன்னும் வேலை வாய்ப்பு கிடைக்கவில்லை என்று மக்கள் குறைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் பேசுவது மலையாளம், கன்னடம், தமிழ் மூன்றும் சேர்ந்த பாஷை. அதற்கு ஸ்க்ரிப்ட் கிடையாது. அவர்கள் தமிழைத் தான் படித்துக்கொண்டிருக்கிறார்கள். மாவுண்டன் செட்டியார் சமூகத்தினர் கூடலூர் தாலூகாவில் மட்டும்தான் இருக்கிறார்கள். மாநிலத்தில் வேறு எந்த மாவட்டத்திலும் இந்த சமூகத்தினர் இல்லை. ஆகையினால் அவர்கள் மிகவும் பின்தங்கிய நிலையில் இருக்கிறார்கள். இவர்களை இதுவரைக்கும் முற்போக்கான சமூகத்தினராக வைத்திருந்தார்கள். நான் சட்டசபையில் அங்கம் வகித்த பிற்பாடு கடந்த ஆண்டு சட்டசபையில் மாண்புமிகு அமைச்சரிடம் இது பற்றி தெரிவித்ததின் பேரில், இவர்கள் பின்தங்கியோர் பட்டியலில் கடந்த இரண்டாண்டுக்கு முன்பு சேர்க்கப்பட்டனர். அவர்களுக்கு உதவி செய்யவேண்டும் என்று கோரினாலும் அதிகாரிகள் அதைப் பரிசீலனை பண்ணுவதில்லை. இதை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாவுண்டன் செட்டியார் ரொம்ப பின்தங்கிய, பிற்போக்கான நிலையில் உள்ளவர்கள். இவர்கள் எல்லாம் நிலம்பூர் ஜென்மி பூமியில் தங்கள் முன்னோர் காலங்களிலிருந்து விவசாயம் செய்துகொண்டு இருக்கிறார்கள். ஜெமீன் ஒழிப்பு ஏற்பட்டு, அந்த நிலங்களை இவர்களுக்கு ரயத்வாரி பட்டா செய்துகொடுப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த நடவடிக்கைகள் கடந்த ஆண்டு செயல்பட்டு முடிவாகியுள்ளது. இவர்களுக்கு இன்னும் பட்டா வழங்கப்படவில்லை. இதைப்பற்றி வருவாய்த் துறை அமைச்சரிடத்தில் நான் பல தடவை சொல்லியிருக்கிறேன். அதைத் துரிதமாகச் செய்துகொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இவர்களுக்கு வேலைவாய்ப்பு தேடித்தருவதில் முன் உரிமை வழங்க வேண்டும். இந்த மாநிலத்தில் மாவுண்டன் செட்டியார் சமூகத்தினர் 5,000 பேர்கள்தான் இருக்கிறார்கள் என்று ஏற்கெனவே சொல்லியுள்ளேன். அவர்களுக்கு எல்லா சலுகைகளையும் கொடுத்து வேலைவாய்ப்பில் முன்உரிமை வழங்கவேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

அடுத்தபடியாக, மாண்புமிகு உறுப்பினர்கள் சௌந்திரபாண்டியன் அவர்களும், கணபதி அவர்களும் சொன்ன கருத்துக்களை நான் பூரணமாக ஏற்றுக்கொள்கிறேன். 1969-க்கு பிற்பாடு பிற்பட்ட நலத் துறை தனியாக பிரிக்கப்பட்டு, நலத் துறை அமைச்சர் என்று ஒருவர் போடப்பட்டு அது இயங்கிக்கொண்டு வருகிறது. ஆனால், மாவட்ட அடிப்படையில் பார்க்கப்போனால், அரிசன க்ஷேமநல அதிகாரி, பின்தங்கியோர் துறை, அரிசனத் துறை ஆகிய இரண்டு துறைகளின் அலுவல்களையும் கவனித்துக்கொண்டு வருகிறார். ஆகவே, அவருக்கு வேலைப் பளு அதிகமாக இருக்கிறது. அதனால் அரிசனங்களுக்கு ஏற்படவேண்டிய நன்மைகளும் துரிதமாக ஏற்படவில்லை.

[1974 மார்ச் 16

[திரு. கு. அ. பொம்மன்]

பின்தங்கியோருக்கு ஏற்படவேண்டிய நன்மைகளும் துரிதமாக ஏற்படுவதற்கு வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது. காரணம், போதிய அலுவலர்கள் இல்லாததுதான். மேலும், போதிய இட வசதியும் இல்லை. அதனால் ரொம்ப கஷ்டம் ஏற்படுகிறது. உதாரணமாக எங்கள் நீலகிரி ஜில்லாவை எடுத்துக்கொண்டால், மலைப் பிரதேசம். குறிப்பிட்ட இடத்திற்குப் போய் அதிகாரிகள் மக்களிடம் தொடர்பு கொண்டு வருவதற்கு ஒரு நாள், இரண்டு நாட்கள் கூட ஆகிவிடும். ஜீப் போவதற்கு வசதியில்லாத இடங்கள் கூட இருக்கின்றன. காலையில் போனால் இரவில்தான் திரும்பமுடியும், அதுவும் குறிப்பிட்ட ஒரு இடத்தைத் தான் பார்த்து விட்டு வர முடியும். மற்ற மாவட்டங்களில் இந்த மாதிரி நிலை இல்லை என்பதை அமைச்சர் அவர்கள் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மனைக்கட்டுகள் கொடுப்பதைப்பற்றி சொல்ல விரும்புகிறேன். அதாவது ரூ. 300 கடனாகவும், ரூ. 900 மான்யமாகவும் கொடுக்கிறார்கள். ரூ. 1,200 மற்ற மாவட்டங்களில் கொடுக்கிறார்கள். நீலகிரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அது மலைப் பிரதேசம். மழை ஜாஸ்தி, மூன்று மாதங்களுக்கு மழை பெய்யும், பனி பெய்யும், அந்த நிலைமையைப் பார்க்கிறபொழுது மற்ற இடங்களைவிட இங்கே தனி டிசைன் போடுவதுதான் நியாயமாக இருக்கும். அதோடு அந்த டிசைனுக்கு ஏற்றவாறு அதிகமாக பணத்தை ஒதுக்கித்தர வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் உதாரணமாக மணல் வரவேண்டுமென்றால் மேட்டுப்பாளையத்திலிருந்துதான் வரவேண்டும், அங்கு மணல் கிடையாது. சாமான்களின் விலையும் இப்பொழுது அதிகமாகியிருக்கிறது. ஆகவே இந்தத் தொகை போதாது. குறைந்தது ரூ. 2,500-ஆக இதை உயர்த்தவேண்டும் என்று மிகவும் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, 1974–75-ல் 31 இல்லங்கள் கட்டப்படப்போவதாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. பத்து இல்லங்கள் கல்லூரி மாணவர்களுக்கும், 21 இல்லங்கள் உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்கும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. எங்கள் ஜில்லாவில் மூன்று தாலுகா, மூன்று சட்ட மன்றப் பிரதிநிதிகள்தான் இருக்கிறோம். குன்னூர், உதகையில் ஏற்கனவே இருக்கின்றன. கூடலூரில் இல்லம் கிடையாது. ஆகவே, உயர்நிலைப்பள்ளி மாணவர்களுக்காகக் கட்டும் இல்லங்களில் ஒன்றை கூடலூரில் கட்டித்தரவேண்டும். அதாவது, வருகிற நிதி ஆண்டில் என்பதை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

அடுத்தபடியாக, மாண்புமிகு உறுப்பினர் கருணைநாதன் படகர் சமூகத்தினரைப் பற்றி எடுத்துச் சொன்னார்கள். ஏதோ ஒரு டெப்யூடி கலெக்டரைப் போட்டு விட்டார்கள் என்று பெருமையாகச் சொன்னார்கள். ஒரு டெப்யூடி கலெக்டரை மட்டும் போட்டுவிட்டால் அந்த சமுதாயம் முன்னுக்கு வந்துவிட்டதாகக் கருத முடியாது..........



1974 மார்ச் 16]

திரு. சோ. கருணைநாதன்: ஒரு டெப்யூடி கலெக்டர் போட்டதாக நான் பெருமையாகச் சொல்லவில்லை. இதுவரையிலும் ஒன்று கூட கிடைக்கவில்லை. பல ஆண்டுகள் உருண்டு ஓடியும் இப்பொழுதுதான் ஒருவருக்கு டெப்யூடி கலெக்டர் கிடைத்திருக்கிறது சூரியன் உதித்தது மாதிரி என்பதாகத்தான் சொன்னேன். இது போதாது, இன்னும் வேண்டும் என்ற அளவிலே தான் சொன்னேன். பெருமையாகச் சொன்னதாக நினைக்கவேண்டாம்.

திரு. கு. அ. பொம்மன்: அதைத்தான் சொல்லவந்தேன். ஒரு டெப்யூடி கலெக்டர் கிடைத்தது என்பதினால் முன்னேற்றம் அடைந்து விட்டதாகக் கருதக்கூடாது. ஏற்கெனவே அவர்கள் பழங்குடி லிஸ்ட்டில் இருந்தார்கள். மறுபடியும் அவர்களை பழங்குடி லிஸ்டில் சேர்க்க வேண்டும் என்று அவர்கள் சொன்னதை நானும் ஒத்துக்கொள்கிறேன். பழங்குடிகளுக்குக் கொடுக்கக்கூடிய சலுகைகள் அத்தனையையும் படகர் சமுதாயத்திற்குக் கொடுக்கவேண்டும் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, வேளாண்மைத் துறையிலே கடன் கொடுக்கும் வகையிலே மாவுண்டன் செட்டியார் சமூகத்தினர் ஜென்மி பகுதியில் உள்ள நிலங்களில்தான் விவசாயம் செய்கிறார்கள்.

தங்களுடைய நிலங்களை மேம்படுத்துவதற்காக நில அடமான வங்கிகளில் தங்கள் கைவசமுள்ள நிலங்களை ஈடுகாட்டிக் கடன் கோரினால் இந்த நிலங்கள் நிலம்பூர் ஜென்மி நிலங்களாதலால் கடன் கொடுக்க மறுக்கப்படுகிறது. ஆகவே, கடன்கோரி மனு செய்துள்ளவர்களுக்குக் கடன்கள் கிடைக்க வேண்டுவன செய்ய வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளேன்.

திரு. எம். ஏ. லத்தீப்: Is there quorum to carry on the activities of the House? கோரம் இருக்கிறதா என்று கேட்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரைமுருகன்): (இரண்டு உறுப்பினர்கள் அவைக்குள் வந்தார்கள்) இப்பொழுது கோரம் இருக்கிறது. அவர்கள் வந்துவிட்டார்கள்.

ஆனால் ஒன்று நான் அங்கத்தினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். காலையிலே அவ்வளவு பேர் கையெழுத்துப் போடுகிறோம். லாபியில் உட்கார்ந்திருப்பதற்கு, உள்ளே வந்து உட்காரக்கூடாதா? வெளியே இரண்டு பேர்கள் போனால் உள்ளே இரண்டு பேர்கள் வரவேண்டும். அடிக்கடி இப்படி கோரம் இல்லை என்ற நிலைமை அவையில் இருக்குமானால் அது நமக்கும் அழகு அல்ல. இந்த மன்றத்திற்கும் அழகு அல்ல. பல பேர்கள் லாபியில் உட்கார்ந்திருக்கிறார்கள். அவர்கள் உள்ளே வந்து உட்காரவேண்டும் என்று அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்

[1974 மார்ச் 16

கிறேன். அமைச்சர் பெருமக்களும் இப்படி காலியாக முதல் வரிசையை விட்டுவைக்கக்கூடாது. வேண்டுமானால் இங்கேயே உட்கார்ந்துகொண்டு ஃபைல்களை பார்க்கலாம் அமைச்சர் பெருமக்கள். அந்த இலாகா அமைச்சரும் அவருக்குத் துணையாக ஒரு அமைச்சரும்தான் உட்கார்ந்திருக்கிறார்கள். கூடுமானவரையில் அமைச்சர் பெருமக்களும் அவையில் இருக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. கே.எ. வகாப்:** இங்கு வந்து போன அங்கத்தினர்களை மட்டும் குற்றம் சொல்கிறீர்களே? வராமலே இருப்பவர்களைப் பற்றி எதுவும் சொல்லவில்லையே? வராமல் இருப்பவர்களைப்பற்றி அந்தந்த கட்சிக் கொறடாவிடம் சொல்லி, அவர்கள் வருவதற்கு ஏற்பாடு செய்யக்கூடாதா?

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரைமுருகன்):** நான் யாரையும் குறை சொல்லவில்லை. அவைக்கு வந்திருக்கிறவர்கள் கூடிய வரையில் அவையிலே உட்காரவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அதுதான் அவைக்கு மதிப்பு.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** இன்றைக்கு நடைபெறுவது பாக்வேர்டு கிளாஸ் பற்றிய சப்ஜெக்ட். அதனால்தான் முதல் வரிசையில் யாரையும் காணவில்லை போலும். பாக்வேர்டு கிளாஸ் என்றாலே அமைச்சர்களுக்கும் பிடிக்கவில்லை என்று நினைக்கிறேன். அதனால்தான் ஒதுங்கியிருக்கிறார்கள். இதிலே என்ன பேசப்போகிறார்கள், நாம் என்ன சொல்ல வேண்டியிருக்கிறது என்று நினைத்துவிட்டார்கள். அதனால்தான் அவர்கள் அவையிலே இல்லை.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரைமுருகன்):** அமைச்சர்கள் மட்டுமல்ல; எல்லோருக்கும் நான் சொன்னது பொருந்தும். இங்கே பாருங்கள், எதிர்க்கட்சித் தலைவர்களில் எத்தனை பேர் இருக்கிறார்கள் என்று உங்களுக்கே தெரியும். நான் சொல்லுவது, எதிர்க்கட்சிக்காரர்களும் இருக்க வேண்டும், ஆளும் கட்சிக்காரர்களும் இருக்க வேண்டும், எல்லாக் கட்சித் தலைவர்களும் இருக்க வேண்டும், அமைச்சர்களும் இருக்க வேண்டும். கூடியவரையில் எல்லோரும் அவையில் இருப்பதற்கு முயற்சிக்க வேண்டும். அப்படி எல்லோரும் தங்கள் பொறுப்பை உணர்ந்து அவையில் உட்கார்ந்து கடமையாற்றினால் இப்படி கோரம் இல்லாத ஒரு நிலைமை ஏற்படாது. நான் யாரையும் குறை சொல்லவில்லை, கூடுமானவரையில் எல்லோரும் அவையில் உட்கார்ந்திருக்க முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திருமதி ஜோதி வெங்கடாசலம்:** கொஞ்சநேரம் உட்கார்ந்துவிட்டு காப்பி அருந்திவிட்டு வரலாம் என்று வெளியே போய்வருகிறார்கள். இங்கேயே காப்பி சப்ளை செய்வதற்கு ஏற்பாடு செய்துவிட்டால் அங்கத்தினர்கள் வெளியே போகவேண்டிய நிலை இருக்காது.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரைமுருகன்):** நீங்கள் கூறுவது நல்ல யோசனை தான். அதற்கு நான் என்ன செய்ய முடியும்? எதிர்க்கட்சித் தலைவர்களும், அமைச்சர்களும் அவை



1974 மார்ச் 16]

முன்னவர் அவர்களும் கலந்துபேசி, அதற்கு ஒரு ஏற்பாட்டைச் செய்து கொள்ளுங்கள். பக்கத்திலே கான்டீன் ஏற்படுத்திக்கொண்டால் நல்லது தான். வெளியிலிருந்து காப்பி வாங்கிக்கொண்டுவரச் சொன்னாலும், இங்கே வருவதற்குள் சூடு ஆறிவிடும். அதனால் அங்கத்தினர்கள் அங்கே போகவேண்டியிருக்கிறது. அதை நானும் உணருகிறேன். அவையிலே கோரம் இல்லாத ஒரு நிலை ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டியது அங்கத்தினர்களுடைய பொறுப்பு. கோரம் இல்லாமல் சபை நடப்பது, சபைக்கும் அழகல்ல; அங்கத்தினர்களுக்கும் அழகல்ல.

**திரு. எம். சுரேந்திரன்:** தலைவரவர்கள் கூறிய கருத்தை எல்லோரும் ஒப்புக்கொள்ள வேண்டியதுதான். இருந்தாலும்கூட ரூலிங் பார்ட்டியில்தான் அதிகமான அங்கத்தினர்கள் இருக்கிறார்கள். எதிர்க்கட்சியில் மிகக் குறைந்தவர்கள்தான் இருக்கிறார்கள். ஆகவே, எதிர்க்கட்சிக்காரர்களின் எண்ணிக்கை குறைவாக இருக்கிறது என்று கருதாமல், ரூலிங் பார்ட்டியிலுள்ளவர்களை அதிகமாக வருவதற்கு ஏற்பாடு செய்து கொள்ளலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரைமுருகன்):** இதில் எதிர்க்கட்சி, ஆளும் கட்சி என்று தரம் பிரிக்கக்கூடாது. நான் யாரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. சில உறுப்பினர்கள் வெளியிலே—லாபியில் நீண்டநேரம் உட்கார்ந்திருக்கிறார்கள். அப்படி இல்லாமல் கூடுமான வரையில் இந்த அவையிலே உட்கார்ந்து, அவையில் கோரம் இல்லை என்ற நிலையை ஏற்படுத்தாமல் இருக்கவேண்டுமென்றுதான் கூறினேன். அவையின் கௌரவத்தைக் காக்கும் பொறுப்பு எல்லோருக்கும் உண்டு.

**Dr. H. V. HANDE:** We are very grateful to the Chairman for making the observation that Members of the Cabinet, Members of the Ruling Party also should be present. I congratulate the Chairman for his impartial suggestion, the very good suggestion he has made that even members of the Treasury Bench should come and sit in the House.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரைமுருகன்):** பாராட்டுப் பெறவேண்டும் என்பதற்காக நான் சொல்லவில்லை. அவையில் கோரம் இல்லாத நிலை இருக்கக்கூடாது. இதிலே எதிர்க்கட்சிக்காரர்கள், ஆளும் கட்சிக்காரர்கள் என்ற வேறுபாடு கிடையாது. எல்லோரும் அவைக்கு வரவேண்டும், அவையில் இருக்க வேண்டுமென்றுதான் நான் கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. கு. காமாட்சி:** சார், பாயிண்ட் ஆப் ஆர்டர். அம்மையார் அவர்கள் பேசும்போது இன்றைக்கு பாக்வேர்டு கிளாஸ் பற்றிப் பேசுகிறோம், அமைச்சர்களுக்கு அதிலே பிடிப்பு இல்லாததால் இங்கே இருக்க விரும்பாமல் போய்விட்டார்கள் என்று சொன்னார்கள். எதிர்க்கட்சிக்காரர்களிலே நிறைய பேர்களை இங்கே காணவில்லை; அந்த அம்மையார் கட்சித் தலைவரேகூட இங்கே இல்லை. ஆகவே, .......

[1974 மார்ச் 16

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரைமுருகன்): அம்மையார் அவர்களே இடையிலேதான் வந்தார்கள். எல்லோரும் அவையில் இருக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய வேண்டுகோள். நீங்கள் குறிப்பிடுவதில் பாயின்ட் ஆப் ஆர்டர் ஒன்றும் இல்லை.

திரு. நா. வீராசாமி : தலைவரவர்களே, தாங்கள் இன்றையதினம் ஒரு நல்ல ரூலிங் கொடுத்திருக்கிறீர்கள். எங்களைப் போன்ற உறுப்பினர்கள் அவைக்கு வந்துவிட்டால் $1\frac{1}{2}$ மணி வரையில் அவையிலே உட்கார்ந்திருக்க வேண்டும் என்ற கடமை உணர்ச்சியோடு உட்கார்ந்திருக்கிறோம். ஆனால் சில முக்கியமானவர்கள், பொறுப்புள்ளவர்கள் வெளியிலே கையெழுத்து போட்டுவிட்டுப் போய்விடுகிறார்கள். அப்படிப் போய்விடுவதால் தான் கோரம் இல்லாத நிலை ஏற்படுகிறது. ஆகவே, கையெழுத்து போட்டவர்கள் அத்தனை பேரும் குறைந்தது ஒரு மணி நேரமாவது இந்த அவையிலே உட்கார்ந்து இருக்க வேண்டுமென்ற நிலையை ஏற்படுத்தினால் நல்லது. அதற்கு தலைவரவர்களின் அதிகாரத்தைப் பயன்படுத்தலாம் என்ற கருத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். (மணியடிக்கப்பட்டது).

திரு. கு. காமாட்சி: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நல்ல கருத்துக்களைச் சொல்கிறார்கள். அவர்கள் சொல்லுவதற்கு அனுமதி கொடுங்கள்.

திரு. நா. வீராசாமி: இன்றைக்கு நடைபெறுவது பிற்பட்டோர் நலத்துறை பற்றிய விவாதம். இதிலே ஒரு நோக்கம் கற்பிக்கக்கூடாது. அது பொருத்தமுடையதல்ல. அமைச்சரவர்கள் இங்கே இல்லை என்றால் அவர்கள் அறையிலே போய் சில அலுவல்களைக் கவனித்துவிட்டு வருகிறார்கள். அமைச்சர்கள் அங்கே போகிறார்கள் என்றால் தங்களுடைய சொந்த வேலைக்கு அல்ல. அமைச்சர்களைத் தேடி அங்கத்தினர்கள் போகிறார்கள். அங்கத்தினர்களைத் தேடி மக்கள் போவதால், அவர்களுக்காக அங்கத்தினர்கள் அமைச்சர்களைத் தேடிப்போகிறார்கள். ஆகவே, யார் மீதும் குற்றம் சொல்லக்கூடாது. எல்லோரும் இந்த மன்றத்திற்குக் கட்டாயம் வரவேண்டும். வந்து கையெழுத்துப் போட்டவர்கள் ஒரு மணி நேரமாவது இந்த மன்றத்தில் உட்கார்ந்து, கடமையாற்ற வேண்டும் என்று ஒரு சட்டத்தைப்போட்டால் நல்லது. அப்போதுதான் கோரம் இல்லை என்ற நிலை ஏற்படாது. அதற்கு தலைவர் அவர்கள் ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரைமுருகன்): யாரையும் ஒரு மணி நேரம் உட்கார்ந்துதான் ஆகவேண்டுமென்று கட்டாயப்படுத்த முடியாது. அதனால் வேண்டுகோள் விடுக்கிறேன். அங்கத்தினர்கள் தங்கள் கடமையாற்றத்தான் வருகிறார்கள். அவர்கள் அவையிலே உட்கார்ந்து கோரம் இல்லை என்ற நிலையைத் தவிர்த்து, கடமையாற்ற வேண்டுமென்ற வேண்டுகோளை நான் விடுகிறேன். இதற்கு ஒரு சட்டம் போட முடியாது; அது அவைக்கு அழகல்ல; அங்கத்தினர்களுக்கும் அழகல்ல. (திருவாளர்கள் வகாப், சுரேந்திரன், சௌந்தரபாண்டியன், கோவை செழியன்



1974 மார்ச் 16] [மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு. துரைமுருகன்]

ஆகியோர் எழுந்து நின்றார்கள்). பாயின்ட் ஆப் ஆர்டர் என்று சொல்லி அவையின் நேரத்தை வீணுக்கக்கூடாது. $1\frac{1}{2}$ மணிக்குள் உறுப்பினர்கள் எல்லாம் பேசி, அதன்பின் மாண்புமிகு அமைச்சரவர்களும் பதில் சொல்லியாக வேண்டியிருக்கிறது. ஆகையால் இந்தப் பிரச்சினையை இத்துடன் முடித்துவிட்டு, விவகாரத்திற்கு வருவோம். இதிலே யார்மீதும் யாரும் குற்றஞ்சாட்ட முடியாது. மாண்புமிகு அங்கத்தினர்களே தங்களுடைய பொறுப்பை உணர்ந்து கடமையாற்ற வேண்டுமென்ற வேண்டுகோளை மட்டும் விடுகிறேன்.

திரு. கோவை செழியன்: நான் சொல்லப்போவது என்ன என்பதைக் கேளுங்கள். அதன்பின்னால் தங்களுடைய தீர்ப்பைச் சொல்லுங்கள். நான் கேட்பது இந்தப் பிரச்சினையைப்பற்றியதல்ல. அமைச்சர்களும், அங்கத்தினர்களும் இரண்டு மணி நேரத்திற்கு ஒரு தடவையாவது டீ, காப்பி சாப்பிட வேண்டியிருக்கிறது. இங்கே அமைச்சர்களுக்கு மட்டும் டீ, காப்பி அருந்த அனுமதிக்கப்படுகிறது. அதைப்போலவே அங்கத்தினர்களுக்கும் அனுமதி கொடுக்கவேண்டும். இல்லாவிட்டால் அமைச்சர்களுக்கும் அனுமதி கொடுக்கக்கூடாது. வெளியிலேதான் அமைச்சர்கள், அங்கத்தினர்கள் என்ற பாகுபாடு இருக்க வேண்டும். இந்த அவையிலே எல்லோருக்கும் ஒரே விதிமுறைதான் இருக்க வேண்டும். பாரபட்சம் கூடாது. இதிலேகூட தாழ்ந்த ஜாதி, உயர்ந்த ஜாதி என்ற நிலையை ஏற்படுத்திவிடக்கூடாது. ஆகவே, எல்லோருக்கும் இங்கே காப்பி, டீ அருந்த ஏற்பாடு செய்ய வேண்டும்; இல்லாவிட்டால் யாருக்கும் அந்த அனுமதி கூடாது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரைமுருகன்) : பேசுகிறபோது நா வறண்டு போகிறது. அப்போது தண்ணீர் கேட்கிறார்கள். இதிலே பாயின்ட் ஆஃப் ஆர்டர் ஒன்றும் இல்லை.

திரு. எம். சுரேந்திரன்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன மாதிரி, இந்த அவையிலே எல்லோரும் ஒன்றுதான். அமைச்சர்களுக்கு ஒரு முறை, அங்கத்தினர்களுக்கு ஒரு முறை என்று இல்லை. ஆகவே எல்லோருக்கும் (மணியடிக்கப்பட்டது) டீ, காப்பி அருந்த அனுமதி வழங்கவேண்டும், இல்லையென்றால் யாருக்கும் அனுமதி கூடாது.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரைமுருகன்) : இதோடு இதற்கு முற்றுப்புள்ளி வைத்துவிட வேண்டும். அடுத்து திரு. பொம்மன் தொடர்ந்து பேசுவார்கள்.

திரு. கு. அ. பொம்மன்: அடுத்தபடியாக, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோபால் அவர்கள் மதிய உணவுத் திட்டத்தைப்பற்றிச் சொன்னார்கள். அவர்களுடைய வெட்டுத் தீர்மானத்திலும் கொடுத்திருக்கிறார்கள். 1960-ல் மதிய உணவுக்கு ஒரு குழந்தைக்கு 15 பைசா என்று நிர்ணயித்திருந்தார்கள். இன்றைக்கு விலைவாசி எவ்வளவோ உயர்ந்துவிட்டது.

[திரு. கு. அ. பொம்மன்] [1974 மார்ச் 16

ஆகவே, இன்னும் அந்த 15 பைசாவே கொடுப்பது முறையல்ல; முற்றிலும் அது போதாது. அதை 30 பைசாவாக உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக ஒன்றை மட்டும் கூறி முடித்துக்கொள்ளுகிறேன். நீலகிரி மாவட்டத்தில் உள்ள கூடலூரில் சப்-ரிஜிஸ்தரார் தனியாகக் கிடையாது. உதகையிலிருந்துதான் வரவேண்டும். அங்கிருந்து வாரத்திற்கு இரண்டு அல்லது மூன்று நாள்தான் வருவார்கள். உதகையிலும் அவருக்கு வேலை அதிகமாக இருக்கும். அதனால் எல்லா நாட்களிலும் இங்கே வரமுடியாது. மக்களுக்கும் அங்கே போகமுடியாது. அதனால் அந்தப் பகுதியிலுள்ள மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அவர்கள் கஷ்டத்தைப் போக்க, கூடலூரில் தனியாக சப்-ரிஜிஸ்தரார் ஒருவரை நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன், வணக்கம்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

*திரு. ந. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு பிற்பட்டோர் நலத் துறை மானியத்தை ஆதரித்து, ஒன்றிரண்டு வார்த்தைகள் சொல்லி முடிக்க விரும்புகிறேன்.

இந்தியாவிலேயே எங்கும் இல்லாத அளவுக்கு இன்றையதினம் தமிழக அரசு 1969ஆம் ஆண்டு முதற்கொண்டு சமுதாயத்தில் மிகத் தாழ்ந்த நிலையில் இருக்கிற பிற்பட்டோர்களது நலனுக்காக ஒரு தனித் துறையை ஏற்படுத்தி, அதற்கு இந்த ஆண்டு ஏறத்தாழ 608 இலட்சம் ரூபாய் ஒதுக்கியிருப்பதை நான் வரவேற்றுப் பாராட்டுகிறேன். இப்படி நமது அரசு பிற்பட்டோர் நலனில் தீவிர அக்கறை செலுத்தி வருகிற நேரத்தில் ஒரு சில இடர்ப்பாடுகள் அங்கங்கே இருக்கத்தான் இருக்கின்றன. இவற்றை இந்த அரசு நீக்கியாக வேண்டியதாக இருக்கிறது.

இன்றைக்கு எனக்கு முன்பு மாண்புமிகு உறுப்பினர் கூறியதைப் போல மேல்மட்டத்தில் தனித்தனியாக இரண்டு இயக்குநர்கள் இருந்தாலும் —அரிசன நலத் துறை இயக்குநர், பிற்பட்டோர் நலத் துறை இயக்குநர் —என்பதாக—மாவட்ட அளவில் இரண்டும் மாவட்ட நல அதிகாரியின்கீழ் இருப்பதனால்—இந்த இரண்டு துறை காரியங்களைச் செய்கிறபோது பல சிக்கல்கள், காரியங்கள் விரைவில் நடைபெறாத சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, மாவட்ட அளவிலும் அரிசன நலத் துறைக்கு தனியாக, பிற்பட்டோர் நலத்துறைக்குத் தனியாக வெவ்வேறு அதிகாரிகளைப்போட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்..

அதைப்போலவே இன்றைக்கு தாழ்த்தப்பட்டவர்களுக்கு வழங்கப் படுகிற சில கருவிகள் பிற்பட்டவர்களுக்கும் வழங்கப்படுகின்றன. குறிப்பாக சலவைத் தொழிலாளர்கள், க்ஷவரத் தொழிலாளர்கள் ஆகியவர் களுக்கு மானியம் வழங்கப்படுகிறது. ஆனால், தையல் மெஷின், காப்ளர் மெஷின் போன்றவற்றையும் பிற்பட்ட சமூகத்தைச் சேர்ந்த ஏழை ஆண் களுக்கும், பெண்களுக்கும் வழங்குகிற வகையில் ஆவன செய்யவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.



1974 மார்ச் 16] [திரு. ந. சோமசுந்தரம்]

இதைவிட நம்முடைய திராவிட முன்னேற்றக் கழக அரசு வந்ததற்குப் பின்னாலே கலப்புத் திருமணங்களுக்கு ஊக்கம் அளிக்கின்ற வகையிலே, உயர்ந்த சாதிக்காரர் தாழ்ந்த சாதிக்காரப் பெண்ணைத் திருமணம் செய்துகொண்டால் தங்கப்பதக்கம் வழங்கப்படும் என்று அறிவித் திருக்கிறது. ஒரு ஐயங்கார் ஒரு அரிசன வகுப்புப் பெண்ணை மணந்து கொண்டால், அவர்களுக்குக் குழந்தை பிறந்தால் அந்தக் குழந்தையை எந்த சாதியில் சேர்ப்பது என்பது பெரிய பிரச்சினையாக இருக்கிறது. அந்தக் குழந்தையை தாழ்த்தப்பட்டோர் வகுப்பில் சேர்க்க வேண்டுமென்று கிராம அதிகாரிகளிடம் சொன்னால், அவர் அந்தக் குழந்தைக்குத் தகப்பன் ஐயங்கார் ஆயிற்றே, எப்படி தாழ்த்தப்பட்டோர் வகுப்பில் சேர்ப்பது என்கிறார். இப்படி கலப்புத் திருமணம் செய்துகொண்டவர் களது குழந்தையை எந்த வகுப்பில் சேர்ப்பது என்பதில் பெரிய தகராறு இருந்துகொண்டிருக்கிறது. இதுபோன்ற குழந்தைகளை தாழ்த்தப் பட்டோர் வகுப்பில் சேர்க்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து இன்றைக்குப் பல மாணவ, மாணவியர் விடுதிகள் வாடகைக் கட்டிடங்களில் இருக்கின்றன. விரைவில் எல்லா விடுதிகளுக்கும் சொந்தக்கட்டிடம் கட்ட முடியாது என்றாலும் மாணவிகள் விடுதிகளையாவது உடனடியாக சொந்தத் கட்டிடம் கட்டி அங்கே ஏற்படுத்த அரசுதக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். இன்றைக்கு மாணவிகள் விடுதிகள் வாடகைக் கட்டிடத்தில் ஊருக்குள் இருப்பதால் பலவிதமான சச்சரவுகள் ஏற்பட்டு அரசாங்கம் வரையில் வந்திருக்கும் என்று எண்ணு கிறேன்.

அடுத்து, விடுதியில் தங்கிப் படிக்கிற எல்லா பிற்படுத்தப்பட்ட மாணவர் களுக்கும் உதவித் தொகை கொடுக்கப்படுகிறது. ஆனால் விடுதி கிடைக்காமல் வெளியில் தங்கிப் படிக்கிற பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு— விடுதி கிடைக்காதது மட்டுமல்ல, அவர்களுக்குக் கிடைக்கிற உதவித் தொகை குறைவாகக் கிடைக்கிறது. ஆகவே, வெளியில் தங்கிப் படிக்கிற மாணவர்கள் விஷயத்திலும் இப்போது கொடுக்கிற உதவியை அதிகப்படுத்த வேண்டும் என்பதாகத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்படி இன்னும் பலவிதங்களில் பிற்பட்டோர்களுக்குச் செய்ய வேண்டிய சலுகைகளைச் செய்து கொடுத்தால் உள்ளபடியே பிற்பட்டோர் மேம்பாடு அடைய முடியும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, பத்திரப் பதிவுத் துறை சம்பந்தமாக இன்றைக்கு ஓரளவு அந்தத் துறையில் கடந்த இரண்டு ஆண்டுகளாக இருந்த பலவிதமான குறைபாடுகள் நீங்கி நல்ல முறையில் இயங்கி வருகின்றன என்றாலும், மாவட்டங் களில் அந்த அலுவலகங்கள் ஒட்டடை அடைந்த வாடகைக் கட்டிடங் களிலேயே இருக்கின்றன. அலுவலகங்களுக்கே சொந்தக் கட்டிடம் இல்லாத நிலையில், அலுவலர்களுக்கு சொந்தக் கட்டிடம் எங்கே? அப்படி யின்றி அலுவலகங்கள், அலுவலாளர்களுக்கு கட்டிடம் கட்டிக்கொடுக்கிற

[திரு. ந. சோமசுந்தரம்]

திட்டத்தைச் செயல்படுத்த வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். அதோடு அங்கே பணிபுரிகிற கடைநிலை ஊழியர்களுக்கு உடை வாங்கிக் கொடுக்கவும் ஆவன செய்ய வேண்டும்.

இந்த மாநிலத்தைப் பொறுத்தவரையில் பதிவுத் துறையில் குறிப்பிட்ட அளவுக்கு தாழ்த்தப்பட்ட சமூகத்தினர்களுக்கு வேலை வாய்ப்பு உயர்வு கொடுக்கப்படவில்லை. இது சில வருடங்களாகவே அரசின் பரிசீலனையில் இருக்கிறது. ஆகவே இவ்வாண்டாவது தாழ்த்தப்பட்டவர்களுக்குப் பதவி உயர்வு அளிக்கப்படவேண்டும். வேலை வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்படவேண்டும் என்று சொல்லி என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மேலும் 8 உறுப்பினர்கள் பேச இருக்கிறார்கள், மணி 12 ஆகப்போகிறது. ஆகவே இனி பேச இருக்கிற உறுப்பினர்கள் ஆறு, ஏழு, நிமிடங்களுக்குள் தங்கள் உரையை முடித்துக்கொள்ள வேண்டும்.

திரு. கே. கந்தசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இன்று பின்தங்கிய வகுப்பினர் நலத் துறை மானியக் கோரிக்கைகளின்மீது, ஃபார்வர்ட் ப்ளாக் கட்சியின் சார்பாக நானும் எனது கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

இன்று நம்முடைய அரசு டாக்டர் கலைஞர் அவர்களை முதலமைச்சராகக் கொண்டு இயங்கி வருகிறது. அவர் பின்தங்கிய ஏழைக் குடும்பத்தில் பிறந்த காரணத்தினாலோ, இயற்கையாக அவருக்கிருக்கிற நல்ல சுபாவத்தினாலோ இதுவரை சமுதாயத்தின் அடித்தளத்தில் கவனிப்பாரற்று பிறரால் பழிவாங்கப்பட்டுக் கிடந்த இந்த தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தினர்களுக்கு நல்ல பல சலுகைகளை வழங்குவதன் மூலம் உண்மையான சோஷலிச சமுதாயத்தை உருவாக்க அவர்கள் பாடுபட்டு வருகிறார்கள். பிற்படுத்தப்பட்டவர்களுக்காகவே தனித் துறை, தனி இயக்குநரைப் போட்டிருக்கிறார்கள். இப்படி ஏற்படுத்தியதை நான் மனமார வரவேற்றுப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பெயரளவில் இந்தக் காரியங்கள் நின்றுவிடாமல், செயலளவில், எதிர்பார்க்கும் பயன் கிட்டுகிற வகையில் இந்தத் துறை இயக்குநர் அவர்கள் செயல்படுவதையும், எங்களைப் போன்றவர்கள் அவரிடம் போய் சில பிரச்சினைகளைச் சொல்லும்போது, அவற்றை அனுதாபத்தோடு, இரக்கத்தோடு, மனிதாபிமான உணர்ச்சியோடு தீர்ப்பதற்கு ஆலோசனைகள் கூறுவதையும் நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

1974-75-ஆம் ஆண்டுக்கு பிற்பட்டோர் நலனுக்காக ஒதுக்கப்பட்டிருக்கிற தொகை 608 இலட்சமாகும். போன ஆண்டு 1973-74-க்கு ஒதுக்கப்பட்டது ரூ. 560 இலட்சமாகும். 1972-73-க்கு 486 இலட்சமாகும். 1972-73-க்கு ஒதுக்கியதைப் காட்டிலும் 1973-74-க்கு ஏறத்தாழ எழுபத்தி நான்கு இலட்சம் ரூபாய் அதிகமாக ஒதுக்கப்பட்டிருக்கிறது.



[திரு. கே. கந்தசாமி]

(நண்பகல் 12·00)

அதே நேரத்தில் 1974-75-க்கு ரூ. 608·81 இலட்சம் என்ற நிலை வருகிறபொழுது ஏறக்குறைய ரூ. 48 இலட்சம்தான் அதிகம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. சென்ற வருஷம் ரூ.75 இலட்சம் அதிகமாக ஒதுக்கியிருந்தும் இந்த வருஷம் ரூ. 48 இலட்சம் தான் அதிகமாக ஒதுக்கப்பட்டிருப்பதை நான் காண்கிறேன். இதைப்பற்றி அதிகாரிகளிடம் நான் கேட்டபொழுது, இது தற்காலிகமாக ஒதுக்கப்பட்டது, தேவை ஏற்படும்பொழுது சிபாரிசு செய்து வாங்கிக் கொள்ளலாம் என்ற கருத்தைத் தெரிவித்தார்கள். இருந்தாலும் அரசாங்கம் சில உண்மைகளைப் புரிந்துகொள்ள வேண்டும்.

சமுதாய முன்னேற்றம் ஏற்பட சாதி சமய ஏற்றத் தாழ்வுகள் மறைந்து விட வேண்டுமென்ற முறையில் நாம் திட்டமிட்டாலும், எதிர்காலத்தில் நம்மையறியாமல் ஏற்படும் சூழ்நிலைகளைத் தவிர்க்க அதிகமாக நிதி ஒதுக்க வேண்டும். இப்போது, பாப்புலேஷன் இன்கிரிஸ் என்று அந்த நிலையில் ஏற்பட்ட அபிவிருத்தி ஒரு புறம் இருக்க, புதிதாக இந்த வருஷம் பிற்பட்டோர் பட்டியலில் முஸ்லிம் சமுதாயப் பெருமக்கள் போன்ற பல இனத்தவர்களை, 6 இனத்தவர்கள் என்று கருதுகிறேன். அவர்களையும் சேர்த்து, ஏற்கெனவே கூடிக்கொண்டிருக்கிற எண்ணிக்கையைக் கூட்டி இருக்கிறார்கள். அப்படிக் கூடி இருக்கும் பொழுது in proportion to the increase and the new additions to the existing list, there should be proportionate increase in allotment of financial aid and also in reservation for appointment matters என்பதுதான் என்னுடைய அபிப்பிராயமாகும். இந்த நிலையை நாம் உயர்த்தினால் ஜனத்தொகை விகிதாச்சாரம் கூடக்கூட அவர்களுடைய தேவை கூடுகிறது. அவர்களுடைய வாழ்க்கைக்குரிய பண வசதிகள், வேலை வாய்ப்புத் திட்டங்கள், கல்வி வசதிகள் ஆகியவற்றை அந்த விகிதத்தில் நாம் உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்ற கருத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு சபாநாயகர் அவர்கள் மூலமாகத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த முறையில் இன்னும் கணிசமான தொகையை ஒதுக்கவேண்டும்.

ஏற்கெனவே, பிற்பட்டவர்களுக்கு 31 சதவிகிதம்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது உத்தியோக வாய்ப்புகளில். அந்த சதவிகிதம் போதாது என்று நான் பலமுறை இந்த மாமன்றத்தில் கூறி இருக்கிறேன். அமைச்சர் பெருமக்களிடமும், மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களிடமும் நான் அதைப்பற்றித் தெரிவித்திருக்கிறேன்.

சென்ற ஆண்டு ஏறக்குறைய 200 வகுப்புகள் இந்த லிஸ்டிலே இருப்பதாகச் சொன்னார்கள். இப்பொழுதும் 6 வகுப்பினரைக் கணிசமாகச் சேர்த்திருக்கிறார்கள். இதைப்பார்க்கும்போது எண்ணிக்கை கூடியிருக்கிறது. ஏறக்குறைய மெஜாரிட்டி கம்யூனிட்டிஸ் இந்த பாக்வார்ட் லிஸ்டிலே வந்திருப்பதாகத்தான் தெரிகிறது. இந்த அளவிலே ஒப்பன் காம்படீஷன் 51 சதவிகிதம் என்றும், பிற்பட்டோருக்கு 31 சதவிகிதம் என்றும் வைத்திருந்தால் போதாது என்பதை நான் நடைமுறையிலுள்ள நிலையைக்

[திரு. கே. கந்தசாமி]

கொண்டு கூறவிரும்புகிறேன். 31 சதவிகிதம் என்பதை 51 சத விகிதமாக உயர்த்துமாறு நமது மாண்புமிகு அமைச்சரவர்களை நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாக, விகிதாச்சாரத்தை மாத்திரம் ஒதுக்கினுல் போதாது. எப்படி சமுதாயத்தில் இருக்கிற ஏற்றத்தாழ்வுகளைக் குறைப்பதற்கு சம அந்தஸ்துகளை வழங்குவதற்குப் பல சட்ட திட்டங்களை அப்பொழுதைக்கப் பொழுது மாற்றி அமைக்கிறோமோ அதைப்போல, பிற்பட்டோர் சமுதாயத்தினர் 206 பிரிவினர் பட்டியலில் இருந்தாலும், அவர்களிலும் மெஜாரிட்டி கம்யூனிட்டியினர் பெரும்பான்மையானவர் பலர் இருக்கின்றார்கள். இலையில் மறைந்த காய்போல் தங்களுக்குப் பிரதிநிதிகள் இருந்து சொல்ல வாய்ப்பில்லாமலும், பிரதிநிதிகள் இருந்தும் சொல்ல வாய்ப்பில்லாமல் வாயிருந்தும் ஊமையர்களாய் சிலர் இருக்கின்றனர். அவர்கள் மெஜாரிட்டி கம்யூனிட்டியினராக இருக்கின்றனர். அவர்கள் படிப்பு வாசனையோ, பொருளாதார வசதியோ இல்லாத காரணத்தால்........ (மணியடிக்கப்பட்டது) சபாநாயகர் அவர்களே, அருள் கூர்ந்து எனக்கு இன்னும் கொஞ்சம் டைம் கொடுக்க வேண்டும். பாக்வார்ட் கிளாஸ் கமிட்டியிலே சொல்லியிருக்கிறேன். இன்றைக்கு இதைச் சொல்ல வேண்டுமென்றே ஊரிலிருந்து வந்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்னும் 8 பேர் பேச வேண்டியிருக்கிறது. மணி 12-05 ஆகிறது. இன்னும் 8 உறுப்பினர் பேசி அதற்குப் பிறகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்ல வேண்டி இருக்கிறது. இரண்டு நிமிடங்களில் முடித்து விடுங்கள்.

திரு. கே. கந்தசாமி: அந்த மெஜாரிட்டியினர் எப்படி இருக்கிறார்கள் என்ற அனுபவத்தினைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்று அரசு, தாழ்த்தப்பட்ட ஏழை மக்களுக்கு நல்லெண்ணத்தோடு காரியங்களைச் செய்து செயல்படுகிற காரணத்தால், இதையும் செயல்படுத்தும் என்ற முறையில் நான் சொல்ல ஆசைப்படுகிறேன். They are weak and unorganised; they are being successfully and indirectly exploited by the well-organised and dominant minority communities; there is indirect exploitation from the beginning till today. Though we have stopped exploitation from outside we have not stopped this indirect exploitation from within. Therefore, I request the Hon. Minister to consider this issue as a serious one and give protection to the major, weak and unorganised communities என்று நான் சொல்லிக் கொள்கிறேன். அவைகளுக்கு அடிக்கு வேட் ரெப்ரசன்டேஷன் இன்னும் கொடுக்கப்படவில்லை. ஆகவேதான் இதைக் கூறுகிறேன். இங்கு பேசிய மாண்புமிகு உறுப்பினர்களது கருத்துக்களை நான் கேட்டுக்கொண்டிருந்தேன். ஒவ்வொரு சமுதாயத்திற்கும் உரிய சலுகைகள், உத்தியோகச் சலுகைகள் வழங்கப்பட வேண்டும். வழங்கியதற்குப் பாராட்டு தெரிவிக்கிறோம் என்று உறுப்பினர்கள் எல்லாம் தெரிந்ததிலிருந்து சமுதாய ரீதியாகவும் கொடுக்க வேண்டுமென்று தெரிவித்



[திரு. கே. கந்தசாமி]

துக்கொள்கிறேன். குறிப்பாக, மெஜாரிட்டி கம்யூனிட்டியாக இருந்து, தங்களுக்குப் பிரதிநிதித்துவம் கிடைக்கவில்லையென்று கூறும் உணர்வு பெற்றிருக்கும் அவர்களுக்கு வாய்ப்பு அளிக்க வேண்டும்.

'in proportion to the population there should be reservation of posts, including Gazetted Posts for each community.' என்ற விவரத்தை இந்தச் சந்தர்ப்பத்திலே நான் நினைவூட்டுகிறேன்.

அது மாத்திரமல்ல, மத்திய அரசிடமிருந்து வந்த சலுகைகளை சென்ற ஆண்டு நிறுத்திவிட்டார்கள். இந்த டீநோட்டிஃபைட் டிரைப்ஸ், குற்றப் பரம்பரைச் சட்டத்தால் பாதிக்கப்பட்ட சமுதாயத்திற்கு ரௌலட் சட்டத்தைக் கொண்டு வந்த வெள்ளையர், அன்றைய வீரப் பரம்பரையை எதிர்க்கத் திராணியற்று, வீரப் பரம்பரையினரை ஆட்கொள்வதற்கு, குற்றப் பரம்பரை என்று சட்டம் போட்டு, சுமார் 30 ஆண்டு காலத்திற்கு அழுத்தி வைத்திருந்தார்கள். அத்தகைய எளிய சமுதாயம், கைகால் கட்டப்பட்டு, வாய்திறந்து பேச முடியாத மற்வர்கள் அடிமைகளாக, ஆக்கப்பட்டார்கள், வர்களுடைய முன்னேற்றத்தில் அக்கறை கொண்டு, அக்கட்டுப்பாடுகளை நீக்க வேண்டுமென்றுல், மற்ற சமுதாயத்தோடு, பிற்பட்டோர் என்று வைக்கப்பட்டுள்ளவர்களோடு இவர்களையும் சேர்த்து, அவர்களுக்கு அளிக்கிற சாதாரண சலுகைகளை அளித்தால், இவர்களால் முன்னேற்றம் காணமுடியாது.

எப்படி அரிசனங்களுக்கு அரிசன வாரியம் என்று இருக்கிறதோ, அதைப்போல அவர்களுக்கென்று ஒரு தனி வாரியம் அமைக்க வேண்டும். பல துறைகளுக்குப் பல வாரியங்கள் இருப்பதைப் போல், இந்தக் குற்றப்பரம்பரையினர் இனத்தைச் சேர்ந்த பிற்பட்டவர்களுக்கென்று தனி வாரியத்தை அமைத்து அவர்களுடைய வளத்தைப் பெருக்க, நலத்தைப் பாதுகாக்க அரசு முற்படவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.
(மணி அடிக்கப்பட்டு அடுத்த உறுப்பினர் அழைக்கப்பட்டார்.)

திரு. ப. முத்துசாமி: தலைவர் அவர்களே, இந்த பின்தங்கிய வகுப்பினர் மானியக் கோரிக்கையின்மீது நான் என்னுடைய கருத்துக்களை ஆதரித்துக் கூற விரும்புகிறேன்.

இங்கே, இதற்கு முன்னுலே ஆண்டுகொண்டிருந்தவர்கள் இந்த இலாகாவை இன்னொரு இலாகாவோடு இணைத்து. ஓரளவுக்குச் சமுதாயத்தினுடைய நன்மையை காத்து வந்தாலும் கூட, ஏற்கனவே பலரும் பேசியதைப் போல், நாம் அந்த இலாகாவை தனியாக்ப் பிரித்து, அதற்கென அதிகத் தொகையை ஒதுக்கி அதோடு மட்டுமல்லாமல், ஆண்டுக்காண்டு ஒவ்வோர் இனத்தை, ஒவ்வோர் ஜாதியைச் சேர்ந்தவர்கள் எந்த அளவுக்குச் சமுதாயத்தில் தாழ்ந்த நிலையிலிருக்கிறார்கள், எந்த அளவுக்குப் பொருளாதாரத்தில் தாழ்ந்த நிலையிலிருக்கிறார்கள், எந்த அளவுக்குக் கல்வித் துறையிலே முன்னேறவில்லையென்ற கணக்கெல்லாம் எடுத்து, அந்த அடிப்படையில் அச்சமுதாயத்தினரை லிஸ்டிலே சேர்த்து அவர்களுக்கு வேண்டிய நன்மைகளைச் செய்திருக்கிறோம்.

[திரு. ப. முத்துசாமி]

ஆரம்பத்திலே இருந்ததைக் காட்டிலும் இந்த ஆண்டு ரூ. 6 கோடி இதற்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. எனக்கு முன்னால் பேசிய மாண்பு மிகு உறுப்பினர் கந்தசாமி அவர்கள் குறிப்பிட்டதைப் போல், இந்த ஆண்டு அதிகமாக 6 சமுதாயத்தைச் சேர்ந்தவர்களை இந்த லிஸ்டிலே சேர்த்திருக்கிறார்கள். ஒதுக்கப்பட்டிருக்கிற இந்தத் தொகையில் பாதிக்கு மேலாக, கிட்டத்தட்ட ரூ $3\frac{1}{2}$ கோடி கல்விக்காக மட்டும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. கல்விக்காக செலவழிக்கப்படுகிற நேரத்தில், அதிகமான தொகை ஹாஸ்டலிலே படிக்கின்ற மாணவர்களுக்கு வசதி செய்கின்ற வகையிலே தான் அளிக்கப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு மாவட்டத்திலும் தாலூகாவாரியாக, ஏரியாவாரியாக எடுத்து, எந்தெந்த ஏரியாவில் பின்தங்கிய சமுதாயம் இருக்கிறதோ, அந்த ஏரியாக்களிலிருந்து உயர்நிலைப் பள்ளிகள் அதிகமான தூரத்திலே இருந்தால், அம்மாணவர்களுக்கு வசதி செய்து தரவேண்டுமென்பதுதான் மிக முக்கியமான குறிக்கோளாக இருக்கிறது. அப்படிப் பார்க்கின்ற நேரத்தில், என்னுடைய இராமநாதபுரம் தொகுதியில் வேடசந்தூர் பகுதியில் 10, 12 பள்ளிகள் இருக்கின்றன. அங்கே இரண்டு மூன்று ஆண்டுகளாகக் கேட்டும் ஒரு பள்ளிக்குக் கூட ஹாஸ்டல் வசதி தரப்படவில்லையென்று குறிப்பிட்டு, அதை விரைவிலே செய்து தர வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, இங்கே எனக்கு முன்னாலே பேசிய உறுப்பினர்களில் பலர் குறிப்பிட்டார்கள். ஒரு ஆண்டு இரண்டாயிரம் ரூபாய் வரையில் வருமானம் உள்ளவர்களுக்குத்தான் சலுகை, அதற்கு மேலே உள்ளவர்களுக்கு சலுகையில்லை என்ற நிலைமையை மாற்றவேண்டுமென்று சொன்னார்கள். இரண்டாயிரம் ரூபாய் என்ற வரம்பு வைத்திருப்பது சாதாரணமாக இன்றைக்கு விலைவாசி ஏறியிருக்கின்ற நிலைமையில் அவர்களுக்கு பாதகத்தை ஏற்படுத்தும், ஆகவே அந்த வரம்பை உயர்த்தவேண்டும். பலரும் பேசினார்கள். பிற்பட்டோர் பட்டியலில் இருக்கின்ற பலரும் இன்றைக்குப் பிற்பட்ட நிலைமையிலே இருக்கிறார்கள், அதிலே குறிப்பாக சலவைத் தொழிலாளர்களைப் போன்றவர்கள் சவரத் தொழிலாளர்களைப் போன்றவர்கள் எல்லாம் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே அப்படிப் பட்டவர்களையெல்லாம் மோஸ்ட் பேக்வர்ட் என்ற தனி லிஸ்டிலே சேர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவர்களை பிற்பட்டோர் பட்டியலிலே சேர்த்து இருப்பதால் அவர்கள் எதிர்பார்க்கிற நன்மைகளைப் பெற முடியவில்லை. ஆகவே மோஸ்ட் பேக்வர்ட் லிஸ்டிலே அவர்களைச் சேர்த்து அவர்களுக்கு அதிகமான சலுகைகளை ஏற்படுத்தித் தரவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்த மாணவர்கள் ஹாஸ்டலில் சேரவேண்டுமென்றால் அவர்கள் தாசில்தாரிடத்திலே கையெழுத்து வாங்க வேண்டியிருக்கிறது. அதற்காக அவர்கள் பல கஷ்டங்களை அனுபவிக்கிறார்கள். உடனடியாகக் கிடைக்கவில்லை, அது மட்டுமல்ல, பத்திரத்திலே ஒரு ஜாதி போடப்பட்டிருக்கிறது. இப்பொழுது காலத்தின் முன்னேற்றத்தினால் அந்த ஜாதி இல்லா ல் இருக்கலாம். ஆனால் பத்திரத்திலே



[திரு. ப. முத்துசாமி]

இல்லை என்பதால் அவர்கள் சலுகைகளைக் கொடுக்க மறுக்கிறார்கள். சர்ட்டிபிகேட் கொடுக்க மறுக்கிறார்கள். அப்படியில்லாமல், கர்ணம், வி. எம். இவர்கள் கொடுத்த சர்ட்டிபிகேட்டின் அடிப்படையிலே தாசில்தார் கையெழுத்துப் போடலாம் என்ற முறையைக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய அரசாங்கம் இன்றைக்கு ஜாதி பாகுபாடு இல்லாமல் கண்ணொளி வழங்குகிற திட்டமாக இருந்தாலும், உடல் ஊனமுற்றோருக்கு உதவியாக இருந்தாலும், முதியோருக்கு உதவித் தொகையளிப்பதாக இருந்தாலும் எல்லாருக்கும் ஜாதி பாகுபாடின்றி உதவிசெய்துக்கொண்டிருக்கிறது.

இந்த நேரத்திலே நான் இன்னொன்றையும் பணிவன்போடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். பிற்பட்டோர் பட்டியலிலே இருக்கிறவர்கள் இன்றைக்கு எந்தவிதமான சொத்தோ நிலமோ இல்லாமல் வசதியில்லாமல் கூலி வேலை செய்கிறவர்களாக அன்றாடம் கூலிக்குக்கூட கஷ்டப்படுகிறவர்களாக இருக்கிறார்கள். இந்த அரசாங்கம் பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக இருக்கிறது என்று சொல்கிற நேரத்திலே அப்படிப்பட்ட ஏழை எளியவர்களுக்கு வாழ்வு தருவதற்கும் வழிவகை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, பள்ளிக் கூடங்களிலோ அல்லது கல்லூரிகளிலோ படித்துவிட்டு வந்த பின்தங்கிய வகுப்பினரைச் சேர்ந்த மாணவர்கள் வேலை கேட்கின்ற நேரத்திலே—அவர்களுக்கு கம்யூனல் ரொட்டேஷன்படி வேலை கொடுக்கப்பட்டாலும் கூட—அவர்களுக்குப் போதுமான வேலைவாய்ப்பு கிடைக்கவில்லை. வேலையில்லாத் திண்டாட்டம் என்பது உலகப் பிரச்சினையாக இருந்தாலும் கூட அவர்கள் வங்கியின் மூலமாக இண்டஸ்ட்ரியல் கார்ப்பரேஷன் மூலமாக கடன் உதவி அவர்களுக்குக் கொடுத்து அவர்களை முன்னேற்ற வேண்டும்.

கிராமப்புறங்களிலே ஏழைகளாக இருக்கின்றவர்கள் தனியாக தொழில் செய்ய முடியாது. ஆகவே ஒரு ஏரியாவிற்கு, ஒரு மாவட்டத்திற்கு என்று எடுத்துக்கொண்டால் அங்கே இருக்கின்ற அதிகாரிகளை வைத்து அந்த ஏரியாவில் எந்த எந்தத் தொழில்களை கற்று வந்தவர்கள் படித்தவர்கள் எந்த ஏரியாவில் எவ்வளவு பேர்கள் இருக்கிறார்கள் என்று கணக்கெடுத்துப் பார்த்து அவர்களுக்கு வங்கியின் மூலமாக கடன் உதவி பெற்றுத் தரக்கூடிய முறையைக் கொண்டுவந்து அவர்கள் ஒரு தனி சொசைட்டியாக ஏற்படுத்தி தொழில்களை நடத்தக்கூடிய முறையிலே ஏற்பாடு செய்தால் பலருக்கும் நிச்சயமாக வேலை கிடைக்கும். அந்த வகையிலே வேலையில்லாத் திண்டாட்டத்தையும் குறைக்க முடியும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த ஆண்டு முஸ்லீம் சமுதாயத்தை சேர்ந்தவர்கள் பலரையும் பட்டியலிலே சேர்த்திருக்கிறார்கள். பல ஆண்டுகளாக நான் சொல்லிக் கொண்டு வருகின்ற கொங்கு வேளாளர் என்ற இனத்தை இன்னும்

[திரு. ப. முத்துசாமி]

அந்தப் பட்டியலிலே சேர்க்கவில்லை, ஆகவே, அதையும் உடனடியாக சேர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

*திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் தலைவர் அவர்களே, பின்தங்கிய நலத்துறை மானியத்தின் மீது எங்கள் கட்சியின் சார்பாக கொடுக்கப்பட்டிருக்கின்ற வெட்டுத் தீர்மானங்களை ஆதரித்து நான் சில வார்த்தைகளைக் கூற விரும்புகிறேன். எனக்கு எவ்வளவு நேரம் கொடுக்கப்போகிறீர்கள்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஏழு நிமிடங்கள்.

திரு. சோ. அழகர்சாமி: பின்தங்கிய வகுப்பினர் படிப்பிற்கு உதவித் தொகை வழங்கப்படுகின்ற நேரத்திலே வருட வருமானம் 2,000 ரூபாய்க்குள் இருந்தால்தான் கொடுக்கப்படும் என்ற ஒரு உச்சவரம்பு வைக்கப்பட்டிருக்கிறது. சாதாரணமாக ஹையர் கிரேட் ஆசிரியர்களுக்குக்கூட அந்த வருமானம் வருகிறது இப்பொழுது ஆகவே அந்த ஆசிரியர்களின் பிள்ளைகளுக்குக்கூட இந்த சலுகை கிடைக்கவில்லை. ஒரு சாதாரணமில் தொழிலாளியாக இருக்கிறவருக்குக்கூட அந்த வருமானம் வந்துவிடுவதால் அவருடைய பிள்ளைகளை அவர் படிக்கவைக்க முடியவில்லை. ஆகவே இரண்டாயிரம் என்று சொல்லக்கூடிய தொகை ரொம்ப நாளைக்கு முன்னாலே சரியாக இருந்திருக்கலாம். இன்றைக்குள்ள விலைவாசியிலே இரண்டாயிரம் என்பது உயர்த்தப்பட வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதே போன்று கட்டணச் சலுகைக்கு 1,500 ரூபாய் என்று உள்ளதையும் 5 ஆயிரமாக உயர்த்துவதுதான் நியாயமாகும். வேளாண்மை சம்மந்தப்பட்ட வரையிலும் குற்றப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டவர்களுக்கு வேளாண்மையை மேம்படுத்துவதற்கு வசதியாக கிணறுகள் வெட்டுவதற்கு 2 ஆயிரம் ரூபாய்தான் கொடுக்கப்படுகிறது. அந்தத் தொகையை வைத்துக்கொண்டு, அரை கிணறு கால் கிணறு கூட வெட்ட முடியாது. ஆகவே அது போதுமானதல்ல. ஆகவே அதையும் உயர்த்திக் கொடுக்க வேண்டும். இந்தத் தொகை ஆண்டுக்கு 30 பேர்களுக்குத்தான் கொடுக்கப்படுகிறது. இதற்காக ஒதுக்கப்பட்ட தொகை குறைவாக இருக்கிறது. ஆகவே இன்னும் அதிகம் பேர்களுக்கு அதிகமான தொகையைக் கொடுக்க வேண்டும்.

கிராமப்புறங்களிலே உள்ள வேளாண்மை செய்யக்கூடிய மக்கள் எல்லாம் வங்கியிலே கடன் வாங்க முடியாது. ஆகவே மானியத் தொகை அதிகமாக இருந்தால்தான் கிணறு வெட்ட முடியும். இரண்டாயிரத்தை அதிகப்படுத்த வேண்டும், முப்பது பேர்கள் என்ற எண்ணிக்கை குறைவு. அதிகப்படுத்த வேண்டும். 1973-74-ம் ஆண்டில் எஸ்.எஸ்.எல்.சி. படிப்பதற்கு முன்னாலே இருந்த மாணவர்கள் தொகை 74,549 ஆகும். ஆனால் மெட்ரிகுலேசனுக்குப் பின்னால் அந்தத் தொகையைப் பார்த்தால் ஐந்தாயிரமாகக் குறைந்துவிடுகிறது. கிட்டத்தட்ட 88 சதவீதம் எஸ். எஸ். எல்.சி வரைப் படித்து விட்டு அதற்குப் பிறகு படிக்க முடியாத நிலைமையிலே நிற்கிறார்கள். இதற்கு என்ன காரணம்?



[திரு. சோ. அழகர்சாமி]

உணவுக்காக கொடுக்கப்படுகின்ற தொகை கட்டுப்படியாகவில்லை என்பது தான். தனியார் கல்லூரிகளிலே படிக்கக்கூடிய பின்தங்கிய மாணவர்களுக்குக் கொடுக்கப்படுகிற ஸ்காலர்ஷிப் 3, 4 மாதங்களுக்குத்தான் வருகிறது. அதற்கு மேலே போதுமானதாக இல்லை. 55 ரூபாய் என்ற அளவிலே தான் கொடுக்கிறார்கள், ஆனால் 150 ரூபாய் வரையில் மாதம் சாப்பாட்டிற்காக தனியார் கல்லூரி விடுதிகளிலே ஆகிவிடுகிறது. ஆகவே தனியார் கல்லூரிகளிலே பின்தங்கிய மாணவர்களுக்காக பின்தங்கிய நலத்துறையே தனியாக விடுதி ஏற்படுத்தி அந்த மாணவர்களுக்கு குறைந்த கட்டணத்திலே உணவு போட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

இன்றைக்கு பெரும்பகுதி பின்தங்கிய மாணவர்கள் உயர்நிலைப்பள்ளி படிப்பிற்குப் பிறகு கல்லூரிகளுக்குப் போக முடியவில்லை. தனக்குக் கொடுக்கப்படுகிற ஸ்காலர்ஷிப் தொகையை வைத்து படிக்க முடியாத நிலைமை தான் ஏற்பட்டு இருக்கிறது. 74 ஆயிரமாக படித்த மாணவர்கள் எஸ். எஸ். எல். சிக்கு பிறகு 5 ஆயிரமாக குறைந்து விட்டார்கள். இதைக் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும். வருமானம் குறைந்தவர்களுக்கு லோன் ஸ்காலர்ஷிப் என்று இருந்தது இப்பொழுது கிடையாது. குமாஸ்த்தாவாகவோ அரசாங்க அலுவலராகவோ இருக்கிறவர்கள் வருமான கணக்கை மறைத்துவிட முடியாது அவர்களுடைய பிள்ளைகளுக்கு ஸ்காலர்ஷிப் மறுக்கப்படுகிறது. அப்படிப்பட்டவர்களுக்கு கடனாவது கொடுக்கும் முறையில் செய்யவேண்டும். மத்திய சர்க்காரிலிருந்து லோன் ஸ்காலர்ஷிப் கொடுக்கும் முறை இருந்தது. அதை இப்பொழுது எந்த அளவில் கொடுக்கிறார்கள் என்பது தெரியவில்லை. மாநில சர்க்கார், ஐயாயிரம் ரூபாய்க்குமேல் வருமானம் உள்ளவர்களுக்கு கடனாவது கொடுத்தால்தான் பின்தங்கியவர்களின் குழந்தைகளைப் படிக்கவைக்க முடியும். பின்தங்கியவர்களில் சர்க்கார் உத்தியோகத்தில் இருந்து 3,000 ரூபாய், 4,000 ரூபாய் பெறுகின்ற பெற்றோர்களின் குழந்தைகளுக்கு ஸ்காலர்ஷிப் இல்லை. எனவே அவர்களுக்கு லோன் ஸ்காலர்ஷிப் என்ற முறையில் ஒரு தொகையை ஒதுக்கினால்தான் அவர்கள் கடன் வாங்கியாவது குழந்தைகளைப் படிக்கவைக்க ஏற்பாடு செய்யமுடியும். அப்படியில்லாததால் பின்தங்கிய மக்களில் குறைந்த வருமானம் உள்ளவர்கள் கூட தங்கள் குழந்தைகளை படிக்கவைக்க முடியாமல் போய் விடுகிறது.

அடுத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட பாங்குகளிலேயிருந்து கடன் பெறுவதற்கு ஏற்பாடு செய்வதாகக் கூறினார்கள். எல்லா மாவட்டங்களிலேயும் தாலூக்காக்களிலேயும் தாசில்தார்களை ஏற்படுத்தி எல்லோரும் மனு அனுப்புங்கள் என்று பத்திரிகைகளின் மூலமாகவெல்லாம் விளம்பரப்படுத்தினார்கள். அதனால் பல லட்சம் பேர்கள் கடனுக்காக மனுப் போட்டார்கள். அதுமட்டுமல்லாமல் அதற்காக அவர்கள் கிராம அதிகாரிகள், ரெவின்யூ இன்ஸ்பெக்டர்கள், தாசில்தார்கள் போன்றவர்களையெல்லாம் சந்திக்க வேண்டியிருந்தது. அதனால் அவர்கள் கையிலிருந்த பணமும் செலவழிந்து நான்கு வட்டி, ஐந்து வட்டி என்று கடன் வாங்கி 100

[திரு. சோ. அழகர்சாமி]

ரூபாய், 200 ரூபாய் கடன் வாங்கிச் செலவு செய்திருக்கிறார்கள் கடன் கிடைக்குமென்று. ஆனால் நாட்டுடைமையாக்கப்பட்ட பேங்குகளிலிருந்து ஐயாயிரம் பேர்களுக்குத்தான் கடன் வழங்கப்பட்டிருக்கிறது ஆனால் அரசாங்கத்திலே இருந்து விளம்பரம் செய்யப்பட்டது. நாட்டுடமையாக்கப்பட்ட பேங்குகளிலிருந்து நாங்கள் கடன் வாங்கித் தருகிறோம் என்று. ஆனால் எல்லோருக்கும் கடன் கிடைக்கவில்லை. அந்த பேங்குகளில் கேட்டால் நாங்கள் கொடுக்கத்தயார். ஆனால் அதை வசூலிக்க அரசாங்கம் "கியாரண்டி" எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்கிறார்கள். ஆனால் இவர்கள் கியாரண்டி எடுக்க மாட்டோம், மனுக்களைத்தான் அனுப்புவோம் என்று சொல்கிறார்கள். அதனால் அவர்கள் தரமுடியாது என்று சொல்லி விட்டார்கள். இதற்காக அலைந்து கையிலிருந்த பணத்தையும் தொலைத்து விட்டு 5 வட்டி, 10 வட்டிக்குக் கடனையும் வாங்கி ஏகப்பட்ட நஷ்டத்திற்கு ஆளாகியிருக்கிறார்கள்.

நாட்டுடைமையாக்கப்பட்ட பேங்குகளிலிருந்து கடன் கொடுத்தால் அரசாங்கம் கியாரண்டி எடுக்க வேண்டும். கியாரண்டி இல்லையென்றால் அவர்கள் எப்படித் தருவார்கள். எனவே, அரசாங்கம் கியாரண்டி எடுத்து வசூலாகாமல் இருந்தால்—இப்பொழுதே எத்தனையோ வசூலாகாத வற்றைத் தள்ளுபடி செய்கிறோம், அதைப்போல்—தள்ளுபடி செய்வதற்கு யோசனை செய்யலாம். இதற்காக அந்த மக்கள் ஏகப்பட்ட செலவுகள் செய்திருக்கிறார்கள். எனவே, இதற்கு கியாரண்டி எடுத்து அவர்களுக்குக் கடன் கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பத்திரப் பதிவுத் துறையைப் பற்றி இரண்டே இரண்டு விஷயங்கள் கூற விரும்புகிறேன். முன்பிருந்த ரிஜிஸ்ரேஷன் முறையை மாற்றி இப்பொழுது ஃபைல் சிஸ்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். தனித் தனியாக எழுதி சேர்த்து வைப்பது என்ற முறையைக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆனால் முன்பு பெரிய புத்தகத்திலே பதிவு செய்து கொண்டு பத்திரத்தை நமக்குத் தருவார்கள். ஆனால் இப்பொழுது இந்த மாற்றியிருக்கின்ற முறை பல கோளாறுகளுக்கு இடமளிப்பதால் அந்த ஃபைல் முறையை மாற்றிபழைய முறையையே கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பத்திரம் எழுதுபவர்களுக்கு லைசன்ஸ் வேண்டும் என்று சொல்லுகிறார்கள். பலபேர் அந்தத் தொழிலைச் செய்கிறார்கள். நன்கு எழுதுபவர் என்று தெரிந்தால் அவரிடத்தில் எழுதி வாங்கிக்கொள் கிறார்கள். எனவே, லைசன்ஸ் முறை வேண்டாமென்று தெரிவித்து முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, அமைச்சர்கள் தரப்பிலே அவைத் தலைவர் என்ற முறையிலே தங்களிடத்திலேயிருந்து சில பாதுகாப்புகளை நான் கோருகின்றேன். ஒவ்வொரு நாளும் பத்திரிகைகளில், அவையிலே உறுப்பினர்கள் எழுப்புகின்ற பிரச்னைகளின் அடிப்படையிலே அமைச்சர்கள் தங்களுடைய கடமையை இந்த அவையிலே சரியாக ஆற்றவில்லையோ என்ற அளவில் செய்திகள் வருகின்றன.



[டாக்டர் மு. கருணாநிதி]

குறிப்பாகச் சில நேரங்களில் எல்லா உறுப்பினர்களும் அவையிலே எல்லா நேரத்திலும் இருப்பது என்பது எப்படி இயலாத காரியமோ அதைப் போலவே அமைச்சர்களும் அவையிலே எல்லா நேரத்திலேயும் இருப்பது என்பது இயலாத காரியமாகும். இங்கே அதுபற்றி சில விவாதங்கள் நடைபெற்றபொழுதுகூட நானும், கல்வியமைச்சரவர்களும் மேலே அறையிலே உட்கார்ந்து கல்வித் துறை செயலாளர்களுடனும், மற்ற அதிகாரிகளுடனும் கல்வித் துறையிலிருந்து எடுக்கப்பட வேண்டிய முடிவுகளைப் பற்றித்தான் விவாதித்துக்கொண்டு இருந்தோம், இந்த அவை நிகழ்ச்சிகளை அங்கிருந்து கேட்டுக்கொண்டுதான் இருந்தோம்.

ஏதோ அவையிலே அமைச்சர்களே இல்லை என்பதைப்போல தங்களுக்குப் பதிலாக மாற்றுத் தலைவராக உட்கார்ந்து கொண்டிருந்த ஒருவரும் சொன்னார். அதுவும் எங்கள் காதில் விழுந்தது. உள்ளபடியே இங்கே அந்தத் துறைக்கான பிற்பட்டோர் நலத் துறைக்கான அமைச்சரவர்கள் உட்கார்ந்து எல்லா விவாதங்களையும் கேட்டுக்கொண்டுதான் இருக்கிறார்கள், பதில் அளிக்க இருக்கிறார்கள். பதில் அளிக்கும் நேரத்தில், நேற்றுகூட எல்லா அமைச்சர்களும் நண்பர் இராமச்சந்திரன் அவர்கள் பதில் சொல்லும் நேரத்தில் இங்கே வீற்றிருந்தோம். அதைப்போலவே ஒவ்வொரு நேரத்திலும் கூடுமான வரையில் அமைச்சர்கள் இருக்கிறோம். அதே போல் கேள்வி நேரத்திலேகூட கால் மணி நேரம், அரை மணி நேரம் என்று ஒத்திவைத்தால்கூட வந்தபிறகு பதில் சொல்லவும் கடமைப் பட்டிருக்கிறோம்.

சில நேரங்களில் வரமுடியாத அளவிற்குத் திடீரென்று உடல்நலக் குறைவு ஏற்பட்டால் தாங்கள் ஆணையிட்டதைப்போல் விடுமுறை வேண்டுமென்று தங்களுக்குக் கடிதம் எழுதுகிறோம் இது முன்பு இல்லாத முறை. அமைச்சர்கள் லீவ் வேண்டுமென்று சபாநாயகருக்குக் கடிதம் எழுதுகின்ற முறையை நாங்கள் பின்பற்றுகிறோம்.

ஆகவே அமைச்சர்கள், பேரவையில் இருப்பதில்லை என்று பத்திரிகைகளிலே செய்தி வருகின்ற அளவிற்குச் சில பிரச்னைகள் இங்கே எழுப்பப் பட்டதற்காக நான் உள்ளபடியே வருத்தப்படுகிறேன். எல்லோரும் கவனித்திருக்கலாம், பேரவையில் நிகழ்ச்சி $1\frac{1}{4}$ மணி, $1\frac{1}{2}$ மணி, ஒன்றே முக்கால் மணிக்கு முடிந்தால்கூட இறுதிவரை உட்கார்ந்துவிட்டுத்தான் போகிறோம் என்பதை மாண்புமிகு அங்கத்தினர்களும் அறிவார்கள். அந்த வகையிலே அனுதாபத்தை எங்களிடத்திலே காட்ட வேண்டும் என்று உறுப்பினர்களையும் கேட்டுக்கொள்கிறேன். நான் இதைச் சொல்வதற்குக் காரணம், அமைச்சர்கள் தங்கள் பொறுப்புகளைச் சரியாக நிறைவேற்றவில்லையோ என்று கருதிவிடக்கூடாது என்பதற்காகத்தான் இந்த விளக்கத்தைக் கூறுகிறேன். எங்களுக்கும் பாதுகாப்பு வேண்டுமென்று தங்களிடத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: சார், இந்தப் பிரச்னை இங்கே எழுப்பப்பட்டதற்குக் காரணமே, சில குறிப்பிட்ட இலாக்காக்கள் இருக்கின்றன, உதாரணமாக, பின்தங்கிய வகுப்பினர் நலத்துறை, அரிசன

[திரு. கே. டி. கே. தங்கமணி]

நலத்துறை போன்ற மானியங்கள் வரும் நேரத்தில் உறுப்பினர்கள் அதிக அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற முறையிலேதான் இந்தப் பிரச்னை எழுப்பப்பட்டது. அப்படி எழுப்பப்படும் நேரத்தில் ஓரிரு அமைச்சர்கள்தான் இங்கே இருந்தார்கள். சீனியர் மினிஸ்டர், ஜூனியர் மினிஸ்டர் என்ற முறை இருக்கிறதோ என்னவோ எனக்குத் தெரியாது.

ஆனால், இருக்கின்ற பொதுவான கருத்தோட்டம் என்னவென்றால், சில சீனியர் மினிஸ்டர்களும் இருந்தால் நல்லதாக இருக்கும் என்பது தானே தவிர மற்றப்படி குறை சொல்ல வேண்டுமென்பதற்காக அல்ல. ஏனென்றால் பின்தங்கிய வகுப்பினர் நலத்துறை அமைச்சரவர்கள் இங்கே இருந்தார்கள், அறநிலையத்துறை அமைச்சரவர்கள்கூட இருந்தார்கள்.இந்த இருவரும் இல்லை என்று சொல்ல முடியாது.

ஆனால் இந்த விஷயம் எழும்பியது, பின்தங்கிய வகுப்பினர் நலம், அரிசன நலம் போன்ற இந்த இலாக்காக்களைப் பற்றி விவாதிக்கும் பொழுது இன்னும் கொஞ்சம் அமைச்சர்களும், அதைப்போலவே எதிர்க் கட்சியிலே இருப்பவர்களும் அதிகமாக இருக்க வேண்டுமென்பதற் காகத்தான்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, நமது கே. டி. கே. தங்கமணி அவர்களுடைய கருத்தை அப்படியே நான் ஆதரிக் கிறேன். ஆனால் அவர்களுக்கே தெரியும், இப்பொழுது மின்சார இலாக்கா தொழிலாளர்கள் சிலர் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு, பேசின் பிரிட்ஜ் பகுதியிலே வேலை நிறுத்தம் ஏற்பட்டிருக்கிறது. அதுகுறித்து மின்சார இலாக்கா அமைச்சரிடத்தில் பேச வேண்டும். அதிகாரிகளை இங்கே வரவழைத்துப் பேச முடியாது. ஆகவே, தனியாக அறைக்கு அழைத்து, மின்சாரத் துறை அமைச்சரையும் அழைத்துப் பேச்சு வார்த்தை நடத்தி னோம். இரண்டு நாட்களுக்குப் பிறகு கல்வி இலாகா மானியத்தைப் பற்றி விவாதிக்க இருக்கிறோம். எனவே, ஆசிரியர்கள், கல்வித் துறையிலே உள்ள பல பிரச்னைகள் ஆகியவைகளைப் பற்றி நிதித் துறை செய லாளருடனும், கல்வித் துறை செயலாளருடனும் பேசினோமே தவிர, அவையைப் புறக்கணித்துவிட்டு வேறு காரியங்களில் ஈடுபட்டிருக்கவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர்களுடைய அறைகளிலே ஒலிபெருக்கி வைத்திருக்கிறோம். இங்கே என்ன பேசு கிறோம் என்று அந்தப் பேச்சுக்களை அப்படியே அமைச்சர்கள் கேட்கக் கூடிய வாய்ப்பை அளித்திருப்பதற்குக் காரணமே அமைச்சர்கள் முழு நேரமும் இங்கே இருக்க முடியாத நிலைமை உண்டாகலாம், அறை களிலே சில காரியங்களை ஆற்ற வேண்டிவரும் என்பதற்காகத்தான் ஒலிபெருக்கிகளை அமைச்சர்களின் அறைகளிலே வைத்திருக்கிறோம். எனவே, அமைச்சர்கள் அறையிலே இருப்பதும் இந்த அவையிலே இருப் பதைப் போன்றதுதான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

* திரு ஆ. கு. சுப்பையா: மதிப்பிற்குரிய தலைவரவர்களே, பின் தங்கிய வகுப்பினர் சம்பந்தப்பட்ட இந்த மானியக் கோரிக்கையின்மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு ஆசைப்படுகிறேன்.



[திரு. ஆ. கு. சுப்பையா]

பின்தங்கிய வகுப்பினர் என்று சொல்லக்கூடியவர்கள் இந்த மாநிலத் தில் பெரும்பகுதியினர் இருக்கிறார்கள். அவர்களைப் பொருளாதாரத் துறையிலேயும், கல்வித் துறையிலேயும், கலாச்சாரத் துறையிலேயும் முன் னேற வேண்டுமென்ற அக்கறையோடு தமிழக அரசு புதிதாக ஒரு இலாகாவையே ஏற்படுத்தியிருக்கிறது. உண்மையிலேயே அந்த இலாகாவை ஏற்படுத்திய தமிழக அரசை பின் தங்கிய வகுப்பைச் சேர்ந்த மக்கள் பாராட்டாமல் இருக்க முடியாது. அந்த முறையிலே பார்த்தால் 67–68-ஆம் ஆண்டில் அவர்களுடைய முன்னேற்றத்திற்காக ஒதுக்கிய தொகை யான 161.40 லட்சத்திலிருந்து 74–75-ல் கிட்டத்தட்ட 608½ இலட்சமாக உயர்ந்திருப்பது மிகவும் பாராட்டுதற்குரிய ஒன்றாகும்.

அதே சமயத்தில் இன்றைக்கிருக்கின்ற சில கஷ்டங்களையும் நாம் பார்க்க வேண்டும். மாணவர்களுக்குப் படிப்பு உதவித் தொகை வழங்கும் பொழுது அவர்களுடைய குடும்பத்தாருடைய ஆண்டு வருவாயை அடிப் படையாகக் கொண்டு வழங்கப்படுகிறது. 2,000 ரூபாய் வரையில் வரு மானம் உள்ளவர்களின் குடும்பத்தாரின் பிள்ளைகளுக்கு வழங்கப்படும் என்று கூறப்படுகிறது. இப்படி 2,000 ரூபாய் வருமானம் என்று வைத்தால் சாதாரண ஒரு ஏழை, ஒன்றுமேயில்லாதவர்கள் ஆற்றுக் காவல் பார்ப்பவர்கூட 150 ரூபாய், 160 ரூபாய் மாதச் சம்பளம் வாங்கினால் அவருடைய பிள்ளை பள்ளியில் படிப்பதற்கு உதவித் தொகை கிடைப்ப தில்லை. எனவே, ஏழைகளாக இருப்பவர்களுடைய வருவாயை வைத்து இதிலே பார்ப்பது நியாயமாக இருக்க முடியாது. ஆகவே, ஆண்டு வருவாய் 2,000 ரூபாய் என்று இருப்பதை 5,000 ரூபாய் என்று உயர்த் தினால்தான் ஏழைக் குடும்பத்திலுள்ள மாணவர்கள் இந்த உதவிப் பணத்தைப் பெற்று முன்னேற முடியும் என்பதை நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 12-30)

மற்றொன்றும் வைத்திருக்கிறோம். மதிப்பெண்கள் 40 சதவிகிதம் வாங்கினால்தான் ஸ்காலர்ஷிப் உண்டு என்று சொல்லப்படுகிறது. ஒரு மார்க் குறைந்தால்கூட இல்லையென்று சொல்லிவிடுகிறார்கள். ஒரு மார்க் குறைவாக, 39 மார்க் வாங்கியிருந்தால் கூட ஸ்காலர்ஷிப்கொடுக்க லாம் என்று செய்தால் பல மாணவர்களுக்கு உதவி கிடைக்க வசதி ஏற்படும்.

நண்பகல் உணவு 50,600 மாணவ, மாணவியருக்கு வழங்கப்படுவ தாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஒரு மாணவனுக்கு 15 காசு வீதம் கொடுக்கப்படுகிறது. இது 20 ஆண்டுகளுக்கு முன்னால் நிர்ணயிக்கப் பட்ட தொகையாகும். 15 காசு என்பதைக் குறைந்த பட்சம் 30 காசாக உயர்த்திக் கொடுத்தால்தான் உண்மையிலேயே மதிய உணவு கொடுக்க முடியும். ஹாஸ்டல்களில் உள்ள மாணவர்களுக்கு உணவு மானியமாக ஒரு மாணவனுக்கு 20 ரூபாயாக இருந்தது 25 ரூபாயாக உயர்த்தப் பட்டிருக்கிறது. அதுவும் குறைந்ததுதான். அந்தத் தொகையை 30 ஆக உயர்த்த வேண்டும்.

[திரு. ஆ. கு. சுப்பையா]

சலவைத் தொழில், முடி திருத்தும் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களுக்குச் சென்னை நகரத்தில்தான் பலவகையான உதவிகள், கருவிகள் வழங்கப்படுகின்றன. மாநிலத்திலுள்ள மற்றப் பகுதிகளிலும் இவர்கள் ஏராளமாக இருக்கிறார்கள். அவர்களுக்கு இந்த உதவி கிடைக்காமல் இருக்கிறது. அவர்களுக்கும் இந்த உதவியைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாநிலத்திலுள்ள அலுவலகம் அரிசனங்களுக்குத் தனியாகவும், பின் தங்கியவர்களுக்குத் தனியாகவும் இரண்டாகச் செயல்பட்டு வருகிறது. ஆனால் மாவட்டங்களிலே ஒரே அதிகாரியின்கீழ்தான் செயல்பட்டு வருகிறது. இதனால் எல்லா வேலைகளும் தாமதப்படுகின்றன. அரிசனங்கள் முன்னேற்றமும் தடைப்படுகிறது; பின்தங்கியவர்கள் முன்னேற்றமும் தடைப்படுகிறது. மாவட்ட அளவிலும் இந்த அலுவலகத்தை இரண்டாகப் பிரிப்பதன் மூலந்தான் அரசாங்கம் இந்தத் துறையில் செய்ய நினைக்கிற காரியங்களை வேகமாகச் செய்ய முடியும்.

வேலை வாய்ப்பு அளிக்கும்போது ஒரு வேலைக்குப் பணக்கார வீட்டுப் பையன் ஒருவனும், ஏழை பின்தங்கிய வீட்டுப் பையனும் வந்தால் அந்தச் சந்தர்ப்பத்தில் ஏழை பின்தங்கிய பையனைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்று அதிகாரிகளுக்கு உத்தரவு அனுப்ப வேண்டும்.

பி.யு.சி. வரை இலவசமாகக் கல்வி அளிக்கப்படுகிறது. வருமான வரி கட்டக்கூடியவர்களுடைய குழந்தைகளுக்குக் கட்டணங்களை வசூலிக்கலாம். அம்மாதிரி வசூலிப்பதன் மூலம் குறிப்பிட்ட தொகை அரசுக்குக் கிடைக்கும். அந்தத் தொகையை வைத்துக்கொண்டு ஏழை மாணவர்களுக்கு உதவி செய்ய முடியும். இதுபற்றி அரசு ஆலோசிக்க வேண்டும்.

ஆவணப் பதிவுத் துறை திறமையாக வேலை செய்து வருகிறது. அந்தத் துறைக்கும் என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக் கொண்டு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

*திரு. இ. எஸ். தியாகராசன்: பேரவைத் தலைவர் அவர்களே, பிற்பட்டோர் நல மானியத்தை ஆதரித்து என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைச் சொல்ல விரும்புகிறேன்.

இந்த மானியத்திற்காக இன்றைய தினம் 6 கோடி 18 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகுதான் பிற்பட்டோர் நலத்திற்காகத் தனி அமைச்சரையே போட்டு ஒரு கோடி 6 லட்சம் ரூபாயாக இருந்தது இன்றைய தினம் 6 கோடி 18 லட்சம் ரூபாயாக உயர்ந்திருக்கிறது. அதற்காக நம்முடைய அரசைப் பாராட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைய தினம் தமிழகத்தில் 100–க்கு 60 பங்கு உள்ள பிற்பட்டோர் நலத்திற்காக திரு. சட்டநாதன் அவர்கள் தலைமையில் ஒரு குழுவை அமைத்து அந்தக் குழுவின் சிபாரிசுகளில் பலவற்றை நம்முடைய அரசினர் அமலுக்குக் கொண்டு வருகிறார்கள்.



[திரு. இ. எஸ். தியாகராசன்]

அரசுப் பணிகளுக்குப் பிற்பட்ட மக்களில் இருந்து முன்பு 25 சத விகிதம் பேர் எடுக்கப்பட வேண்டுமென்றிருந்ததை இன்று 31 சத விகிதமாக உயர்த்தியிருப்பதற்காக உண்மையிலேயே நம்முடைய அரசைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். அப்படி உயர்த்தப்பட்டபடி அரசுப் பணிகளுக்கு ஆட்கள் எடுக்கப்படுகிறார்களா நடைமுறையில் என்பதை அரசு பார்த்துக் கொள்ளவேண்டும் என்பதை நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழகத்திலே இன்றையதினம் பிற்பட்டோர் நல மாணவர்களுக்காக நூற்றுக் கணக்கான மாணவ விடுதிகளைத் துவக்கி அதன் மூலம் ஏழை எளிய மாணவர்கள்; தங்கள் நிதிநிலையை அனுசரித்து படிக்க முடியாதவர்கள் எல்லாம் இவ்வாறு துவக்கப்பட்டிருக்கும் ஹாஸ்டல்களில் தங்கிப் படிப்பதற்கு நல்ல வாய்ப்பை அரசு செய்திருப்பதைப் பாராட்டுகிறேன். என்னுடைய தொகுதியில் ஆ.கே. பேட்டை, நெடியம் போன்ற கிராமங்களில் ஹாஸ்டல்கள் வேண்டுமென்று வேண்டுகோள் விட்டப்பட்டிருக்கிறது. இதை அரசு கவனத்தில் கொண்டு அந்த இரண்டு இடங்களிலும் ஹாஸ்டல்களைத் துவங்க முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கிராமங்களில் அரிசன மக்களுக்கு வீட்டு மனை அளிக்கப்படுவது போன்று பிற்பட்ட நல மக்களுக்கும் நாடு முழுவதும் வீட்டு மனைகள் இலவசமாக அளிக்கவேண்டும். அதற்குத் தேவையான நிதியை மத்திய அரசிடத்திலிருந்து பெற்றுவது அந்த ஏழை பிற்பட்ட மக்களுக்கு வீட்டு மனை வழங்க முன் வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்போது சலுகைகளைப் பெற ஆண்டு வருமானம் இரண்டாயிரம் என்று நிர்ணயித்திருக்கிறார்கள். இதனால் மிகவும் ஏழையாக இருக்கக்கூடியவர்கள் கூட சலுகைகளைப் பெறமுடியாத சூழ்நிலை இருக்கிறது. இரண்டாயிரம் என்பதை குறைந்தது நாலாயிரம் அல்லது ஐயாயிரம் வரை என்று நிர்ணயித்தால் ஏழை எளிய பிற்பட்ட நல மக்கள் பயன்பெற வாய்ப்பு ஏற்படும். அதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றையதினம் உள்ள பல மாணவர் விடுதிகள் அரசு கட்டடத்தில் இல்லை. வாடகைக் கட்டடத்தில் இருக்கின்றன. வாடகைக் கட்டடங்கள் நல்ல கட்டடங்களாக இருப்பதில்லை. சுகாதார நிலையில் படிக்க வாய்ப்பில்லை. அதைத் தவிர்க்க அரசு முன்வரவேண்டும். அரசே இதற்கான கட்டடங்களைக் கட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும்.

கடந்த ஆண்டு இதே பட்ஜட்டைப் பரிசீலித்துக் கொண்டிருந்தபோது நம்முடைய அரசின் சார்பில் 200 ஹாஸ்டல்கள் அரசு வங்கிகளில் இருந்து பணத்தைக் கடனாக பெற்று கட்டடங்கள் கட்ட உத்தேசிக்கப் பட்டிருக்கிறது என்ற திட்டத்தை அன்றைய அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் இதுவரை அதுபோன்ற நடவடிக்கை எடுத்துக் கொண்டதாகத் தெரியவில்லை. அது எந்த நிலையில் இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிக்க வேண்டும். அந்த மாதிரி அரசு கட்டடங்களைக் கட்ட முன் வரவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. இ. எஸ். தியாகராசன்]

அடுத்தபடியாக, நெசவாளர் சமுதாயத்தில் உள்ள மக்கள், செங்குந்தர்கள் இன்றைய தினம் மிகவும் அல்லல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு, அரசுப் பணிகளுக்கு ஆள் எடுக்கும்போது அவர்களுக்கு தனி சலுகை அளிக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வெல்பேர் ஆபீசர்கள் மாவட்டத்திற்கு ஒருவர் என்றுதான் இருக்கிறார். அவர்கள் ஹரிஜன நலத் துறையையும் பிற்பட்டோர் நலத் துறையையும் சேர்ந்து பார்க்கவேண்டியிருக்கிறது. ஆகவே அவர்களது பணி மிகவும் கஷ்டமாக இருக்கிறது. அதன் காரணமாக எந்தக் காரியங்களை அரசு நல்ல முறையில் திறம்படச் செய்யவேண்டுமென்று கருதுகிறதோ அந்தக் காரியங்கள் செயல்படுத்தப்பட முடியாமல் நிற்கின்றன. எனவே மாவட்டத்திற்கு ஒரு வெல்பேர் ஆபீஸர் என்பதற்குப் பதிலாக ஒரு டிவிஷனுக்கு ஒரு வெல்பேர் ஆபீஸர் என்று நியமித்து பணியாற்றுவது நல்லதாக இருக்கும்.

அடுத்தபடியாக, சப் ரெஜிஸ்ட்ரார் ஆபீஸ்களுக்கு அரசுக் கட்டடங்கள் கட்ட வேண்டும். அதில் என் திருத்தணித் தொகுதியில் இரண்டு இடங்களில் கட்டடம் இல்லாமல் அவர்கள் கஷ்டப்படுகிறார்கள். அதற்கு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். நல்லசாமி: தலைவர் அவர்களே, பிற்பட்டோர் நலனுக்காக ஒதுக்கப்பட்டிருக்கும் 608 லட்சம் ரூபாய்க்கான மானியக் கோரிக்கையை வரவேற்று ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

பிற்பட்டோருக்கு என சில சலுகைகள் அரசால் வழங்கப்படுகின்றன. பிற்பட்டோர் நலனுக்காக சலுகைகள் அளிக்கப்படுவதில், பிற்பட்டோர் வகுப்பினரில் வசதி படைத்தவர்களும் இருக்கிறார்கள் என்பது நடைமுறை உண்மை. அப்படிப் பார்க்கும்போது தமிழ்நாட்டில் கூட்டமாக வாழக்கூடிய உழவர்களை, ஏரை நம்பி வாழும் ஒரு பெரிய சமுதாயத்தினர் பிற்பட்டோர் வகுப்பில் எடுத்துக்கொள்ளப்படவில்லை. அந்தக் கூட்டம்தான் கௌண்டர்கள் கூட்டம். அதுதான் உழவர் படையாக இருக்கக்கூடிய பெருங்கூட்டம். ஒண்டிக் கோவணத்தைக் கட்டிக்கொண்டு ஏரை ஏற்றி பத்து மணிக்கு கஞ்சிக் கலயம் வந்தவுடன் கையில் சோறை ஏந்திக் குடிக்கக் கூடிய இந்த பாட்டாளிக் கூட்டம் இந்த பிற்பட்டோர் லிஸ்டில் இல்லை. ஆகவே தங்கள் மூலம் நான் வேண்டிக் கொள்வது எல்லாம் அவர்களை பிற்பட்டோர் லிஸ்டில் சேர்க்க வேண்டும்.

இந்த நாட்டுக்குத் தேவையான உணவை உற்பத்தி செய்யும் அந்தப் பாட்டாளி மக்கள் கூட்டத்தை பாராமல் இருப்பது சரியல்ல. அந்தச் சமுதாயத்தில் இருந்து படித்து பட்டம் பெற்றவர்கள் பிற்பட்டோருக்குக் கொடுக்கப்படும் சலுகைகள் தங்களுக்கும் கிடைக்க வேண்டும் என்று மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களை வேதனையோடு பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.



[திரு. எஸ். நல்லசாமி]

பாலங்கட்டி கௌண்டர்கள், நாட்டுக் கௌண்டர்கள், கொங்கு நாட்டு வேளாளர்கள் என்று 97 சதவிகிதம் கொண்ட உழவர் கூட்டம் இருக்கிறது. சட்டசபை முடிந்த பிறகு நான் என் தோட்டத்தில் போய் ஏர் பிடித்து உழுது கொண்டிருக்கிறேன். அப்படி வாழ்க்கை நடத்தக் கூடிய இந்த உழவர் கூட்டத்தை சற்று கவனிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இன்று ஒரு மெமோராண்டம் தயாரித்திருக்கிறோம். நாங்கள் எல்லோரும் மாண்புமிகு கலைஞர் அவர்களின் தாள் பணிந்து கேட்டுக்கொள்கிறோம், எங்கள் குறைகளை சற்று கேளுங்கள் என்று.

மேற்குப் பகுதியில், கோவை, சேலம், திருச்சி, மதுரை மாவட்டங்களில் கௌண்டர் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் எல்லாம் இந்த அரசாங்கச் சலுகைகள் கிடைக்காமல் இருக்கிறார்கள், பல ஆண்டுகளாக. நம் அரசு வந்த பிறகு என்றல்ல, பிற்பட்டோர் வகுப்பினர்களுக்கு சலுகைகள் வந்த காலத்திலிருந்து இந்தக் கூட்டத்திற்கு அந்தச் சலுகைகள் கிடைக்கவில்லை என்று நாங்கள் வேதனைப்படுகிறோம். ஆகவே, அந்த வேதனையை டாக்டர் கலைஞர் அவர்கள் தீர்த்து வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அல்லது வேறு ஒரு முறையைக் கொண்டுவர வேண்டும்.

பொருளாதார அடிப்படையில், மம்மட்டியை கையில் எடுத்துக் கொண்டு, தலையில் மூட்டை எடுத்துக்கொண்டு, கஞ்சிக் கலயத்தை வைத்துக்கொண்டு, ஜாக்கட் கூட இல்லாது பெண்கள் போகக்கூடிய அளவிற்கு செல்லக் கூடிய இந்தப் பாட்டாளி மக்களை தனியாகப் பிரித்து அவர்கள் எல்லோரையும் பிற்படுத்தப்பட்டவர்களாக எடுத்துக் கொள்வது சாலச் சிறந்தது. எந்த சமுதாயத்தை எடுத்துக்கொண்டாலும் சரி, கௌண்டர் சமுதாயமாக இருந்தாலும் சரி அல்லது தாழ்த்தப்பட்ட சமுதாயமாக இருந்தாலும் சரி அல்லது பிற்படுத்தப்பட்ட சமுதாயமாக இருந்தாலும் சரி அன்றாடம் உழைக்கக்கூடிய பாட்டாளி மக்கள் கொண்ட கூட்டத்திற்குத்தான் முதல் இடம் என்று கொண்டு வந்தால் வருக வருக என்று வரவேற்க பாட்டாளி மக்கள் ஆவலோடு எதிர்பார்க்கிறார்கள்.

இப்போது இரண்டாயிரம் ரூபாய்க்கு கீழ் வருமானம் உள்ளவர்களுக்கு சலுகை என்றிருக்கிறது. தினசரி, அன்றாடம் வேலை செய்து வாழக் கூடிய விவசாயத் தொழிலாளர்கள் 43 லட்சம் பேர்கள் இருக்கிறார்கள். அவர்கள் மாதச் சம்பளம் வாங்கக் கூடியவர்கள் அல்ல. கடைநிலை ஊழியர்களைப் போல் அவர்களுக்கு பிக்ஸட் வருமானம் கிடையாது. நெல்லப்பனுக்கு ஒரு நாள் கூலி கிடைக்கும், கந்தப்பனுக்கு ஒரு நாள் கூலி கிடைக்கும், செல்லப்பனுக்கு ஒரு நாள் கூலி கிடைக்கும் என்று இப்படி வாரத்திற்கு நான்கு நாட்கள்தான் வேலை கிடைக்கக்கூடிய அந்த பாட்டாளி மக்கள் கூட்டத்தை பின்தங்கியோர் வகுப்பினர் லிஸ்டில் சேர்த்துக்கொண்டால் நல்லது. அன்றாடம் உழைத்து தழும்பேறிய கரங்கள் கொண்ட அந்தப் பாட்டாளிக் கூட்டம் மேற்குப் பகுதியில் அந்த நான்கு மாவட்டங்களில் உள்ளனர். அந்தச் சமுதாயத்தை பின்தங்கிய வகுப்பினர் லிஸ்டில் சேர்க்க வேண்டும் என்று தங்கள்

[திரு. எஸ். நல்லசாமி]

மூலம் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களை வேண்டி வேண்டி அவர்கள் தாள்பணிந்து கேட்டுக்கொள்கிறேன். நாங்கள் அவர்களை எங்கள் காலம் பூராவும் மறக்காமல் நினைப்போம் என்று கூறி என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

*திருமதி த. ந. அனந்தநாயகி : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த பின்தங்கிய வகுப்பினர் நலன் மானியக் கோரிக்கையின் மீது பேசும் வாய்ப்பு கிடைத்தமைக்கு நான் பெரு மகிழ்ச்சியடைகிறேன்.

இந்த அரசைப் பொறுத்தவரையில் ஒரு உண்மையை ஒத்துக்கொள்கிறோம். நம் முதல் அமைச்சர் அவர்களுக்கு பிற்பட்ட இனத்தை முன்னேற்ற வேண்டும் என்ற ஒரு துடிப்பு இருக்கிறது என்பதை ஒத்துக் கொள்கிறேன், எதிர்கட்சியில் நான் இருந்தாலும். அந்தத் துடிப்பு நல்ல முறையில் இன்னும் துரித வேலையில் இறங்கவேண்டும். என்பதற்காகச் சொல்லுகிறேன்.

பல இக்கட்டான நேரங்களில் முதல் அமைச்சர் அவர்கள் சொல்வது 'நான் ஒரு பிற்பட்ட இனத்தைச் சார்ந்தவன், மேற்குடி மக்கள் எங்களை ஆதரிப்பது கிடையாது' என்று சொல்லும்போது அவர்களுக்கு பிற்பட்ட வகுப்பினரின் மீதுள்ள அக்கறையைப் புரிந்து கொள்ள முடிகிறது.

இன்று எவ்வளவோ கார்ப்பரேஷன்ஸ் வைத்திருக்கிறோம். அதே போல் இந்தப் பிற்பட்ட வகுப்பினரின் நலன்களுக்காக, அவர்களை முன்னேற்றுவிப்பதற்காக, ஒரு பாக்வேர்ட் க்ளாஸஸ் கார்ப்பரேஷன் என்ற ஒரு அமைப்பை ஏற்படுத்தி தேசியவங்கிகளிடம் இருந்து பணம் பெற்று, இன்ஷூரன்ஸ் கார்ப்பரேஷனிடமிருந்து பணம் பெற்று, நீங்கள் கொடுக்கிற பணத்தையும் கொண்டு, ஒரு துடிப்புள்ள பிற்பட்ட இனத்தைச் சார்ந்த ஒருவரை அதற்குத் தலைவராகப் போட்டு பிற்படுத்தப்பட்ட இன மக்களை முன்னேற்றுவிக்க வழிவகை காணவேண்டும். [திரு வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்) : உங்களையே போட்டுவிடலாம்]!

திருமதி த. ந. அனந்தநாயகி : தாங்க் யு. போடக்கூடியவர்கள் சொல்லவில்லை, போடமுடியாதவர் சொல்கிறார்.

என்னென்ன சலுகைகள் கொடுக்க வேண்டும் என்று யோசிக்கக்கூட காலம் இல்லாத அளவிற்கு ஒன்றுக்கொன்று பிரச்னைகள் பின்னிக் கொண்டு இருக்கின்றன. இப்போது டிஸ்ட்ரிக்ட் வெல்பேர் ஆபீசர்ஸ் பார் ஹரிஜன்ஸ் அன்ட் பாக்வேர்ட் கிளாஸஸ் என்றிருக்கிறது. அதை இரண்டாகப் பிரிக்க வேண்டும். ஹரிஜன்ஸ்க்கு என்று ஒரு தனி நல அதிகாரியும், பாக்வேர்ட் கிளாஸஸ்க்கு என்று ஒரு தனி நல அதிகாரியும் போட வேண்டும். இப்போது நாம் 169 லட்சம் ரூபாய் ஸ்காலர்ஷிப்ஸ்க்காக கொடுத்துக்கொண்டு வருகிறோம். 1969-70-ல் பார்த்தால் பிற்பட்ட இனத்தவருக்கு என்று ஒதுக்கப்பட்ட ஸ்காலர்ஷிப் தொகையில் 144 லட்சம் ரூபாய்தான் செலவிடப்பட்டு 25 லட்சம் ரூபாய் ஸரண்டர் செய்யப்பட்டிருக்கிறது. என் ? வருட வருமானம் 2,000 ரூபாய்,



[திருமதி த. ந. அனந்தநாயகி]

40 சத விகிதம் மார்க்ஸ் என்று வைத்திருக்கிறோம். நாம் ஒதுக்கிய பணத்தைக் கூட பயன்படுத்த முடியாத அளவிற்கு இருக்கிறார்கள். அப்படியிருக்கக் கொடுத்தோம் என்று சொல்வதில் என்ன பயன் இருக்கிறது. ஆகவே இந்த 2,000 ரூபாய் என்பதை ரூ. 6,000 என்ற அளவிற்கு உயர்த்தவேண்டும் என்று வெட்டுத் தீர்மானம் கூட கொடுத்திருக்கிறோம். உங்கள் கணக்குப்படி பார்த்தால் மாதம் ஒன்றுக்கு ரூ. 180க்கு மேல் உள்ளவர்களுக்கு வாய்ப்பு கிடையாது. நான் 1957-ல் இருந்து சொல்லிக்கொண்டு வருகிறேன் இந்த இரண்டாயிரம் ரூபாய் என்ற லிமிட்டை உயர்த்த வேண்டுமென்று. 74 வந்தும்கூட ரூ. 2,000 என்றுதான் இருக்கிறது ஆண்டு வருமானம். ரூ. 1,500-ல் இருந்து ரூ. 2,000 ஆக்கினீர்கள். Margin is very little. சாதாரண ஆள் கூட ரூ. 300 சம்பளம் வாங்கமுடிகிறது. ஒரு ஆசிரியர் சம்பளம் கூட இதற்கு அதிகமாக இருக்கிறது. ஆகவே தயவுசெய்து இந்த ஆண்டு வருமானம் ரூ. 2,000 என்பதை ரூ. 6,000 என்று உயர்த்துவதற்கு வழிவகை செய்தால் அதிகப்படியான மாணவர்களுக்கு வசதியாக இருக்கும்.

ஒரு மாணவனை படிக்க வைத்துவிட்டால் அந்தக் குடும்பமே முன்னேறிவிடும். எனவே, தயவுசெய்து அரசு இதை யோசித்துப் பார்க்க வேண்டும்.

பிற்பட்டோருக்கு கிணறு வெட்டுவதற்காக ரூ. 2,000 கடன் கொடுக்கிறார்கள். இந்த ரூ. 2,000த்தை மொத்தமாகக் கொடுத்தாலும் பரவாயில்லை. அதைத் தவணை முறையில் கொடுப்பதால், அந்தத் தவணை பணமே கிணறு வெட்டுவதற்கு முன்பு செலவழிந்து விடுகிறது. அவர்கள் கடன்காரர்களாக ஆகி கிணறும் வெட்டாமல் தெருவில் நிற்கும் நிலை ஏற்படுகிறது. ஆகவே, அரசே கிணறு வெட்டிக்கொடுத்து விட்டு, அவர்களிடமிருந்து தவணை முறையில் அந்தக் கடன் தொகையை வசூலித்துக் கொள்ளலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன். இந்தக் காலத்தில் இருக்கும் விலைவாசியில் ரூ. 2,000-க்கு கிணறு வெட்ட முடியாது. ஆகவே, அரசே பிற்பட்டோர் நலத்துறை மூலமாக கிணறு வெட்டிக் கொடுக்க முன் வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பட்ட மக்களுக்கு மனைப் பட்டா வழங்குவதற்காக மத்திய அரசு உதவி தருவதாகச் சொல்லியிருக்கிறது. எப்போது பார்த்தாலும் மத்திய அரசு உதவி செய்ய வில்லை, என்று சொல்லிக்கொண்டிருக்கிற நீங்கள், மனைப் பட்டாக்கள் வழங்குவதற்காக ஆகும் முழுச் செலவிற்கும் மானியம் அளிப்பதாக மத்திய அரசு சொல்லியிருப்பதை என் நன்கு பயன்படுத்திக்கொள்ளவில்லை.

அந்த மக்களுக்கு நிலம் கொடுப்பதற்காக புறம்போக்கு நிலங்கள் அல்லது ஆக்கிரமிக்கப்பட்ட நிலங்கள் இவற்றைக் கைப்படுத்தி கிராமத்தில் இருக்கும் மக்களுக்கு என் நீங்கள் மனைப் பட்டா வழங்க

[திருமதி த. ந. அனந்தநாயகி]

முன்வரவில்லை. அதிலே அக்கறை காட்டாமல் இருப்பதற்குக் காரணம் என்ன ? எந்தெந்த மாவட்டத்திற்கு எவ்வளவு பணம் தேவை, எவ்வளவு மக்கள் இருக்கிறார்கள், எவ்வளவு நிலம் தேவை என்பதைக் கணக்கில் எடுத்து, மனைப் பட்டா வழங்க என் அரசு முற்படவில்லை? மத்திய அரசும் முழுப் பணம் தரத் தயாராக இருக்கிறது. இதற்குக் கூட ஒரு பெரிய அரசியல் பிரச்னை உருவாக்குவதற்கு வேண்டிய நிலைமைக்குக் கொண்டுவிடப் போகிறீர்களா ? செய்ய வேண்டிய காரியங்களைச் செய்தால் மட்டும் போதாது; செய்யும் பல காரியங்கள் அவர்களுக்குப் போய்ச் சேரவேண்டிய முறையில் இருக்கவேண்டுமென்றும் கூறிக்கொள்கிறேன்.

பிற்பட்ட மக்களுக்கு வீடு கட்டிக்கொள்வதற்காக கடன் வசதி தருவதால் பிரயோசனம் இல்லை. அவர்கள் மாவட்டங்களில் வீடுகள் கட்டிக்கொடுக்கவும் அரசு முன்வரவேண்டும். அவர்கள் நல்ல ஒரு சுற்றுப்புறச் சூழ்நிலையில் (என்விரான்மெண்ட்) வாழ்வதற்கு வழிவகை செய்ய வேண்டும். அப்படிச் செய்தால்தான் அவர்கள் நல்ல முன்னேற்றம் அடைய முடியும். இந்த வீடு கட்டிக்கொள்வதற்காகக் கொடுக்கப்படும் உதவித் தொகை மிகவும் குறைந்த அளவில் இருக்கிறது. இந்த பேக்வார்ட் கிளாஸ் பீபிள்ஸுக்கு வீடு கட்டிக்கொடுப்பதற்காக ஒரு தனி இலாகா ஏற்படுத்த வேண்டும். இன்று ஹவுசிங் போர்டு, சிலம் கிளியரன்ஸ் போர்டு கட்டுகிற வீடுகளில் ஒரு பர்சன்டேஜ் பிற்பட்ட மக்களுக்காக ஒதுக்கியிருக்கலாம். அதற்கு வழிவகை செய்ய இந்த அரசாங்கம் முன் வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு லோ இன்கம் குரூப் மாணவர்களுக்குக் கடன் கொடுக்கிறோம். அதிலே 200 லோன் அப்பிளிகேஷன்களுக்கு பணம் கிராண்ட் செய்யலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது—ஆனால் 35 பேருக்குத்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதற்குக் காரணம் என்ன ? அதிகாரிகள் தடங்கல் செய்தார்களா ? அல்லது காலதாமதம் செய்தார்களா ? ஒழுங்கான முறையில் அப்பிளிகேஷன் பிராசஸ் செய்யப்படவில்லையா ? அல்லது அப்பிளிகேஷன் வரவில்லையா என்பதையும் சிந்தித்துப் பார்க்க வேண்டும். பணத்தை ஒதுக்கிவிட்டால் மட்டும் போதாது; அந்தப் பணம் செலவழிக்கப்பட்டிருக்கிறதா என்பதையும் அரசு அவ்வப்போது கண்காணித்துக்கொண்டு வரவேண்டும்.

இன்றைக்கு பிற்பட்ட மாணவர்களுக்கு என்று தனியாக பள்ளிகள் நடத்தப்படுகின்றன. கல்வி இலாகாவில் அரிசனங்களுக்கு என்று தனியாகப் பள்ளிகள் திறந்து இருக்கிறார்கள். கார்ப்பரேஷன் பள்ளிகள் நிறைய இருக்கின்றன. நகராட்சிகளும் பள்ளிகளை நடத்துகின்றன. இப்படி பல வகைகளில் பள்ளிகளை நடத்திக் கொண்டிருக்காமல் கல்வி இலாகாவே ஒட்டு மொத்தமாக எல்லாக் கல்வி நிலையங்களையும் வைத்துக்கொண்டு நடத்த வேண்டும். It should be under the charge of Director of Elementary Education, Director of Secondary Education and Director of Collegiate Education. அப்போது தான்



[திருமதி த. ந. அனந்தநாயகி]

கல்வியின் தரம் ஒரே முறையில் எல்லா இடங்களிலும் இருக்கும். இல்லையென்றால், அரிசன் வெல்பேர் ஸ்கூல் என்றால் அக்கறை இருக்கும், பேக்வார்ட் கிளாஸ் ஸ்கூல் என்றால் அக்கறை இருக்காது. அதோடு இப்படி 8 அதிகாரிகள் கையில் இருந்தால் அது, Too many cooks spoil the broth. பல சமையல்காரர்கள் சேர்ந்து சூப் கெட்டது என்ற முறையில்தான் இருக்கும். ஆகவே, தயவு செய்து இந்த நிலையை மாற்ற கல்வி இலாகா துரிதமான நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், எல்லாப் பிள்ளைகளையும் ஒன்றாக இணைத்துப் படிக்கவைத்தால் அவர்கள் நல்ல முறையில் முன்னேறுவதற்கும் வசதியாக இருக்கும். Children belonging to the Harijan, Forward and Backward communities must be put in the same school. அப்போது நல்ல பழக்க வழக்கங்கள் வருவதற்கு முடியும். இதை நீங்கள் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, டோபிகானா, சலவைத் துறை சலவைத் தொழிலாளர்களுக்குக் கட்டித் தரவேண்டும். இப்போது பஞ்சாயத்துக்கள், கார்ப்பரேஷன்கள், நகராட்சிகள் ஆகியவற்றிற்கு அரசாங்கம் பாதி பணமாகவும், பாதி கடனாகவும் கொடுத்து உதவி செய்து வருகிறது. எந்தப் பஞ்சாயத்து ஒழுங்காக டோபிகானா கட்டியிருக்கிறது?

உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமானால், சைதாப்பேட்டை மர்மலாங் பிரிட்ஜுக்குக் கீழே, 1962-லேயிருந்து சொல்லிப்பார்க்கிறேன், ஒரு டோபி கானா கட்டித் தரவேண்டுமென்று. ஏதோ அதில் ஒரு முழு அக்கறை இல்லாதது போல் இருக்கிறது. இன்னும் அது கட்டித் தரப்படவில்லை. ஆகவே, தயவுசெய்து நீங்கள் பணத்தை கார்ப்பரேஷனுக்கு, முனிசிபாலிட்டிக்குக் கொடுக்க வேண்டாம். நீங்களே, அரசாங்கமே என் அதை பிற்பட்டோர் நலத் துறை மூலம் கட்டித் தரக்கூடாது என்று கேட்க ஆசைப்படுகிறேன். ஏனென்றால், பாதிப் பணம் மானியம், பாதிப் பணம் கடன் என்று முதலில் கொடுத்தாலும் அது பிறகு முழுப் பணமும் மானியமாக ஆக்க வேண்டிய நிலை ஏற்பட்டு வருகிறது. ஆகவே, மொத்தமாக நீங்களே மானியம் போட்டு, நீங்களே டிபார்ட்மெண்ட் மூலம் கட்டிக்கொடுங்கள். இந்த சலவைத் தொழிலாளர்களுக்கு வேண்டிய சோடா ஆஷ் கிடைக்கவில்லை. கள்ளச் சந்தையில் விற்றுவிடுகிறார்கள். கோட்டா ஒருவர் கையில் இருக்கிறது. ஆனால், அவருக்கு சோடா ஆஷ் கிடைப்பது இல்லை. ஆகவே, சலவைத் தொழிலாளர்களுக்குத் தேவையான இந்தப் பொருளை நேரடியாகவே அவர்களுக்கு வழங்கச் செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திருமதி த. ந. அனந்தநாயகி]

இப்போது போர்டிங் கிரான்ட்ஸ் ரூ. 25 தான் கொடுக்கப்படுகிறது. அது போதாது. அதுவும் தனியார் நடத்தும் ஹாஸ்டலில் ரூ. 25 தான் கொடுக்கிறோம் என்று சொன்னால், அவர்கள் சேவா மனப்பான்மையோடு தாங்கள் மிச்சப் பணத்தை போட்டு நடத்திக்கொள்ளலாம் என்ற எண்ணத்தில் இல்லை. அவர்களில் பலர் அதை ஒரு கமர்சியல் கன்சர்ன் என்ற முறையில் நடத்தி வருகிறார்கள். இந்த ரூபாய் 25—லேயே ஏதாவது மிச்சம் பிடிக்கலாமா என்று பார்க்கிறார்கள். ஆகவே, முடிந்தவரை அரசாங்கமே இந்த ஹாஸ்டல்களை நடத்த வேண்டும். அப்படியில்லையென்றால் தனியார் இடத்தில் ஹாஸ்டல் நடத்துவதற்குப் பணம் கொடுக்க வேண்டும். அவைகள் சரியாக நடத்தப்படுகின்றனவா என்று பார்ப்பதற்கு பேக்வார்ட் கிளாஸ் அட்வைசரி கமிட்டி இருக்கிறது. அது ஏதோ இரண்டு முறை வருடத்திற்குக் கூடிக் கலைகிறது என்று இல்லாமல்—ஒவ்வொரு மாவட்டத்திற்கும் சென்று அந்த ஹாஸ்டல்கள் ஒழுங்காக நடத்தப்படுகின்றனவா, அங்கே தரும் உணவின் தரம் நல்ல முறையில் இருக்கிறதா என்று கண்காணிக்க வேண்டும். அப்படி செய்தால் அது பின்தங்கிய மக்களுக்குச் செய்த நல்ல உதவியாக இருக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

காலேஜில் படிக்கும் மாணவர்களுக்கு ரூபாய் 60, 70 என்று உதவித் தொகை கொடுக்கப்படுகிறது. பல மாணவர்கள் விடுதியில் தங்கிப் படிக்க முடிவதில்லை. இதனால் பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அவர்கள் செலவை சரிகட்ட முடியவில்லை. ஆகவே, அரசாங்கமே அவர்களுக்கு ஆங்காங்கு விடுதிகள் கட்டிக்கொடுக்க வேண்டும். அப்படி விடுதி கட்ட வசதியில்லையென்றால், அந்த மாணவர்களுக்குச் செலவைச் சரிக்கட்டும் விதத்தில் பணம் கொடுக்க முன்வரவேண்டும்.

சில கல்லூரிகளில் பெண்களுக்கு விடுதி இல்லை. குறிப்பாக, சட்டக் கல்லூரியில் இருக்கும் மாணவிகளுக்கு விடுதி இல்லை. மாநிலக் கல்லூரி நடத்தும் விடுதியில்தான் தங்க வேண்டும். அல்லது சேவாசதன், ஒர்க்கிங் உமன் ஹாஸ்டல் போன்றவற்றில்தான் அவர்கள் ஒட்டிக் கொண்டு படிக்க வேண்டியிருக்கிறது. அவர்களெல்லாம் இந்தச் சலுகை பெற முடியவில்லை. ஆகவே, ரெகக்னைசிடு ஹாஸ்டல் என்ற இடங்களில் படித்துக் கொண்டிருந்தால் அவர்களுக்கு இந்த உதவிப் பணம் கொடுக்க முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பர்மா அகதிகளில் 100-க்கு 90 பேர் பிற்பட்ட இனத்தைச் சேர்ந்தவர்கள். அவர்கள் பிரச்சனையில் நாம் எந்த அளவுக்கு அக்கறை காட்டியிருக்கிறோம்? வங்க தேசத்து மக்களுக்கு கொடுக்கப்பட்ட நிதியில் 20-ல் ஒரு பங்குகூட அவர்களுக்கு கொடுக்கப்படவில்லை. நீங்கள் வாதாடினால் நாங்கள் சகல ஆதரவும் தருவதற்குத் தயாராக இருக்கிறோம். நல்ல காரியங்களை நாம் அழுத்தம் திருத்தமாகச் சொல்லி உதவிகளைப் பெற வேண்டும். இந்த அரசாங்கம் பர்மா அகதிகளுக்காக பல காரியங்களைச் செய்ய வேண்டும். அவர்கள் மிகவும் பின்தங்கிய நிலையில் இருக்கிறார்கள். அவர்களுக்கு சரியானபடி காலனி கட்டித் தரப்படவில்லை. கிணறு வெட்டுவதற்குக் கடன் கொடுப்பதும் போதவில்லை. அவர்களுக்கு தரப்படும் ரூ. 2,000-ல் கடன் கட்டிக் கொள்ள முடியவில்லை, கஷ்டப்படுகிறார்கள்.



திரு. எம். சண்முகம்: கிணறு வெட்டுவதற்கு பணம் அந்தந்த இடத்தின் தன்மை பொறுத்து தரப்படுகிறது. கோயம்புத்தூரில் ரூ. 20,000, ரூ. 30,000 என்றுகூட ஒதுக்கியிருக்கிறார்கள். ஆகவே, தேவையான பணம் தரப்படுகிறது என்று சொல்லிக்கொள்கிறேன்.

திருமதி த.ந. அனந்தநாயகி: நீங்கள் சொல்வது அக்ரிகல்சுரல் டிபார்ட்மெண்ட் கொடுக்கிற பணம். நான் சொல்வது பாக்வார்ட் கிளாஸ் இலாகா டிமாண்டிலே சொல்லப்பட்டிருப்பதைக் குறித்து. இன்னொரு ஜீரோ சேர்த்துக்கொண்டீர்கள் என்றால் நல்லதுதான். அல்லது நீங்களே கிணறு வெட்டி விடுங்கள். நீங்கள் கிணறு வெட்டிக் கொடுத்து விட்டு, அவர்களிடமிருந்து பிறகு மொத்தப் பணத்தையும் தவணை முறையில் வசூலித்துக் கொள்ளுங்கள். கஷ்டமே இருக்காது.

[பிற்பகல்–1·00]

பர்மா, இலங்கை அகதிகளுக்கு செய்யக்கூடிய வீட்டுவசதிகள் துரிதமாக செய்யப்பட வேண்டும். பல்லாயிரக்கணக்கான அகதிகள் வீட்டு வசதி இல்லாமல் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு வீட்டு வசதிகளை துரிதமாகச் செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பீச் ரோடிலுள்ள பர்மா அகதிகளின் கடைகளை அங்கேயே இருக்க அமைச்சர் அவை கருணை கூர்ந்து அனுமதித்திருக்கிறது. அங்குள்ள கடைகளை ஒழுங்காக அமைத்துக் கொடுக்க வேண்டும். வாங்குபவர்கள் வசதியாக வந்து வாங்கும்படி ஏற்பாடு செய்ய வேண்டும். முன்பு நிழலுக்கு இருந்த மரங்களைக்கூட வெட்டிவிட்டார்கள். இப்பொழுது வெய்யிலிலும், மழையிலும் நின்றுகொண்டுதான் அந்தக் கடைகளில் வாங்குவோர்கள் வாங்கவேண்டிய நிலைமை இருக்கிறது. அவர்கள் அங்கே நல்ல முறையில் கடைகளைக் கட்டிக்கொள்வதற்கு வேண்டிய உதவிகளை அளிக்க வேண்டும். போக்குவரத்துக்கு வசதியையும் செய்து தர வேண்டும். அப்படிச் செய்தால்தான் அந்த பர்மா அகதிகளுடைய பொருளாதாரம் வெகுவாக உயர ஹேதுவாக இருக்கும்.

பர்மா, இலங்கை அகதிகளுக்கு ரப்பர் தோட்டங்கள், தேயிலைத் தோட்டங்கள் இப்படிப்பட்ட தோட்டங்களை அளித்து வசதி ஏற்படுத்தித் தரப்போவதாகச் சொல்லப்படுகிறது. ஆனால், இன்னும் அதில் காலதாமதம் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. எனக்குத் தெரியும். ஒரு பர்மா அகதி கடன் வாங்க வேண்டுமென்றால் வருஷக் கணக்கில் அலைந்து, காத்துக் கொண்டிருக்க வேண்டியிருக்கிறது. அங்கு இருக்கக்கூடிய டைரக்டர் ஆஃப் ரிஹாபிலிடேஷன் அவர்களைப் பார்த்தாலும் கூட வருடக்கணக்கில் தாமதம் ஆகிறது. அப்ளிகேஷன் ப்ரோஸெஸ் செய்வதற்கு காலதாமதம் ஆகிறது. கொடுக்கக்கூடிய கடனை தவணைகளில் கொடுப்பதனால் அவர்களுக்குப் பயன் இல்லாமல் போய்விடுகிறது. பிற்பட்ட மக்கள் நம்மை நம்பி ஓடி வந்தவர்களுக்கு நாம் செய்யக்கூடிய வசதிகளை துரிதமாக செய்து கொடுக்க வேண்டும். செய்கின்ற காரியங்களை துரிதமாகச் செய்தால் தான் பலன் அடைய முடியும் என்பதை இந்த அரசு புரிந்துகொண்டு, துரிதமாகச் செயல்பட வேண்டும்.

[திருமதி த. ந. அனந்தநாயகி]

அடுத்து, சிட் பண்ட்ஸைப் பொறுத்தவரையில் அதற்காக ஒரு சட்டம் கொண்டுவரப்பட்டது. சிட் கம்பெனிகளில் பல கம்பெனிகள் மக்களிடமிருந்து பணத்தை வசூலித்துவிட்டு சரிவர இயங்காமல் அவர்களை வதைத்துக்கொண்டிருக்கிறார்கள். இன்ஸ்பெக்டர்ஸ் ஒழுங்காக சிட் கம்பெனிகளை கண்காணிப்பது கிடையாது. இன்ஸ்பெக்டர்ஸ் போய் ஒழுங்காக செக்யூரிட்டி இருக்கிறதா என்று பார்ப்பது கிடையாது. பல சிட் கம்பெனிகளை நடத்துபவர்கள் ஓகோ என்று எல்லோரிடமும் பணத்தை திரட்டிக் கொண்டு ஒரே நாளில் மூடிவிட்டுப் போய் விடுகிறார்கள். மக்கள் குருவி மாதிரி பணத்தைக் கொடுத்துவிட்டு, நடுத்தர மக்கள் எத்தனையோ அவதிக்குள்ளாகிக் கொண்டிருக்கிறார்கள். 23,000 சிட் கம்பெனிகள் இருக்கின்றன என்று சொல்லப்படுகிறது. இந்த சிட் கம்பெனிகள் ஒழுங்காக செயல்படுகின்றனவா, இவைகளுக்கு சொத்து பாதுகாப்பு, செக்யூரிட்டி இருக்கிறதா என்பதையெல்லாம் இதற்காக ஒரு தனி இலாகாவையாவது அமைத்து, உடனுக்குடன் இவைகளைக் கட்டுப்படுத்த வேண்டும். மக்களை ஏமாற்றக்கூடிய சிட் கம்பெனிகள்தான் அதிகமாக இருக்கின்றன என்பதைத் தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். அவைகளைச் சரிவர கண்காணிக்க வேண்டும்.

மற்றொன்று, கவனிக்க வேண்டிய விஷயம். நான் கூட இதுபற்றி வெட்டுத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன். சப்-ரிஜிஸ்டிரார் ஆபீஸ்களில் குடி தண்ணீர் வசதி கிடையாது, கழிவு இடம் கிடையாது, ஒழுங்கான ஆபீஸ் கிடையாது, நான்கு கால் கொண்ட நாற்காலி கிடையாது. பெஞ்ச் கிடையாது. இப்படி இருக்கக்கூடிய நிலையை நிச்சயம் கவனிக்க வேண்டும். இந்த அவல நிலையை நீக்கி, நிச்சயம் வேண்டிய வசதிகளைத் துரிதமாகச் செய்வதற்கு அரசு முன்வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இதையெல்லாம் செய்வதற்கு உங்களுக்கு நேரம் இல்லாமல் இல்லை. . . .

திரு. கு. காமாட்சி : அம்மையார் அவர்கள் அவர்களுடைய கட்சியின் சார்பாக பேசிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய கட்சியைச் சேர்ந்த திரு.ஏ. சுப்பிரமணியம் அவர்கள் ஒரு வெட்டுத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். பின்தங்கிய நிலையைத் தீர்மானிப்பதற்கு பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொள்ள வேண்டும் என்று கூறியிருக்கிறாரே அதில், அதுபற்றி அம்மையார் அவர்களுடைய கருத்தை என்ன என்று சொல்வார்களா ?

திருமதி த.ந. அனந்தநாயகி : நல்லவேளையாக ஞாபகப்படுத்தினார்கள். லோ இன்கம் குரூப்புக்கு ரூ. 14 லட்சம் மத்திய சர்க்கார் தந்துகொண்டிருந்ததை நிறுத்திவிட்டார்கள். அதை விட்டுவிட்டீர்கள். அதையாவது கேட்டு வாங்கக் கூடாதா ? பொருளாதார அடிப்படையில் பிற்பட்டவர்களுக்கு உதவி அளிப்பதற்கு மத்திய சர்க்கார் ரூ. 14 லட்சம் நமக்கு ஒதுக்கியிருந்தது . . . . . . .

திரு. கு. காமாட்சி : பின்தங்கிய நிலையைத் தீர்மானிப்பது பொருளாதார நிலைமையின் அடிப்படையில் இருக்க வேண்டும் என்று திரு. சுப்பிரமணியம் அவர்கள் வெட்டுத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அதுபற்றி நீங்கள் என்ன சொல்கிறீர்கள் ?



திருமதி த.ந. அனந்தநாயகி : நான் பிற்பட்ட நலத் துறை மான்யத்தின்மீது பேசும்பொழுது கேட்டால் கருத்து எப்படி இருக்கும்? பொருளாதார அடிப்படையில் கொடுக்கலாம். தவறு கிடையாது என்றுதான் சொல்கிறேன். அதையும் இந்த அரசு கேட்டு வாங்கவில்லை. மத்திய அரசு அதற்காக ரூ. 14 லட்சம் கொடுத்து வந்தது. 1969–70-ல் நிறுத்தி விட்டது. ஏன் நீங்கள் அதை தட்டிக் கேட்கக்கூடாது ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நண்பர் காமாட்சி அவர்கள் சொல்வதை, ஜாதி அடிப்படையில் இல்லாமல் பொருளாதார அடிப்படையில் பின்தங்கிய நிலை தீர்மானிக்கப்பட வேண்டும் என்ற கருத்து அவர்களுடைய காங்கிரஸ் கட்சி அங்கத்தினர் சுப்பிரமணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானத்தில் இருக்கிறது. சமுதாய அடிப்படையில் இந்த பிற்பட்டோர் நலத்துறை அவர்களுக்கு சலுகைகளை வழங்குவது சரியா, அல்லது சமுதாய அடிப்படையை விட்டுவிட்டு பொருளாதார அடிப்படையில் பெருவாரியான நோக்கு வேண்டுமா என்பதே அவர்களுடைய கேள்வி. அதற்கு அம்மையார் என்ன விளக்கம் அளிக்கிறார்கள்.

திருமதி த.ந. அனந்தநாயகி : கட்சியின் சார்பாக கொடுக்கப்படவில்லை. திரு.சுப்பிரமணியம் அவர்கள் அவர்களுடைய எண்ணத்தைச் சொல்லியிருக்கிறார். பிற்பட்டோர் நலத் துறை பொருளாதார அடிப்படையில் சலுகைகளை வழங்கவேண்டும் என்று அவர் கருத்து சொல்லியிருக்கிறார். **Social backwardness is also clubbed along with the economic backwardness.** பிற்பட்டவர்களுக்குக் கட்டாயம் கொடுக்க வேண்டும், நிறுத்தக்கூடாது. இரண்டு சக்திகளும் ஒன்றுபட வேண்டும். சோஷல் பாக்வேர்ட்நெஸ் எகனமிக் பாக்வேர்ட்நெஸைச் சார்ந்ததுதான். சோஷல் பாக்வேர்ட்நெஸ், எகனமிக் பாக்வேர்ட்நெஸ் ஆகிய இரண்டு பாக்வேர்ட்நெஸையும் தீர்க்க வேண்டும். ஒன்றை விட்டுவிடுங்கள் என்று எப்படி சொல்ல முடியும் ? அதற்கும் நீங்கள் உதவி செய்வதற்கு வழி செய்ய வேண்டும். ஏன் இதைச் சொல்கிறேன் என்றால் பொருளாதார அடிப்படையில் பிற்பட்ட இனத்தவர்களுக்கும் நீங்கள் உதவி செய்ய வேண்டும் என்ற எண்ணத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன். ரூ. 14 லட்சம் இதற்காக மத்திய அரசு கொடுத்து வந்தது. அதை விட்டுவிட்டீர்கள். அதை நாம் வாங்கிக் கொண்டு பிற்பட்ட இனத்தவர்களுக்கு பொருளாதார அடிப்படையில், சமுதாய அடிப்படையில் பிற்பட்ட நிலையில் இல்லாமல், லோ இன்கம் குரூப்-ல் உள்ளவர்களுக்கு பொருளாதார அடிப்படையில் சலுகைகள் வழங்கலாம். அந்த நன்மை நமக்குக் கிடைத்து வந்தது. அதை இப்பொழுது நிறுத்திவிட்டார்கள், மத்திய அரசினர். அதை வாங்குவதற்கு நீங்கள் தவறிவிட்டீர்கள். அந்த ரூ. 14 லட்சம் நிதியை மத்திய அரசிடமிருந்து திரும்பிக் கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி, என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொண்டு, விடைபெறுகிறேன்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவர் அவர்களே, பொருளாதார அடிப்படையில் பிற்பட்டோர்களுக்கு உதவி அளிக்க வேண்டும் என்ற கருத்து தனிப்பட்ட கருத்து. ஒரு கட்சியினுடைய கருத்து இல்லை. ஒவ்வொரு

[திரு. ஏ. ஆர். மாரிமுத்து]

கட்சியிலும் இரண்டு விதமான கருத்து இருக்கிறது. பொருளாதார அடிப்படையில் பிற்பட்டவர்களுக்கு உதவி அளிப்பதுதான் அவசியம் என்பது ஒரு கருத்து. சமுதாயத்தில் பிற்பட்டவர்களுக்குத்தான் அந்த உதவி அளிக்க வேண்டும் என்பது இரண்டாவது கருத்து. எந்தக் கட்சியும் இதுதான் சரி, அதுதான் சரி, என்ற முடிவுக்கு வரவில்லை. அவரவர்கள் கருத்தை அவரவர்கள் வற்புறுத்துகிறார்கள். கட்சி தனியாக ஒரு பாலிஸி என்று எடுத்துக் கொள்ளவில்லை. பொருளாதார அடிப்படையில் உதவி அளிக்க வேண்டும் சமுதாய அடிப்படையில் உதவி அளிக்க வேண்டும் என்று ஒவ்வொரு கட்சியிலும் இரண்டு விதமான கருத்து வேறுபாடு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

* <u>மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :</u> மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, இன்று பின்தங்கிய வகுப்பினர்களுடைய மான்யத்தின் மீதும் பதிவுத் துறை மான்யத்தின் மீதும் இங்கே கருத்து அறிவித்த உறுப்பினர்கள் ஒரு கருத்தை எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள். பொருளாதார அடிப்படையில் பின்தங்கிய மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதா அல்லது ஜாதியின் அடிப்படையில் அவர்களுடைய நிலைமையை உயர்த்துவதா என்ற கேள்வி இப்பொழுது மட்டுமல்ல. சமீப காலமாக அந்தக் கேள்வியை சிலர் கேட்டு வருகிறார்கள். ஆனால் கனம் உறுப்பினர்களுக்குச் சொல்லிக்கொள்வேன். பொருளாதார அடிப்படையில் பிற்பட்ட மக்களுக்கு நாம் உரிமைகளையும் வாய்ப்பு வசதிகளையும் அளிப்பதற்கு முன்னதாக சமுதாயத்தில் இருக்கக்கூடிய ஏற்றத் தாழ்வுகள் நிச்சயமாகத் தீர்க்கப்பட வேண்டும். இல்லையென்றால், இது வரையில் பிற்பட்ட மக்களுக்காக நாம் செய்துவந்த அத்தனையும் பயனற்றதாகப் போய்விடும்.

பின்தங்கிய மக்களுடைய குழு சென்னையிலே 10—1—1974 அன்று சென்னையில் நடைபெற்றது. எனினும், இந்தக் குழுவிலே நாங்களும் இதைத் திறம்பட எடுத்துக் கூறியிருக்கிறோம். அந்த நடவடிக்கைகளைப் பற்றி "மெயில்" ஆங்கில ஏடு இந்தக் கமிட்டியின் மற்ற எல்லாவற்றையும் பாராட்டிவிட்டு, இதிலே ஜாதி அடிப்படையைக் கொண்டு வருவது சரியல்ல என்பதை சர்க்கார் உணர வேண்டும் என்று தலையங்கம் தீட்டியிருந்தது. அதை அடியோடு நாங்கள் புறக்கணிக்கவில்லை. என்றைக்கும் இந்த நிலைதான் என்பது அல்ல. பிற்பட்ட மக்களும் முற்போக்கு அடைந்த மக்களோடு ஒரு அணியில் சேருவதற்கான வசதி வாய்ப்புகளை நாம் அளிக்கும் வரையில் ஜாதியின் பெயரால் இருக்க வேண்டும் என்பது எண்ணமாகும். ஏனென்றால், ஜாதியின் பெயரால் இந்த நாட்டிலே......................

<u>திருமதி த. ந. அனந்தநாயகி :</u> ஜாதியின் பெயரால் மாத்திரம் நீங்கள் கொடுத்துவிடவில்லை. பிற்பட்ட இனத்தவரைச் சார்ந்தவர் ரூ. 1,500-க்கு மேல் சம்பளம் வாங்கினால் ஸ்காலர்ஷிப் கிடையாது. பிற்பட்ட ஜாதி, பொருளாதாரத்தில் பின்னேற்றம் இரண்டும் இருந்தால் தான் நீங்கள் கொடுக்கிறீர்கள்.



<u>மாண்புமிகு திரு என். வி. நடராசன் :</u> நாங்கள் அளிக்கக்கூடிய இந்த உதவிகளின் மூலம் முதலில் சமுதாய எழுச்சியில் வெற்றி கொள்கிறோம். அதைத் தொடர்ந்து பொருளாதார அடிப்படையிலும் அவர்களை முன்னேற்றத்திற்குக் கொண்டு போய்ச் சேர்க்கவேண்டும். அது வரையிலே வேறு விதமான கருத்துக்களைச் சொல்வது பிற்பட்ட மக்களுக்குக் கழக அரசு செய்து வரும் நல்ல திட்டங்களைத் தடுக்கும் என்று நான் கருதுகிறேன்.

இங்கே பேசிய உறுப்பினர்கள் சிலர் சலவைத் தொழிலாளர்களுக்கு என்ன செய்தீர்கள் என்று கேட்டார்கள். சலவைத் தொழிலாளர்களுக்கும், முடிதிருத்தும் தொழிலாளர்களுக்கும் ரூ. 2 லட்சம் கருவிகளை வழங்குவதற்காகக் கொடுத்துவந்திருக்கிறோம். முதல் அமைச்சர் அவர்கள் எவ்வளவு தொகை அதிகமாக வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள் என்று கேட்டார்கள். நான் ரூ. 2 லட்சம் என்று இருப்பதை ரூ. 4 லட்சமாகக் கொடுத்தால் போதும் என்றேன். ஆனால் முதல்வர் அவர்கள் மேலும் ஒரு லட்சம் சேர்த்து ஐந்து லட்சம் ரூபாய் தந்திருக்கிறார்கள் என்பதை இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

ஆகவே, பிற்பட்ட மக்களுக்கு எந்தெந்த வகையில் நாம் முன்னேற்றத்தை விரைவிலே செய்கிறோமோ அந்த நிலையிலே இரு தரப்பினர்களுக்கும் நல்ல ஒரு உறவு ஏற்படுமேயானால் நாட்டிலே ஏழை என்றும் அடிமை என்றும் எவரும் இல்லை நாட்டிலே என்று பாடிய அந்தக் கருத்துக்கு ஏற்ற முறையில் கழக அரசு தனது கடமைகளைத் தாமதமின்றி நிறைவேற்றும். இதிலே யாருக்கும் அபிப்ராயபேதம் கொள்வதற்கு இல்லை என்பதைக் கூறிக்கொள்கிறேன். நமது பிற்பட்ட மக்களுக்கு வாய்ப்பு வசதிகளை எவ்வளவு விரைவிலே செய்யப் போகிறோமோ அந்த அளவுக்கு அவர்களை நாம் ஒன்று சேர்க்க முடியும்.

மற்றொன்றையும் கூறிக்கொள்ள விரும்புகிறேன் முற்போக்கு அடைந்த சமுதாயத்தினருக்கு. இப்பொழுது தந்து கொண்டிருக்கும் எந்தச் சலுகையையும் அரசு நிறுத்துவதாக யோசனையில்லை. தொடர்ந்து அந்தச் சலுகைகளைக் கொடுப்போம். பிற்பட்ட மக்களுக்கு நன்மை செய்ய வேண்டுமென்பதினால், முற்பட்டவர்கள் இப்பொழுது அனுபவித்து வரும் வாய்ப்பு வசதிகளை சிறிதும் குறைத்துவிடமாட்டோம் என்பதை நான் இங்கே எடுத்துக் கூறவிரும்புகிறேன்.

அடுத்தபடியாக, கோப்பு முறை பற்றி ஒரு கருத்துச் சொல்லப்பட்டது. அதற்குப் பதில் அளிக்கும் வகையில். கோப்புகளைத் திருத்தி புதிதாக எழுதுவதற்கு நகல் எழுதுபவர்களையும், நகல்களைத் தவறு இல்லாமல் ஒழுங்காக எழுதுவதற்கு லைசென்ஸ் வழங்கும் முறையையும் வைத்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பத்திரப் பதிவுத் துறையில் அதிகாரிகள் நியமனம் பற்றிக் கேட்டார்கள். சப்-ரிஜிஸ்திரார்களை நியமிக்கும்போது விதிமுறைகளின்படிதான் நியமிக்கிறோம். அதாவது, பொதுவாக அதிகாரிகள் நியமிக்கும் முறைப்படியும், ஜெனரல் ரூல் 22-ன்படி ரிசர்வேஷன் விதி முறைகள் பின்பற்றப்படுகிறது. அதைப்போலவே டிஸ்டிரிக்ட் ரிஜிஸ்த்ராரும் நியமனம் செய்யப்படுகிறார்.

தற்போது எல்லா மாவட்டங்களிலும் அரிஜன நல அதிகாரிகள் இருக்கிறார்கள். அந்த அதிகாரிகளே, பிற்பட்டோர் நலத் துறையின் பணியினையும் செய்து வருகிறார்கள். இப்படி இரண்டு பொறுப்புகளையும் ஒரே அதிகாரி பார்ப்பதால் வேலைப்பளு அதிகமாகிறது என்றும், வேலை சரியாக நடைபெறவில்லை என்றும் சொன்னார்கள். அதனால் தனித்தனி அதிகாரிகள் நியமிக்கப்பட வேண்டும் என்றும் சில உறுப்பினர்கள் தெரிவித்தார்கள். இப்போது இருக்கின்ற முறைப்படியே, இருக்கின்ற ஒரு நல அதிகாரிக்குப் போதுமான வேலை இல்லை. வேலைகள் நடைபெறுவதில் காலதாமதம் எதுவும் இல்லை. அதனால் இரண்டு அதிகாரிகள் நியமிக்கப்பட வேண்டிய அவசியம் தற்போது இல்லை. அது மட்டுமல்லாமல் மேற்கொண்டு நியமிக்கப்படுகின்ற அதிகாரிகளுக்கு ஏற்படுகின்ற செலவைக்கொண்டு, அனந்தநாயகி அம்மையார் அவர்களும் மற்ற மாண்புமிகு உறுப்பினர்களும் குறிப்பிடுகின்ற பின்தங்கிய மக்களுக்கு மேலும் தேவைகளை நிறைவேற்றலாம்.

திருமதி ஜோதி வெங்கடாசலம் அம்மையார் அவர்கள் துணைப்பதிவாளர் அலுவலகங்களின் கட்டிடங்கள் எல்லாம் பழுது அடைந்திருப்பதாகவும் அவைகளை எல்லாம் சரி செய்வதற்கு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் சொன்னார்கள். அந்த வேலைகளுக்காக ரூபாய் 60,000 ஒதுக்கப்பட்டிருக்கிறது ஒரு ஆண்டுக்கு. மேலும் அவர்கள் சொன்ன கருத்தைக் கவனத்தில் வைத்து, ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நான் இந்த விவாதத்தைத் தொடங்கும்போது இந்த அறிக்கையில் அவை முன் வைக்கப்பட்டிருப்பது — 618·81 லட்சம் ரூபாய். பின் தங்கிய வகுப்பினர் நலனுக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று தவறாக அச்சிடப்பட்டிருப்பதாக உறுப்பினர் சௌந்திரபாண்டியன் குறை கூறினார். ஆனால், தவறு இல்லை. பின் தங்கியோர் நலனுக்கு 608·06 லட்சம் ரூபாய், கடன்களும் முன்பணங்களும் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பட்டிருப்பது 9·25 லட்சம் ரூபாய், கட்டிடச் செலவினம் என்ற தலைப்பின் கீழ் 1·50 லட்சம் ரூபாய், ஆக மொத்தம் 618·81 லட்ச ரூபாய். கணக்குச் சரியாகத்தான் இருக்கிறது. ஆகவே, இந்த கொள்கை விளக்கக் குறிப்பின் அச்சுப்பிழை ஒன்றும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த விவாதத்திலே ஒவ்வொருவரும் தங்கள் கருத்துக்களை அமைதியான முறையிலே எடுத்துச் சொன்னார்கள். அரசினைப் பாராட்டினார்கள். தொடர்ந்து இந்த ஒத்துழைப்பைத் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, உங்களுடைய பாராட்டினை மிகவும் வணக்கத்துடன் ஏற்றுக்கொள்கிறேன்.





அரசு அலுவலகங்களுக்கு நியமனம் செய்யும்போது பிற்பட்டோருக்கு இந்தக் குறிப்பில் சொல்லியிருப்பதைப்போல, ஒதுக்கப்படுகிறதா என்று கேட்டார்கள். அது பற்றி ஆணை பிறப்பித்திருக்கிறோம். அதை சரியாகச் செயல்படுத்துகிறார்களா என்பதைக் கவனிப்பதற்காக ஒரு தனி அலுவலர் ஜனவரி மாதம் முதல் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

பிற்பட்டோர் என்று கருதும்போது, அரசியல் சட்டம் 15–எ பிரிவுப்படி சமூக அந்தஸ்து, கல்வித் தகுதி இவைகளைப் பற்றித்தான் முடிவு செய்ய முடியும். அந்த அடிப்படையில்தான் நாம் செய்து கொண்டிருக்கிறோம்.

மாணவர்களுக்கு உதவித்தொகை வழங்குவதில் 40 சதவிகிதம் மார்க்குகள் பெற்று தேறியிருக்க வேண்டுமென்ற விதியை நாம் கடைப்பிடித்து வருகிறோம், தேர்ச்சி பெற்றவர்களுக்கு எல்லாம் உதவித் தொகை வழங்குவது என்றால், செலவு அதிகமாகும். அது மட்டுமல்லாமல் மாணவர்களுக்கு கல்வியில் செலுத்தும் அக்கறையும் குறைந்துவிடும். இப்போதே மாணவர்கள் கல்வியில் செலுத்தும் அக்கறை குறைந்திருக்கிறது போராட்டங்களில் ஈடுபடுகிறார்கள். அரசாங்கம் ஒதுக்குகின்ற தொகையை அவர்கள் ஒழுங்காகப் பெற முடியவில்லை. அதனால் கல்வியில் அவர்கள் முன்னேற்றம் பெறமுடியவில்லை. ஆகவே, இப்போது இருக்கின்ற இந்த 40 சதவிகிதம் மார்க்குகள் பெற்று தேர்ச்சி பெறவேண்டும் என்ற விதியைத் தளர்த்த வேண்டிய அவசியம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நமது அரசு பிற்பட்டோருக்கு 31 சதவிகிதம் அரசு வேலைகளில் வாய்ப்பு தரவேண்டுமென்று சொல்லியிருக்கிறது. அதல்லாமல் முஸ்லீம்களுக்கு தனி, கிறிஸ்தவர்களுக்குத் தனி என்று ஒதுக்கவில்லை. அப்படி ஒதுக்கினால் அது பெரிய சிக்கலில் கொண்டுபோய் விட்டுவிடும். மற்றும் உறுப்பினர்கள் சொன்ன கருத்துக்களைப் பரிசீலனை செய்யலாம் ஆனால் தற்போதைக்கு அதை வற்புறுத்த வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்போது உருது பேசும் லப்பைகள், தக்கணிகர்கள் ஆகியோரும் பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். அதுபற்றி பள்ளிகளுக்கும் கல்லூரிகளுக்கும் அரசு ஆணை வழங்கப்பட்டிருக்கிறது. சுமார் 7 லட்சம் பேர் இதனால் 1974–75-ம் ஆண்டு முதல் சலுகைகள் பெறுவார்கள் என்பதைக் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் கந்தசாமி அவர்கள் பேசும்போது 1972–73-ம் ஆண்டு இந்தத் துறைக்கு ஒதுக்கிய தொகையை விட 1973-74-ம் ஆண்டில் ஒதுக்கியிருப்பது 16 சதவிகிதம்தான் கூடுதலாக இருக்கிறது ; இது போதாது என்று சொன்னார்கள். உதவி பெறும் மாணவர்கள் ஆண்டு ஒன்றுக்கு 25 சதவிகிதம் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. அவசியம் ஏற்பட்டால் திருத்த மதிப்பீட்டின் அதிகத் தொகை ஒதுக்கீடு செய்ய வாய்ப்பு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி ஜோதி வெங்கடாசலம் அவர்கள் இன்னொரு கருத்தையும் சொன்னார்கள். துணைப் பதிவாளர் அலுவலகங்களில் 5 ரூபாய் கொடுப்பது தண்ணீர் கொண்டுவரும் ஆளுக்குமட்டும்தானே என்றார்கள். பாத்திரங்களுக்கு என்ன செய்வது, என்று சொன்னார்கள். பாத்திரங்கள் அரசின் செலவில் வாங்கிக்கொடுக்கப்படுகின்றன. இந்த 5 ரூபாய், தண்ணீர் கொண்டு வருகின்ற ஆளுக்கு மட்டும்தான்; அவர்கள் பாத்திரங்கள் கொண்டுவர வேண்டியதில்லை.

மாண்புமிகு உறுப்பினர் கணபதி அவர்கள் ஆஸ்தான ஸ்தபதி நியமனம் பற்றிச் சொன்னார்கள். அதைப்பற்றி அரசு ஏற்கெனவே பரிசீலனை செய்து பார்த்து, தேவையில்லை என்று முடிவு செய்திருக்கிறது. கோவில் சிலைகளைப் பாதுகாக்க பிரசித்திபெற்ற பொற்கொல்லர்களை நியமனம் செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். அதுபற்றி அறநிலையத் துறையுடன் தொடர்பு கொண்டு, பரிசீலனை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. அது இன்னும் முடிவுறவில்லை.

திரு அழகர்சாமி அவர்கள் தெரிவித்த கருத்துக்களுக்கு நான் விளக்கமளிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். 1973ஆம் ஆண்டு மே, ஜூன் மாதங்களில் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் பின்தங்கிய சமுதாயத்தினருக்குக் கடன் வழங்க நிதி ஒதுக்கீடு செய்து, வழங்கியிருக்கின்றன. அதற்கு அரசு உதவி செய்கிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும் தனி துணைத் தாசில்தார்கள் நியமித்து, மனுக்களைப் பரிசீலனை செய்து, நவம்பர் மாதம் வரை பல்லாயிரருக்குப் பல வழிகளில் கடன்கள் கொடுக்கப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ரிசர்வ் பாங்க் வழங்கும் கடனுக்கு வரம்பு வைத்து, குறைத்திருப்பதால் இப்போது மக்களுக்கு குறைவாகவே கடன்கள் வழங்கப்படுகின்றன.

மேலும் பல உறுப்பினர்கள் பேசும்போது உதவித் தொகை வழங்குவதற்கு ஆண்டு வருமானம் 1,500 ரூபாய் என்றிருப்பதை 2,000 ரூபாய் என்ற அளவுக்கு உயர்த்த வேண்டுமென்று சொன்னார்கள். இது பரிசீலிக்கப்பட வேண்டிய ஒன்று (குறுக்கீடுகள்) 2,000 ரூபாயிலிருந்து 6,000 ரூபாயாக உயர்த்த வேண்டுமென்று சிலர் கருத்து தெரிவித்தார்கள். அதைப்பற்றி பரிசீலனை செய்து, மாண்புமிகு முதலமைச்சரவர்கள் பின்னர் அறிவிப்பார்கள் என்று நம்புகிறேன்.

அனந்தநாயகி அம்மையார் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். மத்திய அரசாங்கம் 14 லட்சம் ரூபாய் கொடுத்து வந்தது. இப்போது அதை நாம் கேட்டுப்பெறவில்லை. அதனால் அவர்கள் நிறுத்தி விட்டார்கள் என்று சொன்னார்கள். அதைப் பெறுவதற்கு அரசு முனைய வேண்டும் என்றும் கூறினார்கள்.

பொதுவாக, பின்தங்கியோர் நலத்துறை, பத்திரப் பதிவுத்துறை ஆகிய இரண்டு துறைகளைப் பற்றியும் மாண்புமிகு உறுப்பினர்கள் ஆர்ப்பாட்டம் இல்லாமல் அமைதியான முறையில் பல்வேறு கருத்துக்களைத் தெரிவித்



திருக்கிறார்கள். இவை ஆர்ப்பாட்டம் இல்லாத துறைகளாக இருப்பதால் உறுப்பினர்கள் ஆர்ப்பாட்டம் இல்லாமல் கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். என்று நான் கருதுகிறேன். அந்தக் கருத்துக்கள் எல்லாம் தக்க சமயத்தில் பரிசீலனை செய்யப்பட்டு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நல்ல கருத்துக்களை எடுத்துக் கூறிய அங்கத்தினர்களையும், மற்றும் அதிகாரிகளையும் அலுவலாளர்களையும் நான் மனமாரப் பாராட்டுகிறேன். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர்கள் தாங்கள் கொடுத்திருக்கின்ற வெட்டுத் தீர்மானங்களை எல்லாம் திரும்பப் பெற்று நிதிக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: பேரவைத் தலைவர் அவர்களே, திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் பேசுகின்ற நேரத்தில், லோ இன்கம் குரூப்பில், மத்திய அரசு 14 லட்சம் கொடுக்கிறதே, அதை என் சரண்டர் செய்துவிட்டீர்கள் என்று கேட்டார்கள். (திருமதி த. ந. அனந்தநாயகி: பயன்படுத்திக் கொள்ளவில்லை) பயன்படுத்திக் கொள்ளவில்லை, வாங்கவில்லை என்று சொன்னார்கள். வாங்காததற்குக் காரணம் அவர்கள் கொடுப்பதை நிறுத்திவிட்டார்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி: நிறுத்திவிட்டார்கள், சண்டைபோட்டு வாங்குங்கள் என்று சொல்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: முதலில் அப்படிச் சொல்லவில்லை. பிறகு புத்தகத்தைப் படித்துத் திருத்திக்கொள்வது, பாராட்டுக்குரியது. மத்திய அரசு கொடுத்தது எதுவும் சரண்டர் ஆகவில்லை.

லோ இன்கம் க்ரூப் திட்டத்தின் கீழ் 1967-68-ல் 2,452 பேர்களுக்கு 14·82 லட்சம் கொடுத்தார்கள், 1968-69-ல் 2,695 பேர்களுக்கு ரூ. 14·83 லட்சம் கொடுத்தார்கள். 1969-70-ல் 2,533 பேர்களுக்கு ரூ. 14·84 லட்சம் கொடுத்தார்கள். 1970–71-ல் 2,497 பேர்களுக்கு ரூ. 14·84 லட்சம் கொடுத்தார்கள். 1971–72-ஆம் ஆண்டுமுதல் அப்படிக் கொடுப்பதை நிறுத்திவிட்டார்கள். அதைத் தொடர்ந்து கொடுக்க வேண்டுமென்று நாங்கள் வலியுறுத்திக் கேட்டு வருகிறோம். தொடர்ந்து மறுத்து வருகிறார்கள். அதை நாங்கள் சொன்னால் மத்திய சர்க்கார் மீது குற்றச்சாட்டு என்பதாக சொல்லப்போகிறார்களே என்று சொல்லவில்லை. அந்தத் தரப்பில் இருந்தே அந்தக் குற்றச்சாட்டு வந்த காரணத்தினால், இப்போது கேட்டிருக்கிற கேள்வியின் அடிப்படையில், எடுத்துச்சொல்லப்பட்ட குறையின் அடிப்படையில் நாங்கள் மத்திய சர்க்காரிடம் இதையும் தொடர்ந்து கேட்பதற்குக் கடமைப்பட்டிருக்கிறோம் என்று சொல்ல விரும்புகிறேன்.

குற்றப்பட்டியலில் இருந்து நீக்கப்பட்டோருக்காகவும் அவர்களது நலனில் அக்கறை கொண்டு நமது அரசு ஒதுக்கிய தொகை 1969–70-க்கு 17 லட்சம். மத்திய அரசு வழங்கியது 16 லட்சமாகும். 1973–74-ம் ஆண்டுக்கு மாநில அரசு ஒதுக்கியது 48 லட்சத்து 50 ஆயிரம். மத்திய

அரசு மானியம் 16 லட்சத்து 65 ஆயிரம். ஆனால் இதையும் இந்த ஆண்டு நிறுத்திவிட்டார்கள் என்பதை நான் வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்கள் நிறுத்திவிட்டாலும் நாம் 1974–75-க்கான மதிப்பீட்டில் குற்றப்பட்டியலில் இருந்து நீக்கப்பட்டோர் நலனுக்காக ரூ. 121 லட்சத்து 81 ஆயிரம் ஒதுக்கியிருக்கிறோம் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதம் முடிவுற்றது. திரு. பெ. சௌந்தரபாண்டியன் தம்முடைய வெட்டுத் தீர்மானத்தை வற்புறுத்துகிறாரா ?

திரு பெ. சௌந்தரபாண்டியன் : பேரவைத் தலைவர் அவர்களே, கொடுக்கப்பட்ட புத்தகத்தில் பிற்பட்டோர் நலத்திற்காக ஒதுக்கப்பட்டதொகை முதல் பக்கத்தில் 608.06 என்று இருக்கிறது............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : புதியதாக எந்த விளக்கமும் கேட்கக் கூடாது.

திரு பெ. சௌந்தரபாண்டியன் : முன்பே நான் என் உரையில் முன்பின்னாக புள்ளிவிவரம் தவறாக உள்ளதே, எது சரி என்பதைக் கேட்டிருக்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பேரவைத் தலைவர் அவர்களே, பிழை எதுவும் இல்லை. அவரே தொடர்ந்து படித்திருந்தால் தெரிந்திருக்கும். 1974–75 ஆம் ஆண்டுக்கான மானியத்தொகை ரூ. 608·06 லட்சம். இத்துடன் கடன்களும் முன்பணங்களும் என்ற தலைப்பின்கீழ் தனியாக ரூ. 9·25 லட்சமும், கட்டிடச் செலவினம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 1·50 லட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளது. மொத்தமாகக் கூட்டிப் பார்த்தால் ரூ. 618·81 லட்சம் வந்துவிடும். இது முதல் பக்கத்திலேயே துல்லியமாக இருக்கிறது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : நான் என்னுடைய வெட்டுத் தீர்மானத்தை வற்புறுத்துகிறேன்.

கோரிக்கை எண் 21-க்கு திரு. பெ. சௌந்திரபாண்டியன் அவர்கள் கொடுத்திருந்த வெட்டுத் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு தோல்வியுற்றது.

திரு. கு. அ. பொம்மன் அவர்களது வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டது.

திரு. கே.டி.கே. தங்கமணி அவர்களது வெட்டுத் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு தோல்வியுற்றது.

திரு. ஆ. கு. சுப்பையா, திரு. கே.பி. கோபால், திரு. எம்.எ. லத்தீப் ஆகியவர்களது வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டன.



மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—"நிதிக் கோரிக்கை எண் 31—பின்தங்கிய வகுப்பினர் நலன் என்ற தலைப்பின்கீழ் ரூ. 6,08,06,200-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

கோரிக்கை எண் 6-க்கு திரு. என். டென்னிஸ் அவர்கள் கொடுத்திருந்த வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டது.

திரு. சோ. அழகர்சாமியின் வெட்டுத் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு தோல்வியுற்றது.

திரு. கே. எ. வகாப் அவர்கள் இருக்கையில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டதாகக் கருதப்பட்டது.

திரு. ஆ. கு. சுப்பையா, திரு. பெ. சௌந்தரபாண்டியன், திரு. கே.எஸ். கோதண்டராமையா ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—"நிதிக் கோரிக்கை எண் 6—பத்திரப் பதிவுத்துறை என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,55,81,700-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 18—3—1974 அன்று காலை 9 மணி அளவில் பேரவை மீண்டும் கூடும்.

**பின்னர் பேரவை பிற்பகல் 1·27 மணியளவில் ஒத்திவைக்கப்பட்டது.**

*A. Statutory Rules and Orders*

177. Notification issued with G.O. Ms. No. 27, Rural Development and Local Administration, dated the 3rd January 1974 in regard to division of Tiruvallur Municipality into twenty wards and reservation of the two seats for Scheduled Castes and one seat for women in the Tiruvallur Municipal Council. [*Laid on the table of the House under section* 304 (*d*) *of the Tamil Nadu District Municipalities Act,* 1920 (*Tamil Nadu Act V of* 1920].

178. Notification issued with G.O. Ms. No. 2511, Rural Development and Local Administration, dated the 22nd November 1973 in regard to preliminary notification for declaration of the areas forming the Padmanabhapuram Local Planning Area. [*Laid on the table of the House under section* 123 (2) *of the Tamil Nadu Town and Country Planning Act,* 1971 (*Tamil Nadu Act* 35 *of* 1972].

179. Notification issued with G.O.Ms. No. 2174, Rural Development and Local Administration, dated the 1st October 1973 in regard to preliminary notification for declaration of the areas forming the Manaparai Local Planning Area. [*Laid on the table of the House under section* 123(2) *of the Tamil Nadu Town and Country Planning Act,* 1971 (*Tamil Nadu Act* 35 *of* 1972].

*B. Reports, Notifications and other Papers.*

%66. Speech of Hon. Thiru S. Ramachandran, Minister for Transport on Demands No. 39—Road Transport Schemes and No. 53—Capital Outlay on Road Transport Schemes, 1974–75 (English and Tamil).

%67. A Review on Road Transport in Tamil Nadu, 1973–74 (English and Tamil).

%68. Speech by Hon. Thiru S. Ramachandran, Minister for Transport on Demand No. 43—Stationery and Printing, 1974–75 (English and Tamil).

%69. A Review on the working of the Stationery and Printing Department during, 1973–74 (English and Tamil).



% 70. Policy Note on Demand No. 31—Welfare of the Backward Classes, etc., 1974–75 (Tamil).

% 71. Vote on Account for expenditure in 1974–75.

% 72. Notice of Demands for Advance Grants during the year 1974–75 (English and Tamil).

& 73. Performance Budget on Transport, 1974–75.

## இணைப்பு I

[150ம் பக்கத்தில் 456-ஆம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவிற்குறிய விடையைக் காண்க.]

In the Epilepsy clinic of the Institute of Neurology, Madras Medical College, where all the cases are registered, research has been undertaken in various aspects of Epilepsy. Work also has been done on the surgical and biochemical aspects of Epilepsy. In addition to this, an intenstive study of 1,200 cases of Epilepsy is being undertaken as a Collaborative Research Scheme with the aid of P.L. 480 funds through the Indian Council of Medical Research. Madras is one of the five centres in the country conducting this intensive study on epilepsy. Various biochemical aspects resulting from prolonged medication are also studied in the Neuro-Chemistry department attached to the Institute of Neurology. Epileptic cases, which are not properly controlled in spite of prolonged and various combination of drugs are analysed, assessed for surgical treatment in an effort to control their fits. Such surgical operations are performed in more than one site in the brain.

சென்னை, மருத்துவக் கல்லூரியிலுள்ள நரம்பியல் நிலையத்தின் காக்காய் வலிப்பு நோய் சிகிச்சைப் பிரிவில் இந்நோய் கண்டுள்ள தேர்வுகள் பதிவு செய்யப்பட்டு, காக்காய் வலிப்பு நோய் பற்றிய பல்வேறு கூறுகள் குறித்து ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. காக்காய் வலிப்பு நோய்க்கு அறுவை கிகிச்சை முறையிலும உயிர்வேதியியல் முறையிலும் சிகிச்சை அளிப்பது குறித்து, ஆராய்ச்சி செய்யப்பட்டுள்ளது. இதைத் தவிர, இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகத்தின் மூலம் P.L. 480 நிதியுதவியுடன் காக்காய் வலிப்பு நோய் பற்றிய 1200 தேர்வுகள் குறித்து முழுமூர

% Despatched to members on 14th March 1973.
& Laid on the table of the House on 15th March 1974.

ஆய்வு ஒன்று உடனுழைப்பு ஆராய்ச்சித் திட்டமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. காக்காய் வலிப்பு நோய் குறித்து நம்நாட்டில் மும்முர ஆய்வு நடத்தும் 8 இடங்களுள் சென்னையும் ஒன்றாகும். நீண்ட காலமாக மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டதிலிருந்து கண்டறியப்பட்ட பல்வேறு உயிர்வேதியியல் கூறுகள் குறித்தும். நரம்பியல் நிலையத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. மூளைநரம்பியல் வேதியியல் துறையில் ஆய்வு செய்யப்படுகிறது. நீண்ட நாட்களாக மருத்துவ சிகிச்சை அளித்தும், பல்வேறு மருந்துகளைக் கலந்து கொடுத்தும், சரிவர கட்டுப்படுத்த முடியாத வலிப்பு நோய்கள் குறித்து, படிப்பாய்வு செய்யப்படுகிறது. அந்த நோய்களைக் கட்டுப்படுத்தும் முயற்சியில் நோய் கண்டவர்களுக்கு அறுவை சிகிச்சை செய்வது குறித்தும் ஆய்வு செய்யப்படுகிறது. அத்தகைய அறுவை சிகிச்சைகள் மூளையில பல இடங்களில் செய்யப்படுகின்றன.

## இணைப்பு II.

[153-ம் பக்கத்தில் 457-ஆம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.]

அரசு கீழ்க்காணும் இந்திய மருத்துவ தனியார் நிறுவனங்களுக்கு மானியங்கள் வழங்கும் நோக்கத்திற்காக அவற்றிற்கு ஏற்பளித்துள்ளது :—

| தொடர் எண்ணும் நிறுவனத்தின் பெயரும். | மானியத்தின் தன்மை. | அனுமதிக்கத் தக்க மானிய வீதம். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 வேங்கடரமண ஆயுர்வேத மருந்தகம், மைலாப்பூர், சென்னை. | பேணுதல் மானியம். | ஆண்டு ஒன்றுக்கு ரூ. 3,000. |
| 2 ஸ்ரீ விசாலாட்சி விஸ்வநாதன் மன நோய் நீக்கும் மருத்துவமனை (சித்தா), குற்றாலம், திருநெல்வேலி மாவட்டம். | ஷை | ஆண்டு ஒன்றுக்கு ரூ. 600. |
| 3 ஆயுர்வேத மருந்தகம், எஸ். தாமரைக்குளம், கன்னியாகுமரி மாவட்டம். | மானிய உதவி. | காலாண்டுக்கு ரூ. 60. |
| 4 மருந்தகம், கொளச்சல், கன்னியாகுமரி மாவட்டம். | ஷை | ஷை |





| தொடர் எண்ணும் நிறுவனத்தின் பெயரும். | மானியத்தின் தன்மை. | அனுமதிக்கத் தக்க மானிய வீதம். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 5 திருக்கோயில் ஆயுர்வேத மருந்தகம், இராமேஸ்வரம். | பேணுதல் மானியம். | ஆண்டொன்றுக்கு ரூ. 2,000 அல்லது மொத்தச் செலவில் 20 சதவீதம் இவற்றில் எது குறைவானதோ அத் தொகை. |
| 6 ஆங்கிலோ இந்திய மருந்தகம், மண்டே மார்க்கெட் (திங்கள் சந்தை), நெய்யூர், கன்னியாகுமரி மாவட்டம். | மானிய உதவி. | காலாண்டுக்கு ரூ. 150. |
| 7 மருந்தகம், பத்மநாபபுரம், கன்னியாகுமரி மாவட்டம். | மானிய உதவி. | காலாண்டுக்கு ரூ. 75. |
| 8 ருக்மணி நினைவு இலவச மருத்துவமனை, பட்டுக்கோட்டை. | பேணுதல் மானியம். | ஆண்டு ஒன்றுக்கு ரூ. 2,000. |

The Government have approved the following private institutions of Indian medicine for purposes of sanction of grants to them :—

| *Serial number and name of institution.* | *Nature of grant.* | *Rate of grant admissible.* |
|---|---|---|
| (1) | (2) | (3) RS. |
| 1 Venkataramana Ayurvedic Dispensary, Mylapore, Madras. | Maintenance. | 3,000 per annum. |

| *Serial number and name of institution.* | *Nature of grant.* | *Rate of grant admissible.* RS. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 2 Sri Visalakshi Viswanathan Mental Cure (Siddha), Courtallam, Tirunelveli district. | Maintenance. | 600 per annum. |
| 3 Ayurveda Dispensary, S. Thamaraikulam, Kanyakumari district. | Grant-in-aid. | 60 per quarter. |
| 4 Dispensary at Colacheal, Kanyakumari district. | Do. | 60 per quarter. |
| 5 Tirukoil Ayurvedic Dispensary, Rameswaram. | Maintenance grant. | 2,000 per annum or 20 per cent of total expenditure whichever is less. |
| 6 Anglo Indigenous Clinic, Monday Market at Neyyoor, Kanyakumari district. | Grant-in-aid. | 150 per quarter. |
| 7 Dispensary at Padmanabhapuram, Kanyakumari district. | Do. | 75 per quarter. |
| 8 Rukmani Memorial Free Hospital, Pattukottai. | Maintenance grant. | 2,000 per annum. |



## இணைப்பு–III

(179–ம் பக்கத்திலுள்ள அடிக் குறிப்பைக் காண்க.)

## பின்தங்கிய வகுப்பினர் நலத்துறை மானியம் எண் 31.

### கொள்கை விளக்கக் குறிப்பு 1974–75.

1974-75-ம் ஆண்டு பின்தங்கிய வகுப்பினர் நலனுக்கான மானியக் கோரிக்கையை நான் இம் மன்றப் பேரவை முன் வைக்க உங்கள் முன்பு வந்துள்ளேன். (ரூ. 608·06 லட்சம்) இத்துடன் கடன்களும் முன்பணங்களும் என்ற தலைப்பின்கீழ், தனியாக ரூ. 9·25 லட்சமும், "கட்டிடச் செலவினம்" என்ற தலைப்பின்கீழ் ரூ. 1·50 லட்சமும், இத்துறைக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆக மொத்தம் 1974-75-ம் ஆண்டு பின்தங்கிய வகுப்பினர் நலனுக்காக ரூ. 618·81 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. நமது மாநிலத்தில் பின்தங்கிய வகுப்பினரின் முன்னேற்றம் கருதி மேற்கொண்டு வரும் பல்வேறு நடவடிக்கைகளையும் அதனால் அடைந்துள்ள முன்னேற்றத்தையும் 1974-75ஆம் ஆண்டில் மேற்கொள்ளவிருக்கும் திட்டத்தையும் பற்றி நான் இப்பேரவையில் விளக்க விரும்புகிறேன்.

2. 1949 எப்ரல் திங்கள் 1ஆம் நாளுக்கு முன்பு அரிசன வகுப்பினர் நலன், பழங்குடி வகுப்பினர் நலன் ஆகியவற்றுடன் பின்தங்கிய வகுப்பினர் நலனையும் தொழிலாளர் நலத்துறை கவனித்து வந்தது. குற்றப் பட்டியலிருந்து நீக்கப்பட்டோர் நலனைக் காவல் துறை கவனித்து வந்தது. அரிசனங்கள், பழங்குடியினர், குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோர், பின்தங்கிய வகுப்பினர் ஆகியோரின் நலனைக் கவனிக்க 1949 எப்ரல் திங்கள் 1ஆம் நாளன்று அரிசன நலத் துறை அமைக்கப்பட்டது. பின் தங்கிய வகுப்பினர் தமிழக மக்கள் தொகையில் பெரும் பகுதியினராக இருப்பதாலும், அவர்களின் நலனுக்காக நாம் கொண்டுவரும் நடவடிக்கைகள் பெருகி வருவதனாலும், இப்பணிக்காக அதிக நாட்டம் செலுத்த வேண்டியிருப்பதாலும், 1969 மே திங்கள் 2ஆம் நாளன்று "பிற்பட்டோர் துறை" டாக்டர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் புதிதாக ஆரம்பிக்கப்பட்டது. அரிசன நலத்துறை ஆற்றிய பிற்பட்டோர், குற்றப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோர் இவர்களின் நலன்கள் இப் புதுத் துறைக்கு மாற்றப்பட்டன.

3. துறை ஆரம்பித்த பின், சில மாதங்கள் வரை இத்துறையின் பொறுப்பை முதலமைச்சர் கலைஞர் அவர்கள் நேரடியாக வகித்துவந்தார். பின்னர், பின்தங்கிய வகுப்பினர் நலனுக்கென்று, ஓர் அமைச்சர்

நியமிக்கப்பட்டு அவரிடம் இத்துறையின் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. இத்துறை ஐ.எ.எஸ்., பதவித்தரத்திலான இயக்குனரது நிர்வாகத்தின் கீழ் செயற்பட்டு வருகிறது. 1971-72ஆம் ஆண்டு முதல் வரவு-செலவுத் திட்டத்தில் இத் துறைக்கென்று புதிதாக தனி மானியக் கோரிக்கையும் உருவாக்கப்பட்டது.

4. பிற்பட்டோர், குற்றப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோரின் நலனுக்கு 1968-69இல் அதாவது புதுத்துறை ஆரம்பிக்கும் முன் ஆண்டில் செலவழிக்கப்பட்ட தொகை ரூ. 187 இலட்சமாகும். இத்தொகை புதுத்துறை கண்ட 1969-70ஆம் ஆண்டில் மட்டும் ரூ. 248 இலட்சமாகி 1970-71இல் 301 இலட்சமாகி, 1971-72ஆம் ஆண்டில் 433 இலட்சமாக உயர்ந்துள்ளது குறிப்பிடத் தக்கதாகும். இத்துறைக்கென 1972-73இல் ரூ. 486 லட்சம் செலவழித்து 1973-74ஆம் ஆண்டிற்கு திருத்திய மதிப்பீட்டில் ரூ. 560 இலட்சங்களும் 1974-75க்கு ரூ. 608 இலட்சங்களும் ஒதுக்கப்பட்டுள்ளன. இச்செலவின் உயர்வே, துறை மேற்கொண்டுள்ள பொறுப்பினையும் இத் துறையின் அவசியத்தையும் உணர்த்தும். இனவாரி ஒதுக்கீடுகளை அட்டவணையில் காணவும். இந்த தனி ஒதுக்கீடு தவிர இம்மாநில அரசு மேற்கொள்ளும் பல்வேறு பொதுத் திட்டங்கள் சமூகத்தில் தாழ்ந்துள்ள பிற்பட்டோர், தாழ்த்தப்பட்டோர் முன்னேற்றம் கருதியே செயல்பட்டு வருகின்றன என்பதை இப்பேரவையில் கூற விரும்புகிறேன். இது குற்றப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோருக்கும் பொருந்தும்.

5. பின்தங்கிய வகுப்புனர் நலத் துறையின் முக்கியமான நடவடிக்கைகள் பற்றி நான் சுருக்கமாக விளக்குகிறேன்.

(i) படிப்பு உதவித் தொகை.—உழைக்கும் உழைப்பாளி சமூகத்தைச் சார்ந்த பலரும் கல்வியில் பின்னடைந்திருப்பதற்கான காரணம் அவர்களுக்குப் போதிய கல்வி வசதியின்மையே என்பது யாவரும் அறிந்த உண்மை. கல்வியறிவின்றியே சமுதாயத்தில் பின்தங்கியுள்ளவராகி விட்டனர். அவர்கள், பின்தங்கிய வகுப்பினரின் நிலை உயரவேண்டுமானால் கல்வி மேம்பாட்டுக்கு வகை செய்வது தான் மிகச் சிறந்த வழி எனக் கருதப்பட்டுள்ளது. பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்த மாணவர்களும், குற்றப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோரைச் சேர்ந்த மாணவர்களும், தங்களது படிப்பினைத் தொடர்வதற்கு இயலும் வகையில் அவர்களுக்குப் படிப்பு உதவித் தொகைகள் வழங்குவதனாலும், அவர்களுக்காக மாணவர் இல்லங்கள் தொடங்கப்படுவதனாலும் அவர்களின் கல்வியின் தரம் உயர





வழி ஏற்படுகிறது. பின்தங்கிய வகுப்பினரைச் சேர்ந்த மாணவர்களுக்கு ஒன்பதாம் வகுப்பு முதல் படிப்பு உதவித் தொகைகள் வழங்கப்படுகின்றன. குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோரைச் சேர்ந்த மாணவர்களுக்கு ஒன்றும் வகுப்பு முதல் படிப்புதவித் தொகைகள் வழங்கப்படுகின்றன. இப்படிப்பு உதவித் தொகைகள் பெறவிழையும் மாணவர், பின்தங்கிய வகுப்பினரைச் சேர்ந்தவராகவோ அல்லது குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோரைச் சேர்ந்தவராகவோ இருக்கவேண்டும். மேலும் அவரது பெற்றோரின் முந்திய ஆண்டு வருமானம் ரூ 2,000-க்கு மேற்படக்கூடாது. கடந்த ஆண்டு தேர்வில் குறைந்தது 40 சத விகித மதிப்பெண்கள் பெற்றுள்ள பின்தங்கிய வகுப்பினரைச் சேர்ந்த மாணவர்களுக்குப் படிப்பு உதவித் தொகைகள் வழங்கப்படுகின்றன. குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட மாணவர்கள் தேர்ச்சி அடைந்து இருந்தாலே போதும்.

(ii) பின்தங்கிய வகுப்பினருக்குப் படிப்பு உதவித் தொகைகள் வழங்கும் திட்டம் ஒரு லட்சம் ரூபாயுடன் 1948–49ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டு 609 மாணவர்களுக்குப் பயனளித்தது. பின்னர் இத்தொகை 1949–50ஆம் ஆண்டில் ஐந்து லட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டதில் 2,908 மாணவர்கள் பயனடைந்தனர். படிப்பு உதவித் தொகைக்கான மனுக்கள் படிப்படியாகப் பெருகி வந்துள்ளன. 1960–61-ல் 19,900 மாணவர்களுக்கு ரூ. 41 இலட்சம் செலவழிக்கப்பட்டது. ஆனால் 1968–69 ஆம் ஆண்டு வரை மனுதாரர்கள் அனைவருக்கும் படிப்பு உதவித் தொகை வழங்க முடியவில்லை. தனித் துறை ஒன்று அமைக்கப்பட்ட பின்னர் ரூ 2,000-க்குள் பெற்றோரின் ஆண்டு வருமானம் உள்ளவர்களும் கடந்த ஆண்டு தேர்வில் மொத்தத்தில் 40 சத விகித மதிப்பெண்கள் பெற்றுள்ளவர்களுமான பின்தங்கிய வகுப்பினரைச் சேர்ந்த மாணவர்கள் அனைவருக்கும் படிப்பு உதவித் தொகைகள் வழங்கப்படுகின்றன. இதற்கென பின்தங்கிய வகுப்பினர் நலத்துறை 1969–70-ல் ரூ 160·89 லட்சம் செலவு செய்தது. இதன் மூலம் 90,565 மாணவர்கள் பயனடைந்தனர். 1970–71-ல் ரூ 201·20 லட்சம் செலவிடப்பட்டதில் 1,34,249 மாணவர்கள் பயனடைந்தனர். 1971–72-ல் 1,68,975 மாணவர்களுக்கு ரூ. 290·50 இலட்சம் செலவழிக்கப்பட்டது. 1972–73இல் ரூ. 324·65 இலட்சம் செலவிடப்பட்டதில் 1,92,138 மாணவர்கள் பயனடைந்தனர். 1973–74-ல் 2,11,351 மாணவர்களுக்கு ரூ. 357·10 லட்சம் செலவாகுமென எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த வழியில், கடந்த சில ஆண்டுகளில் எய்திய சாதனைகள் வருமாறு :—

| ஆண்டு. | குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோர். | | | பின்தங்கிய வகுப்பினர். | | |
|---|---|---|---|---|---|---|
| | மெட்ரிக்குக்கு முன். | மெட்ரிக்குக்குப் பின். | செலவான மொத்தத் தொகை. | மெட்ரிக்குக்கு முன். | மெட்ரிக்குக்குப் பின். | மொத்த செலவான தொகை |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| | | | (ரூபாய் இலட்சத்தில்.) | | | (ரூபாய் இலட்சத்தில்.) |
| 1966-67 .. .. .. | 24,745 | 1,619 | 13·71 | 10,306 | 21,099 | 82·90 |
| 1967-68 .. .. .. | 27,967 | 1,941 | 14·50 | 10,075 | 25,260 | 91·78 |
| 1968-69 .. .. .. | 32,347 | 2,122 | 16·71 | 20,375 | 33,162 | 113·07 |
| 1969-70 .. .. .. | 41,361 | 2,828 | 21·16 | 42,515 | 48,050 | 160·89 |
| 1970-71 .. .. .. | 53,769 | 3,173 | 25·55 | 74,842 | 59,407 | 201·20 |
| 1971-72 .. .. .. | 60,614 | 3,805 | 30·85 | 92,694 | 76,281 | 290·50 |
| 1972-73 .. .. .. | 67,772 | 4,638 | 34·29 | 1,04,486 | 87,652 | 324·65 |
| 1973-74 .. .. .. (திட்டமிட்டது) | 74,549 | 5,101 | 37·71 | 1,14,934 | 96,417 | 357·10 |



(iii) மேற்கண்ட விவரங்கள் படிப்பு உதவித் தொகைகளின் எண்ணிக்கைகளில் ஏற்பட்டு வரும் உயர்வைக் காட்டும். அத்துடன் பட்ட மேற்படிப்பு, சட்டம், தமிழ் வித்துவான் முதலிய 57 பாடமுறைகளைப் பொறுத்தவரையில் படிப்பு உதவித்தொகைகள் வழங்குவதற்கு வரையறுக்கப்பட்டிருந்த பழைய வரம்புகள் 1969–70-ல் நீக்கப்பட்டு விட்டன என்பதையும் இங்கு குறிப்பிடுவது சாலப்பொருத்தமாகும். இவ்வாறு வரம்பு நீக்கப்பட்டதனால் பின்தங்கிய வகுப்பினர், குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோர் ஆகிய வகுப்பினரைச் சேர்ந்த தகுதியுடைய மாணவர்கள் அனைவரும் இவ்வுதவியைப் பெற ஏதுவாயிற்று. பட்ட மேற்படிப்பு, சட்டம், தமிழ்ப் புலவர் போன்ற துறைகளில் ஏராளமான பேர் இதன் மூலம் பயன் பெறுகின்றனர்.

பின்தங்கிய வகுப்பினர் மற்றும் குற்றப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட வகுப்பினரின் 5 நபர்களுக்கு "பட்டயக்கணக்கர்" பாட முறை பயில உதவித் தொகை வழங்கும் பொருட்டு 1973–74 முதல் ரூ 0·30 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(iv) பிற்பட்ட மாணவர்கள் பெற்று வரும் உண்டி உறைவிட செலவுகள் போதாமையால் அல்லலுற்றனர். அரசின் நிதி நிலைமை இடம் அளிக்காவிடினும் அவர்களுக்கு அச் செலவு கீழ்க்கண்ட முறையில் உயர்த்தப்பட்டது.

| (1) | சென்னையில். | | | | புற நகரில். | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | பழையது. | | புதியது. | | பழையது. | | புதியது. | |
| | பி.வ. | கு.ப. | பி.வ. | கு.ப. | பி.வ. | கு.ப. | பி.வ. | கு.ப. |
| | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
| | (திங்கள் ஒன்றுக்கு.) | | | | | | | |
| | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. |
| 1 கலை, விஞ்ஞானம் .. | 40 | 60 | 60 | 70 | 35 | 50 | 50 | 55 |
| 2 மருத்துவம், பொறியியல், விவசாயம், கால்நடை மருத்துவம். | 40 | 70 | 60 | 75 | 35 | 70 | 55 | 70 |
| 3 தொழில், டிப்ளமோ .. | 40 | 50 | 50 | 60 | 35 | 45 | 45 | 50 |

குறிப்பு.—பி.வ.—பின்தங்கிய வகுப்பினர்.

கு.ப.—குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோர்.





(v) படிப்பு உதவித் தொகை வழங்குவதற்காக, வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கியுள்ள செலவுத் தொகைகள் வருமாறு.

| | 1972–73 செலவு. | 1973–74 திருத்திய மதிப்பீடு. | 1974–75 மதிப்பீடு. |
|---|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| பின் தங்கிய வகுப்பினர் .. .. | 324.65 | 350.40 | 383.88 |
| குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப் பட்டோர் .. .. .. .. | 34.29 | 37-48 | 41.28 |

(vi) இந்திய அரசு தெரிவித்துள்ள விதிகளின் மாதிரியில் குற்றப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோரை சேர்ந்த மாணவர்களும் குறைந்த வருமானம் உள்ள குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கும் படிப்பு உதவித் தொகைகள் வழங்கும் மற்றொரு திட்டம் 1970–71 முடிய இருந்தது. ஆண்டுதோறும் இத்திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 14.84 இலட்சமாகும். இத் திட்டம் மாற்றியமைக்கப்பட்டு இந்திய அரசு குறிப்பிட்டுள்ள கோட்பாடுகளின் அடிப்படையில் 1964–65 முதல் செயல்படுத்தப்பட்டிருந்தும்கூட, இச் செலவுக்காக இந்திய அரசு அளித்து வந்துள்ள உதவி 1969–70 முதல் நிறுத்தப்பட்டுள்ளது. 1964–65 க்கு முன்பு குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோர் உட்பட பின் தங்கிய வகுப் பினருக்காகவென்றே இத் திட்டம் வகுக்கப்பட்டது. மத்திய அரசின் உதவியின்றியே 1969–70, 1970–71ஆம் ஆண்டுகளில் நிறைவேற்றப் பட்டது. நிதி நிலைமை பற்றுக்குறையின் காரணமாகவும் மத்திய அரசு மானியமளிக்காததாலும் 1971–72ஆம் ஆண்டு முதல் இத்திட்டத்தின் கீழ் புது மனுக்கள் ஏற்கப்படவில்லை. ஏற்கனவே இச்சலுகை பெற்றவர் கள் அவர்கள் எடுத்துக் கொண்ட பாடமுறையில் தேர்ச்சி பெற்று முடிக்கும் வரை இத்திட்டம் அவர்களுக்கு உதவியளிக்கும் வகையில் மாற்றப்பட்டுவிட்டது.

6. **கட்டணச்சலுகை.**—புகுமுக வகுப்பு வரையில் எல்லா மாணவர் களிடமும், அவர்கள் எந்த வகுப்பினராயிருந்தாலும் தற்போது பள்ளி, கல்லூரி கட்டணம் ஏதும் வசூலிக்கப்படுவதில்லை. புகுமுக வகுப்பிற்கு பின்னர் பெற்றோருடைய ஆண்டு வருவாய் ரூ. 1,500 வரை உள்ள மிகப் பின்தங்கிய வகுப்பினருக்கு முழுக் கட்டணச் சலுகையும், பின்தங்கிய

வகுப்பினருக்கு அரைக்கட்டணச் சலுகையும் அளிக்கப்படுகிறது. இந்த சலுகை அளிக்கப்படுவதன் காரணமாக அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்கு ஏற்படும் வருவாய் இழப்பு பின்தங்கிய நலத்துறையினால் ஈடு செய்யப்படுகிறது. 1970–71 மற்றும் 1971–72இல் ரூ.3.30 இலட்சம் முறையே அளிக்கப்பட்டது. இதற்காக 1972–73இல் 2.90 இலட்சம் செலவிடப்பட்டது. 1973–74இல் திருத்திய மதிப்பீட்டில் ரூ. 3.15 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. 1974–75ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 3·15 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. ஏனைய கல்லூரிகளில் சம்பந்தப்பட்ட மட்டில் இவ்விழப்புத் தொகை கல்வித்துறையினரால் ஏற்கப்படுகிறது. இச்சலுகைகள் குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்படுவோர் மாணவர்களுக்கும் உண்டு.

7. **மாணவர் இல்லங்கள்,**—(i) பின் தங்கிய வகுப்பினர்களின் நலனுக்காகவும், குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோர் நலனுக்காகவும் மாணவர் இல்லங்கள் திறக்கப்பட்டு இத் துறையில் பேணப்பட்டு வருகின்றன. அவற்றில் அரிசனங்களும் இதர வகுப்பினர்களும் கீழ்க்காணும் விகிதத்தில் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர் :—

| | குற்றப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோர். (விழுக்காடு.) | பின்தங்கிய வகுப்பினர் இல்லங்கள். | அரிசன மாணவர் இல்லங்கள். |
|---|---|---|---|
| பின்தங்கிய வகுப்பினர் .. | 10 | 65 (பின்தங்கிய வகுப்பினர், குற்றப்பட்டியலிலிருந்த நீக்கப்படுவோர்) | 20 (பின்தங்கிய வகுப்பினர், குற்றப்பட்டியலிலிருந்த நீக்கப்படுவோர்) |
| குற்றப்பட்டியலிலிருந்த நீக்கப்படுவோர் | 60 | | |
| அரிசனங்கள் .. .. ... | 25 | 25 | 75 |
| இதர வகுப்பினர் .. .. | 5 | 10 | 5 |
| மொத்தம் .. | 100 | 100 | 100 |



(ii) மாணவர் இல்லங்களின் எண்ணிக்கையும் பயன் பெறுபவர்களின் எண்ணிக்கையும் வருமாறு :—

| ஆண்டு. | பின்தங்கிய வகுப்பினர். எண்ணிக்கை. | பின்தங்கிய வகுப்பினர். பயன் பெறுபவர்களின் எண்ணிக்கை. | குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோர். எண்ணிக்கை. | குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோர். பயன் பெறுபவர்களின் எண்ணிக்கை. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1966-67 .. .. | 11 | 979 | 37 | 3,619 |
| 1967-68 .. .. | 11 | 979 | 37 | 3,619 |
| 1968-69 .. .. | 11 | 979 | 37 | 3,619 |
| 1969-70 .. .. | 11 | 979 | 37 | 3,619 |
| 1970-71 .. .. | 28 | 2,144 | 40 | 4,039 |
| 1971-72 .. .. | 81 | 5,333 | 46 | 4,369 |
| 1972-73 .. .. | 123 | 7,608 | 46 | 4,369 |
| 1973-74 .. .. | 144 | 9,348 | 54 | 5,099 |

(iii) மேலே கண்ட 144 இல்லங்களில், 43 இல்லங்கள் கல்லூரி மாணவ மாணவியர்களுக்காக நடத்தப்படுகின்றன.

(iv) குற்றப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோருக்காகவும், பின் தங்கிய வகுப்பினர்களுக்காகவும் மாணவர் இல்லங்களைப் பேணுவதற்கு 1974-75 வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 60 55 இலட்சம் வகை செய்யப்பட்டுள்ளது. பின்தங்கிய வகுப்பு மாணவர்களும் குற்றப் பட்டியலி லிருந்து நீக்கப்பட்ட மாணவர்களும் தங்களுடைய படிப்பைத் தொடரு வதற்கு வசதியளிக்கும் வகையில் 1974-75-ல் மேலும் 31 பின்தங்கிய வகுப்பு இல்லங்களும் புதியதாக ஏற்படுத்த அரசு கருதியுள்ளது. அவை களில் 10 இல்லங்கள் கல்லூரி மாணவர்களுக்கானது. 21 இல்லங்கள் உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்கானது. இதற்கென ரூ. 5 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**8. பள்ளிகள்.**—(i) குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோர் நலனுக்காக இம் மாநிலம் முழுவதிலும் 277 பள்ளிகள் நடத்தப்பட்டு வருகின்றன. இது குறித்து விவரங்கள் பின்வருமாறு :—

| மாவட்டம். | உயர்நிலைப் பள்ளி. | | உயர் தொடக்கப் பள்ளி. | | தொடக்கப் பள்ளி. | |
|---|---|---|---|---|---|---|
| | எண்ணிக்கை. | மாணவர்கள். | எண்ணிக்கை. | மாணவர்கள். | எண்ணிக்கை. | மாணவர்கள். |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1. வட ஆற்காடு .. .. | .. | .. | .. | .. | 4 | 409 |
| 2. தென்னார்க்காடு .. | 1 | 259 | .. | .. | 1 | 280 |
| 3. மதுரை .. .. | 9 | 2,048 | 30 | 9,728 | 209 | 27,271 |
| 4. இராமநாதபுரம் .. | .. | .. | 1 | 264 | 6 | 853 |
| 5. திருநெல்வேலி .. | .. | .. | .. | .. | 10 | 957 |
| 6. சேலம் .. .. | .. | .. | .. | .. | 2 | 296 |
| 7. கோயம்புத்தூர் .. | .. | .. | 1 | 217 | 1 | 42 |
| 8. தர்மபுரி .. .. | .. | .. | .. | .. | 2 | 212 |
| மொத்தம் .. | 10 | 2,307 | 32 | 10,209 | 235 | 30,320 |



**(ii) பள்ளிக்கான கட்டிடங்களைக் கட்டுதல்.**—குற்றப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோருக்கான பள்ளிகள் வாடகைக் கட்டிடங்களில் உள்ளன. தகுந்த வசதிகளுடன் கூடிய கட்டிடங்களைக் கட்டுவதற்கென்று இவ்வரசு 1974-75ஆம் ஆண்டில் ரூ. 1·50 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது.

**9. நண்பகல் உணவு.**—குற்றப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட வகுப்பைச் சேர்ந்த பள்ளி மாணவர்களுக்கென இந்தத் துறையால் பள்ளிகள் நடத்தப்படுகின்றன. இப் பள்ளிகளில் உள்ள மாணவர்களுக்கு 15 பைசா வீதம் மதிய உணவு வழங்கப்படுகிறது. இத்துடன், திருநெல்வேலி, ராமநாதபுரம் மாவட்டங்களில் அரசு அல்லாத பள்ளிகளில் இவ்வகுப்பு மாணவர்கள் பெரும் எண்ணிக்கையில் சேர்ந்து கல்வி பயிலுவார்களேயானால் அவ்வாறான பள்ளிகளுக்கும் மதிய உணவு இந்தத் துறையினால் வழங்கப்படுகிறது. இவ்வாறு மதிய உணவு வழங்கப்படுவதன் நோக்கம் ஏழ்மை நிலையிலுள்ள இம்மாணவர்கள் இதனால் கவரப்பட்டு பெரும் எண்ணிக்கையில் பள்ளியில் சேர்ந்து அதன் மூலம் கல்வி பெறுவார்கள் என்பதாகும். 1974-75ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ 15·17 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதனால் 50,600 மாணவ மாணவியர் பயனடைவர். 1973-74ஆம் ஆண்டில் பயனடைந்த மாணவ-மாணவியர் தொகை 47,000 ஆகும்.

**10. உணவு மானியங்கள்.**—(i) பள்ளி மாணவர்களுக்குத் தனியாராலோ அரிஜன சேவக் சங்கம் போன்ற இதர சமூக அமைப்புக்களாலோ நடத்தப்படும் மாணவரில்லங்களில் பிற்பட்ட மற்றும் குற்றப் பரம்பரை பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட வகுப்பு மாணவர்கள் தங்கிப் படிப்பார்களேயானால் இவ்வில்லங்களை அரிஜன நலத் துறை 1955-56 வரை உணவு மானியங்கள் வழங்கலாமென அங்கீகரித்து வந்தது. இவ்வித இல்லங்கள் மானியம் பெறும் இல்லங்கள் என அழைக்கப்பட்டன. 1956-57 முதல் இவ்வாறான புதிய இல்லங்களுக்கு அங்கீகாரம் அளிப்பது நிறுத்தப்பட்டது. அத்துடன் நல்ல முறையில் நடைபெறாத மானியம் பெறும் இல்லங்களையும் படிப்படியாக அரசு ஏற்று நடத்தத் துவங்கியவுடன் அரசு இல்லங்களும் தேவைப்படும் இடங்களில் புதிதாகத் துவக்கப்பட்டு வருகின்றன. இப்போது மானியம் பெறும் இல்லங்கள் 56 இருக்கிறது. இவைகளுக்கு மாணவருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 20வீதம் ஆண்டில் 10 மாதங்களுக்கு உணவு மானியம் வழங்கப்படுகிறது. இதற்கென 1973-74ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட தொகை ரூ 5·73 இலட்சமாகும். 1974-75ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இவ்வுணவு மானியத்திற்கென ரூ. 7·05 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் மானியத் தொகையை ரூ. 20-லிருந்து 25 ஆக உயர்த்துவதற்கும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

(ii) **கல்லூரி மாணவர்கள்.**—கல்லூரி மாணவர்களுக்கு உணவு மானியம் வழங்கப்படுவதில்லை. ஆனால் இவர்களுக்கு அளிக்கப்படும் கல்வி உதவித் தொகையுடன் உணவு, இருக்கை வசதிக்கென ஒரு தொகை சேர்த்து வழங்கப்படுகிறது. கல்வித் துறை, அரிசன நலத் துறை, பிற்பட்டோர் நலத் துறை ஆகியவற்றால் அங்கீகரிக்கப்படும் மாணவர் இல்லங்களிலும் தங்கியுள்ள மாணவர்கள் இந்த உதவி பெறுவார்கள். மாணவர்களாலும், தனியார்களாலும் அமைக்கப்படும் இவ்வாறான மாணவர் இல்லங்களை அங்கீகரித்து உணவு, இருக்கை வசதித் தொகை வழங்கப்படுகிறது. இதன் விவரங்கள் வருமாறு :—

| வரிசை எண்ணும், மாவட்டமும். | அங்கீகரிக்கப்பட்ட இல்லங்கள். 1972-73. | 1973-74. |
|---|---|---|
| 1 சென்னை .. .. .. | 6 | 1 |
| 2 வட ஆற்காடு .. .. .. | 3 | 1 |
| 3 திருச்சிராப்பள்ளி .. .. | 20 | 9 |
| 4 புதுக்கோட்டை .. .. | .. | 7 |
| 5 மதுரை .. .. .. .. | 2 | .. |
| 6 கோயம்புத்தூர் .. .. | 2 | .. |
| 7 தஞ்சாவூர் .. .. .. | .. | 1 |
| மொத்தம் .. | 33 | 19 |

இவ்விதம் வழங்கப்படும் உண்டி, உறைவிட வீதங்கள் பாரா 5 (iv)-ன் கீழ்க் கண்டுள்ள அட்டவணையில் கூறப்பட்டுள்ளன.

11. **புத்தகங்களும், கற்பலகைகளும்.**—குற்றப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோர் பள்ளிகளில் உள்ள மாணவர்களுக்கு அவர்களுடைய பெற்றோரின் ஏழ்மையான பொருளாதார நிலையைக் கருத்திற் கொண்டு புத்தகங்களும், கற்பலகைகளும் இலவசமாக வழங்கப்படுகின்றன. 1969-70-ல் 7,600 மாணவர்கள் பயன்பெற்றனர். பயன் பெறும் மாணவர்களின் எண்ணிக்கை ஆண்டுக்காண்டு கூடுதலாகிக்கொண்டே வந்து, 1973-74-ல் 20,000 மாணவர்கள் பயனடையும் நிலையை அடைந்துள்ளது. இந் நிலை தொடர்ந்து நீடிக்கப்படும்.



12. **சீருடைகள்.**—(i) குற்றப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோருக்கான பள்ளிகள் மற்றும் மாணவர் இல்லங்கள் ஆகியவற்றில் ஆண்டுக்கு இரு முறை உடைகள் வழங்கப்படுகின்றன. பள்ளி திறந்தவுடன் ஒரு முறையும், அடுத்து பொங்கல் பண்டிகையின்போது ஒரு முறையும் அவை வழங்கப் படுகின்றன.

(ii) மதுரை மாவட்டத்தில் இத் திட்டம் முதல் மூன்று வகுப்புகளில் பயிலும் மாணவர்களுக்கு மட்டும் பயன்படும் வகையில் 1969-70-ல் தொடங்கப்பட்டது. அவர்களுக்கு ஆண்டுக்கு ஒரு முறை மட்டும் உடைகள் வழங்கப்பட்டன. இப்போது இரு முறை வழங்கப்படுகின்றன. 1972-73-ல் 3·91 இலட்சம் செலவிடப்பட்டது. 1973-74-ல் திருத்திய மதிப்பீட்டில் ரூ 7·77 இலட்சம் செலவாகுமென எதிர்பார்க்கப்படுகிறது. 1974-75-ல் இதற்கென்று ரூ 7·81 இலட்சம் செலவாகக் கூடும்.

(iii) 1971-72 முதல் பின்தங்கிய வகுப்பினர் இல்லங்களில் தங்கி உள்ள அனைவருக்கும் ஆண்டு ஒன்றுக்கு 2 உடைகள் வழங்கப்படுகிறது. 1973-74 திருத்திய மதிப்பீட்டில் ரூ 2·88 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. 1974-75 வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ 3·11 இலட்சம் ஒதுக்கப் பட்டுள்ளது.

13. **பயிற்சி அளித்தல்.**—(i) விடுதியில் தங்கியிருக்கும் குற்றப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோர் மற்றும் பின்நிலை வகுப்பு மாணவர்களுக்கு அவர்களின் தரம் தாழ்ந்துள்ள பாடங்களில் தனிப் பயிற்சி அளிப்பதற்கென பகுதி நேரப் பயிற்சி ஆசிரியர்கள் நியமிக்கப்படுகின்றனர். இதற்காக 1972-73ஆம் ஆண்டு ரூ 0·33 இலட்சமும் செலவிடப்பட்டது. 1973-74 திருத்திய மதிப்பீட்டில் ரூ 0·54 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. 1974-75-ல் புதியதாகத் திறக்கப்படும் இல்லங்களையும் சேர்த்துக் கூடுதல் தொகை தேவைப்படும்.

(ii) கல்லூரிகளில் முதலாவது ஆண்டு பி.எஸ்.சி. படிக்கும் திறமையுள்ள பிற்பட்ட, தாழ்த்தப்பட்ட மாணவர்களை எல்லா மாவட்டங்களிலிருந்தும் ஒன்று திரட்டி அவர்களின் தகுதி முன்னேற்றத்திற்கு தகுதி மிக்க பேராசிரியர்களின் விரிவுரை மூலமும், சென்னையிலுள்ள ஆய்வுக்கூட வசதிகளைக் கொண்டும், ஒரு சிறப்புத் தனிப் பயிற்சி வகுப்பு சென்னையில் 3 வாரங்களுக்கு செப்டம்பர்-அக்டோபர் 1972-ல் நடத்தப்பட்டது. இவ்வாறான பயிற்சி மறுமுறை 1973-ல் மே-ஜுன் திங்களில் சென்னையில் நடைபெற்றது. மூன்றாவது முறையாக இவ்வகுப்புகள் 1973-ல் மதுரை, திருச்சி, கோவை நகர்களில் டிசம்பர் 1973 ஜனவரி 1974 மாதங்களில்

நடத்தப்பட்டது. இத் திட்டம் கல்லூரி கல்வி இயக்குநரால் நடத்தப்படுகிறது. ஏற்படுகிற செலவை பிற்பட்டோர் துறையும், அரிசன நலத் துறையும் ஏற்றுக்கொள்கின்றன.

14. **ஆசிரியர்களுக்கு வீடுகள்.**—குற்றப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோருக்கென நடத்தப்படுகின்ற பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு வீடு ஒன்று ரூ 6,200 செலவில் (ஒவ்வொரு வீட்டு மனைக்கு உரிய விலையையும் சேர்த்து) வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுகின்றன. 1972–73–ல் 15 வீடுகள் கட்டப்பட்டது. 1973–74–ல் 15 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. இதற்கென திருத்திய மதிப்பீட்டில் ரூ 0·90 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. 1974–75–ல் 20 வீடுகள் கட்ட வரவு-செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ 1·20 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

15. **ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். மற்றும் அத்துடன் தொடர்புடைய வேலைகளுக்கான தேர்வுகளுக்கு சிறப்புப் பயிற்சியளிக்கும் நிலையம்.**—அனைத்து இந்தியப் பணிகளுக்காகவும், பொதுத் துறை, தனியார் துறையில் இயங்கி வரும் தொழில் நிறுவனங்களிலுள்ள அனைத்திந்திய பணிகளுக்கிணையான பதவிகளுக்காகவும், நடத்தப்படும் போட்டித் தேர்வுகளுக்குப் பின்தங்கிய வகுப்பினரை பயிற்சியளிக்க சிறப்புப் பயிற்சி நிலையம் ஒன்று 1971-ஆம் ஆண்டு துவங்கப்பட்டது. இந் நிலையம் தொடங்கிய 1971–72-ல், 12 மாணவர்கள் பயிற்சியடைந்து, 8 பேர் தேர்வு எழுதி, 3 பேர் நேர்முகத் தேர்வுக்குரிய தகுதியைப் பெற்றனர். 1972–73–ல் இந் நிலையத்தில் அனுமதிக்கப்பட்ட 50 மாணவர்களில், 34 பேர் தேர்வு எழுதி, 6 பேர் நேர்முகத் தேர்வுக்குத் தகுதி பெற்றனர். தற்பொழுதுள்ள பிரிவில் 50 பேர் பயிற்சி பெற்று வருகின்றனர்.

மைய அரசுப் பணியாளர் தேர்வு ஆணைக் குழு நடத்தும் தேசிய பாதுகாப்புக் கழகத்தின் நுழைவுத் தேர்வு போன்ற அனைத்து இந்திய தேர்வில், பிற்பட்ட, தாழ்த்தப்பட்ட மாணவர்கள் போட்டியிடுவதை ஊக்குவிப்பதற்காக, சிறப்புப் பயிற்சி நிலையத்தில் இவ் வரசு ஒரு புத்தறிவுப் பயிற்சியைத் தொடங்கியுள்ளது. இத் திட்டத்தின் மூலம் 15 பின் தங்கிய மாணவர்களுக்கும், 15 தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் மாணவர்களுக்கும் பயிற்சி அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. 6 பின் தங்கிய, 3 தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த மாணவர்கள் இப் பயிற்சியில் இதுவரை சேர்ந்துள்ளனர்.



16. **பொருளாதார உயர்வு.**—(i) சலவைத் தொழிலாளர்களுக்கும், முடி திருத்துவோர்களுக்கும், இலவசமாகக் கருவிகள் வழங்கப்படும் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படுகின்றது. சென்னையில் 1971-72 முதல் இத் திட்டம் அமுல் படுத்தப்படுகிறது. இத் திட்டத்தின் பயன் பெற்றவர்களின் எண்ணிக்கை வருமாறு :—

| ஆண்டு. | பயன் பெற்றவர்களின் எண்ணிக்கை. |
|---|---|
| 1966–67 .. .. .. | 1,440 |
| 1967–68 .. .. .. | 1,425 |
| 1968–69 .. .. .. | 1,498 |
| 1969–70 .. .. .. | 1,542 |
| 1970–71 .. .. .. | 1,512 |
| 1971–72 .. .. .. | 1,633 |
| 1972–73 .. .. .. | 1,639 |
| 1973–74 .. .. .. | 4,081 |
| 1974–75 .. .. .. | 8,000* |

* எதிர்பார்க்கப்படும் எண்ணிக்கை.

(ii) இத்திட்டத்திற்கென 1973–74–ல் திருத்திய மதிப்பீட்டில் ரூ 4·95 இலட்சம் 4,081பேர் பயனடைய ஒதுக்கப்பட்டுள்ளது. 1974–75 வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டிலும் ரூ 10·95 இலட்சம் 8,000 பேர் பயனடைய ஒதுக்கப்பட்டுள்ளது. பயனடைவோரின் எண்ணிக்கை அதிகரித்தமையால் இவ்வினத்திற்கான செலவு 1974–75–ல் இரட்டிப்புத் தொகைக்கு மேல் வகை செய்யப்பட்டுள்ளது.

(iii) சலவைத் துறைகள் கட்டுவது, சலவைத் தொழிலாளர்களுக்குச் செய்யப்படும் முக்கிய வசதியாகும். இதுவரை மாநிலத்தில் 21 இடங்களில் சலவைத் துறைகள் கட்ட நிதி உதவி அளிக்கப்பட்டுள்ளது.

(iv) இரண்டாம் திட்ட காலத்திலிருந்து மூன்று பொது நோக்கு பொறியியல் பணி மனைகள் அமைக்கப்பட்டு நடத்தப்பட்டு வருகின்றன. இராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூரில் ஒன்றும், மதுரை மாவட்டம் செக்கனூரணியில் ஒன்றும் திருநெல்வேலி மாவட்டம் வீரகேரளம்புதூரில் ஒன்றுமாக இவைகள் அமைக்கப்பட்டுள்ளன. இந்தப் பணிமனைகள் தொழில் வணிக இயக்குநர் பார்வையின்கீழ் இயங்கி வருகின்றன. இங்கு பற்றவைத்தல், சேர்த்தல் முதலிய தொழில்களில் பயிற்சியளிக்கப்படுகின்றன.

(v) இத் தொழிற் கூடங்களில் பயிற்சி பெற்று பொருளாதார வசதிக் குறைவினால் தானாகத் தொழில் நடத்த முடியாதவர்களுக்கு இலவசத் தொழில் கருவிகள் அளிக்கும் திட்டத்திற்காக 1972-73ஆம் ஆண்டு முதல் நிதி ஒதுக்கப்படுகிறது. கடந்த ஆண்டில் இதற்காக ஒதுக்கப்பட்ட தொகை ரூ 0·25 இலட்சம். இதனால் 26 நபர்கள் கருமார் தொழில், பிட்டர் தொழில் போன்ற தொழில்களுக்கான கருவிகளை இலவசமாகப் பெற தேர்ந்தெடுக்கப்பட்டனர். அக்கருவிகள் 1973-74-ல் வழங்கப்படும். இதே போல் 1974-75-லும் வழங்கப்படும். இதை தவிர சென்னை பிரிஸ்லி நகர் குடியிருப்பில் பிரம்பு நாற்காலி பயிற்சி நிலையம் ஒன்றும், மாநில வணிகத் தொழில் இயக்குநரால் பேணப்பட்டு வருகின்றன. சமூக நல இயக்குநரால் நெல்லை மாவட்டம் பெருங்குளத்தில் ஆயத்த ஆடைகள் தயாரிப்புப் பயிற்சி நிலையமும், தர்மபுரி மாவட்டம் சாமியாபுரத்தில் மூங்கில் வேலை நிலையமும், மதுரை மாவட்டம் உசிலம்பட்டியில் தையல் தொழில் நிலையமும் நடத்தப்படுகின்றன. மேற்சொல்லப்பட்ட நிறுவனங்கள் குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோரின் பயன் கருதி இத்துறையின் நிதியின் மூலம் நடத்தப்படுகின்றன. இந்த நிலையங்களின் விவரம் அட்டவணையில் காண்க. 1972-73-ல் இந்நிலையங்களை நடத்த ரூ 2·56 லட்சம் செலவிடப்பட்டது. 1973-74-ல் திருத்திய மதிப்பீட்டில் ரூ 2·50 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதற்கென 1974-75ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ 2·59 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

(vi) இதைத் தவிர கன்னியாகுமரி மாவட்டம், பாக்கோட்டில் கயிறு மற்றும் தும்புப்பொருள் பயிற்சி நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. மார்த்தாண்டத்தைச் சுற்றியுள்ள பின்தங்கிய வகுப்பு பெண்களை பயிற்றுவிக்க பாக்கோட்டில் உள்ள தும்புப்பொருள் பயிற்சி நிலையம் மார்த்தாண்டத்திற்கு மாற்றப்பட்டுள்ளது. இதற்கென 1972-73ஆம் ஆண்டு ரூ 0·36 லட்சம் செலவிடப்பட்டது. 1973-74 திருத்திய மதிப்பீட்டிலும் 1974-75 வரவு-செலவு மதிப்பீட்டிலும் தலா ரூ 0·35 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இந் நிலையங்களினால் 40 பேர் பயனடைகின்றனர்.

(vii) 1973-74ஆம் ஆண்டில், நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளிலிருந்து கடன் பெற்று சிறு குடிசைத் தொழில்கள் தொடங்கி பின்தங்கிய வகுப்பினர் முதலியோர் வேலை வாய்ப்பு ஏற்படுத்திக்கொள்ள இவ்வரசு ஓர் திட்டத்தை தீட்டியது. வங்கியிலிருந்து கடனுதவி பெறுவதற்கு உறுதுணையாயிருக்க ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தனித் துணை தாசில்தார் நியமனம் செய்யப்பட்டுள்ளார். இத் திட்டத்தின் கீழ், பின்தங்கிய வகுப்பினரைச் சேர்ந்த 5,000 பேர்கள் வங்கியிலிருந்து கடனுதவி பெற்றுள்ளனர்.





17. **வேளாண்மை.**—குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோர் தங்கள் வேளாண்மையை மேம்படுத்திக்கொள்ள அவர்களுக்கு பாசனக் கிணறுகள் தோண்டுவதற்கு கிணறு ஒன்றுக்கு ரூ 2,000 வரை மான்ய உதவி கொடுக்கப்படுகிறது. இத் திட்டத்தின்கீழ் 1974-75ஆம் ஆண்டில் சுமார் 30 பேர்கள் பயன் பெறுவர்.

18. **சுகாதாரம், வீட்டு வசதி, ஏனைய திட்டங்கள்—வீட்டு வசதி.**—1956-57ஆம் ஆண்டிலிருந்து குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோருக்கு கடன் மற்றும் மான்ய அடிப்படையில் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுகின்றன. இத்தகைய வீடுகள் உறுதியாக இல்லாததாலும் இயற்கைப் பேரிடர்களைத் தாங்கக் கூடிய வகையில் இல்லாததினாலும் மாற்றியமைக்கப்பட்ட திட்டத்தின் மூலம் ரூ 1,200 செலவில் நல்ல வீடுகள் கட்டிக் கொடுக்கத் திட்டமிடப்பட்டது. இதற்கான தொகையில் ரூ 900 உதவித் தொகையாகவும் ரூ 300 கடனாகவும், மாநில அரசு வழங்கும். களிமண் பாங்கான இடங்களில் வீடு கட்டுவதற்கு ரூ 1,600 செலவிடப்படும். இதற்கென 1973-74 திருத்திய மதிப்பீட்டில் ரூ 1·56 இலட்சம் மானியத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. 1974-75-க்கு ரூ 2 இலட்சம் மானியத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

19. **குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோருக்காகச்செலவாகும் தொகை பற்றிய விவரங்கள்.**—(1) நான்காவது ஐந்தாண்டு திட்ட காலத்தில், இம்மாநில குற்றப்பரம்பரைச் சட்டத்திலிருந்து நீக்கப்பட்டோரின் நலனுக்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளுக்கு மத்திய அரசு திட்டத்தின்கீழ் ரூ 88·15 இலட்சம் மானியமாக அளிக்கப்பட்டது. ஐந்தாண்டுத் திட்டங்களின்கீழ் செலவழிக்கப்பட்ட தொகையும் மத்திய அரசு வழங்கிய மானியமும் வருமாறு :—

நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோரின் நலன்—

| ஆண்டு. | மாநில அரசு திட்டமிட்ட தொகை. | மத்திய அரசு வழங்கிய மானியம். | மாநில அரசு செலவழித்த தொகை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| 1969-70 .. .. .. | 18·36 | 16·00 | 17·83 |
| 1970-71 .. .. .. | 21·91 | 18·50 | 24·08 |
| 1971-72 .. .. .. | 53·19 | 18·50 | 45·07 |
| 1972-73 .. .. .. | 58·14 | 18·50 | 49·61 |
| 1973-74 .. .. .. (திருத்திய மதிப்பீடு) | 65·15 | 16·65 | 48·50 |

குறிப்பு :—மாநில அரசு திட்டமிட்ட தொகை என்பது திட்டமில்லாத மாநில அரசு செலவினங்களைத் தவிர்த்த தொகையை மட்டும் குறிக்கும்.

[1974 மார்ச் 16

ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப் பட்டோரின் நலனுக்கான திட்டங்களை மத்திய அரசு திட்டமாக ஏற்க மைய அரசு மறுத்து விட்டது. எனினும், இத்திட்டங்களை மத்திய அரசுத் திட்டத்தின்கீழ் கொண்டுவரும்படி மத்திய அரசை அணுகி வருகிறேம்.

20. பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தலைமையின்கீழ் மாநில பின்தங்கிய வகுப்பினர் ஆலோசனைக் குழு ஒன்று அமைக்கப் பட்டுள்ளது. இது ஆறு மாதங்களுக்கொரு முறை கூடி, பின்தங்கிய வகுப்பினர் நலனுக்காக வழிமுறைகளைப் பற்றி கருத்துக்களைத் தெரிவிக்கின்றது. இந்த ஆலோசனைக் குழு கூட்டத்துடன் பின்தங்கிய வகுப்பினருக்கான பல்வேறு திட்டங்களின் முன்னேற்றத்தை மறு ஆய்வு செய்யவும் அவைகளைச் செயல்படுத்துவதில் உள்ள இடையூறுகளைக் கண்டறிய வும், மாவட்ட நல அலுவலர்கள் மாநாடும் அவ்வப்போது நடத்தப் படுகின்றது. அதைப்போல் மதுரை மாவட்டத்தில் வாழும் பிரமலை கள்ளர்கள் முன்னேற்றத்தை விரைவு படுத்தவும் பரிந்துரைகள் வழங்கவும் மாவட்ட அளவில் செய்முறைக் குழு மாவட்ட ஆட்சியர் தலைமையில் செயல்பட்டு வருகின்றது.

21. பயிற்சித் திட்டங்களைச் செயல்படுத்துவதில் பின்தங்கிய வகுப்பினர் துறைக்கு தொழில் வணிகத்துறை இயக்குநர், சமூக நலத்துறை இயக்குநர் ஆகியோர் உதவி புரிகின்றனர்.

22. பின்தங்கிய வகுப்பினர், குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோர் ஆகியோரது முன்னேற்றத்திற்கான செலவு 1967-68இல் ரூ 161·40 இலட்சமாக இருந்தது. 1968-69இல் ரூ 187·09 இலட்சமாகவும், 1969-70இல் ரூ 265·46 இலட்சமாகவும் அதிகரித்தது. 1970-71ஆம் ஆண்டில் ரூ 320·14 இலட்சம் செலவழிக்கப்பட்டது. 1971-72ஆம் ஆண்டு ரூ 432·57 இலட்சமாக இத்தொகை உயர்ந்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும். 1972-73இல் ரூ 485·86 இலட்சம் செலவழிக்கப்பட்டது. 1973-74 திருத்திய மதிப்பீடு ரூ 559·82 இலட்சமாகும். 1974-75-க்கான மதிப்பீடு ரூ 608·06 இலட்சமாகும். இத்துடன் "கடன்களும், முன்பணங்களும்" என்ற தலைப்பின்கீழ், தனியாக ரூ 9·25 இலட்சமும், "கட்டிடச் செலவினம்" என்ற தலைப்பின்கீழ் ரூ 1·50 இலட்சமும் இத்துறைக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 1974-75ஆம் ஆண்டிற்கான மொத்த ஒதுக்கீடு ரூ 618·81 இலட்சங்களாகும்.



1974 மார்ச் 16]

23. 1973ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் வந்த கருநாடக பின்தங்கிய வகுப்பினர் நலக்குழுவின் உறுப்பினர்கள் இம் மாநிலத்தில் பின்தங்கி யோர் நலத்திற்காக செயல்படுத்தப்படும் திட்டங்களைத் தீர ஆய்வு செய்தபின் பெருமளவு பாராட்டி, பின்தங்கியோருக்கான நல்ல தகவல்கள் பெற உதவியதென கருத்து தெரிவித்தனர்.

24. 1967-68இல் ரூ 161·40 இலட்சம் என பின்தங்கியோர் நலத்திற்காக செலவழிக்கப்பட்ட தொகைப் படிப்படியே உயர்ந்து 1974-75இல் ரூ 608 இலட்சத்தை எட்டிப் பிடித்துள்ளது. இதிலிருந்து பின்தங்கியோரின் நிலையை சீர்படுத்தி, வாழ்வை செம்மைப் படுத்தியதில் பின்தங்கிய வகுப் பினர் நலத்துறை எய்திய விரைவான முன்னேற்றம் புலப்படுகிறது.

25. இங்கு குறிப்பிடத்தக்க அம்சம் என்னவெனில், இவ்வரசு லப்பயி னரை, எம்மொழி பேசுபவராயினும் சரி, தக்காணிய முஸ்லீம் வகுப்பினரை யும், அவர்களது சமுதாயம் கல்வி முதலியவற்றில் பின்னடைந்த நிலையைக் கருதி பின்தங்கிய வகுப்பினரென அறிவிக்கப்பட்டதாகும். இதனால் பயனுறுவோர் 6 இலட்சம் லப்பைகளும், 8 இலட்சம் தக்காணிய முஸ்லீமுமாவர். இந்த இரண்டு வகுப்பினருடன், கீழ்க்காணும் 4 வகுப் பினரும் பின்தங்கிய வகுப்பினர் பட்டியலில் சேர்க்கப்பட்டனர் :—

(1) வெல்லம்பர்

(2) சாலி வாகன

(3) யவன

(4) பன்னிரண்டாம் செட்டியார் அல்லது உத்தம செட்டியார்.

இச்சலுகையினால் மேற்கூறிய வகுப்பில் உள்ள சுமார் 20,000 பேர்கள் பயன் பெறுவர்.

என். வி. நடராசன்,
பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர்.

## அட்டவணை 'அ'

1974-75 மதிப்பீடு—ரூ. 608·06 இலட்சம்.

| (1) | நிர்வாகம், ரூ. 9·38 இலட்சம். ஐந்தாண்டுத் திட்டங்கள், ரூ. 71·10 இலட்சம். பிற்பட்ட வகுப்பினர். (2) | நிர்வாகம், ரூ. 9·38 இலட்சம். ஐந்தாண்டுத் திட்டங்கள், ரூ. 71·10 இலட்சம். குற்றப் பட்டியலிருந்து நீக்கப் பட்டோர். (3) | திட்டங்கள், ரூ. 598·68 இலட்சம். ஐந்தாண்டுத் திட்டத்தில் சேராதவை, ரூ. 527·58 இலட்சம். பிற்பட்ட வகுப்பினர். (4) | திட்டங்கள், ரூ. 598·68 இலட்சம். ஐந்தாண்டுத் திட்டத்தில் சேராதவை, ரூ. 527·58 இலட்சம். குறைந்த வருவாய். (5) | திட்டங்கள், ரூ. 598·68 இலட்சம். ஐந்தாண்டுத் திட்டத்தில் சேராதவை, ரூ. 527·58 இலட்சம். குற்றப் பட்டியலிருந்து நீக்கப் பட்டோர். (6) |
|---|---|---|---|---|---|
| படிப்பு உதவி .. .. .. .. | 33·50 | 3·60 | 350·38 | 4·00 | 37·68 |
| பள்ளிகள் .. .. .. .. .. | .. | 0·64 | .. | .. | 47·52 |
| மதிய உணவு .. .. .. .. | .. | 2·17 | .. | .. | 13·00 |
| புத்தகங்களும் சீருடைகளும் .. .. | 0·23 | 3·77 | 2·88 | .. | 4·29 |
| உணவு மானியம் .. .. .. .. | 1·01 | .. | 5·78 | .. | 0·26 |
| மாணவரில்லங்கள் .. .. .. | 5·14 | 0·35 | 36·40 | .. | 18·66 |
| பல்கலைக் கழகங்களுக்கு ஈட்டுத் தொகை .. | .. | .. | 3·15 | .. | |
| ஆசிரியர் வீட்டு வசதி .. .. .. | .. | 1·20 | .. | - | .. |
| வேளாண்மை .. .. .. .. | .. | 1·70 | .. | .. | .. |
| கைத்தொழில் .. .. .. .. | .. | 2·59 | 0·35 | .. | 0·45 |
| தொழிற் கருவிகள் .. .. .. | 10·95 | 0·25 | .. | .. | .. |
| குடிநீர் வசதி .. .. .. .. | .. | .. | .. | .. | 0·03 |
| சலவைத் துறைகள் .. .. .. | 2·00 | .. | .. | .. | .. |
| ஐ.ஏ.எஸ். பயிற்சி நிலையம் .. .. | .. | .. | 2·20 | .. | .. |
| வீடுகள் .. .. .. .. .. | .. | 2·00 | .. | .. | .. |
| மாணவர்களுக்கு பயிற்சி .. .. .. | .. | .. | 0·55 | .. | .. |
| மொத்தம் .. | 52·83 | 18·27 | 401·69 | 4·00 | 121·89 |

## அட்டவணை 'ஆ'

### பிற்பட்டோர் நல உணவு இல்லங்கள் உள்ள இடங்கள்.

1973-74.

| சென்னை மாவட்டம். | எண்ணிக்கை. |
|---|---|
| 1 அரசினர் மாணவியர் இல்லம், அடையாறு .. .. | 150 |
| 2 அரசினர் கல்லூரி மாணவர் இல்லம், தென் சென்னை .. | 150 |
| 3 அரசினர் கல்லூரி மாணவர் இல்லம், வடசென்னை .. | 100 |
| 4 அரசினர் கல்லூரி மாணவியர் இல்லம், சென்னை .. | 50 |
| 5 அரசினர் தொழில் நுட்பக் கல்லூரி மாணவர் இல்லம், சென்னை .. .. .. .. .. .. | 55 |
| 6 அரசினர் கல்லூரி மாணவர் இல்லம், தி. நகர், சென்னை .. .. .. .. .. .. | 100 |

| திருநெல்வேலி மாவட்டம். | |
|---|---|
| 7 அரசினர் மாணவியர் இல்லம், புதூர் .. .. .. | 75 |
| 8 அரசினர் மீனவ மாணவர் இல்லம், தூத்துக்குடி .. | 150 |
| 9 அரசினர் மாணவர் இல்லம், ஏருவாடி .. .. | 30 |
| 10 அரசினர் மாணவர் இல்லம், பணிக்க நாடார் குடியிருப்பு | 50 |
| 11 அரசினர் மாணவர் இல்லம், ஸ்வாமிநாதபுரம் .. | 49 |
| 12 அரசினர் கல்லூரி மாணவர் இல்லம், திருநெல்வேலி. | 50 |
| 13 அரசினர் கல்லூரி மாணவர் இல்லம், தூத்துக்குடி .. | 50 |
| 14 அரசினர் மாணவர் இல்லம், மேலப்பாளையம் .. .. | 50 |

| தஞ்சாவூர் மாவட்டம். | |
|---|---|
| 15 அரசினர் மாணவர் இல்லம், மகாதேவப்பட்டினம் .. | 50 |
| 16 அரசினர் மாணவர் இல்லம், பேராவூரணி .. .. | 50 |
| 17 அரசினர் மாணவியர் இல்லம், அறந்தாங்கி .. .. | 40 |
| 18 அரசினர் மாணவர் இல்லம், மன்னார்குடி .. .. | 100 |
| 19 அரசினர் மாணவியர் இல்லம், வலங்கிமான் .. .. | 50 |
| 20 அரசினர் மாணவர் இல்லம், நீடாமங்கலம் .. .. | 75 |
| 21 அரசினர் மாணவர் இல்லம், உம்பலாச்சேரி .. .. | 30 |



| தஞ்சாவூர் மாவட்டம்—தொடர்ச்சி. | எண்ணிக்கை. |
|---|---|
| 22 அரசினர் மாணவர் இல்லம், வேதாரண்யம் .. .. | 50 |
| 23 அரசினர் கல்லூரி மாணவர் இல்லம், தஞ்சாவூர் டவுன். | 175 |
| 24 அரசினர் மாணவர் இல்லம், ஆலத்தூர் .. .. | 40 |
| 25 அரசினர் கல்லூரி மாணவர் இல்லம், கும்பகோணம் .. | 50 |
| 26 அரசினர் கல்லூரி மாணவர் இல்லம், திருவாரூர் .. | 50 |
| 27 அரசினர் கல்லூரி மாணவர் இல்லம், மாயவரம் .. | 50 |
| 28 அரசினர் மாணவர் இல்லம், கண்ணுத்தான்குடி .. | 50 |

| தென்னார்க்காடு மாவட்டம். | |
|---|---|
| 29 அரசினர் மாணவர் இல்லம், விருத்தாசலம் .. .. | 100 |
| 30 அரசினர் மாணவர் இல்லம், பெண்ணாடம் .. .. | 90 |
| 31 அரசினர் மாணவர் இல்லம், பெரியகுப்பம் .. .. | 70 |
| 32 அரசினர் மாணவர் இல்லம், சேத்தியாதோப்பு .. | 140 |
| 33 அரசினர் மாணவர் இல்லம், சிறுபாக்கம் .. .. | 75 |
| 34 அரசினர் மாணவர் இல்லம், திருநாவலூர் .. .. | 50 |
| 35 அரசினர் கல்லூரி மாணவர் இல்லம், கடலூர் .. .. | 75 |
| 36 அரசினர் மாணவர் இல்லம், கம்மாபுரம் .. .. | 50 |
| 37 அரசினர் கல்லூரி மாணவர் இல்லம், கடலூர் .. .. | 50 |
| 38 அரசினர் கல்லூரி மாணவர் இல்லம், திண்டிவனம் .. | 50 |
| 39 அரசினர் கல்லூரி மாணவர் இல்லம், விருத்தாசலம் .. | 150 |
| 40 அரசினர் மாணவர் இல்லம், தேவபாண்டலம் .. | 50 |
| 41 அரசினர் மாணவர் இல்லம், சோமாந்தர்குடி .. | 50 |

| மதுரை மாவட்டம். | |
|---|---|
| 42 அரசினர் மாணவர் இல்லம், அலங்காநல்லூர் .. .. | 104 |
| 43 அரசினர் மாணவர் இல்லம், திருநகர் .. .. .. | 80 |
| 44 அரசினர் மாணவர் இல்லம், தல்லாகுளம் .. .. | 110 |
| 45 அரசினர் மாணவர் இல்லம், தர்மபுரி (பெரிய குளம் தாலுகா) .. .. .. .. .. .. | 40 |
| 46 அரசினர் மாணவர் இல்லம், பெரியகுளம் .. .. | 80 |
| 47 அரசினர் மாணவர் இல்லம், செக்காபட்டி .. .. | 75 |

[1974 மார்ச் 16

மதுரை மாவட்டம்—தொடர்ச்சி.

| | | எண்ணிக்கை. |
|---|---|---|
| 48 | அரசினர் மாணவர் இல்லம், சின்னுளப்பட்டி .. .. | 80 |
| 49 | அரசினர் மாணவர் இல்லம், மேலவளவு .. .. | 50 |
| 50 | அரசினர் மாணவர் இல்லம், போடிநாயக்கனூர் .. | 120 |
| 51 | அரசினர் மாணவர் இல்லம், தவாடிப்பட்டி .. | 80 |
| 52 | அரசினர் கல்லூரி மாணவர் இல்லம், மதுரை .. | 50 |
| 53 | அரசினர் கல்லூரி மாணவர் இல்லம், திண்டுக்கல் .. | 50 |
| 54 | அரசினர் மாணவர் இல்லம், அச்சம்பட்டி .. .. | 50 |
| 55 | அரசினர் கல்லூரி மாணவர் இல்லம், மேலூர் .. .. | 100 |

தர்மபுரி மாவட்டம்.

| | | |
|---|---|---|
| 56 | அரசினர் கல்லூரி மாணவர் இல்லம், தர்மபுரி .. | 210 |
| 57 | அரசினர் மாணவியர் இல்லம், பாப்பாரப்பட்டி .. | 50 |
| 58 | அரசினர் கல்லூரி மாணவர் இல்லம், கிருஷ்ணகிரி .. | 50 |
| 59 | அரசினர் மாணவர் இல்லம், வேலப்பேட்டை .. .. | 50 |
| 60 | அரசினர் மாணவர் இல்லம், ஹோசூர் .. .. | 50 |
| 61 | அரசினர் மாணவர் இல்லம், பாலக்கோடு .. .. | 60 |
| 62 | அரசினர் மாணவர் இல்லம், ஜக்க சமுத்திரம் .. .. | 50 |
| 63 | அரசினர் மாணவர் இல்லம், ஹரூர் .. .. .. | 50 |
| 64 | அரசினர் மாணவர் இல்லம், அஞ்சட்டி .. .. | 50 |
| 65 | அரசினர் மாணவர் இல்லம், பென்னகரம் .. .. | 50 |

இராமநாதபுரம் மாவட்டம்.

| | | |
|---|---|---|
| 66 | அரசினர் மாணவர் இல்லம், பாகநேரி .. .. .. | 30 |
| 67 | அரசினர் மாணவர் இல்லம், கண்டரமாணிக்கம் .. | 30 |
| 68 | அரசினர் மாணவர் இல்லம், வடக்கு சமுத்திரம் .. | 50 |
| 69 | அரசினர் மாணவியர் இல்லம், நாட்டரசன்கோட்டை .. | 30 |
| 70 | அரசினர் மாணவர் இல்லம், திருக்கோஷ்டியூர் .. | 50 |
| 71 | அரசினர் மாணவர் இல்லம், காரியாபட்டி .. .. | 30 |
| 72 | அரசினர் மாணவர் இல்லம், புதுவயல் .. .. | 50 |



1974 மார்ச் 16]

இராமநாதபுரம் மாவட்டம்—தொடர்ச்சி.

| | | எண்ணிக்கை. |
|---|---|---|
| 73 | அரசினர் மாணவர் இல்லம், திருத்தாங்கல் .. .. | 60 |
| 74 | அரசினர் மாணவர் இல்லம், மண்டலமாணிக்கம் .. | 30 |
| 75 | அரசினர் கல்லூரி மாணவர் இல்லம், விருதுநகர் .. | 50 |
| 76 | அரசினர் கல்லூரி மாணவர் இல்லம், இராமநாதபுரம் .. | 100 |
| 77 | அரசினர் மாணவியர் இல்லம், தேவகோட்டை .. | 50 |
| 78 | அரசினர் மாணவர் இல்லம், கூமாபட்டி .. .. | 50 |
| 79 | அரசினர் மாணவர் இல்லம், பரமக்குடி .. .. | 50 |
| 80 | அரசினர் மாணவர் இல்லம், பெரிய கோட்டை .. | 50 |

கோயம்புத்தூர் மாவட்டம்.

| | | |
|---|---|---|
| 81 | அரசினர் கல்லூரி மாணவர் இல்லம், கோயம்புத்தூர் .. | 100 |
| 82 | அரசினர் மாணவர் இல்லம், பெருந்துறை .. .. | 50 |
| 83 | அரசினர் கல்லூரி மாணவர் இல்லம், ஈரோடு .. .. | 50 |
| 84 | அரசினர் மாணவர் இல்லம், சத்தியமங்கலம் .. .. | 60 |
| 85 | அரசினர் மாணவர் இல்லம், புஞ்சப்புளியம்பட்டி .. | 60 |
| 86 | அரசினர் கல்லூரி மாணவர் இல்லம், திருப்பூர் .. | 100 |
| 87 | அரசினர் கல்லூரி மாணவர் இல்லம், கோபிசெட்டிபாளையம். | 100 |
| 88 | அரசினர் மாணவர் இல்லம், தொண்டமுத்தூர் .. | 50 |

வட ஆற்காடு மாவட்டம்.

| | | |
|---|---|---|
| 89 | அரசினர் மாணவர் இல்லம், பொன்னை .. .. | 50 |
| 90 | அரசினர் மாணவர் இல்லம், திருவண்ணாமலை .. .. | 50 |
| 91 | அரசினர் கல்லூரி மாணவர் இல்லம், குடியாத்தம் .. | 50 |
| 92 | அரசினர் கல்லூரி மாணவர் இல்லம், திருப்பத்தூர் .. | 50 |
| 93 | அரசினர் கல்லூரி மாணவர் இல்லம், செய்யார் .. | 30 |
| 94 | அரசினர் மாணவர் இல்லம், குடியாத்தம் .. .. | 50 |
| 95 | அரசினர் கல்லூரி மாணவர் இல்லம், வேலூர் .. | 50 |
| 96 | அரசினர் கல்லூரி மாணவர் இல்லம், வாணியம்பாடி .. | 50 |
| 97 | அரசினர் கல்லூரி மாணவர் இல்லம், வாலாஜாபேட்டை.. | 50 |

[1974 மார்ச் 16

| நீலகிரி மாவட்டம். | எண்ணிக்கை. |
|---|---|
| 98 அரசினர் கல்லூரி மாணவர் இல்லம், உதகமண்டலம் | 50 |
| 99 அரசினர் மாணவர் இல்லம், கூனூர் .. .. .. | 30 |

| சேலம் மாவட்டம். | |
|---|---|
| 100 அரசினர் மாணவர் இல்லம், இளம்பிள்ளை .. .. | 80 |
| 101 அரசினர் மாணவர் இல்லம், கொங்கணுபுரம் .. .. | 50 |
| 102 அரசினர் மாணவர் இல்லம், மகுடஞ்சாவடி .. .. | 50 |
| 103 அரசினர் மாணவர் இல்லம், கண்ணன்குரிச்சி .. | 50 |
| 104 அரசினர் கல்லூரி மாணவர் இல்லம், சேலம் சந்திப்பு .. | 100 |
| 105 அரசினர் மாணவர் இல்லம், தாரமங்கலம் .. .. | 50 |
| 106 அரசினர் மாணவர் இல்லம், இடப்பாடி .. .. | 50 |
| 107 அரசினர் மாணவர் இல்லம், எருமைப்பட்டி .. .. | 50 |
| 108 அரசினர் மாணவர் இல்லம், தீவட்டிப்பட்டி .. .. | 50 |
| 109 அரசினர் கல்லூரி மாணவியர் இல்லம், நாமக்கல் .. | 50 |
| 110 அரசினர் மாணவர் இல்லம், எலச்சிபாளையம் .. .. | 50 |
| 111 அரசினர் மாணவர் இல்லம், மல்லசமுத்திரம் .. | 50 |
| 112 அரசினர் மாணவர் இல்லம், வாழப்பாடி .. .. | 50 |

| திருச்சிராப்பள்ளி மாவட்டம். | |
|---|---|
| 113 அரசினர் மாணவியர் இல்லம், மேட்டுப்பாளையம் .. | 30 |
| 114 அரசினர் மாணவர் இல்லம், குல்லக்குடி .. .. | 50 |
| 115 அரசினர் மாணவர் இல்லம், விராலிமலை .. .. | 75 |
| 116 அரசினர் மாணவர் இல்லம், திருவெரம்பூர் .. .. | 100 |
| 117 அரசினர் கல்லூரி மாணவர் இல்லம், திருச்சி டவுன் .. | 100 |
| 118 அரசினர் மாணவர் இல்லம், ஜெயம்கொண்டான் .. | 50 |
| 119 அரசினர் மாணவர் இல்லம், பெரம்பலூர் .. .. | 50 |
| 120 அரசினர் மாணவர் இல்லம், லாலாபேட்டை .. .. | 75 |
| 121 அரசினர் மாணவர் இல்லம், திருமயம் .. .. .. | 50 |
| 122 அரசினர் மாணவர் இல்லம், பஞ்சப்பட்டி .. .. | 50 |
| 123 அரசினர் மாணவர் இல்லம், கண்ணனூர் .. .. | 50 |
| 124 அரசினர் மாணவர் இல்லம், துங்காபுரம் .. .. | 50 |
| 125 அரசினர் மாணவர் இல்லம், அரியலூர் .. .. | 75 |
| 126 அரசினர் கல்லூரி மாணவர் இல்லம், புதுக்கோட்டை .. | 175 |



1974 மார்ச் 16]

| திருச்சிராப்பள்ளி மாவட்டம்—தொடர்ச்சி. | எண்ணிக்கை. |
|---|---|
| 127 அரசினர் மாணவர் இல்லம், மருவத்தூர் .. | 100 |
| 128 அரசினர் மாணவர் இல்லம், மணப்பாறை .. .. | 60 |
| 129 அரசினர் மாணவர் இல்லம், பொன்பரப்பி .. .. | 50 |
| 130 அரசினர் கல்லூரி மாணவர் இல்லம்–II, திருச்சி .. | 200 |

| செங்கல்பட்டு மாவட்டம். | |
|---|---|
| 131 அரசினர் மாணவர் இல்லம், வெங்கனூர் .. .. | 50 |
| 132 அரசினர் மாணவர் இல்லம், கனகம்மா சத்திரம் .. | 50 |
| 133 அரசினர் மாணவர் இல்லம், மதுரமங்கலம் .. .. | 25 |
| 134 அரசினர் மாணவர் இல்லம், சாலவாக்கம் .. .. | 25 |
| 135 அரசினர் மாணவர் இல்லம், பெரியபாளையம் .. .. | 50 |
| 136 அரசினர் மாணவர் இல்லம், கருங்குழி .. .. .. | 30 |
| 137 அரசினர் மாணவர் இல்லம், அத்திமாஞ்சேரிபேட் .. | 50 |
| 138 அரசினர் கல்லூரி மாணவர் இல்லம், செங்கற்பட்டு .. | 50 |
| 139 அரசினர் கல்லூரி மாணவர் இல்லம், திருத்தணி .. | 50 |
| 140 அரசினர் கல்லூரி மாணவர் இல்லம், காஞ்சீபுரம் .. | 100 |
| 141 அரசினர் மாணவர் இல்லம், பாதிரிவேடு .. .. | 50 |

| கன்யாகுமரி மாவட்டம். | |
|---|---|
| 142 அரசினர் கல்லூரி மாணவியர் இல்லம், நாகர்கோவில் .. | 50 |
| 143 அரசினர் கல்லூரி மாணவர் இல்லம், நாகர்கோவில் .. | 50 |
| 144 அரசினர் கல்லூரி மாணவியர் இல்லம், குழித்துறை .. | 100 |

| இல்லங்களின் எண்ணிக்கை. | சுருக்கம். | பயன் பெறுபவர் களின் எண்ணிக்கை. |
|---|---|---|
| 91 | உயர்நிலைப் பள்ளி ஆண்கள் இல்லம் .. | 5,313 |
| 10 | உயர்நிலைப் பள்ளி பெண்கள் இல்லம் .. | 565 |
| 36 | கல்லூரி மாணவர்கள் இல்லம் .. .. | 3,070 |
| 7 | கல்லூரி மாணவியர் இல்லம் .. .. | 400 |
| 144 | | 9,348 |

## அட்டவணை 'இ'

குற்றப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோர்
இல்லங்கள் உள்ள இடங்கள்.

### மதுரை மாவட்டம்.

| | | எண்ணிக்கை. |
|---|---|---|
| 1 | அரசினர் மாணவர் இல்லம், திருமங்கலம் | 150 |
| 2 | அரசினர் மாணவர் இல்லம், திண்டுக்கல் | 180 |
| 3 | அரசினர் மாணவியர் இல்லம், உசிலம்பட்டி | 650 |
| 4 | அரசினர் மாணவர் இல்லம், உசிலம்பட்டி | 650 |
| 5 | அரசினர் மாணவர் இல்லம், மதுரை | 60 |
| 6 | அரசினர் மாணவர் இல்லம், செக்கானூரணி | 200 |
| 7 | அரசினர் மாணவியர் இல்லம், திருமங்கலம் | 225 |
| 8 | அரசினர் மாணவியர் இல்லம், சின்னமனூர் | 100 |
| 9 | அரசினர் மாணவர் இல்லம், நாட்டாமங்கலம் | 120 |
| 10 | அரசினர் தொழிற் பயிற்சி இல்லம், கே. புதூர் | 100 |
| 11 | அரசினர் மாணவர் இல்லம், உத்தமபாளையம் | 150 |
| 12 | அரசினர் மாணவியர் இல்லம், கம்பம் | 50 |
| 13 | அரசினர் மாணவர் இல்லம், வத்தலக்குண்டு | 140 |
| 14 | அரசினர் மாணவர் இல்லம், கடமலைக்குண்டு | 60 |
| 15 | அரசினர் மாணவர் இல்லம், பாப்பாப்பட்டி | 80 |
| 16 | அரசினர் மாணவர் இல்லம், விளாத்தூர் | 45 |
| 17 | அரசினர் மாணவியர் இல்லம், செக்கானூரணி | 50 |
| 18 | அரசினர் மாணவர் இல்லம், ராஜதானி | 70 |
| 19 | அரசினர் மாணவர் இல்லம், அல்லிநகரம் | 60 |
| 20 | அரசினர் மாணவர் இல்லம், மேலக்கால் | 50 |
| 21 | அரசினர் மாணவர் இல்லம், விளாம்பட்டி | 50 |
| 22 | அரசினர் மாணவர் இல்லம், போடி | 50 |
| 23 | அரசினர் மாணவியர் இல்லம், கூடலூர் | 50 |
| 24 | அரசினர் மாணவர் இல்லம், தும்மக்குண்டு | 50 |
| 25 | அரசினர் மாணவர் இல்லம், கயத்தார் | 50 |
| 26 | அரசினர் மாணவர் இல்லம், கோயில்பட்டி | 60 |
| 27 | அரசினர் மாணவர் இல்லம், சங்கரன்கோவில் | 110 |



### திருநெல்வேலி மாவட்டம்.

| | | எண்ணிக்கை. |
|---|---|---|
| 28 | அரசினர் மாணவர் இல்லம், நாங்குநேரி | 90 |
| 29 | அரசினர் மாணவர் இல்லம், ஸ்ரீவைகுண்டம் | 60 |
| 30 | அரசினர் மாணவர் இல்லம், அம்பாசமுத்திரம் | 75 |
| 31 | அரசினர் மாணவர் இல்லம், தென்காசி | 60 |
| 32 | அரசினர் மாணவர் இல்லம், பாளையங்கோட்டை | 75 |
| 33 | அரசினர் மாணவர் இல்லம், வீரகேரளம்புதூர் | 30 |
| 34 | அரசினர் மாணவர் இல்லம், வெள்ளாளங்குளம் | 30 |
| 35 | அரசினர் மாணவர் இல்லம், வன்னிகோநேந்தில் | 30 |
| 36 | அரசினர் மாணவர் இல்லம், சாயமலை | 30 |
| 37 | அரசினர் மாணவர் இல்லம், வாசுதேவநல்லூர் | 50 |

### செங்கல்பட்டு மாவட்டம்.

| | | |
|---|---|---|
| 38 | அரசினர் மாணவியர் இல்லம், பல்லாவரம் | 50 |

### இராமநாதபுரம் மாவட்டம்.

| | | |
|---|---|---|
| 39 | அரசினர் மாணவியர் இல்லம், அருப்புக்கோட்டை | 50 |
| 40 | அரசினர் மாணவர் இல்லம், கமுதி | 150 |
| 41 | அரசினர் மாணவர் இல்லம், அருப்புக்கோட்டை | 100 |
| 42 | அரசினர் மாணவர் இல்லம், முதுகுளத்தூர் | 100 |
| 43 | அரசினர் மாணவர் இல்லம், நயினார்கோவில் | 75 |
| 44 | அரசினர் மாணவர் இல்லம், பொம்மனேந்தல் | 50 |
| 45 | அரசினர் மாணவர் இல்லம், மேலகிடாரம் | 50 |
| 46 | அரசினர் மாணவர் இல்லம், கடலாடி | 60 |

### திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

| | | |
|---|---|---|
| 47 | அரசினர் மாணவர் இல்லம், புதுக்கோட்டை | 44 |
| 48 | அரசினர் மாணவர் இல்லம், திருச்சிராப்பள்ளி | 50 |
| 49 | அரசினர் மாணவியர் இல்லம், திருச்சிராப்பள்ளி | 30 |
| 50 | அரசினர் மாணவியர் இல்லம், பொன்னமராவதி | 50 |
| 51 | அரசினர் மாணவர் இல்லம், மேல மாயனூர் | 50 |

[1974 மார்ச் 16

| | எண்ணிக்கை. |
|---|---|
| **கோயம்புத்தூர் மாவட்டம்.** | |
| 52 அரசினர் மாணவர் இல்லம், அவிநாசி .. .. .. | 50 |
| 53 அரசினர் மாணவர் இல்லம், திருப்பூர் .. .. .. | 50 |
| **தஞ்சாவூர் மாவட்டம்.** | |
| 54 அரசினர் மாணவர் இல்லம், கந்தர்வகோட்டை .. .. | 50 |

சுருக்கம்.

| இல்லங்களின் எண்ணிக்கை. | | பயன் பெறுபவர்களின் எண்ணிக்கை. |
|---|---|---|
| 10 | பெண்கள் உயர்நிலைப் பள்ளி இல்லங்கள். | 1,205 |
| 44 | ஆண்கள் உயர்நிலைப் பள்ளி இல்லங்கள். | 3,894 |
| 54 | | 5,099 |



1974 மார்ச் 16]

## அட்டவணை "ஈ".

### கைத்தொழில் நிலையங்கள்.

| (1) | துவக்கிய வருடம். (2) | பயிற்சி பெறுபவர் எண்ணிக்கை. (3) | உதவித் தொகை. (4) |
|---|---|---|---|
| | | | ரூபாய். |
| I. கைத்தொழில் மற்றும் வாணிபத் துறையினரால் நடத்தப்படுபவை—. | | | |
| 1 பொது பொறியியற் பட்டறை, செக்கானூரணி (மதுரை மாவட்டம்) .. | 1963 | 15 | 45 |
| 2 பொது பொறியியற் பட்டறை, வீரகேரளம்புதூர் (திருநெல்வேலி மாவட்டம்). | 1965 | 15 | 45 |
| 3 பொது பொறியியற் பட்டறை, முதுகுளத்தூர் (ராமநாதபுரம் மாவட்டம்) .. | 1961 | 30 | 45 |
| 4 பிரம்பு பொருள்கள் செய்யும் பயிற்சி பள்ளி (பிரிசிலி நகர் செட்டில்மெண்ட், சென்னை மாவட்டம்) .. | 1971 | 20 | 30 |
| II. மகளிர் நலத் துறையினரால் நடத்தப்படுபவை— | | | |
| 1 தையல் பயிற்சி மற்றும் உடை தயாரிக்கும் தொழிற் பயிற்சி நிலையம், பெருங்குளம் (திருநெல்வேலி மாவட்டம்) .. .. .. .. | 1970 | 20 | 25 |
| 2 மூங்கில் சாமான்கள் செய்யும் நிலையம், சாமியாபுரம் (தர்மபுரி மாவட்டம்) .. | 1970 | 15 | 30 |
| 3 தையல் மற்றும் பூ வேலை தொழிற் பயிற்சி நிலையம், உசிலம்பட்டி (மதுரை மாவட்டம்) .. .. | 1971 | 50 | 30 |
| III. பிற்பட்டோர் நலத்துறையினரால் நடத்தப்படுபவை— | | | |
| 1 தும்புப் பொருள் தயாரிப்புப் பயிற்சி நிலையம், மார்த்தாண்டம் (கன்னியாகுமரி மாவட்டம்) .. | 1960 | 25 | 30 |
| 2 பிரம்புப் பொருள் தயாரிப்புப் பயிற்சி நிலையம், பாக்கோடு (கன்னியாகுமரி மாவட்டம்) .. .. .. | 1960 | 15 | 30 |

[1974 மார்ச் 16

### கோரிக்கை எண் 6.

### ஆவணப் பதிவுத் துறை.

ஆவணப் பதிவுத் துறை, சொத்துக்களின் உரிமையைப் பொறுத்த ஆவணங்களைப் பதிவு செய்வதற்குப் பொறுப்பாக உள்ளதுடன், இயங்கா சொத்துக்களின்மீது உரிமை கோருபவர்களது உரிமைகளை நிலைநாட்டுவதற்கான ஆவணங்களை வைத்துவரும் பொறுப்பையும் ஏற்று செவ்வனே நடத்திவருகிறது. இத்துறை, இந்தியப் பங்குதாரர் சட்டம், சங்கங்கள் பதிவுச் சட்டம், பிறப்பு, இறப்பு பதிவுச் சட்டம், சிறப்புத் திருமணங்கள் சட்டம், இந்துத் திருமணச் சட்டம் போன்ற முக்கியமான திருமணப் பதிவுச் சட்டங்களை நிர்வகித்து வருகிறது. 1969, டிசம்பர் திங்கள் 1 ஆம் நாள் முதற்கொண்டு தமிழ்நாடு முழுவதும் நீட்டிக்கப்பட்டுள்ள தமிழ்நாடு சீட்டு நிதிச் சட்டத்தையும் இத்துறை நிர்வகிக்கிறது.

2. **வழிமுறைக் குறிப்புகள்.**—1967 ஆம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் (திருத்தச்) சட்டத்தின் மூலம், இந்திய முத்திரைத்தாள் சட்டத்தின் 47-A பிரிவில் புதிய விதித்துறை ஒன்று சேர்க்கப்பட்டது. அதன்படி, 1968 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 22 ஆம் நாள் முதற்கொண்டு சொத்துரிமை மாற்ற ஆவணங்கள், சொத்துப் பரிமாற்ற ஆவணங்கள் அல்லது கொடை ஆவணங்கள் ஆகியவற்றிற்கான முத்திரைத் தாள் தீர்வை அவற்றில் எழுதப்பட்டிருக்கும் மதிப்பின் பேரில் இல்லாமல் சொத்துக்களின் அங்காடி மதிப்பின் அடிப்படையில் விதிக்கப்படுகிறது. சொத்துக்களின்



1974 மார்ச் 16]

அங்காடி மதிப்பினை மதிப்பிட துணைப் பதிவாளர்களுக்கு உதவியாக இருக்கும் பொருட்டு வருவாய்த்துறை, பெரும்பாலான மாவட்டங்களில் சொத்து மதிப்பிடுவது பற்றிய வழிமுறைக் கோட்பாடுகளை வழங்கியது. கிராமப் பகுதிகளிலும், நகர்ப் பகுதிகளிலும் உள்ள சொத்துக்களின் மதிப்பீடுகளை துல்லியமாக நிர்ணயிக்க வழிமுறைக் கோட்பாடுகளை மேம்பட்ட முறையில் திருத்தியமைப்பதற்கு அரசு, சிறப்புப் பணியாளர்களை பதிவுத் துறைத் தலைவரின் கீழ் பணியாற்ற ஒப்பளிப்பு வழங்கியது. வழிமுறைக் குறிப்புகளை மாற்றியமைக்கும் பணி முடிவடைந்துவிட்ட போதிலும், பதிவு மாவட்டங்கள் சிலவற்றின் புள்ளி விவரங்கள் மிகப் பழையனவாக இருக்கின்றன. நடப்பு விகிதங்களுக்கேற்ப அவை மாற்றியமைக்கப்பட வேண்டிய நிலையிலுள்ளன. அந்த வழிமுறைக் குறிப்புகளைப் பரிசீலிக்க தனிப்பட்ட வருவாய்-ஆவணப் பணியாளர்களை நியமிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

3. **வரவு-செலவுக் கணக்குகளைத் தணிக்கை செய்தல்.**—துணைப் பதிவு அலுவலகங்களின் கணக்குகளை முழு அளவில் தணிக்கை செய்யும் முறை 1969-ல் தொடங்கி, 1970-ல் மாநிலம் முழுவதற்கும் நீட்டிக்கப்பட்டது. இம்முறை, வருவாய் இழப்பையும், இத்துறையில் கணக்குகளைப் பராமரிக்கும் முறையில் ஏற்படக்கூடிய தவறுகளையும் நீக்கி நல்ல பலன் அளித்துள்ளது. இம்முறை மேலும் ஓராண்டுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது.

4. **முத்திரைத் தாள்கள் பற்றுக் குறையும், பற்றுக் குறையைப் போக்குவதற்கான நடவடிக்கைகளும்.**—முத்திரைத்தாள் பற்றுக் குறையினால் சில

[1974 மார்ச் 16

காலத்திற்கு முன்பு எழுந்த இடர்ப்பாடுகளைத் தவிர்ப்பதற்காக எடுத்துக்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளில் ஒன்று, விற்பனை, அடைமானம், கொடை ஆவணங்கள் ஆகியவற்றைப் பொறுத்தவரையில், ரூ. 500 வரையுள்ள முத்திரைக் கட்டணத்தை வசூலிக்க வெளியூர்களிலுள்ள துணைப் பதிவாளர்களுக்கு அதிகாரம் அளித்துள்ளதே ஆகும். 1967-ல் முதன் முறையாக முகவுரைக்கப்பட்ட இத்திட்டம் 1971, ஜனவரி முதல் நாளிலிருந்து நிரந்தரமாக்கப்பட்டது. இவ்வசதி, 1—9—1973 முதற்கொண்டு சென்னை மாநகரிலுள்ள அலுவலகங்களுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது. பரிமாற்றப் பத்திரங்கள் (Deeds of Exchange) துணைப் பதிவாளரால் 41 ஆவது பிரிவின்கீழ் அவ்வாறு சான்று கூறப்படுவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளன. சொத்து மதிப்பீடு குறைவாகக் கொடுக்கப்படும் நேர்வுகளில், சம்பந்தப்பட்ட தரப்பினர் விரும்பினால் அவ்வாறும், அதற்கென்று குறிப்பிட்டுள்ள நடைமுறையின் படியும் முத்திரைத்தாள்கள் சட்டத்தின் 42 ஆவது பிரிவின் கீழ், ஆவணங்கள் துணைப்பதிவாளர்களால் சான்றளிக்கப்படலாம் என்று வருவாய்த் துறையின் 15—3—1971 நாளிட்ட 725-ஆம் எண் (திருத்தப்பட்டவாறுள்ள) அரசாணையில் ஆணை பிறப்பித்தது. முதலில் இது, சென்னை மாநகர் நீங்கலான இடங்களிலுள்ள துணைப் பதிவாளர்களுக்குப் பொருந்துமாறு செய்யப்பட்டது; பின்னர் இவ்விதித் துறைகள் 1973, டிசம்பர் முதற்கொண்டு சென்னை மாநகரிலுள்ள துணைப் பதிவாளர் அலுவலகங்களுக்கும் நீட்டிக்கப்பட்டன.

**5. புதிய துணைப் பத்திரப் பதிவு அலுவலகங்களைத் தொடங்குதல்.**—பத்திரப் பதிவுக்காக வரும் பொது மக்களின் தேவைகளை நிறைவு செய்யும் பொருட்டு



1974 மார்ச் 16]

அவசியமான இடங்களில் எல்லாம் புதிய துணைப் பதிவு அலுவலகங்கள் தற்போது அமைக்கப்பட்டு வருகின்றன. தற்போதைய அரசு 1967-ல் ஆட்சிக்கு வந்த பின்னர் புதிதாக 39 அலுவலகங்கள் (1968—69-ல் 10 அலுவலகங்கள், 1969-70-ல் 6 அலுவலகங்கள், 1970—71-ல் 6 அலுவலகங்கள், 1971—72ல் 11 அலுவலகங்கள், 1972—73-ல் 3 அலுவலகங்கள், 1973—74-ல் 3 அலுவலகங்கள்) அமைக்கப்பட்டுள்ளன. 1974—75-ஆம் ஆண்டில் மேற்கொண்டும் 7 துணைப் பதிவு அலுவலகங்கள் அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

**6. மங்கிப்போன பதிவுகளை மீண்டும் எழுதுவதற்காக தனிப் பணியாளர்.**—பத்திரப் பதிவு அலுவலகங்களில் பேணி வரப்படும் பதிவேடுகளில் மங்கிப்போன பதிவுகளை மீண்டும் எழுதுவதற்காகப் பிரிவு எழுத்தர்களைத் தற்காலிகமாக வேலைக்கமர்த்த அரசு ஒப்பளிப்பு வழங்கியது. 1972—73-ஆம் ஆண்டில் சோதனை நடவடிக்கையாக மதுரை பத்திரப் பதிவு மாவட்டத்தில் தற்காலிகமாக 10 பிரிவு எழுத்தர்களையும், தருமபுரி மாவட்டத்தில் 4 பிரிவு எழுத்தர்களையும் வேலைக்கமர்த்த ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. 1973—74-ஆம் ஆண்டில் இத் திட்டப் பணி மேலும் நான்கு மாவட்டங்களுக்கு நீட்டிக்கப்பட்டது. 1974—75-ஆம் ஆண்டில் மேற்குறிப்பிட்ட பணிக்காக 22 பிரிவு எழுத்தர்களை பணிக்கமர்த்துவதற்கு ஒப்பளிப்பு வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

**7. பதிவு மாவட்டங்களை சீர் அமைத்தல்.**—பணிச்சுமை மிகுந்த, நிர்வாக அளவுக்கு மீறிய சில பத்திரப் பதிவு மாவட்டங்களின் அதிகார வரம்பைச்

குறைக்கும் பொருட்டும், மாவட்டங்களுக்கிடையில் ஒரே மாதிரியான அளவில் துணைப் பதிவு அலுவலகங்களைப் பிரித்து அமைக்க வகை செய்யும் பொருட்டும் பதிவு அலுவலக ஆய்வாளர்களுக்கு அடக்கமான ஆட்சிப் பகுதி எல்லையை வழங்குவதன்மூலம் அவர்கள் தங்களது பணிகளைத் திறம்படவும் செம்மையாகவும் ஆற்றுவதற்கு வகை செய்யும் பொருட்டும் பத்திரப் பதிவுத் துறையைச் சீரமைப்பதற்கான செயற்குறிப்பு ஒன்றினை அரசு ஆய்வு செய்து வந்துள்ளது. இக்காரியத்திற்காக துணைப் பணியாளர்களுடன் மாவட்டப் பதிவாளர் பதவி ஐந்திற்கும், பத்திரப் பதிவு அலுவலக ஆய்வாளர் பதவி ஒன்றுக்கும் 1973—74-ஆம் ஆண்டில் ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. அரியலூர், விழுப்புரம், நாமக்கல், திருப்பூர், தென்காசி ஆகிய இடங்களை தலைமை இடமாகக் கொண்டு 1—8—1973-லிருந்து ஐந்து புதிய பதிவு மாவட்டங்கள் அமைக்கப்பட்டன. பத்திரப் பதிவு அலுவலக ஆய்வாளர் ஒருவரின் கீழான மற்றொரு வட்டாரம் மதுரையைத் தலைமை இடமாகக் கொண்டு அமைக்கப்பட்டது. தேவையான துணைப் பணியாளர்களுடன் மாவட்டப் பதிவாளர் பதவி ஐந்திற்கும் பத்திரப் பதிவு அலுவலக ஆய்வாளர் பதவி ஒன்றுக்கும் 1974—75-ஆம் ஆண்டில் ஒப்பளிப்பு வழங்க தற்போது முடிவு செய்யப்பட்டுள்ளது. பதிவு மாவட்டத்தில் உள்ள மொத்த எண்ணிக்கை அதன் பிறகு 31 ஆகிவிடும். ஆய்வாளர்களின் எண்ணிக்கை 6 ஆகிவிடும்.

8. **கடந்த காலத்தில் அனுமதி வழங்கப்பட்டு 1973—74 ஆம் ஆண்டில் தொடர்ந்து இருந்த பதிவுக் கட்டண தள்ளுபடி.**— முந்திய காலத்தில் வழங்கப்பட்ட பதிவுக் கட்டண தள்ளுபடியை 1973—74 ஆம் ஆண்டிலும் அனுபவிக்க உரிமையுடைய ஆவணங்களாவன :—





(i) செம்மறியாடு வளர்ப்பு கூட்டுறவு சங்கங்களின் உறுப்பினர்களுக்கு ரூ.5,000-க்கு மேற்படாத கடன்களை வழங்குவதற்காக அடைமானம் வைக்கப்பட வேண்டிய நிலங்களுக்குரிய வில்லங்க சான்றிதழ்களுக்கான விண்ணப்பங்களைப் பொறுத்தவரை ;

(ii) பிணையத் தொகை செலுத்தவேண்டிய வணிகக் கடன்களுக்காக பர்மா, ஸ்ரீலங்கா அகதிகள் அரசுச் சார்பில் எழுதிக்கொடுத்த இயங்காச் சொத்தில் அடைமான பத்திரங்களைப் பொறுத்தவரை ;

(iii) அரசு அளித்த கடன்களில் இருந்து வணிகக் கடைகளை வாங்கியதன்மூலம் வாணிகம் நடத்துவதற்காக பர்மா, ஸ்ரீலங்கா அகதிகள் சார்பிலும் தங்களுக்குள்ளே ஒரு கூட்டுறவு அமைப்பாக அல்லது சங்கமாக ஏற்படுத்திக் கொண்டுள்ள அகதிகள் கூட்டத்தின் சார்பாக எழுதிக் கொடுக்கப்படவேண்டிய விற்பனைப் பத்திரங்களைப் பொறுத்தவரை ;

(iv) கூட்டுறவு இறைவைப் பாசனச் சங்கங்களினல் அல்லது அச்சங்கங்களின் சார்பாக பத்திரப் பதிவுச் சட்டத்தின்கீழ் செலுத்தத்தக்க பத்திரப் பதிவுக் கட்டணத்தைப் பொறுத்தவரை ;

(v) தமிழ்நாடு அரசின் சார்பில், நிலத்தின் வடிவிலும் அல்லது நிலச் சொத்தின் வடிவிலும் தேசீய பாதுகாப்பு நிதிக்கு நன்கொடையாளர்களால் எழுதி கொடுக்கப்பட வேண்டிய நன்கொடைப் பத்திரங்களைப் பொறுத்தவரை ;

(vi) டிராக்டர் தவணைக் கொள்முதல் திட்டத்தின் கீழ் கடன்பெற்ற சிலர் ஈட்டுப் பத்திரங்களை தமிழ்நாடு வேளாண்மைத் தொழில் கழகத்திற்கு மறு ஒப்படை செய்வதற்காக எழுதிக் கொடுக்கும் பத்திரங்கள் ;

(vii) பர்மா, ஸ்ரீலங்கா அகதிகளுக்காகவென்றே அமைக்கப்பட்ட அகதிகள் கூட்டுறவு வீடு கட்டும் சங்கங்கள் அகதிகளுக்குப் புது வாழ்வளிக்கும் நோக்கத்திற்காக, வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் கடன் பெற அரசின் சார்பாக எழுதிக் காடுக்கும் அடைமானப் பத்திரங்கள் ;

(viii) (1) வருவாய்த் துறையின் 23—10—1971 ஆம் நாளிட்ட 3135-ம் எண் அரசாணையில் ஒப்பளிப்பு வழங்கப்பட்ட திட்டத்தின்கீழ் பர்மா, ஸ்ரீலங்கா, அகதிகள் கடன் பெற்று அதன் மூலம் வாங்கிய வேளாண்மை நிலங்களைப் பொறுத்தமட்டில், அவர்கள் அரசின் சார்பாக எழுதிக் கொடுக்கவேண்டிய விற்பனைப் பத்திரம்;

(2) மேற்கூறியவாறு வாங்கப்பட்ட நிலங்களை அடைமானம் வைப்பதற்கு அரசுக்கு பர்மா, ஸ்ரீலங்கா அகதிகளால் எழுதிக் கொடுக்கப்பட வேண்டிய அடைமானப் பத்திரங்கள்.



(ix) கிழக்கு இராமநாதபுரம் மாவட்டத்தில் முந்திரி வளர்ச்சித் திட்டத்தின்கீழ்ப் பெறப்பட்ட வில்லங்கச் சான்றிதழ்களுக்கான விண்ணப்பங்களைக் குறித்து பெறப்பட்ட தேடுதல் கட்டணம், விண்ணப்பக் கட்டணம் ஆகியவற்றை அரசு தள்ளுபடி செய்தது.

(x) கூட்டுறவுச் சங்கங்களுக்கும், நிலவள வங்கிகளுக்கும் அளிக்கப்பட்டிருந்த கட்டணச் சலுகை 1974 ஜூன் 30 ஆம் நாள் வரை நீட்டிக்கப்பட்டது.

(xi) வணிக வங்கிகளிலிருந்து உழவர்கள் கடன்கள் பெறுவது தொடர்பான பத்திரங்களுக்கும், வில்லங்க சான்றிதழ்களுக்கும் ஏற்கெனவே அளிக்கப்பட்டிருந்த கட்டணச் சலுகை 1973 ஜூன் 30 வரை நீட்டிக்கப் பட்டுள்ளது.

**9. 1973–74-ல் பத்திரப் பதிவுக் கட்டணங்கள் தள்ளுபடி செய்யப்பட்ட புதிய நேர்வுகள்.**—கீழ்க் கண்ட நேர்வுகளில் 1973–74-ல் பத்திரப் பதிவுக் கட்டணத்தை தள்ளுபடி செய்து ஆணைகள் பிறப்பிக்கப் பட்டன :—

(1) வருவாய்த்துறையின் 17—12—1969-ஆம் நாளிட்ட 3025-ஆம் எண் அரசாணையில் அனுமதிக்கப் பட்ட திட்டத்தின்கீழ், வேளாண்மைக் கடன்கள் பெறுவதற்காக அரசுச் சார்பில் ஸ்ரீலங்கா அகதிகளால் எழுதிக் கொடுக்கப்பட்ட அடைமானப் பத்திரங்கள்;

(2) கால்நடை மருத்துவ நிலையங்கள் அடங்கியுள்ள நிலங்கள், கட்டிடங்கள் குறித்து கால்நடை வளர்ப்புத் துறையின் சார்பில் எழுதிக் கொடுக்கப் பட்ட நன்கொடைப் பத்திரங்கள் ;

(3) தொடக்க நிலவள வங்கிகளிடமிருந்து கடன்கள் பெறுவதற்காக, இறைவைப் பாசனக் கூட்டுறவுச் சங்கங்களில் தொகுதி ஏற்பாட்டில் சேர்க்கப்பட்டுள்ள நிலங்கள் குறித்து வில்லங்கச் சான்றிதழ் கேட்கும் விண்ணப்பங்களின் நேர்வில், ஒரே பத்திரப் பதிவு துணை மாவட்டத்தில் அமைந்துள்ள ஒன்று அல்லது அதற்குமேற்பட்ட கிராமங்களில் அமைந்துள்ள நிலங்கள் ஒரே சொத்தாகக் கருதப்படுகின்றன ;

(4) 1973—74-ஆம் குத்தகை ஆண்டில் சாராயக் கடை உரிமைதாரர்களால், அவர்களிடம் கேட்கப்பட்ட கூடுதல் பிணையத்தொகையை வைப்பீடு செய்து அரசுச் சார்பில் எழுதிக் கொடுக்கப்பட்ட அடைமானப் பத்திரங்களைப் பொறுத்தவரை ;

**10. படி எழுதுபவர்களுக்கு உரிமம் வழங்குதல்.**—படி எழுதுபவர்களுக்கு உரிமம் வழங்குவதற்கான விதிகள் இறுதியாக வகுக்கப்பட்டு வருவாய்த்துறையின் 20—9—1973-ஆம் நாளிட்ட 5903-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்டன. இதற்கு உரிமம் வழங்குவதற்கு வரையறுக்கப்பட்ட தேர்வினை விரைவில் நடத்த கருதப்பட்டுள்ளது. பத்திரப் பதிவு அலுவலகங்களில் கொடுக்கப்பட வேண்டிய பத்திரங்களைப் பொதுமக்கள் தெளிவாக எழுதப்பெறுவதற்கு இது உதவும். உரிமம் பெற்ற எழுத்தர்கள் இப்பத்திரங்களை எழுதுவதற்கு நிர்ணயிக்கப்பட்ட கட்டணங்களைப் பொதுமக்கள் கொடுத்தால் போதும். உரிமம் பெற்ற எழுத்தர்கள் பத்திரப் பதிவுத்துறையின் அதிகாரத்தின் கீழ் செயல்படுவர்.





**11. பத்திரப் பதிவுத் துறை அலுவலகங்களுக்கு மேம்பாடு.**—(a) **கட்டிடங்கள்.**—1972—73ஆம் ஆண்டு தொடங்கி படிப்படியான நிலையில் 16 இடங்களில் ரூ. 8 லட்சம் செலவில் அரசுக் கட்டிடங்கள் கட்டுவதற்கு அரசு முடிவெடுத்தது. 6 இடங்களில் கட்டிடங்கள் கட்டுவதற்கு, 1972—73-ல் ரூ. 3,05,000 அனுமதிக்கப்பட்டது. 1973—74-ல் 7 இடங்களில் கட்டிடங்கள் கட்டுவதற்கு ரூ. 4,49,200 அனுமதிக்கப்பட்டது. இவ்வாறுக ஒதுக்கப்பட்ட ரூ. 8 லட்சம் தொகையில் 13 கட்டிடங்கள் மட்டுமே நிறைவேற்றுவதற்கு எடுத்துக் கொள்ளப்பட முடியும். 1974—75-ல் ரூ. 4 லட்சம் செலவில் துணைப்பதிவாளர் அலுவலகங்கள் கட்டுவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது.

(b) **மேஜை நாற்காலி முதலிய பொருட்கள்.**—பத்திரப் பதிவுத்துறை அலுவலகங்களில் நிலையான பதிவேடுகளைப் பாதுகாப்பாக வைப்பதற்கு 120 உருக்கு அலமாரிகளை வாங்குவதற்காகும் செலவுத் தொகை ரூ. 1,20,000-க்கு அரசு அனுமதியளிக்க முடிவு செய்துள்ளது.

(c) **பணியாளர்களுக்கு வசதி அளித்தல்.**—1973—74-ல் பணியாளர் வசதிகள் செய்து தருவதற்காகச் செய்யப்பட்ட மேம்பாடுகள் வருமாறு :—

(i) துணைப் பதிவாளர்கள், அவர்களின் பணியாளர்கள் தேவைக்காக, எல்லா பத்திரப் பதிவுத்துறை அலுவலகங்களிலும் மின்சார விசிறிகள் பொருத்தப்பட்டுள்ளன.

(ii) உலர் கழிப்பிடங்களை, நச்சுத் தடைத் தொட்டி கழிப்பிடங்களாக (Septic tank latrines) மாற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இதுவரை 55 பணிகள் அனுமதிக்கப்பட்டுள்ளன அவற்றில் 23 பணிகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன எஞ்சிய 32 பணிகள் நிறைவேறி வருகின்றன.

(iii) கோடை காலங்களில் பணியாளர்களுக்கும், பொதுமக்களுக்கும் குடிநீர் வசதியளிக்க, குடிநீர் வசதி இல்லாத ஒவ்வொரு பத்திரப்பதிவு அலுவலகத்திற்கும் மாதம் ஒன்றுக்கு ரூ. 5-க்கு மேற்படாமல் வழங்குவதற்கு அரசு அனுமதியளித்துள்ளது.

(iv) தனியார் வீட்டில் அல்லது சிறைச்சாலையில் பத்திரங்களைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பங்களைப் பொறுத்தவரையில், விண்ணப்பதாரர்களிடமிருந்து வரையறுத்த நாட்படி வசூலிக்கப்படுவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. பதிவு அதிகாரியாலும், அவருடன் வருகின்ற கடைநிலை ஊழியராலும் இத்தொகை பயன்படுத்திக் கொள்ளப்படலாம்.

**12. தமிழ்நாடு 1961-ஆம் ஆண்டு சீட்டு நிதிகள் சட்டம்.**—இம்மாநிலம் முழுவதும் 1—12—1969-லிருந்து தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு சீட்டு நிதிகள் சட்டம் செயலுக்குக் கொண்டுவரப்பட்டது. பொய்யான, போலியான பதிவு செய்யப்படாத சீட்டு நிறுவனங்கள் மீது தக்க நடவடிக்கை எடுப்பதற்காக மாவட்டப் பதிவாளர் பதவித் தரத்தில், ஆய்வு அதிகாரி பதவி ஒன்றுக்கும் கடைநிலை ஊழியர் பதவி ஒன்றுக்கும் அரசு அனுமதி வழங்கியது. இவர் சென்னை மாநகரத்திலுள்ள அனுமதி பெற்ற சீட்டுக் கம்பெனிகள், மோசடி வியாபாரத்தில் இறங்கினுல் அவற்றைக் குறித்துத் துப்புதுலக்குவார். அஞ்சலக சேமிப்பு வங்கிக் கணக்குகள் உட்பட, சிறு சேமிப்புச் சான்றுகள் அனைத்தையும் ஈடுகளாக சீட்டு நடத்துபவரிடமிருந்து ஏற்றுக்கொள்





ளப்பட வேண்டும் என்று ஆணைகளை அரசு பிறப்பித்துள்ளது. 1973 டிசம்பர் 31 வரை பதிவாகியுள்ள சீட்டுகளின் எண்ணிக்கை 23,736 ஆகும்.

**13. 1967—68-லிருந்து 1973—74 வரை இத் துறையின் வரவு-செலவுகள் பின்வருமாறு:—**

| | | | வரவு. | செலவு. |
|---|---|---|---|---|
| | | | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| 1967—68 | .. | .. | 229·67 | 70·93 |
| 1968—69 | .. | .. | 259·70 | 82·60 |
| 1969—70 | .. | .. | 270·62 | 90·05 |
| 1970—71 | .. | .. | 319·99 | 100·23 |
| 1971—72 | .. | .. | 344·28 | 121·45 |
| 1972—73 | .. | .. | 345·41 | 125·05 |
| 1973—74 | — | — | 253·11 (1973 நவம்பர் வரை). | 95·12 (1973 நவம்பர் வரை). |

## தமிழ்நாடு சட்டப் பேரவை

### திங்கட்கிழமை, 1974 மார்ச் 18.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்-விடைகள்

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

#### *Financial assistance for Artists.*

* 471—*Q.* THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state :

(*a*) whether there are proposals under the consideration of the Government to provide financial assistance to Artists in indigent circumstances ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :—(அ) & (இ) வாழ்வில் நலிந்த சிறந்த கலைஞர்கள் எழுத்தாளர்கள் ஆகியவர்களுக்கு நிதி உதவி அளிக்க மாநில அரசும் மத்திய அரசும் சேர்ந்து நடத்தும் கூட்டுத் திட்டம் ஒன்றும், முழுக்க மாநில அரசே செயல்படுத்தும் திட்டம் ஒன்றும் உள்ளன. கூட்டுத் திட்டத்தின் மூலம் சுமார் 259 கலைஞர்களும் மாநிலத் திட்டத்தின் மூலம் சுமார் 280 கலைஞர்களும் மாதம் ரூ 50 முதல் ரூ 150 வரை நிதி உதவி பெற்று வருகின்றனர்.

திரு என். டென்னிஸ் : தலைவர் அவர்களே, கலைஞர்கள் வாழ்வில் ஃப்ளரிஷிங்'' ஆக உயர்ந்திருக்கும் போது, அவர்களிடமிருந்து "காண்ட்ரிப்யூடரி ப்ராவிடெண்ட் ஃபண்டு ஸ்கீம் " இன் கீழ் தொகை வசூலித்துச் செயல்பட்டால், வயதான காலத்தில் அவர்களுக்கு உதவித் தொகை கொடுக்க அது வழி வகுக்கும் அல்லவா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அது பற்றிய செயற்குறிப்பு எதுவும் இல்லை. அது தனியாக ஆலோசிக்கப் பட வேண்டும்.

திரு ந. சோமசுந்தரம் : வாழ்வில் நலிந்துள்ள கலைஞர்களுக்கு நிதி உதவி அளிப்பதாக அமைச்சரவர்கள் கூறினார்கள். இவர்கள் எந்த அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டு, எப்படி நிதி உதவி வழங்கப் படுகிறது என்று அறியலாமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே. வாழ்நாளில் சிறந்த கலைஞராக இருந்து பெயரும் புகழும் பெற்று விளங்க வேண்டும். அவர் 58 ஆண்டு முடிவு பெற்றிருக்க வேண்டும்,

[1974 மார்ச் 18

மாத வருமானம் 150 ரூபாய்க்கும் கீழே இருக்க வேண்டும். கலைத் துறையில், இலக்கியத் துறையில் சிறந்து விளங்கியிருக்க வேண்டும். அவர்களுக்கு ஆதரவு எந்த வகையிலும் இருக்கக் கூடாது. எந்த வகையிலும் ஆதரவில்லாத நிராதரவானவர்களாக இருக்கிறார்கள் என்ற அளவில் மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாகக் கொடுக்கப்படும் குறிப்புகளின் அடிப்படையில் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்ற மேல் மட்டக் குழு ஆராய்ந்து இந்த நிதி உதவி செய்து வருகிறது.

திரு கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, வாழ்வில் நலிந்துள்ள கலைஞர்கள் என்னும்போது, குறிப்பாக சிற்பக் கலைஞர்களும் நலிந்த நிலையில் இருக்கிறார்கள். பழங்கால சிற்பங்களை மிகத் திறமையாக வடிப்பவர்கள் பலர் வாழ்வில் நலிந்திருக்கிறார்கள். அவர்களுக்கு இந்த ஐம்பது ரூபாய் உதவித் தொகையினை அளிப்பதுடன், திரைப்படப் பயிற்சிக் கல்லூரி போன்றவற்றிலும் மற்றும் அரசாங்கம் அமைக்கின்ற கட்டடங்களிலும் அவர்களுடைய கலை நுணுக்கங்களைப் பயன்படுத்திக்கொள்ளுவதற்கான ஒரு சிறப்புத் திட்டம் வகுக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, யார் யாரை எந்த அளவுக்குப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்பது அந்தந்தத் திட்டத்தின் தன்மையைப் பொறுத்திருக்கிறது. சிற்பக் கலைஞர்களிலும் மிக நலிந்தவர்கள் இருப்பார்களானால், எவ்வித ஆதரவும் இன்றி, மேற்கொண்டு சிற்பத் தொழிலில் ஈடுபட முடியாது என்ற நிலை ஏற்படும்போது, அவர்கள் இந்த நிதி உதவி கோரி விண்ணப்பம் செய்து கொள்ளலாம். நிபந்தனைகளையெல்லாம் நிறைவேற்றுகின்ற வகையில் இருக்குமானால், அப்படிப்பட்டவர்களுக்கு நிதி உதவி செய்யப்படும்.

திரு கே. டி. கே. தங்கமணி : சிறந்த கலைஞர்களில் சிலர் சிறு வயதிலேயே காலமாகிவிடுகிறார்கள். குறிப்பாக, வில்லுப்பாட்டில் சிறந்த பிச்சைக்குட்டி அவர்களைப் பற்றி ஏற்கெனவே இங்கே கேள்வி கேட்கப்பட்டு, அவருடைய குடும்பத்திற்கு உதவி செய்யப்படும் என்று சொல்லப்பட்டது. அந்த உதவித் தொகை இன்னும் கொடுக்கப்படாமல் அதில் பல சிக்கல்கள் ஏற்பட்டிருக்கின்றன. அப்படிப்பட்ட நிலை இல்லாமல், அரசு உத்தரவு போட்டவுடன் உதவித் தொகையானது கலைஞர்களுக்கு உடனே கிடைப்பதற்கான ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மத்திய அரசு இரண்டு பங்கு, மாநில அரசு ஒரு பங்கு தொகை ஒதுக்கி இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டு வந்தது. 1969-ம் ஆண்டுக்குப் பிறகு, இனிமேல் இந்தத் திட்டத்திற்கு உதவி செய்வதற்கில்லை என்று மத்திய அரசு சொல்லி விட்டது. மாநில அரசே முழுப் பொறுப்பையும் ஏற்றுக் கொள்ளும் நிலைமையில் மாநில அரசுத் திட்டம் தனியாக இருந்து வருகிறது. ஆகவே, கலைஞர்களுடைய நலிந்த தன்மையைப் பார்த்து, அவர்களுடைய தராதரத்தையும் பார்த்து, சில விதிகளைத் தளர்த்தியும்



1974 மார்ச் 18]

உதவி தரவேண்டிய நிலைமை ஏற்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகிற கலைஞரைப்பற்றி தனிக் கவனத்திற்குக் கொண்டு வந்தால், அதனுடைய நிலைமை என்ன என்று கூற முடியும்.

திரு கு. காமாட்சி : தலைவர் அவர்களே, கலைஞர்கள், நடிகர்கள், நடிகைகள் நலிந்து போவதற்குக் காரணம், ஒரு சில நடிகர்கள் ஐந்து லட்சம், ஆறு லட்சம் என்று தொகை வாங்குகிறார்கள். சிலர் ஐம்பது, அறுபது ரூபாய் சம்பளம் பெறுகிறார்கள். ஆகவே, அவர்கள் வாங்கும் சம்பளத்தைக் கட்டுப்படுத்தி, இவர்கள் இவ்வளவுதான் வாங்க வேண்டும் என்கிற வகையில் சட்டத்தை அரசு நிறை வேற்றுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட சட்டத்தை நாம் நிறைவேற்ற இயலாது. ஏனென்றால் கலைத் துறையாக இருப்பதால், அவர்களைக் கொண்டு எவ்வளவு வருமானம் வருகிறதோ அந்த அளவு அவர்களுடைய வருமானம் ஏறிக்கொண்டே போகிறது. மக்கள் எவ்வளவுக்கெவ்வளவு அதிகம் விரும்புகிறார்களோ, எவ்வளவுக்கெவ்வளவு அவர்கள் நடிக்கின்ற படங்கள் மூலம் வசூல் ஆகிறதோ, அவ்வளவுக்கவ்வளவு அவர்கள் "ரேட்" ஏறிக் கொண்டிருக்கிறது. இந்நிலை தமிழ்நாட்டில் மட்டுமல்ல ; அகில இந்தியாவிலும், அகில உலகத்திலும் அந்த அளவுக்கு இருக்கிறது. அகில உலகத்தில் கோடிக்கணக்கான ரூபாய் ஒரு படத்திற்கு வாங்கும் நடிகர், நடிகை கூட இருக்கிறார்கள்.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, poetry also comes under fine arts. May I know from the Hon. Minister for Education and Tourism, whether Poets and Writers who have rendered good service by writing and composing poems etc. and who are in bad condition would be given financial aid ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, கவி இயற்றுகின்ற அத்தகைய கவிஞர்கள்கூட சிலர் இந்த நிதி உதவியைப் பெற்று வருகிறார்கள். இதே நிபந்தனைகளின் அடிப்படையில் அவர்களும் விண்ணப்பிக்கலாம்.

திரு. ஆ. பரந்தாமன் : தியாகராஜ பாகவதர், என். எஸ். கிருஷ்ணன் ஆகியோர் ஒரு காலத்தில் புகழின் உச்சாணியில் இருந்தார்கள். அவர்கள் வாழ்நாளின் கடைசியில் நலிந்து இப்பொழுது அவர்கள் குடும்பங்கள் அல்லல்களுக்கு ஆளாகியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலை மற்றவர்களுக்கு இனி ஏற்படாமலிருக்கும் பொருட்டு, அவர்கள் நல்ல நிலையில் இருக்கும்போது அவர்களிடமிருந்து கட்டாயமாக மாதந்தோறும் கணிசமான தொகை வசூலித்துப் பின்னர் அவர்களுக்கோ அவர்களுடைய குடும்பத்திற்கோ உதவும் ஒரு புதிய திட்டத்தை அரசு உருவாக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, இப்பொழுது அப்படிப்பட்ட செயற்குறிப்புகள் இல்லை. அவர்களோ, விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்வார்களானுல், அந்த முயற்சிக்கு ஒத்து வருவார்களானுல், அப்படிப்பட்ட ஒரு திட்டத்தை வகுக்க நாம் முயற்சி செய்யலாம்.

திரு. நா. வீராசாமி: தலைவர் அவர்களே, நம்முடைய நாட்டில் ஏராளமான சிலைகள் திருட்டுப் போகின்றன. அதற்குக் காரணம், வெளி நாடுகளில் அந்தச் சிலைகள் இலட்சக் கணக்கான ரூபாய்க்கு விலை போகின் றன. அப்படிப்பட்ட சிலைகளுக்கு வெளி நாடுகளில் நல்ல கிராக்கி இருக் கின்றன. நம் நாட்டில் சிறந்த சிற்பிகள் ஏராளமாக இருப்பதால், அவர்களுடைய கை வண்ணத்தைப் பார்க்கும் வெளிநாட்டவர்கள் எவ்வளவு பணத்தை வேண்டுமானுலும் செலவு செய்து சிலைகள் வாங்கத் தயாராக இருக்கிறர்கள். அப்படிப்பட்ட சிற்பிகளை உற்சாகப்படுத்தும் வகை யில் நாம் ஏதாவது சிறப்புத் திட்டத்தை உருவாக்கி, அன்னியச் செலா வணியை ஈட்ட வழிவகை செய்யும் முயற்சியை அரசு எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, மாமல்லபுரத்தில் ஒரு சிற்பக் கலைக் கூடத்தை வைத்து, அதற்கான ஒரு பயிற்சி தரும் முயற்சியினைக் கூட அரசு மேற்கொண்டு வருகிறது. ஆகவே, சிற்பிகள் பல சிலைகளை செதுக்கி வைத்துக்கொண்டிருக்கிறர்கள். அந்த வகையில் ஆங்காங்கு இருக்கும் சிற்பிகள் பயன்படுத்தப்பட்டு வரு கிறர்கள். அந்தச் சிற்பங்களும் ஓரளவுக்கு விலை போகின்றன. வெளி நாட்டிலிருந்து வருகிறவர்கள் அத்தனைபேருமே சிலைகளை வாங்கிக்கொண்டு போகிறர்கள் என்ற முடிவுக்கு வரவேண்டாம். ஏதோ ஒன்றிரண்டு சிலை களை வாங்கிக்கொண்டு போகிறர்கள். ஆங்காங்கு இருக்கும் பொருட் காட்சிச் சாலையில் வைப்பதற்குப் பல பேர் வாங்கிக் கொண்டிருக்கிறர்கள். ஆனுல், இந்த வகையிலே ஊக்குவிப்பதற்கும் அரசு பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன.

திரு. சு. துரைசாமி: தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் பதில் அளிக்கும்போது 500க்கு மேற்பட்ட கலைஞர்களுக்கு உதவித்தொகை அளிப்பதாக அறிவித்தார்கள். இந்த உதவித் தொகை பெறும் எல் லோரும் சென்னையிலேயே இருக்கிறர்களா ? அல்லது வெளி மாவட்டங் களிலும் இருக்கிறர்களா ? அப்படியானுல், மாவட்ட வாரியாக எத்தனை கலைஞர்கள் உதவி பெறுகிறர்கள் என்று தெரிவிக்க இயலுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, சென்னையில் மட்டுமல்ல; தமிழகம் முழுவதும் பரவியிருக்கிறர்கள். விவரப் பட்டியல் தேவையானுல் தனிக் கேள்வி போட்டால் தர இயலும்.

திரு. வை. பாலசுந்தரம்: தலைவர் அவர்களே, நம்முடைய நாட்டில் சமுதாயத்திலுள்ள சீர்கேடுகளை ஒழித்து நல்ல புரட்சிகரமான மாறுதல் களைத் தமிழகத்தில் உருவாக்குவதற்குச் சிறந்த கலைஞர்களாகத் திகழ்ந்த



என். எஸ். கே. அவர்களும், நடிப்பிசைப் புலவர் கே. ஆர். ராமசாமி அவர்களும் மறக்க முடியாத கலைஞர்கள் ஆவார்கள். அவர்களுடைய நினைவாகவும் அவர்களுக்கு உதவி செய்கின்ற வகையிலும் அவர்களுடைய குடும்பத்தாரைப் பாதுகாக்கின்ற வகையிலும் அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, இந்த நிதி உதவி செய்கின்ற திட்டத்தின் அடிப்படையில்தான் கலைஞர் களுக்கு உதவி செய்து வருகிறது. பழம்பெரும் புகழ்வாய்ந்த கலைஞர்கள் பலர் நொடிந்த நிலையில் உள்ளவர்கள் இத்தகைய நிதி உதவியைப் பெற்று வருகிறர்கள். மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகிற அத்தகைய வர்களின் குடும்பத்தினருக்குத் தனி முயற்சி எடுக்க வேண்டுமே தவிர, இந்தத் திட்டத்தின்கீழ் வராது.

திரு. எம். முத்தையா: தலைவர் அவர்களே, நடிகர்கள் பொதுவாக எல்லாப் பாத்திரங்களையும் ஏற்று நடிக்கிறர்கள். ஆனுல் இத்தனை வயது வரை இன்ன இன்ன பாத்திரங்களில் நடிக்கலாம் என்ற உச்ச வரம்பை அரசு நிர்ணயிக்குமா என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அப்படி வரையறுக்க இயலாது. பார்க்கிறவர்களுடைய தன்மையையும் அவர்களுடைய கலைத் திறமையையும் பொறுத்திருக்கிறது.

## தென் இந்திய நடிகர் சங்கம்.

*472 வினு: திரு. என்.கிட்டப்பா: மாண்புமிகு கல்வி-சுற்றுலாத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா:

தென் இந்திய நடிகர் சங்கக் கட்டடம் கட்ட, தமிழ்நாடு அரசு, நிதி ஏதேனும் உதவ முன் வந்துள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இல்லை.

## மாயூரம் நகராட்சி உயர்நிலைப் பள்ளி.

*473 வினு: திரு. என்.கிட்டப்பா: மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப் பாரா:

(அ) மாயூரம் நகராட்சி உயர்நிலைப்பள்ளிக் கட்டடத்தைப் புதுப்பித்துக் கட்டுவதற்கான மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு ?

(இ) அதில் அரசு மானியமாக வழங்கும் தொகை எவ்வளவு ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) மாயூரம் நகராட்சி உயர்நிலைப் பள்ளிக் கட்டடத்தைப் புதுப்பித்துக் கட்டுவதற்காக ரூ. 4,10,000

செலவில் மதிப்பீடு ஒன்று தயாரித்து 1973-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்களில் பள்ளிக் கல்வி இயக்குநருக்கு ஒப்புதலுக்காகவும், அத்தொகையை அரசு மானியமாக வழங்குவதற்காகவும், அந்நகராட்சி ஆணையர் அனுப்பினார். ஆனால் அத்தொகை மிக அதிகமாக இருந்ததாலும், அவ்வாண்டு வரவு-செலவுத் திட்டத்தில் நகராட்சி, மாநகராட்சி உயர்நிலைப் பள்ளிக் கட்டடங்கள் கட்ட மொத்தமே ரூ. 1 லட்சம் மட்டுமே ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததாலும், ரூ. 1 லட்சம் செலவுக்கு உட்பட்டவகையில் திருத்தப்பட்ட மதிப்பீடு ஒன்று அனுப்பி வைக்கும்படி ஆணையர் கேட்டுக் கொள்ளப்பட்டார். அதன்படி, மதிப்பீடு அனுப்பி வைப்பதாக ஆணையர் கூறியுள்ளார்.

(இ) இவ்வினாவுக்கு இடமில்லை.

திருப்புவனத்தில் பெண்கள் உயர்நிலைப் பள்ளி.

*474 வினா : திரு. த. சோனையா : மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், திருப்புவனத்தில் ஒரு பெண்கள் உயர்நிலைப்பள்ளி ஏற்படுத்துவதற்கு அரசிடம் ரூ. 10,000 கொடுக்கப்பட்டுள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) இக்கருத்து பரிசிலிக்கப்பட்டு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

திரு. ந. வீராசாமி : சார், சப்ளிமென்டரி கேள்விகளுக்கு வாய்ப்பளிக்க மறுக்கிறீர்களே........

திரு. கோவை செழியன் : சார், துணைக் கேள்வி கேட்க சான்ஸ் கொடுக்க மறுக்கிறீர்களே ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி கேட்டு, பதில் அளித்து, அதற்கடுத்த கேள்வியைக் கேட்கும்போது, முதல் கேள்வியை எடுத்துக் கொள்வது முறை அல்ல.

திரு. பெ. சீனிவாசன் : சார், ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். பார்வார்ட் பிளாக் கட்சியைச் சேர்ந்த கனம் உறுப்பினர் அவர்கள் நடிப்புக்கு வயது வந்தவர்கள் நடிக்க வரம்பு வேண்டுமென்று கேட்டார்கள். இந்தப் பேரவையில் உறுப்பினராக உள்ள எங்கள் கட்சித் தலைவரை மறைமுகமாகக் கூறுகின்ற முறையில் முதலமைச்சரானாலும் சரி, மற்றவர்களானாலும் சரி, இப்படிப்பட்ட வார்த்தைகளைப் பேச தாங்கள் அனுமதிப்பதை நான் ஆட்சேபிக்கிறேன். தாங்கள் தயவு செய்து அத்தகைய



வார்த்தைகளை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று கோருகிறேன். எங்களுக்கும் மறைமுகமாகக் கேட்கத் தெரியும். கேட்டால் அது எந்த அளவுக்குப் போகும் என்பதும் தெரியும். அது நல்லதாக இருக்காது. இந்த அவையும் தாங்காது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதற்கு முன்னர் ஒரு கேள்வியில் பணம் வாங்குவதற்கு உச்ச வரம்பு வைக்கப்படுமா என்று கூடக் கேட்டார்கள். ஆகவே இதில் ஒன்றும் யாரையும் குறிப்பிடவில்லை. இது எப்படி பாய்ண்ட் ஆப் ஆர்டரின்கீழ் வரும் ? இது பாய்ண்ட் ஆப் ஆர்டர் அல்ல.

திரு. ந. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, புதிய உயர்நிலைப் பள்ளிகள்........

திரு. எம். முத்தையா : சார், ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை, உட்காருங்கள்.

திரு. கு. காமாட்சி : சார், எங்களுக்குப் பாதுகாப்பு வேண்டும். ஊருக்கு வாருங்கள் என்று அவர் சொல்வது எங்களுக்குக் கேட்கக் கூடிய அளவுக்கு........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் உட்காருங்கள்.

திரு. எம். முத்தையா : தலைவர் அவர்களே, மதிப்பிற்குரிய உறுப்பினர் சீனிவாசன் அவர்கள் இங்கே பேசியதைக் கொண்டு ஊருக்கு வாருங்கள் என்று சொல்கிறார்கள்.

திரு. பெ. சீனிவாசன் : ஊருக்கு வந்து மக்களிடம் பேசுங்கள் என்று சொன்னேன்.

திரு. கு. காமாட்சி : தலைவர் அவர்களே, வாக்குவாதம் தொடர்ந்து நடைபெறுகிறது. இந்தப் பிரச்சினையை எழுப்பி, உடனே பக்கத்திலே இருப்பவரைப் பார்த்து, ஊருக்கு வாருங்கள் பார்க்கலாம் என்று திரு சீனிவாசன் கூறுவது எங்களுடைய காதில் விழுகிறது. எங்களுக்கு பாதுகாப்பு வேண்டும். இங்கே மட்டுமல்ல, ஊருக்குப் போனாலும் பாதுகாப்பு வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எந்த உறுப்பினரும் பேரவையில் பேரவைத் தலைவரது அனுமதியின்றிப் பேசக் கூடாது. அதோடு, உறுப்பினர்கள் ஒருவருக்கொருவர் உட்கார்ந்து கொண்டு பேசிக் கொள்வது முறையல்ல. இதை எல்லா உறுப்பினர்களுக்கும் சொல்கிறேன். அதை எல்லா உறுப்பினர்களும் வன்மையாகக் கடைபிடிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ந. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, புதிய பெண்கள் உயர்நிலைப் பள்ளிகளை ஏற்படுத்த வேண்டுமென்ற ஊர்கள், ரூ. 10,000-ஐ அரசுக்குச் செலுத்தினால் போதுமா? அல்லது எந்த அடிப்படையில் பள்ளி துவங்குவதற்கு வழிவகை செய்யப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நாளாக, நாளாக பெண்கள் உயர்நிலைப்பள்ளியைத் துவக்குவதற்கேற்ற அளவுக்கும் மாணவர்கள் பள்ளியைத் துவக்க வேண்டும். அங்கே 5 மைல் சுற்று வட்டாரத்திற்குள் போதுமான மாணவிகள் இருந்து, வேறு பள்ளிகள் இல்லாமலிருக்க வேண்டும். பள்ளி வேண்டுமென்றால், 5 ஏக்கர் சுற்றளவுள்ள நிலத்தை அவர்கள் அளிக்க வேண்டும். புதிய பள்ளியைத் திறப்பதற்கு மக்கள் பங்குத் தொகையாக ரூ. 10,000 செலுத்தப்படவேண்டும். பள்ளிக் கட்டடங்கள் கட்ட, ரூ. 12,500 ஈட்டு மானியத் தொகையும் அவர்கள் தரவேண்டும்.

இத்தகைய அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதோடு மட்டு மல்லாமல், போதிய கட்டடங்கள், விளையாடுமிடம், உபகரணங்கள் தளவாடச் சாமான்கள் முதலியவற்றையும் அளிக்க வேண்டும், அத்துடன் கட்டடம் கட்டுவதற்கு வகை ஏற்படுகின்ற வரையில் தற்காலிகமான இடத்தையும் பள்ளிக்கென்று அமைக்கப் பட்ட கட்டடக் குழுவினர் தரவேண்டும். இந்த நிலைமைகளுக்கேற்ற அடிப்படையில்தான் மாவட்டக் கல்வி அதிகாரி அவர்கள் பரிந்துரை செய்கிறார்கள். பிறகு, இயக்குநர் பரிசீலித்து, பரிந்துரை செய்த பிறகு அரசு முடிவு எடுக்க வேண்டியிருக்கிறது.

திரு. சித. சிதம்பரம் : தலைவர் அவர்களே, சென்ற ஆண்டே, பெண்கள் உயர்நிலைப்பள்ளிகளுக்கென்று ரூ. 10,000 கட்டிய ஊர்களில் இந்த ஆண்டு பள்ளி துவங்க முதலிடம் அளிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ரூ. 10,000 கட்டி விட்டால் மட்டுமே போதாது. நான் சொன்ன, மற்ற நிபந்தனைகளையெல்லாம் நிறைவேற்றினால்தான் இந்த அனுமதி வழங்கப்படும்.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : தலைவர் அவர்களே, இந்த திருப்புவனம் பெண்கள் உயர்நிலைப்பள்ளிக்காக ரூ. 10,000 மற்றும் தேவையானவைகள் கொடுக்கப்பட்டனவா? அப்படி தேவையானவைகள் கொடுக்கப்பட்டிருந்தால் இவ்வளவு தாமதம் என் பள்ளியைத் துவங்க என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இந்தப் பெண்கள் உயர்நிலைப்பள்ளியைத் துவங்குவதற்கு ரூ. 10,000 தந்திருக்கிறார்கள். ஆனால், அதற்கென்று கட்டடக் குழு அமைக்கப் படவில்லை. பள்ளிக்குக் கட்டடம் கட்டுவதற்கு ரூ. 12,500-ஐச் செலுத்த வேண்டும். அதைப்பற்றி எந்தக் குறிப்பும் இல்லை. திருப்புவனம் அரசினர் உயர்நிலைப் பள்ளியில் 9 முதல் 11 வகுப்புகள் மதுரையில் மண்டபம் என்ற இடத்திலும் மற்ற பிரிவுகள் வேறிடத்திலும் நடத்தப் படுகின்றன. அந்த வேறோரிடத்தில் பெண்கள் உயர்நிலைப் பள்ளியை வைத்துக் கொள்ளலாம் என்று கூறுகிறார்கள். ஆனால் அந்த இடம் பெண்கள் உயர்நிலைப் பள்ளிக்குப் போதுமானதாக இல்லை. புதிய பள்ளிக் கட்டடங்கள், விளையாடுமிடம், உபகாரணங்கள், தளவாடச் சாமான்கள் ஆகியவற்றை அளிப்பது குறித்து, அவர்கள் எதும் குறிப்பிடவில்லை. இந்த நிபந்தனைகளையெல்லாம் அவர்கள் ஏற்றால், அனுமதி கொடுப்பது குறித்து,அரசு கவனிக்கும். இப்படி ஒரு பள்ளியைத் துவக்குவதால் திருப்புவனம் அரசினர் உயர்நிலைப்பள்ளியின் கெஸடட் தலைமை ஆசிரியர் பதவி இழக்க வேண்டிவரும். 1-4-1970-க்குப் பின் புதிதாக "ஏ" பிரிவு பள்ளிகளை ஏற்படுத்துகிறோம். "பி" பிரிவு பள்ளிகளை இப்பொழுது ஏற்றுக்கொள்வதிலே சிலபல சங்கடங்கள் வருகின்றன. அவற்றையெல்லாம் அனுசரித்துத் தான் அரசு முடிவு செய்கிறது.



திரு. க. மு. இராசகோபால் : தலைவர் அவர்களே, மக்களுடைய பெருக்கத்திற்கு ஏற்றவாறு உயர்நிலைப் பள்ளிகளைத் துவக்க வேண்டிய அளவிலே, ஒவ்வொரு பள்ளிக்கும் ரூ. 12,000 கட்டினால்தான் துவக்கப்படும் என்று சொல்லப்படுகிறது. ஊராட்சியிலே இதற்கென்று பணம் இல்லாத காரணத்தால், ஒன்றியத்திலே பொது நிதியிலிருந்து பள்ளிக்கென்று பணம் ஒதுக்க அனுமதித்தால் கூட, அங்கிருந்து பரிந்துரை செய்யப்பட்ட பின், டி. ஆர். டியின் அனுமதியைப் பெற முடியவில்லை. இதனால் ஊராட்சி ஒன்றியங்களின் மூலம், ஊராட்சிகளுக்கு உதவி செய்யமுடியாத நிலை ஏற்பட்டு, உயர்நிலைப்பள்ளியை ஏற்படுத்துவது தடைப்படுகிறது. என்னுடைய தொகுதியில் கம்பராஜபுரம் என்ற ஊரில் அம்மாதிரி ஏற்பட முடியவில்லை. ஆகவே, வசதியற்ற ஊராட்சிகள் ஒன்றியத்திலுள்ள பொது நிதியிலிருந்து கல்விக்காகச் செலவழிக்க, கட்டடம் கட்ட நிதி ஒதுக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இந்தப் பிரச்சினை உள்ளாட்சித் துறையாலேதான தீர்க்கப்பட வேண்டும். உள்ளாட்சித் துறை வேறு பல வளர்ச்சித் திட்டங்களுக்குத்தான் பொது நிதியிலிருந்து எடுத்து செயல்படுத்த வேண்டுமே தவிர, இப்படிப்பட்ட வைகளுக்கு செலவழிக்கக் கூடாது என்று விதி இருக்கிறது. அது பற்றி உள்ளாட்சித் துறையைத்தான் கேட்க வேண்டும்.

திரு. வை. பாலசுந்தரம் : இந்தக் கட்டப்பட வேண்டிய ரூ. 10,000-ஐ ரூ. 25,000 மாக உயர்த்தக் குறிப்பு இருப்பதாகச் தெரிகிறது. பின் தங்கிய மக்கள் வாழ்கின்ற பகுதியிலே, தாழ்த்தப்பட்ட மக்கள் வாழ்கின்ற பகுதியிலே இப்படிப்பட்ட உயர்நிலைப்பள்ளிகளைத் துவக்க வேண்டுமென்ற கட்டாயம் ஏற்படுகிற பொழுது, அவர்களுக்குச் சலுகை அளிக்கின்ற வகையில் ஒன்று அந்தப் பணத்தை ரத்து செய்ய வேண்டும். அல்லது, 3, 4 தவணைகளிலே அவர்கள் அத்தொகையைக் கட்ட அனுமதிக்க வேண்டும் என்ற முறையில் அரசு உத்தரவு பிறப்பிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அரசு இந்த விதியைத் தளர்த்த விரும்பவில்லை. 2, 3 தவணைகளில் சட்டலாம் என்று வைத்தால், ஒரு தவணை கட்டியதோடு நின்று விடுகிறார்கள். மற்ற தவணைகளுக்கு அவர்களைத் தேட வேண்டிய அவசியம் ஏற்பட்ட காரணத்தால் ரூ. 10,000யும் ஒரே தவணையில் கட்ட வேண்டுமென்று அரசு கூறுகிறது. அவ்வூரில் பள்ளி வேண்டுமென்கிற 10,000 பேர் ஒன்று சேர்ந்து ஆளுக்கு ரூ. 1 தந்தாலும்கூட, ரூ. 10,000 சேர்ந்துவிடும், உயர்நிலைப்பள்ளி வந்துவிடும். ஆனால், ரூ. 10,000 கட்டிவிடுவதாலேயே உயர்நிலைப்பள்ளி வந்துவிடாது. அவர்கள் நிறைவேற்ற வேண்டிய நிபந்தனைகளிலே இந்த ரூ 10,000 கட்ட வேண்டுமென்ற நிபந்தனையும் ஒன்று. ஆளுக்கு ரூ. 1 கொடுத்தால் கூட, சிறுதுளி பெருவெள்ளம் என்ற அளவில் நிதியைத் திரட்டிக் கொடுப்பதற்கு வழி ஏற்படும்.

திரு ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே இராமநாதபுரம் மாவட்டத்திலே பெண்கள் கல்வி முற்போக்காக இல்லை. அதிலும் இந்த திருப்புவனம் பகுதியிலே இந்தப் பள்ளிக்காக ரூ. 10,000 கட்டியிருக்கிறார்கள். ஆகவே, மற்ற நிலைமைகளை ஆராயாமல் இந்த ரூ. 10,000 கட்டியதனால், அங்கு உடனடியாகப் பெண்கள் பள்ளியை ஏற்படுத்த அரசு மறுபரிசீலனை செய்து ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மான்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே மற்ற நிபந்தனைகளை அவர்கள் நிறைவேற்றவேண்டும். மற்ற நிபந்தனைகளை தளர்த்தி, அனுமதி தந்தால், அனுமதி தந்ததற்குப்பிறகு ஏற்படும் சங்கடங்களைத் தீர்ப்பதற்கு வழிவகை இல்லை. பிறகு அந்தச் சங்கடங்களைத் தீர்ப்பதற்கு வழி தேடி, வழி இலலாமல் போய்விடும். ஆகவேதான் இப்பொழுதே நிறைவேற்றவேண்டுமென்று கேட்டிருக்கிறோம். இந்த ஆண்டு அவர்கள் நிறைவேற்றுவார்களானால் அதுபற்றி கவனிக்கப்படும்.

பென்னலூர்பேட்டை அரிசனங்களுக்குக் குடியிருப்பு மனைகள்.

* 475. வினா திரு. க. வேழவேந்தன் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட் வினாவுக்கு விடையளிப்பாரா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (ஆ) பென்னலூர் பேட்டைத் துணை வட்டம், ஆலப்பாக்கம், அன்னதான காக்கவாக்கம் அரிசனக் காலனி மக்களுக்கு வீட்டு மனைகள் அளிக்கும் திட்டம் நிறைவேற்றப் படுவதில் காலதாமதம் ஏற்படுவதற்கான காரணம் என்ன ?

ஆலப்பாக்கம் :

மேற்குறித்த அரிசன காலனியில் நில ஆர்ஜிதம் செய்வதற்கான குறிப்பேதும் தற்பொழுது இல்லை.





அன்னதான காக்கவாக்கம் :

அரிசன காலனியில் போதுமான நிலமிருப்பதால் நில ஆர்ஜிதம் செய்ய வேண்டிய அவசியமில்லை. வீட்டுமனைப் பட்டாக்கள் விரைவில் வழங்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, ஒரு வேளை இந்தக் கேள்வி கேட்கப்பட்ட நேரத்திலே அந்தக் குறிப்பு இல்லாமல் இருந்திருக்கலாம். பின்னாலே மாவட்ட ஆட்சித் தலைவர் தனித் தாசில்தார் (அரிசன நலம்) மூலமாக அந்தக் கோரிக்கை மனுக்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன. ஆகவே, மேற்கண்ட இந்த இரண்டு அரிசனக் காலனிகளுக்கும் மனைப் பட்டாக்கள் வழங்குவதற்கான தனி உத்திரவை அரசு பிறப்பிக்குமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : ஆலப்பாக்கம் கிராமத்திலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதைப் போல தனித் தாசில்தார் அவர்களுக்கு அனுப்பிவைத்து செயற்குறிப்பை அனுப்பலாம். ஆனால் அன்னதான காக்கவாக்கத்தைப் பொறுத்தவரையில் விரைவிலே பட்டா வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படும். எனவே காலதாமதம் ஏற்படாது என்று கருதுகிறேன்.

* 476—வினா திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பென்னலூர்ப்பேட்டைத் துணை வட்டம், அழிஞ்சிவாக்கம் அரிசனக் காலனி மக்களுக்கு வீட்டு மனைகள் ஆர்ஜிதம் செய்து வழங்கும் திட்டம் அமுல் படுத்தப்படுவதில் ஏற்படும் காலதாமதத்திற்கான காரணம் என்ன ?

(இ) இத்திட்டம் எப்போது அமுல்படுத்தப்படும் ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) & (இ) பென்னலூர்ப் பேட்டை துணை வட்டத்திலிருக்கும் அழிஞ்சிவாக்கம் அரிசனக் காலனி மக்களுக்கு வீட்டு மனைகள் வழங்குவதற்காக நிலம் கையகப் படுத்தும் துரித நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மாவட்டாட்சியர் அரிசன நல தனித் தாசில்தாரைப் பணித்துள்ளார்.

திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, அழிஞ்சிவாக்கம் அரிசனக் காலனி மக்களுக்கு வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கப்படுவதற்காக கடந்த ஐந்து ஆண்டுகளாக இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டும்கூட நிலத்திற்குச் சொந்தக்காரர் உயர்நீதிமன்றத்திற்கு ரிட் மனுப் போட்டு தடைப்படுத்தி வருகிறார்கள். இம்மாதிரி வழக்குகளில் எக்ஸ்பெடைட் பெட்டிஷன் தாக்கல் செய்து இதை வேகமாக வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : அதற்காகத்தான் சட்ட இலாகா மூலமாக இதைப் போலுள்ள பல வழக்குகளை வேகமாகச் செயல்படுத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

பொள்ளாச்சியில் அரிசனங்களுக்குக் குடியிருப்பு மனைகள்.

* 477—வினா திரு. அ. ப. சண்முகசுந்தரம் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பொள்ளாச்சி வட்டம், பெரியபோது, ஆனைமலை கிராம அரிசன மக்களுக்கு வீட்டு மனைக்கு நிலம் ஆர்ஜிதம் செய்யும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், இது எப்போது நிறைவுபெறும் ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) & (இ) பெரிய போது கிராமத்தை பொறுத்தமட்டில் பிரிவு 6 விளம்பர வரைவு, அரசு வாலாய எண் 111 சமூக நலம், நாள் 25—1—1974-ல் ஏற்கப்பட்டு 29—1—1974 தேதியிட்ட அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

ஆனைமலை கிராமத்தைப் பொறுத்தமட்டில் பிரிவு 6 விளம்பர் வரைவு அரசு வாலாய எண் 1794 சமூக நலத்துறை தேதி 15—9—1971-ல் ஏற்கப்பட்டு, 6—10—1971 தேதியிட்ட அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

திரு. சு. துரைசாமி : தலைவர் அவர்களே, அரிசன மக்களுக்கு பொள்ளாச்சி வட்டத்திலே உள்ள பெரியபோது, ஆனைமலை போன்ற 100 கிராமங்களில் உள்ள இடங்களிலே உள்ள தாழ்த்தப்பட்ட மக்களுக்கு பட்டா கொடுக்கப்படவில்லை. இதற்காக ஒதுக்கப்படுகின்ற தொகை மிகவும் குறைவாக இருப்பதால் போதுமான அளவிற்கு அதைச் செய்ய முடியவில்லை. ஆகவே இதற்காக ஒரு சிறப்பு நிதியை ஒதுக்கி அசராங்கம் விரைவாக அதைச் செய்வதற்கு முன்வருமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இரண்டு ஆண்டுகளுக்கு முன்னதாக ஒதுக்கப்பட்ட தொகையைவிட இப்பொழுது அதிகமாகத் தான் தொகை ஒதுக்கப்படுகிறது. எவ்வளவுதான் அதிகமாகத் தொகை ஒதுக்கினாலும் கூட அவ்வளவுக்கவ்வளவு நிலத்தின் விலையையும் ஏற்றிவிடுகிறார்கள், நிலச் சொந்தக்காரர்கள். அதிகப் பணம் கேட்கிறார்கள். இந்த நிலைமையினால் சில கேடுகள் ஏற்படுகின்றன.

திரு. ந. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, அரிசன மக்களுக்கு வீட்டு மனைகள் வழங்கப்படுகின்ற நேரத்திலே தற்போது ஒரு புது நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. இதுவரையிலே நஞ்சை நிலமாக இருந்தால் 3 சென்ட் நிலமும், புஞ்சை நிலமாக இருந்தால் 5 சென்ட் நிலமும் கொடுக்கப்பட்டு வந்ததற்கு மாறாக புதிய கொள்கையின் மூலமாக இப்பொழுது குடியிருப்பு வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக —அரிசனங்களையும் அவர்களோடு சேர்த்துவிட்டிருக்கிறார்கள்—இரண்டு தினங்களுக்கு முன்னதாக திரு. எ. ஆர். மாரிமுத்து அவர்களால் கூட இங்கு பிரச்னை எழுப்பப்பட்ட போது அமைச்சர் அவர்கள்





சரியான விளக்கம் தரவில்லை. இரண்டு சென்ட் நிலம் தான் கொடுக்கிறார்கள். ஆகவே வீட்டு வசதி வாரியத்தோடு அவர்களைச் சேர்க்காமல் இந்த இலாகாவே மனைப் பட்டாக்களை வழங்குவதற்கான ஏற்பாடுகளை அரசாங்கம் செய்யுமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : வீட்டு வசதி வாரியத்தோடு இந்த மனைப் பட்டா வழங்குகின்ற விஷயத்தைத் தொடர்பு படுத்த வேண்டாம். வீட்டு வசதி வாரியத்தினுடைய வேலை இருக்கிற மனைக்கட்டுகளிலே வீடுகளைக் கட்டிக்கொடுக்கின்ற வேலை, அதற்காகத் தான் வீட்டு வசதிக் கழகம் அமைக்கப்பட்டிருக்கிறது. வீட்டு மனைக்காக நலத் துறை நிலங்களை ஆர்ஜிதம் செய்து கொடுக்கிறபோது 3 சென்ட் நிலம், அதிகமாக இருந்தால் 5 சென்ட் நிலம் என்ற நிலைமையிலேதான் கொடுத்துக்கொண்டு வருகிறது.

ரூரல் அவுசிங் ஸ்கீம் என்ற ஒரு திட்டம் இருக்கிறது மத்திய அரசு மூலம் செய்யப்படுகின்ற அந்தத் திட்டத்தின் மூலமாக சில இடங்களிலே 2 சென்ட்தான் கொடுக்கிறார்கள், ஆனால் நலத் துறையின் மூலமாக ஆர்ஜிதம் செய்யப்பட்டு கொடுக்கப்படுகின்ற நிலங்கள், வருவாய்த் துறை மூலமாகக் கொடுக்கப்படுகிறபோது அதை 2 சென்ட் ஆகக் குறைத்துக் கொடுக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டை திரு மாரிமுத்து அவர்கள் 2 தினங்களுக்கு முன்பாகச் சொன்னார்கள். நான் அதை மறுத்தேன், இப்பொழுதும் மறுக்கிறேன். நலத் துறை மூலமாக ஆர்ஜிதம் செய்து கொடுக்கப்படுகிற நிலங்கள் 3 சென்ட் அல்லது 5 சென்ட் என்று கொடுக்கப்படுகிறது. 2 சென்ட் என்று கொடுக்கப்படுவது நலத் துறையின் மூலமாகக் கொடுப்பதல்ல, மத்திய அரசாங்கத்தின் மூலமாக ரூரல் டெவலப்மெண்ட் ஸ்கீம் அடிப்படையிலே தரப்படுகிறது.

திரு. வை. பாலசுந்தரம் : தலைவர் அவர்களே, பட்டா வழங்குவதிலே நம்முடைய அரசின் நல்லெண்ணத்தின் அடிப்படையிலே தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் வழங்கப்படுகின்றது. பட்டா வழங்குகின்ற அத்தாட்சி கிடைத்துவிட்ட பின்னாலும் கூட ஏழை மக்கள் அந்த நிலத்திலே சென்று குடியிருக்க முடியவில்லை, மேல்குடி மக்கள் அவர்களை விடாது சர்ச்சை செய்கிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா ? மேல்குடி மக்கள் சர்ச்சை செய்தால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : அப்படிப்பட்ட நிலைகளும் ஏற்படத்தான் செய்கின்றன. நில ஆர்ஜிதம் செய்து தாழ்த்தப்பட்ட மக்களுக்குப் பட்டா கொடுக்கப்பட்ட பிறகும் கூட அந்த இடங்களிலே அவர்கள் குடியமர்த்திக்கொள்ள முடியவில்லை, எதிர்ப்புத் தெரிவிக்கிறார்கள். நிலத்தை வாங்கியபிறகு கூட, பணத்தை அவர்கள் நிலத்திற்காக வாங்கிக்கொண்டுகூட மீண்டும் ஆக்கிரமிக்கிறார்கள். வீடுகளைக் கட்டிக்கொள்கிறார்கள். அல்லது பயிர் செய்கிறார்கள். இதனால் மேல் குடி மக்களுக்கும், அரிசன மக்களுக்கும் தகராறு ஏற்படுகிறது. போலீஸாருக்கும் மேல்குடி மக்களுக்கும் அரிசன மக்களுக்கும்

தகராறு ஏற்படுகின்றது. அவர்கள் தொடர்ந்து தகராறு செய்தால் தாழ்த்தப்பட்ட மக்கள் அந்த இடமே எங்களுக்கு வேண்டாம், நாங்கள் இருக்கின்ற இடத்திலேயே இருந்துகொள்கிறோம் என்று சொல்லி விடுகிறார்கள், சில இடங்களிலே அவர்கள் வெற்றியுமடைகிறார்கள். இப்படிப்பட்ட சிக்கல்கள் இருக்கத்தான் செய்கின்றன.

திரு. ஆ. கு. சுப்பையா : தலைவர் அவர்களே, வீட்டு வசதித் திட்டத்தின் அடிப்படையிலே தஞ்சை போன்ற மாவட்டங்களிலே குடியிருப்பு மனைகள் இல்லாதவர்களுக்கு, அரிசனங்களாக இருந்தாலும் அரிசனங்களாக இல்லாதவர்களாக இருந்தாலும் சராசரி 2 சென்ட் கொடுக்கப்படுகிறது. அதைத்தான் உறுப்பினர் திரு. சோமசுந்தரம் அவர்கள் சொன்னார்கள், அவர்களுக்கு தனியாக 3 சென்ட் 5 சென்ட் என்று நிர்ணயிக்கப்பட்ட பிரகாரம் கொடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : தனியாக அரிசனங்களுக்கு நிலம் கொடுக்கிற திட்டம் அப்படியேதான் இருக்கிறது. அதிலே மூன்று சென்ட், 5 சென்ட் என்றுதான் நிலம் கொடுக்கப்பட்டு வருகிறது. ரூரல் அவுசிங் ஸ்கீம் என்ற திட்டத்தின்படி மத்திய அரசாங்கம் 2 சென்ட் என்று கொடுக்கிறார்கள். அதை மீண்டும் மீண்டும் நான் சொல்லி வருகின்றேன். அதையே 5 சென்ட் ஆக்கவேண்டுமென்றால் அது நம்மால் முடியாது, மத்திய சர்க்கார்தான் சொல்ல வேண்டும். தொடர்ந்து நலத்துறையின் மூலமாக ஆர்ஜிதம் செய்யப்பட்டு கொடுக்கப்படுகின்ற நிலம் 3 சென்ட், அதிகமாக இருந்தால் 5 சென்ட் நிலம் என்று கொடுக்கப்படுகிறது. அதிலே ஏதாவது குறைபாடுகள் இருந்தால் மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லலாம். அதிலே ஒரு குறைபாடும் இல்லை. ஆகவே, இரண்டையும் ஒன்றாகப் போட்டுக் குழப்பிக்கொள்ள வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. க. மு. இராசகோபால் : தலைவர் அவர்களே, நிலங்களை எடுத்து ஆதிதிராவிட மக்களுக்குக் கொடுக்கின்றபோது, காலதாமதம் ஏற்படுகிறது, அமைச்சர் அவர்கள் நிலங்களை எடுத்துக் கொடுக்கின்றபோது கோர்ட்டிற்குச் சென்று விடுகிறார்கள், அதனால் தாமதம் ஏற்படுகிறது என்று சொன்னார்கள். ஆனால் கோயில் நிலங்களைப் பொறுத்தவரையில் 20 ஆண்டுக் காலமாக கட்டிக்கொண்டிருக்கிறவர்களுக்கு எல்லாம் அறங்காவல் கமிஷனர் மூலமாக தனிப்பட்டவர்களுக்கு ஆக்கிரமிப்புச் செய்து பட்டா வழங்குவதிலே சுலபமாக செய்துவிடுகிறார்கள். சமுதாயத்திலே பின்தங்கிய மக்களாக இருக்கின்ற மக்களுக்கு குறிப்பாக கரும்பாக்கம் என்ற இடத்தில் அரும்புலியூர் ஊராட்சி ஒன்றியத்திலே 30 ஆண்டுக்காலமாகியும்கூட மக்களுக்குக் கொடுக்கப்படவில்லை. ஆனால் பக்கத்திலே இருக்கின்ற இரண்டு முதலியார்களுக்கு கிணறுக்காக கொடுக்கப்படுகிறது. தாழ்த்தப்பட்ட மக்களுக்கு விரைவாகக் கொடுப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்படுமா ? ஒரிகை என்ற இடத்திலே அரிசனக் காலனியிலே உள்ள மக்களுடைய வீடுகளை தாசில்தாரை வைத்து மாவட்டத்தின் ஆட்சித் தலைவர் 5 வீடுகளை அம்பலமாக்கியிருக்கிறார்கள். அதைப்பற்றியும் நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா ?



மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இதற்கு மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் பதில் கூறுவார்கள் என்று நினைக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி பொள்ளாச்சி வட்டத்தைப் பற்றியது, பொதுவாகக் கேள்வி கேட்டால் அமைச்சர் அவர்கள் எப்படி பதில் கொடுக்க முடியும் ? சம்பந்தப்பட்ட கேள்விகளை மட்டிலும் கேளுங்கள்.

திரு. எ. ஆர் மாரிமுத்து : தலைவர் அவர்களே, இரண்டு தினங்களுக்கு முன்னாலே அரிசன நலத்துறை அமைச்சர் அவர்கள் அரிசனங்களுக்கு வழங்கப்படுகின்ற மனைப் பட்டாக்கள் குறித்து கேள்வி கேட்கப்பட்டபோது, பதில் சொன்னார்கள். இன்னும் கூட எங்களை அமைச்சர் அவர்களாலே சரியாகப் புரிய வைக்க முடியவில்லை. ஒரே ஒரு கேள்வியைக் கேட்டுவிடுகிறேன். அரிசன நலத் துறையினரால் ஆர்ஜிதம் செய்யப்பட்டு அரிசனங்களுக்குக் கொடுக்கிற நிலத்தை வீட்டுவசதி வாரியத்தினிடத்திலே ஒப்படைப்பதன் மூலமாக அவர்கள் மத்திய சர்க்கார் திட்டம் என்று சொல்லி 2 சென்ட் நிலம்தான் கொடுக்க முடியும் என்று கூறுகிறார்கள். அரிசன நலத்துறையினால் ஆர்ஜிதம் செய்யப்படுகின்ற நிலத்தையெல்லாம் வீட்டுவசதி வாரியத்தினிடத்திலே ஒப்படைக்காமல் அரிசன நலத் துறையிலே பார்த்துக் கொண்டால் 3 சென்ட் என்றும் 5 சென்ட் என்றும் கொடுக்க முடியுமே ? ஆகவே அவர்கள் நில ஆர்ஜிதம் செய்கிற நிலங்களை அரிஜன நலத் துறைக்குக் கொடுக்கச் சொல்வதிலே என்ன கஷ்டம் இருக்கிறது ? அதைப் போன்று அமைச்சர் அவர்கள் செய்வார்களா என்பதுதான் என்னுடைய கேள்வி.

முற்பகல் 9·30

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : தலைவர் அவர்களே, மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் மீண்டும் மீண்டும் குழப்பிக்கொண்டிருக்கிறார்கள். அதைப் பற்றித்தான் நான் சொல்கிறேன். ஒரு முறை அல்ல. பத்து முறை சொல்கிறேன். ஆனால் உறுப்பினர்கள் அவர்கள் எந்தக் கிராமத்தில் என்று குறிப்பிட்டுக் கூறுவாரேயானால் அதற்கான குறிப்பை இலாக்காவின் மூலமாகப் பெற்றுப் பதில் தருகிறேன். நலத் துறையின் மூலம் நிலம் ஆர்ஜிதம் செய்கிறோம். மூன்று, ஐந்து என்றுதான் கொடுக்கிறோம். அதிலே நிலத்தைப் பகிர்ந்து கொடுக்கின்ற வேலையைத்தான் வருவாய்த் துறை மூலமாக தாசில்தார்களும், ரெவின்யூ அதிகாரிகளும் பட்டா கொடுக்கும்பொழுது உடனிருந்து வருகிறார்கள். எனவே நிலத்தை ஆர்ஜிதம் செய்வது, பணம் கொடுப்பது, எத்தனைபேர்களுக்குக் கொடுப்பது ஆகிய இத்தனை வேலைகளும் நலத் துறை மூலம்தான் செய்யப்படுகின்றன. மத்திய சர்க்காரின் ரூரல் ஹவுசிங் என்ற ஸ்கீமின் மூலம், அவர்கள் மூலமாக வழங்கப்படும் நிலம் எல்லோருக்கும், அரிசனங்களுக்கும், அரிசனங்கள் அல்லாதவர்களுக்கும் இரண்டு சென்ட்தான், இரண்டு சென்ட்தான், இரண்டு சென்ட்தான். மாண்புமிகு உறுப்பினரவர்கள் குறிப்பிட்ட எந்த கிராமத்தில், எந்த இடத்தில் என்று சொன்னால் மீண்டும் பரிசீலனை செய்து—மானியமும் வருகிறது—இலாக்காவின் மூலம் அறிந்து நான் பதில் சொல்கிறேன். வருவாய்த் துறை மூலம்

நிலம் தருகிறார்கள். அதிலேயும் அரிசனங்கள், அரிசனங்கள் அல்லாதவர்களுக்கு 2 செண்ட், 3 செண்ட், 5 செண்ட் என்று, அதுகூட அல்ல, என் இலாக்காவில் என் மூலமாகத் தருவது மூன்று, ஐந்து.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் ஒரு முக்கியமான பிரச்னையைக் கிளப்பினார்கள். "ரூரல் ஹவுஸ்லெஸ் புவர்" என்ற திட்டத்தின்படி நகர மன்ற எல்லைக்கு அப்பாற்பட்டு, எல்லா ஜனங்களுக்கும்—ஏழைகளுக்கு, வீடில்லாதவர்களுக்கு— கொடுக்கலாம் என்ற திட்டம் இருக்கிறது. நிலத்தை மூன்று செண்ட் கொடுக்க அனுமதி கொடுக்க வேண்டுமென்று எழுதியிருக்கிறோம். ஆனால் இரண்டு செண்ட்தான் கொடுக்கலாம் என்று தெரிவித்திருக்கிறார்கள். குறிப்பாக, 10,000 ரூபாய்க்குமேல் ஒரு ஏக்கராவிற்கு அனுமதி இல்லை என்று தெரிவித்திருப்பதாக அறிகிறேன். ஆனால் அதன் முழு விவரமும் எனக்கு ஞாபகத்தில் இல்லை. ஒரு குறிப்பிட்ட தொகைக்குமேல் விலையுள்ள நிலத்தை வாங்கக்கூடாது என்று சொல்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினரவர்கள் தவறு எங்கு நிகழ்ந்திருந்தாலும் அதைக் குறிப்பிட்டுச் சொன்னால் அதைப் பரிசீலிக்கலாம். அரிசன நலம் வேறு, ரூரல் ஹவுஸ்லெஸ் புவர் வேறு. ரூரல் ஹவுஸ் சம்பந்தமாக மாண்புமிகு அமைச்சர் இராசாராம் அவர்கள் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். தமிழ்நாடு முழுவதும் கணக்கெடுத்து அனுப்பினோம். ஆனால் வந்துள்ள தொகை போதாது என்று சொல்லக்கூடிய நிலையில் இருக்கிறோம்.

விடுதி மாணவர்களுக்கு சத்துணவு வழங்குதல்.

*478 வினா. திரு. பெ. சௌந்திரபாண்டியன் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

திருச்சி மாவட்ட அரசினர் மாணவ, மாணவியர் விடுதிகளில் சத்துணவு திட்டத்தின்கீழ் தொடர்ந்து முட்டை, பால் வழங்கப்பட்டு வருகிறதா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : திருச்சி மாவட்டம் அரசினர் இல்லங்களிலுள்ள மாணவ மாணவியருக்கு சத்துணவு திட்டத்தின்கீழ் முட்டையும் பாலும் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகின்றன. சில இடங்களில் குறிப்பிட்ட காலங்களில் முட்டை எளிதாகக் கிடைப்பதில்லை. இதை ஈடு செய்ய முட்டைக்குப் பதில் பால் அதிகமாக வழங்கப்படுகிறது.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவரவர்களே, ஹாஸ்டல்களில் இருக்கும் மாணவர்களுக்காக நாம் ஒதுக்கும் தொகை இன்றைக்குள்ள விலைவாசி நிலவரத்தில் நல்ல உணவு கொடுப்பதற்குப் போதியதாக இல்லை. அதை ஈடுகட்ட அதிகத் தொகையை ஒதுக்குவதற்கு அரசு முயற்சிக்குமா ? அதுவல்லாமல், சாத்தியமான இடங்களிலே ஹாஸ்டல் ஸ்டூடண்ட்கள் காய்கறித் தோட்டம் போன்றவைகளை வைத்துக் கொள்வதற்கு வசதியை யாவது செய்து கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : தலைவரவர்களே, இவ்வளவு காலமாக 25 ரூபாயாக மாதம் ஒன்றுக்கு என்று இருந்தது. 1—8—1973 முதல் 28 ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கிறது. உயர்ந்தநிலைப் பள்ளி





இல்லங்களுக்கு பள்ளியிலும், விடுதியிலும் அவர்கள் அந்த இடங்களிலும், சுற்று வட்டாரத்திலும் காய்கறி பயிரிடும் திட்டத்தை இன்றைக்கும் கடைப்பிடித்து வருகிறார்கள். ஆனால் சில இடங்களில் அவர்கள் செய்யவில்லை. ஆனால் நலத்துறை மூலமாக ஆசிரியர்கள், இல்லக் காப்பாளர்கள் காய்கறித்தோட்டம் வைப்பதற்கான திட்டத்தை வற்புறுத்தப்படுகின்ற முறையில் செய்கிறார்கள். ஆனால் கேள்வி அதுவல்ல. திருச்சி மாவட்டத்தில் முட்டை, பால் கொடுக்கப்படுகிறதா என்பதைப்பற்றி. இல்லை என்று அவர்கள் சொல்கிறார்கள். கொடுக்கப்படுகிறது என்று நான் சொல்கிறேன். மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் எதையெதையோ போட்டு குழப்பிக்கொண்டிருக்க வேண்டாம்.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : தலைவரவர்களே, திருச்சி ஜில்லாவில் எத்தனை ஹாஸ்டல்களில் இந்த பால், முட்டைகள் வாரத்தில் எத்தனை நாட்கள் கொடுக்கப்படுகிறது ஒழுங்கான முறையில் ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : தலைவரவர்களே, எல்லா ஹாஸ்டல்களிலும் வாரத்திற்கு ஐந்து நாட்கள் கொடுக்கப்படுகிறது. சிலயிடங்களில் முட்டை கிடைக்கவில்லை என்று சொல்லப்படும் இடத்தில்—பால் கொடுக்கப்படுகிறது. எப்படியும் வாரத்திற்கு ஐந்து நாட்கள் முட்டை இல்லாத இடத்தில் பால் கொடுக்கப்படுகிறது. எல்லா ஹாஸ்டல்களிலும்தான் கொடுக்கப்பட்டு வருகிறது.

வைகையாற்றின் குறுக்கே தரைப் பாலம்.

*479. வினா. திரு. சு. சோனையா : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மானாமதுரை தொகுதி, படமாத்தூர்—திருப்பாசேத்தி இணைப்புச் சாலையில் வைகையாற்றின் குறுக்கே தரைப் பாலம் கட்டும் உத்தேசம் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இல்லை.

நல்லாற்றின் குறுக்கே பாலம்.

*480. வினா. திரு. சு. துரைசாமி : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருப்பூர் ஊராட்சி ஒன்றியம் நல்லாற்றின் குறுக்கே அங்கேரி பாளையம் செட்டிப்பாளையத்திற்கு இடையில் பாலம் அமைக்கும் செயற் குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இல்லை.

திரு சு. துரைசாமி : பேரவைத் தலைவரவர்களே, மேற்படி இடத்தில் இல்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் விரைவாக பாலம் கட்டுவதற்கான முறையில் தலைமைப் பொறியாளரிடமிருந்து இங்கே

அனுப்பப்பட்டதாகவும் அங்கீகாரம் இந்த ஆண்டே கிடைத்துவிடும் என்றும் தெரிவித்திருக்கிறார்கள். எனவே அதை விரைவில் கட்டுவதற்கு அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, அந்தச் சாலையை அரசு பராமரிப்பின்கீழ் எடுக்க ஆணையிடப்பட்டிருக்கிறது. அரசின் நிதிநிலையை ஆராய்ந்து அதைப் பற்றி எடுத்துக் கொள்வதா இல்லையா ? என்று யோசிக்கப்படும்.

வாலாஜா அணை.

*481 வினா. திரு. கே. ஏ. வகாப் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பாலாற்றின் அருகே உள்ள வாலாஜா அணையை விரிவுபடுத்திக் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இல்லை.

திரு நா. வீராசாமி : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் சமீபத்தில் அந்த அணையைப் பார்த்தார்கள். அதைச் சீரமைக்கவில்லை என்று சொன்னாலும் எப்பொழுதோ தண்ணீர் வருகிறது, அந்தத் தண்ணீர் ஒரு பக்கத்தில் மேடாக இருப்பதால் காவேரிப்பாக்கம் போன்ற பகுதிகளுக்கு போய்விடுகிறது. ஆகவே வருகின்ற தண்ணீரை அரசாங்கம் அனுமதிக்கும் வகையில் காவேரிப்பாக்கத்திற்குப் போகும் தண்ணீர் காவேரிப்பாக்கத்திற்கும், கலவை போன்ற பகுதிகளுக்குச் செல்லவேண்டிய தண்ணீர் அங்கேயும் முறையாகச் செல்வதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, சமீபத்தில் நான் சென்று பார்த்தது உண்மை. அப்பொழுது மணல் மேடாக இருந்தது ஆனால், ஒவ்வொரு ஊருக்கும் எவ்வளவு தண்ணீர் போகவேண்டுமென்று கணக்குப்பார்த்துத்தான். தடுக்கவேண்டும். அங்கத்தினர் அவர்கள் அதைப் பற்றி எழுதியனுப்பினால் ஆராயும்படி இலாக்காவைக் கேட்டுக்கொள்ளலாம்

*Production of ' Khus-Khus '*

* 482—Q. THIRU N. DENNIS: Will the Hon. the Ministe for Agriculture be pleased to state —

(*a*) the places where " Vettiver " is produced in this State ;

(*b*) the steps taken to increase its production ; and

(*c*) the steps taken to examine its markets ?



மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ) தலைவரவர்களே, இது வெட்டிவேர் பற்றியது. கன்னியாகுமரி மாவட்டம் விளவங்கோடு வட்டத்திலும், தஞ்சை மாவட்டம் கொள்ளிடம் வட்டத்திலும், சேலம் மாவட்டம் ஏற்காடு மலையிலும், ஆனைமலை, நீலகிரி முதலிய இடங்களிலும் இது சாகுபடி செய்யப்படுகிறது.

(இ) இல்லை.

(உ) இல்லை.

திரு. எம். டென்னிஸ் : தலைவரவர்களே, இது "மெடிசனல் வால்யூ" கொண்டதாக இருக்கிறது. இது அதிகமாக எல்லா இடத்திலும் உற்பத்தி ஆவதில்லை. அதற்காக அரசு ஊக்கம் கொடுப்பதாகவும் இல்லை. ஆகவே, இன்டென்சிவ் முறையிலும், எக்ஸ்டென்சிவ் முறையிலும் இதை உற்பத்தி செய்ய அரசு திட்டம் வகுத்து செயல்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, எந்த அடிப்படையில் பயிர்களுக்கு விவசாயத்துறை ஊக்கம் அளிக்கிறது என்றால், விவசாயிகளுக்கு ஒரு ஏக்கர் நிலத்தில் ஒரு ஆண்டுக்கு வருவாய் அதிகமாக இருக்க வேண்டும். அந்த அடிப்படையில் பார்க்கும்பொழுது இந்த வெட்டிவேர் சாகுபடி செய்வதில் அவ்வளவு வருவாய் உள்ளதாக இல்லை என்று கூறப்பட்டிருக்கிறது. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அங்கே விளவங்கோடு வட்டத்தில் ஒரு ஏக்கருக்கு என்ன கிடைக்கிறது என்று சற்றுப் பார்த்து அனுப்பினால், நல்ல வருவாய் இருந்தால், இதையும் எடுத்துக்கொள்ளலாம்.

திரு. ஆ. கு. சுப்பையா : தலைவரவர்களே, இந்த வெட்டிவேர் சாகுபடிக்கு அரசாங்கம் எந்த எந்த வகையில் ஊக்கம் அளித்து வருகிறது?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் ; தலைவரவர்களே, விடையில் (இ), (உ) இல்லை என்று சொல்லியிருக்கிறேன்.

ஏலக்காய் உற்பத்தி.

*483. வினா. திரு. பெ. சௌந்திரபாண்டியன் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஏலக்காய் உற்பத்தியைப் பெருக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா ?

(இ) ஆம் எனில் அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, (அ) ஆம்.

(இ) சேலம் மாவட்டம் கொல்லி மலையிலும், நெல்லை மாவட்டம் குற்றாலத்திலும் உள்ள இரண்டு ஏலக்காய் நாற்றுப் பண்ணைகளிலிருந்து நோயற்ற ஏலக்காய் நாற்றுகள் வழங்கப்படுகின்றன.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், இந்த ஏலக்காய் அதிகமாக கேரளத்தில்தான் உற்பத்தியாகிறது. இப்பொழுது தமிழகத்திலே, அமைச்சரவர்கள் சொன்னதைப்போல் திருநெல்வேலி மாவட்டத்தில் ஒரு பகுதியிலும், "கம்பம் வேலி"யிலும்தான் செய்கிறார்கள். இதை மற்ற மலைப்பிரதேசங்களிலும், நீலகிரி, சேர்வராயன் மலை போன்ற இப்படிப்பட்ட பகுதிகளில் இந்த ஏலக்காய் உற்பத்திக்கு ஏற்பாடு செய்யப்படுமா? இந்த "கார்டமம்" உற்பத்தியில் மூன்று வருஷங்களிலே பலன் கிடைக்கிறது என்றும், 10 ஆண்டு, 20 ஆண்டு தொடர்ந்து அதில் பலன் கிடைக்கும் என்றும் கூறப்படுகிறது. மேலும் இது "பாரின் எக்சேஞ்ச்" கிடைக்கும் பொருளாகவும் இருப்பதால் சர்க்கார் இதில் அதிக கவனம் செலுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, இந்த ஏலக்காய் சாகுபடி கேரளாவில் மட்டுமல்ல, மேற்குத் தொடர்ச்சி மலையில், கர்நாடகம், கேரளம், தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் பயிராகிறது. தமிழ்நாட்டிலே, மதுரை, கோவை, நெல்லை ஆகிய மாவட்டங்களில் இது பயிர் செய்யப்படுகிறது. இது ஏறத்தாழ 3,000 அடிக்குமேல் 4,000 அடி வரையுள்ள மலைகளில்தான் பயிராகிறது. எனவே, இதற்குத் தேவையான அளவு அரசு ஊக்கம் அளித்து வருகிறது.

திரு. ஏ. எம். ராஜா : இந்த ஏலக்காய் வெளிநாட்டுச் செலாவணியைச் சம்பாதிக்கக்கூடிய பொருள். எப்படி உருளைக் கிழங்கைச் சமவெளிகளிலும் பயிரிடலாம் என்று ஆராய்ச்சி செய்து புதிதாக ஹைபிரிட் வெரைடிகளைக் கண்டு பிடித்தார்களோ அதே போல் ஏலக்காயையும் மலைப் பிரதேசங்களில் அல்லாது சமவெளிகளிலும் பயிர் செய்ய இனிமேலாவது ஆராய்ச்சி செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : நம் அரசுத் துறையில், விவசாயத் துறையில் இருந்து ஊக்கம் கொடுப்பது முக்கியமானது. எந்தப் பயிருக்கு ஏக்கர் ஒன்றுக்கு அதிகமான வருவாய் விவசாயிக்குக் கிடைக்குமோ அதற்கு முக்கியமான ஊக்கத்தைக் கொடுத்து வருகிறோம். ஏலக்காய் பாரின் எக்ஸ்சேஞ் சம்பாதிக்கிறது என்பது உண்மை. வெளிநாட்டு நாணயம் எவ்வளவு சம்பாதித்தாலும்கூட நமது விவசாயிக்கு ஏக்கர் ஒன்றுக்கு எவ்வளவு கிடைக்கும் என்பதை முக்கியமாகப் பார்க்க வேண்டும். மகசூல் தர நான்கு ஆண்டுகள் ஆகும். அதற்குப் பிறகு பல ஆண்டுகள் மகசூல் கொடுத்துக் கொண்டு வரும். ஒரு ஹெக்டாருக்கு-2½ ஏக்கருக்கு 100 கிலோதான் கிடைக்கிறது. ஏக்கர் என்று கணக்குப் பார்க்கும்போது இதைவிட அதிக வருவாய் வரக்கூடிய பயிர்களுக்கு முக்கியமாக ஊக்கத்தைக் கொடுத்து வருகிறோம். இருந்தாலும் கூட இரண்டு இடங்களில் இதற்காக நாற்றுக் கொடுத்து வருகிறோம்.



திரு. நா. வீராசாமி : ஏலக்காய் கோடைக்கானல், ஊட்டி போன்ற மலைப் பகுதிகளில் 3,000 அடி, 4,000 அடிக்குமேல் தான் விளையும் என்று சொன்னார்கள். வட ஆற்காடு மாவட்டத்தில் ஏலகிரி என்ற மலையே இருக்கிறது. பண்டைக் காலத்தில் ஏலக்காய் அங்கு நிறைய விளைந்த காரணத்தால் அதற்கு ஏலகிரி என்ற பெயர் வந்ததாகச் சொல்லுகிறார்கள். இப்போது ஏலக்காய் அங்கு பயிராவதில்லை. அந்த மலை நம்முடைய அமைச்சர் அவர்கள் சொன்ன மூவாயிரம் அடிக்கு மேல் இருப்பதால், அங்கு ஏலக்காய் பயிரிட சிறப்புத் திட்டத்தை அரசு நிறைவேற்ற முன்வருமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : பெயர் ஏலகிரி என்று இருந்தால் மட்டும் ஏலக்காய் விளைந்துவிடும் என்று நான் நம்பவில்லை. அரசுத் துறையிலிருந்து ஏலக்காய் அங்கு விளைவிக்க முடியுமா என்று ஆராய்ச்சி செய்து ஏக்கர் ஒன்றுக்கு அதிகமான வருவாய் வருமா என்றும் ஆராய்ந்து பார்த்து அதற்குத் தகுந்த இடமாக இருந்தால் அதைச் சாகுபடி செய்ய ஏற்பாடு செய்யப்படும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : மேற்குத் தொடர்ச்சி மலையில் ஒரு பகுதியாகிய கன்னியாகுமரிக் காடுகளில் ஏலக்காய் பயிரிடுவதை ஒரு பைலட் ஸ்கீமாக ஒப்புக்கொண்டு செய்ய அரசாங்கம் முன்வருமா? அரசாங்கத் தரப்பிலிருந்து ரப்பர் தோட்டம் கீழ்ப் பகுதியில் போட்டிருக்கிறார்கள். மேல் பகுதியில் ஆராய்ச்சி செய்து ஏலக்காய் பயிரிட முன் வருவார்களா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : கன்னியாகுமரி மாவட்டத்தில் ஏலக்காய் விளையும் என்பதில் ஐயம் இல்லை. ஏனென்றால் அங்கு உயரமான மலைகள் இருக்கின்றன. கன்னியாகுமரி மாவட்டத்திலே ரப்பர் விளைவித்து வருகிறார்கள். அதை விட இதிலே அதிக வருவாய் வருமா என்பது ஒரு கேள்வி. ஏலக்காயோடு வேறு பயிர் சேர்த்து பயிர் செய்ய முடியுமா என்றும் பார்க்க வேண்டும். கன்னியாகுமரி மாவட்டத்தில் என்ன செய்யமுடியும் என்று ஆராய்ந்து பார்த்து விரிவுபடுத்த முடியுமா என்று சொல்லுகிறேன்.

சேரன்மகாதேவி ஒன்றியத்தில் உர விநியோகம்.

* 484 வினா.—திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) திருநெல்வேலி மாவட்டம், சேரன்மகாதேவி பஞ்சாயத்து யூனியனில் உள்ள விவசாய டிப்போவிற்கு 1972-ம் ஆண்டு, அக்டோபர் முதல் டிசம்பர் வரை எவ்வளவு உரம் வரவழைக்கப்பட்டது ?

(இ) அது விவசாயிகளுக்கு எந்த அடிப்படையில் விநியோகம் செய்யப்பட்டது?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: (அ) 160 டன் யூரியாவும் 5 டன் கூட்டு உரமும் விநியோகிக்கப்பட்டது.

(இ) கிராம சேவக்குகள் அளித்த கார்டுகளின் அடிப்படையில் ஒரு விவசாயிக்கு 100 கிலோவுக்கு மேற்படாமல் பி.டி.ஓ. முன்னிலையில் விநியோகிக்கப்பட்டது. இது 1972 அக்டோபர் முதல் டிசம்பர் வரையில் சேரன்மகாதேவி வட்டத்தில் விநியோகிக்கப்பட்டது.

திரு. சோ. அழகர்சாமி: உரம் விநியோகிக்கப்பட்ட முறையைப் பற்றி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். 10 ஏக்கர் வைத்திருக்கிறவர்களுக்கு 100 ஏக்கர் அளவுக்கும், 100 ஏக்கர் வைத்திருக்கிறவர்களுக்கு 10 ஏக்கர் அளவுக்கும் இந்த உரம் வழங்கப்பட்டிருக்கிறது. இனிமேலாவது உர விநியோகத்தில் மோசமான நிலை ஏற்படாமல் ஒதுக்கக்கூடிய உரம் சீரான முறையில் விநியோகிக்கப்பட அரசு என்னென்ன திட்டங்களை வைத்திருக்கிறது?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னபடி பத்து ஏக்கர் உள்ளவர்களுக்கு 100 ஏக்கர் உள்ளவர்களுக்குக் கொடுக்கக் கூடிய அளவு உரம் கொடுப்பதாகச் சொன்னதை நான் ஏற்றுக்கொள்ள முடியாது. 1972 அக்டோபரிலிருந்து டிசம்பர் வரை கொடுக்கப்பட்டது இது. இதிலே தவறுகள் நடக்கின்றன என்பது எனக்குத் தெரியும். அதைச் சீர்திருத்தம் செய்ய என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்பதை நாளைக்கு நான் விளக்கிச் சொல்ல இருக்கிறேன்.

## *Road side trees.*

* 485 *Q.*—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Local Administration be pleased to state —

(*a*) whether the Government have banned the cutting trees on road sides in Madras City; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: (அ) சென்னை மாநகரில் சாலை ஓரங்களில் உள்ள மரங்களை வெட்டுவதற்குத் தடை விதிக்கும் வண்ணம் பொதுக் கட்டளைகள் அரசால் பிறப்பிக்கப்படவில்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

திரு. க. நாகராஜன்: இந்தச் சாலை ஓர மரங்கள் பத்து அல்லது பதினைந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை கணக்கெடுக்கப்படுகிறது. அதற்கிடையில் இடைவெளியில் புதிய மரங்கள் முளைத்துவிடுகின்றன.



மாண்புமிகு பேரவைத் தலைவர்: சென்னை மாநகரத்தில் சாலை ஓர மரங்களை வெட்டுவது பற்றிய கேள்வி இது.

திரு. க. நாகராஜன்: இந்தப் பெரிய மரங்களின் எண்களைப் புதிதாக வளர்ந்த சிறிய மரங்களில் எழுதி வைத்து விட்டு பழைய மரங்களை வெட்டிக் கொண்டு போய்விடுவதைத் தடுக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: இது பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களிடத்தில் கேட்க வேண்டிய கேள்வி.

THIRU K. M. SUBRAMANIAM: Sir, are the Government aware that there are many accidents in the City because the trees are not cut and because of the increased traffic and also are the Government aware that because trees are not cut in Pondy Bazaar area, the Corporation finds it difficult to widen the road and what steps Government propose to take?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தியாகராய நகரில் பனகல் பூங்காவிலிருந்து மின்சக்தி நிலையத்திற்கிடையில் ஒரு பகுதியை அகலப்படுத்துவதற்குப் பாண்டி பஜாரில் நடைப்பாதையில் மரங்களை வெட்ட அனுமதி கேட்டு சென்னை மாநகராட்சி பொறுப்பு அதிகாரியிடமிருந்து 1972-ல் வேண்டுகோள் வந்தது. அதைப் பரிசீலனை செய்து அப்படி மரங்கள் வெட்டப்பட வேண்டியது அவசியம்தானா என்று நானே நேரில் பார்த்து வெட்டப்பட வேண்டிய அவசியமில்லை என்று முடிவு செய்து பிளாட்பாரத்தின் இரண்டு பக்கங்களிலும் 10 அடி வீதம் எடுத்து 20 அடிக்கு சாலையை அகலப்படுத்தலாம் என்று முடிவு செய்யப்பட்டது. மரங்களை வெட்டுவது தடுத்து நிறுத்தப்பட்டிருக்கிறது.

திரு. வை. பாலசுந்தரம்: சாலைகளை அகலப்படுத்துகிறோம் என்று கூறி சாலை ஓரங்களில் இருக்கும் மரங்களை வெட்டுகிறார்கள். சாலை ஓரங்களில் மரங்கள் இருப்பது அழகாக இருக்கிறது. அதே நேரத்தில் கோடைகாலங்களில் பொது ஜனங்கள் நடந்து போவதற்கும் வசதியாக இருக்கிறது. எனவே, அகலப்படுத்துகிற பாதைகளில் மரத்தை நடுவதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: ஏற்கனவே வெட்டப்பட்ட இடங்களில்கூட மீண்டும் மரங்களை நடுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

திரு. கே. டி. கே. தங்கமணி: சாதாரணமாக மேற்கத்திய நாடுகளில் கூட, பெர்லின் போன்ற நகரங்களில் கூட சாலை ஓரங்களில் அதிகமான மரங்களை வைத்திருக்கிறார்கள். இங்கு இருக்கக்கூடிய மரங்களை, சாலைகளை அகலப்படுத்துகிறோம் என்று சொல்லி வெட்டாமல்

இருக்க அரசு ஏற்பாடு செய்யுமா? அடையாற்றில் அந்தவித ஆபத்து வந்திருக்கிறது. ஆகவே, இனிமேலாவது இப்படி சாலை ஓர மரங்களை வெட்டாது இருக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : முதலிலேயே சொன்னேன். புதிதாக எங்கும் வெட்டப்படவில்லை. ஏற்கனவே வெட்டப்பட்ட இடங்களில் புதிதாக மரங்களை நடுவதற்கு ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

## மன்றோ பாலத்தை விரிவுபடுத்தல்.

*486 வினா :—திரு. வை. பாலசுந்தரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

நுங்கம்பாக்கத்திலுள்ள "மன்றோ" பாலத்தை விரிவுபடுத்தும் வேலை எப்போது முடிவடையும் ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : 1974-ஆம் ஆண்டு ஜூன் மாதத்திற்குள் மன்றோ பாலத்தை விரிவுபடுத்தும் வேலையை முடிக்க சென்னை மாநகராட்சி முயன்று வருகிறது.

திரு. வை. பாலசுந்தரம் : இந்தப் பாலம் பழுது பட்ட காரணத்தால் மாநகராட்சி இந்தப் பணியை மேற்கொண்டிருந்தாலும் இரவு நேரங்களில் 9 மணிக்கு மேல் அந்தப் பாலத்தின் மீது போகக்கூடாது என்று கட்டுப்பாடு இருப்பதால் பொதுமக்கள் சங்கடப்படுகிறார்கள். அதை தவிர்க்க இப்போது இருக்கிற பாலத்தையே செப்பனிட்டு இரவு நேரங்களிலும் அந்தப் பாலத்தில் செல்ல வழி வகை செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : அப்படி தனியாக எதுவும் பரிசிலனை செய்யப்பட வில்லை. பரிசீலனை செய்ததற்குப் பிறகு அதைப்பற்றி சொல்லுகிறேன்.

DR. H. V. HANDE : Sir, is the Hon. Minister aware of the fact that the foundation-stone for the renovation of this Bridge was laid by the Hon. Minister for Education more than two years ago ; in spite of the fact that for the last two years work is going there, there is no sign of its being completed in the near future and people are put to a lot of hardship, as the Hon. Member has said, it is closed to traffic after 10 p.m. May I know from the Hon. Minister whether any definite steps would be taken by the Hon. Minister to expedite the completion of this work ?



மாண்புமிகு திரு. அ. பெ. தருமலிங்கம் : உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதுபோல் அந்தப் பாலத்தை கட்டுவதற்கு அனுமதி அளிக்கப்பட்டு 1—3—1972ல் ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பிக்கப்பட்ட அந்தப் பாலத்தைக் கட்டிக்கொண்டிருக்கும் நேரத்தில், இன்னும் அதிகமான ஆழத்தில் அஸ்திவாரம் போட வேண்டும் என்று, 34 முதல் 43 அடி வரை ஆழமான கிணறுகள் தோண்டப்பட்டு அந்த வேலைகள் துரிதமாக முடிக்கப்பட வேண்டுமென்று ஆணை பிறப்பிக்கப்பட்டு இருக்கிறது. இந்த ஆண்டு ஜூன் மாதத்துக்குள் முடித்து கொடுப்பதாக ஒப்பந்தக்காரர்கள் உறுதி அளித்து இருக்கிறார்கள். துரிதமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

## *Hand pulled rickshaws.*

* 487—*Q*. THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Transport be pleased to state :

(*a*) whether monetary compensation has been offered to persons surrendering their hand pulled rickshaws ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. ச. ராமச்சந்திரன் : (அ) ஆம்.

(இ) அரசிடம் ஒப்படைக்கப்படும் ஒவ்வொரு உரிமம் பெற்ற கை ரிக்ஷாவிற்கும் ரூ. 200 அதன் உரிமையாளருக்கு அளிக்கப்படுகிறது.

* 488. வினா : திரு. எஸ். கிட்டப்பா : திரு. என். கே. பழனிச்சாமி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா ?

தமிழக முதலமைச்சர் நிதியிலிருந்து இதுவரை எத்தனை சைக்கிள் ரிக்ஷாக்கள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன ? மாவட்டவாரியாக ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தமிழக முதலமைச்சர் கைரிக்ஷா இழுப்போர் நிவாரண நிதியிலிருந்து இதுவரை 768 சைக்கிள் ரிக்ஷாக்கள் இலவசமாக கீழ்க்கண்ட விவரப்படி வழங்கப்பட்டுள்ளன:—

| | |
|---|---|
| சென்னை நகரம் .. .. .. .. | 630 |
| தென்னாற்காடு (கடலூர்) .. .. .. | 111 |
| செங்கல்பட்டு (காஞ்சிபுரம்) .. .. .. | 27 |
| மொத்தம் | 768 |

திரு. என். டென்னிஸ் : மானிடரி காம்பன்செஷன் பெற்ற வயதானவர்கள் பலர் சைக்கிள் ரிக்ஷாக்கள் ஓட்ட முடியாத நிலையில் இருப்பதால் அவர்கள் "ஆல்டர்நேட் ஜாப்ஸ்" இல்லாமல் இருக்கிறார்கள். ஆகவே அவர்களுக்கு ஆல்ட்ர்நேட் ஜாப்ஸ் கொடுக்கக்கூடிய ஒரு திட்டத்தை வகுத்து அரசாங்கம் செயல்படுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : கை ரிக்ஷாக்களுக்கு நஷ்டஈடு என்ற முறையில் ரூ. 200 தரப்படுகிறது. கைரிக்ஷாக்களை வைத்துக் கொள்ளக்கூடாது என்ற கொள்கையின் அடிப்படையில் செய்யப்பட்டிருக்கிறதே தவிர, அவர்களுக்கும் மறுவாழ்வு அளிக்கவேண்டுமென்ற திட்டம் இதில் அடங்கவில்லை.

திரு. என். கே. பழனிசாமி : இப்போது பெருவாரியான கைரிக்ஷாக்கள் பூராவும் தனிப்பட்டவர்களுடையது. சைக்கிள் ரிக்ஷாக்கள் கொடுக்கும் போது நேரடியாக அந்த ரிக்ஷாக்கள் ஓட்டியவர்களுக்குக் கிடைக்காமல் யார், யார் அந்த கைரிக்ஷாக்களை வைத்திருந்தார்களோ, அவர்களுக்குத் தான் போய் சேர்ந்திருக்கின்றன என்று சொல்லப்படுகிறதே, அது எவ்வளவு தூரம் உண்மை ? அது உண்மையானால் அதைத் தடுப்பதற்கு என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அத்தகைய கருத்துக்கு இடமே இல்லை. கைரிக்ஷாக்கள் இழுப்பதற்கு லைசென்ஸ் வைத்திருந்த தொழிலாளர்கள் அனைவருக்கும் இலவசமாக சைக்கிள் ரிக்ஷாக்கள் வழங்கப் பட்டுவிட்டன. கைரிக்ஷாக்கள் வைத்து வாழ்க்கை நடத்திக் கொண்டிருந்த உரிமையாளர்களுக்குக் கைரிக்ஷாக்களின் எண்ணிக்கையின்பேரில் சைக்கிள் ரிக்ஷாக்களுக்கான லைசென்ஸ் மட்டும் வழங்கப்பட்டிருக்கிறது. ஆகவே அந்த லைசென்ஸை வைத்துக்கொண்டு சைக்கிள் ரிக்ஷாக்களை வைத்துக் கொண்டு தங்கள் வாழ்க்கையை அவர்கள் நடத்தி வருகிறார்கள். எனவே உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட சந்தேகத்திற்கு இடமேயில்லை.

திரு. கோவை செழியன் : கைரிக்ஷாக்கள் இழுப்பது மனிதத்தன்மை யற்றது என்ற முறையில், ஒரு மனிதனை உட்கார வைத்து இன்னொரு மனிதன் இழுப்பது கேவலம் என்றறிந்து அந்தமுறையை மாற்றுகிற வகையில் கைரிக்ஷாக்களை ஒழித்துவிட்டு சைக்கிள் ரிக்ஷாக்களைக் கொடுத்திருக்கிறார்கள். இந்த சைக்கிள் ரிக்ஷாக்களிலும் ஒருவரை உட்கார வைத்து இன்னொரு ஆள் கஷ்டப்பட்டு கொண்டு மிதித்து ஓட்டுவது என்பதும் மனிதத்தன்மையற்ற முறையாக இருப்பதால் தங்கள் அனுமதியோடு சொல்கிறேன்......................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக் கேள்வியையொட்டி விளக்கம் கேட்கலாமே தவிர யோசனைகள் சொல்லக்கூடாது.

திரு. கோவை செழியன் : " எக்கனமிக் டைம்ஸ் "ல் Nagpur Entrepreneur என்ற நிறுவனம் சைக்கிள் ரிக்ஷாக்களில் பொருத்தக் கூடிய ஒரு மெஷினைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். அதன் விலை ரூ. 1,400 தான். கிரஸினில் ஓட்டக்கூடிய அந்த மெஷின் ஒரு லிட்டருக்கு



இருபது கிலோமீட்டர்வரை ஓட்டலாம். ஆகவே அந்த மெஷின்களை ஏராளமாக வாங்கி தமிழ்நாட்டிலுள்ள சைக்கிள் ரிக்ஷாக்களில் பொருத்தி இந்த மனித்தத்தன்மையற்ற முறையைப் போக்குவதற்கு இந்த அரசு மனமுவந்து செயல்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அந்தப் பத்திரிகைக் குறிப்பை நானும் பார்த்தேன். நாகபுரியில் பட்கிவார் என்ற ஒருவர் ஒரு இயந்திரத்தைக் கண்டுபிடித்து சைக்கிள் ரிக்ஷாக்களில் அதைப் பொருத்தினால் சுலபமாக அதை இயங்க வைக்கலாம் என்ற அடிப்படையில் கண்டு பிடித்திருக்கிறார்கள். ஆனால் அந்த இயந்திரம் இன்னும் உற்பத்தி செய்யப்படவில்லை. அந்த இயந்திரத்திற்கு ரூ. 1,400 செலவாகும் என்றும் அதை சைக்கிள் ரிக்ஷாவில் பொருத்தினால் இருபது கிலோ மீட்டர் வேகத்தில் சைக்கிள் ரிக்ஷா செல்லும் என்றும் ஒரு கிலோ மீட்டருக்கு மூன்று காசுதான் செலவாகும் என்றும் ஸ்டார்ட் செய்வதற்கு மட்டும் பெட்ரோல் தேவை, ஓட்டுவதற்கு மண்ணெண்ணெய் போதும் என்றும் தெரிவித்திருக்கிறார்கள். மாதம் ஒன்றுக்கு அத்தகைய இரண்டாயிரம் இயந்திரங்களை உற்பத்தி செய்யவேண்டுமென்று, மேற்கு ஜெர்மனியிடத்திலிருந்து இயந்திரங்களுக்குக் காத்துக்கொண்டிருக்கிறார்களே தவிர வேறு அல்ல.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இந்த கைரிக்ஷாக்கள் ஒரு சிலவற்றை போலீஸ் கமிஷனர் அவர்களிடம் ஒப்படைத்திருக்கிறார்கள். அந்த ரிக்ஷாக்களை எல்லாம், அந்தக் குவியலையெல்லாம், டிஸ்போஸ் செய்வதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கையை மேற்கொண்டிருக்கிறது ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அவைகளையெல்லாம் உடைத்து நொறுக்கப்பட்டு ஏலத்திற்கு விடவேண்டியதுதான்.

திருமதி த.ந. அனந்தநாயகி : இந்த கைரிக்ஷாக்களை ஒழிப்பதற்கு முன்னால் மொத்தம் எவ்வளவு ரிக்ஷாக்கள் இருந்தன என்று கணக்கு எடுக்கப்பட்டது ? இப்போது உரிமையாளர்களுக்கு மட்டும் கைரிக்ஷாக்களை சைக்கிள் ரிக்ஷாக்களாக மாற்றுவதற்கு வசதி செய்து கொடுக்காமல், கைரிக்ஷாக்களை ஓட்டிக்கொண்டிருந்தார்களே அவர்களுக்கும் அவர்கள் தேசிய வங்கிகள் மூலம் கடன் பெறமுடியும்—லைசென்ஸ் கொடுக்க சர்க்கார் முன்வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : எல்லா வகையான கணக்குகளும் எடுக்கப்பட்டு கைரிக்ஷாக்கள் இழுத்துப் பிழைத்தவர்களுக்கு இலவசமாக சைக்கிள் ரிக்ஷா கொடுக்கப்பட்டிருக்கிறது. கை ரிக்ஷாக்கள் வைத்து வாழ்க்கை நடத்திக் கொண்டிருந்தவர்களுக்கும் சைக்கிள் ரிக்ஷா அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது. அதுபோக வேறு யாருக்கும் சென்னை நகரத்தைப் பொறுத்தவரையில் சைக்கிள் ரிக்ஷா கொடுப்பதில்லை.

திரு. எம். தேவராசன் : இந்த சைக்கிள் ரிக்ஷாக்களை எளிதாக ஓட்டு வதற்கு ஏதாவது " ஸம் மெக்கானிக்கல் டிவைஸ் " செய்ய முடியுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன். : அப்படிச் செய்ய முயற்சி செய்கி ருர்கள். பொறுத்திருந்து பார்ப்போம்.

திரு. கே. என். குமாரசாமி : பாரம் வைத்து வண்டி இழுப்பது—மாட்டுக்குப் பதிலாக மனிதன் இழுத்துக்கொண்டிருக்கிருன்—என்பதற்குப் பதிலாக வேறு ஒரு திட்டத்தைப் புகுத்த அரசினிடம் ஏதாவது உத்தேச முண்டா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : நம்மீது எவ்வளவோ பாரம் ஏற்றப்பட்டிருக்கிறது, படிப்படியாகத்தான் இவைகளுக்கெல்லாம் நாம் தீர்வு காணவேண்டும்.

திரு. நா. வீராசாமி : மனிதனை மனிதன் இழுக்கும் இந்தக் கொடுமை யிலிருந்து—நம் முதல் அமைச்சர் அவர்களின் பிறந்த நாளையொட்டி அறிவிக்கப்பட்ட இத்திட்டத்திற்காக மொத்தம் எவ்வளவு செலவு செய்ய நம் அரசு முடிவு செய்திருக்கிறது ? எவ்வளவு சைக்கிள் ரிக்ஷாக்கள் வழங்க இருக்கிறேம் ? அதில் வட ஆர்க்காடு மாவட்டத்திற்கு என்ன பங்கு என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : முதல் அமைச்சர் அவர்கள் நிதிக்கு ரூ. 25,82,340–79 காசு சேர்ந்தது. கைரிக்ஷாக்களைப் பொறுத்த வரையில் நல்லவேளையாக வட ஆர்க்காடு மாவட்டம் அந்த நிலைமையில் இல்லை. தமிழகத்திலே சென்னை, செங்கல்பட்டு, தென் ஆர்க்காடு மாவட்டம் இந்த மூன்று பகுதிகளில்தான் கைரிக்ஷாக்கள் இழுத்துத்தான் பிழைக்க வேண்டும் என்ற நிலையில் இருந்து கொண்டிருந்தார்கள். ஆகவே, வட ஆர்க்காடு மாவட்டம் தப்பித்துக் கொண்டிருக்கிறது என்பதில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மகிழ்ச்சியடையலாம். நான் ஏற்கனவே சொன்னதுபோல் சைக்கிள் ரிக்ஷாக்கள் வழங்கியாகிவிட்டன. அதுபோக இன்னும் 13 லட்சம் ரூபாய் கையில் மீதி இருக்கிறது. அதைத் நான் பேரறிஞர் அண்ணு அவர்கள் பிறந்தநாளையொட்டி ஆயிரம் நாள் திட்டம் என்ற திட்டத்தின் அடிப்படையின் 1,500 ஏழை எளிய மக்களுக்கு, வாழ வழியற்ற மக்களுக்கு சைக்கிள் ரிக்ஷாக்கள் வழங்குவது என்றும் அவர்கள் நாள் ஒன்றுக்கு ஒரு ரூபாய் தந்து வருவார்களேயானல் ஆயிரம் நாட்களில் அந்த சைக்கிள் ரிக்ஷா அவர்களுக்கு உரிமையுடையதாக ஆகிவிடும் என்றும் அந்த வகையில் ஒரு திட்டம் தீட்டப்பட்டு விரைவில் வெளியிடப்பட இருக்கிறது.

### மணிமுத்தார்—அம்பாசமுத்திரம் பேருந்துப்பணி.

* 489 வினு—திரு.ச. சங்குமுத்து தேவர் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) அம்பாசமுத்திரம் தாலுக்கா, மணிமுத்தார் நகரியத்திற்கும், அம்பாசமுத்திரத்திற்கும் இடையே தாம்பரபரணி நதியின் குறுக்கே யுள்ள புதிய பாலத்தின் வழியாக பஸ் விடும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) and (இ): திருநெல்வேலி பாண்டியன் சாலை போக்குவரத்துக் கழகம் 14—11—1973 முதல் திருநெல்வேலி சந்திப்பிலிருந்து திருநெல்வேலி சந்திப்புவரை அம்பா சமுத்திரம், மணிமுத்தார் ஆகிய இடங்களின் வழியாக பேருந்து ஒன்றை நடத்தி வருகிறது.

### ஊத்துக்கோட்டை—அம்பத்தூர் பேருந்துப்பணி.

*490 வினு—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

ஊத்துக்கோட்டைக்கும், அம்பத்தூருக்கும் இடையே வெங்கல் வழியே பேருந்துவிடும் செயற்குறிப்பு ஏதேனும் ஆய்விலுள்ளதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அம்பத்தூர் தொழிற்பேட்டைக் கும் ஊத்துக்கோட்டைக்கும் இடையே புதிய வழித்தடம் ஒன்றை விடும் செயற்குறிப்பு பல்லவன் போக்குவரத்துக் கழகத்தின் பரிசீலனையில் உள்ளது. இவ்வழித்தடம் விடுவதற்கான போக்குவரத்துத் தகுதிகளை ஆராய்ந்து போதிய ஊர்திகள் கிடைக்கப்பெற்றபின் இப்புதிய வழித்தடம் தொடங்கப்படும்.

திரு. கா. வேழவேந்தன் : தலைவரவர்களே, 10,000க்கும் மேற்பட்ட மக்கள் அந்த ஊத்துக்கோட்டை கிராமத்திலிருந்து தொழிற்பேட்டை இருக் கும் அம்பத்தூருக்கு வருவதற்கு நேரடி பஸ் வசதி இல்லை, ஆகவே, விரைவாக, நடவடிக்கை எடுத்து ஒரு குறிப்பிட்ட கால கட்டத்திற்குள் அந்தப் பேருந்து விடப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, ஏற்கனவே, நான் குறிப்பிட்டதைப்போல் பஸ்ஸீம் கிடைத்து, போக வர போக்குவரத்தும் போதுமான அளவுக்கு இருக்குமானல் பரிசீலிக்கப்படும்.

[முற்பகல் 10·00]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினுக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு—ஓர் உரையின் தொடக்கத்தில் *வெள்ளிக்குறி இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1974–75-ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம். மானியக்கோரிக்கை எண் 18—மருத்துவம். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்............

(2) நடைமுறைக் கேள்வி

ஓர் உறுப்பினர் மற்றொரு உறுப்பினரை மிரட்டியதாகக் கூறப்படுவது குறித்து.

திரு. கு. காமாட்சி :—பாயிண்ட் ஆப் ஆர்டர் சார். பேரவைத் தலைவர்களே, கேள்வி நேரத்தின் போது இங்கே மாண்புமிகு முத்தையா அவர்களால் எழுப்பப்பட்ட கேள்விக்கு..........(மணியடிக்கப்பட்டது).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் அதற்கு அப்போதே முடிவு தெரிவித்து விட்டேன். உட்காருங்கள்.

திரு. கு. காமாட்சி :—இது மிகவும் முக்கியமான பிரச்சினை. அவர்கள் இப்படிப் பேசிக்கொண்டே போனால் நன்றாக இருக்காது. தாங்கள் அதற்கு அப்போது ரூலிங் கொடுக்கவில்லை. முத்தையா அவர்கள் எழுப்பிய கேள்விக்கு அமைச்சர் அவர்கள் நல்ல பதிலை, யாரையும் புண்படுத்தாத வண்ணம், அளித்து இருக்கிறார்கள். ஆனால் முன்னாள் துணை சபாநாயகர் மாண்புமிகு சீனிவாசன் அவர்கள் உடனே அந்தக் கேள்வி தன்னுடைய தலைவரை பாதிக்கும் என்று ஒரு ஒழுங்குப் பிரச்சினை எழுப்பினார்கள். தாங்களும் அதற்குத் தீர்ப்பு அளித்து இருக்கிறீர்கள். அதற்குப் பிறகு நண்பர் முத்தையா அவர்கள் ஒரு ஒழுங்குப் பிரச்சினை எழுப்பினார்கள். பக்கத்திலே இருக்கின்ற திரு சீனிவாசன் அவர்கள் " தன்னை மிரட்டுகிறார், ஊருக்கு வா பார்த்துக் கொள்கிறேன் என்று சொல்கிறார்கள் " என்று ஒழுங்குப் பிரச்சினை இங்கே கிளப்பி இருக்கிறார்கள். அதற்குத் தாங்கள் எந்த விதமான ரூலிங்கும் தரவில்லை. இப்படியே ஒவ்வொரு உறுப்பினரும் பக்கத்திலே இருக்கிறவர்களைப் பார்த்து மிரட்டிக்கொண்டும், ஊருக்கு வா பார்த்துக்கொள்கிறேன் என்றும் சொல்லிக் கொண்டிருந்தால், அவையின் பெருமை பாதிக்கப்படும் என்று நான் கருதுகிறேன். மேலும், நண்பர் உறுப்பினர் அவர்கள் அரிசனங்களின் பிரதிநிதிகளாக இங்கேவந்து இருக்கிறார்கள். இங்கே இருக்கிற மற்ற உறுப்பினர்களையும் அது பாதிக்கக்கூடும். ஆகவே, அந்த மாதிரியான வார்த்தைகள் இங்கே சொல்லப்படுமானால் ஒருவருக்கொருவர் இங்கே அஞ்சத் தக்க அளவுக்கு நிலைமையேற்படும், ஊருக்குச் சென்றாலும் இதே நிலைமையேற்படும். ஆகவே, பேரவைத் தலைவர் அவர்களே எங்களுக்கு இங்கேயும் பாதுகாப்பு அளித்து, ஊருக்கு சென்ற பிறகும் பாதுகாப்பு அளிக்க வேண்டும். ஏனெனில் மாண்புமிகு உறுப்பினர் திரு. சீனிவாசன் அவர்கள் துணைச் சபாநாயகராக இருந்தவர்கள், மிகுந்த செல்வாக்குப் படைத்தவர்கள். இப்படி உறுப்பினர்கள் எல்லாம் இங்கே மிரட்டப்படுவார்களானால்.............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களுடைய பாயிண்ட் ஆப் ஆர்டரை விளக்குவதோடு நின்று விடுங்கள். அந்த பாயிண்ட் ஆப் ஆர்டருக்கு பதில் சொல்லி விடுகிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் பேசவேண்டுமென்று சொன்னால், பேரவைத் தலைவரின் அனுமதி பெற்று பிறகுதான்



பேச வேண்டும். அப்படியில்லாமல், இருக்கையில் உட்கார்ந்து கொண்டு கருத்துக்களைக் கூறுவது முறையற்ற செயல் என்றும் சொல்லியிருக்கிறேன். அப்படிப்பட்ட சொற்களைக் கூறவேண்டாம் என்றும் கேட்டுக் கொள்கிறேன். அப்படி உறுப்பினர்கள் இருக்கையில் உட்கார்ந்து கொண்டு பேசும் பேச்சுக்கு பத்திரிகையிலும் இடம் கொடுக்க வேண்டாம். அவை முறையற்றவை. இந்த அவையின் மரபையும், மாண்பையும் குறைக்கக்கூடியது. அப்படிப்பட்ட முறையைப் பின்பற்ற வேண்டாம் என்று மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. பெ. சீனிவாசன் : எனது..........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உட்காருங்கள்.

திரு. பெ. சீனிவாசன் : என்னைப் பற்றி ஒரு அவதூறு சொல்லி இருக்கிறார்கள். அதற்கு பதில் அளித்தாக வேண்டும். திரு. காமாட்சி அவர்கள் நான் மிரட்டினேன் என்று சொல்கிறார்கள். நான் யாரையும் மிரட்ட வில்லை.

திரு. கு. காமாட்சி : " ஊருக்கு வா பார்த்துக்கொள்கிறேன் " என்று சொன்னீர்கள்.

திரு. பெ. சீனிவாசன் : அதற்கு நண்பர் காமாட்சி அவர்கள் பாயிண்ட் ஆப் ஆர்டர் கிளப்பிப் பேசுவதை நான் பாராட்டுகிறேன். ஆனால் அதை வைத்து, அரிசன உறுப்பினரை மிரட்டுகிறார் என்று ஜாதி ஜன சமுதாயப் பிரச்னையை இழுப்பார்களானால் அது அரசியலில் கோழைத்தனம் என்று சொல்லிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு பாயிண்ட் ஆப் ஆர்டருக்கு விளக்கம் கொடுக்கிற நேரத்தில், இன்னொரு பாயிண்ட் ஆப் ஆர்டருக்கு வழி வகுக்கவேண்டாம்.

திரு. பெ. சீனிவாசன் : இங்கே வந்து என்னுடைய கட்சித் தலைவரைப் பற்றி மறைமுகமாகக் கேள்வி கேட்டால் நாங்கள் எதிர்ப்போம். இங்கேயுள்ள உறுப்பினர்கள் எல்லோருக்கும் பேசுவதற்கு சம வாய்ப்பு உண்டு, இடமுண்டு. இப்படி ஒருவரைப் பற்றி மறைமுகமாகக் கேட்பதும், கேரளக்காரன் என்று கேட்பதும் முறைதானா, நீங்கள் அனுமதிக்கிறீர்களா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : யாரும் கேரளக்காரன் என்று கேள்வி நேரத்திலே கேட்கவில்லை. வயதுக்கு வரம்பு கட்டமுடியுமா என்று பொதுவானமுறையில் கேட்டார்களே தவிர, வேறு எந்த விதமான முறையிலும் அல்ல.

திரு. பெ. சீனிவாசன் : அது தேவைதானா, முறைதானா என்பதைப் பற்றி நீங்கள் சொல்ல வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதற்கு அப்போதே சொன்னேன். அதற்கு முன்பு ஒரு கேள்வியில் "பணம் வாங்குகிறார்கள் அதிகமாக, அதற்கு ஒரு வரம்பு கட்ட முடியுமா" என்று கேட்டார்கள். அதுவும் பொதுவான முறையில் இருந்தது. வயதுக்கு வரம்பு வைக்க முடியுமா என்று கேட்டார்கள் அதுவும் பொதுவான நிலையில் யாரையும் குறிப்பிட்டுக் குறிக்காத நிலையில் இருந்தது. நான் அப்போதே தீர்ப்புக்கொடுத்து இருக்கிறேன். உங்களுடைய கட்சித் தலைவரைக் குறிப்பிடுகிறார்கள் என்று சொல்வது நல்லதல்ல.

திரு. பெ. சீனிவாசன் : நீங்கள் ஆட்சேபிக்கவில்லை. சமாளித்தீர்கள். எங்களுக்கும் மறைமுகமாகக் கேட்கத் தெரியும். அது இந்தப் பேரவையின் மரபை கெடுத்து விடும். அதைக் காப்பாற்ற வேண்டிய பெரும் பொறுப்பு பேரவைத் தலைவரைச் சாரும்.

திரு. எம். முத்தையா : தலைவரவர்களே, கனம் உறுப்பினர் பேசும் போது "கோழை" என்று பேசினார்கள். யார் கோழை, நாங்கள் கோழைகளா. இந்த அவையில் உள்ள அத்தனை பேருக்கும் தெரியும். அதை அவர்கள் திரும்பப் பெறவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. முத்தையா அவர்கள், இது போல் பக்கத்திலிருந்து உட்கார்ந்து கொண்டு மிரட்டுகிறார்கள் என்று சொன்னார்கள். அப்படி ஒருவருக்கொருவர் அவையில் உட்கார்ந்து கொண்டு மிரட்டுவது முறையல்ல என்று நான் சொன்னேன். அப்படி இருக்கையிலே உட்கார்ந்து கொண்டு பேசும் பேச்சுக்கள் நடவடிக்கை குறிப்பில் இடம் பெறா. பத்திரிகையில் வரக்கூடாது என்றும் சொன்னேன். இனியும் பின்பற்றக்கூடாது என்று சொன்னேன். இப்படி மறைமுகமாகப் பேசினார்கள் என்று சொன்னீர்கள். பேசிய பேச்சுக்கு அவர் பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்பி, நான் அதற்குத் தீர்ப்பும் கொடுத்து விட்டேன். (குறுக்கீடு) அதற்குப் பிறகு திரு. சீனிவாசன் அவர்கள் எங்களுக்கும் இப்படி மறைமுகமாகப் பேசத் தெரியும் என்று சொல்வது முறையல்ல. அப்படிப்பட்ட பேச்சு வரும் நேரத்தில், எந்த ரீதியில் அவையின் மரபைப் காப்பாற்ற வேண்டுமோ, அது பேரவைத் தலைவரின் பொறுப்பு. இப்படியெல்லாம் பேசத் தெரியும் என்று சொல்வது முறையல்ல.

திரு. கோவை செழியன் : நீங்களே குறிப்பிட்டு இருக்கிறீர்கள், உட்கார்ந்து கொண்டு பேசுவதற்கு முக்கியத்துவம் கொடுக்கக்கூடாது என்று, வரவேற்கிறோம். ஆகவே, இருக்கையில் உட்கார்ந்து கொண்டு பேசியதைக் குறித்து இங்கே ஒழுங்குப் பிரச்னை கிளப்பினார்கள். ஆகவே, அந்தத் தவறான கருத்தை "எக்ஸ்பஞ்ச்" செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி : நான் இது குறித்து கருத்து சொல்ல வேண்டியிருக்கிறது. ஒரு தடவை ஒழுங்குப்பிரச்னை எழுப்பினார்கள். இரண்டாவது தடவை அவர்களாகவே........(குறிக்கீடு) இப் போதுகூட தலையிட்டுக் கொண்டிருக்கிறார்கள். நான் அப்போதே



பேசவேண்டுமென்று நினைத்தேன். எந்த உறுப்பினராக இருந்தாலும் நீங்கள் பேசுவதற்கு அனுமதி கொடுத்த பின்பு தான் பேசவேண்டும். உட்கார்ந்துக் கொண்டு பேசுவது சரியல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேசுவது நல்லதல்ல. அப் போதிருந்தே திரு. காமாட்சி அவர்களை உட்காருங்கள் என்று மணி யடித்துச் சொல்லிக்கொண்டிருக்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி : எற்கெனவே இரண்டு முறை நான் பேசுவதற்கு அனுமதி கேட்டேன். ஒரு உப கேள்வி கேட்கிறேன் என்ற முறையில் சாமர்த்தியமாக ஒருவர் பேசினால் அது மற்றவர்களுக்கும் புரியும். உப கேள்வி கேட்கிறார் என்றால், நான் காமாட்சி அவர்களையே கேட்கிறேன். இப்படி எதாவது தவறான முறையோடு, இரண்டு அர்த்தம் படும்படி கேட்பது சரியல்ல. அதைத் தாங்கள் கண்டிப்பாக தடுக்க வேண்டும். இதில் கேட்பது உங்களுடைய "கைடன்ஸ்" எங்களுக்கு வேண்டும். கேள்வி நேரத்தில் **We want more information and also we want to compel the Hon. Minister to take action** என்றுதான் "மே" அவர்களும் சொல்லியிருக்கிறார். அப்படியில்லாமல் இந்த மாதிரி மறை முகமாக, வேறு அர்த்தம் படும்படியாக, கிண்டல் செய்யக்கூடிய முறையில் உப கேள்வி கேட்பதை நீங்கள் தடை செய்யவேண்டும். அப்படிச் செய்வது உங்களுக்கும் உதவிகரமாக இருக்கும். இப்படி ஒருவருக்கொருவர் கேள்வி கேட்பதானால், துணைக் கேள்வி கேட்பதன் நோக்கம் போய்விடும். அதோடு கட்சி மாச்சர்யங்களை நோக்கமாகக் கொண்டு துணைக் கேள்விகள் கேட்பது சரியல்ல. தாங்கள் இதற்கு ஒரு வரம்பு வைக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கு. காமாட்சி : சார், ஒரு பர்சனல் எக்ஸ்பிளனேஷன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உட்காருங்கள். அமைச்சர் பேசு கிறார்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, இங்கே திரு. காமாட்சி அவர்கள் எழுப்பிய பிரச்னை, நண்பர் முத்தையா அவர்கள் கேட்ட உப கேள்வியைப் பற்றி அல்ல. அதை ஒட்டி உறுப்பினர் மாண்புமிகு சீனிவாசன் அவர்கள், துணைக்கேள்வி கேட்டபோது பக்கத்தில் உட்கார்ந்து கொண்டு அவர்களை "வெளியே வா, பார்த்துக்கொள்ளலாம்" என்று சொன்னதாக............(திரு முனு ஆதி—குறுக்கீடு) நீங்கள் அப்போது இல்லை, உட்காருங்கள். என்னைப் பேச விடுங்கள். (குறுக்கீடு) அதற்கு முன்னாடி நடந்த விவகாரம்.

திரு. பெ. சீனிவாசன் : நீங்கள் பேசுவதை நான் ஆட்சேபிக்கிறேன். மிரட்டியதாக ஒரு அசெம்ஷன் வைத்துக்கொண்டு பேசுவதை நான் எதிர்க்கிறேன்.

(கூச்சல், குழப்பம்).

[1974 மார்ச் 18

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எல்லோரும் உட்காருங்கள். அமைச்சரைப் பேச விடுங்கள்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அப்படி அவர்கள் சொன்னதாகச் சொன்னார்கள். மாண்புமிகு திரு சீனிவாசன் அவர்கள் அப்படிச் சொல்லவில்லை என்று சொன்னதால், அத்தோடு முடிந்து விட்டது, தீர்ந்து விட்டது. அவர்களும் கோழைத்தனம் வேறு ஒன்றும் இல்லை என்று சொன்னார்கள். பிரச்னை அத்தோடு முடிந்து விட்டது. அதைப் பெரிதாக ஆக்க வேண்டாம்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்) எழுந்திருந்தார். On a point of order, Sir.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் உட்காருங்கள்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்): Sir, I have got a right to raise a point of order.

திரு. முனு ஆதி: அவர்களுக்கு சான்ஸ் கொடுத்தால் எனக்கும் சான்ஸ் கொடுக்கவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்களும் உட்காருங்கள்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: இந்தமாதிரி அவையில் நடந்து கொண்டால் நாங்கள் அவையிலே இருப்பதற்கு விரும்பவில்லை. இருதரப்பினரும் இம்மாதிரி, எழும்பி எழும்பி மற்றவர்களை பேச அனுமதிக்காமல் செய்கிறார்கள். இது சபையின் மரபுக்கு அப்பாற்பட்டதாக இருக்கிறது. ஆதலால், நிச்சயம் ஆளும் கட்சியனராக இருந்தாலும் சரி, எதிர்க்கட்சியினராலும் சரி, எல்லோரும் பொறுப்புணர்ச்சியோடு நடந்துகொள்ள வேண்டும், இந்த மாதிரி "அப்ஸ்ட்ரக்ஷன் ஆஃப் தி ஹவுஸ்" செய்வது தடுக்கப்படவேண்டும் என்பதை தங்கள் மூலமாக தெரிவித்துக்கொள்கிறேன்.

## 3. 1974-75-ஆம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு— (தொடர்ச்சி).

(அ) நிதிக் கோரிக்கை எண் 18—மருத்துவம்

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையில் மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:

"நிதிக்கோரிக்கை எண் 18—மருத்துவம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 28,37,62,800-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்.

Dr. H. V. HANDE : Sir, to discuss policy, I move—

"That the allotment of Rs. 28,37,62,800 under Demand No. 18—Medical be reduced by Rs. 100."



1974 மார்ச் 18]

Thiru N. K. PALANISWAMY : Sir, to discuss policy, I move—

"That the allotment of Rs. 28,37,62,800 under Demand No. 18—Medical be reduced by Rs. 100."

திரு. அ. கு. சுப்பையா: தலைவர் அவர்களே, கிராமப்புற மக்களுக்குத் தேவையான மருத்துவ வசதிகள் பற்றி விவாதிக்க—

"நிதிக்கோரிக்கை எண் 18—மருத்துவம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 28,37,62,800-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. எ. சுப்பிரமணியம்: தலைவர் அவர்களே, ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் ஹோமியோபதி மற்றும் நாட்டு மருத்துவ மருந்தகம் அமைத்திடும் அவசியம் குறித்து விவாதிக்க—

"நிதிக்கோரிக்கை எண் 18—மருத்துவம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 28,37,62,800-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்.".

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்."

Thiru N. DENNIS : Sir, to discuss about the necessity of shifting Kuzhithurai Taluk Headquarters Hospital to a convenient place, I move—

"That the allotment of Rs. 28,37,62,800 under Demand No. 18—Medical, be reduced by Rs. 100."

Thiru K. S. KOTHANDARAMIAH : Sir, to discuss ploicy, I move—

"That the allotment of Rs. 28,37,62,800 under Demand No. 18—Medical, be reduced by Rs. 100."

(ஆ) நிதிக்கோரிக்கை எண் 19—பொதுச் சுகாதாரம்

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

"நிதிக்கோரிக்கை எண் 19—பொதுச் சுகாதாரம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 15,76,63,300-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

திரு. ஆ.கு. சுப்பையா: தலைவர் அவர்களே, பஞ்சாயத்து கூட்டுமன்ற மருந்தகங்கள் அனைத்தையும் அரசு மேற்கொள்வது பற்றி விவாதிக்க—

"நிதிக்கோரிக்கை எண் 19—பொதுச் சுகாதாரம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 15,76,63,300-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்." என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

Dr. H. V. HANDE : Sir, to discuss policy, I Move—

"That the allotment of Rs. 15,76,63,300 under Demand No. 19—Public Health be reduced by Rs. 100."

Thiru N. K. PALANISWAMY : Sir, to discuss the failure of the Government to eradicate the mosquito problem and filaria in Tamil Nadu, I move—

"That the allotment of Rs. 15,76,63,300 under Demand No. 19—Public Health be reduced by Rs. 100."

திரு. எ. சுப்பிரமணியம் : தலைவர் அவர்களே, to discuse the need to take more effective and drastic steps to root out the evil of adulteration of articles of consumption and medicines, I move —

"That the allotment of Rs. 15,76,63,300 under Demand No. 19—Public Health be reduced by Rs. 100."

Thiru N. DENNIS : Sir, to discuss about the necessity of appointing Ayas in sub-centres too as in Maternity centres, I move —

"That the allotment of Rs. 15,76,63,300 under Demand No. 19—Public Health be reduced by Rs. 100."

(இ) நிதிக்கோரிக்கை எண் 47—பொதுச் சுகாதாரம், துப்புரவு, நீர் வழங்குதல் குறித்த மூலதனச் செலவு.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

"நிதிக் கோரிக்கை எண் 47—பொதுச் சுகாதாரம், துப்புரவு, நீர் வழங்கல் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,71,85,100-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."



Thiru KOVAI CHEZHIYAN : Sir, to discuss policy, I move :—

"That the allotment of Rs. 1,71,85,100 under Demand No. 47, Capital Outlay on Public Health, Sanitation and Water Supply be reduced by Rs. 100."

திரு. எ. சுப்பிரமணியம் : தலைவர் அவர்களே, வீராணம் திட்டத்திற்காக வாங்கப்பட்ட லாரிகளும், டிப்பர்களும் வேலையின்றி இருக்க சாமான் போக்கு வரத்துப் பணி, காண்டிராக்டர்களிடம் ஒப்படைக்கப்படுவது பற்றி விவாதிக்க—

"நிதிக்கோரிக்கை எண் 47—பொதுச் சுகாதாரம், துப்புரவு, நீர் வழங்கல் குறித்து மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 1,71,85,100-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்." என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

Thiru R. PONNAPPA NADAR : Sir, to discuss the need to augment the water-supply to Nagercoil Municipality in view of the acute scarcity of drinking water to the extended area and high level area of the town, I move—

"That the allotment of Rs. 1,71,85,100 under Demand No. 47, Capital Outlay on Public Health, Sanitation and Water Supply be reduced by Rs. 100."

திரு. என். மருதாசலம் : தலைவர் அவர்களே, கோவை நகரத்தில் எல்லா வார்டுகளிலும் பாதாளச் சாக்கடை அமைக்க வேண்டியதின் அவசியம் பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 47—பொதுச் சுகாதாரம், துப்புரவு, நீர் வழங்கல் குறித்து மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 1,71,85,100-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்." என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

(ஈ) நிதிக் கோரிக்கை எண் 33—நகர்ப்பகுதி வளர்ச்சி

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

"நிதிக் கோரிக்கை எண் 33—நகர்ப்பகுதி வளர்ச்சி என்ற தலைப்பின் கீழ் ரூ. 4,31,47,600-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

THIRU R. PONNAPPA NADAR: Sir, to discuss policy, I move—

"That the allotment of Rs. 4,31,47,600 under Demand No. 33—Urban Development be reduced by Rs. 100".

DR. H. V. HANDE: Sir, to discuss policy, I move—

"That the allotment of Rs. 4,31,47,600 under Demand No. 33—Urban Development be reduced by Rs. 100."

திரு. எ. சுப்பிரமணியம்: தலைவர் அவர்களே, நகர்ப்புறச் சொத்துக் உச்ச வரம்பு நிர்ணயிப்பதின் அவசர அவசியம் பற்றி விவாதிக்க—

"நிதிக்கோரிக்கை எண் 33—நகர்ப்புறப்பகுதி வளர்ச்சி என்ற தலைப் பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 4,31,47,600-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்." என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின் முன் விவாதத்திற்கும் வைக்கப்படுகின்றன.

*மாண்புமிகு திரு. க. அன்பழகன்: பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த மூன்று ஆண்டு காலமாகப் பொது சுகாதாரம், மருத்துவம் ஆகிய துறைகளோடு தொடர்புடைய நகர்ப்புற வளர்ச்சி ஆகியவற்றின் பொறுப்பைத் தொடர்ந்து ஏற்றவன் என்ற முறையில் சில பல சீர்திருத் தங்களைத்தான் இதுவரையில் நிறைவேற்ற முடிந்திருக்கிறது என்பதை யும், மேலும் பல சீர்திருத்தங்கள் வருகின்ற ஐந்தாண்டு திட்டத்தை ஒட்டித் தமிழகத்தில் நிறைவேற்றப்படுவதற்கான வாய்ப்புகள் இருக் கின்றன என்பதையும் நான் முதலில் தெரிவித்துக்கொள்ள விரும்பு கிறேன்.

இந்தத் துறைகளைப் பற்றி அரசின் சார்பாக ஆண்டுதோறும் கொள்கை விளக்கத்தோடு பணிமுறை விளக்கமும் சேர்த்து அறிக்கைகள் வெளியிடப் படுகின்றன. இந்த ஆண்டு மருத்துவத்துறையைப்பற்றி வெளியிடப் பட்டிருக்கிற அறிக்கையில் ஒரு அச்சுப் பிழை நேர்ந்திருக்கிறது. அதை மாண்புமிகு உறுப்பினர்கள் பெரிதாக எடுத்துக் கொளாமல் அச்சுப் பிழை என்பதற்காக ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மானியக் கோரிக்கையின் மொத்தத் தொகை ரூபாய் 28,37,62,800 என்று இருப்பதற்குப் பதிலாக இத்துறையின் சார்பாக வெளியிடப்பட்டிருக்கிற தனி அறிக்கையில் ரூ. 28,75,68,300 என்று இருக்கிற பிழையை, அமைச்சருடைய பெயரில் உள்ள அறிக்கையிலே இருக்கிற தவறைத் திருத் திக்கொள்ள கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு மற்றொன்று ஆங்கிலத்தில் உள்ளது தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளதான நீர் வழங்கல் குறித்த தனி



அறிக்கையின் இறுதியில் நான்காவது பக்கத்தில் "தூத்துக்குடியிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் உள்ள தொழிற்சாலைத் தொகுதிகளுக்கு நீர் வழங்கல்" பற்றி. ரூ. 19·00 இலட்சம் என்று நான்காவது வரியில் இருக்கவேண்டியது தவருக 10 இலட்சம் என்று தமிழிலே அச்சிடப்பட்டிருக்கிறது. ஆங்கிலத்தில் ரூ. 19 இலட்சம் என்று இருக்கிறது. இந்தக் தவறையும் திருத்திக்கொள்ளும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்.

பொதுவாக, இந்தத் துறை கடந்த மூன்று ஆண்டு காலத்தில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியை அடைந்துள்ளது. தேவைகளை நிறைவேற்று வதற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட முயற்சியின் அடிப்படையில் வெற்றி பெற்று வந்திருக்கிறது. ஆனாலும், மக்களுடைய முழுத் தேவைகளை நிறைவேற்றுவதற்கு கடந்த இரண்டு ஆண்டு காலத்தில் அகில இந்திய அடிப்படையிலே மத்திய அரசின் சுகாதார அமைச்சர் தலைமையின் கீழ் பல திட்டங்கள் ஆலோசிக்கப்பட்டன. பெரும் அளவுக்கு கிராமப்புற மக்களுக்கு மருத்துவ, சுகாதார, குடிநீர் வழங்குதல் திட்டங்கள் பரிசீலிக்கப்பட்டு அதற்குக் குறிப்பிடத்தக்க நிதியை மத்திய அரசு திட்டத்தில் ஒதுக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. அதற்காக திட்டக்குழு அமைச்சராக இருந்த மோகன் தாரியா அவர்களின் தலைமையில் ஒரு குழு தனியாக அமைக்கப் பட்டு மினிமம் நீட்ஸ் ப்ரொகிராம் என்ற அடிப்படையில் ஆற்ற வேண்டிய கடமைகளை ஆராய்ந்தது. நானும்கூட அதில் இடம் பெற்றிருந்தேன்; இறுதியாக ஏற்றுக் கொள்ளப்பட்ட பணிகளின் அளவுக்கு நிதி ஒதுக்குகின்ற ஆற்றலை இந்திய அரசு பெற முடியாத சூழ்நிலையின் காரணமாக பல திட்டங்கள் அகில இந்திய அடிப்படையில் நிதி ஒதுக்கீடு என்ற முறையில் செய்யப்படக்கூடிய காரியங்கள்—அந்த நிலையில் நிறைவேற்றப்படக்கூடிய ஒரு கட்டத்தை அடையவில்லை என்பதை நான் வருத்தத்தோடு முதலில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அகில இந்திய அளவில் சில கொள்கைகள் அடிப்படையில் மத்திய அரசு மாநில அரசுடன் ஒத்துழைத்து நிறைவேற்றக்கூடிய திட்டங்களுக்கு வழி செய்யாவிட்டாலும் கிராம மக்களுடைய வாழ்க்கை நலம் மேம் படும் வகையில் சுகாதாரத் திட்டங்கள் பலவற்றைத் தீட்டி விரிவான முறையில் செயல்பட வேண்டுமென்று நம்முடைய தமிழக அரசு பெரு முயற்சி செய்து கொண்டிருக்கிறது. அந்த முயற்சிகளிலே ஒன்று ஊராட்சி ஒன்றியங்கள் நடத்துகின்ற ஒன்றிய மருத்துவ மனைகளை—ஏற்கனவே ஜில்லா போர்டு காலத்திலிருந்து நடைபெறுகின்ற ஏறத்தாழ 220-க்கு மேற்பட்டவற்றை ஆண்டுக்கு 30, 40 என்ற அளவில் படிப்படியாக அரசே மேற்கொள்ளயிருக்கிறது. அந்த முறையில் ஏற்கனவே மேற் கொள்ளப்பட்டவை நீங்கலாக ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முத லாண்டில் 40 மருத்துவ மனைகளை மேற்கொள்ள அரசு முடிவு செய் துள்ளது. ஏற்கனவே 70 மருத்துவ மனைகளை மேற்கொண்டிருக்கிற நம்முடைய அரசு. தொடர்ந்து இரண்டு, மூன்று ஆண்டு காலத்தில் அனைத்தையும் அரசே மேற்கொண்டுவிடக்கூடிய அளவில் திட்டங்கள் வகுக்கப்பட்டிருக்கின்றன.

அது தவிர, ஏராளமான மக்கள் தொகை உள்ள பரந்த ஒன்றியங்களில் இப்போது ஒரு ஆரம்ப சுகாதார நிலையம்தான் இருக்கிறது. அங்கே இருக்கின்ற மக்கள் தொகைக்கு அது போதாது என்ற நிலைமை இப்போது ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, எல்லா மக்களுக்கும் சீரான சிகிச்சை அளிப்பதற்கு மக்கள் தொகை அதிகமுள்ள ஒன்றியங்களில் 2 ஆரம்பச் சுகாதார நிலையங்கள் ஏற்படுத்தப்படுவதற்கு இந்திய அரசைக் கேட்டு, எந்த வகையிலே முயற்சிகளை மேற்கொள்ளலாம் என்று ஆலோசித்துக் கொண்டிருக்கிறது.

ஆண்டுக்கு 50 ஒன்றியங்களில் இரண்டாவது ஆரம்பச் சுகாகதார நிலையத்தை நிறுவினால்தான் மக்களின் தேவைகளை நிறைவேற்ற முடியும். அதற்கு இப்போது நிதி ஒதுக்க வழியில்லை. எதிர்காலத்தில் நிதி ஒதுக்க வழிவகை கிடைக்குமானால், மத்திய அரசு ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதி அமைப்பில் நமக்கு அந்த வகையில் உதவக்கூடுமானால், இரண்டாவது ஆரம்பச் சுகாதார நிலையங்களை ஏற்படுத்தி கிராம மக்களுக்குப் பரவலாக சிகிச்சை அளிக்க அரசு முயற்சி செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மற்றொன்று, ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் தொடக்க ஆண்டிலிருந்தே மருத்துவக் கல்லூரிகளுடன் இணைந்துள்ள மருத்துவ மனைகளைத் தவிர மற்ற மாவட்டத் தலைமை மருத்துவ மனைகளில் சிறப்புப் பிரிவுகளில் சிகிச்சை அளிக்க வசதிகள் செய்யப்பட வேண்டும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. தற்போது சென்னை தவிர, செங்கற்பட்டு, தஞ்சை, கோவை, மதுரை, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் கல்லூரி மருத்துவ மனைகளில் "ஸ்பெஷலிஸ்ட்ஸ்" (specialists) இருக்கிறார்கள். அங்கெல்லாம் சிறப்புப் பிரிவுகளில் சிகிச்சைகள் வழங்குகின்ற மருத்துவ வல்லுநர்கள் பணியாற்றுகிறார்கள். அதைப்போலவே எல்லா மாவட்டத் தலைமை மருத்துவ மனைகளிலும் சிறப்புப் பிரிவுகளில் நிபுணர்களை பணிக்கமர்த்தும் முயற்சி இருக்கிறது.

படிப்படியாக வட்டத் தலைமை மருத்துவ மனைகள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு சிறப்புப் பிரிவுகளில் சிகிச்சை வல்லுநர்களை நியமிக்கும் ஒரு திட்டத்தை அரசு வகுத்திருக்கிறது. அவர்கள் எந்த முறையிலே அமர்த்தப்படுவார்கள் என்றால், மகப்பேறு அதிகமாக உள்ள மருத்துவ மனைகளில் கைனக்காலஜிஸ்ட்டும் (gynaecologist) மற்ற இடங்களில் M.D., M.S. போன்ற பட்டம் பெற்றவர்கள் அமர்த்தப்படுவார்கள். அந்த வகையில் இந்த ஆண்டில் 30 சிறப்பு சிகிச்சை நிபுணர்கள் இடம்பெற வழி செய்யப்படுகிறது.

இது தவிர, இடவசதி போதுமான அளவுக்கு இல்லாத மருத்துவ மனைகளை விரிவு படுத்துவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால், தருமபுரி மாவட்ட மருத்துவ மனையில் போதிய இடவசதி இல்லாததால் அந்த மருத்துவ மனையைப் பெரிய அளவில் கட்டுவதற்கு இந்த ஆண்டு 8 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதைப்போலவே நாகர்கோயில் மருத்துவ மனை



யிலும் போதிய இட வசதி இல்லை. ஆனால், அந்த மருத்துவ மனையை விரிவுபடுத்த இடவசதி இல்லாமல் இருக்கிறது. அதனால், பழைய கட்டடங்களாக உள்ள பிரிவுகளை இடித்து புதிதாகக் கட்டுவதற்கு ஆலோசனை செய்யப்படுகிறது.

அதோடு அந்த மருத்துவ மனைக்குப் பக்கத்தில் ஒரு ஏக்கர் நிலத்தை வாங்கி, அதிலே பல மாடிக் கட்டிடம் ஒன்றைக் கட்ட வேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் ஆலோசனையை ஏற்று, அதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட இருக்கிறது.

கோவையிலிருந்த மாவட்ட மருத்துவ மனையை ஈரோட்டில் மாற்றிக் கட்டுவதற்கு 7 இலட்சம் ரூபாய் நன்கொடையாக நகரசபையிடமிருந்து வழங்கியிருக்கிறார்கள். மேலும் 10, 12 இலட்சம் ரூபாய் அதற்குச் செலவு செய்ய அரசு முடிவு செய்திருக்கிறது. அதைப்போலவே திருப்பூர் நகரத்திலும், ராஜபாளையம் நகரத்திலும் இருக்கின்ற இரண்டு மருத்துவ மனைகளையும் புதிதாகக் கட்டும் முயற்சியை அரசு மேற்கொண்டு இருக்கிறது. அவர்கள் நன்கொடையும் கொடுத்திருக்கிறார்கள். இப்படிப் பல திட்டங்கள் தீட்டப்பட்டு, மருத்துவத் துறையிலே சிறந்த சேவை செய்ய வட்ட, மாவட்ட மருத்துவ மனைகளில் வசதிகள் செய்யப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, சில வட்ட தலைமை மருத்துவ மனைகளில் 30, 40 படுக்கைகள்தான் உள்ளன. தமிழ் நாடு திட்டக்குழு 90 படுக்கைகளாவது இருக்கவேண்டுமென்று பரிந்துரை செய்துள்ளது. ஆகவே, வட்ட தலைமை மருத்துவ மனைகளில் உள்ள படுக்கைகளை 90 என்ற அளவுக்குப் படிப்படியாக உயர்த்த முடிவு செய்யப்பட்டுள்ளது. அதைச் செயல் படுத்துவது எளிது அல்ல. அவைகளை எல்லாம் கருத்தில் கொண்டு, திட்டங்கள் செயல்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தத் துறையிலே கட்சிச் சார்பற்ற முறையிலே எதிர்க்கட்சித் தலைவர்களுடைய மேலான ஆலோசனைகளையும் நான் எதிர்பார்க்கிறேன். இன்றைக்குப் படித்து முடித்து விட்ட டாக்டர்கள் அகில இந்திய அளவில் ஏராளமானவர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள். மருத்துவத் துறையில் படித்துவரும் மாணவர்கள் அத்தனை பேரும் அரசு வேலை வாய்ப்பை ஏற்படுத்தித் தர வேண்டும் என்று எதிர்பார்ப்பது அவ்வளவு பொருத்தமுடையதாக இல்லை. டாக்டர்களுக்கான பயிற்சியை முழு அளவில் பெற்றவர்கள் தாங்களாகவே வேலை வாய்ப்பை தேடிக்கொள்ள வேண்டும். ஒரு குறிப்பிட்ட அளவினருக்குத்தான் அரசால் வேலை வாய்ப்பளிக்க முடியும்.

தமிழகத்திலே கடந்த 1966—67-ம் ஆண்டிலிருந்து ஆண்டு தோறும் 1,125 மாணவர்கள் என்ற அளவிலே மூன்று ஆண்டுகளாக மாணவர்களை சேர்த்து வந்தோம். அதற்குப் பின்னர் நிபுணர்களின் ஆலோசனைப்படி 1,015 என்ற எண்ணிக்கை அளவு கடந்த மூன்று ஆண்டுகளாக சேர்த்து வருகிறோம். ஏறத்தாழ 7,000 மாணவர்கள் அந்தக் கணக்குப்படி மருத்துவ கல்லூரிகளில் படித்துக்கொண்டிருக்கிறார்கள். மொத்தம் சேர்த்துக்கொள்ளப்

பட்டிருக்கிற மாணவர்களின் எண்ணிக்கை 7,545. அதில் வேண்டுமானால் 45 பேர்கள் படிப்பை நிறுத்தியிருக்கலாம். அதுபோக ஏறத்தாழ 7,500 பேர்கள் படிக்கிறார்கள்.

பட்டத் தகுதி பெற்று அரசாங்க வேலைக்குப் பதிவு செய்திருப்பவர்களின் எண்ணிக்கை இதுவரையில், 700. வருகிற ஆண்டில் 300 பேர்களுக்கு வேலை வாய்ப்பளிக்க முடிவு செய்யப்பட்டிருக்கிறது. அதாவது ஏறத்தாழ வேலை காலியாகும் இடத்திற்கு 100, புதிய பதவிகளில் 100, மற்றும் சிறப்புப் பிரிவுகளில் 100 என்ற வகையில் 300 பேர்களுக்கு வருகிற ஆண்டில் வேலை கொடுக்க முடியும். இப்படி 300 பேருக்கு வேலை கொடுத்தாலும், $6\frac{1}{2}$ ஆண்டுக்காலம் பயிற்சி பெற்ற பின்னர் வேலை கிடைக்கவில்லை என்று சொல்வோர்களின் எண்ணிக்கை ஏராளமாக இருக்கின்றது. ஆகவே அரசாங்கம் இந்தப் பிரச்சினையில் என்ன செய்யலாம் என்ற ஆலோசனைகளை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்கள் கட்சிக் கண்ணோட்டம் காட்டாமல் தெரிவிக்க வேண்டுமென்று வேண்டுகிறேன்.

முழு அளவில் பயிற்சி பெற்றவர்கள் தனியாகவே பிரைவேட் பிராக்டிஸ் செய்ய முடியும். ஆகவே, அரசாங்க வேலை கிடைக்காதவர்கள் தாங்களாகவே சொந்தமாக தொழில் தொடங்கிக்கொள்ளலாம். படிக்கின்ற மாணவர்கள் அத்தனை பேருக்கும் முழு அளவில் சிறந்த பயிற்சி கொடுப்பது நமது கடமையாகும். இன்றைக்கு அகில இந்திய மருத்துவக் குழு ஒன்பது கல்லூரிகளை "அன் ரெக்கக்னைஸ்டு மெடிக்கல் காலேஜெஸ்" என்று அறிவித்திருக்கிறது. அந்த 9 கல்லூரிகளில் பயிற்சி பெற்றவர்கள் முழு தகுதி பெற்றவர்கள் அல்ல.

நம்முடைய மாநிலத்திலும் இன்னும் மூன்று கல்லூரிகள் அகில இந்திய மருத்துவக் குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படாமல் இருக்கின்றன. அதற்கு மருத்துவ மனைகளில் படுக்கைகளின் எண்ணிக்கைகளை அதிகப்படுத்த வேண்டியிருக்கிறது. அதை இப்போது செய்துகொண்டிருக்கிறோம். இந்த மூன்று மருத்துவக் கல்லூரிகளையும் ஏற்றுக்கொண்டாலும், கூட, தகுந்த அளவில் பயிற்சி பெற்று வெளி வருகிற வாய்ப்பு 800 பேர்களுக்கு அல்லது 850 பேர்களுக்குத்தான் இன்றைக்கு இருக்கிறது.

ஏனென்றால் ஆண்டுதோறும் ஒரு கல்லூரியில் சேர்க்கப்படுகிற மாணவர் நீங்கள் எண்ணிப் பார்த்தால் 100 பேர்கள், 150 பேர்கள், 175 பேர்கள்தான் என்று நினைக்கலாம். ஆனால் ஒவ்வொரு கல்லூரியிலும் ஆறு ஆண்டுகளில் பயிற்சி பெறுகிறவர்கள் 1,000 பேர், 800 பேர், 750 பேர் ஆக இருக்கிறது. ஆக கல்லூரிகளில் ஒவ்வொரு ஆண்டும் நெருக்கடி ஏற்படுகிறது. தரப்பட்ட வேண்டிய பயிற்சித் திறனும் சிறப்புடையதாக இல்லை. ஆகவே மாணவர்களின் நலனைக் கருதி, இன்றைய தினம் மருத்துவக் கல்லூரிகளில் சேர்க்கப்படுகிற மாணவர்களின் எண்ணிக்கையை 20 விழுக்காடு குறைக்க வேண்டுமென்று, அந்த மாணவர்களே கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஏறத்தாழ இடவசதி 800—900 பேர்களுக்குத்தானிருக்கிறது. அதனால் இவ்வாண்டு சேர்க்கப்படுகிற மாணவர்களின் எண்ணிக்கை



825 அல்லது 850 ஆகத்தான் இருக்கவேண்டும் என்று விரும்புகின்றனர். 1,015 பேர்களை சேர்ப்பது என்பது ஏற்றதாக இல்லை. 200 பேர்கள் இடம் பெற முடியாது போய்விடுமே என்ற கவலையில் ஆயிரக்கணக்கான பேர்கள் மனம் வருந்தும் சூழ்நிலையை உண்டாக்கக்கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன். இதனால் தாழ்த்தப்பட்டவர்களுக்கும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கும் எந்த விதமான குறைபாடும் ஏற்பட்டு விடாது.

(முற்பகல் 10-30).

இன்றைய தினம் தாழ்த்தப்பட்டவர்கள் ஏறத்தாழ 800 பேர்களுக்கு மேல் படித்துக்கொண்டிருக்கிறார்கள். சரியான புள்ளி விவரத்தை என்னால் கூற முடியும். இன்றைய தினம் 1,015 பேர்கள் என்பது 800-850 ஆகக் குறைக்கப்பட்டாலும், தாழ்த்தப்பட்டவர்களில் 35 பேர்களுக்கு வேண்டுமானால் இடமில்லாது போகக் கூடும். ஆக தாழ்த்தப்பட்டவர்கள், பிற்படுத்தப்பட்டவர்கள் பாதிக்கப்படமாட்டார்கள். பிற்படுத்தப்பட்ட மாணவர்களில் முஸ்லிம்களும் வருகிறார்கள். முஸ்லிம்கள் கணக்கைத் தனியாகக் கொடுப்பது அவசியம் அல்ல. எந்த அளவுக்கு அவர்கள் இடம் பெற்றிருக்கிறார்கள் என்பது யாவரும் அறிவர். தனிப்பட்ட சலுகை பெற்று வரும் சமுதாயம் எந்த அளவிலும் பாதிக்கப்படாது என்று தெரிவித்துக்கொள்கிறேன். இந்த முறையில் எதிர்காலத்தில் மருத்துவக் கல்லூரியில் சேர்க்கும் மாணவர்களின் எண்ணிக்கையைக் குறைக்க எல்லோரும் ஒத்துழைப்பு தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, அகில இந்திய டாக்டர் சர்வீஸ்களில் உள்ளவர்கள் இன்றைய தினம் பல பிரச்சினைகளுக்காகப் போராடி வருவதை எல்லோரும் அறிவார்கள். தமிழகத்தில் அத்தகைய ஒரு போராட்டம் தொடங்கியது—ஒன்று—அவர்களுக்கு அனுதாபம் தெரிவிக்கிற அடிப்படையில். இரண்டாவது ஹவுஸ் சர்ஜனாக பயிற்சி பெற்ற பிறகே அவர்களுக்குப் பட்டம் கொடுக்கப்பட்டு வருகிறது. ஹவுஸ் சர்ஜனாக இருக்கிற காலத்தில் அவர்களுக்கு 200-ம் 25-ம் ஆக 225 ரூபாய் தான் உதவித் தொகை கொடுக்கப்படுகிறது. அதை உயர்த்த வேண்டும் என்பதாக, ரூ. 225-ஐ, ரூ. 275 ஆக உயர்த்தித் தருவது என்பதை அரசு ஏற்றுக்கொண்டுள்ளது. அதை அவர்களும் ஏற்றுக்கொண்டு, ஒத்துழைத்திருக்கிறார்கள்.

இந்திய மருத்துவக் கல்லூரிகளில் படிக்கிற மாணவர்களுக்குப் பயிற்சி ஆண்டில் ரூ. 125 கொடுக்கப்படுகிறது. அதற்காக அவர்கள் வருத்தப் பட்டார்கள். அதை ரூ. 175 ஆக உயர்த்தி, ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. இந்தத் திங்களில் பெறவிட்டாலும், அடுத்த திங்களில் அவர்களுக்குக் கிடைக்கும்.

பி. ஐ. எம். படித்தவர்களுக்கு பணியில் தொடக்க ஊதியம் ரூ. 400 என்று இருந்தது. மற்றும் சில பட்டதாரிகளுக்கு உள்ளதுபோலவே தங்களுக்கும் கொடுக்கவேண்டும் என்பது அவர்கள் குறை. அதை அரசு ஏற்றுக்கொண்டு ரூ. 425 இல் இருந்து தொடங்குவது என்று முடிவு செய்திருக்கிறது. இப்படி இருக்கக்கூடிய பலவிதமான குறைகளை நீக்க அரசு நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறது.

மருத்துவக் கல்லூரிகளில் சேர்த்துக்கொள்ளப்படுபவர்களின் எண்ணிக்கை விகிதத்தைக் குறைப்பதன் மூலம், அடுத்த ஐந்தாண்டுகளில் எத்தகைய சூழ்நிலையை உருவாக்க விரும்புகிறோமோ அதை உருவாக்குவதற்கு எதிர்க்கட்சியில் உள்ளவர்கள் தங்களது ஒருமுகமான கருத்தைத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதில் அரசியல் கட்சிக் கருத்துக்கு இடமில்லை என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதற்கடுத்து நான் தெரிவிக்க விரும்புவது, இதுவரை வழக்கத்தில் இல்லாத பர்பாமன்ஸ் பட்ஜெட் ஒன்றையும் வெளியிட்டிருக்கிறோம். நிர்வாகச் சீர்திருத்தக் குழுவின் ஆலோசனையின் படி வெளியிடப்பட்டுள்ள இதில் நடைபெறுகிற அனைத்தும் கொடுக்கப்பட்டிருக்கிறது. அங்கத்தினர்கள் சொல்கிற யோசனைகள் எல்லாம் கவனிக்கப்பட்டு, அதன் அடிப்படையில் அடுத்த ஆண்டு இனனும் நல்ல முறையில் இதைத் தயாரித்துக் கொடுக்க முடியும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இது வரை குடிநீர் வாரியம் சம்பந்தமாக எந்த விதமான அறிக்கையும் இங்கே தரப்படவில்லை. இந்த ஆண்டு அதன் கொள்கை விளக்கக் குறிப்பு தனியாக இங்கே தயாரிக்கப்பட்டு கொடுக்கப்பட்டிருக்கிறது. மேலும், உறுப்பினர்கள் சொல்கிற ஆலோசனைகட்கேற்ப இதை இன்னும் விரிவாகவும் அடுத்த ஆண்டு முதல் அளிக்கலாம்.

நகர அமைப்புப் பணி என்பது—அர்பன் டெவலப்மெண்டு—பொதுச் சுகாதாரத் துறையில் ஒரு அங்கமாக இருந்தது. ரூரல் டெவலப்மெண்டு என்பது ஆர். டி. எல், ஏ. யிடம் நகராட்சிகளின் நிர்வாகத்துடன் இணைந்து உள்ளாட்சித் துறை அமைச்சர் பொறுப்பில் இருக்கிறது. அர்பன் டெவலெப்மெண்டு நிர்வாகப் பணியும் அவர்கள் பொறுப்பில்தான் இருக்கிறது. மாநகர வளர்ச்சித் திட்டப் பணி அர்பன் டெவலெப்மெண்டு—ப்ளானிங், நகரமாக அமையக்கூடிய பகுதி வளர்ச்சி வட்டார வளர்ச்சி முதலானவை டவுன் அன்டு கன்ட்ரி ப்ளானிங் சட்டம் ஒன்று நிறைவேற்றியிருப்பதன் காரணமாக அதற்கென தனியே ஒரு அறிக்கை இங்கே அளிக்கப்பட்டிருக்கிறது.

குறைகளே இல்லாமல் நிறைவு செய்து விட்டோம் என்று பேசுவதாக யாரும் எண்ணிக்கொள்ள வேண்டாம். குறைகள் இருப்பதை நான் உணர்கிறேன். என்ன குறைகள் என்பதையும் பரிசிலித்துக்கொண்டிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் குறைகளைச் சொல்லும்போது நான் அவற்றை விளக்கிக் கூறுவேன்.

இங்கே பொதுச் சுகாதாரம், குடிநீர், வாரியம், நகர வளர்ச்சிப் பணி ஆகியவை செம்மைப்படுத்தப்படவேண்டுமென்ற அடிப்படையில்—கொடுக்கப்பட்டுள்ள விவரங்களில் சிலவற்றைத்தான் கூறினேன். அதற்கான அறிக்கைகளை* நான் இங்கே படித்ததாக எடுத்துக்கொண்டு அவற்றை சட்டப் பேரவை நடைமுறைக் குறிப்பில் எடுத்துக்கொள்ள வேண்டும். அவற்றை எல்லாம் நான் மாண்புமிகு உறுப்பினர்களின் ஆலோசனைக்காக இங்கே முன்மொழிகிறேன். வணக்கம்.

*419—198-ம் பக்கங்களில் இணைப்புகள் I, II, III ஆக அச்சிடப்பட்டுள்ளன





* திருமதி ஜோதி வெங்கடாசலம்: தலைவர் அவர்களே, மாண்புமிகு நல்வாழ்வுத் துறை அமைச்சர் கொண்டுவந்துள்ள மானியங்களுக்கு எங்கள் கட்சியின் சார்பில் கொடுத்திருக்கக்கூடிய வெட்டுத் தீர்மானங்களை ஆதரித்து சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

பொதுவாக இந்த மானியத்தை அறிமுகப்படுத்தும்போது கனம் அமைச்சர் அவர்கள் விரிவாக அரசாங்கம் செய்திருக்கக்கூடிய திட்டங்களையும், ஏற்கனவே செய்திருப்பனவற்றையும் எடுத்துக் கூறினார்கள். ஆனால் இந்த மானியம் சம்மந்தமாக அவர்கள் அச்சடித்துக்கொடுத்திருக்கிற புத்தகங்களைப் பார்க்கிறபோது, எனக்குப் புரிந்த அளவில் அது ஒரு எஜுகேஷனல் அண்டு இன்பர்மேடிவ் வால்யு இருக்கிறதே தவிர 1974–75 க்கான திட்டங்கள் எவை என்பதாக நிர்வாகத்தைப்பற்றி இல்லை. ஒருவேளை தமிழகம் மருத்துவத் துறையில் முன்னேறிவிட்டது என்று கருதி, ஒதுக்கப்படுகிற மானியம் குறைந்துவிட்ட காரணத்தினால், இதையும் இவர்கள் குறைத்துவிட்டார்களோ என்கிற சந்தேகம் வருகிறது.

தமிழ் நாட்டு மக்கள் நல்வாழ்வு வாழ வேண்டுமென்று அமைச்சருக்கு மாத்திரம் அல்ல, இந்த நாட்டின் பிரஜைகளாக இருக்கக் கூடிய நம் எல்லோருக்கும் இருக்கிறது. மக்கள் நன்றாக வாழவேண்டுமென்ற அடிப்படையில் கேள்வி நேரத்திலும் கேட்டிருக்கிறேன். இன்றைய தினம் தண்ணீர் மூலமாக வரக் கூடிய வியாதிகள் (வாட்டர் பவுண்டு டிசீசஸ்), காற்று மூலமாக வரக்கூடிய வியாதிகள் (எர் பவுண்டு டிசீசஸ்), என்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். குடிநீர் பெரும் பிரச்சினையாக இருந்து வருகிறது பல பகுதிகளிலே என்பதை எதிர்க்கட்சியில் உள்ளவர்கள் பல முறை சுட்டிக்காட்டியிருக்கிறார்கள்.

சிறுவாணி குடி தண்ணீர் திட்டம் இருக்கிற நிலைபற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் கூறும்போது, கேரள மாநிலத்தோடு ஒரு ஒப்புதல் செய்திருப்பதாகக் கூறினார்கள். அந்த ஒப்புதலின் காரணமாக கோயம்புத்தூருக்கு வரக்கூடிய நீர் அதிவிரைவில் வருவதற்கு அரசு ஏற்பாடு செய்யவேண்டும்.

சென்னை மாநகரத்தைப் பொறுத்தமட்டில், குடி தண்ணீர் ரெட்ஹில்ஸிலிருந்தும் சோழவரத்திலிருந்தும் கொண்டு வரக்கூடிய ஷார்ட் டெர்ம் ப்ரப்போசல் போட்டிருக்கிறார்கள் அதாவது ஓப்பன் கம்ப்யூட், க்ளோஸ் கம்ப்யூட் இவைகள் எல்லாம் பரிசீலனை செய்து போடப்படும் என்றால் அதனாலே சென்னை மாநகரத்திலே இருக்கக்கூடிய மக்களுக்கு பெர் ஹெட் ஓரளவு குடி தண்ணீர் அதிகமாகக் கிடைக்கும் என்ற அளவிலே, என்று கூறப்பட்டிருக்கிறது. இந்த புரப்போசல் எப்பொழுது எடுத்துக்கொள்ளப்பட்டது. அது என்றைய தினம் வரும் என்பதை கனம் அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கும் போது தெரிவிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஜெனரல் ஹாஸ்ப்பிட்டலை எடுத்துக் கொள்வோம். மருத்துவமனைகளை எடுத்துக்கொள்கின்ற இந்த நேரத்தில் நான் பலமுறை இங்கே எடுத்துக் கூறி இருக்கிறேன். ஏற்கனவே, ஜெனரல் ஹாஸ்ப்பிட்டல்

மிகவும் நெருக்கடியான நிலையிலே இருக்கிறது. நிறையக் கட்டிடங்களைக் கட்டி, வியாதியஸ்தர்களைக் கூடச் சென்று பார்க்க முடியாத நிலைமையை நாம் உருவாக்கியிருக்கிறோம் என்று கூறியிருக்கிறேன்.

இன்றைக்கு சந்திகாருக்காக, ஹரியானாவில் போஸ்ட் கிராஜுவேட் சென்டரை ஏற்படுத்தி இருக்கிறார்கள். நாம், இங்கு ஏற்படுத்த வேண்டியதுபற்றி பலமுறை வலியுறுத்தியுள்ளோம். அரசாங்கத்திற்கு தெரிந்திருந்தும், இன்னும் நெருக்கடியை ஜி. எச்சில் அதிகப்படுத்தினால் எப்படி இருக்கும் ? போஸ்ட் கிராஜுவேட் சென்டர் வருவதற்காக ஏற்கனவே அரசாங்கம் நிலத்தை ஆர்ஜிதம் செய்திருக்கிறது. அந்த நிலத்தினுடைய நிலை என்னவாயிற்று ? தனிப்பட்ட முறையிலே, நல்ல முறையிலே, பல ஸ்பெஷல் டிபார்ட்மென்ட்களை எல்லாம் ஏற்படுத்த அதற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அவைகளையெல்லாம் கேட்கும்போது, தனியாக போஸ்ட் கிராஜுவேட் இன்ஸ்டிட்யூஷனுக்குக் கட்டிடம் கட்டுவதற்கு முன் வர அரசு தயங்குகிறதா என்று நான் அறிய விரும்புகிறேன்.

தொத்து வியாதிகள் எல்லாம் அதிகப்படியாக பரவிக் கொண்டிருக்கின்றன. இங்கு எதிர்க்கட்சியிலே இருக்கக் கூடிய அங்கத்தினர்கள் மலேரியாவும் பைலேரியாவும் எப்படிப் பரவி இருக்கிறது என்பதைப்பற்றி விவாதிக்க வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறார்கள். நாம் மலேரியா எராடிக்கேஷன் ஸ்கீம் மூலம் பல திட்டங்களை வகுத்து ஓரளவு அமுல் செய்து, தமிழ்நாட்டிலிருந்து ஓரளவு மலேரியாஅகன்றுவிட்டது என்ற நிலையை உருவாக்கினோம். இப்பொழுது மறுபடியும் பைலேரியா அதிகப்படியாக இருக்கிறது என்பதைப் பார்க்கும்போது, அதற்குக் காரணம் என்ன ? அதற்கென்று அதிகப்படியான பப்ளிக் ஹெல்த் ஸ்டாஃபைப் போட்டு, ஆவன செய்ய அரசு முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த தொத்து நோய்கள் பரவுகின்ற என்று சொல்கின்ற நேரத்தில் கல்லூரிகளிலே பரவக் கூடிய பெரும் தொத்துவியாதிகள் மாணவர்கள் மத்தியிலே இருக்கிற ஸ்டிரைக்குகள். ஸ்டிரைக்கைப் பற்றி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அவர்கள் ஓரளவு மாணவர்களது கோரிக்கைகளுக்கு இசைந்து ஒப்புக்கொண்டிருப்பதைப் பற்றி மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். ஆனால், இந்த சிம்பத்தட்டிக் ஸ்டிரைக் கூட அங்கு இடம் பெறாமல் செய்வதற்கு நாம் முயற்சிக்க வேண்டும். அது சிம்பத்தட்டிக் ஸ்டிரைக்காக ஆரம்பித்து பிறகு வேறு ஸ்டிரைக்குகளிலே வந்து, பெரும் தொத்து வியாதியாகப் பரவுவதைப் பார்க்கும்போது, சமீபத்தில் நடந்த ஸ்டிரைக்குதான் ஞாபகத்திற்கு வருகிறது. அதனால் மக்கள் எவ்வளவு கஷ்டப்பட்டார்கள் ? ஆல்டர்னேடிவ் புரவிஷன் செய்திருக்கிறோம் என்று ஒருபக்கம் ஒப்புக்கொண்டாலும் வியாதியஸ்தர்களுக்கெல்லாம் பல கஷ்டங்கள் ஏற்பட்டதைப் பார்த்தோம்.

ஸ்டான்லி மருத்துவ மனையிலுள்ள வார்டனுக்கும் அங்குள்ள தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த மாணவனுக்கும் இடையிலே ஏற்பட்ட



ஒரு கல்வரத்தைப் பற்றி, விரிவான அறிக்கை ஒன்று வேண்டுமென்று இங்கே கேட்டபொழுது, கனம் அமைச்சர் அவர்கள் அதைப்பற்றி விசாரணை செய்து கொண்டிருக்கிறோம் என்று கூறினார்கள். அது எந்த அளவிலே முடிந்து தீர்க்கப்பட்டிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன். வேறு மருத்துவ மனைகளுக்கும் கல்லூரிகளுக்கும் அது நீடிக்காமல் இருப்பதற்குத் தக்கவாறு அரசு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஓமியோபதி கல்லூரி ஒன்று ஏற்படுத்தயிருப்பதாக நிதிநிலை அறிக்கையிலே குறிப்பு இருந்தது. அதை வரவேற்கின்ற அளவிலே எங்கள் கட்சியின் சார்பாக திரு ஜேம்ஸ் அவர்கள் கொடுத்திருக்கின்ற வெட்டுத் தீர்மானத்தையொட்டி, அதை கன்னியாகுமரியிலே ஆரம்பித்தால் மிகவும் நல்லதாக இருக்கும். அதையும் சென்னையிலே வைத்து நெருக்கடியை ஏற்படுத்த வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஆம்புலன்ஸ்கள். இந்த ஆம்புலன்ஸ்களுக்கும் தீராத தொத்து வியாதி வந்திருப்பதை நாம் பார்க்கிறோம். எப்பொழுது, மக்களுக்கு சமயத்திற்கு ஆம்புலன்ஸுக்கு ஃபோன் செய்தாலும், அது கிடைக்காத நிலைமை ஏற்படுகிறது. இதை நான் மிகைப்படுத்திக் கூறுவதாக நீங்கள் நினைக்கவேண்டாம். ஆம்புலன்ஸ் கிடைக்காத நிலைமை சதா இருந்து கொண்டிருக்கிறது. அதை எதற்காக வைத்திருக்கிறோம் ? அவசரத்திற்குப் பயன்படுத்தத்தான் ஆம்புலன்ஸை வைத்திருக்கிறோம். நடமாடக்கூடிய நிலைமையிலே இருக்கவேண்டிய ஆம்புலன்ஸ்கள் மிகவும் பரிதாபமான சூழ்நிலையில், பெயின்ட் செய்கிறார்களோ, இல்லையோ புரியவில்லை. அப்படி பழுதுபட்டு, எந்தவிதமான மருந்து கொடுத்தும் தீர்க்க முடியாத வியாதி இந்த ஆம்புலன்ஸ்களுக்கு வந்திருக்கிற காரணத்தினால், அவைகளையெல்லாம் "கன்டெம்" செய்து விட்டு, ஒவ்வொரு மருத்துவ மனைக்கும் குறைந்தது 3 ஆம்புலன்ஸ்களாவது இருக்க அமைச்சரவர்கள் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இந்த மார்ச்சுவரி வான் சமயத்திற்கு கிடைப்பதில்லை. என்னுடைய சொந்த அனுபவத்தை நான் சொல்கிறேன். எனக்குத் தெரிந்த ஒருவர் மிகவும் வேண்டியவர் ஸ்டான்லி மருத்துவ மனையில் இறந்துவிட்டார். நான் அதற்காக வானைக் கேட்டபொழுது 10 நிமிடத்திலே அனுப்பி வைக்கிறோம் என்று கூறினார்கள். 10 நிமிடம் ஆகி, 20 நிமிடமும் ஆகியது. பிறகு நான் மறுபடியும் அந்த வானுக்காக போன் செய்து அந்த மார்ச்சுவரி வான் கிடைக்குமா, இருக்கிறதா, இல்லையா என்று கேட்டபொழுது, அது ரிப்பேரில் இருக்கிறது. அனுப்ப முடியாது என்று கூறினார்கள். எங்களைப் போன்றவர்களுக்குக்கே இப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டிருக்கிறதென்றால், மற்றவர்களுக்கு எப்படி இருக்கும் ? அதற்குப் பிறகு அந்தப் பிணத்தை எடுத்துக்கொள்ள அவர்கள் சொந்தக்காரர்களோடு, நானும் சொந்த முயற்சி செய்து, அந்தப் பிணத்தை வெளியே கொண்டு வந்தோம். (குறுக்கிடு) அப்பொழுதே சொல்லியிருக்கலாம், வான் ரிப்பேரில் இருக்கிறது, நீங்கள் உங்கள் வழியைப் பார்த்துக

[திருமதி ஜோதி வெங்கடாசலம்] [1974 மார்ச் 18

கொள்ளுங்கள் என்று சொல்லி இருந்தால், சரியாக இருந்திருக்கும். இப்படி ரிப்பேரில் இருக்கும்போது ஆல்டர்னேட்டிவ் புரவிஷன் செய்ய வேண்டும். நீங்கள் வான்களை அதிகப்படுத்தவேண்டும் சதா ரிப்பேர், ரிப்பேர் என்று சொல்கிறார்கள். நான் ஏதோ சட்டசபை அங்கத்தினர்கள் என்கிற முறையில் தனிச் சலுகை கொடுக்கவேண்டுமென்று விரும்புகிறவர்கள் அல்ல. ஆகையால்தான் அதை வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

பொதுமக்கள் தங்களுக்கு ஏற்படக்கூடிய வியாதிகள் மருத்துவமனைக்குச் சென்றால் தீரும் என்று நினைக்கின்ற நேரத்தில், அவர்களுக்குக் கொடுக்கின்ற சலுகைகள், சிகிச்சைகள், இன்ஜக்ஷன் பற்றியெல்லாம் குறிப்பிடப் பட்டிருக்கிறது.

நம்முடைய கிங் இன்ஸ்டிட்யூட்டில் செய்யக்கூடிய பல ஊசி மருந்துகள் பற்றி அறிவோம். ஆனால், சமீபத்திலே ஈ. எஸ். ஐ. ஆஸ்பத்திரியிலே ஒரு நோயாளிக்கு இன்ஜெக்ஷன் கொடுத்து ஒருவர் மரணம் அடைந்து விட்டார் என்பது நமக்குத் தெரியும். என் கண்ணும் கருத்துமாக டாக்டர்கள் மருந்தையும் ஊசியையும் கொடுக்கும்போதும், குத்தும்போதும் இருக்கக் கூடாது என்பதுதான் என்னுடைய கேள்வி. ஏதோ மருந்து கொடுத்துவிட்டும் ஊசியைக் குத்திவிட்டும் சென்று விடுகிறார்களே தவிர, 10 நிமிஷம் நோயாளிகளோடு இருந்து ரியாக்ஷன் பார்க்கட்டுமே. அதற்குப் பிறகு, ரியாக்ஷன் இருந்தால், அதற்கு தக்க சிகிச்சை கொடுக்கட்டுமே. ஏதோ, ஆடுமாடுகளைப் பார்ப்பதுபோல், ஈ.எஸ்.ஐ. மருத்துவ மனைக்குச் செல்கிறவர்களைப் பார்ப்பார்களானால் அதை நான் கண்டிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையிலே காசநோய் பிரிவிற்கு இரண்டு ஆண்டுகளாக டாக்டர்கள் இல்லை என்று சொல்லப் படுகிறது. வேக்கன்ஸிஸ் வரும்பொழுது உடனடியாக டாக்டர்களைப் போட வேண்டும். டாக்டர்கள் வேலையில்லாமல் திண்டாடிக்கொண்டிருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : டாக்டர்கள் இருக்கிறார்கள். அந்தப் பணி அப்படியிருந்ததோ என்னவோ எனக்குத் தெரியவில்லை. டாக்டர்கள் இருக்கிறார்கள்.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : ரைட். பல ஆண்டுகளாக டாக்டர்கள் போட முடியாத நிலைமையிருக்குமானால் மருத்துவ மனைகளிலே பலவிதமான ஒழுங்கீனங்கள், நிர்வாக சீர்கேடுகள் ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். செவிலியர்கள் இருக்கிறார்கள். ஜூனியர் டாக்டர்கள் பி.ஐ.எம். படித்த டாக்டர்கள் இவர்களுக்கு ஊதியம், ஹவுஸ் சர்ஜன்ஸி செய்யும்பொழுது ஊதியத் தொகை இவைகள் எல்லாம் அதிகம் கொடுத்திருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நான் வரவேற்கிறேன். செவிலியர்களும் அந்த அளவிற்கு நல்ல பணி யாற்றுகிறார்கள் ...............



1974 மார்ச் 18]

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: ஓர் ஆண்டுக்கு முன்னர் அவர்கள் தங்களுடைய கோரிக்கைகள் சிலவற்றை வைத்தபொழுது அதை ஒன்-மேன் கமிஷன் ஆராய்ந்தபின் ஓரளவிற்கு கோரிக்கைகள் நிறைவேற்றப் பட்டு அவர்கள் திருப்தியும் பெற்று இருந்தார்கள். ஆனால் இப் பொழுதுள்ள நிலைமை 600 பேர்களுக்குமேல் வேலையில்லாமல் இருக்கிறார்கள். அவர்களில் 300 பேர்களை வருகிற ஆண்டிலே வேலைக் கமர்த்துவதற்கு வழிவகை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : பேஷண்ட்-நர்ஸஸ் ரேஷியோவை எடுத்துப் பார்த்தால் மற்ற நாடுகளைப்போல் நாம் முன்னேறவில்லை. அடித்தளத்திலிருந்து அவர்கள் நோயாளிகளைக் கவனிக்கிறவர்கள், நல்ல முறையிலே பணியாற்றக்கூடியவர்கள், ஆகவே, அவர்களுக்குத் தனிப்பட்ட முறையிலே சலுகைகள் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய நாட்டிலே, சைனீஸ் அக்ரஷன் வந்தபோது எமர்ஜன்ஸி வந்தது, மானப்போர் செய்து நம்முடைய மண்ணைக் காத்திட போர் செய்த வீரர்களுக்கு சிகிச்சையளிப்பதற்காக டாக்டர்கள் தேவை என்று கேட்டார்கள். மத்திய அரசாங்கம் எல்லா மாநில அரசுகளுக்கும் ஒரு அறிக்கை விட்டு அந்தந்த மாநிலங்களிலே இருக்கக்கூடிய அமைச்சர்கள் எத்தனை டாக்டர்கள் அவரவர்களால் முடியுமோ அத்தனை டாக்டர்களை அனுப்ப வேண்டுமென்று வார் சர்வீஸ்க்கு என்று கேட்டார்கள்.

நான் இந்த நேரத்திலே பெருமையோடு கூறிக்கொள்ள விரும்புகிறேன். நம்முடைய மாநிலத்திலிருந்துதான் நானூறுக்கும் மேற்பட்ட எண்ணிக்கையில் உள்ள டாக்டர்கள் அனுப்பப்பட்டார்கள். அப்படி அனுப்பப்பட்டவர்களுக்கு ஒரு நிபந்தனையைப்பற்றி மிலிடிரி மெடிக்கல் ஆபீஸரோடு கலந்து பேசி முடிவு எடுக்கப்பட்டது. நம்முடைய டாக்டர்கள் அங்கு சென்றால் அவர்களை லெப்டினன்ட் கிரேடிலே எடுப்பதாக அவர்கள் கூறினார்கள். அதற்கு நாம் ஒப்புக் கொண்டோம். அப்பொழுது புல்ப்ளஜ்ட் டாக்டர்ஸ் எல்லாம் போவதற்கு மறுத்தாலும்கூட பல மாணவர்கள் ஹவுஸ் சர்ஜன்ஸி செய்துகொண்டிருந் தார்கள். அவர்கள் போனார்கள். அவர்கள் ஹவுஸ் சர்ஜன்ஸியை கம்ப்ளீட் செய்யாவிட்டாலும் கூட It should be taken into account as completed. அவர்கள் எல்லாம் சென்று திரும்பி வரும்பொழுது அவர்களுக்கு போஸ்ட் கிராஜுவேட் கோர்ஸ் சேருவதற்கு First preference கொடுக்க வேண்டும். Permanent Post க்கு சிவிலியன் டாக்டர்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது ; அவர்களுக்கு எல்லாம் சர்வீஸ் கமிஷன் ஆட்டோ மேடிக் கன்பர்மேஷன் கொடுத்துவிட வேண்டுமென்பதும் சொல்லப் பட்டது. ஆனால் இன்றைக்கு நடைமுறையிலே பார்த்தால் (Inter-State Seniority) லிஸ்டில் சிவிலியன் டாக்டர் கீழே அவர்களுக்கு இடம் கொடுத்து லிஸ்டை போட்டிருக்கிறார்கள். அன்றைக்கு அவர்கள் சேவை நமக்குத் தேவையாக இருந்தது, நம்முடைய நாட்டைக்

காக்கக் போராடும் மக்களைப் காப்பாற்ற வேண்டுமென்ற அவசரத்திற்காக அனுப்பப்பட்டார்கள். அவர்களுக்கு இன்றைக்கு இந்த பாகுபாடு செய்தால் அது உகந்தது அல்ல. அதை ரெகுலரைஸ் செய்துவிட வேண்டுமென்று நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அது மாத்திரமல்ல, அவர்களுக்கு லெப்டினன்ட் கிரேடிலே Army Service-க்கு நம் டாக்டர்களை Army Medical Corps அனுமதித்தார்கள் ரெகுலர் ஆர்மியிலே வேலை செய்யக்கூடிய டாக்டர்களுக்கு கேப்டன் Promotion கொடுக்கும்போது because they are permanent doctors of the Army நம் டாக்டர்களுக்கும் Captain grade கொடுக்க வேண்டும் என்று வற்புறுத்தப்பட்டது. Equal chances of promotion as Captains எங்கள் டாக்டர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று சொன்னதை அவர்கள் ஒப்புக்கொண்டார்கள். ஆனால், நீங்கள் செய்யவில்லை.

ஆகவே, அவர்களுக்குரிய சீனியாரிட்டியை கொடுத்தாக வேண்டும். Civil Doctors கீழே அவர்களை வைத்து பேனல் பிரிப்பேர் பண்ணியிருந்தாலும்கூட அதைச் சரிக்கட்டி அவர்களுக்கு முதல் சலுகைகள் கொடுக்கக்கூடிய முறையிலே நடவடிக்கை எடுக்க வேண்டும். அவர்களுக்கு ஆட்டோமேடிக் பெர்மனன்ஸி ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஹாஸ்பிடல் அட்வைசரி கமிட்டியினுடைய ரெக்கமண்டேஷன்களை எல்லாம் அது எவ்வாறு இருக்கின்றது என்பதைத் தெரிந்துகொள்ளக்கூடிய முறையிலே உறுப்பினர்களுக்கு சபை முன்பாக வைத்தால் நலமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக இண்டியன் சிஸ்டம் ஆப் மெடிசின்ஸ் நம்முடைய பாளையங்கோட்டையிலே ஆரம்பித்து அதிலே நிறைய மாணவர்கள் படித்து வெளியே வந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு வேலைவாய்ப்புக் கொடுக்க தாலூகா ஹெட்குவார்ட்டர்ஸ் ஆஸ்பத்திரியில் ஒரு விங் வைத்து உத்தியோகம் கொடுப்பதற்காக நான் அதை வரவேற்கிறேன். இந்த பி.ஐ.எம். படித்துவிட்டு வந்தவர்களுக்கு அவர்களுக்கு சர்டிபிகேட் கொடுக்கும்போழுது ஒன்று அந்த பிரின்ஸ்பால் கையெழுத்துப் போட வேண்டும் அல்லது டைரக்டர் போட வேண்டும். இருவரும் இல்லாமல் வேறு ஒருவர் கையெழுத்துப் போடுவது என்ன முறை என்று எனக்குத் தெரியவில்லை. . .

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: அது எப்படி இருக்கும் என்று எனக்குத் தெரியவில்லை. பி.ஐ.எம். என்பது பட்டம். மதுரைப் பல்கலைக்கழகத்தால் அந்தப் பட்டம் வழங்கப்படும். அவர்கள் சொல்வது எப்படியிருக்கும் என்று தெரியவில்லை. ஒருவேளை தாற்காலிகமாக புரவிஷனல் சர்டிபிகேட் என்று ஏதாவது வழங்கியிருப்பார்கள் என்று நினைக்கிறேன். ஆனால், யார் கையெழுத்து போடுகிறார்கள் என்பது எனக்குத் தெரியவில்லை.

திருமதி ஜோதி வெங்கடாசலம்: கையெழுத்துப் போடுவதற்கு தனிப் பட்ட முறை வைத்திருக்கிறார்கள் என்று கேள்வி. உங்கள் கையிலே டிபார்ட்மெண்ட் இருக்கிறது. அவர்கள் விவரமாக உங்களுக்கு



இன்பர்மேஷன் கொடுப்பார்கள். ஆகவே, அப்படியிருந்தால் அதை மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சித்த வைத்தியர்களைச் சில ஆண்டுகளுக்குமுன் நாமினேட் செய்து வைத்திருக்கிறார்கள். ஆனால், இன்னும் எலக்ஷன் ஏன் வைக்கவில்லை.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: சித்த வைத்தியர்களைப் பதிவு செய்யும் முறையில் ஓராண்டுக்கு முன்னர் பதிவு செய்வதிலே பல விதமான முறைகேடுகள் இருந்ததை அரசு கண்டுபிடித்தது. அதற்காக அதைச் சென்னைக்குக் கொண்டுவந்து நல்ல முறையிலே பதிவு செய்கின்ற வேலைகள் தொடங்கப்பட்டு முடிவடைந்ததற்குப் பிறகுதான் தேர்தல் நடத்த வேண்டியிருக்கிறது. பதிவுப் பணிகள் விரைவில் முடிக்கப் பெற்றவுடன் தேர்தல் நடத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி ஜோதி வெங்கடாசலம்: முப்புக்குழு ரிப்போர்ட் சமர்ப்பித்து இருக்கலாம். சித்தாவிலே நமமுடைய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்கு ரொம்ப அக்கறை இருப்பது எனக்கும் தெரியும். அதை ஏன் ஏற்றுக்கொள்ளவில்லை? அரசு அதை மறுத்தாலும்கூட என்ன என்ன காரணங்களுக்காக அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதை அவர்களுக்குத் தெரிவித்தால் நல்லது. இரண்டு மருத்துவக் கல்லூரிகளுக்கு ரிகக்னைஷன் கொடுக்கவில்லை என்று சொல்லப்பட்டது, அந்த இரண்டு கல்லூரிகள் செங்கற்பட்டு ஒன்று, திருநெல்வேலி ஒன்று என்றும் நினைக்கிறேன். கோயம்புத்தூரும் சொல்கிறார்கள், ஆகவே, இந்த மூன்று மருத்துவக் கல்லூரிகளுக்கு ரிகக்னைஷன் கொடுக்கவில்லை என்று நினைக்கிறேன்.

(முற்பகல் 11·00)

அடுத்து, படுக்கை எண்ணிக்கைகளை அதிகப்படுத்தி சென்னையிலே இருக்கின்ற போஸ்ட் கிராஜுவேட் டாக்டர்களை மூன்று மாதம், ஆறு மாதம் என்று அனுப்பி வையுங்களேன். "ஆல் இண்டியா மெடிகல் கவுன்சில்" ரெகக்னைஸ் பண்ணும் வரையில் அவர்களைப் போடலாம். இப்பொழுது செய்ய வேண்டியதெல்லாம், "மினிமம் ஃபெசிலிட்டீஸ்" செய்ய வேண்டும், போஸ்ட் கிராஜுவேட் டாக்டர்களைப் போட வேண்டும். மற்றும் சில rules திருப்தி செய்ய வேண்டும். எனவே, சென்னையில் அப்படி இருப்பவர்களைக் கொஞ்சம் அனுப்பி வையுங்களேன் till the recognition of the All-India Medical Council. அதற்குப் பிறகு நிறைய போஸ்ட் கிராஜுவேட்ஸ் டாக்டர்கள் வந்து விடுவார்கள். அவர்களை அந்த மருத்துவமனைகளில் போட்டு, Indian Medical Council requirements-ஐ திருப்தி செய்ய முன் வர வேண்டும், அடுத்த ஆண்டுக்குள்ளாகிலும், என்று கூற விரும்புகிறேன்.

அடுத்து, திருவட்டீஸ்வரர் ஹாஸ்பிடலைப் பொறுத்தவரையில் ஏற்கனவே கார்ப்பரேஷனிலிருந்து அவர்கள் நடத்த இயலாத நிலையில் அரசாங்கம் எடுத்துக்கொண்டது. அங்கு வருபவர்கள் மிகவும் கொடுமையான வியாதிக்கு உட்பட்டவர்கள். அங்கே (Out-patient)

டிபார்ட்மெண்டுக்காக நியூ பிளாக் டி. பி. ஹாஸ்பிடல் கட்ட வேண்டுமென்று பலமுறை அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். சட்டசபையிலேயும் பேசியிருக்கிறார்கள். ஆனால், இன்னும் அந்த பிளாக் கட்டுவதற்காக அரசாங்கம் ஏன் முயற்சி எடுக்கவில்லை என்று அறிய விரும்புகிறேன்.

நான்காண்டுகளுக்கு முன்னால் 50 படுக்கை எண்ணிக்கையுள்ள பிளாக் கட்ட வேண்டுமென்ற குறிப்பு இருந்தது. ஏன் அதில் தாமதமாகிறது? இன்னும் அதில் தாமதம் செய்தால் இப்பொழுது cement, செங்கல், இரும்பு போன்றவைகளுக்கு விலை ஏறுகின்றபொழுது அதைக் கட்ட இயலாத நிலைமை ஏற்பட்டு விடும் என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து, அங்கே லிப்ட் முக்கியம். அங்கே லிப்ட் சேங்ஷன் ஆகி ஆறு வருஷமாகிறது. ஆனால், இன்னும் அந்த லிப்டை அமைப்பதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்காததற்காக மிகவும் வருந்துகிறேன். அங்குள்ள வார்டு பாய்களுக்கு நாம் கொடுக்கும் ரிஸ்க் அலவன்ஸைக்கும், அவர்கள் அங்கு வரும் நோயாளிகளைத் தூக்கிச் சென்று லிப்ட் இல்லாத காரணத்தால் பணியாற்றுகின்ற முறையும், இருக்கின்ற நிலைமைகளைப் பார்க்கும்பொழுது பொருந்தி வராது. எனவே, இந்த லிப்ட் மிகவும் அவசியம் . அதையும் ஏற்படுத்த தயவு செய்து அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இதில் சில புதிய கருத்துக்களை எடுத்துக் கூறியிருப்பதை வரவேற்கின்ற நேரத்தில், இன்னும் மக்களுக்கு நல்வாழ்வு அளிக்கின்ற விஷயத்தில் ஊக்கமும், ஆக்கமும் அமைச்சரும், அரசும் காட்ட வேண்டுமென்று கூறி, நன்றி கூறி, முடித்துக்கொள்கிறேன்.

* <u>திரு. கா. வேழவேந்தன் :</u> மாண்மிபுகு சட்டப் பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரவர்கள் கொண்டு வந்துள்ள மருத்துவம், பொதுச் சுகாதாரம், துப்புரவு நீர் வழங்கல் குறித்த மூலதனச் செலவு, நகரப் பகுதி வளர்ச்சி ஆகிய மானியக் கோரிக்கைகளை நெஞ்சார வரவேற்று சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இந்த நாட்டிலே உள்ள அறியாமை நோயைப் போக்குவதற்காக ஒரு கணிசமான தொகையை ஒதுக்கிய இந்த அரசு, இம்மாதிரி உடல் நோயைப் போக்குவதற்காக இந்த ஆண்டு ஏறத்தாழ 47 கோடி ரூபாய்க்கும் மேலாக சிறப்பான பல்வேறு திட்டங்களுக்காக ஒதுக்கியுள்ளதை நாட்டு மக்களெல்லாம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறார்கள். கல்லாமை நோயைத் தீர்ப்பதற்காக கல்லூரியில் பேராசிரியராக இருந்தவர் இன்றைக்கு மக்கள் நல்வாழ்வுத் துறையை ஏற்றுக்கொண்ட பின்னால் ஒவ்வொரு பகுதியைப் பற்றியும், ஒவ்வொரு மாவட்டத்தைப் பற்றியும் ஆழ்ந்து சிந்தித்து, சிந்தித்து பல்வேறு திட்டங்களை உருவாக்கி, இருக்கின்ற மாவை வைத்துக்கொண்டு நல்ல பணியாரமாகச் சுட வேண்டுமென்ற முறையில், இருக்கின்ற நிதி ஆதாரத்தை வைத்துக்கொண்டு சிறப்பான திட்டங்களைச்





செய்வதற்காக மன்ற உறுப்பினர் என்ற வகையில், நாட்டுமக்களின் சார்பில் அவர்களையும், அவர்களோடு இணைந்து அருமையாகப் பணியாற்றும் இயக்குநர்களையும், செயலாளரையும் இந்த நாட்டிலே உள்ள மருத்துவர்களையும் மனதாரப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அப்படிப் பாராட்டுவதற்கு முக்கியமான காரணம், ஏதோ காக்கைக்குத் தன் குஞ்சு பொன் குஞ்சு என்பதற்காக அல்ல, இந்தியாவில் மற்ற மாநிலங்களைப் பார்த்த பிறகு, இன்றைக்கு மருத்துவ உதவியைத் தமிழகத்தைப் பொறுத்தவரையில் சிறப்பாகச் செய்திருக்கிறது என்பதை அண்மையிலே, சில மாதங்களுக்கு முன்னாலே பத்திரிகைகளிலேயெல்லாம் மருத்துவ நிபுணர்கள் அந்தக் கருத்தை வெளியிட்டிருக்கிறார்கள். அந்தச் செய்தி மிகவும் பொலிவோடு பார்க்க வேண்டிய ஒன்று என்பதை ஞாபகப்படுத்திக்கொள்ள விரும்புகிறேன்.

தமிழகத்தைப் பொறுத்தவரையில் எடுத்த கொள்கையைச் சிறப்பாக நிறைவேற்ற விரும்புகின்ற மாநிலமாக உள்ளது. பிறப்பதைத் தடுப்போம், அதே நேரத்தில் பிறந்ததைக் காப்போம் என்ற முறையில் பிறக்கின்ற சதவிகிதத்தைக் குறைப்போம், அதே நேரத்தில் இறக்கின்ற சதவிகிதத்தையும் குறைப்போம் என்ற வகையில் செயல்பட்டுக் கொண்டு வருகிறது. இதற்கு ஆதாரத்தோடு ஒரு உண்மையைச் சொல்ல விரும்புகிறேன்.

(திரு. வை. பாலசுந்தரம்—தலைமை.)

ஓய்வு பெற்ற அதிகாரிகள், வாழ்க்கையின் கடைசி அத்தியாயத்திலே இருக்கின்ற சில அலுவலாளர்களின் கூட்டத்தில் நான் கலந்து கொண்டேன். அந்த அலுவலாளர்கள் சொன்னார்கள், எங்களை நீங்கள் சாகவும் விடமாட்டேன் என்கிறீர்கள், இந்த நாட்டிலே நல்ல மருத்துவ வசதிகளைச் செய்து தருவதின் மூலம் எங்களை இறக்க விடுவதில்லை. ஆனால் அதே நேரத்தில் எங்களுக்கு வேண்டிய அளவிற்கு ஓய்வூதியப் படியும் உயரவில்லை என்று சொன்னார்கள். எனவே, இன்றைக்குத் தமிழக அரசானது தள்ளாமையில் இருப்பவர்கள் வாழ்க்கையின் கோடிக்குச் சென்றுவிடாமல் இருக்கும் பணியைச் சிறப்பாகச் செய்து வருகிறது என்பதை அவர்கள் சொன்னதன் வாயிலாகச் சொல்ல விரும்புகிறேன்.

அமைச்சரவர்கள் தன்னுடைய முன்னுரையில் சில சிறப்பான திட்டங்களைச் சொல்லியிருக்கிறார்கள். இன்றைக்குள்ள அடிப்படையான தேவை என்னவென்றால், வளர்ந்து வரும் மருத்துவச் சிக்கல்களை கிராமப் பகுதிகளிலே தீர்க்க வேண்டுமென்பதாகும். அந்த வகையில் எல்லா ஒன்றியப் பிரதம சுகாதார நிலையங்களும் செயல்பட்டுக் கொண்டு வருகின்றன. இனிமேல் அதிகப் பரப்பளவு உள்ள ஒன்றியங்களில் இரண்டாவது பிரதம சுகாதார நிலையத்தை ஏற்படுத்த அமைச்சரவர்கள் மத்திய சர்க்காரை அணுகி சிறந்த முறையில் செயலாற்றி வருகிறார்கள்.

[திரு. கா. வேழவேந்தன்] [1974 மார்ச் 18

நான் பணிவன்போடு இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன், பேசி வரும் இந்தத் திட்டத்தைச் செயலாக்குவதற்கு விரைவான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும், பல ஒன்றியங்களில் மத்திய அரசினுடைய திட்டத்தின் காரணமாக 70 ஊராட்சிகள், 75 ஊராட்சிகள் என்ற அளவில் மிகப்பெரிய பரப்பளவு கொண்டிருக்கக்கூடியதாக இருக்கின்றன. அதனால் ஒரு கோடியிலிருந்து மற்றொரு கோடிக்கு, கிட்டத்தட்ட 15 மைல், 16 மைல் தூரம் அந்த நோயாளி வந்து பிரதம சுகாதார நிலையத்தை அடைந்து மருத்துவச் சிகிச்சை பெற வேண்டிய அளவில் மிகுந்த இடர்ப்பாட்டுடன் இருக்கிறார்கள். ஆகவே, பெரிய ஊராட்சி ஒன்றியங்களாக இருப்பவற்றிலேனும் விரைவில் இரண்டாவது பிரதம சுகாதார நிலையத்தைத் துவங்குவதற்கு அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், ஊராட்சி ஒன்றிய மருந்தகங்களை அரசு மருத்துவமனைகளாக ஏற்றுக்கொள்ளும் திட்டத்தையும் வேகமாக அரசு நடத்தி வருகிறது. இந்த ஆண்டு ஏறத்தாழ 40 ஊராட்சி ஒன்றிய மருந்தகங்களை அரசு மருந்தகங்களாக மாற்றக் கருதியிருக்கிறது என்ற அருமையான, இனிமையான தகவலை அறிவித்தார்கள். அப்படிப் பார்க்கும்போது இன்னும் அந்த எண்ணிக்கையை உயர்த்த வேண்டுமென்பதைக் கூறி, என்னுடைய தொகுதியிலிருக்கின்ற பாதிரிவேடு ஊராட்சி ஒன்றிய மருந்தகத்தையும் அரசு மருந்தகமாக ஏற்றுக்கொள்ள வேண்டுமென்ற கோரிக்கையை ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

இன்றைக்கு வருமுன் காக்கும் கொள்கையில் இன்னும் அதிகமாக கவனம் செலுத்த வேண்டுமென்று எனக்கு முன்னர் பேசிய, முன்னாள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அம்மையார் அவர்கள்கூடக் கூறினார்கள். அதிலே நான் பெருமையோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த அரசாங்கம் துவக்கியுள்ள "நடமாடும் மருத்துவமனைத் திட்டம்" என்ற திட்டம் மிகச் சிறப்பான முறையில் செயலாற்றி வருகிறது. என்னுடைய பகுதியில், கும்மிடிப்பூண்டி தொகுதியில், "சித்தரஞ்சன் நடமாடும் மருத்துவமனை" தொடங்கப்பட்ட சில வாரங்களுக்குள்ளாகவே அந்த வட்டாரத்திலுள்ள ஏராளமானவர்கள் தங்கள் உடலிலே உள்ள நிலைமைகளை சரிபார்த்துக் கொள்ளவும், உரிய மருத்துவத்தைப் பார்த்துக் கொள்ளவும் அந்த நடமாடும் மருத்துவமனையைப் பயன்படுத்திக் கொண்டார்கள். இதில் என்னுடைய வேண்டுகோளெல்லாம் அதை, நாடு முழுவதும் விரிவாக்க வேண்டுமென்பதுதான்.

அதேமாதிரி, இன்றைக்கு கண் சிகிச்சை கொடுக்கும் திட்டத்தை எனக்கு முன்னால் பேசியவர்களெல்லாம் குறிப்பிட்டிருக்க வேண்டும். நாட்டிலுள்ள இலட்சோபலட்ச மக்கள் கண் சிகிச்சை முகாம்களின் மூலமாக இந்தத் திட்டத்தின் மூலம் ஒளி பெற்றதால் இந்த அரசாங்கத்தை வாழ்த்திக்கொண்டிருக்கும் காட்சியைப் பார்க்கிறோம்.

அதேபோல் காசநோய் பிற்பட்ட நிலையில் இருக்கும் பகுதிகளில்தான் அதிகமாகப் பரவுகிறது. அதைத் தடுக்கும் ஆற்றலும், அறிவும் இல்லாத



1974 மார்ச் 18] [திரு. கா. வேழவேந்தன்]

காரணத்தால், அதற்கு ஆளாகிறார்கள். டி.பி. போன்ற அந்த நோய்கள் அவர்களைப் பாதிக்கும் நேரத்தில்தான், அவர்களுக்கு அந்த நோய் வந்த பிறகுதான் அவர்கள் மருத்துவமனைக்கு வருகிறார்கள். ஆகவே, அப்படிப்பட்ட இடங்களுக்கு இந்த "நடமாடும் மருத்துவமனை" யைப் போல், கண் சிகிச்சை முகாம்களைப்போல், டி.பி. போன்ற நோய்களை, புற்றுநோய் போன்ற நோய்களைத் தடுக்கும் வகையில் அதற்கென்று தனியாக "மொபைல் யூனிட்" என்ற அமைப்பு உருவாக்கி, கிராம மக்கள் அந்த நோய்கள் வருவதற்கு முன்னாலேயே அதை உணர்ந்து முன்கூட்டியே மருந்துகளைப் பெறுகின்ற வசதிகளைச் செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரியைப்பற்றி இங்கே ஒரு கோரிக்கையை மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரவர்களிடத்தில் எடுத்துச் சொல்லிக்கொண்டு வந்திருக்கிறேன். அது ஊசலான நிலையில் இருந்துகொண்டிருக்கிறது. செங்கல்பட்டு மருத்துவமனையைப் பொறுத்த வரையில் அது அங்கேயே இருக்கவேண்டுமென்று இந்த அரசு கருதுவது உண்மையிலேயே அந்த மாவட்டத்து மக்களுக்கு நல்ல ஆறுதலாக இருக்கிறது. இந்த நேரத்தில் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அங்கே போதிய அளவில் பலவகையான நோயாளிகள் இல்லாததைப்பற்றி அமைச்சரவர்கள் அடிக்கடி கூறுகிறார்கள். நான் கேட்டுக் கொள்வதெல்லாம், சென்னை பொது மருத்துவமனையிலும், மற்ற மருத்துவ மனைகளிலும் நெருக்கடியான நேரங்களில், முடிந்தால் அந்த நோயாளிகளை அந்தப் பகுதிக்கு மாற்றலாம் அல்லது அங்கே ஒரு அட்ராக்ஷன், கவர்ச்சி ஏற்படுகின்ற முறையில் மருத்துவ தளவாடங்களை வைக்க வேண்டும்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, மருத்துவமனையில் கவர்ச்சியை வேறு ஏற்படுத்திவிட்டால் டாக்டர்கள் நடமாடவே முடியாது. ஆகவே, கவர்ச்சி ஏற்படுத்துவது என்ற திட்டம் மருத்துவமனையில் இடம் பெற முடியாது. நோயாளிகளை ஒரு பெரிய மருத்துவமனையிலிருந்து இடையில் வேறு ஒரு மருத்துவமனைக்கு மாற்றுவதற்கு அவர்கள் மாறுபாடான உணர்ச்சியைக் காட்டுவார்கள். அது விரும்பத்தக்கது அல்ல. மாணவர்கள் எதிர்காலத்திலே தகுந்த வாய்ப்புப் பெறத்தக்க வகையில் கிளினிகல் ஸ்டடீஸ் (Clinical Studies) என்ற பகுதி வரும் போது சென்னையில் பயிற்சி கொடுக்கவும், இடையிலே (Clinical facilities) கிளினிகல் ஃபெசிலிடிஸை அங்கேயே அதிகமாக்கி அந்த மாணவர்கள் பயிற்சி பெறவும் எதிர்காலத்திலே வழி செய்ய முயற்சிக்கப்படும்.

திரு. கா. வேழவேந்தன்: அமைச்சர் அவர்களுக்கு நன்றியைச் சொல்லுகிற நேரத்தில் எப்படியும் செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரி சிறப்பான முறையில் வளர்ந்தோங்கிட ஆவன செய்ய வேண்டுமென்று வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

பொது மருத்துவமனையை விரிவுபடுத்தும் திட்டங்களைப் பற்றி சிறப்பான முறையில் அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்,

அம்மையார் அவர்கள் நீண்ட நாட்களாக ஓடாத லிப்ட்கள் இருக்கின்றன என்று சொன்னார்கள். இரண்டு லிப்டுகள் பழுது பார்க்கப்பட்டு சிறப்பாக ஓடுவதற்கு வழி செய்துள்ளது என்று அமைச்சர் அவர்கள் அறிக்கையில் தெரிவித்திருக்கிறார்கள். பொது மருத்துவ மனை மிக உயர்ந்த நிலையில் ஏராளமான மக்களைக் கவரத்தக்க நிலையில் இருக்கிறது. அங்கு இட நெருக்கடி இருக்கிறது. பொது மருத்துவ மனையில் இடம் வேண்டுமென்றுதான், அதற்கு பரிந்துரை செய்ய வேண்டுமென்றுதான் நோயாளிகள் சட்ட மன்ற உறுப்பினர்களை அணுகுகிறார்கள். அந்த மருத்துவ மனையை விரிவுபடுத்த எவ்வளவு பணம் வேண்டுமானாலும் செலவழிக்கலாம். மத்திய சிறைச்சாலைப் பகுதியையும் இதற்காக எடுத்துக் கொள்வது பற்றி அரசு ஆலோசிக்க வேண்டும்.

மாவட்ட ஆலோசனைக் குழுக்களைப் பற்றிச் சொன்னார்கள். தனிப்பட்ட மருத்துவ மனைகள், வட்ட மருத்துவ மனைகளுக்கு ஆலோசனைக் குழுக்கள் இருக்கலாம். வளர்ந்து வரும் பிரைமரி சுகாதார நிலையங்களில், பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன. அதுபற்றி சட்ட மன்ற உறுப்பினர்கள், ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள், நகராட்சித் தலைவர்கள் குறைகள் பற்றி எடுத்துச் சொல்லுவதற்கு வாய்ப்பளிக்க வேண்டும். ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட மருத்துவ ஆலோசனைக் குழு ஏற்படுத்தி டி.எம்.ஓ., டி.எச்.ஓ., எம்.எல்.ஏக்கள், எம்.எல்.சி.க்கள், ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் மூன்று மாதத்திற்கு ஒரு முறை கண்டிப்பாகக் கூடி தங்களுடைய ஆலோசனைகளை எடுத்துச் சொல்ல வேண்டும். அப்படி ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு ஆலோசனைக் குழுவை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

குடும்ப நலத் திட்டத்தைப் பொறுத்தவரை செம்மையாக நிறைவேற்றி வருகிறோம். அதுபற்றி எடுக்கப்பட்ட துண்டுப் படங்கள் அருமையான கதை கொண்டதாகவும், எல்லோரையும் கவரத்தக்க வகையிலும் இருக்கின்றன. நாட்டில் இருக்கும் சினிமா தியேட்டர்களில் சோப்பு விளம்பரங்கள் அடிக்கடி காட்டப்படுகின்றன. இந்தத் துண்டுப் படங்களைக் கண்டிப்பாக எல்லா தியேட்டர்களிலும் காண்பிக்க வேண்டுமென்ற முறையைக் கொண்டு வர வேண்டும்.

குடிநீர் வழங்குவதைப் பொறுத்தவரை அமைச்சர் அவர்கள் தீவிரமான திட்டங்களைத் தீட்டியிருக்கிறார்கள். குடிநீர் வாரியம் மிகப் பெரிய காமதேனுவாக இருக்கிறது. மாவட்டங்களில் பல்வேறு கருத்தரங்குகளை நடத்தி முடிவுகள் எடுத்திருக்கிறார்கள். அவற்றை விரைவில் அமுல்படுத்த வேண்டும். இன்னும் எந்தெந்த கிராமங்களில் அடிப்படைக் குடிநீர் வசதி இல்லையோ, பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி இல்லையோ அவற்றின் பட்டியலை முழுமையாகத் தயாரித்து அந்த ஊர்களுக்கு வேண்டிய குடிநீர்த் திட்டத்திற்கு சிறப்புத் திட்டத்தை வகுக்க வேண்டும்.

எவ்வளவோ ஊராட்சிகள் பங்குத் தொகையைக் கொடுக்க முடியாமல் இருக்கின்றன. இருபது ஆண்டுகளில் கொஞ்சம் கொஞ்சமாகத் தவணையில் பங்குத் தொகையைத் கட்டலாம் என்ற முறையில் ஊராட்சிகளில்



குடிநீர் கிடைக்க சிறப்பான திட்டத்தை அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நகராட்சிகள் திட்டங்களை நிறைவேற்றி இருக்கின்றன. நகரப் பஞ்சாயத்துகளில் சில சிக்கல்கள் இருக்கின்றன. (மணி அடிக்கப்பட்டது.) தலைவர் அவர்கள் இரண்டு நிமிட நேரம் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அடிப்படையாக இருக்கும் குடிநீர் வசதியை நிறைவேற்ற முடியாத அளவில் நிதிவசதி பற்றாக்குறையாக இருக்கிறது. ஆகவே, நகரப் பஞ்சாயத்துக்களுக்கு .. .. .. ..

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: "செல்ப் சப்போர்ட்டிங்" ஆக இருந்தால்தான் திட்டத்தை நிறைவேற்ற முடியும் என்ற வகையில் கடன் கொடுக்கப்படுகிறது. ஆண்டுக்கு பத்தாயிரம் ரூபாய் கட்ட முடியாத நிலையிலுள்ள பஞ்சாயத்துக்களுக்கு 5 லட்சம், 10 லட்சம் செலவில் திட்டங்களை நிறைவேற்ற வேண்டுமென்று வரும்போது பின்னால் திட்டம் முழுவதுமே பாதிக்கப்படக்கூடிய நிலை ஏற்படும். பத்தாயிரம் என்பதை எட்டாயிரம், ஏழாயிரம் என்று குறைத்து வேண்டுமானால் கட்ட முடியாத பஞ்சாயத்துக்களிடம் இருந்து வசூலிக்கலாமே தவிர ஒன்றுமே கொடுக்க முடியாது என்று சொன்னால் அதை ஏற்றுக் கொள்ள முடியாது. கடன் பணத்தில் காரியம் செய்ய வேண்டுமென்று சொன்னால் திருப்பிக் கட்டுவது யார் பொறுப்பு என்பதை அங்கத்தினர் அவர்கள் யோசிக்க வேண்டும்.

திரு. என். எஸ். பலராமன்: பாயின்ட் ஆப் ஆர்டர் சார், முக்கியமான மானியம்-மக்கள் நல்வாழ்வுத்துறை பற்றிய மானியம் விவாதம் நடந்து கொண்டிருக்கிறது. அவையில் அ.தி.மு.க. உறுப்பினர்களும் வலது கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்களும் ஒருவர் கூட இல்லை. இந்த விவாதத்திலே அவர்கள் கலந்து கொள்வதில்லை என்ற முடிவு செய்திருக்கிறார்களா? தலைவர் அவர்கள் இது பற்றிக் கூறும்படி கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு க. அன்பழகன்: தலைவரவர்களே, "இது பாயின்ட் ஆப் ஆர்டர்" என்று எழுப்புவதற்கு உரியதல்ல. அவர்களுடைய சொந்த பிரச்சினைகள் எவ்வளவோ இருக்கக்கூடும். அவர்கள் அவையில் இருந்துதான் ஆக வேண்டுமென்று நாம் வற்புறுத்த முடியாது.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு வை. பாலசுந்தரம்): அங்கத்தினர்கள் எப்போதும் சபையில் இருக்க வேண்டுமென்று கட்டாயப் படுத்த முடியாது.

திரு. கே. எம். சுப்பிரமணியம்: அவர்கள் வெளியிலிருந்து கேட்கிறார்கள்.

திரு. கா. வேழவேந்தன்: எப்படியும் நகரப் பஞ்சாயத்துக்களில் இந்தத் திட்டத்தை விரைவில் நிறைவேற்ற வழிவகைகள் செய்து முடிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மணி அடிக்கப்பட்டது.)

பெருநகர் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் திருவள்ளூர், கும்முடிப் பூண்டி வரை எடுத்திருப்பதாகச் சொன்னார்கள். அதைப் பற்றி அமைக்கப் பட்டிருக்கிற குழுக் கூட்டங்களில் சட்ட மன்ற உறுப்பினர்கள் ஆலோசனை அளிக்க உரிய வகையில் ஏற்பாடு செய்ய வேண்டும்.

தொகுதியைப் பொறுத்தவரை பாதிரிவேடு ஊராட்சி ஒன்றிய மருத்துவ மனையை அரசு மருத்துவ மனையாக்க வேண்டும். கும்முடிப்பூண்டியில் 62 பஞ்சாயத்து யூனியன்கள் இருக்கின்றன. அங்கே 2ஆம் பிரதம சுகாதார நிலையம் அமைக்க வேண்டும். திருவள்ளூர் வட்ட ஊத்துக்கோட்டையில் அரசாங்க மருத்துவ மனைக் கட்டிடம் ஏற்படுத்த வேண்டும். வெங்கலில் ஒரு மருத்துவ மனையை விரைவாகக் கட்டிக் கொடுக்க வேண்டும்.

காஞ்சிபுரத்தில் அண்ணா புற்று நோய் மருத்துவ மனை விரிவாக்கப் படுவது பற்றி மகிழ்ச்சி.

மாவட்ட மருத்துவ மனையில் 3,000 நோயாளிகளுக்கு மேல் இருக்கிறார் கள். இடவசதி குறைவாக இருக்கிறது. செங்கற்பட்டு மாவட்ட மருத்துவ மனையையும் விரிவுபடுத்த வேண்டும்.

"உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேராது இயல்வது நாடு"

என்று வள்ளுவர் சொன்னார்.

உறுபசியை நீக்கியிருக்கிறார்கள். ஓவாப் பிணியையும் இந்தத் துறை நீக்கியிருக்கிறது. அதற்காக எனது மனமார்ந்த பாராட்டுதலைத் தெரி வித்து விடை பெறுகிறேன்.

*திரு. எம். ஏ. லத்தீப்: தலைவர் அவர்களே, மக்கள் நல்வாழ்வுத் துறை மானியத்தின்மீது சில கருத்துக்கள் சொல்ல விரும்புகிறேன்:

இன்றைக்கு நாட்டில் மிக முக்கியமான இடத்தைப் பெற்றிருப்பது மக்கள் நல்வாழ்வுத்துறை என்பதை எல்லோரும் ஏற்றுக் கொண்டிருக் கிறார்கள். மக்களுடைய மன நோயும், உடல் நோயும் தீர்க்கப்பட்டால் தான் குறைவற்ற வாழ்வினைப் பெறமுடியும் என்பது யாவரும் அறிந்த ஒரு உண்மையாகும். இதிலே நாம் உன்னிப்பாக செயல்பட்டு வருகிறோம். வேண்டிய அளவுக்கு மக்களுடைய நல்வாழ்வில் ஏற்பட்டிருக்கும் குறை களைத் தீர்க்க முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறோம் என்ற அளவுக்கு நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக் கிறேன்.

ஆனால், இந்தத் துறையில் எந்த முறையில் திட்டங்களை வகுத்தால் பரவலான நன்மை ஏற்படும் என்ற ஒரு நோக்கிலே பார்த்தோமானால் பரவலான திட்டங்களை வகுக்கத் தவறி விட்டோமோ என்றுதான் என்னைப் போன்றவர்கள் நினைக்க இன்றைக்குக் கடமைப்பட்டவர்களாக இருக்கிறோம்





நாடுநகரங்களிலே மருத்துவ வசதிகளைப் பெருக்குவது அவசியந் தான். பெரும்பான்மையான மக்கள் வாழ்கிற நகரங்களில், சுகாதாரக் கேடு களைப்போக்க மருத்துவ வசதிகளையும், சுகாதார வசதிகளையும் அதிகமாகத் தர முயற்சிகளை மேற்கொள்ள வேண்டிய அவசியம் இருக்கிறது. அமைச்சர் அவர்கள் தன்னுடைய விளக்கத்தில் சொல்லியிருக்கிறார்கள். தமிழ் நாட்டில் வாழ்கின்ற மக்களில் சுமார் 70 சதவீதம் பேர் கிராமங்களிலும் 30 சதவீதம் பேர் நகர்புறங்களிலும் வாழ்கிறார்கள் என்ற விவரத்தை அமைச்சர் அவர்கள் புள்ளிவிவரங்கள் வாயிலாக நமக்குத் தந்திருக் கிறார்கள்.

ஆனால் மருத்துவத் துறைக்கும் சுகாதாரத் துறைக்கும் நாம் செல விடுகின்ற இந்தத் தொகைகள் விகிதாசார அடிப்படையில் செலவிடப் படுகிறதா என்று பார்த்தால் நமக்கு ஏமாற்றமே ஏற்படுகிறது. நகர்ப் புறங்களில் கொடுக்கப்படவேண்டிய வசதிகளை அதிகமாக்க வேண்டும். என்ற ஒரு நிலை இருந்தாலும் கிராமங்களில் ஏற்படுகிற குறைகளைப் போக்கு வதற்கு விகிதாச்சார அளவில் நாம் நிதிநிலை, பட்ஜட்டரி ப்ரொவிஷன்களை ஒதுக்கித் தரவேண்டும். அவ்வாறு நாம் செய்யவில்லை என்ற ஒரு குறை என்னைப் போன்றவர்களுக்கு இருக்கிறது.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: கிராமப் புறத்தில் மருத்துவ வசதி வழங்கவேண்டுமென்று கருதுகிற போது அதைப் பரவலாக வழங்க நேருவதால் ஓரளவில் தான் அந்த மருத்துவ வசதியை அளிக்கமுடியும். ஆனால் சிறப்பு மருத்துவ வசதிகள் பெரிய நகரங்களில் தான் அமைக்க முடியும். அப்படிப்பட்ட சிறப்பு மருத்துவ வசதி மருத்துவக் கல்லூரி களில் படிக்கின்ற மாணவர்களின் பயிற்சிக்கு இன்றியமையாத தேவை யாகவும் இருக்கிறது. நகரங்களில் மிகப்பெரிய செலவில் அமைவதை கிராம மக்களும் பயன் படுத்திக் கொள்ளத் தக்க முறையில் கிராமப்புற மக்கள் கடுமையான நோய்களால் தாக்கப்படுகிற நோய்களில் நகரங்களில் உள்ள தலைமை மருத்துவ மனை, மாவட்ட மருத்துவ மனை, மருத்துவக் கல்லூரி மருத்துவமனை இவைகளில் சிகிச்சை பெற்று பயனடைகிற முறையில் சிறப்பு மருத்துவ வசதிகள் அதிகச் செலவில் அமைக்கப் பட்டுள்ளன. அதுவும் ஒரு வகையில் கிராமப்புற மக்களுக்கும் உயிர் பாதுகாப்புக்கு இன்றியமையாத ஒரு தேவைதான் என்பதைத் தெரி வித்துக் கொள்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப்: அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்கு நன்றி. இந்த ஒரு போக்கில்தான் எனக்கும் அவர்களுக்கும் கருத்து வேறுபாடு இருக்கிறது என்பதை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அமைச்சர் அவர்கள், தலைநகரிலுள்ள அல்லது மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைகளில் கிராமப்புற மக்கள், இந்த வசதிகளை பெற்றுக்கொள்ளலாம் என்றும் மாணவர்கள் பயிற்சி பெற வாய்ப்பாக இருக்கும் என்றும் தெரி வித்தார்கள். முன்னேற்றமான கருத்துக்களை ஆராயும் வகையில் சில திட்டங்களை வகுத்து மாணவர்கள் பயிற்சி பெறுவது என்பதையும் அவற்றிற் காக நிதி ஒதுக்கீடு செய்வதையும் நான் ஏற்றுக் கொள்கிறேன். அவை இன்றியமையாதவைதான்.

ஆனால் மருத்துவக் கல்லூரிகள் இல்லாத இடங்களில், பல நகரங்களில் இன்று வரம்பிற்கு மீறி அந்த மருத்துவமனைகளுக்கு செலவு செய்துவிட்டு நாட்டுப்புறங்களுக்கு செலவு செய்வதில்லை என்பதுதான் என் குறை. ஆனால் அத்தகைய நகரப் பகுதிகளுக்கு கிராமப்புற மக்கள் வந்து சேர்ந்து மருத்துவ வசதி பெற்றுக் கொள்கிறார்கள். ஆகவே, அதில் குறை எதும் இல்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படி செய்வதற்கு 5 சதவீதம் கிராமப்புற மக்களுக்குத்தான் வசதி இருக்கிறது. கிராமப்புறங்களில் உள்ள மக்கள் எல்லோரும் சென்னைக்கு வரமுடியாது அல்லது மதுரைக்குச் செல்லமுடியாது அல்லது கோவைக்குச் செல்ல முடியாது, திருநெல்வேலிக்கு செல்ல முடியாது, அந்த அளவிற்கு அவர்கள் பொருளாதார வளம் பெற்றவர்கள் அல்ல.

எங்கள் பக்கத்திலிருக்கிற ஆலங்காயம் மருத்துவ மனைக்குக் கூட செல்வதற்கு கிராமப்புற மக்களுக்கு வசதி வாய்ப்பில்லை. எனது தொகுதியை எடுத்துக் கொண்டால் அங்கு பரந்த மலைப்பகுதிகளில் வாழ்கிற மக்களுக்கு ஆலங்காயம் கூடச் செல்வதற்கு முடியவில்லை. காரணம் அடர்ந்த காடுகள், போக்குவரத்து வசதி சரியாக இல்லை. அந்தப் பகுதியில் வாழ்கிற மக்கள் 25 மைல் தொலைவில் இருக்கிற மருத்துவ மனைக்குக் கூட செல்ல முடியாத அளவிற்குத்தான் இன்று நிலைமை இருக்கிறது. போக்குவரத்து வசதிகளும் இல்லை, அதற்கான பொருளாதார வசதியும் இல்லை.

நம் மாநிலத்தில் 374 ஊராட்சி ஒன்றியங்கள் இருக்கின்றன. அதில் 372 பஞ்சாயத்து ஒன்றியங்களில் இன்று ஆரம்ப சுகாதார நிலையங்களை ஏற்படுத்தியிருக்கிறோம். இன்னும் இரண்டு ஒன்றியங்களில் இந்த ஆரம்ப சுகாதார நிலையங்களை ஏற்படுத்தப்படவில்லையென்று அமைச்சர் அவர்களே சொல்லியிருக்கிறார்கள். ஏழு பஞ்சாயத்து ஒன்றியங்களில் ஒன்றுக்கு பதிலாக இரண்டு ஆரம்ப சுகாதார நிலையங்களை ஏற்படுத்தியிருக்கிறார்கள். எங்கு எங்கெல்லாம் மக்கள் தொகை ஒரு லட்சத்திற்கு மேற்பட்டிருக்கிறதோ அத்தகைய ஒன்றியங்களில் ஒன்றுக்கு மேலான ஆரம்ப சுகாதார நிலையங்களை ஏற்படுத்துவது என்பதுதான் இந்த அரசின் நோக்கமா என்பதை அமைச்சர் அவர்கள் தெளிவுப்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: இந்த ஏழு ஒன்றியங்களில் இரண்டு ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்பட்டன 1967-க்கு முன்னர். ஏதோ ஒரு காரணத்தால் அப்போது அமைக்கப்பட்டு விட்டன. ஆகவே அது கொள்கை அடிப்படையில் அமைக்கப்பட்டதல்ல. இரண்டு ஒன்றியங்களில் ஆரம்பச் சுகாதார நிலையங்கள் அதற்கான கட்டடத்தோடு சேர்ந்து அமைக்கப்படாததற்குக் காரணம் எந்த இடத்தில் அமைப்பது என்பதில் ஒன்றியத்தில் உள்ளவர்கள் இடத்தைப் பற்றி மாறுபட்ட கருத்துக்கள் கொண்டிருப்பதால் ஒரு இடத்தை ஒதுக்கி அமைக்க முடியவில்லை. மாவட்ட ஆட்சித் தலைவர் தலையிட்டு சமாதானம் செய்தும் சரியான முடிவிற்கு வரமுடியாததால் அவை அமையவில்லை.





கிராமத்தில் ஒருவருக்கொருவர் மோதுதல் வந்துவிடுமோ என்ற அச்சத்தால் இரண்டு இடங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைவதில் காலதாமதம் ஏற்பட்டிருக்கிறது. அதில் ஒரு ஒன்றியத்தில் அமைப்பதற்கு முடிவு எடுத்துக் கொண்டிருக்கிறோம். ஒன்றுக்கு மேற்பட்ட நிலையங்கள் அமைப்பது என்பது மத்திய அரசு குடும்ப நலக் கட்டுப்பாடு திட்டத்திற்காகச் செய்யும் உதவியை வைத்துக் கொண்டு ஆரம்பச் சுகாதார நிலையத்தோடு இணைத்துச் செயல்படுத்துவது என்னும் அந்தக் கொள்கை இனிதான் நடைமுறைக்கு வர வேண்டும்.

கிராம மக்களுக்கு மருத்துவ வசதி செய்வதற்கான முதல் பொறுப்பு ஒன்றியத்திற்கே தவிர அரசுக்கல்ல.

ஒன்றியத்தால் அந்தப் பொறுப்பை நிறைவேற்ற முடியாத சில நிலைமைகள் வரும்போது அரசு தன்னால் முடிந்த அளவிற்கு முன்வந்து அப்பணியைச் செய்கிறது.

திரு. எம். ஏ. லத்தீப்: மொடக்குறிச்சி போன்ற பஞ்சாயத்து ஒன்றியங்களில் ஒன்றுக்கு மேற்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஏற்படுத்தியிருப்பதும் மேற்கொண்டு............

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: அப்படி ஏற்பட்டது விபத்து. அது முறைப்படி செய்யப்பட்ட காரியம் அல்ல. ஒன்றியங்களின் அமைப்பு இடையில் மாற்றப்பட்டது. அப்படி மாற்றப்பட்டதால் வேறு ஒரு ஒன்றிய வட்டாரத்தில் வைக்கப்பட்ட நிலையம் இன்னொரு வட்டாரத்தில் சேர்க்கப்பட்ட சூழ்நிலையெல்லாம் திருப்பத்தூர் வட்டாரத்தில் ஏற்பட்டிருக்கிறது. மத்திய அரசு ஒத்துக்கொண்டால் இரண்டு நிலையங்கள் ஏற்படுத்துவதை ஒரு கொள்கையாக வைத்து பரவலாகச் செய்ய வேண்டுமென்றுதான் ஆசை. ஆனால் அதற்கு இன்னும் ஒப்புதல் கிடைக்கவில்லை.

திரு. எம். ஏ. லத்தீப்: விபத்தாக இருந்தாலும் அத்தகைய விபத்துக்களை நான் வரவேற்கிறேன். நாட்டில் எவ்வளவோ விபத்துக்கள் நடக்கின்றன. ஆனால் இத்தகைய விபத்துக்கள் ஏற்படுமானால் அவை வரவேற்கக்கூடிய விபத்துக்கள்தான்.

ஒரு லட்சம் மக்கள் தொகைக்கு மேற்பட்டுள்ள ஒன்றியங்களில் ஒன்றுக்கு மேற்பட்ட ஆரம்பச் சுகாதார நிலையங்கள் அமைப்பது என்பதை இந்த அரசு கொள்கை அளவில் ஏற்றுக்கொண்டிருக்கிறது என்று சொல்வதை நான் ஏற்றுக்கொள்ள முடியாது. மக்கள் தொகை அடிப்படையில் மட்டும் கணிக்கப்படுவதல்ல இது. மக்கள் தொகை அடிப்படையில் ஆரம்ப சுகாதார நிலையங்களை அமைப்பது என்பது நம் நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு வழி வகுக்காது. ஒன்றியத்தின் விஸ்தீர்ணத்தை பார்க்க வேண்டும். எழுபது மைல் விஸ்தீர்ணம் உள்ள ஒன்றியங்கள் கூட நம் மாநிலத்தில் இருக்கின்றன. விஸ்தீர்ணத்தை கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

ஒரு இடத்திலிருந்து மற்ற இடங்களுக்குச் செல்ல பாதை வசதிகள் இருக்கின்றனவா என்பதையும் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும். போக்குவரத்து வசதிகளையும் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும். அந்த அந்த இடங்களில் உள்ளவர்களின் பொருளாதார நிலையையும் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும். நகரங்களுக்குச் சென்று மருத்துவ வசதி பெறக்கூடிய அளவிற்கு மக்கள் பொருளாதார வளம் பெற்றிருக்கிறார்களா என்றும் பார்க்க வேண்டும். ஆகவே, ஜனத் தொகையை மட்டும் கணக்கில் எடுத்துக்கொள்ளக் கூடாது. (மணி அடிக்கப்பட்டது). குறுக்கீடுகளிலேயே நேரம் போய்விட்டது.

(முற்பகல் 11-30).

என்னுடைய தொகுதியிலே உள்ள சிங்காரப்பேட்டையை எடுத்துக் கொண்டால், சிங்காரப்பேட்டையிலிருந்து ஆந்திராவிலுள்ள சித்தூர் மாவட்டத்தை ஒட்டிய பகுதி வரை பஞ்சாயத்து யூனியன் எல்லை வருகிறது. ஜவ்வாது மலையிலிருந்து, மாதாகடப்பா, நெக்கனுமலை என்று அதிக மலைப்பகுதிகளைக் கொண்ட இடமாக இருக்கிறது. அங்கே எல்லாம் மலை ஜாதியினர், டிரைபல் பீபிள் அதிகமாக வசிக்கும் பகுதி. அவர்களுக்கு எல்லாம் சரியான முறையில் மருத்துவ வசதி தரும் வகையில் செய்து தர வேண்டுமென்று இந்த நேரத்தில் வலியுறுத்த விரும்புகிறேன்.

(முற்பகல் 11–30)

<u>மாண்புமிகு திரு. க. அன்பழகன்</u> : ஆரம்பச் சுகாதார நிலையத்தின் பணி அந்த இடத்திற்கு மக்கள் வரவேண்டுமென்று ஆரம்பிக்கப் பட்டது அல்ல. பாவலாய ஒன்றியத்தின் பல பகுதிகளுக்கும் உதவ வேண்டுமென்ற அடிப்படையில் செய்யப்பட்டது. தற்போது டாக்டர்கள் ஆரம்பச் சுகாதார நிலையத்தில் நியமிக்கப்பட்டு இருப்பவர்கள் ஆற்றுகிற பணி, எல்லாப் பகுதிக்கும் கிடைக்க முடியாத அளவுக்கு நிலைமை இருக்கிறது. மக்கள் அந்த இடத்திற்கு வர வேண்டுமென்பது நோக்கமல்ல. மக்கள் இருக்கிற இடங்களுக்கு, சப்-சென்டர் மூலம் 7, 8 அல்லது 10 இடங்கள் வரை சென்று பணி செய்கிறார்கள். அப்படிச் செய்யப்படுகிற பணியில் சில குறைபாடு இருக்கிறது என்பதை ஒப்பக் கொள்கிறேன். அதை மாற்றுவதற்கு நிலையங்களையும், துணை நிலையங் களையும் அதிகரிப்பதற்கும் மத்திய அரசை நாம் உதவி கேட்க இருக்கிறோம்.

மக்கள் தொகையை மட்டும் வைத்து, பரப்பை மறந்துவிட்டு ஏற்படுத்தப்பட்ட நிலையில் தொடக்கத்தில் 40,000 மக்கள் தொகைக்கு ஒன்று ஆரம்பிப்பது என்று மத்திய அரசாங்கம் தெரிவித்தது. பிறகு, 60,000 மக்களுக்கு ஒன்று என்று வைத்தால் போதும் என்று சொன்னார் கள். நடைமுறைக்கு வரும் போது 75,000 மக்கள் இருக்கும் ஒன்றியத் துக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் வைத்தால் போதும் என்றார்கள். சில ஒன்றியங்களின் பரப்பும் அதிகமாக இருப்பதுடன் ஒரு லட்சம் மக்களுக்கும் மேற்பட்டு இருக்கிறார்கள் என்ற நிலையில் இடர்பாடு ஏற்படுவதைத் தெரிவித்துள்ளோம்.





மத்திய அரசு ஆரம்பச் சுகாதார நிலையங்கள் ஆரம்பிக்க வேண்டு மானால், பாமிலி பிளானிங் சென்டர் இல்லாமல் செய்யக்கூடாது என்று சொல்கிறார்கள். அப்படியானால் பாமிலி பிளானிங் சென்டர் ஆரம்பிப் பதற்கு உதவித் தொகை தாருங்கள், நாங்கள் ஆரம்பச் சுகாதார நிலையம் ஆரம்பிக்கிறோம் என்று மத்திய அரசைக் கேட்கிறோம். மேலும் கிராம மக்களுக்கு மருத்துவ வசதி ஏற்படுத்தித் தருவது என்பது தற்போது ரூரல் டிஸ்பென்ஸரி மூலம்தான். அதை பஞ்சாயத்து ஒன்றியங்களே அரசாங்கத்தின் இசைவோடு செய்யலாம். அதை அவர்கள் தான் கவனிக்க வேண்டும்.

<u>திரு. எம். ஏ. லத்தீப்</u> : என்னுடைய வாதம் எல்லாம் ஜனத் தொகையைக் கணக்கில் எடுத்துக்கொள்ளாதீர்கள். எல்லா மக்களுக்கும் நன்மை செய்யும் வகையில் திட்டங்களை அமல் செய்யுங்கள் என்பது தான்.

காலரா தடுப்புத் திட்டம் வைத்து இருக்கிறோம். வடாற்காடு மாவட்டத்தில் காலரா, பிளேக் போன்ற நோய்கள் அதிகமாக வருகின்றன. ஆனால் புள்ளி விவரங்களைப் பார்க்கிறபோது 1972-ல் 3,670 காலரா கேஸ்கள். அதனால் உயிரிழந்தவர்கள் 205 பேர்கள் என்று தரப்பட்டு இருக்கின்றன. ஆனால் 1973-ல்—அடுத்த ஆண்டில்— 3,147 கேஸ்கள். சுமார் 500 கேஸ்கள் குறைந்து இருக்கின்றன. நாம் எடுத்த தடுப்பு நடவடிக்கைகளின் விளைவாக. ஆனால் இறந்தவர்கள் எண்ணிக்கை 237. நம்முடைய தடுப்பு முறைகளால் காலரா நோய் பரவுவதைத் தடுத்து இருக்கிறோம் என்றாலும், அதனால் இறந்தவர்களின் எண்ணிக்கை அதிகரித்து இருக்கிறது. என்னுடைய மாவட்டம் மலைப் பாங்கான மாவட்டம். ஆகவே, இந்தமாதிரியான நோய்கள் பரவுவதைத் தடுக்கத் தவறியதன் காரணமாகத்தான் இது ஏற்பட்டு இருக்கிறது என்று சொல்லி, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதற்குத் தகுந்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு 1,015 டாக்டர்கள் பயிற்சி பெறுகிறார்கள். இதைச் சேர்த்து, மற்றத் துறைகளில் பயிற்சி பெறும் மாணவர்களையும் சேர்த்து, 7,500 மாணவர்கள் இன்று பயிற்சி பெற்று வருகிறார்கள். அதை நான் ஒப்புக்கொள்கிறேன். இன்றைக்கு நாம் வளர்த்து இருக்கும் முறை என்னவென்றால், சர்க்காரில் உத்தியோகம் பார்க்க வேண்டும். ஏன் இந்த டாக்டர்கள் சர்க்காரில் உத்தியோகம் பார்க்க விரும்புகிறார்கள் என்றால், அதிலே செக்யூரிட்டி ஆப் சர்வீஸ் இருக்கிறது. வருமானத்திற்கு அதிகமான வாய்ப்பு இருக்கிறது. "நாம் சர்க்காரிடத்திலும் சம்பளம் வாங்கவேண்டும். அதே நேரத்தில் 'பிரைவேட் பிராக்டீசும்' செய்ய வேண்டும் ". அந்த நோக்கத்தின் அடிப்படையில்தான் அவர்கள் வர விரும்புகிறார்கள்.

தமிழகத்தைப் பொறுத்தவரையில் சர்க்கார் ஒரு வரைமுறை வகுக்க வேண்டும். சர்க்கார் துறையில் பணியாற்றும் டாக்டர்கள் "பிரைவேட் பிராக்டீஸ் " செய்யக்கூடாது என்ற திட்டம் கொண்டுவர

வேண்டும். அந்தத் திட்டத்தைக்கொண்டு வந்தால்தான், சர்க்கார் துறையில் வேலை கிடைக்காத டாக்டர்கள் தனியாக வேலை பார்க்க முடியும். அரசாங்க உத்தியோகத்தில் இருக்கிற டாக்டர்கள் இந்தத் தொழிலில் "மொனாபலைஸ்" செய்து விடுகிறார்கள்.

உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால், வக்கீல் லத்தீப் தெரிந்தவனாக இருந்தால் அவனிடத்தில்தான் வருவார்கள். தோற்றாலும் லத்தீப் நன்றாக வாதிட்டார்கள் இருப்பினும் தோற்றுவிட்டது என்பார்கள். அதே போல் சர்க்கார் துறையில் இருக்கும் டாக்டர்கள் அவர்களிடம் வரும்போது மருத்துவ மனையிலிருக்கும் மருந்துகளையே எடுத்துச் சென்று பிரைவேட் பிராக்டீஸ் செய்து விடுகிறார்கள். சர்க்கார் மருத்துவ மனையில் நோயாளிகள் வந்தால் அவர்களிடத்தில் என்னை வீட்டில் வந்து பார், கவனித்துக்கொள்கிறேன் என்று சொல்கிறார்கள். இப்படி, ஒரு டாக்டர் வாணியம்பாடியில் இருக்கிறார். டாக்டர் ரமணி என்பது அவர் பெயர். இங்கே கவனிக்க முடியாது, வேண்டுமானால் வீட்டிற்கு வா என்று தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள்.

இவைகளைக் கட்டுப்படுத்தி, இந்தத் துறையில் ஏற்பட்டு இருக்கும் முறைகேடுகளை, சிக்கல்களை நீக்கினார்களானால், நல்லதாக இருக்கும். நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெளிவாகச் சொல்கிறேன், ஒரு ஆலோசனையாக, வேண்டுகோளாகச் சொல்கிறேன், நல்ல எண்ணத்தில் சொல்கிறேன், தயவு செய்து தைரியமாக யாரும் "பிரைவேட் பிராக்டீஸ்" செய்யக்கூடாது என்று உத்தரவு போடுங்கள்.

டாக்டர்களாக பயிற்சி பெறுபவர்கள் 2—3 ஆண்டு காலத்திற்கு ரூரல் ஏரியாவில் வேலை செய்ய வேண்டும். அப்போதுதான் எல்லா டாக்டர்களுக்கும் வேலை அளிக்க முடியும். இப்படிப்பட்ட ஒரு நடைமுறையை வகுக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். நேரம் அதிகமாகிவிட்டபடியால் அடுத்தபடியாக ஒரேவொரு விஷயத்தை மட்டும் சொல்லி முடித்து விடுகிறேன்.

அடுத்தபடியாக, அரவக்குறிச்சி உறுப்பினர் அவர்கள், பள்ளப்பட்டியில் உள்ள மருத்துவ மனையில் படுக்கைகள் எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டும் என்றும், பரமத்தியில் சுகாதார நிலையம் ஒன்றை ஆரம்பிக்க வேண்டுமென்றும் பல முறை இந்த மன்றத்தில் பேசியிருக்கிறார்கள். அது இதுவரையில் நிறைவேறவில்லை. என் மூலமாகச் சொல்ல வேண்டுமென்று விரும்புகிறேன். அதை அமைச்சரவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன்.

ஆலங்காயத்தில் பெண் டாக்டர்கள் நியமிக்கப்பட வேண்டும். அந்தப் பகுதி மக்கள் நல்ல முறையில் வாழவேண்டுமானால் இந்த மக்கள் நல்வாழ்வுத் துறை நல்வாழ்வுத் துறையாக நடக்க வேண்டும். அப்படியில்லாமல் இந்த மக்கள் நல்வாழ்வுத் துறை, மருத்துவர் வாழ்வுத் துறையாகத்தான் இருக்கிறது. அமைச்சர் அவர்கள் இதை நீக்க வேண்டும். இன்றைக்கு இந்தத் துறை மருத்துவர் நலத்துறையாகத்



தான் செயல்படுகிறதே தவிர மக்கள் நல்வாழ்வுத் துறையாகச் செயல்படவில்லை. இயங்கவில்லை என்ற குற்றச்சாட்டை நான் சொல்லிக்கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த டாக்டர் பிரைவேட் பிராக்டீஸ் செய்யாமல் இருப்பதற்குக் கடுமையான சட்ட திட்டங்கள் கொண்டுவர வேண்டும், நாட்டு மக்கள் நல் வாழ்வு வாழ்வதற்காக இந்த அரசாங்கம் நல்ல திட்டங்களை வகுக்க வேண்டுமென்று கோரி என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர்</u> : (திரு. வை. பாலசுந்தரம்) : அடுத்து 12 உறுப்பினர்கள் பேசுவதற்கு இருக்கிறார்கள். ஆகவே, அடுத்துப் பேசுகின்றவர்கள் தயவு செய்து 10 நிமிடங்களில் கண்டிப்பாக முடித்துக் கொள்ள வேண்டும்.

*<u>திரு. பு. செ. முத்துச்செல்வன்</u> : தலைவரவர்களே, மக்கள் நல்வாழ்வுத் துறை மானியக் கோரிக்கை மீது என்னுடைய கருத்துக்களைக் கூற விழைகிறேன்.

இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் இன்று மருத்துவத்துறை சிறப்பாகவும், பொறுப்புணர்ச்சியோடும், நல்ல கவனத்தோடு பணியாற்றிக் கொண்டிருக்கிற ஒரு துறையாக விளங்கிக்கொண்டிருக்கிறது. மற்ற மாநிலங்களையெல்லாம் பார்க்கிறபொழுது, தமிழகத்தில் இருக்கிற இந்த மக்கள் நல்வாழ்வுத் துறை மக்களின் நல்வாழ்வையே மையமாக்கக் கொண்டு பணியாற்றிக்கொண்டிருக்கிறது. மக்களின் நோய் தடுக்கின்ற வகையில் அவர்களுக்கு எல்லா வசதிகளையும் இன்று தமிழகத்தில் உள்ள மருத்துவ மனைகளில் ஓரளவிற்குச் செய்யப்பட்டு இருக்கின்றன. இன்று மேல் நாடுகளில் கூட மருத்துவத்துறை, அமெரிக்கா போன்ற நாடுகளைத் தவிர, மற்ற நாடுகளிலே, மலேசியா போன்ற நாடுகளில் எல்லாம், சிலோன் போன்ற நாடுகளிலே எல்லாம் இந்த அளவிற்கு இருக்கிறதா என்று சொல்லக்கூடிய அளவிலே மருத்துவத் துறை சிறப்பாகப் பணியாற்றிக்கொண்டிருக்கிறது.

மருத்துவத் துறையிலே அறுவை சிகிச்சை முறையிலேதான் இன்னும் தமிழகம் முன்னேற வேண்டிய நிலையிலே இருக்கிறது. மருத்துவத் துறையிலே அமெரிக்காவிலே கூட இந்த பிரிஸ்கிரிப்ஷன் செய்கின்ற முறை தமிழகத்திலே இருக்கிற அளவுக்கு அதிமாக அங்கே முன்னேற்றம் காணவில்லை. அறுவை சிகிச்சையிலேதான் அவர்கள் நல்ல வெற்றியைக் கண்டிருக்கிறார்கள்.

அங்கே இருக்கிற மருத்துவ நிலையங்களில் தனிப்பட்ட மருத்துவ நிலையங்கள் ஏராளமாக இருக்கின்றன. அரசு மருத்துவ நிலையங்களும் ஏழை எளியவர்களுக்காக இருக்கின்றன. தனி நிறுவனங்களிலும் அறுவை சிகிச்சை வெற்றிகரமாகச் செய்யப்படுகிறது. இருதயத்தையே மாற்றி அமைக்கக்கூடிய அளவுக்கு டெக்ஸாஸில் ஹாஸ்டன் மருத்துவ மனையில் அந்தக் காரியங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

புற்றுநோய் சிகிச்சையானாலும் சரி அமெரிக்காவில்தான் இன்று சிறப்பாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. வைத்தியத்துறையிலே அறுவை சிகிச்சையிலே சிறந்த நாடாக அமையக்கூடிய வகையில் அமெரிக்க நாடுகளில் அதற்கு வேண்டிய நல்ல வசதிகள் அங்கே இருக்கின்றன.

மருத்துவர்களுக்கு அங்கே நல்ல பயிற்சி அளித்து அவர்கள் சிறப்பான மருத்துவ வளர்ச்சியை செய்துகொண்டிருக்கிறார்கள். இங்கேயிருந்து செல்கின்ற மருத்துவர்களை நேரடியாக மருத்துவ நிலையங்களில் ஏற்றுக்கொள்ளாமல் [அவர்களுக்குப் பயிற்சி அளித்து அதற்குப் பிறகுதான் அங்கே அமெரிக்க மருத்துவ நிலையங்களில் பணியாற்றுவதற்கு உரியவர்களாக ஆக்குகிறார்கள்.

அப்படியிருக்கிற நிலைமையில், நம்முடைய தமிழகத்தில் அதே போன்ற முறையில் அறுவை சிகிச்சைத் துறையில் வெற்றி காணத்தக்க அளவில் அங்கே என்னென்ன முறைகளைக் கையாளுகின்றார்களோ அதையெல்லாம் பார்த்து வந்து இங்கே தனிப்பட்ட முறையில் மருத்துவ நிலையங்களை உருவாக்கினாலும் சரி, அல்லது அரசு சார்பில் அத்தகைய மருத்துவ நிலையங்களை உருவாக்கினாலும் சரி, அத்தகைய மருத்துவ நிலையங்களில் பெரிய செல்வந்தர்கள் வந்து சிகிச்சை பெறுகின்ற பொழுது அவர்களிடமிருந்து நிறையத் தொகையை பெற்று, அந்தத் தொகையிலிருந்து கிடைக்கக்கூடிய வருவாயைக் கொண்டு ஏழை எளியோர்களுக்கு இலவசமாக சிகிச்சை அளிக்கின்ற வசதிகளைச் செய்வதற்கு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அங்கே ஏழை எளியவர்களுக்கும் பெரும் செல்வந்தர்களுக்கும் ஒரே சீராகப் பாவித்துத்தான் சிகிச்சை செய்கிறார்கள். இலவசமாகச் செய்யக் கூடிய ஏழையெளியவர்களுக்கு செய்யக்கூடிய வைத்திய சிகிச்சையும், அதே போல செல்வந்தர்களுக்குச் செய்யக் கூடிய சிகிச்சையும் ஒரே மாதிரியாகத்தான் இருந்து வருகிறது. இவர்களுக்கு என்ன வசதிகளைச் செய்து தருகின்றார்களோ அதே வசதிகளைத் தான் தனிப்பட்ட நிறுவனங்களிலும் அங்கே செய்து தரப்படுகின்றது. காரணம் அங்கே ஃபாமிலி ஹெல்த் இன்ஷூரன்ஸ் ஸ்கீம்—குடும்ப நலப் பாதுகாப்புத் திட்டம் இருக்கிறது. ஒரு குடும்பத்தில் யாருக்காவது நோய் ஏற்பட்டுவிட்டால் அவர்கள் எந்த மருத்துவமனையில் வேண்டுமானாலும் சேர்ந்து சிகிச்சை பெற்றுக்கொள்ளலாம்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: நமது நாட்டில் எந்த அரசு மருத்துவ மனையில் சிகிச்சை பெற்றாலும் சிகிச்சைக் கட்டணம் இல்லை. மருத்துவமனைகளில் கட்டாயமாகச் செலுத்தப்பட வேண்டிய கட்டணம் கிடையாது. மேல்நாட்டில் இருக்கிற நிலைமை வேறு, இங்கு இருக்கிற நிலைமை வேறு, அங்கே கட்டணம் இல்லாமல் பொதுவாக மருத்துவ மனைகளில் எந்தக் காரியமும் ஆற்றப்படுவதில்லை. மேல் நாடுகளில் பொதுவாக இலவச மருத்துவம் மிகக் குறைவு, 5 அல்லது



10 சதவிகிதம்தான். ஆனால் நம்முடைய நாட்டில் 90 விழுக்காடு இலவசமாக மருத்துவ சிகிச்சை அளிக்கப்படுகிறது. 10 விழுக்காடுதான் கட்டணம். அப்படியிருக்கிற நிலைமைகளை மொத்தமாகப் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. பு. செ. முத்துச்செல்வன்: அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்கு மிகவும் நன்றி.

இங்கே நாம் அதைப்போன்ற முறையிலே இப்பொழுது செயல்பட முடியாவிட்டாலும், நாளடைவில் அப்படிச் செய்தால் ஏழைஎளியோர்களுக்கு நல்ல சிறப்பான சிகிச்சையைப் பெற முடியும் என்பதற்காகத்தான் நான் அதை இங்கே குறிப்பிட்டேன்.

அதே போல இங்கேயும், அந்தத் திட்டத்தை குடும்ப நல காப்புத் திட்டமாகக் கொண்டு வந்தால் அரசுக்கு உள்ள சுமை குறையும் இந்தியாவிலே சிகிச்சை அளிப்பது, மக்களைப் பெற்றுவிட்டதற்குப் பிறகு அந்த சிகிச்சை அளிக்கின்ற பொறுப்பு அரசுக்குத்தான். யாருக்கும் அந்தக் குடும்பத்தில் இருப்பவர்களுக்கு யாருக்கும் அந்தக் கவலை இல்லை என்ற அளவில் நம்முடைய இந்திய நாட்டில் நிலைமை இருக்கிறது. அதனை மாற்றி அமைத்து எல்லோரும் சரிசமமான முறையிலே சிறப்பான நல்ல சிகிச்சை பெறுவதற்கு வசதி வாய்ப்புகளை நாளடைவில் ஏற்படுத்தித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய மாநிலத்தில் குடிநீர்த் திட்டங்கள் மிகவும் சிறப்பான முறையில் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. குடிநீர்த் திட்டம் என்று சொன்னால், இன்னும் பேரூராட்சி போன்ற இடங்களில் கூட இன்வெஸ்டிகேஷன் சார்ஜஸ் கொடுக்க முடியாத நிலைமை இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ரூ. 10,000-லிருந்து ரூ, 7,000, 5,000 அளவிலே குறைப்பதற்கு ஏதாவது வழி காணவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இன்வெஸ்டிகேஷன் சார்ஜஸ் கட்ட முடியாத நிலை இருக்கும் பொழுது, அந்தப் பகுதி மக்கள் குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்றிக் கொள்ள முடியவில்லை.

நம்முடைய மாநிலத்திலேதான் தொழு நோய்ப் பிச்சைக்காரர்களுக்கு இல்லங்கள் அமைக்கப்பட்டு சிறப்பாகப் பணியாற்றிக்கொண்டு வருகின்றன கண் சிகிச்சை முகாம்களும் ஏற்பாடு செய்யப்பட்டு, மாவட்டம் தோறும் பல இடங்களில் மையமாக வைத்து சிறப்பாகப் பணியாற்றி வருகிறது லட்சக்கணக்கான மக்கள் கண் ஒளியைப் பெற்றிருக்கிறார்கள். அதற்காக நம்முடைய முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களையும், மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் மாண்புமிகு பேராசிரியர் அவர்களையும் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

நம்முடைய குடும்ப நலத் திட்டம் மற்ற நாடுகளை விடச் சிறப்பாக நடைபெற்று வருகிறது. குடும்ப நலத் திட்டம் மற்ற மாநிலங்களைவிடச் சிறப்பாக நடைபெற்றுக்கொண்டு இருக்கிறது. உத்திரப் பிரதேசம் போன்ற

நாடுகளோடு ஒப்பிட்டுப்பார்க்கிற பொழுது நம்முடைய மாநிலத்தில் பெருமைப்படத்தக்க அளவிலே மக்கள் தொகை இந்த 3, 4 ஆண்டுகளில் கணிசமாக குறைந்திருக்கிறது. இந்த அளவுக்கு இன்று குடும்ப நலத் திட்டம் சிறப்பாக பணியாற்றிவருகிறது. ஏற்படுகின்ற நோய்களிலே தீராத நோய்கள், அவர்களை சாவுக்குக்கொண்டு போய் சேர்க்கின்ற நோய் புற்று நோய், ரத்தக் கொதிப்பு, ஹார்ட் டிஸ்லீஸ் போன்ற நோய்கள் தான், காச நோயையும் இதைப் போன்ற நோயாகக் குறிப்பிடலாம். இது போன்ற தீராத நோய்களை, சாவு எல்லையிலே கொண்டுபோய் விடுகின்ற அத்தகைய நோய்களைக் களைந்து எறிகின்ற வகையில் நல்ல ஆராய்ச்சி செய்து அதற்கான மருந்துகளைக் கண்டுபிடிக்கும் வகையில் ஒரு ஆராய்ச்சி நிலையத்தை உருவாக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதி முசிறியில் ஒரு 90 பெட்டட் மருத்துவமனை அமைப்பதற்கு கோரிக்கை விடப்பட்டு, அதற்கான ப்ரபோஸல்ஸ் அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது. அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு, முசிறியில் அதிகப் படுக்கைகள் கொண்ட மருத்துவ மனை அமைப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தண்டலைபத்தூரில் ஆரம்ப சுகாதார நிலையம் இயங்கிக்கொண்டிருக்கிறது. அது என்னுடைய ஊராகும். தண்டலைப்புத்தூரில் மற்ற ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு மையமாக வைக்கப்பட்டு 30 படுக்கை கொண்டதாக அதை உயர்த்துவதற்கு இங்கே ப்ரபோஸல்ஸ் அனுப்பிவைக்கப்பட்டிருக்கிறது, அதனையும் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒரு ஊராட்சி ஒன்றியத்தில் இரண்டு ஆரம்ப சுகாதார நிலையங்கள் என்று ஏற்பாடு செய்கின்றபொழுது என்னுடைய முசிறி ஊராட்சி ஒன்றியத்தில் புலிவலம் என்கிற கிராமம் இருக்கிறது. அது ஒன்றிய மருத்துவ மனையைப் பெற்றிருக்கிறது. அந்த ஒன்றிய மருத்துவ மனையை ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்றி மேம்பாடு அடையச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மணச்சநல்லூர் ஊராட்சி ஒன்றியத்தில் எதுமலை என்ற கிராமம் இருக்கிறது. கரியமாணிக்கம் பிர்க்கா மிகவும் பிற்படுத்தப்பட்ட பிர்க்கா. அந்தப் பகுதியில் மருத்துவ வசதி இல்லை. எதுமலையை மையமாக வைத்து, இரண்டு ஆரம்ப சுகாதார நிலையங்கள் வரும் பொழுது, அங்கு ஒன்று ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். என்னுடைய சொந்த ஊர் தண்டலைப்பத்தூர். பேரூராட்சி மன்றத்தில் 10,000 ரூபாய் இன்வெஸ்டிகேஷன் சார்ஜஸ் மக்களிடமிருந்து நன்கொடையாகப் பெற்று அரசுக்கு செலுத்தப்பட்டிருக்கிறது. அங்கே குடிநீர்த் திட்டத்தை விரைவாக செயல்படுத்தித் தர வேண்டும் என்று தாழ்மையுடன் கேட்டுக்கொண்டு, இத்தோடு முடித்துக் கொள்கிறேன்.





* திரு. எம். சுரேந்திரன்: தலைவரவர்களே, இங்கே மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரவர்களால் பேரவையின் அங்கிகாரம் பெறுவதற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கிற மானியக் கோரிக்கைகள் மீது நானும் சில கோரிக்கைகளை இந்தச் சபையில் வைக்கலாம் என்று கருதுகிறேன்.

இந்த மானியக் கோரிக்கையில் நிதி பெற்றதற்குப் பின்னால் அது செலவு செய்யப்படுவதற்கான வழிமுறைகளைப் பற்றியும் இங்கே விபரப் பட்டியல் தந்திருக்கிறார்கள். இந்த விபரப் பட்டியலைப் பார்க்கும்போது தற்போது ஆரம்பச் சுகாதார நிலையங்கள் 379 இருப்பதாகக் கூறப்பட்டிருக்கிறது. இந்த 379 சுகாதார நிலையங்களும் மக்களுடைய ஜனத் தொகை கணக்கின்படி பார்க்கும்போது கிட்டத்தட்ட 75,000 அல்லது 76,000 பேர்களுக்கு ஒன்று என்ற அளவில் இருக்கின்றன. அதைப் போலவே ஒவ்வொரு சுகாதார நிலயத்திலும் 6 படுக்கைகள் தான் இருக்கின்றன.

மேற்படி ஜனத் தொகையின் அடிப்படையில் பார்க்கும்போது ஆறு படுக்கைகள்தான் வருகின்றன. தினசரி இந்த ஒவ்வொரு சுகாதார நிலையத்திலும் புது நோயாளிகள் 70 பேர், பழைய நோயாளிகள் 40 பேர்—ஆக 110 நோயாளிகள் வந்து செல்கின்றனர் என்ற கணக்கையும் அறிக்கையில் கொடுத்திருக்கிறார்கள். அவர்களுக்காக ஒவ்வொரு சுகாதார நிலையத்திலும் செலவிடுகிற பணம் எவ்வளவு என்று பார்த்தால் இந்த வருஷத்தில் 12,000 ரூபாய் மருந்துச் செலவுகளுக்கு செய்யப்படுகிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த 12,000 ரூபாய் அங்கே வருகின்ற நோயாளிகளின் எண்ணிக்கைக்குப் போதுமா என்கின்ற ஒரு கணக்கைப் பார்க்கும்போது ஒரு நாளைக்குப் ஒரு நபருக்கு 33 பைசா என்ற கணக்கு வருகின்றது.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, ஆரம்பச் சுகாதர நிலையங்களைத் தவிர, வேறு மருந்தகங்களும் ஒன்றியத்தில் இருக்கின்றன. ரூரல் அல்லது ரெகுலர் டிஸ்பென்சரிகல் 4, 5, இருக்கின்றன. ஆரம்பச் சுகாதார நிலையங்களில் மருந்துச் செலவுகளுக்காக 1968 அல்லது 1969-ல் 4,500 ரூபாய்தான் ஒதுக்கப்பட்டிருந்தது. நான் பொறுப்பேற்றுக்கொண்ட பின்னால் அந்தத் தொகையை 8,000 என்று அளவுக்கு உயர்த்தினேன். அதற்குப் பின்னர் அது 1,0000 ரூபாயாக உயர்த்தப்பட்டு இந்த ஆண்டிலிருந்து 12,000 மாக உயர்த்தப்பட்டிருக்கிறது மற்ற மாநிலங்களில் இந்த அளவுக்குச் செலவு செய்யப்படவில்லை. நம்முடைய தமிழகத்தில் மட்டும்தான் ஆரம்பச் சுகாதார நிலையங்களில் இவ்வளவு தொகை செலவிடப்படுகிறது. மத்திய அரசு சார்பில் ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்கு 8,000 ரூபாய் ஒதுக்கத்தான் சிபாரிசு செய்திருந்தார்கள். மற்ற மாநிலங்களில் அப்படித்தான் செய்துகொண்டிருந்தார்கள் ஆனால் நம்முடைய மாநிலத்தில்தான் 12,000 என்ற அளவிற்கு உயர்த்தியிருக்கிறோம்.

இதைப் போலவே 5, 6 சப் சென்டர்கள் இருந்தால் ஒவ்வொன்றுக்கும் 300 ரூபாய் அளவுதான் முன்பு தரப்பட்டது இப்போது அதையும் உயர்த்தி 600 ரூபாய் என் அளவுக்கு இந்த ஆண்டு முதல் வழங்குகிறோம். ஆக மற்ற மாநிலங்களில் இல்லாத அளவிற்கு நம்முடைய மாநிலத்தில் ஒன்றுக்கு ஒன்றை என்ற அளவிற்கு நாம் ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குச் செலவிட்டு வருகிறோம் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு எம். சுரேந்திரன் : மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது இந்த அரசாங்கம் அதிகமாகச் செலவு செய்கிறது என்று வேண்டுமானால் நீங்கள் சொல்லிக்கொள்ளலாம், மக்களுக்கு அது போதுமானதா என்பது தான் என்னுடைய கேள்வி. அது போதாது என்பது என்னுடைய கருத்து.

மாண்புமிகு திரு க. அன்பழகன் : அப்படி பொது விவாதமாக நீங்கள் கருதுவதாக இருந்தால் அந்த அளவிற்கு மக்கள் வரி செலுத்துகிறார்களா என்ற விவாதமும் வரும். அந்தப் பொறுப்பு என்னுடையதல்ல. அந்த விவாதம் சரியானதல்ல மொத்த வரவு-செலவில் 6 சதவீதம் 7 சதவிதம் என்று செலவிடுவதற்குப் பதிலாக நம்முடைய மாநிலத்தின் வ.வுசெலவில் 9 சதவிகிதம், 10 சதவிகிதம் என்று செலவிடுகிறோம். அகில இந்திய மருத்துவக் குழுவினர் மாநாட்டிலே கூட அதற்காக நம்மைப் பாராட்டியிருக்கிறார்கள். அந்த அளவிற்கு இந்த அளவில். ஒதுக்கீடு செய்கிற ஒரே மாநிலம் நம்முடைய தமிழகம் தான்.

ஒரு நோயாளிக்கு 25, காசு, 30 காசு தான் செலவிடப்படுகிறது என்று சொன்னார்கள். புற நோயாளிகளுக்கு வழங்கப்படுகிற மருந்து சிலருக்கு 10 காசு மருந்தே போதுமானதாக இருக்கும் ; சிலருக்கு 25 காசாகலாம். சிலருக்கு 50 காசாகலாம். சிலருக்கு ஒரு ரூபாய் கூட ஆகலாம் அது நோயின் தன்மையைப் பொறுத்தது. இந்நிலை சராசரி பார்க்க முடியாது இதை இன்னும் உயர்த்திக் கொடுக்க இடமிருக்கிறது வசதி இருக்குமானால்.

* திரு. எம். சுரேந்திரன் : தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் சொன்ன விளக்கம் மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டு பார்க்க வேண்டுமானால் சிறப்பானதாக இருக்கலாம் ஆனால் என்னுடைய அபிப்பிராயம் அதற்கு மாறுப்பட்டதாகத்தான் இருக்கும் மருந்துக்கு அதிகம் செலவிட மக்கள் அதிக வரி செலுத்துகிறார்களா என்று கேட்டார்கள் மக்கள் அதிகம் வரி கொடுக்கிறார்களா இல்லையா என்பதைப் பார்த்துக் கொள்ள வேண்டியது அரசாங்கத்தினுடைய வேலையே தவிர என்னுடைய வேலை அல்ல. சம்பந்தப்பட்ட அமைச்சர் அதைப் பார்த்துக்கொள்ளட்டும். இந்த வருஷத்தில் கூட வரியை அதிகரித்து இருக்கிறீர்கள்.

என்னுடைய குறை என்னவென்றால், ஒரு நோயாளிக்கு 33 பைசா என்ற அளவுக்குத்தான் செலவு செய்யப்படுகிறது ; ஆஸ்பிரின்-மாத்திரை கூட 25 பைசா ஆகிறது. ஆக, இவ்வளவு குறைவான தொகை நம்முடைய மாநிலத்தில் செலவிடப்படுகிறது. இதை உயர்த்திக் கொடுக்க வழிசெய்ய வேண்டும் என்று நான் சொல்கிறேன். வழி இல்லை என்று அவர்கள் வேண்டுமானால் சொல்லிக்கொள்ளட்டும். அதற்காக மற்ற மாநிலங்களை ஒப்பிட்டுப்பார்த்து நம்முடைய மாநிலத்திலே அதிகமாகச் செலவிடுகிறோம் என்று சொல்கிற வாதம் சரியானதல்ல என்றால் அது ஏற்றுக்கொள்ளக்கூடிய வாதம் அல்ல.





அடுத்தபடியாக தாய்-சேய் நல விடுதி என்று ஆங்காங்கே இருக்கிறது. அங்கே செவிலியர்களும் மற்றவர்களும் பணியாற்றுகிறார்கள். ஒரு தாய் கர்ப்பம் தரித்த 4, 5 மாதங்களிலிருந்து குழந்தை பிறந்து கொஞ்சநாள் வரை பார்த்துக் கொள்ளப்படுகிறார்கள் என்று சொல்லப்படுகிறார்கள். பிரசவம் முடிந்து, குழந்தை வளர்ப்புவரை கவனிக்கவேண்டுமென்று அறிக்கையில் அழகாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அது படிப்பதற்கு சிறப்பாக இருக்கிறது ஆனால் அனுபவத்தில் அது இருக்கிறதா என்று பார்த்தால் இல்லை. சொல்வது வேறு, அனுபவம் வேறாக இருக்கிறது. அங்கே இருக்கின்ற செவிலியர்களும் ஹெல்த் விசிட்டர்களும் எத்தனை பேர்களைப் போய் பார்க்கிறார்கள் என்று பார்த்தால் நிச்சயமாக இந்த அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கின்ற விஷயங்களுக்கும் நடைமுறை அனுபவத்திற்கும் பொருத்தமே இல்லை என்பதை நான் சுட்டிக் காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக, இப்போது எங்கே பார்த்தாலும் கலப்படம் ; கலப்பட பேச்சு எல்லா இடங்களிலும் இருக்கிறது. அதை அனுபவத்திலும் பார்க்கிறோம். இந்தக் கலப்படத்திலே நாம் என்ன செய்திருக்கிறோம் ? 1973 ஆம் ஆண்டு வரையில் 4369 பேர்கள் மீது கலப்பட வழக்குப் போட்டிருக்கிறோம். 4½ கோடி ஜனத் தொகை உள்ள இந்த மாநிலத்திம்ல் 4,369 பேர்கள் மீது வழக்குப்போட்டுவிட்டால் கலப்படம் குறைந்துவிடுமா ? வர வர கலப்படம் அதிகமாகிக்கொண்டே இருக்கிறது எல்லாப் பொருட்களிலும் கலப்படம் செய்கிறார்கள். இதிலே கலப்படம், எதிலே கலப்படம் இல்லை என்று சொல்ல முடியவில்லை. ஆகவே அது சம்பந்தப்பட்ட விஷயங்களில் இன்னும் அதிகக் கவனம் செலுத்த வேண்டியிருக்கிறது. அதற்குப் போதுமான அளவிற்கு அதிகாரிகள் இல்லை ; ஆராய்ச்சிக் கூடங்கள் இல்லை. அதனால் அதிகக் கவனம் செலுத்த முடியவில்லை.

மருந்துப் பொருட்களில் கூட இப்போது கலப்படம் நிறைந்துவிட்டது. மருந்திலே கலப்படமானால் நோயாளிகளின் எண்ணிக்கை பெருகும்; அப்படியானால் டாக்டர்கள் அதிகமாகத் தேவைப் படுவார்கள்; அவர்கள் சம்மந்தப்பட்ட செலவும் அதிகமாகும். ஆகவே, கண்டிப்பாக கலப்படத்தைக் கட்டுப்படுத்த வேண்டும் அதற்கு இப்போதைய நடவடிக்கைகள் போதாது என்பதை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர்—தலைமை)

அடுத்தபடியாக தொழிற்சாலைகள் இருக்கின்றன. இரசாயனத் தொழிற்சாலை, உரத் தொழிற்சாலை, ஜவ்வரிசி தொழிற்சாலை, தோல் தொழிற்சாலை, சாராயத் தொழிற்சாலை, பேப்பர் மில் இவைகளிலிருந்து வஷ

வாயுக்கள் அதிகமாக வெளிப்படுகின்றன. துர்நாற்றம் அடிக்கிறது இந்தத் தொழிற்சாலைகளிலிருந்து வெளி வருகின்ற கழிவு நீர் பயிர் பச்சைகள் வளரமுடியாமல் செய்து விடுகிறது. இன்றைக்கு நாட்டிலே இந்தமாதிரியான தொழிற்சாலைகள் அதிகமாக இருக்கின்றன ; அதன் தேவையும் அதிகமாகிறது. பழைய காலத்தில் சில தொழிற்சாலைகள் தான் இருந்தன அதனால் அதிகமான அளவிற்குப் பாதகம் இல்லை. இப்போது தேவையும் பெருகி இருக்கிறது ; தொழிற்சாலைகளும் பெருகி இருக்கின்றன ஆகவே, இந்த விஷயத்தில் அதிக கவனம் செலுத்த வேண்டும் அதற்கு உள்நாட்டிலே உரிய கருவிகள் இல்லை என்றாலும் வெளி நாடுகளிலிருந்து இயந்திரங்களை இறக்குமதி செய்ய முடியாத ஒரு நிலை இருப்பதாகச் சொல்லப்படுகிறது. இது மக்கள் நலனைப் பொறுத்த விஷயமாக இருக்கிறது ஆகவே இம்மாதிரியான காரியங்களுக்கு முதலிடம் அளிக்க வேண்டும்.

மாண்புமிகு திரு அன்பழகன்.—தொழிற்சாலைகளிலிருந்து வெளிப் படுகின்ற வாயுக்களினால் காற்று தூய்மைப் படாமல் இருப்பதற்காக அதைப்பற்றி ஆராய்வதற்காக ஒரு குழு நியமிக்கப்பட்டிருக்கிறது. தொழிற்சாலைகளிலிருந்து புகைப்போக்கிகள் மூலம் வெளியே கக்கப் படுகின்ற விஷக்காற்று தீங்கு விளைவிக்காமல் இருக்க வேண்டுமானால் அந்தப் புகைப் போக்கிகளுடன் சில மின் இயக்கிக் கருவிகளை பொருத்த வேண்டுமென்று சொல்கிறார்கள் அந்தக் கருவிகள் வெளிநாடுகளிலிருந்து வரவேண்டும். அதற்கு மத்திய அரசின் அனுமதி வேண்டும். ஏனென்றால் இதற்கு அன்னியச் செலாவணி தேவைப்படும். சில தொழிலதிபர்கள் தாங்களே வாங்கிக் கொள்கிறோம் அனுமதி கொடுங்கள் என்று கேட்கிறார் கள் ஆனால் அனுமதி கிடைக்கவில்லை. ஆகவே இதற்கு ஒரு முதல் நடவடிக்கையாக சில மாற்று யோசனைகளைச் செயல் படுத்துவது பற்றி ஆராய்ந்துகொண்டிருக்கிறார்கள்.

[நண்பகல் 12-00]

திரு எம். சுரேந்திரன்.—அமைச்சர் அவர்களுடைய விளக்கம் வரவேற்கக் கூடியது இப்போது இயங்கிவரும் சில தொழிற்சாலை களுக்கு தடைகளை ஏற்படுத்துவதோடு கூட இனிமேல் இதுபோன்ற தொழிற் சாலைகளை அனுமதிக்கிறபோதே அவர்கள் மற்ற இயந்திரங்களை வாங்குவது போலவே தடைக் கருவிகளையும் வாங்கி அமைத்த பிறகு அனுமதி வழங்குவது என்கிற முறையை ஏற்படுத்திக்கொண்டாகவேண்டும். இல்லா விட்டால் அனுமதி தரப்படாது என்ற முறையில் அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும்.

அடுத்தாற்போல் டாக்டர்களைப் பற்றி அமைச்சர் அவர்கள் கூறினார்கள். டாக்டர்களை அதிகப்படுத்த முடியாத நிலையையும், அவர்களிடையே உள்ள வேலையில்லாத் திண்டாட்டத்தைப் பற்றியும் சொன்னார்கள். எங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற புள்ளி விவரத்தில் 22,000 ஆயிரம் பேர்களுக்குத் தான் ஒரு டாக்டர் இருக்கிறார் நர்சுகளை எடுத்துக் கொண் டாலும் 18 ஆயிரம் பேர்களுக்குத்தான் ஒரு நர்ஸ் என்ற வகையில் இருக்கிறது மூலாத் தொகை விகிதாச்சார அடிப்படையில் இன்னும் டாக்டர்களையும் நர்சுகளையும் அதிகப்படுத்த வேண்டும் என்பது எனகருத்து. மற்ற மாநிலங்களில் இந்த விகிதாச்சாரம் குறைவாக இருக்கிறது அவற் றோடு நம் விகிதாச்சாரத்தை ஒப்பிட்டுப் பார்த்தால் தெரியும்.





மாண்புமிகு திரு க. அன்பழகன் : அகில இந்தியாவில் தமிழ் நாட்டில்தான் விகிதாசாரம் நிறைவு அளிக்கத்தக்க விதத்தில் இருக் கிறது. வேறு எங்கும் கிடையாது. தமிழ்நாட்டில் ஐயாயிரம் டாக்டர்கள் அரசாங்கப் பணியில் இருக்கிறார்கள் என்றால் தனியாகத் தொழில் செய்பவர்களும் பல ஆயிரம் பேர்கள் இருக்கிறார்கள். அதைத் தவிர நாட்டு மருத்துவத் துறை, ஹோமியோபதி இன்னும் எலும்பு முறிவு வைத்தியர் போன்ற பல்வேறு விதமான முறையில் சிகிச்சை செய்பவர் களும் இருக்கிறார்கள். தமிழ் நாட்டில் மருத்துவர்கள் கிடைக்காத நெருக்கடி ஏற்படவில்லை. பரவலாக அவர்கள் பணியைக் கிடைக்கச் செய் கிற முறையில் தான் நெருக்கடி, பொருளாதாரச் சிக்கல் எல்லாம் இடையூறாக இருக்கிறது.

திரு எம். சுரேந்திரன் : நம் தேசத்திலுள்ள நிலைமையை . . .

மாண்புமிகு திரு க. அன்பழகன்: நம் மாநிலத்தில் டாக்டர்கள் கிடைப்பதில் பற்றாக்குறை இல்லை என்று சொன்னதைக் கேட்டு, மாண்புமிகு உறுப்பினருக்கு சந்தோஷம் ஏற்படவில்லையே, அதற்கு என்ன காரணம் என்று எனக்குப் புரியவில்லை.

திரு எம். சுரேந்திரன் : உலகநாடுகளோடு இங்கிலாந்து, அமெரிக்கா, ஜப்பான் இவற்றோடு ஒப்பிடுகிறபோது. . . . .

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தயவு செய்து மேல்நாடுகளைக்கூட இதைப்பொறுத்து பாராட்ட இடமில்லை. நம் நாட்டு டாக்டர்கள்தான் ஆயிரக் கணக்கில் அங்கே சென்று வேலை செய்து வருகிறார்கள் என்று கூறப்படுகிறது.

திரு எம். சுரேந்திரன் : டாக்டர்கள் நிறையப் பேர் இருக்கிறார்கள். ஆனால் இன்றையதினம் ஒரு டாக்டருக்கு ஆஸ்பத்திரியில் எவ்வளவு பெட் என்கிற முறையில் பார்க்கிறபோது. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்னும் 13 பேர்கள் பேச இருக்கிறார்கள் நீங்கள் இன்னும் ஒரு நிமிடத்தில் முடித்துவிடுங்கள்.

திருமதி த. நா. அனந்தாநாயகி : அங்கத்தினர் பேசும்போது மாண்பு மிகு அமைச்சர் குறுக்கிட்டுப் பேசிக்கொண்டே இருந்தால், என்ன செய்வது அமைச்சருக்கு ரிப்ளை சொல்ல டைம் இருக்கிறது,

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: நான் விளக்குவது அரசாங்கத் திற்கு பாதுகாப்பு தேடுவதற்காக அல்ல. இந்த நலத்துறை பிரச்சினை கள் அவ்வளவு சிக்கலானவை—மூன்றாண்டுகளாக நான் இத்துறையைக் கவனித்து வருகிறேன் என்றாலும் இன்னும் பல பிரச்சினைகள் முடிவா காமலே இருக்கின்றன. அங்கத்தினர்கள் சிறந்த ஆலோசனைகளை வழங்கு வதற்கு உதவியாகத்தான் சில பிரச்சினைகளில் விளக்கம் பெற, நான் சில விளக்கங்களை அளிக்கிறேன்.

திரு. எம் சுரேந்திரன் : அமைச்சர் விளக்கம் அளிப்பதற்கு நன்றி குறுக்கீட்டின் காரணமாக என்னுடைய நேரம் குறைந்துவிடுவதால் இன்னும் 5 நிமிடம் கொடுக்கவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போதே மணி 12 ஆகிவிட்டது இன்னும் 13 பேர்கள் பேசயிருக்கிறார்கள்.

திரு. என். கே. பழனிசாமி : இதுவரை பேசியவர்களுக்கு இஷ்டம் போலப் பேச நேரம் அளித்துவிட்டு பின்னால் பேச இருக்கிறவர்களுக்கு நேரத்தைக் குறைப்பது சரியல்ல, எப்படி பல கருத்துகளை அந்த நேரத்தில் சொல்ல முடியும்?

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : மாலையில் கூட்டத்தை வைத்துக் கொள்வதற்கு எங்கள் கட்சியைப் பொறுத்தவரை ஆட்சேபனை இல்லை.

திரு. செ. கந்தப்பன் : ஆளும் கட்சி உறுப்பினர்கள் பேசுவதற்கு வாய்ப்பு இல்லாமலேயே போகிறது. ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் பேசுவதற்கும் வாய்ப்பு அளிக்க வேண்டும்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : மாலையில் வேண்டுமானாலும் கூட்டத்தை வைத்துக்கொள்ள எங்களுக்கும் ஆட்சேபனையில்லை.

திரு. க. உரோ. எட்மண்டு : ஸ்தாபன காங்கிரஸ் கட்சிக்கு 2 பேர்கள் பேசுவதற்கு வாய்ப்புக் கொடுத்திருக்கிறீர்கள். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் நாங்களும் 13 பேர்கள் இருக்கிறோம். எங்கள் கட்சி சார்பாக இரண்டு பேர்கள் பேசுவதற்கு வாய்ப்பு அளித்திருக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர்கள் கொடுத்த லிஸ்டில் இரண்டு பேர்கள் திருமதி ஜோதி வெங்கடாசலம், திரு ஆர். பொன்னப்ப நாடார் பெயர்கள் இருக்கின்றன. நீங்கள் கொடுத்த லிஸ்ட் இதோ இருக்கிறது. டாக்டர் ஹாண்டே அவர்கள் பெயர் மட்டும்தான் இருக்கிறது. விவாதத்தை அவர் வைண்ட்அப் பண்ணுவார் என்று சொன்னீர்கள்.

திரு கே. ஏ. வகாப் : ஒரு கட்சிக்கு இவ்வளவு நேரம் என்று ஒதுக்குகிறீர்கள். முஸ்லிம் லீக் கட்சிக்கு 10 நிமிடம் கொடுத்திருக்கிறீர்கள். அந்த நேரத்தில் நாங்கள் இரண்டு பேர்கள் பேசுவதாக இருந்தால் அனுமதிக்கலாம் அல்லவா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதில் எனக்கு ஆட்சேபனை இல்லை. ஆனால் ஐந்து நிமிடத்தில் பேசுவதாகச் சொல்கிறார்களே தவிர, ஐந்து நிமிடத்தில் முடித்துக்கொள்வதில்லை.

திரு. நா. வீராசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, ஆளும் கட்சியில் நாங்கள் 174 பேர்கள் இருக்கிறோம். தயவு செய்து எங்களுக்கும் மற்றவர்களுக்குக் கொடுப்பதுபோல பேச சந்தர்ப்பம் அளிக்க வேண்டும்



அடுத்து ஒரு முக்கியமான பிரச்சினை—இன்று ஒரு நாள் வேண்டுமானால் மாலையில் கூட்டம் நடத்த அனுமதி கொடுங்கள். தினந்தோறும் இதுபோன்ற நிலை—மாலைக் கூட்டம் என்றால் மிகுந்த சிரமமாகிவிடும். அதிகாரிகள் எல்லாம் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். நிருபர்களுக்கு மிகவும் கஷ்டமாக இருக்கும்.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : எங்கள் கட்சியைப் பொறுத்தவரை 2 பேர்கள் பேச வேண்டும் என்று பெயர் கொடுத்தோம். நீங்கள் அனுமதிக்கிறீர்கள். இன்னும் அதிகம் பேர் பேச வேண்டுமென்றால் மாலையில் வேண்டுமானால் கூட்டத்தை வைத்துக்கொள்வதுதான் சிறந்ததாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் எல்லாம் பிசினஸ் அட்வைசரி கமிட்டியில் அதைஎடுத்துச்சொல்லி நேரம் வைத்திருந்தால்சரி

திரு. எம். ஏ. லத்திப் : நான் என்னமோ ½ மணி வாங்கினதாகச் சொன்னார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : யாரும் சொல்லவில்லை. ஐந்து நிமிடத்திற்குள் முடிக்கிறேன் என்கிறார்களே தவிர முடிப்பதில்லை என்று நான் யாரையும் குறிப்பிடாது பொதுப்படையாகத்தான் சொன்னேன்.

திரு. எம். ஏ. லத்திப் : மற்றவர்கள் எந்த நேரத்தை எடுத்துக் கொள்கிறார்களோ நான் அதைவிடக் குறைவாக எடுத்துக்கொள்ளத் தயார்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : எதிர்க் கட்சிக்காரர்கள் ஒத்துக் கொண்டால் மாலையிலும் உட்காரலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சுரேந்திரன் அவர்கள் இன்னும் 2 நிமிடத்தில் முடித்துவிட வேண்டும்.

திரு. சி. ஆறுமுகம் : பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு இந்த விவாதம் முடிவுபெறாது என்றால் இதையே நாளைக்குத் தொடர்ந்து வைத்துக்கொள்ளலாம். மாலைக் கூட்டம் என்பது வேண்டாம்.

திரு எம். சுரேந்திரன் : சபாநாயகர் அவர்களே, நான் அரசியலைப் பற்றி பேசவில்லை. முக்கியமான விஷயங்களைத் தான் பேசுகிறேனே தவிர,......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாலை நேரம் நடக்கும் என்பதற்காக அதிக நேரம் எடுத்துக்கொள்ளாதீர்கள். இரண்டு நிமிஷத்திலே முடித்துவிடுங்கள்.

திரு. எம். சுரேந்திரன் : டாக்டர்களைப் பற்றிக் குறிப்பிட்டேன். மருத்துவ மனைகளிலே பல நேரங்களிலே மருந்துகள் இல்லையென்று சொல்லி எழுதிக்கொடுத்து, வெளியிலே இருந்து மருந்துகளை வாங்கும் முறைகளை

நாம் வைத்திருக்கிறோம். சிறிது நேரத்திற்கு முன்னால் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், 90 சதவிகிதம் அரசு செலவழிப்பதில் 10 சதவிகிதம் தான் திரும்ப வருகிறது என்று. 90 சதவிகிதம் ஜனங்களுக்கு அரசு இலவசமாக மருத்துவ வசதி செய்கிறது என்ற கணக்கு இருக்கிறதே தவிர, நோயாளிகள் மருத்துவ மனைகளுக்குச் சென்று, வெளியே வருவதற்கு எவ்வளவு பணம் செலவழிக்க வேண்டியிருக்கிறது என்பதை இரகசியமாக ஒரு கணக்கெடுத்துப் பார்த்தால், பெரும் உதவியாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

பல மருத்துவ மனைகளிலே உள்ளே சென்று கட்டிலிலே படுக்கை பெற வேண்டுமென்றால், அதற்கும் பணம் தரவேண்டும். கட்டிலில் படுத்ததற்குப் பின்னால், நர்ஸ் வந்து பார்ப்பதற்கு, வார்ட் பாய்க்கு, ஸ்வீப்பருக்கு, இப்படி இவ்வளவு பேருக்கும் பணம் கொடுத்தால்தான் நோயாளி தன் நோயை சொஸ்தப்படுத்திக் கொண்டு வெளியே வர முடியுமே தவிர, இல்லாவிட்டால் ஏன் சென்றோம் என்று மிகுந்த கவலையோடு வெளியே வருகிற நிலை இருக்கிறது. இதைக் கவனத்திலே எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்ல விரும்புகிறேன்.

மருத்துவ மனைகளில் உள்ள அவுட் பேஷண்ட் வார்டுகளில் டாக்டர்கள் ஒவ்வொரு நாளும் அவுட் பேஷண்ட்களைப் பார்த்து, சீட்டு எழுதிக் கொடுத்து அனுப்புகிறார்கள். அவர்களுடைய வேலைப் பளு அதிகமாக இருக்கிறது என்பது என்னுடைய கருத்து. ஒவ்வொரு நோயாளியையும் பார்த்து, நன்கு பரிசோதித்து, சீட்டு எழுதிக் கொடுக்க வேண்டுமென்றால், நேரம் அதிகமாக ஆகும். இதனால், தற்பொழுது நோய் என்ன என்று கேட்டு, எழுதிக் கொடுக்கிற முறை வைக்கப்பட்டிருப்பதால், சரியான முறையிலே நோயாளிகளுக்கு வேண்டிய மருந்துகளைத் தருகிறார்கள் என்று சொல்லமுடியாத நிலைமையில் இந்த அவுட் பேஷண்ட் வார்ட்கள் இருக்கின்றன என்று குறிப்பிட விரும்புகிறேன்.

காச நோய் சம்பந்தமாக, பல இடங்களிலே இடம் கிடைக்கவில்லையென்ற புகார்கள் வருகின்றன. எங்கள் "ஊட்டி" தொகுதிக்குப் பக்கத்திலே இருக்கிற பெருந்துறை காச நோய் விடுதியிலே பல நேரங்களிலே இடம் கிடைப்பதில்லை. வரிசைக் கிரமமாக, சில நேரங்களில் 6 மாதம், 1 வருடம் கழித்துக்கூட இடம் பெறுகின்ற நிலை இருக்கிறது. அந்த வகையிலே காச நோயைத் தடுப்பதற்கான படுக்கைகளையும் இடங்களையும் அதிகப்படுத்த வேண்டியது அவசியம் என்று நான் குறிப்பிட விரும்புகிறேன்.

ஈ.எஸ்.ஐ. மருத்துவ மனைகள் என்று சொல்கின்றபொழுது, கோவையிலே இருக்கிற மருத்துவ மனைகளிலே இன்னும் படுக்கைகளை அதிகப்படுத்த வேண்டுமென்று பல நேரங்களிலே கோரிக்கைகள் வந்திருக்கின்றன. அவற்றை உரிய முறையிலே கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : ஈ.எஸ்.ஐ. மருத்துவ மனைப் படுக்கைகளை உயர்த்த வேண்டுமென்றால், ஈ.எஸ்.ஐ. கார்ப்பரேஷன் வைத்திருக்கிற விகிதாச்சார முறைப்படிதான் உயர்த்த முடியும். முன்பு



1,000 பேருக்கு 11 படுக்கை வீதம் இருக்கலாம் என்று இருந்தது. அதற்குப் பிறகு மத்திய அரசு ஆலோசனையின் பேரில் 1,000 பேருக்கு 4 படுக்கைகள் வீதம் தான் அமைக்கலாம் என்று குறைத்துள்ளார்கள். ஆகையினால், கட்டிட வசதி இருந்தும் கூட, நாங்கள் படுக்கை வசதி செய்து தர முடியவில்லை. கட்டிடம் இருந்தாலும் கூடச் செய்ய முடியாத நிலையை மாற்ற இப்பொழுது 1,000 பேருக்கு 7 படுக்கையாவது இருக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறோம், வலியுறுத்தி இருக்கிறோம், ஒப்புக்கொண்டு, ஈ.எஸ்.ஐ. கார்ப்பரேஷன் இன்னும் அனுமதி வழங்கவில்லை.

திரு. எம். சுரேந்திரன் : இன்னும் ஒரு கஷ்டம். சேலத்திலுள்ள மேட்டூர் பகுதியிலிருந்து தொழிலாளர்கள் கோவை மருத்துவ மனைக்கு அனுப்பப்பட்டார்கள். சமீப காலமாக, அது தடை செய்யப்பட்டிருக்கிறது. மேட்டூர், முக்கியமாக, தொழிலாளர் பகுதியாக இருக்கிற காரணத்தாலே அங்கு ஒரு ஈ.எஸ்.ஐ. மருத்துவ மனை கட்டிடம் வேண்டுமென்று இடம் பார்க்கப்பட்டது. இடம் பார்த்த பின்னால், கட்டப்படாமல் விடப்பட்டது.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அங்கத்தினர் அவர்கள் தொழிற்சங்கத்திலே இருந்த காரணத்தினால், அவருக்கு விவரம் தெரியவேண்டுமென்று விரும்பி, விவரத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். நாம் படுக்கை எண்ணிக்கையை அதிகப்படுத்த விரும்பினால் "நீங்கள் ஏற்கனவே முன்னேறிவிட்டீர்கள். இனி உங்களுக்கு நிதி கிடையாது" என்று மத்தியக் குழுவினர் சொல்கிறார்கள். இப்படி மத்திய குழுவினர் நாம் முன்னேறுகிற ஒவ்வொரு கட்டத்திலும் இசைவு தரவில்லை. மத்திய சர்க்கார் ஆதரவிலே நடக்கிற ஈ.எஸ்.ஐ. கார்ப்பரேஷனிலும் மேலும் விரிவு படுத்த முடியாமல் தடுத்துக்கொண்டிருப்பதால் நம்மால் செயல்பட முடியவில்லை. அவர்கள் அந்த உதவியைச் செய்யாமல், நம்மால், அந்தத் திட்டங்களை நிறைவேற்ற முடியாது. இப்பொழுதே, ஈ.எஸ்.ஐ. திட்டத்தில் தமிழக அரசு, தனது பங்குத் தொகைக்கு மேல், ஆண்டுக்கு ரூ. 1 கோடி செலவழிக்கிறது. இந்த ஆண்டு ஏறத்தாழ ரூ. 60 லட்சத்திலிருந்து ரூ. 70-வது லட்சம் வரை நாம் அதிகமாகச் செலவழிக்கிறோம். இந்தப் பொறுப்பை விட அதிக பொறுப்பை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது. எனவே, அகில இந்திய ஈ.எஸ்.ஐ. கார்ப்பரேஷன் கொள்கையை மாற்ற நாங்கள் முயற்சிக்கிறோம்., அங்கத்தினர் அவர்களும் ஒத்துழைக்க வேண்டும்.

திரு. எம். சுரேந்திரன் : ஏற்கனவே தெரிந்த விஷயம்தான் தெரியாதது அல்ல.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : சொல்வது தவறு அல்லவே.

திரு. எம். சுரேந்திரன் : அங்கே ஒரு ஈ.எஸ்.ஐ. ஹாஸ்பிட்டல் வேண்டுமென்ற வாய்ப்பு, முன்பிருந்ததைவிட இப்பொழுது அதிகமாக ஆகியிருக்கிறது. தொழிலாளர்களைக் கோவையிலே அனுமதிக்காத காரணத்தால், முன்பிருந்ததைவிட, இப்பொழுது தேவை அதிகம்,

அமைச்சர் அவர்கள் சொன்ன விஷயத்திலே நானும் ஒத்துழைப்பு செய்வது உதவியாக இருக்கும். ஆகவே, மருத்துவ மனை ஏற்படுத்த அரசாங்கம் ஒத்துழைக்க வேண்டும், என்னைப் பயன்படுத்திக் கொள்வதிலே ஆட்சேபனை இல்லையென்ற முறையிலே அதைச் செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. வீ. மலைக்கண்ணன் : அவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் நம் சட்டப் பேரவையில் சமர்ப்பித்திருக்கும் மானியக் கோரிக்கையின் மீது என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைக் கூற விரும்புகிறேன்.

நம்முடைய வரவு-செலவுத் திட்டத்தில் ஏறக்குறைய 10 சத விகிதம் இந்தத் துறைக்கு ஒதுக்கி இருப்பதை நான் பாராட்டுகிறேன். நமது நாட்டில் 100-க்கு 70 பேர் கிராமப் புறங்களில் வாழ்கிறார்கள், 30 பேர் நகரப்புறங்களில் வாழ்கிறார்கள். இதுபோன்று கிராமப் புறங்களில் வாழ்ந்து வந்த மக்களுக்கு ஊராட்சி ஒன்றிய மருந்தகங்களும், கிராமப்புற மருந்தகங்களும்தான் மருத்துவ வசதி செய்து தந்தன. இவைகளுக்கு எல்லாம் போதிய வசதி செய்து தரவேண்டுமென்ற நோக்கோடு, இந்த ஊராட்சி ஒன்றிய மருந்தகங்களை அரசாங்க மருந்தகங்களாக எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நம்முடைய மாண்புமிகு பேராசிரியர் அவர்கள், பொறுப்பேற்ற பிறகு, 1970–71-லிருந்து 1973–74 வரைக்கும் சுமார் 203 மருந்தகங்களை அரசு மருந்தகங்களாக அரசு எடுத்துக்கொண்டிருக்கிறது. இவைகளை எடுத்துக்கொண்ட பிறகு, ஒவ்வொரு அரசு மருந்தகத்திலும் இரண்டு டாக்டர்கள் பணியாற்றி, நல்ல மருத்துவ வசதிகளைக் கிராமப் புறங்களுக்குத் தந்துகொண்டிருக்கிறார்கள். அதற்காக என்னுடைய மகிழ்ச்சியை தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் இராசசிங்கமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தில் ஆனந்தூர், திருப்பாலக்குடியில் இரண்டு மூன்று மருந்தகங்கள் இருக்கின்றன. அவைகளை அரசாங்கம் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

இளையாங்குடி 26,000 மக்கள் கொண்ட நகரமாகும். அங்கே, இஸ்மாயில் என்பவர் 5 ஏக்கர் நிலத்தையும் ரூ. ஒரு இலட்சத்தையும் அரசுக்கு நன்கொடை தருவதாகக் கடிதம் எழுதி, அரசாங்க தரப்பில் மருத்துவ மனை தருவதாகக் கூறப்பட்டுள்ளது. அது தொடர்பாக எனக்கு ஒரு கடிதம்கூட வந்திருக்கிறது.

It states that the matter has been referred to the Director of Health Services and Family Planning for remarks.

அதைத் தருவதற்கு அவர் தயாராக இருக்கிறார். அங்கே ஒரு மருத்துவ மனையைக் கட்டுவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



மேலும், பரமக்குடியில் 5, 6 ஆண்டு காலமாக மக்கள் தங்கள் பங்குத் தொகையாக ரூ. 85,000 செலவழித்திருக்கிறார்கள். (14 இலட்சம் ரூபாய்) மதிப்பீடு தயாரிக்கப்பட்டு இந்த அரசாங்கத்தின் அனுமதியில் இருப்பதாக நாங்கள் அறிகிறோம். இன்னும் ரூ. 15,000-ஐக் கட்ட நாங்கள் ஏற்பாடு செய்கிறோம். அங்கு மருத்துவ மனையைக் கட்டித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தக் குடி தண்ணீர் திட்டத்தைப் பொறுத்து, எங்களுடைய மாவட்டத்தில் எங்கெங்கே குடி தண்ணீருக்கு வாய்ப்பு இருக்கிறதோ அங்கெல்லாம் இத்திட்டம் சிறப்பாக நடைபெறுகிறது. நம்புதாளை, திருவொற்றிபுரம் என்ற இடங்களில் குடிநீர் வாரியத் தலைவர் குடி தண்ணீர் வழங்கும் தொட்டிகளைத் திறந்து வைத்தார். இடுப்பில் ஒரு குடமும் தலையில் ஒன்றையும் வைத்துக்கொண்டு கீழே குனிந்து அகப்பையை வைத்துக்கொண்டு கொஞ்சம் கொஞ்சமாகப் பானையை நிரப்பிக்கொண்டு வந்தவர்கள் இன்னும் வீட்டுக்கருகில் குழாயிலிருந்து தண்ணீர் வருவதைக் கண்டு, ஆனந்தக் கூத்தாடுவதை நாங்கள் பார்க்கிறோம். எனவே, என்னுடைய தொகுதியிலுள்ள எல்லா மக்களுக்கும் நாட்டு மக்களுக்கும் அப்படிப்பட்ட மகிழ்ச்சியை ஏற்படுத்த வேண்டுமென்பதுதான் என்னுடைய ஆசையாகும்.

என்னுடைய தொகுதியில் தொண்டி வரைக்கும் கடற்கரைச் சாலைகள் இருக்கின்றன. ஆகவே அங்கே குடி தண்ணீர் வசதி கிடையாது. 40, 50 அடி ஆழம் போனாலும் கூட, உப்புத் தண்ணீர்தான். அங்கு தண்ணீர் வரக்கூடிய இடங்களில் 60 அடி ஆழம் போட வேண்டியிருந்தாலும் போட்டு தண்ணீர் பெற்றுத்தரவேண்டுமென்று தலைமைப் பொறியாளர் துரைராஜ் அவர்களிடம் கூடச் சொன்னேன்.

ஏனெனில் அங்கே நல்ல மழை பெய்தால் குளங்கள் நிறைந்து 3, 4 மாதங்களுக்குத் தண்ணீர் கிடைக்கும். மழையில்லையென்றால் 2 மைல் 3 மைல் நடந்தோ அல்லது வண்டியிலோ பானைகளை எடுத்துக்கொண்டு சென்று தண்ணீர் கொண்டுவரவேண்டிய நிலைமை இருக்கிறது. ஆகவே ஒரு காம்ப்ரஹென்ஸிவ் ஸ்கீம் கொண்டுவந்து 500 அடி 600 அடி ஆழத்திற்குத் தோண்டி துளைபோட்டு அப்படிப்பட்ட கிணறுகளைத் தோண்டினால் தான் தண்ணீர் அங்கே எப்பொழுதும் கிடைக்கும். தேவிபட்டணத்தில் நல்ல நீர் கிடைக்கிறது. அங்கிருந்து தேவிப் பட்டணம் ஐந்து மைல் தூரம்தான் இருக்கிறது., ஆகவே அங்கிருந்து தண்ணீர் கொண்டுவந்தாலும் கூட, சரிதான், எப்படியாவது அங்கே உடனடியாக தண்ணீர் கொண்டுவருவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

இளையான்குடி பஞ்சாயத்திலிருந்து 25 ஆயிரம் ரூபாய் இன்வெஸ்டிகேஷனுக்காக என்று பணம் கட்டி மதிப்பீடு இங்கே வந்திருக்கிறது என்று அறிகிறேன். ஆகவே வைகையிலிருந்து தண்ணீர் கொண்டுவருகின்ற வாய்ப்பு இருக்கின்றது. ராசசிங்கமங்கலத்திற்கு அருகிலே ஒரு பழைய கிணறு இருக்கிறது., பாண்டியன் கிணறு என்று இருக்கிறது, அந்தக் கிணற்றிலே நல்ல நீர் கிடைக்கிறது, ஆகவே ராசசிங்க

[திரு. வீ. மலைக்கண்ணன்] [1974 மார்ச் 18

மங்கலம், ராதானூர், இளையான்குடி ஆகிய இடங்களுக்கு இப்படிப்பட்ட திட்டங்களை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கிராமப்புறங்களிலே மருந்தகங்கள் 248 இருக்கின்றன என்று அமைச்சர் அவர்கள் இதிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். எப்படி ஊராட்சி மன்றங்களிலே இருக்கின்ற மருத்துவ மனைகளையெல்லாம் அரசாங்கம் படிப்படியாக எடுத்துக் கொள்ள இருக்கிறதோ அப்படியே கிராமப்புறங்களிலே உள்ளவற்றையும் சகலமும் சர்வமாக அரசாங்கம் எடுத்துக் கொண்டால்தான் மக்களுக்கு நல்ல முறையில் மருத்துவ வசதிகள் கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆரம்பச் சுகாதார நிலையங்களில் இரண்டு டாக்டர்கள் இருந்து நல்ல முறையிலே பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள். அது கிராமப்புற மக்களுக்கு வசதியாக இருக்கிறது. குடும்ப நலத் திட்டம் நம்முடைய மாநிலத்திலே 100க்கு 100 சிறப்பாக நடந்து வருகிறது. ஆபத்தில்லாமல் சிகிச்சையளிக்கப்படுகின்றது, இன்னும் மக்களிடத்திலே பீதியிருக்கிறது. ஆகவே சித்த வைத்திய முறையாக இருந்தாலும் சரி, மற்ற முறையாக இருந்தாலும் சரி புது மருந்துகளைக் கண்டுபிடித்து அதைப் பயன்படுத்த வேண்டும். ஆபத்தில்லாத சிகிச்சை என்ற முறையிலே உட்கொள்ளக்கூடிய மருந்தாக இருந்தால் குடும்ப நலத் திட்டம் சிறப்பாக வெற்றியடையும் என்று கருதுகிறேன்.

நான் இரண்டு ஆண்டுகளுக்கு முன்புகூட ஒரு கேள்வியைக் கேட்டேன், ஆஸ்திரேலியாவிலே ஒரு பூ இருக்கிறதாம், அதை உட்கொண்டால் குடும்ப நலத் திட்டம் சிறப்பாக நடத்தப்படலாம் என்று சொல்கிறார்களே, என்று கேட்ட பொழுது அமைச்சர் அவர்கள் பதிலளிக்கும் பொழுது அப்படிப்பட்ட பூ பற்றி எனக்குத் தெரியாது என்றும் ஆனால் கிராமப்புறங்களிலே உள்ள தாய்மார்கள் வேப்பெண்ணெய் பயன்படுத்தினால் வெற்றிகரமாக அமைகிறது என்று சொல்கிறார்கள் என்றும் சொன்னார்கள். வேப்பெண்ணெயைப் பயன் படுத்துவதன் மூலம் குடும்ப நலத் திட்டம் சிறப்பாக அமல் நடத்த முடியுமானால், அதுபற்றி விளம்பரம் செய்ய அரசு ஏற்பாடு செய்ய வேண்டும். குடும்ப நலத் திட்டம் சிறப்பாக அமல் படுத்தப்படும் என்று சொல்லப்படுகின்ற பொழுது இப்படிப்பட்ட கண்டுபிடிப்புகளை அரசாங்கம் செய்ய வேண்டுமென்று கூறி, இளையான்குடி, பரமக்குடி ஆகிய இடங்களில் மருத்துவ மனைகள் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமைகிறேன், வணக்கம்.

<u>திரு. என். கே. பழனிசாமி :</u> கனம் சபாநாயகர் அவர்களே, சுதந்திரம் அடைந்து 26 வருஷங்கள் ஆகியும்கூட பிரிட்டிஷார் காலத்திலே என்ன அமைப்பு இருந்ததோ அந்த அமைப்புதான் மருத்துவத்திலே இன்னும் இருந்துகொண்டு வருகிறது. அங்கிருந்து வெள்ளைக்காரர்கள் டாக்டர்களைக் கொண்டுவந்து இங்கே அப்பொழுது ஆஸ்பத்திரிகளை ஆரம்பித்தார்கள். அவர்கள் ஆரம்பித்ததன் நோக்கம் நம்முடைய நாட்டு மக்களுக்கு வைத்திய வசதி செய்யவேண்டுமென்பதற்காக அல்ல, இந்தியர்களின் வியாதிகள் வெள்ளைக்காரர்களுக்குப் பரவிவிடக்கூடாது என்பதற்காகத்தான் அந்தக் காலத்திலே இங்கே ஆஸ்பத்திரிகளைக் கொண்டுவந்து வைத்தார்கள்.



1974 மார்ச் 18] [திரு. என். கே. பழனிசாமி]

அமெரிக்கா, ஆஸ்திரேலியா நாடுகளிலே எல்லாம் ஹெல்த் இன்ஷ்யூரன்ஸ் ஸ்கீம் இருக்கிறது, பிரிட்டனிலே நேஷனல் ஹெல்த் சர்வீஸ் இருக்கிறது. சோஷலிஸ நாடுகளிலே வாலண்டரி சோஷியல் சர்வீஸ் என்று வைத்து இருக்கிறார்கள். இந்த முறைகளிலே எந்த முறை நம்முடைய நாட்டிற்குத் தகுந்தது என்பதைப் பரிசீலித்துப் பார்த்து நடவடிக்கை எடுத்திருக்கிறார்களா என்றால் இல்லை.

உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமானால் அடையாறிலே வாலண்டரி ஹெல்த் சென்டர் இருக்கிறது. மாதம் ஒன்றுக்கு டாக்டருடைய வருமானத்தில் 1 சதவீதம் 2 சதவீதம் என்று கலெக்ட் பண்ணி, அங்கே எக்விப்மெண்ட்ஸ் வாங்கி வைத்திருக்கிறார்கள், ஜனங்களிடத்திலே டொனேஷன் வாங்கி செய்து வருகிறார்கள். குழந்தை கர்ப்பத்தில் இருக்கும்பொழுதிலிருந்து பிறந்து வளர்ந்து இறக்கின்ற வரையில் வைத்தியம் செய்யப்படுகிறது. அதற்கு டோட்டல் அல்லது காம்ப்ரிஹென்ஸிவ் ஸ்கீம் என்று பெயர். சர்க்கார் அதற்கு ஆதரவு கொடுக்க வேண்டும். லட்சுமணசாமி முதலியார் கமிட்டி அறிக்கையிலே கூட அதைப் பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது, சர்க்கார் அதற்கு ஆதரவு கொடுக்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. கேட்டால், குஜராத்திலே, பஞ்சாப்பிலே எல்லாம் அம்மாதிரியான சொஸைட்டிகள் மோசமாக நடக்கின்றன என்று சொல்லலாம், காரணம் அதற்கு சர்க்கார் ஆதரவு கொடுக்காததுதான்.

இம்மாதிரி வாலண்டரி ஹெல்த் சர்வீஸ்களை வைத்தால் பெரும்பாலும் தூரத்திலேயிருக்கின்ற ஜனங்களுக்கும் அது பிரயோஜனமாக இருக்கும். இப்போதிருக்கக்கூடிய வைத்தியமுறை நோய்க்குத்தான் வைத்தியம், காரணத்திற்காக அல்ல. அதுதான் டிபெக்ட். இப்பொழுது வறுமை இருக்கிறது, கஷ்டம் இருக்கிறது. வறுமைதான் பல வியாதிகளுக்குக் காரணமாக இருக்கிறது. ஆகவே அவரவர்கள் வசதிக்குத் தகுந்தபடி எந்த அளவிற்கு சத்துணவு கொடுக்க வேண்டும் என்பதைப் பார்க்க வேண்டும். நோய் வாராமல் இருப்பதற்கான முறைகளைப்பற்றி ஒன்றும் கவனிப்பதில்லை. நோய் ஏற்பட்டதற்குப் பிறகு அதைப் போக்குவதற்குத்தான் நம்முடைய திட்டங்கள் இருக்கின்றன. வரக்கூடிய ஆண்டுகளிலாவது பிரிவெண்டிவ் மெடிஸன்ஸ் என்ற முறையிலே அவற்றிற்கு முக்கியத்துவம் கொடுத்து திட்டங்களை நிறைவேற்றினால் செலவைக் குறைக்கலாம், நோய் வராமலே தடுத்துவிடலாம். கிராமப்புறங்களிலே ஆரிய வைத்தியம் என்று அந்தக் காலத்திலே இருந்தது.

அதேபோன்று யூனானி வைத்தியம் என்று முகம்மதியர்கள் ஆண்ட காலத்திலே இருந்தது. நம்முடைய தமிழர்கள் ஆண்ட காலத்திலே சித்த வைத்தியம் கொடுக்கப்பட்டது, ஹோமியோபதி வைத்தியம் என்று வந்தது. ஹோமியோபதி வைத்தியத்திலே நல்ல மருந்துகள் இருக்கின்றன. ஒவ்வொரு காலத்திலேயும் ஒவ்வொரு வைத்தியத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வந்தது. ஒரு பச்சிலையை அரைத்துப் போட்டால் வலி நின்று விடுகிறது என்று சொல்கிறார்கள், அப்படிப்பட்ட மருந்துகள் எல்லாம் இருந்திருக்கின்றன.

ரஷ்யா போன்ற நாடுகளிலே ஒரு ஆபரேஷன் நடைபெற்றால் உடனே நடக்க ஆரம்பித்துவிடுகிறார்கள். ஒரு இடத்திலே பிரெய்ன் ஆப்ரேஷன் மயக்க மருந்து இல்லாமலேயே நடத்தி வெற்றிகரமாக முடித்திருக்கிறார்கள்.

இந்த அரசாங்கம் ஹோமியோபதிமுறைக்கு ஆதரவு கொடுப்பதற்காகப் பாராட்டுகிறேன். அதற்காக 3 லட்சம் ரூபாய்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதிகமாக ஒதுக்க வேண்டும். அது மட்டுமல்ல, சென்ட்ரல் ஆக்ட் இருக்கிறது. அதனால் சரியாக இம்ப்ளிமெண்ட் பண்ண முடியவில்லை என்று சொல்கிறார்கள். கல்கத்தாவிலே பல கம்பெனிகள் அந்த மருந்துகளைச் செய்கின்றன என்பது மட்டுமல்ல, பயன்படுத்துகிறார்கள். ஆகவே மத்திய சர்க்கார் சட்டம் இருந்தாலும் இதை அமல்படுத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அலோபதிமுறையிலே படித்தவர்கள், அவர்கள் படித்த முறைதான் சிறந்தது, மற்றவையெல்லாம் சரியல்ல என்று சொல்லக்கூடாது. எல்லா வைத்திய முறைகளும் பரிசீலித்து சர்க்கார் ஆராய்ச்சி செய்து நடவடிக்கை எடுத்து கொள்ளவேண்டும்.

இன்றைக்கு இங்கே இருக்கின்ற முறையை எடுத்துக் கொண்டால் அமெரிக்காவிலே 50 ஆண்டுகளுக்கு முன்னாலே இருந்ததுதான் இன்றைக்கு இருக்கிறது என்று சொல்லலாம். அண்டர் கிராஜுவேட்டுக்குச் சொல்லிக் கொடுப்பதுதான் இன்றைக்கு இங்கே கிராஜுவேட்டுக்குச் சொல்லிக் கொடுக்கப்படுகிறது. இது ஸ்டாண்டர்டு என்று சொல்வது சரியல்ல.

ஒரு மாணவன் எம்.பி., பி.எஸ். 5 வருடம் படித்துவிட்டு வருகிறபொழுது டாக்டர் என்று சொல்லிவிட முடியாது. பேஸிக் சையன்டிஸ்ட் என்றுதான் சொல்ல வேண்டும். டாக்டராக ஆவதற்கு பிரைவேட் பிராக்டிஸ் வேண்டும். படித்துவிட்டு வெளியே வந்தவுடனே பிரைவேட் பிராக்டிஸ் கிடைத்து விடாது. ஆகவே தான் பிரிட்டிஷ் மெடிகல் கவுன்சில் டாட் கமிட்டி என்ற கமிட்டி அறிக்கையில் சொல்லியிருக்கிறார்கள். அண்டர்கிராஜுவேட்டாக இருக்கும்பொழுதே பிரைவேட் பிராக்டிஸ் அவர்களுக்கு இருக்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது.

[பிற்பகல் 12–30]

அதுமட்டுமல்லாமல், எம்.டி. போன்றவர்களுக்குத் தனிப் பிரிவு. முன்பு மெடிசனுக்கு மட்டும் இருந்தது. இப்பொழுது கார்டியாலஜி, நியூராலஜி என்று தனித் தனியாக எம்.டி. போடுவதாகச் சொல்லப்படுகிறது. இம்மாதிரி தனித்தனி ஜாதியாகப் பிரித்து பண வருமானத்திற்காகச் செய்யப்படுவது சரியல்ல. அண்டர் கிராஜுவேட்டாக இருக்கும்பொழுது நியூராலஜி பிரியமா, கார்டியாலஜி பிரியமா அல்லது மெடிசனில் பிரியமா என்று கேட்டு அதில் நிபுணத்துவத்தைக் கொடுக்க வேண்டும். அமெரிக்காவில் எம்.டி. எல்லோரும்தான். தனித்தனியாக எம்.டி. பிரிவு அங்கே கிடையாது.

ஆண்டு ஒன்றுக்கு 1,500 பேர்களுக்கு மேல் பாஸ் செய்கிறார்கள். ஆனால் அவர்கள் கிராமங்களுக்குப் போவதில்லை. கிராமத்திற்குப் போவதென்றால் பயம். அவர்கள் படிக்கும்பொழுது அவர்களுக்கு "தியரிடிக்கல்





எக்ஸ்பீரியன்ஸ்"தான். பிராக்டிக்கல் கிடையாது. டாக்டர்கள் டெமான்ஸ்ட்ரேஷன் செய்யும்பொழுது கண்ணால் பார்க்கலாமே தவிர நேரடியாக எடுத்து ஒன்றும் செய்ய முடியாது. இம்மாதிரி முறை இருப்பதால்தான் மாணவர்கள் படித்தவுடன் சரியாக வேலை செய்ய முடிவதில்லை.

ஏன் கிராமங்களுக்குப் போக மறுக்கிறார்கள்? 100 ரூபாய் தருகிறேன் என்றாலும் போக மறுக்கிறார்கள். அவர்களுக்கு ஜாப் இன்டரஸ்ட் கிடையாது. பணம் திரட்டுவதில்தான் இன்ட்ரஸ்ட். இதுபற்றி நான் சர்க்காருக்கு ஒரு யோசனை கூற விரும்புகிறேன். பிரைவேட் டாக்டராக இருந்தால் சர்க்காரே கட்டிடம் கட்டிக்கொடுத்து, எக்விப்மெண்ட்ஸ் வைத்துக் கொடுத்து, 3 மணி நேரம், 4 மணி நேரம் அவர்கள் வைத்தியம் செய்யும் முறையில் அங்குள்ள ஜனங்களைப் பதிவு செய்து தேவையானபொழுது வைத்தியம் செய்ய ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டும். அதில் வரும் வருமானத்தில் சர்க்காருக்கு ஒரு பங்கும் அந்த டாக்டர்களுக்கு ஒரு பங்கும் இருக்கும் முறையில் செய்ய வேண்டும்.

1870-ம் ஆண்டில் நிபுணர்களை வெளிநாட்டிலிருந்து கொண்டு வந்து நிபுணத்துவ முறையை மாணவர்களுக்கு சொல்லிக் கொடுத்திருக்கிறார்கள் ஒரு நாட்டில். ஆனால் இங்கே படிக்கின்ற மாணவர்களுக்கு ஸ்காலர்ஷிப் போன்ற சலுகைகளைக் கொடுக்கிறோம். ஒவ்வொருவருக்கும் 50,000 ரூபாய் வரையில் மாணவனுக்குச் செலவு செய்கிறோம். அது ஜனங்களின் வரிப்பணம். இவர்கள் படித்துவிட்டு வெளிநாடுகளுக்குப் போகிறார்கள். அங்குள்ள கட்டிடங்களையும், எக்விப்மெண்டுகளையும், வருமானத்தையும் பார்த்தவுடன் அவர்களுக்கு இங்கே வந்து தங்குவதற்கு இஷ்டமிருப்பதில்லை. அவர்கள் இங்கே வந்தாலும்கூட மீண்டும் அமெரிக்காவிற்கோ பிரிட்டனுக்கோ போக விரும்புகிறார்கள். அந்த நிலையை மாற்றும் முறையில் இங்கேயே அந்த நிபுணத்துவம் உள்ளவர்களை அழைத்து, இந்த நாட்டின் சூழ்நிலைப்படி சொல்லிக்கொடுத்தால் இந்த "பிரெய்ன் ட்ரெயின்" தடுக்கப்பட முடியும். வெளிநாட்டுக்குச் செல்வதைத் தடுக்க முடியும்.

ஜி.எச்.-ல் கார்டியாலஜி, நியூராலஜி போன்றவைகளுக்கு அமெரிக்காவைப் பார்த்து அதை டைப் செய்து பெரிய அளவில் செலவு செய்ய வேண்டுமா? ஜப்பானிலே அப்படி இருக்கிறதா ?

<u>மாண்புமிகு திரு. க. அன்பழகன்</u> : ரஷ்யாவில்கூட இம்மாதிரிதான் இருக்கிறது என்று சொன்னார்கள். அப்படி இல்லை என்று சொன்னால் ஒருவேளை நான் ஆலோசிக்கலாம்.

<u>திரு. என். கே. பழனிசாமி</u> : ஜி.எச்.-ஐ "ரெஃபரல் ஹாஸ்பிடலா"க வைத்துக் கொள்ளலாம்.

<u>திரு. கே.டி.கே. தங்கமணி</u> : ஏற்கனவே போக்குவரத்துத் துறையைப் பொறுத்தவரையில் ஒவ்வொரு நாட்டிலும் உள்ள நிலைமைகளைப்பற்றி அமைச்சாவர்கள் சொன்னார்கள். அதேபோல், இந்த மருத்துவமனைகள் சம்பந்தமாகவும் சிலநாடுகளிலுள்ள அனுபவங்களைப்பற்றி அமைச்சரவர்கள் சொன்னால் உதவியாக இருக்கும்.

திரு. என். கே. பழனிசாமி : ஜி.எச்.சை "ரெஃபரல் ஹாஸ்பிடலாக" வைத்துக் கொள்ளலாம். வயிற்றுவலி, காய்ச்சல் போன்றவைகளுக்கு வயபிள் யூனிட் வைத்தால் போதும். முக்கிய கேஸ்களுக்கு மட்டும் ஜி.எச்சை வைத்துக் கொள்ளலாம்.

ஜி.எச்.-ல் என்.ஜி.ஓ.வாக இருந்தால், "அக்ரோமைஸின் காப்சூல்'க்கு வெளியிலே 1 ரூபாய் 30 காசு ஆகிறது. ஆனால் ஹாஸ்பிடலிலே 70 காசுக்குக் கிடைக்கிறது. மோசமான மருந்து. எவ்வளவு லோவாக கொட்டேஷன் வருகிறதோ அதை வாங்கிப்போடுகிறார்கள். ஒரு பிரிஸ்கிரிப்ஷன் கொடுத்தால் பார்மசிஸ்டுக்குப் போக வேண்டும். ஆர்.எம்.ஓ.விற்குப் போக வேண்டும். மறுபடியும் இப்படித் திரும்பத் திரும்பப் போக வேண்டும். இப்படி பத்து நாட்களானால் பேஷண்ட் செத்துப் போய்விடுவார். ஆகவே, நல்லமுறையில் மருந்தை வைக்க வேண்டும். அப்படியில்லையென்றால் 10 நாட்களுக்கு இருக்க வேண்டிய பேஷண்ட் 20 நாட்கள் இருக்கவேண்டிய நிலை ஏற்படும். அதனால் டாக்டர்களும் சர்வீஸும் வீண், நர்சுகளின் சர்வீசும் வீண், பால் முட்டை இறைச்சி போன்றவைகளும் வீண். எனவே, இந்த முறையை மாற்ற வேண்டுமென்று கேட்டு முடித்துகொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த அவையை 1½ மணிக்கு மேல் நேரம் எடுத்துக்கொண்டு காலையிலேயே முடித்து விடலாம் என்று முடிவாகி இருக்கிறது. எனவே இனி, உறுப்பினர்கள் 5 நிமிஷங்கள்தான் எடுத்துக் கொள்ள வேண்டும்.

* திரு. நா. பழனிசாமி: பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரவர்கள் சமர்ப்பித்திருக்கின்ற இந்த 1974–75-ஆம் ஆண்டுக்கான நலத்துறை மானியத்தின்மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

வருங்காலத்திலே சரித்திரத்திலே இடம்பெறத் தக்க வகையில் நல்ல பல காரியங்களை நலத்துறை அமைச்சரவர்கள் இதன் மூலம் செய்து வருகிறார்கள். கண்ணொளி வழங்கும் திட்டத்தையும், தொழுநோய்ப் பிச்சைகாரர்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் திட்டத்தையும், குடிநீர் வடிகால் வாரியம் என்று அமைத்து இந்த நாட்டு மக்களுக்கு குடிதண்ணீர் வழங்கும் திட்டத்தையும் இதுபோன்ற நல்ல பல திட்டங்களையும் செயல்படுத்தி வருவதே இதற்குச் சான்றாகும்.

நமது தமிழ் மாநிலத்திலேயுள்ள 374 ஒன்றியங்களிலே வாழ்கின்ற 70 சதவீத மக்களுக்கு வைத்தியம் அளித்து வருவது சாதாரண காரியம் அல்ல. ஒன்றியத்திற்கொரு மருத்துவமனை ஏற்படுத்தி இதன் மூலம் கிராமங்களெல்லாம் இணைக்கப்பட்டு அந்த கிராமங்களுக்கு வைத்திய வசதி நல்லமுறையில் கிடைத்து வருகிறது என்றாலும் இன்னும் ஒவ்வொரு ஒன்றியத்திலும் மேலும் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்று அதிகமாக்குவதன்மூலம் இந்த நாட்டிலேயுள்ள அத்தனைபேருக்கும் வைத்திய வசதி கிடைக்கச் செய்ய முடியும் . இந்தத் திட்டம் நிறைவேற விரைவில் மத்திய சர்க்காரை அணுகுவார்கள் என்று நாங்கள் நம்புகிறோம்.



ஒன்றியங்களைச் சேர்ந்த மருத்துவமனைகளை அரசாங்கமே ஏற்று நடத்த முன்வரும் திட்டம் மிகச் சிறந்த திட்டமாகும். வருடத்திற்கு 4,000 ரூபாய், 5,000 ரூபாய் என்று குறைந்த பணத்தில் செலவு செய்து மருத்துவ வசதி அளிக்க முடியாத ஒன்றியங்களுக்கு, இன்றைக்கு அமைச்சரவர்கள் கொண்டு வந்துள்ள திட்டம் ஒரு அருமருந்தாகும். அரசாங்கமே இந்த மருத்துவமனைகளை எடுத்துக் கொள்வதால மிக நல்லமுறையில் செயல்படப் பொருளாதார வசதி ஏற்படுகிறது. சென்ற ஆண்டு 17 மருத்துவமனைகளை ஒன்றியங்களிலிருந்து அமைச்சரவர்கள் எடுத்துக் கொண்டு, அதனுடைய சுமையைக் குறைததாாகள. இந்த ஆண்டு 40-க்கு மேற்பட்ட மருத்துவமனைகளை அரசாங்கம் எடுக்க இருக்கிறது என்பதை அறியும்பொழுது எங்களுக்கு அது பெருமகிழ்ச்சியைத் தருகிறது. என்னுடைய தொகுதியில், பொங்கலூரிலுள்ள ஒன்றிய மருத்துவமனையை இந்த ஆண்டு அமைச்சரவர்கள் அரசாங்கம் மூலம் நடைபெற, அதை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்0றேன்.

மேலும் நலத்துறையின்கீழ் வரும் குடிநீர் வடிகால் வாரியத் திட்டம் நல்லமுறையில் செயல்பட்டு வருகிறது என்பதற்குப் பல உதாரணங்களைக் கூறலாம், பல்லடம் பகுதி தமிழகத்திலேயே மிகவும் வறண்ட பகுதி. பல்லடம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த 115 ஊர்களில் 85 ஊர்களுக்கு மேல் குடிதண்ணீர் வழங்கி அந்தத் துறையிலே நல்லதொரு முன்னேற்றத்தைச் செய்திருக்கிறார்கள். ஆகவே, அந்த வாரியத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் தாராபுரம் வட்டம், சடையாபாளையம் கிராமம் ஒட்டபாளையம் என்ற சிற்றூரில் மகப்பேறு நிலையம் ஒன்று கட்டப்பட்டு மூன்றாண்டு காலமாகத் திறக்கப்படாமல் இருக்கிறது. விரைவில் அதைத் திறந்து வைத்து வேண்டிய வசதிகளைச் செய்து கொடுத்து மக்களுக்குப் பயன் விரைவில் கிடைக்க ஆவன செய்யும்படி கேட்டுக் கொள்கிறேன்.

இந்த அரசு செய்துவரும் நல்ல காரியங்களை எதிர்க் கட்சிகள் பாராட்டாவிட்டாலும் இந்திய உபகண்டத்தில் இந்த மாநிலம் தலைநிமிர்ந்து நிற்கிறது என்ற கருத்தையாவது ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

*திரு. மணலி. சி. கந்தசாமி: பேரவைத் தலைவரவர்களே, இந்த மானியத்தின்மீது என்னுடைய சில கருத்துக்களைக்கூற விழைகிறேன்.

மாண்புமிகு நல்வாழ்வுத் துறை அமைச்சரவர்கள் இருக்கின்ற பணத்தை வைத்துக்கொண்டு மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும் அளவில் மிகவும் செம்மையாக இந்தத் துறையை நிர்வகித்து வருகிறார்கள் என்பதில் ஆட்சேபணை கிடையாது என்பது திட்டவட்டமாகத் தெரியும். மற்ற மாநிலங்களைவிடச் சிறப்பாக செயல்படுவது மட்டுமல்லாமல் பல்வேறு துறைகளில் முன்னேற முயன்று கொண்டிருக்கிறோம். இன்றைக்கு இந்தத் துறைக்கு ஒதுக்கியிருக்கும் பணம் சராசரியாக ஒரு தமிழனுக்கு 4 ரூபாய் 5 ரூபாய் வரும் என்று தெரிகிறது. அந்தப் பணத்தில்தான்

[திரு. மணலி. சி. கந்தசாமி] [1974 மார்ச் 18

எல்லா விஷயங்களையும் செய்து கொண்டிருக்கிறோம் என்பதை மனதில் கொள்ள வேண்டும்.

இதிலிருந்து மாறவேண்டுமென்றால் துணிவான சில கொள்கைகளை வகுக்கவேண்டுமென்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். சித்த மருத்துவத்தைப்பற்றிச் சொல்லுகிற நேரத்தில் இதையே அழுத்தந் திருத்தமாகச் சொல்லவிரும்புகிறேன். ஆங்கில மருத்துவத்தின் பயனைப் பற்றியோ, அதைப்பயன்படுத்த வேண்டுமென்பது பற்றியோ ஆட்சேபனை கிடையாது. நாம் எந்த அளவுக்கு இப்போது ஏற்பட்டிருக்கக்கூடிய பொருளாதார நெருக்கடியைச் சமாளிக்கப்போகிறோம் என்று பார்க்கும்போது இதை உத்தேசித்தாவது சில எளிய முறைகளைக் கூடுமான வரையில் கைக்கொள்ள வேண்டுமென்ற நிலையில் சித்த மருத்துவத்தைப் பரப்பியாகவேண்டுமென்ற கருத்தோட்டத்தோடு கூறுகிறேன். தமிழ்நாட்டுக்குப் புத்துணர்ச்சி ஏற்பட வேண்டும்; தமிழ் மக்கள் புனர்வாழ்வு பெற வேண்டுமென்று பேசுகிறோம். எல்லாத் துறைகளிலும் இத்தகைய கண்ணோட்டம் வளர்ந்திருக்கிறது. வைத்தியத் துறையில் ஏனோ இந்தக் கண்ணோட்டம் இல்லையென்று பார்க்கும்போது வருந்திடவேண்டியிருக்கிறது.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சித்த வைத்தியத்திடம் அனுதாபம் உள்ளவர்கள்; அக்கறை உள்ளவர்கள் என்பதில் ஆட்சேபணை இல்லை. ஆனால் அந்தக் கருத்தோடு செயலாற்றுகிற நேரத்தில் செயலாற்ற முடியவில்லை. துணிச்சலாக இறங்கக்கூடிய அளவுக்குச் சுற்றுச் சூழ்நிலை இடம் கொடுக்க வில்லை என்று கருதுகிறேன். ஆங்கில மருத்துவத்திற்கு 28 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். சித்த வைத்தியத்திற்கு 38 லட்சம் ரூபாய்தான். நூற்றில் ஒரு சதவீதந்தான் இதற்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதற்குள்ளே திறமையோடு ஆஸ்பத்திரி, கல்லூரி எல்லாம் நடக்க வேண்டுமென்று சொன்னால் எப்படி இந்த வைத்தியம் முன்னேற முடியும்? சித்த வைத்தியத்தை மேனாட்டு ஆராய்ச்சியாளர்கள் ஏற்க மறுக்கிறார்கள் என்று அன்று சொன்னார்கள். அந்த எண்ணத்தைக் கொண்டிருந்தால் சித்த மருத்துவத்தை ஒருநாளும் அபிவிருத்தி செய்ய முடியாது. நம்முடைய நாட்டில் இருக்கும் வல்லுநர்கள் சித்த வைத்தியத்தின் அருமையை உணர்ந்திருக்கிறார்கள். அனுபவத்தில் கண்ட உண்மை. இதை அமலுக்குக் கொண்டு வர எந்த அளவுக்குத் துணிச்சலாகச் செயல்படுகிறோமோ அந்த அளவுக்கு ஆங்கில மருத்துவத்திற்கு இருக்கக்கூடிய நிர்ப்பந்தத்தை ஓரளவு தணிக்க முடியும். ஆஸ்பத்திரியில் கூட்டம் அதிகம் என்றால் கூட்டத்தை வேறு பக்கத்திற்குத் திருப்பும் விதத்தில் பலவேறு வைத்திய முறைகளை உருவாக்க வேண்டும்.

என்னைப்பற்றிப் பலவிதமாக நினைக்கலாம். பத்தாம்பசலி என்று நினைக்கலாம். சித்த மருத்துவத்தில் நானே மருந்துகளைச் செய்து கையாண்டிருக்கிறேன். பல அனுபவ உண்மைகள் (குறுக்கிடு) விளம்பரம் பண்ணவில்லை, வியாபாரம் செய்யவில்லை.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: ஃபீஸ் உண்டா?

திரு மணலி சி. கந்தசாமி: உங்களைப் போன்றவர்களுக்கு நிச்சயம் ஃபீஸ் கிடையாது.



1974 மார்ச் 18] [திரு. மணலி கந்தசாமி]

இன்றைக்கு ஒரு பெரிய நோய் ஏற்பட்டிருக்கிறது. பணப் பைதியத்தைத் தணிக்க ஆராய்ச்சி செய்தால் நல்லது. மனிதாபிமான எண்ணமே இல்லை. ஒவ்வொரு மருத்துவ மாணவனும் சமுதாயச் செலவில் வளர்க்கப்படுகிறான். சில லட்சம் ரூபாயை அரசு செலவு செய்கிறது. சமுதாயப் பணத்தைப் பெற்று டாக்டர்களாக ஆஸ்பத்திரியில் உட்காருகிறவர்கள் தன்னைச் சூழ்ந்திருக்கும் மனித சமுதாயத்திற்குத் தொண்டாற்றும் மனோ பக்குவத்தைப் பெற வேண்டும். ஆனால் முடிந்தவரையில் சம்பாதிக்கும் மனோ பாவந்தான் இருக்கிறது. கிட்டத்தட்ட அது ஒரு நோய் என்று குறிப்பாகச் சொல்லலாம்.

இந்த மனநிலை மாற டாக்டர்கள்தான் கிருபாகடாட்சம் செய்யவேண்டும். அவர்களை எதிர்த்து வாழ முடியாது. அவர்களிடம் நானே போனால்கூட என்ன கருதுவார்களோ? பல டாக்டர்கள் சிவில் அசிஸ்டெண்ட் சர்ஜன்கள் என்ற முறையில் ஆயிரம் ரூபாய் சம்பளம் வாங்குகிறார்கள். அதற்கு மேலே இருக்கக்கூடியவர்களும் இருக்கிறார்கள். மற்றத் துறைகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது இந்தத் துறையில் இருப்பவர்களுக்கு பெரிய அளவுக்கு வருவாய் வருகிறது. சர்க்கார் மருந்துகளை வைத்துக் கொண்டு, சர்க்கார் ஆஸ்பத்திரியை வைத்துக்கொண்டு, சர்க்கார் கட்டடங்களை வைத்துக்கொண்டு வியாபார ரீதியாக நடத்துகிறார்கள் என்றால் அது நல்லதல்ல.

தமிழ் நாடு சீரழியக்கூடிய போக்கு தென்படுகிறது. காலப் போக்கில் டாக்டர்கள் சமூக சேவை செய்வதற்குப் பதிலாக இப்படியே போய்க் கொண்டிருந்தால் அரசியல்காரர்கள் டாக்டர்களுக்கு எதிராக ஒரு இயக்கமே நடத்தக்கூடிய நிலைமை கூட ஏற்படலாம்; உற்பாதங்கள் ஏற்படலாம், வருந்தத்தக்க விளைவுகள் ஏற்படலாம். ஆகவே, டாக்டர்கள் வெளியே ஒரு உலகம் இருக்கிறது, ஒரு சமுதாயம் இருக்கிறது, சமுதாயத்திற்காக டாக்டர்கள் இருக்கிறார்கள் என்ற நிலையில் டாக்டர்கள் தொண்டாற்ற முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சித்த வைத்தியத்தைப் பொறுத்தவரை பலவிதமான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். உயர்ந்த மருந்துகளைச் செய்யக் கூடிய மருந்து சாலைகளுக்கு லைசென்ஸுகள் வழங்கப்பட்டிருக்கின்றன. அவர்கள் எல்லாம் ஓரளவு சித்த வைத்தியம் படித்திருக்கிறார்களே தவிர நல்ல மருந்துகளைச் செய்யக்கூடியவர்கள் என்று சொல்ல முடியாது. அடையாறில் இருப்பதுபோல் ஒவ்வொரு ஜில்லாவிலும் மருந்து செய்யும் சாலைகள் ஏற்படுத்த முன்வரவேண்டும். செந்தூரங்கள், மெழுகுகள், லேகியங்கள், என பல நோய்களைத் தீர்க்கக்கூடிய மருந்துகள் இருக்கின்றன. இந்த மருந்துகளை சர்க்காருடைய கண்காணிப்பில் இந்திய மருத்துவத் துறை டைரக்டரின் கண்காணிப்பில் செய்வதற்கு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும் இவற்றையெல்லாம் தயாரித்து இந்த மருத்துவர்களையும் பெருக்கினால் ஆஸ்பத்திரிக்கு வரும் கூட்டம் குறையும்.

நிர்வாகத்தைப் பற்றி எடுத்துக் கொண்டால் ஆஸ்பத்திரியில் சிவில் அஸிஸ்டெண்ட் சர்ஜன்கள் இரண்டு மூன்று குமாஸ்தாக்களை வைத்து நிர்வகிக்க வேண்டியிருக்கிறது. பால் கணக்கு, மோர்க் கணக்கு எழுத வேண்டியிருக்கிறது. இதனால் அவர்கள் வைத்தியம் பார்க்க முடியாத

நிலையில் இருக்கிறது. இந்த பொறுப்புகளில் இருந்து அவர்கள் விடுவிக்கப்பட்டு டாக்டர்கள் நோயாளிகளைக் கவனிக்கிற வேலையை மட்டும் செய்வதற்கு வழி செய்ய வேண்டும்.

ஒவ்வொரு ஊரிலும் டாக்டர்களாக இருக்கக்கூடியவர்கள் எப்படி செயல் படுகிறார்கள் என்பதைப்பற்றி அப்போதைக்கப்போது கண்காணிக்க வேண்டும். டாக்டர்கள் சம்பாதிக்கக்கூடிய பணத்தைப் பற்றி கணக்கு கள் கேட்கவேண்டும். பல டாக்டர்கள் கள்ளப் பணம் வைத்திருக்கிறார் கள் என்பதை யாராவது மறுக்க முடியுமா? அப்படி கறுப்புப் பணம் வைத்திருக்கிற டாக்டர்களின் பட்டியலை எடுத்து அவர்கள் பேரில் கடுமை யான நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் தெரி வித்துக் கொள்ள விரும்புகிறேன்.

கலப்படம் செய்பவர்கள் கடுமையான தண்டனைக்கு உள்ளாகும் வகை யில் சட்டங்களை இயற்ற வேண்டும். அப்படி இயற்றி அவர்களை தண்டித்தா லொழிய கலப்படத்தை தடுக்க முடியாது. சில ரூபாய்கள் லாபம் சம்பாதிக்க அவர்கள் செய்யக்கூடிய கலப்படம் பொதுமக்களை எந்த அளவுக்கு பாதிக்கிறது என்று எண்ணிப்பார்க்கவேண்டும். கலப்படம் செய்யக்கூடிய வியாபாரிகளை நடு ரோட்டில் மக்களுக்கு மத்தியில் இழுத்துச் செல்ல வேண்டும். அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்காமல் அபராதம் விதித்தால் அந்த அபராதத்தை கட்டிவிட்டு அதை "மேக்கப்" செய்ய இன்னும் கொஞ்சம் கலப்படம் செய்து விடுகிறார்கள்.

அடிப்படையில் கிராம வைத்தியத்தைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். இது மிகவும் கவனம் செலுத்தப்படவேண்டியது. இப்போது ஆர்.ஐ.எம். பி-க்கள் ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு ஒரு வருஷத் திற்கு ஒரு முறை ரிப்ரெஷர் கோர்ஸ் நடத்தி புதிதாக எப்படி மருந்துகளை பிரயோகம் செய்வது என்பது பற்றி எல்லாம் பயிற்சி கொடுக்க வேண்டும்.

எனக்கு மாண்புமிகு நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களிடத்தில் ஒரு குறைபாடு. அவர்கள் சித்தவைத்தியத்தையும், ஆயுர்வேதத்தை யும் மாற்றாந்தாய் மனப்பான்மையோடு தான் நடத்துகிறார்கள் என்று சொல்வேன். கேரளத்தைப்போல், வங்கத்தைப்போல், குஜராத்தைப் போல் இங்கு சலுகைகள் கொடுக்கப்படவில்லை. அவர்களுடைய காலத்தில் இனியாவது இவற்றுக்கு முக்கியத்துவம் தரவேண்டும் என்று கூறி என்னு டைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

* THIRU K. M. SUBRAMANIAM: Sir, since there is very little time, I do not want to waste my time in congratulating our Hon. Minister for Health on his new Budget. Suffice it to say that he has presented a good Budget. I stop with that. I do not want to go further.

Sir, I have certain personal problems. One of the most important problem is this. There is one Infectious Diseases





Hospital in Tondiarpet in Madras. For the last 15 years, there was a proposal to have another Infectious Diseases Hospital in the South Madras. Nothing has taken place except planning and correspondence. Utlimately I do not know what has been done to that proposa.. The fact is this. If anybody gets affected by Cholera in Guindy, one has to telephone to the Infectious Diseases Hospital at Tondiarpet and get the van and before the patient reaches Tondiarpet he dies on the way. That is the main reason for having another hospital in the South Madras.

Sir, there was also another proposal to have a hospital in the South under the Southern Madras Neighbourhood Scheme. I do not know what has happened to that scheme. I know one reason. Under the excuse of paucity of finance, the propsal has been postponed. Under the excuse of 'Gramam' everyone is able to ask for hospital or other facilities from the Government. But unfortunately for members like me and Dr. Hande and Thirumathi Anandanayaki, we are not able to ask under that pretext. For the last 15 years, no new hospital has been constructed in the City of Madras.

The General Hospital is not the hospital for the city people alone, but patients from all the districts in Tamil Nadu and also from Andhra, Kerala and Mysore are coming to the General Hospital for treatment. The Madras Citizens are finding it very difficult because there is only one big hospital in the South of Madras. Lach of finance cannot be an excuse for this. I request that the construction of another big hospital in the South of Madras should be taken up immediately and quickly.

The third point I would like to point out is with regard to preventive medicines. That is one of the important functions of the Madras Corporation or any Panchayat Board. As far as Madras City is concerned, I think in 1942, we had 42 dispensaries In 1974, the number of Divisions has been increased to 120 and it is likely to be increased to 150 Divisions. Now there are only 60 dispensaries.

The amount spent for preventives medicines is very meagre and meagre attention is paid to this aspect. In Madras City, the population is day by day increasing. The pre-natal treatment is very important under preventive medicines. Much

[Thiru K. M. Subramaniam] [1974 மார்ச் 18

interest has not been shown to pre-natal treatment. According to the statistics of the last few years, the pre-natal treatment has considerably gone down.

Then I would like to refer to air pollution. This is a most important aspect. I do not want to dwell upon that because everybody knows about it. Proper attention should be paid to stop air pollution.

So far as Madras City is concerned, there are various important problems. The most important problem is water supply. I am not going to say much about the water-supply. I shall refer to distribution system only. The pipes that have been laid is 20 or 30 years old. Most of them have got corroded. The water flows through corroded water pipes. What happens is this. We get snakes and snails through the water pipes. It is not because of water. It is becuase of corroded pipes. Immediately a detailed scheme should be drawn up to replace the old and corroded pipes to improve the distribution system in Madras City. People are suffering and everybody living in the City of Madras is telling about this.

The mosquito nuisance is increasing in Mambalam and other areas. The main reason is this. The Officers put in charge of this work under Anti-Filaria Scheme are not able to attend to this work properly. There are three Assistant Health Officers to look after the schemes financed by the Government of India. This work has been entrusted to the Assistant Health Officer. How many things can he attend ? He has to look after licensing, he has to look after medicines, he has to look after the scavenging of streets and roads, he has to look after whether the cow sheds are maintained properly and whether the humanbeings are living in a proper sanitary condition and he has to see whether the hotels are run properly. In addition to that this new work has been entrusted to him. Though money has been given by the Government of India for anti-malaria activities, the work has not been....

(The Hon. Speaker sounded the gong.)

One more minute, Sir. Unfortunately mosquitoes are increasing I do not want to blame anybody particularly. The Government should take steps to improve the position.





1974 மார்ச 18] [Thiru K. M. Subramaniam]

As regards preventive medicines, why not the Government think on these lines ? The medicine prices are increasing everyday. Of course, it is not within the control of the State Government. But the levying of sales tax is within the control of the State Government. The State Government can take away the levy of sales tax on medicines. I am talking of ordinary medicines and I am not talking of costly and luxury medicines. Why not the government remove the tax on arishtams and other indian medicines. If it is done, we will be able to get medicines at lesser price and the health service in the City of Madras will be better.

Anybody living in Mambalam knows that there is a Mosquito Canal. This canal is around Mambalam and is a breeding centre for mosquitoes. From 1942 onwards I am a Councillor in the Madras Corporation. I am rather ashamed to say that nothing has been done to cover that canal. I hope the Chairman of the Slum Clearance Board is attempting to do something in this direction. Unless the canal is completely closed, the mosquito problem cannot be solved in Mambalam. I hope...................

(The Hon. Speaker sounded the gong and called Thiru M. R. Kannan.)

*திரு. எம். ஆர். கண்ணன்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையை ஆதரித்து என்னுடைய சில எண்ணங்களைச் சொல்ல விழைகிறேன்.

நல்வாழ்வுத் துறைக்கு ஏறக்குறைய இருபது ஆண்டு காங்கிரஸ் ஆட்சியின் கடைசி ஆண்டில் ரூபாய் 16 கோடி அளவில்தான் செலவு செய்யப்பட்டு வந்தது. இந்த ஆண்டு அதாவது 1974–75-க்கு ஏறக்குறைய ஐம்பது கோடி ரூபாய் அளவில் பணம் ஒதுக்கப்பட்டு அத்துறை நல்லமுறையில் பணியாற்றிவருகிறது. மக்களுக்கு அடிப்படையான தேவைகளில் சுகாதாரமும் ஒன்று. அதற்காக இந்த அரசு இந்த அளவிற்கு பணத்தைச் செலவு செய்வது பாராட்டுக்குரிய ஒன்றாகும். ஓட்டேரியில் டி.பி. ஹாஸ்பிட்டல் இருக்கிறது. அங்குள்ள புதிய கட்டடத்திற்கு லிப்ட் வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அதைக் கவனிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஸ்டான்லி ஆஸ்பத்திரி இருக்கும் பகுதி தொழிலாளர்கள் வாழும் பகுதி. அங்கு காசநோயால் பாதிக்கப்பட்டவர்கள் அதிகம். ஆகவே அங்கு அதற்காக ஒரு ப்ளாக் கட்டி அபிவிருத்தி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

[திரு. எம். ஆர். கண்ணன்] [1974 மார்ச் 18

கார்ப்பரேஷன் ஆஸ்பத்திரிகள் நிறைய உள்ளன. ஒவ்வொரு டிவிஷனிலும் ஒன்றும் சிலயிடங்களில் இரண்டு ஹாஸ்பிட்டல்களும் கூட இருக்கின்றன. அவைகள் எல்லாம் மக்களுக்குப் பயன்படுவதில்லை. ஆகவே அவற்றையெல்லாம் சர்க்காரே ஏற்று நல்ல முறையில் ஒவ்வொரு டிவிஷனிலும் ஒவ்வொரு ஹாஸ்பிடல் என்று ஏற்படுத்தி சாதாரண வியாதிகளைத் தீர்ப்பதற்கு வாய்ப்பு ஏற்படுத்திக்கொடுக்கவேண்டும்.

தனியார் மருத்துவமனைகள், சௌகார்ப்பேட்டையில் குஜராத்திகள், சிந்திகள், மார்வாரிகள் இவர்கள் எல்லாம் நல்ல முறையில் ஹாஸ்ப்பிடல்கள் வைத்து நடத்துகிறார்கள். அவர்களுக்கு சர்க்கார் உதவி கொடுக்கக் கூடிய ஒரு வாய்ப்பிருந்தால் அப்படிக் கொடுத்து உதவுவது நல்லதொரு முறையாகும்.

டாக்டர்கள் தனி ப்ராக்டீஸ் செய்வதுபற்றிக் குறிப்பிட்டார்கள். இன்றைய சூழ்நிலையில் அதை நாம் கட்டுப்படுத்தினால் நிச்சயமாக பலர் பாதிக்கப்படுவார்கள். பெரும் பணக்காரர்கள், கோடீஸ்வரர்கள் பணம் கொடுத்து வைத்தியம் செய்து கொள்வதில் தவறில்லை. டாக்டர்கள் தாங்கள் பணியாற்றவேண்டிய காலத்தில், எட்டு அல்லது பத்து மணிநேரம் ஆஸ்பத்திரிகளில் இருந்து கொண்டு ஏழை மக்களுக்கு நல்ல முறையில் பணி செய்துவிட்டு பின்னர் தங்கள் சொந்த முறையில் வைத்தியம் செய்து பணம் சம்பாதித்துக்கொள்ளலாம். ஆனால் சர்க்கார் பணி செய்யும்போது பொதுமக்களுக்கு எந்த ஒரு குறையும் ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். அவர்களுக்கு நல்ல முறையில் மருத்துவ வசதி அளிக்கவேண்டும்.

மணலி அவர்கள் குறிப்பிட்டதுபோல் அவர்கள் சர்வீஸ் கருதி பணியாற்றவேண்டும், கொள்ளையடிப்பதை வேலையாக வைத்துக்கொள்ளக் கூடாது. அதற்குக் காரணம், சொத்து உரிமைதான். அதுதான் அடிப்படைக் காரணம். ஆகவே, சொத்துரிமை ஒழிந்தாலொழிய எத்தனை சட்டங்களைப் போட்டாலும் அல்லது எவ்வளவு "ஆன்டிகரப்ஷன்" முறைகள் வைத்தாலும் அதைத் தடைப்படுத்தமுடியாது. ஆகவே, சொத்துரிமை ஒழிந்த சமுதாயம் ஏற்பட்டால்தான் ஒவ்வொருவரிடமும் உண்மையான சர்வீஸ் மனப்பான்மை வளரும். ஏனென்றால், அவர்களுக்கு சேர்த்து வைக்கும் எண்ணம் வராது. அதுவரையிலும் தனியார் வைத்தியம் தொடர்ந்து நடத்துவது தேவை என்று கருதுகிறேன்.

(பிற்பகல் 1–00)

சில மருத்துவ மனைகளில் கோவில்கள் இருக்கின்றன. மத இயல்பு என்பது தனி விஷயம். இவற்றை பொது இடத்தில் வைத்து இருப்பது சரியல்ல. ஸ்டான்லி மருத்துவ மனையில் ஓர் தர்கா இருக்கிறது. அந்த தர்க்காவை அங்கே அமைத்து இருப்பதால் ஆயிரக்கணக்கான பேர் வந்து போய்க்கொண்டிருக்கிறார்கள். அங்கே பல பேஷண்ட்கள் இருக்கிறார்கள். இதனால் அவர்கள் பாதிக்கப்படுகிறார்கள். இது கடவுளுக்கு அப்பாற்பட்ட பிரச்சினை. ஒரு பொது இடத்தில், அதுவும் ஒரு மருத்துவ மனையில் இப்படிப்பட்ட கோவில்கள் இருப்பது தவறு என்று சொல்லிக்கொள்கிறேன்.



1974 மார்ச் 18] [திரு. எம். ஆர். கண்ணன்]

மருத்துவ மனைகளுக்கு அட்வைசரி கமிட்டிகள் என்று அமைத்து இருக்கிறார்கள். முன்பெல்லாம் அந்தக் குழுக்களுக்கு மெம்பர்களாக பெரிய பெரிய கோடீஸ்வரர்கள் இருப்பார்கள். அவர்கள் கார் வைத்து இருப்பார்கள். ஆனால் இப்போது ஜனநாயகத்தில் ஏழைபாழைகள் கூட மெம்பர்களாக வருகிறார்கள். ஆகவே, அந்த மெம்பர்களுக்கு மீட்டிங்குக்குச் சென்றால் ரூ. 10-வது ஒரு மீட்டிங்குக்கு கொடுக்கவேண்டுமென்று அரசு உத்திரவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சில ஆண்டுகளுக்கு முன்பு எம்.பி.பி.எஸ். அட்மிஷன் விஷயத்தில் சரியாகவோ தவறாகவோ ஒரு லஞ்சம் என்ற பிரச்சினையைக் கிளப்பினார்கள். 2—3 ஆண்டுகளாக அந்த பிரச்சினை இல்லை. இரண்டு மூன்று ஆண்டுகளாகப் பொது மக்கள் கூட அதுகுறித்து ஒன்றும் சந்தேகத்திற்கிடமாகப் பேசவில்லை.

இப்போது போலி மருந்துகள் தயாரிப்பு அதிகமாகியிருக்கிறது. மருந்துகள் உயிர் காக்க வேண்டியவை. ஆகவே, போலி மருந்துகளை யார் தயார் செய்தாலும் அவர்கள் மீது அரசாங்கம் கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டும், அப்படிக் கடுமையாக பனிஷ்மெண்ட் கொடுத்தால் தான் அதை ஒடுக்க முடியும் என்று கூறி இந்த அளவில் பேசுவதற்கு அனுமதி அளித்ததற்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவரவர்களே, இந்த முக்கியமான கோரிக்கையிலே எங்கள் கட்சியின் சார்பாகக் கொடுத்து இருக்கும் வெட்டுத் தீர்மானங்களை ஆதரித்து ஒரிரு கருத்துக்களைச் கூறுவதற்கு விழைகிறேன்.

முதலில் மாண்புமிகு அமைச்சரவர்கள் முக்கியமான ஒரு பிரச்சினை பற்றி இந்த மன்றத்தில் கூறினார்கள். இப்போது மருத்துவக் கல்லூரிகளில் இருக்கும் மாணவர்களின் எண்ணிக்கையைக் குறைக்க வேண்டுமென்ற கருத்தை மத்திய அரசாங்கமும், அதேமாதிரி இந்தியன் மெடிகல் கவுன்சிலும் வற்புறுத்தி வருவதாகக் கருத்து கூறினார்கள். நாங்கள் ஏன் குறைக்க விரும்புகிறோம் என்றால், இன்று மருத்துவத் துறையில் ஈடுபட்டு இருக்கும் அத்தனை டாக்டர்களுக்கும் வேலை கொடுக்க முடியாது என்ற கருத்தைக் கூறினார்கள். வேண்டுமானால், செல்ப்—எம்பிளாய்மெண்ட் என்ற முறையில் அவர்களுக்கு வேலை கொடுக்க முடியும். ஆனால் இன்றைக்கு இருக்கும் எண்ணிக்கையைக் குறைப்பதற்கு நாம் ஒப்புக்கொள்வதற்கு இல்லை என்று நான் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: வேலை கிடைக்கவில்லை என்ற காரணத்திற்காக மட்டும் டாக்டர் படிப்புக்கு மாணவர்களைச் சேர்ப்பதைக் குறைக்க வேண்டுமென்று அரசு சார்பில் ஆலோசனை சொல்லவில்லை. வேலை அவர்களே தேடிக்கொள்ள வேண்டும் என்ற பொதுக் கொள்கையை ஏற்றுக் கொண்டிருக்கிறது. ஆனால் மாணவர்களுக்குக் கிடைக்க வேண்டிய பயிற்சி போதுமான அளவுக்குக் கிடைக்காத நிலை இருக்கிறது

1974 மார்ச் 18] [திரு. க. அன்பழகன்]

ஆசிரியர்கள் மாணவர்கள் விகிதாச்சாரம் எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது. ஒரு ஆசிரியருக்கு க்ளினிகல் ஸ்டடீஸ் (Clinical studies) 5, 6 மாணவர்களுக்குத்தான் சொல்லிக் கொடுக்க முடியும் என்றால் இப்போது 10 மாணவர்களுக்குப் பயிற்சி தரவேண்டிய நிலை இருக்கிறது. எனவே அந்த எண்ணிக்கை குறைகிற அளவிற்கு ஆலோசனை தரப் பட்டிருக்கிறது. 5 ஆண்டுகாலமாக இது சொல்லப்படுகிறது. மேலும் அதை ஒத்திவைக்க முடியவில்லை என்பதால் இப்போது உங்கள் முன் வைத்துள்ளோம்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : அமைச்சரின் விளக்கத்திற்கு நன்றியுடையவனாக இருக்கிறேன்.

இந்த மாணவர்களுக்கு அகில இந்திய வளர்ச்சியில் தடைகள் கொஞ்சம் இருக்கிறது. காரணம் அந்தப் பயிற்சிக்கு அதிக ஆசிரியர்கள், பேராசிரியர்கள் நியமிப்பது சாலச்சிறந்ததாக இருக்கும் என்ற கருத்தைக் கூற விரும்புகிறேன். இன்று ஒருவேளை தமிழகத்தில் இருக்கும் டாக்டர்களின் எண்ணிக்கை அதிகமாக இருந்தாலும் மற்ற மாநிலங்களுக்குச் சென்று அவர்கள் வேலை தேடிக்கொள்வதில் எந்தவிதமான கஷ்டமும் இல்லை.

தமிழகத்திலுள்ள நிதி மற்ற மாநிலங்களில் பயன்பட வேண்டிய அளவுக்குச் செய்ய வேண்டுமா என்று பிரச்னையை எழுப்பலாம். ஆனால், என்னைப் பொறுத்த வரையில் இந்தியா என்பதை ஒன்றாக கவனிக்க வேண்டும். இன்று டாக்டர்களைப் பொறுத்தவரையில் பலரும் கனடா, இங்கிலாந்து, ஏன், அமெரிக்கா, மிடில் ஈஸ்ட் போன்ற நாடுகளுக்குச் சென்று இருக்கிறார்கள். அவர்களுக்கு அங்கே வருவாய் அதிகம் கிடைக்கிறது என்பது நாம் எல்லோரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு உண்மையாக இருக்கிறது. ஆனால் இந்தமாதிரியான நிலையில் ப்ரெயின் ட்ரெயின்" ஏற்படுகிறது என்று வல்லுநர்கள் கூறிக்கொண்டிருக்கிறார்கள். இது இந்தியப் பொருளாதாரத்தை எந்தவிதத்தில் பாதிக்கும் என்பதையும் நாம் கருத்தில் கொள்ள வேண்டும். இன்றைக்கு 1015 மாணவர்கள் டாக்டர் பயிற்சி பெற்று வருகிறார்கள். அதை 825 ஆகக் குறைக்க வேண்டுமென்ற கருத்தை நான் ஏற்றுக்கொள்ளவில்லை. இன்னும் அதிக வசதிகளைச் செய்து, அதை 1015ஆக அப்படியே வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இன்னொரு விஷயத்தையும் கூற வேண்டுமென்று நினைக்கிறேன். இன்று நமது மருத்துவத் துறையிலே குழந்தைகள் பணிகள், சிகிச்சைக்காக அதிகத் தொகைகள் கொடுக்கவேண்டுமென்ற கருத்தை நான் வலியுறுத்திக்கூற விரும்புகிறேன். பல இடங்களில் சிறப்பு மருத்துவ வசதி இருந்தாலும், அது போதிய அளவு இல்லை. மாவட்ட தலைமை மருத்துவ மனைகளில் இல்லை என்பதை இந்த இலாக்கா ஒப்புக்கொள்ளும் என்று நினைக்கிறேன்.

பல பகுதிகளில் "உமன் அண்டு சில்ரன் விங்" சரியான முறையில் இயங்கவில்லை. அதற்குப் போதிய அளவில் தேர்ச்சி பெற்றவர்கள் இல்லை என்ற



1974 மார்ச் 18] [திரு. ஆர். பொன்னப்ப நாடார்]

கருத்தையும் இந்த நேரத்தில் நான் சொல்லிக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

குடும்ப நலக் கட்டுப்பாட்டைப் பொறுத்தவரையில் ஒரு ஆலோசனை கூறவேண்டுமென்று விரும்புகிறேன். சில நாடுகளில், அதிலும் குறிப்பாக சிங்கப்பூர் போன்ற நாடுகளில் ஒரு தாய்க்கு 2000 வெள்ளி என்ற அளவில் கொடுக்கிறார்கள். அதற்கு ஊக்கம் அளிக்கும் வகையில் இந்த 2000 வெள்ளி கொடுக்கப்படுவதாக அறிகிறேன். அந்த மாதிரி நிலைமை நம்முடைய தேசத்திலும் ஏற்பட வேண்டும். மத்திய அரசாங்கம் அதற்காக ஒரு வழி கண்டாக வேண்டும்.

இது ஒரு சமுதாய நலத் திட்டம். இன்னும் பெருகிக்கொண்டுபோனால் இந்தத் தேசத்தில் இருக்கும் உணவுப் பற்றுக்குறை அதிகமாகிவிடும். அதிலே எந்தவிதமான சந்தேகமும் இல்லை. உலகத்தில் இருக்கும் உணவுப் பண்டங்களை எல்லோருக்கும்பகிர்ந்து கொடுத்தால்கூட வறுமையை நீக்குவதற்கு உண்டான நிலை இல்லை என்று கருதுவதால் நிச்சயமாக இந்த நல்வாழ்வுத் திட்டத்தை விரைவில் செயல்படுத்த வேண்டுமென்று அரசாங்கத்தை வேண்டி விரும்பி கேட்டுக்கொள்கிறேன்.

இந்தத் தாய்மார்களுக்கு ஆப்டர் கேர் ஹோம் கொஞ்சம் தாராளமாகச் செய்ய வேண்டும். இந்தக் குடும்ப நலச் சிகிச்சை ஏற்படுத்துவதன் காரணமாக சிலருக்கு சில கோளாறுகள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. அவர்களைப் பராமரிக்கும் அளவிற்கு போதிய ஊக்கம் அளிக்க நல்ல வழிவகை செய்யவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, இன்று பல பகுதிகளில் அம்மை, சிறிய அம்மை போன்ற வியாதிகள் ஏற்படுகின்றன. முன்பெல்லாம் தீவிரப் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்தோம்; ஓரளவிற்கு அது கட்டுப்பட்ட நிலையில் இருந்தது. அண்மையில் நாகர்கோயிலில் சிறிய அம்மை வந்து அது அதிகமாகப் பரவி இருக்கிறது. அதற்குத் துரிதமான வேண்டிய நடவடிக்கையை எடுத்துச் செய்ய வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்று பல மாவட்ட மருத்துவ மனைகளில் வேண்டிய வசதிகள் இல்லை. உதாரணமாக எங்கள் மாவட்டத்திலுள்ள நாகர்கோவில் மாவட்ட மருத்துவ மனையில் மார்ச்சுவரி வேன் வாங்குவதற்கு பல நாட்களாக முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். முன்பு நகரசபைக்குச் சொந்தமான வேன் இருந்தது. அந்த நகரசபை தீர்மானம் போட்டு, எந்தப் பிரதேமும் அதிலே எடுத்துச் செல்வதற்கு அனுமதிக்கக்கூடாது என்று நகரசபை தீர்மானம் நிறைவேற்றி இருக்கிறது. ஒரு பெரிய நகரமாக இருக்கிறது. வளர்ந்து வரும் நகரமாக இருப்பதால் அந்த மருத்துவ மனைக்கு ஒரு வேன் வாங்கித் தருவதற்கு முதன்மை இடம் கொடுக்கவேண்டுமென்று நான் கூறிக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக இந்த ஹெட்குவார்ட்டர்ஸ் ஹாஸ்பிடலுக்குப் பக்கத்தில் கொஞ்சம் தேவஸ்வம் நிலம் இருக்கிறது. ரூ. 5 இலட்சத்திற்கு அந்த நிலத்தை வாங்குவதற்கு ஒரு திட்டத்தை அங்கு இருக்கிற கலெக்டர் அவர்களும், மாவட்ட மருத்துவ அதிகாரியும் தெரிவித்திருக்கிறார்கள். அதை வாங்குவதற்கு அரசாங்கம் பரிவோடு ஏற்பாடு செய்து அந்தப் பகுதியிலுள்ள மக்களுக்கு வேண்டிய காரியங்களைச் செய்ய வேண்டும். அதுவுமல்லாமல் சில விஸ்தரிப்புத் திட்டங்களையும் செய்துகொடுத்து உதவ வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இந்த நிலம் அறநிலையத்தினுடைய நிலம். இனமாகப் பெற முடியும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் சொன்னார். ஒரு எக்கர் அளவுக்கு ஏற்கெனவே மருத்துவ மனையிலிருந்து தொலைவாகக் கிடைத்த ஒரு நிலம் 7½ இலட்சம் ரூபாய் விலையாக இருந்த காரணத்தினால் அது கைவிடப்பட்டது. இந்த நிலம் இலவசமாகக் கிடைத்துவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அந்த முறையில் கிடைக்குமானால் உடனடியாகப் பணியைத் தொடங்குவதற்கு வாய்ப்பாக இருக்கும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : ஒரு டிரஸ்டுக்குச் சொந்தமாக இருக்கிறது. அந்த டிரஸ்டில் இருப்பவர்களும் மனமுவந்து தந்தால் நலம்தான். நாங்களும் அதற்கு முயற்சிக்கிறோம். மிஞ்சியதெல்லாம் 4½ எக்கர் நிலம் இருக்கிறது. ஒருவேளை கொஞ்சம் இனமாகக் கொடுத்தாலும் மற்ற நிலத்தையும் அரசாங்கமே பெற்றுக்கொள்ள ஏற்பாடு செய்து ஊக்குவித்தால் நலமாக இருக்கும் என்று கருதுகிறேன் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்னொரு விஷயம். பல நகரங்களுக்குச் சென்றால் அங்கு இருக்கிற மணத்தின் மூலமாக நாம் எந்த நகரத்தை அணுகுகிறோம் என்று சொல்லிவிட முடியும். உதாரணமாக, விழுப்புரம், திருச்சி, மாமண்டூர் பக்கத்திலே சென்றால் ஒரு வாடை, துர்நாற்றம் எங்களையெல்லாம் வரவேற்றுக் கொண்டிருக்கிறது. குரோம்பேட் போன்ற இடங்களிலும் இருக்கிறது. இதற்கு இலாகாவிலிருந்து வேண்டிய காரியங்களைச் செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். நான் யாரையும் குற்றம் சாட்டுவதற்காக இந்தக் கருத்தினைக் கூறவரவில்லை.

அடுத்தபடியாக திருநெல்வேலி ஜில்லாவில் அம்பாசமுத்திரம் தாலுகாவில், விக்ரமசிங்கபுரம் ஹார்வி மில் சாயப்பேட்டையிலிருந்து கழிவு நீரை தாமரபரணி ஆற்றில் கொண்டு விடுவதன் காரணமாக பல சுகாதாரக் கேடான விளைவுகள் ஏற்படுகின்றன. அதைத் தடுக்க வேண்டிய காரியங்களை உடனடியாகச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அம்பாசமுத்திரம் பகுதியிலே இருக்கிற பேரூராட்சி காம்பவுண்டுக்கு அருகாமையில் சிவந்திபுர ஊராட்சிப் பகுதியில் உரக் குழி ஒன்றை நிறுவியிருக்கிறார்கள். அதனால் அந்தப் பகுதி வாழ் மக்கள் மிகவும் கஷ்டப்படவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. அதற்கு பரிகாரம் காணவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



நாகர்கோவில் டி. பி. ஆஸ்பத்திரி தென் மாவட்டங்களில் ஒரு முக்கியமான ஆஸ்பத்திரியாக இருக்கிற காரணத்தினால், அதையும் விஸ்தரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதேமாதிரி இடைக்காடு, குட்டக்குழி, செம்பருத்தி போன்ற இடங்களில் பப்ளிக் ஹெல்த் சென்டர்களை விஸ்தரிக்க வேண்டும். அருமனை, குலசேகரம் ஆஸ்பத்திரிகளையும் விஸ்தரிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். முன்பு பணம் ஒதுக்கியும்கூட எந்த விதமான முன்னேற்றமும் ஏற்படவில்லை. இது தொழிலாளர்கள் அதிகமாக வசிக்கின்ற பகுதியாக இருக்கிறது.

கடைசியாக வாட்டர் வொர்க்ஸைப் பற்றி ஒரு கருத்தைச் சொல்லி முடித்துக்கொள்கிறேன். நாகர்கோயில் பட்டணத்தில் குடிநீர் பிரச்னை மிகவும் கஷ்டமாக இருக்கிறது. 50,000 ஜனங்களுக்கு போடப்பட்ட திட்டம், இப்பொழுது 1½ இலட்சம் ஜனங்களுக்கு பயன்பட வேண்டியிருப்பதால் அந்த அளவுக்கு இருக்கிற தண்ணீர் போதவில்லை. அதுமட்டுமல்லாமல் அருகாமையில் உள்ள மற்றப் பகுதிகளுக்கும் தண்ணீர் எடுத்துச் செல்லப்படுவதன் காரணமாக நாகர்கோவில் பட்டணத்தில் போதுமான அளவுக்கு தண்ணீர் கிடைக்காமல் இருந்துகொண்டிருக்கிறது. அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளவேண்டும் என்பதையும் சொல்லிக்கொள்கிறேன்.

தக்கலை, குளச்சல் போன்ற நகரங்களில் குடிதண்ணீர் திட்டத்தை—மாம்பழத்துறை திட்டம் என்ற திட்டம் இருக்கிறது—அந்தத் திட்டத்தின் அடிப்படையில் விஸ்தரிக்க வேண்டும். இதுபற்றி பல முறையும் வளர்ச்சி மன்றக் கூட்டங்களிலும் வேறு பல கூட்டங்களிலும் கூறியிருக்கிறேன். அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக மருத்துவ மனைகளிலே கொடுக்கின்ற மருந்துகளெல்லாம், எமர்ஜன்ஸி டிரக்ஸ் போன்றவைகளெல்லாம் காலாகாலத்தில் எல்லா ஆஸ்பத்திரிகளிலும் வைத்துப் பாதுகாப்பதற்கு சில ஆஸ்பத்திரிகளில் இடம் இல்லை. உதாரணமாக, டிஸ்ட்ரிக்ட் ஹெட்குவார்டர்ஸ் ஹாஸ்பிடல்கள், தாலுகா தலைநகர ஆஸ்பத்திரிகள் ஆகிய இடங்களில் குளிர் சாதனப் பெட்டிகளை வைப்பது சாலச்சிறந்தது ஆகும். இல்லாவிட்டால் அந்த மருந்துகளைப் பாதுகாப்பாக வைக்க முடியாமல் கஷ்டமாக இருக்கிறது.

பொதுவாக, இந்த இலாகாவில் இன்னும் அதிகமான அக்கறையையும் கவனத்தையும் செலுத்த வேண்டும். இன்னும் பல பகுதிகளிலே பல பிரச்னைகள் இருக்கின்றன, அவைகளையெல்லாம் பற்றி இங்கே விரிவாகப் பேசுவதற்கு காலம் இல்லாத காரணத்தினால், தலைவர் அவர்களே, இத்தோடு என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. நா. வீராசாமி: ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். இந்தச் சட்டமன்றத்தின் மரபு பொதுவாக எதிர்க்கட்சித் தலைவர் பேசியதற்குப் பின்னாலே அமைச்சர் அவர்கள் பேசவேண்டும் என்றுதான் இருக்கிறது.

[திரு. நா. வீராசாமி] [1974 மார்ச் 18

1957-ஆவது ஆண்டில் அன்றிருந்த சபாநாயகர் கூட

"After the Leader of the House has spoken on the Demand, the Speaker observed that no Member should, as a matter of convention, speak".

என்று ரூலிங் கொடுத்திருக்கிறார்கள். டாக்டர் ஹாண்டே அவர்கள் என்னுடைய நண்பர்தான். அவர்கள் பேசுவதை நான் ஆட்சேபிக்கவில்லை, நம்முடைய கன்வென்ஷன் என்ன ஆவது? நம்மைப் பொறுத்தவரையில் எதிர்க்கட்சித் தலைவர் மாண்புமிகு பொன்னப்ப நாடார் அவர்கள். டாக்டர் ஹாண்டே ஒரு கட்சியினுடைய சாதாரண உறுப்பினர். எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் பேசியதற்குப் பின்னாலே அவர்கள் பேசுவது முறைதானா என்று தாங்கள் தீர்ப்புக் கூறவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எதிர்க் கட்சித் தலைவர் பேசியதற்குப் பிற்பாடு உறுப்பினர்கள் பேசக்கூடாது என்ற ஒரு தீர்ப்பை நான் கூட வழங்கியிருக்கிறேன். ஆனால், இப்பொழுது நம்முடைய அவையிலே எதிர்க்கட்சித் தலைவர் என்ற அளவுக்கு ஒரு தலைவர் இல்லை. 24 உறுப்பினர்களைக் கொண்ட ஒரு கட்சி இருந்தால் தான் எதிர்க் கட்சித் தலைவராக இருக்கலாம். ஒரு கட்சித் தலைவர் எதிர்க் கட்சித் தலைவர் அல்ல. ஆதலால் மரபு ஒன்றும் மீறப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

* DR. H. V. HANDE: Hon. Mr. Speaker, Sir, in support of the cut motions given on behalf of our Party, I would like to state a few things.

The Hon. Minister and a few Members of the Ruling Party have been trying to make out since this morning that everything is fine with regard to the Public Health Department. But I would like to point out that there are several omissions and commissions in the Department. The most important and the first point that I would like to make is that the morale of the services is at a very low ebb. The Hon. Minister for Public Health and myself have on several occasions on the floor of this House exchanged our views on this matter. The morale of the public services is at a very low ebb for the following reasons.

The Hon. Minister for Public Health has thought it fit to extend the services of a number of GovernmentDoctors who have reached superannuation, to ree-mployeertain persons and to unemploy certain persons. So, the policy which the Hon. Minister and the



1974 மார்ச் 18] [Dr. H. V. Hande]

Government are going to adopt with regard to extension and re-employment has to be made clear here and now when the Hon. Minister replies to the debate.

There are persons who have received one year extension, two years' extension and three years' extension and the departments are upgraded just at the time when certain important persons who are probably *persona grata* with the Government are about to retire and they get extension with the object of looking after the upgraded departments. The Hon. Minister would say that they have been given extension because right type of persons are not available. I totally disagree with him in this regard. There is no one who is indispensable however high and great he may be. It is a well-known fact that no one is indispensable especially in a democratic set-up. We have got young people coming up and definitely they can fill up the places vacated by the old people. So, the Hon. Minister should clearly state the policy of theGovernment, in his reply, because the unemployment problem is raising its ugly head among the graduates and about 1,000 graduates are suffering for want of employment. That is one point.

Then I come to the next point, namely cataract relief. The Hon. Minister will say that it is blind relief. I would say that it is not blind relief but it is only cataract relief because the person who is suffering from cataract undergoes the operation to get vision. It is a routine thing and a little more funds are granted for such purpose and it is done on a more massive scale.

Of late I am given to understand that there is a drop since the last six months or one year with regard to the number of cases operated. The sum of Rs. 50 lakhs has been reduced to Rs. 10 lakhs and 84,000 operations have been reduced to 18,000. What is the reason given for this drop? It is not due to the non-availability of persons who want to undergo these operations. There are still plenty of them. I understand it is only because complications are increasing in great number.

There are a lot of cases wherein complications do arise. It is the duty of the Hon. Minister to see to it that the complications are attended to in a scientific manner. I am told that there is no provision by which these complications can be treated. Where is the base from which relief is extended to these complications

I ask ! In any civilised and advanced country 10 per cent is the normal percentage of complications. In a developing country like ours, it may be 20 per cent. We must have some arrangements to tackle these complications by creating a base hospital for the same. Because of absence of such arrangements, there is an increase in complication and a fall in the number of patients.

Now I come to the subject of indigenous medicine. Though it may appear theoretically that the Government is doing what it can for indigenous medicine, I am sorry to say that during the last five to six years, there has been a great drop in the quality and quantity in this regard. I would like to draw the attention of the Hon. Minister for Health and also Thirumathi Jothi Vencatachellum, that a decade before, it was a common sight to see a number persons waiting in a big queue for Navarakizhi, treatment for paralysis. They used to be given excellent treatment for paralysis. But now there is no provision for such a thing. Paralysis can in fact be properly cured if right Ayurvedic treatment is given. I find no provision for the same now.

There has been a fall in the quality and quantity in Indigenous medicine. Imposition of 30 per cent sales tax on Arishtams, even on preparations done by co-operative society in Adyar which is controlled by Government, will not help the growth of Ayurveda.

Another important thing is about medical books in General Hospital. I have received information that malpractice is going on in this regard. Some of these things have trickled down to the so called undesirable section of the press. News have appeared in that section of the press. Thousands or lakhs of rupees may be involved in this racket. Who is responsible for this malpractice ! Government must put a stop to the commissions and omissions in this regard.

Next I come to District Headquarters Hospitals. No clear indication has been given in the Hon. Minister's budgetary memorandum or proposals on the upgrading of District Headquarters Hospitals. They need a lot of upgrading. Take Coimbatore District Headquarters Hospital for instance. A neuro-surgery block is essential there especially in view of the fact we have a Medical College there. But that has not come up. The basic requirement of medicine, surgery, ophthalmology, E.N.T., orthopedic



and paediatrics, should be available in every District Headquarters Hospital. Because they are not there, we find a tremendous rush to Madras City.

What I would like to appeal to the Hon. Minister is that in each District Headquarters Hospital he must post specialists to be in charge of medicine, surgery, midwifery, orthopaedic and paediatrics and ophthalmology. The specialist should be of civil surgeon's cadre. The specialists must give proper coaching to other doctors also. I am giving this as a concrete suggestion. The District Headquarters Hospital can be the controller of primary health centres and taluk headquarters hospitals.

At present taluk headquarters hospitals are being run in an inefficient manner. The object of my criticism is that from primary health centre onwards to District Headquarters Hospital, there must be proper gearing up and toning of medical education and medical treatment.

The specialists in District HeadquartersHospital must go round the taluk headquarters hospitals once a month, see what is happening there and try to set up proper standards. Some of them can go to rural area within an area of 50 to 100 sq. miles, once a week. There are certain advantages in the suggestions I am making. When this type of work is undertaken by specialists, it will benefit the doctors in taluk headquarters hospital, primary health centres and private practitioners in the locality and also aid to refresh their knowledge in medicine and surgery. Such a thing is done in advanced countries.

In fact every doctor, once in three years, attends a refresher course in those countries. That is the information I have of the practice in advanced countries. In our country also, such refresher courses must be given to medical practitioners. The primary health centre is the fifth wheel in the coach. The primary health centres and private institutions must be tagged on to a medical college nearby. The Thanjavur or Madurai Medical College—they must have control over the primary health centres. This suggestion also may be considered.

With regard to sanitation in municipalities and corporations, I am sorry to say that it is deplorably substandard. They have become breeding places of mosquitoes and flies. The mosquito

menace especially during winter months has risen to scandalous heights during the last two or three years. Thiru K. M. Subramaniam also made mention of the fly nuisance and how bad sanitation is. It is the normal routine work of municipalities to locate breeding centres and root out this evil. (THIRU K. M. SUBRAMANIAM: I have not said that sanitation is bad. Why drag me ! Sanitation has improved much during the last two or three months.) I leave off Thiru K. M. Subramaniam.

It is the bounden duty of Municipality to locate the breeding centre and destory the larvae. Proper explanation has never been given in this as to why proper action to locate the breeding centre and to destroy the larvae has not been done. What is the difficulty in this regard, I do not know.

Even the much trumpetted improvement to Cooum has not been helpful in eradicating the mosquito nuisance. I am told it has become another breeding centre for mosquitoes because water has become stagnant in many places. Many of the Asian countries have succeeded in taking anti-malaria measures and in destroying mosquitoes. Why is it, that India, another Asian country, especially Tamil Nadu has not succeeded in it passes my comprehension. In spite of Rs. 1½ crores having been sunk in Cooum improvement,my charge is, stagnation is much more there now than what it was before and the mosquito menace has increased. I would like to know what are the steps taken to control mosquito nuisance.

Regarding ambulance service, modern gadgets are not there. I am not touching the points referred to by Thirumathi Jothi Vencatachellum. Many ambulance vans do not have modern equipment. Many a time road accident cases are not picked up by the ambulance staff unless they get a police clearance. Proper co-ordination should be effected in this regard.

(பிற்பகல் 1-30.)

Then again, there is no proper co-ordination between the Director of Medical Education and the Director of Health Services. They should not work in water-tight compartments and at cross purposes but should work in co-ordination and try to solve their problems. It is like passing the baby from one to the other now.



Then I come to the Primary Health Centres. There are 375 Primary Health Centres. A few of them must be under the direct control of the medical colleges as they can be used as field service areas for the under-graduate students. The staff at the Primary Health Centre can be interested in the under-graduates only if they are attached to the teaching institutions and the under-graduates will also have respect for the teacher.

Another complaint that I have received is that there is no proper provision for medicine in several Panchayat union dispensaries. The funds are sufficient only to meet the doctor's pay and the building rent. There is very little fund left for medicines. This is a matter which I am bringing to the attention of the Hon. Minister. Several members also have asked me to mention this and therefore I am saying this. The Hon. Minister should look into this.

Then sanitary conditions. With regard to the General Hospital, the Ophthalmic Hospital, the Maternity and Child Welfare Hospital, the Stanley Hospital and in several of the city hospitals, the condition is very bad, it is in a deplorable state.

Even faecal matter is seen in open drains. In fact I have given a cut motion and as a member of the Advisory Committee, I have brought this to the notice of the authorities. This deplorable condition should be looked into and something should be done to set things right. I would suggest that the Hon. Health Minister walks into any of these Hospitals without information to anyone and then he will see how things are. Completely everwhere, in the verandhas, in the wards, the condition is very very bad. It is something very very serious about which the Government should act immediately.

Then, Again private practice by Government doctors. I am very very sorry that even though there is a G. O. prohibiting it, Government doctors are having private practice. Many senior doctors are having nursing homes, even though the Government Order says that they should not have private practice except consultation.

[Dr. H. V. Hande] [1974 மார்ச் 18

The hon. Member, Latheef made a valid point when he mentioned about a doctor in his constituency. I would like to stress that in Madras City, the situation is very bad. It may be an ordinary thing there in the district. But here very very senior and powerful doctors are having Nursing Homes with fantastic incomes. They know the higher-ups.

I would like to know whether the Government is not aware of these things, namely that the doctors are doing private practice and have nursing homes, X-ray Laboratories, Clinical Laboratories, etc ? What action has the Government taken. I am afraid one or two Ministers also go and are patients in some of these institutions. I am not worried about it. I do not say you should boycot it. But tell them 'either be in Government service or have your private nursing homes'. Patients are invariably told that in the private nursing homes of these doctors better facilities are available. I do not want to hurt anybody, for, many of them are known to me. But this is a matter I would like the Government to take some effective action. I say this for cleansing the whole department.

Then about diet. The cost of food-stuffs is going up. The diet given in the hospitals is worth a little over a rupee. That should be increased.

Then I come to family planning. We have an allotment of Rs. 28 crores, or nearly 30 crores for medical relief. Out of this amount, nearly $8\frac{1}{2}$ crores is spent on Family Planning. It is not a small amount. Out of this nearaly Rs. 7 crores is received from the Centre. We have got assistance and it is clearly mentioned here on page 55, that nearly Rs.6·9 crores is received as grand-in-aid from the Central Government. A sum of Rs. 37 crores have been allotted for the fifth five year plan—this is seen at pages 142—143 of the detailed budget estimate. Is this amount spent properly by the Government ? I charge this Government that this amount is misused, mismanaged and not at all properly spent. At page 47 it is seen that the budget estimate for 1973–74 was Rs. 6·53 crores. But the revised estimate is Rs. 5·02 crores. There has been a fall and they are not able to use Rs. $1\frac{1}{2}$ crores.



1974 மார்ச் 18]

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : விவரங்கள் சொல்வதாக இருந்தால் முழு விவரங்களையும் தெரிந்து சொல்ல வேண்டும். அந்த நிதி மத்திய சர்க்கார் கொடுத்து, நாம் செலவழிக்காமல் விட்டது அல்ல. இந்த அளவுக்கு அவர்களே முதலில் இசைந்து சொன்ன தொகையைக் குறைத்துவிட்டார்கள். செலவழிக்க நமக்கு அனுமதி இல்லை.

Dr. H. V. HANDE : I have information that they have again given you Rs. 50 lakhs. Is it not so ? Have they not given you Rs. 50 lakhs ?

மாண்புமிகு. திரு க. அன்பழகன் : அவர்கள் 50 லட்சம் கொடுக்கவில்லை. தமிழக அரசு தன்னுடைய நிதியில் இருந்து இந்த 50 லட்சத்தை ஒதுக்கியிருக்கிறது. ஆரம்பசுகாதார நிலையத்துடன் கட்டப்படும் குடும்ப நல நிலையக் கட்டடத்திற்கும் அவர்கள் தருவதாக ஒத்துக்கொண்ட தொகையைக் கொடுக்கவில்லை. இன்டென்சிவ் ஸ்கீம் (Intensive Scheme) நிறைவேற்ற இன்செண்டிவ் கொடுப்பதற்காகவும் கட்டடம் கட்டுவதற்காகவும் தமிழக அரசு ஒதுக்கிக் கொடுத்த தொகை இந்த 50 லட்சம். மத்திய அரசு அடுத்த ஆண்டு முடிந்தால் இதை ஈடு செய்வதாக ஆலோசனை சொல்லியிருக்கிறார்கள்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : இன்டென்சிவ் ஸ்கீமே வேண்டாம் என்று அவர்கள் சொல்லியும் நீங்கள் இதைக் கொண்டு வந்தீர்கள். மற்றதும் வேண்டாம் என்றார்கள், நீங்கள் கேட்கவில்லை. பூஸ்டிங் அப் பிகர்சுக்காகத்தான் நீங்கள் இன்டென்சிவ் ஸ்கீமையே கொண்டு வந்தீர்கள். நான் அதற்கு வருகிறேன்.

What I am trying to say is that there has been mismanagement of the funds and boosting up of figures. There is no direction because there is no one to give direction at all.

What is the reason for not appointing the Deputy Director of Family Planning after the retirement of Dr. B. Varadarajulu ? It is $1\frac{1}{2}$ years or 14 months since he retired. It is something like a Captainless Ship or a rudderless Ship. All things are managed at the levels of Personal Assistants and others.

I repeat that my charge is that there is no proper direction as no proper officer has been appointed. I would like the Hon. Minister to place on the Table of the House information regarding whether or not the Chief Minister has not passed orders for appointing the Deputy Director of Family Planning. I would like to know if the file has not gone to the Chief Minister and whether he has not passed orders. Let it be X, Y or Z, to

[Dr. H. V. Hande] [1974 மார்ச் 18

whom the appointment is given, If the Chief Minister has passed orders, when was it done and why there is delay in the actual posting ? Who is responsible in the Health Ministry for this delay ? My information is the Chief Minister has looked into the file and passed orders. Then why delay ? So many things are involved in this.

Then there has been irregular appointments of 200 computers behind the back of the higher authorities of the department. My information is that the Health Secretary also objected to it. The then Deputy Director also objected to it. Then the Public Service Commission was seized of the matter. I would like to know under what circumstances this was done. Who was responsible for these irregular appointments ? Why the person responsible has not been booked ? All these things must be examined. We must see all those files, I insist. I demand on the floorof the House with all the emphasis at my command that a High Power Committee should be appointed. I am not particular that I should be in it. Let Mr. Ponnappa Nadar be there or any other member from any other party be there. The entire document should be examined. Because a huge amount is involved.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: ஓர் அங்கத்தினருக்கு சில விவரம் தெரியும் என்ற காரணத்தினாலேயே ஒரு துறை மிகத் தவறாக நடக்கிறது என்றும், கோடிக்கணக்கான ரூபாய் விரயம் ஆக்கப்படுகிறது என்றும் சொல்கிறபோது, கோடிக்கணக்கான ரூபாய் விரயம் ஆவதற்கு ஆதாரம் தரவேண்டும். ஒரு துறையில் டெப்டி டைரக்டராக வருவதற்குச் சில தகுதிகள் வேண்டும் என்று நிர்ணயிக்கிறோம். அதிலும் இங்கே டெப்டி டைரக்டராக வருதற்கு அட்மினிஸ்ட்ரேஷன் தகுதி இருக்க வேண்டும் போஸ்ட் கிராஜ்வேட் தகுதி இருக்க வேண்டும், பாமிலி ப்ளானிங் துறையில் அனுபவம் இருக்க வேண்டும் என்று இருக்கிறது.

DR. H. V. HANDE : The Director of Employment and Training also objected to this.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : மூன்றுவிதமான தகுதிகளை வைத்து

Administrative experience, post graduate qualification and family Planning experience

தகுதி பெற்றிருக்கிறாரா என்று காணவேண்டும். ஒருவர் 5 ஆண்டு



1974 மார்ச் 18] [திரு. க. அன்பழகன்]

காலமாக விடுமுறை பெற்று திரும்ப அசிஸ்டெண்ட் டைரக்டராக வந்து டெப்டி டைரக்டர் பதவி வேண்டுமென்று கேட்பவர் ஒருவர், 5 ஆண்டுக் காலத்திற்குள் மூன்று தடவை ப்ரமோஷன் பெற்று பிரின்சிபாலாக இருப்பவர் அந்தப் பதவி வேண்டுமென்று கேட்கிறார். அரசாங்கத்தில் நீண்ட காலப் பணியில் உள்ளவருக்கே Seniority அடிப்படையில் அளிப்பது ஏற்புடையதாகும். ஆனால் முன்னாலேயே சலுகை பெற்றவர் என்று மற்றவர்களால் குற்றம் சாட்டப்பட்ட ஒருவர் அப்பதவி தனக்குத் தான் வரவேண்டுமென்று வாதாடுகிறார். விதிவிலக்கு அளித்து பதவி உயர்வு அளிக்கும்போது—அப்படிப்பட்டவர்களுள் பணி முதிர்ச்சி உடையவர்களுக்கே சலுகை அளிப்பதுதான் நியாயம் என்பது என் எண்ணம். அந்த டெப்டி டைரக்டர் பதவிக்கு ஏற்கனவே பதவி உயர்வு பெற்றவர்கள் வரவிரும்பாத நிலையும் இருக்கிறது. ஆனால் யார் யாருக்கு அந்த இடத்திலே வருவதற்குத் தகுதி இல்லையென்பதும், அரசாங்கத்தை தங்களுக்காக எப்படியாவது இசையச் செய்வதில் யார் யார் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதும் எங்களுக்கு நன்றாகத் தெரியும். அந்தக் குறிப்பிட்ட துறையில் அந்தத் தகுதிகளைப் பெற்றவராக ஒருவரையே நியமிக்க விரும்புகிறோம்.

மேலும் இத்துறையின் மேற்பார்வைப் பொறுப்பில் உள்ளவர் இயக்குநரே.

'Director of Health Services is in charge of Family Planning Department.

ஆகவே, டைரக்டருக்கு அந்தப் பொறுப்பு இருக்கிறது. டெப்டி டைரக்டர் பதவியை நிரப்பித்தான் ஆகவேண்டுமென்ற அவசியமே இல்லை. அரசாங்கத்திற்கு இதை நிரப்பாமலிருப்பதற்கு காரணம் இருக்கிறது. தவறான முறையில் தங்களுடைய செல்வாக்கைப் பயன்படுத்தி யார் பதவி பெற முயன்றாலும், அவர்கட்குச் சரியான தகுதி இருந்தாலொழிய, முறையாக இருந்தாலொழிய அரசாங்கம் அதற்கு இணங்காது.

டாக்டர் எச். வி. ஹாண்டே : இன்றைக்கு டைரக்டர் ஆப் பாமிலி பிளானிங் இருந்தாலும், ஃபங்க்ஷன் பண்ணுகிறவர் டெப்டி டைரக்டர்தான். இன்றைக்கு பிரைம் மினிஸ்டர் பிளானிங் கமிஷனுடைய சேர்மனாக இருந்தாலும், டெப்டி சேர்மன்தான் செயல்படுத்துகிறார். அதைச் செயல்படுத்துவது வேறு யாருமில்லை. அதேபோலத்தான் இங்கும் டெப்டி டைரக்டர் ஆப் பாமிலி பிளானிங்தான் செயல்படுத்த வேண்டும்.

My contention is this. For the last 14 months, the Department is running like rudderless and captainless ship. What is the recommendation of the Hon. Chief Minister on the file ? The Hon. Minister for Health should place on the Table of the House this information. Unless it is placed how can he except us to prove my charge.

You say that that department is functioning normally. Can you prove that the Department is efficient. I have got facts and figures to prove that the Department is inefficient. The surkey made by the Union Health Ministry for the first six months, April—September, of the financial year 1973–74 showed a decline of 39·5 per cent in sterilisation. Only 25,000 sterilisations were carried out during the first half of the year against 42,000 in the corresponding previous half year.

The vasectomy and tubectomy programmes were below the all India average. Merely 6,000 alone underwent this operation as against 26,500 in the corresponding period in the previous year, the fall being 77·4 per cent. There was also a fall of 28·7 per cent in the use of conventional contraceptives like nirodh, diaphram, foam tablets, jelly cream, etc. This is again below the all India average.

A 30 per cent decline was also noticed in the total number of acceptors of various family planning methods. It is also below the all India average. I can give more facts and figures. The Hon. Chief Minister need not be worried about the time.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சீக்கிரம் முடித்துவிடுங்கள். 2, 3 நிமிடங்களில் முடித்து விடுங்கள். அப்பொழுதுதான் அமைச்சரவர்கள் பதில் சொல்லி, இப்பொழுதே முடித்துவிடலாம்.

DR. H. V. HANDE : I shall finish my speech in two or three minutes. Because I have a lot of facts and figures to prove the inefficiency of the Department, the Hon. Chief Minister also seems to be in a hurry. I am conceeding to his wish and I will finish early. But I am not conceeding to the Minister's point that the Department is efficient மினிஸ்டர் பதில் சொல்லட்டும், முடித்து விடலாம். The percentage of efficiency of over all targets is only 16·15 when the State has spent Rs. 7·5 crores.

With regard to urban development, the Central Government is giving funds to Calcutta, Bombay and other major cities. I would like to know from the Hon. Minister whether this Government has persuaded the Central Government to provide proper and sufficient funds for Madras City on a par with cities like Bombay and Calcutta. It is a must. Even the tube railway



between Tiruvanmiyur and Ennore has been complete dropped. I request the Hon. Minister for Health reply this point also.

Lastly, I would like to say a word about Veeranam Project. The hon. Member Thiru K. T. K. Thangamani also referred to the strictures passed by the Supreme Court and its orders to constitute a Commission of Inquiry. I would like to know from the Hon. Minister whether he would consider the necessity to constitute a Commission of Inquiry. It is still doubtful whether we will be able to get water. It is my duty to point out that the money has not been spent in the manner in which it ought to be spent. I have got further facts to prove the inefficiency of the Department. If the Hon. Minister wants further facts, I am prepared to submit them for the benefit of the Government. Thank you, Sir.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்தினுடைய மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு நலத் துறைப் பணிகளைக் குறித்து தங்களுடைய கருத்துக்களை மிக்க ஆர்வத்தோடு உணர்ச்சியோடு குறிப்பிட்டு, அந்தப் பணிகள் மேலும் சீராக நடைபெற வேண்டுமென்று வலியுறுத்தியதற்காக என்னுடைய மகிழ்ச்சியையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன். பொதுவாகவே, சமூக பணிகள் என்ற முறையிலே நடைபெறுகிற எந்தத் துறையாக இருந்தாலும், மக்கள் அந்தப் பணிகளைப் பயன்படுத்திக் கொள்ளப் பழகிவிடும்போது அவர்களுடைய தேவைகள், வளர்ந்து அந்தத் தேவைகளை ஈடுசெய்கிற ஆற்றல் எந்த ஒரு அரசாங்கத்திற்கும் இருக்க முடியாத காரணத்தால் குறைகள் இருக்கத் தான் செய்யும் என்பதை நான் முதலில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

ஆண்டுதோறும் மருத்துவப் பணி வளர்ந்து கொண்டு வருகிறது என்பதற்கான புள்ளி விவரங்களும் ஆண்டுக்காண்டு எவ்வளவு அதிகமான மக்களுக்குப் பரவலான மருத்துவப் பணி நடைபெறுகிறது என்பது ஆண்டுக்காண்டு கடுமையான நோய்கள் பரவாமல் தடுக்கின்ற வகையில், மக்களுக்கு வழங்கப்படுகின்ற ( Vaccine ) வாக்ஸீன் ஆகியவைகள் எவ்வளவு அதிக அளவுக்கு வழங்கப்படுகிறது என்பதும் ஆண்டுக்காண்டு எத்தனை புதிய மருந்தகங்கள் அரசால் மேற்கொள்ளப்படுகின்றன என்பதும் இந்த பெர்பாமன்ஸ் பட்ஜெடில் (Performance Budget) தெளிவாக விளக்கப்பட்டிருக்கிறது.

ஆனால், எதைச் செய்தாலும், மக்களுடைய வாழ்க்கை நிலையிலே ஏற்படுகிற பழக்க வழக்கங்களின் காரணமாக, அவர்களுடைய தேவைகள் அனைத்தும் நிறைவேறவில்லை என்பதை ஒத்துக்கொள்ள நான் வெட்கப்

படவில்லை. உண்மையாகவே அந்தப் பணிகள் அனைத்தும் அரசுத் துறை மூலமாக மட்டுமே நிறைவேறவேண்டும் என்று எதிர்பார்க்கிற ஒரு நிலை இந்த நாட்டு ஜனநாயகத்தில் நிறைவேறுவது கடினம் என்பதையும் நாம் மறந்து விடக்கூடாது. ஓரளவு உதவி செய்ய முடியுமே தவிர, ரஷ்யா போன்ற சோஷலிச நாட்டிலே அரசுக்கு இருக்கிற வாய்ப்பினையும், சமுதாயத்திலே இருக்கிற அத்தனை பேரும் ஹெல்த் இன்ஷூரன்ஸ் செய்து கொள்கிற நிலை நம்முடைய நாட்டிலே இல்லாத ஒரு கட்டத்தில் நாம் இருக்கிறோம் என்பதையும் மறந்து விடக்கூடாது.

இன்னும் சொல்லப்போனால், இன்றைக்குக் கிராம மக்களுக்கு மருத்துவ வசதி அளிப்பது என்பதிலே முதல் பொறுப்பு பஞ்சாயத்து யூனியன் ஒன்றியங்களுக்குத்தான் இன்றுவரையிலே இருக்கிறது. ஒன்றியங்கள் செய்கிற, அவர்கள் நிறைவேற்றுகின்ற திட்டங்களுக்குத் துணையாகத்தான் ஆரம்பச் சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றனவே தவிர, அந்தப் பணியை ஒன்றியங்களிடமிருந்து எடுத்துக் கொண்டுவிடவில்லை. ஒவ்வொரு ஒன்றியமும் 3–4, கிராம மருத்துவ மனைகளை நடத்துகிறார்கள். அதிலே 2, 3 ரெகுலர் டிஸ்பென்சரீஸ்—காலையிலும் மாலையிலும் சிகிச்சை வழங்குகிறமுறையில் இயங்கும் மருத்தகங்கள் 2, 3 டிஸ்பென்சென்சரிகளில் அவைகளில் குறிப்பிட்ட ஒருவேளை மட்டும் மருத்துவ வசதி அளிக்கிறார்கள். அங்கு பணியாற்றும் மருத்துவர்கட்கு, மாதம் ரூ. 100 உதவித் தொகை வழங்கப்படுகிறது. ரூ. 50-ஐ ஒன்றியத்திலே வழங்கவேண்டும். மருந்துகளை வழங்குவது ஒன்றியத்தினுடைய பொறுப்பு.

ரெகுலர் டிஸ்பென்சரியில், ஒரு டிஸ்பென்சரிக்கு மட்டும் அரசு ரூ. 5,000 வரை அரசு வழங்குகிறது. அம்மருந்தகங்களில், எல்.ஐ.எம். பட்டதாரிகள் பணியாற்றினால் ரூ. 5,400 வரை அரசு வழங்குகிறது. இப்படி சில முறைகளின் அடிப்படையில் ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் உதவித் தொகைகளை வழங்குகிறோம். அப்படி வழங்குகிறப் பணியை ஆர்.டி.எல்.எ. துறை ஏற்றுக் கொள்கிறது. அதற்கென நிதி வசதி ஒன்றியங்களுக்கு இருக்க வேண்டும். அவர்களிடத்திலே நிதி வசதி இல்லை என்ற நிலையிலே புரவின்ஷியலைஸ் (provincialise) செய்வது என்ற முறையிலே 60, 70 மருந்தகங்களை நாம் எடுத்திருக்கிறோம்.

வருகின்ற ஆண்டிலே 40 மருந்தகங்களை அரசு ஏற்கக் கருதியுள்ளது. அதுவும் பரவலாக மாவட்டத்திற்கு 2 இடங்கள், 3 இடங்கள் என்று பொறுக்கப்படுகின்றது. இது தொடர்ந்து நிறைவேற்றப்பட்டு வருகின்ற பொழுது இன்னும் பல மருந்தகங்கள், ஒன்றியப் பொறுப்பிலே இருப்பவை சரியாக நடத்தப்பட முடியவில்லை என்ற நிலைமை இருக்குமானால் அவற்றையும் அரசு எடுத்துக் கொள்ளும் என்ற நிலைமை இருக்கிறது.

இங்கே பேசிய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்கள் தெரிவித்ததைப் போல் வாலண்டரி ஹெல்த் சர்வீஸ் என்ற திட்டம் நாட்டிலே வெற்றி பெற்றால்தான் நாட்டிலேயுள்ள அனைத்து மக்களும் நல்லமுறையிலே மருத்துவ வசதிகள் பெற்றிட ஒரு வாய்ப்பு ஏற்படும். ஒரு பக்கம் டாக்டர்களுக்கு வேலை கொடுக்கப்படவில்லை என்று



கவலைப்படுகின்ற நிலை ; மற்றொரு பக்கம் மக்கள் தங்களுக்குத் தேவையான எல்லா மருத்துவ வசதிகளையும் வழங்கவில்லை என்று சொல்லுகின்ற கட்டம். இந்த இரண்டு நிலைகளையும் மாற்றும் வண்ணம் அரசாங்கம் ஒரு அமைப்பை ஏற்படுத்த முடியாத நிலைமையில், இருக்கிற மருத்துவ அமைப்பைப் பயன்படுத்திக்கொண்டு இயன்ற அளவிற்கு வசதிகளைச் செய்து தருகின்றது. ஒன்றியங்கள்தோறும் 5 அல்லது 10 என்ற அளவிலே மருத்துவ மனைகளை உருவாக்கித் தேவையான மருந்துகளை அவற்றிற்கு வாங்கிக் கொடுத்து, போதுமான அலுவலர்களை அமர்த்த வேண்டுமென்ற நிலை வரவேண்டுமானால் ஒரு பத்து கோடி ரூபாயாவது வேண்டும். பத்து கோடி ரூபாயை அரசாங்கம் ஒரே நேரத்தில் திரட்டுகின்ற சக்தி இல்லாத தன்மை இன்றைக்கு இருக்கிறது.

மக்கள் மாதம் ஒரு ரூபாய் என்ற அளவில் கொடுத்து வாலண்டரி ஹெல்த் சர்வீஸ் என்பதை ஏற்றுக் கொள்வதாக இருந்தால் அரசாங்கம் அதை செயற்படுத்த முயற்சிக்கும். எந்த இடமாக இருந்தாலும் அரசாங்கம் ஓரளவுக்கு உதவி செய்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடையாற்றிலே உள்ள வாலண்டரி ஹெல்த் சர்வீஸ் டாக்டர் சஞ்சீவி அவர்கள் முயற்சியில் நடத்தப்படுகிறது. அது நல்லமுறையிலே நடந்து வந்தாலும் செங்கற்பட்டு மாவட்டத்தில் ஒரு ஒன்றியத்திலே இரண்டு இடங்களிலே அப்படிப்பட்ட திட்டத்தை நடத்தவேண்டுமென்ற முயற்சியை அவர் மேற்கொண்டு அரசாங்கம் அதற்கு உதவி செய்வதும், அவை சரிவர நடத்தப்படவில்லையென்று கருதப்படும் நிலை உள்ளது. அதற்குக் காரணம் மக்கள் மாதக் கட்டணத்தைச்சரியாகக் கட்டவில்லை என்ற நிலை உள்ளது. தொகை சிறியதாக இருந்தாலும் கூட மக்கள் போதுமான அக்கறை அதிலே காட்டவில்லை என்பதுதான் காரணம்.

ஈரோட்டிற்குப் பக்கத்திலே உள்ள கோபியிலே ஒரு வாலண்டரி ஹெல்த் சர்வீஸ் திட்டத்தை திரு. மகாலிங்கம் அவர்கள் முயற்சித்து நடத்த முன்வந்திருக்கிறார்கள். அந்த வட்டாரத்திலே அந்தத் திட்டம் வெற்றிகரமாக நடைபெறும் என்ற எண்ணம் இருக்கிறது. காரணம் அந்த வட்டாரத்திலேயுள்ள கரும்பு நிலச் சொந்தக்காரர்கள் மாதம் 1 ரூபாய், 2 ரூபாய் என்பதை செலுத்துவதற்குத் தயாராக இருப்பார்கள் என்பதே. மிகப் பெரிய சர்க்கரை ஆலையொன்றுடன் தொடர்பு கொண்டவர்கள் தீவிரமாக அதை நடத்துவதிலே நாட்டம்கொண்டு இருக்கிறார்கள் என்பதும் அது வெற்றி பெறும் என்ற எண்ணத்தை ஏற்படுத்தியிருக்கிறது. ஆகவே மக்களுக்குத் தேவையான மருத்துவ வசதிகள் கிடைக்க வேண்டுமானால் பரவலாக அப்படிப்பட்ட திட்டங்கள் தோன்றிட வேண்டும். நான் எதிர்க்கட்சித் தலைவர்களைக் கேட்பதெல்லாம் மக்களிடத்திலிருந்து ஒத்துழைப்பைப் பெறுகின்ற முறையிலே கருத்துக்களை வழங்க வேண்டுமென்பதுதான்.

பொதுமக்களின் ஒத்துழைப்பைப் பெறாமல் எந்தத் திட்டமும் சரிவர இயங்கமுடியாது என்பது அனைவருக்கும் தெரியும். பொதுப்பணிகளில் ஈடுபடுகின்றவர்களிடத்திலே கூட்டுப் பொறுப்புணர்வு ஏற்படவேண்டும்

[திரு. க. அன்பழகன்] [1974 மார்ச் 18

டாக்டராக இருந்தாலும், செவிலியராக இருந்தாலும், அலுவலராக இருந்தாலும், தொண்டராக இருந்தாலும், நோயாளியாக இருந்தாலும் அவர்களிடையே கூட்டுப் பொறுப்பு உணர்வு மலர்ந்தால்தான், மக்களுடைய முழுமையான ஒத்துழைப்பும் இருந்தால்தான் பணிகளைச் சரிவர ஆற்ற முடியும். இல்லாவிட்டால் திரு. சுரேந்திரன் அவர்கள் கூறியதுபோல மருந்தகத்திற்குச் செல்கின்ற வரையிலேதான் “ப்ரீ” உள்ளே சென்று படுக்கையிலே படுத்துவிட்டால் 8 அணா கொடு என்றும், 1 ரூபாய் கொடு என்றும் கேட்கிறார்கள் என்று சொல்வதைப் போன்ற நிலைமை மாறாது.

டாக்டர் ஹாண்டே அவர்கள் ஆத்திரம் காட்டுவதாலே மாத்திரம் அப்படிப்பட்ட நிலையைத் திருத்திவிட முடியாது, அடிப்படையிலே என்ன என்ன மாற்றங்கள் தேவையென்பதை எல்லாம் பரிசீலனை செய்து கொண்டு இருக்கிறோம். ஒரு நாளைக்கு 20, 30 புகார் கடிதங்கள் வருகின்றன. அவற்றை நான் அந்தத் துறைக்கு அனுப்பி வைக்கிறேன். அதிலே பத்து புகார் கடிதங்கள் உண்மைக்கு மாறானவையாக இருக்கின்றன. பிடிக்காத டாக்டரின் மேல், பிடிக்காத செவிலியர் மேல், பிடிக்காத அலுவலர் மேல் 5, 6 பொய்க் கடிதங்கள் வருகின்றன. ஐந்தாறுதான் உண்மையாக இருக்கின்றன. 10, 15 கடிதங்கள், பாதி பொய்யாகவும், பாதி உண்மையாகவும் இருக்கின்றன. இவற்றையெல்லாம் விசாரித்து ஓரளவிற்கு நடவடிக்கை எடுக்க முயற்சிக்கிறோம்.

ஆனாலும் மருத்துவ மனைகளிலே உள்ள ஆலோசனைக் குழுக்களில் சில மருத்துவ மனைகளைப் பொறுத்தவரையில் அவர்கள் ஆர்வத்தோடு இயங்குகிறார்கள். சில இடங்களிலே ஆர்வத்தோடு இயங்கவில்லை. ஒன்றிரண்டு இடங்களிலே குழு உறுப்பினர்கள் வருவதில்லை. மூன்றாண்டுகளுக்கொருமுறை அமைக்கப்பட வேண்டுமென்றிருக்கிற அந்தக் குழுவை ஆண்டுக்கொருமுறை அமைக்கலாமா என்று ஆலோசிக்க வேண்டும். மாவட்ட ஆட்சித் தலைவரின் ஆலோசனைமீது அதனை அமைக்கின்ற முறைதான் வழக்கமாக இருந்தது. அதனை டிஸ்டிரிக்ட் மெடிக்கல் ஆபீஸரின் ஆலோசனையின் மீது அமைக்கலாமா அப்படி அமைப்பது பொருத்தமாக இருக்குமா என்பதையும் ஆலோசிக்க வேண்டும்.

அங்கே வழங்கப்படுகின்ற ஆலோசனைகள் அனைத்தும் அரசாங்கத்திற்கு வருவதில்லை. நிர்வாகத் துறையைப் பற்றிய ஆலோசனைகளாக இருந்தால் மாவட்ட மருத்துவ அதிகாரி அவர்களே வேண்டிய சீர்திருத்தங்களைச் செய்து கொள்ளலாம். இன்னும் சிலவகையான சீர்திருத்தங்களைச் செய்ய வேண்டுமென்றால் டி.எம்.இ. (D.M.E.) டி.எச்.எஸ் (D.H.S.) ஆகியோர் செய்யலாம். அவர்களாலும் முடியாத நிலையென்றால்தான், நிதிநிலைமையைப் பொறுத்ததாக இருந்தால்தான் அரசுக்கு வரும்.

மிக முக்கியமாக, ஜோதி அம்மையார் அவர்கள் தெரிவித்த ஆம்புலன்ஸ், மார்ச்சுவரி வேன் பழுது பார்க்கப்படுதல், லிப்ட் அமைப்பது போன்ற பிரச்னைகள் எல்லாம் அரசாங்கத்தால் அரசாங்கத்தின் நிதி வசதிக்கேற்ப பரிசீலிக்கப்பட்டு, எல்லா இடங்களிலும் கேட்பதையெல்லாம் ஒரே நேரத்திலே நிறைவேற்ற முடியாத நிலைமையிலே 20 மார்ச்சுவரி



1974 மார்ச் 18] [திரு. க. அன்பழகன்]

வேன் தேவை, 30 ஆம்புலன்ஸ் தேவை, 12 லிப்ட் தேவையென்றால் அதிலே பிரையாரிடி க்ளெய்ம் (Priority claim) கருதி எது எதற்கு உடனடியாகத் தேவைப்படுகின்றதோ, அவைகட்கு 4 மார்ச்சுவரி வேன், 4 ஆம்புலன்ஸ், 3 லிப்ட் இப்படிப் பங்கிட்டுத் தரவேண்டிய நிலைமை இருக்கிறது. அப்படிப்பட்ட குறைபாடுகளுக்கு முக்கியமான காரணம் நிதி வசதியின்மைதான் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் துறையோடு சேர்ந்து பணியாற்றுகின்ற குடும்ப நலத் திட்டத்தின் பணி, ஒரு துறை மூலம் இயக்கப்படுகிறதே தவிர, அதனுடைய முனைப்புப் பணிகள் எல்லாம் மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் கடந்த மூன்றாண்டுக்காலமாக நடத்தப்பட்டது. மாவட்ட ஆட்சித் தலைவர், ரெவின்யூ அதிகாரிகள், மற்றைய அரசாங்க அலுவலர்கள் ஆகியோர்களின் ஒத்துழைப்பைப் பெற்றுத்தான் நடத்தப்பட்டு வருகின்றது. இன்டென்சிவ் கேம்ப் நடத்த வேண்டுமென்று மத்திய அரசு மூலமாக கொடுக்கப்பட்ட தொகையும் இந்த ஆண்டு நிறுத்தப்பட்டுவிட்டது. மத்திய அரசு தெரிவித்த கருத்து ஒரு காலகட்டத்திலே பத்தாயிரம் பேருக்கு அறுவை சிகிச்சை திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்றும் அதற்காக ஒவ்வொருவருக்கும் ரூபாய் 100 வீதம் கொடுப்பதாகச் சொல்லி அந்த முறையிலே 1971–72-லும், 1972–73-ம் ஆண்டிலும் அந்தத் தீவிர திட்டத்தை நிறைவேற்றினோம். சில இடங்களிலே ஊழியர்களுக்குக்கூட வருத்தம் ஏற்பட்டது. அரசாங்க அலுவலர்களை இந்தப் பணி செய்யுமாறு கட்டாயப்படுத்தலாமா என்றுகூடக் கேட்கப்பட்டது.

அந்தத் திட்டத்தின்படி விவசாயப் பெருங்குடி மக்கள், தொழிலாளர்கள், கைத்தறி நெசவாளர்கள் போன்றோருக்கு 100 ரூபாய் கிடைக்குமானால் அவர்கள் நல்ல ஆர்வத்தோடு முன் வருவார்கள் என்று எதிர்பார்த்ததற்கேற்ப இரண்டு லட்சத்து 80 ஆயிரம் பேர்கள், 2 லட்சத்து 50 ஆயிரம் பேர் என்னும் அளவில் இரண்டு ஆண்டுகளிலே பயன்பெற்று இருக்கிறார்கள். சென்ற ஆண்டிலே முதல் மூன்று மாதகாலம் வரை மத்திய அரசு உதவித் தொகை ஒதுக்கும் என்று எதிர்பார்த்தோம். ஆனால் பொருளாதார நெருக்கடியினால் இயலாது என்று கூறினார்கள். மறு பரிசீலனை செய்ய வேண்டுமென்று நாம் கேட்டோம். மீண்டும் இயலாது என்று தெரிவித்து விட்டார்கள்.

இதனால் கடந்த ஆண்டுகளில் நடைபெற்ற குடும்ப நலத் திட்டப்பணி அளவு இந்த ஆண்டு நிறைவேற முடியாத நிலை ஏற்பட்டது. மேலும் மத்திய அரசு புதுப் பதவிகள் ஏற்படுத்தக்கூடாது என்றும், ஏற்கனவே நிரப்பப்படாமல் இருக்கின்ற பதவிகளையும் நிரப்புதல் கூடாது என்றும் தடைவிதித்தார்கள். Vacancies should not be filled up and no new posts shall be filled up என்று அறிவித்து விட்டனர். அதற்குப் பின்னர் வழக்கமாக அவர்கள் தரவேண்டிய செலவுத் தொகையான 5 கோடி ரூபாயிலேயும் ஏறத்தாழ 20 விழுக்காடு, 25 விழுக்காடு வரையில் வெட்டு என்று சொல்லி நிறுத்திவிட்டார்கள். முனைப்புத் திட்டத்திற்கு தரவேண்டிய இன்சென்டிவ் அமௌண்ட் (Incentive Amount) தர முன்வராததுடன் நடைபெறுகிற பணிகளுக்காக, கட்டடங்களுக்காக ஆண்டுதோறும் கொடுப்பதாக ஒத்துக்கொண்ட

தொகையை 25 விழுக்காடு வரையில் குறைத்து விட்டதாகச் சொன்னார்கள். நாங்கள் ஏற்கனவே செலவழித்த தொகையை ஈடுசெய்கின்ற முறையிலேயாவது கொடுங்கள் என்று செயலாளரும், இயக்குநரும் மத்திய அரசினிடத்திலே மீண்டும் மீண்டும் கேட்டபின் அதை அடுத்த ஆண்டில் ஏற்றுக் கொள்ள ஆலோசிப்பதாகத் தெரிவித்துள்ளனர்.

அதோடு மட்டுமல்ல, புதிதாகச் செலவு செய்யக்கூடாது; கட்டடங்கள் புதிதாகக் கட்டக்கூடாது, பதவிகளை ஏற்படுத்தக்கூடாது, ஏற்கனவே காலியாக இருந்த பதவிகளைக்கூட நிரப்புதல் கூடாது என்றெல்லாம் சொன்னார்கள். 1972-73-ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட கட்டடப் பணிகள் நிறைவேற்றப்பட வேண்டும் என்பதாலும் குடும்பக் கட்டுப்பாடு பணிகள் ஒரு ஆண்டிலே அடியோடு சுணங்கிவிடாமல் இருப்பதற்காகவும், மாநில அரசே தன்னுடைய நிதியிலிருந்து தனியாக 50 லட்சம் ரூபாய் அளவு ஒதுக்கி சிகிச்சை பெறும் ஒவ்வொருவருக்கும் மத்திய அரசு வழக்கமாகத் தரும் தொகையுடன் ரூ. 40, 45 சேர்த்து வழங்கவும், மேலும் கட்டடப் பணிகள் நடைபெறுவது தொடரவும் அந்த நிதியை வழங்கி தொடங்கப்பட்ட பணிகள் நின்று போகாமல் பார்த்துக் கொள்கிறோம்.

[பிற்பகல் 2-00]

ஆகவே, இன்றைய தினம் இந்தத் துறையைச் சார்ந்த நிதி ஒதுக்கீடு வீணாகிவிட்டது என்று கருதத் தேவையில்லை. ஆனால் வழக்கமாக நிகழும் பணி வெற்றிகரமாக நடைபெறவில்லை என்பதை ஒத்துக் கொள்கிறேன். அதற்கு என்ன காரணம் தெரிவிக்கப்படுகிறது என்றால், கிராமங்களில் உள்ள தாய்மார்கள் ஐ.யு.டி. திட்டத்திற்கு இசைந்து வரும் நிலை இல்லை என்று சொல்கிறார்கள். கேட்டால் அவர்கள் சொல்கிறார்கள், ஐ.யு.டி. திட்டம் தாய்மார்கள் வரவேற்கத் தக்கதாக இல்லை. பலரும் ஒருமுறை அதை பயன்படுத்தினால் இப்படிப்பட்ட முறை எங்களுக்கு ஒத்துவரவில்லை. முடிந்தபோது நிரந்தரமான சிகிச்சை செய்து கொள்கிறோம், "டியூபெக்டமி" செய்து கொள்கிறோம் என்று சொல்கிறார்கள் என்று கூறப்படுகிறது.

மற்றொன்றும் சொல்ல விரும்புகிறேன். மற்றவகையான கருவிகளைப் பயன்படுத்துவது என்பது எப்பொழுதுமே புள்ளி விவரங்களின் அடிப்படையில் பயன்படுத்துவதாகக் கூறலாமே தவிர அவைகள் உறுதியான பயன் தருபவை அல்ல. அப்படிக் கொடுத்துப் பார்த்தாலும் கூட அதைப் பயன்படுத்துகிறார்களா என்று கூற முடியாது. நிரோத் இவ்வளவு செலவாகிறது என்ற கணக்கைத் நான் சொல்ல முடியுமே தவிர அவைகள் உண்மையில் பயன்படுத்தப்பட்டனவா, அதைப் பயன்படுத்தி தற்காத்துக் கொண்டார்களா என்று தெரிவிக்க முடியாது.

நம்முடைய நாட்டில் வாசக்டமி, டியூபெக்டமி என்ற இரண்டை தவிர வேறெதுவும் நிரந்தரமான வெற்றித் தரக் தக்கதாக இல்லை. திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் சொன்னார்கள். சிங்கப்பூரில் இரண்டாயிரம் வெள்ளி நாணயங்கள் கொடுத்து, அறுவை சிகிச்சையை ஏற்றுக்கொள்ளச் செய்கிறார்கள் என்று. இரண்டாயிரம் வெள்ளி நாணயங்கள் கொடுக்கிறார்களா என்பதைப்பற்றி எனக்குத் தெரியாது.





ஆனால் அதே நேரத்தில், சிங்கப்பூரில் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை ஏற்றுக் கொள்ளாவிட்டால், "டிஸ்-இன்சென்டிவ் (disincentive) ஏற்படுத்தியிருக்கிறார்கள். அரசாங்க அலுவலில் ஒருவர் இருந்து மூன்றாவது குழந்தை பிறந்தால் அவர்களுக்கு அளிக்கப்படும் வீட்டு வசதி உரிமை குறைக்கப்படும். அவர்களுடைய குழந்தைகள் படிக்கவேண்டு மென்றால் அதிகக் கட்டணம் வசூலிக்கப்படும். மூன்றாவது குழந்தைக்காக ஒரு தாய் பிரசவத்திற்காக மருத்துவ மனைக்குச் சென்றால், முதல் குழந்தையின் பிரசவத்திற்கு 20 ரூபாய் கட்டணம் வசூலித்தார்கள் என்றால், இரண்டாவது குழந்தையின் பிரசவத்திற்கு 50 ரூபாய் கட்டணம் வசூலித்தார்கள் என்றால், மூன்றாவது குழந்தையின் பிரசவத்திற்கு 200 ரூபாய் வசூலிப்பார்கள். சிங்கப்பூர் அரசு, வளமான அரசு, பொருளாதார நிலையிலே உயர்ந்துள்ள அரசு அங்கேயே disincentive to the Government officials and also to the public who get benefits from the Government if they be get more than two children என்ற முறையிலே ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அப்படித் தமிழ்நாட்டில் நாம் செய்ய வேண்டுமானால் அகில இந்திய அளவில் கொள்கை உருவாக வேண்டும். அகில இந்திய அளவில் கொள்கை உருவாகாமல் தமிழ்நாட்டிலே மட்டும் அதை நிறைவேற்றினால் அது இந்திய மக்களுக்குள்ளேயே சில வேற்றுமைகளை ஏற்படுத்திவிடும். அதுமட்டுமல்லாமல், அரசாங்க அதிகாரிகளுக்குக் கிடைக்க வேண்டிய சில உரிமைகள் தமிழ்நாட்டில் மட்டும் தடைபட்டுப் போய்விட்டதோ என்ற எண்ணம் ஏற்படும். ஆகவே இப்படிப்பட்ட பிரச்னைகளில் இன்னும் விரிவான பரிசீலனை தேவைப்படுகிறது.

கடந்த ஆண்டு குடும்ப நலத் திட்டம் பெருமளவு வெற்றிபெறவில்லை என்பதை ஒப்புக்கொள்கிறேன். அது வெற்றி பெறுமைக்கு மற்றொரு காரணம், ஒரு ஆண்டுத் தீவிரத் திட்டம் நடைபெறுவதைக் கண்டவர்கள் அடுத்த ஆண்டும் தீவிர முனைப்புத் திட்டம் வரும்பொழுது அதைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்று காத்திருக்கிறார்கள். கடந்த ஆண்டு 100 ரூபாய் கொடுத்தார்கள். மறுபடியும் 100 ரூபாய் கொடுக்கட்டும் என்று காத்திருக்கிறார்கள். ஏற்கெனவே தரப்பட்ட புள்ளிவிவரங்களின் அடிப்படையில் மத்திய அரசு குடும்ப நலத் திட்டத்தைப் பற்றிய சில உண்மைகளைத் தெரிவித்திருக்கிறது. 100 ரூபாய் கொடுப்பது என்பது அரசுக்கு இழப்பு அல்ல என்பதை மத்திய அரசு பொருளாதாரத் துறை சொல்லியிருக்கிறது. என்ன காரணம் என்றால், குடும்ப நலத் திட்டத்தைச் செயல்படுத்த இந்த நாட்டிலே ஒவ்வொருவருக்கும் ஏறத்தாழ 200 ரூபாய் அளவு சராசரியாக செலவிடுகிறது. இந்த 200 ரூபாய் செலவிடுவது நஷ்டம் அல்லவா என்ற கேள்விக்கு பதில் தெரிவித்துள்ளது. ஒரு குழந்தை பிறந்தால் அகில இந்திய அளவில் திட்டமிடும்பொழுது 800 ரூபாய் தேவையாகிறது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் 25,000 கோடி ரூபாய்க்கு திட்டமிட்ட போது ஆள் ஒன்றுக்கு 800 ரூபாய் மூலதனம் போட வேண்டியிருந்தது. இப்படி 200 ரூபாயைச் செலவழிப்பதன் மூலம் 800 ரூபாயை மிச்சப்படுத்துகிறோம். எனவே இது வரவேற்கத் தக்கதுதான்.

மற்றொரு கருத்தையும் பொருளாதார நிபுணர்கள் தெரிவித்திருக்கிறார்கள். 200 ரூபாய் செலவிட்டு ஒரு குழந்தை பிறப்பதைத் தடை செய்வதற்கு. ஆனால், குழந்தை பிறந்து விட்டால் ஐந்து வயது வரையிலே அரசுக்கும் அந்தக் குடும்பத்திற்குமாகச் சேர்த்து 4,000 ரூபாயிலிருந்து 6,000 ரூபாய் வரையில் செலவாகிறது. எனவே, இந்த 200 ரூபாய் செலவழிப்பதால் அதை மிச்சப்படுத்துகிறோம். அதற்காக இந்த 200 ரூபாயைச் செலவழிக்கலாம், தாராளமாகச் செலவிடலாம் என்று சொல்கிறார்கள். ஆனால் இவ்வளவும் தெரிவித்த மத்திய அரசு இந்த ஆண்டு நிறுத்திவிட்டது உதவித் தொகையை.

இந்தத் திட்டத்தின் மூலம் ஒரு வட்டாரத்திற்குப் பொதுவான நன்மைகள் ஏற்படுவதை வரவேற்கும் அதே நேரத்தில் அந்த மாநில மக்கள் மற்ற மாநில மக்களின் தொகையைவிடக் குறைந்துவிடுவதால் நாடாளுமன்றத்தில் பிரதிநிதிகளின் எண்ணிக்கை குறைந்துவிடுகிறது என்ற பிரச்சினை இந்த நாட்டிலே மிக முக்கியமான பிரச்சினையாக இருக்கிறது. அதை மறைக்கவும் முடியாது. மத்திய அரசு இந்த நாட்டிலே மிகவும் பயன்தரத்தக்க, இன்றியமையாத ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான வாயில்கள் அடைப்பட்டு கொண்டிருக்கின்றன என்று கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இப்படிப்பட்ட திட்டங்களை நிறைவேற்றுவதற்குப் போதுமான நிதியை கடந்த ஆண்டு ஒதுக்கீடு செய்யாததும், வருகின்ற ஆண்டுகளிலேயாவது முடியும் என்று உறுதியாகத் தெரிவிக்காததும் உள்ளபடியே வருத்தத்திற்குரிய ஒன்றாகும்.

திருமதி த. ந. அனந்தநாயகி : ஒதுக்கப்பட்ட பணம் செலவழிக்கப்படவில்லை என்று வரவுசெலவுத் திட்ட அறிக்கையிலே சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறதே, ஆனால் இங்கே அமைச்சரவர்கள் பணம் போதவில்லை, பணம் போதவில்லை என்று சொல்கிறாரே, இந்த எழுத்துக்களைப் பார்த்தால் குறைவாக....

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : ஒதுக்கப்பட்டது 1973-வது ஆண்டு மார்ச் மாதத்திற்குப் முன்பு. அப்பொழுதே ஒதுக்கப்பட்ட தொகை. அதற்குப் பிறகு செலவழிக்கப்படும் தொகைக்கு மத்திய அரசு கிராண்ட் தரும், அந்த செலவுத் தொகையை அப்படியே தரும் என்று எதிர்பார்த்தோம். ஆனால் மத்திய அரசு இரண்டு மூன்று வகையில் தடை விதித்து பின்னர் ஒரு தடையை நீக்கியுள்ளது. தடைகளை அறிவித்த காலத்தில் நாம் செய்து வந்த செலவைக் குறைக்க வேண்டியிருந்தது. நான்காவது கட்டத்தில் நாங்கள் விதித்துள்ள தடையை இந்த அளவிற்கு நீக்கியிருக்கிறோம் என்று தெரிவித்தார்கள். இவைகளெல்லாம் நிர்வாக அக்கறையில் ஏற்பட்ட விளைவைக் காட்டுகின்றன.

நாம் செலவழித்துவிட்டால் நாளைக்கு மத்திய அரசு அந்த நிதியைக் கொடுக்க மாட்டார்கள் என்றால் நாம் எப்படி ஈடுகட்டுவது என்ற அந்த அடிப்படையில் ஏற்பட்டது.

அடுத்து, நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன், மருத்துவ கல்வித் துறையில் இன்றைக்கு ஏற்பட்டு வரும் வளர்ச்சி தமிழகத்தைப்



பொறுத்தவரையில் பாராட்டத்தக்கதாகும். கல்வித்துறை பாராட்டத்தக்கது என்றால் ஒரு நான்கு ஆண்டுகளுக்கு முன்பு இருந்ததைவிட இன்றைக்கு அதிக எண்ணிக்கையில், தகுதியுள்ளவர்கள் மருத்துவக் கல்வித்துறையில் பணியாற்றுகிறார்கள். அந்த எண்ணிக்கை வளர்கிறது. போஸ்ட் கிராஜுவேட் படிப்பில் ஒவ்வொரு ஆண்டும் 100 பேருக்கு மேல் தகுதி பெறுகிறார்கள். 'நியூ ஸ்பெஷாலிடிஸ்' புதிய சிறப்பு வகுப்புகள் சில புதியதாகத் துவக்கப்பட்டிருக்கின்றன. தகுதி உள்ளவர்கள் உருவாகின்றார்கள். ஆகவே கல்வித்துறையைப் பொறுத்தவரையில் தரத்தை உயர்த்துவதற்குப் பயிற்சி பெற்ற டாக்டர்கள் இருக்கிறார்கள்.

திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் பிரச்சினையை முழுதும் எண்ணிப் பார்த்து பொது நலத்திற்காக ஒரு வேண்டுகோளை ஏற்றுக் கொள்வார்கள் என்று எதிர்பார்த்தேன். ஆனால் அவர்கள் கொஞ்சம் சிந்தித்துவிட்டு, முழுவதும் ஏற்றுக்கொள்வது கூடாது என்று, என்ற ". சேர்க்கும் மாணவர் எண்ணிக்கையைக் குறைக்க வேண்டாமென்று கூறினார்கள். மாணவர்கள் 6,000–7,000 பேர் தருகின்ற வேண்டுகோள். அவர்களுடைய தீர்மானம் என்னவென்றால், படித்துவிட்டு வெளியேறும்பொழுது டாக்டர் தகுதி பெற்றவர்களுடைய திறமையைப் பயன்படுத்திக் கொள்வதற்கான வாய்ப்புகள் இல்லாத காரணத்தாலும், அரசு அலுவல் கிடைக்காத காரணத்தாலும் நீங்கள் புதிதாகச் சேர்க்கிற மாணவர்களை இந்த ஆண்டு 20 சதவிகிதம் குறைக்க வேண்டும். அடுத்த ஆண்டு மேலும் 10 சதவிகிதம் குறைக்க வேண்டும், அதற்கு அடுத்த ஆண்டு மேலும் 10 சதவிகிதம் குறைக்க வேண்டும் என்று மொத்தத்தில் 40 சதவிகிதத்தைக் குறைக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அவர்கள் வேண்டுகோளை அப்படியே ஏற்றுக் கொள்ள வேண்டிய அவசியமில்லை.

ஆனால் டாக்டர் இலட்சுமணசாமி முதலியார் அவர்கள் தலைமையில் அமைந்த மருத்துவ வல்லுனர் குழு ஆராய்ந்து ஒரு மேல் பட்டப்படிப்புள்ள மருத்துவக் கல்லூரியில் 75 மாணவர்களைச் சேர்க்கலாம், மற்றக் கல்லூரிகளில் 100 பேர்களைச் சேர்க்கலாம் என்று தெரிவித்திருக்கிறார்கள். நாம் 175 பேர் வீதம் மூன்று கல்லூரிகளில் சேர்த்துள்ளோம். இதையெல்லாம் திரு. பொன்னப்ப நாடார் அவர்களுக்குத் தெளிவாகச் சொல்வது என்றால் இந்த நேரம் போதாது. அகில இந்திய மருத்துவக் குழு, கீழ்ப்பாக்கம் மெடிகல் காலேஜில் 75 பேர்களுக்கு மேல் இடமில்லை என்று தெரிவித்து இருக்கிறது. சென்னையிலே உள்ள மெட்ராஸ் மெடிகல் காலேஜை திருமதி. ஜோதி அம்மையார் அவர்கள் சொன்னதைப்போல் போஸ்ட் க்ராஜுவேட் இன்ஸ்டியூட்டாக உயர்த்த வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. போஸ்ட் க்ராஜுவேட் என்றால் 200-லிருந்து 250 பேர்கள் வரையில் போஸ்ட் க்ராஜுவேட் படிக்கிறார்கள். இந்த 260 பேர் பயிற்சியுடன் படிக்க இடம் வைத்துக் கொண்டு இந்த ஆண்டு 175 மாணவர்களைச் சேர்க்கலாமா? ஸ்டான்லி மெடிகல் காலேஜில் ஆண்டுக்கு 150 பேர் சேர்ந்து படிக்கிறார்கள். இப்படிப்பட்ட நெருக்கடியை, பயிற்சி கிடைப்பதில் உண்டாக்குவதால் பயிற்சியின் தரம் குறையாதா? கல்லூரி ஆசிரியர்கள் பெரிய பேராசிரியர்களாக

இருந்தாலும், பெரிய மருத்துவ நிபுணர்களாக இருந்தாலும் இவ்வளவு மாணவர்களைச் சேர்ப்பது நல்லதா என்றால், போஸ்ட் கிராஜுவேட் இன்ஸ்டிடியூட் ஆக இருந்தால் அண்டர் கிராஜுவேட் வகுப்பில் 75 பேர்களைத்தான் சேர்க்கலாம் என்று இலட்சுமணசாமி முதலியார் கருத்து தெரிவித்துள்ளார்.

அதன்படி பார்த்தால் இங்கு நூறு மாணவர்களைக் குறைக்க வேண்டும். ஸ்டான்லியில் எழுபது மாணவர்களைக் குறைக்க வேண்டும். கீழ்ப்பாக்கம் கல்லூரியில் 25 மாணவர்களைக் குறைக்க வேண்டும். தஞ்சைக் கல்லூரியில் 70 மாணவர்களைக் குறைக்க வேண்டும். ஏற்றுக் கொள்ளப்பட்ட ஸ்டாண்டர்டுபடி, நிர்ணயிக்கப்பட்ட அளவுக்கு மாணவர்களைச் சேர்ப்பதாக இருந்தால் 800 பேரைத் தான் சேர்த்துக் கொள்ள முடியும். ஆனால் சேர்க்கப்பட்டிருப்பது 1,025 பேர். போர் நெருக்கடி காலத்தில் சேர்க்கலாம் என்ற எண்ணம் 1,125 அளவுக்குப் போயிற்று. 1,015-லிருந்து 825-க்கு ஆவது வர எதிர்கட்சித் தலைவர்கள் ஒத்துழைக்க வேண்டும்.

இந்தப் பிரச்சினை என்னுடைய சொந்தப் பிரச்சினை அல்ல. முதலமைச்சருடைய பிரச்சினை அல்ல. முதலமைச்சர் அவர்களும், மற்றவர்களும் எதிர்கட்சித் தலைவர்களும் ஏற்றுக் கொள்ளக் கூடிய சீர்திருத்தங்களைச் செய்ய வேண்டுமென்று எண்ணுகிறேமே தவிர இது ஆளும் கட்சியின் பிரச்சினை அல்ல. அப்படிப்பட்ட நிலையில் எதிர்கட்சித் தலைவர்கள் சிறந்த பயிற்சி வாய்ப்புக்கு ஏற்ற அளவு என்ற முறையில் 800 அல்லது 825 பேருக்கு இடமளிப்பது போதும் என்று ஏற்றுக்கொள்வார்கள் என்று எதிர்பார்க்கிறேன். ஒரு வேளை நீங்கள் ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் நான் அந்த முடிவுக்குத் தள்ளப்படலாம். அகில இந்திய மெடிகல் கவுன்சில் ஏற்றுக் கொள்கிற கட்டத்தில் அதை வரையறுக்க வேண்டிய அவசியம் ஏற்படலாம் Recognition by the All-India Medical Council is most important என்பதை எல்லோரும் ஏற்பீர்கள் என்று நம்புகிறேன்.

இன்று காலையிலே கூட பார்த்தோம் ஒன்பது கல்லூரிகளில் ரெகக்னிஷனை நீக்கி இருப்பதாக அறிவித்திருக்கிறார்கள். அவை எல்லாம் மற்ற மாநிலங்களில். நம்முடைய மாநிலத்தில் உள்ள கல்லூரிகள் அந்த அளவிற்குச் செல்லவில்லை. நம்முடைய மாநிலக் கல்லூரிகள் அவ்வளவும் அரசுக் கல்லூரிகள். அவை ஓரளவு செம்மையாக நடக்கின்றன.

அடுத்து இந்த மருத்துவத் துறைக்கு ஆண்டுதோறும் எப்படிச் செலவு உயர்ந்து கொண்டே போகிறது என்பதையும் பார்க்க வேண்டும். 1966–67-ல் மருத்துவத் துறையை எடுத்துக் கொண்டால் ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 11 கோடி 73 லட்சம்.

Medical education and also Medical services in the districts. 1971–72-ல் 22 கோடியே 85 லட்சம் ரூபாய். 1972–73-ல் ரூ. 23 கோடி 96 லட்சம் ரூபாய். கடந்த ஆண்டு 1973–74-ல் 26 கோடி 66 லட்சம் ரூபாய். இந்த ஆண்டு 1974–75 க்கு ஒதுக்கப்பட்ட தொகை 28 கோடி 37 லட்சம் ரூபாய். இதிலே ஏறத்தாழ 1/3 பங்கு மெடிக்கல் எஜுகேஷனுக்கு போகிறது. இதிலே மருத்துவக் கல்வித் துறையில் முன்னேற்றம



ஏற்படுவதற்கான திட்டங்கள் தீட்டப்பட்டிருக்கின்றன. கோவை திருநெல்வேலி, செங்கல்பட்டு கல்லூரிகள் அதிக வசதி பெறவும் கட்டட வசதிகளுக்காகவும், நிதி ஒதுக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

நலத்துறையில் பேசுகையில் ஏராளமான கொசு உற்பத்தியாகிறது என்று சொன்னார்கள். கொசு உற்பத்தியாகிற இடம் கூடவா தெரியவில்லை என்று டாக்டர் ஹாண்டே அவர்கள் கேட்டிருக்கிறார். என்னையும் கொசு கடிக்கிறது. கொசுவைப் போக்குகிற பிரச்சினை அடிந்தளத்திலிருக்கும் பணியாளரிடத்தில் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. மேலே உள்ளவர்கள் ஓரளவு கண்காணிக்கிறார்கள். சென்னை போன்ற மிகப் பெரிய நகரத்தில் ஒரு பகுதியைக் கண்காணிக்கிற நேரத்தில் இன்னொரு பகுதியில் பிரச்சினை வளர்ந்து விடுகிறது. பல்வேறு பிரச்சினைகளாக இருக்கின்றன.

அண்மையில் சிறப்பு அதிகாரி நியமிக்கப்பட்டதன் காரணமாக அவர் இந்த பணிகளை ஒழுங்குபடுத்தி வருகிறார் என்று மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அப்படி ஒழுங்குபடுத்துகிறபோது ஏற்பட்ட சிக்கலைத்தான் திரு கே. எம் சுப்பிரமணியம் அவர்கள் குறிப்பிட்டார்கள் என்று கருதுகிறேன். மலேரியா ஒழிப்புப் பணியையும் மற்றும் சுகாதாரப் பணியையும் ஒருங்கிணைத்து இருக்கிறார்கள். இதற்கென்று மத்திய சர்க்கார் தனியாக நிதி ஒதுக்குகிற காரணத்தால், இப்படி ஒருங்கிணைக்கப்பட்டதன் மூலமாக அந்த நிதியைப் பெறுவதில் குறைபாடு ஏற்பட்டு விடுமோ என்ற ஐயப்பாடும் இருக்கிறது. இருந்தாலும் அகில இந்தியாவில் ஒரு கருத்து 'Health and other Services like Medical Service should be integrated—preventive and also curative. All sides of the Health Service should be integrated' என்னும் அடிப்படையில் மத்திய அரசு ஆலோசித்து வருகிறது.

பல ஆலோசனைகளை மத்திய அரசு மேற்கொள்கிறது. திட்டவட்டமான முடிவு அவர்களுக்கே ஏற்படவில்லை. இப்படிப்பட்ட கட்டத்தில் அப்படி சேர்க்கப்பட்டது ஒரு வகையில் நியாயம். வருங்காலத்தில் இந்தப் பணியை செவ்வனே செய்ய முடியும்.

மலேரியாவை ஒழிக்க திட்டம் 8 நகரங்களில் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. தனிப்பட்ட இடங்களில் அதிகமான அளவு யானைக்கால் நோய் எங்கெங்கு இருக்கின்றன என்ற புள்ளி விவரங்களை எடுத்து அந்த இடங்களில் அதைக் போக்கும் முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்படுகின்றன. நாகர்கோயில் வட்டாரத்தில் ஒரு கிராமத்தில் அதிகமாக இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். அதைப் பரிசீலிக்கும்படி கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஒரு பகுதி கிராண்ட் என்ற முறையில் உதவித் தொகை

வழங்கப்படுகிறது. மிச்சத்தொகையை நகராட்சியோ அல்லது ஊராட்சியோ ஏற்றுக் கொள்ளவேண்டும். அந்த வகையில் அரசு நிச்சயமாக உதவி செய்யும்.

நலத்துறையைப் பார்ப்போமேயானால் நலத்துறையும் குடும்ப நலத் திட்டமும் ஒன்றாகச் சேர்ந்து 1971–72-ல் ஒதுக்கப்பட்ட தொகை 11 கோடியே 44 லட்சம் ரூபாய். அடுத்த ஆண்டு 1972–73-ல் 9 கோடியே 61 லட்சம் ரூபாய் நலத்துறைக்கும்; 6 கோடியே 88 லட்சம் ரூபாய் குடும்ப நலத் திட்டத்திற்கும் ஒதுக்கப்பட்டது. அடுத்த ஆண்டு 1973–74-ல் நலத்துறைக்கு 10 கோடியே 35 லட்சம் ரூபாயும், குடும்ப நலத்திட்டத்திற்கு 5 கோடியே 2 லட்சம் ரூபாயும் ஒதுக்கப்பட்டது. இந்த ஆண்டு குடும்ப நலத்திட்டத்திற்கு மத்திய அரசு உதவித் தொகை தருவதைக் குறைத்துவிட்ட காரணத்தால் இரண்டு துறைக்கும் சேர்ந்து 15 கோடியே 75 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஏறத்தாழ 10 அல்லது 11 கோடி ரூபாய் நலத் துறையைச் சாரும். மிச்சமிருப்பது குடும்ப நலத்திட்டத்திற்கு. மத்திய அரசு உதவியைக் குறைத்த காரணத்தால் குடும்ப நலத்திட்டத்திற்கு செலவழிப்பதில் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது.

அர்பன் டெவலப்மெண்ட் என்னும் நகர வளர்ச்சி துறை சிறந்து இயங்கி வருகிறது. சிறு துறையாக இருந்தது இன்றைக்கு தனிவடிவம் பெற்று 4 கோடி ரூபாய் அளவுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதற்கு ஒதுக்கப் பட்டிருக்கிற 4 கோடி ரூபாயும் சேர்த்து மொத்தமாக இந்த இனங்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிற தொகை குடி நீர்த் திட்டமும் சேர்ந்து ஏறத்தாழ 50 கோடி ரூபாய்.

தமிழ்நாடு கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் மணலி அவர்கள் பேசுகிறபோது தமிழ்நாட்டிலுள்ள மக்கள் ஒவ்வொருவருக்கும் 4 ரூபாயிலிருந்து 5 ரூபாய் வரை செலவழிக்கிறோம் என்று சொன்னார்கள். ஏறத்தாழ மருத்துவப் பணிக்கு பிரிவெண்டிவ் மெடிசனும் சேர்த்து ஆள் ஒன்றுக்கு ரூ 5 செலவாகிறது. $4\frac{1}{4}$ கோடி மக்களுக்கு 21 கோடி ரூபாயிலிருந்து 22 கோடி ரூபாய் வரை செலவாகிறது. சுகாதாரத் துறையில் ஆள் ஒன்றுக்கு ரூ 3 செலவாகிறது. குடிநீர் திட்டத்திற்காக ஆள் ஒன்றுக்கு 1 ரூபாய் செலவாகிறது. நகர் அபிவிருத்தித் திட்டத்திற்காக ரூபாய் 1 செலவாகிறது. மொத்தமாகப் பார்க்கும் போது 4 கோடி மக்களுக்கு 50 கோடி ரூபாய் இந்தப் பணிகளுக்கு எல்லாம் சேர்த்து செலவாகிறது. இது ஆள் ஒன்றுக்கு (பர் காபிடா) பத்து ரூபாயிலிருந்து 12 ரூபாய் வரை செலவழிக்கப்பட்டு இந்த நல்ல பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதைப் பெருமையோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இந்தப் பணிகள் இப்படி நடைபெறுகிறபோது குடிநீர் வாரியப் பணி ஒருமுகப்படுத்தப்பட்ட பணியாக இன்னும் ஆகவில்லை. குடிநீர் வாரியத் தால் நிறைவேற்றப்படும் பணிகளில் ஒரு பகுதிக்கு மத்திய அரசு உதவி தருகிறது.



accelerated programme for rural water supply கிராமங் களுக்குக் குடிநீர் திட்டத்தினை விரிவுப்படுத்தும் அடிப்படையில் இன்னொரு பக்கம் "யூனிசெப்", ரிக்ஸ் முதலான கருவிகளைக் கொடுக்கிறது. மாநில அரசு குடிநீர்த் திட்டமும் இருக்கிறது. இது தவிர ஆர். டி. எல். ஏ. துறை மூலம் கிராமங்களுக்கான குடிநீர்த் திட்டமும் செயல்பட்டு வரு கிறது. அரிஜன மக்களாக இருந்தால், தாழ்த்தப்பட்ட மக்களாக இருந் தால் அவர்கள் வாழும் பகுதியிலே குடிநீர்த்திட்டத்திற்காக தனியாக அரசாங்கம் செலவிடுகிறது. வேறு உதவிகளின் கீழ் எந்த நிதியும் பெறுமல் நடத்தப்படுகிற திட்டமும் இருக்கிறது. இப்படிப்பல்வேறு வகை களில் குடிநீர்த் திட்டம் நிறைவேற்றப்படுகிறது.

அப்படி நிறைவேற்றுகிற திட்டத்தில் பெரிய நகரங்களுக்கான திட்டத்தை அரசே தனிப் பொறுப்பாக ஏற்றுக் கொண்டு குடிநீர் வாரியத்தின் மூலமாக மிகப் பெரிய அளவிற்கு மூலதனச் செலவானாலும்கூட உரிய கடன் வசதியைக் கொடுத்து நிறைவேற்றுகிறது. டாக்டர் ஹாண்டே அவர்கள் வீராணம் திட்டத்தால் கிடைக்கக் கூடிய பலன் விரைவில் கிட்டுமா என்று கேட்டார்கள். திட்டமிட்டபோது இவ்வளவு பைப்கள் இவ்வளவு காலத்தில் உற்பத்தி செய்யலாம். இந்த பைப்புகளைப் பொருத்தி இணைக்க இவ்வளவு இடைவெளி காலம் இருந்தால் போதும் என்னும் அடிப்படையில் மூன்று நான்கு ஆண்டுக் காலத்தில் முடித்து விடலாம் என்று திட்டமிடப்பட்டது.

இந்த பைப்புகள் தயாரிப்பதில் ஏற்பட்ட இடர்ப்பாடு, அவற்றை பதிப்ப தில் ஏற்பட்ட இடர்ப்பாடு, மின்சாரம் கிடைப்பதில் ஏற்பட்ட இடையீடுகள் ஆகியவற்றின் காரணமாகக்காலதாமதம் ஏற்பட்டிருக்கிறது. இன்னும் ஓராண்டு அல்லது $1\frac{1}{4}$ ஆண்டு காலத்தில் முடிந்துவிடும். அந்த அள விற்கு வீராணம் தண்ணீரை சென்னை மக்களுக்கு வழங்கச் செய்ய அக்கறை எடுத்துக் கொண்டு பொறுப்போடு இந்தத் துறையினர் பணி யாற்றி வருகிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

கோவையில் சிறுவாணித் திட்டம் குறித்து அண்மையில் ஒப்பந்தம் நிறைவேறியபின் அது ஒரு சிறப்புப் பணியாகத் தனிக் கவனத்துடன் நடைபெறுகிறது. அது பத்து கோடி ரூபாய் அளவில் உள்ள பெரிய தொரு திட்டம். அதற்கிடையில் இரண்டு கோடி ரூபாய் செலவாகும். இடைக் காலத் திட்டத்தை நிறைவேற்றினால், ஒன்று அல்லது ஒன்றரை ஆண்டில் இத்திட்டம் முடிந்து கோவை மக்கள் கோடை காலத்தில் தண்ணீ ருக்குத் திண்டாடுகிற கஷ்டத்தைக் குறைக்கலாம் என்பதற்காக அத்திட்டம் ஏற்றுக்கொள்ளப்பட்டு அப்பணிகள் இப்போது நடைபெற்றுக்கொண்டிருக் கின்றன.

நெல்லித்துறைத்திட்டம் 13 கோடி ரூபாய் திட்டம், அத்திட்டத்தை நிறைவேற்றியதற்குப் பின்னர் மெயின்டெனன்ஸ் செலவு ஆண்டுதோறும் 98 லட்சம் ரூபாய் ஆகுமென்று கணக்கிடப்பட்டுள்ளது. சிறுவாணி திட்டத்திற்கு ஆண்டு ஒன்றுக்கு பத்து அல்லது பன்னிரண்டு இலட்சம்

ரூபாய் தான் ஆகிறது. ஆகவே நீண்ட காலம் மக்களுக்குப் பயன்படக் கூடிய இத் திட்டத்தை, இந்தச் சிறுவாணித் திட்டத்தையே மேற்கொண்டு நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம். கொடுக்கப்பட்டுள்ள வெட்டுத் தீர்மானங்களில் பல பிரச்னைகள் கூறப்பட்டுள்ளன. அவற்றை எல்லாம் பரிசீலித்து அதற்கான பதில்களைப் பெற்றிருக்கிறேன்.

அதில் ஒவ்வொன்றையும் எடுத்துச் சொல்லிக்கொண்டே போனால் இந்த அவையில் உங்களை எல்லாம் ஏதோ பகை காரணமாக பட்டினி போடுவதுபோல் கருதத் தோன்றும். நல்வாழ்வுத் துறையை நீங்கள் பட்டினி போடக்கூடாது என்று நான் கேட்டுக்கொண்டிருக்கும் போது உங்களைப் பட்டினி போடும் பாவம் என்னைச் சேரக்கூடாது. எனவே ஒவ்வொரு வெட்டுத் தீர்மானமாக எடுக்துப் பதில் கூறாமல்—ஒவ்வொரு வெட்டுத் தீர்மானமும் ஆய்ந்து பரிசீலிக்கப்பட்டிருக்கிறது என்று தெரிவித்துக்கொள்வேன். சில குறைகள் இருக்கத்தான் செய்யும். பேச்சில் குறை ஏற்படுவதைப் போல், எழுத்தில் குறை ஏற்படுவதுபோல், சொல்லப் போனால் நண்பர்கள் உரையாடுகிறபோது குறைவு தரும் சில வார்த்தைகள் வருவதைப்போல் நிர்வாகத்தில் சில குறைகள் இருக்கத்தான் செய்யும். அதை உணர்ந்தவர்கள்தான் இந்தப் பக்கத்தில் இருக்கிறோம். எனவே உறுப்பினர்கள் நேரம் காலம் பாராமல் எந்த நேரத்தில் வேண்டுமானாலும் தங்களுடைய கருத்துக்களை வழங்கலாம்.

எங்களது வேண்டுகோள் எல்லாம், உங்கள் எல்லோருடைய ஒத்துழைப்பும் நல்லெண்ணமும் இந்தத் துறைக்கு இருந்தால் சில உறுப்பினர்கள் கூறியதுபோல் மனிதாபிமான உணர்ச்சி இல்லாமல் சில டாக்டர்கள் பணியாற்றுகிறார்கள் என்ற நிலையிலிருந்து விடுபட்டு, ஏதாவது குறையிருந்தாலும், அவற்றைக் களைந்து அவர்கள் மனித சமுகத்தொண்டில், தலை சிறந்த ஒரு தொண்டினைச் செய்கிறார்கள் என்ற உணர்ச்சியோடு பணியாற்றச் செய்ய முடியும்.

திரு. மணலி அவர்கள் குறிப்பிட்டார்கள் சித்த மருத்துவம் சரியாகக் கவனிக்கப்படவில்லை என்று, ஒத்துக்கொள்கிறேன். அதைக் கவனிப்பதற்குக்கூட சூழல் விடவில்லை என்பது உண்மைதான். அதற்காக ஏற்படுத்தப்பட்ட மூப்புக் குழுவினர் தமது பணியில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

மிகப் பெரிய அகராதி ஒரு தஞ்சை சாம்பசிவம் பிள்ளை அவர்கள் சித்த மருத்துவம் பற்றி எழுதிய ஒரு அகராதி, 4,000 பக்கங்கள் கொண்டது. நான்கு சேம்பர்ஸ் அளவு உள்ளது. அதில் 1,800 பக்கங்கள் அளவிற்கு அச்சிடப்பட்டு மீதமுள்ள பகுதி அச்சுக்கு வராமல், கையெழுத்தில் சில பக்கங்கள் செல்லரித்துப் போயிருக்கிறது. அவற்றையெல்லாம் தொகுப்பதோடுகூட அச்சில் கொண்டுவர கையெழுத்து ஏடுகளை எடுத்து திரும்பவும் எழுதிக்கொண்டிருக்கிறோம். அந்த ஏடுகளைத் தந்தவர்களுக்கு ஏறத்தாழ ஐயாயிரம் ரூபாய் வரை, இரண்டு தடவைகளில் அந்த கையெழுத்து ஏடுகளுக்காக நிதி கொடுத்திருக்கிறோம். அதை எடுத்து எழுத டாக்டர் துரைராஜ் என்பவரை நியமித்து அவருக்கு உதவியாக ஒருவரையும் நியமித்துள்ளோம். அவருக்கு வயது 70 ஆகிறது. அவர் மூலம் அதை எடுத்து எழுதி அச்சிட முயலுகிறோம்.



திரு. மணலி அவர்களுக்கு இன்னும் மகிழ்ச்சி ஏற்படக்கூடிய ஒரு செய்தி சிதைந்துபோன, ஆராயப்படக்கூடிய, முறைப்படுத்தக்கூடிய அளவிற்கு சித்த மருத்துவச் சுவடிகள் நூற்றுக் கணக்கில் உள்ளன. எவை எவை உடனடியாக அச்சிடப்பட்டால் சித்த மருத்துவ வளர்ச்சிக்குப் பயன்படுமோ எவைகளை எல்லாம் அச்சிடமுடியுமோ—அவைகளை அச்சிட—அரசாங்கம் ஓரளவு நிதி ஒதுக்கியிருந்தாலும், முழு உற்சாகத்தோடு நிறைவேற்ற அரசு முறை இதற்கு ஒத்துவராது என்பதை அமைச்சராகிய நானே உணர்ந்து—பழனி கோவில் அறங்காவலரைக் கேட்டதற்கிணங்க அந்நூல்களை அச்சிட அவர்கள் இரண்டு இலட்சம் ரூபாய் நன்கொடை வழங்க இசைந்திருக்கிறார்கள். அதனால் இருபது முப்பது அருமையான சித்தர் நூல்களை வெளியிடவும் சித்த மருத்துவ மேல்படிப்பிற்கு, எம்.டி. பட்டப் படிப்பிற்கு ஆராயத் தேவையான நூல்கள் கிடைக்க வழி செய்வதற்கு பல்வேறு முனைகளில் முயற்சி நடைபெறுகிறது. சித்த மருத்துவம் குறித்து எனக்குப்போதுமான அறிவு இல்லாத காரணத்தால் சித்த மருத்துவத்தின் வளர்ச்சிக்கு நான் அதிகமாகப் பணியாற்ற முடியவில்லை. அது பற்றி ஆலோசனைகள் வழங்கினால் என்னால் இயன்றதைச் செய்ய முயற்சிப்பேன்.

ஆயுர்வேதம், யூனானி உட்பட அனைத்து முறைகளும் தரம் குறைந்து போய் விட்டன என்று குறிப்பிட்டார் டாக்டர் ஹாண்டே அவர்கள். அவர்கள் சொல்லும் குறையைப்போக்க பயிற்சி பெற்றவர்களில்,ரிட்டயரானவர்களின் பணியை நீட்டிக்கவேண்டியிருக்கிறது. ஆகவே வேறு யாருக்குக் கொடுக்காவிட்டாலும் ஆயுர்வேதத்தில் நீண்ட காலம் பயிற்சி பெற்றவர்களுக்குப் பதவிக் காலத்தை நீட்டிக்கத் தடை இன்றி இசைய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வயதானதெல்லாம் கெட்டுப் போனவையல்ல, வயது குறைந்ததெல்லாம் திறமையுள்ளவையும் அல்ல.

ஹோமியோபதி கல்லூரி ஏற்படுத்தவேண்டுமென்றால், எல்லாவிதமான வசதிகளையும் செய்து கொடுத்தால்தான் அதை நல்ல முறையில் ஏற்படுத்த முடியும். நம் கவுன்சிலில் உள்ளவர்கள் அப்படிப்பட்ட கல்லூரி நடத்தியவர்கள் அல்ல. ஆகவே ஆந்திரா—கர்நாடகம் போன்ற மாநிலங்களில் உள்ளவர்களின் ஆலோசனைகளைப் பெற்றுச் செய்ய வேண்டும் என்ற நிலைதான் இருக்கிறது. கடந்த ஆண்டு ஒரு இலட்சம் ரூபாய் ஒதுக்குமாறு ஏற்பாடு செய்தோம். ஆனால் எல்லாவிதமான வசதிகளும் இருந்தால்தான் நல்ல முறையில் அதை நடத்த முடியும்.

மதுரையில் ஒரு கல்லூரி நல்ல முறையில் நடக்கிறது. அதை தற்காலிகமாக அங்கீகரித்திருக்கிறோம். அதற்கு என்ன வசதி தேவைப்படுகிறதோ அதற்கு மத்திய அரசு உதவி செய்யும் என்று எதிர்பார்த்ததற்கு இதுவரை பதில் வரவில்லை. ஆக, ஏற்படுத்தப்பட்ட கல்லூரிகளைக் காப்பாற்ற வழி செய்ய வேண்டும்.

கன்னியாகுமரியில் ஒரு கல்லூரி வேண்டும், பொதுத் திண்ணையில் மருத்துவப் பாடம் நடத்துகிறோம் என்பது போன்று முயற்சித்தால் அது சிறப்பாக இருக்காது. ஒவ்வொரு துறையிலும் என் சக்திக்கேற்ற

அளவில் குறைகளை நீக்க முயற்சி எடுத்துக்கொள்கிறேன். மேலும் குறைகள் இருந்தால் உறுப்பினர்கள், எதிர்க்கட்சித் தலைவர்கள், எந்த நேரத்தில் தெரிவித்தாலும் அவற்றைத் திருத்துவதற்கு, மாற்றுவதற்கு, முறைப்படுத்துவதற்கு, ஒழுங்குபடுத்துவதற்கு நான் சித்தமாக இருக்கிறேன் என்று கூறி வெட்டுத் தீர்மானங்களின் கருத்துக்கள் பரிசீலிக்கப்படும் என்ற காரணத்தால் தனித்தனியாக வலியுறுத்தாது மற்ற உறுப்பினர்களுக்கு நீங்கள் ஓய்வு தர வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் வேண்டுகோள் உரையை இந்த அளவோடு நான் முடித்துக்கொண்டு அனைவருக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

கோரிக்கை எண். 18-க்கான டாக்டர் எச்.வி. ஹாண்டே, திரு. என். டென்னிஸ், திரு. கே. எஸ். கோதண்டராமையா ஆகியோருடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டன.

திரு. என். கே. பழனிசாமி, திரு. ஆ. கு. சுப்பையா, திரு. எ. சுப்பிரமணியம் ஆகியோர் இருக்கையில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டனவாகக் கருதப்பட்டன.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : பேரவை முன்னுள்ள கேள்வி :

"நிதிக் கோரிக்கை எண் 18.—மருத்துவம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 28,37,62,800-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்.

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

திரு. ஆ. கு. சுப்பையா, திரு. என். கே. பழனிசாமி, திரு. எ. சுப்பிரமணியம் ஆகியோர் இருக்கையில் இல்லாததால் கோரிக்கை எண் 19-க்கான அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டனவாகக் கருதப்பட்டன.

டாக்டர் எச். வி. ஹாண்டே, திரு. என். டென்னிஸ் ஆகியோருடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டன.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : பேரவை முன்னுள்ள கேள்வி :

"நிதிக் கோரிக்கை எண். 19-பொதுச் சுகாதாரம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 15,76,63,300-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக்கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

திரு. கோவை செழியன், திரு. எ. சுப்பிரமணியம், திரு. என். மருதாசலம் ஆகியோர் இருக்கையில் இல்லாததால் கோரிக்கை எண்



47-க்கான அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டனவாகக் கருதப்பட்டன.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டது.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : பேரவை முன்னுள்ள கேள்வி :

"நிதிக் கோரிக்கை எண் 47—பொதுச் சுகாதாரம், துப்புரவு நீர் வழங்கல் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,71,85,100-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

மானியக் கோரிக்கை எண் 33-க்கான திரு. ஆர் பொன்னப்ப நாடார், டாக்டர் எச். வி. ஹாண்டே ஆகியோருடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டன.

திரு. எ. சுப்பிரமணியம் அவர்கள் இருக்கையில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெற்றுக் கொள்ளப்பட்டதாகக் கருதப்பட்டது.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : பேரவை முன்னுள்ள கேள்வி :

"நிதிக் கோரிக்கை எண் 33—நகர்ப் பகுதி வளர்ச்சி என்ற தலைப்பின்கீழ் ரூ. 4,31,47,600-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று நாளைக் காலை 9 மணி அளவில் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2-30-மணியளவில் ஒத்திவைக்கப்பட்டது.

4. <u>பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.</u>

## A. *Statutory Rules and Orders.*

**@ 180. Notification issued with G.O.Ms.No.2345, Rural Development and Local Administration, dated the 30th October 1973 in regard to preliminary notification for declaration of the areas forming the Ottacamond local Planning Area. (Laid on the Table of the House under section 123 (2) of the Tamil Nadu Town and Country Planning, Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972)].**

[1974 மார்ச் 18

A. *Statutory Rules and Orders.*

†181. Notification issued with G. O. Ms. No. 2424, Agriculture, dated the 13th December 1973 in regard to an amendment to the Tamil Nadu Agricultural Produce Markets Rules, 1962 [*Laid on the table of the House under section* 29(4) *of the Tamil Nadu Agricultural Produce Markets Act*, 1959 (*Tamil Nadu Act* 23 *of* 1959)].

182. Notification issued with G. O. Ms. No. 2053, Rural Development and Local Administration, dated the 20th September 1973 in regard to preliminary notification for declaration of the areas forming the Puliangudi Local Planning Area. (*Laid on the Table of the House under section* 128(2) *of the Tamil Nadu Town and Country Planning Act*, 1971 )*Tamil Nadu Act* 35 *of* 1972)].

183. Notification issued with G.O. Ms. No. 2163, Rural Development and Local Administration, dated the 1st October 1973 in regard to preliminary notification for declaration of the areas forming the Kotagiri Local Planning Area. [*Laid on the Table of the House under section* 123(2) *of the Tamil Nadu Town and Country Planning Act*, 1971 (*Tamil Nadu Act*, 35 *of* 1972)].

184. Notification issued with G. O. Ms. No. 2344, Rural Development and Local Administration, dated the 30th October 1973 in regard to preliminary notification for declaration of the areas forming the Arni Local Planning Area. (*Laid on the table of the House under section* 123(2) *of the Tamil Nadu Town and Country Planning Act*, 1971 (*Tamil Nadu Act*, 35 *of* 1972)].

185. Notification issued with G. O. Ms. No. 2524, Rural Development and Local Administration, dated the 23rd November 1973 in regard to amendment to the rules to regulate the invitation and acceptance of tenders for contractors entered into by the Corporation of Madras. [*Laid on the table of the House under section* 348(*d*) *of the Madras City Municipal Corporation Act*, 1919 (*Tamil Nadu Act*, *I of* 1919)].

B. *Reports, Notifications and Other Papers.*

‡ 74. Policy note on Demand No. 6—Registration Department (English and Tamil).

† 75. Performance Budget on Backward Classes.

† Laid on the table of the House on 16th March 197

‡ Despatched to Members on 15th March 1974.



1974 மார்ச் 18]

## இணைப்பு I.

[336-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

### கோரிக்கை எண் 19.

### மக்கள் நல்வாழ்வுத் துறை—1974-75.

பேரவைத் தலைவர் அவர்களே, கோரிக்கை எண் 19—மக்கள் நல்வாழ்வுத் துறை என்பதன்கீழ் ரூ. 15,76,63,300-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்கவேண்டுமென்று முன்மொழிகிறேன்.

நமது மக்களின் உடல்நலனை மேம்படுத்துவதே நமது அரசின் நாட்டமாக என்றும் இருந்து வந்துள்ளது. மக்கள் நல்வாழ்வு என்பது நோயற்ற வாழ்க்கை என்பது மட்டுமல்ல; உடற்கட்டும் உளவன்மையும் சமூக நல்வாழ்வும் அமைந்த வாழ்கையே ஆகும். ஒவ்வொருவரும் தமது ஆக்கப்பணிகளின் மூலம் சமூகத்திற்குப் பணியாற்றுவதற்கு ஏற்ற வகையில் அவரது உடல் நலனை நன்கு பேணி வருவதற்கு நியாயமான வாய்ப்பளிக்கப்பட வேண்டும். இதையே நோக்கமாகக் கொண்டு, தமிழ்நாடு அரசு சமுதாய நல்வாழ்வுப் பணிகளின் வளர்ச்சிக்காக பல்வேறு சமுதாய நல நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இவற்றில் தாய்-சேய் நலம், ஊட்டச் சத்து மேம்பாடு, தொற்று நோய்த் தடுப்பும் கட்டுப்பாடும், பிறப்பு-இறப்புப் புள்ளி விவரங்களைப் பதிவு செய்தல், சுகாதாரக் கல்வியை மக்களிடையே பரப்புதல், சுற்றுப்புறத் தூய்மையை வளர்த்தல் ஆகியவை அடங்கும்.

நமது மாநிலம், 1,30,069 சதுர கிலோ மீட்டர் பரப்புடையது. 1971 மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 41,199,168. இதில் 28,734,334 மக்கள் கிராமப் பகுதிகளில் வாழ்கின்றனர். 12,464,834 மக்கள் நகர்ப்புறப் பகுதிகளில் வாழ்கின்றனர். கிராமப்புறப் பகுதி, நகர்ப்புறப் பகுதி மக்களுக்கு இடையே உள்ள விகிதாச்சாரம் 70 : 30 ஆகும்.

மக்கள் நல்வாழ்வுத் துறையின் மிகச் சிறப்பான கூறுகள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன :

### தாய்-சேய் நலன் உட்பட (சமுதாய) மக்கள் நல்வாழ்வை மேம்படுத்துதல்.

### ( A ) தொடக்க நல்வாழ்வு நிலையங்கள்.

தொடக்க நல்வாழ்வு நிலையம் ஊராட்சி ஒன்றியமாக உள்ள தனது ஆட்சிப் பகுதிக்குள் வசிக்கும் மக்களுக்கு நல்வாழ்வுப் பணிகளைச் செய்துவரும் ஒரு நிறுவனமாகும். நமது மாநிலத்தில் 374 ஊராட்சி ஒன்றியங்கள் உள்ளன. சேலம் மாவட்டத்தில் இளச்சிப்பாளையம், ராசிபுரம் ஆகிய இரண்டு ஒன்றியங்கள் நீங்கலாக எல்லா ஊராட்சி ஒன்றியங்களிலும் தொடக்க நல்வாழ்வு நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. பின்வரும் 7 ஒன்றியங்கள் ஒவ்வொன்றிலும் இரண்டு தொடக்க நல்வாழ்வு நிலையங்கள் உள்ளன : துரிஞ்சாபுரம், கீழ்பெண்ணாத்தூர், மொடக்குறிச்சி, கொடுமுடி, வெள்ளக்கோயில், ஆக்கநாயக்கல்பாளையம், ஆத்தூர்.

ஆக, நமது மாநிலத்தில் 379 தொடக்க நல்வாழ்வு நிலையங்கள் உள்ளன. நமது மாநிலத்தில் உள்ள கிராமங்களுக்கு தொடக்க நல்வாழ்வு நிலையங்கள் மூலம் நலப்பணி நிறைவேற்றப்படுகிறது.

தொடக்க நல்வாழ்வு நிலையம் ஆற்றிவரும் பணிகளில் பின்வருவன அடங்கும் : பொது மருத்துவப் பராமரிப்பு, தாய்-சேய் உடல் நல முன்னேற்றம், குடும்பநலத் திட்டம், மக்கள் கழிவுகளை சுகாதாரமான முறைகளில் அப்புறப்படுத்துதல், குடிநீர்ப் பாதுகாப்பு, தகுந்த ஊசி மருந்துகள் மூலம் தொற்று நோய்க்கட்டுப்பாடு, அம்மை நோய், காலரா, மலேரியா போன்ற தொற்று நோய்கள் உண்டாவதைக் கண்டுபிடித்துக் கண்காணித்தல் ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் அளித்து சுற்றுப்புறத் தூய்மையை மேம்படுத்துதல், சத்துணவு அவசியம் பற்றிக் கல்வி அளித்தல், சத்துணவுக் குறைவினால் ஏற்படும் நோய்களின் கட்டுப்பாடு, பிறப்பு—இறப்புப் புள்ளி விவரங்களைச் சேகரித்தல், பிறப்பு-இறப்புப் பதிவு முறையைச் சீரமைத்தல், பள்ளிச் சிறார்களின் நல்வாழ்வு, நலப்பாதுகாப்புக் கல்வி ஆகியவை.

மருத்துவப் பராமரிப்புக்காக ஒவ்வொரு தொடக்க நல்வாழ்வு நிலையத்திலும் புறநிலை நோயாளிப்பிரிவும், 6 படுக்கைகள் கொண்ட அகநிலை நோயாளிப் பிரிவு உள்ளன. புறநிலை நோயாளிப்பிரிவில் நோயாளி பரிசோதனை செய்யப்பட்டு தக்க மருத்துவம் அளிக்கப்படுகிறார். வழக்கமான மருந்தகங்களிலும் மருத்துவ மனைகளிலும் மருந்து கொடுப்பதோடு பணி நின்று விடுகிறது.





தொடக்க நல்வாழ்வு நிலையத்திலோ நோயாளிகளுக்கும் அவர்தம் உறவினர்களுக்கும் நோய் சிகிச்சை அளிப்பதோடு தடுப்பு மருத்துவமும் அளிக்கப்படுகிறது. நோயின் தன்மை பற்றியும், நோய் பரவுதல், நோய் தொற்றக்கூடிய பொருள்களை நோய் நீக்கம் செய்யும் முறைகள் பற்றியும் நோயாளிக்கும் அவர்தம் உறவினர்களுக்கும் அறிவுறுத்தப்படுகிறது.

ஒவ்வொரு தொடக்க நல்வாழ்வு நிலையத்திலும் நாள்தோறும் வருகை தரும் புறநிலை நோயாளிகளின் சராசரி எண்ணிக்கை 70. புதிய நோயாளிகளும், 40 பழைய நோயாளிகளும் ஆகும். தொடக்க நல்வாழ்வு நிலையங்கள் அனைத்திலும் நாள்தோறும் வருகை தருவோரின் சராசரி எண்ணிக்கை 42,000 ஆகும். ஆண்டுதோறும் வருகை தரும் சராசரி எண்ணிக்கை சுமார் 150 லட்சமாகும்.

இப்பொழுது செயல்பட்டு வரும் 379 தொடக்க நல்வாழ்வு நிலையங்களில் 167 தொடக்க நல்லவாழ்வு நிலையங்கள் சொந்தக் கட்டிடங்களிலேயே இயங்கி வருகின்றன. 21 தொடக்க நல்வாழ்வு நிலையத் தொகுதிக்கு, அதாவது, மருந்தகமும், பணியாளர்க் குடியிருப்புகளும் சேர்ந்த கட்டிடத் தொகுதிக்கு வேண்டிய கட்டிடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. இவை நான்காவது ஐந்தாண்டுத் திட்ட இறுதிக்குள் கட்டி முடிக்கப்பட்டு விடும். எஞ்சிய 191 தொடக்க நல் வாழ்வு நிலையங்களுக்கான கட்டிடங்கள் ஐந்தாவது திட்டக்காலத்தில் கட்டப்படவிருக்கின்றன. படிப்படியாக திட்டத்தின்கீழ் நிறைவேற்றப்படும்.

42 தொடக்க நல்வாழ்வு நிலையங்களுக்கான மருந்தகக் கட்டிடங்கள் கட்டும் திட்டம் ஐந்தாவது திட்டத்தின் முதலாவது ஆண்டில் அதாவது 1974-75-ஆம் ஆண்டில் எடுத்துக்கொள்ளப்படும். 1971-72-ஆம் ஆண்டுக்கு முன்னர் ஒவ்வொரு தொடக்க நல்வாழ்வு நிலையத்திற்கும் மருந்துகள் செலவுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 4,500 கொடுக்கப்பட்டது. இத் தொகை 1971-72-ஆம் ஆண்டிலிருந்து ரூ. 10,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. 1974-75-ஆம் ஆண்டில், இத்தொகை, தொடக்க நல்வாழ்வு நிலையம் ஒன்றுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 12,000 அளவு வரை உயர்த்தப்படும். இதைப்போலவே, துணை நிலையங்களுக்கென வரையறுக்கப்பட்ட தொகையாகிய ரூ. 600 ஆண்டு ஒன்றுக்கு ரூ. 800 அளவு வரை உயர்த்தப்படும்.

தமிழ் நாட்டில் உள்ள 374 ஊராட்சி ஒன்றியங்களில், 131 ஊராட்சி ஒன்றியங்கள் ஒவ்வொன்றும் ஒரு லட்சத்திற்கு மேல் மக்கட்தொகை உடையவை. இந்த 131 ஊராட்சி ஒன்றியங்களில் மதுரை மாவட்டத்தில் உள்ள ஆத்தூர் ஊராட்சி ஒன்றியம், கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள மொடக்குறிச்சி ஊராட்சி ஒன்றியம் ஒவ்வொன்றிலும் ஏற்கனவே இரண்டு தொடக்க நல் வாழ்வு நிலையங்கள் உள்ளன. ஒரு லட்சத்திற்கு மேல் மக்கட் தொகை கொண்டுள்ள ஊராட்சி ஒன்றியங்கள் ஒவ்வொன்றிலும் இரண்டாவது தொடக்க நல்வாழ்வு நிலையங்களை படிப்படியாக ஏற்படுத்துவதற்கான வாய்ப்புகள் பற்றி பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

## ( B ) தாய்-சேய் நலப் பணிகள்.

தாய்-சேய் நலப் பணிகளில் நல்ல உடல் நலன் பெற்ற தாய்க்கு உடல் நலன் பெற்ற குழந்தை பிறப்பதை உறுதிப்படுத்தவும், அதன்பின் தாய்-சேய் நலத்தைப் பேணிப் பாதுகாக்கவும் முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. தற்போது இதற்காக கருவுற்ற ஐந்தாவது மாதத்தில் தாய்மார்கள் முன்பேறுகாலப் பராமரிப்புக்காகப் பதிவு செய்து கொள்ளப்படுகின்றனர். இந்தப் பதிவுப் பணி ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் உள்ள தொடக்க நல்வாழ்வு நிலையங்கள், மகப்பேறு நிலையங்கள் ஆகியவற்றைச் சேர்ந்த மகப்பேறு உதவியாளர்கள்/துணைச் செவிலி-மருந்துவச்சிகளால் செய்யப்படுகிறது.

பேறு காலத் தாய்மார் ஒவ்வொருவருக்கும், அவரிடத்தில் அல்லது கருப்பையில் சிசு வளர்ச்சி நிலையில் ஏதேனும் கோளாறு இருக்கிறதா என்று கண்டுபிடிப்பதற்காக மருத்துவச் சோதனை செய்யப்படுகிறது. பேறு காலத் தாய்மாரில் இரத்த சோகை, ரத்தத் திரிபு நோய், சத்துக் குறைவு உள்ளவர்கள் இருக்கின்றார்களா என்றறிவதற்குச் சிறப்பான முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. இரத்த சோகை உள்ள தாய்மாருக்கு உரிய சிகிச்சை அளிக்கப்பட்டு, அதைக் கட்டுப்படுத்த எடுத்துக்கொள்ள வேண்டிய உணவு குறித்து அவருக்கு அறிவுரை அளிக்கப்படுகிறது. குழந்தைக்கு உணவிடுதல், நோய்த் தடுப்பு கால அட்டவணை, குழந்தைப் பருவ நோய்கள், குடும்பக் கட்டுப்பாட்டு முறைகள்





ஆகியவை குறித்தும் அவருக்கு அறிவுரை அளிக்கப்படுகிறது. இரத்தச் சோகையைக் குறைக்க அவர்களுக்கு இரும்புச் சத்து நிறைந்த மாத்திரைகள் கொடுக்கப்படுகின்றன. இசிவு நோய் வராமல் தடுக்க டெட்டனஸ் டாக்சாய்டு ( Tetanas Taxaid ) கொடுக்கப்படுகிறது.

பேறு காலப் பணிகள் முக்கியமாக தாயின் இருப்பிடத்திலேயே செய்யப்பட வேண்டியவையாகும். எனவே துணைச் செவிலி மருத்துவச்சிகள், பிரசவத்தின்போது, பேறுகாலத் தாய்மாரின் வீட்டுக்குச் சென்று தோற்ற முறை உபாயங்களைக் கொண்டு பிரசவம் நடத்துகின்றனர். குழந்தை பிறந்த பிறகு 10 நாட்களுக்கு அவர் குழந்தையைக் கவனித்துக் கொள்கிறார்.

சுகாதாரப் பார்வையாளர், துணைச் செவிலி-மருத்துவச்சிகள் பணியை மேற்பார்வையிடுவதோடு, மகப்பேறு நிலையங்கள் பலவற்றில் பேறு காலத்துக்கு முந்திய பணிகளில் தீவிரப் பங்கு கொள்கிறார். மேலும் கவனிப்பு வேண்டியுள்ள தாய்மார்களை தொடக்க நல்வாழ்வு நிலையத்தின் மருத்துவ அதிகாரியிடம் அனுப்பி வைக்கிறார். நோய்த் தடுப்பு முறைகளைக் குறித்துத் தாய்மார்களுக்கு அறிவுரை வழங்குவதுடன், முத்தடுப்பு ஊசி போடும் பணியிலும் பங்கு கொள்கிறார். குழந்தைகளுக்கான, தொண்டைப்புண், கக்குவான், இசிவுநோய் தடுப்புத் திட்டத்தினை அவர் சிறந்த முறையில் செயல்படுத்துகிறார். மேலும், அவர், குழந்தை நலன், பள்ளி செல்லும் வயதடையாச் சிறார்கள் நலன் மற்றும் பள்ளிச் சுகாதாரம் ஆகிய திட்டங்களுக்குப் பொறுப்பு வகிக்கிறார். குடும்பநலத் திட்டத்திலும் அவர் மும்முரமாக ஈடுபடுகிறார்.

தமிழ்நாடு 1958-ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்தின்படி, மகப்பேறு நிலையங்களைத் திறந்து பேணி வருவது ஊராட்சி ஒன்றியக் குழுக்களின் பொறுப்பாகும். தற்போது மக்கள் தொகையில் பத்தாயிரம் பேருக்கு ஒரு நிலையம் வீதம் மகப்பேறு நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஊராட்சி ஒன்றியக் குழு வைத்து வரும் நிலையங்கள், தங்கள் தொடக்க நல்வாழ்வு நிலையங்களைச் சேர்ந்த மூன்று துணை நிலையங்கள் குறித்து ஆகும் தொடரினச் செலவில் மூன்றிலிருபாகம் மானியமாக அரசிடமிருந்து பெறுகின்றன.

[1974 மார்ச் 18

ஊராட்சி ஒன்றியங்களினால் நடத்தப்பட்டு வரும் பிற பேறு கால குழந்தை நல நிலையங்கள், குடும்பநலத் திட்டத்தினின்று 100 சதவீத மத்திய உதவி பெறுகின்றன.

நகராட்சிகளில் உள்ள மகப்பேறு இல்லங்களும் மகப்பேறு நிலையங்களும் தாங்கள் மேற்கொள்ளும் தொடரினச் செலவில் 25 சதவீதத்தை அரசிடமிருந்து மானியமாகப் பெறுகின்றன.

ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் நடத்தி வரும் மகப்பேறு நிலையங்களுடன், அரசு, போருக்குப் பிந்திய மறுசீரமைப்புத் திட்ட வேலையில் ஒரு பகுதியாக 76 கிராமங்களில் மகப்பேறு நிலையங்களை ஏற்படுத்தியுள்ளது. மிகவும் பின்தங்கிய பகுதிகளாக அப்போது கருதப்பட்ட தொலை தூரத்தில் உள்ள கிராமங்களில் இந் நிலையங்கள் அமைக்கப்பட்டன. 1—1—1973 ஆம் நாளன்றுள்ளவாறு மாநிலத்தில் மொத்தம் 3,840 மகப்பேறு நிலையங்கள் உள்ளன.

## (C) தொண்டைப்புண்-கக்குவான்-இசிவு நோய் தடுப்புத் திட்டம் (D.P.T.).

தொண்டைப்புண்-கக்குவான்-இசிவுநோய் தடுப்புத் திட்டம், தமிழ்நாட்டில் 1964-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. இத் திட்டம், கிராமப் பகுதிகளில் தொடக்க நல்வாழ்வு நிலையங்கள் மூலமாகவும் நகராட்சிப் பகுதிகளில் மகப்பேறு-குழந்தை நல நிலையங்கள் மூலமாகவும் செயற்படுத்தப்படுகின்றன. 0-5 வயதுக் குழந்தைகளுக்கு மூவகை நோய்த் தடுப்பு ஊசிபோட்டு தற்காப்பு அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு குழந்தைக்கும் ஒரு மாத இடைவெளிவிட்டு மும்முறை இம்மருந்து கொடுக்கப்படுகிறது. முதலில் 1964-ஆம் ஆண்டில் 142 தொடக்க நல்வாழ்வு நிலையங்களில் இத்திட்டம், கொண்டுவரப்பட்டது. தற்பொழுது இத்திட்டம். தொடக்க நல்வாழ்வு நிலையங்கள் அனைத்திலும் நிறைவேற்றப் பட்டு வருகின்றது. ஆண்டுதோறும் ஒவ்வொரு தொடக்க நல்வாழ்வு நிலையத்திலும் 900 குழந்தைகளுக்கு தற்காப்பு அளிப்பது என்று இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 1972-73-ஆம் ஆண்டில் 93,632 குழந்தைகளுக்கும் 1973-74-ல் (1973 டிசம்பர் வரை) 83,426 குழந்தைகளுக்கும் மூன்று வகை மருந்துகளும் கொடுக்கப்பட்டுள்ளன.



1974 மார்ச் 18]

## II. மக்கள் சத்துணவு பெறச் செய்வதற்கான மேம்பாட்டுப் பணிகள்.

(a) நமது மாநிலச் சத்துணவுக் கழகம் 1944 ஆம் ஆண்டிலேயே தொடங்கப்பட்டது. உணவு ரசாயனப் பகுப்பாய்வும் உயிரியல் சோதனைகளும் நடத்துவதற்கு உரிய சாதனங்களைக் கொண்டு இது அமைந்துள்ளது. இம் மாநிலத்தில் உள்ள உணவுப் பழக்கங்களையும் ஊட்டச் சத்துக் குறைபாடுகளையும் கண்டறிவதும், முறையான உடற்கூறு வளர்ச்சி ஆய்வுகள் நடத்தி அதன் மூலம் உடற்கூறு நியதிகளை ஏற்படுத்துவதையும், சத்துணவுத் திட்டம்பற்றி அறிவுரை வழங்குவதையும் நோக்கமாகக் கொண்டு இக்கழகம் அமைக்கப்பட்டது.

ஊட்டச்சத்து உணவுத்திட்டத்திற்கான அடிப்படைப்புள்ளி விவரமாக வைத்துக் கொள்ளவும் (ஊட்டச்சத்து), உணவுத் திட்டத்தினால் ஏற்பட்டுள்ள விளைவுகளை மதிப்பிடவும் 1973-ஆம் ஆண்டில் இம் மாநிலத்தில் ஐந்து உணவு வட்டாரங்களில் மருத்துவ—உணவு முறைபற்றிய ஆய்வுகள் நடத்தப்பட்டன. ஊட்டச் சத்துணவு பெறாமையினால் எளிதில் பாதிக்கப்படக் கூடிய 6 வயதுக்குட்பட்ட பள்ளி செல்லும் வயதடையாத சிறார்கள், கருவுற்றிருக்கும் மகளிர், பாலூட்டும் தாய்மார்கள் ஆகியோரிடையே மட்டும் இந்த ஆய்வுகள் நடத்தப்படுகின்றன.

1971-ஆம் ஆண்டு ஜூன் திங்களிலிருந்து, மதுரை மாவட்டம் தவிர ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு உணவுத்திட்ட வட்டாரம் வீதமாக நமது மாநிலத்தில் உள்ள மாவட்டங்கள் அனைத்திலுமே சத்துணவு—உணவுமுறை ஆய்வுகள் நடத்தப்பட்டன. மதுரை மாவட்டத்தில் இரண்டு வட்டாரங்களில் இவ்வாய்வுகள் நடத்தப் பட்டன. 6 வயது வரையிலான 2,295 சிறுவர்கள், 2,424 சிறுமிகள், 343 கருவுற்றிருக்கும் மகளிர், 746 பாலூட்டும் தாய்மார்கள் ஆகியோரிடையே இந்த ஆய்வு நடத்தப்பட்டது.

சத்துணவு.—உணவுமுறை ஆய்வு செய்யும்போது இந்தக் கழகத்தைச் சேர்ந்த வலம்வரும் சமையல் வண்டியைப் பயன் படுத்தி, புரதச்சத்து நிறைந்த மலிவான உணவுப் பொருள்கள் தயாரிப்பது பற்றி கட்புல விளக்கம் செய்து காட்டப்படுகிறது. அவ்வாறு தயாரிக்கப்பட்ட உணவுகள் பள்ளி செல்லும் வயதடையாத சிறார்கள், கருவுற்றிருக்கும் மகளிர், குழந்தைக்குப்

பாலூட்டும் தாய்மார்கள் ஆகியோருக்கு வழங்கப்படுகின்றன. 1973-ஆம் ஆண்டில் 96 கட்புல விளக்கங்கள் செய்து காட்டப் பட்டன. இதனால் 3,400 பேர் பயனடைந்தனர்.

**சத்துணவுக் கழகத்தைச் சேர்ந்த சத்துணவு ஆய்வுக்கூடம், இம் மாநிலத்தில் கீழ்க்கண்ட ஆய்வுகளை செய்துள்ளது :—**

(1) சோகை நோய் கண்டுள்ளமைபற்றி மதிப்பிடுவதற்கு எளிதில் நோய் பரவக்கூடியவர்களிடையே இரத்தப் பரிசோதனை நடத்துதல்.

(2) குடலில் புழு பீடித்துள்ளதுபற்றி மதிப்பிடுவதற்காக மலத்தில் மாதிரி எடுத்து ஆய்வு செய்தல்.

(3) வாய்ப்புண் பரவுவதற்குக் காரணமாக இருக்கின்ற கிருமிகளின் வளர்ச்சிபற்றி ஆய்வு செய்வதற்காக அந்நோயால் பாதிக்கப்பட்டவர்களின் எச்சில் தோய்ந்த துணி அல்லது பஞ்சு எடுத்து ஆய்வு செய்தல்.

(4) செங்கற்பட்டு மாவட்டம், வில்லிவாக்கம் வட்டாரம், போரூர் கிராமத்தில், பள்ளி செல்லும் வயதடையாத சுமார் 250 சிறுர்களுக்கு 6 மாதத்திற்கொருமுறை வைட்டமின் A அடர் திரவம் செலுத்துவதுபற்றிய ஆய்வு.

(a) **துணை உணவூட்டும் திட்டம் :—**

துணை உணவூட்டும் திட்டம் இம் மாநிலத்தில் 1950-ல் தொடங்கப்பட்டது. மக்கள் தொகையில் எளிதில் நோய் பீடிக்கும் நிலையில் உள்ளோரில் பெரும் பிரிவினராயுள்ள குழந்தைகள், கருவுற்றிருக்கும் மகளிர், பாலூட்டும் தாய்மார் ஆகியோரிடம் காணப்படும் ஊட்டச்சத்துக் குறைபாட்டைப் போக்குவதே இத் திட்டத்தின் நோக்கமாகும். இந்தத் திட்டம் 'கேர்' (care) நிறுவனத்தின் உதவியுடன் செயற்படுத்தப்பட்டு வருகிறது. அந் நிறுவனம், தானியம்-சோயாபீன்-பால்மாவு (Corn-soy-milk) 'சாலடு எண்ணெய்' போன்ற உணவுப் பண்டங்களைத் தேவைப் படும் அளவு நன்கொடையாக வழங்குகிறது.

நன்கொடையாக வழங்கப்பட்ட பொருள்கள் 2,060 உணவு வழங்கும் நிலையங்கள் மூலம் தற்பொழுது பகிர்ந்து வழங்கப்படுகின்றன. நாள்தோறும் சுமார் 73,380 பேர் பயனடைகின்றனர்.



1973 ஆம் ஆண்டில் சுமார் 40 லட்சம் கிலோகிராம் உணவுப் பொருள் நன்கொடையாகப் பெறப்பட்டு வழங்கப்பட்டது. இத் திட்டம் ஊராட்சி ஒன்றியங்களைச் சேர்ந்த மேலும் 1,190 மகப் பேறு குழந்தை நல நிலையங்களிலும் மேற்கொள்ளப்பட்டிருக் கிறது. "கேர்" உதவிபெறும் துணை உணவூட்டும் திட்டம் ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்திலும் தொடருமென எதிர்பார்க் கப்படும்.

## III. தொற்று நோய்களின் தடுப்பும், கட்டுப்பாடும்.

### காலரா.

நமது மாநிலத்தில் மக்களைப் பாதிக்கும் பெரிய பிரச்சினைகளில் இதுவும் ஒன்றாகும். காலரா நோய் தொற்று நோய்க்கிருமி யுள்ள நீர் அல்லது உணவை உட்கொள்வதனால் பரவுகிறது. இந்த நோய் கண்டுள்ளவர்கள் வாந்தியிலும் அல்லது மலத்தின் மூலமும் நீரிலும், உணவிலும் நோய்க்கிருமிகள் பரவுகின்றன. நோயுற்றவர்கள் தங்களுக்குத் தெரியாமலேயே நோயைப் பரப்பு கின்றனர். இந்தியா நாட்டில் எளிதில் கொள்ளை நோய் பரவக்கூடிய பகுதிகளில் நமது மாநிலமும் ஒன்றாக விளங்குகிறது. பல்வேறு தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதன் விளைவாக காலராவினால் ஏற்படும் பாதகம் பெரும அளவுக்குக் குறைந் துள்ளது.

பாதுகாக்கப்பட்ட நீர் வழங்கல், துப்புரவான கழிப்பிடங்கள் அமைத்தல் முதலியவற்றிற்கு வகை செய்வது போன்ற நீண்டகால நடவடிக்கைகளுடன், காலரா பரவுவதைத் தடுக்க கீழ்க்கண்ட நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன :—

தற்போது கொள்ளை நோய்க் கட்டுப்பாட்டுக்கான வலம் வரும் பிரிவுகள் செயல்படுகின்றன. அவற்றிற்குத் தேவையான சுகாதாரப் பணியாளர்களுக்கும் விரைவு மருத்துவ ஊர்தி களுக்கும் ஜீப் வண்டிகளுக்கும் வகை செய்யப்பட்டுள்ளது. கீழ்க் கண்ட இடங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு விரைவு மருத்துவ ஊர்தி உள்ளது: பூவிருந்தவல்லி, காஞ்சிபுரம், கடலூர், மதுரை, திருநெல்வேலி, கோயம்புத்தூர், சேலம், வேலூர், இராமநாத புரம் கொள்ளைநோய்க் கட்டுப்பாட்டு பணியைக் கவனித்துக்

கொள்வதற்காக ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஜீப் வண்டிகள் வழங்கப்பட்டுள்ளன. இவ்வண்டிகள் காலரா பரவியுள்ள பகுதிகளுக்குச் சென்று தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும். அவை வருக்கும் நோய்தடுப்பு ஊசிகள் குத்துதல், குடிநீரில் குளோரின் மருந்தைக் கலத்தல், நோய் கண்டுள்ளோரை மிக அண்மையில் உள்ள மருத்துவ நிலையத்திற்கு விரைவு மருத்துவ ஊர்தியில் எடுத்துச் செல்லுதல் ஆகிய பணிகளை அவை மேற்கொள்ளும். இந்நோய் பெருமளவில் பரவியுள்ள நிலைமைக்கிணங்க அப்பகுதிகளுக்கு இந்தப் பிரிவுகள் அனுப்பப்படுகின்றன.

தஞ்சாவூர் மாவட்டத்தில் காலரா நோய் தடுப்புப் பிரிவு ஒன்று செயல்படுகிறது. இப்பிரிவுக்கு ஒரு விரைவு மருத்துவ ஊர்திக்கும் தேவையான சுகாதாரப் பணியாளர்களுக்கும் வகை செய்யப்பட்டுள்ளது. தஞ்சாவூர் மாவட்டத்தில் நோய் பரவியுள்ள இடங்களுக்குச் சென்று நோய்த் தடுப்பு பணிகளிலும் நோய்க்கட்டுப்பாட்டுப் பணிகளிலும் ஈடுபடுவதே இப்பிரிவின் பணியாகும். இப்பிரிவைச் சேர்ந்த பணியாளர்கள், முக்கியமான திருவிழாக் காலங்களில் காலரா நோய்த் தடுப்பு ஊசி குத்துவதற்காக அனுப்பப்படுகின்றனர்.

கொள்ளை நோய்த் தடுப்பு நடவடிக்கைகளைக் கவனித்துக் கொள்வதற்காக 64 சுகாதார ஆய்வாளர்கள் உள்ளனர். இம் மாநிலத்தில் எப்பகுதியில் காலரா கண்டுள்ளதாக தகவல் கிடைத்தாலும், போதுமான எண்ணிக்கையுள்ள ஆய்வாளர்கள் அப்பகுதிக்கு அனுப்பப்படுகின்றனர். பெரும்பாலோருக்குக் காலரா நோய்த் தடுப்பு ஊசி குத்துதல், குளோரின் கலந்த நீர் வழங்கல், மலத்தின் தொற்றுத் தன்மையை நீக்குதல் முதலான நோய்க் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதில் உள்ளூர் பணியாளர்களுக்கு அவர்கள் துணை புரிவர். மேலும் முக்கியமான திருவிழாக்கள் நடைபெறும் இடங்களில் திருவிழா நடைபெறுவதற்கு முன்பும், திருவிழாவின்போதும் குடிநீரில் குளோரின் கலத்தல் போன்ற முன்னேற்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகவும் இந்த ஆய்வாளர்கள் அனுப்பப்படுகின்றனர். இது முக்கியமான பணியாகும். ஏனென்றால், திருவிழாக்கள் இத்தொற்று நோயைப் பரவச் செய்வதற்கு ஏற்ற ஒரு வாயிலாக அமையக்கூடும் என்பதை அனுபவம் காட்டுகின்றது.



## காலரா கட்டுப்பாட்டுத் திட்டம்.

இது ஒரு மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டமாகும். இத் திட்டத்திற்கு நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் இந்திய அரசிடமிருந்து 100 சதவித உதவி கிடைத்தது. எளிதில் காலரா பரவக்கூடிய தென் ஆர்க்காடு, வட ஆர்க்காடு, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் ஆகிய நான்கு மாவட்டங்களில் உள்ள 75 வளர்ச்சி வட்டாரங்களில் இத் திட்டம் செயற்படுத்தப்படுகிறது. மல மாதிரிகள் சேகரித்தல் (Stool Sample) நீர் நிலைகளில் குளோரின் செலுத்துதல், நோய் கண்டுள்ளது பற்றி அறிவித்தல் ஆகிய பணிகளைக் கவனித்துக் கொள்வதற்காக 168 சிறப்பு காலரா நோய்த் தடுப்புப் பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இத் திட்டத்தின்கீழ், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் நடமாடும் மருத்துவப் பிரிவு ஒன்றும் உள்ளது. இதில் மக்கள் நல்வாழ்வு அதிகாரி ஒருவர், செவிலியர் இருவர், செவிலி உதவியாளர்கள் இருவர், உடல் நல ஆய்வாளர் ஒருவர், வலவர் ஒருவர் ஆகியோர் பணி புரிகின்றனர்.

தலைமையிடத்தில், அதாவது, சென்னையில் காலரா கட்டுப்பாட்டுத் திட்டம் தொடர்பான பணிகளை மேற்கொள்வதற்கு ஒரு பிரிவு உள்ளது.

மாநிலம் முழுவதிலும் 1972 ஆம் ஆண்டில் 3,670 பேருக்கு காலரா நோய் கண்டது. இதில் 205 பேர் மாண்டனர். 1973 ஆம் ஆண்டில், 3,147 பேருக்கு காலரா நோய் கண்டது. இதில் 237 பேர் மாண்டனர். இந்த ஆண்டில் 14,30,616 பேருக்கு காலரா நோய்த் தடுப்பு ஊசி குத்தப்பட்டது.

## பெரியம்மை.

பெரியம்மை நோய் தொற்றும் நச்சுத் தன்மை வாய்ந்தது. இந் நோய் ஒரு காலத்தில் நமது நாட்டில் அதிக அளவில் பரவி இருந்தது. "பெரியம்மை ஒழிப்பு தேசியத் திட்டம்" எல்லா மாநிலங்களிலும் நிறைவேற்றப்படுவதற்காக மத்திய அரசால் தொடங்கப்பட்டது; நமது மாநிலத்தில் இத் திட்டம் 1963-ல் தொடங்கப்பட்டது. (அ) குழந்தைகளுக்கு முறையான தொடக்க ஊசி குத்துவது மூலமும், எளிதில் இந்த நோயால்

தாக்கப்படக்கூடிய மக்களுக்கு மறு ஊசி குத்துவதன் மூலமும், (இ) பெரியம்மைக் கண்டுள்ளவர்களைக் கண்டுபிடித்துத் தனிமையாக்கி நோய் பரவாமல் தடுப்பதற்குரிய பிற நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலமும் சமுதாயத்தில் பெரியம்மை பரவுவதைத் தடுப்பதுதான் இத் திட்டத்தின் நோக்கமாகும். 1963-ஆம் ஆண்டில் இத் திட்டம் தொடங்கப்பட்டபோது, தமிழ்நாட்டில் மொத்தம் 9,241 பேருக்கு நோய் கண்டிருந்தது. 2,559 பேர் மாண்டனர். 1969-ல் பெரியம்மை நோயால் பாதிக்கப்பட்டவர் எவருமில்லர். எனினும், அதன்பின் 1971 ஆம் ஆண்டில் ஏழு தடவையும், 1972-ல் இரு முறையும் பெரியம்மை நோய் கண்டது. இவை வெளி மாநிலங்களிலிருந்து வந்தவர்கள் மூலம் பரவியதேயாகும். மேற்படி ஆண்டுகளில் எவரும் இந் நோயால் இறக்கவில்லை. 1973 ஆம் ஆண்டில், மூன்று பேருக்கு பெரியம்மை நோய் கண்டது. ஆனால், எவரும் இறக்கவில்லை, இவர்களில், இரு நேர்வுகளில், கான்பூரிலிருந்தும் டில்லியிலிருந்தும் வந்தவர்கள் மூலம் இந் நோய் பரவியது.

இந்திய அரசு, உலக சுகாதார அமைப்பின் ஒத்துழைப்புடன் உலகமெங்கிலும் பெரியம்மை நோய் பரவுவதைத் தடுக்கும் திட்டத்தின் ஒரு பகுதியாக, பெரியம்மை நோய் பரவுவதைக் கண்டுபிடிக்க மும்முர ஆய்வுத் திட்டம் ஒன்றை வகுத்துள்ளது. தமிழ்நாட்டில் இந்த மும்முர ஆய்வுத் திட்டம் சென்னை மாநகரிலும், செங்கற்பட்டு, மதுரை, இராமநாதபுரம், திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களிலும் செயற்படுத்தப்பட்டது. எவருக்கும் பெரியம்மை நோய் காணவில்லை.

பெரியம்மை கண்டுள்ளதாக சந்தேகப்பட்டால் அது குறித்து உள்ளூர் நல்வாழ்வு அதிகாரிகளுக்கு மக்கள் தகவல் தெரிவிக்க ஊக்கப்படுத்தும் பொருட்டு, இந்நாள் வரை பெரியம்மை நோய் கண்டில்லாத இடத்தில் நோய் கண்டிருந்தால் அது குறித்து முதலாவதாக தகவல் தெரிவிக்கும் நபருக்கு ரூ. 10 பரிசு கொடுக்க அரசு ஆணையிட்டுள்ளது.

இந்தியாவின் பிற மாநிலங்களிலிருந்து நம் மாநிலத்திற்கு வரும் ஒருவருக்கு பெரியம்மை நோய் இருந்தால் அதைத் தடுப்பதில் நாம் எப்போதும் விழிப்பாயிருக்க வேண்டும். இந்தியாவில் 1972 ஆம் ஆண்டில் (ஜனவரியிலிருந்து டிசம்பர் வரை) 27,500



பேர்களுக்கு இந்நோய் கண்டிருந்தது என்பதை சுண்டிக் குறிப்பிடலாம். பிற மாநிலத்திலிருந்து அத்தகைய நோய் கண்டுள்ளவர் நமது மாநிலத்திற்கு வர நேர்ந்தால், அவர்கள் நம் மாநிலத்தில் இருக்கும் காலத்தில் அந்நோய் பரவக்கூடும். அத்தகைய நேர்வுகளைக் கண்டுபிடிப்பது மிக முக்கியமானதாகும். அப்போதுதான் உள்ளூர் மக்களிடையே நோய் பரவாமல் தடுக்க இயலும்.

இம்மாநிலத்தில் பெரியம்மை நோய் ஏற்படாமல் செய்வதற்காக 1974-75 ஆம் ஆண்டில் அம்மைப்பால் குத்தும் பணியை மும்முரப்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

## பிளேக்.

கடந்த காலத்தில், பிளேக் நோய், உயிர்க்கொல்லி நோயாகப் பரவுவது பெரிய பிரச்சினையாக இருந்தது. தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதன் பயனாக 1964 ஆம் ஆண்டுக்குப் பிறகு இம்மாநிலத்தில் 'பிளேக்' நோய் அறவே காணப்படவில்லை. 22—10—1971 முதல் 9—1—1972 முடிய ஐயத்திற்கிடமுள்ள வகையில் 331 எலிகள் செத்து விழுந்தன. எனவே, 'பிளேக்' கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டன. அதன் விளைவாக, யாருக்கும் 'பிளேக்' நோய் காணவில்லை. 1973 ஆம் ஆண்டில் எலி செத்து விழுந்ததாகவோ, 'பிளேக்' நோய் பரவியதாகவோ தகவல் எதுவும் இல்லை. எனினும், பிளேக் நோய் பரவக்கூடிய பகுதிகளாகிய வட ஆர்க்காடு, கோயம்புத்தூர், தருமபுரி, நீலகிரி மாவட்டங்களிலும் வேலூர், குன்னூர், உதகமண்டலம் ஆகிய நகராட்சிகளிலும் வழக்கம்போல் பிளேக் நோய்த் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. எதிர்காலத்திலும் தொடர்ந்து இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

## மலேரியா.

இம்மாநிலத்தில் மாநிலத் தலைமையிடத்தில் மலேரியா கட்டுப்பாட்டுக் கழகம் ஒன்று செயல்பட்டு வருகிறது. மலேரியாவையும் கொசுக்களினால் பரவும் நோய்களையும் கட்டுப்படுத்துவது குறித்து இக்கழகம் கவனித்து வருகிறது. அங்கு பயிற்சி, ஆய்வு மற்றும் கொள்ளை நோயியல் ஆய்வு

வசதிகள் உள்ளன. தஞ்சாவூரிலும் கோயம்புத்தூரிலும் இரண்டு வட்டார நோய்க்கிருமி கட்டுப்பாட்டு அமைப்புகள் உள்ளன. இந்த அமைப்புகளில், பயிற்சி, ஆய்வு, சோதனை வசதிகள் உள்ளன. இம் மாநிலம் 1958-59 ஆம் ஆண்டிலிருந்து மலேரியா ஒழிப்பு தேசியத் திட்டத்தை நிறைவேற்றி வருகிறது. இத்திட்டத்தைச் செயற்படுத்துவதற்காக, நமது மாநிலம், ஒவ்வொரு பிரிவும் 10 லட்சம் மக்கட் தொகை கொண்ட 31.45 கூறுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

இத் திட்டத்தின் தொடக்கக் காலத்தில் "நுண்ணிய நோய்க் கிருமிகளின் நெருக்கத்தை" அதாவது மலேரியா நோயை ஒருவரிடமிருந்து மற்றவருக்குப் பரப்புகின்ற சிலவகை கொசுக்களின் பெருக்கத்தைக் குறைக்கவும், சமுதாயத்தில் மலேரியா பரவுவதைத் தடுக்கவும் D.D.T. மருந்து தெளிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது. பின்னர், மாநிலம் முழுவதிலும் நுண்ணாய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, மலேரியா ஒழிப்பு தேசியத் திட்டத்தை சேர்ந்த பணியாளர்கள் வீடு வீடாகச் சென்று விசாரணை செய்ததாலும், காய்ச்சல் என்று கூறி மருத்துவ மனைகளுக்கும் மருந்தகங்களுக்கும் வருபவர்களையும் ஆய்வு செய்ததன் மூலமும் சமுதாயத்தில் ஏராளமான பேருக்கு மலேரியா நோய் கண்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. அவ்வாறு கண்டுபிடிக்கப்பட்டவர்களுக்கு முழு அளவில் சிகிச்சை அளிக்கப்பட்டது. இத்தகைய முழுமூர நடவடிக்கைகளினால் தற்போது பராமரிப்புக் கட்டத்தில் (maintenance phase) உள்ள 28.40 பிரிவுகளில் மலேரியா அறவே ஒழிக்கப்பட்டது.

3.05 பிரிவுகள் இன்னும் ஒருங்கிணைப்புக் கட்டத்தில் (consolidation phase) உள்ளன. மலேரியா நோய் கண்டுள்ளதா எனத் தீவிரமாக ஆய்வு செய்யப்பட்டு முழுவளவில் சிகிச்சைகள் அளிக்கப்பட்டன.

1973-ஆம் ஆண்டில் சேலம், தருமபுரி, வட ஆர்க்காடு மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களிலும், சேலம், ராசிபுரம், ஈரோடு, தூத்துக்குடி, வேலூர் ஆகிய நகரங்களிலும், சென்னை மாநகரிலும் சுமார் 4 500 பேருக்கு மலேரியா நோய் கண்டுள்ளது கண்டு பிடிக்கப்பட்டது. இவற்றில் பராமரிப்புப் பகுதிகளில் சுமார் 3,800 பேருக்கு நோய் கண்டிருப்பதாகப் பதிவு ஆகியிருந்தது.



இவற்றில் பெரும் பகுதி இராமநாதபுரம், வட ஆர்க்காடு தருமபுரி மாவட்டங்களில் நோய் பரவும் பிரச்சினை மிகுந்த பகுதிகளில் இருந்துதான் அதிக அளவில் நோய் கண்டிருந்தது. வெளி மாநிலங்களிலிருந்து வருபவர்கள் மூலம் மீண்டும் மலேரியா நோய் பரவுகின்ற பகுதிகள்தான் பிரச்சினைப் பகுதிகளாகும். போதிய போக்குவரத்து வசதியின்மை, நிலப் பகுதியின் தனித் தன்மை, வீடுகள் மிகவும் பரவலாக அமைந்திருத்தல், மக்களின் நடமாட்டம் ஆகிய காரணங்களினால் இப்பகுதிகளில் நோய்த் தடுப்பு நடவடிக்கைகள் எடுப்பது மிகவும் சிக்கலாக உள்ளது. சிறந்த நடவடிக்கைகள் எடுத்தும்கூட இப் பிரச்சினையை ஒழிக்கவும் தீர்க்கவும் முடியவில்லையாதலால் இப்பகுதிகளை நோய் பிடிக்கப்பட்ட (attack phase) பகுதிகளாக ஏற்றுக் கொண்டு அதற்குரிய திட்டங்களை நிறைவேற்ற முழு உதவி வழங்குமாறு மாநில அரசு மத்திய அரசைக் கேட்டுள்ளது.

மலேரியா ஒழிப்பு தேசியத் திட்டத்தின் பேணுதல் நிலையின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ள பகுதிகளில் அடிப்படைச் சுகாதார பணிகள் 1969-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1-ம் தேதியிலிருந்து மேற்கொள்ளப்பட்டுள்ளன. 353 ஊராட்சி ஒன்றியங்கள் பேணுதல் நிலைப் பகுதிகளில் உள்ளன. அடிப்படைச் சுகாதாரப் பணிகளுக்கான பணியாளரமைப்பு முறை பின்வருமாறு:—

பத்தாயிரம் மக்கட் தொகைக்கு ஓர் அடிப்படை உடல் நலப் பணியாளர், ஒவ்வொரு நான்கு அடிப்படை உடல் நலப் பணியாளர்களுக்கும் ஓர் அடிப்படை உடல் நல ஆய்வாளர். ஒவ்வொரு தொடக்க நல்வாழ்வு நிலையத்திற்கும் ஓர் ஆய்வுக்கூட உதவியாளர்.

அடிப்படை உடல்நலப் பணியாளர்கள் பல நோக்குப் பணியாளர்களாவர். இவர்கள் பல்வகைப் பணிகளை மேற்கொள்கின்றனர். அதாவது (அ) மலேரியா காய்ச்சலினால் பாதிக்கப்பட்டவர்களைக் கண்டறிந்து அவர்களுக்குச் சிகிச்சை அளித்தல், (இ) சுகாதாரம் பற்றிய விவரங்களைச் சேகரித்தல், அதாவது காலரா, பெரியம்மை, பிளேக், காசநோய், தொழுநோய் போன்ற தொற்று நோய்கட்கு ஆளானவர்கள் பற்றி அறிந்து அதனைத் தெரிவித்தல், (உ) பிறப்பு, இறப்புகள் மற்றும் (எ) குடும்ப நலத் திட்டப் பணிகள்பற்றித் தகவல் அளித்தல்.

அடிப்படை உடல்நலப் பணி நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மத்திய அரசால் தொடங்கப்பட்ட ஒரு திட்டமாகும். இப் பணிக்காகும் முழுச் செலவையும் மத்திய அரசு ஏற்கிறது. ஆனால் இந்த முக்கியப் பணிகளுக்காக ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இந்திய அரசின் திட்டக் குழுவின் செயற்குழு மத்திய உதவிக்குப் பரிந்துரைக்கவில்லை. இப் பணிக்காக 1973-74-ம் ஆண்டு திருத்த மதிப்பீட்டில் செய்யப்பட்ட நிதி ஒதுக்கம் ரூ. 142.56 லட்சம் ஆகும். இப்பணிக்காக 1974-75 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் செய்யப்பட்ட நிதி ஒதுக்கம் ரூ. 149.26 லட்சம் ஆகும். ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இத்திட்டத்தை மத்திய அரசு ஆதரவு பெற்ற திட்டமாகச் சேர்த்துக் கொள்ளுவது பற்றியும், இத் திட்டத்திற்காக எதிர்பார்க்கப்படும் உதவியின் வகைகளைப் பற்றியும் குறிப்பிட்டு மத்திய அரசுக்கு எழுதிக் கேட்டுள்ளது. இது குறித்து, அவர்களுடைய பதில் எதிர்பார்க்கப்படுகிறது.

மூவாயிரத்து இருநூற்று நாற்பத்தைந்து அடிப்படை உடல்நல ஊழியர்களும் 495 அடிப்படை உடல் நல ஆய்வாளர்களும், அடிப்படை உடல்நலப் பணியின்கீழ் வேலையில் உள்ளனர். 20 அடிப்படை உடல்நல ஊழியர்களைத் தவிர ஏனைய எல்லா அடிப்படை உடல்நல ஊழியர்களின் பணிகளும் மக்கள் நல்வாழ்வு-குடும்ப நலத்துறை இயக்குநர் அவர்களால் முறைப்படுத்தப்பட்டுள்ளது. எஞ்சிய அடிப்படை உடல்நல ஊழியர்கள் மற்றும் அடிப்படை உடல்நல ஆய்வாளர்கள் ஆகியோரின் பணிகளையும் மக்கள் நல்வாழ்வு-குடும்ப நலத்துறை இயக்குநர் முறைப்படுத்துவார்.

சில்லறைச் செலவு நிதியின்கீழ் ஏற்கனவே ஊதியம் பெற்று வரும் ஒருமிப்புப் பகுதிகளில் பணி புரியும் கண்காணிப்பு ஊழியர்கள், கண்காணிப்பு ஆய்வாளர்கள் ஆகியோருக்கு காலச் சம்பள ஏற்ற முறையில் ஊதியம் வழங்கப்படுகிறது. இப் பதவிகளுக்காக தனி விதிகள் வெளியிடப்பட்டுள்ளன. அவர்களுடைய பணியினை முறைப்படுத்துவதற்கான பணியும் மக்கள் நல்வாழ்வு-குடும்ப நலத்துறை இயக்குநரால் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. இதன் மூலம் 549 கண்காணிப்பு ஊழியர்களும், 129 ஆய்வாளர்களும் பயன் பெறுவர்.



மலேரியா ஒழிப்பு தேசியத் திட்டத்தில், பேணுதல் மற்றும் பேணுதல் ஆகாத நிலைப்பகுதிகளில், ஐந்து ஆண்டுகளுக்குமேல் பணியிலுள்ள மஸ்தூர் ஊழியர்களுக்கு காலச் சம்பள ஏற்ற முறையில் சம்பளம் கொடுக்கும் முறையை அரசு விரிவு படுத்தியுள்ளது. இதனால் 258 மஸ்தூர்களுக்கும், 15 ஆய்வுக் கூடச் சிறுவர்களுக்கும் உடனடியாகப் பலன் கிடைத்துள்ளது. இத்திட்டத்தின்கீழ் பணிபுரியும் ஏனைய வகை ஊழியர்களுக்கு, பணியில் ஐந்து ஆண்டுகளுக்குமேல் அவர்கள் பணிபுரிந்தவுடன் காலச் சம்பள ஏற்ற முறையிலான சம்பளம் அவர்களுக்கும் வழங்கப்படும்.

நகர்ப்புற மலேரியாத் திட்டம்.—1972-73-ல் ஒப்பளிப்பு வழங்கப்பெற்ற இந்திய அரசு நகர்ப்புற மலேரியாத் திட்டத்தை நான்கு உள்ளாட்சி மன்றங்களான சேலம், ராசிபுரம், தூத்துக்குடி, சென்னை ஆகிய உள்ளாட்சி மன்றங்களில் நிறைவேற்றியுள்ளது. இளம்பிள்ளை பேரூராட்சிக்காகவும், மேற்படி ஊராட்சி மன்றத்தால் நிறைவேற்றப்படவும், நகர்ப்புற மலேரியாத் திட்டத்திற்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. இளம்பிள்ளை பேரூராட்சிக்கான இத்திட்டத்தை மக்கள்-நல்வாழ்வு-குடும்ப நலத்துறை எடுத்து, நிறைவேற்ற அண்மையில் இயக்குநரால் செயற்குறிப்பு அனுப்பப்பட்டுள்ளது. அப்போதுதான், மேற்படி பேரூராட்சிக்காக மட்டுமின்றி, சுற்றுப்புறப் பகுதிகளுக்கும் சேர்த்து இத்திட்டம் நிறைவேற்றப்படலாகும். இது ஆய்வு செய்யப்பட்டுவருகிறது. ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலும்கூட இத்திட்டங்கள் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

மேற்சொன்ன ஐந்து உள்ளாட்சி மன்றங்களுக்கு 1973-74-ம் ஆண்டிற்கான மத்திய உதவி என்ற வகையில் இந்திய அரசு ரூ. 1.88 லட்சம் ஒதுக்கியுள்ளது.

யானைக்கால் நோய்.—தமிழ்நாட்டில் யானைக்கால் நோய் கண்டுள்ள சில பகுதிகளில் 1.3 கோடி மக்கள் வசித்து வருகிறார்கள் என்று கணக்கிடப்பட்டுள்ளது. 1957-58-ம் ஆண்டிலிருந்து இம்மாநிலத்தில் தேசிய யானைக்கால் நோய் ஒழிப்புப் பிரிவுகள் நான்கு, செங்கற்பட்டு, சிதம்பரம், கும்பகோணம், வேலூர் ஆகிய நகர்களைத் தலைமையிடங்களாகக் கொண்டு, செங்கற்பட்டு, தென்னார்க்காடு, தஞ்சாவூர், வடார்க்காடு ஆகிய நான்கு மாவட்டங்களில் செயற்பட்டு வருகின்றன. ஒவ்வொரு

[1974 மார்ச் 18

பிரிவிலும் மாவட்ட சுகாதார அதிகாரி தரத்தில் யானைக்கால் நோய் ஒழிப்பு அதிகாரி ஒருவர், கிருமியியல் உதவியாளர் ஒருவர், உடல் நல ஆய்வாளர்கள் 6 பேர், ஆராய்ச்சிக்கூட உதவியாளர் 4 பேர், களப்பணி உதவியாளர்கள் 6 பேர், மஸ்தூர்கள் 60 பேர் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். ஒவ்வொரு பிரிவும், சிறு யந்திர சாதனங்களின் துணை கொண்டு சாக்கடைக் கால்களை சீரமைத்தல், களை எடுத்தல், போன்ற ஏற்பாடுகள் செய்வதுடன் கொசு, முட்டைப் புழு ஒழிப்பு எண்ணெயைத் தெளிப்பதால் முட்டைப்புழு ஒழிப்பு நடவடிக்கைகளையும் மேற்கொள்கிறது. இதனால் யானைக்கால் வரக்கூடிய ஆபத்திலிருந்தும் தடுக்கப்பட்டு 3.75 இலட்சம் பேர் பயனடைகிறார்கள். இந்நான்கு பிரிவுகளுக்கும் கொசு, முட்டைப்புழு ஒழிப்பு எண்ணெய் மத்திய உதவியாக வழங்கப்படுகிறது. அவற்றிற்கான நடைமுறைச் செலவு மாநிலத்தின் பொறுப்பாகும்.

இத்திட்டத்தின்கீழ் 15 இலட்சம் மக்கள் பயனடைகிறார்கள்.

மேற்கண்ட நான்கு பிரிவுகளுக்காக 1974-75-ம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் செய்துள்ள நிதி ஒதுக்கம் ரூ. 10.02 இலட்சமாகும்.

**தேசிய யானைக்கால் நோய் ஒழிப்புச் சீரமைப்புத் திட்டம்.**—மத்திய அரசால் தொடங்கப்பட்ட இத்திட்டம், முற்றிலும் மத்திய உதவி பெறும் திட்டமாகும். மேற் கூறப்பட்ட நான்கு பிரிவுகள் ஒவ்வொன்றிலும், ஒரு கூடுதல் உடல்நல ஆய்வாளர், ஒரு கூடுதல் களப்பணி உதவியாளர், 15 கூடுதல் தூய்மை மஸ்தூர்கள், 15 கூடுதல் மஸ்தூர்கள் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். சீரமைக்கப்பட்ட இந்த திட்டத்தின்கீழ், காஞ்சிபுரம், விழுப்புரம், கடலூர், தஞ்சாவூர், நாகப்பட்டினம், ஸ்ரீரங்கம், புதுக்கோட்டை, சென்னை மாநகர் ஆகிய இடங்களில் ஒவ்வொன்றாக 8 புதிய பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. சென்னை மாநகரிலுள்ள பிரிவு நீங்கலாக புதுப் பிரிவுகள் அனைத்தும் மக்கள் நல்வாழ்வு-குடும்பநலத் துறையின் பொறுப்பின்கீழ் இருக்கும். சென்னை மாநகரிலுள்ள பிரிவு பெரும் பிரிவு. அது சென்னை மாநகராட்சியின் பொறுப்பில் இருக்கும். இந்த எட்டு புதிய பிரிவுகளால் 30 இலட்சம் மக்கள் பயன் பெறுவர்.



1974 மார்ச் 18]

சீரமைக்கப்பட்ட திட்டத்தின் கீழ் நகர்ப்புறப் பகுதிகளில் 'வெக்டார்' கொசு பெருகுவதை குறைப்பதற்காக முட்டைப் புழு ஒழிப்புப் பணி தீவிரப்படுத்தப்படுகிறது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் யானைக்கால் நோய் குறித்த ஆய்வுகள் கணக்கிடப்பட்டது. (இரவில் இரத்தம் எடுக்கப்பட்டு, இரத்தப் பூச்சு மூலம் 79,802 பேருக்குப் பரிசோதனை செய்யப்பட்டது). செங்கற்பட்டு, தென்னாற்காடு, வடார்க்காடு, தஞ்சாவூர் திருச்சிராப்பள்ளி ஆகிய ஐந்து மாவட்டங்களில் யானைக்கால் நோய் கண்டுள்ள சில பகுதிகளிலும், சென்னை மாநகரிலும், யானைக்கால் நோய் பரவும் அளவானது 2.78 சதவீதத்திலிருந்து 4.30 சதவீதம் வரை வேறுபடுகிறது.

இந்தப் பிரிவுகளுக்காக 1974-75-ம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் செய்த நிதி ஒதுக்கம் ரூ. 18.70 இலட்சமாகும். ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் எல்லாப் பிரிவுகளும் (நான்கு பழைய பிரிவுகள், எட்டு புதிய பிரிவுகள்) தொடர்ந்து செயல்படும்.

ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் யானைக்கால் நோய் ஒழிப்புத் திட்டத்திற்கான மத்திய உதவியின் தன்மை குறித்து இந்திய அரசு தனது முடிவினை இதுவரை தெரிவிக்கவில்லை.

உள்ளூர் இடர்ப்பாடுகளை நீக்கும் பொருட்டு, கட்டுப்பாட்டு பிரிவுகளுக்கும் நகராட்சிகள் போன்ற அமைப்புகளுக்கும் இடையே சீரான ஒருங்கிணைப்பிற்கும், கடலூர், விழுப்புரம், வேலூர், சிதம்பரம் ஆகிய இடங்களில் ஒருங்கிணைப்பு குழுக்கள் அமைக்கப்பட்டன. இதைப்போன்ற குழுக்கள் பல ஏனைய பிரிவுகளிலும் அமைக்கப்பட்டு வருகின்றன. இக்குழு, கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை சிறந்த முறையில் நிறைவேற்ற மூன்று திங்களுக்கு ஒரு முறை கூடும்.

### உதவி மானியத் திட்டங்கள்.

யானைக்கால் நோய்த் தடுப்புத் திட்டத்துடன், இம்மாநிலத்திலுள்ள சில உள்ளாட்சி மன்றங்கள் தம்முடைய ஆட்சி எல்லைக்குள் முட்டைப் புழு ஒழிப்பு/கொசு முட்டைப்புழு ஒழிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதற்காக யானைக்கால் நோய் ஒழிப்புத் திட்டங்களைச் செயற்படுத்துகின்றன. இத்திட்டங்களுக்காகும் செலவின் ஒரு பகுதி உள்ளாட்சி மன்றங்களுக்கு உதவி

மானியத் திட்டமாக அரசால் கொடுக்கப்படுகிறது. 171 உள்ளாட்சி மன்றங்கள் இம்மாநிலத்தில் யானைக்கால் நோய்த் தடுப்பு நடவடிக்கைகளை நிறைவேற்றி வருகின்றன. அந்தகைய திட்டங்களுக்கு உதவி மானியங்களுக்கென, 1974-75-ம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 11.06 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த உதவி மானியத் திட்டங்கள், தஞ்சாவூர், கோயம்புத்தூர், வட்டார நிறுவனங்கள் (பூச்சிக் கட்டுப்பாடு) இரண்டினாலும் ஆய்வு செய்யப்படுகின்றன. இத்திட்டங்களின்கீழ் ஏற்படுள்ள முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்காக ஆண்டிற்கு இரு முறை இவர்கள் ஆய்வு நடத்துவர்.

## நரம்புச் சிலந்தி நோய் ஒழிப்புத் திட்டம்.

இம்மாநிலத்தில் குறிப்பாக குடி தண்ணீருக்காக படிக்கிணறு, குட்டைகள் அமையப்பெற்ற பகுதிகளில் காணப்படும் நரம்புச் சிலந்தி நோயானது முக்கிய பொது சுகாதாரப் பிரச்சினையாக உள்ளது. இந்நோயினால் பிடிக்கப்பட்டுள்ள மனிதனின் அடிப்புறத் தசையில் வாழ்கின்ற நரம்புச் சிலந்தியினால் இந்நோய் பரவுகிறது. நோயாளி தண்ணீரில் இறங்கும்போது, நோயாளியின் தோலில் உள்ள சிறுப் புண்ணிலிருந்து நரம்புச் சிலந்தி இறங்கி தண்ணீரில் புழுக்களை விட்டுவிடுகின்றது. இந்த புழுக்களை ''சக்லாப்ஸ்' என்னும் ஒரு நீர்ப்பூச்சி விழுங்கிவிடுகிறது. மனிதர்கள் நீரை அருந்தும்போது இந்த சைக்லாப்ஸ்கள் மனிதனின் உடலில் சென்று விடுகின்றன. இவ்வாறாக, இந்த நோய் பரவுகிறது.

இதைக் கட்டுப்படுத்துவதற்கு, நரம்புச் சிலந்தி ஒழிப்புத் திட்டம் செங்கற்பட்டு, கன்னியாகுமரி, நீலகிரி மாவட்டங்கள் தவிர, தமிழ்நாடு முழுவதும் செயல்பட்டு வருகிறது. இம்மாநிலத்திலுள்ள நரம்புச் சிலந்தி நோய் கண்ட பகுதிகள் ஆறு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பிரிவும் பூச்சி இயல் உதவியாளர் ஒருவரைத் தலைமையாகக் கொண்டுள்ளது. அவருக்கு சுகாதார ஆய்வாளரும், களப்பணி உதவியாளரும் உதவி புரிகின்றனர். இம்மாநிலத்தில் வெவ்வேறு பகுதிகளில் நோய் கண்டுள்ள சில இடங்களில் 6 பூச்சி இயல் உதவியாளர்களும், 22 சுகாதார ஆய்வாளர்களும், 70 களப்பணி உதவியாளர்களும் பணிபுரிந்து வருகின்றனர்.





இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோள், நரம்புச் சிலந்தி நோயினை அறவே ஒழிப்பதாகும். அதாவது, நோய் கண்டுள்ள கிராமங்களிலுள்ள குடிநீர் வாயில்களில் சைக்லாப்ஸ் நீர்க்கிருமிகளை அழிப்பதாகும். பத்து இலட்சம் பாகம் நீரில் 5 பகுதி என்ற அளவில் 50 சதவிகிதம் டி.டி.டி. கரைசல் நீர்நிலைகளில் தெளிக்கப்படுகிறது. இவ்வாறு செய்வதால் அந்நோய்க்கிருமிகள் முழுவதும் அழிக்கப்படுகின்றன. இதனால் தொற்றுநோய் பரவுவது தடுக்கப்படுகிறது. மற்றும் நரம்புச் சிலந்தி நோய் கண்ட நோயாளிகளைக் கண்டு பிடித்து, 4 சதவிகிதம் கார்பாலிக் நீர்மத்தில் தோய்த்த பஞ்சால், நோயினால் பாதிக்கப்பட்ட உடல்பகுதி சுத்தம்செய்யப்பட்டு துணியால் கட்டப்படுகின்றது. வலி தெரியாமல் இருப்பதற்காக 'எபிசி' மாத்திரைகள் அவர்களுக்குக் கொடுக்கப்படுகின்றன. நோய் மேலும் இருப்பின், அங்கு இரண்டாம் நிலை நோயினைத் தடுப்பதற்காக "சல்பாடயாசின்" மாத்திரைகள் கொடுக்கப்படுகின்றன. கிராமங்களில் இந்த நரம்புச் சிலந்தி நோய் தடுப்புத் திட்டத்தின் பணியாளர் மூலம் சுகாதாரக் கல்வி அளிக்கப்பட்டு வருகின்றது. இதனால், கிராமத்தினர், இந்த நரம்புச் சிலந்தி நோய் தடுக்கும் முறைகள் பலவற்றையும் அறிகின்றனர். குடி தண்ணீரைக் கெடுப்பதைத் தடுக்க அவர்களுக்குள்ள பங்கினை உணர்த்த நோய் கண்டுள்ள தனிநபர்களுக்கு அவ்வப்போது நினைவூட்டப்படுகிறது. நரம்பு சிலந்தி நோய்த்தடுப்புப் பணியாளர்களால் முக்கிய விழா நாட்களில் பொருட்காட்சிகள் நடத்தப்படுகின்றன.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில் இத்திட்டம் குறித்துச் செலவிடப்பட்டவை கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| | (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| 1969–70-ஆம் ஆண்டிக்கான செலவு | 3.48 |
| 1970–71-ஆம் ஆண்டிக்கான செலவு | 3.80 |
| 1971–72-ஆம் ஆண்டிக்கான செலவு | 3.97 |
| 1972-73-ம் ஆண்டுக்கான செலவு | 3.63 |
| 1973–74-ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீட்டுச் செலவு. | 4.96 |
| நான்காவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் மொத்த மதிப்பீட்டுச் செலவு. | 19.84 |

1973-ஆம் ஆண்டில் 264 பேர் நோயுற்றிருப்பது கண்டு பிடிக்கப்பட்டு, சிகிச்சை அளிக்கப்பட்டது. ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், திட்டத்தில் சேராத பணியாகக் கொள்ளப்பட்டு இத் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும். 1974-75-ம் ஆண்டிற்கான இலக்கு நரம்புச் சிலந்தி நோய் ஆய்வு, நரம்புச் சிலந்தி நோய் பரவியிருக்கும் பகுதியிலுள்ள குடிநீர் வாயில்களில் உள்ள நீரை இரசாயன முறையில் சுத்தம் செய்தல், நோயாளிகளுக்குச் சிகிச்சையளித்தல் முதலியவை யாகும்.

### சரும நோய் (Yaws)

'யால்' என்னும் நோய், மேகநோயைப் பரப்புகின்ற "ட்ரபா னிமா பல்லிடா" (Treponema Pallida) என்னும் கிருமிகளைப் போன்ற 'ட்ரபானிமா பெர்ட்டினுயி' (Treponoma Pertenui) என்னும் ஒருவகைக் கிருமியினால் ஏற்படுகிறது. மேகநோயைப் போல் அல்லாமல், இச்சரும நோய் உடலுறவு அல்லாத பிற வகையில் பரவுகிறது. சருமநோய் மலைவாழ் மக்களிடையே இருப்பதோடு அன்றி, சமவெளிகளில் தங்கள் உடல்நலனை நன்கு கவனித்துக் கொள்ளாத மக்களிடையேயும் காணப்படுகிறது. நோய் கண்டுபிடிக்கப்பட்டபின் இந்நோயை ஒரு டோஸ் பென்சிலின் மூலம் குணப்படுத்தலாம். சாதாரணமாக ஒருமுறை ஊசிக்குத்திக் கொண்டாலே போதுமானது. ஒருவரோடு ஒருவர் தொடர்பு கொள்வதன் மூலம் பரவும் நோய்களுக்கும் பென்சிலின் மருந்து மூலம் சிகிச்சை அளிக்கப்படுகிறது. இதைத்தவிர மக்க ளிடையே நல்வாழ்வுக் கல்வியும் பரப்பப்படுகிறது. பிற வகையான நோய்களுக்கும் பணியாளர் சிகிச்சை அளிக்கின்றனர்.

தற்போது தர்மபுரி, திருச்சிராப்பள்ளி, மதுரை ஆகிய மாவட்டங்களில் 'யால்' சரும நோய் ஒழிப்புத் திட்டம் செயல் படுகிறது. பெரியகுளம், பழனி, கரூர், தர்மபுரி ஆகிய இடங்கள் ஒவ்வொன்றிலும் உடல்நல ஆய்வாளர்கள் ஒருவர் வீதம் நியமிக் கப்பட்டுள்ளனர். அவர்கள் திண்டுக்கல்லிலுள்ள சிறப்பு சுகாதார அதிகாரி ஒருவரது பொறுப்பின்கீழ் பணியாற்றுவர். 1973 ஆம் ஆண்டில் 1,276 கிராமங்கள் ஆய்வு செய்யப்பட்டு, நோயுற்றோர் 262 பேர் கண்டுபிடிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப் பட்டனர். 1974-75 ஆம் ஆண்டில் ஆய்வு செய்வதற்காக



அதிகப்படியாக தென் ஆர்க்காடு, சேலம் ஆகிய இரு மாவட்டங்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டன. நான்காவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் இத் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 3.31 இலட்சமாகும்.

### கருங்காய்ச்சல் (Kala-azar)

கருங்காய்ச்சல் 'லேஸ்மான் டோனேவான்' (Leishman Donovan) என்னும் கிருமியினால் ஏற்படுகிறது. இது மணல் ஈக்களினால் பரப்பப்படுகிறது. இந்த நோய் கண்டவர்களுக்கு முறையற்ற கருங்காய்ச்சல் ஏற்படும். இது முற்றினால் இரத்தச் சோகை ஏற்படும். இதைக் கவனித்து சிகிச்சை செய்யாவிடில் மரணம் விளையும். தேசிய மலேரியா ஒழிப்புத் திட்டத்தை நிறை வேற்றும் போது எல்லா வீடுகளிலும் டி.டி.டி. (D.D.T.) மருந்து தெளிக்கப்பட்டமையால், மணல் ஈக்களின் அளவு வெகுவாகக் குறைக்கப்பட்டு, இந்நோய் பல ஆண்டுகளாக ஏற்படவே இல்லை. இதற்கிடையில் மருந்து தெளிக்கப்படுவது நிறுத்தியதினால் மணல் ஈக்கள் பெருகி கருங்காய்ச்சல் நோயும் சிறிது வளரலாயிற்று.

இத் திட்டம், இராமநாதபுரத்தில் ஒரு பிரிவோடு இயங்கி வருகிறது. இத் திட்டம் மூன்று சுகாதார ஆய்வாளர்கள், 15 களப்பணி உதவியாளர்கள் ஆகியோரின் உதவியுடன் உதவி பூச்சி இயலறிஞரின் தலைமையில் இயங்கி வருகிறது. இந்நோய் இராமநாதபுரம் மாவட்டத்தில் முன்னதாக பரவியிருக்கக் கூடிய பகுதிகளில் நோய் கண்டுள்ளவர்களைக் கண்டறிவதும், மணல் ஈக்களைப் பற்றிய விவரம் சேகரித்து, அது பரவியுள்ள அளவு குறித்துத் தீர்மானிப்பதும், இதன் முக்கிய பணிகளாகும். இந் நோய் கண்டுள்ள நோயாளிகள், சிகிச்சை அளிக்கப்படுவதற்காக, அண்மையிலுள்ள அரசு மருத்துவ மனைகள், தொடக்க நல்வாழ்வு நிலையங்கள் ஆகியவற்றிற்கு அழைத்துச் செல்லப்படுகின்றனர்.

1973-ஆம் ஆண்டில் 2,967 கிராமங்களிலும், சிற்றூர்களிலும் ஆய்வு நடத்தப்பட்டு, நோயுற்றவர் நால்வர் பதிவு செய்யப் பட்டனர். 6.625 மணல் ஈ கிருமிகள் சேகரிக்கப்பட்டன. திட்டத்தில் சேர்க்கப்படாத வேலையாக இத் திட்டம் ஐந்தாவது

ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் தொடர்ந்து செயல்படும். நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் இத்திட்டத்திற்கான மொத்த மதிப்பீட்டுச் செலவு ரூ. 2.75 லட்சம் ஆகும்.

### தொற்று நோய்களைக் கட்டுப்படுத்தும் திட்டங்கள் விவரம்- நடைமுறைச் செலவுத் தொகை.

இம் மாநிலத்தில், தொற்று நோய்க் கட்டுப்பாட்டுத் திட்டங்கள் அவற்றிற்கு எதிரே குறிப்பிட்டுள்ள ஆண்டுகளிலிருந்து செயல்பட்டமை பற்றிய விவரம் கீழே கொடுக்கப் பட்டுள்ளது :—

| தொடர் எண். | திட்டத்தின் பெயர். | செயல்படுத் தப்பட்ட ஆண்டு. |
|---|---|---|
| (1) | தேசிய மலேரியா ஒழிப்புத் திட்டம் | 1958–59 |
| (2) | தேசிய பெரியம்மை ஒழிப்புத் திட்டம் | 1963–64 |
| (3) | தேசிய காசநோய் கட்டுப்பாடு திட்டம் | 1963 |
| (4) | தேசிய காலரா கட்டுப்பாடு திட்டம் | 1971–72 |
| (5) | தேசிய தொழுநோய் கட்டுப்பாடு திட்டம் | 1962 |
| (6) | மேக நோய், கண் அமரம் | மார்ச் 1973 |
| (7) | தேசிய யானைக்கால் நோய்த் தடுப்புத் திட்டம். | 1957–58 |
| (8) | நகர்ப்புற மலேரியா ஒழிப்புத் திட்டம் | 1972–73 |

நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மேற்கண்ட திட்டங்கள் மத்திய அரசு உதவித் திட்டங்களாக செயல்படுத்தப்பட்டன. இத் திட்டங்களை நிறைவேற்றுவதற்காக மாநில அரசுக்கு மத்திய உதவி முழு அளவில் வழங்கப்பட்டது. திட்டச் செயற்குழுவின் பரிவுரைகளுக்கு இணங்க, ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் தேசிய மலேரியா ஒழிப்புத் திட்டம், தேசிய பெரியம்மை ஒழிப்புத் திட்டம் ஆகியவை தவிர மேற்கண்ட தொற்று நோய் தடுப்புத் திட்டத்திற்கான நடைமுறைச் செலவை மாநில அரசு ஏற்க வேண்டும்; இத் திட்டங்களுக்காகத் தேவைப் படும் பொருள்களையும், கருவிகளையும் மட்டுமே மத்திய அரசு வழங்கும்.



ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தமிழ்நாடு தொற்று நோய்த் தடுப்புத் திட்டங்களுக்கான (தேசிய மலேரியா ஒழிப்புத் திட்டம், தேசிய பெரியம்மை ஒழிப்புத் திட்டம் ஆகியவை தவிர) நடைமுறைச் செலவு (பணியாளர் செலவு) ரூ. 2.25 கோடி என்று கணக்கிடப்பட்டுள்ளது. திட்ட செயற்குழுவின் பரிவுரையின்படி, பொருள்கள், கருவிகள் ஆகியவற்றின் செலவு ரூ. 2.84 கோடி என்று கணக்கிடப்பட்டுள்ளது. இது குறித்து செயற் குழுக்கூட்டத்திலும் விவாதிக்கப்பட்டது. மாநில அரசு அதிகாரிகள் மறு ஆலோசனை செய்யுமாறு மத்திய அரசினைக் கேட்டுள்ளனர். இத் திட்டங்களில் சில நான்காவது திட்டக் காலத்தில் கடைசி ஓரிரு ஆண்டுகள் மட்டுமே செயல்பட்டு உள்ளன என்றும் திட்ட காலமாகிய 5 ஆண்டுகள் கூட செயற்படுத் தப்படாத நிலையில் அவற்றை மாநிலத்தின் பொறுப்புக்கு மாற்றினால் வருங்காலத்தில் மாநிலங்கள் திட்டக் கால நடுப் பகுதியில் புதிய திட்டங்களை மேற்கொள்ள முன்வர மாட்டா, பணித் திட்டங்களை விரிவு படுத்தவும் முன் வரமாட்டா என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. சில நேர்வுகளில் தற்போதுள்ள திட்டங்கள் குறைக்கப்படவும் சாத்தியமிருக்கிறது. இத் திட்டம் எந்த ஒரு மாநிலத்தில் தோல்வி கண்டாலும், தொற்று நோய்த் தடுப்புக்காகும் செலவுத் தொகை வழங்குவது குறைந்தாலும் இந்தியா முழுவதும் இது பெரும்பாதகத்தை விளைவிக்கும்.

### பல்நோக்குப் பணியாளர் திட்டம்.

சுகாதாரம், குடும்பக் கட்டுப்பாடு, ஊட்டச் சத்து உணவு ஆகிய பிரிவுகளில் பல்நோக்கு பணியாளர்கள் அமைக்கும் சாத்தியக்கூறு பற்றி ஆராய 1972 ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் இந்திய அரசு குழு ஒன்றை அமைத்தது. அக்குழு ஓர் அறிக்கை தயாரித்து வழங்கியுள்ளது. 1974 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் நடை பெறக்கூடிய மத்திய சுகாதாரக் குழு, மற்றும் மத்திய குடும்ப நலக் குழு ஆகியவற்றின் கூட்டுப் பேரவையில் இந்த அறிக்கை விவாதிக்கப்படும் என்றும் அந்தக் குழுக் கூட்டத்தில் அவ்வறிக்கையை ஆய்வு செய்த பின்னர் அதன் பரிந்துரைகள் குறித்து இறுதி முடிவு எடுக்கப்படும் என்றும் மத்திய அரசு கூறியுள்ளது. மேலும் மேற்கண்ட நோக்கத்தை நிறைவேற்றத் தயாராக இருப்பதற்கான நடவடிக்கை எடுக்குமாறும் மாநில அரசை இந்திய அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

[1974 மார்ச் 18

இம் மாநிலத்தில் தற்போது மலேரியா, பெரியம்மை, மகப்பேறு, குழந்தை நலப்பணி உட்பட குடும்பக் கட்டுப்பாடு போன்ற ஒவ்வொரு திட்டத்திலும் பலவகை பணியாளர்கள் உள்ளனர். அவர்களைக் கண்காணிப்பதற்காக தனிவகை கண்காணிப்பாளர்கள் பலர் உள்ளனர். மாவட்ட அளவில் மாவட்ட உடல் நல அலுவலர், மாவட்ட குடும்பக் கட்டுப்பாடு மகப்பேறு, குழந்தை நலப் பணி அலுவலர் ஆகிய தனித்தனி அலுவலர்களின் கட்டுப்பாட்டின் கீழ் பலவகை சுகாதார குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டங்களின் பணியாளர்களும் அவர்களின் கண்காணிப்பாளர்களும் உள்ளனர். இக் குழுவின் பரிவுரைகளுக்கு இணங்க மேற்கூறப்பட்ட திட்டங்களின் பணியாளர்கள் போதிய பயிற்சி அளிக்கப்பட்டவுடன் சுகாதாரம், குடும்பக் கட்டுப்பாடு, ஊட்டச் சத்து உணவு பணிகள் போன்ற பல நோக்குப் பணிகளை நிறைவேற்றும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டு—ஒருங்கிணைக்கப்பட வேண்டும். மாவட்ட சுகாதார அலுவலர், மாவட்டக் குடும்பக் கட்டுப்பாடு, மகப்பேறு, குழந்தை நல அலுவலர் போன்ற மாவட்ட அலுவலர்களின் பணியும் இக் குழுவின் ஆலோசனைக் கேற்ப ஒருங்கிணைக்கப்பட வேண்டும். இந்தக் குழுவின் பரிந்துரைகள் குறித்து இந்திய அரசு தனது இறுதி முடிவைத் தெரிவித்தவுடன் அவற்றைப் படிப்படியாக நடைமுறைப்படுத்தும் முயற்சி மேற்கொள்ளப்படும்.

## IV பிறப்பு, இறப்புப் புள்ளி விவரங்களைப் பதிவு செய்தல்.

பிறப்பு, இறப்பு பற்றிய புள்ளி விவரங்கள், சிறப்பாக பிறப்புகள், இறப்புகள், குழந்தைகளின் இறப்பு ஆகியவை சமுதாய நல்வாழ்வு நிலையைக் காட்டும் அடிப்படை அறிகுறிகளாகும். சமுதாய நல்வாழ்வின் அளவினைக் காட்டும் அளவு கோலாக அவை அமைகின்றன. சமுதாயத்தில் நிகழ்கின்ற பிறப்பு இறப்புப் புள்ளி விவரங்களைப் பற்றிய அறிவு, உடல் நலப் பணியாளர்களின் தேவைகளையும், தடுப்பு, பாதுகாப்புப் பணிகளைப் புரிவதற்கான சாதனங்களின் தேவையையும் மதிப்பிடுவதற்கு அவசியம் என்பதோடு சமுதாய நல்வாழ்வில் காலப்போக்கில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தைக் கணிப்பதற்கும், பணித் திட்டங்களின் விளைவுகளை மதிப்பிடுவதற்கும், தேவையாகும். சமூகத்தில் நிகழும் பிறப்புகள் இறப்புகள் யாவற்றையும் முழுமையாகவும், நிகழ்ந்தவாறும் பதிவு செய்தால் தான் ஆண்டுக்காண்டு குறிப்பிட்ட ஒரு



1974 மார்ச் 18]

பகுதியில் நிகழும் பிறப்பு, இறப்பு விகிதங்களைக் குறித்தும் அவற்றின் போக்கைக் குறித்தும் தொடர்ந்து ஆய்வு நடத்துவது சாத்தியமாகும். அரசு எவ்வளவு நன்முயற்சிகள் எடுத்தாலும், பல நேர்வுகள் இன்னும் பதிவு பெறாமலேயே தப்பி விடுகின்றன. ஆயினும் இம்மாநிலத்தில் பிறப்பு-இறப்பு புள்ளி விவரங்கள் சேகரிக்கும் பணியை மேம்படுத்த நிர்வாக நடவடிக்கைகளும் அறிவுறுத்தும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

நம் மாநிலத்தில் 1972 ஆம் ஆண்டின் இடையில் நடத்தப்பட்ட மதிப்பீட்டின்படி பிறப்பு விகிதம் மக்கள் தொகையில் 1,000-க்கு 24.4 ஆகவும், இறப்பு விகிதம் மக்கள் தொகையில் 1,000-க்கு 8.4 ஆகவும் இருந்தது. குழந்தை இறப்பு வீதம் 1,000 உயிருடன் பிறந்த குழந்தைகளுக்கு இறப்பு வீதம் 55.4 ஆக இருந்தது. பிறப்பு-இறப்பு வீதங்களைப் பதிவு செய்தலை தவறாது மேற்கொள்ளுமாறு செய்ய பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அவை (அ) மாநிலத் தலைமையிடத்தில் இயந்திரம் மூலம் அட்டவணைப்படுத்தும் பிரிவை அமைத்தல், (இ) வட்டார நிறுவனங்களை வலுப்படுத்தல், (உ) 1961 ஆம் ஆண்டு மக்கட் தொகைக் கணக்குப்படி ஓர் இலட்சம் மக்கட் தொகைக்கு மேலுள்ள சென்னை மாநகராட்சியிலும், 8 பெரிய நகராட்சிகளிலும் (தற்போதைய மதுரை மாநகராட்சி உட்பட) உள்ள பிறப்பு இறப்புப் புள்ளி விரங்கள் சேகரிக்கும் நிறுவனங்களை வலுப்படுத்தல் (எ) மாதிரி (Sample) பதிவுத் திட்டத்தைச் செயல்படுத்தல், (ஐ) போலிகை (Model) பதிவுத் திட்டத்தைச் செயல்படுத்துதல்.

## V. உணவுப் பொருட்களில் கலப்படம் செய்தலைத் தடை செய்தல்.

இம் மாநிலத்தில் நீண்ட காலமாகவே உணவுப்பொருள் கலப்படத்தடை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கிண்டி கிங் நிறுவனம், கோயம்புத்தூர் தலைமைப் பொது உடல் நல ஆய்வுக்கூடம், சென்னை மாநகராட்சி ஆகியவைகளுடன் இணைக்கப்பட்ட மூன்று ஆய்வுக்கூடங்களின் உதவியுடன் 306 உள்ளாட்சி மன்றங்களில் உணவுக் கலப்படத் தடுப்புச் சட்டம் செயல் படுத்தப்படுகிறது. இம் மாநிலத்திலுள்ள மொத்த உள்ளாட்சி மன்றங்களின் எண்ணிக்கை 1,088.

உள்ளாட்சி மன்றம் ஒவ்வொன்றும், உணவுப்பொருள் கலப் படத்தடைச் சட்டத்தைச் செயல்படுத்த ஒப்புக்கொள்ளும் தனது தீர்மானத்துடன் தன் நிதி நிலையைக் கருத்தில் கொண்டு, செயற் குறிப்புகளை, கிண்டி, கிங் நிறுவனம், அரசு பகுப்பாய்வாளருக்கு அனுப்பி வைக்கிறது. அவர், அப்படிவரும் செயற் குறிப்புகளை ஆய்வு செய்த பின்னர், அவை குறித்து மக்கள் நல்வாழ்வு குடும்ப நலத் துறை இயக்குநருக்குப் பரிவுரை செய்கிறார். இயக்குநர் தன் பரிந்துரைகளுடன் அந்தச் செயற்குறிப்புகளை அரசுக்கு அனுப்பி வைக்கிறார். உள்ளாட்சி மன்றங்கள் பகுப்பாய்வு செய்வதற்காக அனுப்பவேண்டிய மாதிரிகளின் எண்ணிக்கையையும், உள்ளாட்சி மன்றங்கள் ஆண்டுதோறும் செலுத்த வேண்டிய பங்குத் தொகை யையும் அரசு முடிவு செய்கிறது.

உணவுப் பொருள்களைப் பகுப்பாய்வு செய்யத் தற்போதுள்ள ஆய்வுக்கூட வசதிகள் போதுமானதாக இல்லை. இச்சட்டம் இம் மாநிலத்தில் இரு மாநகராட்சிகளிலும், ஏறக்குறைய நகராட்சிகள் அனைத்திலும் செயலில் இருந்தாலும், பல பேரூராட்சிகளிலும் ஊராட்சி ஒன்றியங்களிலும் இன்னும் செயல்படுத்தப்படவில்லை. பல பேரூராட்சிகளும், ஊராட்சி ஒன்றியங்களும், உணவுப் பொருள் கலப்படத் தடைச் சட்டத்தின்கீழ் உணவுப்பொருள் மாதிரிகளை, கிண்டி. அரசு பகுப்பாய்வாளருக்கு அனுப்ப அனுமதி கேட்டுள்ளன. ஆனால் ஆய்வுக்கூட விதிகள் இல்லாத தன் காரணமாக இவர்களின் வேண்டுகோளை ஏற்றுக் கொள்ள முடியவில்லை. ஆய்வுக்கூட வசதியினை மேம்படுத்துவது குறித்து, உணவு பகுப்பாய்வு கூடங்கள் இரண்டினை தஞ்சாவூரிலும், மதுரையிலும் கட்டுவதற்காக ஒவ்வொன்றிற்கும் ரூ. 2.50 லட்சம் அளவு தொகை 1973-ஆம் ஆண்டில் ஒப்பளிப்பு வழங்கப்பட்டது.

இச் சட்டம் நிறைவேற்றப்படுவதற்காக, உடல் நல அலுவலர் ஒருவர், அரசு கடைநிலை ஊழியர் ஒருவர் ஆகியோரைக் கொண்ட உணவுக் கட்டுப்பாட்டு பிரிவு அமைப்பதற்கு ஒப்பளிப்பு அளிக்கப் பட்டுள்ளது. இப்பிரிவிலுள்ள உடல் நல அலுவலர் இம்மாநிலத் தில் உள்ள நகரங்கள், மாநகரங்களில் திடீரென்று சோதனை இட்டு மாதிரிகளை எடுப்பார்.

துப்புரவு ஆய்வாளர்களுக்காக உணவுப் பொருள் மாதிரிகளில் பயிற்சித் திட்டம் வெகு விரைவில் தொடங்கப்பட இருக்கிறது.





1973 ஆம் ஆண்டில் இச்சட்டத்தின்கீழ்ப் பகுப்பாய்வு செய்யப் பட்ட மாதிரிகளின் எண்ணிக்கை 19,043 ஆகும். இவற்றில், 4,957 மாதிரிகள் கலப்படமெனக் கண்டறியப்பட்டது. உணவுப் பொருள்களில் கலப்படம் செய்த குற்றத்திற்காக 4,369 பேர் மீது வழக்குத் தொடரப்பட்டது. இவர்களில், 3,749 பேர் குற்றவாளி களெனத் தீர்ப்பளிக்கப்பட்டனர். 44 பேருக்குச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. இவர்களுக்கு அபராதம் விதித்ததன் வாயி லாகக் கிடைத்த தொகை ரூ. 6,29,631 ஆகும்.

## VI. பள்ளிக் குழந்தைகளின் நல்வாழ்வு.

பள்ளிக் குழந்தைகளை மருத்துவச் சோதனை செய்யும் திட்டம் ஒன்று 18 தொடக்க நல்வாழ்வு நிலையங்களில் செயலில் உள்ளது.

இத் திட்டத்தின்படி தெரிந்தெடுக்கப்பட்ட இந்தத் தொடக்க நல்வாழ்வு நிலையங்களைச் சேர்ந்த மருத்துவ அதிகாரிகள் ஒவ் வொருவரும் ஆண்டுதோறும் 6-11 வயதுத் தொகுதியிலுள்ள பள்ளிக் குழந்தைகள் 2,000 பேரைச் சோதனை செய்கின்றனர். நோயுற்றிருப்பதற்கான அறிகுறிகள் தெரியும் பள்ளிக் குழந்தை களுக்கு இந்த மருத்துவ அதிகாரிகள் மருந்துகளையும், தேவை யான சத்து உணவையும் வழங்குகின்றனர். சிறப்பாகச் சிகிச்சை யளிக்க வேண்டியது அவசியம் எனக் கருதப்படுகிற குழந்தைகள் சிகிச்சைக்காக அருகிலுள்ள மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப் படுகின்றனர். 1972-ல், 51,991 மாணவர்கள் சோதனை செய்யப் பட்டனர். இத்திட்டம் 1974-75 ஆம் ஆண்டில் 20 தொடக்க நல்வாழ்வு நிலையங்களுக்கு விஸ்தரிக்கப்படும்.

கோயம்புத்தூரிலும், திருச்சிராப்பள்ளியிலும் இத்திட்டத்தைச் செயற்படுத்த இரு மருத்துவப் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இவ்விரு பிரிவுகளிலும் இரு மருத்துவ அதிகாரிகள் உள்ளனர். ஒவ்வொருவரும் ஆண்டுதோறும் 10,000 குழந்தைகளைச் சோதனை செய்கின்றனர். பிறகாப்பு நடவடிக்கைகளையும் அவர்கள் எடுக் கின்றனர். இத் திட்டம் 1974-75 ஆம் ஆண்டில் பத்து நகரங் களுக்கு விஸ்தரிக்கப்படும்.

## VII. உடல்நலக் கல்விக் கழகம்.

மாநில உடல்நலக் கல்விக் கழகம் 1960 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது. கடந்த 13 ஆண்டுகளில் இக்கழகம் ஒரே சீராக வளர்ந்து வந்துள்ளது. இந்திய அரசு பரிவுரை செய்த ஐந்து பிரிவுகளைத் தற்போது இக்கழகம் கொண்டுள்ளது. அவையாவன: நிர்வாகம்—ஆய்வுப் பிரிவு, நேரிட ஆய்வு—செய்முறை விளக்கப் பிரிவு, பிரச்சாரப் பிரிவு, உடல் நலக் கல்வி ஆசிரியர் பயிற்சிப் பிரிவு, மாணவர் நல் வாழ்வுக் கல்விப் பிரிவு ஆகியன. தங்களுடைய நடவடிக்கை முயற்சிகள் வாயிலாக நல்ல உடல் நிலையைப் பெற, மக்களுக்கு உதவி செய்வது உடல் நலக் கல்விக் கழகத்தின் முக்கியக் குறிக்கோளாக இருக்கிறது. இத்திட்டத்தை நிறைவேற்ற, நல்வாழ்வுத் திட்டங்கள், கொள்கைகள் ஆகியவற்றுக்கு பொதுமக்களின் ஒத்துழைப்பு, ஆதரவு பெற மாநில உடல் நலக் கல்விக் கழகம் பல்வேறு பயிற்சியையும் கல்வி நடவடிக்கைகளையும் செயற்படுத்துகிறது.

**பொது நல்வாழ்வு நிறுவனம், பூவிருந்தவல்லி.**—இந்த நிறுவனம் கீழ்க்காணும் மூன்று பிரிவுகளைக் கொண்டது :—

(1) நல்வாழ்வுப் பிரிவு—பணிப் பிரிவு.
(2) மறுபயிற்சி நிலையம்—பயிற்சிப் பிரிவு.
(3) ஆராய்ச்சிச்-செயல் திட்டம்—செயல்பிரிவு பின்பற்றும் ஆராய்ச்சி.

இந்த நல்வாழ்வுப் பிரிவு, ராக்பெல்லர் நிறுவனத்தின் உதவியுடன் 1935-ல் தொடங்கப்பட்டது. பின்னர், மேற்சொன்ன நிறுவனத்தின் உதவி முடிவடைந்த பின்னர் இதனைத் தமிழ்நாடு அரசு மேற்கொண்டது.

இப்பிரிவின் நோக்கங்களாவன.—

(i) சோதனை முயற்சியாக, மும்முரச் சுகாதாரப் பணிகளுக்கு ஏற்பாடு செய்வதன் மூலம் குறிப்பிட்ட கிராமப்புறப் பகுதி ஒன்றில் பொது நல்வாழ்வினை மேம்படுத்துதல்.

(ii) பொது நல்வாழ்வு நன் முயற்சியுடன், கிராம மக்களுக்கு நோய்த்தடுப்பு முறைகளைக் கையாள என்ன செய்யலாம் என்பது குறித்து விளக்குதல்.



(iii) பொது உடல்நலக் கூறுகள் அனைத்திலும் மருத்துவப் பணியாளர்களுக்கும், துணை மருத்துவப் பணியாளர்களுக்கும் பயிற்சியளிக்க வசதி அளித்தல்.

இப்பிரிவின் அலுவல்களாவன :—

(1) மகப்பேறு, குழந்தை நலப் பணிகளுக்கு வகை செய்தல்.
(2) குடும்பநலத் திட்டம்.
(3) தொற்று நோய்கள் பரவாவண்ணம் கட்டுப்படுத்துதல்.
(4) சுற்றுப்புறத் துப்புரவு.
(5) உடல்நலக் கல்வி.
(6) பிறப்பு, இறப்புப் புள்ளி விவரங்களைத் தொகுத்தல்.
(7) பயிற்சித் திட்டங்கள் நடத்துதல்.

(i) **மகப்பேறு, குழந்தை நலப் பணிகள்.**—கருவுற்றிருக்கும் தாய்மார்களுக்கும், பாலூட்டும் தாய்மார்களுக்கும் வீடுகளுக்குச் சென்று மருத்துவச் சிகிச்சையளிப்பதோடு மருத்துவ நிலையங்களிலும் அவர்களுக்குச் சிகிச்சை அளிக்கப்படுகிறது. கைக் குழந்தைகளுக்கும், பாலர்களுக்கும் 8 மகப்பேறு இல்லங்கள், நிலையங்கள் மூலமாக மருத்துவச் சிகிச்சை அளிக்கப்படுகிறது.

1973-ஆம் ஆண்டில் மருத்துவப் பாதுகாப்பு அளிக்கப்பட்ட தாய்மார்களின் எண்ணிக்கை 4,875; மகப்பேறு காலத்திற்கு முந்திய நிலையில் மருத்துவப் பாதுகாப்பு அளிக்கப்பட்ட தாய்மார்களின் எண்ணிக்கை 4,632; சுகாதார பிரிவு இருக்கும் பகுதியில் பிறந்த குழந்தைகளின் மொத்த எண்ணிக்கை 3,031.

(ii) **குடும்ப நலத் திட்டம்.**—மகப்பேறு குழந்தை நல நிலையங்களுடன் ஒருங்கிணைந்து இப்பணி நடத்தப்பட்டு வருகிறது. குடும்ப நலத் திட்டத்தை மேற்கொள்ளுமாறு தாய்மார்களுக்கு அறிவுரை கூறப்படுவதோடு வாசக்டமி அறுவைச் சிகிச்சை செய்து கொள்ளுமாறு ஆடவருக்குத் தாய்மார்கள் மூலமாகவும் அறிவுரை கூறப்படுகிறது. நிரோத் உறைகளை இலவசமாக வழங்குதல், மகளிர்க்கு 'லூப்' வளையம் பொறுத்துதல் ஆகியவை குடும்ப நலத் திட்டத்தின் முக்கியப் பணிகளாகும்.

(iii) தொற்று நோய்களைப் பரவாவண்ணம் கட்டுப்படுத்துதல்.—அம்மை குத்துதல், காலரா நோய்த் தடுப்பு ஊசி போடுதல், முத்தடுப்பு ஊசி போடுதல் முதலிய நோய்த் தடுப்பு நடவடிக்கைகள் முறையாக மேற்கொள்ளப்படுகின்றன.

(iv) சுற்றுப்புறத் துப்புரவு.—112 குழாய்க் கிணறுகள், துளைக் கிணறுகள் அமைத்து அவற்றின் மூலமாக மக்களுக்குத் தூநீர் வழங்கப்படுகிறது. தனிப்பட்டோர் வீடுகளில் 4,000 கழிப்பிடக் குழிகளும் துளைக் கழிப்பிடங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

(v) நல்வாழ்வுக் கல்வி.—திரைப்படக் காட்சிகள் பலர் கூடி உரையாற்றுதல், ஒவ்வொருவரோடு தனித்தனியாகத் தொடர்பு கொண்டு நல்வாழ்வு பற்றி உரையாடுதல், கிராமத் தலைவர்கள் பயிற்சித் திட்டம் ஆகியவை மூலமாக நல்வாழ்வு பற்றி முறையாகக் கற்பிக்கப்படுகிறது.

(vi) பிறப்பு, இறப்பு புள்ளி விவரங்கள்.—பிறப்பு இறப்புப் புள்ளி விவரங்களை கிராமத் தலைவர் பதிவு செய்கிறார். பிறப்பு இறப்பு புள்ளி விவரங்களைப் பதிவு செய்ய கிராமத் தலைவருக்கு வழிகாட்ட சுகாதார ஆய்வாளர் ஒருவரும், புள்ளி விவர உதவியாளர் ஒருவரும் இருக்கின்றனர்.

(vii) பயிற்சித் திட்டம்.—பயிற்சித் திட்டங்கள் கீழ்க் காணும் பணியாளர்களுக்காக நடத்தப்படுகின்றன :—

(அ) சென்னை மருத்துவக் கல்லூரி மனையிட மருத்துவர்கள்.—பொதுச் சுகாதார நடவடிக்கைகளில் ஒரு மாதம் பயிற்சி அளித்தல், 1973-ல் 209 மனையிட மருத்துவர்கள் பயிற்சி பெற்றுள்ளனர்.

(இ) சென்னை மருத்துவக் கல்லூரி மாணவர்களுக்கு மகப்பேறு.—குழந்தை நலம் தகுதிப்பட்டயப் பயிற்சி வகுப்பு—பயிற்சிக் காலம் ஒரு வாரம்—ஆண்டொன்றுக்கு ஒரு தொகுதியினர் பயிற்சி பெறுதல், 1973-ல் மூன்று மாணவர்கள் பயிற்சி பெற்றனர்.

(உ) சென்னை மருத்துவக் கல்லூரி, ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி, செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரி மாணவர்களுக்குத்



துப்புரவு ஆய்வாளர் பயிற்சி வகுப்பு—பயிற்சிக் கால அளவு 15 நாட்கள்—ஓராண்டில் 3 தொகுதிகளாகப் பயிற்சி பெறுதல். 1973-ல் 130 மாணவர்கள் பயிற்சி பெற்றனர்.

(எ) பொது நல்வாழ்வுப் பார்வையாளர் பயிற்சி (முறையானது ஒருங்கிணைக்கப்பட்டது)—15 முதல் 30 நாட்கள் பயிற்சி பெறுதல்—ஓராண்டில் 4 தொகுதியினர் பயிற்சி பெறுதல்.

(ஐ) பி.எஸ்.சி. மாணவர் பயிற்சி வகுப்பு—பயிற்சிக் காலம் 15 நாட்கள்—ஓராண்டில் ஒரு தடவை பயிற்சி வகுப்பு நடத்துதல்.

(ஒ) சென்னை, மகப்பேறு மருத்துவமனைகளைச் சேர்ந்த துணைச் செவிலி மாணவியர்—பயிற்சிக் காலம் 15 நாட்கள்—ஓராண்டில் நான்கு பயிற்சி வகுப்புகள் நடத்துதல்.

நல்வாழ்வுப் பிரிவு உள்ள பகுதி என்பது. மறு பயிற்சி நிலையத்தின் பயிற்சியாளர்கள் செயல்முறை பயிற்சி மேற்கொள்ளும் பகுதியாகும். பொதுச் சுகாதார நிலையத்தில் உள்ள பயிற்சிப் பிரிவும், நேரடித் திட்டங்களும். ஒருங்கிணைந்த முயற்சியுடைய சுகாதாரப் பிரிவு, மறு பயிற்சி நிலையம், ஆராய்ச்சி—செயல் திட்டம்—செயல் பிரிவு ஆகியவை அடங்கும்.

இத்துடன் காசநோய் மருத்துவமனை, மனநோய் தனி மருத்துவமனை, குழந்தை நல தனி மருத்துவமனை ஆகியவை முறையாகச் செயல்பட்டு வருகின்றன. இரத்த சோகை ஏற்படுவதற்கான காரணங்கள் குறித்து ஆய்வு செய்யும் பொருட்டு, கருவுற்றிருக்கும்போது இரத்தசோகை ஏற்படுதல் குறித்து சிறப்பு ஆய்வு ஒன்று நடந்தேறி வருகிறது. இதுவரை 368 தாய்மார்கள் மருத்துவச் சோதனை செய்யப்பட்டுள்ளனர். 1973 ஆம் ஆண்டில் 130 காசநோய்ப் பிணியாளருக்கும் 100 மனநோய்ப் பிணியாளருக்கும் சிகிச்சையளிக்கப்பட்டது.

மறுபயிற்சி நிலையம்.—இந்த நிலையம் 1954-ஆம் ஆண்டில், ஃபோர்டு நிறுவனத்தின் உதவியுடன் தொடங்கப்பட்டது. மேற்படி உதவி நிறுத்தப்பட்ட உடன், இந்த நிலையத்தை அரசு மேற்கொண்டது. தொடக்க நல்வாழ்வு நிலையங்களில் பணிபுரியும் மருத்துவர்களுக்கும் மருத்துவ உதவியாளர்களுக்கும் மறு பயிற்சி அளிக்கப்படுகிறது. இது எட்டு வாரகால பயிற்சியாகும்.

இப்பயிற்சியின் நோக்கங்களாவன :—

(1) தொடக்க நல்வாழ்வு நிலையத் தொகுதியைச் சேர்ந்த சுகாதாரப் பணியாளர்களிடையே ஒருங்கு சேர்ந்து உழைக்கும் தன்மையை வளர்த்தல், வேலைவாய்ப்பையே நோக்கமாகக் கொண்ட பயிற்சி அளித்தல்.

(2) தொடக்க நல்வாழ்வு நிலையங்களில் பணிபுரியும் உடல் நலப் பணியாளர்களுக்கு கிராமச் சுகாதாரப் பணியில் செய்முறைப் பயிற்சி அளித்தல்.

தற்பொழுது ஆண்டு ஒன்றுக்கு, ஐந்து தொகுதியினருக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு தொகுதியிலும் 15 மருத்துவ அதிகாரிகள், 5 உடல் நல ஆய்வாளர்கள், 5 சுகாதாரப் பார்வையாளர்கள் ஆகியோர் உள்ளனர். 1973 ஆம் ஆண்டில் 102 பேர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. 1973 ஆம் ஆண்டு இறுதிவரையில், 2,541 பேரைக் கொண்ட 102 தொகுதியினருக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. தற்பொழுது 103 வது தொகுதியினருக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

**ஆராய்ச்சி—செயல் திட்டம்.**—இத் திட்டம், 1956-ஆம் ஆண்டில் ஃபோர்டு நிறுவனத்தின் உதவியுடன் தொடங்கப்பட்டது. கிராமச் சுகாதார மேம்பாட்டு பணிகள், அவற்றின் அணுகுமுறை ஆகியவை பற்றிய உத்திகளை மேம்படுத்துவதற்கான ஆராய்ச்சி திட்டம் ஒன்றை மேற்கொள்வதற்காக இத்திட்டம் தொடங்கப்பட்டது. முதலில் கிராமப்புறக் கழிப்பிட வசதி திட்டம் பற்றி 1956 முதல் 1960 வரையில் நான்கு ஆண்டுகளுக்கு ஆராய்ச்சி நடத்தப்பட்டது. ஒவ்வொரு வீட்டிலும் குறைந்த செலவிலும், எளிமையான முறையிலும் துப்புரவு வசதியுடன் கூடிய நீரடிக் கழிப்பிடங்கள் அமைத்துக் கொடுப்பதற்கான வழிவகைப்பற்றி ஆராய்ச்சி செய்யப்பட்டது. ஃபோர்டு நிறுவனத்தின் உதவி நிறுத்தப்பட்டவுடன் 1961-லிருந்து இத்திட்டத்தை அரசு மேற்கொண்டது.

கிராமப்புற கழிப்பிட வசதித் திட்டம் தொடக்கத்தில் செங்கற்பட்டு மாவட்டத்தில் நான்கு வட்டாரங்களில் செயற்படுத்தப்பட்டு, பின்னர் தஞ்சாவூர், மதுரை, திருநெல்வேலி



மாவட்டங்களைச் சேர்ந்த 15 வட்டாரங்களுக்கு நீட்டிக்கப்பட்டது. 1973 இறுதி வரையில் 19 வட்டாரங்களில் 11,000 ஆராய்ச்சி-செயல் திட்டக் கழிப்பிடங்கள் அமைக்கப்பட்டன. செங்கற்பட்டு மாவட்டத்தில் 4 பணிக் கூடாரங்களிலும், திருநெல்வேலி மாவட்டத்தில் ஒரு பணிக்கூடாரத்திலும் மட்டும் தான் ஆராய்ச்சி—செயல் திட்டக் கழிப்பிடங்களுக்கான பாகங்கள் தயாரிக்கப்படுகின்றன.

இந் நிறுவனத்தில் கீழ்க்கண்ட சிறப்புப் பயிற்சித் திட்டங்கள் நடத்தப்படுகின்றன ; அவை :—

(அ) கல்கத்தாவில் உள்ள, அகில இந்திய சுகாதார மக்கள் நல்வாழ்வு நிறுவனம், காந்தி கிராமம், கிராம நல்வாழ்வு குடும்பக் கட்டுப்பாடு நிறுவனம் ஆகியவற்றைச் சேர்ந்த சுகாதாரக் கல்வி பட்டைய வகுப்பு மாணவர்களுக்கு மேற்பார்வையுடன் கூடிய களப் பயிற்சி, இது 2 மாத காலப் பயிற்சியாகும்.

(இ) தேசிய பணித் திட்டத்தின்கீழ் கல்லூரிகளுக்கான பயிற்சித் திட்டம். இது இரண்டு நாள் பயிற்சியாகும்.

(உ) சென்னை மருத்துவக் கல்லூரியைச் சேர்ந்த துப்புரவு உதவியாளர் பயிற்சித் திட்டம்—இது ஒரு மாத காலப் பயிற்சியாகும்.

மேற்கொள்ளப்படும் இப்பயிற்சித் திட்டங்களுடன் பல கல்லூரியிலிருந்து வரக்கூடிய எம்.பி.பி.எஸ். மாணவர்கள், பி.எஸ்.சி. (செவிலியர் பாடம்) மாணவர்கள், பி.எஸ்.சி. (மனையியல்) மாணவர்கள், பி.எஸ்.சி. (பொது சுகாதாரம்) மாணவர்கள் ஆகியோர் இப்பயிற்சியில் கலந்து கொள்கின்றனர்.

1966-67 முதல் 1969-70 வரையிலான கால அளவில், ஆராய்ச்சி—செயல் திட்டப் பிரிவு, 91 தொடக்கப் பள்ளிகளில் பள்ளித் துப்புரவுகளை மேற்கொண்டது. 1969-70 ஆம் ஆண்டிலிருந்து அதே திட்டத்தை கிராம வளர்ச்சி—உள்ளாட்சித் துறை நிறைவேற்றி வருகிறது. பூவிருந்தவல்லியிலுள்ள பொது சுகாதார நிறுவனம், ஆராய்ச்சி—செயல் திட்டப் பிரிவு தயாரித்த திட்டத்தின்படி இத்துறை நிறைவேற்றி வருகிறது.

## VIII. பல்வகை.

### சந்தைகளும், திருவிழாக்களும்.

மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலும் ஏறத்தாழ, 600 பெரிய சிறிய பொருட்காட்சிகள், திருவிழாக்கள் நடைபெற்றன. இவ் விழாக்கள் அனைத்திற்கும் போதுமான சுகாதாரத் துப்புரவு ஏற்பாடுகள் செய்யப்பட்டன. பெரிய பொருட்காட்சிகள் திருவிழாக்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்ட துப்புரவுப் பணிகளை மக்கள் நல்வாழ்வு குடும்பநலத் துறை உதவி இயக்குநர்களும்—கூட்டு இயக்குநரும் நேரில் பார்வையிட்டனர். விழாக்களின் போது தேவையேற்படுமென எதிர்பார்க்கப்பட்ட நேர்வுகளில் காலராத் தடுப்பு ஊசி போடும் பணியைச் செய்ய கொள்ளை நோய்ப் பிரிவுச் சிகிச்சைக்கான இயங்கும் நிலையங்களின் வண்டிகளின் பணியாளர்களும் வண்டிகளும் அந்த இடத்திற்கு அனுப்பப் பட்டனர்.

### சுற்றுப்புறத் துப்புரவு.

பள்ளி செல்லும் இளஞ்சிறார் உடல்நல வாழ்க்கை முறைகளை கடைப்பிடிக்கக் கற்றுத் தருவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டம் பள்ளிகளில் கழிப்பிடங்கள், பாதுகாப்பான நீர் வழங்கல் ஆகிய வசதிகளை ஏற்படுத்தித்தர வகை செய்கிறது. இத் திட்டம் 1966-ல் கொண்டுவரப்பட்டு தொடர்ந்து செயற்படுத்தப் பட்டது. பின்னர், இத்திட்டத்தை தமிழ்நாடு முழுவதும் நீட்டிப்பதென முடிவு செய்து, பல்வேறு மாவட்டங்களிலுள்ள 120 பள்ளிகளில் இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்காக 1970-ல் அரசு ரூ. 4 லட்சம் வழங்கியது. இத்திட்டத்தை மக்கள் நல்வாழ்வு—குடும்ப நலத்துறை இயக்குநரும் கிராம வளர்ச்சித் துறை இயக்குநரும் இணைந்து நிறைவேற்றி வருகின்றனர்.

### நீரின் தூய்மைக்கேடு.

இது குறித்துத் தேவையான கட்டுப்பாடு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறோம். வெளியிடங்களில் கண்டபடி கழிக்கப்படும் மலஜலம், கழிவுநீர் ஆகியவை கலந்துவிடுவதால் நீரின் தூய்மை கெடுகிறது. கழிவுநீரை, பக்கத்திலுள்ள நீரோடைகள், ஆறுகள் போன்றவற்றில் சேரவிடுவது





நகரங்களிலும், மாநகரங்களிலும் பொதுவாகக் காணப்படுகின்றது. இந்தக் கழிவுநீர் தூய்மைப்படுத்தப்படாமலே நீரோடைகளிலும், ஆறுகளிலும் கலக்கிறது.

தொழிற்சாலைகளிலிருந்து வெளிவரும் கழிவுப் பொருள் ஓரளவு தூய்மைப்படுத்தப்பட்டோ அல்லது தூய்மைப்படுத்தப்படாமலோ ஆறுகளிலும் நீரோடைகளிலும் விடப்படுவதாலும் நீரின் தூய்மை கெடுகிறது. நீரின் தூய்மை கெடுவதற்குக் காரணமாக உள்ள மாநிலத்திலுள்ள தொழிற்சாலைகள் வருமாறு: (1) வட ஆர்க்காடு மாவட்டத்தில் தோல் பதனிடு தொழிற்சாலைகள், (2) மேட்டூர் பகுதியில் ரசாயனத் தொழிற்சாலைகள், (3) வடிசாலைகள், (4) சர்க்கரை ஆலைகள், (5) துணி ஆலைகள்—குறிப்பாக நிறமாற்றுதல், சாயந் தோய்த்தல், துணியின் மீது அச்சிடுதல் வேலை நடைபெறும் ஆலைகள் இவை நீரின் தூய்மையை கெடுக்கக் கூடிய தொழிற்சாலைகளில் ஒரு சிலவாகும். இந்த தொழிற்சாலைகளில் செய்முறை தயாரிப்பு வேலைகள் குறித்து விரிவாக ஆய்வு செய்யப்பட வேண்டும். தீங்கு தரக்கூடிய கழிவுப்பொருள்களைத் தண்ணீரில் விடுவதற்கு முன்னர், கழிவு நீரைத் தூய்மைப் படுத்துவதற்கான நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டும். இதைச் செயல்படுத்துவதில், நிர்வாகத்தினரின் முழுமையான ஒத்துழைப்பு தேவைப்படுகிறது. அதற்குச் செலவு மிகுதியாகலாம். ஆனால் தூய்மைக் கேட்டைச் செவ்விய முறையில் தடுக்க இது அவசியமாகிறது. மேலும், செயல்படுத்தும் அதிகாரிகளால் அடிக்கடி திடீர் சோதனையிட வகை செய்யப்பட வேண்டும்.

பெருகிவரும் தொழிற்சாலைகளை முறைப்படுத்த இம் மாநிலத்தில் தமிழ்நாடு பொதுச் சுகாதாரச் சட்டம், தொழிற்சாலைகள் சட்டம், நகரமைப்பு விதிகள், ஒழுங்குமுறை விதிகள் ஆகியவை இருக்கின்றன. மேலும் இப் பிரச்சினைகள் குறித்து ஆராய நீரின் தூய்மைக் கெடுவதைத் தடுக்கும் சட்டவரைவு காற்றின் தூய்மை கெடுவதைத் தடுக்கும் சட்டவரைவு ஆகியவற்றை முன்மொழிவதென்றும் மத்திய அரசு கருதியுள்ளது.

இது தவிர, நீர்-கழிவு நீர் தூய்மைப்படுத்தும் குழு ஒன்றை மாநில அரசு அமைத்துள்ளது. தூய்மைப்படுத்தும் வழிமுறைகளும், தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் கழிவுப் பொருள்களை அகற்றும் முறைகளைக் குறித்தும் இக்குழு

பரிசீலிக்கிறது. நீரின் தூய்மை கெடுவதால் ஏற்படக்கூடிய தொல்லைகளை நீக்குவதற்குத் தேவையான ஆலோசனைகளை இக்குழு வழங்குகிறது.

காற்றின் தூய்மைக்கேடு.

சுற்றுப்புற காற்றுத் தூய்மை கெடும் நிலைமை ஏற்பட்டு வருவதைத் தற்போது பொது மக்கள் மேன்மேலும் உணர்ந்து வருகின்றனர். குறிப்பாக சென்னை மாநகரத்தில் இப்பிரச்சினை குறித்து ஆய்வு செய்ததன் மூலம் கீழ்க்கண்ட பல்வேறு காரணங்களினால் காற்றின் தூய்மை கெடுவது தெளிவாகிறது :—

(1) கழிவுப் பொருள்களை அகற்றுதல்.

(2) ரயில்வேயால் காற்றின் தூய்மை கெடுதல்—தொடர் வண்டிகளை இழுப்பதற்கும் தடமாற்றம் ஆகியவற்றுக்கும் பயன்படும் என்ஜின்களிலிருந்து வெளிவரும் புகை.

(3) வாகனங்களிலிருந்து வெளிவரும் புகையால் காற்றின் தூய்மை கெடுதல்—டீசலினால் இயங்கக்கூடிய பேருந்துகள், லாரிகள், பெட்ரோல், எண்ணெய் ஆகியவற்றைக் கலந்து எரிபொருளாகப் பயன்படுத்தும் இரு குழாய்கள் பொருத்தப்பட்ட இஞ்சின்கள், ஸ்கூட்டர்கள், பொருளைக் கொண்டு செல்லும் சிறிய வண்டிகள், பெட்ரோலினால் ஓட்டக்கூடிய கார்கள், பேருந்துகள் ஆகியன.

வண்டிகளின் அமைப்பை பொருத்தும், இஞ்சினுடைய செயல்படுதிறனைப் பொருத்தும் வெளி வரும் புகை அளவு மாறு படும். மின்கலத்தைப் பயன்படுத்தி மோட்டார்களை இயக்க பல்வேறு மாற்று ஏற்பாடு முயற்சிகள் பிறநாடுகளில் செய்யப் படுகின்றன. வழக்கமாக பெட்ரோல் பயன்படுத்தும் வண்டிகளை மாற்றுமளவுக்கு இன்னும் இதில் வளர்ச்சி ஏற்படவில்லை.

மேற்சொன்ன காற்றுத் தூய்மை கெடும் நேர்வுகள் தவிர பல்வேறு தொழிற்சாலைகள், அவைகள் அமைந்துள்ள இடம் அவை செயல்படுதல், ஆகியவை காரணமாக காற்றுத் தூய்மை கெடுவதற்கு காரணமாகலாம். உலைகளிலிருந்தும், புகை போக்கிகளிலிருந்தும் வரும் நிலக்கரிப்புகை, கரிப்புகை ஆகியவை எல்லாத் தொழிற்சாலைகளுக்கும் பொதுவானதாகும்.



மேலும், ஒவ்வொரு தொழிற்சாலையிலும் சில வாயுக்கள் கலந்த கழிவுப் பொருள் வெளிப்படும். அவை காற்றுடன் கலந்து விடும். உரத் தொழிற்சாலைகள் ரசாயனத் தொழிற்சாலைகள் போன்றவற்றில் ரசாயனப் பொருள் கலந்த புகை வெளிவரும். சிமிட்டித் தொழிற்சாலைகளிலிருந்து தூசு படிந்த புகை வெளி யாகும். இத்தொழிற்சாலைகள் அமைந்துள்ள இடநிலைமை, காற்று வீசும் திசைகள், ஏனைய பருவலாக வேறுபாடுகள் ஆகிய வற்றின் காரணமாக இத்தொழிற்சாலைகளினால் பெருமளவுக்குத் தொல்லை ஏற்படுகிறது. இந்தத் தொல்லை காலத்திற்கு தகுந்த வாறு மாறுபடும். இப் பிரச்சினையை முற்றிலும் தீர்க்க தொடர்ந்து செயற்படும் நீண்டகால ஆய்வு தேவைப்படுகிறது. பல தேர்வுகளில் தொழில் நுட்ப வல்லுநர்கள் உதவி கிடைத்த போதிலும், இந்த யோசனைகளைச் செயல்படுத்துவதில் நடை முறைச் சிக்கல் இருக்கிறது; ஏனெனில், அத்தொழிற்சாலை களுக்கு இறக்குமதி செய்யப்பட்ட சாதனம் தேவைப்படுகின்றது. உதாரணமாக, சிமிட்டித் தொழிற்சாலைகளுக்கு நிலைமின்இயல் வடிகட்டி இயந்திரம் (electrostatic precipitator) தேவைப்படும்.

சென்னை மாநகரில் காற்றின் தூய்மை கெடுவதை ஆராய அரசு ஒரு குழு அமைத்தது; அக்குழு தன்னுடைய பரிந்துரை களைக் கொண்ட அறிக்கையினைப் பணிந்தனுப்பியுள்ளது.

இக்குழுவின் பல்வேறு பரிவுரைகள்மீது தேவையான நடவடிக்கை எடுப்பதற்காக அது தொடர்பான துறைகளுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

IX. குடிநீர் வழங்கல்—கழிவுநீர் அகற்றுத் திட்டங்கள்.

மாநகரக் கழிவுநீர் அகற்று அடங்கல் திட்டம்.—சென்னை மாநகருக்கான கழிவுநீர் அகற்று அடங்கல் திட்டம் ஒன்று ஒப் பளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்படி, கழிவு நீரை அகற்று வதற்கான தனித்தனி ஏற்பாடுகளுடன் மாநகரம் ஐந்து மண்டலங் களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. மாநகராட்சியால் மேற்கொள்ளப் பட்ட கழிவுநீர் அகற்றுத் திட்டங்கள் அனைத்திற்குமான மொத்த மதிப்பீட்டுச் செலவு ரூபாய் 1,392.71 லட்சமாகும். இத்திட்டப் பணிகளுக்காக கடனாகவும் மானியமாகவும் இதுவரை ரூபாய்

6,25.61 லட்சம் நிதி உதவி அளிக்கப்பட்டுள்ளது. எல்லாத் திட்டங்களும் நிறைவேற்றுவதற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு அவை பெரும்பாலும் முடிவுறும் நிலையிலுள்ளன.

ரூபாய் 16.45 கோடி செலவில், மாநகரம் முழுதிலும் மழைநீர் வடிகால் கட்டுவதற்கான பெருந்திட்டம் ஒன்று தற்பொழுது சென்னை மாநகராட்சியால் தயாரிக்கப்பட்டு, அத்திட்டம், தமிழ்நாடு குடிநீர் வழங்கு கழிவு நீர் அகற்று வாரியத்தின் ஆய்வில் உள்ளது.

மாநகர குடிநீர் வழங்கு திட்டம்.

வீராணம் திட்டம் முடிக்கப்படும் வரையில், மாநகருக்கு வழங்கப்படும் குடிநீரின் அளவை அதிகரிக்க, செங்குன்றம், சோழவரம் ஏரிகளின் கரைகளை உயர்த்துதல், பூண்டியிலிருந்து தாமரைப்பாக்கம் வரையில் திறந்த வெளி வாய்க்கால்கள்—மூடப்பட்ட பெருங்குழாய்கள் அமைத்தல் போன்ற பல்வேறு குறுகிய காலச் செயற்குறிப்புகள் மேற்கொள்ளப்பட்டன. இத்திட்டங்கள் எல்லாவற்றினாலும் மாநகரத்திற்கு வழங்கப்படும் நீரின் அளவு மாநகர நீர் வழங்கல் நாள் ஒன்றுக்கு 35 மில்லியன் காலனிலிருந்து நாள் ஒன்றுக்கு 50 மில்லியன் காலனாக உயர்த்தப்பட்டுள்ளது.

வீராணம் திட்டம்.

இது மாநகரத்திற்கு வழங்கப்படும் நீரின் அளவை அதிகரிப்பதற்கான பெருந் திட்டமாகும். வீராணம் ஏரியிலிருந்து சென்னை மாநகருக்கு நாள் ஒன்றுக்கு 40 மில்லியன் காலன் தூய்மைப் படுத்தப்பட்ட குடிநீர் கொண்டு வருவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின் மதிப்பீட்டுச் செலவு ரூபாய் 27.8 கோடி ஆகும்.

ரூபாய் 55 லட்சம் செலவில் நாள் ஒன்றுக்கு 40 மில்லியன் காலன் தண்ணீரைத் தூய்மைப்படுத்தும் நிலையம் அமைக்கும் பணி வெகு விரைவாக முன்னேறி வருகிறது. வீராணம் திட்டத்திற்கு 1973-74-ம் ஆண்டில் செலவிடுவதற்காக ரூபாய் 600 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.



இத்திட்டத்தின் முன்னேற்றம் குறித்து உன்னிப்பாகக் கவனிக்கப்பட்டு வருகிறது. இத் திட்டத்தை விரைவிலேயே முடிப்பதற்கான எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

விரைவு படுத்தப்பட்ட கிராமப்புற குடிநீர் வழங்கல் திட்டம்.

இந்திய அரசு 1972-ஆம் ஆண்டில், "20 கோடி விரைவு படுத்தப்பட்ட குடிநீர் வழங்கல் திட்டம்" என்னும் சிறப்புத் திட்டம் ஒன்றைத் தொடங்கியது. இந்திய அரசு, இதுவரை 421 திட்டங்களுக்கு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இத்திட்டங்களின்கீழ் ரூபாய் 3,10.14 லட்சம் மதிப்பீட்டுச் செலவில், ரடக்கியமாக, பின்தங்கிய பகுதிகளாகிய இராமநாதபுரம், தருமபுரி மாவட்டங்களில் ஏறக்குறைய 600 கிராமங்களில் குடிநீர் வசதி செய்து கொடுக்கப்படும். தமிழ்நாடு குடிநீர் வழங்கு-கழிவுநீர் அகற்று வாரியம், இத்துடன், 1974-ஆம் ஆண்டு மார்ச் திங்களுக்குள் நிறைவேற்றப்பட வேண்டிய 32 திட்டங்களுக்கு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இத் திட்டங்களுக்கான மதிப்பீட்டுச் செலவு ரூபாய் 16.44 லட்சமாகும். பெரும்பாலான பணிகள் முடியும் தருவாயில் உள்ளன.

யூனிசெஃப் நிறுவனத்தின் உதவிபெறும் கிராமப்புற குடிநீர் வழங்கல் திட்டம்.

"யூனிசெஃப்" நிறுவனத்தினால் வழங்கப்படும் கிணறு தோண்டும் கருவிகள் (Rigs), வண்டிகள், மற்றும் பிற கருவிகளைக் கொண்டு ஐந்து ஆண்டு காலத்திற்குள் தமிழ்நாட்டில் உள்ள வறண்ட, காலரா பீடிக்கப்பட்ட பகுதிகளில் 8,850 குழாய்க் கிணறுகள் தோண்டும் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு ரூபாய் 2.71 கோடி வழங்க, 1970-ல் அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இந்த நடவடிக்கையின் துணைத் திட்டத்தின் படி, இத்திட்டத்தின் முதல் படியாக, 1971-74 ஆம் ஆண்டுகளில் தமிழ்நாட்டில் 11 மாவட்டங்களில் 2,000 துளைக் கிணறுகள் தோண்டத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதுவரை 801 குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன. 31—12—1973 வரை, இத்திட்டத்திற்காக மொத்தம் ரூபாய் 51.09 லட்சம் செலவிடப்பட்டுள்ளது. 1974-75 ஆண்டுக்கான திட்டச் செலவு ரூபாய் 50 லட்சமாகும்.

### சிறுவாணி நீர் வழங்கும் திட்டம்.

சிறுவாணி ஆற்று நீரை ஆண்டுக்கு 1,300 மில்லியன் கன அடி அளவுக்கு மேற்படாமல் திருப்பி விடுவது குறித்து 1973 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 19-ஆம் நாள் தமிழ்நாடு அரசும், கேரளா அரசும் ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொண்டன. இதன் மூலம், கோயம்புத்தூர் நகரம், அதன் சுற்றுப் புறப் பகுதிகள் ஆகியவற்றிற்குத் தேவைப்படும் குடிநீர் வழங்கப்படும்.

அடிவாரத்திலிருந்து கோயம்புத்தூர் நகரம் வரை 36 கி.மீ. நீளத்திற்கு 20 அங்குல விட்டமுள்ள வார்ப்பிரும்பு குழாய் அமைப்பதற்கு சிறுவாணி திட்டத்தின் முதற்படியாக அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இதன்மூலம், கூடுதலாக நாளொன்றுக்கு 3 மில்லியன் காலன் தண்ணீர் வழங்கப்படும். தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் ரூ. 10.21 லட்சம் திட்டச் செலவில் "சிறுவாணியை ஆதாரமாகக் கொண்ட கோயம்புத்தூர் நீர் வழங்கல் பெருக்கத் திட்டத்திற்கான" செயற்குறிப்பு பணிந்தனுப்பப்பட்டுள்ளது. இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

குறைந்த அளவுத் தேவைத் திட்டத்திற்காக ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 2,500 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. 1974-75-ஆம் ஆண்டில் 1,000 கிராமங்களுக்கு (யூனிசெஃப் திட்டத்தின் கீழ் 600, குறைந்தளவு தேவைத் திட்டத்தின் கீழ் 400 கிராமங்கள்) நீர் வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. தமிழ்நாடு மாநிலத்தில் நகர, கிராமப் பகுதிகளுக்கு நீர் வழங்குதல், கழிவு நீர் அகற்றுதல் ஆகிய வசதிகளை அளிப்பதற்காக ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் (1974—79) ரூ. 78 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. அதன் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| | (ரூபாய் கோடியில்.) |
|---|---|
| (i) நகரப்பகுதிகள் (சென்னை மாநகரம் தவிர ஏனைய) | 25.5 |
| (ii) சென்னை மாநகரம் | 27.5 |
| (iii) கிராமப் பகுதிகள் | 25.0 |
| மொத்தம் | 78.0 |



### மக்கள் நல்வாழ்விற்கான செலவு.

1967-68-ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு ஆண்டிலும் இம் மாநிலத்தில் மக்கள் நல்வாழ்விற்காக செலவிடப்பட்ட தொகை குறித்த விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| ஆண்டு. | செலவிடப்பட்ட தொகை. (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| 1967-68 | 519.25 |
| 1968-69 | 595.60 |
| 1969-70 | 748.06 |
| 1970-71 | 850.08 |
| 1971-72 | 11,46.07 |
| 1972-73 | 16,10.73 |
| 1973-74 | 15,42.33 (திருத்திய மதிப்பீடு.) |
| 1974-75 | 15,76.63 |

(1974-75-ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு.)

## இணைப்பு II.

[336-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

### கோரிக்கை எண் 18.

### மருத்துவத் துறை—1974-75

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

கோரிக்கை 18—மருத்துவத் துறை என்பதன் கீழ் ரூ. 28,37,62,800க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென்று முன்மொழிகிறேன்.

மக்களுக்குப் போதிய மருத்துவ வசதி அளிப்பதுடன் சமுதாயத்தின் நல்வாழ்வினைச் சீர்குலையாவண்ணம் பேணிக்காப்பது வளங்கெழு அரசின் தலையாய பணியாகும். மக்களின் நல்வாழ்வே ஜனநாயக நிர்வாகத்திற்குச் சிறந்ததோர் அடையாளமாகும். எனவே, இந்த வகையில் மருத்துவப் பணிகளைச் செவ்விய முறையிலும் முன்னேற்றப் பாதையிலும் வளர்ச்சியடையச் செய்ய அரசு பெரு முயற்சி எடுத்து வருகிறது. மருத்துவர்கள், செவிலியர்கள், மருந்தாக்குநர்கள், மருத்துவத் துணைப் பணியாளர்கள் முதலியோரைக் கூடுதலாக நியமிப்பதன் மூலம் கிராமப் பகுதிகள் அனைத்திற்கும் மருத்துவ வசதிகளை விரிவுபடுத்துவதே கடந்த நான்கு ஐந்தாண்டுத் திட்டங்களில் நமது அரசின் பொதுநோக்கமாக இருந்து வந்துள்ளது. நாட்டு மக்களின் நலத்தை மேம்படுத்தும் பொருட்டு, குடும்ப நலத் திட்ட முறைகளை அரசு தீவிரமாகப் பரப்பி வந்துள்ளது.

### திட்ட நிதி ஒதுக்கம்.

மக்களுக்குப் பயன் தர மருத்துவ வசதிகளையும் மருத்துவக் கல்விப் பயிற்சியையும் ஏற்படுத்திக் கொடுப்பதற்காக முதலாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் அரசு ரூ. 248 லட்சம் முதலீடு செய்துள்ளது. இது, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 459 லட்சமாகவும் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 644 லட்சமாகவும் உயர்ந்துள்ளது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இச் செலவு ரூ. 1,731.59 லட்சமாக உயர்ந்துள்ளது.

இம் மாநிலத்திற்கான 1973-74 வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 453 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.



ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பல்வேறு மருத்துவ பொதுச் சுகாதாரத் திட்டங்களின்கீழ் கீழே கண்டவாறு நிதி ஒதுக்கக் கருதப்பட்டுள்ளது:—

| | (ரூபாய் லட்சத்தில்.) |
|---|---|
| 1. மருத்துவக் கல்வி | 182 |
| 2. பட்டமேற்படிப்பு மருத்துவக் கல்வி | 150 |
| 3. பயிற்சி உதவித் திட்டம் | 210 |
| 4. மருத்துவமனைகளும், மருந்தகங்களும் | 1,275 |
| 5. இந்திய முறை மருத்துவமும் ஹோமியோபதியும். | 150 |
| 6. ஆய்வுக்கூடப் பணிகள் | 50 |
| 7. கிங் நிறுவனம் | 70 |
| 8. தொண்டு மருத்துவ நிலையங்களுக்கு மானியங்கள் | 17 |
| மொத்தம் | 2,104 |

மத்திய அரசுப் பொறுப்பேற்கும் திட்டத்தின்கீழ், செயற்குழு கீழ்க்காணும் நிதி ஒதுக்கத்தைச் செய்துள்ளது:—

| | (ரூபாய் லட்சத்தில்.) |
|---|---|
| 1. புதிய மனநோயியல் மருத்துவமனைகள் | 3.50 |
| 2. பட்ட மேற்படிப்பு இந்திய முறை மருத்துவத் துறைகள் இரண்டு. | 17.00 |
| 3. மருந்தியல் மூலிகைத் தோட்டங்கள். | 10.00 |
| மொத்தம் | 30.50 |

### வரவு-செலவுத் திட்ட நிதி ஒதுக்கம்.

மருத்துவக் கல்வி, மருத்துவப் பணிகள், இந்திய மருத்துவம் ஆகியவற்றிற்காக ஒதுக்கப்பட்ட தொகை, கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| | 1973-74. | 1974-75. |
|---|---|---|
| மருத்துவக் கல்வி மருத்துவப் பணிகள். | 12,83,61,400<br>12,35,40,100 | 28,37,62,800 |
| இந்திய மருத்துவம் | 19,58,400 | 38,05,500 |

### மருத்துவக் கல்வி.

மதுரை, தஞ்சாவூர், செங்கற்பட்டு, திருநெல்வேலி, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் ஒவ்வொன்றும், சென்னையில் மூன்றும் ஆக 8 மருத்துவக் கல்லூரிகள் மருத்துவக் கல்வி இயக்குநர் மேற்பார்வையில் உள்ளன. இம்மாநிலத்தில் உள்ள மருத்துவக் கல்லூரிகளில் தற்போது ஆண்டுதோறும் 1,015 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். எம்.பி.பி.எஸ். பட்டப் படிப்புத் தவிர, பல்வேறு மருத்துவப் பிரிவுகளில் பட்ட மேற்படிப்புப் பாட முறைகளும் தகுதிப் பட்டயப் பாட முறைகளும் சென்னை மருத்துவக் கல்லூரியிலும், ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியிலும், மதுரை மருத்துவக் கல்லூரியிலும் நடத்தப்படுகின்றன. தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரிக்கு மேலும் சில வசதிகளை அளிப்பதன் மூலமும், மருத்துவத்தின் சில பிரிவுகளில் பட்ட மேற்படிப்புப் பாடமுறைகளைக் கொண்டு வருவதன் மூலமும் அக்கல்லூரியை பட்ட மேற்படிப்பு நிலையமாக மேம்படுத்தக் கருதப்பட்டுள்ளது. சென்னை மருத்துவக் கல்லூரியிலும் மதுரை மருத்துவக் கல்லூரியிலும் முறையே பல் மருத்துவப் பட்டப் படிப்பும், மருந்தியல் பட்டப் படிப்பும் நடத்தப்படுகின்றன. பல் மருத்துவப் பட்டப் படிப்பிற்கு 35 மாணவர்களும், மருந்தியல் பட்டப்படிப்பிற்கு 25 மாணவர்களும் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். அரசுப் பணிகளில் ஒவ்வோராண்டும் சராசரியாக 300 மருத்துவப் பட்டதாரிகள் எடுத்துக் கொள்ளப்படுகின்றனர். ஆனால் தேறி வருகிற புதிய பட்டதாரிகள் ஏறக்குறைய 900 பேர் ஆவர். எனவே, மருத்துவக் கல்லூரி





ஒவ்வொன்றிலும் ஆண்டுதோறும் 100 மாணவர்களைத்தான் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று இந்திய மருத்துவ மன்றம் வரையறுத்த உயரளவுக்கு மருத்துவக் கல்லூரிகளில் மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதைக் குறைக்கும் திட்டம் ஆலோசனையில் உள்ளது. அண்மையில் தொடங்கிய புதிய மருத்துவக் கல்லூரிகளில் தரமான சாதனங்களை வழங்கவும் சிறந்த தேர்ச்சியுடையவர்களை நியமிக்கவும் அரசு நாட்டம் செலுத்தும்.

மேலும் அரசுப் பணிகளுக்கு வேண்டிய மருத்துவர்களின் தேவைக்காகவும், மருத்துவக் கல்லூரிகளுக்கு வேண்டிய தகுதியுள்ள ஆசிரியர்களின் தேவைக்காகவும் மாவட்ட, வட்ட மருத்துவமனைகளில் சிறப்பு சிகிச்சை அளிக்கும் வல்லுநர் தேவைக்காகவும் அகில இந்திய பட்ட மேற்படிப்புக் கல்வி-ஆராய்ச்சி நிலையங்களுக்குச் சமமாக சென்னை மருத்துவக் கல்லூரியை பட்ட மேற்படிப்புக் கல்வி-ஆராய்ச்சி நிலையமாக உயர்த்துவதற்கு கருதப்பட்டுள்ளது. இந்நோக்கத்தைக் கருத்திற் கொண்டு, ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 150 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதலாண்டு நடப்பு வரவு-செலவுத் திட்ட ஆண்டிலிருந்து தொடங்குகிறது.

### மருந்தியல் பட்டப் படிப்புப் பாடமுறை.

தற்போது மருந்தியல் பட்டப் படிப்பு பாடமுறை மதுரை மருத்துவக் கல்லூரியில் மட்டுமே நடத்தப்படுகிறது. ஆண்டொன்றுக்கு 25 மாணவர்களைச் சேர்த்துக் கொண்டு இப்பாட முறையை சென்னை, கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரியில் அல்லது செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரியில் அடுத்த கல்வி ஆண்டிலிருந்து தொடங்கக் கருதப்பட்டுள்ளது.

சென்னை மருத்துவக் கல்லூரியிலிருந்தும், மதுரை மருத்துவக் கல்லூரியிலிருந்தும் ஒவ்வொராண்டும் ஏறக்குறைய 60 மாணவர்கள் மருந்தியல் பட்டப் படிப்பில் தேறி வருகின்றனர். ஆனால், இப்பட்டதாரிகளுக்கு மிகக் குறைவே. இம்மாநிலத்தில் மருந்தியல் பட்டதாரிகளிடையே நிலவும் வேலைவாய்ப்புப் பிரச்சினையை தீர்க்கும் வழிமுறைகள் ஆலோசனையில் உள்ளன.

[1974 மார்ச் 18

தொழில் பயிற்சி, மருந்தியல் பட்டப் படிப்புப் பாட முறையின் ஒரு பகுதியாக இல்லை; மருந்துகள் தயாரிப்பு நிறுவனங்களில் அரசுப் பணியில் சேர விழைபவர்களுக்கு இது கட்டாயப் பாடமாகவும் இல்லை. ஆயினும், மருந்தியல் பட்டதாரி ஒவ்வொருவருக்கும் பல்வேறு தயாரிப்பு நிறுவனங்களிலும், கிண்டி 'கிங்' நிறுவனத்திலும், அரசு மருந்துப் பொருள்கள் பண்டகசாலையிலும், 18 மாத காலத்திற்கு மாதமொன்றுக்கு ரூ. 300 பயிற்சி உதவித் தொகை கொடுப்பதன் மேல் 30 தொழில் பழகுவோர் பதவிகளை ஏற்படுத்தக் கருதப் பட்டுள்ளது. தொழிற் பயிற்சியை மேற்கொள்ள விரும்பும் அனைவரும் அரசு அளிக்கும் பயிற்சி உதவித் தொகையைக் கொண்டு பயிற்சி பெற இது உதவும். மருந்தியல் மன்றத்தில் மருந்தியல் வல்லுநர் ஒருவர் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்றால் அவர் ஏற்பளிக்கப்பட்ட மருந்துக் கடை ஒன்றில் 750 மணி நேரம் பயிற்சி பெற்றிருக்க வேண்டும் என்று அம் மன்றம் வரையறுத்துள்ளது. மருந்தகத்தில் மருந்துகள் கலப்பதில் மருந்தியல் பட்டப் படிப்பு மாணவர்கள் பயிற்சி பெற வேண்டி ஆண்டு விடுமுறையின்போது அவர்களை மருத்துவமனை மருந்தகங்களில் 3 மாத காலத்திற்கு அமர்த்தக் கருதப் பட்டுள்ளது. இந்திய மருந்தியல் சட்டத்தின்கீழ் மருந்தியல் வல்லுநராகப் பதிவு செய்து கொள்ள மருந்தியல் பட்டதாரி களுக்கு இது உதவும்.

சுற்றியுள்ள வட்டார மருத்துவமனைகளின் தேவையை நிறைவு செய்ய, சென்னையில் ஒன்றும் திருச்சியில் ஒன்றுமாக, இரண்டு வட்டாரப் பிரிவுகளை தொடங்கக் கருதப்பட்டுள்ளது. இந்த மருத்துவமனை மருந்தியல் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டால், மருந்தியல் பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பு வசதி அளிப்பதோடு மட்டுமல்லாமல் மருத்துவமனைகளுக்குத் தரமான மருந்துகள் கிடைக்கவும் வகை செய்யும்.

இம்மாநிலத்தில் மருந்தியல் பயிற்சியை மேம்படுத்த, மதுரைப் பல்கலைக் கழகத்தின் இசைவுடன் மதுரை மருத்துவக் கல்லூரியில் மருந்தியல் பட்ட மேற்படிப்புப் பாட முறையைத் தொடங்கக் கருதப்பட்டுள்ளது.



1974 மார்ச் 18]

**'கிங்' நிறுவனம், கிண்டி—குளிர் பதன வசதிகளை அளிப்பதும் பணி வசதிகளுக்கு மேம்பாடு செய்தலும்:**

கிண்டி கிங் நிறுவனத்தில் குளிர் பதன வசதி செய்து கொடுக்கவும், அங்குப் பணி வசதிகளை மேம்படுத்தவும் அரசு ரூ. 16,64,000 நிதி ஒதுக்கியுள்ளது. இங்கு, உறைய வைக்கப் பட்ட உலர்ந்த அம்மைத் தடுப்பு ஊசி மருந்து உற்பத்தி 120 லட்சம் யூனிட்டிலிருந்து 240 லட்சம் யூனிட்டுகளாக உயர்ந்துள்ளது. இது குறித்துக் கடனுதவி செய்யுமாறு இந்திய அரசைக் கேட்டுக் கொண்டதற்கிணங்க இந்திய அரசும் இதுவரை ரூ. 10.68 லட்சம் வழங்கியுள்ளது.

1973-74-ல் ரூ. 14.72 லட்சம் செலவிலான 9 கட்டிடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இம்மாநிலத்தில் உள்ள பல்வேறு மருத்துவக் கல்லூரிகளுக்கு ரூ. 28.49 லட்சம் மதிப்பிற்கு ஏராளமான, நவீன, உயிர் காக்கும் மருத்துவக் கருவிகள் வாங்கப்பட்டுள்ளன.

**மருத்துவக் கல்லூரி இணைந்த மருத்துவமனைகள்.**

எக்ஸ்-கதிர், இரத்தப் பரிசோதனைகள், பிற ஆய்வுக்கூட வசதி களுக்கு ஏற்பாடு செய்யும் வகையில் வெளி நோயாளி ஆய்வுக்கூட பணிகளையும் விபத்து—அவசர சிகிச்சைப் பணிகளையும் வசதி யுள்ள நிலையங்களில் நாள் முழுவதும் நடத்த முடிவு செய்யப் பட்டுள்ளது. தொடக்கத்தில், சென்னை பொது மருத்துவமனை, ஸ்டான்லி மருத்துவமனை, மதுரை, கோயம்புத்தூர், தஞ்சாவூர் மருத்துவமனைகள் ஆகிய இடங்களில் உள்ள கல்லூரி இணைந்த பெரிய மருத்துவமனைகளில் இப்பணிகளைத் தொடங்கக் கருதப்பட்டுள்ளது. மேலும், கல்லூரி இணைந்த மருத்துவ மனைகளில் மருத்துவ அதிகாரிகளைக் கூடுதலாக நியமிப்பதின் மூலம் பொதுமக்களுக்கு வெளி நோயாளி சிகிச்சைப் பணி மிகவும் பயனுள்ளதாகவும் எளிதாகவும் அமையும் வகையில் திட்டமிடப்படுகின்றது. அப்போதுதான் வெளி நோயாளிச் சிகிச்சைப் பிரிவில் நோயாளிகளை ஒரே மருத்துவ அதிகாரி தொடர்ந்து நாளுக்கு நாள் கவனிக்க முடியும். இதனால் வெளி நோயாளி சிகிச்சைப் பிரிவுப் பணியை எளிதாகவும் சுமுகமாகவும் நடத்த இயலும்.

1973–74 ஆம் ஆண்டில் கீழ்க்காணும் குறிப்பிடத் தகுந்த சாதனைகள் எய்தப்பட்டுள்ளன :—

(1) மதுரை அரசு எர்ஸ்கின் மருத்துவமனை, தஞ்சாவூர் ராஜா மிராசுதார் மருத்துவமனை, தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, சென்னை மகப்பேறு–மகளிர் நோயியல் மருத்துவமனை, சென்னை அரசு மகளிர்–சிறுர் நல மருத்துவமனை ஆகியவற்றில் அறுவை சிகிச்சை செய்துகொள்ள கூடத்துடன் கருத்தடை அறுவை சிகிச்சைக்கான வார்டு ஏற்படுத்தல்.

(2) தஞ்சாவூர் அரசு ராஜா மிராசுதார் மருத்துவமனையில் 20 படுக்கைகள் கொண்ட அவசரச் சிகிச்சைக் கூடம் ஏற்படுத்துதல்.

(3) திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் இரண்டு அறுவைச் சிகிச்சைக் கூடங்கள் கட்டப்பட்டுள்ளன. 147 படுக்கைகள் போடப்பட்டுள்ளன.

(4) தஞ்சாவூர் அரசு ராஜா மிராசுதார் மருத்துவமனையில் எக்ஸ்-கதிர் சிகிச்சைக் கருவியைக் கொண்டு புற்று நோய்க்குச் சிகிச்சையளிக்கும் பணி தொடங்கப்பட்டது.

(5) மகப்பேறு–மகளிர் நோயியல் மருத்துவமனையிலும், மகளிர்–சிறுர் நல அரசு மருத்துவமனையிலும் தாய்-சேய் நல வார்டுகளுக்கான புதிய கட்டிடங்கள் தொடங்கப்பட்டன.

(6) மதுரை, தோப்பூரில் புதிதாக காச நோய் மருத்துவமனை ஒன்றும், சென்னை அரசு இராயப்பேட்டை மருத்துவமனையில் தொற்று நோய் நீக்கப் புதிய பிரிவு ஒன்றும் தொடங்கப்பட்டன.

புற்று நோய்க்கான எக்ஸ்-கதிர் சிகிச்சைக் கருவி உட்பட ரூ. 28 இலட்சம் மதிப்பிற்குச் சாதனங்கள் வாங்கப்பட்டுள்ளன. மதுரை அரசு எர்ஸ்கின் மருத்துவமனையில் புற்று நோய்க்கான கோபால்ட் கதிர் சிகிச்சைக் கருவி வாங்குவதற்காகவும் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. புற்று நோயாளிகளுக்குச் சிகிச்சை அளிக்க சென்னை மகளிர்–சிறுர் நல அரசு மருத்துவமனைக்கு மேலும் ஒரு கோபால்ட் கதிர் சிகிச்சைக் கருவி வாங்குவதற்கான செயற்குறிப்பு பரிசீலனையில் உள்ளது. அரசு



ஸ்டான்லி மருத்துவமனையில் அறுவை சிகிச்சைக் கட்டிடம் கட்டுவதற்கும், கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அறுவைச் சிகிச்சைத் துறை அமைப்பதற்கும், சென்னை பொது மருத்துவமனை பெருந்திட்டத்திற்குமான செயற்குறிப்புகள் ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன. சென்னை மருத்துவக் கல்லூரியில் பயிற்சி மருத்துவர் குடியிருப்புகள், மருத்துவப் பரிசோதனை அறை, பூச்சி ஆய்வுக்கூடம் முதலியவற்றிற்காகக் கட்டிடங்கள் கட்டும் பெருந் திட்டம், மதுரை மருத்துவக் கல்லூரியில் மேல்நிலை நீர்த் தொட்டியும் நீர்த் தேக்கமும் கட்டுதல், கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் 37 நோயாளிகளுக்கான விபத்து சிகிச்சை வார்டு ஒன்று கட்டுதல் ஆகியவை அரசின் பரிசீலனையில் உள்ள சில திட்டங்களாகும்.

சென்னை அரசு கண் சிகிச்சை மருத்துவமனையில் கண் பார்வை தொடர்பான நோய்களைக் கண்டறியும் நிலையம் Mycotic Diagnostic Centre) ஒன்றை அமைப்பதற்காக ரூ. 7,00,000 மதிப்புள்ள அறிவியல் சாதனங்களை வழங்குவது குறித்தும், ஆண்டொன்றுக்கு ரூ. 30,000 தொடர் இனச் செலவு குறித்தும் பெல்ஜியம் நாட்டு நிறுவனம் அளிக்க முன்வந்துள்ள உதவியை அரசு ஏற்றுக்கொண்டுள்ளது.

1973–74-ல் ரூ. 14.72 இலட்சம் செலவிலான 9 கட்டிடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இம்மாநிலத்திலுள்ள பல்வேறு மருத்துவக் கல்லூரிகளுக்கு ரூ. 28.49 இலட்சம் மதிப்பிற்கு ஏராளமான, நவீன உயிர்காக்கும் மருத்துவக் கருவிகள் வாங்கப்பட்டன.

## பட்ட மேற்படிப்புக் கல்வி.

சென்னை மருத்துவக் கல்லூரியில் (டி.எம்.) இதய நோயியலில் பட்ட மேற்படிப்புப் பாடமுறை இந்த ஆண்டில் தொடங்கப்பட்டது. நாள அறுவைச் சிகிச்சை, மண்டையோட்டு இயல் (Endocrinology), ஊன்மச்சிதைவு, சிறு நீரகவியல், உடல் மருத்துவம், புதுவாழ்வுப் பணிகள் ஆகிய பல்வேறு துறைகளுக்கு இட வசதி அளிக்கும் பலமாடிக் கட்டிடத்திற்கு ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 56 இலட்சம் ஒதுக்கப்

[1974 மார்ச் 18

பட்டுள்ளது. பல்வேறு துறைகளில் 217 பேர் பட்ட மேற்படிப்புப் பாட முறையையும் 233 பேர் தகுதிப் பட்டயப் பாட முறையையும் மேற்கொண்டுள்ளனர்.

சென்னை கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரியில் மகளிர் விடுதி ஒன்றையும், மகப்பேறு பிரிவையும் புதிதாகக் கட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கட்டிடத் திட்டங்கள்.

கீழ்க்கண்ட கட்டிடத் திட்டங்கள் அரசின் பரிசீலனையில் உள்ளன :—

(1) கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரியிலும், திருநெல்வேலி மருத்துவக் கல்லூரியிலும், மத்திய விலங்குப் பிரிவு கட்டுதல்.

(2) கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரியில் சவக் கிடங்கு கட்டுதல்.

(3) கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரியில் 37 படுக்கைகள் கொண்ட விபத்துக்குள்ளானோர் சிகிச்சைக் கூடம் ஒன்றையும் அவசர சிகிச்சைக் கூடத்தையும் கட்டுதல்.

(4) திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையிலுள்ள அறுவைச் சிகிச்சைக் கூடத்திற்கு சீர்வளி வசதி அளித்தல்.

(5) திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் உள்ள கட்டிடத்திற்கு மேல் பயிற்சி மருத்துவர் குடியிருப்புக்களைக் கட்டுதல்.

பட்ட மேற்படிப்பு மருத்துவ நிலையம்.

இத் திட்டத்தின்கீழ் 1974–75 ஆம் ஆண்டில் சென்னை மருத்துவக் கல்லூரியிலும், சென்னை அரசு பொது மருத்துவ மனையிலும் கீழ்க்காணும் பணிகள் நிறைவேற்ற எடுத்துக் கொள்ளப்படும் :—

(i) சென்னை மருத்துவக் கல்லூரி, சென்னை—

(1) மருத்துவப் பரிசோதனை அறை கட்டுதல்.

(2) மின்சார நுண்ணோக்காடி ஆய்வுக்கூடம்.

(3) தொழில் நுட்பப் பணியாளர்களுக்கான அறை கட்டுதல்.

(4) பயிற்சி மருத்துவர்களுக்கான குடியிருப்புக்கள்.



1974 மார்ச் 18]

(ii) அரசு பொது மருத்துவ மனை, சென்னை—

(1) பெருந் திட்டத்தின் கீழ் கட்டிடங்கள் கட்டுதல்.

(2) இரண்டு லிப்டுகளை மாற்றி புதிதாக அமைத்தல்.

(3) கூடுதல் நீராவிக் கொதிகலன்களுக்கு வகை செய்தல்.

(4) எக்ஸ்-கதிர் பதிவேட்டு அறைக்கு சீர்வளி வசதி செய்தல்.

தஞ்சாவூர், திருநெல்வேலி ஆகிய இடங்களில் வட்டார ஆய்வுக் கூடங்கள் கட்டும் திட்டம் 1974–75-ல் செயல்படுத்துவதற்காகப் பரிசீலனையில் உள்ளது.

1974–75-ல் நிறைவேற்ற எடுத்துக்கொள்ளப்பட்ட கீழ்க்காணும் பணிகள் முடிக்கப்படும் :—

1. சென்னை, சிசு–நல மருத்துவ மனையில் நீராவிச் சலவைச் சாலைக்கு ஏற்பாடு செய்தல்.

2. சென்னை, ஓட்டேரி, திருவட்டீஸ்வரர் காச நோய் மருத்துவ மனையில் நீராவிச் சலவைச் சாலைக்கு ஏற்பாடு செய்தல்.

1973–74-ல், தாம்பரம் காச நோய் மருத்துவ மனையில் செவிலியர்களுக்காகக் கூடுதல் குடியிருப்புக்கள் கட்டும் பணி முடிக்கப்பட்டுள்ளது.

வெளியூர்களில் மருத்துவ பணிகள்.

(அ) மருத்துவ மனைகள், (ஆ) மருந்தகங்கள், (இ) இயங்கும் மருத்துவப் பிரிவுகள் ஆகியவை மூலமாகப் பொது மக்களுக்கு மருத்துவச் சிகிச்சை அளிக்கப்படுகிறது.

தற்போது, 14 மாவட்டத் தலைமையிட மருத்துவ மனைகளும், 112 வட்டத் தலைமையிட மருத்துவ மனைகளும், 101 வட்டத் தலைமையிட மருத்துவ மனைகளல்லாத பிற மருத்துவ மனைகளும், 110 மருந்தகங்களும், 13 இயங்கும் மருத்துவப் பிரிவுகளும் உள்ளன.

(i) கட்டிடத் திட்டங்கள் :—

1973–74-ல் கீழ்க்காணும் திட்டங்களுக்கு அரசு அனுமதி வழங்கியது :—

(1) வேலூர், அரசு பென்ட்லண்ட் மருத்துவ மனையில் ரூ. 5.50 இலட்சம் செலவில் பொன் விழாக் கட்டிடம் கட்டுதல். (ஒப்பந்தப் புள்ளிகள் கேட்கப்பட்டுள்ளன.)

(2) ரூ. 20.44 இலட்சம் செலவில் ஈரோடு மாவட்ட மருத்துவ அதிகாரிகள், செவிலிப் பணியாளர்கள் ஆகியோருக்குக் குடியிருப்புக்களும், 160 படுக்கைகள் கொண்ட கூடுதல் பகுதியும், அலுவலகமும் கட்டுதல்.

(3) நாகப்பட்டினம், மாவட்டத் தலைமையிட மருத்துவ மனையில் மருத்துவச் சிகிச்சைக்கும், அறுவை சிகிச்சைக்கும், மரச் சாமான் பண்டக சாலைக்கும் கட்டிடங்கள் கட்டுதல்.

(4) திருச்சி மாவட்டம், கரூர், அரசு மருத்துவ மனையில் 24 படுக்கைகள் கொண்ட பகுதி கட்டுதல்.

(5) வாணியம்பாடி, அரசு மருத்துவ மனையில் 24 படுக்கைகள் கொண்ட பகுதி கட்டுதல்.

(6) பட்டுக்கோட்டை, அரசு மருத்துவ மனையில் 10 படுக்கைகள் கொண்ட மகப்பேறு பகுதி கட்டுதல்.

(7) பொள்ளாச்சி, அரசு மருத்துவ மனையில் வெளி நோயாளி சிகிச்சைப் பிரிவும், மகப்பேறு–அறுவை சிகிச்சைக் கூடமும், 36 படுக்கைகள் கொண்ட பகுதியும், சமையலறையும், சவக்கிடங்கும், 12 படுக்கைகள் கொண்ட தொற்று நோய் சிகிச்சைப் பகுதியும் கட்டுதல்.

(8) திருப்பூரில், 100 படுக்கைகள் கொண்ட புதிய மருத்துவ மனை கட்டுதல்.

(9) ராஜபாளையத்தில், 100 படுக்கைகள் கொண்ட புதிய மருத்துவ மனை கட்டுதல்.

(10) கோத்தகிரி, அரசு மருத்துவ மனையில் 36 படுக்கைகள் கொண்ட பகுதி கட்டுதல்.

(11) இராமேசுவரம், அரசு மருத்துவ மனையில் 12 படுக்கைகள் கொண்ட பகுதி கட்டுதல்.



(ii) 1974–75 ஆண்டுக்கான கட்டிடத் திட்டங்கள் :—

1974–75-ல் கீழ்க்காணும் திட்டங்களை நிறைவேற்றக் கருதப் பட்டுள்ளது :—

(1) உதகமண்டலம், அரசுத் தலைமையிட மருத்துவ மனையில் நீராவிச் சலவைச் சாலைக்கு சாதனங்கள் வாங்குதல்.

(2) தருமபுரியில் புதிய மாவட்டத் தலைமையிட மருத்துவ மனை ஒன்றைக் கட்டுதல்.

(3) நாகப்பட்டினம், மாவட்டத் தலைமையிட மருத்துவ மனையில் கூடுதலாக பகுதிகள் கட்டுதல்.

(4) உடுமலைப்பேட்டை, அரசு மருத்துவ மனையில் சமையலறைக் கூடம் கட்டுதல்.

(5) விருத்தாசலம், அரசு மருத்துவ மனையில் சவப் பரிசோதனைக் கொட்டகை கட்டுதல்.

(6) செங்கோட்டை, அரசு மருத்துவ மனையில் மேல்நிலை நீர்த் தொட்டி கட்டுதல்.

(7) திட்டகுடி, அரசு மருத்துவ மனையில் சவப் பரிசோதனைக் கொட்டகை கட்டுதல், பாலடா அரசு மருத்துவ மனையில் சமையலறை கட்டுதல்.

1973–74-ல், அரசு மருத்துவ மனைகளில் உள்ள படுக்கைகளின் எண்ணிக்கை 10,353-லிருந்து 10,438 ஆக உயர்ந்துள்ளது.

1974–75-ல் படுக்கைகளின் எண்ணிக்கையை உயர்த்தும் குறிக்கோள் அளவு 600 ஆகும். பல்வேறு அரசு மருத்துவ நிலையங்களுக்குச் சென்று பார்வையிட்ட மாநிலத் திட்ட ஆணைக் குழு தற்போதுள்ள மாவட்ட மருத்துவ மனைகள் 400 படுக்கைகளி லிருந்து 650 படுக்கைகள் கொண்டதாக தரமுயர்த்தப்பட வேண்டும் என்றும், கிராமப் பகுதிகளில் அக நோயாளிகளுக்குச் சிகிச்சை அளிக்க வட்ட மருத்துவ மனைகள் ஒவ்வொன்றிலும் குறைந்த அளவு 90 படுக்கைகள் இருக்க வேண்டும் என்றும் பரிவுரை செய்துள்ளது. அதன்படி, ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் படிப்படியாகப் படுக்கைகளின் எண்ணிக்கையை உயர்த்துவதன் மூலம், மாவட்ட மருத்துவ மனைகளிலும் வட்ட மருத்துவ மனைகளிலும் கூடுதல் பகுதிகளைக் கட்ட எண்ணப்பட்டுள்ளது.

[1974 மார்ச் 18

(i) கட்டிடத் திட்டங்கள் :—

1973–74-ல் கீழ்க்காணும் திட்டங்களுக்கு அரசு அனுமதி வழங்கியது :—

(1) வேலூர், அரசு பென்ட்லண்ட் மருத்துவ மனையில் ரூ. 5.50 இலட்சம் செலவில் பொன் விழாக் கட்டிடம் கட்டுதல். (ஒப்பந்தப் புள்ளிகள் கேட்கப்பட்டுள்ளன.)

(2) ரூ. 20.44 இலட்சம் செலவில் ஈரோடு மாவட்ட மருத்துவ அதிகாரிகள், செவிலிப் பணியாளர்கள் ஆகியோருக்குக் குடியிருப்புக்களும், 100 படுக்கைகள் கொண்ட கூடுதல் பகுதியும், அலுவலகமும் கட்டுதல்.

(3) நாகப்பட்டினம், மாவட்டத் தலைமையிட மருத்துவ மனையில் மருத்துவச் சிகிச்சைக்கும், அறுவை சிகிச்சைக்கும், மாச் சாமான் பண்டக சாலைக்கும் கட்டிடங்கள் கட்டுதல்.

(4) திருச்சி மாவட்டம், கரூர், அரசு மருத்துவ மனையில் 24 படுக்கைகள் கொண்ட பகுதி கட்டுதல்.

(5) வாணியம்பாடி, அரசு மருத்துவ மனையில் 24 படுக்கைகள் கொண்ட பகுதி கட்டுதல்.

(6) பட்டுக்கோட்டை, அரசு மருத்துவ மனையில் 10 படுக்கைகள் கொண்ட மகப்பேறு பகுதி கட்டுதல்.

(7) பொள்ளாச்சி, அரசு மருத்துவ மனையில் வெளி நோயாளி சிகிச்சைப் பிரிவும், மகப்பேறு–அறுவை சிகிச்சைக் கூடமும், 36 படுக்கைகள் கொண்ட பகுதியும், சமையலறையும், சவக் கிடங்கும், 12 படுக்கைகள் கொண்ட தொற்று நோய் சிகிச்சைப் பகுதியும் கட்டுதல்.

(8) திருப்பூரில், 100 படுக்கைகள் கொண்ட புதிய மருத்துவ மனை கட்டுதல்.

(9) ராஜபாளையத்தில், 100 படுக்கைகள் கொண்ட புதிய மருத்துவ மனை கட்டுதல்.

(10) கோத்தகிரி, அரசு மருத்துவ மனையில் 36 படுக்கைகள் கொண்ட பகுதி கட்டுதல்.

(11) இராமேசுவரம், அரசு மருத்துவ மனையில் 12 படுக்கைகள் கொண்ட பகுதி கட்டுதல்.



1974 மார்ச் 18]

(ii) 1974–75 ஆண்டுக்கான கட்டிடத் திட்டங்கள் :—

1974–75-ல் கீழ்க்காணும் திட்டங்களை நிறைவேற்றக் கருதப் பட்டுள்ளது :—

(1) உதகமண்டலம், அரசுத் தலைமையிட மருத்துவ மனையில் நீராவிச் சலவைச் சாலைக்கு சாதனங்கள் வாங்குதல்.

(2) தருமபுரியில் புதிய மாவட்டத் தலைமையிட மருத்துவ மனை ஒன்றைக் கட்டுதல்.

(3) நாகப்பட்டினம், மாவட்டத் தலைமையிட மருத்துவ மனையில் கூடுதலாக பகுதிகள் கட்டுதல்.

(4) உடுமலைப்பேட்டை, அரசு மருத்துவ மனையில் சமையலறைக் கூடம் கட்டுதல்.

(5) விருத்தாசலம், அரசு மருத்துவ மனையில் சவப் பரிசோதனைக் கொட்டகை கட்டுதல்.

(6) செங்கோட்டை, அரசு மருத்துவ மனையில் மேல்நிலை நீர்த் தொட்டி கட்டுதல்.

(7) திட்டகுடி, அரசு மருத்துவ மனையில் சவப் பரிசோதனைக் கொட்டகை கட்டுதல், பாலடா அரசு மருத்துவ மனையில் சமையலறை கட்டுதல்.

1973–74-ல், அரசு மருத்துவ மனைகளில் உள்ள படுக்கைகளின் எண்ணிக்கை 10,353-லிருந்து 10,438 ஆக உயர்ந்துள்ளது.

1974–75-ல் படுக்கைகளின் எண்ணிக்கையை உயர்த்தும் குறிக்கோள் அளவு 600 ஆகும். பல்வேறு அரசு மருத்துவ நிலையங்களுக்குச் சென்று பார்வையிட்ட மாநிலத் திட்ட ஆணைக் குழு தற்போதுள்ள மாவட்ட மருத்துவ மனைகள் 400 படுக்கைகளி லிருந்து 650 படுக்கைகள் கொண்டதாக தரமுயர்த்தப்பட வேண்டும் என்றும், கிராமப் பகுதிகளில் அக நோயாளிகளுக்குச் சிகிச்சை அளிக்க வட்ட மருத்துவ மனைகள் ஒவ்வொன்றிலும் குறைந்த அளவு 90 படுக்கைகள் இருக்க வேண்டும் என்றும் பரிவுரை செய்துள்ளது. அதன்படி, ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் படிப்படியாகப் படுக்கைகளின் எண்ணிக்கையை உயர்த்துவதன் மூலம், மாவட்ட மருத்துவ மனைகளிலும் வட்ட மருத்துவ மனைகளிலும் கூடுதல் பகுதிகளைக் கட்ட எண்ணப்பட்டுள்ளது.

[1974 மார்ச் 18

## சிறப்புச் சிகிச்சைத் துறைகளை ஏற்படுத்தல்.

குறிப்பாக வட்ட மருத்துவ மனைகளில் சிறப்பு வகை சிகிச்சைத் துறைகளை ஏற்படுத்துவதன் மூலம் கிராம மக்களுக்குச் சிறப்பான சிகிச்சை அளிப்பதில் அரசு கண்ணும் கருத்துமாக இருக்கிறது. 1973–74-ல் கீழ்க்கண்ட குறிக்கோள் அளவுகள் எய்தப்பட்டன :—

(1) குன்னூர், பத்மநாபபுரம், திருச்செங்கோடு, புதுக்கோட்டை ஆகிய இடங்களில் உள்ள அரசு மருத்துவ மனைகளில் மேகநோயியல் சிகிச்சைப் பிரிவுகளை ஏற்படுத்த அனுமதி வழங்கப்பட்டது.

(2) மன்னார்குடி, திருவண்ணாமலை, கிருஷ்ணகிரி, உடுமலைப்பேட்டை ஆகிய இடங்களில் உள்ள வட்ட மருத்துவ மனைகளில் குருதி சேமிப்பு நிலையங்கள் நான்கு தொடங்கப்பட்டன.

(3) வேலூர், திண்டுக்கல் ஆகிய இடங்களில் உள்ள மாவட்டத் தலைமையிட மருத்துவ மனைகளில் முடநீக்கியல் துறைகள் இரண்டினை ஏற்படுத்துவதற்கு அரசு அனுமதி வழங்கியது.

(4) தருமபுரி அரசுத் தலைமையிட மருத்துவ மனையுடன் இணைந்திருக்கும் வகையில் சிசுநோய் சிகிச்சைத் துறை ஒன்றை ஏற்படுத்த அனுமதி வழங்கப்பட்டது.

(5) சேலம், நாகப்பட்டினம் தலைமையிட மருத்துவ மனைகளில் காது-மூக்கு-தொண்டை சிகிச்சைப் பிரிவுகள் இரண்டு ஏற்படுத்தப்பட்டுள்ளன.

(6) காஞ்சிபுரம், தூத்துக்குடி ஆகிய இடங்களில் உள்ள மாவட்டத் தலைமையிட மருத்துவ மனைகளில் கண் சிகிச்சைப் பிரிவுகள் இரண்டினை ஏற்படுத்த அனுமதி வழங்கப்பட்டது.

(7) பல்வேறு வட்டத் தலைமையிட மருத்துவ மனைகளல்லாத பிற மருத்துவ மனைகளில் 30 பல் சிகிச்சைப் பிரிவுகளைத் தொடங்க அனுமதி வழங்கப்பட்டது.

(8) மத்திய நிதி உதவித் திட்டத்தின் கீழ், நாகப்பட்டினம், திண்டுக்கல் தலைமையிட மருத்துவ மனைகளில் மன நோயியல் பிரிவுகள் இரண்டினைத் தொடங்க அனுமதி வழங்கப்பட்டது.



1974 மார்ச் 18]

1974–75-ல் கீழ்க்காணும் திட்டங்களை எடுத்துக் கொள்ளக் கருதப்பட்டுள்ளது :—

(1) சில மாவட்டத் தலைமையிட மருத்துவ மனைகளில், கதிர் வீச்சு மருத்துவ வல்லுநர் பதவிகள் ஐந்தினையும், மயக்க மருந்து வல்லுநர் பதவிகள் ஐந்தினையும் ஏற்படுத்தல்.

(2) மாவட்டத் தலைமையிட மருத்துவ மனைகளில், தேவைக்கேற்ப மருத்துவ வல்லுநர்கள் 18 பேரை (சிறப்பு மருத்துவர்கள், அறுவைச் சிகிச்சை மருத்துவர்கள், மகப்பேறு மருத்துவர்கள்) நியமித்தல்.

(3) 30 வட்டத் தலைமையிட மருத்துவ மனைகளில் ஒவ்வொன்றிலும் ஒரு வல்லுநர் என்ற விதத்தில் சிறப்புச் சிகிச்சைப் பணியை வலுப்படுத்த சிறப்பு மருத்துவர்கள் 10 பேர், அறுவை சிகிச்சை மருத்துவர்கள் 10 பேர், மகப்பேறு மருத்துவர்கள் 10 பேர் ஆகியோரை நியமித்தல்.

(4) திண்டிவனம், நாமக்கல் ஆகிய இடங்களில் உள்ள அரசு மருத்துவ மனைகளில் குருதி சேமிப்பு நிலையங்களை ஏற்படுத்தல்.

(5) ஸ்ரீபெரும்புதூர், அரக்கோணம், விழுப்புரம், அறந்தாங்கி, பவானி ஆகிய இடங்களில் உள்ள அரசு மருத்துவ மனைகளில் பல் சிகிச்சைப் பிரிவுகளை ஏற்படுத்தல்.

(6) சேலம், திருச்சிராப்பள்ளி தலைமையிட மருத்துவ மனைகளில் கண் சிகிச்சைப் பிரிவுகளைத் தொடங்குதல்.

(7) நாகப்பட்டினம், இராமநாதபுரம் ஆகிய இடங்களில் உள்ள தலைமையிட மருத்துவ மனைகளில் முடநீக்கியல் துறைகளை ஏற்படுத்தல்.

(8) ஈரோடு, தலைமையிட மருத்துவ மனையில் மேக நோயியல் துறையினைத் தொடங்குதல்.

(9) காஞ்சிபுரம், மாவட்டத் தலைமையிட மருத்துவ மனையில் சிசுநோயியல் மருத்துவப் பிரிவைத் தொடங்குதல்.

(10) நாகர்கோவில், தூத்துக்குடி ஆகிய இரு மாவட்டத் தலைமையிட மருத்துவ மனைகளில் காது-மூக்கு-தொண்டை சிகிச்சைப் பிரிவுகளைத் தொடங்குதல்.

[1974 மார்ச் 18

## செவிலியர் பணி.

பயிற்சி உதவித் தொகை பெற்று பயிற்சி பெற்றவர்களுக்கும 1969-லிருந்து 1973 வரை நியமிக்கப்பட்டவர்களுக்குமான செவிலியர் குறித்த விவரங்களாவன: 1969-ல் 169, 1970-ல் 297, 1971-ல் 464, 1972-ல் 265 செவிலியர்களும் ஆவார்கள்.

1973 டிசம்பர் வரை பயிற்சியை முடித்துள்ள 683 செவிலியர்கள் அப்பதவிக்குரிய நியமனங்களை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர். மருத்துவ மனைகளில் சிகிச்சை பெறும் நோயாளிகளின் எண்ணிக்கை பெருகி வருவதைக் கருத்தில் கொண்டு, அவர்களுக்குச் சிறந்த முறையில் செவிலியர் பணி வசதியை அளிப்பதற்காக மேலும் 350 செவிலியர்களை வேலைக்கமர்த்த அரசு கருதியுள்ளது.

## ஊராட்சி ஒன்றிய மருந்தகங்களை அரசு மருந்தகங்களாக்குதல்.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில், ஊராட்சி ஒன்றிய மருந்தகங்கள் படிப்படியாக அரசு மருந்தகங்களாக மாற்றப்பட்டு வருகின்றன. உள்ளாட்சி மன்றங்களின் கட்டுப்பாட்டில் சுமார் 238 ஊராட்சி ஒன்றிய மருந்தகங்களும், 248 கிராமப்புற மருந்தகங்களும், 105 நகராட்சி மருந்தகங்களும் உள்ளன.

1970–71 வரை, 129 ஊராட்சி ஒன்றிய மருந்தகங்கள் அரசு மருந்தகங்களாக மாற்றப்பட்டன. 1971–72-ல் 12 ஊராட்சி ஒன்றிய மருந்தகங்களும், 1972–73-ல் 45 ஊராட்சி ஒன்றிய மருந்தகங்களும், 1973–74-ல் 17 ஊராட்சி ஒன்றிய மருந்தகங்களும் அரசு மருந்தகங்களாக மாற்றப்பட்டன.

1974–75-ல் மேலும் 40 ஊராட்சி ஒன்றிய மருந்தகங்களை அரசு மருந்தகங்களாக மாற்றக் கருதப்பட்டுள்ளது.

## புற்று நோய்த் தடுப்பு.

இந்தியாவிலும், தமிழ் நாட்டிலும் புற்று நோயாளிகள் பெரும்பாலோருக்குக் கருப்பை, வாய், குரல்வளைப் பகுதி ஆகியவற்றில் புற்று நோய் காணப்பட்டுள்ளது. அதிருஷ்டவசமாக, உடலில் ஏற்படும் மாறுதல்களைக் கொண்டு இந்நோயை முன்கூட்டியே எளிதாகக் கண்டறிந்து விடலாம். காஞ்சிபுரத்தில்



1974 மார்ச் 18]

100 படுக்கைகள் கொண்ட புற்று நோய் சிகிச்சை மருத்துவ மனையைக் கட்ட ரூ. 27 லட்சத்திற்கும், புற்று நோய் சிகிச்சைக்கு மேலும் பல வசதிகள் அளிப்பதற்காக ரூ. 6.92 லட்சம் செலவில் அறுவை சிகிச்சைக் கூடத்திற்கு சீர்வளி வசதி அளிக்கவும் அரசு அனுமதி வழங்கியுள்ளது. இதற்காக, சென்னை–பெங்களூர் நெடுஞ்சாலையில் பக்தவச்சலம் பல்தொழில் பயிற்சிப் பள்ளிக்குக் கிழக்குப் பக்கத்தில் 22.97 ஏக்கர் நிலம் இந்நிலையத்திடம் தற்போது ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேற்சொன்னவற்றிற்காக, அறிஞர் அண்ணா நினைவு புற்று நோய் சிகிச்சை மருத்துவ மனைக்கு ரேடியக் கதிர் படம் எடுப்பவர், மருத்துவர் உட்பட பணியாளர்களை நியமிக்கவும் அரசு அனுமதி வழங்கியுள்ளது. இந்நிலையத்தில் கருப்பை சவ்வில் ஆரம்ப நிலையில் கண்டுபிடிக்கப்பட்ட புற்று நோய்க்கு சிகிச்சை அளிப்பதற்காக குறைந்த அளவு கதிர் வீச்சியல் சிகிச்சை வசதிகளைச் செய்து கொடுக்க ரூ. 45,000-க்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. இதற்காக அரசுத் தலைமையிட மருத்துவ மனையில் 10 படுக்கைகளை ஒதுக்குவதன் மூலம் இவ்வகை சிகிச்சை அளிக்கப்படும்.

பதினொன்று மாவட்டங்களில் உள்ள மாவட்டத் தலைமையிட மருத்துவ மனைகளில் புற்று நோய் சிகிச்சை வசதிகளை மேம்படுத்துவது தவிர, ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில ஒவ்வோராண்டிலும் 50 படுக்கைகளுக்கு வகை செய்வதன் மூலம் காஞ்சிபுரத்தில் உள்ள அறிஞர் அண்ணா நினைவு புற்று நோய் சிகிச்சை நிலையத்தை 350 படுக்கைகள் கொண்ட மருத்துவ மனையாக விரிவுபடுத்தக் கருதப்பட்டுள்ளது. இதற்கான செலவு ரூ. 514 லட்சமாகும்.

இந்திய அரசு பத்திரிகைத் தகவல் பிரிவு வெளியிட்டுள்ளபடி, புற்று நோய் சிகிச்சைக்காக 250 படுக்கைகளுடன் புற்று நோய் சிகிச்சை ஆராய்ச்சி செய்வதற்காக இந்த நிலையம் வட்டார நிலையமாக மேம்படுத்தப்பட வேண்டும் என்று புற்று நோய் மதிப்பீட்டுக் குழு பரிவுரை செய்துள்ளது.

## எக்ஸ்–கதிர் கருவி.

குறிப்பாகக் கிராமப் பகுதிகளில் கதிர் வீச்சுப் பரிசோதனைக்கு மேலும் பல வசதிகளை அளிக்கும் பொருட்டு, திருமங்கலம்,

தேனி, பவானி, கோபிச்செட்டிபாளையம், திருவண்ணாமலை, ஜெயங்கொண்டசோழபுரம், மேட்டூர் அணை, உத்தமபாளையம், மன்னார்குடி, திருவாரூர், பூவிருந்தவல்லி (இதய நோய் மருத்துவ மனை), ஈரோடு, திருச்செங்கோடு ஆகிய இடங்களில் உள்ள அரசு மருத்துவ மனைகளில் 100 M. A. எக்ஸ்-கதிர் கருவிகளை நிறுவ அரசு அனுமதி வழங்கியுள்ளது.

## காச நோய்த் தடுப்புத் திட்டம்.

தமிழ் நாட்டில் சுமார் 7.4 லட்சம் பேருக்குக் காச நோய் கண்டுள்ளதாக தோராயமாக மதிப்பிடப்பட்டுள்ளது. மாவட்ட காச நோய்த் தடுப்புத் திட்டத்தின் கீழ், நமது மாநிலத்தில் இதுவரை 5 லட்சத்திற்கு மேற்பட்டவர்களுக்குக் காச நோய் கண்டிருப்பதாகப் பரிசோதனையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இக்காரியத்திற்காக, மாவட்ட காச நோய்த் தடுப்புத் திட்டம் 1962-ல் வகுக்கப்பட்டது. காச நோய் கண்டுள்ளவர்களைக் கண்டறிந்து அவர்களது வீட்டிலேயே அவர்களுக்குச் சிகிச்சை அளிப்பதும் அதன் மூலம் நோய் பரவுவதைத் தடுப்பதும், குழந்தைகளுக்கும் சிறுவர்களுக்கும் முறையாக பி.சி.ஜி. (B. C. G.) தடுப்பு ஊசி போடுவதன் மூலம் அவர்களைப் பாதுகாப்பதும் காச நோய்த் தடுப்புத் திட்டத்தின் நோக்கமாகும்.

நம் மாநிலத்தில் 100 காச நோய்ப் படுக்கைகளை ஏற்படுத்துவதற்கு மத்திய அரசு நிதியுதவி வழங்க புதுடில்லி, சுகாதாரப் பணிகள் தலைமை இயக்குநர் ஒப்புக் கொண்டுள்ளார். அதன்படி, இராமநாதபுரம், தூத்துக்குடி, நாகப்பட்டினம், கிருஷ்ணகிரி ஆகிய இடங்களில் மத்திய அரசின் முழு உதவியுடன் 25 படுக்கைகள் கொண்ட நான்கு காச நோய்ச் சிகிச்சை வார்டுகளை ஏற்படுத்த அனுமதி வழங்கி தமிழ் நாடு அரசு ஆணைகளைப் பிறப்பித்துள்ளது. இம்மாநிலத்தில் தற்போது அதிக சிகிச்சைக் கூடங்களை ஏற்படுத்துவதனால் மருத்துவ மனையில் தங்கியிருந்து காச நோய் சிகிச்சை பெறுவதற்கான வசதிகள் மேலும் உயரும்.

மாவட்ட காச நோய் நிலையம் ஒவ்வொன்றிலும் பி.சி.ஜி. குழு ஒன்று உள்ளது. தமிழ் நாட்டில் இதுவரை 67.50 லட்சம் பேருக்கு பி.சி.ஜி. தடுப்பு ஊசி குத்தப்பட்டுள்ளது. இதில் 4.6 லட்சம் பிறந்த குழந்தைகளாகும்.



தமிழ் நாட்டில், காச நோய்த் தடுப்புத் திட்டத்தின் கீழ், சென்னை, மதுரை ஆகிய இடங்களைத் தலைமையிடமாகக் கொண்ட காச நோய் விளம்பரப் பிரிவுகள் இரண்டு செயல்படுகின்றன.

தமிழ் நாட்டிலுள்ள கீழ்க்காணும் சில காச நோய் சிகிச்சை நிலையங்களுக்கு மானியங்கள் வழங்கப்பட்டன; அவற்றின் விவரம் பின்வருமாறு :—

மகாத்மா காந்தி நினைவு காச நோய் சிகிச்சை நிலையம், தஞ்சாவூர்—ரூ. 58,000 ஆண்டு ஒன்றுக்கு.

ராமலிங்கம் காச நோய் சிகிச்சை நிலையம், கோயம்புத்தூர்—ரூ. 1,50,000 ஆண்டு ஒன்றுக்கு.

ராஜாஜி காச நோய் சிகிச்சை நிலையம், திருச்சிராப்பள்ளி ரூ. 52,700 ஆண்டு ஒன்றுக்கு.

தமிழ் நாடு காச நோய் கட்டுப்பாட்டுச் சங்கம், 23 காச நோய் வில்லைகள் விற்பனை இயக்கங்களை வெற்றிகரமாக நடத்தியுள்ளது. காச நோய்த் தடுப்புத் திட்டங்களை செயல்படுத்துவதற்காக ஒவ்வொரு மாவட்டத்தில் வசூலிக்கப்படும் தொகைகள் அந்தந்த மாவட்டங்களில் மட்டுமே பயன்படுத்தப்படும். 21-வது காச நோய் வில்லைகள் விற்பனை இயக்கம் வரை மொத்தம் ரூ. 23,05,699.64 வசூலிக்கப்பட்டுள்ளது. இத்தொகையில், காச நோயால் பீடிக்கப்பட்டுள்ள ஏழை நோயாளிகளின் உதவிக்காக ரூ. 7,89,128.98 செலவிடப்பட்டுள்ளது. அதிக அளவு காச நோய் வில்லைகளை விற்பனை செய்ததற்காக, கடந்த ஆறு ஆண்டுகளாக நமது மாநிலக் கழகத்திற்கு இந்திய காச நோய்க் கழகம் சுழற் கேடயத்தை வழங்கி வந்துள்ளது. 22-வது விற்பனை இயக்கத்துக்காக கழகம் இதுவரை வசூலித்துள்ள தொகை ரூ. 5,80,710.80 ஆகும். 23-வது விற்பனை இயக்கத்துக்காக ரூ. 9,75,000 மதிப்புள்ள 99,00,000 வில்லைகளைக் கழகம் வழங்கியுள்ளது. இதுவரை ரூ. 6,11,000 வசூலிக்கப்பட்டுள்ளது. 22-வது விற்பனை இயக்கத்தின்போது வசூலிக்கப்பட்ட தொகையை விட இன்னும் அதிகமான தொகை வசூலிக்க முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இம்மாநிலம் தொடர்ந்து ஐந்து ஆண்டுகளாகச் "சுழற் கோப்பையைப்" பெற்று வந்துள்ளது. எனவே, இம்மாநிலத்திற்கு "மாதிரிக் கோப்பை" ஒன்று கிடைக்கும்.

காச நோய் வில்லைகளை விற்பனை செய்ததன் மூலம் கிடைக்கும் வருவாயிலிருந்து 1971–73-ல் கீழ்க்காணும் முக்கிய திட்டங்களுக்குத் தமிழ் நாடு காச நோய்க் கழகம் ஒப்பளிப்பு வழங்கியுள்ளது :—

| | ரூபா |
|---|---|
| (க) கட்டிடங்கள்: | |
| (1) காஞ்சிபுரம் தலைமையிட மருத்துவமனையில் 10 படுக்கைகள் கொண்ட காசநோய் சிகிச்சைக்கூடம் கட்டுதல் .. .. | 45,000 |
| (2) ஆவணங்கள், சாதனங்கள் முதலியவற்றை வைப்பதற்கு திருவள்ளூர் அரசினர் மருத்துவமனையில் அறை ஒன்றைக் கட்டுதல .. .. .. | 20,000 |
| (3) ஆர்க்காடு, காசநோய்க் கழகத்தால் அளிக்கப்பட்ட பெருமளவில் எக்ஸ் கதிர்ப்படமெடுக்கும் சிறு கருவி பொருத்தப்பட்ட மோட்டார் வண்டியை நிறுத்தி வைப்பதற்கான கொட்டகை கட்டுதல் .. .. | 14,000 |
| (4) உசிலம்பட்டியில் (மதுரை மாவட்டம்) 16 படுக்கைகளுடன் கூடிய காச நோய் சிகிச்சைக்கூடம் கட்டுதல் .. .. | 50,000 |
| (5) சேலம், தலைமையிட மருத்துவமனையில் 25 படுக்கைகளுடன் காச நோய்ச் சிகிச்சைக் கூடம் ஒன்றைக் கட்டுதல் .. .. | 1,00,000 |
| (6) சங்கரன்கோயில், மேலப்பாளையம், அரசினர் மருத்துவமனையில் 10 படுக்கைகள் கொண்ட காச நோய் சிகிச்சைக்கூடம் கட்டுதல் .. .. | 70,000 |
| (உ) சாதனங்கள்: | |
| (7) எக்ஸ்-கதிர் படங்களை அதிக அளவு எடுப்பதற்கான பெருமளவில் எக்ஸ்-கதிர் படமெடுக்கும் சிறு கருவி பொருத்தப்பட்ட மோட்டார் வண்டி .. | 2,72,800 |
| (8) திருச்சியிலுள்ள மாவட்டத் தலைமையிட மருத்துவமனைக்கு சென்னை மாநகர் எக்ஸ்-கதிர் கருவி இயலூர்தி ஒன்று .. | 1,12,400 |
| (9) பல்வேறு மருத்துவமனைகளுக்கு வழங்குவதற்கான நுண்ணோக்காடி .. | 17,400 |





தென் ஆர்க்காடு மாவட்டக் காச நோய்க் கழகம் மாவட்டத்திலுள்ள காச நோயாளிகளைக் கண்டறிவதற்குப் பயன்படுத்துவதற்காகக் காச நோய் வில்லைகள் விற்பனை நிதியிலிருந்து M.M.R. மோட்டார் வண்டி ஒன்றை வழங்கியுள்ளது.

## தொழு நோய் தடுப்புத் திட்டம்.

மூன்றாவது கட்ட திட்டத்தின் கீழ் தமிழ் நாடு அரசு 14 தொழு நோய்த் தடுப்புப் பிரிவுகளையும், 7 துணை நிலையங்களையும், ஒரு பயிற்சி நிலையத்தையும், 78 சோதனை கல்வி சிகிச்சைப் பிரிவுகளையும் (சிறு கட்டுப்பாட்டு நிலையங்கள்) தொடங்கியுள்ளது.

1969-71-ல் தொழு நோய்த் தடுப்புப் பிரிவுகள் 4, 28 சோதனை சிகிச்சைப் பிரிவுகள் ஆகியவற்றை அமைக்கவும் தொழு நோய் துணை நிலையம் ஒன்றை நிலை உயர்த்தவும் தமிழ் நாடு அரசு ஒப்பளிப்பு வழங்கியது.

1971–72-ல் நமது அரசு 3 தொழு நோய்த் தடுப்புப் பிரிவுகளைத் தொடங்கியுள்ளது. ஆறு துணை நிலையங்களையும் அனைத்து வசதிகள் கொண்ட முழு நிலை நோய்த் தடுப்புப் பிரிவுகளாக நிலை உயர்த்தியுள்ளது.

1972–73-ல் அரசு 3 நோய்த் தடுப்புப் பிரிவுகளைத் தொடங்கியுள்ளது.

1973–74-ல் அரசு 5 நோய்த் தடுப்புப் பிரிவுகள் தொடங்கப்பட்டுள்ளன.

தற்போது, தென் ஆர்க்காடு, வட ஆர்க்காடு, செங்கற்பட்டு, திருச்சிராப்பள்ளி, தருமபுரி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் அநேகமாக எல்லா பகுதிகளிலும் நோய்த் தடுப்புப் பிரிவுகள் அரசிஞல் அல்லது தொண்டு நிறுவனங்களால் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

தொண்டு நிறுவனங்களுக்கு வழங்கப்படும் மானியங்கள்.

அரசு முழு மானியம் வழங்கும் நிறுவனங்களின் பெயர்களாவன :—

| | 1973-74 ஆம் ஆண்டிற்கு வழங்கப் பட்ட மானியம். |
|---|---|
| அ) வாலாஜாபேட்டை வட்டம், ராணிப் பேட்டைக்கான தொழுநோய் நிவாரண—தடுப்புத் திட்டம் ஸ்கட்டர் (Scudder) நினைவு மருத்துவமனை. | முன் பண மானியம் ரூ. 1.90 லட்சம். |
| (ஆ) அமர்ஜிக்ஸ் (Hamerjickz) தொழு நோய் நிலையம், போலம்பாக்கம். | முன் பண மானியம் ரூ. 5.48 லட்சம். |

மருத்துவ மனைகளில் சேர்க்கப்படும் கீழ்க்காணும் நோயாளிகளுக்கு நபர்வாரி மானியம் வழங்கப்படுகிறது :—

(1) நோய் பரப்பும் நிலையிலுள்ள அனைவருக்கும்,

(2) அறுவை சிகிச்சைக்கு முன்னரும், பின்னரும் உள்ள உடல்நிலை குறித்து பரிசோதனை செய்வதற்காக அனுமதிக்கப்படும் நோயாளிகள் அனைவருக்கும்,

(3) கடும் புண்ணால் பாதிக்கப்பட்ட நிலையில் மருத்துவ மனைகளில் சேர்க்கப்படும் அனைவருக்கும்.

1973-74-ல் வழங்கப்பட்ட நபர்வாரி மானியம் ரூ. 4 லட்சமாகும்.

தொழு நோய்த் தடுப்புப் பணிகளை மேற்கொள்ளும் 10 தொண்டு நிறுவனங்களுக்கு, அவை சிகிச்சையளிக்கும் வயது வந்த ஒவ்வொருவருக்கும் ரூ. 25 என்ற வீதத்திலும், சிறுார் ஒவ்வொருவருக்கும் ரூ. 12 என்ற வீதத்திலும் தலைக்கட்டு மானியம் வழங்கப்பட்டு வருகிறது.

திருமணி, மத்திய தொழு நோய்ச் சிகிச்சைப் பயிற்சி-ஆராய்ச்சி நிலையத்தின் நிர்வாகத்தை மட்டும் இந்திய அரசு 1—4—1974-லிருந்து மேற்கொள்ளும்; மாநில அரசு தொழு நோயாளிகள் தங்கியிருந்து சிகிச்சை பெறும் குடியிருப்புப் பகுதியின் பொறுப்பை மேற்கொள்ளும்.





தொழு நோய்த் தடுப்பு பயிற்சித் திட்டத்தின் கீழ் 547 துணை மருத்துவப் பணியாளர்களுக்கும் மருத்துவஞ் சாராத மேற்பார்வையாளர் 21 பேருக்கும் பயிற்சியளிக்கப்பட்டது.

தொழு நோய்க் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் கீழ் 4.51 லட்சம் பேருக்குச் சிகிச்சையளிக்கப்பட்டுள்ளது.

நான்காவது ஐந்தாண்டுத் திட்ட இறுதியில் 37 தொழு நோய்த் தடுப்புப் பிரிவுகளும், 122 ஆய்வு-கல்வி-பயிற்சிப் பிரிவுகளும் செயல்பட்டு வருகின்றன.

முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி இலவசக் கண் சிகிச்சை முகாம்—பணிகள்.

ஆய்வு நடத்தியதில், சுமார் 10 லட்சம் மக்களுக்குக் கண் படல நோயினால் ஒரு கண் அல்லது இரண்டு கண்கள் குருடாக உள்ளன என்று கண்டுபிடிக்கப்பட்டது. கண்ணொளி இழந்த மக்களின் குடும்பங்களுக்கு ஒளியையும் மகிழ்ச்சியையும் தருவதைக் கருத்திற்கொண்டு "முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி இலவசக் கண் சிகிச்சை முகாம்" என்ற பெயரில் திட்டம் ஒன்று 3—6—1972-ல் தொடங்கப்பட்டது. முதலமைச்சரின் பிறந்த நாள் அன்பளிப்பாக, பொது மக்கள் அளித்த நன்கொடை தொகையே இத்திட்டத்தினைத் தொடங்குவதற்கு உதவுகின்றது. கண் படலத்தினால் பார்வை இழந்த எல்லா மக்களுக்கும் அறுவை சிகிச்சை அளிப்பதே அரசின் முக்கிய நோக்கமாகும்.

இம்மாநிலத்தில் உள்ள பல்வேறு மையங்களில் இதுவரை 119 கண் சிகிச்சை முகாம்கள் நடத்தப்பட்டன. அவற்றில் கீழ்க்கண்ட பலவகை சிகிச்சைகள் அளிக்கப்பட்டன :—

(1) கண்படல அறுவை சிகிச்சை செய்துகொண்டவர்கள்—62,354 பேர்.

(2) கண் நோய்களுக்கு சிகிச்சை பெற்றவர்களின் எண்ணிக்கை—4,75,789 பேர்.

(3) கண் பார்வை பரிசோதனை செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை—63,633 பேர்.

(4) சிறிய அறுவை சிகிச்சை செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை—917 பேர்.

[1974 மார்ச் 18

தேவையான நபர்களுக்கு எல்லாம் இலவசமாக மூக்குக் கண்ணாடிகளும் வழங்கப்பட்டன.

மேற்கூறியவற்றைத் தவிர, கோயம்புத்தூர், சி.எஸ்.டபிள்யூ ஆலை திருமண மண்டபத்திலும், திருச்சி மாவட்டத் தலைமையிட மருத்துவ மனையிலும் உள்ள இரண்டு தற்காலிக கண் மருத்துவ மனைகளில் முறையே 1,999 பேருக்கும் 579 பேருக்கும் கண் படல அறுவை சிகிச்சைகள் செய்யப்பட்டன.

கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரியிலும், திருச்சிராப்பள்ளியிலுள்ள மாவட்டத் தலைமையிட மருத்துவ மனையிலும் வெளி நோயாளிகளுக்குச் சிகிச்சையளிக்கப்பட்டதோடு கண் பார்வை பரிசோதனையும் செய்யப்பட்டது.

1974–75 ஆம் ஆண்டில் எல்லா மாவட்டங்களிலும் கண் சிகிச்சை முகாம்களை தொடர்ந்து நடத்தத் திட்டமிடப் பட்டுள்ளது.

## மருந்துக் கட்டுப்பாடு நிர்வாகம்.

மருந்துகளைப் பகுப்பாய்வு செய்வதற்குத் தற்போதுள்ள வசதிகள் போதுமானவையாக இல்லாததால், மாதிரி மருந்துகளை விரைவில் பகுப்பாய்வு செய்வதற்காக முழு வசதிகளுடன் கூடிய மருந்து பரிசோதனை ஆய்வுக் கூடம் ஒன்று அமைப்பதற்கு அரசு கொள்கையளவில் ஒப்புக் கொண்டுள்ளது. அடித்தளத்திற்கு கற்கலவைத் (கான்கிரீட்) தூண்களைக் கொண்டு அடித்தளம் போடுவதற்கு ரூ. 1 லட்சத்திற்கும், விலையுயர்ந்த சாதனங்களை வாங்குவதற்கு ரூ. 1 லட்சத்திற்கும் 1973–74-ல் அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

1940 ஆம் ஆண்டு மருந்துகள்–ஒப்பனைப் பொருட்கள் சட்டத்தைச் செயற்படுத்துவதே முதன்மையான அலுவலாகும். மருந்துகளைத் தயாரித்து விற்பனை செய்வதற்கும், ஒப்பனைப் பொருட்களைத் தயாரிப்பதற்கும் உரிமங்கள் வழங்கப்படுகின்றன. அவ்வாறு வழங்கப்படும் உரிமங்கள் காலாவதியாகும்போது அவை மீண்டும் புதுப்பிக்கப்படுகின்றன. இச் சட்டத்தின் கீழ் பல்வேறு குற்றங்களுக்காக வழக்குகள் தொடரப்படுகின்றன. செய்யப்பட்ட குற்றத்தின் தன்மையையொட்டி உரிமங்களின் செல்திறன்



1974 மார்ச் 18]

தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்படுகின்றன, அல்லது ரத்து செய்யப்படுகின்றன. தமிழ் நாட்டில் உரிமம் பெற்றுள்ள தயாரிப்பாளர்கள், வணிகர்கள் ஆகியோரின் எண்ணிக்கை முறையே 432,17,329 ஆகும்.

மருந்துக் கட்டுப்பாடு நிர்வாகம், 1970 ஆம் ஆண்டு மருந்து (விலைக் கட்டுப்பாடு) ஆணையைச் செயற்படுத்தி வருகிறது. இந்த ஆணையின் கீழ், மருந்துகளின் உயரளவு சில்லறை விலைகள் நிர்ணயிக்கப்படுகின்றன. 1970 ஆம் ஆண்டு மருந்து (விலைக் கட்டுப்பாடு) ஆணையை மீறியதற்காக, இன்றியமையாப் பொருட்களின் சட்டத்தின் கீழ் வழக்குகள் தொடரப்படுகின்றன.

## தனியார் மருத்துவ நிறுவனங்களுக்கு மானியங்கள்.

தகுதியுள்ள நேர்வுகளில், தனியார் அமைப்புகள், சங்கங்கள், தொண்டு நிறுவனங்கள் முதலியவற்றின் கட்டுப்பாட்டின் கீழுள்ள மருத்துவ நிறுவனங்களுக்கு உதவி மானியம் வழங்கப்படுகிறது. இம்மாநிலத்தில் வழங்கப்படும் வெவ்வேறு வகை மானியங்கள் பின்வருமாறு :—

I தொடர் இனம்—

(i) தனிப்பட்ட தொழு நோய் நிறுவனங்களுக்கு நபர் வாரி மானியம்.

(ii) பிற மருத்துவ நிறுவனங்களுக்குப் பராமரிப்பு மானியம்.

II தொடரா இனம்—

(i) கட்டிட மானியங்கள்.

(ii) சாதனங்களுக்காக வழங்கப்படும் மானியங்கள்.

(iii) மருத்துவக் காரியங்களுக்குத் தேவைப்படும் நிலத்தைக் கையகப்படுத்துவதற்கு மானியங்கள்.

37 தனியார் மருத்துவ நிறுவனங்கள் அரசிடமிருந்து பராமரிப்பு உதவி மானியம் பெறுகின்றன.

1972–73-ல் கட்டிடத்திற்காக வழங்கப்பட்ட மொத்த மானியத் தொகை ரூ. 0.34 லட்சமாகும். 1973–74 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீட்டில், தனியார் மருத்துவ நிறுவனங்களுக்குப் பராமரிப்பு மானியமாக ரூ. 25 லட்சமும், சாதனங்களுக்கான மானியம் ரூ. 89,300-ம் ஒதுக்கப்படுகின்றன.

[1974 மார்ச் 18

## தொழிலாளர் நலக் காப்புறுதித் திட்டம்.

தருமபுரி, நீலகிரி மாவட்டங்களைத் தவிர மற்றெல்லா மாவட்டங்களிலும் தற்போது இத்திட்டம் செயற்படுத்தப்படுகிறது. இம்மாநிலத்தில் காப்புறுதி செய்து கொண்டவர் 1,000 மும் அதற்கு மேற்பட்டுமுள்ள 30 பெரிய தொழிற்சாலை நிலையங்களில் இத்திட்டம் விரைவான முன்னேற்றம் அடைந்துள்ளது. தற்போது இம்மாநிலத்தில் தொழிலாளர் நலக் காப்புறுதி மருத்துவ மனைகள் 3, நிலையான மருந்தகங்கள் 94, இயங்கும் மருந்தகங்கள் 8, பகுதி நேர தனி மருந்தகங்கள் 3, தொழிலாளர் பயனுக்கான மருந்தகங்கள் மூன்று ஆகியவை உள்ளன. இவற்றின் மூலம் இம்மாநிலத்தில் 15,54,400 பேர்களைக் கொண்ட 3,88,600 குடும்பங்கள் பயனடைந்து வருகின்றன. சென்னை மாநகரிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் கோயம்புத்தூர் மாநகரிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் மதுரை மாநகரிலும் அதன் சுற்றுப்புறங்களிலும், கோயில்பட்டியிலும் காப்புறுதி செய்து கொண்டவர்களுக்கும் அவர் தம் குடும்பத்தினருக்கும் மருத்துவ மனையில் தங்கி மருத்துவம் பெறும் வசதி உட்பட இலவச மருத்துவச் சிகிச்சை அளிக்கப்படுகிறது. இத்திட்டம் செயலிலுள்ள எஞ்சிய பகுதிகளில் காப்புறுதி செய்துகொண்டோருக்கு முழு மருத்துவச் சிகிச்சையும் அவர்கள் குடும்பத்தினருக்கு மருத்துவ மனையில் தங்கி சிகிச்சை பெறும் வசதி நீங்கலாக மருத்துவ வசதியும் அளிக்கப்படுகின்றன.

இத்திட்டத்தின் கீழ் மருத்துவச் சிகிச்சை அளிப்பதற்காகும் செலவு குறித்து உச்சவரம்பு ஒன்றை, அதாவது தொழிலாளர் ஒருவருக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 50 என்ற வீதத்தில் உச்ச வரம்பு செலவை 1970, ஏப்ரல் 1-லிருந்து வழங்க தொழிலாளர் நலக் காப்புறுதிக் கழகம் முதலில் முடிவு செய்தது. உச்சவரம்பு செலவுக்கு மேல் ஏதேனும் செலவு ஏற்படின் அச்செலவு முழுவதும் மாநில அரசால் ஏற்கப்பட வேண்டும். இவ்வரசு அடிக்கடி இந்திய அரசுக்கு முறையீடுகள் செய்து கொண்ட பின்னர், கழகம் உச்சவரம்பு அளவை அதைப்போல் மூன்று மடங்காக உயர்த்தியது. 1—4—1973 முதல் மருத்துவச் செலவுக்கான உச்சவரம்பு வீதங்கள் பின்வருமாறு :—

வரையறுக்கப்பட்ட மருத்துவச் சிகிச்சை ரூ. 63, ஆண்டு ஒன்றுக்கு தொழிலாளர் ஒருவருக்கு.



1974 மார்ச் 18]

நீட்டிக்கப்பட்ட மருத்துவச் சிகிச்சை ரூ. 67, ஆண்டு ஒன்றுக்கு தொழிலாளர் ஒருவருக்கு.

முழு மருத்துவச் சிகிச்சை ரூ. 80, ஆண்டு ஒன்றுக்கு தொழிலாளர் ஒருவருக்கு.

தொழிலாளர் ஒருவருக்கு ஆண்டு ஒன்றுக்கு மருந்து, மருந்துப் பொருள்கள், கட்டுப்போடும் பொருட்கள் ஆகியவற்றிற்காக ரூ. 30-க்கு மேலும் ரூ. 45-க்குள்ளும் மாநில அரசு செலவிட்டால் அதிகச் செலவை வழக்கமான விகிதாச்சாரத்தில், உச்சவரம்பிற்கு அப்பாற்பட்டு கழகம் ஏற்கும். உச்சவரம்பு செலவுக்கு மேல் அரசுக்கு ஏற்பட்டுள்ள செலவு 1972--73-ல் ரூ. 99.70 லட்சமாகும். 1973–74-ல் இது ரூ. 67 லட்சமாக குறையுமென்று எதிர்பார்க்கப் படுகிறது. தொழிலாளர் நலக் காப்புறுதிக் கழகத்தின் நீண்ட காலத் திட்டம் குறித்த குழுவின் அறிக்கை பற்றி கருத்துரைக்கையில் உச்சவரம்பு நீக்கப்படலாமென்றும், அப்படி உச்சவரம்பு தொடர்ந்து இருக்க வேண்டுமாயின் அது, குடும்பம் ஒன்றுக்கு நடப்பு விலைவாசி வீதத்தில் ரூ. 103 என்று வரையறுக்கப்பட வேண்டுமென்றும், இந்த வரையறை ஒவ்வோராண்டும் ஏறும் விலைவாசிகளையொட்டி பரிசீலிக்கப்பட வேண்டுமென்றும் இவ்வரசு கருத்துத் தெரிவித்துள்ளது.

1974–75-ல் தொழிலாளர் நலக் காப்புறுதித் திட்டம் கீழ்க்காணும் 6 புதிய பகுதிகளுக்கு நீட்டிக்கப்படும்.

1. சென்னை மாநகரின் புறநகர்ப் பகுதிகள் (அடையாறு, நந்தம்பாக்கம்).
2. மதுரை மாவட்டத்தில் மேலூர்.
3. திருச்சி மாவட்டத்தில் கரூர்.
4. சேலம் மாவட்டத்தில் ஆத்தூர்.
5. வட ஆர்க்காடு மாவட்டத்தில் ஆம்பூர்.
6. கோயம்புத்தூர் மாவட்டத்தில் காரமடை.

## குடும்ப நலத் திட்டம்.

கருத்தடைக்கான அறுவை சிகிச்சை, கருத்தடை வளையங்கள், கருத்தடைச் சாதனங்களைப் பயன்படுத்துதல், பேறு காலத்திற்குப்

பின் செய்யப்படும் கருத்தடை அறுவைச் சிகிச்சை, தாய்-சேய் நலத் திட்டம், மருத்துவப் பணியாளர்களுக்குப் பயிற்சி அளித்தல், கருத்தடையை மாற்றி அமைத்தல், மக்களிடையே பிரச்சாரம், அறுவை சிகிச்சை முறைகளை பரப்புதல் ஆகியவை குடும்ப நலத் திட்டத்தின் கீழ் வரும் முக்கியமான பணிகளாகும்.

### கிராம குடும்ப நலத் திட்ட நிலையங்கள்.

இம்மாநிலத்தில், சீரமைக்கப்பட்ட குடும்ப நலத் திட்டம், தொடக்கச் சுகாதார நிலையங்களுடன் இணைக்கப்பட்ட கிராமக் குடும்ப நலத் திட்ட நிலையங்கள் மூலமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இம்மாநிலத்தில் ஒவ்வொரு வட்டாரத்திலும் சராசரி 80,000 மக்கட் தொகை கொண்ட 374 வளர்ச்சி வட்டாரங்கள் உள்ளன.

### நகர்ப்புற (குடும்ப நல) நிலையங்கள்.

குடும்ப நலத் திட்டப் பணி, தொண்டு நிறுவனங்களாலும், உள்ளாட்சி மன்றங்களாலும், மாநில அரசாலும் நடத்தப்படும் நகர்ப்புற குடும்ப நலத் திட்ட நிலையங்கள் மூலமாக நடத்தப்பட்டு வருகிறது. 149 நிலையங்கள் அரசினால் நடத்தப்படுகின்றன.

1973–74-ல், 1974, ஜனவரி வரையில், 63,516 பேருக்குக் கருத்தடை அறுவை சிகிச்சைகள் செய்யப்பட்டன. நாடு முழுவதும் கருத்தடைச் சிகிச்சை முகாம்கள் பெருமளவில் செயற்படுவதைக் கவனித்த பின்னர், பல ஆண்டுகளுக்குப் பின்னர் இது பயன் அளிக்காது என்பதால் முகாம்கள் நடத்தப்படும் காலத்தில் அதிக ஊக்கத் தொகை அளித்து முகாம்கள் நடத்தும் திட்டம் வருங்காலத்தில் மேற்கொள்ள வேண்டிய அவசியமில்லை என்ற முடிவுக்கு இந்திய அரசு வந்துள்ளது. இக்காரணத்தாலும், இந்திய அரசு நாம் கொடுத்து வந்த தொகையில் கணிசமான அளவுத் தொகையைக் குறைத்துள்ளதாலும் 1973–74 ஆம் ஆண்டில் கருத்தடை அறுவை சிகிச்சை முகாம்கள் நடத்தப்படவில்லை. எனினும் கருத்தடை அறுவை சிகிச்சைத் திட்டத்தின் கீழ், குறிப்பிட்ட அளவுக்கு வெற்றிகாண கருத்தடை அறுவை சிகிச்சை செய்துகொண்டவர்களுக்கு (தந்தை/தாய்க்கு) வழங்கப்படும் ரொக்கத் தொகையை 31—3—1974 வரை ரூ. 60 என்ற



உயர்த்தப்பட்ட விதத்தில் வழங்க அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இந்த வகையில் மத்திய அரசின் பங்கு ரூ. 17 மட்டுமேயாகும். எஞ்சிய ரூ. 43 மாநில நிதியிலிருந்து வழங்கப்படும்.

1973–74-ல் (1974, ஜனவரி வரையில்) 18,207 பேருக்குக் கருத்தடை வளையங்கள் பொருத்தப்பட்டுள்ளன.

### பேறு எய்தியவருக்குச் செய்யும் கருத்தடை அறுவைச் சிகிச்சைத் திட்டம் (Post Partum Programme.)

மகப்பேறு மருத்துவ மனைகளில் மகப்பேற்றுக்காகப் பெண்கள் சேர்த்துக் கொள்ளப்படும்போது, குடும்ப நலத் திட்ட நடவடிக்கைகளைத் தொடங்கித் தீவிரப்படுத்துவது இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்காகத் தெரிந்தெடுக்கப்பட்டுள்ள மருத்துவ மனைகள், பட்ட வகுப்பு பயிலுபவர்கள், பட்ட மேற்படிப்பு மாணவர்கள், செவிலியர், பிற துணை மருத்துவப் பணியாளர் ஆகியோருக்குக் குடும்பக் கட்டுப்பாட்டில் பயிற்சி அளிக்கும் திட்டத்தில் பங்கேற்க வேண்டும். பேறு எய்தியவருக்குச் செய்யும் கருத்தடை அறுவைச் சிகிச்சைத் திட்டம் 10 அரசினர் மருத்துவ மனைகளிலும் தனியார் மருத்துவ நிலையம் ஒன்றிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மாவட்ட, வட்ட மருத்துவ நிலையங்கள் 13-ல் இத்திட்டத்தை மேற்கொள்ள அண்மையில் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

தாய்-சேய் நலத் திட்டத்தின் கீழ், முத்தடுப்பு ஊசி, இரும்பு நோய் மருந்து, வைட்டமின் 'A' முதலியவை இந்திய அரசால் வழங்கப்படுகின்றன. அவற்றிற்காகும் செலவு கணக்கு மாநிலக் கணக்குகளில் பிரதிபலிக்கின்றது.

### கட்டிடங்கள்.

முன்னூற்று எழுபத்து நான்கு கிராமப்புற குடும்ப நலத் திட்ட நிலையங்களுக்காக ரூ. 3,44.83 லட்சம் செலவில் குடும்ப நலத் திட்டக் கட்டிடங்களும் பணியாளர் குடியிருப்புகளும் கட்ட ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. 1,395 துணை நிலையங்களுக்கு ரூ. 1,74.69 லட்சம் மொத்தச் செலவில் கட்டிடங்கள் கட்டப்படுவதற்கும் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. சேலம், எழும்பூர்

ஆகிய இடங்களிலுள்ள வட்டார குடும்ப நலத் திட்டப் பயிற்சி நிலையங்களுக்குக் கட்டிடங்கள், சில அரசினர் மருத்துவ மனைகளில் டியூபெக்டமி அறுவைச் சிகிச்சை கூடங்கள், பேறு எய்தியவருக்கு செய்யப்படும் கருத்தடை அறுவைச் சிகிச்சைக்கான கூடங்கள், அறுவை சிகிச்சையரங்கு முதலியவை கட்டப்படுவதற்காகவும் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. கிட்டத்தட்ட பெரும்பாலான கட்டிடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

குடும்ப நலத் திட்டத்தின் கீழ் தமிழ் நாடு அரசு நிர்ணயித்துள்ள 4-வது ஐந்தாண்டுத் திட்ட (1969–74) தற்காலிக நிதி ஒதுக்கம் ரூ. 29,22.01 லட்சமாகும். கட்டிடங்கள் உட்பட குடும்ப நலத் திட்டத்தின் கீழ் 1973-74 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுச் செலவு ரூ. 5,87.05 லட்சம் ஆகும் என்று கணக்கிடப் பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 1973–74 ஆம் ஆண்டிற்கான மத்திய நிதி ஒதுக்கீடு, நிதி நெருக்கடியை முன்னிட்டு ரூ. 3,89.69 லட்சமாகக் குறைத்தே அனுமதிக்கப்பட்டுள்ளது. 1973–74 ஆம் ஆண்டில் ஆன மிகுதி செலவுக்காக மேலும் ரூ. 33.88 லட்சம் தொகையை இந்திய அரசு வழங்கலாம் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

புதுடில்லி, பணிக் குழுவால் ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்காக நிர்ணயிக்கப்பட்ட தற்காலிக நிதி ஒதுக்கம் ரூ. 37 கோடியாகும். குடும்ப நலத் திட்டத்தின் கீழ் (கட்டிடங்கள் உட்பட) 1974–75 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுச் செலவு ரூ. 6,41.29 லட்சமாகும்.

கருத்தடை அறுவைச் சிகிச்சைக் கூடங்கள், அறுவைச் சிகிச்சை அரங்குகள் ஆகியவற்றைக் கட்டுவதுடன், பேறு காலத்திற்குப் பிந்திய கருத்தடை அறுவைச் சிகிச்சைத் திட்டத்தை 1974–75-ல் 12 மாவட்டத் தலைமையிட மருத்துவ மனைகளுக்கு நீட்டிப்பது குறித்த செயற்குறிப்பு பரிசீலனையி லுள்ளது. 1974–75 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுச் செலவு (தொடர் வருவாய்க் கணக்கிலான செலவு ரூ. 4.08 லட்சம், மூலதன தொடரா இனச் செலவு ரூ. 3.00 லட்சம்) ரூ. 7.08 லட்சமாகும்.





1974-75-ல் கீழ்க்காணும் வகைப் பணிகளை மேற்கொள்ளக் கருதப்பட்டுள்ளது :—

1. உள்ளாட்சி மன்றங்களாலும், சுகாதாரத் தொண்டு நிறுவனங்களாலும் மேலும் பல நகர்ப்புற குடும்ப நலத் திட்ட நிலையங்களைத் தொடங்குதல்.

2. பயிற்சித் திட்டத்தையும் மக்களிடையே பிரச்சாரத்தையும் மும்முரப்படுத்துதல்.

3. நான்காவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் எஞ்சியுள்ள கிராமக் குடும்பநலத் திட்ட நிலையங்கள், துணை நிலையங்கள் ஆகியவற்றிற்கான கட்டிடங்கள் கட்டும் பணியை (ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டுள்ளன) முடித்தல்.

4. தாய்-சேய் நலத் திட்டத்தின்கீழ் நோய்களிலிருந்து தடுப்புப் பாதுகாப்பளிக்கும் திட்டத்தை மும்முரப்படுத்தல்.

5. மேற்கொண்டும் சில தொடக்கச் சுகாதார நிலையங்களிலும் தொண்டு நிறுவனங்களிலும் கருத்தடை வளையத் திட்டத்தைச் செயற்படுத்தல்.

6. 12 மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகளுக்கு பேறு காலத்திற்குப் பிந்திய கருத்தடை அறுவைச் சிகிச்சைத் திட்டத்தை நீட்டித்தல்.

7. மாவட்டங்களில் குறைந்த அளவு ஈடுசெய் தொகை விதத்தில் மும்முர குடும்ப நலத் திட்ட இயக்கங்களை நடத்துதல்.

8. ஆயாக்களுக்கான பயிற்சித் திட்டத்தை நடத்துதல்.

## இந்திய மருத்துவ முறை.

இந்திய மருத்துவ முறையை மீண்டும் கொண்டு வருவதில் நமது அரசு சிறப்பு நாட்டம் செலுத்தியுள்ளது.

மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகள் அனைத்திலும் 10 படுக்கை வசதிகளுடன் கூடிய சித்த மருத்துவப் பிரிவுகள் தற்போது செயல்பட்டு வருகின்றன. 1973–74-ல் 10 வட்ட மருத்துவமனைகளில் சித்த மருத்துவப் பிரிவுகள் தொடங்கப் பட்டன.

[1974 மார்ச் 18

1974–75-ல் ரூ. 31.14 லட்சம் செலவில் 10 கட்டிடங்கள் கட்டி முடிக்கப்படும்.

அறிஞர் அண்ணா அரசினர் இந்தியமுறை மருத்துவமனையுடன் இணைந்துள்ள இரண்டு சித்த மருந்தகங்களைத் தவிர, ஆண்டு ஒன்றுக்கு ரூ. 20,000 தொடர் செலவில் சைதாப்பேட்டையில் மூன்றாவது மருந்தகம் ஒன்று 1—2—1974-ல் தொடங்கப்பட்டது.

இந்தியமுறை மருத்துவக் கல்லூரியில் சேர்த்துக் கொள்ளப் படுவதற்காக விண்ணப்பித்துக் கொள்கிற மாணவர்களின் எண்ணிக்கை ஆண்டுக்காண்டு பெருகி வருகிறது.

இந்திய மருத்துவப் பட்டதாரிகளுக்கு (B.I.M.) வேலை வாய்ப்பளிக்கும் நோக்கத்துடன் வட்டத் தலைமையிட மருத்துவ மனைகளிலும் வட்டத்தலைமையிட மருத்துவமனைகளல்லாத மருத்துவமனைகளிலும் சித்த மருத்துவப் பிரிவுகள் 10-ஐ ஏற்படுத்த அரசு முடிவு செய்துள்ளது. இப்பணி அடுத்த திட்டக் காலத்தில் படிப்படியாக செயல்படுத்தப்படும்.

மருத்துவப்பட்ட மேற்படிப்பு (சித்த மருத்துவம்) மூன்றாண்டு காலப் படிப்பாகும். பட்ட மேற்படிப்பு வகுப்பு—இரண்டாவது தொகுதியினரின் பாடமுறை 1974, ஏப்ரல் திங்களிலிருந்து தொடங்கப்படும். சித்த வைத்திய முறையில் 10 மாணவர்களும், சித்தகுண பாடமுறையில் 10 மாணவர்களும் சேர்த்துக்கொள்ளப் படுவர். படிப்புக் காலத்தில், மாணவர் ஒருவருக்குத் திங்கள் ஒன்றுக்கு ரூ. 200 பயிற்சி உதவித் தொகை வழங்கப்படும்.

தற்போதுள்ள ஓராண்டு சித்த மருந்தியல் வல்லுநர் (Pharmacists) பயிற்சி வகுப்பை 2 ஆண்டு தகுதிப் பட்டயப் படிப்பாக அரசு அண்மையில் மாற்றியுள்ளது. இந்த வகுப்பு 1974, ஏப்ரல் திங்களில் தொடங்கப்படும். சென்னையிலும், யுனானி, ஆயுர்வேத மருத்துவமுறையில் பயிற்சியளிக்கப்படும் என்பதே இதன் முக்கிய அம்சமாகும். இதுதவிர, பாளையங்கோட்டையில் மட்டுமே இதுவரை நடத்தப்பட்டு வந்த சித்த மருந்தியல் வல்லுநர் பயிற்சி வகுப்பு, இனிமேல் சென்னையிலும் நடத்தப்படும். சென்னை மாநகரிலும், அதன் சுற்றுப்புறங்களிலுமுள்ள மாணவர்கள் இந்த வகுப்பில் சேர இது வாய்ப்பளிக்கும். பயிற்சி உதவித் தொகை திங்கள் ஒன்றுக்கு ரூ. 20-லிருந்து ரூ. 30 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.



1974 மார்ச் 18]

திருச்சிராப்பள்ளி, அரசினர் தலைமையிட மருத்துவமனையில் 16 படுக்கை வசதிகளுடன் கூடிய தனி சித்த மருத்துவக் கட்டிடம் ஒன்று புதிதாகக் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இது விரைவில் திறக்கப்படும். இக் கட்டிடத்தை மாவட்ட நலக்குழு நன்கொடையாக அளித்தது.

அரிதாகக் கிடைக்கும் மருந்து மூலிகைப் பொருட்களை அதிக அளவில் கிடைக்கச் செய்யும் பொருட்டும் அவற்றை புதிதாகவும் விரைவிலும் கிடைக்கச் செய்யும்பொருட்டும் சென்னை அறிஞர் அண்ணா அரசினர் இந்தியமுறை மருத்துவமனைக்கு எதிரில் ரூ. 2.33 லட்சம் செலவில் இந்த மூலிகைகளை பயிரிடுவதற்கு ஒரு பண்ணை அமைக்க அரசு முடிவு செய்துள்ளது. கன்னியாகுமரி மாவட்டம், அழகிய பாண்டியபுரத்திலுள்ள வீரபாய் ஒதுக்கக் காட்டில் மூலிகைப் பண்ணை ஒன்றை அமைப்பதற்காக வனத் துறையிடமிருந்து சுமார் 5 ஹெக்டேர் நிலத்தையும் அரசு எடுத்துக் கொண்டுள்ளது.

திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை அரசினர் இந்தியமுறை மருத்துவக் கல்லூரியுடன் இணைக்கப்பட்டுள்ள, 100 படுக்கைகளுடன் கூடிய தற்போதைய மருத்துவமனையில் மாணவர்களுக்கு நோய்ச் சிகிச்சைக்கான பயிற்சி அளிப்பதற்கும் வசதிகள் போதுமானவையாயில்லை. மேலும் ஆராய்ச்சிப் பணியை மேற்கொள்ளப்பட்ட மேற்படிப்பு மாணவர்களுக்குப் படுக்கைகள் ஒதுக்கப்பட வேண்டி உள்ளன. எனவே, படுக்கை களின் எண்ணிக்கையை 100-லிருந்து 200-ஆக உயர்த்த அரசு முடிவு செய்துள்ளது. படுக்கைகளின் எண்ணிக்கையை உயர்த்துவதாலும் ஆராய்ச்சிப் பணியை மேற்கொள்ளுவதாலும் பெருகிவரும் தேவையை நிறைவு செய்ய, பாளையங்கோட்டை, அரசினர் இந்தியமுறை மருத்துவக் கல்லூரியுடன் இணைக்கப் பட்டுள்ள மருந்து தயாரிக்கும் இடத்தில் இயந்திரங்களைக் கொண்டு மருந்து தயாரிக்கவும் அரசு முடிவு செய்துள்ளது.

1974-75-ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இந்திய மருத்துவ முறைக்காகவென்றே ரூ. 28.94 லட்சம் ஒதுக்கப் பட்டுள்ளது.

அறிவியல் முறையில் சித்த மருத்துவத்தை வளர்ச்சியடையச் செய்யும் குழு பல்வேறு சித்த மருத்துவர்களிடமிருந்து

ஏறக்குறைய 400 அரிய புத்தகங்களையும் 23 எழுத்துப் பிரதிகளையும் சேகரித்துள்ளது. கருணை மிகுந்த இந்திய மருத்துவ முறை மருததுவர்கள் சிலர் சில புத்தகங்களை அச்சிட்டு அரசுக்கு இலவசமாக 500 பிரதிகளை வழங்க முன்வந்துள்ளனர். அதுபோன்று, மறைந்த திரு. ஜி. டி. நாயுடு அவர்கள், மறைந்த திரு. T. V. சாம்பசிவம் பிள்ளை அவர்களின் பலபொருள் விளக்கப் பேரகராதியின் அச்சிட்டுக் கிடைக்காத பல பக்கங்களை இலவசமாக அச்சிட்டு வழங்க உறுதியளித்துள்ளார். இப்பணி நடந்தேறி வருகிறது. இந்தப் பேரகராதியின் பிற்பகுதி—கையெழுத்து ஏடுகளாகக் கிடைத்தன. அவை பெறப்பட்டு, அவற்றை செம்மைப்படுத்தி அச்சுக்குக் கொண்டு வருவதற்காக திருத்தமுடன் எழுதும் பணியை ஒரு சிறந்த சித்த மருத்துவ வல்லுநரிடம் அரசு ஒப்படைதுள்ளது.

இதுவரை சுமார் பி. ஐ. எம். (B.I.M. ) பட்டத்தை 151 பேர் பெற்றுள்ளனர். இவர்களில் நிறைய பேர் அரசும் உள்ளாட்சி மன்றங்களும் நடத்தும் மருத்துவ நிலையங்களில் அமர்த்தப் பட்டுள்ளனர்.

1973–74-ல் இந்திய முறை மருத்துவமனையில் 210 படுக்கைகள் உள்ளன. இந்த எண்ணிக்கை 1974–75-ல் 235 ஆக உயர்த்தப்படும்.

இம்மாநிலத்தில் தற்போது 370 சித்த மருந்தகங்கள், 102 ஆயுர்வேத மருந்தகங்கள், 15 யூனானி மருந்தகங்கள் செயல்பட்டு வருகின்றன.

## ஓமியோபதி.

இம்மாநிலத்தில் ஓமியோபதி மருத்துவ முறையை மேற்கொள்ள முன்னர் சட்டப் படிப்புக்கான ஏற்பளிப்பு வழங்கப் படவில்லை. அத்தகைய ஏற்பளிப்பு வழங்கப்படுவதற்காக, தமிழ் நாடு 1971 ஆம் ஆண்டு ஓமியோபதி மருத்துவ முறை—ஓமியோபதி மருத்துவர்கள் சட்டம் நிறைவேற்றப்பட்டது. இச்சட்டத்தின் விதித்துறைகளின் கீழ் அமைக்கப்பட்ட ஓமியோபதி மருத்துவக் குழு, ஓமியோபதி மருத்துவர்களைப் பதிவு செய்யும் பணியை மேற்கொண்டுள்ளது. இச்சட்டத்தின் 15 (b) பிரிவின் விதியின்படி 10 ஆண்டுகள் அல்லது 4 ஆண்டுகள் தொழில் புரிந்ததன் அடிப்படையில் ஓமியோபதி மருத்துவர்களாகப் பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் இச்சட்டத்தின் கீழ் 1974 மே 4 ஆம் நாள்வரை பதிவு செய்யப்படலாம் என்று அரசு தீர்மானித்துள்ளது. 1974 மே 4 ஆம் நாளுக்கு முன்னர் குறிப்பிட்ட காலத்தில் பதிவு செய்துகொள்வதற்காக குழுவுக்கு விண்ணப்பித்துக் கொள்வதற்கு இயலும் வகையில், தகுதியுள்ள விண்ணப்பதாரர்கள் முறையாக மருத்துவத் தொழிலை மேற்கொள்வதற்கான சான்றிதழ்களை வழங்குவதற்கு முதன்மை கவனம் அளிக்குமாறு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அனைவரும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.



மதுரை, ஓமியோபதி மருத்துவக் கல்லூரி, கும்பகோணம், டாக்டர் வி. ஆர். மூர்த்தி ஓமியோபதி மருத்துவக் கல்லூரி ஆகிய தனியார் ஓமியோபதி மருத்துவக் கல்லூரி இரண்டிற்கும் தமிழ் நாடு ஓமியோபதி குழு தற்காலிக ஏற்பளிப்பு வழங்கியுள்ளது.

சென்னையில் மருத்துவ மனையுடன் கூடிய அரசினர் ஓமியோபதி மருத்துவக் கல்லூரி ஒன்றைத் தொடங்குவதற்காக 1974–75 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 3 லட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

## இணைப்பு III.

(336ம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பை க் காண்க.]

## கோரிக்கை 47—பொதுச் சுகாதாரம், துப்புரவுப் பணி. நீர் வழங்கல் குறித்த மூலதனச் செலவு.

சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே :

" 482—பொதுச் சுகாதாரம், துப்புரவுப் பணி, நீர் வழங்கல் " குறித்த தலைப்பின்கீழ் ரூ. 1,71,85,100-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டுமென்று நான் முன்மொழிகிறேன்.

இக் கோரிக்கையில் கீழ்க்காணும் இனங்கள் அடங்கும் :—

| | ரூ. |
|---|---|
| (i) (c) நகர்ப்புற நீர் வழங்குத் திட்டங்கள் திட்டத்தில் சேராத வேலைகள். | 10,000 |
| (ii) (d) கிராமப் பகுதிகளுக்குக் குழாய் மூலம் நீர் வழங்கும் திட்டங்கள்—திட்டத்தில் சேராத வேலைகள். | 3,48,000 |

(iii) (e) ஏனைய திட்டங்கள்—

| | | |
|---|---|---|
| | | ரூ. |
| I. திட்டத்தில் சேராத வேலைகள் | .. .. | 84,60,100 |
| II. மாநிலத் திட்டம் .. | .. .. .. | 83,67,000 |
| மொத்தம்—பெருந் தலைப்பு | .. | 1,71,85,100 |

### இனம் (i) (c) நகர்ப்புற நீர் வழங்கு திட்டங்கள்.

I. திட்டத்தில் சேராத வேலை மாநகருக்கு நீர் வழங்குதலை அதிகப் படுத்தல்.—வீராணம் திட்டம் பெரியதோர் திட்டமாகும். சென்னை மாநகருக்கு வழங்கப்படும் நீரின் அளவை நாள் ஒன்றுக்கு 40 மில்லியன் காலனுக்கு உயர்த்தும் நோக்கமுடைய வீராணம் திட்டம் பெரியதோர் திட்டமாகும்.

வீராணம் திட்டத்தின் முதற்கட்டப் பணி, நிறைவேற்றப்படுவதற்காக 4-ஆவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் மேற்கொள்ளப்பட்டது. இப் பணி, 5-ஆவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதல் ஆண்டில் முடிவடையுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. திட்டத்தின் முதற் கட்டப் பணியை நிறைவேற்று வதன் மூலம், மாநகருக்கு வழங்கப்படும் நீரின் அளவு நாள் ஒன்றுக்கு 40 மில்லியன் காலன் கூடுதலாகும். 1981-ல் மக்கள் தொகை 26 இலட்சமாக இருக்கும் என்ற கணக்கின் அடிப்படையில் பார்த்தால நாள் ஒன்றுக்கு ஒருவருக்கு 40 காலன் நீர் வீட்டுப் பயனுக்குத் தேவைப்படு மென்ற கணக்கில் மாநகருக்கு நாள் ஒன்றுக்கு 175 மில்லியன் காலன் நீர் தேவைப்படுமென்று மதிப்பிடப்படுகிறது. வீராணம் திட்டத்தின் முதற்கட்டப் பணி முடிக்கப்பட்ட பிறகுங்கூட மாநகருக்கு நாள் ஒன்றுக்கு கிடைக்கும் என மதிப்பிடப்படும் நீரின் அளவு 100 மில்லியன் காலனேயாகும். எனவே, நாள் ஒன்றுக்கு 75 மில்லியன் காலன் நீர் மேலும் தேவைப்படும். ஆதலால் வீராணம் திட்டத்தின் இரண்டாவது கட்டப் பணியை மேற்கொள்ளக் கருதப்பட்டுள்ளது. இப் பணியை மேற் கொள்வதன் மூலம் மாநகருக்கு வழங்கப்படும் நீரின் அளவு நாள் ஒன்றுக்கு 40 மில்லியன் காலன் நீர் கூடுதலாகும். வீராணம் திட்டத்தின் முதற்கட்டப் பணிக்கு ஒப்புதல் அளிக்கையில், திட்ட ஆணைக்குழு, இத் திட்டத்தின் இரண்டாவதுகட்டப் பணி பின்னர் ஒரு நாள் குறித்து மேற்கொள்ளப்படலாமென்று கருத்துத் தெரிவித்துள்ளது. நீர் வறட்சி ஏற்பட்டபொழுது சென்னை மாநகருக்கான நீர்த் தேவையை நிறைவு செய்ய நிலத்தின் அடியிலுள்ள நீரைப் பயன்படுத்த சில பணிகள் மேற்கொள்ளப்பட்டன. எஞ்சியுள்ள பணிகளுக்காக 1974–75-ம் ஆண்டிற்கு ரூ. 10,000 நிதி ஒதுக்கக் கருதப்பட்டுள்ளது.

### இனம் (ii) (d) கிராமப் பகுதிகளுக்குக் குழாய் மூலம் நீர் வழங்கும் திட்டங்கள்.

I. திட்டத்தில் சேராத வேலைகள்.—கிராம மக்களுக்கு அடிப்படைத் தேவை பாதுகாக்கப்பட்ட குடிநீராகும். முக்கியமாகக் கிராமப் பணிகள் மானியத்தின்கீழ் இதற்காக ஒதுக்கப்படும் நிதியைக் கொண்டு கிராமப் பகுதிகளுக்கு நீர் வழங்க முற்படுகிறோம். நீர் வழங்கு பணிகளுக்காகும் செலவில் 75 சதவீதத்தை அரசு ஏற்கிறது. 25 சதவீதச் செலவு, பொது மக்கள் அல்லது உள்ளாட்சி மன்றங்கள் வழங்கும் உதவித் தொகையி லிருந்து நிறைவு செய்யப்படுகிறது. இத் திட்டத்தின்கீழ், சாதாரண கிணறுகள் வெட்டுதல், மேல் நிலைத் நீர்த்தொட்டிகள் கட்டுதல், குறிப்பிட்ட அளவுக்குக் குழாய்கள் மூலம் நீர் வழங்கல், குழாய்க் கிணறுகள், துளைக் கிணறுகள், ஊருணிகளை ஆழப்படுத்தல், தாமே இயங்கும் காற்றழுத்தத் தொட்டிகள் முதலியவை தொடர்பான பணிகள் ஆகியவை நிறைவேற்றப் படுகின்றன. நீர் வழங்கு பணிகள் குறித்து அரிசனங்கள் பின்தங்கிய வகுப்பினர் ஆகியோரிடமிருந்து பங்குத் தொகை எதும் வசூலிக்கப்படுவ தில்லை. ஆயினும், அரிசனக் குடியிருப்புகளுக்குக் குடிநீர் வழங்கும் பணிகளுக்காகும் செலவில் 85 சதவீதம் அரசினால் ஏற்கப்படுகிறது. எஞ்சிய 15 சதவீதம், அரிசன நல நிதியிலிருந்து ஈடுகட்டப்படுகிறது. ரூ. 50,000-க்கு மேற்பட்ட பணி எதனையும் கிராமப்பணிகள் மானியத்தின் கீழ் மேற்கொள்ளப்படலாகாது.



### இனம் (iii) (e) ஏனைய திட்டங்கள்—I. திட்டத்தில் சேராத வேலைகள் சென்னை மாநகரைச் சுற்றிலும் உள்ள பல்வேறு தொழிற்சாலைகளுக்குக் குடிநீர் வழங்கல்.

கடந்த சில ஆண்டுகளாகப் பருவமழை பொய்த்ததன் காரணமாகவும், சென்னை நகரைச் சுற்றிலும் தொழிற்சாலைகள் வளர்ந்து வருவதாலும், பல்வேறு தொழிற்சாலைகளுக்கு நீர்த்தேவை பெருகியுள்ளது. சென்னை மாநகருக்கான நீர்த் தேவையை நிறைவு செய்யக்கூட ஏரி களிலிருக்கும் நீர் போதுமானதாக இல்லை. எனவே, பல்வேறு தொழிற் சாலைகளுக்கு வழங்கப்படும் நீரைப் பெருக்க நிலத்திற்கு அடியிலுள்ள நீரை எடுப்பது பற்றி பரிசீலிக்கப்பட்டது. மணலியைச் சுற்றியுள்ள தொழிற்சாலைகளுக்கு நீர் வழங்குவது குறித்த செலவிற்காக 1974-75-ல் ரூ. 84·60 இலட்சம் நிதி ஒதுக்கக் கருதப்பட்டுள்ளது.

### ஆவடி, பாதுகாப்புத் தொழிற்சாலைத் திட்டத்திற்கு நீர் வழங்கல்.

ஆவடியில் உள்ள பாதுகாப்புத் தொழிற்சாலைத் திட்டத்திற்கு ரூ. 58·94 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் குடிநீர் வழங்கும் திட்டம் ஒன்றுக்கு அனுமதி வழங்கப்பட்டது. அனுமதி வழங்கப்பட்ட இத் திட்டம் நிறைவேற்றி முடிக்கப்பட்டுள்ளது; 1965 ஏப்ரல் முதல் நீர் வழங்கப் படுகிறது. இத் திட்டம் தமிழ்நாடு குடிநீர் வழங்கல்-வடிகால் வாரியத்தால் பராமரிக்கப்பட்டு வரப்படுகிறது. இதற்குப் புழலேரியிலிருந்து நீர் வழங்கப் படுகிறது. தற்போது நாளொன்றுக்கு 3·00 மில்லியன் காலன் நீர் வழங்கவும் ஏரியிலிருந்து நீர் இறைக்கும் நேரத்தை 16 முதல் 24 மணியாக உயர்த்துவதன் மூலம் நாளொன்றுக்கு 4·5 மில்லியன் காலனாகப் பெருக்கும் நோக்கத்துடன் இத் திட்டம் தயாரிக்கப்பட்டது. அப்பொழுதுமுதல் தொழிற்சாலைகள் கேட்டு வரும் தண்ணீர் தேவை பெருகிக்கொண்டே வருகிறது. புழலேரியிலிருந்து நாளொன்றுக்கு 6 மில்லியன் காலன் நீரைப் பெருவதற்காகத் தொடக்க இடப் பணிகளை

மேம்படுத்தும் செயற்குறிப்பு வகுக்கப்பட்டுள்ளது. புழலேரியில் நீர் வற்றி விட்டால், நிலநீர் இயக்குநர் அலுவலகத்திடம் தற்போதுள்ள குழாய்க் கிணறுகளைப் பயன்படுத்திக் கொள்வதோடு துணைக் கிணறுகளும் அமைத்து அவற்றின் மூலமும் இவற்றிற்கு நீர் வழங்கப்படும்.

II. மாநிலத் திட்டம்.—தூத்துக்குடியிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் உள்ள தொழிற்சாலைத் தொகுதிகளுக்கு நீர் வழங்கல்.

தூத்துக்குடி தொழிற்சாலைத் தொகுதிக்கு நாளொன்றுக்கு 20 மில்லியன் காலன் நீர் வழங்கும் திட்டத்திற்கு ஏற்பளிக்கப்பட்டது. இத் திட்டத்தில், ரூ. 470 இலட்சம் செலவில் குழாய்கள் அமைப்பதும் ஆண்டு தோறும் ரூ. 19·00 இலட்சம் செலவில் அவற்றைப் பராமரிப்பதும் அடங்கும். தாமிரபரணி ஆற்றிலிருந்து நீர் பெறும் பேய்க்குளம் ஏரியிலிருந்து தூய்மைப்படுத்தப்படாத நீர் பெறப்படுகிறது. தூத்துக்குடி துறைமுகத்திற்கும், அங்குள்ள தொழிற்சாலைகளுக்கும் பயன்படுவதற்காக தாமிரபரணி ஆற்றிலிருந்து நாளொன்றுக்கு மொத்தம் 13 மில்லியன் காலன் நீர் இறைக்கப்பட வேண்டும். இது இரண்டு நிலைகளில் செயல்படுத்தப்பட வேண்டும். முதல் நிலையாக ஸ்ரீவைகுண்டம் அணைக்கட்டிற்குக் கீழ்ப் பகுதியில் தாமிரபரணி ஆற்றின் மேல் பகுதியிலிருந்து நாளொன்றுக்கு 3 மில்லியன் காலன் நீரை இறைக்க வேண்டும். இரண்டாவதாக ஸ்ரீவைகுண்டம் அணைக்கட்டிற்கு மேல் பகுதியில் நாளொன்றுக்கு 10 மில்லியன் காலன் நீரை இறைக்க வேண்டும். இத் திட்டத்தில் முதல் கட்டப் பணி முடிவடைந்துள்ளது. இரண்டாம் கட்டப் பணியைப் பொறுத்த வரை, தமிழ்நாடு குடிநீர் வழங்கு-வடிகால் வாரியத் தலைமைப் பொறியாளர் ஆய்வுப் பணியை மேற்கொண்ட பின்னர், அப் பகுதியில் உரத் தொழிற்சாலை ஒன்றும், PVC தொழிற்சாலை ஒன்றும் அமைக்கப்பட்டு வரும் நிலையில் நாளொன்றுக்குக் 10 மில்லியன் காலன் நீர் போதுமானதாக இருக்காது என்று உணரப்பட்டது. எனவே, தூத்துக்குடித் தொழிற்சாலைத் தொகுதிக்கு நாளொன்றுக்கு 20 மில்லியன் காலன் நீர் வழங்குவதற்காக புதிய ஆய்வு ஒன்று மேற்கொள்ளப்படுவது அவசியம் என்று கருதப்பட்டது. ஆய்வுப் பணி தற்போது முடிவடைநதுள்ளது.

ஸ்ரீவைகுண்டம் அணைக்கட்டின் வடக்கு, தெற்கு தலைக் கால்வாய்களுக்கு, மருதூர் அணைக்கட்டின் கிழக்கல், மேலக்கல் கால்வாய்களுக்கும் சிமெண்ட் கரை அமைத்து தாமிரபரணி பாசன ஏற்பாட்டு அமைப்பிலிருந்து நீரை வீணாகாது சேமிப்பதன் மூலம் ஆறுமுகமங்கலம் ஏரியிலிருந்து தேவையான நீரைப் பெறுவதற்கும் இத் திட்டம் வகை செய்கிறது.

## தமிழ் நாடு சட்டப் பேரவை.

### செவ்வாய்க்கிழமை, 1974, மார்ச் 19.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர், புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்—விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

*Classification of Government Employees.*

*491 *Q.*—THIRU N. K. PALANISAMY:
THIRU P. SOUNDARAPANDIAN: } Will the Hon. the Chief Minister be pleased to state —

(*a*) whether there is any proposal under the consideration of the Government to re-classify the grades of the Government employees on the basis of the scales of pay ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) & (இ) அதிகாரிகளை வகுப்பு I அதிகாரிகள், வகுப்பு II அதிகாரிகள் என்று வகைப்படுத்தும் செயற்குறிப்பு ஒன்றை அரசு பரிசீலித்தது. அரசிதழ் பதிவு அதிகாரிகளுக்கும், அரசிதழ் பதிவிலா அதிகாரிகளுக்கும் இடையிலான வேறுபாட்டை அகற்றுவதினால் கிடைக்கும் அனுகூலங்கள் அதிகமில்லை என்பதால் அரசு இந்தச் செயற்குறிப்பைக் கைவிட்டுள்ளது.

திரு. என். கே. பழனிசாமி: தலைவர் அவர்களே, மத்திய அரசு ஊழியர்களில் முதல் கிரேடு, இரண்டாவது கிரேடு என்று இப்படி இருப்பதன் காரணமாக, அவர்கள் விலைவாசி ஏற்றத்திற்குத் தகுந்த மாதிரி பஞ்சப்படி கொடுக்கின்றார்கள். ஆனால், இங்கே அம்மாதிரி இல்லாமல், "ஃப்ளாட் ரேட்"டாகக் கொடுக்கப்படுகிறது. ஆகவே, இந்த வித்தியாசத்தைப் போக்க, முதல் கிரேடு, இரண்டாவது கிரேடு என்று பிரித்து, விலைவாசி ஏற்றத்திற்குத் தகுந்த மாதிரி பஞ்சப் படியை உயர்த்திக் கொடுக்க சர்க்கார் ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அப்படிப் பிரிக்கப்படுவதால் குறைந்த சம்பளம் வாங்குகிறவர்கள் அதிகமான பஞ்சப் படியைப் பெறுமல் போவதற்குத்தான் வழி ஏற்படும் என்று அரசு கருதுகின்றது. இப்பொழுது நாம் ஒரே விகிதமாக இந்த அக விலைப் படியைக் கொடுப்பதற்குரிய காரணம் என்ன என்று பல முறை இந்த மன்றத்தில் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. மாநில நிதி ஆதாரங்களைப்

பொறுத்து அதிகச் சம்பளம் வாங்குகிறவர்களுக்கு அதிக அகவிலைப் படியும், குறைந்த சம்பளம் வாங்குகிறவர்களுக்குக் குறைந்த அகவிலைப் படியும் என்ற நிலைமை இல்லாமல், நாம் இதிலே சோஷலிசக் கண்ணோட்டத்துடன்தான் இந்தக் காரியத்தைச் செய்து வருகிறோம்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, தற்போதுள்ள பதவித் தரங்கள் எப்பொழுது நிர்ணயிக்கப்பட்டன ? நாம் அடிப்படைச் சம்பளத்தை அடிக்கடி உயர்த்திக்கொண்டிருக்கிறோம். மத்திய அரசும் உயர்த்திக் கொண்டே இருக்கிறது. ஆகவே, காலத்திற்கேற்ப நம்முடைய பதவித் தரத்தையும் உயர்த்துவது குறித்து அரசு மறு பரிசீலனை செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : காலத்திற்கேற்ப இந்த மாறுதல் தேவைப்படுகிறது என்றாலும், நம்முடைய கருவூலத்தின் நிலைமைக்கேற்ப தடைகளும் ஏற்படுகின்றன.

திரு. ஏ. சுப்பிரமணியம் : தலைவர் அவர்களே, அரசு அதிகாரிகளை ஓரிடம் விட்டு இன்னோரிடத்திற்கு மாற்றம் செய்யும்போது, அவர்களுக்குரிய எல்.பி.சி. அனுப்பாத காரணத்தால் மாதக் கணக்கில் ஊதியம் கிடைக்காமல் போகிறது. அதேபோல், பயணப் படியையும் அவர்கள் கையிலிருந்து செலவு செய்கிறார்கள், உரிய காலத்தில் பயணப் படியைப் பெற முடியாமல் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, "ட்ரான்ஸ்ஃபர் ஆர்டர்" உடன் எல்.பி.சி.ஐயும் அனுப்ப வேண்டும் என்றும், பயணப்படி பில்களை பைசல் செய்தாக வேண்டும் என்றும் அரசு நிர்ணயம் செய்யுமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக் கேள்வியிலிருந்து துணைக் கேள்வி வேறாக இருக்கிறது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மூலக் கேள்விக்குத் தொடர்பில்லாத ஒரு தனி நிலையை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துக் கூறுகிறார்கள். அதுபற்றிய விவரங்கள் எழுதி அனுப்பப்படுமானால், கவனிப்பதற்கு ஏதுவாக இருக்கும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, சில உயர்ந்த அதிகாரிகளை ஸ்பெஷல் கிரேடாகப் போட்டிருக்கிறார்கள். மற்ற அதிகாரிகள் தனி கிரேடில் இருக்கிறார்கள். இதற்கு என்ன என்ன தகுதிச் சான்றுகள் என்பதை அமைச்சரவர்கள் தெரிவிப்பார்களா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : ஸ்பெஷல் கிரேடு, மற்ற கிரேடு பற்றிய பிரச்சினை இல்லை. அரசு அதிகாரிகளில் இப்பொழுது கெஜடெட், நான்-கெஜடெட் என்று இருப்பதை, 1, 2, 3, 4, என்ற வகையிலே பிரிக்கலாமா என்பதைப்பற்றியது கேள்வி. தனிக் கேள்விப் போட்டால், மாண்புமிகு உறுப்பினர் கேட்டதற்குப் பதில் அளிக்கலாம்.





திரு. கே. டி. கே. தங்கமணி : சர்க்கார் ஊழியர்கள் பூராவுக்கும் ஒரே மாதிரி பஞ்சப்படி உயர்வு கொடுக்கப்படுகிறது என்று சொன்னார்கள். அப்படியானால், மத்திய அரசு பஞ்சப் படி உயர்வு கொடுக்கின்ற அதே நேரத்தில் மாநில அரசு ஊழியர்களுக்கும் கொடுக்கப்படுமா ? அப்படிக் கொடுத்தால் நிதிக் கமிஷனிலிருந்து நமக்கு ஒருவிதமான ப்ரொவிஷன் இருக்குமே. கால தாமதம் செய்வதால் நமது சர்க்காரே கொடுக்க வேண்டிய நிலை இருக்கிறதா ? ஆகவே, ஒரே நேரத்தில் பஞ்சப் படி உயர்வு கொடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : ஒரு முறை கொஞ்சம் காலம் தாழ்த்திக் கொடுத்தோம். நிதிக் கமிஷனுக்கு முறையீடு செய்தோம். அதற்கும் ஒரே பதில்தான். உடனடியாகக் கொடுத்தோம். நிதிக் கமிஷனுக்கு முறையீடு செய்தோம். அதற்கும் ஒரேவிதமான பதில்தான். அவைகளையெல்லாம் அரசு பல முறை விவாதித்திருப்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் அறிவார்கள் என்று கருதுகிறேன்.

திரு. வெ. ந. முத்தமிழ்ச்செல்வன் : அவைத் தலைவர் அவர்களே, மாநில அரசு, மத்திய அரசு ஆகியவற்றிலுள்ள பதவித் தரங்களை ஒரே சீராக ஆக்குவதற்குத் தனி முயற்சி ஏதேனும் எடுக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அது மத்திய அரசின் கையில் இருக்கிறது.

திரு. கே. எ. வகாப் : மத்திய அரசு தன்னுடைய ஊழியர்களுக்குச் சம்பள விகிதங்களை நிர்ணயிக்கும்போது அதே அளவில் வேண்டுமென்று மாநில அரசு ஊழியர்களும் கேட்கிறார்கள். ஆகவே, மத்திய அரசு ஊழியர்களுக்குச் சம்பள உயர்வு அளிப்பது குறித்து மறுபரிசீலனை செய்யும்போது, மாநில அரசுகளையும் கலந்துக்கொண்டு செய்யவேண்டுமென்ற யோசனையைத் தமிழக அரசு கூறியிருக்கிறதா ? அப்படியில்லையென்றால், இனிமேலாவது கூறுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாநில அரசைக் கலந்துக் கொண்டு இதைச் செய்ய வேண்டுமென்ற இந்தக் கருத்தைக் ஒவ்வொரு தேசிய அபிவிருத்திக் கவுன்சில் கூட்டத்திலும் அரசின் சார்பாக வலியுறுத்தப்பட்டு வருகிறது. அப்படிக் கலந்து கொண்டு செய்ய வேண்டும் என்பது மத்திய அரசினுடைய ஊழியர்களின் சம்பளத்தைக் குறைக்க வேண்டும் என்ற அடிப்படையில் அல்ல. மாநில அரசினுடைய நிதி ஆதாரங்களுக்கு ஏற்றவாறு மாநில அரசு ஊழியர்களுக்கும் பயன்கள் கிடைக்க வேண்டும் என்ற வகையில்தான் மாநில அரசையும் கலந்துக் கொண்டு செய்ய வேண்டும் என்ற கருத்து, தேசிய அபிவிருத்திக் கவுன்சில் கூட்டங்களிலும், திட்டக் குழுவினிடமும், நிதிக் குழுவினிடமும் பேசுகிற ஒவ்வொரு முறையும் வலியுறுத்தப்பட்டு வந்திருக்கிறது.

திரு. எம். முத்தையா : தலைவர் அவர்களே, அரசு ஊழியர்கள் இத்தனை வயது வரை வேலை பார்க்கலாம் என்று வயது வரம்பு அவர்களுக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அப்படி நிர்ணயிக்கப்பட்டதிலிருந்து ஓய்வு பெறும் வயதை ஐந்து வருஷம் குறைத்தால் வேலை வாய்ப்பு இல்லாத இளைஞர்களுக்கு வேலை கிடைக்க வசதியாக இருக்கும் அல்லவா ? இதை அரசு பரிசீலிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இந்த வயது வரையறையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதிகக் கவனம் செலுத்திவருகிறார். அதுபற்றி அரசு ஆலோசிக்கும்.

திரு. என். கே. பழனிசாமி : சர்க்கார் பரிசீலனை செய்யும்போது அதிக வித்தியாசம் இல்லை என்று சொன்னார்கள். எந்த அளவு வித்தியாசம் இல்லை என்று கனம் முதல் அமைச்சர் அவர்கள் சொல்லுவார்களா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அதை அவ்வளவு விவரமாக இப்பொழுது சொல்வதற்கில்லை. அதிக அளவுக்குப் பயன் தருவதாக இல்லை என்றுதான் சொன்னேன். அதனால், வித்தியாசமே இல்லை என்று அர்த்தம் ஆகாது என்பதுதான் என்னுடைய பதிலுக்குப் பொருள்.

திரு. ஜே. ஜேம்ஸ் : மத்திய அரசு ஊழியர்களுக்கும் மாநில அரசு ஊழியர்களுக்கும் சம்பள விகிதத்தில் வித்தியாசம் இருக்கிறது. இந்த வித்தியாசத்தைப் போக்குகின்ற முறையிலும் தேசிய ஒருமைப்பாட்டை ஊக்குவிக்கும் முறையிலும், மத்திய அரசு ஊழியர்களும் மாநில அரசு ஊழியர்களும் ஒரே மத்திய அரசு ஊழியர்களாகக் கருதப்பட்டு, மத்திய அரசே அவர்களுக்கு ஊதியம் வழங்கும் பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று இந்த அரசு சிபார்சு செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நாம் உதவிகளை எதிர்பார்த்து உரிமைகளை அடகு வைத்துவிடக் கூடாது.

## அரசுப் பணியாளர் குடியிருப்புகளுக்கான வாடகை

*492 வினா—திரு. அ. தேவேந்திரன் : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசுப் பணியாளர்களுக்கு ஒதுக்கப்படும் குடியிருப்புகளுக்கான வாடகை விதிப்பு முறையை மாற்றி அமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் ஆய்விலுள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : ஆம்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, அரசுப் பணியாளர்களிடமிருந்து தற்போது வீட்டுக்குரிய வாடகையை வசூலிக்கும் நேரத்தில் எந்த அடிப்படையில் கணக்கிடப்படுகிறது ? தற்போது எவ்வளவு ரூபாய் வசூலிக்கப்படுகிறது என்பதை அறியலாமா ?



மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அவர்களுடைய அடிப்படைச் சம்பளத்தில் பத்து சத வீதம் வீட்டு வாடகையாக வசூலிக்கும் நிலைமை இருந்தது. இரண்டாவது சம்பளக் கமிஷன் பரிந்துரையின் மீது சம்பள உயர்வுக்குப் பிறகும் அதே பத்து சதவீத அடிப்படையிலே அந்த வீட்டு வாடகை வசூலிப்பது என்ற நிலை ஏற்பட்டது. அதற்குப் பிறகு, அவர்கள் கொடுத்திருக்கும் சில முறையீடுகளின் அடிப்படையில் அரசு இவைகளைச் சீரமைப்பு செய்வதற்கு இயலுமா என்பதைப்பற்றி யோசித்து வருகிறது.

## கன்னிமாரா நூல் நிலையம்.

*493 வினா—திரு. ஜி. ராமசாமி : மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கன்னிமாரா நூல் நிலையத்தில் வேலை நேரத்தை அதிகப்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

திரு. ஜி. ராமசாமி : தலைவர் அவர்களே, நூலகங்கள் பொதுவாக காலை 8 மணியிலிருந்து இரவு எட்டு மணி வரைக்கும் திறந்திருக்கிறன. ஆனால், கன்னிமாரா நூலகம் அம்மாதிரி இல்லை. உத்தியோகஸ்தர்களும் மற்றவர்களும் அங்கு போய்ப் பயனுறுவதற்கான வசதி ஏற்படுகிற வகையில் அந்த நூலகத்தின் வேலை நேரத்தை மாற்றியமைக்க முடியுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, காலை 8 மணியிலிருந்து மாலை 5-30 வரை கன்னிமாரா நூலகம் இயங்கி வருகிறது. இதனுடைய நேரத்தை இன்னும் கூட்ட வேண்டுமென்றால் கூடுதலான ஊழியர்களைப் போடவேண்டும். இப்போதே புதிய கட்டடம் ஒன்று கட்டி பொது மக்களுக்குப் பயன்படும் வகையில் திறந்துவைக்கப்பட்டிருக்கிறது. போதுமான அளவுக்கு நிதி நிலை இடம் கொடுக்காததால், அதற்கே போதுமான ஊழியர்கள் நியமிக்கப்படவில்லை. சென்னையில் பல்வேறு நூலகங்கள் இயங்கிவருவதால், பல்வேறு நேரங்களில் அவை இயங்கினால் பொதுமக்களுக்குப் பயன்படுவதற்கு வாய்ப்பாக இருக்கும் என்ற காரணத்தினால், கன்னிமரா நூலகம் காலை 8 மணியிலிருந்து மாலை 5-30 வரையில் இயங்கும் வகையில் அமைக்கப்பட்டிருக்கிறது.

திரு. கே. என். குமாரசாமி : தலைவர் அவர்களே, பகலில் வேலை பார்த்துவிட்டுவந்து படிக்கிறவர்களுக்கும், மாணவர்கள் கல்வி நிலையங்கள் விட்டு வந்து படிக்கிறவர்களுக்கும் ஏற்ற விதத்தில் இந்நூலகத்தின் நேரம் அமையவில்லை. ஆகவே, இரவு 8-30 வரையில் இந்நூலகம் இயங்கும் வண்ணம் நேரத்தை மாற்றியமைப்பதற்கு அரசு முயற்சி செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: நேரத்தை வேண்டுமென்றால் பிரித்து அமைக்கலாம். ஆனால், அப்படிப்பட்ட முறையீடு எதும் வரவில்லை. இதையும் நீட்டிக்க வேண்டுமென்றால், கூடுதலான ஊழியர்களை நியமிக்க வேண்டிவருகிறது. கூடுதலான ஊழியர்களை நியமிப்பதற்கு நிதி நிலை இடம் தரவில்லை. சென்னையில் உள்ள பல்வேறு நூலகங்கள் இரவு எட்டரை மணி வரையிலும் இயங்குகின்றன. மாவட்ட மைய நூலகம் போன்றவை அவ்வாறு இயங்குவதால் அவற்றைப் பயன்படுத்துவதற்கும் நாள் முழுவதும் பயன்படுத்துவதற்கு இந்த நூலகம் பயன்படும் என்ற முறையில் நேரங்களில் மாற்றங்கள் காணப்படுகின்றன.

திரு. கு. காமாட்சி: தலைவரவர்களே, படிப்பதற்கு அமைதியான நேரம் இரவு நேரம் தான். பேரறிஞர் அண்ணா போன்றவர்கள் இரவு நேரத்தைத்தான் படிப்பதற்குப் பயன்படுத்திக்கொண்டு 1 மணி, 2 மணி; 3 மணி வரை கூட படித்துக்கொண்டிருந்தார்கள். ஆகவே, இரவு நேரத்தில் ஒரு நேரத்தை ஒதுக்கி அங்கே ஏற்பாடு செய்யப்படுமா, ஷிப்டு முறையிலாவது செய்யப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, எல்லோருமே அறிஞர் அண்ணா போன்று இருக்க முடியாது. எல்லோரும் அந்த மாதிரி நேரத்தை வைத்துக்கொள்ள முடியாது. நேரம் ஒதுக்கிக் கொடுத்து விடுவதாலேயே எல்லோரும் அறிஞர் அண்ணா மாதிரி ஆகிவிடமாட்டார்கள். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு இயல்பு இருக்கும். இங்கேயிருக்கிற பல்வேறு நூல் நிலையங்கள், பல்வேறு நேரங்களில் இயங்குவதால் எல்லோருக்கும் எல்லா நேரங்களிலும் பயன்படுகிற மாதிரி அமைந்து இருக்கிறது.

THIRU K. S. KOTHANDARAMIAH: Sir, the Connemara Library is one of the best libraries; it is not only an ordinary library, but it is a reference library also; so many people go there after office hours, after 5 O'clock and after the Legislature is over, Members also go there, but the time there is very little and reference work is difficult to do. Therefore, time has to be extended in view of the importance to people of this library. The light arrangement there is not good and we are not able to take copies. Further, the staff there is also not adequate. Because I am a member there, I know the position. A lot of books are heaped up and it is very difficult to sort them out. Therefore, will the Hon. Minister for Education and Tourism be pleased to make a special investigation of all these matters and set right the defects.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, நான் முதலிலேயே குறிப்பிட்டேன். போதுமான ஊழியர்கள் இல்லை. ஊழியர்களைக் கூடுதல் செய்ய வேண்டுமானால் நிதிநிலை இடம் தரவில்லை. ஊழியர்களைக் கூடுதலாகப் போட வேண்டுமென்ற கொள்கை இருக்கிறது. 8 மணி முதல் $5\frac{1}{2}$ மணி வரையில், $9\frac{1}{2}$ மணி நேரம் அந்த நூலகம் மக்களுக்குப் பயன்படுகிறது. மக்களிடமிருந்து முறையீடு வருமானால், அந்த நேரத்தைப் பிரித்து ஒரு குறிப்பிட்ட நேரம் காலையிலும், பிறகு மாலை 5 மணிக்குப் பிறகு ஒரு குறிப்பிட்ட நேரமும் என்ற வகையில் செய்வதற்கு ஆலோசிக்கலாம், அதுபற்றி முறையீடு வந்தால்தான் அது பற்றி பரிசீலிக்கலாம்.





திரு. வை. பாலசுந்தரம்: தலைவரவர்களே, இந்த நூல் நிலையத்திற்கு வசதி படைத்தவர்கள் மட்டுமே சென்று புத்தகம் வாங்கிப் படிக்கும் நிலை இருக்கிறது. ஆக, வசதி இல்லாதவர்கள் சென்று படிக்கும் நிலையை உருவாக்க இந்த கன்னிமரா நூல் நிலையத்தை சென்னையின் மையப் பகுதியில் அமைத்தால் நலமாக இருக்கும் என்று கருதப்படுகிறதே, இதற்கு அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, இந்த நூலகம் கூடுமான வரையில் சென்னையின் மையப் பகுதியில்தான் இருக்கிறது. வசதி படைத்தவர்கள் தான் செல்ல முடியும், மற்றவர்கள் செல்ல முடியாது என்பதல்ல. அங்கேயிருந்து புத்தகங்கள் எடுத்துச் செல்ல விரும்புகிறவர்களிடமிருந்து எச்சரிக்கை டிபாசிட்டாக ரூ. 5 அல்லது ரூ. 10*-ம் வசூலிக்கிறார்கள். அதுவும் திருப்பி வாங்கிக் கொள்ளக்கூடிய தொகை தான். அந்த நூலகத்தை எல்லோரும் போய்ப் பயன்படுத்திக் கொள்ளலாம். கன்னிமாரா லைப்ரரி இருக்கும் கட்டடத்தைப் போல் இன்னொரு கட்டடம் கிடைப்பது என்பது அரிது. அந்தக் கட்டடம் இருக்கிற இடம், சென்னை நகரத்தின் விரிவான பகுதியைப் பார்க்கிறபோது, நகரின் மைய இடமாகத்தான் கருதவேண்டும்.

## திருப்பூர் ஒன்றியப் பள்ளிகளில் அறிவியல் ஆய்வுக் கூடங்கள்.

* 494 வினா—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு கல்வி—சுற்றுலாத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட மங்கலம், அய்யங்காளிபாளையம், விஜயபுரம், பெருமாநல்லூர் ஆகிய இடங்களில் உள்ள உயர்நிலைப் பள்ளிகளில் விஞ்ஞான ஆய்வுக்கூடங்கள் உள்ளனவா?

(இ) இல்லை எனில், காரணம் என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) திருப்பூர் ஊராட்சி ஒன்றியத்தில் மங்கலம் அரசு (கழக) உயர்நிலைப் பள்ளியில் மட்டும் அறிவியல் ஆய்வுக்கூடம் உள்ளது.

---

* 528-ம் பக்கத்திலுள்ள மாண்புமிகு அமைச்சரின் திருத்த அறிக்கையைக் காண்க.

[1974 மார்ச் 19

(இ) ஒவ்வோராண்டும் அறிவியல் ஆய்வுக்கூட மானியம் வழங்குகையில், மாணவர் எண்ணிக்கை அதிகமாக உள்ள பள்ளிகளுக்கே முன்னுரிமை வழங்கப்படுகிறது. அய்யங்காளிபாளையம், விஜயபுரம், பெருமாநல்லூர் ஆகிய ஊர்களில் உள்ள அரசு (கழக) உயர்நிலைப் பள்ளிகளில் மாணவர் எண்ணிக்கை மிகக் குறைவாக உள்ளதால் அப்பள்ளிகளுக்கு இதுவரை அம்மானியம் வழங்கப்படவில்லை.

திரு. சு. துரைசாமி : பேரவைத் தலைவரவர்களே, விஞ்ஞானக் கூடங்கள் இல்லாததன் காரணமாக சுற்று வட்டாரத்தில் இருக்கும் கிராம மக்கள் விஞ்ஞானக் கூடம் இருக்கும் நகரத்திற்கு வருகிறார்கள். ஆகவே, அந்தக் கல்வி நிலையங்களில் போதிய அளவுக்கு மாணவர்கள் சேரவில்லை. இப்படிப்பட்ட விஞ்ஞானக் கூடம் அமைக்கப்படுமானால், அங்கே மாணவர்களின் எண்ணிக்கை அதிகமாவதற்கு வசதி ஏற்படும். ஆகவே, அரசு அதை விரைவாகச் செய்ய முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, ஆண்டு ஒன்றுக்கு 40 அல்லது 50 விஞ்ஞானக்கூடம் அமைப்பதற்காக ரூ. 40,000 வழங்கப்படுகிறது. இதை ஒவ்வொரு கல்வி வட்டத்திலும் ஒவ்வொரு பள்ளிக்கூடம் என்ற அளவில் தேர்ந்து எடுத்து செய்கிறோம். 1,200, 1,000, 900 என்று மாணவர்கள் இருக்கும் பள்ளிகளில் விஞ்ஞானக் கூடங்கள் இல்லாத நிலையில் அவைகளுக்கு முன்னுரிமை வழங்கித்தர வேண்டியிருக்கிறது. இப்படிப்பட்ட பள்ளிகளுக்குப் பயன்படத் தக்க அளவிற்கு இயங்கும் ஆய்வுக் கூடம் ஒன்றை சென்ற ஆண்டு 14 மாவட்டங்களில வைக்கப்பட்டிருக்கின்றன. இந்த இயங்கும் ஆய்வுக் கூடங்கள் (மொபைல் லேபரடரிகள்) 15 உயர்நிலைப் பள்ளிகளுக்குப் பயன்படும் வகையில் இருக்கிறது.

### *New Course in Engineering Colleges.*

*495 Q.—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(*a*) whether it is a fact that a Committee has been constituted to examine the proposal to introduce sandwich course of study in Engineering Colleges in the State ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :

(அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.



1974 மார்ச் 19]

திரு. என். கே. பழனிசாமி : தலைவரவர்களே, லா காலேஜில் படிப்பவர்கள் வேறு வேலையில் இருந்து கொண்டு கூடப் படிக்கலாம். இன்ஜினீரிங் காலேஜில் படிப்பதற்கு வேறு வேலையிலிருந்து கொண்டு படிப்பதற்கு அனுமதிப்பதில் என்ன சங்கடம் இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதுமாதிரி "சாண்ட்விச் கோர்ஸ்" என்ற வகையில் ஒரு கமிட்டி அமைக்கப்படவில்லை. ஆனால் ஒரு கமிட்டி "போர்டு ஆப் ஸ்டடீஸ்" இன் இன்ஜினீரிங் ஆப் தி மதுரை யூனிவர்சிடி என்று அமைக்கப்பட்டு, டெக்ஸ்டைல் டெக்னாலஜியில் மட்டும் தியாகராஜா கல்லூரியில் ஏற்படுத்தலாமா என்று செயற் குறிப்பு அனுப்பியிருக்கிறார்கள்.

அந்தக் கருத்துரை மாநில நூற்பு ஆராய்ச்சிக் கழகத்தால் ஆராயப்பட்டு, மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது. அந்த முறை வருமானால் டெக்ஸ்டைல் டெக்னாலஜியில் பரிட்சார்த்தமாக ஏற்படுத்த வேண்டும். அதற்கே கிட்டத்தட்ட $2\frac{1}{2}$ லட்சம் செலவாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதிலே $37\frac{1}{2}$ சதவீதம் மத்திய அரசும், $37\frac{1}{2}$ சதவீதம் மாநில அரசும் மீதமுள்ள 25 சதவீதம் அந்த ஸ்தாபனமும் ஏற்க வேண்டுமென்ற அடிப்படையில் அது அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது.

### கோவை விளையாட்டு அரங்கம்.

*496 வினா— திரு சு. துரைசாமி : மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவையில் கட்டப்பட்டு வருகின்ற விளையாட்டு அரங்கத்தின் வேலைகள் எப்போது முடிவுபெறும் ?

(இ) அதன் செலவு எவ்வளவு ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) கோவையில் கட்டப்பட்டு வரும் விளையாட்டு அரங்கத்தின் வேலைகள் 1974 ஏப்ரலுக்குள் முடிவடையும்.

(இ) அரங்கத்திற்கான மொத்த மதிப்பீட்டுச் செலவுத்தொகை ரூ. 25 லட்சம். (ரூபாய் இருபத்தைந்து லட்சம் மட்டும்).

திரு. சு. துரைசாமி : பேரவைத் தலைவரவர்களே, மொத்தம் செலவழிக்கப்படுகிற அந்த 25 லட்சம் ரூபாயில் அரசாங்கம் கொடுத்த மானியம் எவ்வளவு ? அதைத் தவிர நகர மன்றத்திலிருந்து கொடுக்கப்பட்ட பணம் எவ்வளவு ? தனியாரிடமிருந்து வசூலிக்கப்பட்ட பணம் எவ்வளவு ? இந்த விளையாட்டு மைதானம் கட்டி முடிக்கப்பட்டால்,

கோவையில் நடக்கும் எல்லா விளையாட்டுப் போட்டிகளையும் அங்கேயே நடத்த வேண்டுமென்று அரசு கேட்டுக்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இந்த விளையாட்டு அரங்கம் கோவை மாவட்ட விளையாட்டுக் குழுவின் தலைவரின் கீழே இருக்கும். எல்லோரும் பயன்படுத்திக்கொள்கிற அளவுக்கு இந்த விளையாட்டு அரங்கம் அமையக்கூடும். அதற்கு உதவித் தொகையாக மாநில அரசாங்கத்திலிருந்து பங்கு ரூ 1 லட்சம். கோவை மாநகராட்சியின் பங்கு ரூ. 5 லட்சம் மற்ற துறைகளில் இருந்து வந்த விவரங்கள் தற்போது இல்லை. தனிக் கேள்வி போட்டால் விவரம் தரப்படும்.

## பழவேற்காடு ஏரியில் மீன் வளர்ப்பு.

*497 வினா— திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழவேற்காடு ஏரியில் மீன் வளர்ப்பதற்காக திட்டம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், தற்போது எந்த நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: (அ) & (இ): மீன் பிடிப்பை மேற்கொள்வதற்கு பழவேற்காடு ஏரியில் மீன் வளர்ப்பதற்காக மீனளத் துறை இயக்குநர் அனுப்பியுள்ள செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, பழவேற்காடு ஏரியில் மீன் வளர்ப்பதற்குரிய திட்டத்தின் அடிப்படை நோக்கமென்ன? அந்த ஏரியில் தண்ணீர் வற்றி விடுவதாக சொல்லப்படுகிறதே, அது உண்மையா ? அப்படியானால் இந்தத் திட்டம் கைவிடப்படுமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: இந்தப் பகுதி கயவாய் பகுதி (Estuary). இந்தப் பகுதியில்தான் நிறைய எரால் குஞ்சுகளை வளர்க்கலாம் என்று ஆராய்ச்சி மூலமாக அறிந்தோம். இந்த இடத்தில் எரால் மீன் மட்டுமல்லாமல், மடவை மீன் இனங்களையும் வளர்க்கலாம் என்று அரசாங்கம் திட்டமிட்டு இருக்கிறது.

திரு. கா. வேழவேந்தன்: தலைவரவர்களே, இந்த பழவேற்காடு ஏரி வட செங்கற்பட்டு மாவட்டத்தின் பெருவாரியான பகுதிகளுக்குப் பயன் தரும் வகையில் கடலோர கழிமுகப் பகுதிகளில் விரிந்து கிடக்கிறது. இது பல குப்பங்களில் வசிக்கும் மீனவர் வாழ்க்கைக்கு ஆதாரமுள்ள பகுதியாகும். ஆந்திர எல்லை வரையில் இது விரிந்து கிடக்கிறது. சமீபத்திலே பெரிய சிக்கல் ஏற்பட்டு மீன்கள் போதிய அளவுக்குக் கிடைக்காமல் அவர்கள் மிகவும் சிரமப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். இந்த ஏரியைச் சீரமைத்து, அவர்கள் வாழ்க்கைக்கு ஆதாரத்தைத் தரும் ஒரு நல்ல திட்டத்தை இயக்குநர் அவர்கள் அனுப்பியிருக்கிறார்கள். இயக்குநர் அவர்கள் அனுப்பியுள்ள பரிந்துரையை ஏற்று, அரசாங்கம் பரிசீலனை செய்து அதை நிறைவேற்ற முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: தலைவரவர்களே, இதிலே 3-ல் இரண்டு பங்கு ஆந்திர மாநிலத்தில் இருக்கிறது. ஒரு பங்கு செங்கற்பட்டு மாவட்டம் பழவேற்காட்டில் இருக்கிறது. குறிப்பாக இந்தத் திட்டம் செயல்படுவது என்பது அந்த ஏரியில் இல்லை. அந்த ஏரியிலிருந்து தண்ணீர் கடலில் போய் விழுகிற கயவாய்ப் பகுதியில்தான் இந்தத் திட்டத்தை செயல்படுத்த இடம் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது. இந்த இடத்தில் தான் எரால் குஞ்சுகளை செயற்கை முறையில் வளர்க்கலாம் என்று ஆராய்ச்சி மூலம் அறிவித்து இருக்கிறார்கள். இந்த இடத்தில் மடவை மீன்களையும் வளர்க்கலாம் என்றும் கூறுகிறார்கள். ஆகவே, மடவை, எரால் மீன்களை அங்கே வளர்த்து, நமது தேவையைப் பூர்த்தி செய்து கொள்ளும் நோக்கத்தோடு மத்திய அரசாங்கமும் இதற்கு ஒப்புதல் தந்து இருக்கிறது. ஆந்திர அரசோடு சேர்ந்து ஒரு முடிவு எடுத்து இருக்கிறார்கள். அந்த அடிப்படையில் தான் இந்தத் திட்டத்தை நிறைவேற்ற அரசு பரிசீலித்துக்கொண்டிருக்கிறது.

## ஆரம்பாக்கத்தில் பனிக்கட்டி தொழிற்சாலை

*498 வினா— திரு. கா. வேழவேந்தன்: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்மிடிப்பூண்டித் துணை வட்டம், ஆரம்பாக்கத்தில் மீன் குளிர் பதன நிலையம் (Ice Plant) நிறுவுவதில் ஏற்படும் தாமதத்திற்கான காரணங்கள் யாவை ?

(இ) இவ்வேலை எப்போது முடிவடையும் ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: (அ) 1971, ஆகஸ்டில் செங்கற்பட்டு மாவட்டம் ஆரம்பாக்கத்தில் ஒரு டன் கொள்ளளவு கொண்ட குளிர் சேமிப்புச் சாதனத்துடன் கூடிய இரண்டு டன் பனிக்கட்டி தயாரிப்புச் சாலை ஒன்றை நிறுவ அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. பனிக்கட்டி தயாரிப்புக்கான இயந்திரங்களை வழங்கி நிறுவுவதற்குரிய ஒப்பந்தப் புள்ளிகளை ஏற்பது, கட்டிடங்கள் கட்டுதல், துணைக்கிணறு தோண்டுதல் ஆகியவை தொடர்பான வரைப்படங்களுக்கும் மதிப்பீடுகளுக்கும் ஒப்புதல் வழங்குதல் ஆகியவை அரசின் தீவிர ஆய்விலுள்ளன.

(இ) இச்சாதனம் இயன்ற விரைவில் நிறுவப்படும்.

திரு. கா. வேழவேந்தன்: இதுவும் ஆந்திர எல்லையில் இருந்து ஏறக்குறைய 4 மைல் தூரத்தில் தான் இருக்கிறது. அங்கே பிடிக்கப்படுகின்ற மீன்கள் எல்லாம் குளிர் சேமிப்பு சாதனம் இல்லாததால் கெட்டுப்போய் விடுகின்றன. இதனால் மீனவர்கள் பெரிதும் சிரமப்படுகிறார்கள். இந்தத் திட்டம் 1971-ம் ஆண்டிலேயே துவங்கப்பட்ட திட்டம். ஆகவே, விரைவிலே இந்த ஆண்டு இறுதிக்குள்ளாவது இந்தத் திட்டத்தை முடிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

[1974 மார்ச் 19

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : மொத்தத்தில் ரூ. 73,140க்காக ஒரு செயற்குறிப்பை இயக்குநர் அவர்கள் அரசுக்கு அளித்திருக்கிறார்கள். நிதி இலாகா அதிலே குறிப்பாக பணியாளர்களுக்கு கட்டடம் கட்டுவது, விசை ஏற்றத்துக்கான அறை, துளைக் கிணறு அமைப்பது, எம். எஸ். தொட்டி கட்டுவது ஆகியவைகளையெல்லாம் ஏற்றுக் கொள்ளவில்லை. அது இல்லாமல் இந்த நிலையத்தை அங்கே வைப்பது சாத்தியமாக இல்லை. எனவே அதை மீண்டும் நிதி இலாகாவிற்கு இந்தத் துறை இந்தக் கோரிக்கையை அனுப்பியிருக்கிறது. அது நிதி இலாகாவின் பரிசீலனையில் இருக்கிறது.

### மாயூரம்-மணல்மேடு சாலை

*499 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம்-மணல்மேடு நெடுஞ்சாலையினை அகலப்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு ப. உ. சண்முகம் : இல்லை.

### மாயூரத்திலுள்ள ஆற்றுப்புறம்போக்கு நிலங்கள்

*500 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் நகரில் காவிரி ஆற்றின் இரு பக்கங்களிலும் ஆற்றுப் புறம் போக்குகளில் ஆக்கிரமித்திருப்போரை அப்புறப்படுத்த அரசு மேற் கொண்டிருக்கும் நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாயூரம் நகரில் காவிரி ஆற்றின் இரு பக்கங்களிலும் ஆற்றுப் புறம்போக்குகளில் ஆக்கிரமிப்பு செய்திருப்போரை அகற்றுவதற்காக மாயூரம் கிளை பிரிவின் உதவிப் பொறியாளர் ஆக்கிரமிப்பாளர்களுக்கு நோட்டீசுகள் கொடுத்து ஆக்கிரமிப்பு அகற்றும் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளார். அத்துடன் அவர்களிடமிருந்து அபராதத் தொகைகளை வசூலிக்கவும் நடவடிக்கை எடுத்துள்ளார்.

### *Reservation of production of sarees for Handlooms*

*501 *Q.*—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether this Government have received any communication from the Centre during 1973 on the enforcement of the ban on production of coloured cotton sarees by Powerlooms; and

(*b*) if so, the details of the same?



1974 மார்ச் 19]

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) & (ஆ) இந்திய அரசிடமிருந்து 1973-ம் ஆண்டில் தகவல் எதும் வரவில்லை. 11–4–1973ல் பம்பாயிலுள்ள துணி நூல் ஆணையரிடமிருந்து வந்த கடிதத்தில், வேஷ்டிகள், புடவைகள் டவல்கள், படுக்கை விரிப்புகள், துப்பட்டி உற்பத்தி செய்வதை கைத்தறிகளுக்கே ஒதுக்குவது என்பது, ஒரு விரிவான கொள்கையாகும் என்றும் அதனை அனைத்திந்திய கைத்தறி வாரியம் முதலில் ஆராய வேண்டும் என்றும் குறிப்பிட்டிருந்தது.

திரு. என். கே. பழனிசாமி : ஹாண்ட்லூம் போர்டு ஏற்றுக்கொள்ளக் கூடிய முறையிலே ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா? 1953-ம் வருஷத்திலேயே ஓர் தீர்மானம் போட்டோம். இப்போதும் நாம் தீர்மானம் போட்டோம். சந்தானம் கமிட்டியும் இதே அளவிலே சிபார்சு பண்ணியிருக்கிறது. ஆகவே, ஹாண்ட்லூம் போர்டு ஒத்துக்கொண்டால் தான் இம்மாதிரியான நடவடிக்கை என்று சொன்னால், சர்க்கார் மக்களை திரட்டி—20,000 தறிக்கு நூல் இல்லை கோவையில் என்று பத்திரிகையில் வந்திருக்கிறது—மத்திய சர்க்காரை நிர்ப்பந்திக்கக்கூடிய முறையில் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மாநில அரசு எடுத்திருக்கிற நடவடிக்கைகளை இந்த மன்றத்தில் நாம் விரிவாக விவாதித்திருக்கிறோம். மத்திய அரசாங்கத்தினிடமும் இதை வற்புறுத்தி சம்பந்தப்பட்ட அமைச்சரிடத்திலும், பிரதம அமைச்சரிடத்திலும் நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சிகளைப் பற்றி இங்கே விளக்கியிருக்கிறோம். ஆக, இந்தக் கொள்கையை மத்திய அரசு ஏற்றுக் கொள்கிறதா அல்லது மறுக்கிறதா என்பதை பொறுத்துத்தான் எதிர்கால நடவடிக்கை இருக்க முடியும்.

THIRU K. M. SUBRAMANIAM : Sir, since the fashion of dyed sarees are changing yielding place to printed sarees like nylon sarees, reservation of dyed sarees is not going to serve much purpose to-day under the present conditions. So, will this Government think of requesting the Central Government to ban the manufacture of cloth below 100 counts and above 45 inches so that substitutes for sarees cannot be made by them and the handloom business will not suffer consequently ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஒரு புதிய யோசனையாகச் சொல்கிறார்கள். இப்பொழுது கேட்கப்பட்டிருக்கிற கேள்வி ரிசர்வேஷனைப் பொறுத்தது. கைத்தறியில்தான் இந்த ரகம் உற்பத்தி செய்ய வேண்டும், வேஷ்டி, சேலை என்று நாம் சிபார்சு செய்திருக்கிறோம். ஆனால், மத்திய அரசு ஒரு உத்தரவு போட்டிருக்கிறது. அந்த உத்தரவின் அடிப்படையில் வேஷ்டி என்றால் கலர்டு பார்டர்ஸ் என்பதோடு ¼ இன்ச் அகலம் என்றும் போடப்பட்டிருக்கிறது. அதை அப்படியே அமுல் நடத்த முடியாத சூழ்நிலை இருப்பதை நாம் சுட்டிக்காட்டியிருக்கிறோம்.

திரு. கே. டி. கே. தங்கமணி : கரை வேஷ்டியும், கரைப் புடவையும் கைத்தறிக்கு ஒதுக்கப்பட வேண்டும் என்று இங்கே நாம் தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறோம். மத்திய அரசு சட்டத்திலும் இடம் இருக்கிறதே? அதைப் புறக்கணிக்கக் கூடிய முறையில் மில்கள் சாதாரணமான துணிகளைப் போட்டு அதைப் புடவையாக ஆக்குகிறார்கள். அதே மாதிரி கரை இல்லாமல் இருந்தாலும் கூட அதை வேஷ்டியாக ஆக்குகிறார்கள். அதைத் தடை செய்ய அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுக்க இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : சட்டத்திலே அப்படிச் செய்வதற்கு வழி வகை வைத்துவிட்டு தடுப்பது எப்படி என்பதை ஆராயச் சொல்வது வருந்தத்தக்கது என்று கருதுகிறேன். நான் இங்கே விளக்கமாகச் சொன்னேன். வேஷ்டி என்று போட்டிருந்தால் பிரச்சினை இருக்காது. வேஷ்டி என்று போட்டு கலர்டு பார்டர்ஸ் என்று போட்டு அது ¼ இன்ச் அகலம் என்றும் போட்டிருப்பதால்தான் தொல்லைகள் வருகின்றன. அது ஒன்று. இன்னொன்று மாநில அரசுதான் அதை அமல் நடத்த வேண்டும். ஒரு மாநிலத்தில் உற்பத்தி செய்து இன்னொரு மாநிலத்தில் விற்றால் அதைத் தடுக்க முடியாது. இப்படிப்பட்ட ஓட்டைகள் அந்த உத்தரவில் இருக்கின்றன. நம்முடைய மாநில அரசின் பரிந்துரை வேஷ்டி என்றால் வேஷ்டி சேலை என்றால் சேலை என்று தெளிவாக சொல்லப்பட்டிருக்கிறது. இவைகள் கைத்தறிக்கு மாத்திரம் என்று சொல்லியிருக்கிறோம். 4 விசைத் தறி என்றால் எக்ஸெம்ஷன் என்ற நிலை கூட கூடாது. நம்முடைய கொள்கையை மத்திய அரசு ஏற்றுக் கொண்டால் இந்தப் பிரச்சினை இருக்காது. நாம் இதற்காக ஒரு சட்டம் இயற்றுவதற்காக இந்தக் கூட்டத் தொடரிலேயே ஒரு சட்ட முன் வடிவை அறிமுகப்படுத்தியிருக்கிறோம்.

## மதுரை மாவட்டக் கூட்டுறவு நூற்பாலை

*502 வினா—திரு. கு. திருப்பதி : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மேலூரில் அமைந்திருக்கும் மதுரை மாவட்ட கூட்டுறவு நூற்பாலையை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் ஆய்வில் உள்ளதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இந்த நூற்பாலையில் தற்போது நிறுவப்பட்டிருக்கும் 12,420 நூற்கும் கதிர்களை 25,000க்கு அதிகரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

திரு. த. சோனையா : மேலூர் பகுதியிலே வேலையில்லா திண்டாட்டத்தினால் பல பேர் கஷ்டப்படுகிறார்கள். இந்த மில்லை அதிகமாக வேலை வாய்ப்பு கொடுக்கின்ற அளவுக்கு விஸ்தரிப்பதற்கான திட்டம் அரசாங்கத்தினிடம் இருக்கிறதா ?





மாண்புமிகு திரு. செ. மாதவன் : இருக்கிறது என்றுதான் இப்பொழுது சொன்னேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி : மேலூரில் இருக்கக்கூடிய கூட்டுறவு நூற்பு ஆலை மற்ற ஆலைகள் மாதிரி லாபத்தில் ஓடுகிறது. ஒரு காலத்தில் 12,000 ஊசிகளைக் கொண்டிருந்த யூனிட் இப்பொழுது கிட்டத்தட்ட 25,000 ஊசிகளைக் கொண்டிருக்கிறதே ? இங்கே 25,000 ஊசிகளைக் கொண்டு வருவதற்கு ஏற்கெனவே ஏற்பாடு இருந்தது. இந்த ஆண்டு முடிவிற்குள் அம்மாதிரி செய்வதற்கு அரசாங்கத்திற்கு நோக்கம் உண்டா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கூட்டுறவு ஆலைகள் அனைத்திலும் 25,000 போடவேண்டும் என்ற ஒரு முடிவை அரசு எடுத்திருக்கிறது. நிதி நிலைமைக்கேற்ப படிப்படியாகச் செய்ய வேண்டும். வங்கிகளிலிருந்து பெறுவதற்கு முயற்சி நடைபெற்றுக்கொண்டு வருகிறது.

## புதிய சர்க்கரை ஆலைகள்.

*503 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடஆர்க்காடு மாவட்டத்தில் சர்க்கரை ஆலை தொடங்கும் திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. செ. மாதவன் ; (அ) ஆம்.

(இ) குடியாத்தம் வட்டத்தில் அம்முண்டி கிராமத்தில் வேலூர் கூட்டுறவு சர்க்கரை ஆலையும், வாணியம்பாடி வட்டத்தில் கேதண்டம்பட்டி கிராமத்தில் திருப்பத்தூர் கூட்டுறவு சர்க்கரை ஆலையும் நிறுவ ஏற்பாடுகள் நடந்து வருகிறது.

திரு. கே. எ. வகாப் : ஏற்படுத்தப்பட்டிருக்கிற ஆலைகள் இன்னும் துவங்கக்கூடிய நிலையில் இல்லை. மேலும் அங்கே வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள வந்தவாசியில்—இப்பொழுது பட்டாளத்திலுள்ள சர்க்கரை ஆலைப் பகுதியில் அதிகமாக கரும்பு உற்பத்தி செய்யப்படுகிறது—திட்டக் காலத்தில் ஏற்பட இருக்கிற சர்க்கரை ஆலை வந்தவாசி செய்யாறு பகுதியில் ஏற்படுவதற்கு அரசு பரிந்துரை செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : புதியதாக 8 கூட்டுறவு ஆலைகள் பற்றி முடிவு எடுக்கும்பொழுது இதைப்பற்றி பரிசீலிக்கலாம்.

திரு. சி. வி. எம். அண்ணாமலை : தொடங்கப்பட இருக்கிற கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் ஒன்று. திருத்தணி வட்டத்தில் துவங்கப்படுவதற்கு கோரிக்கை அனுப்பப்பட்டிருக்கிறது. அது ஏற்கப்படுகிறதா இல்லையா என்பதை அரசு அறிவிக்க விழைகின்றேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: எல்லாக் கோரிக்கைகளும் பரிசீலிக்கப்படும்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : துவங்கப்படுகின்ற இந்த சர்க்கரை ஆலைகளில் ஒரு நாளைக்கு எவ்வளவு டன் கரும்பு அரைப்பதற்கு வழிவகை செய்யப்பட்டிருக்கிறது ? இப்பொழுது இருக்கிற கரும்பு ஆலைகளெல்லாம் குறைந்த திறன் உள்ளதாக இருக்கின்றன. இனிமேல் துவங்கப்பட இருக்கிற ஆலைகள் கூடுதல் திறன் உள்ளதாகச் செய்வதற்கு அரசு முயற்சி எடுக்குமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : முதல் கட்டமாக 1,200 டன் என்று தொடங்குகிறோம். படிப்படியாக 4,000 டன் வரை பெரும்பாலும் போக முடியும்.

(முற்பகல் 9-30)

திரு. நா. வீராசாமி : தலைவரவர்களே, புதிதாகத் தொடங்கப்படுகின்ற 8 கூட்டுறவு சர்க்கரை ஆலைகளை அமைக்கின்றபோது வடாற்காடு மாவட்டத்தில் அமைப்பது பற்றியும் பரிசீலனை செய்யலாம் என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். வடாற்காடு மாவட்டத்தில் உற்பத்தியாகின்ற கரும்பின் அளவைப் பார்க்கும்போது, அங்கே இன்னும் 7, 8 சர்க்கரை ஆலைகளைத் தொடங்கலாம். இப்போது நம்முடைய அரசு ஜாயின்ட் செக்டாரில் தொழில்களைத் தொடங்குவதில் நாட்டம் செலுத்தி வருகிறது. ஆகவே வடாற்காடு மாவட்டத்தில் ஜாயின்ட் செக்டாரில் ஒன்று அல்லது இரண்டு சர்க்கரை ஆலைகளைத் தொடங்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : வடாற்காடு மாவட்டத்தில் ஏராளமான கரும்பு உற்பத்தியாவதால்தான் அங்கே பல சர்க்கரை ஆலைகள் இருக்கின்றன. புதிதாக 8 சர்க்கரை ஆலைகளை அமைக்கும்போது அங்கே அமைப்பது பற்றி பரிசீலனை செய்யப்பட இருக்கிறது. ஜாயின்ட் செக்டாரைப் பொறுத்தவரையில் கூட்டுறவுத் துறையிலே ஷேர் காப்பிட்டல் சேர்ப்பது கஷ்டமாக இருப்பதால் பரிசீலனை செய்ய வேண்டியிருக்கிறது. ஆனால், கரும்பு உற்பத்தியாளர்களை பங்குதாரர்களாகச் சேர்த்து, அரசாங்கமே ஒரு கம்பெனியைத் தொடங்கினால் ஏராளமான பணவசதி உடனடியாக கிடைக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. அதுபற்றிய பரிசீலனை அரசிடம் இருக்கிறது. அதற்கு ஷுகர் கார்ப்பரேஷன் நிறுவப்பட இருக்கிறது.

### *Mulberry plantations*

* 504 Q.—Thiru N. DENNIS : Will the Hon. the Minister for Industries be pleased to state —

(a) whether the Government have taken any steps to raise large number of mulberry plantations ; and

(b) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) விவர அறிக்கை @ ஒன்று அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

@ 651-652-ம் பக்கங்களில் இணைப்பு I-ஆக அச்சிடப்பட்டுள்ளது.





திரு. என். டென்னிஸ் : தலைவரவர்களே, இந்த விவர அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கும் இடங்களைத் தவிர, வேறு இடங்களில் பயிரிடவும் பண்ணைகள் அமைக்கவும் வசதி இருக்கிறதா ? மேலும் பல பண்ணைகளைத் தொடங்கினால் வேலையில்லாமல் இருக்கின்ற கிராம மக்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்க வசதி இருக்கிறது. ஆகவே, இத்திட்டத்தை விஸ்தரிக்க உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தர்மபுரி மாவட்டம் முசுக்கட்டை மரத் தோட்டங்களை வளர்க்கப் போதுமான தட்ப வெப்ப நிலை உடையதாக இருக்கிறது என்ற எண்ணம் இதுவரையில் இருந்துவந்தது. இப்போது இந்த மரங்கள் காஞ்சிபுரத்தில் கூட நல்ல முறையில் உற்பத்தியாகின்றன. ஆகவே, காஞ்சிபுரம், ஆரணி, கும்பகோணம், முதலிய இடங்களில் பட்டுத் தொழில் தொடங்கலாமா என்பது பற்றி பரிசீலனை செய்யப்படுகிறது.

திரு. எ. சுப்பிரமணியம் : தலைவரவர்களே, இந்தப் பண்ணைகளில் நிர்வாகச் செலவு கூடுதலாக இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. அது உண்மையா ? நிர்வாகச் செலவு மொத்தம் எவ்வளவு ஆகிறது என்ற விபரத்தை தெரிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. செ.மாதவன் : அதுபற்றிய விபரம் இல்லை. ஆனால், பண்ணைகளைப் பொறுத்தவரையில் மிக விரைவில் அதிக லாபம் என்று தெரிகிறது.

திரு. எ. எம். இராஜா : தலைவரவர்களே, பட்டு உற்பத்தியைப் பொறுத்தவரையில் அதிகமாகத் தண்ணீர் தேவையில்லை. பாரின் எக்சேஞ்ச் ஏர்ன் பண்ணக்கூடியது பட்டு. இப்போது கோவை மாவட்டத்தில் கோவை தாலுக்காவிலும், பல்லடம் தாலுக்காவிலும் இத்தொழில் பெருமளவில் நடைபெறுகின்றது. ஆனால் மைசூரில் கொண்டுபோய் விற்பனை செய்கிறார்கள். அங்கே உற்பத்தியாகின்ற பட்டு தரத்திலும் உயர்ந்ததாக இருக்கிறது என்று சொல்கிறார்கள். ஆகவே, அந்தத் தாலுக்காக்களில் கச்சா நூல் உற்பத்தியைப் பெருக்கும் தொழிற்சாலைகளை நிறுவ அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நமக்கே பற்றாக்குறை இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது எப்படி நடைபெறுகிறது என்று தெரியவில்லை. மல்பரி தோட்டங்களை வசதியான இடங்களில் ஆங்காங்கே அமைத்து, பண்ணைகள் அமைத்து, நூல் நூற்று விற்கக்கூடிய முறை பரிசீலிக்கப்படுகிறது. உறுப்பினர் அவர்கள் சொன்ன இடங்களில் இத்தொழிலை ஆரம்பிப்பது பற்றி நிச்சயமாக கவனிக்கப்படும்.

Thiru B. VENKATASWAMY : It is seen from the answer placed on the table of the House that a crash programme has been proposed to be started in Dharmapuri district. May I know from the Hon. Minister when that crash programme will be implemented in Dharmapuri district and whether the Government of India has sanctioned it ? The best variety, it has been mentioned, is Mysore variety. Will that be introduced in this crash programme ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : சில்க் போர்டுக்கு நம்முடைய திட்டத்தை அனுப்பியிருக்கிறோம். இன்னும் அனுமதி வரவில்லை. வந்தவுடன் பரிசீலிக்கப்படும்.

திரு. எம்.எ. லத்தீப் : இந்த பட்டு உற்பத்திக்கு காஞ்சிபுரம், ஆரணி, கும்பகோணம் முதலிய இடங்களிலும் தட்ப வெட்ப நிலை சரியாக இருக்கிறது என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஏலகிரி மலையிலும், ஜவ்வாது மலையிலும் பட்டு உற்பத்தி செய்வதற்கு வாய்ப்பு இருக்கிறது என்று ஏற்கனவே மதிப்பீட்டுக் குழு சிபாரிசு செய்திருக்கிறது. அந்தப் பரிந்துரையை அரசு ஆராய்ந்ததா ? அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அப்படி பரிந்துரை இருக்குமானால் நிச்சயம் பரிசீலிக்கலாம்.

திருமதி த. ந. அனந்தநாயகி : சார், அரசாங்கத்தினால் ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்ட பட்டுப்பூச்சிப் பண்ணை நஷ்டத்தில் நடப்பதாக அறிக்கை சொல்கிறது. அந்தப் பண்ணை நஷ்டத்தில் இல்லாமல் லாபத்தில் நடக்க என்ன சீரமைப்பு வேலைகளை அரசாங்கம் செய்திருக்கிறது ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : முதன் முதலாகத் தொடங்கப் பட்டவுடன் லாபம் வருமென்று எதிர்பார்க்க முடியாது. இந்தச் செடி வளர்ந்து பல்லாண்டுகளுக்குப் பலன் தருகிறது. ஆகவே, முதலில் நஷ்டம் வந்தாலும் போகப்போக லாபம் வரும் என்ற குறிப்புத்தான் இருக்கிறது.

திரு. எம். தேவராசன் : தலைவரவர்களே, நீலகிரி மாவட்டத்திலுள்ள மசினகுடி சில்க் ஃபார்ம் சரியாக இயங்கவில்லை என்று தெரிகிறது. இத்தொழிலுக்கு ஏற்ற வசதிகள் இருந்தும் ஏன் சரியாக இயங்கவில்லை என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அதற்குத் தனி கேள்விப் போடவும்.

திரு. கு. அ. பொம்மன் : தலைவரவர்களே கடந்த சட்டசபைக் கூட்டத்திலே ஒரு உப கேள்விக்குப் பதில் சொல்லும்போது பட்டுப்பூச்சி வளர்க்கும் பண்ணைகளை நிறுவ எங்கெங்கே வசதி இருக்கிறது என்பதை கண்டறிய ஒரு போர்டு நியமிக்கப்படும் என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். அந்த போர்டு ஏற்படுத்தப்பட்டுவிட்டதா இல்லையா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : போர்டு நாம் அமைப்பதல்ல. சில்க் போர்டில் நாம் பல கோடி ரூபாய்க்கான திட்டங்கள் அனுப்பி யிருக்கிறோம். அங்கிருந்து அனுமதி கிடைத்த பின்னால் பரிசீலனைச் செய்யப்படும்.



## ஒட்டப்பிடாரத்தை வட்டமாக மாற்றல்

* 505 வினா—திரு. எம். முத்தையா : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஒட்டப்பிடாரத்தை தாலுக்காவாக மாற்றும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஆம்.

திரு. எம். முத்தையா : தலைவரவர்களே, அந்த தாலுக்கா ஆபீசுக்கு, தனியார் கட்டடம் அல்லாமல், சொந்தக் கட்டடம் கட்டிக் கொள்ள அரசு முடிவு செய்துள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அது பரிசீலனையில் இருக்கிறது.

## உதவி கலெக்டர்கள்

* 506 வினா—திரு. எம். முத்தையா : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1972-ம் ஆண்டில், தமிழ்நாடு அரசாங்க அலுவலர் தேர்வுக் கழகத்தினால் தேர்ந்தெடுக்கப்பட்ட உதவி கலெக்டர்கள் எத்தனை நபர்கள் ?

(இ) தாழ்த்தப்பட்டவர்கள் எத்தனை நபர்கள் ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :

(அ) ஒன்பது.

(இ) தாழ்த்தப்பட்டோர் இரண்டு.

திரு. எம். முத்தையா : தலைவரவர்களே, இந்தத் தேர்வுக்கு மொத்தம் எத்தனை பேர் வந்திருக்கிறார்கள் அதில் பெண்கள் யாராவது வந்திருக்கிறார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : பெண்களைப் பற்றி தற்போது விபரம் இல்லை.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : தலைவர்களே, சிறுபான்மை வகுப்பினரைச் சேர்ந்த முஸ்லீம்கள் யாரேனும் இந்தப் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்களா ? இல்லை என்றால் சிறுபான்மையாக உள்ளவர்களுக்கும் வாய்ப்புத் தரவேண்டுமென்ற அடிப்படையில் தமிழ் நாடு அரசு தேர்வுக் கழகத்திற்கு உத்தரவு அனுப்பப்படுமா ? எதிர் காலத்திலேயாவது சிறுபான்மையினராக இருக்கின்ற முஸ்லீம்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இந்தத் தேர்வு தகுதி அடிப்படையில் நடக்கிறது; மத அடிப்படையில் இல்லை. மைனாரிடிக்கு என்று தனி இடம் இல்லை. பாக்வர்டு கிளாஸ், ஷெடியூல்டு காஸ்ட்டுக்கு என்று தனி இடம் இருக்கிறது. இப்போது இருக்கின்ற சட்டப்படி முஸ்லீம்கள் பாக்வர்டு கிளாசில் சேர்க்கப்பட்டிருப்பதால் அவர்களும் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

திரு. ந. சோமசுந்தரம்: தலைவரவர்களே, இந்த அரசு தாழ்த்தப்பட்ட பல பிரிவினருக்கு பல பதவிகளில் வாய்ப்பளிக்கிறது. அது வரவேற்கத்தக்கது. ஆனால் தமிழ்நாடு பூராவிலும் ஜனத் தொகை அதிகமாக உள்ள ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தினருக்கு இந்த உதவி கலெக்டர்கள் பதவி, இந்த தேர்வுக் கழகம் ஏற்பட்ட காலத்திலிருந்தே கிடைக்கவில்லை; ஒருவர் கூட தேர்ந்தெடுக்கப்படவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா? அது பற்றி அரசுக்கு புகார் வந்திருக்கிறதா? அதில் அரசின் முடிவு என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: விபரம் இல்லை.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, 9 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டதாகவும், அதில் 2 பேர் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் என்றும் அமைச்சரவர்கள் சொன்னார்கள். இந்த 9 பேர்களும் "கம்யூனல் ரொட்டேஷனில்" தேர்ந்தெடுக்கப்பட்டவர்களா? அப்படியானால், மொத்தமாக இதுவரையில் எந்தெந்த கம்யூனிட்டியிலிருந்து எத்தனை பேர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: கம்யூனல் ரொட்டேஷனை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆதரிக்கிறார்களா? அந்த முறை இப்போது இல்லை. ஓப்பன் காம்படிஷனில் இத்தனை பேர், பாக்வர்டு கிளாசில் இத்தனை பேர், ஷெடியூல்ட் காஸ்டில் இத்தனை பேர் என்றுதான் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். அந்த வகையில் 1972-ல் தேர்ந்தெடுக்கப்பட்ட 9 பேர்களில், ஓப்பன் காம்படிஷனில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் 5, பாக்வர்டு கிளாசிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் 2, ஷெட்யூல்ட் காஸ்டிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் 2. இப்படி 9 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து வினா எண் 467; மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சரவர்கள்.

திரு. நா. வீராசாமி: சார், இது ரொம்ப முக்கியமான கேள்வி. நான் ஒரு துணைக் கேள்வி கேட்பதற்கு வாய்ப்பளிக்க வேண்டும்.

THIRU M. A. LATHEEF: Sir, this is a very important question. List of answers have not been supplied to us. I rarely put supplementaries. I have been raising my hands all the time but the Hon. Speaker has not called me. I am very sorry.



மாண்புமிகு பேரவைத் தலைவர்: துணைக் கேள்விக்கு வாய்ப்பே கொடுக்கவில்லை என்று சொல்வது சரியல்ல. முன்னாலே கொடுத்திருக்கிறேன். எல்லாக் கேள்விகளுக்கும் எல்லோரும் துணைக் கேள்வி போட வேண்டுமென்று இல்லை.

திரு. எம். ஏ. லத்தீப்: மற்றவர்களைப் போல நான் துணைக் கேள்விகள் கேட்பது இல்லை. சில குறிப்பிட்ட கேள்விகளுக்கு மட்டும் தான் துணைக்கேள்வி கேட்கிறேன். அப்படி இருக்கும்போது இந்த முக்கியமான கேள்விக்கு துணைக் கேள்வி கேட்க எனக்கு இடமில்லை என்று ஏன் சொல்கிறீர்கள்?

This is a very important question and you should give me an opportunity to put supplementaries. In spite of the fact that I have high regard for the Hon. Speaker, I am sorry to say that the Hon. Speaker has consistently not given me an opportunity to put supplementaries.

மாண்புமிகு பேரவைத் தலைவர். உங்களுக்கும் முன்னால் வாய்ப்பு கொடுத்திருக்கிறேன். அதைப்போலவே மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் வீராசாமி, சுரேந்திரன், ஏ. எம். இராஜா ஆகியோருக்கும் கொடுத்திருக்கிறேன். இந்த அவையில் 234 உறுப்பினர்கள் இருக்கிறார்கள். எல்லாக் கேள்விகளுக்கும் எல்லோருக்கும் துணைக் கேள்வி போட வாய்ப்பளிக்க முடியாது. அந்த அளவுக்கு நமக்கு நேரம் போதாது.

THIRU M. A. LATHEEF: I am very sorry, Mr. Speaker, Sir.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தங்களுடைய குற்றச்சாட்டு முறையானதல்ல.

THIRU M. A. LATHEEF: The Speaker must see that opportunity is given to those Members who put supplemetaries rarely. For that matter, I do not put supplementaries often. Only if I feel that the question affects general interest, then only I raise my hand, not for every question. I am very sorry Sir, I have not been allowed.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நமக்கு நேரம் போதவில்லை. அடுத்த கேள்வி—திருமதி அனந்தநாயகி—கேள்வி 467.

THIRU M. A. LATHEEF: Sir, I still insist, ; I request the Speaker to allow me a supplementary on this important question.

மாண்மிகு பேரவைத் தலைவர்: நாம் அடுத்த கேள்விக்குப் போய் ஆகிவிட்டது. திருமதி அனந்தநாயகி—மாண்புமிகு உணவு கூட்டுறவு அமைச்சர்.

THIRU M. A. LATHEEF: Sir, I record my protest and I record my deep sense of dissatisfaction, Sir.

*Madurai Super-Market.*

* 467 *Q.*—THIRUMATHI T. N. ANANDANAYAKI : Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state whether the Super Market at Madurai has earned profits during 1972–73 ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : இல்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி : லாபம் இல்லாமல் நடப்பதற்குக் காரணம் என்ன ? அது அமைக்கப்பட்டிருக்கிற இடம் சரியில்லையா ? வேறு இடத்திற்கு மாற்றப்பட யோசனை இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : சரியான முறையில் நிர்வாகம் நடைபெறவில்லை என்று 67-ல் கலைக்கப்பட்டது. இப்போது கடந்த ஐந்தாறு மாதங்காளாக கணிசமான வியாபாரம் நடைபெறுகிறது. நானே ஒரு நாள் மாலையில் ஒரு மணி நேரம் உட்கார்ந்து பார்த்தேன். மாதம் 2 லட்சம் என்பது 12 லட்சத்திற்கு வியாபாரம் வளர்ச்சி பெற்றிருக்கிறது. தனியாகவே வேறு ஒரு இடம் வாங்கி கட்டிடம் கட்டுவதற்கு யோசனை நடந்துக்கொண்டிருக்கிறது.

திரு. கே. என். குமாரசாமி: சிறப்பு அங்காடியில் விலை அதிகமாக இருக்கிற காரணத்தால்தான், வியாபாரம் குறைந்து, அது கலைக்கப்படுகிற நிலை வருகிறது. அப்படியின்றி சிறப்பு அங்காடியில் குறைந்த அளவில் விநியோகிக்க ஏற்பாடு செய்யப்படுமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : கனம் உறுப்பினர் கோயம்புத்தூரைச் சேர்ந்தவர். அங்கேயுள்ள சிறப்பு அங்காடியில்தான் லட்சக்கணக்கான மக்கள் வாங்குகிறார்கள். அது லாபகரமாக நடைபெறுகிற அங்காடியாகும். சிறப்பு அங்காடியில் விலை அதிகம் என்கிற பிரச்சாரம் தனியார் செய்கிற வியாபார தந்திரமேயல்லாமல், எந்தச் சிறப்பு அங்காடியிலும் விலை அதிகம் இல்லை என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. ஆ. கு. சுப்பையா : நியாயமான விலையில் கொடுக்கப்படுவதாலும், மக்கள் அங்கே சென்று விரும்பி வாங்குவதாலும்—அரசாங்கம் அதிகமான சிறப்பு அங்காடிகளை ஏற்படுத்த ஆலோசனை செய்யுமா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : பலயிடங்களில் விஸ்தரிக்க ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறோம்.

திரு. த. சோலையா : மதுரையில் நடைபெறுகிற சிறப்பு அங்காடி 73–74-இல் அதிகப்படியான லாபத்தைப் பெற்று நடைபெறுவதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் ஜனங்கள் உள்ளே சென்று வாங்குவதில் பல இடைஞ்சல்கள் ஏற்படுகின்றன. அந்தக் கட்டிடத்தை விரிவுபடுத்த அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : நான் முதலிலேயே சொன்னேன். மக்கள் அதிகமாக அங்கே வருகிறார்கள் என்பதை நானே அங்கு ஒரு 2 மணி நேரம் உட்கார்ந்து பார்த்தேன். இப்போது தனியாகக் கட்டிடம் கட்ட, புதிய இடத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

திருமதி த. ந. அனந்தநாயகி : தனி நபர்களிடம் வாங்குகிறபோது சேல்ஸ் டாக்ஸ் இல்லாது பில் போடச் சொல்கிறோம். சிறப்பு அங்காடியில் அது நடக்காது. ஆகவே இங்கே சிறப்பு அங்காடியில் சேல்ஸ் டாக்சுக்கு எக்சம்ஷன் கொடுத்தால் இன்னும் அதிக அளவுக்கு வியாபாரம் இருக்குமே, இதை அரசு செய்யுமா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : அந்த இலாக்கா என்னிடம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த கேள்வி 468.

திரு. சோ. அழகர்சாமி : சார், நான் முன்பு இருந்தே கையை உயர்த்திக் கொண்டிருக்கிறேன். ஒரு கேள்வி போடக்கூட எனக்கு அனுமதி கிடைக்கவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எல்லோருக்கும் சந்தர்ப்பம் கொடுப்பது என்பது இயலாத காரியம். வேண்டுமென்றால் கேள்வி நேரத்தை $1\frac{1}{2}$ மணியாக அதிகப்படுத்துங்கள். இல்லையென்றால் எல்லாக் கேள்விகளும் எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்றால், எல்லோருக்கும் துணைக் கேள்வி போட சந்தர்ப்பம் அளிப்பது முடியாத காரியம்.

பூங்கா நகர் கூட்டுறவு பண்டகசாலை.

* 468 வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) சென்னை பூங்காநகர் "கூட்டுறவு மொத்த விற்பனை" பண்டகசாலை எப்போது துவக்கப்பட்டது?

(இ) 1970–71-ல் அதில் ஏற்பட்ட லாபத்தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :

(அ) 1964-ம் ஆண்டில்.

(இ) 1970–71-ல் நட்டத்தில் இயங்கியது.

திரு. எம். சுரேந்திரன் : பூங்காநகர் மொத்த விற்பனை கூட்டுறவு பண்டகசாலையில் 40 லட்சம் நட்டம் வந்திருப்பதாகச் சொல்கிறார்களே; நட்டத்திற்குக் காரணமானவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லை, குறைந்த சம்பளத்தில் வேலை செய்கிறவர்களது கோரிக்கைகள் உதாசீனம் செய்யப்பட்டிருக்கிறது என்பது உண்மைதானா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: நட்டம் 40 லட்சம் இல்லை. 29 லட்சம் ஏற்பட்டிருக்கிறது. 1959-இல் இருந்து இந்த நட்டம் ஏற்பட்டிருக்கிறது. அதற்காக நிர்வாக அதிகாரிகள்மேல் நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. காரணம் 8 சதவிகிதம் தான் சம்பளம் கொடுக்கலாம். ஆனால் இங்கே 11 சதவிகிதம் வரை செலவழிக்கப்பட்டிருக்கிறது. நிர்வாகம் சரியில்லாத முறையில் இருந்த காரணத்தினால் அந்த கோவை சிறப்பங்காடி நிர்வாக அமைப்போடு, புதிய நிர்வாகம் துவங்கப்பட்டிருக்கிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: இதில் வழக்குத் தொடர ஏன் இவ்வளவு காலதாமதம்? காலதாமதம் ஏற்பட்டால் வழக்குச் சீராக நடக்காது. ஏன் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: என்றைய தினம் ஆடிட் பண்ணி சீர்கேடு கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறதோ, அந்த தினமே அந்த அதிகாரியின்மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

## லால்குடி கூட்டுறவு வேளாண்மை விற்பனைச் சங்கம்.

*469 வினா.—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு உணவு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) லால்குடி கூட்டுறவு விவசாய மார்க்கெட்டிங் சங்க டைரக்டர்கள் போர்டு 1973 நவம்பர் மாதம் கலைக்கப்பட்டதா?

(இ) ஆம் எனில், அதற்குரிய காரணம் என்ன?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: (அ) ஆம்.

(இ) லால்குடி சிவஞானம் கூட்டுறவு வேளாண்மை விற்பனைச் சங்கக் குழு சங்க அலுவல்களை நடத்தியதில் முறைகேடுகள் காணப்பட்டதன் விளைவாக திருச்சிராப்பள்ளி, கூட்டுறவுச் சங்கங்களின் இணை இயக்குநரால் 1973 ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் இந்தக் குழு கலைக்கப்பட்டது. சங்க அலுவல்களில் இக்குழு கீழ்க்காணும் முக்கிய தவறுகளை இழைத்தது :—

(1) விற்பனையில் செய்த முறைகேடுகள் ;

(2) வெளிச்சந்தையில் உரங்கள் வாங்கியதில் முறைகேடுகள்.

(3) "ஆயில் எஞ்சின்கள்" விற்பனையில் முறைகேடுகள்.

(4) சங்கக் கட்டிட நிதியைத் தவறாகப் பயன்படுத்தியமை.

(5) சங்கப் பொது நலநிதியைத் தவறாகப் பயன்படுத்தியமை.



சங்கத்தின் முறைகேடுகளைக் களையவும், அச்சங்கம் சிறந்த அடிப்படையில் இயங்கச் செய்வதற்கும் திருச்சிராப்பள்ளி கூட்டுறவுச் சங்கங்களின் துணைப்பதிவாளர் அச்சங்கத்தின் தனி அலுவலராக நியமிக்கப்பட்டுள்ளார்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: சம்பந்தப்பட்டவர்கள் மீது ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டதா? இதுவரை எடுக்கப்படவில்லை என்றால் அதற்கான காரணம் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: அதைத்தான் நான் சொன்னேன். தவறுகள் என்ன என்ன நடந்திருக்கிறது என்பதைக் கண்டுபிடித்து சார்ஜ் பண்ண ஸ்பெஷல் ஆபீசர் போடப்பட்டிருக்கிறார்கள். தவறுகள் கண்டுபிடிக்கப்பட்டு இருக்கின்றன. அதற்கான நடவடிக்கை தொடர்ந்து எடுக்கப்படும்.

## தொழிலாளர் கல்வி நிலையங்கள்.

*507 வினா.—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) தொழிலாளர்கள் கல்வி திட்டத்தின் கீழ் 1972 வரை மத்திய அரசு தமிழகத்திற்கு எவ்வளவு தொகை அளித்துள்ளது ?

(இ) இத்திட்டத்தின் கீழ் தமிழகத்தில் எத்தனை பிராந்திய நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன ?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) & (இ) அவைமுன் விவர அறிக்கை @ ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: இந்தப் பணிக்கு மத்திய அரசாங்கம் தொடர்ந்து உதவி செய்து வருகிறதா? நடப்பு ஆண்டுக்கு எவ்வளவு தொகை ஒதுக்கித் தந்துள்ளது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மத்திய அரசு தொடர்ந்து உதவி செய்து வருகிறது. 1972–73க்கு ரூ 6,21,276·33 மத்திய அரசு வழங்கியுள்ளது.

திரு. சு. துரைசாமி: இதனால் பயன்பெற்ற தொழிலாளர்களின் எண்ணிக்கை எவ்வளவு? இந்தத் தொகையை இன்னும் அதிகமாக மத்திய அரசு தருவதற்கு நடவடிக்கை எடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

---

@ 653-655ம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : பயன்பெற்ற தொழிலாளர்களின் எண்ணிக்கை 76,932.

திரு. கே. டி. கே. தங்கமணி : மத்திய அரசு 1957 ஆம் வருஷத்திலேயே இந்தத் திட்டத்தைக் கொண்டுவந்து, மதுரை, கோவை, சென்னை ஆகியவற்றில் இந்த வகுப்புகளை நடத்திக்கொண்டிருக்கிறார்களே, தமிழ்நாடு சர்க்காரும் இம்மாதிரி வகுப்புக்கு ஏற்பாடு செய்திருக்கிறார்களே, இது அவசியம் தானா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, அந்தத் தொழிற் கல்வி பரவலாக நடைபெறவேண்டுமென்கிற நல்ல நோக்கத்தோடு, இந்த ஏற்பாடுகள் நடைபெறுகின்றனவே தவிர வேறல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, தொழிற் கல்வி வகுப்புகளுக்குச் செல்கின்ற தொழிலாளிகளுக்கு முதலாளிகள் சம்பளத்தோடு கூடிய லீவ் வழங்க வேண்டுமென்ற விதிமுறை இருக்கிறது. சில இடங்களில் முதலாளிகள், தொழிற் கல்வி வகுப்புக்களுக்குச் செல்கின்ற தொழிலாளிளுக்கு விடுமுறை கொடுத்து, அவர்கள் அட்டெண்ட் பண்ணுகிற நாட்களுக்கு ஊதியம் கொடுப்பதில்லை. அதற்கு இந்த அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : அப்படிப்பட்ட குறைபாடுகள் பற்றி என்னிடத்திலே எந்தவிதமான புகாரும் மனுவாக வந்து சேரவில்லை. அப்படிப்பட்ட குறைபாடுகள் இருக்குமானால் அதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, இந்த பிராந்திய வகுப்புகளில் என்ன என்ன வகையான பாடங்கள் போதிக்கப்படுகின்றன ? இந்தப் பாடங்கள் எவ்வளவு நேரம் போதிக்கப்படுகின்றன என்றும் அறியலாமா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, பல்வேறு வகையான பயிற்சிகள் 3 மட்டங்களில் நடைமுறைக்குக் கொண்டு வரப்படுகிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். பணிபுரிபவர்களிலிருந்து போட்டித் தேர்வுகள் நடத்துவதன் மூலம், கல்வி அதிகாரிகளைத் தெரிந்தெடுப்பதும், சம்பந்தப்பட்ட வட்டார நிலையங்களில் தொழிற்சங்கங்களால் தொழிலாளர்களுக்கிடையே இருந்து அனுப்பப்படும் தொழிலாளர்—ஆசிரியர்களுக்கு கல்வி அதிகாரிகள் பயிற்சி அளிப்பதும், பகுதிநேர தொழிற்சாலை வகுப்பு நடத்துவதுமான 3 வகைப்பட்ட காரியங்கள் இதிலே நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டிருக்கின்றன என்று தெரிவித்துக்கொள்கிறேன்.



திரு. கே. என். குமாரசாமி : தலைவர் அவர்களே, இந்தக் கணக்குப் பிரகாரம், தமிழ் நாட்டிலே அதிகப்படியான தொழிலாளிகள் இருக்கும் பகுதியான கோயம்புத்தூரிலே செலவிடுகிற தொகை குறைவாகவும், மற்ற மதுரை போன்ற இடங்களிலே அதிகமாகவும் இருக்கும் காரணத்தாலே, கோவை தொழிலாளர்கள் அதிகப் பயன் அடைவதற்கு அரசாங்கம் ஏதாவது முன்முயற்சி எடுத்துக்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, மதுரை, திருநெல்வேலி, குலசேகரம் ஆகிய இடங்களிலே கிளைகள் இருக்கின்றன. கோயம்புத்தூரிலே குன்னூர், பொள்ளாச்சி ஆகிய இரண்டு இடங்களிலே கிளைகள் இருக்கின்றன. செலவைத்தான் பரிமாறிக்கொள்கிறோமே தவிர ஏற்படுகிற செலவை நாங்கள் ஒத்துக்கொள்ளத் தயாராக இருக்கிறோம்.

### *Slum Clearance Schemes.*

*508 *Q.*—THIRUMATHI T. N. ANANDANAYAKI : Will the Hon. the Minister for Labour be pleased to state whether the activities of the Slum Clearance Board is to be revised to prevent rise in price of the lands in the City of Madras ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : இல்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி : முதலிலே, அரசாங்கப் புறம்போக்கு, கார்ப்பரேஷன் இவர்களிடம் இருக்கிற இடங்களை உடனடியாக எடுத்து ஸ்லம் கிளியர்ரன்ஸ் போர்டு அந்த வேலைகளைச் செய்ய ஆரம்பிக்குமானால், தனி நபர் நிலத்தை எடுத்து, அவர்கள் விலையை ஏற்றுவதற்கு வாய்ப்பில்லாமல் இருக்கும். அப்படிப்பட்ட முறைகளை வகுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, தனியார் பகுதியிலே கட்டப்பட்டிருக்கிற குடிசையிலே உள்ள நிலங்களைத் தனியார் தாங்களே தந்துவிட முன் வருகிறார்கள். ஏனென்றால், இப்பொழுது நிலவரி போன்றவைகள் ஏராளமாக இருக்கின்றன. இதனால் விட்டுவிட முன்வருகிறார்கள். ஆகவே, அவர்களாகவே விட்டுவிட முன்வருவதை பெறுவதிலே அரசாங்கம் தயக்கம் காட்டவேண்டியதில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கு. காமாட்சி : தலைவர் அவர்களே, சென்னை மாநகரத்தில் மட்டுமல்ல, சாதாரண கிராமங்களிலிருக்கிற வீட்டு மனைகள்கூட, ரூ. 1,000 விற்றது இன்றையதினம் ரூ. 1 இலட்சத்துக்கு விற்கப்படுகிறது. அவைகளை எல்லாம், இந்த அளவுதான் விற்க வேண்டுமென்று, கட்டுப்படுத்த செயற்குறிப்பு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, பொதுவாக, வீட்டு மனை விலை ஏற்றத்தைத் தடுப்பதற்கான முறையிலே சட்டம் கொண்டு வர ஆலோசித்துக் கொண்டிருக்கிறோம்.

திருமதி த. ந. அனந்தநாயகி: தனி நபர்கள் போட்டிருக்கிற குடிசைகளுக்கு வாடகை வாங்கமுடியாது என்ற காரணத்திற்காக விற்று, அந்தப் பணத்தைக்கொண்டு வேறு முதலீடு செய்யலாம் என்ற முறையிலேதான் தனியார்கள் ஸ்லம் கிளியரன்ஸ் போர்டுக்குத் தருகிறார்கள். அரசாங்கம் முதலிலே, புறம்போக்கு, கார்ப்பரேஷன் நிலங்களிலே கட்ட ஆரம்பித்து, இந்த வேலைகளைச் செய்ய ஆரம்பித்தால், குறைந்த விலையில் அதிகமான வீடுகள் கட்டவசதி ஏற்படும். அதேபோல், தனியார் நிலங்களை வாங்குவது மாதிரி, கோயில் நிலங்களை வாங்க முயற்சி செய்ய வேண்டும். அதற்கொரு ஸ்டாண்டர்ட், இதற்கொரு ஸ்டாண்டர்ட் வைக்கலாமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, பெரும்பாலும் குடிசைப் பகுதிகள் எங்கே அமைக்கப்பட்டிருக்கின்றனவோ, அதே இடத்திலே குடிசை மாற்று வாரியத்திற்கான மாடிக் கட்டிடங்களைக் கட்ட வேண்டுமென்று குடிசையில் வாழ்கின்றவர்கள் விரும்புகிறார்கள். அந்த இடத்தைக் காலி செய்து, வேரிடத்தில், அரசாங்கப் புறம்போக்கு எங்கே இருக்கிறது என்று பார்த்து 2 பர்லாங் அல்லது ஒரு மைல் தூரத்திலே இருந்தால், அங்கே சென்று குடியிருக்க மறுக்கிறார்கள். ஆகவேதான் குடிசைகள் இருக்கிற இடத்திலே வாங்கி, அங்கேயே கட்டித் தீரவேண்டிய அவசியம் அரசுக்கு ஏற்படுகிறது.

### *Seats in Cinema Theatres.*

*509 *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether the squatting on the floor in cinema theatres has been abolished in this State during show hours; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: (அ) & (இ) இம்மாநிலத்தில் உள்ள நிலையான, ஓரளவு நிலையான திரைப்பட அரங்குகள் அனைத்திலும் கடைசி வகுப்புக்கு பெஞ்சுகள் அல்லது நாற்காலிகள் போடப்பட்டிருக்க வேண்டும் என்று உள்துறையின் 4—10—1973 ஆம் நாளிட்ட 2612 ஆம் எண் ஆணையில் அரசு தெரிவித்துள்ளது. கடைசி வகுப்பில் பெஞ்சுகள் அல்லது நாற்காலிகள் போடுவதால் கட்டுமான அமைப்பு மாற்றப்பட வேண்டிய திரைப்பட அரங்குகளுக்கு அதற்கேற்றவாறு அவை புதுப்பிக்கப்படும் வரையில் இந்த விதியைப் பின்பற்ற வேண்டிய அவசியமில்லை.





திரு. என். டென்னிஸ்: தலைவர் அவர்களே, அரசு ஆணை பிறப்பித்த பிறகும் இது நடைமுறையில் கையாளப்படுவதாகத் தெரியவில்லை. ஆகையால், நடைமுறையில் செயல்படுத்தாதவர்கள் மேல் நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: தலைவர் அவர்களே, பெர்மனென்ட் அண்ட் செமி பெர்மனென்ட் என்று சொல்லப்படுகின்றவைகளுக்கு பெஞ்ச் போட வேண்டுமென்று விதி. இடையிலே நிரந்தரமாக கட்ட அமைப்பை மாற்றி அமைக்கவேண்டுமென்று, மாற்றி அமைக்கின்ற காலத்திற்குத்தான் போடவேண்டியதில்லை. அப்படி யாரும் போடாமல் இருந்தால் நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. நா. வீராசாமி: தலைவர் அவர்களே, தரை டிக்கட்டுகளுக்குப் பதிலாக பெஞ்ச் போடப்பட்டிருக்கிற நேரத்திலே கட்டணம் உயர்த்தப்பட்டிருக்கிறது. சினிமாவுக்கு பொழுதுபோக்குக்காகப் போகிறோம். அங்கே புகை பிடிக்கக் கூடாது என்று சட்டம் போட்டிருக்கிறோம். சினிமாவுக்குப் போனால், ஊளை இடுவதையும், விசில் அடிப்பதையும் கேட்க வேண்டியிருக்கிறது. பொழுதுபோக்குத் தன்மையைக் கெடுக்கின்ற இந்த ஊளை இடுவதையும், விசில் அடிப்பதையும் தடுக்க சட்டம் போட முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: தலைவர் அவர்களே, சட்டம் ஒன்றும் போட முடியாது. சினிமாக் கொட்டகையில் விசில் அடிக்கிறவர்கள் அதோடு நின்றுவிட்டால் போதுமானது. அந்த வியாதி வெளியிலே பரவாமல் இருந்தால் நல்லது என்று கருதுகிறேன்.

### *Electrocution cases in Velachery.*

*510 *Q.*—THIRU R. R. MUNUSAMI: Will the Hon. the Minister for Electricity be pleased to state:—

(*a*) whether a number of cows were electrocuted at Velachery near Madras about the 6th September 1973 at public places; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: (அ) & (இ) சென்னைக்கு அருகில் வேளச்சேரியில் 1973 செப்டம்பர் 6 ஆம் நாளன்று 6 மாடுகளும், ஒரு எருதும் மின்சாரம் பாய்ந்து இறந்தன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி(*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## (2) அமைச்சர் அறிக்கை.

### ஒரு துணை வினாவிற்கான விடையைத் திருத்தி மாண்புமிகு கல்வி—சுற்றுலாத்துறை அமைச்சரின் அறிக்கை.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பாலசுந்தரம் அவர்கள் கேட்ட கேள்விக்கு நான் விடையாக, கன்னிமாரா லைப்ரரிக்கு டெப்பாசிட்டாக ரூ. 5 வசூலிக்கிறார்கள் என்று குறிப்பிட்டேன். இப்பொழுது, ரூ. 20 டெப்பாசிட்டாக வசூலிக்கிறார்கள் என்றும், 2 புத்தகங்கள் வழங்குகிறார்கள் என்றும், 14 நாட்கள் வரையில் வைத்துக்கொண்டு திருப்பிக் கொடுக்கலாம் என்றும் விதி இருக்கிறது என்று திருத்திக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

## (3) ஒத்திவைப்புத் தீர்மானம்.

### பேசின் பிரிட்ஜ் அனல்மின் நிலைய ஊழியர் வேலைநிறுத்தமும், மின்உற்பத்திக் குறைப்பும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. கே. டி. கே. தங்கமணி, திரு. ஏ. ஆர். மாரிமுத்து, டாக்டர் எச். வி. ஹாண்டே ஆகிய மூவரும்

"the serious situation arising out of fall in the production of electricity in the Basin Bridge Power House due to the strike there and the failure of the Government to resolve the same."

என்ற பொருள்பற்றி விவாதிக்க வேண்டுமென்று ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். இது அவையை ஒத்திவைத்து விவாதிக்கக் கூடிய அளவு முக்கியத்துவம் வாய்ந்ததா என்பதைப்பற்றி மட்டும் சுருக்கமாக விளக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி : சபாநாயகர் அவர்களே, பேசின் பிரிட்ஜிலே மின்சாரத் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் ஆரம்பித்து, பிறகு கைவிடப்பட்டிருக்கிறது. ஆனால், வேலைநிறுத்தத்திற்கான காரணத்தையும், எப்படி அரசின் தவறின் காரணத்தினால் இம்மாதிரி வேலைநிறுத்தம் வருகிறது என்பதையும் நான் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். மத்திய சர்க்கார் மத்தியிலிருக்கிற சங்கத்தோடு பேச்சுவார்த்தைகள் நடத்தி, மின்சாரத் தொழிலாளர்களுக்கெல்லாம் இடைக்கால நிவாரணம் 1—10—1973 முதல் ரூ. 30 கொடுக்க வேண்டுமென்று ஒப்பந்தம் செய்திருப்பதாகப் பத்திரிகையிலே வந்திருக்கிறது. அப்படி ஒப்பந்தம் செய்தவுடன் தமிழ்நாட்டு மின்சார சிப்பந்திகளுக்கும் அவர்கள் கேட்டபோது, உடனடியாக அந்த இடைக்கால நிவாரணத்தைக் கொடுத்திருக்கலாம். அப்படிக் கொடுக்காமல் காலதாமதம் பண்ணிய காரணத்தால் பேசின் பிரிட்ஜிலே இந்த வேலைநிறுத்தம் ஆரம்பித்திருக்கிறது. நல்லவேளையாக பேசின் பிரிட்ஜோடு நின்றுவிட்டது. அதற்காக தமிழ்நாட்டிலே உள்ள மற்றவர்கள் நடத்தியிருந்தால் அது நியாயமாகத்தான் இருக்கும்.



அதேமாதிரி சர்க்கரை ஆலைத் தொழிலாளிகளுக்கு இடைக்கால நிவாரணம் கொடுக்க வேண்டுமென்று ஒப்பந்தம் வந்திருக்கிறது. சிமெண்ட் தொழிலாளர்களுக்கு நிவாரணம் கொடுக்க வேண்டுமென்று ஒப்பந்தம் வந்திருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேசின் பிரிட்ஜோடு நில்லுங்கள். சர்க்கரை ஆலை, மற்றவைகளுக்குப் போக வேண்டாம்.

திரு. கே.டி.கே. தங்கமணி : சர்க்கரை ஆலை, சிமெண்ட் தொழிற்சாலைகளில் ஒப்பந்தம் செய்திருப்பதைத்தான் கூறினேன். அரசாங்கம் இப்படிக் காலதாமதம் செய் வதன் - காரணமாகத்தான்.. .. .. .. .. ..

(முற்பகல் 10–00)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒன்றையொட்டி எல்லா இடங்களுக்கும் போவது நல்லதல்ல, பேசின் பிரிட்ஜோடு நில்லுங்கள்.

திரு. கே.டி.கே. தங்கமணி : இம்மாதிரி தொழிலாளர்கள் சம்பந்தமாக ஒப்பந்தம் ஏற்பட்டால் காலதாமதம் இல்லாமல் அமல் நடத்தப்படாததால்தான் தொழிலாளர்கள் மத்தியிலே அது அதிருப்தியை ஏற்படுத்துகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இம்மாதிரி சம்பவங்கள்பற்றி எப்படி காலதாமதம் இல்லாமல் செய்யலாம் என்பதைப்பற்றி இந்த அவையை ஒத்திவைத்தால்தான் நல்லமுறையிலே விவாதிக்க முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவர் அவர்களே, இன்றைக்கு நாட்டிலே மின்சாரப் பற்றுக்குறையினால் சென்ற ஆண்டு எவ்வளவு பெரிய பொருளாதார நட்டத்திற்கு உள்ளானது நாடு என்பதை நாம் அனைவரும் அறிவோம். இப்பொழுதுகூட 15 சதவீதம் வரையில் வெட்டை அமலாக்கிக் கொண்டிருக்கிறோம். இந்த நிலையிலே மின்சார உற்பத்தியிலே தடங்கல் ஏற்படுமானால், குறைவு ஏற்படுமானால் ஒரு பெரும் பொருளாதார நெருக்கடியை அது ஏற்படுத்தும் என்ற நிலையிலே இந்தப் பிரச்சினையை அணுக வேண்டும்.

திரு. தங்கமணி அவர்கள் பேசும்போது இதைப்பற்றி விரிவாகக் குறிப்பிட்டார்கள். முன்னாலே நமக்கு நிலக்கரிப் பற்றுக்குறை ஏற்பட்டதால் உற்பத்தியில் தடங்கல் ஏற்பட்டது. அதற்குப் பிறகு பல்வேறு சம்பவங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இப்பொழுது நிலக்கரி இருக்கிறபோது தொழிலாளர்களின் வேலைநிறுத்தம் ஏற்பட்டால் அதனால் மின்சார உற்பத்தி பாதிக்கப்படுகிற சூழ்நிலை மிகவும் பரிதாபத்திற்குரியதாகும். ஆகவே அப்படிப்பட்ட நிலையில் வேலைநிறுத்தம் வராமல் இருக்க அரசாங்கம் முன் ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

தொழிலாளர்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்ற வேடுண்மென்ற முறையிலே அவர்கள் வேலைநிறுத்தம் செய்யத் தொடங்குவதற்கு முன்னாலேயே அவர்களோடு கலந்துபேசி அந்த நிலைமையைத் தவிர்த்திருக்கலாம். அதைப்பற்றி வலியுறுத்துவதற்காகத்தான் ஒத்திவைப்புத்

தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறோம். பேசின் பிரிட்சிலே வேலைநிறுத்தம் ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படும்பொழுது அவர்கள் ஸ்ட்ரைக் நோட்டீஸ் கொடுப்பதற்கு முன்னதாகவே பாராமுகமாக இருந்திராமல் உடனடியாக முன் ஏற்பாடுகளைச் செய்திருக்க வேண்டும். இந்த நிலையிலே மின்சாரத்திலே தான் தேசத்தினுடைய ஜீவாதாரமே இருக்கின்றது. ஆகவே, அரசாங்கம் எப்படிப்பட்ட நடவடிக்கைகளை முன்னேற்பாடுகளை எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதைப்பற்றி விவாதிப்பதற்காக இந்த அவையை ஒத்திவைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

DR. H. V. HANDE: Hon. Speaker, Sir, I have given notice of the following adjournment motion to discuss—

'The serious situation arising out of fall in the production of electricity in the Basin Bridge Power House due to the strike there and the failure of the Government to resolve the same'.

Sir, I would like to stress that this is a matter of urgent public importance due to the fact that not only a number of workers employed there are involved but also the production of electricity is involved. I want to point out that the Government have failed to implement certain recommendations of the All India Electricity Wage Guidelines Committee consisting of the representatives of the Government of India and the State Electricity Board. A decision was taken in August 1973 that a Dearness Allowance of Rs. 30 by way of interim relief should be granted from 1st October. Several States have implemented this recommendation but Tamil Nadu has failed to implement it.

This matter was brought to the attention of the Electricity Board sufficiently earlier but unfortunately the Chairman of the Electricity Board and the Superintending Engineer of the Electricity Board were not in Madras and that was what I was told. The Government would have avoided this strike if the top officials had conferred with the leaders of the Labour Union and a solution was properly evolved by discussion and the implementation of the interim relief of Rs. 30. As has been rightly pointed out by my hon. Friend, Thiru Thangamani, this strike may spread to other sections of the Electricity Board because the recommendations of the Wage Guidelines Committee are meant for all the employees of the Electricity Board and the other employees are also agitated about it.

Therefore, if this House is adjourned it would be possible for the House to discuss ways and means of devising how best an amicable settlement can be brought about between the employees and the Board.

Thank you, Sir.



மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, இது முடிந்து விட்ட பிரச்னையென்பதை திரு. தங்கமணி அவர்கள் எடுத்துச் சொல்லி இருந்தாலும், இந்த முடிவு காலதாமதமாக எடுக்கப்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். இந்த முடிவை எடுப்பதற்கு 1—4—1974 வரையிலே நமக்கு நேரம் இருந்தது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். 1—4—1974க்கு முன்பே இந்த முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, காலதாமதமானதாக நாம் பொருள் கொள்ள முடியாது.

இந்தத் துறையில் பல தொழிற்சங்கங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு யூனியனின் தலைவர்களோடும் நிர்வாகிகளோடும் கலந்து பேசவேண்டிய தவிர்க்க முடியாத சூழ்நிலை நிர்வாகத்திற்கு இருந்த காரணத்தால் ஒவ்வொரு யூனியனோடும் பேசுவதற்கு நாம் நேரம் எடுத்துக் கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டது. சில யூனியன்கள் டெல்லியிலே எடுக்கப்பட்ட முடிவைவிட இன்னும் கொஞ்சம் அதிகமாகத் தர வேண்டுமென்ற கோரிக்கையை வைத்தார்கள். சில யூனியன்கள் டெல்லி முடிவே போதுமானது என்ற கருத்தை வைத்தார்கள். இதற்கிடையிலே எல்லா யூனியன்களோடும் சுமுகமான சூழ்நிலையை ஏற்படுத்துவதற்காக நிர்வாகத்தினரும் இந்தத் துறையின் அமைச்சர் அவர்களும் சில நேரங்களிலே நானும் தொழில் துறை அமைச்சர் அவர்களும் பல கட்டங்களிலே பேச்சுவார்த்தைகளை நடத்தியிருக்கிறோம்.

இதற்கிடையிலே திடீரென்று ஒருநாள் வேலைநிறுத்தம் பேசின் பிரிட்ஜ் பகுதியிலே உருவாயிற்று. திரு. மாரிமுத்து அவர்கள் குறிப்பிட்டார்கள், நாட்டின் உற்பத்தி வெகுவாக வளர வேண்டிய நேரத்திலே வேலை நிறுத்தம் கூடாது என்றும் அதைத் தடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும் சொன்னார்கள். வேலைநிறுத்தம் அறவே கூடாது என்று வரையறுத்துவிடமுடியாது. தொழிலாளர்களுடைய குரலை அவர்கள் உயர்த்திக் காட்டுவதற்கு சில நேரங்களிலே இதுபோன்ற வேலை நிறுத்தங்கள் அவர்களுக்குத் தேவைப்படுகின்றன.

ஆனாலும், பேச்சுவார்த்தைகளின் மூலம் அவர்களுடைய பிரச்னையைத் தீர்க்கமுடியாவிட்டால் கடைசி ஆயுதமாக அதைத் தொழிலாளர்கள் பயன்படுத்தவேண்டுமென்பதை இந்த அரசு ஏற்றுக் கொள்கிறது. அண்மைக் காலத்திலே நம்முடைய திரு. மாரிமுத்து அவர்களுடைய கட்சியை நடத்துகின்ற இந்தியாவின் தலைமை அமைச்சர் இந்திரா காந்தி அவர்களும் குடியரசுத் தலைவர் அவர்களும் வேலைநிறுத்தங்கள்பற்றி அடிக்கடி விடுகின்ற அறிக்கைகளையும் நாம் யாரும் மறந்துவிடுவதற்கு இல்லை. ஆனால் பல்வேறு மத்திய அரசினைச் சேர்ந்த இடங்களில்கூட பல்வேறு வேலைநிறுத்தங்கள் ஏற்படுவதை நாம் காண்கிறோம். உடனடியாக சிலவற்றில் தீர்வு காணப்படுவதையும், சிலவற்றில் தீர்வு காணமுடியாத நிலைமை ஏற்படுவதையும் நாம் மறந்துவிடுவதற்கில்லை.

தமிழக அரசு தொழிலாளர்களுடைய பிரச்னைகளைத் தீர்த்து வைக்க வேண்டுமென்பதிலே எவ்வளவு அதிகமான அக்கறையோடு செயல்படுகிறது என்பதையும் இந்தத் துறை சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்கள் எவ்வளவு

ஒத்துழைக்கிறார்கள் என்பதையும் தொழிலாளர்கள் தலைவர்கள் உணரு வார்கள். தொழிலாளர்களின் தலைவர்களுடைய பாராட்டுகளை—இது சம்பந்தப்பட்டவரையில்—அரசின் முடிவுகளுக்கு நாம் பெற்றிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்குக் காரணம், அதிகாரிகள் மற்றவர்கள் எல்லாம் செய்த காலதாமதம் என்று நண்பர் ஹாண்டே அவர்கள் சொன்னார்கள்.

யூனியன் தலைவர்களைக் கலந்து பேச்சுவார்த்தைகள் நடத்துவதற்காக எடுத்துக் கொள்ளப்பட்ட நேரம்தானே தவிர வேறு அனாவசியமாக எந்தவித காலதாமதமும் இல்லையென்பதைத் தெரிவித்துக் கொண்டு இதைப்பற்றி எடுக்கப்பட்ட முடிவுகளை மின்சாரத்துறை அமைச்சர் அவர்கள் அளிக்க இருக்கிறார்கள் என்பதையும் தெரிவித்து எனவே இதைப்பற்றி விவாதம் தேவையில்லை என்பதைத் தங்களுக்கு எடுத்துக்கூறி மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் அறிக்கை அளிக்க இருக்கிறார்கள் என்பதையும் தெரிவித்து அமைகிறேன். வணக்கம்.

மாண்புமிகு திரு. ஓ.பி. இராமன் : தலைவரவர்களே, தமிழ்நாடு மின் வாரியத்திற்கும் அதன் தொழிலாளிகளுக்குமிடையே தற்போதுள்ள ஊதிய உடன்படிக்கை 1—12—1969 முதல் 30—11—1974 வரை அமுலில் உள்ளது. அந்த ஒப்பந்தத்தின்படி அகவிலைப்படியின் அடுத்த மாறுதல் 1—4—1974-ல் செய்யப்பட வேண்டும்; இருப்பினும் மின்சார வாரியத் தொழிலாளிகளின் கோரிக்கைகள், விலைவாசி உயர்வு ஆகியவைகளை கருத்தில்கொண்டு கீழ்க்கண்ட சலுகைகள் அளிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

விலைவாசி உயர்வின் காரணமாக கால் ஆண்டுக்கு ஒருமுறை மாறுதல் செய்வது என்ற அடிப்படையில் 1—10—1973 முதல் அதற்கு முந்திய காலாண்டு விலைவாசி புள்ளிவிவரங்களின் சராசரியின் பேரில் அகவிலைப் படியை உயர்த்த ஒப்புதல் அளிக்கப்படுகிறது.

1—10—1973 முதல் கூடுதலாகக் கொடுக்கப்பட வேண்டிய அகவிலைப் படி, 30—9—1973-யோடு முடிவு அடையும் கால் ஆண்டில் விலைவாசி புள்ளிகளின் சராசரிக்கும், 1972-ம் ஆண்டின் சராசரிக்கும் உள்ள வித்தியா சத்தின் பேரில் நிர்ணயம் செய்யப்படும்.

தற்காலிக தினக்கூலித் தொழிலாளி ஒவ்வொருவருக்கும் 1—10—1973 முதல் மாதம் ரூபாய் 30 என்ற விதத்தில் கொடுக்கப்படும்.

கால் ஆண்டு அடிப்படையில் கொடுக்கப்படும் அகவிலைப்படி உயர்வு தற்போது அமுலில் உள்ள உடன்படிக்கை முடிந்த பிறகு புதிதாக நிர்ணயிக்கப்படும் ஊதிய அளவில் சரிக்கட்டப்படும். இவ்வுத்தரவுகள் தொழில் தகராறு சட்டத்தின் பிரிவு 2 (எஸ்)-ன் கீழ் வரையறுக்கப்பட்டு, மாதம் ரூபாய் 750 வரை ஊதியம் பெறுகிற எல்லா மின் வாரியத் தொழிலாளிகளுக்கும் பொருந்தும்.



மேற்சொன்ன முறையில் நிர்ணயிக்கப்படும் கூடுதல் அகவிலைப்படித் தொகையில், தற்போதுள்ள ஒப்பந்தத்தின்படி 1974-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ம் தேதி கொடுக்க வேண்டிய கூடுதல் அகவிலைப்படி சரி செய் யப்படும்.

இவ்வுத்தரவுகள்படி 1973-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 1-ம் தேதி முதல் தற்காலிக தினக்கூலிகள் நீங்கலாக மற்ற மாதாந்திரத் தொழி லாளிகளுக்கு அகவிலைப்படி மாதம் ரூபாய் 33 வீதம் உயர்த்தப்படும்.

தற்காலிக தினக்கூலித் தொழிலாளர்களுக்கு மாதம் ரூபாய் 30 வீதம் கூடுதலாகக் கிடைக்கும்.

இந்த அகவிலைப்படி உயர்வினால் மின்சார வாரியத்திற்கு ஆண்டுக்கு சுமார் ரூபாய் 5 கோடி அதிகச் செலவு ஏற்படுகிறது.

தற்போதுள்ள தனது நெருக்கடியான நிதி நிலையை உணர்ந்து, இந்த அகவிலைப்படி உயர்வினால் ஏற்படும் கூடுதல் செலவை ஈடுகட்ட அதிகப்படி யான சர்சார்ஜ் வசூல் செய்யவேண்டியதன் அவசியத்தை அரசு ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று வாரியம் அரசைக் கேட்டுக்கொண்டுள்ளது.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார்........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் உட்காருங்கள். இல்லாத முன் மாதிரிக்கு இடம் கொடுப்பது நல்லது அல்ல.

திரு. கே. டி. கே. தங்கமணி : நான் சொல்வதற்கு முன்னாலேயே இப்படிச் சொன்னால் எப்படி? அட்ஜார்ன்மெண்ட் மோஷன் கொடுத்ததன் நோக்கமே அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க் வேண்டுமென் பதற்காகத்தான். அரசாங்கம் நடவடிக்கை எடுத்ததை பத்திரிகையிலே கொடுக்காமல் இங்கே வந்து தெரிவித்திருப்பது நல்ல மரபாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது மட்டுமல்ல. திரு. தங்கமணி அவர்களுக்குச் சொல்கிறேன். அமைச்சர் அறிக்கை அளிக்கப்போகிறார், எனவே ஒத்திவைப்புத் தீர்மானம் தேவையா என்ற கேள்வி வந்தது. ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருப்பதால் அது வந்தபிறகு அறிக்கை அளிப்பதுதான் முறையாக இருக்கும் என்ற முறையில் கொடுக் கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சரவர்களும், மாண்புமிகு மின் சாரத் துறை அமைச்சர் அவர்களும் கொடுத்த விளக்கங்களுக்குப் பிறகு இந்த ஒத்திவைப்புத் தீர்மானங்களுக்கு அனுமதி தர மறுக்கிறேன்.

(4) அறிவிப்பு.

தமிழ் நாடு, 1974-ம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்பு சட்ட முன்வடிவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ் நாடு, 1974-ம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டமுன் வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்வதற்கும், ஆய்வுக்கு எடுத்துக் கொள்வதற்கும், ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித் துள்ளார்கள்.

(5) அரசினர் சட்ட முன்வடிவு.

தமிழ் நாடு, 1974-ம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, தமிழ் நாடு, 1974-ம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, இச்சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச் சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

(6) 1974-75-ம் ஆண்டிற்கான நிதிக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

(அ) நிதிக் கோரிக்கை எண். 20—வேளாண்மை.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன் மொழிகிறேன் :

"நிதிக் கோரிக்கை எண். 20—வேளாண்மை என்ற தலைப்பின்கீழ் ரூ. 27,43,30,100-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, அரசுப் பண்ணைகள் அமைத்து எல்லாவித விதைகளையும் தயாரித்து மலிவான விலையில் விவசாயிகளுக்கு வழங்கவேண்டுமென விவாதிக்க—





"நிதிக் கோரிக்கை எண். 20—வேளாண்மை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 27,43,30,100-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. சௌடி. எஸ். சுந்தரபாரதி : தலைவரவர்களே, விவசாயி களுக்குக் கொடுக்கப்படும் விதைகளின் தரம் குறையாமல் விதைகளில் கலப்படம் ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டிய முன் ஏற்பாடுகள் குறித்து விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண். 20—வேளாண்மை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 27,43,30,100—இல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

THIRU M. A. LATHEEF : Sir, to discuss the need to relieve the agriculturists from the clutches of perpetual indebtedness, I move—

"That the allotment of Rs. 27,43,30,100 under Demand No. 20—Agriculture be reduced by Rs. 100."

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, to discuss the seasonal obstacles to the ryots in Dharmapuri district and the steps to be taken to remove them, I move—

"That the allotment of Rs. 27,43,30,100 under Demand No. 20—Agriculture be reduced by Rs. 100".

THIRU J. JAMES : Sir, to discuss the necessity to find out a new high yielding variety of paddy suitable to the climatic conditions prevailing in Kanyakumari district, I move—

"That the allotment of Rs. 27,43,30,100 under Demand No. 20—Agriculture be reduced by Rs. 100".

THIRU B. VENKATASWAMY : Sir, to discuss the need to start a separate Horticultural Directorate in Tamil Nadu, I move—

"That the allotment of Rs. 27,43,30,100 under Demand No. 20—Agriculture be reduced by Rs. 100".

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, வேளாண்மைத் துறையைச் சீரமைக்கும் பணியில் காலதாமதம் ஆவது பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண். 20—வேளாண்மை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 27,43,30,100-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்". என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. எ. சுப்பிரமணியம் : தலைவரவர்களே, வேளாண்மைக் கல்லூரிகளில் மாணவர்கள் எண்ணிக்கையை கணிசமாக அதிகரிப்பதன் அவசியம் குறித்து விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண். 20—வேளாண்மை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 27,43,30,100-இல் ரூ. 100 குறைக்க வேண்டும் ".

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

(ஆ) நிதிக் கோரிக்கை எண். 48—வேளாண்மை குறித்த மூலதனச் செலவு.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

"நிதிக் கோரிக்கை எண். 48—வேளாண்மை குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 31,69,75,100-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

Thiru K.S. KOTHANDARAMIAH: Sir, to discuss the need to supply more fertilisers and water-supply to ryots in right time, I move—

"That the allotment of Rs. 31,69,75,100 under Demand No. 48-Capital Outlay on Agriculture be reduced by Rs. 100".

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, விவசாயிகளுக்குச் சீராகவும் நியாய விலையிலும் இரசாயன உரங்கள் கிடைக்க ஏற்பாடு செய்யத் தவறியதைப் பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண். 48—வேளாண்மை குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 31,69,75,100-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. கே. என். குமாரசாமி: தலைவரவர்களே, உரம், பூச்சி மருந்துகள் நியாய விலையில் வழங்க உதவித் தொகை கொடுப்பது பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண். 48—வேளாண்மை குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 31,69,75,100-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.





Dr. H.V. HANDE: Sir, to discuss about the need to give subsidy to farmers for the purchase of fertilisers, I move—

"That the allotment of Rs. 31,69,75,100 under Demand No. 48—Capital Outlay on Agriculture be reduced by Rs. 100".

திரு. கே. எ. வகாப் : தலைவரவர்களே, தமிழகத்திற்குத் தேவையான உர வகைகளை வெளி நாடுகளிலிருந்து நேரடியாக இறக்குமதி செய்ய மத்திய அரசிடம் அனுமதி பெறுதல் சம்பந்தமாக விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண். 48—வேளாண்மை குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 31,69,75,100 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

Thiru J. JAMES: Sir, to discuss the necessity to make arrangements for the proper distribution of manure, I move—

"That the allotment of Rs. 31,69,75,100 under Demand No. 48—Capital Outlay on Agriculture be reduced by Rs. 100".

திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி : தலைவரவர்களே, பூச்சிக் கொல்லி மருந்துகளையும், உரங்களையும் ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் விநியோகிக்க வேண்டியதின் அவசியம் பற்றி வற்புறுத்த—

"நிதிக் கோரிக்கை எண். 48—வேளாண்மை குறித்த மூலதனச்செலவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 31, 69, 75, 100-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்@."

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

(இ) நிதிக் கோரிக்கை எண். 22—கால்நடை வளர்ப்பு.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :

" நிதிக் கோரிக்கை எண். 22—கால்நடை வளர்ப்பு என்ற தலைப்பின் கீழ் ரூ. 4,59,44,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும் ".

Thiru KOVAI CHEZHIYAN : Sir, to discuss policy, I move—

"That the allotment of Rs. 4,59,44,000 under Demand No. 22—Animal Husbandry be reduced by Rs. 100".

திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி : தலைவரவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க—

" நிதிக் கோரிக்கை எண். 22—கால்நடை வளர்ப்பு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 4,59,44,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும் " என்ற வெட்டுத் திர்மானத்தை முன்மொழிகிறேன்.

THIRU K. M. SUBRAMANIAM : Sir, to discuss policy, I move—

"That the allotment of Rs. 4,59,44,000 under Demand No. 22—Animal Husbandry be reduced by Rs. 100".

THIRU B. VENKATASWAMY: Sir, to discuss the need to provide at least a good breed of milch animal to each agricultural family in the State, I move—

"That the allotment of Rs. 4,59,44,000 under Demand No. 22—Animal Husbandry be reduced by Rs. 100".

திரு. கே. எ. வகாப் : தலைவரவர்களே, கால்நடை அபிவிருத்திக்காக தீவிர புல் சாகுபடித் திட்டம் அமுல்நடத்தல் பற்றி விவாதிக்க—

" நிதிக் கோரிக்கை எண். 22—கால்நடை வளர்ப்பு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 4,59,44,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும் " என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, கிராமப் பகுதிகளில் வேலை வாய்ப்பு அளிக்கும் முறையில் கூட்டுறவு முறையில் ஆடு வளர்ப்புப் பண்ணைகள் நிறுவி கால்நடை அபிவிருத்திக்கு திட்டமிட வேண்டுமென்று விவாதிக்க—

" நிதிக் கோரிக்கை எண். 22—கால்நடை வளர்ப்பு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 4,59,44,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும் " என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, to discuss about the need to provide more veterinary hospitals in Dharmapuri district, I move—

"That the allotment of Rs. 4,59,44,000 under Demand No. 22—Animal Husbandry be reduced by Rs. 100".

THIRU N. DENNIS: Sir, to discuss about the necessity to open more animal husbandry sub-centres in Kanyakumari district particularly one at Sankai in Killiyoor Panchayat Union area, I move—

"That the allotment of Rs. 4,59,44,000 under Demand No. 22—Animal Husbandry be reduced by Rs. 100".



THIRUMATHI T. N. ANANDANAYAKI: Sir, to discuss the need to increase the number of poultry farms in Tamil Nadu, I move—

"That the allotment of Rs. 4,59,44,000 under Demand No. 22—Animal Husbandry be reduced by Rs. 100."

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின் முன் விவாதத்திற்கு வைக்கப்படுகின்றன.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, வேளாண்மை, கால்நடை வளர்ப்பு பற்றிய குறிப்புகள் @ பல அச்சிடப்பட்டு புத்தக வடிவில் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. மானியக் கோரிக்கைகளை முன்மொழிகிற முறையில் ஒரு சில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன். வரவு-செலவுத் திட்டத்தின் போது, அந்த விவாதத்தின்போது பேசிய மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் பலர் இரசாயன உரங்கள், குறிப்பாக அமோனியம் சல்பேட், யூரியா, கால்ஷியம் அமோனியம் நைட்ரேட் போன்ற உரங்கள்.....

திரு. ஜே. ஜேம்ஸ் : ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர், சார். இப்போது சில நாட்களாக ஒரு பெரிய நெருக்கடி ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. மன்றத்திலே அங்கத்தினர்கள் அதிகமாக ஆஜர் இல்லாமல் இருக்கிறது. அதற்குக் காரணம் என்னவென்று சொன்னால் இங்கு நடைபெறுகிற விவாதங்களில் பங்கு கொள்வதற்கு அநேக அங்கத்தினர்களுக்கு வாய்ப்புக் கிடைப்பதில்லை. சாதாரணமாக இங்கு இருக்கின்ற மரபு எதிர்க்கட்சி அங்கத்தினர்களுக்குப் பாதி நேரம் ஒதுக்கப்பட வேண்டுமென்பது. இப்போது எதிர்க்கட்சிகளாக ஐந்து கட்சிகள் இங்கு செயல்பட்டு வருகின்றன. திராவிட முன்னேற்றக்கழகம் எதிர்க்கட்சியாக இருந்த நேரத்தில் அன்றாடம் நாலைந்து அங்கத்தினர்கள் மானியங்களின் மீது பங்கு கொண்டிருக்கிறார்கள்.

இன்றைய நிலை என்ன ? எங்களைப் போன்ற எதிர்க்கட்சிகளுக்கு ஒரு அங்கத்தினர் பாதி அங்கத்தினர் என்று வரையறுத்து நாங்கள் எதுவும் கூற முடியாத நிலை. நாட்டு மக்களுக்கு இங்கு ஒரு எதிர்க் கட்சி இருக்கிறதா என்ற ஐயப்பாடு தோன்றக்கூடிய அளவில் இருக்கிறது. இது நிச்சயமாக விரும்பத்தக்கதல்ல. தலைவர் அவர்களுக்கு ஒரு பெரும் நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது என்பது தெரியும். இந்த நிலையை எந்த முறையில் சமாளிப்பது ? தலைவர் அவர்கள் ஒருவேளை கூறலாம், பிசினஸ் அட்வைசரிக் கமிட்டியில் இந்த முறையில் தீர்மானம் செய்திருக்கிறார்கள், அதற்கு மேல் நான் ஒன்றும் செய்ய முடியாது என்று, இதற்கு மாற்று ஏற்பாடு செய்யவில்லை என்று சொன்னால் நாம் செயலாற்றுகின்ற முறை ஜனநாயகத்திற்கு நாம் ஆற்றுகின்ற பணியாக இருக்க முடியாது.

---

@ 656–712ம் பக்கங்களில் இணைப்புகள் III, IV—ஆக அச்சிடப்பட்டுள்ளன.

மேலும் 1½ மணிக்கு நிகழ்ச்சிகள் முடிவு பெற வேண்டுமென்று விதி முறைகள் இருக்கின்றன. அந்த நேரத்திற்கு மேல் இருப்பது என்று சொன்னால் உடல் நிலைக்குக் கூட உகந்தது அல்ல. 3, 3½ மணிவரை இங்கு இருந்து செயலாற்றுவது என்பது நிச்சயமாக முடியாத காரியம். அமைச்சர்கள் மதிய உணவை வேளாவேளைக்கு அருந்த வசதிகள் இருக்கின்றன. அங்கத்தினர்களுக்கு டிபன் சாப்பிடக் கூட அறைகளோ, வசதிகளோ இல்லாமல் மூன்று மணி வரை பணியாற்ற வேண்டுமென்று சொன்னால் அது முடியாத காரியம். இதற்கு மாற்று வழி கண்டு பிடித்தாக வேண்டும். எல்லா அங்கத்தினர்களுக்கும், எதிர்க்கட்சி அங்கத் தினர்களுக்கும் வாய்ப்பளிக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, இதையொட்டி ஒரு ஒழுங்குப் பிரச்சினை கிளப்ப விரும்புகிறேன். இந்த மன்றத்தில் 13 பேர் ஸ்தாபன காங்கிரஸ் உறுப்பினர்கள் இருக்கிறார்கள். 13 பேர் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் இருக்கிறார் கள். ஒரு மானியத்தில் பேசுவதற்கு ஸ்தாபன காங்கிரஸ் கட்சிக்கு இரண்டு பேருக்கு வாய்ப்புக் கொடுத்தீர்கள். ஸ்தாபன காங்கிரஸ் கட்சிக் கும், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் இரண்டு பேர் பேச வாய்ப்பளித்தால் சௌகரியமாக இருக்கும். ஜேம்ஸ் அவர்கள் சொன்னதை யொட்டி அதற்குச் சரியான வகையில் பரிகாரம் காணவேண்டும்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மானியத்தை முன்மொழிந்த பிறகு வெட்டுத் தீர்மானங்கள் கொடுக்கிறோம். அதற்குப் பிறகு விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளுகின்ற நிலையில் இப்போது புதிதாக ஒரு முறையைக் கையாண்டு கொண்டிருக்கிறார்கள். அமைச்சர்களுடைய உரை அச்சடித்துக் கொடுக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய முதலமைச்சர் அவர்கள்கூட முன்பு மானியங்களை முன்மொழிந்தபோது கூட அச்சடிக்கப்பட்ட அவருடைய உரை சபையின் குறிப்பில் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கூறி அமர்ந்து விட்டார்கள். ஆனால், இப்போது முன்னாலேயே அமைச்சர்கள் பேசுகிறார் கள். அது தவிர நடுவில் விளக்கம் அளிப்பதாகக் கூறி 10 நிமிஷம் 15 நிமிஷம் எடுத்துக் கொள்கிறார்கள். இதனால் நேரம் ஆகிவிடுகிறது. டிரான்ஸ்போர்ட் டிமாண்டு எடுத்துக் கொண்ட அன்று சரியாக 1½ மணிக்கு முடித்துவிட்டீர்கள். அதற்காகப் பாராட்டுகிறேன். அந்தமாதிரி ஸ்ட்ரிக்ட்டாக இருந்து சபாநாயகர் அவையை நடத்தட்டும். ஸ்தாபன காங்கிரசில் இருந்து 2 பேரும், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தி லிருந்து இரண்டு பேரும் பேசுவதற்குச் சந்தர்ப்பம் கொடுக்க வேண்டு மென்று தலைவரைக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. செ. கந்தப்பன்: தலைவர் அவர்களே, நம்முடைய சட்ட மன்றத் தில் நேரத்தை ஒதுக்கக் கடைப்பிடிக்கப்படுகிற முறை ஆளும் கட்சி உறுப்பினர்களை எல்லாம் வெகுவாகப் பாதிக்கிறது என்று சந்தர்ப்பம் கிடைக்கும்போதெல்லாம் வற்புறுத்திச் சொல்லி வந்திருக்கிறோம். இங்கு இருக்கும் சட்டமன்ற உறுப்பினர்கள் எந்தக் கட்சியைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் தங்களுடைய தொகுதியின் பிரச்சினைகளை மானியங்களின் விவாதத்தின்போது கண்டிப்பாகப் பிரதிபலிக்க வேண்டியிருக்கிறது.





நாடாளுமன்றத்திலும், வேறு பல சட்ட மன்றங்களிலும் எதிர்க் கட்சிக்குப் பாதி, ஆளும் கட்சிக்குப் பாதி என்ற அடிப்படையில் நேரம் பிரிக்கப்படுவதில்லை. சட்டமன்ற, நாடாளுமன்றத்தில் எத்தனை உறுப் பினர்கள் இருக்கிறார்கள் என்று பார்த்து, 10 மணி நேரம் அவை இருக்கிறது என்றால், இருக்கிற உறுப்பினர்களின் எண்ணிக்கையால் வகுக்கப்பட்டு ஒவ்வொரு கட்சியிலும் எத்தனை உறுப்பினர்கள் இருக்கிறார் களோ அதற்கேற்றாற்போல் நேரம் ஒதுக்கப்படுகிறது. மாண்புமிகு திரு. கே. டி. கே. அவர்களுக்கு இது நன்றாகத் தெரியும்.

ஆளும் கட்சியில் 170 பேருக்கு மேல் இருந்தும் கூட, பாதி நேரம் என்று சொல்லும்போதே எங்களுக்கு நேரம் கிடைக்கவில்லை. அப்படி இருந்தும் எங்கள் தலைவர்கள் அதற்கு இணக்கமாக இருக்கின்ற காரணத் தால் தாங்கள் அனுமதிக்கிறீர்கள். தலைமைப் பொறுப்பில் உள்ள தாங்கள் எத்தகைய நெருக்கடிக்குத் தள்ளப்பட்டிருக்கிறீர்கள் என்று தெரிகிறது. ஆனால் இது வெகுவாக எங்களைப் பாதிக்கிறது என்பதை அருள்கூர்ந்து மனதில் கொண்டு ஆளும் கட்சிக்காரர்களுக்கு நேரம் கிடைக்காமல் எதிர்க்கட்சிக்காரர்களுக்கே அதிக நேரம் கொடுக்கக்கூடிய சூழ்நிலையை உணர்ந்து இதற்கு ஏதாவது பரிகாரம் கண்டிப்பாகக் காண வேண்டுமென்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

THIRU R. PONNAPPA NADAR: Sir, I want to say one thing. So ar as allocation of time is concerned, the Members of the Ruling Party ire in a position to express their grievances to the Ministers and so far as heir demands are concerned, the Ministers would take care of them, ery well. But so far as the Opposition Parties are concerned, we are at a disadvantageous position; if I may say a Tamil expression, it would e quite proper. The time allotted to the Ruling Party is more than nough because most of the time is taken by Hon. Ministers and the Members of the Ruling Party—

" தோட்டத்தில் பாதி கிணறு என்று சொன்னால் அது மிகைப் படுத்திக் கூறுவதாக ஆகாது."

So, what I would suggest is that the elaborate speeches that are printed and circulated to us need not be repeated and that can be avoided by he Ministers at the beginning and the statements should be taken as ead. A limited speech may perhaps be allowed by the Hon. Speaker. That way much time can be saved. So far as the Congress Party (O) s concerned, we would be satisfied if two members are allowed and we lo not want any preferential treatment.

The A.D.M.K. seems to be looming large as Opposition and it seems a urking doubt is in the minds of the members of that Party that we are given more time. That is not the case and that is evident from the

[THIRU. R. Ponnappa Nadar] [1974 மார்ச் 19

fact that yesterday, the hon. Member Thiru Hande took more than 40 minutes and that the time allotted to two of us was less than that. Therefore, there is no partiality shown to us. If anybody entertains any doubt that more time is given to us, I would say without fear of contradiction that that is not true. So, Sir, allocation of time may be made in such a way that more time is given to the opposition parties than the members of the ruling party.

திருமதி த. ந. அனந்தநாயகி : திரு. கந்தப்பன் அவர்கள் சொன்ன முறையை இந்தச் சட்டசபையில் அமல் நடத்த ஆரம்பித்தால் எதிர்க் கட்சிகள் வேலையே செய்ய முடியாது. அவர்களே 174 பேர் இருக்கிறார்கள். தோழமைக் கட்சி வேறு இரண்டு மூன்று இருக்கின்றன. இவ்வளவையும் சேர்த்து எண்ணிக்கைப்படி நேரத்தை வரையறுத்தால் எதிர்க்கட்சி இயங்கவே முடியாது. அந்த அவல நிலை இங்கிருக்கிறது. பாராளுமன்ற முறை இதற்கு ஒத்து வராது. இந்த அவல நிலை இங்கு இருப்பதால் பாராளுமன்ற முறையைக் கையாளாமல் முடிந்த அளவுக்கு எதிர்க்கட்சிகளுக்கு நேரத்தைக் கொடுப்பார்களானால் அமைச்சர்கள் விளக்கம் கூற வாய்ப்பாக இருக்கும்.

திரு. நா. வீராசாமி : பாராளுமன்ற முறையை அவல நிலை என்று கூறக்கூடாது......

திரு. கே. டி. கே. தங்கமணி : இந்தப் பிரச்சினையை எழுப்பியது ஒருவகையில் உதவிகரமாக இருக்கிறது என்று நினைக்கிறேன். இந்த மாதிரி மானியக் கோரிக்கைகள் வரும்போது எதிர்க்கட்சிகளுக்கு அதிக வாய்ப்பைக் கொடுக்க வேண்டுமென்ற மரபை நாம் தொடர்ந்து அனுஷ்டித்து வருகிறோம். 1971-ல் இருந்து எதிர்க்கட்சிகளுக்குப் பாதி நேரம் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. பாதி நேரம் என்று வைத்திருக்கிறோம். மானியக் கோரிக்கைகள் சம்பந்தப்பட்ட மட்டில் ஆளும் கட்சி எடுக்கக்கூடிய நேரத்தில் அமைச்சர்கள் எடுத்துக்கொள்ளும் நேரத்தையும் எடுத்துக்கொள்ள வேண்டும்.

(முற்பகல் 10-30.)

அமைச்சர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் பல விஷயங்களை எல்லாம் எடுத்துச் சொல்கிறார்கள். நாடாளுமன்றத்தில் சில முக்கியமான மானியங்களைத்தான் அமைச்சர்கள் ஆரம்பித்து வைக்கிறார்கள். அது கந்தப்பன் அவர்களுக்கும் தெரியும். விவாதத்தை ஆரம்பித்து வைப்பதும் எதிர்க்கட்சியில் இருப்பவர்கள்தான், விவாதத்தை முடிப்பதும் எதிர்க் கட்சிக்காரர்கள்தான். வெட்டுப் பிரேரணைகள் கொடுக்கக் கூடிய வாய்ப்பு எதிர்க்கட்சியில் இருப்பவர்களுக்குத்தான் இருக்கிறது, ஆளும் கட்சியில் இருப்பவர்களுக்கு இல்லை.

ஆளும் கட்சியில் இருப்பவர்களைப் பொறுத்தவரையில், அவர்கள் கொறடா அவர்கள் எந்தெந்த மானியங்களில் யார் யார் அதிக அக்கறை எடுத்துக்கொள்கிறார்கள் என்று அவர்கள் குறித்துக் கொள்ள முடியும்.



1974 மார்ச் 19] [திரு. கே. டி. கே. தங்கமணி]

அமைச்சர்களுக்கும் விளக்கங்கள் சொல்ல சந்தர்ப்பம் இருக்கிறது. ஆகவே, நான் கேட்டுக்கொள்வது எங்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கும் இந்தப் பாதி நேரத்திலும் கட் ஏற்பட்டுவிடக்கூடாது. எங்களுக்குள் விவகாரம் இருக்காது. நாங்கள் எங்களுக்குள்ளே அட்ஜஸ்ட் செய்து முடிவு செய்து கொள்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களுக்குள்ளே விவகாரம் வந்துவிடுகிறதே.

THIRU B. VENKATASWAMY : Sir, it has already been stated by Hon. Members from the Opposition Bench that they should be given moretime. It is the duty of the Government to see that the Opposition members are able to speak, point out the defects and enable the Government to rectify themselves. By that procedure, the Government will be able to function in a good way. Mr. Speaker, Sir, you will also be benefited by giving us more time. So, I request the Hon. Speaker to give more time to Opposition Groups and see that more time is allotted to members belonging to the opposition so that we can put the brake wherever necessary and whenever the Government goes wrong. By giving more time to the opposition members, it would enable them to give good views or to make concrete criticisms about the irregularities.

Thank You, Sir.

திரு. து. ப. அழகமுத்து : தலைவர் அவர்களே, இப்போதுள்ள இந்த நடைமுறையில் "ஆளும் கட்சிக்கு பாதி நேரம், எதிர்க்கட்சிகளுக்குப் பாதி நேரம் என்றிருந்தாலும் எதிர்க்கட்சிகள்தான் இரண்டு மடங்கு நேரத்தை எடுத்துக்கொள்கின்றன. ஆளும் கட்சிக்கு உள்ளபடியே கிடைக்கக் கூடிய நேரம் மூன்றில் ஒரு பங்குதான், அமைச்சர் அவர்களையும் சேர்த்து. ஆனால் எதிர்க் கட்சியினர் அதிகமான நேரம் வேண்டுமென்று கோருகிறார்கள். திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் ஆளுங்கட்சி உறுப்பினர்கள் அமைச்சர்களிடம் சொல்லி குறைகளை நிவர்த்தி செய்து கொள்வதற்குச் சந்தர்ப்பம் இருக்கிற காரணத்தால் அவர்களுக்கு அதிக நேரம் வேண்டாமென்று சொன்னார்கள்.

ஆனால், சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் என்ன பேசினார்கள் என்றுதான் பத்திரிகைகளில் பார்க்கிறார்கள், அது இல்லை என்று சொல்ல முடியாது. ஆகவே, ஆளும் கட்சியில் இருக்கிற உறுப்பினர்களும் தங்களுடைய பேச்சுக்கள் பத்திரிகைகளில் வரவேண்டுமென்று நினைக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல. எனக்கு ஒரு மிகப் பெரிய நெருக்கடியை நீங்கள் உண்டுபண்ணுகிறீர்கள், எதிர்க்கட்சியினருக்கு அதிக நேரம் கொடுப்பதால். எங்கள் கட்சி உறுப்பினர்கள் வந்து பேச வேண்டுமென்று தொந்தரவு செய்யும்போது அவர்களுக்குச் சந்தர்ப்பம் கொடுப்பதற்கு எனக்கு வாய்ப்

பில்லாமல் போய்விடுகிறது. ஆகவே, சபாநாயகர் அவர்கள் ஆளுங் கட்சியை அதிக நெருக்கடிக்கு உள்ளாக்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு.எம்.ஏ. லத்தீப் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஜேம்ஸ் அவர்களும், திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்களும் இங்கே தோழமைக் கட்சிகள் என்று தனிப்படுத்தியும், எதிர்க்கட்சிகள் என்று தனிப்படுத்தியும் பேசியிருக்கிறார்கள். ஆனால், மாண்புமிகு கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் அவர்கள் மிக நல்ல முறையில் எடுத்துச் சொன்னார்கள், எதிர்க்கட்சியினருக்குத்தான் வெட்டுப் பிரேரணைகள் கொடுக்கக்கூடியவாய்ப்பு இருக்கிறது என்று. இங்கு இருக்கிற தோழமைக் கட்சிகள் என்று சொல்லக் கூடிய கட்சிகளாலும் வெட்டுப் பிரேரணைகள் கொடுக்கப்படுகின்றன. தோழமை என்பதும், எதிர்ப்பு என்பதும் அரசியல் வாயிலாக வைத்துக் கொள்ளப்படுகிற ஒரு அரசியல் உறவே தவிர சட்ட சபையைப் பொறுத்தவரையில் தோழமைக் கட்சியினர் என்று சொல்லக் கூடிய நாங்கள் எதிர்க்கட்சி வரிசையில்தான் உட்கார்ந்து கொண்டிருக்கிறோம். ஆகவே, எதிர்க்கட்சியினராகத்தான் பணியாற்றுகிறோம்.

வெட்டுத் தீர்மானங்கள் கொடுக்கிறோம். கண்டிக்கக் கூடிய இடங்களில் கண்டிக்கிறோம். எந்தெந்த இடங்களில் நல்ல காரியங்களை செய்தால் புகழ வேண்டுமோ அந்த அந்த இடங்களில் புகழ்கிறோம். எனவே, இப்படிப்பட்ட வகையில் உறுப்பினர்கள் பேசக் கூடாது என்று சொல்லி அமைச்சர்கள் முதலில் முன்னுரை விளக்கங்கள் அளிக்க வேண்டியதில்லை, விளக்கங்கள் குறித்து குறிப்புகள் கொடுக்கப்பட்டு விடுவதால். குறுக்கிட வேண்டிய அவசியம் இருந்தாலொழிய குறுக்கிடாது எழுப்பப்படுகிற பிரச்சினைகளுக்கு இறுதியில் அவர்கள் பதில் கூறலாம். எனவே,எதிர்கட்சிகாரர்களுக்கு இப்போது கொடுக்கப்பட்டிருக்கும் நேரத்தை விட அதிக நேரம் கொடுத்தால் பயனுள்ளதாக இருக்கும் என்ற என் கருத்தை வலியுறுத்திச் சொல்லிக்கொள்கிறேன்.

*திரு. ஆ. கு. சுப்பையா : தலைவர் அவர்களே, உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களை, தொகுதி விஷயங்களைச் சொல்ல வேண்டுமென்று ஆர்வப்படுவதால் அதிக நேரம் கொடுப்பது என்பது மட்டுமல்லாமல் மேலும் ஒரு பத்து நாட்கள் நீடித்து நடத்துவதற்கு முடிவு செய்யலாம் என்ற என் கருத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நேரங்கள் ஒதுக்குவது என்பதைக் குறித்து அலுவல் ஆய்வுக் குழுவில் பலதடவை இந்தப் பிரச்சினை எழுப்பப்பட்டு, எழுப்பப்பட்டு ஒரு குறிப்பிட்ட முடிவிற்கு வந்திருக்கிறோம், அந்த முடிவின் அடிப்படையில் தொடர்ந்து நேரம் ஒதுக்கப்படுகிற சூழ்நிலையும் இருக்கிறது. 234 உறுப்பினர்கள் கொண்டிருக்கிற இந்த அவையில் ஆளும் கட்சிக்குப் பாதி நேரம், மற்ற எல்லாக் கட்சிகளுக்கும் சேர்ந்து பாதி நேரம் என்று ஒதுக்குகிறோம்.



உறுப்பினர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் பார்த்தால் எதிர்க்கட்சியினருக்கு அதிகமான நேரம் கிடைக்கிறது. நடைமுறையில் பார்க்கும்போது கடைசியில் தொகுத்துப் பார்த்தால் அதிக நேரத்தை எதிர்க்கட்சியினர் பெற்றுக் கொண்டு வருகிறார்கள். அமைச்சர்களுக்குக் கொடுக்கக் கூடிய நேரத்தைக் குறைத்துக் கொண்டால் நாடும், மன்றமும், மற்றவர்களும் பெற வேண்டிய விளக்கங்களைப் பெறமுடியாமல் போய் விடும். அமைச்சர்களிடம் அதிக விளக்கங்களைப் பெற வாய்ப்பு ஏற்படுத்தினால்தான் அதிகப்படியான விளக்கங்கள் நாட்டுக்கும் கிடைக்கும், மன்றத்திற்கும் கிடைக்கும், மற்றவர்களுக்கும் கிடைக்கும், அந்தந்தத் துறையினரும் நல்ல முறையில் பணி செய்யவும் முடியும்.

திரு. லத்தீப் அவர்கள் சொன்னது போல் வேண்டுமென்றால் மானியக் கோரிக்கைகள் வரும்போது அமைச்சர்கள் முன்னுரைகள் கூற வேண்டிய அவசியமில்லை, குறிப்புகளைக் கொடுத்துவிட்டு இறுதியில் மட்டும் உரையை வைத்துக் கொள்ளலாம். ஏற்கெனவே, அலுவல் ஆய்வுக் குழுவில் நேரம் ஒதுக்குவதைப் பற்றி முடிவு செய்திருக்கிறோம். ஓரளவிற்கு இருக்கிற சந்தர்ப்பம் சூழ்நிலையைப் பொறுத்து—கட்சித் தலைவர்களுக்கு சிறிது அதிக நேரம் ஒதுக்கும் சூழ்நிலையும் இருக்கிறது. ஆகவே, ஏற்கனவே எடுத்துள்ள முடிவின்படி அதை நடைமுறைப் படுத்தும்படி தங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்கள் விவாதத்தில் கலந்து கொள்வதில் காட்டும் ஆர்வத்தை நான் வரவேற்கிறேன். ஆனால் நம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எடுத்துக் கூறிய கருத்து, உண்மை நிலையைப் பார்க்கும்போது அவர்களுக்கு அது சாதகமாக இல்லை என்பதை மட்டும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இந்த மூன்று நாட்கள் நடைபெற்ற விவாதத்தில் எதிர்க்கட்சிகளைச் சேர்ந்தவர்கள் 25 பேர்கள் பேசியிருக்கிறார்கள். ஆளுங்கட்சி சார்பில் 18 பேர்கள்தான் பேசியிருக்கிறார்கள். பாதிப் பாதி என்ற நிலையில் இல்லை.

அடுத்து, நேற்று பேசிய நேரத்தைப் பார்க்கிறபோது அமைச்சர் அவர்கள் இரண்டு முறை பேசிய நேரம் 65 நிமிடங்கள். ஆளுங் கட்சியைச் சார்ந்தவர்கள் பேசிய நேரம் 39 நிமிடங்கள். ஆக இரண்டையும் கூட்டினால் 104 நிமிடங்கள். 104 நிமிடங்கள் ஆளும் கட்சியினர் அமைச்சர் அவர்கள் உட்பட பேசியிருக்கிறார்கள். எதிர்க்கட்சிகள் தரப்பில், 139 நிமிடங்கள் பேசியிருக்கிறார்கள். பொது விவாதத்தைப் பார்க்கிறபோது 695 நிமிடங்கள் எதிர்க்கட்சிக்காரர்கள் பேசியிருக்கிறார்கள். ஆளுங் கட்சி சார்பில் 447 நிமிடங்கள்தான் அவர்களுக்குப் பேச வாய்ப்பளிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, நேரம் பாதி, பாதி என்றில்லை.

பலமுறை திரு. ஜேம்ஸ் அவர்களிடம் பேசுகிறபோது நான் சொல்லியிருக்கிறேன். இதைச் சொல்வது என்று சொன்னால் உங்களுக்குச் சாதகமாக இல்லாத ஒரு நிலை உருவாகும் என்ற கருத்தைச் சொல்லியிருக்கிறேன். முன்பு அதிக நேரம் கொடுக்கப்பட்டது என்றால் அப்போது

கட்சிகளின் எண்ணிக்கை குறைவாக இருந்தது. ஒரு கட்சிக்கு நான்கு பேர்கள் என்று பேசக் கூடிய நிலைகூட இருந்தது. இப்போது கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் கூட எட்டு ஒன்பது பேர்கள் வரக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அப்போது எதிர்கட்சிகளின் எண்ணிக்கை குறைவு. நான் கூடுமானவரையில் எதிர்க்கட்சியினருக்கு எந்த அளவிற்கு அதிக நேரம் கொடுக்கமுடியுமோ அந்த அளவிற்கு அதிக நேரம் கொடுக்க முயற்சிக்கிறேன்.

இன்னொன்று, இந்த அவையில் கிட்டத்தட்ட ஐம்பது கேள்விகள் கொடுத்து விடையளிக்கப்பட்ட நிலை எல்லாம் இருந்தது. இப்போது இருபது கேள்விகள் கொடுக்கிறோம். அந்த இருபது கேள்விகளுக்கும் உறுப்பினர்களுக்குப் போதுமான துணை வினக்கள் கேட்க வாய்ப்பில்லை என்ற ஒரு உணர்வு இங்கு எழுப்பப்பட்டிருக்கிறது. நான் தலைவர்களைக் கேட்டுக்கொள்வது இந்த 20 என்ற எண்ணிக்கையை பத்தாகக் குறைக்கலாமா அல்லது ஒரு மணி நேரம் என்ற அளவை ஒன்றரை மணி நேரம் என்று வைத்துக்கொள்ளலாமா, இதை எனக்குத் தெரிவித்துவிட்டால் உறுப்பினர்கள் எல்லாம் பேரவையில் நாங்கள் கையைத் தூக்கிக்கொண்டேயிருக்கிறோம், ஆனால் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை என்ற ஒரு குறை இல்லாமல் போய்விடும். இதற்கு ஏதாவது ஒரு விளக்கம் பெற விரும்புகிறேன். இன்றில்லாவிட்டாலும் நாளை அல்லது மறுநாள் தலைவர்கள் கூடி ஒரு முடிவு எடுக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

* **மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்:** தலைவரவர்களே, நான் என்னுடைய தீர்மானங்களை முன் மொழிந்து பேசத் தொடங்கியபோது குறுக்கிட்டுப் பேசிய எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எடுத்துக்கொண்ட 20 நிமிட நேரம் எதிர்க்கட்சிகளுக்கு ஒதுக்கீடு செய்த நேரத்திலிருந்து கழித்துக் கொள்ளப்படும் என்று கருதுகிறேன். (சிரிப்பு).

பட்ஜெட் பொது விவாதத்தின்போது பேசிய மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் பலர் ரசாயன உரங்கள் (குறிப்பாக, அமோனியம் சல்பேட், யூரியா, கால்சியம் அம்மோனியம் நைட்ரேட் முதலான உரங்கள்) மத்திய அரசு நிர்ணயித்துள்ள கட்டுப்பாட்டு விலைகளைக் காட்டிலும் மிகவும் அதிக விலையில் கள்ளச் சந்தையில் விற்கப்படுவதாகக் குறிப்பிட்டார்கள். இந்தியாவில் மட்டுமின்றி ஏறத்தாழ உலக நாடுகள் அனைத்திலுமே ரசாயன உரப் பற்றுக்குறை நிலைமை உள்ளதென்று நான் சுட்டிக் காட்டினால் மதிப்பிற்குரிய உறுப்பினர்கள், மனநிறைவு அடையப் போவதில்லை. இரண்டு வழிகளில் அப்பிரச்சனையைத் தீர்க்கலாமென்று நான் கருதுகிறேன். (1) கிடைக்கக்கூடிய ரசாயன உரங்கள், வேளாண்மைத் துறையைச் சேர்ந்த பெர்டிலைசர் இன்ஸ்பெக்டர்களின் விழிப்பான கண்காணிப்பின்கீழ், நியாயமாகவும், கட்டுப்பாட்டு விலையிலும் விநியோகம் செய்யப்பட வேண்டும். (2) ரசாயன உரப் பற்றுக்குறையைத் தீர்க்க, நைட்ரஜன் நிறைந்த கரிம உரங்கள் (Nitrogen-enriched Organic Manure) வினியோகிக்கப்படவேண்டும்.



**Thiru R. Ponnappa Nadar:** Sir, may I submit for your consideration.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மேசை மேலே அறிக்கை வைத்து இருக்கிறீர்களே.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** நாங்கள் எல்லாம் எங்கள் கருத்தைச் சொன்ன பிறகு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரிவாகப் பதில் சொன்னால் உதவிகரமாக இருக்கும் என்று கருதுகிறேன். மினிஸ்டரை இன்டரப்ட் செய்ய வேண்டுமென்று நான் குறுக்கிடவில்லை. இந்த அறிக்கை தமிழிலும், ஆங்கிலத்திலும் இருக்கிறது. நாங்கள் கருத்துரை சொன்னபிறகு அமைச்சர் விளக்கம் செய்வது பொருத்தமாக இருக்கும், சுருக்கமாக முடிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்:** சுருக்கமாக முடித்துக் கொள்கிறேன். விளக்கப் புத்தகங்களோடு இதையும் அச்சிட்டுத் தர வேண்டுமென்று நினைத்தேன், இயலவில்லை.

ரசாயன உரம் நியாயமான முறையில் வினியோகம் செய்தலைப் பொறுத்தவரையில், 1973–74-ல் (1973 ஆகஸ்டு முதல் 1974 ஜனவரி வரை) சம்பா (ராபி) பருவத்தின் போது, நமது மாநிலத்திற்கு 1,75,000 நைட்ரஜன் டன் அளவுக்கு உரங்கள் தேவைப்பட்டன. 1,00,619 நைட்ரஜன் டன் அளவுக்கு நமக்கு ஒதுக்கீடு செய்வதாக இந்திய அரசு ஒப்புக்கொண்டிருந்தபோதிலும், நமக்கு உள்ளபடியே வந்து சேர்ந்தது 87,186 நைட்ரஜன் டன்கள் தான். (நைட்ரஜன் டன் என்பது உரத்தில் உள்ள நைட்ரஜன் அளவை அடிப்படையாகக் கொண்டு கணக்கிடப்படுவதாகும்; எனவே, யூரியா என்றால் இந்த எண்ணிக்கையை 2·2-ஆல் பெருக்க வேண்டும். அமோனியம் சல்பேட் என்றால் 5 ஆல் பெருக்க வேண்டும்) 1974 குறுவை பருவத்தின் போது (1974 பிப்ரவரி முதல் 1974 ஜூலை வரை) காரிப் பருவத்தில் 1,30,000 நைட்ரஜன் டன்களை (இதில் 60 சதவீதம் நான் பூல் உரமாகவும், 40 சதவிகிதம் பூல் உரமாகவும்) வழங்கப்படுமென்று எதிர்பார்க்கப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்த அவையில் இந்த விவரங்களை வைத்து இருக்கிறீர்களா ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்:** அது வேறு. பொதுவாக அச்சிட்டுக்கொடுக்க முடியாத காரணத்தால் இப்போது சொல்கிறேன். இது ஒரு 5 நிமிடத்திற்கு மேல் ஆகாது.

ஒதுக்கீடு செய்வதாக கொச்சியில் நடந்த மண்டல மாநாட்டில் இந்திய அரசு ஒப்புக்கொண்டது. ஆனால் அந்த ஒதுக்கீட்டை 1,18,000 நைட்ரஜன் டன்னாகக் குறைத்திருப்பதாக இப்போது தகவல் வந்துள்ளது. எனவே, உரம் வழங்குவதில் எற்படக்கூடிய பற்றுக்குறைகளைச் சமாளிக்க நாம் தயாராக இருக்க வேண்டும். 1974, ஜூலை திங்களுக்குப் பின்னர் உர இறக்குமதிகள் குறித்து நிச்சயமாகச் சொல்வதற்கில்லை என்பதையும் நினைவிற் கொள்ள வேண்டும். உர Dealers மூலம் கூட்டுறவு சங்கங்கள் உட்பட வினியோகிக்கப்பட இருக்கும் உரம் எந்த அளவாக இருந்த போதிலும், அதனை உண்மையில் பயன்படுத்தும் விவசாயிகள் இடமிருந்து கையொப்பத்தைப் பெற்ற பின்னர், உரங்களை வணிகர்கள் வழங்க வேண்டும். உரம் வழங்கப்படுவது கண்டிப்பான முறையில் கண்காணிக்கப்பட வேண்டும். அப்போதுதான் வணிகர்களுக்கு ஒதுக்கப் பட்டுள்ள உரங்கள் கள்ளச் சந்தைக்குப் போய்ச் சேர வழி ஏற்படாது. 9,465 வணிகர்களைக் கண்காணிப்பதற்கு தற்போது மேற்பார்வை அதிகாரம் பெற்றுள்ள 8 முழுநேர உர இன்ஸ்பெக்டர்கள், மற்றும் வருவாய்த்துறை அதிகாரிகள் ஆகியோர் உள்ளனர். மேற்பார்வைப் பணி யாளர்களின் எண்ணிக்கையை உயர்த்தவும், வணிகர்கள் விற்பனை செய்வதை முறைப்படுத்தவும், நிபந்தனைகளைக் கடுமையாக்கவும் கருதப்பட்டுள்ளது.

ரசாயன உரப் பற்றுக் குறை நிலவி வருகையில், ஒவ்வொரு விவசாயிக்கும் பங்கீட்டு அளவின்படி கொடுக்கப்படும் உரம், மிகு பயன் அளிக்கும் பயிர்களுக்குப் போதுமானதாயிராது. ஆதலால் கிடைக்கும் உரத்தை நியாயமான அளவில் வழங்குவது மட்டும் போதாது. எனவே, உரங்களைக் கணிசமான அளவு அதிகரிப்பதற்கு வழி வகைகளை நமது மாநிலத்தில் நாம் காண வேண்டும்.

ரசாயன உரங்களுக்குத் துணையாக நகர்ப்புற, கிராமப்புற கம்போஸ்ட் டும் தொழு எருவும் பயன்படுத்தப்பட வேண்டுமென்று இந்திய அரசு கருத்துத் தெரிவித்துள்ளது. நகர்ப்புற கழிவுகளைக் கொண்டு கம்போஸ்ட் உரம் தயாரிக்க மத்திய அரசு நிதியுதவி வழங்கவும் உறுதி அளிக்கப்பட்டுள்ளது. ஆனால், மிகக் குறைவாக நைட்ரஜன் சத்து உள்ளதன் காரணமாக, கரிம உரங்கள் ரசாயன உரங்களுக்கு ஈடாகாது என்று டாக்டர் நார்மன் போர்லாக் போன்ற புகழ் பெற்ற வேளாண்மை அறிவியல் வல்லுநர்கள் குறிப்பிட்டுள்ளனர். ரசாயன உரங்களில் அடங்கியுள்ள நைட்ரஜன் சத்துடன், கரிம உரங்களில் அடங்கியுள்ள நைட்ர ஜன் சத்தை ஒப்பிட்டபோது, வேளாண்மை அறிவியல் வல்லுநர்களால் கூறப்பட்ட கருத்து மெய்ப்பிக்கப்படுகிறது.

| | நைட்ரஜன் சதவிகிதம். |
|---|---|
| யூரியா .. .. .. | 45 |
| அம்மோனியம் சல்பேட் .. | 20 |
| கிராமப்புற கம்போஸ்ட் .. | 0·9 |
| நகர்ப்புற கம்போஸ்ட் . . | 1·2 |
| தொழு எரு .. .. .. | 1·3 |





கரிம உரங்களில் நைட்ரஜன் சத்தைக் கூட்டுவதுதான் உரப் பற்றுக் குறையைத் தீர்ப்பதற்குரிய ஒரே வழியாகும். இதை எவ்வாறு நிறை வேற்றுவது என்பதே பிரச்சினையாகும். நைட்ரஜன் மிகுந்த லிக்னின் (மரப்பொருள்) உற்பத்தி செய்ய முடியும் என்பதை மேற்கு ஜெர்மனி, பிரான்ஸ்விக், உயிர் வேதியில் நிலையத்தைச் சேர்ந்த டாக்டர் பிளேய்க் கோவைக்கு வந்திருந்தபோது நிரூபித்துக் காட்டினார்.

இதையொட்டி நமது மண்வளச் சோதனை ஆய்வுக் கூடங்களில் சோதனைகள் நடத்தப்பட்டன. கரிம உரங்களில் அடங்கியுள்ள நைட்ரஜன் சத்தை 11 சதவீதம் வரை உயர்த்துவதில் நாம் வெற்றி அடைந் துள்ளோம். நைட்ரஜனை ஈர்த்துக் கொள்வதற்கு, கரும்புச் சக்கையை அடிப்படைப் பொருளாகக் கொண்டு சோதனை செய்யப்பட்டது. அது 10 சதவீதத்திற்கு மேல் நைட்ரஜனை ஈர்ப்பதாகக் கண்டறியப்பட்டது. நைட்ரஜன் மிகுந்த கரும்புச் சக்கையை, பயிர்களுக்கு உரமாகப் பயன்படுத்தி அவை நல்ல பலன்களைத் தருவதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

நைட்ரஜன் மிகுந்த கரிம உரங்களை உற்பத்தி செய்யத் திட்டம் இடப் பட்டுள்ளது. இந்த உரம் இரசாயன உரங்களின் பற்றுக்குறையைத் தீர்க்க உதவும் என்று இதன் மூலமாக உணவு உற்பத்தியில் இம் மாநிலத்தின் நற்பெயரை, தலை சிறந்த இடத்தைக காப்பாற்ற முடியும் என்றும் நான் நம்புகிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> இப்போது நமக்கு இருக்கும் நேரம் இரண்டே முக்கால் மணி. இதில் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு, இந்த வாதத்தைத் தொடங்குபவர்களுக்கு, முடிப்பவர்களுக்கு—ஆக மூன்று பேருக்கும் சேர்த்து ஒரு மணி. மீதி ஒண்ணேமுக்கால் மணி நேரம் இருக்கிறது. பதினேழு உறுப்பினர்கள் பேச இருக்கிறார்கள். ஒரு உறுப்பினருக்கு 6 நிமிடத்திற்கு மேல் வராது என்று தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு.) மறுபடியும் இதில் வாதம் தொடங்க வேண்டுமா ?

<u>திரு. சோ. அழகர்சாமி :</u> இது முக்கியமான விஷயம். வேளாண்மை பற்றிப் பல விஷயங்களைப் பேச வேண்டியிருக்கிறது. ஆதலால்.....

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> இது எல்லாம் பிசினஸ் அட்வைசரி கமிட்டியில் முடிவு செய்தாகிவிட்டது, தலைவர்களெல்லாம் சேர்ந்து பிசினஸ் அட்வைசரி கமிட்டியில் முடிவு எடுத்து விட்டார்கள். இன்று ஒரு வேளைதான் என்று முடிவு செய்து விட்டார்கள். ஆகவே, பேசுகின்ற உறுப்பினர்கள் 6 நிமிடத்திற்கு மேல் எடுத்துக்கொள்ள வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

<u>திரு. ஏ. ஆர். மாரிமுத்து :</u> மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, இந்த விவசாய மானியத்தின் பேரிலே எனது சில கருத்துக்களைச் சொல்ல முன் வந்துள்ளேன். விவசாயம் என்பது ஏதோ விவசாயத் துறை மட்டும் செய்யக் கூடிய காரியம் அல்ல. விவசாய அபிவிருத்திக்கு

அரசாங்கத்திலிருக்கிற பல்வேறு துறைகளின் மூலம்தான் நல்ல முறையில் அபிவிருத்தி செய்ய முடியும் என்பதை நாம் மறுப்பதற்கு இல்லை. விவசாய அபிவிருத்தித் துறையிலே உள்ளாட்சித் துறை, கூட்டுறவுத் துறை, பொதுப்பணித் துறை, வருவாய்த் துறை, மின்சாரத் துறை என்று எல்லாத் துறைகளும் சேர்ந்து அவர்களுடைய பணியைச் சிறப்பாக செய்தால்தான், ஒவ்வொரு துறையில் அவர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள காரியங்களை நல்ல முறையில் செயலாற்றுவதன் மூலமாகத்தான் இந்த விவசாய அபிவிருத்தியைச் செய்ய முடியும் என்ற கருத்தை நான் கூற ஆசைப்படுகிறேன்.

அதோடு, உலகத்திலே உள்ள இதர நாடுகளை விட நம்முடைய நாடு விவசாயத்திற்குச் சிறப்பான பல நன்மைகளை செய்து இருக்கிறது. இந்த நாடு போன்று மேலை நாடுகளில் பயிர் செய்யமுடியாது. அங்கேயெல்லாம் 6 மாதம், 8 மாதம் என்று பனி, குளிர்போன்று இருப்பதால் அவர்களுக்கு விவசாயம் செய்வதற்கு வேண்டிய தட்ப வெட்ப நிலை கிடைப்பது இல்லை. இங்கே வருஷம் பூராவும் நாம் ஓரளவிற்கு நல்ல முறையில் விவசாயம் செய்வதற்கு வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. இப்படி அட்வான்டேஜ் அதிகமாக உள்ள நாடாக இருந்தாலும்கூட, நம்முடைய விவசாயம் நமக்குத் தேவையான அளவுகூட வளர்ச்சி அடையாத நிலையில் இருப்பதை நாம் பார்க்கிறோம்.

அதுமட்டுமல்லாமல், சீதோஷ்ண நிலை, தட்ப வெட்ப நிலை மட்டுமல்லாமல், நம்மிடத்திலே மனித சக்தி அதிகமாக இருக்கிறது. மனித சக்தி மட்டுமல்லாமல் நிலங்கள் நிறைய இருக்கின்றன. இவ்வளவு வளர்ச்சியை நாம் செய்திருக்கிறோம். சுதந்திரம் கிடைத்து 26 ஆண்டுகளுக்குப் பிறகுகூட நாட்டிலே சாகுபடியாகாத தரிசு நிலங்கள் இருக்கின்றன என்பதை நாம் மறுக்க முடியாது. ஆகவே, நம்முடைய நாட்டிலே, நம்முடைய திட்டத்திலே, நம்முடைய வளர்ச்சி வேகத்திலே போதிய அளவு விரைவு காட்டப்படவில்லை. போதிய அளவு அக்கறை செலுத்தப்படவில்லை என்ற நிலை இருக்கிறது என்பதைத்தான் நான். இந்தச் சந்தர்ப்பத்திலே கூறிக்கொள்ள விரும்புகிறேன். தேசத்தினுடைய பொருளாதார வளர்ச்சிக்கெல்லாம் அடிப்படையாக இருக்கக்கூடியது விவசாயம். விவசாய வளர்ச்சி இல்லை என்றால், தேசத்தில் இதர பொருளாதார நிலைகளெல்லாம் சரிந்திருக்கக்கூடிய நிலையைப் பார்க்கிறோம்.

ஆகவே, எந்தத் திட்டத்தை எடுத்துக்கொண்டாலும், அது அது முக்கியம் என்றாலும்கூட தேசத்தினுடைய பொருளாதார அடிப்படை வளர்ச்சிக்கு விவசாயம் மிக மிக அடிப்படையானது, மிக மிக முக்கியமானது என்ற காரணத்தினால் இதற்கு மிக அதிகக் கவனம் செலுத்த வேண்டும். அதற்கு அரசு முன்வரவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். இந்த நிதிநிலை அறிக்கையிலே விவசாயத்தைப் பொறுத்த வரையிலே ஒதுக்கியிருக்கிற தொகை அவ்வளவு போதுமானதாக இல்லை என்பது என்னுடைய குறைபாடு. இது அடுத்த ஆண்டிலாவது நிறைவு செய்யப்பட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.





நெல் விளைச்சலை நாம் எடுத்துக் கொண்டால் சென்ற சில ஆண்டுகளுக்கு முன்பிருந்ததைவிட இப்பொழுது அதிகமாக உற்பத்தி செய்திருக்கிறோம் என்ற உண்மையை நாம் மறுப்பதற்கில்லை. நெல் அதிகமாக உற்பத்தி செய்திருக்கிறோம். விவசாயத் துறை அதிகாரிகளெல்லாம் அதிக உற்சாகத்தோடு பங்கு கொண்டு அதிகப்படியான விளைச்சலை உண்டாக்குவதற்கு முயற்சி செய்திருக்கிறார்கள். ஆனால் நம்மிடத்திலுள்ள விவசாய நிலங்களிலுள்ள உற்பத்தியை ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது பெர் எக்கர் யீல்டு இன்னும் அதிகரிப்பதற்கான வாய்ப்பு இருக்கிறது. பெர் எக்கர் யீல்டை இதர நாடுகளோடு ஒப்பிட்டுப்பார்ப்போமானால் அந்த அளவுக்கு நாம் அடையவில்லை. இப்பொழுதுள்ள புள்ளி விவரங்களின்படி எக்கருக்கு 1,000 கிலோ, ஒரு டன் ஆவரேஜ் என்ற அளவில்தான் இருப்பதாகத் தெரிகிறது. இவ்வளவு பெர் எக்கர் யீல்டு குறைவதற்கு என்ன காரணம்? இது குறையாமல் இருப்பதற்கு என்ன செய்ய வேண்டும். ஏன் இன்னும் அதிகப்படியாக்க முடியாது என்பதைப் பற்றி நாம் ஆராய்ச்சியைத் துவக்க வேண்டும். நான் சென்ற ஆண்டில்கூட குறிப்பிட்டேன். ஆராய்ச்சியில் நாம் மிகுந்த கவனம் செலுத்த வேண்டும். இந்த ஆராய்ச்சிதான் நமக்கு அதிகப்படியான விளைச்சலை ஏற்படுத்த வழி வகை செய்யும். ஆராய்ச்சி அல்லாமல் அனுபவத்தை மட்டும் நம்பினால் போதாது. ஆகவே, ஆராய்ச்சித் துறையிலே அதிகக் கவனம் செலுத்த வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

நமது தமிழகத்தைப் பொறுத்தவரையில் தஞ்சாவூர் மாவட்டம் நெல் அதிக உற்பத்தி செய்யக்கூடிய பிரதேசம். தஞ்சை மாவட்டத்தில் உற்பத்தி போதியதாக இருக்கிறது என்று இன்னும் நாம் ஒப்புக்கொள்ள முடியவில்லை. இப்பொழுது நாம் ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது, கோவை மாவட்டம், சேலம் மாவட்டம், செங்கற்பட்டு மாவட்டம் ஆகிய மாவட்டங்களிலுள்ள நஞ்சை விவசாயிகள் அவர்களுடைய நஞ்சை நிலங்களில் கிணற்றுப் பாசனமாக இருந்தாலும் சரி, ஆற்றுப் பாசனமாக இருந்தாலும் சரி, அதிகமாக விளைச்சலை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அந்த ஜில்லாக்களில் விளைகின்ற அளவுக்கு தஞ்சை ஜில்லாவில் இருக்கிற நஞ்சை விவசாயம் இல்லை. இதற்குக் காரணம் என்ன என்பதைக் கண்டு பிடித்தாக வேண்டும். அந்தக் காரணத்தைக் கண்டுபிடித்தால் இன்னும் ஒரு டன் அதிகமாக நாம் விளைவிக்க முடியும் என்ற நிலைமை ஏற்படுமேயானால், கிட்டத்தட்ட 15 லட்சம் டன் நாம் அதிகப்படியான நெல், அரிசியை உற்பத்தி செய்ய முடியும்.

தஞ்சை மாவட்டத்தில் வெகு நீண்டகாலமாக நெல் சாகுபடி தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டு வருகிறது. அதனால் பூசாரம் குறைந்து போய் இருக்கும். அந்தப் பூசாரத்தை நிறைவுபடுத்துவது எப்படி? அந்தப் பூசாரத்தை நிறைவுபடுத்துவதற்கு ஆர்கானிக் மென்யூரை வேண்டிய அளவிற்குப் போட வேண்டும். அதற்கு வேண்டிய முயற்சிகளை எடுத்துக் கொள்ள வேண்டும். ஆர்கானிக் மென்யூரை அதிகமாக உற்பத்தி செய்ய வழிவகைகள் காணவேண்டும். மண் பரிசோதனையை அதிகமாகச் செய்ய வேண்டும். இப்பொழுது மண் பரிசோதனை நிலையங்கள் தமிழகத்தில் 13 நிலையங்கள் இருக்கின்றன என்று

அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இது போதவே போதாது. ஏனென்றால், சாகுபடி செய்யக்கூடிய நிலத்தினுடைய தரம் என்ன என்று ஆராய்ந்து உரத்தைப் போட்டால், உரத்தில் கூட நாம் சேமிப்பு செய்ய முடியும். உரத்தை எந்த அளவுக்கு உபயோகிக்க வேண்டும் என்று பூமியின் தரத்தைத் தெரிந்துகொள்ளாமல் நாம் நினைத்த மாதிரி உரத்தைப் போடுவதென்றால், அதனால் உரம் வீணாகுமே தவிர, பெரிய பலன் கிடைக்காது. ஆகவே, நில வளப் பரிசோதனை என்பது ஆண்டுக்கு ஒரு தரம் அல்லது இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு தரம் நாம் மண் வளப் பரிசோதனை செய்வதற்காக அத்தியாவசியமான ஏற்பாடு செய்யவேண்டும். ஒரு மண் வளப் பரிசோதனை நிலையத்தை ஏற்படுத்துவதற்கு ரூ. $2\frac{1}{2}$ லட்சம் தேவைப்படுகிறது என்று அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது. இதற்காக ரூ. 50 லட்சம் ஒதுக்கி, 15, 20 மண் வள பரிசோதனை நிலையங்களை ஏற்படுத்தினால் பெரிய நஷ்டம் ஏற்படாது, லாபம் தான் கிடைக்கும். நாம் அதற்கு ரூபாய் அதிகமாக ஒதுக்கினால் தேசத்திற்கு ஒரு கோடி ரூபாய்க்கு அதிகப்படியான லாபம் கிடைப்பதற்கு சாத்தியக் கூறுகள் இருக்கின்றன. ஆகவே, இதிலே அதிகக் கவனம் செலுத்தவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில், விவசாயத் துறையில் ஈடுபட்டிருக்கிற விவசாயிகளுக்கு அது ஒரு லாபகரம் இல்லாத தொழில் என்ற எண்ணம் பரவலாக இருந்துகொண்டிருக்கிறது. படித்த இளைஞர்கள்கூட, விவசாயப் பட்டப் படிப்பு படித்துவிட்டு நேரடியாக விவசாயம் செய்வதற்குத் தயாராக இல்லாமல், உத்தியோகத்திற்குப் போவதற்கு முயற்சி செய்கிறார்கள். பி.எஸ்ஸி., (அக்ரி.) படித்தவர்கள் கூட அவருக்குச் சொந்தமாக 10, 20 ஏக்கர் நிலம் வைத்திருந்தால்கூட, அவருடைய பண்ணையில் வேலை செய்வதை விட உத்தியோகத்தை மேலாகக் கருதுகிறார். காரணம் என்ன? விவசாயத்தில் லாபம் இல்லை என்ற எண்ணம்தான். இந்த எண்ணம் போக்கப்படவேண்டும். விவசாயத் தொழில் லாபகரமானது என்பதை நாம் நிரூபிக்கவேண்டும்.

விவசாயத்தொழிலை லாபகரமாக்கி அதிலே இளைஞர்களை ஈடுபடச் செய்வதற்கான வாய்ப்பு வழிவகைகளை நாம் செய்யவில்லை என்றால், நாட்டில் இதரதொழில்கள் வளர்ச்சி அடைய முடியாது. இதர தொழில்கள் ஏற்பட்டால்தான் படித்தவர்களுக்கு வேலைவாய்ப்பு தர முடியும். அதற்கு வழிவகை செய்யவில்லை என்றால் அது எந்த நிலையில் போய் முடியுமோ என்று அஞ்சக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. இந்த நிலையில் விவசாயத்துறையில் பெரும் முயற்சிகளை அரசாங்கம் எடுத்துக் கொள்ளவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நெல் பயிர் விளைச்சலுக்கு ரசாயன உரத்தை நாம் அதிகமாக உபயோகிக்க வேண்டிய நிலையில் இருக்கிறோம். இப்பொழுது மத்திய அரசாங்கமும்,மாநில அரசாங்கமும் ரசாயன உரம் அதிகம் கிடைக்காத நேரத்தில் கரிம உரத்தை அதிகமாக உபயோகப்படுத்த வேகமாக முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறார்கள். இதை முன்னேற்றமான முறையில் செய்ய





வேண்டும். இந்த ஆண்டு விதை கிடைக்கவில்லை. பசுந்தாள் உர விதை தஞ்சை மாவட்டத்தில் விவசாயிகளுக்குக் காலாகாலத்தில் கிடைக்கவில்லை. நல்ல தருணத்தில் இந்த வருஷம் மழை பெய்திருந்தும்கூட, விதைகள் விதைக்க முடியவில்லை. பசுந்தாள் உர விதைகளை அதிகமாக விநியோகிப்பதற்கான முயற்சிகளை அரசாங்கம் எடுத்துக்கொள்ள வேண்டும்.

அதுவுமல்லாமல் கரிம உரத்தில் நைட்ரஜனை அதிகமாக ஏற்றச் செய்ய வேண்டும் என்று முயற்சி எடுத்துக் கொண்டிருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிக்கை படித்தார்கள். அது நல்ல முயற்சி. அந்த முயற்சி வெற்றிகரமாக நடைபெறுமானால் நமக்கு ரசாயன உரத்தேவை குறைந்துவிடும். அதற்காக அரசாங்கம் தனியாகத் தொகை ஒதுக்கி இந்த உரத்தை நைட்ரஜன் கண்டெண்ட் உள்ள ஆர்கானிக் உரமாக ஏற்படுத்துவதற்கு முயற்சி செய்யவேண்டும்.

இன்னொன்றும் நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். நாட்டில் கரிம உரம் தயார் பண்ணுவதென்றால், கம்போஸ்டு உரம் போட்டு தயார் பண்ணுகிறார்கள். அந்த உரத்தில் .9 அளவு தான் நைட்ரஜன் இருக்கிறது என்று அவர்கள் குறிப்பிட்டார்கள். காரணம் என்ன? அது முறைப்படி தயாரிக்கப்படுவதில்லை. அந்த உரத்தை முறைப்படி தயாரிப்பதற்கு பிளானிங் கமிஷனிலிருந்து, ரூரல் டெவலப்மெண்டு துறையிலிருந்து கம்போஸ்டு இன்ஸ்பெக்டர்கள் ஒவ்வொரு பிளாக்கிற்கும் போடப்பட்டிருந்தார்கள். ஆனால் அந்த இன்ஸ்பெக்டர்கள் ஒன்றுமே பண்ணுவதில்லை. வேறு ஏதாவது வேலையில்லாத வேலையைச் செய்துகொண்டு வந்தார்கள். கமிஷனருக்கு உதவி செய்து வந்தார்கள். கம்போஸ்டு இன்ஸ்பெக்டர்களை நல்ல முறையில் பயன்படுத்திக்கொண்டு ஒவ்வொரு கிராமத்திலும் கம்போஸ்டு உரத்தை வீடுகளில் இருக்கிற மாட்டு உரங்களை எப்படி கெடாமல் தயார் செய்வது என்பதற்கான விஷயத்தில் முழுக் கவனம் செலுத்தவேண்டும்.

இதற்கு முன்னால் இந்த அனுபவம் எனக்கு உண்டு. நான் சோஷலிஸ்டு கட்சியில் இருந்த காலத்தில் அவரவர்கள் ஊரில் கட்சி ஊழியர்கள் கம்போஸ்டு குழிகள் எவ்வளவு தயார் பண்ணினார்கள் என்று கேட்கப்படுவார்கள். கம்போஸ்டு குழி வெட்டுவது பற்றி கட்சி மூலம் நடவடிக்கை எடுத்திருப்பது எனக்கு ஞாபகம் இருக்கிறது. விவசாயிகள் எப்படி அந்த உரங்களைக் கெடாமல் தயாரிப்பது, பக்குவமாகத் தயாரிப்பதற்கு என்ன வசதி வேண்டும் என்று பார்த்து அவைகளைச் செய்து தர வேண்டும். வெயில் படாமல் இருப்பதற்கு பாதுகாப்பு அளிப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அப்படி உரம் நல்ல முறையில் தயார் செய்வதற்கு உண்டான வாய்ப்புகளை ஏற்படுத்தித் தரவேண்டும். அதற்கு வேண்டிய முயற்சிகளை எடுத்துக் கொள்ளவேண்டும். அதற்கான ஊழியர்கள் இருக்கிறார்கள். அவர்கள் நல்ல முறையில் செயல்படுவதற்கு முன்வர வேண்டும்.

[திரு. எ. ஆர். மாரிமுத்து] [1974 மார்ச் 19

அடுத்தபடியாக விவசாயம் என்று சொல்கிறபொழுது உரத்தைக் கொடுத்திருக்கிறோம். நிலம் இருக்கிறது. அதற்கு மேலே முதலீடு போட்டு உழவுபடி செய்வதற்கு சக்தி வாய்ந்தவர்களாகச் சிறு விவசாயிகள் இருக்கிறார்களா என்று பார்த்தால், பல்வேறு துறைகளின் மூலம் அவர்கள் கடன் தொல்லையில் அவதிப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். 80 சதவீதம் சிறு சிறு விவசாயிகள்தான். அவர்கள் கையில்தான் பெரும்பாலும் நிலம் இருக்கிறது. அவர்கள் கடன் தொல்லைக்கு ஆளாகி, பெரும் அளவுக்கு முதலீடு பண்ண முடியாத நிலையில் இருக்கிறார்கள். ஆகவே, அவர்களுடைய கடன் தொல்லையைப் போக்க என்னென்ன நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்று அரசாங்கம் சிந்திக்க வேண்டும். விவசாயிகளுடைய கடன் சுமை எப்படி இருக்கிறது என்று பரிசீலனை செய்ய வேண்டும். பொருளாதார நெருக்கடியிலிருந்து அவர்கள் பாதுகாக்கப்பட வேண்டும். (மணி அடிக்கப் பட்டது) நான் இப்போதுதான் பாயிண்ட்டுக்கு வந்திருக்கிறேன். நான் சொல்லக்கூடிய கருத்துகள் அரசாங்கத்தின் பரிசீலனைக்கு வசதியாக இருக்கும். ஆகவே, கொஞ்சம் நேரம் அதிகமாகக் கொடுங்கள்.

(முற்பகல் 11-00 மணி)

விவசாயிகளின் கடன் சுமையைப் போக்க, அவர்களைப் பாதுகாக்க முதலீடு செய்து, கடன் பூராவையுமே ரத்து செய்தால்கூடப் பரவாயில்லை. கடன் சுமையிலிருந்து அவர்கள் விடுபட வேண்டும். அதற்கு அரசாங்கம் முயற்சி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

''ஹை ஈல்டிங் வெரைட்டீஸ்'' நிறைய இருக்கின்றன. ஆனால் அவைகளைப் பயிர் செய்யும்போது ரசாயன உரம் பெருமளவுக்குத் தேவைப்படுகிறது. சாதாரண ரகங்களைவிட இந்த ஹை ஈல்டிங் வெரைட்டிக்கு 5 மடங்கு ரசாயன உரம் தேவைப்படுகிறது. இப்போது உரத்திற்குத் தட்டுப்பாடு அதிகமாக இருப்பதால், உரம் அதிகமாகத் தேவைப்படாத ஒரு ஹை ஈல்டிங் வெரைட்டியைக் கண்டுபிடிக்க வேண்டும். ஹை ஈல்டிங் வெரைட்டியாகவும் இருக்க வேண்டும். ரசாயன உரத்தைக் குறைவாகச் சாப்பிடக்கூடியதாகவும் இருக்க வேண்டும்; குறைந்த வயது உடையதாகவும் இருக்க வேண்டும். அப்படிப்பட்ட ஒரு வெரைட்டியைக் கண்டுபிடிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். விவசாய இலாக்கா அதிகாரிகள் அதற்குக் கவனம் செலுத்த வேண்டும். தஞ்சை மாவட்டத்திற்கு 90 நாள் பயிர் சிறந்ததாக இருக்குமென்ற என்னுடைய கருத்தை முன்னால் தெரிவித்திருந்தேன். அமைச்சரவர்கள் அதற்கு ஆவன செய்து கொண்டிருக்கிறார்கள். அதைப் போலவே இந்த வெரைட்டிக்கும் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இந்த ஹை ஈல்டிங் வெரைட்டிக்கு நாம் அதிகமாக ரசாயன உரங்களைப் பயன்படுத்துகிறோம். உரத்தை அதிகமாகப் பயன் படுத்த பயன்படுத்த பூச்சிகளும் கொழு கொழு என்று வளர்ந்து விடுகின்றன; பயிரை நாசம் செய்கின்றன. ஆகவே, பூச்சிகளை அழிப்பதற்கு உரிய காலத்திலே போதிய அளவுக்கு எல்லா விவசாயி களுக்கும் சுலபமாக பூச்சிக்கொல்லி மருந்துகள் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். அரசாங்கத்தின் மூலமாகவே பூச்சிக் கொல்லி மருந்துகளைத் தயாரித்து விநியோகம் செய்தால் மிகவும் நல்லது.



1974 மார்ச் 19] [திரு. எ. ஆர். மாரிமுத்து]

அதிலே எவ்வளவு செலவானாலும் பரவாயில்லை. உற்பத்தியைப் பெருக்குவதற்காக இந்த முயற்சியை செலவைப் பாராமல் மேற்கொள்வது சிறந்தது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மருந்து தெளிப்பதற்கு இப்போது ''பவ்வர் ஸ்பிரேயர்ஸ்'', ''ஹாண்ட் ஸ்பிரேயர்ஸ்'' என்று இரு வித தெளிப்பான்கள் வழங்கப்படுகின்றன. அதிகத் தூரத்திற்கு சீரான முறையில் மருந்து தெளிப்பதற்கு பவ்வர் ஸ்பேரயர்ஸ்தான் ஏற்றவைகளாக இருக்கின்றன. ஹாண்ட் ஸ்பிரேயர்ஸ் அவ்வளவு வசதியாக இல்லை. ஆகவே, ஹாண்ட் ஸ்பிரேயர்களை குறைத்துவிட்டு, இந்த பவ்வர் ஸ்பிரேயர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ரசாயன உர விநியோகத்தைப் பற்றி அதிகமாகச் சொல்லவேண்டியதில்லை. அதுபற்றி அடிக்கடி இந்த மன்றத்திலே பேசப்பட்டு வந்திருக்கிறது. ரசாயன உரம் தனியார்கள் மூலமாகவும் அரசாங்கத்தின் மூலமும் இப்போது விநியோகம் செய்யப்படுகிறது. இந்த முறையில் சில சிக்கல்கள் இருக்கின்றன. தனியார்கள் மூலம் உரம் விநியோகிக்கப் படுவதால், சில சமயங்களில் விவசாயிகளுக்கு உரம் கிடைக்காமல் போகிறது. ஆகவே, அரசாங்கமே உரம் முழுவதையும் விநியோகம் செய்தால் நல்லது. விநியோகத்தில் தனியார், அரசாங்கம் இரண்டு பேரும் இருக்கவேண்டுமென்ற நியதி இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அப்படி இருந்தால் தவறு எங்கே நடக்கிறது என்று கண்டுபிடித்து ஒழுங்காக விநியோகம் நடைபெற ஏற்பாடு செய்யவேண்டும். அதற்கு அதிகமான அதிகாரிகளை நியமிக்கவேண்டும். கண்காணிப்பு முறையைத் தீவிரப்படுத்தவேண்டும். உர விநியோகத்தைக் கண்காணிக்க மத்திய அரசு உதவி செய்வதாகச் சொல்கிறார்கள். அதைப்பற்றி எனக்கு தெரியாது. எப்படியாயினும், அதிகாரிகளை அதிகமாக நியமித்து, லோக்கல் அதிகாரிகளுக்கு அதிகாரங்களையும் அதிகமாக கொடுக்கவேண்டும். கவர்ன்மெண்ட் லைசென்ஸ் இல்லாமல் யாரும் உரம் விநியோகம் செய்யாமல் பார்த்துக்கொள்ளவேண்டும். அப்படி எங்காவது நடைபெற்றால் அவர்களை டி.ஐ.ஆர். சட்டத்தின் கீழ் கைது செய்து உள்ளே போடுங்கள். 20 பேரை உள்ளே போட்டால் மற்றவர்கள் கொஞ்சம் பயப்படுவார்கள். டி.ஐ.ஆர். சட்டத்தின் கீழ் போட்டால்தான் யாரும் அதைப்பற்றி கேட்கவும் முடியாது. ஆகவே, இந்த முறையை பரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, விவசாயிகளுக்கு கார்டு வழங்குவதில் ஊழல் இருப்பதாக திருநெல்வேலி மாவட்டத்திலிருந்து தபால் வந்திருக்கிறது. ஊழல் இல்லாமல் பார்த்துக்கொள்ளவேண்டும். அதிகாரிகள் மட்டத்தில் தவறுகள் நடைபெறுவதால், சர்வ கட்சி கூட்டம் போட்டு, தவறு நடக்காமல் கண்காணிக்க வேண்டும். அந்த முறை பயனுள்ளதாக இருக்கும் என்று கருதுகிறேன்.

விதைகள் விநியோகத்தில் நல்ல கவனம் செலுத்தப்பட்டிருக்கிறது. அரசாங்கமும் விநியோகம் செய்கிறது; தனியாரும் விநியோகம் செய்கிறார்கள். தனியார் ஒழுங்காக, தரமான விதைகளை விநியோகம் செய்கின்ற வகையில் ஊக்கப்படுத்தப்பட்டிருக்கிறார்கள். அதனால் அரசாங்கத்தின் பாரம் குறைய சாத்தியமாகும்.

அரசு பண்ணைகள் அமைத்திருப்பது வரவேற்கத்தக்கது. ஆனால் அது மாதிரிப் பண்ணை என்று இல்லாமல் ஆராய்ச்சிப் பண்ணையாகவும் இருக்கவேண்டும். சேலம் மாவட்டத்திற்குப் போயிருந்தபோது ஒரு இடத்தைப் பார்த்தேன். ரோடுக்கு கீழ்ப்புரம் ஒருவரும், ரோடிற்கு மேற்புரம் ஒருவரும் ஒரே சமயத்தில் திராட்சைத் தோட்டம் போட்டிருந்தார்கள். ஒரே மாதிரியான உரத்தைத்தான் ஒரே அளவில் இரண்டு பேரும் போட்டிருந்தார்கள். ஒருவருடைய தோட்டம் நன்றாக செழித்து வளர்ந்து நல்ல பலன் கொடுத்தது; அடுத்தவர் தோட்டம் ஒன்றும் இல்லாமல் போய்விட்டது. அதற்கு மண்தான் காரணம். இரண்டு இடத்திலும் ஒரேமாதிரியான மண் இல்லை. ஆகவே, வயலுக்கு வயல் மண் வேறுபடுகிறது. அதனால் மண் ஆராய்ச்சியை வயலுக்கு வயல் செய்ய மேற்கொள்ளவேண்டும். அப்போதுதான் மண்ணின் தன்மையை அறிந்து அதற்கு எற்ற விதை, உரம் போன்றவைகளைப் பயன்படுத்தி, நல்ல பலன் அடைய முடியும். ஆகவே, அரசாங்க பண்ணை மாதிரிப் பண்ணையாக மட்டும் இல்லாமல் ஆராய்ச்சிப் பண்ணையாகவும் இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த மாதிரிப் பண்ணைகளும் வட்டாரத்திற்கு ஒன்று என்ற அளவில் இல்லாமல் கிராமங்கள்தோறும் இருக்கவேண்டும். அந்தப் பகுதியிலுள்ள 100, 150 விவசாயிகளைச் சேர்த்து, மாதிரிப்பண்ணைகள் அமைக்க வேண்டும். அதற்கு போதுமான அதிகாரிகள்—டிபுடி அகிரிகல்ச்சர் ஆபீசர்கள் இப்போது இருக்கிறார்கள். அவர்களுடைய சேவையைப் பயன்படுத்திக்கொள்ளலாம். இந்த மாதிரிப் பண்ணையில் சேருகின்ற விவசாயிகளுக்கு சில சலுகைகளைக் கொடுத்து, ஒட்டு மொத்தமாக அந்த கிராமத்திற்குத் தேவைப்படுகின்ற எல்லாவிதப் பொருட்களையும் உற்பத்தி செய்கின்ற அளவில் பண்ணைகளை உருவாக்கவேண்டும். செலவுகளை அவர்களே ஏற்றுக்கொள்வார்கள். டெக்னிக்கல் அசிஸ்டன்ஸ் அரசாங்கம் கொடுத்தால் போதும். ஒரு கிராமத்தில் 2, 3 பண்ணைகள் கூட அமைக்கலாம். இந்தத் திட்டத்தைப் பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இருப்பது சிறுபாசனம். பி.டபிள்யூ.டி.யிலிருந்து இந்த வேலைகளைச் செய்கிறார்கள். விவசாயத் துறையிலே ஆழ் கிணறுகளைப் போடுகிறார்கள். அதற்கு செலவு அதிகமாகிறது. இதற்கு என்னுடைய ஒரு ஆலோசனையைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இப்போது கிணறுகளுக்கு இரும்பு பைப்புகள் போடுவதால் செலவு அதிகமாகிறது. ஒரு அடிக்கு 18 ரூபாய் செலவாகிறது. அதனால் ஒரு கிணற்றுக்கு 30,000, 40,000 ரூபாய் செலவாகிறது. இரும்புப்



பைப்புகளுக்குப் பதிலாக சிமின்ட் பைப்புகளைப் பயன்படுத்தினால் செலவு மிகவும் குறைவாகும். சிமின்ட் பைப்புக்கு ஒரு அடிக்கு 2 ரூபாய் தான் செலவு. சிமின்ட் பைப்பைப் பயன்படுத்தினால் 30,000, 40,000 ரூபாய் செலவிடுவதற்குப் பதிலாக 5,000 ரூபாய் போதுமானதாகும். 300 அடி ஆழம் வரையில் போர்வெல்களுக்கு சிமின்ட் பைப்புகள் பயன்படுத்தப்பட்டிருப்பதாக ஒரு ரிட்டயர்டு சூப்பர்வைசர் என்னிடம் தெரிவித்தார்.

அதுமட்டுமல்ல. இரும்பு பைப்புகள் ஒரு குறிப்பிட்ட காலத்தில் பழுதுபடக்கூடியவைகளாக இருக்கின்றன. ஆனால் சிமின்ட் பைப்புகளுக்கு கால வரையறையே இல்லை. அதற்கு வயதே கிடையாது. நீண்ட காலத்திற்கு இருக்கும். இப்போது இரும்பு விலையும் அதிகமாக இருக்கிறது. செலவு மிகவும் அதிகமாகிறது. ஆகவே, போர்வெல்களுக்கு சிமின்ட் பைப்புகளை பொருத்துவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். வேண்டுமானால், அதற்கு தரமான சிமின்ட் பைப்புகளை செய்யும் முறையை கண்டறிந்து சொல்வதற்கு ஒரு பரிசு திட்டத்தைக் கொண்டுவரலாம். 5 லட்சம் ரூபாய் வேண்டுமானால் பரிசு கொடுக்கலாம். இப்படிச் செய்வதில் தவறு இல்லை; அரசாங்கத்திற்கு நஷ்டமும் இல்லை. சுமார் 40,000 ரூபாய் செலவாகின்ற கிணற்றுக்கு 5,000 ரூபாய்தான் செலவாகும். ஆகவே, சிறு விவசாயிகளுக்கு இது மிகவும் பொருத்தமுடையதாக இருக்கும். அதற்கு அரசாங்கம் முயற்சி எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆராய்ச்சி நிலையங்களை எல்லாம் விவசாய சர்வகலாசாலையோடு இணைத்து விட வேண்டும் என்று கேட்கப்பட்டிருக்கிறது. அவர்கள் ஆராய்ச்சி பயனுள்ளதாக இருக்கும் என்பதால்—அவர்களிடமே ஆராய்ச்சி நிலையங்களைக் கொடுத்துவிடுங்கள். நாம் புதிதாகப் பண்ணிக் கொள்ளலாம்.

அடுத்து, பருத்தி மேம்பாடு என்கிறபோது லாங் ஸ்டேபிள் பருத்தி கோயம்பத்தூர் லட்சுமி மில்காரர்கள் இங்கே ஆராய்ச்சி பண்ணி கண்டு பிடித்திருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. இந்த ஆராய்ச்சியிலும் தொடர்ந்து நமது அரசும் ஈடுபட்டு, உயர்ந்தரக பருத்தி உற்பத்தியைப் பெருக்கவேண்டும்.

அடுத்து, இன்றையதினம் மார்க்கெட்டிங் யார்டு இருக்கிறதே தவிர அங்கே கொண்டுவந்து விவசாயிகள் விற்பதில்லை. அதிகாரிகள் என்னமோ செஸ் வசூல் பண்ணிக்கொண்டிருக்கிறார்கள். இதற்காக ஒரு சூப்ரவைசர், ஒரு ஜீப்—பத்தாண்டுகளுக்கு முன்னால் இந்த ஆக்டைக் கொண்டுவந்தபோது திருப்பூரில் கமிஷன் மண்டிக்காரர்களே மார்க்கெட்டிங் யார்டில் கடைகளை வைத்துக்கொண்டு செஸ் கட்டிவந்தார்கள். அதுபோன்ற நிலை இப்போது இல்லையென்று நினைக்கிறேன். இன்றைக்கு சட்டம் இருக்கிறது—சட்டத்தை சரியாக அமல்படுத்தவில்லை. எங்கெங்கே மார்க்கெட்டிங் யார்டு இருக்கிறதோ, அங்கங்கே மார்க்கெட்டிங் யார்டுக்குக் கொண்டுவந்துதான் விற்கவேண்டும் என்ற நடைமுறையை ஏற்படுத்த வேண்டும். செஸ் வசூல் பண்ணுவதாக இருக்கக்கூடாது. மேலும் விவசாயிகளுக்கு மார்க்கெட்டிங் யார்டில் கடன் கொடுக்கவும் ஏற்பாடு செய்வது நல்லது.

[திரு. எ. ஆர். மாரிமுத்து] [1974 மார்ச் 19

அதற்கப்பாலே கால்நடை அபிவிருத்தி, அதில் போதுமான கவனம் செலுத்தப்படவில்லை என்பது என் கருத்து. இன்றையதினம் மாவட்ட கால்நடைப்பண்ணைகள் இருக்கின்றன. அங்கேயுள்ள கால் நடைகளைப்போல கிராமாந்திரங்களில் விவசாயிகளிடம் இருக்கிற கால்நடை இருக்கிறதா என்றால் இல்லை. உழவு மாடு இருக்கிறது என்றால் உழவுக்கு லாயக்கில்லை. கறவை மாடு கன்று போட்டால் பாலே கிடையாது. அந்த அளவுக்கு லட்சக் கணக்கான கால்நடைகள் பயனற்றிருக்கின்றன. கால் நடைகளின் தீவனத்திற்கே வழியில்லை. மாடுகள் என்றால் இருந்து கொண்டே சாப்பிடும். தஞ்சாவூர் பால்பண்ணை பெடரேஷனில் கறவை மாடு வாங்கக் கடன் கொடுத்தார்கள். கடனைத் திருப்பித்தரவில்லை என்று அந்த மாட்டையே ஜப்தி செய்து ஓட்டி வந்தார்கள். அதை ஏலத்திற்கு விட்டபோது, ஓட்டிவந்த மாட்டுக்குக் கொடுத்த தீவனச் செலவு கூட அதில் இருந்து வரவில்லை. கால்நடை அபிவிருத்தியில் நாம் அடைந் திருக்கக்கூடிய வளர்ச்சி ஐந்து சதவீதம் கூட இல்லை.

இன்றைக்கு ஆர்ட்டிபிஷியல் இன்செமினேஷன் சென்டர்கள் வைத் திருக்கிறோம். அதை விரிவுபடுத்த நாம் கேட்டால் அவர்கள் கோடிக் கணக்கில் திட்டம் தருவார்கள். அதைப் பார்த்தவுடனேயே ஸ்டாண்டிங் கமிட்டி ஏற்றுக் கொள்ளாது என்று நாம் விட்டுவிடுவோம். ஆனால் இப்போதிருக்கிற ஊழியர்களை வைத்துக்கொண்டே நாம் அதை இன்னும் திறமையாகச் செய்ய முடியும். நான் அவர்களோடு பேசினேன். இருக்கக்கூடிய ஸ்டாப்களை ஒருங்கிணைந்து செயல்படச் செய்தாலே எல்லா இடங்களிலும் அவர்கள் திறமையாகச் செயல்பட வழிசெய்ய முடியும். உதாரணமாக இன்றைக்கு கால்நடை அபிவிருத்தி என்று தனியாக வைத்திருக்கிறோம். டைரி பார்ம் என்று தனியாக வைத்திருக்கிறோம். டைரி பாரத்தையும் இவர்களிடமே ஒப்படைத்தால்—டூப்ளிகேஷன் இருக்காது.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: மத்திய சர்க்கார்தான். தனியாக டைரி கார்ப்பரேஷன் என்ற முறையில் நடக்கவேண்டும் என்றார்கள். இந்த மாதிரி உருவாக்கிவிட்டார்கள். கால்நடைத், துறையோடு அதனை இணைக்க அவர்கள் ஒத்துக்கொள்ளவில்லை. அதன்காரணமாக தனியே இயங்கவேண்டிய ஒரு அமைப்பை இது பெற்றிருக்கிறது.

திரு. எ. ஆர். மாரிமுத்து : அது சென்டரின் குறைபாடாக இருக் கலாம். அது தனியாகவே இயங்குகிறது என்று வைத்துக்கொண்டால் நாம் சில நடைமுறை மாற்றங்களை ஏற்படுத்திக்கொள்ளக்கூடாதா? உதாரணமாக 360 யூனியன் என்றால் 100 யூனியன்களை அவர்களிடமே ஒப்படைத்துவிடுங்கள். அங்கே டைரி, கால்நடை அபிவிருத்தி எல்லா வற்றையும் அவர்களே பார்த்துக்கொள்ளட்டும். மற்றதை நாம் பார்த்துக் கொள்வது என்றால் இன்னும் நல்லமுறையில் செயல்பட வாய்ப்பு இருக்கிறது என்பதைத்தான் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.



1974 மார்ச் 19] [திரு. எ. ஆர். மாரிமுத்து]

கால்நடைக் கல்லூரியை அக்ரிகல்சுரல் யுனிவர்சிடியிடமே கொடுத்து விட வேண்டுமென்று கேட்பதாகத் தெரிகிறது. ஏன் ஒப்படைக்கவில்லை? ஒப்படைப்பதனால் என்ன சங்கடம் வந்துவிடும்? அவர்களிடம் ஒப்படைப்பதில் ஹெசிடேஷன் இல்லாமல் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் கோழிகளை வைத்திருக்கிறோம். பாங்கிலே கோழி வளர்க்க கடன் கொடுக்கிறார்கள்—வாங்கியவர்கள் கோழித்தீவனம் இல்லை—முட்டை இல்லை, நட்டப்பட்டு கடனைக் கொடுக்க முடியாத நிலையில் இருக்கிறார்கள். உடனடியாக கோழித் தீவனம், மாட்டுத் தீவனம் இவற்றை அரசாங்கமே தயார் செய்து கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

அடுத்து, பயிர் இன்ஷியூரன்ஸ் திட்டம்—இராமநாதபுரம், திருநெல்வேலி போன்ற இடங்களில் இதை அமலாக்க முயற்சி செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இவ்வளவு நேரம் பேச அனுமதி கொடுத் ததற்கு தலைவருக்கு நன்றி . வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லாக் கட்சித் தலைவர்களும் மாலையிலும் கூட்டம் வைத்துக்கொள்ளலாம் என்று சொல்லுகிறார்கள். மாலைக் கூட்டம் என்றாலும் ஒரு உறுப்பினர் 10 நிமிடத்திற்கு மேற்படாமல் பேசினால்தான் முடியும்.

*திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்): மிஸ்டர் ஸ்பீக்கர் சார். விவசாயத்துறை மானியக் கோரிக்கையை ஆதரித்து, விவசாயி களுக்காக உண்மையிலேயே பாடுபடக்கூடிய அனைத்து அதிகாரிகளுக்கும் என்னுடைய வாழ்த்துதலை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு நாம் இப்போதுள்ள நிலைமையி லேயே இருந்தால்—நம்முடைய உற்பத்தி வெகுவாக பாதிக்கப்படக்கூடிய சூழ்நிலைதான் வருமோ என்று அஞ்ச வேண்டிவர்களாக இருக்கிறோம் விவசாயிகளுக்குத் தேவையான பூச்சி மருந்துகள், அதுபோல உரங்கள், நல்ல விதைகள் அவர்களுக்குக் கொடுத்துவிட்டால்—நமது விவசாயிகள் மிகவும் திறமையுள்ளவர்கள்—மற்ற மாநிலங்களுக்கும் உணவு தரக் கூடிய அளவுக்கு உற்பத்தியைப் பெருக்கிவிடுவார்கள்.

ஆனால், அண்மையில் மாநிலங்களுக்கிடையே உள்ள உணவுக்கட்டுப் பாட்டை நீக்கப் போவதாக அறிவித்துள்ளார்கள். இதன் காரணமாக இங்கே உணவுப் பஞ்சம் வரப்போகிறது. மேலும் ஜூலை முதல் வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுகிற உரத்தை நிறுத்தப்போவதாக, இனி உர இறக்குமதி இல்லை என்கிறார்கள். இதற்கு மாற்று ஏற்பாடும் இல்லை. ஆகவே அடுத்த சம்பாப் பயிருக்குப் போதுமான உரம் இங்கே கிடைக்காது விவசாயிகள் பாதிக்கப்படப்போகிறார்கள் என்பதை சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அதுவும், ஹை ஈல்டிங் வெரைட்டி ஆகிய ஐ. ஆர்.-8 ; ஐ. ஆர் 20, ரத்னு, கருணு போன்ற பயிர்களுக்கு அதிகமான பூச்சி மருந்துகளையும் கொடுத் தாகவேண்டும். இல்லையென்றால் விவசாயிகள் மிகுந்த கஷ்டத்திற்

குள்ளாவார்கள். அதுவும் இந்த ஹை ஈல்டிங் வெரைட்டி பயிருக்கு குறைந்த பட்சம் 50 கிலோ யூரியா வேண்டும். ஆகவே, நமக்குப் போதுமான உரம், பூச்சி மருந்து இவ்வாண்டு கிடைக்காது. என்றால் விவசாயிகளிடம் தயவு செய்து இந்த ஹை ஈல்டிங் வெரைட்டீஸ் பயிரிட வேண்டாம் என்று முன் கூட்டியே விவசாய இலாக்கா அதிகாரிகள் சொல்லிவிட வேண்டும். இல்லையென்றால் அவர்கள் பலவிதமான கஷ்டத்திற்கும், வேதனைக்கும் உள்ளாகவேண்டியிருக்கும்.

விவசாயிகள் சார்பில் அரசாங்கத்திற்குச் சொல்ல விரும்புகிறேன். விவசாயிகளுக்கு பாதகம் உண்டாகக்கூடாது என்ற முறையில் சொல்ல விரும்புகிறேன். திரு. மாரிமுத்து அவர்கள் பேசும்போது கூட பெஸ்டிசைட்ஸ் கிடைக்கவில்லை என்று சொன்னார்கள். இன்றைக்கு என்ன நடைபெறுகிறது ? இ. ஓ. அக்ரிகல்சர்—டி. ஏ. ஓ. அல்லது பிராஜெக்ட் ஆபீசருக்கு அவரது பகுதிக்கு எந்த அளவு பூச்சி மருந்துகள் தேவை என்பதை க்வார்டர்லி இண்டேண்ட் கொடுக்கிறார். டி. ஏ. ஓ. மேலே உள்ள டைரக்டர் ஆப் அக்ரிகல்சருக்கு மொத்த மாவட்டத் தேவைகளைக் குறித்து இண்டெண்ட் அனுப்புகிறார். டி. ஏ. to procure by placing orders with approved firms for approved chemicals at approved rate contracts; என்கிற முறையில் பூச்சி மருந்துகளை வாங்கி விநியோகிக்க வேண்டிய நிலையில் இருக்கிறபோது, இங்கேயுள்ள அதிகாரிகள் திறமையாக முன்கூட்டி செயல்படாத காரணத்தினால், நடைமுறை ஆண்டில் தமிழகத்திற்குத் தேவையான Endrin BHC 50 percent, Mythyl parathin, Metacid camb, DDT, sumathian * BHC 50, Heptachlor, 3 per cent, dust Ludana 5 per cent, Granules Helio tax and Rogar ஆகிய பூச்சி மருந்துகள் விவசாயிகளுக்கு முறைப்படி கிடைக்கவில்லை. இதுதான் தமிழகத்தில் இன்றைக்கு அவதி நிறைய ஏற்பட்டிருப்பதற்குக் காரணம் என்பதை சொல்லாமல் இருக்க முடியவில்லை. அதேபோல் கெமிகல் பர்டிலைசரும் போதுமானதாகக் கிடைக்கவில்லை. இதிலும் அதிகாரிகள் திறமையாக நடக்க வில்லை என்று நான் அறிகிறேன். இல்லையென்றால் 55 ரூபாய் யூரியா உர மூட்டை 110 ரூபாய்க்கு விற்கிறது. இதை அவர்கள் எப்படிப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் ? மத்திய சர்க்கார் நமக்கு பவர் அதிகமாகக் கொடுக்க வேண்டுமென்று சொல்லிப் பிரயோசனம் இல்லை. எத்தனை வியாபாரிகள் அதிகமாக விற்றார்கள் ? அவர்களில் எத்தனை பேர்களுடைய லைசன்ஸ்களை ரத்து செய்திருக்கிறார்கள் ? எத்தனை பேர்களுடைய லைசன்ஸ் சஸ்பெண்ட் செய்யப்பட்டிருக்கிறது ? என் செய்கிறார்கள் ? ஆகவே, இன்றைக்கு நான் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன், டைரக்டர் ஆப் அக்ரிகல்ச்சர் ஐ. ஏ. எஸ். அதிகாரியாக இருக்கக் கூடாது. இன்றையத் தினம் திறமை மிக்க ஐ. ஏ. எஸ். இல்லாதவர் பொறுப்பேற்றிருக்கிறார். அவர் அந்த இலாகாவைவிட்டுப் போனபிறகும் வேறு ஐ. ஏ. எஸ். அதிகாரியைப் போடக் கூடாது. அந்த இலாகாவிலே இருக்கிற ஐ. ஏ. எஸ். இல்லாத சீனியர் அதிகாரிதான் அந்த இலாகாவைத் திறம்பட நடத்த வேண்டும். பெஸ்டிசைட்ஸ், கெமிக்கல் பெர்டிலைசர்ஸ் இவைகளைத் கண்காணிக்கின்ற அதிகாரிகள் திருத்தப்பட வேண்டும், அல்லது மாற்றி அமைக்கப்பட வேண்டுமென்றும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.





உரத்தை சரியாக விநியோகிக்க இன்ஸ்பெக்டர்களைப் போட வேண்டுமென்று சொல்லி வருகிறார்கள். அமைச்சர் அவர்கள் கூடச் சொன்னார்கள். ரூபாய் 55-க்கு விற்க வேண்டிய உரம் ரூபாய் 110-க்கு விற்கிறார்களா ? அந்த வியாபாரிகளில் எத்தனை பேர்களது லைசென்ஸ்களை நாம் ரத்து செய்திருக்கிறோம் ? அதுதான் காரணம். அந்தக் காரணத்தினால், இன்றைக்கு தமிழகத்திலே பிளாக் மார்க்கெட்டில் உரம் அதிக விலைக்கு விற்கிறது. கிடைப்பது 10 கிலோவாக இருந்தாலும், அதை நியாயமாகப் பிரித்துக் கொடுங்கள். அதை மற்றவர்களிடம் விட்டு விட்டு வேடிக்கை பார்க்க வேண்டாமென்றுதான் சொல்ல விரும்புகிறேன்.

இன்னொன்று, கெமிக்கல் பெர்டிலைசரைப் பொறுத்தவரையிலே, நம்முடைய அமைச்சர் அவர்கள் விளக்கம் சொன்னார்கள்—அதிகமான இன்ஸ்பெக்டர்களைப் போடப் போகிறோம் என்று, வரவேற்கத்தக்கது. இப்பொழுது இரசாயன உரங்களிலே இரண்டு வகை இருக்கிறது. ஒன்று ஸ்டேட் பெர்ட்டிலைசர், மற்றொன்று காம்ப்ளெக்ஸ் பெர்ட்டிலைசர். ஸ்டேட் பெர்ட்டிலைசரைப் பொறுத்தவரையில் வியாபாரிகளிடத்திலே விட வேண்டாம். அம்மோனியம் சல்பேட், யூரியா போன்றவைகளை தனிப்பட்டவர்கள் யாருக்கும் விற்கக் கூடாது. கிடைக்கும் மொத்தத்தையும் கூட்டுறவு துறைக்கே ஒதுக்கிவிடுங்கள். கூட்டுறவு சொஸைட்டிகள் மூலமாக, கார்டுகள் வழங்கி, கையெழுத்துப் போட்டு, அவர்களிடமே விட்டு விடுங்கள் தனிப்பட்டவர்களுக்குக் கொடுக்காதீர்கள்.

ஆனால், காம்ப்ளெக்ஸ் பெர்டிலைசரைப் பொறுத்த வரையிலே, எதுவாக இருந்தாலும், சென்ட்ரல் பாங்கில் லோன் சாங்ஷன் ஆனபிறகு, டி. சி. எம். எப். மூலமாகக் கொடுத்து விடுகிறார்கள். இதனால் விவசாயினுடைய நிலை என்னவாயிற்று ? நடவு நடக்கும்போது, உரத்திற்கு அப்ளிக்கேஷன் போட்டால், அறுவடைக்குத் தான் வருகிறது. அறுவடைக்குப் பிறகு உரத்தைக் கொடுத்தால், அவன் கடையிலே விற்கிறான். வேறு என்ன செய்வான் ? அந்தக் காரணத்தினால், டி. சி. எம். எப். மூலமாக, ஏராளமான உரங்கள் சரியான காலத்திலே கிடைக்காததால், விவசாயிகளுக்கு அல்லல் ஏற்படுகிறது என்பதைத் தெவிவித்துக் கொள்றன்.

என்னுடைய தென்னாற்காடு மாவட்டத்திலே, கூட்டுறவு வங்கிகள் மூலமாக உரத்திற்காக் சாங்ஷன் செய்யப்பட்ட அப்ளிக்கேஷன்கள், எத்தனை, ஒவ்வொன்றையும் எப்பொழுது கொடுத்தார்கள், எப்பொழுது உரங்களை சப்ளை செய்திருக்கிறார்கள் என்பதை நூற்றுக்கணக்கான உதாரணங்களோடு சொல்ல முடியும். நேரம் இல்லாத காரணத்தால், இரண்டு மூன்றை மட்டும் சொல்ல விரும்புகிறேன்.

நல்லாத்தூரில் 17—7—1973-ல் ரூபாய் 55,896-க்கு "பே ஆர்டர்" சென்ட்ரல் பாங்கில் கொடுத்திருக்கிறார்கள். 18—8—1973 முடிய ரூபாய் 77,201-க்கு "பே ஆர்டர்" கொடுத்திருக்கிறார்கள். ஆனால், 31—8—73 முடிய ரூபாய் 46,231க்கு இன்னும் உரம் சப்ளை செய்யவில்லை. சப்ளை செய்தது ரூபாய் 30,970-க்குத்தான்.

[திரு. வி. கிருஷ்ண மூர்த்தி] [1974 மார்ச் 19

அடுத்து, என்னுடைய தொகுதியில் எழுமேட்டில் 20—7—1973-க்கு சென்ட்ரல் பாங்க் "பே ஆர்டர்" கொடுத்திருக்கிறது. ஆனால், 31—8—1973 வரை உரம் சப்ளை செய்யவில்லை.

நம்முடைய நண்பர் செல்வராஜ் அவர்களுடைய விருத்தாச்சலம் தொகுதியிலே இருக்கிற பெலாந்துரையில் 23—5—1973, 15—6—1973 ஆகிய தேதிகளில் ரூபாய் 8,896-க்கு "பே ஆர்டர்" கொடுக்கப்பட்டிருக்கிறது. 31—8—1973 வரை, 3 மாதமாகியும் சப்ளை செய்யப்படவில்லை, ஒரு மணி பெர்ட்டிலைசர் கூடச் சப்ளை செய்யப்படவில்லை.

பரவனூரில் 24—7—1973-ல் ரூபாய் 13,037-க்கு "பே ஆர்டர்;" கொடுத்திருக்கிறார்கள். ஆனால், 31—8—1973 வரை உரம் சப்ளை செய்யவில்லை.

அடுத்து, ஈ· கீரனூரில் 15—6—1973-லேயே ரூபாய் 27,995-க்கு "பே ஆர்டர்" கொடுக்கப்பட்டிருக்கிறது. 31—8—1973 வரை உரம் சப்ளை செய்யவில்லை.

லக்கூரில் 31—3—1973-லிருந்து 4—8—1973 தேதிகள் வரை ரூபாய் 12,852-க்கு சென்ட்ரல் பேங்கியிலே "பே ஆர்டர்" கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், 31—8—1973 வரை உரம் சப்ளை செய்யவில்லை.

விவசாயிகளுக்கு, அவர்கள் நடவு நட்டவுடனே பெர்டிலைசர் கொடுக்க வேண்டுமா இல்லையா? ரூபாய் 1 இலட்சத்துக்கு சாங்க்ஷன் ஆகிறது என்றால், அதில் ரூபாய் 60,000 பெர்டிலைசர் போர்ஷன் ரூபாய் 40,000 கேஷ் போர்ஷன். கேஷ் போர்ஷனை உடனே கொடுத்து, பெர்ட்டிலைசர் போர்ஷனை அறுவடை முடிந்த பிறகு கொடுத்தால், என்ன சமைத்தா சாப்பிடுவது? அந்த உரத்தை கடைக்குக் கொண்டுபோய் கொடுப்பதைத் தவிர வேறு என்ன முறையில் செலவழிப்பது? இப்படி டி. சி. எம். எட்ச மூலமாக விநியோகிப்பதால் இவ்வளவு சங்கடங்கள் விவசாயிகளுக்குக் ஏற்படுகின்றன.

விநியோகத்தை "டீ-சென்ட்ரலைஸ்" பண்ணுவதற்குப் பதிலாக, சென்ட்ரலைஸ் பண்ணிவிட்ட காரணத்தால்—அப்பொழுது தாலுக் மார்க்கெட்டிங் பெடரேஷன் சரியாகச் செயல்படவில்லை என்று சொல்லலாம்—பஞ்சாயத்து யூனியன், கூட்டுறவு சங்கங்கள் ஆகியவற்றின் மூலம் கொடுப்பதை விட்டுவிட்டு, சென்ட்ரல் ஆர்கனைசேஷன், தமிழ்நாடு கோவாபரேடிவ் மார்க்கெட்டிங் பெடரேஷன் என்று வைத்துக்கொண்டு, தமிழகத்திலேயிருக்கிற இலட்சக்கணக்கான விவசாயிகளின் தலைவிதியை அவர்கள் நிர்ணயிக்க வேண்டியுள்ள காரணத்தால், இந்தக் குறைபாடு இருக்கிறது என்பதை என்னால் சொல்லாமல் இருக்கமுடியவில்லை.

இதுபற்றி நான் அமைச்சர் அவர்களிடம் பேசினேன். அவர், எல்லாவற்றையும் கேட்டுவிட்டு, தமிழ்நாடு கோவாபரேடிவ் மார்க்கெட்டிங் பெடரேஷனுடைய சீப் எக்ஸிக்யூடிவ் ஆபீஸருக்கு எழுதியிருக்கிறார். அவர்



1974 மார்ச் 19] [திரு. வி. கிருஷ்ண மூர்த்தி]

கள், நாங்கள் இத்தனை கோடி ரூபாய் செலவழித்தோம், இத்தனை பேருக்கு வழங்கினோம், இவ்வளவு கோடிக்கு வழங்கி இருக்கிறோம் என்று பதிலளிக்கிறார்கள். எத்தனை பேருக்கு வழங்கப்பட்டது என்பதல்ல பிரச்னை. ஒரு விவசாயிக்கு பே ஆர்டர் கொடுத்த 10, 15 நாட்களுக்குள்ளாக உரம் கிடைத்தால் நன்றாக இருக்கும். அதை விட்டுவிட்டு, 2 மாதம், 2½ மாதம் கழித்து, அடித்தாள் இடுகிற காலத்தில் உரம் கேட்டால், அறுவடைக்குக் கொடுத்தால் என்ன அர்த்தம்? அவன் நேராகக் கடைக்குக் கொண்டுபோய் விற்பான்.

ஆகவே, பிளாக் மார்க்கெட்டிங்குக்கு நாம்தான் காரணமாக இருக்கிறோம் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். (மணி அடிக்கப்பட்டது) இரண்டு நிமிடத்திலே முடித்துக்கொள்கிறேன்., முக்கியமான ஒன்றை மட்டும் கூறி.

கரும்பைப்பற்றி நான் நிறையக் கூறி இருக்கிறேன். டன்னுக்கு ரூ. 125 கொடுப்பதில் நியாயம் இருக்கிறது என்று பலர் சொன்னார்கள். ஆனால் இன்றையதினம் ரூ. 90 மினிமம் என்று வைத்திருக்கிறார்கள். மத்திய அரசாங்கம், மினிமம் ரூ. 95 கொடுக்க வேண்டும்; 8·5 சதவிகிதத்திற்குக் குறைவாக உற்பத்தியைக் கொடுக்கிற சர்க்கரை ஆலைகள் குறைந்தபட்சம் ரூ. 95 கொடுக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். இது அவர்களுடைய அட்வைஸ். ஆனால், இன்றையதினம் தமிழ்நாட்டு சர்க்கரை ஆலை முதலாளிகள் ஒவ்வொரு ஆலையும் இந்த ஆண்டு ரூ. 2 கோடிக்குக் குறைவாக லாபம் சம்பாதிக்கவில்லையென்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த லாபத்தில் விவசாயிகளுக்குப் பங்கு வேண்டாமா?

பஞ்சாபிலே 1973–74-ல், லெவி சர்க்கரைக்கு ரூ. 194 என்பதைப் போல இங்கும் லெவி சர்க்கரைக்கு ரூ. 194 கொடுத்தால் அதிக விலை கொடுக்கலாம் விவசாயிக்கு என்று சொன்னார்கள். அமைச்சரவர்கள் அந்தக் கருத்தை அன்றையதினம் சொன்னார்கள். அந்த வாதத்தை நான் அன்றைய தினமும் ஏற்றுக்கொள்ளவில்லை, இன்றைய தினமும் ஏற்றுக்கொள்ளவில்லை.

சென்ற மாதம் நான் பஞ்சாபுக்குச் சென்றிருந்தேன். அங்கே படாலா கோவாபரேடிவ் ஷுகர் மில்லுக்குச் சென்றேன். கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் அங்கே 4, 5 இருக்கின்றன. ஆனால், இங்கே இருப்பதைப் போல், 2,000, 3,000 டன் கப்பாசிட்டி இல்லை. இங்கே கிரஷிங் பீரியட் 165 நாட்கள்; ஆனால் பஞ்சாபிலே 67 நாட்கள் தான் கிரஷிங் பீரியட்—ஆலையை ஆட்டுகிறார்கள். கப்பாசிட்டி குறைவாக இருக்கிற காரணத்தால் டெப்ரிசியேஷன் அதிகமாகிறது. ஆலை ஆடுகிற நாட்களும் குறைவு. ஆகவே, இந்த விலையைக் கொடுத்தால்தான் அந்த சர்க்கரை ஆலையைத் தொடர்ந்து நடத்தமுடியும் என்ற காரணத்தால், இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்துக்கும் இல்லாமல், அந்த ஒரு பஞ்சாப் மாநிலத்திற்கு மட்டும் மத்திய அரசினர் விதிவிலக்கு கொடுத்திருக்கிறார்கள். ரிடர்ன் பார் தி காப்பிடலும், டெப்ரிசியேஷனும் அங்கு அதிகமாக வருகிறது. பஞ்சாபிலே ஒரு டன் கரும்புக்கு மினிமம் பிரைஸ் ரூ. 125; ஆனால், இங்கு ரூ. 90.

[திரு. வி. கிருஷ்ண மூர்த்தி] [1974 மார்ச் 19

அதே சமயத்திலே, அங்கே விவசாயிகள் 20 மைல், 30 மைலுக்குக் கரும்பை எடுத்துச் செல்ல வேண்டிய அவசியமும் இல்லை. சில சென்டர்களை வைத்திருக்கிறார்கள். விவசாயிகள் கரும்பை அந்த சென்டர்களிடம் விற்றால், பாக்டரியினுடைய செலவிலேயே, கரும்பை பாக்டரிக்கு எடுத்துச் சென்று, டிரான்ஸ்போர்ட்டேஷன் செலவை ஏற்றுக்கொள்கிறார்கள். இந்த ஆண்டு, பஞ்சாபிலே ஒரு டன்னுக்கு விவசாயிகளுக்குக் குறைந்த பட்சம் ரூ. 155 கிடைக்கும். இங்கே என்ன செய்யப்போகிறோம்? அதற்குத் தயவு செய்து அமைச்சர் அவர்கள் பதில் சொல்ல வேண்டும். முதலமைச்சர் அவர்களும் சரி, விவசாயத் துறை அமைச்சர் அவர்களும் சரி, இதில் அக்கறை செலுத்த வேண்டுமென்று கூறி, விவசாயிகளுக்குப் பாடுபடுகின்ற இந்த இலாகாவை ஆதரித்து, மீண்டும் மானியக் கோரிக்கையை ஆதரித்து, முடித்துக்கொள்கிறேன்.

* திரு. கோவை செழியன்: பேரவைத் தலைவரவர்களே, என்னுடைய அருமை நண்பர் மாண்புமிகு கிருஷ்ணமூர்த்தி அவர்கள் இந்த மானியத்திலே பேசிய கருத்துக்களை நான் பாராட்டி வரவேற்கின்றேன். அவர் மாற்றுக்கட்சியை சார்ந்தவராக இருந்தாலும் சொல்லும் கருத்து, நியாயமான கருத்து என்ற காரணத்தால் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக, அவருடைய பேச்சை முழுமனதோடு நான் வரவேற்கிறேன்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்) : நல்ல கருத்தென்பதால் இந்தப் பக்கம் மீண்டும் வந்துவிடலாம்.

திரு. கோவை செழியன் : அவர் தன்னைப் காப்பாற்றிக்கொள்வதற்காக எவ்வளவு வேண்டுமானாலும் பேசட்டும். ஆனால், பேசிய கருத்துக்கள் நியாயமானவை என்பதை ஒத்துக்கொள்கிறேன்.

இந்த விவசாயத் துறையைப் பொறுத்தவரையிலும் அவர் குறிப்பிட்ட மாதிரி விவசாய விவரம் தெரிந்தவர்கள் இந்தத் துறையை நிர்வகிக்க வேண்டுமென்ற கருத்தை நான் முழு மனதுடன் ஏற்றுக்கொள்கிறேன். அதிகாரிகளுக்கு மட்டும் விவசாயம் தெரிந்திருந்தால் போதாது, ஆளுகின்றவர்களுக்கும் விவசாயம் தெரிந்திருக்க வேண்டும். நான் அதற்காக, அமைச்சரைக் குறை சொல்கிறேன் என்று யாரும் எண்ணிவிடக் கூடாது. நம்முடைய விவசாய அமைச்சர் நிறையப் படித்தவர், நிறைய விவரங்கள் தெரிந்தவர். ஆனால், நேரடியாக விவசாயம் செய்து கொண்டிருக்கிறாரா என்றால் இல்லை.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : அது உங்களுக்கு எப்படித் தெரியும்? அன்றைக்குக் கண்டபடி பேசினீர்கள், இப்பொழுதும் பேசுகிறீர்கள். என்னுடைய ரிடர்ன்ஸை, சட்டசபைக்குக் கொடுத்திருப்பதை எடுத்துப் பார்த்தால் தெரியும். 15 ஏக்கர் நிலம் வைத்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சரை விட்டுவிட்டு, சபையிலிருக்கிற மானியத்தைப்பற்றி பேசுங்கள்.



1974 மார்ச் 19]

திரு. கோவை செழியன் : அமைச்சர் அவர்களுக்குக் கோபம் வருவது எனக்குப் புரிகிறது.

திரு. எம். சுரேந்திரன் : ஒரு உறுப்பினர் பேசும்போது, அமைச்சர் கோபத்துடன் இந்த மாதிரி கோபிப்பது முறைதானா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர் அவர்கள் கோபத்துடன் சொல்லவில்லை....

(முற்பகல் 11-30)

திரு. கோவை செழியன் : நான் எதற்காக இதைச் சொல்கிறேன் என்றால் அமைச்சர் அவர்களுக்குத் திறமைக் குறைவு என்று சொல்லவில்லை, அவர் விவசாயிகளைப் பார்த்து தோட்டத்திலே நீங்கள் மூங்கிலைப் பயிரிடுங்கள், சூரியகாந்தியைப் பயிரிடுங்கள், புளிமஞ்சிக் கீரையைப் பயிரிடுங்கள்—அது போதும் என்று சொல்லியிருக்கிறார்கள். எவனாவது தோட்டத்திலே மூங்கிலைப் பயிரிடுவானா? நல்ல சகுனமாக கருதமாட்டார்கள். அவர்கள் மூங்கிலைப் பயிரிடு என்று சொல்வதால் அதிகமாக மூங்கில் விளைந்தால் அவருக்கு பேப்பர் மில் இருக்கிறது, அந்த பேப்பர் மில்லுக்கு ராமெட்டிரியல் தேவை என்பதை அவர்கள் உணர்ந்திருக்கிறார்கள்......

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தயவுசெய்து தவறான கருத்துக்களை மீண்டும் மீண்டும் சொல்லவேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன். பேப்பர் மில் எனக்கு இல்லை, என்னுடைய குடும்பத்தில் ஒருவருக்கு இருக்கிறது. அதிலேயும் மூங்கில் பயன்படுத்துவது இல்லை. மூங்கில் தேவையில்லை, அதைப் பயன்படுத்தக்கூடாது என்று சொல்லிக் கொண்டு வருகிறேன். ஆகவே நான் மூங்கில் பயிரிடச் சொன்னேன் என்று சொல்வது அப்பட்டமான தவறான கருத்து என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அப்படியே அவருக்கு பேப்பர் மில் இருந்தாலும்கூட அதற்கு மூங்கில் தேவையென்று இருந்தாலும் கூட அதற்காக அவர் மூங்கில் பயிரிடச் சொன்னார் என்று சொல்வது முறையல்ல, அது வேண்டாம்.

திரு. கோவை செழியன் : மூங்கிலை யாருமே பயிரிடுவது இல்லை. ஆகவே, இந்தத் துறையிலே உள்ள கஷ்ட நஷ்டங்களைத் தெரிந்தவர்கள் இந்தத் துறையினை நடத்தினால் நல்லதாக இருக்கும், முன்னாலே இந்தத் துறைக்கு திரு. அன்பில் தர்மலிங்கம் அவர்கள் அமைச்சராக இருந்தார்கள், அப்பொழுது........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த இலாகாவை இன்னொருவர் நிர்வகித்தால் நன்றாக இருந்திருக்கும் என்றெல்லாம் சொல்வது சரியல்ல. இவர்கள் ஏற்றுக்கொண்டால் நல்லதல்ல, அவர்கள் ஏற்றுக்கொண்டால் நல்லது என்றெல்லாம் கருத்துக்களைச் சொல்லவேண்டாம்.

திரு. கோவை செழியன் : அவர்களுடைய காலத்திலே செய்த சில நன்மைகளைச் சொல்லலாம் என்று நினைத்தேன், உங்களுக்கு அவர் மேல் என்ன கோபமோ தெரியவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அன்பில் காலத்திலே என்ன என்ன நன்மைகளைச் செய்தார்கள் என்றோ அல்லது இவர்களுடைய காலத்திலே என்ன என்ன குறைகள் இருக்கின்றன என்றோ நீங்கள் சொல்வதிலே ஒன்றும் தவறில்லை, ஆனால் அவர் இருந்தால் நன்றாக இருந்திருக்கும், இவர் இருந்தால் நல்லதாக இருக்காது என்றெல்லாம் கருத்துக்களைச் சொல்லத் தேவையில்லை என்றுதான் சொன்னேன். நீங்கள் எனக்கே நோக்கம் கற்பித்துப் பேசுவதும் சரியல்ல.

திரு. கோவை செழியன் : பொதுவாக விவசாயம் என்றால் சில பேர்கள் 11 மாதங்களும் தண்ணீர் வருகின்ற நஞ்சை பூமியைத்தான் விவசாயம் என்று கருதுகிறார்கள். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கூட அதனால்தான் நல்ல முறையிலே இருந்தால் லாபம் வரும் என்று சொன்னார்கள்.

என்னுடைய மாவட்டமாகிய கோவையிலே விவசாயம் எப்படியென்றால் வானத்தைப் பார்த்துத்தான், மழைபெய்தால்தான் விவசாயம் என்ற நிலைமை. வட ஆற்காடு, தென் ஆற்காடு ஆகிய மாவட்டங்களிலும் அப்படி பட்ட நிலைமைதான் இருக்கிறது, ஆகவே அங்கேயெல்லாம் விவசாயிகள் வானத்தை எதிர்பார்த்துக்கொண்டு பாதி நாள் பட்டினியாகக் கிடக்கக் கூடிய நிலைமை ஏற்படுகிறது. அதனால்தான் அவர்கள் நில வள வங்கி களிடம் இருந்து கடன்கள் வாங்கக்கூடிய நிலைமைகள் எல்லாம் ஏற் படுகின்றன. கடனைத் திருப்பித்தரவேண்டுமென்றால் விளைச்சல் இருந் தால்தானே அவனால் பணத்தைத் திருப்பிக் கொடுக்கமுடியும், விளைச்சலே இல்லை என்றால் அப்படிப்பட்ட இடங்களில் ஆடுமாடுகளை ஜப்தி செய்துகொண்டு போகிறார்கள், நான் இந்த அரசாங்கத்தை தலைவர் அவர்களே, உங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன், இப்படிப்பட்ட நிலைமை நீடித்துக்கொண்டு போனால் ஒரு பெரிய புரட்சி இந்த நாட்டிலே ஏற்பட்டுவிடும். வரிகொடா இயக்கம் போன்ற நிலைமைகள் வந்து விடும்.

நான் உண்மையைச் சொன்னால் கோபித்துக்கொண்டார்கள். நில வள வங்கிகள் பல இடங்களிலே இருக்கின்றன, அதிலே யார் பொறுப் பில் இருந்தால் விவசாயிகளுக்கு நன்மை கிடைக்கும்? விவரம் தெரிந்த விவசாயி இருந்தால்தான் கஷ்டங்கள் தெரியும். என்னுடைய பகுதியிலே விவசாயம் தெரியாதவர் ஜவுளிக்கடைக்காரர் ஒருவரை போட் டிருக்கிறார்கள், விவசாயிகள் சென்று கடன் கேட்டால் அவருக்கு ஒவ்வொன்றாக விளக்கிச் சொல்லவேண்டியிருக்கிறது. அதற்குப் பணம் தேவையில்லை, இதற்குப் பணம் தேவையில்லை என்று சொல்லிக்கொண் டிருக்கிறார்.



நீங்கள் கட்சியை வளர்க்கவேண்டுமென்றால் வேறு விதத்திலே வளருங்கள், ஆனால் நில வள வங்கிகளிலே விவசாயியைப் போடுங்கள். யார் யார் உங்கள் பின்னாலே "ஐயா, ஐயா" என்று வருகிறார்களோ அவர்களைப் போடாதீர்கள். அது இந்த நாட்டைக் கெடுத்துவிடும்.

அதிகாரிகளைப்பற்றி நான் குறைவாகச் சொல்லவில்லை. விவசாயம் தெரிந்த ஒருவரைத்தான் டைரக்டர் ஆப் அக்ரிகல்சர் ஆகப் போட வேண்டும். விவசாயம் தெரியாத அதிகாரிகளைப் போட்டுப் பயன் யாருக்கு ?

என்னுடைய பகுதியிலே யாருமே அதிகாரிகள், நிபுணர்கள் இது வரையில் வந்து விவசாயிகளுக்கு அறிவுரை சொல்லவில்லை. எந்த அதிகாரிகளாக இருந்தாலும் தாழ்ந்த நிலையில் உள்ளவர்களாக இருந் தாலும் உயர்ந்த நிலையில் உள்ளவர்களாக இருந்தாலும் அவர்கள் சரிவர வருவதில்லையென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். கரும்பு போடுவது எப்படி என்றால், ஹைபீரிட் கம்பு போடுவது எப்படி என்றால், விவசாயிகளுக்குத் தெரியாதவற்றை சொல்வதற்கு அதிகாரிகள் வருவதில்லை. நான் ஒரு எம்.எல்.ஏ. என்னுடைய ஊருக்கே வருவ தில்லை என்றால் வேறு எங்கு போகப் போகிறார்கள் ? அதிகாரிகள் ஒவ்வொரு ஊராகச் சென்று அவர்களைக் கூட்டிவைத்து உங்களுடைய கஷ்டங்கள் என்ன என்ன என்று கேட்கவேண்டும்.

சோளத்திலே பூச்சி விழுந்துவிட்டது என்றால் ஒரு மருந்தை சொல்கிறார்கள், அந்த மருந்தைப் போட்டால் செடியே காய்ந்து விடுகிறது, காரணம் என்ன என்று கேட்டால் அது அடல்ட்ரேஷனாக இருக்கும் என்று சொல்கிறார்கள். இந்த நிலைமை விவசாயம் தெரிந்த அதிகாரிகள் ஆக இருந்தால் அவர்கள் கீழே உள்ளவர்களைக் காதைப் பிடித்துத் திருகி போனாயா இல்லையா என்று கேட்பார்கள். ஆகவே விவசாயத்திலே அக்கறை உள்ளவர்கள் வந்தால் நல்லது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எங்களுடைய பகுதியிலே கிணற்றிலே தண்ணீர் இல்லை. வாய்க்கால் வெட்டுவதற்கு சோர்ஸஸ் இல்லை என்று சொல்கிறார்கள். பெய்கின்ற மழையை ஒரு சொட்டு தண்ணீர்கூட ஊரைவிட்டுப் போகாதவாறு ஒவ் வொரு ஊரிலும் பாண்ட் ஸ்கீம் ஏற்படுத்துங்கள், அப்பொழுது நிலைமை ஓரளவு நன்றாக இருக்கும். அதுமட்டுமல்ல, எல்.டி. பேங்கிலே கிணறு வெட்டுவதற்காக பணம் தருகிறார்கள், ஆனால் அடிவெட்டு வெட்டு வதற்கு பணம் இல்லையென்று சொல்கிறார்கள். என்ன நியாயம் என்று புரியவில்லை. கரண்ட் இல்லாத நேரத்திலே அக்ரிகல்சுரல் டிபார்ட்மெண்டிலிருந்து ஆயில் எஞ்சின் கொடுத்தார்கள், அதனால் யாருக்கு லாபம் ? நான் குற்றஞ்சாட்டுகிறேன். மார்க்கெட்டிலே ஆயில் எஞ்சினும் பம்புசெட்டும் சேர்ந்து 2,500 ரூபாய்க்கு விற்கிறது. அரசாங் கம் அதற்காக 1,000 ரூபாய் சப்ஸிடி கொடுத்தார்கள், ஆகவே 3,500 ரூபாய் கிரிலோஸ்கர் கம்பெனிக்காரனுக்கு போய்ச் சேர்ந்தது, அவனுக்குத் தான் லாபம் 2 கோடி ரூபாய் வரையில். ஆயில் எஞ்சினையும்

பம்ப்செட்டையும் திருப்பித் தந்துவிடவேண்டுமென்று சொன்னார்கள். கரண்ட் வந்தால்தானே, திருப்பித் தருவதற்கு, இரண்டு காலமாக கரண்ட் வெட்டு இல்லாமல் இல்லை. என்னுடைய பகுதியிலே இன்னும் 6 மணி நேரத்திற்கு தான் கரண்டு கொடுக்கப்படுகிறது. 2,500 ரூபாய்க்கு விற்கவேண்டிய ஆயில் எஞ்சினுக்கு 3,500 ரூபாய் தரப்பட்டது. யாருக்குப் பணம் போய்ச் சேர்ந்தது ? அந்தப் பணம் அரசாங்கத்தின் பணம் என்றால் அது மக்களுடைய வரிப்பணம் இல்லையா, என்னுடைய வரிப் பணம் இல்லையா ? இரண்டு கோடி ரூபாய்க்குமேல் வீணாக்கியிருக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டை நான் சுமத்த விரும்புகிறேன், அது மட்டுமல்ல, . . . . . . . . . .

திரு. எஸ். நல்லசாமி : சார் . . . . . . . . . . . . . . . . . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உட்காருங்கள், அவர் பேசி முடிக்கட்டும்.

திரு. கோவை செழியன் : நான் சொன்னது சென்ற ஆண்டு இந்த திட்டம் ஆரம்பிக்கப்பட்டபோது, விவசாயம் தெரிந்தவர்கள் இரண்டொருவர் இந்தத் துறைக்கு வருகிறார்கள் என்றால் அவர்கள் ஒரு ஏக்கருக்கு சப்போட்டா போட்டால் செலவு 110 ரூபாய் என்றும், 200 ரூபாய் என்றும் ஏதேதோ கணக்குச் சொல்லி 6 மாதத்திலே ரூபாய் 2,357 காசு 3 என்று கணக்குச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள் . . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சப்போட்டா 6 மாதத்திலே வராது.

திரு. கோவை செழியன் : மன்னிக்க வேண்டும். வளர்ந்ததற்குப் பிறகு 6 மாதத்திற்கு ஒருமுறை 2,500 ரூபாய் வரும் என்று சொல்கிறார்கள். இப்படிப்பட்ட தவறான கருத்துக்களை அவர்கள் சொல்ல வேண்டாம். டிபார்ட்மெண்டில் ஹைபிரிட் கம்பு என்று கொடுக்கிறார்கள். விளைவது இல்லை. கருகிவிடுகிறது, ஏன் என்று கேட்டால் மேலதிகாரிகளைக் கேளுங்கள் என்று சொல்கிறார்கள். அதற்கு காம்பன்சேஷன் கூட தரவில்லை. நான் சொன்னால் பலபேர்களுக்கு கோபம் வருகிறது.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போதுகூடச் சொன்னார்கள். பிரைஸ் கியாரண்டி கொடுக்கவேண்டுமென்று. உண்மை, பருத்திவிலைகள் 800 ரூபாய் இருக்கின்றது என்றால் திடீரென்று 400க்கோ அல்லது 300க்கோ போய்விடுகிறது. அதை நம்பி விவசாயம் எப்படிச் செய்ய முடியும். நன்றாக விளைகிறது, நல்ல விலை விற்கிறது என்று போட்டால் உடனே விலை குறைந்துவிட்டால் நஷ்டம் ஏற்படுகிறது. இந்த நிலைமையைப் போக்க 800 என்று இல்லாவிட்டாலும் 600 என்று வைத்தாவது கியாரண்டி விலையில் தரப்பட வேண்டும். ஒவ்வொரு விவசாயிடத்தில் இருந்தும் மார்க்கெட்டிங் சொஸைடிகள் கண்டிப்பாக அந்த விலைக்கு வாங்க வேண்டுமென்று உத்தரவுபோட வேண்டும்





யூரியாவைப் பற்றிப் பேச வேண்டுமென்று நினைத்துக்கொண்டிருந்தேன். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் அதைப்பற்றிப் பேசிவிட்டதால் நான் அந்தக் கருத்தை விட்டுவிடுகிறேன். யூரியா மார்க்கெட்டுகளில் கிடைப்பதில்லை. சொஸைட்டிகள் மூலமாக 51 ரூபாயோடு 1 ரூபாயைச் சேர்த்து 52 ரூபாய்க்குத் தருகிறார்கள். ஆனால், தேவையான நேரத்தில் கிடைப்பதில்லை. நான் கரும்பு வைத்திருக்கிறேன். இப்பொழுது எனக்கு கிடைக்கவில்லை. அது 3 மாதங்கள் கழித்து எனக்குக் கிடைத்தால் பிரயோஜனமில்லை. இப்பொழுது கோவை சென்ட்ரல் பேங்க் மூலம் தருகிறார்கள். அதை நான் கொஞ்சம் பாராட்டுகிறேன். ஓரளவு நல்ல காரியங்களைச் செய்கிறார்கள். குறைகளை நீக்க அப்பணி தொடரட்டும். அதில் வேலை செய்பவர்களைத் தொந்தரவு செய்து விடாதீர்கள்.

அடுத்தபடியாக, இந்த "வீட் சைட்ஸ்"-இல் பலயிடங்களில் களைகள் வருகின்றன. கோவை மாவட்டத்தில் "சோலானம் எலக்டிரினி போலியா" என்ற களை வருகிறது. அதை யாராலும் எடுக்க முடியவில்லை. நான் சென்ற ஆண்டுகளிலே பேசும்பொழுது கூறியிருக்கிறேன். நான் இலண்டனுக்குச் சென்றபொழுது, ஐ.சி.ஐ. கம்பெனி ஆராய்ச்சி நிலையத்திற்குச் சென்றபோழுது நல்ல மருந்து கண்டுப்பிடிக்கப் போவதாகச் சொன்னார்கள். இப்பொழுது கண்டுபிடித்து விட்டார்கள் என்று நினைக்கிறேன். அந்த மருந்தை இம்போர்ட் செய்யுங்கள். ஃபாரின் எக்சேஞ்ச் இல்லை என்று சொல்லலாம். எது எதற்கோ தருகிறார்கள். பிராந்தி பாட்டில்களை வரிசையாக அடுக்கி வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குத் தருகிறார்கள். எனவே இந்த டார்டார் என்ற மருந்தை வாங்குவதற்கு அளிக்கலாம். இல்லையென்றால் அதற்காகப் போராடுங்கள். நாங்கள் எல்லாவற்றையும் எதிர்த்துக் கொண்டிருக்க மாட்டோம். நீங்கள் இப்படிப்பட்ட நல்ல காரியங்களுக்காகப் போராடினால் நாங்களும் சேர்ந்து போராடத் தயாராக இருக்கிறோம்.

பல்கலைக் கழகத்திற்குச் சட்டமன்றத்தின் சார்பிலே என்னை ஆட்சி மன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுத்து அனுப்பியிருக்கிறார்கள். அதைப் பற்றி ஒன்று சொல்ல வேண்டும். அது பெரிய சர்வாதிகாரியின் ஆதிக்கத்திலே நடைபெறுகிறது. இங்கே வீற்றிருக்கின்ற பல அதிகாரிகள் அங்கே வருகிறார்கள். ஆனால், அவர்களால்கூடப் பேச முடியவில்லை. காரணம் என்னவென்றால் அதிகாரிகள் எதற்கு வம்பு என்று இருந்து விடுகிறார்கள். அப்பாயிண்ட்மென்டுகளைத் தனக்கு வேண்டியவர்களைத்தான் வைஸ்-சான்சலர் போடுகிறார். ஏன் என்று கேட்டால் அப்படித்தான் என்று சொல்கிறார். இன்னமும் ஒன்று சொல்கிறேன். அப்பாயிண்ட்மெண்ட் போடும்பொழுது 20 ஆண்டுகள் சீனியாரிட்டி உள்ள பலருக்கு அந்த வேலை கிடைக்கவில்லை. வேண்டுமானால் தலைவர் அவர்களே நான் தங்கள் அறையிலே ஆதாரங்களைப் காட்டுகிறேன். சீனியாரிட்டி உள்ள பலருக்கு அந்த வேலை கிடைக்கவில்லை. ஆனால், வெளியிலிருந்து வந்தவர்களுக்குக் கொடுத்திருக்கிறார்கள். ஏனென்றால், பி.எஸ்ஸி. அக்ரிகல்சரில் "தேர்ட் கிளாஸ்" வாங்கியுள்ளார்கள். எம்.எஸ்ஸி. பர்ஸ்ட் கிளாஸ் வாங்கியிருக்கிறார் என்று சொல்கிறார்கள். மெட்ராஸ் யூனிவர்

[திரு. கோவை செழியன்] [1974 மார்ச் 19

சிட்டியில் 15 வருஷகாலமாக தேர்ட் கிளாஸ்தான் B.Sc. டிகிரிக்குத் தந்தார்கள், வேறு எந்த வகுப்பும் அவர்கள் தரவில்லை. அப்படியென்றால் 15 வருஷமாகப் படித்து வந்தவர்கள் வீட்டிலே உட்கார்ந்திருப்பதா? பி.எஸ்ஸி. அக்ரிகல்சரில் ஃபர்ஸ்ட் கிளாஸ் இல்லை. எம். எஸ். ஸியில் பர்ஸ்ட் கிளாஸ், டாக்டரேட், சீனியர் மோஸ்ட் என்றெல்லாம் பார்த்துக் கொடுக்கவில்லை. அதை சட்டசபையும் கேட்கமுடியாது. ஏனென்றால் அது அடானமஸ் பாடி என்று இப்படி அக்கிரமம் செய்தால், பல்கலைக் கழகத்தின்முன் மறியல் செய்வதைத் தவிர வேறு வழியில்லை. உண்ணாவிரதம் இருப்பதைத் தவிர வேறு விமோசனம் இல்லை. அக்கிரமம் செய்யும் அதிகாரிகளைக் கேட்பதற்கு இவைகளைத் தவிர வேறு வழியே இல்லை. இதற்கு எல்லோரும் சேர்ந்து வாருங்கள். ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்களும் வாருங்கள். நான் பேசுவதைக் கேட்டு பலர் இப்பொழுது சந்தோஷப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவ்வளவு அனுபவப் பட்டவர்கள். விவசாயக் குடும்பத்தில் பிறந்தவர்களுக்கு காலேஜில் இடம் கேட்டால் இடமில்லை என்று சொல்கிறார்கள். காரணம் கேட்டால் மார்க் இல்லை என்று சொல்கிறார்கள். எப்படி மார்க் வாங்குவார்கள். கிராமத்தில் இருந்து கட்டுச் சோற்றைக் கட்டிக்கொண்டு ஐந்து மைல் தூரம் சென்று படிக்கின்றவர்கள் எப்படி மார்க் வாங்குவார்கள்? எனவே, விவசாயக் குடும்பத்தில் பிறந்தவர்களுக்கு 75 மார்க் என்று வைத்து, தகுதி மற்ற நிலைமைகளுக்கு 25 மார்க் என்று வைத்து தேர்தல் செய்யுங்கள். யூனிவர்சிட்டி மார்க்கைத் தூக்கி எறியுங்கள். பாஸ் மார்க் இருந்தால் போதும் என்று வையுங்கள். அப்பொழுதுதான் முடியும். இதை அமைச்சரவர்கள் அறிவுறுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக, கால்நடையைப் பற்றிக் கூற விரும்புகிறேன். நான் காங்கேயம் தொகுதியைச் சேர்ந்தவன். அந்தத் தொகுதி கால் நடைகளுக்குப் பெயர்போன இடம் என்பது எல்லோருக்கும் தெரியும். இப்பொழுது குழந்தைகளுக்குப் பால் கிடைக்க வில்லை என்று சொல்லப்படுகிறது. குழந்தைகளுக்கு வேண்டிய அமுல் உற்பத்தியை தமிழகத்திலேயே செய்யலாம். அரசாங்கத்தின் மூலதனத்தைப் போட்டு காங்கேயத்தில் ஆரம்பித்தால் தமிழகத்திலுள்ள குழந்தைகளுக்கு வாழ்வு கிடைக்கும். அதற்கு என்ன செய்ய வேண்டுமென்றால் கால்நடைகளை நிறைய உற்பத்தி செய்ய வேண்டும். ஒவ்வொருவருக்கும் 15 ஸ்டாண்டர்ட் எக்கரா என்று உச்சவரம்பு வைத்திருந்தாலும், கால் நடைகள் வைத்திருப்பவர்களுக்கு, ஒவ்வொருவருக்கும் 15 எக்கரா "கிரேசிங் லேண்ட்" மேய்ச்சல் நிலம் என்று கொடுங்கள். அதில் யாராவது வியாபாரப் பயிர் பச்சைகளை வைத்தால், அவர்களை உள்ளே தள்ளுங்கள். காங்கேயம் பகுதியில் "கால்சியம் கண்டெண்ட்" மண் இருப்பதால் கொழுக்கட்டைப் புல் வளருகிறது. எனவே, "கிரேசிங் லேண்ட்" என்று அந்தப் பகுதியிலுள்ளவர்களுக்கு 15 எக்கராவுக்கு எக்செம்ஷன் கொடுங்கள். நீங்கள் வேண்டுமானால் ஸ்டாண்டர்ட் எக்கராவைக் குறைத்துக் கொள்ளுங்கள். அது தனி விவாதம்.



1974 மார்ச் 19] [திரு. கோவை செழியன்]

கீ வில்லேஜ் சென்டர் என்று வைத்திருந்தார்கள். அதை இப்பொழுது மூடிவிட்டார்கள். அவைகளையும் திறக்கச் செய்யுங்கள் என்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: பாய்ண்ட் ஆஃப் பர்சனல் எக்ஸ்ப்பளநேஷன் சார். நான் ஒன்றும் கோபம் என்று சொல்லவில்லை. அந்த வார்த்தைகளைப் படித்துப் பார்த்தால் வார்த்தைகள் அடக்கமாகத் தான் இருக்கும். நான் அவர்களை ஒன்று கேட்கிறேன். விவசாயத்தைப் பற்றி அமைச்சருக்குத் தெரியாது என்று சொல்பவர்களை, கரும்பைப் பற்றியும், நெல்லைப் பற்றியும் பேசியவர்களைக் கேட்க விரும்புகிறேன். 658 என்ற கரும்புக்கு எத்தனை நாள் பயிர், எத்தனை எக்கர்களில் விளைவது, எத்தனை இன்ச் தண்ணீர் வேண்டும், அதைப்போலவே, 6.304 எத்தனை நாள் பயிர், எத்தனை எக்கர்களில் விளைவது, எத்தனை இஞ்ச் தண்ணீர் வேண்டும், அதேபோல், ஐ.ஆர். 8 நெல் எத்தனை நாள் பயிர், எத்தனை எக்கர்க்ள், எத்தனை இஞ்ச் தண்ணீர் வேண்டும், கண்ணகி என்ற நெல் எத்தனை நாள் பயிர், எத்தனை எக்கர்கள், எத்தனை இஞ்ச் தண்ணீர் வேண்டும் என்று அவர்கள் சொல்ல முடியும் என்றால் விவசாயம் அவர்களுக்குத் தெரியும் என்பதை ஏற்றுக்கொள்ள முடியும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவரவர்களே, அமைச்சரவர்கள் பர்சனல் எக்ஸ்ப்பளநேஷன் என்று எழுந்துகொண்டு ஏதோ உரத்த குரலிலே முன்பு பேசினார்—இல்லை என்று இப்பொழுது சொல்லக்கூடும்—இங்கிருக்கின்ற உறுப்பினர்களைப் பார்த்து இன்ன கரும்புக்கு எத்தனை நாள் வேண்டும், இன்ன கரும்புக்கு எத்தனை நாள் வேண்டும் என்று அரசாங்கத்திலிருந்து அங்கத்தினர்களிடம் கேள்வி கேட்டால் எங்களைப் போன்றவர்களுக்குப் பதில் சொல்வதற்குக் கஷ்டமாக இருக்கும். ஒரு வேளை அவர்கள் அதிலே நிபுணர்களாக இருக்கலாம். எங்களுக்கு அதில் பாண்டித்யம் நிபுணத்துவம் இருக்காது என்றெல்லாம் இம் மாதிரியாக அங்கத்தினர்களை எள்ளி நகையாடும் அளவில் ஆளுங் கட்சியிலிருந்து; அதுவும் அமைச்சராக இருப்பவர், சீனியர் அமைச்சராக இருப்பவர் கேள்வி கேட்பது முறைதானா, நமது விதிமுறைகளுக்கு உட்பட்டதுதானா என்று தாங்கள் ரூலிங் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. க. மு. இராசகோபால்: அமைச்சருக்கு விவசாயம் தெரியாது என்று சொல்லும் பொழுது அப்படிக் கேட்கலாம்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, அங்கத்தினர்கள் அரசாங்கத்தினுடைய குற்றங் குறைகளை எப்படியும் சொல்லலாம். அங்கத்தினர்களுக்கு எல்லா விவரங்களும் தெரிந்திருக்க வேண்டுமென்ற அவசியமில்லை. ஆனால், அவர்கள் கேட்டது, அவர்களுக்கு விவசாயத்தைப் பற்றி ஒன்றும் தெரியாது என்று சொன்னதால், ஒவ்வொருவருக்கும் ஏதாவது ஒன்று தெரியாது என்ற அடிப்படையில் அங்கத்தினரைப் பார்த்து எழுப்பினாரே தவிர, தங்களுக்குத் தெரியாது என்று சொன்ன

தற்காக எழுப்பினரே தவிர, அங்கத்தினர்களுக்குத் தெரிய வேண்டு மென்றே, சில விவரங்கள் தெரியாததால் பேசக்கூடாது என்பதாலோ அல்ல. ஆகவே, அந்த நோக்கத்தில் எடுத்துக்கொள்ள வேண்டா மென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கோவை செழியன் : தலைவரவர்களே, அவர்கள் கேள்வி கேட்டார்கள். நான் உங்கள் மூலமாக ஒன்றைச் சொல்லிக் கொள்கிறேன். நான் விவசாயம் செய்து கொண்டிருப்பவன். அவர்கள் கேள்வியை, சவாலை, ஏற்றுக்கொள்கிறேன். நான் கேள்விக்குப் பதில் சொல்கிறேன். ஒரு நீதிபதியை வையுங்கள். நான் என்னுடைய பதிலைச் சொல்லி விட்டால் அவர் மந்திரி பதவியை இராஜினமா செய்வாரா? அப்படி நான் சொல்ல முடியாவிட்டால் நான் எம். எல். ஏ. பதவியை இராஜினமா செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சட்டப்பேரவை தேர்வு மண்டபம் அல்ல என்பதை இந்த மன்றத்திலுள்ள அங்கத்தினர்களுக்கும், அமைச்சர்களுக்கும் அத்தனைபேர்களுக்கும் சொல்லிக்கொள்கிறேன். செழியன் அவர்கள் சொல்லியதைப்போன்று, அவர்களுக்கு விவசாயம் தெரியுமா என்று கூறியது முறையற்றதைப் போலவே, அமைச்சரவர்கள் இந்தக் கேள்விக்குப் பதில் சொல்வாரா என்று கேட்பதும் முறையல்ல. எனவே, இந்த நிலைக்கு இந்த அவையைக் கொண்டு வர வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. சி. வி. எம். அண்ணாமலை : பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறை மானியங்கள் பற்றியும், கால் நடை வளர்ப்புத் துறை மானியம் குறித்தும் ஆதரித்து எனது கருத்துக்கள் சிலவற்றைச் சொல்ல விரும்புகிறேன்.

இங்கு மாண்புமிகு உறுப்பினர்கள் வேளாண்மைத் துறை பற்றி அவரவர்களுடைய கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். குறிப்பாக எதிர்க்கட்சியில் இந்திய ஆளும் காங்கிரஸ் கட்சித் தலைவராக இருக்கிற மாண்புமிகு மாரிமுத்து அவர்கள் மிகவும் போற்றுதற்குரிய வகையில் பேசினார்கள். எதிர்க்கட்சியில் இருக்கும் தலைவர்கள் பொறுப்பான தலைவர்கள் ஆளும் கட்சிக்குச் சீரிய யோசனைகளை எடுத்துக்கூற வேண்டுமென்ற பண்போடு அவர்களுடைய பேச்சு அமைந்திருந்தது. அவ்வாறு கருத்துக்களை நடைமுறைப்படுத்துவதற்கு ஏற்ற முறையில் எடுத்துக் கூறியதற்காக மாண்புமிகு மாரிமுத்து அவர்களை முதலில் பாராட்டக் கடமைப்பட்டவனாவேன்.

என்னுடைய கெழுதகை நண்பர் அண்ணா தி மு. க. வைச் சார்ந்த அருமைத் தோழர் செழியன் அவர்கள் இந்தப் பேற்றைப் பெற முடியாத வகையில் பேசினார்கள். அவர்கள் ஏன் உணர்ச்சி வயப்படுகிறார்கள் என்று என்னால் அறிந்து கொள்ள முடியவில்லை.

(திரு. வை. பாலசுந்தரம் தலைமை.)





ஆளுகின்ற வாய்ப்பைப் பெற்று விட்டதாலேயே எத்தகைய தூற்றல்களுக்கும், எத்தகைய கசையடிகளுக்கும், நாவினால், சொல்வதற்குக் கூடாத அளவுக்கு இருக்கிற ஏசல்களுக்கும், பேச்சுக்களுக்கும், ஆளும் கட்சித் தலைவர்களும், உறுப்பினர்களும் இலக்காக வேண்டுமென்ற நியதி எந்த மன்றத்தில் வகுக்கப்பட்டிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

1957–ம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகம் ஒப்பற்ற பெருந் தலைவரான எங்களுடைய பேரறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் இங்கே 15 உறுப்பினர்கள் இடம் பெற்றார்கள். ஆளுகின்ற கட்சி முறையற்ற வகையில் நடந்துகொண்டாலும் அவைத் தலைவர் இடுகின்ற கட்டளைக்குக் கீழ்ப் பணிந்தும் ஆளுகின்ற கட்சித் தலைவர்கள் எத்தகைய வகையில் உதாசீனப் படுத்தினாலும் வாய்ப்புகள் கோரி, வாய்ப்புகள் வருகிற வரையில் காத்திருந்து, வண்ணமாக அழகிய தமிழ்ச் சொற்களை ஒன்றாக இணைத்து போற்றப்பட வேண்டியவற்றை எல்லாம் போற்றினார்கள், மறுக்கப்பட வேண்டியவற்றை எல்லாம் மறுத்தார்கள்.

வேளாண்மைத் துறையில் இன்றையதினம் தமிழகம் இந்த அளவுக்குத் தலைதூக்கியிருப்பது இந்தியத் துணைக் கண்டத்திற்கே அறைகூவல் விடுக்கக் கூடியதாக இருக்கிறது. இந்த அளவுக்கு வேளாண்மைத் துறையில் ஏற்றம் பெற்றிருப்பதற்கு என்ன காரணம் என்று இந்திய அரசு வியந்து பார்க்கிற அளவுக்கு நாம் ஏற்றத்தைப் பெற்றிருக்கிறோம். தமிழ் நாடு அரசு வேளாண்மைத் துறையைப் போற்றுகின்ற பெருமனது கொண்டிருக்கிறது என்று சொன்னால் அவர்களால் புரிந்து கொள்ள முடியவில்லை. அந்த நிலையில் அரசு இந்தத் துறையில் கடைப் பிடிக்க வேண்டிய முறைகளைப் பற்றிக் கூறினால் அரசு ஏற்றுக் கொள்ளத் தயங்காது.

இன்றையதினம் வேளாண்மைத் துறை பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிற மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூட்டுறவுத் துறையின் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருந்த காலத்திலேயே வேளாண்மைத்துறையில் எந்தெந்த வகையில் செயல்பட்டால் உற்பத்தி எந்தெந்த அளவுக்குப் பெருகுமென்ற கருத்தைக் கூறியிருக்கிறார்கள். அவர்கள் கலந்து கொள்கின்ற பொது நிகழ்ச்சிகளில் எல்லாம் எங்களைப் போன்றவர்களுக்கு அதைப் பற்றி எடுத்துக் கூறி வந்திருக்கிறார்கள் என்பதை உலகம் நன்றாக அறியும். நீங்களே நன்றாக அறிந்திருக்கிறீர்கள். இந்தத் துறையிலே அவர்கள் முழு அளவு அறிவு சான்ற விளக்கங்களைக் கூறக் கூடிய நிலையில் இருப்பினும் அதற்கேற்ற காலம் அவர்களுக்கு இல்லை. அதற்காகத் தான் காலத்தைப் பெருக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

கழக ஆட்சி ஏற்படுவதற்கு முன்பு 1966–67 ஆம் ஆண்டில் இந்த மாநிலத்தில் உணவு உற்பத்தியின் அளவு 37·91 லட்சம் டன் என்ற அளவில் இருந்த நிலை மாறி இன்றையதினம் 1973–74 ஆம் ஆண்டினுடைய குறியீடு 57 லட்சம் என்ற அளவிற்கு எட்டி 1974–75 ஆம் ஆண்டின்

[திரு. சி. வி. எம். அண்ணாமலை] [1974 மார்ச் 19

குறியீடு 59 லட்சம் மெட்ரிக் டன் என்று அறிவித்திருக்கிறார்கள். இது வேளாண்மைத் துறையின் வளர்ச்சியைக் காட்டுகிறதா அல்லது வீழ்ச்சியைக் காட்டுகிறதா என்பதை அருள்கூர்ந்து எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆளும் கட்சியைச் சார்ந்த நண்பர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் சொன்னார்கள். அவர்கள் சொன்னார்கள் என்று சந்தோஷப்பட வேண்டாம். அவர்களும் சொன்னார்கள்; எதிர்கட்சியில் இருக்கும் மாண்புமிகு மாரிமுத்து அவர்களும் சொன்னார்கள். ஆனால் உண்மையாகவே பரிசீலித்துப் பயன் அடையத்தக்க விளக்கங்களைக் கூறுவதுதான் அரசுக்கு உறுப்பினர்கள் தருகிற துணையாக, ஆலோசனையாக இருக்குமே தவிர, அவர்கள் செயல்படுகிற காரியத்தில் குறுக்கிடு செய்து அதற்கென்று போராட்டம், கிளர்ச்சி என்று கூறி புண்படுத்துகிற வகையில் திசை திருப்புவது சான்றோருக்கு உரியது அல்ல.

இந்த நேரத்தில் தமிழகம் பெற்றிருக்கும் இந்தப் பெரிய பேறு, உணவுத் துறையில் இந்த ஏற்றம், வளர்ச்சி அப்படியே இந்த ஆண்டு இருக்கக் கூடிய சூழ்நிலை இருக்கிறதா என்பதுபற்றி நான் எடுத்துக் கூறும்போது எதிர்க்கட்சியில் இருப்பவர்கள் சிரிக்கமாட்டார்கள் என்று கருதுகிறேன்.

சென்ற ஆண்டு பருவ மழை பெய்யாமல் பொய்த்து விட்டது. இன்றையதினம் உணவுத் துறையில் அடைய வேண்டிய சாத்தியக் கூறுகள் குறையுமோ என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. இதே நிலை நீடிக்குமானால் எதிர்காலத்திலே மழைப் பற்றாக்குறை, நீர்ப்பற்றாக்குறையினால், கால மழை பொய்த்து விட்டதால் நம்முடைய இலக்கை அடைய முடியும் என்று கூற முடியாது. இந்த நிலை ஏற்பட்டால் கழக அரசால்தான் ஏற்பட்டது என்ற பழியைப் போட்டு விடக்கூடாது. அருமை நண்பர்களே, கழக அரசு பொறுப்பேற்ற பிறகு பெரும் பஞ்சத்தைச் சந்தித்திருக்கிறது. . . . . . . . . . . . . . . . . . . . . . .

திருமதி த. ந. அனந்தநாயகி: ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் சார். கனம் அங்கத்தினர் அவர்கள் பேசும்போது "அருமை நண்பர்களே" என்று பொது மேடையில் பேசுவதுபோல் பேசுகிறார்கள். இது மேடைப் பேச்சா அல்லது சட்டசபைப் பேச்சா? சபாநாயகரைப் பார்த்துத்தான் அவர் பேச வேண்டுமே தவிர, அருமை நண்பர்களே என்று பேசலாமா?

திரு. சி. வி. எம். அண்ணாமலை: அருமைச் சகோதரி அவர்கள் பலமுறை சகோதரர்களே என்று பேசியிருக்கிறார்கள். சகோதரப் பான்மையோடு பேசினாலும் பகை உணர்ச்சியைப் போக்கும் வகையில் என்னுடைய பேச்சு இருக்க வேண்டும், பொல்லாத வார்த்தைகளைச் சொல்லிப் புண்ணாக்க வேண்டாம் என்ற வகையில் கூறினேனே தவிர, குறைபட்ட வார்த்தையாக சகோதரி அவர்கள் எடுத்துக் கொள்ள வேண்டாம் என்று கூறி என்னுடைய பேச்சைத் தொடருகிறேன்.



1974 மார்ச் 19] [திரு. சி. வி. எம். அண்ணாமலை]

கால மழை பொய்த்து விட்டது. மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், முதல்வர் அவர்களுக்கும் மிகப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். வேளாண்மைத் துறையில் முதல் நிலைத் திட்டம், முழுத் திட்டம் தஞ்சைக்குத்தான் தரப்படுகிறது. தஞ்சை இந்த மாநில மக்களுக்கு மட்டும் அல்ல, இந்தியத் துணைக் கண்டத்தில் பற்றாக்குறையால் பஞ்சத்தால் வாடுகிற மக்களுக்கெல்லாம் உணவு தருகிற மாவட்டமாக இருக்கிறது. ஆனால் எப்படி ஒரு தனி மனிதனின் சக்தியை நம்பி ஒரு குடும்பம் இருந்தால் மற்றவர்களுடைய ஆற்றல் பெருகாத நிலை ஏற்படுவது போல் ஒரு தனி மாவட்டத்தை மட்டும் நம்பியிராது வேளாண்மை முன்னோடித் திட்டங்களை மற்ற மாவட்டங்களிலும் செயல்படுத்த வேண்டுமென்று இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

எந்தத் திட்டமாக இருந்தாலும் அந்தத் திட்டம் பயனுறு திட்டங்களாக இருந்தால் அது தஞ்சை மாவட்டம் என்று இருப்பதை மாற்றி செங்கற்பட்டு மாவட்டத்தையும், வட ஆற்காடு மாவட்டத்தையும் அதிலே இணைத்துக்கொண்டாலொழிய தானியப் பெருக்கத்தில் நிலையான, ஸ்திரமான நம்பிக்கைக்கு உத்தரவாதம் கொடுக்க, வடிவம் ஏற்படுத்திக் கொடுக்க வேளாண்மைத் துறையால் முடியாது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

கால மழை பொய்த்து விட்டது. எங்கள் மாவட்டத்தில் மட்டுமல்லாது பல மாவட்டங்களில் கால்நடைகளுக்குக் குடிதண்ணீர் இல்லாத கொடுமை, அடுத்து வரும் மாதங்களில் பஞ்சம் ஏற்பட்டு விடுமோ என்ற நிலை. நானும் எங்களுடைய மாவட்ட சட்டமன்ற உறுப்பினர்களும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்குக் கூட எழுதி அனுப்பியிருக்கிறோம், அரசுக்கும் எழுதி அனுப்பியிருக்கிறோம்.

கூட்டுறவுக் கடன்களானாலும் சரி, அரசுக் கடன்களானாலும் சரி, மற்றத் துறை கடன்களானாலும் சரி, அந்தக் கடன்களுக்கெல்லாம் நிவாரணம் அளிக்கும் வகையிலும் தள்ளிப் போடுகிற வகையிலும் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

வேளாண்மைக்குத் தேவைப்படுகிற மூலப்பொருள் இரசாயன உரம் இதிலே மூடி மறைத்துப் பேசுவதில் பயன் இல்லை. நான் நேரடியான விவசாயி. நான் வணிகத்துறையிலும் ஈடுபட்டிருக்கிறேன். வேளாண்மைத் துறையிலும் ஈடுபட்டிருக்கிறேன். எந்த நேரடியான கேள்விக்கும் பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(நண்பகல் 12-00)

எந்தெந்தக் காலங்களில் எந்த எந்த பயிர்களுக்கு அடிஉரம் இடுவது, எந்தெந்தக் காலங்களில் என்னவென்ன செய்யவேண்டும் என்பதற்கு ஒரு முறை இருக்கிறது. நேரடி அனுபவத்தைப் பெற்றவன் நான்.

[திரு. சி. வி. எம். அண்ணாமலை] [1974 மார்ச் 19

இப்போது அறிமுகம் செய்யப்பட்டிருக்கிற உயர்ரக விதைகள் எல்லாம் நம் மாநிலத்தில் உள்ள மக்களின் மானத்தைக் காக்கக்கூடியவை களாகத்தான் இருக்கின்றன. ஆனால் நமக்குத் தேவையான உணவுப் பொருள்கள் கிடைக்கும் வகையில் அதிகப்படியான உற்பத்தி இருக்கும் வருங்காலத்தில் என்று சரியான நம்பிக்கை ஊட்டக்கூடியதாக அவை அமையவில்லை.

பூச்சிக்கொல்லி மருந்துகள் நமக்கு அதிகமாகத் தேவைப்படுகின்றன. ஆகவே மத்திய அரசோடு எப்படியாவது போராடி நமக்கு வேண்டிய பூச்சிக்கொல்லி மருந்துகளை பெற்றுத்தர வேண்டும்.

நமக்கு வேண்டிய இரசாயன உரத்தையும் பெற்றுத் தர வேண்டும்.

நான் மதிப்பிற்குரிய அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள் கிறேன். அவர்கள் மூலம் அதிகாரிகளுக்கும் தெரிவித்துக் கொள்கிறேன். வேளாண்மைத் துறையினர் மூலம் அளிக்கப்படுகிற விதைகள் சரியான வகையில் முளைவதில்லை என்ற ஒரு குற்றச்சாட்டு கூறப்பட்டு வந்தது. அது பொய் என்று நான் நினைத்திருந்தேன். ஆனால் என் அனுபவத் தில் நானே பார்த்தேன். என் வாரக்காரருக்குக் கொடுத்த விதையில், நான் கொடுத்த விதைகள் நன்றாக இருக்கின்றன, ஆனால் வேளாண் மைத் துறையினர் மூலம் கொடுக்கப்பட்ட உயர்ரக விதைகளில் பாதி விளையவில்லை. பயிர் எல்லாம் நாசமாகிவிட்டது. இந்த நிலை தவிர்க்கப் பட வேண்டும். உரிய காலத்தில் அறுவடை செய்து காய்ச்சல் போட்டு முறைப்படுத்தி பாதுகாத்து வைக்கும் பொறுப்பை அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. விதைகளுக்குத் தேவைப்படுகிற அக்ரஸான் மருந்து கிடைப்பதில்லை. (மணியடிக்கப்பட்டது). அது கிடைப்பதற்கும் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு காலமாகிவிட்டதால் இந்த மானியக் கோரிக்கையை ஆதரித்து இந்த அளவோடு முடித்துக்கொள் கிறேன். வணக்கம்.

திரு. எ. சுவாமிதாஸ்: மாற்றுத் தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறை மானியங்கள் மீது காங்கிரஸ் கட்சியின் சார்பில் கொடுக்கப்பட்டிருக் கும் வெட்டுத் தீர்மானங்களை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் கூற முற்படுகிறேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்தில் கொடுத்திருக்கிற 1974–75-ம் ஆண்டுக்கான வேளாண்மை கோரிக்கை பற்றிய குறிப்புகளில் பல அம்சங்களைக் கொடுத்திருக்கிறார்கள். பல திட்டங்கள் மிக நல்ல திட்டங்கள் என்பதை கூறித்தான் ஆகவேண்டும். நல்ல திட்டங்களைக் கொடுத்திருக்கிற மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தத் திட்டங்களில் எவற்றையேனும் கன்னியாகுமரி மாவட்டத்திற்குக் கொடுத்திருக்கிறார்களா என்று துருவித் துருவிப் பார்த்தால் அப்படி ஒரு திட்டத்தையும் கொடுத்த தாகத் தெரியவில்லை. அவர்கள் கன்னியாகுமரி மாவட்டத்தைப் புறக் கணித்து விட்டார்களோ என்ற அச்சம்தான் எழுகிறது.



1974 மார்ச் 19] [திரு. எ. சுவாமிதாஸ்]

குறிப்பாகச் சொல்லப்போனால் பல பழத்தோட்டங்கள் அமைக்க இருப்ப தாகச் சொல்கிறார்கள். எங்கள் பகுதியைத் தமிழ் நாட்டுடன் இணைப்ப தற்கு முன்னால் கூட ஒரு நல்ல பழத்தோட்டம் கன்னியாகுமரியில் இருந்துகொண்டிருக்கிறது. அந்தப் பழத் தோட்டத்தைப் பற்றி எந்த ஒரு குறிப்பையும் இதில் காணோம். முக்கனி விளைகிற ஒரு பகுதி தமிழ் நாட்டில் உண்டு என்றால் அது கன்னியாகுமரி மாவட்டந்தான். மா, பலா, வாழை என்ற முக்கனிகளும் அங்கேதான் விளைகின்றன. அப்படி விளையக்கூடிய அந்தப் பகுதிபற்றி இந்தக் குறிப்பில், பழத்தோட்டம் பற்றிய குறிப்பில் எதையும் காணோம்.

அதுவும் அரசுக்குச் சொந்தமான ஒரு பழத்தோட்டம். ஐம்பது ஆண்டுக் காலமாக செயல்பட்டு வரும் ஒரு பழத்தோட்டம் அங்கு இருக் கிறது. அந்தப் பழத்தோட்டத்தை இந்த இலாகா புறக்கணிப்பதைப் பற்றி எண்ணிப் பார்க்கும்போது உண்மையில் வேதனைப்படாமல் இருக்க முடியாது.

வேளாண்மைத் துறையில் உள்ள பல குறைகளைப் பற்றியெல்லாம் இங்கு குறிப்பிட்டார்கள். அதைப்பற்றி மீண்டும் நான் எடுத்துக்கூற விரும்பவில்லை. இரசாயன உரத் தட்டுப்பாடு இருப்பதாகச் சொன்னார்கள். இரசாயன உரத்தை மிகுதியாக நாம் இதுகாறும் புகுத்துவதற்கு முற்பட்டிருக்கிறோம். இரசாயன உரம் தேவைதான். அதோடு சேர்ந்து இயற்கை உரங்கள், தழை உரங்கள், கம்போஸ்ட் கூட்டு உரங்கள், தொழு உரங்கள், இவைகளைப் பேணிப் பாதுகாப்பதற்கு உரிய ஆலோசனைகளை நாம் வழங்கத் தவறி விட்டோம் என்ற ஒரு குற்றச்சாட்டை கூற விரும்பு கிறேன். பொதுவாக தழை உரங்கள் போடவேண்டுமென்று சொன்னாலும் கூட அதை வேண்டிய அளவிற்கு உற்பத்தி செய்வதற்கு, இந்த அரசு தக்க நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளவில்லை. அதேபோல் நகரசபை களில் கம்போஸ்ட் மான்யூர் தயார் செய்கிறோம். அதையும் மிகுதியாக அபிவிருத்தி செய்வதாகக் காணவில்லை. குறிப்பில் காணப்படுகிறதே தவிர நடைமுறையில் காணப்படவில்லை.

விவசாயிகளுக்கு 'விவசாயத்தை விஞ்ஞான ரீதியில் அபிவிருத்தி செய்ய ட்ராக்டர்கள், மற்ற விவசாயக் கருவிகள் தேவையாக இருந்தாலும் அந்தக் கருவிகளைப் புகுத்துவதற்கு முன்னால் ஒன்றை நினைவில் கொள்ள வேண்டும். ட்ராக்டர்கள் போன்ற இத்தகைய கருவிகள் நம் நாட்டுக்கு உகந்தவை அல்ல என்ற ஒரு குறிப்பை காந்தியவாதியாகிய அன்றிருந்த பொருளாதார நிபுணர் திரு. ஜே. சி. குமரப்பா அவர்கள் குறிப்பிட்டிருக் கிறார்கள். ட்ராக்டர்கள் நம் நாட்டு விவசாய முறைக்கு ஏற்றதல்ல என்ற கருத்தைக் குறிப்பிடும்போது ட்ராக்டர்கள் உரம் போடாது என்று நகைச் சுவையாகக் கூறியிருக்கிறார்கள்.

கன்றுகாலிகள் இருக்கின்றன. உழுவதற்கு நல்ல தரமான மாடுகளை வைத்துக்கொண்டால் அவை உழுவதற்குப் பயன்படுவதோடு கூட நல்ல உரமும் கொடுக்கிறது என்ற கருத்தைக் கூறிவிட்டு ட்ராக்டர்கள் உரம் போடாது என்று நகைச்சுவையாகச் சொல்லியிருக்கிறார்கள். அதை

[திரு. எ. சுவாமிதாஸ்] [1974 மார்ச் 19

மனதில் வைத்துக்கொள்ளும் ஒரு காலக்கட்டத்தில் நாம் வந்துகொண்டிருக்கிறோம். ஆகவே கன்றுகாலிகள் நமக்கு மிகவும் தேவை. உரம் வாங்கப் பணம் கொடுப்பதுபோல், பூச்சி மருந்துக்குக் கடன் கொடுப்பது போல் நல்ல கன்றுகாலிகள் வாங்குவதற்கும், அவர்களுக்கு, விவசாயிகளுக்குத் துணை செய்யவேண்டும்.

கன்றுகாலிகளை வாங்கி அவைகளை விவசாயத்தோடு இணைத்தால் தான் நாம் சரியான உற்பத்தியைப் பெறமுடியும். இப்போது நல்ல தரமான ஒரு ஜதை மாடு வாங்க வேண்டுமென்றால் இரண்டாயிரம் ரூபாய் கொடுத்து வாங்க வேண்டிய நிலையில் விவசாயி இருந்துகொண்டிருக்கிறான். உழுவதற்குத் தேவையான நல்ல தரமான ஒரு ஜதை மாட்டின் விலை 2,000 ரூபாய். அந்நிலையில் மாடுகள் வாங்க முடியாத ஒரு நிலையில் தமிழ்நாடு இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே நல்ல தரமான மாடுகளை உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு மலிவான விலையில் கொடுப்பதற்கு இந்தத் துறை முற்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

THE HON. THIRU SI. PA. ADITANAR: Compost manures hav limited nitrogenous content. Rural compost has got only 0·9 per cen nitrogen; urban compost has got only 1·2 per cent nitrogen and Farmyar manure has 1·3 per cent nitrogen.

கம்போஸ்ட் உரம், தொழு உரம் போன்றவற்றை மிகுதியாகப் பயன்படுத்தலாம் என்று சொன்னார்கள், நல்ல யோசனை. அதிலுள்ள கஷ்டம் என்னவென்றால், இதை வாசிக்கிறபோது உங்கள் தலைவர் அவர்கள் வாசிக்க வேண்டாமென்று சொன்னார்கள்.

I have circulated a separate Note. Do you think that the high yielding varieties of rice about which you are talking so much and i which Kanyakumari district is interested, can be produced to the maxi mum extent by the use of compost or farm-yard manure, namely, 2·5 t 3 tonnes per acre.

திரு. எ. சுவாமிதாஸ்: விவசாயிகள் மத்தியில் இரசாயன உரம் அதிகமாகப் போடவேண்டுமென்ற அந்தக் கொள்கையை நாம் அதிகமாக வற்புறுத்திய காரணத்தால் இயற்கையாகவே அவர்கள் சேகரித்து வைத்துக் கொண்டிருந்த உரத்தைப்பற்றி அவர்கள் சமீப காலத்தில் மறந்து விட்டார்கள். விவசாயிகளுக்கு நன்கு தெரியும். இரசாயன உரத்தை ஒரு மண்ணுக்கு அதிகமாகப் போடப்போட அதனுடைய இயற்கை வளம் குறைந்து வந்து கடைசியில் மணற்பாங்கான ஒரு இடமாக அந்த நிலம் ஆகிவிடும் என்பது. போடவேண்டிய இயற்கை உரத்தைப் போட்டு பிறகு இரசாயன உரத்தைக் கலந்தால்தான் நல்ல ஈல்ட் கிடைக்கும்.

ஹை ஈல்டிங் வெரைட்டியில் கன்னியாகுமரி மாவட்ட மக்களுக்கு நம்பிக்கை இல்லை. இரண்டு மூன்று ஆண்டுகளாக ஐ.ஆர். 8, ஐ.ஆர். 20 போன்ற பயிர் இனங்களையெல்லாம் போட்டு இன்று கடைசியில் அவர்



1974 மார்ச் 19] [திரு. எ. சுவாமிதாஸ்]

களுக்குக் கிடைத்தது நஷ்டம்தான். கன்னியாகுமரி மாவட்டம் மற்ற மாவட்டங்களைவிட சீதோஷ்ண ஸ்திதியில் மாறுபட்டதாகும். அது மழை அதிகம் பெய்யும் பகுதி. ஆகவே, அந்தந்த சீதோஷ்ண ஸ்திதிக்கு ஏற்றவாறு ஹை ஈல்டிங் வெரைட்டீஸை கண்டுபிடிக்க வேண்டுமேயொழிய மற்ற மாவட்டங்களில் பயிரிடும் விதைகளைக் கொடுத்து நீங்களும் அதிக உற்பத்தி செய்யுங்கள் என்று சொன்னால் அதனால் ஏற்பட்டது நஷ்டம் தான். ஐ.ஆர். 8 போட்டவர்கள் நஷ்டமாகிவிட்டார்கள். அவர்களுக்குத் தகுந்த சாகுபடி கிடைக்கவில்லை. 1 எக்கர் ½ எக்கர் நிலம் வைத்துக் கொண்டிருப்பவர்கள் மிகவும் நஷ்டப்பட்டு விட்டார்கள். ஒரு தடவை, இரண்டு தடவை அவர்களுக்கு நல்ல வருவாய் இருந்தது. ஆனால் இன்றைக்கு அப்படியில்லை. ஆகவே, திருப்பதிசாரத்தில் ஒரு அரசாங்க ஆராய்ச்சி விதைப் பண்ணை ஒன்றை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த விவசாயப் பண்ணையை வைத்து, கன்னியாகுமரி மாவட்டத்திற்கு ஏற்ற வகையில் நல்ல விளைச்சல் தருகிற ஒரு புதிய ரக நிலை உற்பத்தி செய்து கொடுத்தால் நலமாக இருக்கும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டம் முழுக்க, முழுக்க விவசாயிகள் மாவட்டம். ஆகவே, அந்த மாவட்டத்திற்கு ஒரு விவசாயக் கல்லூரி வேண்டுமென்று நீண்ட நாட்களாகக் கேட்டுக்கொண்டிருக்கிறேன். அந்தக் கல்லூரி அங்கே அமைக்கப்படவில்லை.

தென்னைப் பயிருக்கு, வாழைப் பயிக்கு அங்கே அடிக்கடி நோய் வந்துகொண்டிருக்கிறது. சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் என்ன நோய் என்று கண்டுபிடிக்க முடியாமல் திண்டாடுகிறார்கள். மட்டிப்பழம் என்ற பழம் அழியும் நிலையில் இருக்கிறது. நேந்திரம் பழம் அந்தப் பகுதியில் அதிகம். அதன்மூலம் நல்ல வருவாய் கூட வருகிறது. ஆகவே, அந்த வாழைக்கு வரும் நோயைக் கண்டுபிடிக்க உடனடியாக வழிவகை காண வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தென்னை மரம் வைத்தால் 8 ஆண்டுக் காலத்தில் பலன் தரும். அதற்கு நோய் வந்து விடுவதால் அது சரியான முறையில் பலன் தருவது இல்லை. தென்னம் பிள்ளையைப் போல் ஒரு பிள்ளை கிடையாது என்று சொல்லுவார்கள். ஆகவே, அரசாங்கம் உடனடியாக இதைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது).

* திரு. கு. பாலகிருட்டிணன்: சட்டப்பேரவை மாற்றுத் தலைவரவர்களே, இன்றையதினம் இந்த மாமன்றத்திலே மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கோரியுள்ள வேளாண்மைத் துறை மானியத்தையும், கால் நடைத்துறை மானியத்தையும் வரவேற்று ஒரு சில கருத்துக்களை இந்த மாமன்றத்தில் கூற விரும்புகிறேன். இன்றைய தினம் தமிழ் நாடு உணவு தானியத்தில் தன்னிறைவு பெற்று, வெளி மாநிலங்களுக்கும் அனுப்பிக்கொண்டிருக்கிறது. உண்மையாகவே தமிழ்

நாட்டிலுள்ள யாரும் தமிழக அரசு செய்துள்ள இரண்டு புரட்சிகளை மறக்க முடியாது. ஒன்று, பசுமைப் புரட்சி, மற்றொன்று வெண்மைப் புரட்சி. வேளாண்மைத் துறை மூலம் இன்றையதினம் பல திட்டங்களை நிறைவேற்றி, அதிக மகசூல் தரக்கூடிய நிலையையும் ஏற்படுத்தியிருக்கிறது. அதே போல் வெண்மைப்புரட்சி என்ற அடிப்படையில், அதிக அளவில் கால்நடைகளை வளர்த்துப் பால் உற்பத்தியைப் பெருக்கி, அதன் மூலமாக பாலை அதிகமாக உற்பத்தி செய்து இருக்கிறோம். அடுத்து, கோழி வளர்ப்புக் கழகத்தின் மூலம், கோழிகளை அதிக அளவில் உண்டாக்கி, சாதாரண மக்களுக்கு முட்டை கிடைக்க வழி வகை செய்திருக்கிறது. அப்படிச் சிறப்பான முறையில் கோழி வளர்ப்புக் கழகம் பணியாற்றி வருவதையும் யாரும் மறக்க முடியாது. இதை எதிர்க்கட்சிகளும் நிச்சயமாகப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

இன்றையதினம் வேளாண்மையைப் பொறுத்தவரையில் பல புதிய திட்டங்களை நிறைவேற்றியதற்காக இந்த அரசை நான் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். மும்முர வேளாண்மை மாவட்டத் திட்டம், மும்முர வேளாண்மை பகுதித் திட்டம், மலைப் பகுதி மேம்பாடு, இந்திய-ஜெர்மனி நீலகிரி மேம்பாட்டுத் திட்டம், ஒருங்கிணைந்த புன்செய் நில வேளாண்மை மேம்பாட்டுத் திட்டம், அனைத்து நாடுகள் வளர்ச்சிச் சங்கத் திட்டம் (ரூ. 2 கோடி அளவில்) என்று பல திட்டங்களை நிறுவி தமிழகத்தில் உணவு தன்னிறைவு அடைந்து இருப்பதை தமிழக மக்கள் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

அது மட்டுமல்லாமல் முழு பயன் தரும் நெல் சாகுபடி திட்டத்தின் கீழ் சுமார் 55 லட்சம் ஏக்கர் பயன்படும் வகையில் திட்டம் அமைத்து இருக்கிறோம். இத்தனை சிறப்பாக ஏற்பாடுகளைச் செய்துள்ள தமிழக அரசையும், வேளாண்மைத் துறை அமைச்சரையும் இந்த நாட்டு மக்கள் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல் விவசாயிகளுக்குத் தேவையான உரம், பூச்சிகொல்லி மருந்து, நீர்ப்பாசனம் ஆகியவை விவசாயம் நல்ல முறையில் செய்வதற்கு அத்தியாவசியமானவை என்பது எல்லா உறுப்பினர்களுக்கும் தெரியும். உரத்தைப் பொறுத்தவரையில், ஆளுநர் அவர்கள் உரையிலேயே நமக்கு 1973–74-லில் 3·15 லட்சம் டன் தருகிறேன் என்று மத்திய அரசு ஒப்புக்கொண்டிருந்தபோதிலும் நமக்குக் கிடைத்தது 2·30 லட்சம் டன்தான் என்று குறிப்பிடப்பட்டு இருக்கிறது. நமக்கு ஒதுக்கிய உரங்கள் அத்தனையும் நமக்கு கொடுத்து விடவேண்டுமென்று மத்திய அரசை மாநில அரசு ஒப்புக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பூச்சி மருந்தைப் பொறுத்தவரையில் தமிழ் நாட்டில் ஓரளவிற்குச் சீராகவும், நல்ல முறையிலும் கொடுக்கப்பட்டு வருகின்றன. நம்முடைய மாநிலத்தில் உள்ள அதிகாரிகள் பூச்சி மருந்துகள் உற்பத்தியாகும் அந்த இடத்திற்கே சென்று குறைந்த விலையில் கான்டிராக்ட் எடுத்துக் கொண்டு வந்தால் இங்கே பி.எச். சி. 10 சதவீதம், ஆந்திரா, கேரள மாநிலத்தில் விற்பதை விடக் குறைவாகக் கிடைக்கிறது. அங்கே



யெல்லாம் ரூ. 600 என்ற அளவில் விற்கின்றன. இங்கு ரூ. 400 விலையில் கொடுக்கப்படுகிறது. அத்தகைய சிறப்பாக நம்முடைய வேளாண்மைத் துறை அதிகாரிகள் பணியாற்றி வருகிறார்கள்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

எனக்கு முன்னாலே பேசிய உறுப்பினர்கள் பூச்சி மருந்து ஒழுங்காகக் கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்துப் பேசினார்கள். எவ்வளவுதான் அரசு வேளாண்மைத் துறையில் அக்கறை கொண்டு இருந்த போதிலும், விவசாயிகளுக்கு ஏற்படும் கஷ்டங்களையும் கருத்தில் கொள்ள வேண்டும். ஒரு விவசாயி பயிரிட்டுவிட்டு, பிறகு அங்கே போய் பார்க்கிறபோது அந்தப் பயிர்கள் எல்லாம் பூச்சி அரித்து விட்டிருக்கிறது என்று சொன்னால் உண்மையாகவே அந்த விவசாயி மனம் நொந்துப் போய்விடுவான். ஆகவே, போதுமான பூச்சி மருந்துகளை ஒவ்வொரு கிராமத்திலும் உள்ள ஒவ்வொரு கூட்டுறவுத் துறையிலும். உள்ள டிப்போக்களில் வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

<u>மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:</u> இந்தப் பூச்சி மருந்தைப் பற்றி இப்போதே பதில் சொல்லி விடுகிறேன். இந்தப் பூச்சி மருந்துகள் பெஸ்டிசைட்ஸ் சர்க்காரிடம் ஸ்டாக் இருக்கிறது. விவசாயக் கிடங்குகள் எல்லாவற்றிலும் இருக்கின்றன. ஒரு வேளை மாண்புமிகு உறுப்பினர் அல்லது அவருக்குத் தெரிந்த ஊரில் பூச்சி மருந்து டெப்போவில் இல்லை என்று அறிந்து சொன்னால் உடனே அனுப்பி வைக்கத் தயாராக இருக்கிறேன். நம்முடைய டிபார்ட்மென்டில் பி. எச். சி. தயாராக இருக்கிறது. கேட்கிற அளவில் நாங்கள் தருவதற்குத் தயாராக இருக்கிறோம். உங்கள் ஊரில் இல்லையா என்று கேட்டு, உடனே சொல்லுங்கள், அனுப்பி வைக்கிறேன்.

<u>திரு. கு. பாலகிருட்டினன்:</u> மாண்புமிகு அமைச்சர் அவர்கள் டிபார்ட்மென்டில் ஸ்டாக் இருக்கிறது என்று சொன்னாலும், சில நேரங்களில் தட்டுப்பாடு ஏற்பட்டு விடுகிறது. இதை நிவர்த்தி செய்ய வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள் கிறேன்.

<u>திருமதி த. ந. அனந்தநாயகி:</u> பாயின்ட் ஆப் ஆர்டர் சார், கனம் அமைச்சர் அவர்கள் பூச்சி மருந்து ரெடியாக இருக்கிறது என்று சொன்னார்கள், அவரே ஸ்டாக் வைத்து இருக்கிறார்களா? டிஸ்டிரிபியூஷன் செய்யாமல் ஸ்டாக் வைத்து இருக்கிறார்களா?

<u>மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:</u> நான் என்று சொல்கிற போது "ஐ ரெபர் டு அக்ரிகல்சுரல் டிபார்ட்மென்ட்"

திரு. கு. பாலகிருட்டிணன் : தமிழகத்தில் தஞ்சை மாவட்டத்தை நெற்களஞ்சியம் என்று சொன்னால் யாரும் மறுக்க முடியாது. எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. வி. எம். அண்ணாமலை அவர்கள், எல்லாம் தஞ்சை மாவட்டத்திற்கே செய்கிறீர்கள் என்று சொன்னார்கள். தமிழகத்திற்கே சோறுபோடுவது தஞ்சை மாவட்டம். அப்படிப்பட்ட தஞ்சை மாவட்டம் மேட்டூர் அணையை நம்பி இருக்கிறது. அந்தப் பாசன வசதியில் நீர் வற்றிப் போனால் பாசனம் செய்ய முடியாது. ஆகவே, சிறு விவசாயிகள் குழாய்க் கிணறுகள் போட்டுக்கொள்வதற்கு ஆக்கமும் ஊக்கமும் தரவேண்டும். ஒரு எக்கர், 2 எக்கர் என்று வைத்திருக்கும் விவசாயிகளுக்கு குழாய்க் கிணறுகள் எடுக்க உதவி செய்ய வேண்டும். இதனால் நஷ்டம் ஏற்பட்டாலும், பரவாயில்லை. ஒரு கோடி ரூபாய் நெசவாளர்களுக்காக கொடுக்கப்பட்டதை இப்போது ரத்து செய்து இருக்கிறோம். அதே போன்றும் விவசாயிகளுக்கு போர் வெல் போட்டுக்கொள்வதற்கு பாதி மானியமும், பாதி கடனும் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நிறைய குழாய்க் கிணறுகள் போடுவதற்கு அங்கேயுள்ள வேளாண்மைத் துறை பொறியாளர்கள் மிகவும் சுறுசுறுப்பாகப் பணியாற்றுகிறார்கள்.

ஆனால், ஒன்று மாத்திரம் மிகவும் கஷ்டம். நான்கு மாதங்களில் கோடை காலத்தில்தான் போட வேண்டும். மற்றைய காலங்களில் வயலில் தண்ணீர் இருக்கிற காரணத்தினால் அங்கே போர் வெல் போடுவது கஷ்டமாக இருக்கிறது. நான்கு மாதங்களில் மிகவும் கஷ்டப்பட்டு அதிகாரிகள் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். விவசாயிகளுக்குக் கொடுக்கப்படுகிற கடன், நில வள வங்கி மற்ற வங்கிகளின் மூலம் கொடுக்கப்படுகின்ற கடன் 7 ஆண்டு 10 ஆண்டு என்று இல்லாமல், 15 ஆண்டு 20 ஆண்டு என்ற தவணையில் திருப்பிப் பெற்றுக்கொண்டால் நிச்சயம் விவசாயிகளுக்கு நன்மையாக இருக்கும் என்று கருதுகிறேன்.

கூட்டுறவு சங்கங்கள் மூலம் வீடுகள் கட்டிக்கொள்வதற்கு ரூ. 25,000 வரை கடன் கொடுக்கிறோம். அதற்கு 20 ஆண்டு வரையில் தவணை கொடுக்கப்படுகிறது. அதைப்போல விவசாயிகளின் சுமையைக் குறைப்பதற்காக இந்தத் தவணையைக் கொஞ்சம் நீட்டிக் கொடுத்து, இந்தக் காரியத்தைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். (மணி அடிக்கப்பட்டது.)

* திரு. ஆ. கு. சுப்பையா : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் வேளாண்மைத் துறைக்காக சுமார் 59 கோடி ரூபாய், கால் நடைத் துறைக்காக சுமார் ரூபாய் 4 கோடி அனுமதி கோரி இந்த மன்றத்தில் முன்னாலே தன்னுடைய அறிக்கையைச் சமர்ப்பித்திருக்கிறார்கள்.



விவசாயம் மிகவும் முக்கியமானது. விவசாயத்தை எந்த அளவுக்கு அபிவிருத்தி செய்து நாட்டிலே அதிகமாக உணவை உற்பத்தி செய்கிறோமோ அந்த அளவுக்கு நம்முடைய நாடு முன்னேற்றம் அடைவது மாத்திரம் அல்லாமல், நம்முடைய நாட்டு மக்களுக்குப் போதுமான அளவுக்கு உணவைக் கொடுத்து, மற்ற மாநிலங்களுக்கும் உணவு அளிக்கக்கூடிய ஒரு நிலையை ஏற்படுத்த முடியும் என்பதை யாரும் மறுக்க முடியாது. அந்த நிலையைப் பார்க்கிற போது அமைச்சர் அவர்களுடைய அறிக்கையைப் பார்த்தால், பருவ மழை தவறியதன் காரணமாக வறட்சி ஏற்பட்டு, அதனால் விளைச்சல் குறைந்திருக்கிறது என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதுமாத்திரமல்லாமல் இன்றைய தினம் நம்முடைய தமிழகத்தில் காவேரித் தண்ணீரை நம்பித்தான் பெரும் பகுதியான நிலங்களை நாம் விவசாயம் செய்யவேண்டிய ஒரு நிலையில் இருந்துகொண்டிருக்கிறோம். காவேரித் தண்ணீருக்கு ஏற்பட இருக்கக்கூடிய ஆபத்தைப் போக்குவதற்குத் தமிழ்நாடு அரசு தீவிரமான முயற்சி எடுத்துக் கொண்டாலும், கூட, இந்த நேரத்தில் பருவ மழை தவறினால் தண்ணீர்ப் பற்றுக்குறை ஏற்பட்டு நஞ்சை நிலங்கள் பெரும் அளவுக்கு பாதிக்கப்படும் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

சிறிய நீர்ப் பாசன வசதிகளை அதிகமாகச் செய்து கொடுக்க வேண்டும். அதற்கு அதிகமான வசதிகளைச் செய்து கொடுப்பதன் மூலம் விவசாயத்தைப் பக்குவமான முறையில் செய்ய வேண்டிய நிலைமையும் ஏற்படும். சோவியத் நாட்டில் கடலில் இருக்கிற நீரை மேகமாக மாற்றி மழை பெய்ய வைக்கிறார்கள். அது போல நம்முடைய நாட்டில் மழை பெய்வதற்கு உள்ள ஆராய்ச்சி செய்வது பற்றி அமைச்சர் அவர்கள் ஏதேனும் ஆராய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பூச்சி கொல்லி மருந்து நிறைய இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்த வருஷம் இந்தச் சபையில் 2, 3 தரம் இந்தப் பிரச்னையை எழுப்பியிருக்கிறோம். தஞ்சை மாவட்டத்தில் பூச்சி கொல்லி மருந்து போதுமான அளவுக்கு இருந்தாலும்கூட விநியோகம் முறையாக நடப்பதில்லை. தேவையில்லாத இடங்களில் இருக்கிற டெபோக்களில் வைத்திருக்கிறார்கள். விவசாயிகளுக்குத் தேவையான இடங்களில் பூச்சி கொல்லி மருந்து கொடுக்கமாட்டார்கள். இதன் காரணமாகத் தஞ்சை மாவட்டத்தில் வீரிய விருத்தி விளைகின்ற தானியங்களுக்கு பெரிய அளவுக்கு சேதம் ஏற்பட்டிருக்கிறது. ஐ.ஆர். 20 போன்ற விவசாயம் நிறைய விவசாயிகள் செய்திருந்தும், பூச்சி அடித்து, அதனால் பெரும் அளவுக்கு விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை நான் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். ஆகவே, எல்லா டெப்போக்களிலும் அந்தப் பிரதேசத்திற்குத் தேவையான பூச்சி கொல்லி மருந்துகளை முன்கூட்டியே ஸ்டாக் வைப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். திடீரென்று தேவைப்படும் பொழுது விவசாயிகளுக்கு அந்த மருந்துகள் உடனுக்குடன் கிடைக்கும்படி செய்யவேண்டும்.

வேளாண்மை உற்பத்தியை மொத்தமாக எடுத்துக்கொண்டால் அரசாங்கம் போட்டு இருக்கக்கூடிய திட்டம் 94·23 லட்சம் டன் எதிர் பார்த்து, 97·22 லட்சம் டன் உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது. ஏறத்தாழ 3 லட்சம் டன் அதிகமாக உற்பத்தியாகியிருக்கிறது. திறமையான முறையில் விவசாய இலாகா வேலை செய்ததன் காரணமாக 3 லட்சம் டன் உற்பத்தி அதிகப்படுத்தப்பட்டிருக்கிறது. ஒரு பக்கம் உற்பத்தி அதிகப்படுத்தப் பட்டிருக்கிறது என்றாலும் மற்றொரு பக்கம் உற்பத்தி குறைந்துவிட்டது என்று கூச்சல் போடுகிறார்கள். கூச்சல் போடுகிறவர்களெல்லாம் பிற் போக்கு வாதிகள்.

நிலச் சீர்திருத்தச் சட்டம் கொண்டுவந்ததன் மூலம் உற்பத்தி குறைந்து விட்டது என்று சொன்னார்கள். இன்னும் தீவிரமான முறையில் நிலச் சீர்திருத்தத்தை கொண்டுவந்தால்தான், உண்மையிலேயே உழைக்கின்ற விவசாயிகளுக்கு அந்த நிலத்தை உடைமையாக்குவதன் மூலம்தான் இன்னும் அதிகமான உற்பத்தியை எதிர்பார்க்க முடியும். இன்னும் நிலத்தைப்பற்றி ஒன்றும் தெரியாதவர்கள் கையில், சோம்பேறிகள் கையில் நிலம் இருந்து கொண்டிருக்கிறது. அவர்கள் சொந்த சாகுபடி செய்யக் கூடிய நிலங்களில் அதிக விளைச்சல் ஏற்படமுடியாத நிலை இருந்து கொண்டிருக்கிறது.

உரம் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது என்று அறிக்கையில் குறிப் பிட்டிருக்கிறார்கள். நமக்குத் தேவையான உரத்தை வாங்குவதற்கு மத்திய அரசை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். மத்திய அரசு முறையாகத் தமிழகத்திற்குத் தேவையான உரத்தை கொடுக்க வேண்டும். அவர்கள் கொடுக்கவில்லை என்று சொன்னால், தமிழ்நாடு அரசு அதற்கு ஒரு திட்டம் தயாரித்து தமிழகத்தில் நமக்குத் தேவையான உரத்தைத் தயாரிக்க வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். உதாரணமாக நெய்வேலியில் உற்பத்தியாகின்ற உரத்தைத் தமிழ்நாட்டிற்குத் தேவை யானது போக மீதி உரத்தைத்தான் அடுத்த மாநிலத்திற்குக் கொடுக்க வேண்டும் என்று மத்திய அரசை நிர்ப்பந்திக்க வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

கரும்பு வளர்ச்சிக்காக சாலை மேம்பாட்டிற்காக ரூ. 100 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்த சாலைகளை முறையாக செய்வதற்குரிய இலாகா என்ஜினியரிங் இலாகா, அங்கே அதற்குப் போதுமான ஸ்டாஃப் இல்லை. 3, 4 ஜில்லாக்களுக்கு ஒரு டி.ஈ. இருக்கிறார், இரண்டு ஜில்லாக் களுக்கும் சேர்ந்து ஒரு ஏ.ஈ.-யை வைத்திருக்கிறார்கள். ஆகவே, அவர்கள் துரிதமாக அந்த வேலைகளைச் செய்வதற்கு முடியாத நிலை இருந்து கொண்டிருக்கிறது. ஆரூரான் கரும்பு ஆலைக்குச் சொந்தமான கரும்பு உற்பத்தி செய்யக்கூடிய நிலங்களை எல்லாம் நேரிடையாக அரசாங்கமே ஏற்று தனி ஒரு கழகத்தை அமைத்து இருக்கிறார்கள். தமிழ்நாடு கரும்பு விவசாயப் பண்ணை வாரியம் என்ற ஒரு வாரியம் அமைக்கப் பட்டிருக்கிறது. அந்த வாரியத்திற்குக் கரும்பு வளர்ச்சி நிதியிலிருந்து நிதி கொடுப்பதன் மூலம் அவர்களுக்குத் தேவையான சாலைகளை போட்டுக் கொள்வதற்கு வசதியாக இருக்கும்.





மற்றொன்று கரும்பு விலையைப் பற்றியது. கரும்பு விலையை மத்திய அரசு நிர்ணயம் செய்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. மற்ற மாநிலங் களுக்கு அதிக விலை கொடுத்திருக்கிறார்கள். தமிழ் நாட்டிற்கு மிகவும் குறைந்த விலை கொடுக்கப்பட்டிருக்கிறது. குறைந்த பட்சம் டன் ஒன்றுக்கு ரூ. 100-க்குக் குறையாமல் கரும்பு விலையை நிர்ணயம் செய்ய வேண்டும். அதற்குமேல் அதற்குரிய தரத்திற்குத் தக்கவாறு விலையை உயர்த்திக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்கிறேன்.

விவசாயத்தைத் தீவிரப்படுத்துவதன் மூலம் இன்னும் அதிகமான உற்பத்தியை ஏற்படுத்த முடியும். அதற்குரிய முறையில் தீவிரமான முறையில் ஏற்பாடு செய்ய வேண்டும்.

உர விநியோகத்தில் ஊழல்கள் இருந்துகொண்டிருக்கின்றன. கூட்டுறவுத் துறையின் மூலம் உரம் விநியோகிக்கப்படுகிறது. கூட்டுறவுத் துறையில் எங்கு பார்த்தாலும் ஊழல். உர மூட்டைகளைத் தவறாக பயன்படுத்து கிறார்கள். அவர்கள் மொத்தமாக விற்றுவிட்டு, விவசாயிகளுக்கு உரம் கிடைப்பதில்லை என்ற நிலை ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. அதை எப்படிச் சீராக பங்கிடு செய்வது என்பதை அமைச்சர் அவர்கள் ஆலோசிக்க வேண்டும்.

கால்நடை இலாகாவைப் பொறுத்தவரையில் மன்னார்குடி, திருத் துறைப்பூண்டி பகுதிகளில் எல்லா இடங்களிலும் செயற்கை முறை கரு ஊட்டுப் பணிகளை நடைமுறைக்குக் கொண்டு வரவேண்டும். இம்மாதிரி யான யோசனை முன்பிருந்து இப்பொழுது கைவிடப்பட்டிருக்கிறது. அந்த முறையை இங்கெல்லாம் அரசாங்கம் மீண்டும் கையாள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கிராமப்புறங்களில் இருக்கக்கூடிய மாடுகள் தரம் குறைந்தவையாக இருக்கின்றன. அதனுடைய தரத்தையெல்லாம் மாற்றி அமைக்கக்கூடிய முறையில் நல்ல நடவடிக்கைகள் எடுத்து தரமான மாடுகளை உற்பத்தி செய்வதற்கு, கால்நடை நல்ல முறையில் வளர்ச்சி பெறுவதற்கு, அர சாங்கம் விவசாயிகளுக்கு, வேண்டிய உதவிகளைச் செய்து தரவேண்டும் என்று நான் இந்த சந்தர்ப்பத்திலே சொல்லிக்கொள்கிறேன்.

கால்நடை உதவியாளர்கள் பயிற்சி இந்த ஆண்டு கொடுப்பதாக இருக்கிறார்கள். அதிகமான பேர்களுக்குக் கொடுப்பதன் மூலமாக மாடு களுக்கு ஏற்படுகின்ற வியாதிகளைப் போக்குவதற்கு உதவியாக இருக்கும். சென்ற ஆண்டு கால்நடை இலாகா சுகாதார அமைச்சர் பார்வையில் இருந்தது. அதை மாற்றி விவசாய இலாகாவின் பார்வைக்கு வந்திருக் கிறது. அது மிகவும் பாராட்டத்தக்கது. விவசாயத் துறையும் கால்நடைத் துறையும் ஒன்றாக இணைந்திருப்பது, இணைந்து செயல்படுவதுதான் முறையாக இருக்க முடியும் என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன். அந்த முறையில் நிர்வாகம் ஒன்றாக இணைக்கப்பட்டிருப்பதை நான் பாராட்டு கிறேன். (மணி அடிக்கப்பட்டது.)

(பிற்பகல் 12–30)

திரு. கே. ஏ. வகாப்: தலைவரவர்களே, இந்த வேளாண்மைத் துறை மானியத்தின்மீது என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைத் தெரிவித்து கொள்ள விரும்புகிறேன்.

வழக்கத்திற்கு மாறுகவே, விவசாயிகளின் நிலைமையைப் புரிந்து கொண்டு, சட்ட மன்ற உறுப்பினர்கள் அத்தனை பேரும் இன்றைக்கு இந்த மானியத்தின்மீது தீவிரமான கருத்துக்களை எல்லாம் எடுத்துச் சொல்லியதைக் கேட்டு விவசாயப் பெருங்குடி மக்கள் எல்லாம் உண்மையிலேயே பெருமகிழ்ச்சியடைவார்கள்.

“உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்”—என்று குறளிலே பாடியிருந்தாலும் இன்றைக்கு இருக்கின்ற நிலைமை என்னவென்றால், விவசாயிகளின் வாழ்க்கை மற்றவர்கள் பின்னால் செல்கின்ற அளவுக்குத்தான் இருக்கிறது. வள்ளுவர் சொன்னதைப்போல எல்லோருக்கும் மேலாக அவர்கள் வாழ்க்கை இல்லை என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே எடுத்துச்சொல்ல தான் கடமைப்பட்டிருக்கிறேன்.

விவசாயிகள் இன்றையதினம் ஒரு சுமை தாங்கியாக இருந்துகொண்டிருக்கிறார்கள். எந்தவிதமான பொருளாதார மாறுபாடுகள் வந்தாலும் அவைகளை எல்லாம் தாங்குகின்ற சுமை தாங்கியாக விவசாய மக்கள் இருக்கிறார்கள். அந்த நிலைமைகளை மாற்றுவதற்கு நம்முடைய அரசாங்கம் தீவிர முயற்சிகளை எடுத்தாலும் அதிலே இருக்கிற குறைபாடுகள் இன்னும் தவிர்க்கப்படவில்லை. குறைபாடுகளைத் தவிர்க்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உணவுத் துறையிலே, இன்றையதினம் காவிரி நீர் பாய்கின்ற தஞ்சைக்கு அடுத்தபடியாக வடஆற்காடு மாவட்டம் சிறப்புப் பெற்றிருக்கிறது. பசுமைப் புரட்சியிலே சிறப்புப் பெற்றிருக்கிறது. அந்த அளவுக்கு அங்கே தீவிர பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகள் அமுலாக்கப்பட்டு வருகின்றன என்று சொன்னாலும் கூட விவசாயிகளுக்கு அளிக்கப்பட வேண்டிய சலுகைகள், அதற்குத் தேவையான திட்டங்கள் அங்கே இல்லை.

என்னுடைய தொகுதியாகிய ராணிப்பேட்டையில் நவ்லாக் விதைப் பண்ணை இருக்கிறது. அந்த விதைப் பண்ணை நீண்ட நெடுநாட்களாக இருக்கிறது. அதைப் பெரிய அளவிலே விரிவுபடுத்த வேண்டுமென்று பல திட்டங்கள் தீட்டப்பட்டன. முன்னால் இருந்த அமைச்சர்கள் கூட நேரடியாக வந்து பார்த்து, பல திட்டங்களைத் தீட்டினார்கள். இருந்த போதிலும் அப்போது இருந்த 70 ஏக்கர் பரப்பளவிலே தான் இன்னும் அந்தப் பண்ணை இருந்துகொண்டிருக்கிறது. அதன் பக்கத்திலே இருக்கிற 500 ஏக்கர் பரப்பளவில் இன்னும் விஸ்தரிக்கப்படவில்லை. அதிலே அக்கறை காட்டுவதாகக்கூடத் தெரியவில்லை. சிறந்த பண்ணையாக்குவதற்குள்ள எல்லா வசதிகளும் அங்கே இருக்கின்றன. ஆகவே நவ்லாக் விதைப் பண்ணையை ஒரு சிறந்த பண்ணையாக்க எல்லாவித முயற்சிகளையும் உடனடியாக எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



விவசாயிகளுக்கு இன்றுள்ள சிரமங்களைப்பற்றிப் பல உறுப்பினர்களும் எடுத்துச் சொன்னார்கள். இன்றைக்கு விவசாயிகளுக்கு உரம் கிடைக்கவில்லை; மழை நீர் கிடைக்க வழியில்லை; கிணறுகளிலே தண்ணீர் கிடைக்கவில்லை, மின்சாரப் பற்றாக்குறை இன்னும் இருக்கிறது. உரத்திற்கு எவ்வளவு விலை கொடுத்து வாங்க வேண்டியிருக்கிறது என்பதை இங்கே பலரும் எடுத்துச் சொன்னார்கள்.

இன்னொன்றையும் சொன்னார்கள். விவசாயிகள் கூட கறுப்புச் சந்தையிலே உரத்தை விற்கிறார்கள் என்று சொன்னார்கள். அதற்கு விவசாயிகள் பொறுப்பல்ல. நாம்தான் அதற்குப் பொறுப்பாக இருக்கிறோம் என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன். விவசாயிகளுக்குத் தேவைப்படுகின்ற நேரத்தில் அவர்களுக்கு உரம் கொடுப்பதில்லை தேவைப்படுகின்ற நேரத்தில் அவர்கள் பிளாக்மார்க்கெட்டிலே வாங்கிக்கொள்கிறார்கள். பின்னால் காலம் கடந்து அவர்களுக்குக் கிடைக்கும்போது அதை அவர்கள் விற்றுவிடுகிறார்கள். காலாகாலத்திலே அவர்களுக்கு உரம் கிடைக்காததற்குக் காரணம் இடையிலே இருக்கின்ற நரகர்கள் தான். வியாபாரிகளும் உரத்தைப் பதுக்கிவைத்து அதிக விலைக்கு விற்கிறார்கள். அதைக் கட்டுப்படுத்த முடியாமல் நாம் இருக்கிறோம். பிளாக் மார்க்கெட்காரர்களுக்கு மத்திய அரசின் சட்டம் உதவியாக இருக்கிறது. நமக்குப் போதிய அளவுக்கு உரம் இங்கே இல்லை. எந்த அடிப்படையிலே இருந்தாலும் சரி, என்னுடைய வெட்டுத் தீர்மானத்தில் கூட சொல்லியிருக்கிறேன், மத்திய அரசிடம் உரிய முறையிலே எடுத்துச் சொல்லி, தக்க அனுமதியைப் பெற்று, நேரடியாக விவசாயிகளுக்கு அரசாங்கமே உரத்தை விநியோகிக்கும் ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்படியெல்லாம் விவசாயிகளுக்குச் சிரமங்கள் இருந்தாலும், பொருளாதார அடிப்படையிலே, நேற்று 50 ரூபாய்க்கு விற்ற பொருட்கள் இன்றைக்கு 150 ரூபாய்க்கு விற்கின்றன. ஆனால் நேற்று ஒரு குவிண்டால் 50 ரூபாய்க்கு விற்ற நெல் இன்றைக்கு 70, 75 ரூபாய்க்குத்தான் விற்கிறது. அரசாங்கம் இந்த விலையைத்தான் நிர்ணயித்திருக்கிறது. விவசாயிகளுக்கு ஒரு மூட்டைக்கு 65, 70 ரூபாய் வருகிறது. குறைந்த பட்சம் 100 ரூபாயாவது அவர்களுக்கு கிடைக்க வேண்டும். இதனால் விலைவாசி ஏறும் என்று சொல்லலாம்.

இன்றைக்கு பல்வேறு பொருட்களுக்கு அரசு அளிக்கின்ற சலுகைகளைப் பார்க்கின்ற போது இந்த விலை நெல்லுக்குப் பொருத்தமாக இருக்கும். மாநில அரசு மத்திய அரசுகளை வற்புறுத்தியாவது இந்த விலையை நிர்ணயிக்க வேண்டும். இது விவசாயிகளின் நியாயமான கோரிக்கை. இதை எடுத்துச்சொல்ல நாம் பின்வாங்கக்கூடாது. இந்த நாட்டிலே இருக்கக்கூடிய விவசாயப் பெருமக்களுக்கு அதுதான் பெரிய நன்மையாக இருக்கும், இல்லாவிட்டால் இந்தத் தொழில் செய்கின்றவர்கள் அதை விட்டுவிடக்கூடிய நிலைமைதான் ஏற்படும். வேறு தொழிலுக்கு மாறிவிடுவார்கள். வியாபாரம் செய்வதற்கோ, அரசாங்க

உத்தியோகத்திற்கோ வசதி இல்லாதவர்கள்தான் விவசாயத்தில் ஈடுபடுகிறார்கள். ஆகவே, இதிலே நம்முடைய அமைச்சரவர்கள் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கரும்பு விலையைப்பற்றிச் சொன்னார்கள். மற்ற மாநிலங்களில் கரும்புக்கு நல்ல விலை கொடுக்கப்படுகிறது. அதைப்போல நம்முடைய மாநிலத்திலும் ஏன் கொடுக்கக்கூடாது? மத்திய அரசு 95 ரூபாய் என்று நிர்ணயித்திருப்பதாகச் சொல்கிறார்கள். ஆனால், பட்டாளம் சர்க்கரை ஆலையில் 120 ரூபாய் கொடுக்கப்படுகிறது என்ற குறிப்பு இருக்கிறது. குறைந்த பட்சம் டன்னுக்கு 120 ரூபாய்க்குக் குறையாமல் அளிக்க அரசாங்கம் ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வருகின்ற ஐந்தாண்டுத் திட்டத்தில் மேலும் பல சர்க்கரை ஆலைகளை நிறுவப்போவதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். அப்படி சர்க்கரை ஆலைகள் நிறுவப்படும்போது எந்தெந்தப் பகுதிகளில் கரும்பு அதிகமாக உற்பத்தி செய்யப்படுகிறதோ, எங்கே ரெக்கவரி அதிகமாக வருகிறதோ அங்கே நிறுவப்பட வேண்டும். செய்யாறு, வந்தவாசி பகுதிகளிலே கரும்பு உற்பத்தி மிகவும் அதிகமாக இருக்கிறது. அங்கே ரெக்கவரி 11·5 என்ற அளவுக்கு மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலையிலிருந்து வருகிறது. ஆகவே, அதிக அளவில் அங்கே சர்க்கரை ஆலைகளை நிறுவ வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மண்வளப் பாதுகாப்புபற்றி இங்கே குறிப்பிடவேண்டியது அவசியமாக இருக்கிறது. மண்ணை வளப்படுத்த வேண்டும்; பாதுகாக்க வேண்டும். அது நல்லதுதான். ஆனால், அதற்கான செலவை எல்லாம் மறுபடியும் விவசாயிகள் தலையிலே வைக்கின்ற ஒரு சூழ்நிலைதான் இன்றைக்கு இருக்கிறது. அந்தச் செலவுகளுக்காக 1,000 ரூபாய் கொடுத்தால் அதில் 25 சதவிகிதத்தை இனாமாகக் கொடுத்தால்கூட கடைசியில் 100 பங்குக்கும் அதிகமாகவே அவர்களிடமிருந்து வசூலித்துவிடுகிறார்கள். அதிகாரிகளுக்கு ஆகின்ற செலவு, அவர்களுக்கு வழங்குகின்ற சம்பளத்தையும் சேர்த்து விவசாயிகளிடமிருந்து பின்னால் வசூலிப்பதைவிட அந்தப் பணியையே செய்யாமல் விட்டுவிடுவது நலமாக இருக்கும் என்ற கருத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வடாற்காடு, தென்னாற்காடு மாவட்டங்களில் வேர்க்கடலை அதிகமாக பயிராகிறது. ஆனால், அந்த உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கின்ற நடைமுறைகள் மிகவும் குறைவாக இருக்கின்றன. அதற்கு வேண்டிய நல்ல திட்டங்களைத் தீட்டிச் செயல்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயப் பல்கலைக் கழகத்தில் அட்மிஷன் பற்றிச் சொன்னார்கள். அதிலே மற்றவர்கள் தலையிட முடியாது; அது ஒரு அட்டானமஸ் பாடி என்று சொன்னார்கள். இருந்தாலும் அரசாங்கத்தின் கொள்கை அடிப்படையில் பின்தங்கிய மக்களுக்கு—முஸ்லிம்களுக்கு இந்த ஆண்டிலே இடம் கிடைக்கின்ற வாய்ப்பே இல்லாமல் போய்விட்டது. அதற்கு என்ன காரணம் என்று தெரியவில்லை. சில சட்ட திட்டங்களை



அதற்குக் காரணமாகச் சொல்லி, சமாதானம் சொல்லக்கூடும். அப்படிச் செய்தால் பின்தங்கியவர்கள் எப்படி முன்னேற முடியும்? முஸ்லிம்களில் பெரும் பகுதியினர் விவசாயிகளாக இருக்கிறார்கள். படித்தவர்கள் இருக்கிறார்கள்; தகுதி பெற்றவர்கள் இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு இடம் கிடைக்கவில்லை. வேலை வாய்ப்புகளிலும் அவர்களுக்கு இடமில்லை. இந்தக் குறையைப் போக்க வேண்டியது அரசின் கடமை. இனி வருகின்ற காலங்களிலாவது இந்தக் குறைபாடுகள் தவிர்க்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கால்நடைகள் பாராமரிப்பு பற்றியும் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். குறிப்பாக ராணிப்பேட்டையில் கால்நடை மருந்தகம் ஒன்று நல்லமுறையில் இயங்கிவருகிறது. அது லாபகரமாக நடந்து கொண்டிருக்கிறது. அந்த மருந்தகத்திற்குச் சொந்தமாக பல லட்சம் ரூபாய் செலவில் ஒரு கட்டிடம் கட்டப்பட்டு பல ஆண்டுகள் ஆகியும் திறக்கப்படாமல் இருக்கிறது. நம்முடைய அரசாங்கம் லாப நஷ்டத்தைக் கணக்குப் பார்ப்பதில்லை; மக்களுக்கு நன்மை செய்வதைத்தான் நோக்கமாகக் கொண்டிருக்கிறது என்று சொல்கிறார்கள். அப்படியானால், அந்த வட்டாரத்திலுள்ள விவசாயிகளுக்குக் குறைந்த செலவில் போதுமான கால்நடை மருந்துகளையும் கொடுத்து, அவைகளுக்குத் தேவையான அபிவிருத்திப் பணிகளையும் குறைந்த செலவில் செய்து கொடுக்க ஏற்பாடுகள் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஆட்டுப் பண்ணை, கோழிப் பண்ணை இவைகள் எல்லாம் நல்லமுறையிலே நடைபெறுவதற்கு பல திட்டங்களைத் தீட்டியிருந்தாலும் அசைவ உணவுக்காரர்களுக்கு இன்றைக்கு ஒரு பெரும் அபாயம் ஏற்பட்டிருக்கிறது. எங்களுக்கு ஆட்டு இறைச்சி, கோழி இறைச்சி முன்பிருந்ததைவிட இரண்டு மடங்கு விலை கொடுத்தால்தான் கிடைக்கிறது. சைவ உணவுக்காரர்களும் இந்த உணவு வகைகளை அதிகமாகப் பயன்படுத்தத் தொடங்கிவிட்டார்கள். முட்டை இப்போது சைவ உணவு என்று சொல்லப்படுகிறது. சைவர்களும், அசைவர்களும் முட்டை சாப்பிடுவதால் அதன் விலை மிகவும் உயர்ந்துவிட்டது. ஆகவே, ஆடு, கோழி வளர்க்கின்ற திட்டங்களை விரிவுபடுத்த வேண்டும். விவசாயிகளுக்குச் சிறு சிறு அளவிலே ஆட்டுப்பண்ணை, கோழிப் பண்ணைகள் வைப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அந்தத் திட்டம் இப்போது இருந்தாலும் கூட, அது சரியாகச் செயல்படவில்லை. வடாற்காடு மாவட்டத்தைப் பொறுத்த வரையில்......(மணி அடிக்கப்பட்டு, அடுத்த உறுப்பினர் பேசுவதற்கு அழைக்கப்பட்டார்).

* திரு. கே. ஆர். கிருஷ்ணன்: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசின் ஐந்தாண்டுக் கால பெருமுயற்சியால் விவசாயத்தில் பல பெரிய மாறுதல்களை ஏற்படுத்தி பசுமைப் புரட்சி திட்டத்தின்கீழ் உற்பத்தியைப் பெருக்கி பல மாநிலங்களுக்கு உணவு வழங்கும் நிலையிலே நாம் இருந்துகொண்டிருக்கிறோம். ஆனால், விவசாயி உற்பத்தி செய்யும் விளை பொருள்களை அறுவடைக் காலத்தில் ஒரே நேரத்தில் விற்பனை

செய்வதால் விலைகள் சரிந்து அவனுக்கு சரியான வருமானம் கிடைப்பதில்லை. அதோடு, இங்கு 6 லட்சம் பேர் படித்தவர்கள் வேலை இல்லாமல் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆனால், விவசாயத்திற்கு ஆட்களே கிடைப்பதில்லை. காரணம், விவசாயி தரும் கூலி மிகவும் குறைவாக இருப்பதும் உழைப்பு அதிகமாகத் தேவைப்படுவதாலும்தான் இந்த நிலைக்குக் காரணம். விவசாயிக்கு அதற்குமேல் கொடுத்து கட்டுப்படியாகவில்லை.

விவசாயத்திற்குத் தேவைப்படும் ஆயில், டீசல், பூச்சி மருந்துகள் மின்சார மோட்டார், பம்புகள், டிராக்டர், அதற்கான உதிரிப் பொருட்கள் விலைகள் ஏராளமாக அதிகரித்து உள்ளன. ஆனால், விவசாயி உற்பத்தி செய்யும் உணவுப் பொருள்கள், இந்த விகிதத்தில் உயர்வதில்லை, உயர்த்தப்படவில்லை. உற்பத்தியாளரின் இந்த நஷ்டத்தை உபயோகிப்போர் உணரவேண்டும். டிராக்டர் உதிரிப் பொருள், ரிப்பேர் செலவு ஆகியவைகளுக்கு மானியம் தரவேண்டும். உபயோகப்படுத்துகிறவர்களுக்கு கார்டு மூலம் சுலபமாகக் கிடைக்க வழி செய்து அந்தத் துறையில் 25 சதவீதம் மானியமாக அரசு தரவேண்டும். பொறுக்கு விதைகள் உற்பத்தி செய்வதில் போதிய கவனம் செலுத்த வேண்டும். அமோக விளைச்சல் தரும் வீரிய விதைகள் முக்கிய கவனம் செலுத்தப்படவேண்டும். சென்ற ஆண்டு எனக்கே விவசாய அதிகாரிகள் தந்த கம்பு, கடலைக்காய், டி.எம்.வி. 10 என்ற விதைகளை நான் பயிர் செய்தேன். கடலைக்காய் முளைக்கவே இல்லை. கம்பு பாதிப் பயிரில் கதிர்கள் வந்தது, பாதிப் பயிரில் கதிர்கள் வரவே இல்லை.

இம்மாதிரி விவசாயி ஒரு வருடம் பாதிக்கப்பட்டு கடன்காரனாகி விட்டால் திரும்ப அவனால் மீளவே முடிவதில்லை. ஆகையால், அதிகாரிகள் அதிகக் கவனம் செலுத்தி இது மாதிரி தவறுகள் ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். அதோடு அரசாங்கமே பூச்சி கொல்லி மருந்து தயாரிக்கும் தொழிற்சாலைகள் தொடங்கி நல்ல தரமான மருந்துகளைத் தயார் செய்து குறைந்த விலைக்கு விற்க ஆவன செய்ய வேண்டும். தற்போது தனியார் தயாரிக்கும் பூச்சி மருந்துகளில் நிறைய போலி மருந்துகள் வருகின்றன. இதனாலும் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். அதோடு இப்போது ஆராய்ச்சிகள் செய்து கண்டுபிடித்துள்ள நெல்லாம் நஞ்சை நிலத்தில் பயிர் செய்யும் அமோக விளைச்சல் தரும் விதைகளைக் கண்டு பிடித்துள்ளார்கள். அது போல் புஞ்செய் நிலத்தில் பயிர் செய்ய விதைகளைக் கண்டு பிடிக்க தீவிர கவனம் செலுத்தி ஆவன செய்ய கேட்டுக் கொள்கிறேன்.

மண்வள பாதுகாப்பு குறித்து சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். சமநிலையில் கரை போடும் முறையை கண்டிப்பாக கடைபிடிக்காததால் போடப்பட்ட கரைகளில் ஒரு இடத்தில் தண்ணீர் தேங்கி உடைப்பு ஏற்பட்டு விடுகிறது. மற்றும் கரைபோடுவதற்கு நிலச் சொந்தக்காரர்களின் சம்மதம் பெற வேண்டியிருப்பதால் தாழ்வான பகுதியில் இருப்பவர் கரை போட விருப்பப்பட்டாலும், மேட்டில் இருப்பவர் விரும்பாவிடில் போட முடியவில்லை. ஆகையால், ஒரு பகுதியை கரை போடத் திட்டம் இட்டால் அரசு ஆணை மூலம் செயல்படுத்த சட்டம் இயற்ற வேண்டும்.



கால்நடை வளர்ப்பு குறித்து ஓரிரு கருத்துக்கள் சொல்ல விழைகிறேன். (1) நல்ல தரமான மாடுகள் இன உற்பத்தி ஆகும் வகையில் பொலி காளைகளுக்கு மானியம் அளித்து பாதி விலையில் வாங்கி தரவேண்டும். (2) தரமான இன வளர்ப்புக்கு ஊக்கம் தரும் வகையில் கன்றுகள் வளர்க்க மாதம் இவ்வளவு என்று மானியம் வழங்கப்படவேண்டும். (3) செயற்கை முறை கரு தரிக்கும் நிலையங்களை மிகுதியாக ஏற்படுத்த அரசு முன்வர வேண்டும். (4) அதேபோல, ஆடு வளர்ப்பிற்கு ஊக்கம் அளிக்கும் வகையில் கூட்டுறவு சங்கங்களின் மூலமாக கடன் வழங்கப்பட வேண்டும்.

திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி: பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஐந்தாண்டுத் திட்டங்களை முழு அளவில் நல்ல முறையில் பயன்படுத்திக்கொண்டு, அதன்மூலம் வேளாண்மைத் துறையில் நல்ல பயனைப் பெற்றிருப்பது தமிழ்நாடு என்பதை நான் பெருமையுடன் சொல்லிக் கொள்கிறேன். இந்தப் பெருமையை நமக்குத் தேடித் தந்தவர்கள் நமது வேளாண்மைத் துறையினர்தான் என்பதையும், அவர்களுக்கு இந்த மன்றமும், இந்த நாடும் நல்ல முறையில் கடமைப்பட்டிருக்கிறது என்பதையும் நான் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்வதில் பெருமைப் படுகிறேன்.

இதற்கு முன்பு என்றும் இல்லாத அளவுக்குக் கடந்த மூன்று ஆண்டுகளில்—அதுவும் குறிப்பாக நமக்கு நிறையத் தடைகள் இருந்தும்—விதைகளில் அடல்ட்ரேஷன், பூச்சிக்கொல்லி, ரசாயன மருந்துகளில் அடல்ட்ரேஷன்—போன்றவை இருந்தும் 2.99 லட்சம் டன் சென்ற ஆண்டு அதிகமாக உற்பத்தியைச் செய்து காட்டியிருக்கிறார்கள். இதற்கு முக்கியமான காரணம் நமது வேளாண்மைத் துறையின் சீரிய பணிகளே. அதற்காக வேளாண்மைத்துறையைப் பாராட்டுகிறோம்.

அதே நேரத்தில் இப்போதுதான் வேளாண்மைத் துறையை இரண்டு சவால்கள் எதிர்நோக்கியிருக்கின்றன. இனி அவற்றை எப்படிச் சமாளிக்கப்போகிறார்கள் என்பதைச் சொல்ல வேண்டுமென்று ஆசைப் படுகிறேன். எனக்கு முன்பு பேசியவர்கள் சில விஷயங்களைக் கோடிட்டுக் காட்டினார்கள். தரமான விதைகள் கிடைக்கவில்லை, உரத்தில் கலப்படம், பூச்சிக்கொல்லி மருந்தில் கலப்படம் ஆகியவை இருப்பது பற்றிச் சொன்னார்கள். உர விநியோகத்தைப் பற்றிச் சொல்லும் போதும் அந்த விநியோகம் சரியான முறையில் நடக்கவில்லை என்றும் சொன்னார்கள். இந்தச் சோதனைகளை நல்ல முறையில் சமாளிப்பதில் தான், நம்முடைய எதிர்கால வேளாண்மைத்துறை வெற்றியே அமைந்திருக்கிறது.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: இவற்றை எப்படிச் சமாளிக்க இருக்கிறோம் என்பதைப் பற்றித்தான் தனியாக சைக்ளோஸ்டைல் பண்ணிக் கொடுத்திருக்கிறோம். அதில் இந்த இரண்டு சவாலையும் எப்படிச் சமாளிக்கப்போகிறோம் என்பது சொல்லப்பட்டிருக்கிறது.

திரு. சௌடி. எஸ். சுந்தரபாரதி: எழுத்தில் உள்ளதை நாம் எந்த முறையில் செயல்படுத்தப்போகிறோம் என்பதில் தான் வெற்றியிருக்கிறது என்பதை நான் தங்கள் மூலமாகச் சொல்ல விரும்புகிறேன்.

உதாரணமாக, ஒரு ஏ.இ.ஓ. இருக்கிறார். அவர் போய் தரக்குறைவான விதை, அல்லது கலப்பட பூச்சி மருந்து, கலப்பட உரம் இவற்றை வைத்திருக்கக்கூடிய கள்ளமார்க்கெட்காரரைக் கண்டுபிடித்தார் என்றால் உடனே நடவடிக்கை எடுப்பதற்கு வேண்டிய அதிகாரத்தை அவருக்கு கொடுத்திருக்கிறோமா? இல்லை. நாம் கொடுத்துவிட்டோம் என்று சொல்லிப் பயன் இல்லை. அதற்காக நாம் என்ன லெஜிஸ்லேஷன் கொண்டுவந்தோம்? கடந்த ஓராண்டில் உர விநியோகம் எவ்வளவு மோசமான நிலையில் நடந்திருக்கிறது எனபதை எல்லோரும் அறிவார்கள். அதனால் மக்களிடையே எவ்வளவு கெட்ட பெயர்? இந்த அரசு நல்ல பெயர் வாங்கவேண்டும் என்பதற்காகவேதான் நான் சொல்கிறேன்.

திரு. ஏ. கே. சுப்பையா அவர்கள் பேசும்போதுகூட ஒரு விஷயத்தைச் சொன்னார்கள். நிலம் உழுபவனுக்கே சொந்தமாக்கப்பட வேண்டும் என்றார்கள். இப்போது 15 ஸ்டாண்டர்ட் எக்கர் வைத்திருக்கிறோம். நாளைக்கே பத்தாகலாம். ஐந்தும் ஆகலாம். இந்த நிலையில் அரசு ஸ்டேட்பார்ம் கார்ப்பரேஷன் என்பதாக 40 ஹெக்டேர் முதல் 400 ஹெக்டேர்வரை பண்ணை ஆரம்பித்து, நல்ல முறையில் லாபகரமாகச் செயல்படுகிறது என்று காண்பிக்கப்படுகிறது—அப்படி லாபகரமாகச் செயல்பட்டால் ஸ்டாண்டர்ட் எக்கரா எவ்வளவு அதிகமாக வைக்கலாம் என்று ஒரு கொள்கை—ஒரு திட்டம் வரையறுக்கலாம்.

அப்படியானால், நமக்கு இருக்கக் கூடிய ஸ்டாண்டர்ட் எக்கர் என்ன? இந்த அளவுக்குள் ஒரு விவசாயி அதிகமான பலனைக் காட்ட முடியுமா என்பதைப் பரீட்சித்துப் பார்த்து, அதைக் காட்டினால்தான் நலமாக இருக்க முடியுமே தவிர, நமது கொள்கையை விட்டுவிட்டு 40 முதல் 400 ஹெக்டேர் என்று வைத்துக் கொண்டு, அதிலே நல்ல லாபம் கிடைக்கிறது என்று கொடுத்தால் இப்பொழுதிருக்கிற ஸ்டாண்டர்ட் எக்கரை நீங்கள் கையாளப் போகிறீர்களா இல்லையா? திரு. ஏ. கே. சுப்பையா அவர்கள் கேட்ட கேள்விக்கு என்ன பதில் சொல்லப் போகிறீர்கள்?

நம்முடைய பாதையிலே, நாம் இயங்கக் கூடிய பாதையிலே முறையிலே ஏன் இந்த பலவீனம் ஏற்பட்டது? இந்த முறையை யார் சொன்னார்கள்? ஒன்று வேண்டுமானால் வைத்துக்கொள்ளலாம். ஆராய்ச்சித் துறையினரோ அல்லது வேளாண்மைத் துறையினரோ யாராவது என்ன சொல்கிறார்களோ அதையெல்லாம் பரீட்சித்து எதன்மூலம் நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் அதிகமான லாபம் என்று பார்த்து அதனால் நாங்கள் அதைக் கையாளப் போகிறோம் என்று சொல்லித்தான் ஆகவேண்டும். அவர்கள் சொன்னதனால் இந்த நிலைமை நமக்கு ஏற்பட்டிருக்கிறது.



அதற்குப் பதிலாக, ஸ்டாண்டர்டு எக்கருக்குள்ளேயே ஒரு பரீட்சையை நமக்கு நடத்திக் காட்டி அதன்மூலம் நமக்கு லாபம் இருக்கிறது என்று சொன்னால் இந்த ஸ்டாண்டர்டு எக்கரை வைத்துக்கொள்ளலாம்; அதன் மூலமாக அதிக லாபம் கிடைக்குமே என்றால் நீங்கள் செய்யும் இந்த பரீட்சையின் மூலமாக எப்படி அதிக லாபம் கிடைக்கும் என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

வேளாண்மைத் துறையினைப் பற்றிய தேவைகளைச் சொன்னார்கள். இப்பொழுது வேளாண்மைப் பல்கலைக்கழகம் ஒன்று ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அங்கே ஒரு ஆராய்ச்சித் துறை, இங்கே ஒரு துறை. அங்கே உழவு நடுவதற்கு ஒரு பாட திட்டம் இங்கே ஒரு திட்டம். அங்கே இரண்டு பள்ளிக்கூடம் இங்கே இரண்டு பள்ளிக்கூடம். அங்கே புதிய ரக விதைகளைக் கண்டு பிடிக்கிறார்கள். இங்கே 14 புதிய ரகங்களைக் கண்டு பிடிக்கிறார்கள். இப்படி வேளாண்மைத் துறையாக இருந்தாலும், அங்கே ஒரு ஆராய்ச்சி இங்கே ஒரு ஆராய்ச்சி என்று ஏற்பட்டிருக்கிறது. இனிமேல், நம்முடைய வேளாண்மைத் துறையில் என்ன எடுத்துக்கொள்ளலாம். வேளாண்மைப் பல்கலைக் கழகத்திலே என்ன செய்ய வேண்டுமென்பதை நாம் வகுத்தாக வேண்டும். இனிமேல் அதற்குள் ஒரு போட்டி இருக்கக் கூடாது அதற்கென்று ஒரு எக்ஸ்பர்ட் கமிட்டி போட்டாலும் கூட நலமாக இருக்கும்.

அதையெல்லாம் ஆலோசித்து நிச்சயமாக முடிவெடுக்க வேண்டும். இல்லாவிட்டால் அங்கே இருக்கக் கூடியவர்கள் தாம் கண்டுபிடித்தது தான் நல்ல விதை, இவ்வளவு காலமாக நல்ல பெயர் எடுத்து, தமிழகத்து வேளாண்மைத் துறையினரான நாங்கள் கண்டுபிடித்ததுதான் நல்ல விதை; நல்ல முறை என்று கூற இதனால் விவசாயிக்குத் தொல்லை ஏற்படும். வேளாண்மைத் துறை சொல்வது சரியா, அல்லது ஆராய்ச்சித் துறை சொல்வது சரியா, நல்லதா என்று தெரியாத நிலை ஏற்படும். இந்த முறையைத் தொடர்ந்து அனுமதிக்க வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன். இல்லாவிட்டால் அவர்கள் மத்தியிலே நமக்கு நல்ல வாய்ப்பு ஏற்பட வில்லையே என்று கருதக்கூடிய நிலைமை ஏற்படும். எனவே அதைப்பற்றியும் அரசு ஆலோசித்து முடிவெடுக்க வேண்டுமென்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக ஒரே ஒரு விஷயத்தைச் சொல்லி முடித்துவிடுகிறேன். பள்ளிக்கூடம் மூலமாக விவசாயக் குழந்தைகளுக்கு நல்ல அறிவூட்டுவதாகச் சொன்னார்கள். 14 பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. 20 பேர்கள் படிக்கின்றார்கள் என்ற விவரத்தைச் சொன்னார்கள் வருஷத்திலே எவ்வளவு பேர்கள் படித்துவிட்டு வருவார்கள்? அதன் மூலமாக நல்ல அறிவை ஊட்ட முடியாது. அதற்குப் பதிலாக நான் ஒரு திட்டத்தைக் கூற விரும்புகிறேன். மற்ற ஆரம்பப் பள்ளியிலே 1-வதிலிருந்து 10-வது வரை படிக்கும் காலத்திலேயே கைத்தறிக்கென்று கிராப்ட் டீச்சர் வைத்து சொல்லிக் கொடுப்பதைப் போல், விவசாயத் துறையிலே உள்ள டீச்சர்களைக் கொண்டு பள்ளியிலே சேரும் சின்ன குழந்தைகளுக்கு இந்த அறிவை ஊட்டினால் நல்லது செய்ய முடியுமா என்பதை நீங்கள் ஆராய்ந்து பார்க்க வேண்டுமென்று சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

திரு. இரா. இராமலிங்கம். மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற வேளாண்மைத் துறை மானியத்தை ஆதரித்து என்னுடைய கருத்துக்களை சொல்லலாம் என்று நினைக்கிறேன்.

இன்றைய தினம் உணவு உற்பத்தியிலே தமிழ் நாடு முன்னணியிலே நிற்பதைப் பார்க்கிறோம். 1972-73-ல் 93·5 இலட்சம் டன்னாக இருந்த உற்பத்தியை 1973-74-லே 101·13 இலட்சம் டன்னாக உயர்த்தி இருப்பதை நாம் பார்க்கிறோம். நமது விவசாயிகள் இன்றைக்கு மிகவும் ஆர்வமாக இருக்கிறார்கள் அவர்கள் நவீன முறையிலே விவசாயத்தைச் செய்து அதிக உற்பத்தியை காட்ட வேண்டுமென்று ஆர்வத்திலே இருக்கும்போது, தரமான பூச்சிக் கொல்லி மருந்து, உரம் போன்றவைகளை நாம் குறித்த நேரத்திலே, கொடுத்தால் இதைவிட அதிக உற்பத்தியை அவர்களால் காட்ட முடியும்.

விதைகளை உற்பத்தி செய்வதிலே அரசு நல்ல ஏற்பாடுகளைச் செய்திருக்கிறது. விவசாயத் துறையினரும் தேவையான விதைகளை உற்பத்தி செய்து வழங்கி வருகிறார்கள். ஆகவே தரமான விதைகளைப் பொறுத்தவரையில் கட்டுப்பாடு இல்லை.

பூச்சிக் கொல்லி மருந்தைப் பொறுத்த மட்டில் கடந்த ஆண்டு சில மாதங்களில் தட்டுப்பாடு இருந்தது உண்மை. இப்பொழுது ஓரளவு நிவர்த்தி செய்யப்பட்டிருக்கிறது. வேளாண்மை தொழில் கழகத்தின் மூலமாகவே பூச்சி கொல்லி மருந்துகள் தயாரிக்கப்பட வேண்டுமென்ற கொள்கை பாராட்டப்பட வேண்டிய கொள்கை.

கடந்த ஆண்டு 40 சதவீதம் உரம்தான் நமக்கு வந்தது என்றாலும் உரத்தட்டுப்பாடு மிக அதிக அளவிலே தமிழ் நாட்டிலே இருந்தது என்பதை நாம் மறந்து விடக்கூடாது. உர விநியோகத்தை அரசு மாத்திரம் செய்யவில்லை. தனியார்களும் உரத்தை விநியோகம் செய்தார்கள். அதன் காரணமாக, அதிகமாகக் கலப்படம் ஏற்படுவதை நம்மால் தடுக்க முடியவில்லை. அவர்கள் கள்ளச்சந்தையிலே விற்கிறார்கள். அதையும் தடுக்க முடியவில்லை. மத்திய அரசினுடைய உரக் கட்டுப்பாடு சட்டம் எந்த அளவு உதவிகரமாய் இருக்கிறது என்பது அனைவருக்கும் தெரியும். மாநில அரசுக்கு உரத்தைக் கட்டுப்படுத்தக் கூடிய எல்லா விதமான அதிகாரங்களும் இருக்கிறதா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெளிவாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

உர விநியோகத்தைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் கவலை தெரிவித்தார்கள். உர விநியோகம் வருகிற மாதங்களிலே இன்னும் மோசமாக இருக்கும் என்ற காரணத்தால், உயர் ரக, அதிக உற்பத்தி தரக்கூடிய விதைகளை விதைக்க வேண்டாமென்று கூடக் கேட்டுக் கொண்டார்கள். அதற்காக நான் ஒரு யோசனையைச் சொல்ல விரும்புகிறேன்.

சமீபத்திலே தூத்துக்குடியிலே ஆரம்பிக்கப்பட்ட உரத் தொழிற்சாலை இன்னும் இரண்டு மூன்று மாதங்களிலே உர உற்பத்தியைத் துவங்கும் வருகிற ஜூன் மாதத்திலே யூரியாவும், சல்பேட்டும் வர இருக்கிறது





அத் தொழிற் சாலையை ஜாயிண்ட் செக்டாரிலே ஆரம்பித்திருக்கிறோம். அதிலே, நமக்கு, மாநில அரசுக்கு அதிகப் பங்கு இருக்கிறது. அதைக் கருத்திலே கொண்டு, தூத்துக்குடி உரத் தொழிற்சாலையிலே உற்பத்தியாகிற உரத்தை மாநில அரசே எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதை எடுத்துக் கொண்டால், நம்முடைய உணவு உற்பத்தியை பெருக்கலாம்.

இன்றைக்கு நமக்கு அதிகமான உரம் தேவை. அந்த உரத்தைத் தூத்துக்குடி உரத் தொழிற்சாலையிலிருந்து பெறலாம் என்று நினைக்கிறேன். ஆகவே, உடனடியாக தூத்துக்குடி உரத் தொழிற்சாலை உற்பத்தி அனைத்தையும் மாநில அரசே எடுத்துக் கொள்ளவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அரசு அச்சடித்துக் கொடுத்திருக்கின்ற இந்தக் குறிப்புக்களிலே கரும்பு விளைச்சலுக்காகவும், பருத்தி உற்பத்திக்காகவும் பல திட்டங்கள் கூறப்பட்டுள்ளன. ஆனால், வாழைச் சாகுபடி பற்றிய குறிப்புக்கள் இருக்கின்றனவா என்று துருவித் துருவிப் பார்த்தேன். ஸ்ரீவில்லிபுரம் வட்டத்திலும் தூத்துக்குடி வட்டத்திலும் அதிகமாக வாழையை உற்பத்தி செய்கிறோம். அந்தப் பகுதியிலே ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் 1 கோடிக்குமேல் டர்ன் ஓவர் வரக்கூடிய அளவுக்கு, வாழை உற்பத்தி செய்கிறார்கள். தூத்துக்குடி நகரிலே மட்டும் நாளொன்றுக்கு 40 லாரிகள் வாழைப்பழம், வாழைக்காய், வாழைஇலை போன்றவைகள் கேரள மாநிலத்திற்கும், கர்நாடக மாநிலத்திற்கும் அனுப்பப்பட்டு வருகின்றன. இன்னும் அதிகமாக உற்பத்தி செய்து, வெளிநாடுகளுக்குக்கூட அனுப்பக் கூடிய வாய்ப்பு தூத்துக்குடியிலே இருக்கிறது.

அதை மனதிலே கொண்டு, வாழை உற்பத்தி செய்பவர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டும். வாழை உற்பத்தி செய்கிற பகுதியில் இருந்து தூத்துக்குடியில் தொடி எம். டி. டி. ஸ்கீம் என்ற புதிய ஸ்கீம் போட்டு, தண்ணீர் கொண்டு செல்கிறார்கள். அதன் காரணமாக, அவர்களுக்கு எந்த விதமான இடைஞ்சலும் வராமல் அரசு பார்த்துக் கொள்ள வேண்டும்.

(பிற்பகல் 1–00)

ஏற்கெனவே பொதுப் பணித்துறையைச் சேர்ந்த அதிகாரிகள் எந்த விதமான பாதகமும் இல்லாத வகையிலே தண்ணீரைக் கொண்டுசெல்வோம் என்று சொன்னார்கள். ஒரு கோடி ரூபாய் வருமானம் கிடைக்கக் கூடிய நிலையைப் பாதிக்கக்கூடிய அளவுக்கு எதையும் செய்துவிடக்கூடாது, இதுவரையிலும் அந்தப் பகுதியிலே அதற்காக என்ன என்ன சலுகைகளைக் கொடுத்தார்களோ அந்தச் சலுகைகளையெல்லாம் தொடர்ந்து கொடுக்க வேண்டும். அப்படிச் செய்தால்தான் அந்த விவசாயிகள் இதுவரையிலும் பெற்ற பயன்களைப் பெறமுடியும். வாழைப்பழம் எல்லோராலும் சாதாரணமாகப் பயன்படுத்தப்படுவது, நல்ல சத்துணவுகூட. அதை கமர்ஷியல் கிராப் என்று ஆக்கிவிட்டு அதற்கு விவசாய வரி போடுகிறார்கள். ஆனால் நெல்லுக்கு எவ்வளவு தண்ணீர் கொடுக்கப்படு

[திரு. இரா. இராமலிங்கம்] [1974 மார்ச் 19

கிறதோ அவ்வளவு தண்ணீர் வாழைக்குக் கொடுப்பதிலே சில கட்டுப்பாடுகளைப் போடுகிறார்கள். அவற்றையெல்லாம் நீக்கி வாழையை கமர்ஷியல் கிராப் என்று இருப்பதை மாற்றி அதை புட் கிராப் ஆக ஆக்கவேண்டுமென்ற யோசனையைச் சொல்லி இத்துடன் என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

THIRU B. VENKATASWAMY: Sir, in support of the cut motions given by me, I want to say a few words on Agriculture and Animal Husbandry Demands.

At the outset I want to know from the Hon. Minister the remedy that he has got to get over the shortages faced by the Nation, especially Tamil Nadu. As it is, we are having power shortage. Then there is the Cauveri dispute between Karnataka and Tamil Nadu. There is also shortage in the production of tractors and fertiliser. Then there is the oil crisis and so many shortages are there. But so far as foodgrains are concerned, we are happy as we are self-sufficient. In this connection I want to utter a word of warning that next year, we are going to have shortage in regard to foodgrains and we have to face its consequences. I do not know what is the actual scheme which the Hon. Minister has to make the State self-sufficient in foodgrains next year.

Sir, 80 per cent of the people are agriculturists and the amount allotted for agriculture is very meagre for increasing agricultural production. Now the agriculturists are not provided with facilities. Other people have got their own unions and through them they ask for increased D.A., T.A., etc., but the poor agriculturists have no union. They cannot fight for increased price for their products, etc. Whatever price the open market gives they have to take it.

But, as some Hon. Friends have pointed out the price of fertiliser has increased from Rs. 51 to Rs. 100. In our area it has increased to Rs. 150 or Rs. 170 and it is sold in the blackmarket everywhere as has been mentioned by the Hon. Member, Thiru Krishnamurthy. So, what is the stringent step that the Government have taken to stop it and I hope the Hon. Minister will reply to that point.

Also I request him to see that the persons who are indulging in blackmarketing must be severely punished. We must consider them as national dacoits. Otherwise, the poor agriculturists would suffer. They have no other occupation... .. .. .. .. .. .. .. .. ..



1974 மார்ச் 19]

THE HON. THIRU Si. Pa. ADITANAR: On a point of elucidation. The hon. Member wants to know the actual steps which are being taken to see that there is no blackmarketing in fertiliser in future. That is already mentioned in the separate Note on Agriculture Demands. It is stated therein—

'It is proposed to strengthen Inspection staff, and tighten the conditions governing the sale by dealers......'

Is there any doubt that blackmarketing will continue even after the definite steps mentioned in that Note?

THIRU B. VENKATASWAMY: Of course, it has been mentioned that they are going to appoint more staff to check it. Even now there are officers to check it but in spite of them it is still going on. So we must see that stringent steps are taken to stop it. Even certain societies are indulging in such activities. In our area there are such societies who do not give it at controlled rates. As the presidents of these societies are non-officials, they are doing like that. Only when blackmarketing is stopped, the agriculturists will be in a position to get fertiliser.

As regards experiments conducted to increase the Nitrogen content of organic manures, from bagasee we can get nitrogen upto 11 per cent and so we must see that the organic manures are properly produced. Previously subsidy was given for the production of 'Diancha' Sesbania and Sun Hemp. As organic manures are most essential, the Government should give subsidy for the production of such organic manures.

Coming to the Dharmapuri district, it is suffering from natural calamities. Harur and Uttangarai are affected by drought and one pot of drinking water costs 50 paise to one rupee. It has been mentioned that Intensive Agricultural Programmes are to be introduced in many districts. I request the Hon. Minister to introduce it in the Dharmapuri district so that the people there will be benifited.

Regarding sinking of wells, in our area we are finding it very difficult to get dynamite. We have to get it from Salem and so the Government should see that it is made available in the Dharmapuri district itself.

I have also given a cut motion to discuss the need to start a separate Horticultural Directorate. Even though we have got more facilities Tamil Nadu is backward so far as the development of Horticulture is concerned. In the Karnataka State, they have got a separate Horticultural Directorate. With their help, the ryots there are able to produce grapes—Anabishahe and Thompson—Seedless varieties worth Rs. 30,000 to 40,000. So, I request this Government to follow their example and ntroduce such a scheme in our State so that our people can be benefited.

[THIRU B. VENKATASWAMY] [1974 மார்ச் 19

It is stated that regulated markets for horticultural and vegetable products are to be opened in 17 places and I request that such markets should be opened at Hosur and Ootacamund with provision for cold storage facilities, so that the people there will be benefited.

Tea seedlings are not available in Nilgiris district and the hon. Member Thiru Bomman has also told me about it. I request the authorities to see to it that tea seedlings are distributed to the agriculturists.

Regarding potato development, I am glad that Government is able to control the nematode disease. But we must see that the cost of cultivation is minimised.

Coming to animal husbandry, I find that only a small amount has been earmarked for it. It is like mixing small quantity of asafotida in the ocean. There is no scheme which would provide exotic breed of animals. Where is the scheme to provide high-line variety? Where is the original stock? You have schemes of improvement. But unless the original stock is there you cannot improve. What I say is, increase the original stock and let each family have one exotic animal. Then only you can increase the standard of living of agriculturists.

Somebody was saying that the Hon. Minister does not know much about agriculture. I differ there. He knows much about agriculture and he is also very economical in providing necessary money and avoiding waste.

I am glad that I.C.D.P. has been revived and it is going to be included in the Fifth Plan. I hope Dharmapuri will be included in that Scheme. Necessary steps should be taken to eradicate the tooth and mouth disease in animals.

Regarding poromboke lands used for grazing, I want that they may be given exemption.

I am Chairman of Panchayat Union and for better administrative work, I request that Livestock Assistants may be taken away from block control and merged with their Parent Department. That is the recommendation of the Estimates Committee and A.R.C. I hope it will be done.

திரு. தி. பொன்னுமலை: தலைவரவர்களே, இங்கே கொண்டு வந்திருக்கும் விவசாய மானியத்தை ஆதரித்து நான் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.



1974 மார்ச் 19] [திரு. தி. பொன்னுமலை]

சென்ற ஆண்டு குறைவாக மழை பெய்த காரணத்தால், குறிப்பாக சேலம் மாவட்டத்தில் விவசாயிகள் இன்றைக்குப் படுகின்ற அவதிகள் கொஞ்ச நஞ்சமல்ல. ஆடு மாடுகள்கூடத் தண்ணீர் குடிக்க முடியாத நிலையிலே சேலம் வட்டாரத்திலே விவசாயிகள் அவ்வளவு கஷ்டப்படுகிறார்கள். இந்த ஆண்டு அவர்கள் வாங்கியிருக்கின்ற சர்க்கார் கடன்களையெல்லாம் கொடுக்கக்கூட இயலாத நிலைமையில் கஷ்டப்படுகிறார்கள். எனவே அந்த விவசாயிகள் வாங்கியிருக்கின்ற கடன்களை மாண்புமிகு அமைச்சரவர்கள் பெரிய மனது வைத்துத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படி முடியாவிட்டாலும்கூட இந்த ஆண்டு அந்தக் கடன்களை வசூலிப்பதைத் தள்ளி வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சேலம் மாவட்டத்திலே சென்ற ஆண்டு புஞ்சை நிலங்களில் ஒரு ஏக்கரில் ஒரு மூட்டைகூட நிலக்கடலை விளையவில்லை. எனவே அவர்கள் இந்த சர்க்கார் கடன்களைக் கொடுப்பதற்கு இன்னும் சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். எனவே அந்த நிலைமைகளை மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, சேலம் மாவட்டத்தில், 100 அடி 120 அடிக்கு கிணறு வெட்டினால்தான் தண்ணீர் கிடைக்கும். மற்ற மாவட்டங்களைப் போல், 10 அடி, 5 அடி வெட்டினால் தண்ணீர் கிடைக்காது. மற்ற மாவட்டங்களைப்போல் ஏரிப் பாசனமோ, ஆற்றுப் பாசனமோ சேலம் மாவட்டத்தில் கிடையாது. எனவே, அந்தப் பகுதிகளில் ஒரு தனி அதிகாரியை நியமித்து, அவரைப் பார்வையிடச் செய்து அவர்களது குறைகளை நிவர்த்திக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொரு விஷயத்தைச் சொல்ல விரும்புகிறேன். சேலம் மாவட்டத்தில் அதிகமாகப் பயிரிடப்படுவது மரவள்ளிக் கிழங்குதான். அதற்கு எந்தவிதமான பாதுகாப்பும் இல்லை. ஒரு ஆண்டில் மூட்டை 10 ரூபாய் என்றும், இன்னொரு ஆண்டில் மூட்டை 20 ரூபாய் என்றும், இன்னொரு ஆண்டில் மார்க்கெட்டே இல்லாமலும் போய்விடும். அதற்கு இருக்கின்ற மார்க்கெட் வடநாட்டிலேதான். சேட்டுகள் ஜவ்வரிசிக்காக வாங்கி இருப்பை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இப்படிப்பட்ட நிலையிலே சில நேரங்களில் விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள். எனவே, மரவள்ளிக் கிழங்கு பயிரிடுகின்ற விவசாயிகளுக்கு நிரந்தரமான மார்க்கெட்டை ஏற்படுத்தி ஒரு முறையான, சீரான விலையை நிர்ணயம் செய்து விவசாயிகளுக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே பின் தங்கிய மலை ஜாதி, மலை வாழ் மக்கள் வசிக்கின்ற கிராமங்கள் ஏறத்தாழ பத்து இருபது கிராமங்கள் இருக்கின்றன. அந்தக் கிராமங்களுக்குச் சரியான பாதை வசதி இல்லை. அதனால், அங்கு விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற தானியங்களை நல்ல மார்க்கெட்டில் விற்க முடியவில்லை. அந்த இடங்களுக்குப் பல அதிகாரிகளைக் கூட்டிக் கொண்டு போய் நான் காண்பித்தேன். சென்ற ஆண்டு கூட வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருந்தது. நான் டி. ஈ. அவர்களையும்,

எ. ஈ. அவர்களையும் கூட்டிக் கொண்டுபோய்க் காண்பித்தேன். ஆனால், ஒன்றரை ஆண்டுகள் ஆகியும் இன்னும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. ஆகவே, அப்படிப்பட்ட பின்தங்கிய பகுதிகளுக்கு உடனடியாக ரோடு வசதி செய்து தந்தால் அவர்கள் எரு, தழைகளைக் கொண்டு போவதற்கும், உற்பத்தி செய்த பண்டங்களை நல்ல மார்க்கெட்டில் விற்பதற்கும் ஏதுவாக இருக்கும். அந்த முறையில் செய்து அந்த விவசாயிகளுக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு, கிராமப் பகுதிகளில் வாழும் விவசாயப் பெருமக்களுக்குச் சாதாரணமாக ஒரு வருஷத்தில் மூன்று மாதங்களுக்குகூட கூலி வேலை கிடைப்பதில்லை. மூன்று மாதங்கள்தான் வேலை கிடைக்கிறது. மற்ற ஒன்பது மாதங்களுக்கும் கஷ்டப்படுகிறார்கள். களை எடுக்கச் சென்றாலும், அறுவடைக்குச் சென்றாலும், 10 காசு, 20 காசு, 25 காசு என்று ஒரு பெண்ணும், ஒரு ஆணும் கூலி வாங்கிக் கொண்டு காலம் தள்ளுவதற்கு மிக மிகக் கஷ்டப்படுகிறார்கள். எனவே, அவர்களுக்கு நிரந்தரமான தொழில் கிடைக்கவும், கிராமப் பகுதிகளிலுள்ள மக்கள் நல்ல வாழ்க்கை நடத்தவும், விவசாயத் தொழிலாளர்களுக்கு நல்ல வசதி செய்து தரும்படி அமைச்சரவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு, என்னுடைய தொகுதியில் இப்பொழுதுள்ள நிலைமையில் பஸ் போக்குவரத்து மிகவும் கஷ்டமாக இருக்கிறது. நீங்கள் வேண்டுமானால் ஒரு தனி அதிகாரியை நியமித்து பல இடங்களிலும் பார்வையிடச் செய்யலாம். என்னுடைய தொகுதியிலே—நான் பல முறை கூறியிருக்கிறேன்—ஒவ்வொரு பஸ் ஸ்டாப்பிலும் பஸ்ஸுக்காகக் காத்திருப்பவர்கள் நூற்றுக் கணக்கில் இருப்பார்கள். பஸ்ஸில் நெரிசல் சொல்லி முடியவில்லை ஆகவே, . . . . . .

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> இது விவசாய மானியம். இதிலே பஸ் போக்குவரத்தைப்பற்றிப் பேசினால் எப்படி? அது குறித்த இருக்கும் கஷ்டத்தை இப்பொழுது சொல்லக்கூடாது?

<u>திரு. எஸ். ஆறுமுகம் :</u> தலைவரவர்களே, கிராமங்களில் விவசாயிகள் வாழ்கிறார்கள். அவர்கள் நகரப் பகுதிகளுக்குப் போய் வருவதற்கு வசதிகள் இல்லை என்று அங்கத்தினர் சொல்கிறார் என்று கருதுகிறேன்.

<u>திரு. தி. பொன்னுமலை :</u> சென்ற ஆண்டு புயல் அடித்தது. இந்த ஆண்டு கிணற்றிலே தண்ணீர் இல்லாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. எனக்குத் தெரிந்து கடந்த 30 ஆண்டுக் காலத்தில் சம்பா நெல் காய்ந்து போனதாகக் கேள்விப்பட்டதே கிடையாது. தை மாதத்திலேயே கிணறு வெட்ட வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. பருவ மழைக்கு இன்னும் அதிகக் காலம் இருக்கிறது. அதற்குள் என்ன நேருமோ தெரியவில்லை. அந்தப் பிற்பட்ட பகுதிகளுக்கெல்லாம் ஒரு தனி அதிகாரியைப் போட்டு நல்ல பாதுகாப்புத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





மேட்டூர் வட்டம், சேலம் வட்டம், ஆத்தூர் வட்டம், ஓமலூர் வட்டங்களில் இருக்கும் கஷ்டங்களைப்போல் நம்முடைய மாநிலத்தில் வேறு எங்கும் இருக்க முடியாது. அந்தப் பகுதிகளுக்கெல்லாம் அதிகாரிகளை அனுப்பிப் பார்த்துப் பாதுகாப்புத் தரவேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* THIRU K.M. SUBRAMANIAM : Sir, being a resident of the City, I do not want to get entangled in agriculture. But I know one thing and that is this. There are agriculturists and agriculturists; there are agriculturists who own 10 or 15 acres of land and there are agriculturists who own only 2 or 3 acres of land. There are also agriculturists who are agricultural labourers. Unfortunately, 40 per cent of the population of India are agriculturists and rural workers whose per capita income is Rs. 350 per year. I find neither in the Approach Paper to the Plan of the State or anywhere else where this agricultural worker is being looked after and what is the extra step taken to supplement his income. I will stop with that.

I think the only way to solve their problem is through Animal Husbandry. That is where these two fields are connected and unless we provide each agricultural labourer with an animal, we cannot supplement his income and give him a decent living.

Leaving that alone, so far as the City of Madras is concerned Sir, the population is increasing. The animal population is increasing as also human population. Although our dairy project is supplying milk, there are still a lot of milk vendors going round supplying milk.

Unfortunately, everything is in a very, very bad condition and so far as the City is concerned, there is a department in charge of milk supply and I am very sorry to speak about that department. I never find fault with anyone unnecessarily.

But I have to say something about the Animal Husbandry Department. So far as the City of Madras is concerned, it is very unfortunate that they do not have any follow-up programme in many things. They have got beautiful animals brought, bulls brought for cross-breeding and they have artificial insemination programmes also. They have got all these things. But how many of the calves survive after they are given birth? Has anybody analysed this? I would like to know from the Hon. Minister for Agriculture how many cows have been born out of these beautiful bulls and because of artificial insemination and whether the calves have survived. It is unfortunate that there is no follow-up action.

Secondly, the way the animals are kept is the most unfortunate thing: they are kept in the most unhygienic conditions. In the city, the Special Officer of the Corporation has now started a new experiment of putting cow sheds in Madras in every division. But how many? It is only 12 cow sheds. It is not enough. We require hundreds of them. Now animals are milked in the most unhygienic conditions. It can be seen that this is the place where all diseases start. Unfortunately, sufficient attention is not given.

Not only that. There is preventive injection for foot-and-mouth disease, rinderpest, etc. Although this medicine is available. how many are actually availing of this? Has the Government sufficient men to go round and advise that the people should take advantage of this preventive medicines? When I ask milk-men why he has not taken the injection, he says that if he took the injection, the animal will not give milk for 4 or 5 days. But, ultimately the animal dies.

It is also very difficult to keep cows and calves in Madras City, because, the price of fodder is very prohibitive. I am glad and I thank our Revenue Minister that animal fodder has been exempt from sales tax. But who is going to benefit because of that? Is it the merchant or is it the milkman? I will also appeal to the Hon. Minister to see that oil cake is also exempt from sales-tax as it is a important fodder for the animals.

Leaving these things alone, I can also bring to your notice that everything is adulterated. Human food is adulterated. That is a different thing. Can we get any cow fodder in the City of Madras—I challenge—which is not adulterated? Who is responsible for this? I think Animal Husbandry is very important and it is not a subject which is to be dealt with like this, for, it is on the consumption of milk that our children grow. People like myself who are aged also depend upon milk. What we find is that milk is badly treated and given in a very bad condition. That department is not looking after things properly. Government is spending a lot of money. In Saidapet there are people to do it. But are they doing it correctly? No, there are people who do not do things correctly. I think this should be enquired into.

Lastly, milking is done in roads.

உஸ்மான் ரோடில் ஒவ்வொரு ஓட்டலின் முன்னும் 25 மாடுகள் 30 மாடுகளை நிறுத்தி கறந்து கொண்டிருக்கிறார்கள்.

I think they should all be penalised. There should be specific places only where cows and buffalos should be milked.



I hope and trust that this department will take action, the Government will take action and the Hon. Minister will definitely attempt to do these things which are very necessary.

I also appeal to the Hon. Chief Minister to allot more amount this year itself for construction of cow sheds, so that milking will be done under hygienic conditions and we will get better milk in the City. Thank you very much, Sir.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் காலை நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று பேரவை மீண்டும் மாலை 4 மணியளவில் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1–30 மணியளவில் ஒத்திவைக்கப்பட்டது.

இடைவேளைக்குப் பிறகு, பேரவை மீண்டும் மாலை 4 மணி அளவில் பேரவைத் தலைவர், புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் கூடியது.

திரு. சோ. அழகர்சாமி: தலைவர் அவர்களே இந்த வேளாண்மைத் தொழிலானது....

திரு. என். கணபதி: தலைவர் அவர்களே, இந்தப் பேரவை உறுப்பினர்கள் மாலையில் வந்து இந்தப் பேரவைக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக அவர்களுக்குக் கூடுதலான படி ஏதேனும் கொடுக்கப்படுமா? அல்லது அதற்கு பேரவைத் தலைவர் அவர்கள் சிபார்சு செய்வார்களா? என்று அறிய விரும்புகிறேன். அதோடு மாலை 4 மணி ஆகிவிட்டது. குறைந்தது ஏழு மணி அளவிலாவது கூட்டம் முடிவடையும் என்று எதிர்பார்க்கிறேன். இதற்கிடையில் வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் எங்களைப் போன்று உற்சாகத்தோடு கூட்டத்திற்கு வந்திருப்பவர்களுக்கு உற்சாகத்தோடு டிபன் வழங்குவார்களா என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: அரசாங்கக் கொறடா கொடுத்தால் உசிதமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

திரு. நா. வீராசாமி: காலையில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள்தான் பெரும்பாலோர் பிற்பகல் வைத்துக்கொள்ளலாம் என்றார்கள். யார் பிற்பகல் வைத்துக்கொள்ளவேண்டுமென்று சொல்கிறார்களோ அவர்கள் தான் அதிகமான படி அல்லது டிபன் வாங்கிக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். ஆளும் கட்சி உறுப்பினர்கள் வந்து கொண்டேயிருக்கிறோம். அப்படி ஏதாவது ஒரு ஏற்பாடு செய்தால் நலமாகயிருக்கும்.

திரு. ஜே. ஜேம்ஸ்: இந்த மானியக் கோரிக்கையை நிறைவேற்றவில்லை என்று சொன்னால் வேளாண்மைத்துறை பாதிக்கப்படும். வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்தான் அதற்குப் பொறுப்பு. ஆகவே அவர்கள் மானியம் நிறைவேற்றப்படவேண்டுமென்று சொன்னால் இந்த ஏற்பாட்டினைச் செய்தால் நன்றாக இருக்கும்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: அமைச்சர் அவர்களை இந்தக் காரியத்தில் ஈடுபடுத்துவது என்றால் அவர்கள் ஏதோ ஒரு வகையில் உங்கள் சலுகையைப் பெற்றுவிட்டார் என்ற தவறான எண்ணம் ஏற்படும். ஆகவே, ஆளும் பொறுப்பில் உள்ளவர்களை இப்படிப்பட்ட சிக்கலில் ஈடுபடுத்தக்கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: காபி நேரத்திற்குப் பிறகுதான் நாம் இங்கு கூடியிருக்கிறோம்.

* திரு. சோ. அழகர்சாமி: தலைவர் அவர்களே, இந்த வேளாண்மைத் தொழிலானது நாட்டிலே பெரும் பகுதி மக்கள் செய்யக்கூடிய தொழில் மட்டும் அல்ல. வேளாண்மைத் தொழில் சிறப்பாக அமைந்தால்தான் மற்றத் தொழில்களும், மக்களின் வாழ்க்கையும் சீராக அமைய முடியும்.

" உழுவார் உலகத்தார்க்கு ஆணி ; அது ஆற்றாது
எழுவாரை எல்லாம் பொறுத்து."

என்பது வள்ளுவர் வாக்கு. அப்பேர்ப்பட்ட ஒரு தொழிலில் இன்று எந்த முறையில் இருக்கிறது என்றால் விவசாயம் செய்யக்கூடிய விவசாயப் பெருங்குடி மக்கள் எந்த மாதிரியான இன்னல்களுக்கு உட்படுத்தப்பட்டிருக்கிறார்கள் என்பதை நான் சொல்வதைவிட ஆளும் கட்சி உறுப்பினர்கள் பலர் மிக அழகாக எடுத்துக் கூறியிருக்கிறார்கள்.

குறிப்பாக, சமீப காலத்தில் விவசாயத் துறையில் ஆராய்ச்சிகள் மூலம் பலவிதமான வீரிய விதைகள் கண்டுபிடிக்கப்பட்டு கொடுக்கப்பட்டிருக்கின்றன. அந்த வீரிய விதைகள் நல்ல மகசூல் கொடுக்கத்தக்க அளவிற்கு என்னென்ன மாதிரியான உரங்கள் இடவேண்டும் என்பதைப் பற்றியெல்லாம் பத்திரிகைகள் மூலமாகவும் ரேடியோ மூலமாகவும் ஏகப்பட்ட விளம்பரங்கள் செய்யப்படுகின்றன. இதை நம்பி இந்த வீரிய விதைகளை அதிக விலை கொடுத்து— ஒரு கிலோ எட்டு, ஒன்பது ரூபாய் என்று விற்கிறது—வாங்கி விதைத்தார்கள் விவசாயிகள்.

அப்படி வீரிய கம்பை வாங்கிப் போட்டார்கள். வீரிய விதைகள் வாங்கிப் போட்டு தக்கபடி உரங்கள் கிடைக்காமல் விவசாயம் பாதிக்கப்பட்டிருக்கிறது. அமைச்சர் அவர்கள் வீரிய விதைகள்பற்றி உரையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். விதைகளைப் பரிசோதனை செய்ய அதிகாரிகள், இருக்கிறார்கள். பரிசோதித்து அனுப்புகிறார்கள் என்று சொல்கிறார்கள். இந்த ஆண்டு எங்கள் வட்டாரத்தில் அந்த வீரிய விதைகளைப் போட்டு பல்லாயிரக்கணக்கான ஏக்கர்களில், ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 500, 600 என்ற முறையில் நான்கு கோடி ரூபாய் அளவில் நஷ்டமடைந்திருக்கிறார்கள். ஏன் இந்த நஷ்டத்தை அந்த விவசாயிகள் ஏற்க வேண்டும்? அதற்கு ஜவாப்தாரி யார் என்று பரிசீலிக்க வேண்டும். இவர்களை நம்பியதால் தான் மோசமான விதைகளை அளித்ததினால்தான் இந்தப் பெரு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது.



வீரிய விதைகள் வினியோகிப்பது சம்பந்தப்பட்டது மட்டுமல்ல, அதற்கு வேண்டிய ஆலோசனை செய்து அந்த விதைகள் சர்க்கார் துறையில் தயாரிப்பதற்கும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். நாம் இப்போது தனிப்பட்ட கம்பெனி இடத்தில் விதைகள் வாங்குகிறோம். அந்த கம்பெனிகள் அதை எப்படித் தயாரிக்கிறார்கள் என்பது பரம இரகசியம். ஆகவே, சர்க்கார் துறையிலே நம்முடைய அதிகாரிகளின் மேற்பார்வையின் கீழ் அவற்றைத் தயாரிக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்தில் கூற விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, உரம் சம்பந்தப்பட்ட மட்டில் நமக்குக் கிடைக்க வேண்டிய உரம் கிடைக்கவில்லை என்று ஆளுநர் உரையிலே சொல்லப்பட்டிருக்கிறது. 70 சதவீதம்தான் நமக்கு தேவையானதில் கிடைத்து இருக்கிறது. அமைச்சர் சொன்னதிலிருந்து இந்த ஆண்டு 50 சதவீதம்தான் நமக்கு கிடைத்திருக்கிறது. இப்படிக் குறைவாக கிடைத்திருந்த போதிலும் கிடைத்த உரம் சரியாக வினியோகிக்கப்படவில்லை என்று சொல்லிக்கொள்கிறேன். நியாயப்படி ரூ. 60, அல்லது 50 ரூபாய் விலையுள்ள மூட்டைகள் வெளி மார்கெட்டில் ரூ. 170-க்கு விற்கிறது. ரூபாய் 110, 120-க்கு விற்கிறது என்று சொன்னார்கள். எங்கள் பக்கத்தில் ரூ. 170-க்கு விற்கிறது. இதை கண்காணிப்பதற்காக அமைச்சர் அவர்கள் ஒரு வழியை இப்போது தெரிவித்திருக்கிறார்கள். அதாவது அவற்றைக் கண்காணிப்பதற்கு வேண்டிய அதிகாரிகள் இது வரையில் 8 பேர் தான் இருந்தார்கள். அவற்றைச் சரியாக கண்காணிக்கக் தக்க அளவிற்கு நடவடிக்கை எடுப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். எதிர்காலத்தில் தான் எந்த அளவிற்கு அது பயன் அளிக்கிறது என்று பார்க்க வேண்டும்.

சென்ற ஆண்டு கிடைத்த உரம் எப்படி வினியோகிக்கப் பட்டிருக்கிறது என்று பார்த்தால் விவசாயிகளுக்கு 50 சதவீதம் கூட வரவில்லை. 5-ல் ஒரு பங்கு கூட, 10-ல் ஒரு பங்கு கூட, 20-ல் ஒரு பங்கு கூட கிடைக்கவில்லை. ஒரு மூட்டை ரூ. 170 வரை வாங்கும் மோசமான நிலை இருந்தது. அது மட்டுமல்லாமல் உரத்தை பல இடங்களில் கடத்திக் கொண்டு போய்க்கொண்டிருந்தனர். இதைக் கண்காணிப்பதற்கோ நடவடிக்கை எடுப்பதற்கோ தயாராக இல்லை. பல இடங்களில் கள்ள மார்கெட்டைப் பிடித்துக் கொடுக்கும் அரசு எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. நேற்றுக் கூட படித்தேன். செக்போஸ்ட்டில் இருப்பவர்கள் பிடித்து இருக்கிறார்கள். நமக்கு வரும் உரத்தை ஆந்திரா, கேரளா, கருநாடகம் போன்ற மாநிலங்களுக்கு கடத்திக்கொண்டு போய்க் கொண்டிருக்கிறார்கள். இத்தகைய மோசமான நிலையில் இந்த உர வினியோகம் இருக்கிறது என்று அரசின்மீது குற்றம் சாட்டுகிறேன்.

அமைச்சரவர்கள் ஸ்டாக் நிறைய இருக்கிறது என்று சொன்னார்கள். ஸ்டாக் குடோனில் இருந்தால் போதாது. அது விவசாயிகளுக்கு கிடைக்க வேண்டும். விவசாய டிப்போக்கள் மூலம் மருந்துகள் வினியோகிக்கப்படுகின்றன. ஆனால் அந்த மருந்துகள் முறைப்படி விற்பனை செய்யப்படுவது இல்லை.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: இப்பொழுது வேண்டுமானாலும் அனுப்பி வைக்கிறேன் இப்பொழுது அரசாங்க கைவசம் பி. எச். ஸி. 10% எறத்தாழ 1,000 டன் என்ற அளவிற்கும் என்டிரின் 1 லட்சம் லிட்டர் என்ற அளவிற்கும் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் கோவில்பட்டிக்கு வேண்டுமென்று தெரிவித்தால், அதை அனுப்பி வைப்பதற்கு நான் தயங்கமாட்டேன்.

திரு. சோ. அழகர்சாமி: மிக்க நன்றி. உடனடியாக அனுப்பி வைக்க வேண்டும். பருத்திப் பயிர்களுக்குத் தெளிக்க வேண்டியிருக்கிறது. நான் கூட சென்று பார்த்தேன். அங்கே மருந்து இல்லை. இப்போது டெப்போக்களுக்கு வரும் மருந்துகள் எல்லாம் வெளியில் போய் விடுகிறது என்று சொல்லப்படுகிறது. ஆனால் அதைக் கண்டுபிடிக்க முடியவில்லை. காரணம், விற்பவர்கள் கம்பெனியில் வாங்கிக் கூட விற்பார்கள் ஆகவே, இந்த டெப்போக்களுக்கு சப்ளை செய்யப்படும் மருந்துகளின் மேல் " நாட் பார் சேல் " என்று சீல் குத்தி அனுப்ப வேண்டும். அப்போது எதாவது தவறு நடந்தாலும் கண்டுபிடிப்பதற்கு வசதியாக இருக்கும்.

இப்போது டெப்போக்களுக்கு உரம் இன்று வருகிறது என்று சொன்னால் மறுநாள் சென்று கேட்டால் மருந்து இல்லை என்று சொல்லி விடுகிறார்கள். அவர்கள் ஏதோ பில் போட்டு சரிசெய்து விடுகிறார்கள். ஆகவே, அந்த மாதிரியான நடவடிக்கைகளைத் தடுப்பதற்கு அரசு வழிவகை செய்ய வேண்டும். இப்படிச் செய்கிற அதிகாரிகள்மீது கடுமையாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சென்ற தொடரிலிருந்து நாங்கள் சொல்லிக்கொண்டிருக்கிறோம். இந்த நோய் தடுப்பு நடவடிக்கைகளை அரசாங்கமே செய்ய வேண்டும். இந்த மாதிரி பூச்சி மருந்து தெளிப்பதை அரசாங்கமே செய்ய வேண்டும். ஒரு வயலில் பூச்சி வந்து அந்த வயலில் மருந்து அடிக்கவில்லையென்றால் அது பக்கத்திலுள்ள வயல்களிலும் வந்துவிடுகிறது. ஆகவே, காலரா போன்றவற்றைத் தடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்துக்கொள்வது போல் இந்த பூச்சி மருந்து தெளிக்கும் வேலையையும் தேசிய கடமையாகக் கருதி அரசாங்கமே மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

இந்த பூச்சி மருந்துகளில் பலவிதமான கலப்படங்கள் இருக்கின்றன. யூரியாவில் கலப்படம் செய்து விற்கிறார்கள். இதைக் கண்காணிக்க அதிகாரிகள் இருக்கிறார்கள். அவர்கள் கண்காணித்து எத்தனை பேர்களை தண்டித்தார்கள் என்று தெரியவில்லை. இந்த மாதிரி கலப்படம் நடப்பதை தவிர்க்க அமைச்சர் அவர்கள் உடனடியாகக் கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

விவசாயிகள் உற்பத்தியைப் பெருக்கி இருந்தாலும் அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய வருமானம் கிடைக்கவில்லை. ஒரு ஏக்கருக்கு நிகர வருமானம் ரூ. 3,000 வைக்கலாம் என்று அமைச்சர் ஆதித்தனார் சொல்லியிருக்கிறார்



கள். அதை செய்வதற்குத் திட்டமிடுவார்கள் என்று நம்புகிறேன். இப்போது பல இடங்களில் விவசாயிகளுக்கு கட்டுபாடு விலை கொடுக்கப் படவில்லை என்று சொல்லப்படுகிறது. அவர்கள் வெளி மார்க்கெட்டில் உரத்தை ரூ. 170 என்று சொன்னால் கூட வாங்கி உற்பத்தியைப் பெருக்குகிறார்கள்.

ஆனால், அவர்கள் உற்பத்தி செய்யும் பொருள்களுக்கு நியாயவிலை கிடைக்கவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூட விவசாயப் போராட்டக் குழுவிடம் நியாய விலை நிர்ணயிக்கிறேன் என்று அறிவித்து இருக்கிறார்கள். எனக்குக் கிடைத்த ஒரு புகாரைச் சொல்கிறேன். ஒரு மூட்டை நெல்லின் விலை ரூ. 40 என்று நிர்ணயிக்கப்பட்டிருந்தால் விவசாயிக்கு ரூ. 35 தான் கொடுக்கப்படுகிறது. அதை ஒரு வியாபாரி வாங்கி அரசாங்கத்திடம் கொடுத்து மூட்டைக்கு 40 ரூபாய் வீதம் பணம் வாங்கிக் கொள்ளுகிறார். விவசாயிகளுக்கு அந்தப் பணம் கொடுப்பது இல்லை. இப்படி விவசாயி உற்பத்தியைப் பெருக்கிய பிறகும் போதிய வருமானம் வரவில்லை என்றால் திரும்பவும் கடன் வாங்கவேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள். பல இடங்களில் விவசாயிகள் தாங்கள் எதிர்காலத்தில் எப்படி விவசாயம் செய்வது என்ற இக்கட்டான நிலையில் தள்ளப்பட்டு இருக்கிறார்கள். இது அமைச்சர் அவர்களுக்கும் உறுப்பினர்களுக்கும் தெரியும். இதற்குக் காரணம் அவர்கள் வாங்கும் பொருள்கள் பூராவும் கள்ள மார்கெட்டில். விற்கும் பொருள் களுக்கும் நியாயவிலை கிடைக்கவில்லை. அதே மாதிரி கரும்பு சம்பந்தப்பட்ட மட்டில் நாங்கள் தொடர்ந்து சொல்லிக்கொண்டு வருகிறோம்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் கூட சொல்லியிருக்கிறார்கள். உத்திரப் பிரதேசத்தில் ரூ. 125 கொடுக்கிறார்கள். தமிழ் நாட்டில் கரும்பு 40 இலட்சம் டன் விளைகிறது என்று சொன்னால் 12 கோடி ரூபாய் அந்த விவசாயிகளுக்கு கிடைக்க வேண்டிய பணம் ஆலை முதலாளிக்குப் போகிறது. அந்த ரூபாய் 12 கோடி விவசாயிகளுக்குக் கிடைக்க வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்படி, உத்திரப் பிரதேசத்தில் வாங்கிக்கொடுக்கிறார்கள். இங்கே 80, 85, 90 என்ற நிர்ணயம் செய்து இருக்கிறீர்கள். அதை அதிகரிக்க வேண்டும். ஆலை முதலாளிக்கு அந்தப் பணம் செல்லக்கூடாது. இதற்கு ஒரு சாக்குப்போக்குச் சொல்லி பிரயோசனம் இல்லை.

விவசாயிகளுக்குப் பயன்படும் வகையில் மார்க்கெட்டிங் கமிட்டி அமைத்தோம். அது விவசாயிகளுக்கு என்ன வசதிகளை செய்திருக்கிறது என்று பார்க்க வேண்டும். அவர்கள் உண்மையாகவே செஸ் மட்டும்தான் வசூலித்துக்கொண்டிருக்கிறார்கள். அது ஆரம்பிக்கப்பட்டதின் உண்மை யான நோக்கம் விவசாயப் பொருள்களுக்கு நியாயமான விலை கொடுப்பது அவர்களுக்கு முன் கூட்டியே கடன் கொடுப்பது போன்ற நடவடிக்கைகளைச் செய்வதற்குத்தான். இப்படிப்பட்ட ஏற்பாடு ஏதேனும் இப்போது மார்கெட்டிங் கமிட்டியில் உண்டா ? ஆளும் கட்சி உறுப்பினர்களைத்தான் அதற்குத் தலைவராகப் போட்டிருக்கிறீர்கள் அவர்கள் செஸ் வசூலிக்கிற வேலையைத் தவிர வேறு எந்த விதமான வேலையையும் செய்யவில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. சோ. அழகர்சாமி] [1974 மார்ச் 19

பாசனப் பகுதிப் பருத்தித் திட்டம், பருத்தி சம்பந்தப்பட்ட மட்டில் தீவிர திட்டமாகப் போடப்பட்டிருக்கிறது. இதற்கு மத்திய சர்க்கார் கொடுக்கும் மானியம் சீரான முறையில் விவசாயிகளுக்கு கிடைப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். பல மானியங்கள் பலவிதமான முறையில வருகின்றன. அவற்றைச் சரியான முறையில் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

இன்று விவசாயிகள் கடன் வாங்கி பம்ப் செட் போட்டு இருக்கிறார்கள். ஆனால் அவற்றிற்கு இன்னும் மின் இணைப்புக் கிடைக்கவில்லை. சிலர் கடன் வாங்கி கிணறும் வெட்டியிருக்கிறார்கள். அவர்களிடமிருந்து, மின் இணைப்புக் கொடுப்பதற்கு முன்னாலேயே, கிணறு வெட்டி முடிப்பதற்கு முன்னாடியே கடன் தொகையை வசூல் செய்ய ஆரம்பித்து விடுகிறார்கள். ஒரு தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கு ஒருவர் கடன் வாங்கினால் அந்த தொழிற்சாலை உற்பத்தி செய்ய ஆரம்பித்த பிறகுதான் அந்தக் கடன் தொகையை வசூலிக்கிறார்கள். ஆனால் இந்த விவசாயிகள் விஷயத்தில் மட்டும் என் இந்த முறை கையாளப்படுகிறது. இந்த விவசாயிகள் கடனைத் திருப்பிக் கொடுக்க முடியவில்லை என்றால், உடனே மாடு ஜப்தி, பம்ப் செட் ஜப்தி என்று ஆரம்பித்து விடுகிறார்கள்.

இது விவசாயிகளுடைய வாழ்க்கையை நாசமாக்கும் நிலையில் கொண்டு போய் விடுகிறது. அதைத் தடுத்து நிறுத்த வேண்டும். இடையிலே இருக்கக்கூடிய இடைத் தரகர்கள், கள்ள மார்க்கெட்காரர்கள் கொள்ளையடிப்பதைத் தடுத்து நிறுத்தி அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

உரம் நல்ல வகையில் கிடைப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து தரவேண்டும். கம்போஸ்டு உரம் சரியானபடி செய்யப்படவில்லை. மத்திய சர்க்கார் அதற்கு அதிகமான மானியம் கொடுப்பதாகச் சொல்லப்படுகிறது. நல்ல வகையில் உரம் தயார் பண்ணுவதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்துக்கொண்டு, அதற்கான முயற்சிகளைச் செய்து வருகிறார்கள். அது நல்ல முயற்சிதான். நமது நகர்ப்புறங்களில் உரம் வீணாகப் போய்க்கொண்டிருக்கிறது. அதை நல்ல முறையில் கம்போஸ்டு உரம் பண்ணக்கூடிய முறைகளை கையாள வேண்டும். ரசாயன உரத்தையே நம்பி இருப்பதால், அது கிடைக்காத நேரங்களில் விவசாயிகளின் வாழ்க்கை மோசமாகப் போகக்கூடிய நிலை இருக்கிறது. அதைத் தடுக்க வேண்டும். நம் நாட்டில் கிடைக்கும் மூலப் பொருள்களை வைத்து எப்படி உரம் உற்பத்தி செய்யலாம் என்று ஆராய்ச்சி செய்வதற்குச் சரியான நடவடிக்கை எடுக்க வேண்டும். கிடைக்கின்ற ரசாயன உரங்களை சரியான முறையில் கண்காணித்து சீரான முறையில் விநியோகம் செய்ய நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்தில் சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

* திரு. எஸ். ஆறுமுகம் : தலைவர் அவர்களே, **1974–75-ம் ஆண்டு வேளாண்மை மானியக் கோரிக்கையை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.**



1974 மார்ச் 19] [திரு. எஸ். ஆறுமுகம்]

இந்த மானியக் கோரிக்கையில் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் இந்தக் கோரிக்கைகள் பற்றிய குறிப்புகளிலே வேளாண்மைத் துறையில் நம்முடைய அரசாங்க நிர்வாகம் எந்த அளவுக்குக் காரியங்களை ஆற்றி விவசாயப் பெருங்குடி மக்களுக்கு உதவி வருகிறது என்பதை மிகத் தெளிவாகச் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். சென்ற ஆண்டு பருவ மழை நம்முடைய மாநிலத்தில் அங்கும் இங்கும் சரியான முறையில் பெய்யாமல் இருந்தாலும்கூட, 1972–73-வது ஆண்டைவிட 1973–74-வது ஆண்டில் 31 சதவிகிதம் கூடுதலாக உணவு உற்பத்தி செய்யக்கூடிய அளவுக்கு வேளாண்மைத் துறையில் ஈடுபாடு கொண்டுள்ள விவசாயப் பெருங்குடி மக்கள் நமக்கு பெருக்கிக் கொடுத்திருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் நினைத்து நாம் மகிழ்ச்சி கொள்ளத்தக்க அளவில் காரியங்கள் நடந்திருக்கின்றன.

இப்படிப் பல்வேறு காரியங்களை நாம் ஆற்றுகின்றபொழுது இன்றைக்கு எதிர்க் கட்சி வரிசையிலுள்ளவர்கள் பொதுவாக விவசாயப் பெருங்குடி மக்களிடையே சொல்லிக்கொள்ளக்கூடிய கருத்து விவசாயிகளுக்குப் போதிய அளவிலே உரம் கிடைக்கவில்லை, நல்ல வீரிய வித்துகள் கிடைக்கவில்லை, பூச்சிக் கொல்லி மருந்துகள் கிடைக்கவில்லை, இவைகளெல்லாம் கிடைக்காத நேரத்தில் விவசாயிகளுக்குக் கொடுத்த கடனை மட்டும் அரசாங்கம் வசூல் செய்வதிலே மிக அக்கறை காட்டுகிறார்கள் என்ற குற்றச்சாட்டினை எதிர்க்கட்சியினர்கள் சுமத்துகிறார்கள்.

விவசாயிகளுக்கு அரசாங்கம் ஒரு வகையிலே கடன் தருகிறது. கூட்டுறவு ஸ்தாபனங்கள் ரிசர்வ் வங்கியிலிருந்து கடனைப் பெற்று விவசாயக் காரியங்களுக்காக கிராம மக்களிடையே விவசாயிகளுக்கு பெரும்பாலான கடன் உதவிகளைச் செய்து வருகிறது. ஆகவே, ரிசர்வ் வங்கியிலிருந்து பெற்றுத் தரக்கூடிய கடனை கூட்டுறவு ஸ்தாபனங்கள் விவசாயிகளுக்குக் கொடுக்கக்கூடிய நேரத்தில், அந்தக் கடனைத் திருப்பி வசூல் செய்து மீண்டும் மத்திய வங்கி அல்லது கூட்டுறவு ஸ்தாபனங்கள் ஓவர்ட்யூஸ் நிலைமைகளைக் குறைத்தால்தான் ரிசர்வ் வங்கியிலிருந்து கடன் பெற்று விவசாயிகளுக்குக் கடன் உதவிகளைத் தொடர்ந்து செய்ய முடியும் என்பதை ஆளும் கட்சியில் இருப்பவர்கள் மட்டுமல்ல, எதிர்க் கட்சியில் இருப்பவர்களும் நன்கு உணர்வார்கள். இருந்தாலும் அரசாங்கத்தின் மீது ஏதாவது குற்றம் சொல்ல வேண்டும் என்ற ஒரே காரணத்திற்காக இன்றைக்கு இந்த ஆட்சியின்மீது குற்றத்தைச் சொல்லிக்கொண்டு வருகிறார்கள். பொதுவாக மத்திய அரசிடமிருந்து உரங்களை நம்முடைய மாநில அரசு நம்முடைய மாநிலத்திற்கு பெற்றுத் தருகிறது. நமக்கு எவ்வளவு தேவை என்று கேட்டிருக்கிறார்கள். நாம் 1,50,000 மெட்ரிக் டன் என்று கேட்டிருந்தாலும், ஒரு லட்சம் மெட்ரிக் டன் அளவுக்குத் தான் உரங்களை அவர்கள் வழங்குவதாக ஒப்புதல் தந்து, 87,000 மெட்ரிக் டன் அளவுக்குத் தான் உரங்களைக் கொடுத்து இருப்பதாக இந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது.

ஆகவே, நம்முடைய தேவைகளை மத்திய அரசிடம் எடுத்துச் சொல்கிறோம். மத்திய அரசு நம்முடைய தேவைக்கான உரங்களை கொடுக்கவில்லை என்ற குறைபாடு இன்றைக்கு இருக்கிறது என்பதை நாம் ஆதாரத்தோடு சொல்கிறபொழுது, எதிர்வரிசையில் இருப்பவர்கள் அந்தக் குறைபாட்டைப் போக்குவதற்கு மத்திய அரசிடம் முனைந்திட வேண்டும். அதற்கு நீங்கள் வாதாடினால் நாங்களும் துணையாக இருப்போம் என்று சொன்னால் நம்முடைய தேவைக்கு உரத்தை மத்திய அரசிடமிருந்து பெற்று, நம்முடைய விவசாயப் பெருங்குடி மக்களுக்கு உதவி செய்வதற்கு எதுவான வகையில் அமையும். அந்த வகையில் இந்த அவையின் மூலம் மத்திய அரசிடம் நாம் அதிகமாகப் போராடி அதிகமான உரத்தைப் பெறுவதற்கு நம்முடைய மாநில அரசு முயற்சி எடுக்க வேண்டும். அதற்கு இந்த மன்றம் உறுதுணையாக இருக்கும் என்பதை நம்முடைய வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இன்றைக்குப் பொதுவாக நம்முடைய வேளாண்மைத் துறையில் நாம் அதிகமாகக் கவனத்தைச் செலுத்தி வருகிறோம். பூச்சிக்கொல்லி மருந்துகளை நாம் விவசாயிகளுக்குக் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். இந்த மருந்துகளை அனைத்தும் தனியார் கம்பெனிகள் தயார் செய்து, அந்தக் கம்பெனிகள் அவற்றை வேளாண்மை துறையினருக்கு வழங்கிறார்கள். அதை நாம் வாங்குகிறோம். தனியார் கம்பெனிகளை வைத்து பூச்சிக் கொல்லி மருந்துகளை தயார் செய்து அதை நாம் வாங்குவதை விட அரசாங்கமே அந்தக் கம்பெனிகளைத் தேசியமயமாக்கி அந்தப் பூச்சிகொல்லி மருந்துகளை நாம் தயார் செய்து விவசாயிகளுக்குக் கொடுக்கக்கூடிய முயற்சிகளை நாம் எடுக்க வேண்டும். அப்படி எடுப்பதன் மூலம் நல்ல தரமான மருந்துகளை நாம் எவ்வளவு வேண்டுமானாலும் உற்பத்தி செய்து விவசாயப் பெருங்குடி மக்களுக்கு விவசாயத்தை வளர்ப்பதற்கு, வேளாண்மை உற்பத்தியை அதிகமாக்குவதற்கு வாய்ப்புகள் ஏற்படும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதே மாதிரி நெல், சோளம், கம்பு, இதைப்போல பருப்பு வகைகள், கரும்பு போன்ற பயிர்களை நம்முடைய விவசாயிகள் பயிர் செய்கிறார்கள். அவர்களுக்குப் போதுமான அளவுக்கு அரசாங்கம் தாராளமாகச் சலுகைகளைச் செய்திடவேண்டும். அதற்கு நம்முடைய வேளாண்மைத் துறை முயற்சி எடுக்கவேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு மன்றத்தில் சட்டமன்ற உறுப்பினர் ஒருவர் பேசக்கூடிய நேரத்தில் கோவையில் ஆரம்பிக்கப்பட்டுள்ள நம்முடைய வேளாண்மைப் பல்கலைக் கழகத்தைக் குறித்து இங்கே குறைபாடுகளைச் சொன்னார்கள். அங்கு இருக்கக்கூடிய வைஸ் சான்ஸ்லர் அவர்கள் ஏதோ ஒரு இனத்துக்கு மட்டும் வேலை வாய்ப்பு அளிப்பதாகவும் இங்கே குற்றம் எல்லாம் சாட்டப்பட்டது. அவர்கள் ஒரு மிக பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்தவர்கள்தான். தமிழகத்தில் ஒரு மைனாரிடி சமூகத்தினராக இருக்கக்கூடிய தேவாங்கு செட்டியார் இனத்தைச் சேர்ந்தவர், ஆகவே



வேளாண்மைப் பல்கலைக் கழகம் அந்த இனத்தைச் சார்ந்தவர்களுக்கு வேலை வாய்ப்புத் தருகிறது என்ற குற்றச்சாட்டு சொல்வது அவ்வளவு பொருத்தமானது அல்ல என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் விவசாயத்தைப் பற்றி அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் கோவைச் செழியன் அவர்கள் சொன்னார்கள் * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதைப்பற்றி சொல்ல வேண்டியதில்லை.

திரு. எஸ். ஆறுமுகம்: நான் அவரிடம் இதைப்பற்றி நேரிடையாகவே சொல்லிக் கொண்டிருந்தேன். அவர் கோபித்துக் கொள்ள மாட்டார்.

(திரு. குழ. செல்லையா எழுந்திருந்தார்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் உட்காருங்கள். நான் நான் சொல்லிக் கொண்டிருக்கிறேனே. நான் காலையில் கூட சொல்லியிருக்கிறேன். ஒருவர் இன்னொருவருக்குத் தெரியுமா தெரியாதா என்று கேள்விகள் கேட்பது நல்ல முறையல்ல. அதைப் பின்பற்ற வேண்டும். நீங்கள் இதையெல்லாம் வெளியில் பேசிக் கொள்ளுங்கள். சபையில் பேசுவது நல்லது அல்ல. திரு. ஆறுமுகம் அவர்கள். * * * என்று அந்த வகையில் தொடங்கிய பகுதியை சபையின் நிகழ்ச்சிக் குறிப்பிலிருந்து நீக்கிவிடும்படி உத்தரவிடுகிறேன். பத்திரிக்கையாளர்களையும் அதை வெளியிட வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஆறுமுகம்: விவசாயிகளுக்கு உதவி செய்ய வேண்டும் எற்று பல திட்டங்களை இன்று அரசு செயல்படுத்தி வருகிறது. அந்தக் கட்சியினுடைய தலைவர் ஒன்று சொன்னார்கள். அவர்களுடைய கட்சியினுடைய கொள்கை என்ன, அந்தக் கொள்கையை பின்பற்றினால் வேளாண்மைத் துறையில் நாம் முன்னேற்றத்தை காணலாம் என்று ஏதாவது கொள்கையை அல்லது வேளாண்மைத் துறைக்கு ஆலோசனைகளை அவர்கள் தந்தார்களா என்றால், அப்படிப்பட்ட ஆலோசனைகளையோ அல்லது கொள்கை எதையுமோ சொல்லாமல் ஒட்டுமொத்தமாகச் சர்க்கார் பேரில் குறைகளை மட்டும் சொல்லி அவர்களுடைய பேச்சை முடித்தார்கள். (மணி அடிக்கப்பட்டது.)

(மாலை 4-30)

* THIRU K. S. KOTHANDARAMIAH: Hon. Speaker, Sir, I rise to express my views on the Demand Nos. 20-Agriculture and 48—Capital Outlay on Agriculture. The Hon. Minister has sought an allotment of about Rs. 57 crores and 13 lakhs for agriculture and also about Rs. 4 crores for Animal Husbandry.

---

* * * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

[Thiru K S. Kothandaramia] [1974 மார்ச் 19

Now at the outset I wish to point out that considering the Physical features and other factors, the District of Dharmapuri and some parts of Coimbatore district should be considered a separate agricultural zone. The altitude, rainfall, nature of crops, method of cultivation, food practices and the entire demographic features are different and therefore this should be considered a separate agricultural zone. Also the monsoon begins there not from the month of June but from the month of April. Within 10 or 12 days, we are going to have rainfall. Therefore, the agricultural work begins there at least $1\frac{1}{2}$ months before it begins in other places of the State. So, by the time the rainfall comes, the agriculturists there should be given fertiliser, implements and loans from the banks, etc. Otherwise, they will have to waste their time by going here and there for getting them. Therefore, special consideration should be given to that district and proper arrangements should be made for their distribution.

With regard to the integrated intensive cultivation system, it has been introduced not only in the Thanjavur district but it has also been extended to other districts like Chingleput, Madurai, Tirunelveli, Coimbatore and Tiruchirappalli. It is stated in the note that it will be extended to one more district in 1974-75. I request the Hon. Minister to extend the scheme to the Dharmapuri district so that the area can be developed very easily.

Now coming to fertiliser, we have read in newspapers that food stocks in the entire world are now falling short and in two months it may be depleted. Therefore, we have to take care to see that our production is increased and for that fertilisers are most important. The Hon. Minister has stated that they are distributed in two ways, (1) through the societies and (2) through the private agencies. Whatever agency it may be, whatever little is available should reach the agriculturists in time. Hon. Members who spoke before me have been saying that fertilisers are not available to them in time and at the rates prescribed by the Government. Therefore, the Government must take steps to see that fertilisers supplied to the co-operative societies are well distributed because the societies are under the control of the Government and they can check and punish them

Then coming to green manure, it is not available. Organic manure is not available. We have given up goat manure. Agriculturists may be permitted to have a small number of goats If the goats are there, agriculturists can get good manure, very useful to the crops. If an agriculturist has got 25 goats, it is like the Reserve Bank to him and he can get money, and manure, etc., by selling them. One objection is that goats eat away trees. People are also cutting away trees on the



1974 மார்ச் 19] [Thiru K. S. Kothandaramiah]

roads and in the forests and so I request the Hon. Minister to help the agriculturists by giving permission to them to have a number of goats, which may help in increasing their income.

As regards soil testing, every agriculturist should have his land tested. Soil testing is going to be introduced in the Dharmapuri district and I thank the Hon. Minister for that.

With regard to seed farms, they are not properly constituted and they should be set up in each district so that ryots there may get good seeds in time.

Coming to Horticulture, we have completely neglected that section. In Hosur, almost all kinds of fruits, grapes, mangoes, pine-apples, apples, etc., can be grown well. In Bangalore they have got horticultural training and these fruits are cultivated on a large scale. All the fruits that are grown there can be grown in our taluks also. Therefore, special arrangements should be made for starting a Horticultural Farm at Hosur and encouragement should be given to agriculturists so that they can supplement their agricultural income.

Coming to flowers, Hosur is the best place for the cultivation of jasmine flowers. Even in the District Development Council it has been completely discussed and recommendations have been made. I do not know why agricultural officers are not giving proper attention to that. It has got good oil-content and colour and smell and it will not fade quickly. One acre of jasmine cultivation will yield good income and it will be an extra income to the agriculturists. I request the Hon. Minister who has seen that area and seized of the matter, to see that cultivation of jasmine is undertaken there by giving loans, etc., to the agriculturists.

Coming to the question of roses, sometime ago I had been to Haryana. In the Haryana city itself, about 100 acres have been set apart for growing roses. They grow beautiful roses. The climatic conditions there are similar to the Dharmapuri district. They are sending roses to foreign countries. It has got a kind of yellow petal, which will stand for 8 or 10 days. It is stated that in London alone 10 lakhs of flowers are sold per day. Ladies and gentlemen are used to take them for enjoyment. Therefore, such cultivation of roses can be introduced here. In Bangalore—our Hon. Minister for Labour knows that some private ladies, wives of officers have taken to this cultivation and they are getting a lot of income. Though flowers are grown in Kodaikanal and in the Nilgiris they are smelless but the flowers in Hosur have smell and are attractive in colours. I request the Hon. Minister to see that rose culti-- on is encouraged.

[Thirn K. S. Kothandaramiah[ [1974 மார்ச் 19

Coming to coffee culture, in Hosur coffee can be grown. Sometime ago the department has recommended that the hills in the Denkanikottah taluk are quite suitable for coffee cultivation. In 1855 one European went interior into the taluk and found out a place that was suitable for coffee cultivation. Moreover this question, came up in the Parliament also and it was stated that Denkanikottah taluk was suitable for coffee cultivation and it is also proposed to take films on that and show them in foreign countries so that they can be attracted. Therefore, cultivation of coffee which has been neglected can be introduced in this taluk................

(Mr. Speaker sounded the gong and called the next speaker.)

திரு. பி. பொன்சொக்கலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறை, கால்நடைப் பராமரிப்புத் துறை ஆகிய மானியங்களின்மீது பேசுகின்ற ஒரு வாய்ப்பு பெற்றமைக்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உள்ளபடியே வேளாண்மைத் துறையில் தமிழகத்தைப் பொறுத்த வரையில் நாம் சிறந்த முறையில் வேளாண்மை செய்து வருகிறோம். பல மெம்பர்கள் இங்கே சொல்லாமல் சொன்னார்கள். உரம் பற்றாக் குறையாக இருக்கிறது என்று சொன்னார்கள். எந்த உரம் பற்றாக் குறை, எப்போது இந்த உரம் கிடைக்கவில்லை என்பதை அவர்கள் சொல்லவில்லை. நான் ஒரு விவசாயி என்ற காரணத்தால்—இங்கே பேசுகின்றவர்கள் பலர் தங்களை விவசாயி என்று சொல்லிக் கொண்டார்கள். அதைக் கேட்க எனக்கு களிப்பு வந்தது—கேட்கிறேன்.

ஐ.ஆர். 8, ஐ.ஆர். 20, ஐ.ஆர். 5 போன்ற ரகங்கள் எப்படி இருக்கும், பொன்னி, கருணை, கன்னகி போன்ற நெல் ரகங்கள் எப்படிப்பட்டவை ? எந்த நெல்லில் அதிக சத்து இருக்கிறது என்ப தெல்லாம் சிலருக்குத் தெரியவில்லை. எந்த உரம் தேவை என்பதும் தெரியவில்லை. பண்டைக் காலத்தில் தழை உரத்தையும், கால்நடைப் பராமரிப்பு மூலமாக உரத்தையும் தயார் செய்து வந்தார்கள். விவசாயத் துறை அதிகாரிகள் கவனிக்க வேண்டும். பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான புறம்போக்கு நிலங்களில் வேம்பு, பூவரசு, இளறி, செடியா போன்ற பயிர்களைப் பயிரிட்டு அந்த மரங்கள் மூலமாக உரத்தைத் தயார் செய்யலாம். வேம்பு அதிகமாகப் பயிரிடப்படுவது. அதில் கிடைக்கக்கூடியதை எடுத்து வேப்பம் புண்ணாக்கு மூலமாக உரம் தயார் செய்யலாம். அதிலே மணிச் சத்து அதிகமாக இருக்கிறது.

காம்ப்ளெக்ஸ் உரத்தை அதிகமாகப் போட்டுக் கொண்டே வருவ தால் ஒரு கால கட்டத்தில் நிலங்களின் தரம் குறைகிறது. நிலத்தின் தரம் குறையக் காரணம் மண்ணில் இருக்கக்கூடிய சாம்பல் சத்துக் கள் காம்ப்ளெக்ஸ் உரத்தை அதிகமாகப் போடுவதன் காரணமாக வெளி யாகிவிடுவதுதான். மீண்டும் அந்த மண்ணுக்குச் சாம்பல் சத்து தந்தாக வேண்டும். முனிசிபாலிடியிலிருந்து கம்போஸ்ட் உரம் தயார்



1974 மார்ச் 19] [திரு. பி. பொன் சொக்கலிங்கம்]

செய்யலாம். அதற்காக மானியம் ஒதுக்கியிருக்கிறார்கள். முனிசி பாலிடியில் தயாரிக்கப்படுகின்ற உரங்களை எந்த முறையில் தயாரிக்க வேண்டும் ? போடுகின்ற உரத்தோடு தழை உரத்தையும் சேர்த்து இரண்டு மூன்று மாதத்திற்கு ஒரு முறை மண்ணைப் போட்டு மூடி, கோழி வளர்க்கும் கோழிப் பண்ணைத் திட்டத்தின் கீழ் அதையும் போட்டு அத்தனையையும் ஒன்றாகச் சேர்க்கும்போது உள்ளபடியே அந்த உரத்தைப் பயன்படுத்துவதன் மூலம் அதிக விளைச்சலைப் பெற முடியும் என்பது என்னுடைய எண்ணம்.

கடந்த ஆண்டு 33 சென்ட் நிலத்தில் கோழி உரத்தை மட்டும் போட்டு நான் விவசாயம் செய்து பார்த்தேன். ஏறத்தாழ 28 கலம், அதாவது 60 கிலோ கொண்ட 14 மூட்டைகள் 700, 800 கிலோ அளவுக்கு அதிலே தானியம் கிடைத்தது. இதிலே அரசு அதிகமாகக் கவனம் செலுத்துகிற வகையில் விவசாயத் துறையில் இருக்கக்கூடிய அதிகாரி கள் க்ளிரிசியோ போன்ற செடிகளை வாய்க்கால் ஓரங்களில் மட்டும் நடுவதை விட்டு விட்டு முதல் போகம், இரண்டாம் போகம் பயிரிட்ட பிறகு உளுந்து போன்றவற்றைச் சாகுபடி செய்யும்போது இந்தச் செடிகளைப் பயிரிட வழி செய்ய வேண்டும். தக்கப்பூண்டு, செஸ்பேனியா ஆகியவற்றின் வேரில் அதிக நைட்ரஜன் சத்து இருக்கிறது. வெறும் யூரியாவை மட்டும் போடாமல் இவற்றைக் கலந்து போடுவதால் ஏக்க ருக்கு 50 கிலோ யூரியா உரத்திற்குப் பதிலாக 25 கிலோ போட்டாலே போதுமானது. இதனால் உரப் பற்றாக்குறையைப் பெரிய அளவு தவிர்க்க முடியும்.

தழை உரம் மட்டும் அதிகப் பலன் தராது. மாடுகளின் கோமி யத்தை அதாவது மூத்திரத்தை எடுத்து வயலுக்கு இடுவோமானால் அதிக மகசூலைப் பெற முடியும் என்பது என்னுடைய ஆராய்ச்சியின் மூலம் கண்டு பிடிக்கப்பட்ட முடிவு. அதற்குக் கால் நடை தேவை. இருக்கக்கூடிய கால்நடைப் பண்ணைகளை விவசாயப் பண்ணைகளுக்கு சற்று அருகில் வைத்து இரண்டையும் கண்காணிக்கும் அதிகாரம் டைரக்டர் ஆப் அனிமல் ஹஸ்பண்டரிக்கு இருக்க வேண்டும். அப்படி இருந்தால் பசுந் தாள் உரத்தையும், நரிப் பயிர் போன்ற உரங்களையும் கால் நடை களுக்கு சத்துணவாகத் தந்து அதன் மூலம் அதிகமான உரத்தைப் பெற முடியும். அடுத்தாற்போல் கம்போஸ்ட் உரத்தை தயார் செய்ய வழி வகை இருக்கும்.

அதைப்போல் கால் நடைத் துறையில் ஒரத்தநாடு கால் நடைப் பண்ணையைப் பார்த்திருக்கிறேன். புதுக்கோட்டை கால்நடைப் பண்ணையைப் பார்த்திருக்கிறேன். அங்கு சிந்தி மாடுகள், உயர்தர ஜாதி மாடுகள் நிறைய இருக்கின்றன. உள்ளபடியே அந்த மாடுகள் பராமரிப்புத் துறையில் அதிகக் கவனம் செலுத்த வேண்டும். அப்படிச் செலுத்தினால்தான் அந்தத் துறை நல்ல முறையில் செயல்படுவதாகக் கூற முடியும். மாட்டுக் கடைக் கட்டினால் மறு போகம் ; ஆட்டுக் கடைக் கட்டினால் அதே போகம் என்று சொல்வார்கள். முதல் போகத்தில் ஆட்டுக் கடை ; இரண்டாம் போகத்தில் மாட்டுக் கடை.

[திரு. பி. பொன் சொக்கலிங்கம்] [1974 மார்ச் 19

இரண்டு மூன்று வருஷங்களுக்கு முன்பு பாமினி உரத்தை கூட்டுறவுத் துறை மூலம் கொடுத்து சிறந்த உரம் என்று சொல்லி போடச் சொன்னால் விவசாயிகள் போட மறுத்தார்கள். ஆனால் இப்போது உரம் கிடைக்க வில்லையே என்று சொல்கிறார்கள். நிலத்தின் சக்தி குறைந்து அதிகமான ரசாயன உரத்தைப் போட வேண்டுமென்ற நிலைக்கு விவசாயிகள் வந்து விட்டார்கள். ரசாயன உரப் பற்றாக் குறையைப் போக்க முனிசிபாலிடியிலிருந்து கம்போஸ்ட் உரத்தை எக்கருக்கு 10-லிருந்து 12 டன் தயாரித்து அதற்குத் தகுந்த மண் மாற்று செய்ய வேண்டும்.

எந்தக் காற்று நிலத்திற்குப் பட்டால் நல்லது என்று கிராமத்தில் சொல்லுவார்கள். சில பேர் ஆடிக் காற்று என்பார்கள். சில பேர் ஆவணிக் காற்று என்பார்கள். சில பேர் புரட்டாசிக் காற்று என்பார்கள். மனிதனுடைய காற்று அந்த வயலில் அடிக்கடி பட வேண்டும். அதற்கு என்ன செய்ய வேண்டும். ஊக்கம் அளிக்க வேண்டும். 10 எக்கர் வைத்திருக்கக்கூடியவர்கள் நல்ல மகசூல் கண்டு முதல் செய்வார்களானால் அவர்களுக்கு ஊக்க போனஸ் தரவேண்டும். கால்நடைகளை வைத்து உரத்தைத் தயாரிப்பவர்கள் யாராக இருந்தாலும் அவர்களுக்கு மானியம் தர வேண்டும். அப்படிச் செய்தால் இதிலே அதிகமான கிராம மக்கள், விவசாயிகள் ஈடுபடுவார்கள்.

17—17—17 காம்ப்ளெக்ஸ் உரம் எக்கருக்கு மூன்று மூட்டை போட்டு ஏ. டி. டி. 27, கண்ணகி, ஐ. ஆர். 20, பொன்னி போன்ற ரகங்களை விளைவிக்க வேண்டுமென்பதற்குப் பதிலாக செஸ்பேனியா, தக்கபூண்டு, நரி போன்ற உரங்களோடு ஒரு மூட்டை காம்ப்ளெக்ஸ் உரத்தைப் போட்டு ஒரு எக்கரில் எங்கள் பகுதியில் 90 கலம் பொன்னி நெல் அறுவடை செய்திருக்கிறார்கள்.

நமக்குப் போதுமான ரசாயன உரம் மட்டும் தேவை என்பதோடு பொதுப்பணித்துறை மூலமாக லிப்ட் இரிகேஷன் மூலம் தண்ணீரைக் காலாகாலத்தில் விட வேண்டும். பருவ மழையும் உடந்தையாக இருக்க வேண்டும். பருவ மழை அதிகமாகிவிட்டால் பூச்சி வந்து விடுகிறது. அதைப் போக்க பூச்சிக் கொல்லி மருந்துகள் கொடுக்கிறார்கள். டயதான் மருந்து இருக்கிறது, வேறு வகை மருந்துகளும் இருக்கின்றன. பரிசோதனைக்கு வருகிறபோது பூச்சி மருந்துகள் தரமுள்ளவையாக இருக்கின்றன. பரிசோதனைக்குப் பிறகு அந்த மருந்துகளில் உள்ளபடியே பல கலப்படங்கள் செய்யப்படுகின்றன. அப்படிப்பட்ட முறையைத் தவிர்க்க வேண்டும்.

பூச்சி மருந்தை நம்முடைய அரசே தயார் செய்ய வேண்டும். தயார் செய்து அந்தந்தப் பகுதிகளில் இருக்கக்கூடிய அக்ரிகல்சுரல் கொடவுனில் கொடுக்க வேண்டும். முன்பு பாதி விலைக்குக் கொடுத்தோம். இப்போதும் பாதி விலைக்குக் கொடுக்க வேண்டும். கடந்த இரண்டு வருஷங்களுக்கு முன்பு சிதம்பரம் வட்டத்தில் தென்னாற்காடு மாவட்டத்தில் பூச்சி மருந்து ஆகாய விமானம் மூலம் தெளிக்கப்பட்டது. அந்த வருஷத்தில் பூச்சித்



1974 மார்ச் 19] [திரு. பி. பொன் சொக்கலிங்கம்]

தொந்தரவு குறைந்தது. பெருத்த மிராசுதார்கள் 10, 20 எக்கர் நிலத்தில் பூச்சி மருந்து தெளிக்கக் கூடிய வசதி படைத்தவர்கள். அதோடு கைத் தெளிப்பானும், விசைத் தெளிப்பானும் இருக்கின்றன.

அதனாலே விவசாயிகள் அதிகப் பலனைப் பெறுகிறார்கள். இரண்டு ஆண்டு கழித்து, இப்பொழுது எங்கள் பகுதியிலே மீண்டும் அதை வசூல் செய்ய வேண்டுமென்று அதிகாரிகள் நிர்ப்பந்தம் செய்கிறார்கள் என்று என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. அப்படிப்பட்ட நிலைமைகளை மாற்றி, விவசாயிகளுக்கு ஊக்கம் தரக்கூடிய அளவில் பொதுப்பணித் துறை இடங்களில், காட்டிலாகா இடங்களில், வேப்ப மரங்கள், பூவரச மரங்கள் இன்னும் சொல்லப் போனால் க்ளைரிசிடியா போன்ற மரங்களையும் உருவாக்கினால், அந்த மரத் தழைகளை 3 மாதத்திற்கு ஒரு முறை வெட்டி, உரமாகப் பயன்படுத்தினால், நல்ல சிறப்பான தானியம் கிடைக்கிறது.

குதிரைவால் என்ற ஒரு வகை நெல். ஆறு மாதத்தில் நல்ல விளைச்சலைத் தருகிறது. அதில் நல்ல சத்து உண்டு; நல்ல ருசியும் உண்டு. இரசாயன உரத்தைவிட, தழை உரத்தைப் போட்டு பயிர் செய்தால், சத்துணவு கிடைக்கிறது. அப்படிப்பட்ட இரசாயன உரங்கள் கிடைக்கா விட்டாலும், தழை உரங்களையும், கால்நடை உரங்களையும், இரண்டறக் கலந்து உபயோகப்படுத்த சிறப்பான ஒரு வழியைச் செய்வார்கள் என்று நான் எண்ணுகிறேன்.

அது மட்டுமல்ல, இன்னும் பல்வேறு செடி வகைகளில் இருந்து உரத்தைத் தயார் செய்யலாம். புஞ்சைப் பயிருக்கு மண் வள ஆராய்ச்சி செய்வது போல், நஞ்சைக்கும் ஆராய்ச்சி செய்யப்பட வேண்டும். அந்த நஞ்சை எப்படி இருக்கிறது என்பதை கிராமப்புறங்களிலே இருக்கிற விவசாயி மண்ணை எடுத்து சாப்பிட்டுப் பார்த்து, நடவு நடுவான் என்று சொல்வார்கள். அந்த மண்ணையும் பரிசோதிக்க வேண்டும். மாற்று மண் போட வேண்டும்.

ஊராட்சி ஒன்றியங்களுக்கு எக்கருக்கு ரூபாய் 2,000 தரப்பட்டது. அந்தப் பணம் சொந்தச் செலவுக்கு மாறிவிட்டது. அந்தப் பணம் மேடு பள்ளம் தூர்வதற்காக இருக்க வேண்டும்; அந்த மண்ணை மாற்றியமைக்க இருக்க வேண்டும்.

எலியைப் போக்க வேண்டும். எலியைப் போக்குவதற்கு எப்படி வழி வகை செய்ய வேண்டுமென்பதையும், வேளாண்மைத் துறை அலுவலாளர்கள் ஒரு மாற்று கண்டுபிடிப்பார்கள் என்று கருதுகிறேன். நாங்கள் எலியைப் பிடிக்க லைட் எடுத்துச் செல்வோம். அது இருக்கக்கூடிய வளையைத் தோண்டிப் பார்ப்போம், இருக்காது. அதற்கு மேலாக எங்காவது ஒரு மைலிலிருந்து சாரி சாரியாக வந்து, எவ்வளவு உரம் போட்டாலும் பயிர்களை நாசம் செய்துவிடுகிறது.

[திரு. பி. பொன் சொக்கலிங்கம்] [1974 மார்ச் 19

30 ஏக்கர் 15 ஏக்கர் என்று இருப்பதைவிட, ஒரு குடும்பத்திற்கு 10 ஏக்கர் இருக்குமானால், மனிதனுடைய காற்று அன்னாடம் படுமானால், உள்ளபடியே அந்தக் குடும்பத்திற்குப் போதுமான அளவுக்கு அந்த வயலிலிருந்து ஏராளமாக உற்பத்தி கிடைக்கும்.

கரும்பு உற்பத்தியைப் பற்றிச் சொன்னார்கள். கரும்பு உற்பத்தி தமிழகத்தில் சிறப்பாக இருக்கிறது. ஒரு ஏக்கர் நஞ்சையில் ஏறத்தாழ 85 டன் கரும்பை உற்பத்தி செய்ய முடியும் ஒருவன் சாதாரண தழையை உபயோகித்தால். நான் என்னுடைய 2 ஏக்கர் 8 செண்ட் நிலத்தில் முதலாண்டு புஞ்சை மடித்து தழை உரம் போட்டேன். அது அப்படியே இருந்தது. அடுத்த ஆண்டு கரும்பு பயிரிட்டேன். 85 டன் கிடைத்தது ஒரு ஏக்கருக்கு. அதை அப்படியே பெண்ணாடம் சர்க்கரை ஆலைக்கு அனுப்பினேன். அதிலே கூட, ஊட்டுப் பயிராக, நஞ்சை சாகுபடி செய்ய முடியும்.

நஞ்சை வரப்புகளிலே உளுந்து சாகுபடி செய்யலாம். உளுந்து கிடைக்கவில்லையென்றால், உடனே இந்த அரசு ராஜிநாமா செய்ய வேண்டும் என்று சொல்கிறார்கள். உளுந்துப் பயிருக்கு தென்றல் என்ற காற்றுத் தேவை. அது இல்லாமல் உளுந்து விளையாது. இந்த ஆண்டு தென்றலே அடிக்கவில்லை. 10 மூட்டை ஆகக்கூடிய நிலத்தில் 2 மூட்டைதான் இந்த ஆண்டு கிடைக்கும். தென்றல் காற்றே அடிக்க வில்லை. அப்படிப் பட்ட நிலைமை இந்த நாட்டிலே வளர்ந்து வருகிறது.

இரசாயன உரம் கிடைக்கவில்லை, உடனே முதலமைச்சர் ராஜிநாமாச் செய்ய வேண்டும்; இரசாயன உரம் கிடைக்கவில்லை, உடனே வேளாண்மைத் துறை அமைச்சர் ராஜிநாமாச் செய்ய வேண்டும், என்று சொல்கிறார்கள். உழவன் கணக்குப் பார்த்தால், உழக்குக் கூட மிஞ்சாது என்று வசனம் சொல்வார்கள். ஆனால், இந்தத் தமிழக அரசு அண்ணா அவர்களின் தலைமையின் கீழ், அதற்குப்பின் கலைஞர் அவர்களின் தலைமையின் கீழ் சிறிய விவசாயிக்களுக் கெல்லாம், 4 ஏக்கர் 5 ஏக்கர் 10 ஏக்கர் வைத்திருக்கிறவர்கள் எல்லாம் அதிகம் லாபம் பெறுகிறார்கள்.

இந்த வேளாண்மைத் துறை சிறப்பாகப் பணியாற்றி வருகிறது. இன்னும் சிறப்பாகப் பணியாற்ற வேண்டுமென்று வேளாண்மைத் துறையைக் கேட்டு, இந்த கால்நடை அபிவிருத்தி இயக்குநரும், வேளாண்மை வளர்ச்சித் துறையிலே இருக்கக் கூடிய செயலாளரும் இதில் அதிகம் கவனம் செலுத்த வேண்டுமென்று கூறி, முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, இந்த விவசாய மானியத்திலே எங்களுடைய கட்சியின் சார்பாகக் கொடுத்திருக்கிற வெட்டுத் தீர்மானத்தை ஆதரித்து ஓரிரு கருத்துக்களைக் கூற முற்படுகிறேன்.



[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1974 மார்ச் 19

சாதாரணமாக, இன்று இருக்கிற விவசாய நிலைமை வேறு, முன்பிருந்த விவசாய நிலைமை வேறு என்பதை முதலிலே நாம் உணர வேண்டியவர்களாக இருக்கிறோம். வரப்பு உயர நீர் உயரும்; நீர் உயர நெல் உயரும்; நெல் உயர குடி உயரும்; குடி உயர கோன் உயரும் என்றெல்லாம் நாம் பண்டைக் காலத்திலே படித்திருக்கிறோம். அது மட்டுமின்றி, உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம், உண்டு களித்திருப்போரை நிந்தனை செய்வோம் என்றெல்லாம் படித்திருக்கிறோம். உள்ளபடியே, உழவுத் தொழிலுக்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுத்திருக்கிறார்கள் நம் முன்னவர்கள், பெரியோர்கள், என்பதை நாம் எல்லோரும் உணர வேண்டியவர்களாக இருக்கிறோம்.

இந்த நிலைமையைப் பார்க்கும் போது நாம் எப்படி முன்னேறி இருக்கிறோம் என்பதைச் சற்று சிந்தித்துப் பார்ப்பது பொருத்தமாக இருக்கும் என்றே கருதுகிறேன். பசுமைப் புரட்சியின் காரணமாக, இந்தத் தமிழ் நாட்டிலே அதிகப்படியான உணவு உற்பத்தியைப் பெருக்கிவிட்டோம் என்று ஒருவேளை அரசாங்கத் தரப்பிலிருந்து பல காரியங்களையும் கூறுவார்கள். நம் அரசாங்கத்தாலே கொடுக்கப்பட்டிருக்கிற "பெர்ஃபார்மன்ஸ் பட்ஜெட்"டிலே ஒரு பகுதியை இங்கே படித்துக் காட்டுவதற்கு முற்படுகிறேன்.

அதிலே, "The production of foodgrains during 1972–73 was estimated to be 69·90 lakh metric tonnes. The targot level of production of all foodgrains during 1973–74 was fixed at 79 lakh tonnes, oilseeds 11·50 lakh tonnes, cotton 4 lakh bales. Foodgrain production (rice, millet and pulses) is estimated to reach 74·10 lakh metric tonnes during 1973–74. The level of production of foodgrains during 1974–75 is projected as 77 lakh tonnes, oilseeds 12·07 lakh tonnes and cotton 4·10 lakh bales", என்றிருக்கிறது. இந்த மாதிரியான புள்ளி விவரங்களை அமைச்சர் அவர்கள் இங்கே தந்திருக்கிறார்கள். இதைத் படித்துப் பார்த்தால், உடனே, புரட்சிகரமாக அல்லது வேகமாக வளர்ந்திருக்கிறோமா என்றால் இல்லை என்பதைத் திட்ட வட்டமாக இங்கு தந்திருக்கிற புள்ளி விவரத்திலிருந்து புலப்படும் என்பதை முதலிலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இன்றிருக்கிற விவசாய வளர்ச்சி வேகம் போதாது. இது சுழன்று, சுழன்று, பழைய மாதிரிதான் அச் சக்கரம் சுழன்று கொண்டிருக்கிறது.

விவசாயிகளுடைய நிலைமையைப் பற்றி நாம் ஆராயும்போது விவசாயி முற்போக்கான நிலைமையிலே இருக்கிறானா, இல்லையா, என்பதை நாம் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். நான், மாணவனாக இருந்த காலத்திலே படித்திருக்கிறேன். The Indian farmer is born in debt, lives in debt and dies in debt.

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1974 மார்ச் 19

என்று நான் இந்தியப் பொருளாதாரம் படித்த காலத்திலே, புரஃபசர் ஜார்தரன்பெரி அவர்களுடைய புத்தகத்திலே படித்திருக்கிறேன். அந்த நிலைமைதான் இன்றும் இருந்து கொண்டிருக்கிறதே தவிர, அதல்லாமல் மாற்றம் ஏற்படவில்லை. மறுமலர்ச்சி ஏற்படவில்லை. விவசாயியின் வாழ்க்கைப் பூத்துக் குலுங்க வில்லை என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

எத்தனை திட்டங்களைத் தீட்டியும், அல்லது கோடிக்கணக்கான பணத்தைப் புதைத்தும், இந்த விவசாயி, நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமும் ஆக வளர்கின்றானா என்றால் இல்லை என்ற கருத்துத்தான் இருக்கிறது. இன்றிருக்கிற உணவு நிலைமையைச் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். அதிகப் படியாக உற்பத்தி செய்யக்கூடிய நல்ல ரக விதைகளை எல்லாம் நாம் உற்பத்தி செய்கிறோம். இரசாயன உரத்தை நாம் பயன்படுத்துகிறோம் என்று சொன்னால் இதிலே கிடைக்கின்ற ஊதியம் எவ்வளவு என்பதை நாம் பார்க்க வேண்டும். ஒரு வேளை, சமுதாயத்திலே இன்றிருக்கிற முற்போக்கான விவசாயிகள் அதிகமாக பயன் பெற்றவர்களாக இருக்கலாம். **Progressive farmer and neo rich** என்று சொல்லலாம்.

அவர்கள், கையிலே, பணம் இருக்கும். ஆனால், விவசாயத் தொழிலையே நம்பிக் கொண்டிருக்கிற, பழமையைத் தான் நாங்கள் எப்பொழுதும் கையாண்டு கொண்டிருப்போம் என்று நம்புகின்ற விவசாயிகள் இன்னும் எவ்வளவு செலவழித்தாலும் போதிய வருவாய் கிடைக்கவில்லை என்ற நிலைமையிலிருக்கிறார்கள் என்பதை நான் கோடிட்டுக் காட்டக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

(மாலை 5–00)

இங்கே நம்முடைய அமைச்சர் அவர்கள் ஒரு சில புள்ளிவிவரங்களைத் தந்திருக்கிறார்கள். தழை உரம் சிறப்பானதா அல்லது ஆர்டிபிஷியல் உரம் சிறப்பானதா என்று நமக்கு விளக்கக்கூடிய வகையிலே இந்த அறிக்கையிலே ஒரு சில விவரங்களைக் கொடுத்திருக்கிறார்கள். யூரியா போன்றவற்றிலே எவ்வளவு நைட்ரஜன் கன்டென்ட் இருக்கிறது என்பதை யெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். யூரியாவிலே 45 சத வீதம், அம்மோனியம் சல்பேட்டிலே 20 சத விதமும், கிராமப் புற கம்போஸ்டிலே 0.9 சத வீதமும், நகர்ப்புற கம்போஸ்டிலே 1.2 சத வீதமும், தொழு எருவிலே 1.3 சத வீதமும் நைட்ரஜன் இருப்பதாகச் சொல்லி உரத்தினுடைய வீரியத்தைப் பற்றி எல்லாம் விவரங்களைக் கொடுத்திருக்கிறார்கள். அதைப் பார்க்கிறபோது இன்றைய தினம் உள்ள விவசாயிகள் யூரியா, அமோனியம் சல்பேட், போன்ற உரங்களைப் பயன்படுத்தினால் நல்ல முறையிலே பலன்கள் கிடைக்கு மென்றுதான் கருதுவார்கள்.

ஆனால் இந்த மாதிரி நமக்கு உரம் கிடைக்கிறதா என்று கேட்டால், இல்லை யென்பதை எல்லா விவசாயிகளும் ஒத்துக்கொள்வார்கள். உர வினியோகத்திலே பல விதமான கஷ்டங்கள் இருக்கின்றன என்பதை அமைச்சர் அவர்கள் சில விவரங்கள் மூலமாகத் தெரிவித்திருக்கிறார்கள்.



1974 மார்ச் 19] [திரு. ஆர். பொன்னப்ப நாடார்]

அவர்கள் அச்சிட்டுக் கொடுத்திருக்கின்ற, அறிக்கையில் 74 பிப்ரவரி முதல் 74 ஜூலை வரையில் நமக்கு எவ்வளவு உரம் தேவை என்பதையும் நைட்ரஜன் 1 லட்சத்து 30 ஆயிரம் மெட்ரிக் டன்னும், பாஸ்பரிக் ஆசிட் 40 ஆயிரம் மெட்ரிக் டன்னும் பொட்டாஷ் 40 ஆயிரம் மெட்ரிக் டன்னும் ஒதுக்கப்பட்ட கணக்கையெல்லாம் கொடுத்திருக்கிறார்கள்.

இந்தக் கணக்குகள் எப்படி நிர்ணயிக்கப்பட்டன என்று பார்த்தால் ஜனவரி 24, 25-ஆம் நாட்களில் ஆல்வாயிலே நடைபெற்ற ஸோனல் மாநாட்டிலே எடுக்கப்பட்ட முடிவுகளை எல்லாம் தெரிவித்திருக்கிறார்கள். இது நமக்குக் கிடைக்கப்போகிறதா இல்லையா என்பதையும் அவர்களே சொல்லியிருக்கிறார்கள். நம்முடைய தேவைக்குத் தகுந்தபடி கிடைக்கப் போவதில்லை என்ற விவரத்தையும் அவர்களே கொடுத்திருக்கிறார்கள். உர உற்பத்தி அதிகமாக இருக்கிறது என்று எல்லோரும் சொல்கிறார்கள்.

தூத்துக்குடியிலே ரசாயன உரம் உற்பத்தி செய்யப்போகிறோம், ஒன்றிரண்டு மாதங்களிலே கிடைத்துவிடும் என்று பெருமைப்பட்டுக் கொள்ளலாம். அந்த உரத் தொழிற்சாலை நாப்தா பேஸ்ட் இண்டஸ்ட்ரியாக இருப்பதால் நமக்கு வெளியிலிருந்து எவ்வளவு நாப்தா கிடைக்கும் என்பது ஒரு கேள்விக் குறியாக இருக்கிறது என்பதையும் நாம் மறந்து விடலாகாது. நமக்கு உரம் தருகின்ற தொழிற்சாலைகளிலிருந்து முழு அளவிற்குக் கிடைக்கவில்லை. முழு அளவிற்கு அங்கே உற்பத்தியாகவில்லை யென்ற உண்மையை நாம் புரிந்துகொள்ள வேண்டும். இதற்கு பொறுப்பு யார் என்று யாரையும் நான் குற்றம் கூறுவதற்காக சொல்லவில்லை.

முழு அளவிற்கு உற்பத்தி பெருகினால்தான் தென் மண்டலங்களுக்கு தேவைக்கேற்ற அளவிற்கு உரத்தைக் கொடுக்க வழிவகை பிறக்கும். மாநில அரசானாலும் சரி, மத்திய அரசானாலும் சரி உரத்திற்கு அதிக இடம் கொடுக்க வேண்டும். உரமில்லாமல் விவசாயம் செய்ய முடியாது என்பது உண்மை. உர விநியோகத்திலே உள்ள கோளாறுகளைப்பற்றிச் சிந்திப்பது சிறப்பாக இருக்கும். அரசாங்கத்திலிருந்து விவசாயிகளுக்கு அடையாள கார்டுகள் வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால், அவர்களுக்கு உரம் தரப்பட வில்லை. இருக்கின்ற உரம் எப்படி விநியோகமாகிறது என்ற விவரங்களையெல்லாம் அவர்கள் இதிலே தந்திருக்கிறார்கள். ஒரு சென்ட்ரல் பூல் இருக்கிறது, தனியார் துறையிலே எவ்வளவு கொடுக்கிறார்கள், மாநில அரசிலே எவ்வளவு கொடுக்கிறார்கள், இதற்காக ஒரு மத்திய அமைப்பு இருக்கிறது என்ற விவரங்களை யெல்லாம் கொடுத்திருக்கிறார்கள்.

இன்றைக்கு இருக்கக் கூடிய முறை சரியான வகையிலே இயங்கவில்லை என்ற கருத்தை அமைச்சர் அவர்கள் பல இடங்களிலே எடுத்துக் கூறியிருக்கிறார்கள். இன்று இருக்கிற முறையிலே மாற்றம் செய்தால் இன்னும் அதிகமான அதிகாரங்கள் குவியலாக இருக்கும். **There would be excessive centralisation and bureaucracy will triumph once again** என்று சொல்லக்கூடிய அளவிலே அதிகாரத்தைக்

குவியலாக வைத்தால் விவசாயிகளுக்குக் கிடைப்பதற்கு ஏதுவாக இல்லை, முகாந்திரம் இல்லை. உர விநியோகத்தைப்பற்றி இலாகாவிலிருந்து பரிசீலனை செய்தார்கள். இன்றைக்கு இருக்கின்ற முறை பொருத்தமா இல்லையா என்று பரிசீலனை செய்து ரெவின்யூ போர்டிலே இருக்கிற சீனியர் போர்டு மெம்பர் தன்னுடைய கருத்தை அரசாங்கத்திற்குத் தெரிவித்திருக்கிறார்கள். முன்பு இருந்த முறை சிறப்பாக இருக்கிறது, இதை மாற்றினால் கஷ்டங்களும் துன்பங்களும் ஏற்படுமென்று கூறி இருக்கிறார்கள் என்பதை இந்த மாமன்றத்தின் மூலமாக நான் தங்களுக்கும் அமைச்சர் அவர்களுக்கும் தெரிவித்துக் கொள்கிறேன். ஒருவேளை அதிகாரம் அத்தனையையும் கையிலே வைத்துக்கொண்டால் விநியோகம் செய்தால் நிச்சயமாக நல்லமுறையிலே இருக்கும் என்று நினைத்தால் நிச்சயமாக விவசாயிகளுக்கு அதன் மூலம் கிடைக்குமென்று நம்பமுடியாது.

கடைசி நிலையிலே உள்ள விவசாயிகளுக்கு உரம் கிடைக்க வழிவகை செய்ய வேண்டும். ஒருவேளை மத்திய அரசாங்கத்தின் சட்டங்களினால் மாநில அரசு அதிகாரங்களைப் பெறவில்லை என்ற காரணத்தினால் இதை நடத்துவதற்கு சங்கடம் இருக்கிறது என்று சொன்னாலும் இருக்கின்ற அதிகாரத்தை நல்லமுறையிலே பயன்படுத்தி விநியோகத்தைச் சீர்படுத்துவதற்கு அரசாங்கம் முற்பட வேண்டும். எதற்கெடுத்தாலும் நமக்கு அதிகாரமில்லையே என்று நம்முடைய பொறுப்பினைத் தட்டிக் கழிக்கக் கூடாது.

கார்டுகள் வழங்குவதிலே பல இடங்களிலே பல ஊழல்கள் இருந்ததாகப் புகார்கள் எங்களுக்கு வந்திருக்கின்றன. உதாரணமாக ஒன்றைக் கூற விரும்புகிறேன். திருநெல்வேலி ஜில்லாவிலிருந்து ஒரு புகார் வந்தது. கே. கேசவன் ஆறுமுகநேரி அவர் அச்சிட்டு எங்களிடத்திலே புகார் கொடுத்திருக்கிறார்கள். நான் அதற்குள் இருக்கின்ற விவரங்களுக்குச் செல்லவில்லை யென்றாலும் அந்தப் புகார்களை இலாகாவிலிருந்து உண்மையா இல்லையா என்பதை விசாரிக்க வேண்டும். அவர் நெல்லை மாவட்ட காங்கிரஸ் கட்சியின் காரியதரிசியாக இருந்திருக்கிறார். காயாமொழி என்ற ஊரிலே கார்டுகள் வழங்கப்பட்டதிலே முறைகேடுகள் இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். நிச்சயமாக இலாகாவிலிருந்து வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று . . . . . . . . . . .

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : ஆன் எ பாயின்ட் ஆப் எலுசிடேஷன் சார், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்த துண்டு அறிக்கையைப் பற்றி அண்ணா தி.மு.க. உறுப்பினர் திரு. எட்மெண்ட் அவர்கள் இங்கே பல நாட்களுக்கு முன்னாலே எடுத்துச் சொன்னார்கள். அவர்கள் சொன்னது, திருச்செந்தூர் பகுதியிலே உள்ள காயாமொழி என்ற ஊரிலே நஞ்சை நிலமே கிடையாது. இருந்தாலுங்கூட உரத்திற்காக கார்டுகள் கொடுக்கப்பட்டன என்று சொன்னார்கள். அதைத் தான் இவர்களும் கேசவன் என்ற பெயரிலே போடப்பட்டதாகச் சொல்கிறார்கள் என்று நினைக்கிறேன். அந்தச் செய்தியை திரு எட்மண்ட் அவர்கள் அன்றைக்குச் சொன்னார்கள். நெல்லை மாவட்ட அதிகாரிகளைக் கேட்டதிலே 1876-ஆம் வருடத்திலிருந்து காயாமொழி என்ற





கிராமத்திலே ஏறத்தாழ 200 ஏக்கர் நிலம் ரிஜிஸ்டார்டு வெட் என்று இருக்கிறது, அதற்கு மட்டும்தான் கார்டு கொடுக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

திரு. எட்மண்ட் அவர்கள் சொன்னார்கள் காயாமொழியிலே நஞ்சை நிலமே இல்லையென்று, எங்களுக்கு வந்த தகவல் 200 ஏக்கர் நஞ்சை நிலம் இருக்கிறது என்றும் அதற்குக் கார்டு கொடுக்கப்பட்டது என்றும் சொல்லப்பட்டது, ஒருவேளை அவர்களுக்கு அதிலே சந்தேகம் இருக்குமானால் அடுத்தமுறை நான் அங்கே செல்லும்பொழுது நீங்களும் கூட வாருங்கள் இருக்கிறதா இல்லையா என்று பார்க்கலாம் என்றுகூட முதலமைச்சர் சொன்னார்கள். அதை திரு. எட்மண்ட் அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. காயமொழி எனக்குத் தெரியாத ஊர் அல்ல. திரு எட்மண்ட் அவர்களுடைய தொகுதியைச் சேர்ந்த ஊர் என்றாலும் எனக்குத் தெரியும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னது முற்றிலும் உண்மையானது. நானும் அதிகாரிகளிடமிருந்து கேட்டுத் தெரிந்துகொண்டேன். அங்கேயுள்ள 200 ஏக்கர் ரிஜிஸ்டார்டு வெட் லேண்ட்க்கு மட்டும் தான் கார்டு கொடுக்கப்பட்டிருக்கிறது. புஞ்சை நிலத்திற்குக் கொடுக்கப்படவில்லை என்பதைத் தெரிந்துகொண்டேன். அதற்கு மாறாக திரு. எட்மண்ட் அவர்களுடன் நீங்களும் சேர்ந்து கொண்டு நஞ்சை நிலம் இல்லை என்று சொல்வதாக இருந்தால் நான் உங்களை எங்கே சந்திப்பது என்று தெரியவில்லை.

அதோடு சேர்ந்து சொல்ல வேண்டாம். இருநூற்றுச் சொச்சம் ஏக்கரா நஞ்சை நிலம் இருப்பதாகச் சொல்கிறார்கள்.

அணைக்கட்டைப் பற்றிச் சொல்லும்பொழுதுகூட வெள்ளைக்காரன் காலத்திலிருந்து, பட்லர் என்ற வெள்ளைக்காரன் காலத்தில் கட்டியதாகச் சொல்கிறார்கள். எனவே, அந்தக் காலத்திலிருந்து இந்தக் காலம் வரை இருக்கிறது. எனவே, மாண்புமிகு முதலமைச்சரவர்கள் சொன்னதை எதிர்க் கட்சித் தலைவரவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : காயாமொழி என்ற ஊர் எனக்கும் நன்றாகத் தெரியும். மாண்புமிகு அமைச்சரவர்களின் சொந்த ஊர் என்பதும் எனக்குத் தெரியும். நான் வேண்டுமென்றே அவர்களைக் குற்றம் சாட்ட வேண்டுமென்பதற்காகச் சொல்லவில்லை. இப்படிப் புகார்கள் வந்திருக்கின்றன. அதைப்பற்றி விசாரிக்க வேண்டும், இரண்டு கார்டுகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. பனை மரங்களுக்கும், உடைமரங்களுக்கும் கொடுக்கப்பட்டிருக்கின்றது என்று பெயர் முதலிய விவரங்களையெல்லாம் கொடுத்திருக்கிறார்கள். அப்படியில்லையென்றால் நான் ஏற்றுக்கொள்வதற்கு எப்பொழுதும் தயாராக இருக்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: மாண்புமிகு முதலமைச்சரவர்கள் தீர விசாரித்து, நன்கு தெரிந்து கொண்டு எந்தப் பனைமரங்களுக்கும், உடைமரங்களுக்கும் கொடுக்கவில்லை என்று சொன்னதை ஏற்றுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, இன்னொரு விஷயம் கூற விரும்புகிறேன். நான் எட்மண்ட் கட்சியோடு சேர்வதாக இல்லை. நீங்களெல்லாம் ஒரே இடத்தைச் சேர்ந்தவர்கள். ஆகையால் நீங்கள் ஒரு வேளை சேரலாம். நான் சேர்வதற்கு இப்பொழுது எந்த ஆதாரமும் இல்லை என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். கட்சிமாறும் தன்மை சாதாரணமாக எங்களைப் போன்றவர்களுக் கெல்லாம் இல்லை என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். பல கட்சிகளிலிருந்து எனக்குப் பழக்கம் இல்லை. நாங்களெல்லாம் ஒரே கட்சியிலிருந்து அந்தக் காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறோம்.

திரு. கோவை செழியன் : பேரவைத் தலைவரவர்களே, அமைச்சர்மீது உள்ள கோபத்திலே மாண்புமிகு உறுப்பினரவர்கள் எங்களைக் குறை சொல்வதாகத் தெரிகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களை யார் சொன்னது ?

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : ஒருவேளை நீங்கள் வேண்டுமானால் சேர்த்துக் கொள்ளுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : யாரை ?

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : அடுத்தபடியாக, இந்தப் பூச்சிக் கொல்லி மருந்தைப் பற்றி ஓரிரு கருத்துக்களைக் கூற வேண்டுமென்று விரும்புகிறேன். பூச்சிக்கொல்லி மருந்துகள் தரமான முறைகளில் கிடைக்கவில்லை என்றும், டி.டி.டி. பி.எச்.ஸி. போன்றவைகள் காலா காலங்களில் கிடைக்கவில்லை என்று விவசாயிகள் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். கொடுக்கின்ற இந்தப் பூச்சிக் கொல்லி மருந்துகளெல்லாம் பயனற்றதாக இருக்கிறது, ஏனென்றால் நீண்டகாலமாக ஆகிவிட்டதால் வீரியத்தை இழக்கும் அளவில் இருக்கிறது என்ற புகார் இருக்கிறது. அதுமட்டுமல்லாமல், "அடல்ட்ரேஷன்" ஏற்பட்டிருப்பதால் இந்த மருந்துகள் சரியான முறையில் அதற்குப் பிரயோஜனமாக இல்லை என்ற கருத்தையும் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். இது கிடைப்பதற்கு வழிவகைகள் செய்திருக்கின்றோம் என்று அமைச்சரவர்கள் தன்னுடைய உரையிலே கூறியிருக்கிறார்கள். உண்மையிலே இந்தப் பூச்சிக் கொல்லி மருந்துகள் காலாகாலங்களில் எல்லா விவசாயிகளுக்கும் கிடைக்கச் செய்ய வேண்டும். முன்பு அரசில் ஒரு முறையை வைத்திருந்தார்கள். ஏரியல் ஸ்ப்ரேயிங் செய்ய வேண்டுமென்ற திட்டம் இருந்தது. ஆனால் ஒருசில காரணங்களால் அந்த ஏரியல் ஸ்ப்ரேயிங் திட்டம் கைவிடப்பட்டு விட்டதை இந்த மன்றம் அறியும். அதைப்பற்றி நான் எடுத்துக்கூற வேண்டிய தேவை இல்லை என்று கருதுகிறேன்.





இப்பொழுது இந்த "பெஸ்டிசைட்ஸ்" எல்லாம் தயாரிப்பதற்கான கருவிகள் தளவாடங்கள் போதிய அளவில் விவசாயிகளுக்குக் குறைந்த விலையில் கொடுக்கப்பட வேண்டும். அதற்கான ஏற்பாடுகளை இப்பொழுதே செய்ய வேண்டுமென்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

உர விநியோகம் செய்வதற்காக 8 இன்ஸ்பெக்டர்களை, அதாவது ஆய்வாளர்களை நியமனம் செய்வதாக அமைச்சரவர்கள் தந்திருக்கின்ற அறிக்கையிலே இருக்கிறது. அதை இன்னும் அதிகமாக ஆக்கி, பூச்சிக் கொல்லி மருந்து மட்டுமல்லாமல், இரசாயன உர விநியோகத்தைச் சரியான முறையில் பராமரித்து, தரமான உரம் கிடைக்கவும் வழிவகைகள் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, வேறு சில சிறப்பான திட்டங்களைப்பற்றியெல்லாம் இங்கே அமைச்சரவர்கள் கூறியிருக்கிறார்கள். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால் தென்னை வளர்ப்புக்காக மதுரை ஜில்லாவிலும், கன்னியாகுமரி ஜில்லாவிலும் ஒரு திட்டம் இருப்பதாக, "அக்ரிகல்சுரல் ரீபைனான்ஸ் கார்ப்பரேஷன்" திட்டம் இருப்பதாக நான் அறிகிறேன். இந்தத் திட்டத்திற்காக என்னென்ன முறையிலே அவர்கள் கடன் பெறுவது என்பதற்கான வழிவகைகள் இருக்கும் என்று எதிர்பார்த்தேன். ஆனால் அந்த விவரங்கள் இதில் இல்லை. தென்னை வளர்ப்பதில் கன்னியாகுமரி ஜில்லாவில் உள்ள விவசாயிகள் இன்றைக்கு அதிக அக்கறை கொண்டவர்களாக இருக்கிறார்கள், ஏனென்றால் தேங்காயின் விலை கிடுகிடு என்று உயர்ந்திருப்பதால், 3,500 எக்கர்களுக்கு மட்டும் ஒரு திட்டம் தீட்டியிருப்பது போதாது. அந்த ஜில்லாவை முழு அளவில் கொண்டதாக இன்னும் அதிக பணத்தை ஒதுக்கி விவசாயிகளுக்கு நீண்டக் காலக் கடன்கள், வட்டி குறைந்த கடன்கள் கொடுக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, இந்த கொக்கோ பயிரிடுவதைப்பற்றி சிறப்பாகக் கூறியிருக்கிறார்கள். கொக்கோவை பல விவசாயிகள் எங்கள் மாவட்டத்திலே பயிரிட்டிருக்கிறார்கள். ஆனால் கொக்கோவிற்கு சரியான விலை இல்லை என்பதால் அந்த விவசாயிகள் இப்பொழுது அதைக் கைவிட வேண்டிய நிலைமை இருக்கிறது. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால், இந்த மன்றத்திலே மாண்புமிகு அங்கத்தினராக இருக்கின்ற திரு. ஜேம்ஸ் அவர்கள் அவருடைய தோட்டத்திலே இந்த கொக்கோவை பயிரிடுகிறார்கள். ஆனால் அதற்குக் கிடைக்கும் விலை மிகவும் குறைவாக இருப்பதால் அவர்கள் அந்தச் செடிகளையெல்லாம் வெட்டி அழித்து விடுகின்ற நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. அதற்குப் போதிய மார்க்கெட் இல்லை என்பதால் பல விவசாயிகள் அதைக் கைவிட்டிருக்கிறார்கள் என்பதையும் நான் இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

இன்னொரு விவரத்தையும் நான் இந்த மன்றத்திலே கூற விரும்புகிறேன். இந்தத் திட்டத்திலே, under 'International Development Association Programme' பக்கம் 22-ல் ஆங்கிலத்தில் கொடுக்கப்பட்டிருக்கும் இந்த வெளியீட்டில் ஒருசில விவரங்களைத் தெரிவித்திருக்கிறார்கள்.

For 1974–75, schemes, for Land Levelling in Chittar-Pattanamkal Area of Kanyakumari district to cover 3000 acres of land at an estimated cost of Rs. 45 lakhs. என்றும்

Land Drainage in Kumbakonam and Thanjavur taluks in Thanjavur district covering 27,000 acres at an estimated cost of Rs. 127·58 lakhs to be implemented with International Development Association Loan என்றும் கூறியிருக்கிறார்கள்.

இந்த நிலத்தை லெவல் செய்வதிலே நானும் ஒரு விவசாயி என்பதால் ஒரு சில விவரங்களை இந்த மன்றத்திற்குக் கொடுப்பதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். அரசாங்கத்திலிருந்து வாடகைக்கு புல்டோசர்களெல்லாம் தந்திருக்கிறார்கள். அந்த வாடகை இன்றைக்கு அதிகமாக இருக்கிறது. லெவல் செய்வதற்கு முன்பு இருந்ததைவிட ஒரு மணிக்கு வாங்குகின்ற வாடகை இப்பொழுது அதிகமாக இருக்கிறது. ஒருவேளை சொல்லலாம், இன்றைக்குள்ள ஆயில் போன்ற பொருள்களின் விலை அதிகமாகக் கூடியிருப்பதால் இதைக் கூட்ட வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்று சொல்வார்கள்.

இதேமாதிரி பம்பு செட்டுகளுக்கு என்ன செய்யப் போகிறோம் என்பதைச் சற்றுச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இப்பொழுதிருக்கும் எண்ணெய் விலையில் பம்பு செட்டுகளை எப்படி ஓட்டுவது ? மின்சாரம் இல்லாத இடங்களில் ஆயில் எஞ்சின் பம்பு செட்டுகளை வைத்திருக்கிறார்கள். அவர்களுடைய கதி என்ன ?

அண்மையிலே விவசாய அமைச்சரவர்கள், "ஆர்கானிக் கெமிஸ்ட்ரி" என்ற பெரிய புத்தகத்தைப் படித்துக் கொண்டிருந்ததைத் நான் பார்த்துக் கொண்டிருந்தேன். அவர்கள் சாராயத்தால் இந்த பம்பு செட்டுகளை ஓட்ட முடியும் என்று வெளியிலேயும், மேடைகளிலேயும் பேசியிருக்கிறார்கள். அதற்கு ஏதாவது புதிய திட்டம் வைத்திருப்பார்கள் என்று நான் எதிர்பார்த்தேன். ஆனால் அதுபற்றி எதையும் காணவில்லை. சாராயத்தால் இந்த பம்பு செட்டுகளை ஓட்டப் போகிறார்களா ? அல்லது இந்த விவசாயிகள் அந்தச் சாராயத்தால் ஓடப் போகிறார்களா என்பது தெரியவில்லை. இம்மாதிரி பல சீரிய கருத்துக்கள் இருக்கின்றன. அதைப் பற்றிய விளக்கம் தேவை என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்தப்படியாக, இந்தக் கால்நடை வளர்ப்பைப்பற்றி ஒருசில வார்த்தைகள் கூற வேண்டுமென்று நினைக்கிறேன். கால்நடை வளர்ப்புக்கு இன்றையதினம் அதற்குப் போதிய ஊக்கமும், ஆக்கமும் அளிக்கப்படவில்லை என்ற முறையில்தான் இருக்கிறது. மத்திய அரசாங்கத்திலிருந்து அதிகமான பணம் நமக்குக் கிடைத்தும் இது சரியான முறையில் இயங்க நாம் போதிய ஊக்கம் காட்டவில்லை என்ற குற்றச்சாட்டை நான் கூறுவதற்குக் கடமைபட்டவனாக இருக்கிறேன். மதுரையிலே நல்ல தரமான





கால்நடைகளை உண்டாக்குவதில் ஒருசில திட்டங்கள் அரசாங்கத்தில் இருந்திருக்கிறது. அதை விரிவு படுத்த வேண்டும். விரைவுத் திட்டமாகவும், முனைப்புத் திட்டமாகவும் எல்லா ஜில்லாக்களிலும் அதை விஸ்தரிக்க வேண்டுமென்று சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

உதாரணமாக, ஜெர்ஸி, ப்ரீஷியன் போன்ற பொலி காளைகளின் ஸெமனை, ப்ரோஸன் செமனை, கிராமப் பகுதிகளுக்கு கொண்டு செல்ல வழிவகை செய்ய வேண்டும். கேரளத்தில் இந்தத் திட்டம் சிரோடும் சிறப்போடு நடந்து வருகிறது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் நான் தெரிவித்துக் கொள்கிறேன். எங்கள் பகுதியில் உள்ளவர்கள் கேரளத்திருக்குச் சென்று, அங்கு இந்த ப்ரோஸன் ஸெமன் கிடைப்பதால் அங்கு சென்று அதை எடுத்து வருகிற ஒருநிலையும் இருக்கிறது. ஆகவே அதே மாதிரியான சீரான திட்டங்களை இங்கு அமல்படுத்துவதற்கு அரசாங்கம் வேண்டிய வழிவகைகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, என் தொகுதியைப் பொறுத்தவரையில் ஒரு கோழிப் பண்ணை இருக்கிறது. மிஞ்சரை யூனியனில் கொல்லால் என்ற இடத்தில் அந்தப் பண்ணை இருக்கிறது. அந்தக் கோழிப்பண்ணையின் சிறப்பு என்னவென்றால் அது கோழி இல்லாத கோழிப்பண்ணையாக இருக்கிறது. அதுதான் ஒரு சிறப்பான அம்சமாக இருக்கிறது. ஆயிரக்கணக்கான ரூபாய் செலவு செய்து நல்ல அழகான கட்டிடம் கட்டி ஒரு கோழிக் குஞ்சுகூட இதுவரையில் அந்த எங்கள் கோழி வளர்ப்பு சென்டரில் போடவில்லை. இம்மாதிரியான இடங்களையாவது இந்தத் திட்டத்தில் உடனடியாக விரிவுபடுத்துவதற்கு அரசாங்கம் போதுமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

கோழி வளர்ச்சிக் கழகம் என்று ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அது சீராக நடக்கிறது என்றும் வங்கிகளில் இருந்து கடன் கொடுக்கிறார்கள் என்றெல்லாம் இங்கு எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் உண்மையில் அந்தக் கோழி வளர்ப்பினால் மக்களுக்கு அதிகம் பிரயோசனம் ஏற்பட்டிருக்கிறதா என்பதைச் சற்று அமைதியான முறையில் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இறைச்சித் தொழில் கழகம் என்ற ஒரு திட்டத்தை இந்தத் திட்டத்தில் போட்டு அதற்கு ரூபாய் 62·2 லட்சத்திற்கான ஒரு திட்டத்தை உருவாக்குவதாக இந்த அறிக்கையில் கூறியிருக்கிறார்கள். உள்ளபடியே இந்த இறைச்சி தொழில் கழகம் இன்று தமிழ்நாட்டில் இருக்கிற இறைச்சியை மேல்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கு வேண்டிய திட்டங்களுக்கு வழிவகை செய்தால் பொருத்தமாக இருக்கும். இங்கு அதிகப்படியான ஆடுகள் இருக்கின்றன. அதை நல்லமுறையில் டின்ட் மீட்டாக மேல்நாடுகளுக்கு அனுப்பினால் பொருத்தமாக இருக்கும்.

இன்னொரு விஷயம். நான் ஒரு வெட்டுத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன். எங்கள் நாகர்கோவிலில் ஒரு ஆஸ்பத்திரி இருக்கிறது. அது தான் தலைமை ஆஸ்பத்திரியாக, இந்தக் கால்நடை வளர்ப்பு தலைமை ஆஸ்பத்திரியாக இருக்கிறது. அது திருவிதாங்கூர் மகாராஜா காலத்தில் கட்டிய ஒரு பழைய கட்டடத்தில் இருக்கிறது. அதில் ஒரு சில பகுதிகள் எல்லாம் பழுதடைந்திருக்கிறது. மூன்று நான்கு ஆண்டுகளுக்கு முன்பு எஸ்டிமேட்ஸ் கமிட்டி அங்கு வந்து பார்த்தபோது அந்தக் கட்டடத்தை உடனடியாகப் பிரித்தெடுக்க வேண்டும் என்று ஆலோசனை கூறினார்கள். ஆனால் இதுகாறும் அந்தக் கட்டடத்தைப் பிரிக்கவில்லை. புதுக் கட்டடம் கட்டவும் இல்லை. அது ஒரு முதல்தர ஆஸ்பத்திரியாக அங்கு செயல்படவில்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நிச்சயமாக மற்ற மாவட்டங்களில் இருக்கிற தலைமை மருத்துவமனைகளைப் போல் இந்த மாவட்டத்திலிருக்கிற இந்தத் தலைமை மருத்துவ மனையையும் விஸ்தரிக்க வேண்டிய பொறுப்பும் கடமையும் அரசாங்கத்தைச் சார்ந்தது என்பதை வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

அதிலும் குறிப்பாக, இன்னொரு விதி இந்த இலாகாவில் இருந்து பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அங்கு பணியாற்றுகிற டாக்டர்கள் வெளியே செல்லக் கூடாது, வெளியே மாடுகளுக்கு நோய் ஏற்பட்டால் அவைகளைப் போய் பார்க்கக் கூடாது என்ற ஒரு உத்திரவை அரசாங்கம் பிறப்பித்திருக்கிறது. அந்த உத்தரவால் பல கஷ்டங்கள் ஏற்படுகின்றன. ஒரு மாட்டுக்கு நோய் ஏற்பட்டு அதை இந்த மருத்துவ மனைக்கு கொண்டு போய்ச் சேர்ப்பிப்பது கஷ்டமாக இருக்கிற நிலை ஏற்படும்போது என்ன செய்வது? ஆதலால் இந்த விதியை தளர்த்த வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் நோய்வாய்ப்பட்ட மாட்டினை ரோடு வசதிகள் இல்லாத பகுதிகள் வழி மருத்துவ மனைக்கு எடுத்துச் செல்வது என்பது கடினமான காரியமாகும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் எடுத்துக் கூற விரும்புகிறேன்.

பொதுவாக இந்த இலாகாவைப் பார்க்கிறபோது, இந்த இலாகாவில் ஏதோ புரட்சிகரமான மாற்றங்களை அமைச்சர் அவர்கள் இங்கு கொண்டு வருவார்கள் என்று நான் எதிர்பார்த்தேன். ஆனால் புரட்சிகரமான எந்த மாற்றத்தையும்—நான் இந்த அறிக்கையை துருவித் துருவித் பார்த்தேன்—இந்த அறிக்கையில் காணவில்லை.

அமைச்சர் அவர்கள் வேளாண்மையில் பசுமைப் புரட்சி ஏற்பட்டு விட்டது, அதே மாதிரி வெண்மைப் புரட்சி ஏற்பட்டு விட்டது என்றெல்லாம் பலமுறை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். வெண்மைப் புரட்சி வேறொரு இலாகாவோடு இணைந்திருக்கிறது என்பதால் வெண்மைப் புரட்சி பற்றி நான் இங்கு கோடிட்டுக் காட்ட வேண்டிய தேவை இல்லை.

இந்த இலாக்கா பணியாற்றுகிற பலயிடங்களில் மண் வளப் பாதுகாப்பிற்குத் தேவையான கருவிகள் இல்லை. ஸாயில் அனலிஸிஸ்-க்கு வேண்டிய பண்டங்கள் இல்லை என்ற ஒரு குறைபாடு பல பகுதிகளிலும் இருக்கிறது.





இன்று ட்ராக்டர்கள் போன்ற கருவிகளையெல்லாம் பழுது பார்ப்பதற்கும் அதற்கு ஸ்பேர் பார்ட்ஸ் வாங்குவதற்கும் பல கஷ்டங்கள் இருக்கின்றன என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

கடைசியாக, கரும்பு விவசாயம் பற்றி ஒரு வார்த்தை கூறி என் உரையை முடித்துக் கொள்ளலாம் என்று நினைக்கிறேன். கரும்பு விவசாயம் பற்றி எனக்கு முன்பு பேசிய ஆளும் கட்சி உறுப்பினர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பல நல்ல யோசனைகளை எல்லாம் இங்கு தந்தார்கள். கரும்பு விவசாயிகள் எல்லாம் எப்படி பாதிக்கப்பட்டிருக்கிறார்கள், ஒரு டன்னுக்கு ரூபாய் 95 என்று விலை நிர்ணயம் செய்தது நியாயம் அல்ல, பொருத்தமல்ல, யு. பி., பஞ்சாப், ஹரியானா போன்ற மாநிலங்களில் அதிசப்படியான பணம் கொடுக்கிறார்கள் என்ற விவரங்களையெல்லாம் எடுத்துக் கூறினார்கள். இந்த மாதிரி நாமும் செய்யவேண்டும்.

இங்கு கரும்பு விவசாயிகள் தங்களுக்குக் கிடைக்கவேண்டிய வருவாயை இழக்க வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். அதிலே கிடைக்கிற ரிட்டேர்ன் அடிப்படையில் விலை நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. அதில் இன்று ஒரு சில மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன, என்றெல்லாம் கூறியிருக்கிறார்கள். இந்த அறிக்கையில், உண்மையில் கரும்பு விவசாயம் செய்கிற விவசாயிகளுக்கு நன்மை பயக்கக்கூடிய அளவில் ரூபாய் 125 என்றளவில் குறைந்தபட்சம் அவர்களுக்குக் கொடுத்தால்தான் அவர்களுக்குக் கட்டுபடியாகும் என்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

இன்றிருக்கிற விவசாயக் கூலியானாலும் சரி, உரத்தின் விலையானாலும் சரி, மற்ற வகைகளிலும் இந்த விவசாயத்திற்கு அதிகப்படியான செலவு ஏற்படுகிற காரணத்தால் அந்த விவசாயத்தை ஊக்குவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு என் வார்த்தைகளை இத்துடன் முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவர் அவர்களே, இந்த மானியங்களின்மீது பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் மிக நல்ல கருத்துக்களையெல்லாம் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அந்தக் கருத்துக்களை எடுத்துச் சொன்னதற்கு நான் என் நன்றியை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் கருத்துக்கு மட்டும்தான் பதில் சொல்லப்போகிறேனே தவிர நேரடித் தாக்குதல்களுக்கு பதில் சொல்லப் போவதில்லை. ஏனென்றால் நான் பார்த்திருக்கிறேன். முன்னால் புட்பால் விளையாடுவார்கள். அப்போது தோற்றுப் போகிற கட்சி பந்தை விட்டு விட்டு ஆளை விளையாடுவார்கள். அந்த மாதிரி ஆளை விளையாடுபவர்களாக இருந்தால் அப்படிப் பட்ட காரியங்களுக்கு நான் பதில் சொல்லத் தேவையில்லை. கருத்துக்களுக்கு பதில் சொல்கிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தோற்றுப் போகிற கட்சி இப்போது எந்தக் கட்சி என்பதை மக்கள் நிரூபித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆதலால் நீங்கள் சற்று ஜாக்கிரதையோடு பேசுவது நலமாக இருக்கும் என்பது என்னுடைய கருத்து.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இன்னும் திசை திருப்பப் பார்க்கிறீர்கள். யு. பி. யில் ஐந்து துணைத் தேர்தல்களில் தோற்றுப் போன கட்சி புதுச்சேரியில் வெற்றி பெற்றது. தேர்தல்களில் தோற்றுப் போவதும் வெற்றி பெறுவதும் காற்று அந்தச் சமயத்தில் எந்தப் பக்கத்தில் அடிக்கிறது என்பதைப் பொறுத்தது. ஆகவே, திசை திருப்பி விட வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். கருத்துக்களுக்கு மட்டும் பதில் சொல்கிறேன்.

பொதுவாக, எல்லா உறுப்பினர்களும் எடுத்துக் சொன்ன கருத்து உரம் பற்றியதாகும். இன்று உரத்தைப் பொறுத்த வரையில் ஒரு மிக நெருக்கடியான நிலைமை தமிழகத்தில் மட்டுமல்ல, அகில இந்தியாவிலும் இருந்து கொண்டிருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது.

உரம் போதுமான அளவிற்கு இருந்தால்தான் விளைச்சல் உரமாக இருக்கும். ஆகையால் இந்தத் தட்டுப்பாட்டை எப்படியாவது நாம் சமாளித்தாக வேண்டிய நிலையில் இருக்கிறோம்.

முதலில் அவர்கள் சொன்னார்கள். உரம் கள்ளச் சந்தையில் விற்கப் படுகிறது என்று சொன்னார்கள். ரூபாய் 55-க்கு விற்கப்பட வேண்டிய சில உரம் ரூபாய் 150, ரூபாய் 200-க்குக்கூட விற்கப்படுகிறது என்று சொன்னார்கள். அடிப்படையில் பார்க்க வேண்டியது தமிழகத்திற்குக் கிடைக்கவேண்டிய உரம் அல்லது தேவையான, உரம் போதுமான அளவிற்குக் கிடைக்கவில்லை.

(மாலை 5-30)

நான் முதலிலேயே சொன்னேன். தமிழகம் மட்டுமின்றி, இந்தியா மட்டுமின்றி, உலக நாடுகள் அனைத்திலும் இரசாயன உரப் பற்றுக்குறை இருக்கிறது என்று நான் சுட்டிக் காட்டினால் உங்களுக்கு மன நிறைவு ஏற்படாது என்பதை நான் தெரிந்து கொண்டே பேசுகிறேன். தமிழ் நாட்டுக்கு மட்டுமல்ல இந்த உரப்பற்றுக்குறை, பக்கத்து ஆந்திர மாநிலத்தில் இல்லையா, அல்லது கேரளத்தில் இல்லையா, வேறு எந்த மாநிலத்தில்தான் இல்லை என்று நான் கேட்டுவிட்டு அதை அப்படியே விட்டுவிட முடியும். ஆனால் நீங்கள் போகும்போது, இந்த மன்றத்தின் கூட்டம் முடிந்து நீங்கள் போகும்போது கேள்வியைத்தான் கேட்டார்; பதில் சொல்லவில்லை என்று சொல்வீர்கள். ஆகையால் நிலைமைகள் என்ன என்பதைத் தெரிந்துகொண்டு மாண்புமிகு உறுப்பினர்கள் ஒத்துழைப்பைப் பெரிதும் எதிர்பார்க்கிறேன் இயன்றவரையில் சமாளிப்பதற்கு



நமக்குக் கிடைக்கக்கூடிய இரசாயன உரத்தில் அளவு மிகவும் குறைவாகத்தான் இருக்கிறது. அதைச் சீரான முறையிலே விநியோகம் செய்ய வேண்டும். உரம் குறைவாகத்தான் கிடைக்கிறது என்பதற்கான புள்ளி விபரங்களை ஏற்கெனவே எடுத்துச் சொல்லியிருக்கிறேன். முதலிலே மத்திய அரசு கொடுப்போம் என்று சொன்னது எவ்வளவு; பிறகு அலாட்மெண்ட் செய்ததாகச் சொன்னது எவ்வளவு; அதன் பிறகு நமக்குக் கிடைத்தது எவ்வளவு என்று பார்க்கும்போது மாண்புமிகு உறுப்பினர்களுக்கு இருக்கின்ற நிலைமைகள் புரியும் என்று நம்புகிறேன்.

ஆகஸ்டு 1973-லிருந்து ஜனவரி 1974-வரையில்—இந்த பருவ காலத்தை சம்பா என்று சொல்லலாம்; ராபி என்று சொல்லலாம்—எசன்ஷியல் கமாடிட்டீஸ் ஆக்டின் கீழ் பெர்டிலைசர்ஸ் கண்ட்ரோல் ஆர்டர் என்று ஒரு ஆர்டரை பாஸ் செய்திருக்கிறார்கள். அவர்கள்தான் உரம் எவ்வளவு என்று நிச்சயிக்க முடியும்; அவர்கள்தான் உரத்தை இன்ன விலைக்கு விற்க வேண்டும் என்று சொல்ல முடியும்; கட்டுப்படுத்த முடியும்.

அந்த அடிப்படையில் இந்தப் சம்பா பருவத்தில் நமக்குக் கொடுப்போம் என்று சொன்னது—நைட்ரஜன் கணக்கில் சொல்கிறேன். நைட்ரஜன் என்ற சத்தின் அடிப்படையில் பார்த்தால் 1,75,000 நைட்ரஜன் டன் என்று சொன்னார்கள். இதை 2·2-ல் பெருக்கினால் யூரியா உரத்தின் அளவு கிடைக்கும்; ஐந்தால் பெருக்கினால் அமோனியம் சல்பேட் அளவில் கிடைக்கும். ஆக, 1,75,000 நைட்ரஜன் டன் கொடுப்பதாகச் சொல்லிவிட்டு, 1,19,000 டன் தருகிறோம் என்று வாக்களித்துவிட்டு, 87,186 டன் தான் கொடுத்தார்கள். அப்படி இருக்கும்போது நமது தேவையை விட மிகக் குறைவாகத்தான் கொடுத்திருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் உணர்வார்கள் என்று நம்புகிறேன்.

அதேமாதிரி, பெப்ரவரி 1974-லிருந்து ஜூலை 1974 வரையில் உள்ள காலத்தில்—இந்தப் பருவத்தை கார் என்றும் சொல்லுவார்கள்; குறுவை என்றும் சொல்லுவார்கள்—நிலைமை சீரடையாதா என்று எதிர்பார்த்தோம். ஆனால் மேலும் மேலும் சீரழிந்திருப்பதைத் தவிர, மாற்றம் எதும் இல்லை. இவ்வளவு தருகிறோம் என்று கொச்சியில் நடைபெற்ற மாநாட்டில் கூடத் தெரிவித்தார்கள். அந்த மாநாட்டில் மத்திய அரசின் பிரதிநிதிகளும், மாநில அரசு பிரதிநிதிகளும்—தென் மாநிலங்களிலுள்ள எல்லாப் பிரதிநிதிகளும் வந்திருந்தார்கள். 1,30,000 நைட்ரஜன் டன் உரம் தருவதாகச் சொன்னார்கள். இப்போது அதைக் குறைத்து 1,18,000 நைட்ரஜன் டன் அலாட்மெண்ட் என்று சொல்லியிருக்கிறார்கள். கடைசியில் நமக்கு எவ்வள்வு வந்து சேரும் என்று தெரியவில்லை; வந்த பிறகுதான் தெரியும். இப்படிப் பற்றுக்குறை ஏற்படுவதால்தான் பிளாக் மார்க்கெட்டுகள் நடைபெறுகின்றன.

பற்றுக்குறை இருக்கும்போது, இருக்கின்ற உரத்தை முறையாக விநியோகம் செய்ய வேண்டும். நமக்கு ஏற்கெனவே, 9,465 விநியோக பாயிண்ட்டுகள் இருக்கின்றன. இவை தவிர லைசென்ஸ் டீலர்ஸ் வேறு

நியமிக்கப்பட்டிருக்கிருர்கள். நல்ல முறையிலே விநியோகம் நடைபெறுகிறதா என்பதைக் கண்காணிப்பதற்கு முழு நேர உர இன்ஸ்பெக்டர்கள் 8 பேர்கள் இருக்கிருர்கள். பொன்னேரியிலிருந்து கன்னியாகுமரி வரையில் இந்த 8 முழு நேர உர இன்ஸ்பெக்டர்கள்தான் பார்த்துக் கொள்ள வேண்டும். இவர்கள் நீங்கலாக ரெவின்யூ அதிகாரிகளுக்கும் இந்த இன்ஸ்பெக்டர்களுக்கு உள்ள அதிகாரங்கள் கொடுக்கப்பட்டு, அவர்களும் கண்காணிக்கின்ருர்கள். ஆனல் ரெவின்யூ அதிகாரிகளின் கண்காணிப்பிஞல் நமக்கு மிகுந்த பலன் கிடைக்கவில்லை என்று தெரிகிறது. ஆகையால் இந்த முழு நேர இன்ஸ்பெக்டர்களை அதிகமாக நியமிக்க ஆலோசனை செய்து கொண்டிருக்கிரேம்.

அதுமட்டுமல்ல, இந்த விற்பனை செய்கின்ற முறைகள் "ஏ ஃபார்ம்", "பி பார்ம்", என்று இருக்கின்றன. அதனுடைய டெக்னிக்கல் டீட்டேல்ஸ் பற்றிச்சொல்ல விரும்பவில்லை. பி-பாரத்தில் இன்னின்ன விதிகள் என்று, சொல்லியிருக்கிரேம். அந்த விதிகளை இன்னும் சற்றுக் கடுமையாக்க நினைத்திருக்கிரேம். இவ்வாறு செய்வதன் மூலம் குறைவாகச் செய்கின்ற உரப் பங்கீட்டை முறையாக விநியோகம் செய்யலாம் என்று நம்புகிரேம். உரம் விவசாயிகளுக்குப் போய்ச் சேர வேண்டும்; அதுதான் நமது நோக்கம். இந்தக் கட்டுப்பாட்டு - முறையிஞல் உரம் விவசாயிகளுக்கு மட்டும்தான் விநியோகம் செய்யப்பட வேண்டும். உரம் வாங்குகிறவர்கள் விவசாயிகள் தான் என்பதைத் தெரிந்துதான் லைசென்ஸ் பெற்ற டீலர்கள் விநியோகம் செய்ய வேண்டும். விவசாயிகள் பயிர் செய்யும் நிலத்தில் சர்வே நம்பர்களைக் குறித்துக் கொண்டுதான் உரம் கொடுக்க வேண்டும். அதோடு அவர்களின் கையெழுத்தையும் பெற்றுக் கொள்ள வேண்டும். இப்படிக் கட்டுப்பாட்டை இறுக்குவதன் மூலம் பிளாக் மார்க்கெட்டை ஒழிக்க முடியும் என்று நம்புகிரேம்.

இந்த பிளாக் மார்க்கெட் பற்றி நான் மிகவும் வருத்தப்படுகிறேன். 55 ரூபாய், 60 ரூபாய்க்கு விற்க வேண்டிய உரத்தை 155 ரூபாய், 200 ரூபாய் என்று பிளாக் மார்க்கெட்டில் விற்கப்படுவதற்காகவா இந்தத் துறையை ஏற்றேன் என்று உண்மையிலேயே நான் மிகவும் கவலைப் படுகிறேன். தனிப்பட்ட வியாபாரிகளும், சில டீலர்களும் உரத்தைச் சேகரித்து ரெட்டிஹில்ஸ் பகுதியில் வைத்துக் கொள்கிருர்கள். அங்கிருந்து ஆந்திராவுக்குக் கொண்டு போகிருர்கள். ஆந்திராவிலே உள்ளவர்கள் இங்கே வந்து ஒட்டல்களில் தங்கியிருக்கிருர்கள். அவர்கள் ஏஜெண்டுகளை வைத்து, கூட்டுறவு விநியோகமாக இருந்தாலும் சரி அல்லது தனிப்பட்ட டீலர்ஸ் விநியோகமாக இருந்தாலும் சரி, அவர்களிடம் சென்று உரத்தைப் பெற்று—ஒன்றுக்கு இரண்டு மடங்கு விலை கொடுத்துப் பெற்று, ஒன்றுக்கு நான்கு மடங்குகூட கொடுத்துப் பெற்று, கொண்டு போகிருர்கள். எத்தனையோ முறை இங்கிருந்து அப்படிப் போவதை, லாரிகளில் கொண்டு செல்வதை நாங்கள் கண்டுபிடித்திருக்கிரேம். ஒரு முறை கண்டு பிடிக்க வேண்டுமானல், அதைப்போல நூறு முறை கொண்டு போயிருப்பார்கள். இதைத் தடுக்க வேறு வழி இருந்தால் மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்தால், அவர்களுக்கு நான் மிகவும் கடமைப்பட்டவன் ஆவேன்.





நான் ஏற்கெனவே தெரிவித்த "பி பாரத்தின்" விதிகளை திருத்திக் கட்டுப்பாட்டை இறுக்குவதைத் தவிர வேறு வழியிருந்தால் தயவு செய்து சொல்லுங்கள். எப்படியாவது பிளாக் மார்க்கெட் ஒழிய வேண்டும். அதற்கான மாற்று யோசனைகளை யார் சொன்னலும் ஏற்றுக் கொள்கிறேன். திருவாளர்கள் மாரிமுத்து, வெங்கடசாமி, சௌடி சுந்தரபாரதி மற்றவர்கள் எல்லாம் பேசினர்கள். அவர்களிடம் மாற்று யோசனை இருக்கிறதா என்று கேட்டேன். மாற்று யோசனைகளை இப்போதே தெரிவிக்க வேண்டுமென்று கூட அல்ல; பின்னல் எழுத்து மூலமாகத் தெரிவித்தாலும் போதும்; எப்போது வேண்டுமானலும் தெரிவிக்கலாம். (குறுக்கீடு).

பிரைவேட் டீலர்ஸ் யார் யார் இருக்க வேண்டுமென்று சொல்வதற்கு மத்திய அரசாங்கத்திற்குத்தான் அதிகாரம் இருக்கிறது. அது கூடாது என்று சொல்வதற்கு நமக்கு அதிகாரம் இல்லை. இருக்கின்ற அதிகாரத்தை வைத்துக் கொண்டு எப்படிச் செயல்படுவது என்பதைத்தான் பார்க்க வேண்டும்,

திரு. எம். ஏ. லத்தீப்: தலைவரவர்களே, ரெட்ஹில்ஸ் போன்ற பகுதிகளில் நடந்த கள்ள வியாபாரத்தைப்பற்றி அமைச்சரவர்கள் சொன்ஞர்கள். இந்தக் கள்ள வியாபாரம் நாட்டை எந்த அளவுக்குச் சீர்கேட்டுக்குள்ளாகியிருக்கிறது என்பதை அவர்கள் அறிந்திருக்கிருர்கள். யார் அந்த வியாபாரிகள்? அவர்கள் எங்கே இருக்கிருர்கள்? அவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அவர்களுடைய பெயர்களை அமைச்சரவர்கள் இந்த அவையில் அறிவிப்பார்களா? மேற்கொண்டு அந்த வியாபாரிகள் மீது கடுமையான நடவடிக்கை எடுத்து, தண்டனை கொடுக்க என்னென்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட இருக்கின்றன என்ற விபரங்களை அமைச்சரவர்கள் இந்த அவைக்குத் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: சில வியாபாரிகளின் லைசென்ஸ் ரத்து செய்யப்பட்டிருக்கிறது. இப்போது அவர்களுக்கு அளிக்கப்படக் கூடிய தண்டனை அவர்களுடைய லைசென்சை ரத்து செய்யலாம்; அவ்வளவுதான். தற்போதுள்ள ரூல்களில் அவ்வளவுதான் இருக்கிறது, இப்போது வேறு சில் நடவடிக்கைகளையும் எடுக்கலாம் என்று சொல்கிருர்கள். வேறு மாற்று யோசனைகள் இருந்தால் சொல்லுங்கள்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: எசன்ஷியல் செக்ஷன் 3, 3-ஏ பிரிவுகளின்படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறதா? இந்தப் பிரிவுகளின்படி உத்தரவுகள் பிறப்பிக்க மத்திய அரசின் சட்டம் எந்த வகையில் தடையாகஇருக்கும்என்பதைஅமைச்சரவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: எசன்சியல் கம்மாடிடீஸ் ஆக்டின் கீழேதான் பெர்டிலைசர் கண்ட்ரோல் ஆர்டர் மத்திய அரசாங்கம் பிறப்பித்து இருக்கிருர்கள். இந்த பெர்டிலைசர் கன்ட்ரோல் ஆர்டரின் கீழ் சில பகுதி அதிகாரம் நமக்கு இருக்கிறது. பெரும் பகுதி அதிகாரம் மத்திய அரசின் கையில் இருக்கிறது. இப்போது இருக்கும் அதிகாரத்தை வைத்து இதற்கு மேல் போவது என்பது முடியாத காரியமாக இருக்கிறது.

மத்திய அரசு போதிய அதிகாரம் கொடுக்கவில்லை. உண்மையாகவே பிளாக் மார்க்கெட்டை நிறுத்த வேண்டுமானால், நிச்சயமாக அவர்கள் நமக்கு அதிகாரத்தைக் கொடுத்து இருக்கலாம்.

டீலர் நியமிக்கும் அதிகாரத்தை நமக்குக் கொடுக்கலாம். விலை நிர்ணயிக்கும் அதிகாரத்தை நமக்குக் கொடுக்கலாம். இந்த மாநிலத்தில் உற்பத்தியாகும் கெமிக்கல் பர்டிலைசர், ரசாயன உரம் அத்தனையும் நமது மாநிலத்திலேயே உபயோகித்துக் கொள்ளலாம் என்று சொல்லியிருக்கலாம். ஏறத்தாழ நாலேகால் லட்சம் டன் ஜூன் மாதத்திலிருந்து உற்பத்தியாகிறது என்று சொன்னால், இந்த மாநிலத்தில் அதை வைத்துக் கொண்டால், நமது அதிகாரத்திற்குள்ளே வைத்துக் கொண்டால், நாம் என்ன செய்ய முடியும் என்பதைப் பற்றி யோசிக்கலாம்.

திரு. எம். ஏ. லத்தீப் : எத்தனை ஆண்டுகளாக பெண்டிங்காக இருக்கிறது ? எத்தனை வியாபாரிகள் மேல் நடவடிக்கை எடுத்து இருக்கிறீர்கள் ? அவர்கள் பெயர் என்ன என்பதைச் சொல்ல முடியுமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இப்போது ஓர் ஆண்டு ஆகி இருக்கிறது. விவரம் இருக்கிறது. தனியாகக் கேள்வி கேட்டால், அல்லது தனியாக எழுதி அனுப்பினால் விவரம் தருவதற்குத் தயாராக இருக்கிறேன். இப்போது என்னுடைய கையில் இருக்கும் குறிப்புகளில் அந்த விவரங்கள் இல்லை. பிடித்து இருக்கிறோம். பிடித்தால் கூட, சில வரம்புகள் இருக்கின்றன. அதற்காக மத்திய அரசோடு சென்று நாம் தாக்குதல் செய்ய வேண்டுமா என்பதை உறுப்பினர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : Sir, if the Hon. Minister has got the list, he can give it. எனக்குக் கூட அமைச்சர் அவர்கள் தனிப்பட்ட முறையில் பேசுகிறபோது சொன்னார்கள், ஒரு 60-70 லாரிகளில் இப்படி ஏற்றிக் கொண்டு போய் இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அந்த 70 லாரிகளைப் பிடித்து இருந்தால், யார் யார் அந்தந்த டிரான்ஸ்போர்ட்டுகளைச் செய்தார்கள், அவர்களுடைய பெயர்கள் என்ன? போலீஸ் நடவடிக்கை எடுத்து இருந்தால், என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறார்கள்? அது எந்த ஸ்டேஜில் இருக்கிறது என்ற விவரம் சொல்லலாம். அதற்காக ஒரு ஸ்டேட்மெண்ட் வைத்தால் கூட நல்லது. இன்று இல்லாவிட்டாலும், வேறு ஒரு நாளைக்கு வைக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சொல்லமாட்டேன் என்று சொல்லவில்லை. வேறு ஒரு நாள் கேள்வி கேட்டால் தருகிறேன் என்று தானே சொல்கிறார்.

THIRU M. A. LATHEEF : Sir, on a point of order. This is a very important matter affecting the commercial dealings of not only this State but also the inter-State commercial dealings. The Hon. Minister has got some information about the illegal activities of the





blackmarketeers and there should not be any impression gained by the reply given by the Hon. Minister that the Government are hesitant to take prompt action. Also there, should not be any impression among the blackmarketeers that there are legal hurdles which stand in the way of the Government taking prompt and effective action. The Government must take effective action. This country, this House and every-one are behind the Government in seeing that such blackmarketeers are put down.

திரு. என். கணபதி : பாயிண்ட் ஆப் ஆர்டர் சார். தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் மிகத் தெளிவாக எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். விவரம் தற்போது இல்லை, விவரம் வேண்டுமானால் பிறகு தருகிறேன் என்று சொல்லி இருக்கிறார்கள். அறிக்கை வேண்டுமானாலும் வைக்கிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படி இருக்கும்போது மேலும் அமைச்சர் அவர்களைத் தொந்தரவு கொடுத்து அறிக்கை வைக்கவில்லை என்று குற்றம் சொல்வது எங்களுடைய காலத்தை வீணாக்குவது ஆக இருக்கிறது என்று இந்த நேரத்தில் சொல்லிக் கொள்கிறேன்.

THIRU M. A. LATHEEF : Sir, it is our right to ask it. To whom are we giving, "தொந்தரவு"

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மிகவும் ஒரு முக்கியமான விஷயத்தைப் பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். ஏறத்தாழ ஓராண்டு காலமாக இந்தக் கடத்தல் வியாபாரம் இங்கே நடந்து கொண்டிருக்கிறது. ஒரு ஆண்டாகியும் இந்த அரசாங்கம் அதன் மீது நடவடிக்கை எடுக்கத் தயங்குகிறது என்று சொன்னால், அதன் அர்த்தம் என்ன என்பதை இந்த மன்றம் அறிந்து கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறது. விவசாயிகளுக்குத் தேவையான உரம் போதுமான அளவு கிடைக்கவில்லை.

விவசாயிகள் எந்த அளவுக்குத் தத்தளித்துக்கொண்டிருக்கிறார்கள் என்ற நிலை இந்த அரசுக்குத் தெரியும். இந்த பிளாக் மார்க்கெட்டிங் செய்தவர்கள் மீது அரசு நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொன்னால், அரசாங்கம் தான் இதற்குப் பொறுப்பு என்று குற்றம் சாட்ட விரும்புகிறேன். அமைச்சர் அதற்தக் காரண காரியங்களைக் கூற வேண்டிய பொறுப்பில் இருக்கிறார்கள் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. நா. வீராசாமி : பாயிண்ட் ஆப் ஆர்டர், சார். பொதுவாக இப்படிப்பட்ட டிமாண்ட் வருகிறபோது அமைச்சர் அவர்கள் பதில் சொன்னதற்குப் பின்னால் கடைசியில் தான் கிளாரிபிகேஷன் கேட்பது என்பது நம்முடைய பேரவையின் வழக்கம். கேள்வி நேரம் மாதிரி ஆகிவிட்டது இப்போது. அமைச்சர், உறுப்பினர், அமைச்சர் என்ற முறையில் 15 நிமிடம் ஆகிவிட்டது. ஆகவே, டிமாண்டு நேரத்திலே, அமைச்சர் அவர்கள் பதில் சொன்னதற்குப் பிறகு கிளாரிபிகேஷன் கேட்பதுதான் வழக்கம். அப்படியில்லாமல், இப்படிக் கேள்வி நேரம் போல் வாதிப்பது முறைதானா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: கடைசியிலும் கேட்கலாம், அல்லது நான் கடைசியிலும் சொல்லலாம். கறுப்புச் சந்தையிலே விற்கப்படுகிறது என்பதை மட்டும் சொல்லிவிட்டு, நான் அதற்கு என்ன நடவடிக்கை எடுக்க முடியும் என்பதையும் சொல்ல வேண்டும். கறுப்புச் சந்தையிலே அதிக விலைக்கு விற்கப்படுகிறது என்பதை மட்டும் சொல்லி விட்டு, தடுக்கக் கூடாதா என்று கேட்டு விட்டு, நீங்கள் வீட்டிற்குப் போய் விட்டால் என்ன செய்வது, யார் தடுப்பது? திரு. சௌடி சுந்தரபாரதி அவர்கள் பேசும்போது கூடக் கேட்டேன். நான் இரண்டு முறைகளைச் சொல்லி இருக்கிறேன். மூன்றாவது முறையைச் சொல்லுங்கள் என்று சொன்னேன்.

THIRU SOWDI S. SUNDARABHARATHI: Sir, the Hon. Minister is making a reference to me and so I want to explain the position.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேட்டேன் என்றுதான் சொன்னாரே தவிர வேறு ஒன்றும் குறிப்பிட்டுச் சொல்லவில்லையே?

திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி: தலைவரவர்களே, அவர்கள் பேசும் போது நீங்கள் குறிப்பிட்டு ஏதாவது சொல்கிறீர்களா என்று கேட்டதால், சொல்கிறேன். ஒன்று, 40 சதவிகிதம் டிஸ்டிரிபியூஷன் பவர் நமக்கு இருக்கிறது. 60 சதவிகிதம் தனியார் விற்பனைக்குக் கொடுக்கிறார்கள். நம்மிடம் இருப்பதை நாம் வினியோகம் செய்யும்போது பெரிய தவறுகள் ஏற்படுகின்றன. அதைத் தடுப்பதற்கு என்னென்ன நடவடிக்கைகளை நீங்கள் எடுத்து இருக்கிறீர்கள்? அமைச்சர் அவர்கள் இவ்வளவு பெரிய அளவில், தமிழ்நாட்டின் தலை நகரத்திலேயே, நம்முடைய அரசாங்கம் இருக்கும் இங்கேயே பெரிய ராக்கெட் நடந்து கொண்டு இருப்பதைத் தடுப்பதற்கு என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறது, அப்படி நடவடிக்கை எடுப்பதில் என்ன சட்டச் சிக்கல் இருக்கிறது என்பதையெல்லாம் தெளிவாகச் சொன்னார்களானால், நாம் என்னென்ன முறையில் அதைச் சரியாக அமல்படுத்துவதற்கு முடியும் என்பதைச் சொல்லலாம் என்று கூறிக்கொள்கிறேன்.

திரு. க. நாகராஜன்: தலைவரவர்களே, இன்று பெர்டிலைசர் லைசன்சு வாங்குவதற்கு வெறும் ரூ. 10, ரூ. 15 கட்டி விட்டு லைசன்சு வாங்கி விடுகிறார்கள். ஆகவே, இந்த லைசன்சு பெறுவதற்கு ரூ. 5,000, ரூ. 10,000 அல்லது ரூ. 20,000 என்று டிபாசிட் கட்ட வேண்டுமென்று வைத்தால், அவர்கள் தவறு செய்வார்களானால், அந்த டிபாசிட் தொகை "ஃபர்ஃபீட்" செய்யும் அதிகாரத்தையும் வைத்துக்கொள்ள வேண்டும். இந்த முறையைக் கையாளலாம் என்று கூறிக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: மாண்புமிகு உறுப்பினர் நாகராசன் நல்ல கருத்தைச் சொல்லி இருக்கிறார்கள். உள்ளபடியே வரவேற்கிறேன். ஏனெனில் அது உருப்படியான கருத்து. வெறுமனே ஏதோ கேட்டுவிட்டு, விற்கிறார்களே, விற்கிறார்களே என்று சொல்லி



விட்டு, சும்மா இருக்காமல் நல்ல கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். அது நிச்சயமாக பரிசீலிக்க வேண்டிய ஒன்று என்று நான் ஒப்புக் கொள்கிறேன்.

இதுவரையில் என் போதுமான அளவுக்கு நீங்கள் கண்காணிக்கவில்லை என்று சௌடி சுந்தரபாரதி அவர்கள் கேட்டார்கள். கூட்டுறவு மூலம் அல்லது தனியார் மூலம் விற்கப்படுகிறதே, அதைப் போதிய அளவுக்கு கண்காணிக்கவில்லையே என்ற கேள்வியைக் கேட்டார்கள். அதற்குக் கூட அவை முன்னால் வைக்கப்பட்ட குறிப்பில் சொல்லியிருக்கிறேன். மொத்தம் 9,465 டீலர்கள் இருந்தாலும், அவர்களைக் கண்காணிக்க நமது ஊழியர்கள் 8 பேர் தான் இருக்கிறார்கள்.

இதைத் தவிர ரெவின்யூ அதிகாரிகளுக்கும் இந்தப் பொறுப்பு கொடுத்து இருக்கிறோம். அவர்கள் ரெவின்யூ வேலைக்கே முக்கியத்துவம் கொடுப்பதால், கூட்டுறவுத் துறையில் நடக்கும் தவறுகளை அவர்கள் முக்கியமாகக் கவனிக்க அவகாசம் இல்லாமல் இருந்து இருக்கக் கூடும். இருந்தாலும் கூட பல கேஸ்களை, பல தவறுகளைக் கண்டுபிடித்து, அவர்கள் லைசென்சையும் ரத்து செய்து இருக்கிறோம். மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கத் தயங்கிக் கொண்டிருக்கிறோம். மேற்கொண்டு கோர்ட்டில் நட வடிக்கை எடுப்பதற்கு அதிகாரம் கூட போன மாதத்தில் தான் கிடைத்தது. அதற்குக்கூட முன்பு அதிகாரம் கொடுக்கவில்லை.

இப்பொழுது தான் நமக்கு சம்மரி டிரையலுக்கு அதிகாரம் கொடுத் திருக்கிறார்கள் என்ற உண்மையை நான் சொன்னால் அதற்கு முன்னால் ஏன் எடுக்கவில்லை என்ற கேள்விக்குப் பதில் கிடைக்கிறது. ஆனால் ஒன்று சொல்லிக்கொள்கிறேன். எவ்வளவு தூரம் கண்காணித்தாலும்கூட பற்றாக்குறை இருக்கும்பொழுது நமக்கு மொத்தத்திலே 40 சதவிகிதம் தான் உரம் கிடைக்கும்பொழுது எவ்வளவோ ஒழுங்காக பங்கீடு செய் தாலும் கூட, எவ்வளவோ கண்காணித்தாலும் கூட, விவசாயிகளுக்குப் போதுமான உரமாக இருக்காது. முக்கியமாக ஹையீல்டிங் வெரைடீஸ் எடுத்துக் கொண்டால் அவைகளுக்கு நைட்ரஜன் ஏறத்தாழ 100 கிலோ கூட சில இடங்களில் ஒரு ஏக்கருக்குத் தேவைப்படுகிறது.

எனக்கு மனப்பாடமாகத் தெரியும். ஐ.ஆர். 8-க்கு எவ்வளவு நைட்ரஜன் வேண்டும் என்று என்னைக் கேட்டால் நான் பளிச் என்று சொல்வேன், 100 கே.ஜி. வேண்டும் என்று. ஐ.ஆர். 20-க்கு எவ்வளவு வேண்டுமென்றால் உடனே சொல்வேன், 70 கே.ஜி. வேண்டும் என்று. எனக்குத் தெரியும், நான் சொல்கிறேன். நாம் சரியாக விநியோகம் செய்தாலும் கூட, நியாயமான விலையில் விநியோகம் செய்தாலும் கூட, நமக்குப் போதிய அளவு உரம் இல்லை என்ற உண்மையை நாம் சந்தித்தாக வேண்டும். அந்த உண்மையிலிருந்து நாம் புறமுதுகு காட்டி ஓடக் கூடாது. அந்த உண்மையைச் சந்தித்து வெற்றி பெற்றாக வேண்டும். நீங்கள் மத்திய அரசோடு போராடுங்கள் என்று நண்பர் யாரோ சொன்னார். சொல்வது நன்றாக இருக்கிறது. மத்திய அரசோடு போராடுகிறோம், போராட வேண்டும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தங்களைப் போன்ற சுத்த வீரர்கள் இருக்கும்பொழுது போராட்டத்திற்கு என்ன பஞ்சம் என்ற ஐயப்பாடு எனக்கு ஏற்படுகிறது.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : ஆளும் கட்சியிலுள்ளவர்கள் சில பிரச்சினைகளை எடுத்துக்கொண்டு எந்த பிரச்சினைகளைப்பற்றி மத்திய அரசோடு வாதாடுவது என்று தீர்மானம் செய்து வாதாடுகிறோம். அப்படித் தீர்மானித்து வாதாடுகின்ற காரணத்தினாலேயே எல்லாப் பிரச்சினைகளிலும் மத்திய அரசோடு மோதிக் கொள்ள வேண்டும் என்ற அவசியம் இல்லை. நியாயமாக வாதாடுவதற்கு வாதாடுகிறோம். சுத்த வீரர்கள் என்று சொல்லி ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களைக் கேலியாகப் பேசுவது நல்லது அல்ல. அந்தப் பொறுப்பு எதிர்க் கட்சியினருக்கும் உண்டு. எந்தக் கட்டத்தில் நாங்கள் வாதாடுகிறோம் என்பது நாட்டிற்கு மிக நன்றாகத் தெரியும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : நீங்கள் எந்தக் கட்டத்தில் வாதாடுகிறீர்கள் என்பது எதிர்க் கட்சி வரிசையில் இருக்கிற எங்களுக்கு நன்றாகத் தெரியும்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : காலம் தானாகவே கனிந்து கொண்டு வருகிறது என்பது நமக்குத் தெரியும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : காற்று எந்த சைடு வீசுகிறது என்பதைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

மாண்புமிகு திரு சி. பா. ஆதித்தனார் : அதைத்தான் பார்க்கிறோம். குஜராத்தில் பார்க்கிறோம், பீகாரில் பார்க்கிறோம், உத்திரப் பிரதேசத்தில் பார்க்கிறோம். காலம் தானாகவே கனிந்து கொண்டு வருகிறது, வரட்டும். போராட்டத்தை நாங்கள் வலிந்து அழைக்கப் போவதில்லை. போராட்டம் வருமானால் அதை விட்டுவிடப் போவதும் இல்லை.

எவ்வளவோ கட்டுப்பாடு செய்தாலும், கண்காணிப்பாக இருந்தாலும், ஏராளமாக நாம் மேற்பார்வையாளர்களை நியமித்திருந்தாலும், இந்தக் குறை இருந்துகொண்டு தானே இருக்கும்.

இங்கே தமிழகத்தில் திறமைக்கு, அறிவுக்குப் பஞ்சம் இல்லை. சொக்கலிங்கம் அவர்கள் ஒரு நல்ல யோசனையைச் சொன்னார்கள். வேப்பம் புண்ணாக்குப் போடலாம். அதிலே 5 சதவீதம் நைட்ரஜன் இருக்கிறது என்று சொன்னார்கள். அவர்கள் எப்படிக் கண்டுபிடித்தார்கள் என்பது எனக்குத் தெரியாது. அவர்கள் கண்டுபிடித்து நன்றாகச் சொன்னார்கள். கோழி உரத்தைச் சொன்னார்கள். அதிலே கூட 4 சதவீதம் நைட்ரஜன் இருக்கிறது. அதுவும் நல்ல உரம். நாம் வேப்பம் புண்ணாக்கை வைத்து அல்லது கோழி உரத்தை வைத்து எத்தனை ஏக்கரைப் பயிர் செய்துவிட முடியும் என்பதைப் பார்க்க வேண்டும்.

தஞ்சை மாவட்டத்தில் மட்டும் 13 லட்சம் ஏக்கர் நாம் பயிர் செய்தாக வேண்டும். தமிழ்நாட்டிற்குத் தன் நிறைவு வேண்டும் என்பது மட்டுமல்ல, தமிழ்நாடு ஒரு தலை சிறந்த இடத்தை உணவு உற்பத்தியில்



பிடித்திருப்பதை நாம் காப்பாற்ற வேண்டும். உரம் வேறு வகையிலே நாம் நிச்சயம் கொடுத்தாகவேண்டும் என்று மத்திய அரசு நமக்குத் தெரிவித்திருக்கிறார்கள். கம்போஸ்டு உரத்தைச் செய்யுங்கள். ரூரல் கம்போஸ்டு கிராமப்புறங்களிலுள்ள கம்போஸ்டு உரத்தைச் செய்யுங்கள் என்று சொல்கிறார்கள். எவ்வளவு நல்ல வழிகளில் செய்தாலும், எவ்வளவு நல்ல வகையில் 'ரூரல் கம்போஸ்டை கிராமப்புறங்களில் இப்பொழுது தயார் செய்தாலும், குழியை வெட்டுகிறோம். சாம்பலை சுற்றி வைக்கிறோம் என்று எப்படிச் செய்தாலும், எப்படி புதைத்தாலும், அதில் 0·9 சதவிகிதத்திற்கு மேலே நைட்ரஜன் இல்லை. நைட்ரஜன் என்பது நான் அரிசி உற்பத்திக்கு மிக அவசியமாக தேவைப்படுகிறது. அமோனியம் சல்பேட்டில் 20 சதவீதம் இருக்கிறது. யூரியாவில் 45 சதவீதம் இருக்கிறது. 45 சதவீதம் நைட்ரஜன் இருக்கப்பட்ட ஒரு கெமிகல் பெர்ட்டிலைசரைப் போட்டு விளைவித்த மக்களுக்கு 0·9 சதவீதம் அதாவது பூஜ்ஜியம் புள்ளி ஒன்பது சதவிகிதம், ஒரு சதவிகிதத்திற்கு குறைவாக நைட்ரஜன் உள்ள கம்போஸ்டு உரத்தைப் போட்டு விதையுங்கள் என்று நாம் சொல்வோமேயானால், விவசாயிகள் முக்கியமாக மிகவும் சோர்வு அடையக்கூடிய நிலைமை நிச்சயம் ஏற்படும். அதைப் போல நகர்ப்புறத்து கம்போஸ்டில் கொஞ்சம் அதிகமாக நைட்ரஜன் இருக்கிறது. 1·2 சதவிகிதம் தான் இருக்கிறது. அமோனியம் சல்பேட்டைப்போல 20 சதவிகிதம் இல்லை. யூரியாவைப் போல 45 சதவிகிதம் இல்லை. விவசாயத்தில் நிபுணர்களெல்லாம் இருக்கிறார்கள். அவர்களெல்லாம் நான் சொல்வதை ஏற்றுக்கொள்வார்கள் என்று கருதுகிறேன்.

எனக்கு எந்த உரத்தில் எவ்வளவு சதவிகிதம் நைட்ரஜன் இருக்கிறது என்பது நன்றாகத் தெரியும். பார்ம் யார்டு மெனியூர் பற்றி திரு. பொன் சொக்கலிங்கம் அவர்கள் சொன்னார்கள். நன்றாகச் சொன்னார்கள். மாடுகளை வளர்க்கவேண்டும் என்று சொன்னார்கள். மாட்டுத் தொழு உரத்தைப் போடவேண்டும் என்று சொன்னார்கள். எரு எல்லாவற்றையும் சேர்த்து வைத்தாலும் கூட, அதில் நைட்ரஜன் அதிகமாக இருக்கவேண்டும். நைட்ரஜன் என்பது நான் உர சத்து. நைட்ரஜன் சத்துள்ள உரம் கெமிகல் பெர்ட்டிலைசர்கள். திரு. துரைமுருகனுக்குக்கூட நான் தயார் பண்ணியதைக் கொடுத்திருக்கிறேன். அதைக் கொஞ்சம் தூவினால் தூவின இடத்தில் அந்த இலை பசுமையாக விடும். அது தான் நைட்ரஜன் உரம் என்பது. அது கூட பற்றாது.

இந்த நிலைமை இருக்கும்பொழுது 3, 4 மாதங்களாக இதைப்பற்றியே கண்ணும் கருத்துமாக இருக்கவேண்டும் என்று நினைத்துக்கொண்டு செயலாற்றுகிறோம். மத்திய அரசு ஏற்கனவே தெரிவித்துவிட்டார்கள். நீங்கள் கம்போஸ்டு உரத்தை தயார் செய்தால் அதற்கு வேண்டிய உதவியைச் செய்கிறோம் என்று மத்திய அரசு சொன்னார்கள் . . . . . . . . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. துரைமுருகனுக்கு மட்டும் தான் கொடுத்திருக்கிறீர்களா, எல்லோருக்கும் கொடுத்திருக்கிறீர்களா?

[1974 மார்ச் 19

மாண்புமிகு திரு சி.பா. ஆதித்தனார் : இங்கே அசெம்பளியில் வைத்துக் கொடுக்கக்கூடாது. சபாநாயகர் உத்தரவு இல்லாமல் இங்கே வைத்து கொடுக்கக்கூடாது என்பதைத் சொல்லிக்கொள்ளுகிறேன்.

எப்படியாவது இந்தப் பிரச்சினையை தீர்த்தாகவேண்டும். நமக்கு பற்றாக்குறை இருக்கிறது, நியாயமான முறையில் கண்காணிப்பு செய்வோம், கடுமையான முறையில் செய்வோம் என்றாலும் கூட எப்படியாவது அதிக நைட்ரஜன் உள்ள உரத்தை கொடுத்தாகவேண்டும். அதற்கு ஆர்க்கானிக் மாட்டர் வேண்டும். கம்போஸ்டு உரம், மர உரம் இவைகளெல்லாம் ஆர்க்கானிக் மாட்டர். அதிலே இருக்கக்கூடிய நைட்ரஜன் மிகக் குறைவு. அதிலே நைட்ரஜன் சத்தை அதிகமாக ஏற்றியாகவேண்டும். அப்படி இல்லை என்றால் உரம் தகுதியாக இருக்காது.

ஃப்ளேக் என்று ஜெர்மனியிலிருந்து ஒரு நிபுணர் வந்திருந்தார். அந்த நிபுணர் கோவைக்கு வந்திருக்கும்பொழுது இந்தப் பிரச்சினையை அவர்களிடம் சொன்னோம். அவர்கள் சொன்னார்கள். நிச்சயமாகச் செய்து கொடுக்க முடியும் என்று. அங்கே செய்து காட்டினார்கள். சாதாரணமாக 0·5 சதவிகிதம் நைட்ரஜன் இருக்கப்பட்ட மரத்தூளில் ஏறத்தாழ 15 சதவிகிதம் வரையில் நைட்ரஜன் ஏற்றி காண்பித்தார். அதற்குப் பிறகு நமது மாநிலத்தில் உள்ள நமது நிபுணர்கள் வேளாண்மை விஞ்ஞானிகள் ஸாயில் டெஸ்டிங் லாபரட்டரியில் இருக்கும் படியான விஞ்ஞானிகள் இதை நிச்சயம் உற்பத்தி செய்தாகவேண்டும் என்று முனைப்போடு செயலாற்றினார்கள்.

நமது மாநிலத்திலுள்ள வேளாண்மை விஞ்ஞானிகள் உலகத்தில் மிகச் சிறந்தவர்கள் என்பது நான் அண்மையில் டெல்லி போயிருந்த பொழுது அங்கு பரிசு பெற்றவர்களைப் பார்த்ததிலிருந்து தெரிந்தது. நேரு பரிசு என்று வேளாண்மை விஞ்ஞானிக்குக் கொடுக்கிறார்கள். ரவி அகமத் கித்வாய் பரிசு என்று கொடுக்கிறார்கள். நேரு பரிசு என்று வேளாண்மை விஞ்ஞானிக்குக் கொடுக்கப்பட்ட பரிசில் ஒன்றுக்கு பாதி தமிழகத்திலிருந்து சென்ற அந்த விஞ்ஞானிக்குக் கிடைத்தது. அப்படியானால் அவர்கள் விஞ்ஞானத்தில் மிகச் சிறந்தவர்களாக இருக்கிறார்கள் என்பதை நாம் பெருமையோடு சொல்லிக்கொள்ளலாம். விஞ்ஞானிகள் அந்தப் பரிசை வாங்க வந்தபொழுத, ஒருவர் எகிப்தில் வேலை செய்துகொண்டிருக்கிறார் என்று சொல்லி இன்னொருவர் பரிசை பெற்றுக் கொண்டு போனார். ஈரான் நாட்டில் ஒருவர் வேலை செய்து கொண்டிருக்கிறார் என்று சொல்லி—நமது தமிழ்நாட்டைச் சேர்ந்த—சீனுவாசன் என்பது அந்த விஞ்ஞானியினுடைய பெயர்—அவருக்குப் பதிலாக அவருடைய சொந்தக்காரர் ஒருவர் வந்து பரிசைப் பெற்றுக்கொண்டார். வேறு நாடுகளுக்குப் போகிறார்கள் என்று வருத்தத்தோடு சொன்னாலும் கூட, நமது இந்தியாவில் உலகப் புகழ் பெற்ற நல்ல விஞ்ஞானிகள் இருக்கிறார்கள், இந்தத் துறையில் நன்றாக வேலை செய்திருக்கிறார்கள். ஜெர்மனியில் அவர்கள் செய்ததை விட எந்த வகையிலும் குறை இல்லாத அளவுக்கு அவர்கள் செய்து கொண்டு வந்திருக்கிறார்கள்.



1974 மார்ச் 19] [திரு. சி. பா. ஆதித்தனார்]

அந்த உரத்திலே அதாவது ஆர்க்கானிக் மேன்யூர் என்று அப்படி இருக்கப்பட்ட ஆர்க்கானிக் மாட்டரில் அவர்கள் நைட்ரஜனை அதிகமாகச் சேர்த்து ஏறத்தாழ 13 சதவிகிதம் அல்லது 14 சதவிகிதம் அளவுக்கு அமோனியம் சல்பேட் எவ்வளவு போடவேண்டுமோ அதைவிடச் சற்று அதிகமாக போட்டால் போதும் என்ற அளவுக்கு அவர்கள் தயார் செய்திருக்கும்படி அதை உற்பத்தி செய்ய திட்டமிட்டிருக்கிறோம்.

(மாலை 6–00)

இதைத் தவிர வேறு என்ன செய்வது? எனக்குத் தெரியவில்லை. இப்படி ஓரளவுக்கு நமது விஞ்ஞானிகள் சோதனை செய்து இதில் வெற்றி பெற்றிருப்பதை நான் பாராட்டுகிறேன். ஏனென்றால் மற்றவர்கள் எல்லாம் ஏங்கிக்கொண்டிருக்கிற இந்த நேரத்தில், உரம் பற்றாக்குறையாக இருக்கிறதே என்று அழுதுகொண்டு மூலையில் இருக்காமல், நைட்ரஜன் மிகுந்த கரிம உரங்களை உற்பத்தி செய்ய வழிவகை கண்டுபிடித்துக் கொடுத்திருப்பது மிகமிக பெருமைப்படத்தக்க ஒன்றாகும். கம்போஸ்ட் உரத்தையும், தொழு உரத்தையும் அதிகரித்து, இந்த ரசாயன உரத்திற்கு ஒண்ணுக்கு முக்கால் சமமாகச் செய்திருக்கிறார்கள். இந்த உரம் இரசாயன உரங்களின் பற்றாக் குறையைத் தீர்க்க உதவும் என்று இதன் மூலமாக உணவு உற்பத்தியில் இம்மாநிலத்தில் நற்பெயரை தலை சிறந்த இடத்தை காப்பாற்ற முடியும் என்றும் நான் நம்புகிறேன். சிலர் ஐயப்பட்டது போல உணவு உற்பத்தியில் நமது மாநிலம் மற்ற மாநிலங்களுக்கு பின்னிடம் போய்விடாது, நம்முடைய பெயரையும், புகழையும் எதிர்காலத்திலும் காப்பாற்றிக்கொள்ள நமது விஞ்ஞானிகள் தக்க வழியைக் கண்டிருக்கிறார்கள் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தாற்போல பூச்சி மருந்தைப் பற்றிச் சொன்னார்கள். இதைப் பற்றி அதிகம் சொல்லத் தேவையில்லை. இந்த அசெம்பிளிக் கூட்டம் தொடங்கும் முன் நம் இலாக்காவின் கையில் எவ்வளவு பூச்சி மருந்து இருக்கிறது என்ற விவரத்தைக் கேட்டேன். ஏறத்தாழ 1 ஆயிரம் டன்—10 இலட்சம் டன் கிலோ—பி.எச்.ஸி. டென் பர்செண்ட் இருக்கிறது. அதோடு ஒரு லட்சம் லிட்டர் எண்ட்ரின் இருக்கிறது. பேரவை அங்கத்தினர்கள் எந்தப் பகுதியிலாவது பூச்சி மருந்து இல்லை என்பதாக ஒரு சின்ன தாள் எழுதிக்கொடுத்தால் போதும், உடனே அவர்களது பகுதிக்கு அனுப்பி வைக்க ஏற்பாடு செய்கிறேன். காரணம், விவசாயிகளுக்கு எங்கே வாங்குவது என்று ஒருவேளை தெரியாமல் இருந்து இருக்கலாம். அதனால் பூச்சி மருந்து கிடைக்கவில்லை என்று சிலர் சொன்னார்களோ என்னவோ.

நண்பர் திரு. குமாரசாமி அவர்கள் பல்லடம் தொகுதியில் போன ஆண்டு பருத்திக்கு பூச்சி மருந்து கிடைக்கவில்லை என்று சொன்னார்கள். இந்த ஆண்டும் ஏதாவது சொல்லலாம் என்பதாக அவர்கள் பகுதியில் உள்ள டெப்போக்களில் பூச்சி மருந்து ஸ்டாக் எவ்வளவு இருக்கிறது என்கிற விவரங்களையும் சேகரித்து வைத்திருக்கிறேன். பி.எச்.ஸி. டென் பர்சண்ட் மருந்தும், எண்ட்ரின் மருந்தும் தடங்கல் இல்லாமல் கிடைக்கின்றன. பெய்யர் அண்டு கோ தயாரிக்கிற வேறு சில மருந்துகளை விவ

சாயிகள் வேண்டுமென்று கேட்கிறார்கள். அந்த மருந்துகளை அரசாங்கத்திடம் கேட்டுப் பயன் இல்லை. அரசின் கண்டிரோலுக்கு உட்பட்டது எண்ட்ரின், பி. எச். ஸி. டென் பர்சன்ட் மருந்தும்தான். எண்ட்ரின் கூட அடுத்த ஆண்டு முதல் கிடைக்காது. காரணம் எண்ட்ரின் இறக்குமதி செய்வது இல்லை என்று மத்திய சர்க்கார் அறிவித்திருக்கிறார்கள். பி. எச். ஸி. டென் பர்செண்ட் நல்ல மருந்து. நாற்றங்காலில் நீங்கள் பார்க்கலாம். பூச்சி விழுந்து விட்டால் பயிர் செங்கல் கலருக்கு சிவப்பாக இருக்கும். பி.எச்.ஸி. டென் பர்செண்ட் மருந்தைத் தூவினால் ஒன்றிரண்டு நாட்களிலேயே திரும்பவும் பச்சைப் பசேல் என்று ஆகிவிடும். பி.எச்.ஸி. டென் பர்செண்ட் மருந்தை எங்கே கேட்டாலும் உடனே அனுப்பி வைக்க நாங்கள் தயாராக இருக்கிறோம். ஆகவே யாரும் பூச்சி மருந்து கிடைக்க வில்லையே என்று நினைத்துக்கொண்டிருக்க வேண்டாம். வருகிற சனிக்கிழமை கூட—இந்த பூச்சி மருந்தை மேட்டூரில்தான் தயாரிக்கிறார்கள்—அவர்களோடு நேரில் போய் பேசி இன்னும் மேற்கொண்டு அதிகமாகத் தயாரித்துக்கொடுக்க முடியுமா என்று பேச இருக்கிறேன்.

மூன்றாவதாக, விதை பற்றி சொன்னார்கள். நல்ல தண்ணீர் இருந்தாலும், உரம் இருந்தாலும், விதைகள் நன்றாக இருக்கவேண்டும். சில இடத்தில் விதைகள் நன்றாக இல்லை என்பது எங்கள் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. குறிப்பாக நெல்லை மாவட்டத்தில் கம்பு விதை சரியான முறையில் கொடுக்கப்படவில்லை என்று சொன்னார்கள். நானும் விசாரித்தேன். உண்மை தான். விவசாயிகள் அந்த விதையினால் வேதனைக்கு உள்ளாகியிருக்கிறார்கள். இதைத் தவிர்க்க என்ன வழி என்றால்—மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னதைப்போல இனி மேல் விதை அரசாங்கத்தின் மேற்பார்வையிலேயே தயாரிக்க வேண்டும். தனியாரிடம் கொடுத்து விடுவதாக இருந்தால் இது போன்ற சங்கடமான நிலைமைதான் விவசாயிகளுக்கு ஏற்படும். இதற்கு என்ன செய்யலாம் என்பது பற்றியும் அரசு கவனம் செலுத்திக்கொண்டிருக்கிறது.

இப்படி எனக்குத் தெரிந்தது என்னவோ குறைவுதான். ஆனால் தெரிந்தவற்றை அம்பலப்படுத்துவதில் நான் தவறவில்லை. "கல்வி கரையில, கற்பவர் நாட்சில" என்பார்கள். எல்லாவற்றையும் எல்லோராலும் தெரிந்துகொள்ள முடியும் என்பது இயலாத காரியம். தெரிந்தவற்றை வேகத்தோடும், முறையோடும் நடைமுறைக்குக் கொண்டுவர நான் தயங்கியது கிடையாது. எனக்கு மிகவும் உதவியாக நல்ல பல கருத்துக்களைக் கூறியிருக்கிற உறுப்பினர்களுக்கு எல்லாம் நன்றியைத் தெரிவித்து கொள்கிறேன்.

அனிமல் ஹஸ்பெண்டரியைப் பற்றி—திரு வெங்கடசாமி அவர்கள் எச்சாட்டிக் புல், இன்னும் உயர்ந்த ரக மாட்டு இனத்தைப் பெருக்க வேண்டும் என்றெல்லாம் சொன்னார்கள். திரு பொன்னப்ப நாடார் அவர்கள் நாகர்கோயிலில் மருந்து நிலையம் கட்டப்படவில்லை என்று சொன்னார்கள். அதை எல்லாம் குறித்து வைத்துக்கொண்டிருக்கிறேன்.





நண்பர் மாரிமுத்து அவர்கள் நல்ல பல கருத்துக்களைச் சொன்னார்கள். அவைகளையும் குறித்து வைத்துக்கொண்டிருக்கிறேன். சில மாடல் பார்ம்களை ஏற்படுத்த வேண்டுமென்று போன முறையும் சொன்னார்கள். இந்த முறையும் சொல்லியிருக்கிறார்கள். அதுவும் நம் ஆய்வில் இருக்கிறது.

யாரோ பேசும்போது அடுத்த வருடம் புட் புரொடக்ஷன் குறைந்து விடும் என்று சாபம் இடுவதைப் போலச் சொன்னார்கள். அதைத்தான் நான் முதலிலேயே சொன்னேன். நிச்சயமாக புட் புரொடக்ஷன் குறையாது. இந்த முறை ஐந்து மாநிலங்கள் நம்மிடம் அரிசி வாங்கினார்கள் என்றால் மேலும் இரண்டு மூன்று மாநிலங்களுக்கு நாம் அடுத்த ஆண்டு அரிசி கொடுக்க முடியும். தஞ்சை மாவட்டம் இந்தியா பூராவுக்குமே அரிசி கொடுக்கும் என்கிற நற்பெயரை எடுக்கும் வகையில்தான் நமது விஞ்ஞானிகளும் துறையினரும் செயல்பட்டு வருகிறார்கள்.

நண்பர் வகாப் அவர்கள் நௌலக் பாரம் 70 எக்கரைப் பற்றிச் சொன்னார்கள். 210 ஏக்கரா விதை பண்ணைக்காகவும் எடுத்திருக்கிறோம். இன்னும் 300 ஏக்கரா எடுப்பதாகவும் இருக்கிறோம். சீட் ப்ராசசிங் யூனிட் ஆரம்பிக்கப்பட இருக்கிறது.

இன்னும் கோழிப் பண்ணையைப் பற்றியும் சொன்னார்கள். கோழித் தீவனத்தின் விலை குறையக் கூடிய அளவுக்கு நாம் செயல்பட்டால் இதில் மாபெரும் வெற்றியை நாம் காணலாம். இன்றைக்கு தனியார் ஒரு கிலோ ஒரு ரூபாய் பத்து காசு, ஒரு ரூபாய் 20 காசு என்று கோழித் தீவனம் தயாரித்துகொடுக்கிறார்கள். அதை நம் கோழிகளுக்குப்போட்டால் கோழி முட்டையிடுவதே இல்லை. நல்ல கோழித் தீவனத்தைத் தயார் செய்வதற்காகத்தான் நாம் நந்தனத்தில் பீட் மிக்சிங் யூனிட் வைத்திருக்கிறோம். இப்போது கடலைப் பிண்ணாக்குக்குப் பதில் லைசின் "பிஷ் மீல்"க்குப் பதில் 'மீட் மீல்' பயன்படுத்த முடியும் என்றெல்லாம் ஆராய்ச்சி செய்திருக்கிறார்கள். இங்கே உற்பத்தியாகிற கோழித் தீவனம் கிலோ 80 காசுக்கு வருகிறது. இதை இன்னும் 60 காசுக்குள் தயாரித்துக் கொடுக்க முடியும் என்றால் நாம் கோழி முட்டைகளை சென்னை நகரத்திற்கு மட்டுமல்ல—பம்பாய், கல்கத்தா, டெல்லி போன்ற நகரங்களுக்கு மட்டுமல்ல—வெளிநாடுகளுக்கே அனுப்பிவைக்கக்கூடும். முட்டை விலையும் குறையும். இது பற்றி மேலும் அவர்கள் ஆராய்ச்சி செய்து வெற்றி பெறுவதற்கான வழியை காணவேண்டுமென்று நான் கேட்டுக்கொண்டிருக்கிறேன்.

திரு. கோதண்டராமையா அவர்கள் பேசும்போது **fertilisers, horticulture, grapes cultivation, jasmine and rose** என்றெல்லாம் சொன்னார்கள். சொல்லும்போதே நாக்கில் தண்ணீர் ஊறியது. அவர்கள் மல்லிகைப்பூ, ரோஜாப்பூ பற்றி எல்லாம் சொன்னார்கள். என் மனது அந்தப் பக்கம் போகவில்லை (சிரிப்பு) நம் நாட்டு மக்கள் ஒவ்வொரு இடங்களில் உண்ண உணவு இல்லாமல் துப்பாக்கிச்

சூடு நடக்கிற அளவில் கிளர்ச்சிகளில் ஈடுபடுகிற நிலையில் நம்முடைய கவனம் எல்லாம் இன்றையதினம் உணவு உற்பத்தியில் இருந்தாக வேண்டும்.

Thiru K. S. KOTHANDARAMIAH : It is not for fun. It brings money to agriculturists.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : அவர்கள் விவசாயிகளின் வருமானத்தைப்பற்றிச் சொன்னார்கள்.

இன்னும் திரு. சுவாமிதாஸ் பேசும்போது விதைப்பண்ணை, ஹார்டி கல்சர் பற்றி எல்லாம் சொன்னார்கள். இன்னும் ரோடுகளைப்பற்றியும், வேலை வாய்ப்புப் பற்றியும் கூடச் சொன்னார்கள். இந்த இலாக்கா சம்பந்தப்படாத விஷயங்களாக இருந்தாலும் நான் அவைகளை அந்த அந்த இலாக்காவுக்கும் அனுப்பி வைக்கிறேன்.

திரு. கே. எம். எஸ். அவர்கள் பேச ஆரம்பித்தவுடன் இவர்கள் சென்னையில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவர்—சென்னையில் விவசாயம் செய்ய வேண்டுமென்று சொல்லிவிடுவாரோ என்று நினைத்தேன். ஆடுமாடுகளை நிறுத்த சுகாதாரமான இடம் வேண்டுமென்று சொன்னார்கள்.

இன்னும் செஸ்பேனியா போன்ற வேரில் உர முடிச்சுள்ள பயிரை வைத்து, பசுந்தாள் உரம் தயாரிக்கப்பட வேண்டும் என்றும் சொன்னார்கள். திரு. பொன் சொக்கலிங்கம் அவர்கள் பேசும்போது வேப்பம்பிண்ணாக்கு நல்ல நைட்ரஜன் உரம் உடையது என்று சொன்னார்கள். நான் அதைத்தான் முன்பே சொன்னேன். தஞ்சை மாவட்டத்திலுள்ள லட்சக் கணக்கான ஏக்கர்களுக்கு வேப்பம்பிண்ணாக்கு போடுவது என்றால் பிண்ணாக்குக்கு எங்கே போவது ?

திரு. பி. பொன்சொக்கலிங்கம் : வேப்பம் பிண்ணாக்கு, கடலைப் பிண்ணாக்கு ஆகியவற்றை முன்பு விவசாயத்திற்குப் பயன்படுத்தி, இரு போக சாகுபடியில் நல்ல பயனைக் கண்டு வந்திருக்கிறார்கள். வேப்ப மரத்தை வைக்கவேண்டுமென்று சொன்னதற்குக் காரணம் வேப்பந் தழை, பட்டை ஆகியவற்றை பசுந்தழையாகப் போட்டால் பூச்சிகள் தொல்லை பெரும் அளவு குறைகிறது. நான் வேப்பம் பிண்ணாக்கைப் போட்டு பயன் இருப்பதைக் கண்டதனால்தான், நைட்ரஜன் உரம் பற்றாக்குறையாக இருக்கிற நிலையில், அந்தப் பற்றாக்குறையை ஈடுசெய்துகொள்ள இதனைப் பயன்படுத்திக்கொள்ளலாம் என்று சொன்னேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : நான் அதைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லை. வேப்பம் பிண்ணாக்கில் நைட்ரஜன் அதிகம் இருக்கிறது என்பதை ஒத்துக்கொள்கிறேன். இனிமேல் நாம் வேப்பமரம் வைத்து, அது செடியாகி வளர்ந்து, பூத்து, காய்த்து, வேப்பம் பிண்ணாக்கை எடுப்பது எங்கே ? வருகிற மே மாதம், ஜூன் மாதத்திற்கு உரம் கேட்கிறார்களே, எப்படிக் கொடுக்க முடியும் ?



திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் பொதுவாக நன்றாகப் பேசுவார்கள், நல்ல கருத்துக்களை எல்லாம் சொல்வார்கள். இன்றைக்கு என்னமோ திரு. எட்மண்ட் சொன்னதைக் கொண்டு அவரது பேச்சின் தரம் கொஞ்சம் குறைந்திருந்தது. அவர் சொன்ன விஷயத்தில் திருநெல்வேலி கலெக்டரிடம் இருந்து வந்த கடிதம் இருக்கிறது.

"The total extent or wet lands in Kayamozhi is 226 acres for which 206 fertiliser cards have been issued. The Assistant Collector's enquiry reveals that the cards had been issued for wet cultivation and not for other cultivations as alleged."

இதற்கு மேல் அந்த விஷயத்தைப்பற்றி திரு. பொன்னப்ப நாடார் வற்புறுத்தமாட்டார்கள் என்று நினைக்கிறேன். நேரிடையாகக் குற்றம் சாட்டுகிறேன் என்றார்கள். கலெக்டரே சொன்ன பிறகு ஏற்றுக்கொள்வார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது.

கொக்கோக்கு மார்கெட் இல்லை என்று சொன்னார்கள். நானும் அதை கவனிப்பதற்குக் குறித்து வைத்திருக்கிறேன். இன்னும் பல உறுப்பினர்கள் பல கருத்துக்களைச் சொன்னார்கள். அவைகளை எல்லாம் நான் கைப்பட எழுதி வைத்திருக்கிறேன். எப்போதும் இவைகளை எல்லாம் அப்படியே கொண்டுபோய் குப்பைக் கூடையில் போடுபவன் நான் அல்ல. நல்ல கருத்துக்களை செயல் முறையில் கொண்டுவர நான் முயற்சி செய்வேன்.

திரு. பொன்னப்ப நாடார் பம்பு செட்டுகளுக்கு எரிசாராயத்தைப்பற்றிச் சொன்னார்கள், நேரம் இல்லை. வருகிற சீசனில் கிடைக்கிற உரத்தை மக்களுக்கு எந்தவகையில் பங்கிட்டுக் கொடுப்பது, உரப்பற்றாக்குறையை எப்படிப் போக்குவது என்பதில் எல்லாம் நான் அதிகக் கவனம் செலுத்திக்கொண்டிருக்கிறேன். எந்த வகையிலும் நமக்கு இந்த ஆண்டு உணவு உற்பத்தி குறைந்துவிடக்கூடாது.

ஆனால் பம்பு செட்கள் எரிசாராயத்தில் ஓடிக்கொண்டிருக்கின்றன என்பதை வட சென்னையிலே இருக்கிற இன்ஜினியரிங் டிப்போவில் பார்க்கலாம். அது, இப்பொழுது முக்கியமான பிரச்னையாகத் தெரியவில்லை. டீசல் எண்ணெயை 15 காசுதான் உயர்த்தி இருக்கிறார்கள். இன்னும் விலையை உயர்த்துவார்களானால் எரிசாராயத்தைக் கொண்டு வேளாண்மைத் துறையிலே உள்ள விவசாயிகளுக்கு பம்ப் செட்கள் ஓட்டவும், தண்ணீர் கிடைக்கவும் பார்த்துக் கொள்ள முடியும்.

உறுப்பினர்கள் சொன்ன வேறு கருத்துக்கள் விடப்பட்டிருந்தாலும் கூட, குறிப்புக்களை எடுத்துப் பார்த்து அவற்றை எப்போதும் திறந்த மனதோடு ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். நான் சொல்வது, ஏதாவது என்மீது கோபமோ, கட்சிமீது கோபமோ இருந்தால், அவைகளையெல்லாம் மறந்துவிட்டு இந்த வேளாண்மைத் துறைமூலமாக $4\frac{1}{2}$ கோடி மக்கள் இருக்கிற தமிழ்நாட்டில், எல்லோருக்கும் உணவு

கிடைக்க வேண்டுமென்பது மட்டுமின்றி, வெளி மாநிலங்களுக்கும் அரிசி கொடுக்கிறோம் என்ற நல்ல பெயரைக் காப்பாற்ற நாம் எல்லா வற்றையும் மறந்து விட்டு, எனக்கு ஒன்றும் தெரியாது என்று சொன்னால் கூட, உங்களோடு ஒத்துழைத்து இந்தக் காரியத்தில் பங்குக்கொள்ளத் தயாராக இருக்கிறேன் என்பதை மீண்டும் ஒருமுறை சொல்லிக் கொண்டு, இப்பொழுது நான் பதில் சொல்லாத கருத்துக்களை எழுதிவைத்துக் கொண்டு, பின்னால் எடுத்துப்பார்த்து, பதில் சொல்ல முடியும் என்ற உறுதியைச் சொல்லியிருக்கிற காரணத்தினால் வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்த நண்பர்கள் இப்பொழுது வற்புறுத்தாமல் இந்த மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றுமாறு நான் பணிவோடு கேட்டுக்கொள் கிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் கரும்பு விவசாயத்தைப் பற்றி ஒருசில கருத்துக்களைக் கூறினார்களே. அது சம்பந்தமாக எந்தவிதமான விளக்கமும் அமைச்சர் அவர்களுடைய உரையில் வரவில்லை. அது சம்பந்தமாக அரசாங்கத்தின் கருத்து என்ன என்பதைச் சுருக்கமாகக் கூறினால் நலமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: கரும்பு விவசாயிகளுக்கு கூட்டுறவு துறையிலே 7 மில்கள் இருக்கின்றன தனியார் துறையிலே 7 மில்கள் இருக்கின்றன. இப்பொழுது நாம் கரும்புக்குச் சொல்லி யிருக்கிற விலையைக் கூறுகிறேன். ஆம்பூர் ஆலைக்கு மத்திய அரசு கொடுக்கச் சொல்லியிருப்பது ரூ. 85·60; நாம் இப்பொழுது கொடுக்கச் சொல்லியிருக்கிற விலை ரூ. 101. மதுராந்தகம் ஆலைக்கு மத்திய அரசு சொன்னது ரூ. 87·50; நாம் இப்பொழுது கொடுக்கச் சொல்லியிருப்பது ரூ. 95·30. அமராவதி ஆலைக்கு மத்திய அரசு சொன்னது ரூ. 80; நாம் இப்பொழுது கொடுக்கச் சொல்லியிருப்பது ரூ. 95·30. சேலம் கூட்டுறவு ஆலைக்கு மத்திய அரசு சொன்னது ரூ. 82·80; நாம் இப்போது கொடுக்கச் சொல்லியிருப்பது ரூ. 95·30. கள்ளக்குறிச்சி ஆலைக்கு மத்திய அரசு சொன்னது ரூ. 80; நாம் இப்பொழுது கொடுக்கச் சொல்லியிருப்பது ரூ. 93·50. நேஷனல் கோவாப்பரேடிவ்—அலங்காநல்லூரில் என்று நினைக்கிறேன் மத்திய அரசு சொன்னது ரூ. 86·60; நாம் இப்போது கொடுக்கச் சொல்லியிருப்பது ரூ. 100. அதேபோல், தர்மபுரி கூட்டுறவு ஆலைக்கு மத்திய அரசு கொடுக்கச் சொன்னது ரூ. 88·50; நாம் இப்போது கொடுக்கச் சொல்லியிருப்பது ரூ. 90.

அதே போல், தனியார் ஆலைகள்.

ஈ.ஐ.டி. பாரி கம்பெனிக்கு மத்திய அரசு கொடுக்கச் சொன்னது ரூ. 80·90: நாம், இப்பொழுது கொடுக்கச் சொல்லியிருப்பது ரூ. 90. காவேரி ஷுகர் ஆலைக்கு மத்திய அரசு சொன்னது ரூ. 80; நாம் இப்போது கொடுக்கச் சொல்லி இருப்பது ரூ. 92·50. சௌத் இந்தியா ஸ்டீல் அண்டு ஷுகர் மில்ஸ், மத்திய அரசு கொடுக்கச் சொல்லியிருப்பது





ரூ. 83·80; நாம் இப்போது கொடுக்கச் சொல்லியிருப்பது ரூ. 91·60. அருணா ஆலைக்கு மத்திய அரசு கொடுக்கச் சொன்னது ரூ. 81·90; இப்போது நாம் கொடுக்கச் சொல்லியிருப்பது ரூ. 95·30. சக்தி ஆலைக்கு மத்திய அரசு கொடுக்கச் சொன்னது ரூ. 88·50; இப்போது நாம் கொடுக்கச் சொல்லியிருப்பது ரூ. 102·90. கோத்தாரி ஆலைக்கு மத்திய அரசு கொடுக்கச் சொன்னது விலை ரூ. 85·60; இப்போது நாம் கொடுக்கச் சொல்லியிருப்பது ரூ. 100. ஆரூரான் ஆலைக்கு மத்திய அரசு கொடுக் கச்சொல்லியிருப்பது ரூ. 80; இப்போது நாம் கொடுக்கச் சொல்லியிருப்பது ரூ. 92·50. இப்பொழுது கொடுக்கச் சொல்லியிருப்பது என்று இப் பொழுது கொடுக்கச் சொல்லியிருப்பது என்று, நான் மீண்டும் மீண்டும் வற்புறுத்திக் கூறுவதே கடைசியாக இந்த மில்களுடைய வரவு செலவைப் பார்த்து, ஒரு பகுதி லாபத்தைக் கரும்பு விவசாயிகளுக்குக் கொடுக்க வேண்டுமென்று நாம் கட்டாயப்படுத்தி இருக்கிறோம். மத்திய அரசுக்குத் தெரிவித்து இருக்கிறோம். ஆந்திராவில் ஆலை முதலாளிகளுக்கு 60 சதவீதமும் கரும்பு விவசாயிகளுக்கு 40 சதவீதமும் பங்கு அளிக்கிறார்கள். ஆனால் தமிழ்நாட்டிலே, நாம் சிபாரிசு செய்திருப்பது, ஆலை முதலாளி களுக்கு 50 சதவிகிதம், கரும்பு விவசாயிகளுக்கு 50 சதவிகிதம் என்ப தாகும். இங்கு கரும்பு விவசாயிகளுக்கு அதிகப்படியாக கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது.

நிதிக் கோரிக்கை எண். 20-க்கு திருவாளர்கள் செவடி. எஸ். சுந்தரபாரதி எம்.ஏ. லத்தீப், கே. எஸ். கோதண்டராமையா, ஜே. ஜேம்ஸ், பி. வெங்கட சாமி ஆகியோர் கொடுத்திருந்த வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன், திரும்பப்பெற்றுக் கொள்ளப்பட்டன.

திருவாளர்கள் பெ. சௌந்தரபாண்டியன், ஏ. சுப்பிரமணியம் ஆகியோர் இருக்கையில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங் கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டன வாகக் கருதப்பட்டன.

திரு. சோ. அழகர்சாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவை யின் முடிவிற்கு விடப்பட்டு தோல்வியுற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி— "நிதிக் கோரிக்கை எண். 20—வேளாண்மை என்ற தலைப்பின்கீழ் ரூ. 27, 43, 30, 100-க்கு மேற்படாத தொகைஅரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக் கோரிக்கை எண். 48க்கு திருவாளர்கள் கே. எஸ். கோதண்டராமையா, ஜே. ஜேம்ஸ், சௌடி எஸ். சுந்தரபாரதி ஆகியோர் கொடுத்திருந்த வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டன.

திருவாளர்கள் கே. என். குமாரசாமி, கே. எ. வகாப், டாக்டர் எச். வி. ஹாண்டே ஆகியோர் இருக்கையில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பட்டனவாகக் கருதப்பட்டன.

திரு. சோ. அழகர்சாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு தோல்வியுற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—

"நிதிக் கோரிக்கை எண். 48—வேளாண்மை குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 31,69,75,100-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக் கோரிக்கை எண். 22-க்கு திருவாளர்கள் கோவை செழியன், சௌடி எஸ். சுந்தரபாரதி, பி. வெங்கடசாமி, கே. எஸ். கோதண்டராமையா, என். டென்னிஸ் ஆகியோர் கொடுத்திருந்த வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பட்டன.

திருவாளர்கள் கே. எம். சுப்பிரமணியம், கே. எ. வகாப், திருமதி த. ந. அனந்தநாயகி ஆகியோர் இருக்கையில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டனவாகக் கருதப்பட்டன.

திரு. சோ. அழகர்சாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு தோல்வியுற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—

"நிதிக் கோரிக்கை எண் 22—கால்நடை வளர்ப்பு என்ற தலைப்பின் கீழ் ரூ. 4,59,44,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

நிதி கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.



மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று நாளைக் காலை 9-00 மணியளவில் பேரவை மீண்டும் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை மாலை 6·28 மணியளவில் ஒத்திவைக்கப்பட்டது.

### 7. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. STATUTORY RULES AND ORDERS.

186. Notification issued with G.O. Ms. No. 32, Rural Development and Local Administration, dated the 3rd January 1974 in regard to division of Sathur Municipality into twenty wards and reservation of one seat for Women in the Sattur Municipal Council. *[Laid on the table of the House under section* 304 (d) *of the Tamil Nadu District Municipalities Act,* 1920 *(Tamil Nadu Act V of* 1920)].

187. Notification issued with G.O. Ms. No. 92, Rural Development and Local Administration, dated the 18th January 1974 in regard to division of Idappadi Municipality into twenty-four wards and reservation of one seat for Scheduled Castes and one seat for women in the Idappadi Municipal Council. *[Laid on the table of the House under section* 304 (d) *of the Tamil Nadu District Municipalities Act,* 1920 *(Tamil Nadu Act V of* 1920)].

188. Notification issued with G.O. Ms. No. 100, Rural Development and Local Administration, dated the 18th January 1974 in regard to division of Sankarankoil Municipality into twenty-four wards and reservation of one seat for Scheduled Castes and one seat for Women in the Sankarankoil Municipal Council. *[Laid on the table of the House under section* 304(d) *of the Tamil Nadu District Municipalities Act,* 1920 *(Tamil Nadu Act V of* 1920)].

189. Notification issued with G.O. Ms. No. 93, Rural Development and Local Administration, dated the 18th January 1974 in regard to division of Sathyamangalam Municipality into twenty wards and reservation of one seat for Scheduled Castes and one seat for Women in the Sathyamangalam Municipal Council. *[Laid on the table of the House under section* 304 (d) *of the Tamil Nadu District Municipalities Act.* 1920 *(Tamil Nadu Act V of* 1920)].

## B. Reports, Notifications and other Papers.

*76. Speech by Hon. Thiru K. Anbazhagan, Minister for Health on Demand for Public Health grants 1974–75. (English and Tamil).

*77. Speech by Hon. Thiru K. Anbazhagan, Minister for Health on Demand for Medical Grants 1974–75 (English).

*78. Policy Note on Demand No. 33. Urban Development, 1974–75 (English).

*79. Policy Note on Leprosy Beggars Rehabilitation Programme for 1974–75 under Demand No. 18 (Tamil).

†80. Speech by Hon. Thiru K. Anbazhagan, Minister for Health on Demand for Medical Grants, 1974–75 (Tamil).

†81. Speech by Hon. Thiru K. Anbazhagan, Minister for Public Health on Demand No. 47—Capital Outlay on Public Health, Sanitation and Water Supply (English and Tamil).

†82. Policy Note on Demand No. 33—Urban Development 1974–75 (Tamil).

†83. Performance Budget on Health Services and Family Planning, 1974–75.

‡84. Performance Budget on Medical Education 1974–75.

---

*Despatched to Members on 16th March 1974.
†Despatched to Members on 17th March 1974.
‡Laid on the table of the House on 18th March 1974.



## இணைப்பு–I.

[514–ம் பக்கத்தில 504–ஆம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவுக்குரிய விடையைக் காண்க.]

During the IV Five-Year Plan period, three large-scale Silk Farms were started at Kolatti in Dharmapuri district, Madahalli in Coimbatore district and Masinagudi in the Nilgiris district. The total area covered under mulberry in these three farms is about 1,040 acres. These large-scale Silk Farms offer large-scale employment to the under employed villagers and also increase the cocoon production in the State.

2. The Government have been giving liberal financial assistance to the sericulturists by way of loans and subsidies for sinking wells and construction of rearing sheds. During 1973–74, the Government have sanctioned schemes for starting mulberry nurseries to popularise the new Mysore variety and Pilot-*cum*-Service Centres in different places to educate the new agriculturists in the art of mulberry cultivation, silk worn rearing and silk reeling.

3. A scheme has also been formulated to introduce sericulture in eight blocks in South Arcot district where the Small Farmers Development Agency Scheme is in implementation. The scheme is to bring 50 acres in each block in a phased programme to a total of 400 acres in three years under mulberry cultivation and silk worm rearing.

4. The Government have made a tentative provision of Rs. 128·07 lakhs for the development of sericulture of industry in V Five-Year Plan period. A crash programme to bring 10,000 acres under mulberry cultivation in Dharmapuri district is also under the active consideration of the Government.

நான்காம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் தருமபுரி மாவட்டத்திலுள்ள கோலட்டி, கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள மாதஹள்ளி, நீலகிரி மாவட்டத்திலுள்ள மசினகுடி ஆகிய இடங்களில் பெரிய அளவில் மூன்று பட்டுப் பண்ணைகள் தொடங்கப்பட்டன. இம்மூன்று பண்ணைகளிலும் மொத்தம் சுமார் 1,040 ஏக்கர் பரப்பளவில் முசுக்கட்டை மரங்கள் வளர்க்கப்படுகின்றன. பெரிய அளவிலான இப்பட்டு வளர்ப்புப் பண்ணைகள் போதிய வேலை வாய்ப்பற்ற ஏராளமான கிராம மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கிறது. மேலும் இம் மாநிலத்தில் பட்டுக் கூட்டுப்புழு உற்பத்தியையும் பெருக்குகிறது.

2. கிணறுகளைத் தோண்டுவதற்காகவும், பட்டுப்புழு வளர்ப்புக் கொட்டகைகளைக் கட்டுவதற்காகவும் கடன்கள், உதவித் தொகைகள் மூலம் பட்டுப்புழு வளர்ப்பவர்களுக்கு அரசு தாராளமாக நிதியுதவி அளித்து வந்துள்ளது. மைசூரின் புதிய பட்டு வகையைப் பரப்புவதற்காக

[1974 மார்ச் 19

முசுக்கட்டை செடிப் பண்ணைகளைத் தொடங்குதல், முசுக்கட்டை மரங்களைப் பயிரிடுதல், பட்டுப்புழு வளர்ப்பு, பட்டுப் புழுக் கூட்டினின்று கச்சாப்பட்டு பிரித்தெடுத்தல் ஆகியவற்றைப் புதிய வேளாண்மைத் தொழிலாளர்கள் தெரிந்து கொள்ளும் பொருட்டு, வெவ்வேறு இடங்களில் முன்னோடி பணி நிலையங்களைத் தொடங்குதல் ஆகியவை பற்றிய திட்டங்களுக்கு அரசு 1973–74-ல் ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

3. சிறு உழவர்கள் மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்படுகிற தென் ஆர்க்காடு மாவட்டத்தில் எட்டு வளர்ச்சி வட்டாரங்களில் பட்டு வளர்ப்பினை மேற்கொள்வதற்காகும் திட்டம் ஒன்று வகுக்கப்பட்டுள்ளது. முசுக்கட்டை மரங்களைப் பயிரிடுதல், பட்டுப்புழு வளர்ப்புப் பணிகள் மூன்று ஆண்டுகளில் ஒவ்வொரு வளர்ச்சி வட்டாரத்திலும் 50 ஏக்கர் என்ற வீதத்தில் மொத்தம் 400 ஏக்கர் பரப்பளவில் படிப்படியாகச் செயலுக்குக் கொண்டு வரப்படும்.

4. ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் பட்டுத்தொழில் மேம்பாட்டிற்காக அரசு ரூ. 128·07 லட்சம் தாற்காலிக நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. தருமபுரி மாவட்டத்தில் 10,000 ஏக்கர் பரப்பளவில் முசுக்கட்டை மரங்கள் பயிரிடுவதற்காக விரைவுத் திட்டம் ஒன்றை அரசு ஆழ்ந்து பரிசீலித்து வருகிறது.



## இணைப்பு II.

[523-ம் பக்கத்தில் 507-ஆம் எண்ணுள்ள வெள்ளிக் குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.]

1973-ஆம் ஆண்டு வரையிலும் மத்திய அரசினால் தமிழ்நாட்டிலுள்ள மூன்று தொழிலாளர் கல்வி நிலையங்களுக்கு வழங்கப்பட்ட தொகையின் விவரம் வருமாறு :—

| ஆண்டு. | சென்னை. | மதுரை. | கோயம்புத்தூர். | மொத்தம். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | ரூ. | ரூ. | ரூ. | ரூ. |
| 1960–61 .. .. | 35,156·14 | .. | .. | 35,156·14 |
| 1961–62 .. .. | 77,500·11 | .. | .. | 77,500·11 |
| 1962–63 .. .. | 97,384·49 | .. | .. | 97,384·49 |
| 1963–64 .. .. | 1,19,917·91 | 42,977·25 | .. | 1,62,895·16 |
| 1964–65 .. .. | 1,51,848·79 | 1,48,166·68 | .. | 3,00,015·47 |
| 1965–66 .. .. | 1,96,787·72 | 1,57,724·75 | 13,461·20 | 3,67,973·67 |
| 1966–67 .. .. | 1,71,633·64 | 1,73,500·23 | 91,043·69 | 4,36,177·56 |
| 1967–68 .. .. | 1,69,139·96 | 2,02,657·55 | 1,07,244·31 | 4,79,041·82 |
| 1968–69 .. .. | 1,72,216·16 | 1,80,622·86 | 1,12,438·52 | 4,65,277·54 |

இணைப்பு II—தொடர்ச்சி.

| ஆண்டு. | சென்னை. | மதுரை. | கோயம்புத்தூர். | மொத்தம். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | ரூ. | ரூ. | ரூ. | ரூ. |
| 1969–70 .. .. .. | 1,70,683·84 | 1,64,310·63 | 1,23,873·48 | 4,58,867·95 |
| 1970–71 .. .. .. | 2,39,364·71 | 1,94,952·37 | 1,26,975·82 | 5,61,292·90 |
| 1971–72 .. .. .. | 2,19,499·40 | 1,81,532·81 | 1,40,252·52 | 5,41,284·73 |
| 1972–73 .. .. .. | 2,46,701·89 | 1,95,505·36 | 1,79,069·08 | 6,21,276·33 |
| மொத்தம் .. | 20,67,834·76 | 16,41,950·49 | 8,94,358·62 | 46,04,143·87 |

(இ) தமிழ்நாட்டில் சென்னை, கோயம்புத்தூர், மதுரை ஆகிய இடங்களில் மூன்று வட்டார நிலையங்கள் செயல்படுகின்றன.



(a) The amount granted by the Government of India to the three Regional Centres of Workers Education Scheme **in Tamil Nadu up to the year 1973 is as follow ;—**

| *Year.* | *Madras.* | *Madurai.* | *Coimbatore.* | *Total.* |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | RS. | RS. | RS. | RS. |
| 1960–61 .. .. .. .. | 35,156·14 | .. | .. | 35,156·14 |
| 1961–62 .. .. .. .. | 77,500·11 | .. | .. | 77,500·11 |
| 1962–63 .. .. .. .. | 97,384·49 | .. | .. | 97,384·49 |
| 1963–64 .. .. .. .. | 1,19,917·91 | 42,977·25 | .. | 1,62,895·16 |
| 1964–65 .. .. .. .. | 1,51,848·79 | 1,48,166·68 | .. | 3,00,015·47 |
| 1965–66 .. .. .. .. | 1,96,787·72 | 1,57,724·75 | 12,461·20 | 3,67,973·67 |
| 1966–67 .. .. .. .. | 1,71,633·64 | 1,73,500·23 | 91,043·69 | 4,36,177·56 |
| 1967–68 .. .. .. .. | 1,69,139·96 | 2,02,657·55 | 1,07,244·31 | 4,79,041·82 |
| 1968–69 .. .. .. .. | 1,72,216·16 | 1,80,622·86 | 1,12,438·52 | 4,65,277·54 |
| 1969–70 .. .. .. .. | 1,70,683·84 | 1,64,310·63 | 1,23,873·48 | 4,58,867·95 |
| 1970–71 .. .. .. .. | 2,39,364·71 | 1,94,952·37 | 1,26,975·82 | 5,61,292·90 |
| 1971–72 .. .. .. .. | 2,19,499·40 | 1,81,532·81 | 1,40,252·52 | 5,41,284·73 |
| 1972–73 .. .. .. .. | 2,46,701·89 | 1,95,505·36 | 1,79,069·08 | 6,21,276·33 |
| Total .. | 20,67,834·66 | 16,41,950·49 | 8,94,358·62 | 46,04,143·87 |

(b) In Tamil Nadu three Regional Centres are functioning at Madras, Madurai and Coimbatore.

## இணைப்பு-III

(539-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

### 1974-75 ஆம் ஆண்டு வேளாண்மைக் கோரிக்கைபற்றிய குறிப்பு.

1974-75 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்—20 "வேளாண்மை" என்பதன்கீழ் ரூ. 27,43,30,100-க்கு மேற்படாத மானியமும், கோரிக்கை எண்—48 "வேளாண்மை குறித்த மூலதனச் செலவு" என்பதன்கீழ் ரூ. 31,69,75,100-க்கு மேற்படாத மானியமும் அரசுக்கு வழங்கப்பட வேண்டுமென நான் முன்னுரைக்கிறேன்.

1974-75 ஆம் ஆண்டில் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ள பல்வேறு வேளாண்மை உற்பத்தித் திட்டங்கள் குறித்த சுருக்க ஆய்வுரையை நான் உங்கள்முன் வைக்கிறேன்.

### பருவ நிலைமைகள்

1973 ஆம் ஆண்டு, மார்ச் மாதத்திற்கும் மே மாதத்திற்கும் இடைப்பட்ட கோடை மாதங்களில், இம் மாநிலத்தின் பெரும் பாலான இடங்களில் பொதுவாக வறட்சி நிலவியது. இயல்பாகவே 137.8 மில்லி மீட்டர் அளவுக்கு மழை இருக்க வேண்டும். ஆனால், இக்கோடைப் பருவகாலத்தில் பதிவான மழையோ 78.0 மில்லி மீட்டர்தான். ஏப்ரல்-மே மாதங்களில் வான் பொய்த்ததன் காரணமாக, இம் மாநிலத்தின் பெரும்பாலான பகுதிகளில், குறிப்பாக, செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு, தஞ்சாவூர், கோயம்புத்தூர், சேலம் மாவட்டங்களில் பாசனம் பெறும் கோடைக்காலப் பயிர்கள் தொடர்பாக வேளாண்மைப் பணிகள் பெரிதும் பாதிக்கப்பட்டன.

தென்மேற்குப் பருவமழை ஏறத்தாழ உரியகாலத்தில் அதாவது மே மாத இறுதியில், மேற்குக் கரையோரமாகத் தொடங்கியது. செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு, சேலம், மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களில் ஓரளவுக்கு நல்ல மழை பெய்தது. இவ்விடங்களிலுள்ள புன்செய் நிலங்களில் பொருத்தமான பருவத்தில் விதைப்புப் பணியை மேற்கொள் வதற்கு இம்மழை பெரிதும் துணைபுரிந்தது. மழை பருவத்தில்



இம் மாவட்டங்களில் இயல்பாகவும், எல்லா இடங்களிலும் ஓரளவு சீராகவும் மழை பெய்தது. ஏனைய மாவட்டங்களில், இயல்பான அளவுக்கும் குறைவாகவே மழை பெய்தது. மாநிலம் முழு வதையும் மொத்தமாகக் கணக்கிற்கொண்டால் தென்மேற்கு மழை பருவகாலத்தில் இயல்பாகப் பெய்திருக்க வேண்டிய மழையின் அளவு 307.3 மில்லி மீட்டராகும்; ஆனால், பெய்ததோ 299.08 மில்லி மீட்டர்தான்.

வடகிழக்குப் பருவத் தொடக்கத்தில் பெய்த மழை ஊக்க மளிப்பதாய் இருந்தது. ஆயினும், எதிர்பார்த்த அளவுக்குத் தொடர்ந்து மழை பெய்யவில்லை. அதன் காரணமாகவே ஏரி களிலும், நீர்த்தேக்கங்களிலும் நீர் நிரம்பவில்லை. 1973 ஆம் ஆண்டு டிசம்பர் இறுதியில், மழைபருவத்தின் கடைசி நிலையில், மாநிலத்தின் ஒரு சில பகுதிகளில் கடும் மழை பெய்தது. மொத்தத்தில், பருவ நிலைகளைச் சுருங்கக்கூறின், மானவாரிப் பயிர் களான சிறு தானியங்கள், எண்ணெய் வித்துக்கள், பயறு வகை கள் ஆகியவற்றின் உற்பத்தி இயல்பான அளவுக்கு இருந்தது. நெல், கரும்பு, வாழை, பருத்தி, காய்கறி முதலியவற்றின் உற்பத்தி ஓரளவுக்குப் பாதிக்கப்பட்டது. வடகிழக்குப் பருவகாலத்தின் பின்பகுதியில், குறிப்பாக இம் மாநிலத்தின் வட பகுதிகளில் மழை யில்லை. எனவே, இப்பருவத்தின் பின்பகுதியில் கோடைப் பயிர்த் திட்டத்திற்கு நீர் கிடைப்பது பாதிக்கப்படலாம்.

மொத்தத்தில், இவ்வாண்டில் பெருமளவு பூச்சிநோயோ, பயிர் நோயோ காணப்படவில்லை. வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு, செங்கற்பட்டு, மதுரை, திருச்சிராப்பள்ளி, சேலம், கோயம்புத்தூர் 60,000 ஏக்கர் பரப்பளவில் நிலக்கடலைப் பயிரைப் பாதிக்கும் மாவட்டங்களில் செந்தலைக் கம்பளிப் புழு, 'சுருள்பூச்சி' ஆகிய வற்றை ஒழிப்பதற்கு பெருமளவில் பூச்சிகொல்லி மருந்து தெளிக் கப்பட்டது. இம் மாநிலத்தின் வெவ்வேறு பகுதிகளில், நெற் பயிரைப் படைப் புழுக்களும், குருத்துப் புழுக்களும், வெண்டை, தக்காளி, கத்திரி ஆகிய செடிவகைகளை வண்டும், பருத்தியை உருண்டைப் புழுக்களும் தாக்கியிருப்பது கண்டு பிடிக்கப்பட்டது. உரிய நேரத்தில் பூச்சிக்கொல்லி மருந்து தெளிக்கப்பட்டு பயிர் நோய்கள் செவ்விய முறையில் கட்டுப்படுத்தப்பட்டன.

[1974 மார்ச் 19

## வேளாண்மை உற்பத்தி

1973-74 ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்படும் வேளாண்மை உற்பத்தியின் அளவுகளாவன :—

| | |
|---|---|
| அரிசி | 57 இலட்சம் டன் |
| சிறுதானியங்கள் | 15 இலட்சம் டன் |
| பருப்பு வகைகள் | 2.10 இலட்சம் டன் |
| கரும்பு வெல்லம் | 11.00 இலட்சம் டன் |
| எண்ணெய் வித்துக்கள் | 11.50 இலட்சம் டன் |
| பருத்திப் பஞ்சு | 0.72 இலட்சம் டன் |

1972-73 ஆம் ஆண்டின் வேளாண்மை உற்பத்தி 94.23 இலட்சம் மெட்ரிக் டன்களாக இருக்க 1973-74 ஆம் ஆண்டின் வேளாண்மை உற்பத்தியின் மொத்த அளவு 97.22 இலட்சம் மெட்ரிக் டன்களாக பெருகியது. எனவே 1972-73 ஆம் ஆண்டைவிட 1973-74 ஆம் ஆண்டில் 3.1 சத விதம் உற்பத்தியின் அளவு அதிகரித்துள்ளது. அதேபோல 1974-75 ஆம் ஆண்டில் எதிர்பார்க்கும் உற்பத்தியின் அளவுகளாவன :—

| | |
|---|---|
| அரிசி | 59 இலட்சம் டன் |
| சிறுதானியங்கள் | 15.70 இலட்சம் டன் |
| பருப்பு வகைகள் | 2.30 இலட்சம் டன் |
| வெல்லம் | 11.30 இலட்சம் டன் |
| எண்ணெய் வித்துக்கள் | 12.07 இலட்சம் டன் |
| பருத்திப் பஞ்சு | 0.76 இலட்சம் டன் |

வேளாண்மைத் துறையால் எடுக்கப்பட்ட தீவிர முயற்சிகள், அளிக்கப்பட்ட நல்ல வசதிகள், வழங்கப்பட்ட நல்ல விளைவைத் தரக்கூடிய விதைகள், ஏற்படுத்தப்பட்ட அடிப்படை வசதிகள் ஆகியவற்றின் பலனாக நடப்பு ஆண்டில் ஒரு ஹெக்டேருக்கு 2,158 கிலோ கிராம் சராசரி விளைச்சல் ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. 1974-75 ஆம் ஆண்டில் ஒரு ஹெக்டேருக்கான விளைச்சலை 2,234 கிலோ கிராம் ஆக அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.



[1974 மார்ச் 19

மிகு பயன்தரும் வகைகள் திட்டத்தின்கீழ் 1973-74 ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்படும் சாதனைகளாவன :—

மிகு பயன்தரும் நெல்சாகுபடி திட்டத்தின்கீழ் 22.26 இலட்சம் ஹெக்டேர் பரப்பளவு—(55.00 இலட்சம் ஏக்கர்).

மிகுபயன்தரும் கலப்பு இன சிறுதானிய வகைகளின் சாகுபடி திட்டத்தின்கீழ்—4.20 இலட்சம் ஹெக்டேர் (10.37 இலட்சம் ஏக்கர்).

1974-75 ஆம் ஆண்டில் மிகுபயன்தரும் நெல் வகைகளின் கீழ் 22.00 இலட்சம் ஹெக்டேரில் நெல்லும், 5.50 இலட்சம் ஹெக்டேரில் (13.59 இலட்சம் ஏக்கர்) மிகுபயன்தரும் மற்றும் கலப்பினங்களின் கீழ் சிறுதானியங்களும் பயிரிடப்படுவதை உறுதி செய்யவும் கருதப்பட்டுள்ளது.

## பருப்பு வகைகள்

பருப்பு வகைகள் பயிரிடப்படும் நிலப் பரப்பிலும், விளைவிக்கப் படும் பருப்பு வகைகளின் அளவிலும், வியத்தகு அதிகரிப்பு ஏற்பட்டிருக்கிறது. 1970-71 ஆம் ஆண்டில் 12.15 இலட்சம் ஏக்கர் நிலத்தில் 1.33 இலட்சம் மெட்ரிக் டன் பருப்பு வகைகள் உற்பத்தி செய்யப்பட்டிருக்க, 1973-74 ஆம் ஆண்டில் 20.12 இலட்சம் ஏக்கரில் 2.15 இலட்சம் மெட்ரிக் டன் பருப்பு வகைகள் உற்பத்தி செய்யப் படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

1974-75 ஆம் ஆண்டுக் காலத்தில் 21.06 இலட்சம் ஏக்கரில் பருப்பு வகைகளை உற்பத்தி செய்யக் கருதப்பட்டுள்ளது. உற்பத்தியின் இலக்கு 2.30 இலட்சம் மெட்ரிக் டன்களாகும். உழவர்கள், முனைப்புத் திட்டங்களைப் பின்பற்றச் செய்வதற்காக, தரம் மிக்க பருப்பு வகைகளைக் கொண்ட 1,000 செயல் முறை விளக்கப் பண்ணைகளை அமைக்க கருதப்பட்டுள்ளது. தரமான முதல் நிலை, இரண்டாம் நிலை விதைகள் சீராகக் கிடைக்க வகை செய்யும் வகையில் 15,000 ஏக்கர் நிலங்களை விதைப் பண்ணை களாகப் பயன்படுத்தக் கருதப்பட்டுள்ளது.

புதிய துணிவான செயலாக, எங்கெல்லாம் சாத்தியமோ அங்கெல்லாம், கொள்ளுக்குப் பதிலாக, உளுத்தம் பருப்பு, பச்சைப் பயறு போன்ற பருப்பு வகைகளைப் பயிரிட விரிவான

சோதனைகள் நடத்தக் கருதப்பட்டுள்ளது. 1974-75 ஆம் ஆண்டுக் காலத்தில் இம் மாவட்டத்தில் பல்வேறு வேளாண்மை வளர்ச்சித் திட்டங்களை மும்முரப்படுத்தக் கருதப்பட்டுள்ளது.

புதிய வகைகளை அறிமுகப்படுத்துதல்

1973-74 ஆம் ஆண்டில் வேளாண்மை இயக்குநர் அலுவலகத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய வகைகளாவன :—

(MCU) 8 பருத்தி

(PR) 202 கேழ்வரகு

(KS) தினை

5948 நெல்

7711 நெல்

(PS) 7 பச்சைப்பயறு

1973-74 ஆம் ஆண்டில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தால் அறிமுகம் செய்யப்பட்ட புதிய வகைகளாவன :—

(T) 9 உளுந்து
(1) CO 36 நெல்
(2) POL வேர்க்கடலை
(3) CO 8 லாப்லாப் (ஒருவகை அவரை)
(4) CO 2 சப்போட்டா
(5) CO 2 பப்பாளி
(6) CO 2 சாமை
(7) CO 2 உளுந்து
(8) CO 2 பச்சைப்பயறு
(9) CO 37 நெல்
(10( CO 4 தினை
(11) 771 சோளம்
(12) COHI சோளம்
(13) COH சோளம்
(14) CO 2 காராமணி



மும்முர வேளாண்மை மாவட்டத் திட்டம்

மேம்படுத்தப்பட்ட வேளாண்மை உத்திகளை ஒருங்கிணைந்த முறையிலும், மும்முரமாகவும் பயன்படுத்துவதன் வாயிலாக வேளாண்மை உற்பத்தியைப் பெருக்குவதை நோக்கமாகக் கொண்டு இத் திட்டம் தஞ்சாவூர் மாவட்டத்தில் 1960 ஆம் ஆண்டு முதல் செயல்படத் தொடங்கியது. இம் மாவட்டத்தில் வேளாண்மை உற்பத்தியைப் பெருக்குவதற்கு, கருத்தரங்குகள், பயிற்சித் திட்டங்கள், வேளாண்மைப் பருவகாலத்திற்கு முன்னர் பெருமளவில் மேற்கொள்ளப்படும் இயக்கங்கள், கூட்டங்கள், வானொலி உரைகள், சுவரொட்டிகள், விளம்பர அட்டைகள் செய்முறை ஆராய்ச்சி முதலியவைகளை வளர்ச்சிப் பணியாளர்களும், வேளாண்மைத் துறை வல்லுநர்களும் பயன்படுத்துகின்றனர். மும்முர வேளாண்மை மாவட்டத் திட்டங்களை மேற்கொண்டதன் விளைவாக கழிமுகப் பகுதிகளில் 92 சத விதம் மிகுபயன்தரும் வகைகள் பயிரிடப்பட்டுள்ளன. இம் மாவட்டத்தில் நெல் பயிரிடப்படும் 6.59 லட்சம் ஹெக்டேர் பரப்பில் (16.77 லட்சம் ஏக்கர்கள்), 6.14 லட்சம் ஹெக்டேர் பரப்பில் (15.36 லட்சம் ஏக்கர்கள்) மிகுபயன்தரும் வகைகள் பயிரிடப்பட்டுள்ளன. நைட்ரஜன் உரங்கள், பயிர் பாதுகாப்பு இரசாயனப் பொருட்களின் அளவு கணிசமாக பெருகியுள்ளது. உழவர்களின் மனப்போக்கில் மாறுதல் ஏற்பட்டுள்ளது. 1959-60-ல் 9.85 லட்சம் டன் அரிசி உற்பத்தி செய்த இம் மாவட்டம், 1973-74-ல் 15.48 லட்சம் டன் அரிசியும், 1974-75-ல் 16.10 லட்சம் டன் அரிசியும் உற்பத்தி செய்யுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இம் மாவட்டத்தில் ஹெக்டேர் ஒன்றுக்கு உற்பத்தி செய்யப்பட்ட அரிசியின் சராசரி அளவு 1960-61-ல் 2,250 கிலோ கிராம் ஆகும். இது 1972-73-ல் 3,011 கிலோ கிராமாக அந்த அளவு உயர்ந்தது. அதாவது உற்பத்தியின் சராசரி அளவு 32 சத விதம் அளவு பெருகியுள்ளது.

மும்முர வேளாண்மை பகுதித் திட்டம்.

இத் திட்டம் செங்கற்பட்டு, மதுரை, திருநெல்வேலி, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இது 1974-75-ல் மேற்கொண்டும் ஒரு மாவட்டத்திற்கு நீட்டிக்கப்படும்.

[1974 மார்ச் 19

## அரசு விதைப் பண்ணைகள்.

பெரிய அளவில் இயங்கிவரும் அண்ணா பண்ணை உட்பட இம் மாநிலத்தில் தற்போது 55 அரசு விதைப் பண்ணைகள் செயல்பட்டு வருகின்றன. இவற்றின் மொத்தப் பரப்பளவு 5,135 ஏக்கராகும். இவற்றில் 3,897 ஏக்கர் பரப்பளவு சாகுபடி செய்யத் தக்கவையாகும்.

மாநில அரசு விதைப் பண்ணைகள் மொத்தமாகப் பார்க்குமிடத்து ஆதாயத்தில் செயல்பட்டு வருகின்றன.

விதைத் தரச் சான்றிதழ் அளிக்கும் வசதிகளும், விதைப் பரிசோதனை வசதிகளும் பெருக்கப்படும்.

1. கோயம்புத்தூரிலும், மதுரையிலும் உள்ள விதைப் பரிசோதனை ஆய்வுக் கூடங்களில் விதைகளின் தரம் தூய்மை பரிசோதிக்கப்பட்டு அவை வேளாண்மைக் கிடங்குகள் மூலம் வழங்கப்படுகின்றன.

2. 1973-74-ல் (1974 சனவரி வரையில்) பரிசோதனை செய்யப்பட்ட மாதிரிகளின் எண்ணிக்கை 10,668 ஆகும்.

3. இம் மாநிலத்திலுள்ள விதைத் தரச் சான்றிதழ் நிறுவனத்தில் விதைத் தரச் சான்றிதழ் அதிகாரி ஒருவரும், அவருக்கு உதவியாக விதைத் தரச் சான்றிதழ் உதவி அதிகாரிகள் இருவரும் உள்ளனர். இவர்களைத் தவிர வேளாண்மைத் துணை அதிகாரிகள் 24 பேரும், செய்முறை விளக்க மேஸ்திரிகள் அறுவரும் உள்ளனர். விதைத் தரச் சான்றிதழ் அதிகாரி, விதைத் தரச் சான்றிதழ் உதவி அதிகாரி ஒருவர் ஆகியோரது தலைமை அலுவலகம் திருச்சிராப்பள்ளியில் உள்ளது. விதைத் தரச் சான்றிதழ் உதவி அதிகாரி மற்றொருவரின் தலைமை அலுவலகம் கோயம்புத்தூரில் உள்ளது. விதைத் தரச் சான்றிதழ் அதிகாரி ஒருவர், வேளாண்மைத் துணை அதிகாரிகள் நால்வர் ஆகியோரைக் கூடுதலாக நியமிப்பதன் மூலமும் அவர்களுக்குத் தேவையான பணியாளர்களை நியமிப்பதன் மூலமும் 1974-75-ல் பணியாளர்



1974 மார்ச் 19]

களின் எண்ணிக்கையைப் பெருக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இத் திட்டத்தின்கீழ் 1973-74-ல் (1974 சனவரி வரையில்) எய்தியுள்ள சாதனை விவரம் வருமாறு :—

| இலக்கு ஏக்கரில். | சான்றளிக்கப்பட்ட பகுதி ஏக்கரில். (31–1–74 வரை) | சான்றளிக்கப்பட்ட அளவு மெட்ரிக் டன்னில். | 1974–75 இலக்கு ஏக்கரில். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| நெல் 6,000 | 6,323 | 912·928 | 8,500 |
| பருத்தி 3,000 | 1,800 | 49·582 | 1,500 |
| கலப்பின சிறு தானியங்கள் 3,000. | 1,455 | 685·210 | 1,800 |

அறிவியல் முறையில் வேளாண்மைத் தொழிலைச் செய்வதனால் ஏற்படக் கூடிய ஆதாயத்தைச் செய்முறையில் விளக்குவதற்காக இது வேளாண் தொழில்களை நிறுவவும் உதவும்-அரசுப் பண்ணைக் கழகம் ஒன்றை நிறுவத் திட்டமிடப்பட்டுள்ளது. இக் கழகம் இம் மாநிலத்தில் பல்வேறு பகுதிகளிலுள்ள அடக்கப் பகுதிகளில் மாதிரிப் பண்ணைகளைத் தொடங்கும். வேளாண்மையை வணிக தொழில் ரீதியாக எப்படி நடத்துவது என்பது பற்றி அண்டைப் பகுதிகளில் உள்ள உழவர்களுக்கு விளக்கும் நிலையங்களாக இப் பண்ணைகள் அமையும்.

உரங்கள்.

**1973-74 ஆம் ஆண்டு சம்பா, 1974 ஆம் ஆண்டு குறுவை ஆகிய காலங்களுக்குத் தேவையான உரத்தின் அளவு, உரம் ஒதுக்கீடு, கிடைக்கப்பெற்ற உரத்தின் அளவு ஆகியவை பின் வருமாறு:—**

| | சம்பா, 1973-74. | | | குறுவை, 1974. | | |
|---|---|---|---|---|---|---|
| | தொகுப்பின் கீழ் வரும் உரம். | தொகுப்பின் கீழ் வராத உரம். | மொத்தம். | தொகுப்பின் கீழ் வரும் உரம். | தொகுப்பின் கீழ் வராத உரம். | மொத்தம். |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| தேவை | 1,06,000 | 69,000 | 1,75,000 | 52,000 | 78,000 | 1,30,000 |
| ஒதுக்கீடு | 48,837 | 51,782 | 1,00,619 | 52,000 | 78,000 | 1,30,000 |
| கிடைக்கப் பெற்றவை | 35,404 | 51,782 | 87,186 | .. | .. | .. |



1974 மார்ச் 19]

2. இந்திய அரசு, 1974, சனவரி 24, 25 தேதிகளில் கொச்சியில் நடத்திய 'உரங்கள் குறித்த மண்டல மாநாட்டில்' உணவு உற்பத்தி ஆணையாளரும், வேளாண்மைத் துறை இயக்குநரும் தமிழ் நாட்டின் பிரதிநிதிகளாகக் கலந்து கொண்டனர். அம் மாநாட்டில் குறுவைப் பருவத்திற்கு (1974 பிப்ரவரி முதல் சூலை வரை) நான்கு தென் மாநிலங்களுக்கும் புதுசேரி யூனியன் நேரடி ஆட்சிப் பகுதிக்கும் தேவைப்படும் உரங்களின் அளவு பற்றி மதிப்பிடப்பட்டது.

3. நமது மாநிலத்தில் 1973 குறுவைப் பருவத்தில் (1973 பிப்ரவரி முதல் சூலை வரை) பயன்படுத்தப்பட்ட உரங்களின் அளவு பற்றிய விவரம் வருமாறு :—

| | | |
|---|---|---|
| நைட்ரஜன் | — | 94,000 மெட்ரிக் டன் |
| பாஸ்பரிக் அமிலம் | — | 33,000 மெட்ரிக் டன் |
| பொட்டாஷ் | — | 29,000 மெட்ரிக் டன் |

1974 குறுவைப் பருவத்தில் (1974 பிப்ரவரி முதல் சூலை வரை) கீழ்க்கண்ட அளவுகளில் உரங்களை ஒதுக்கீடு செய்யுமாறு நாம் இந்திய அரசைக் கேட்டுக்கொண்டுள்ளோம் :—

| | | |
|---|---|---|
| நைட்ரஜன் | — | 1,30,000 மெட்ரிக் டன் |
| பாஸ்பாரிக் அமிலம் | — | 40,000 மெட்ரிக் டன் |
| பொட்டாஷ் | — | 40,000 மெட்ரிக் டன் |

நமக்குத் தேவைப்படும் அளவுக்கு உரங்களை வழங்க இந்திய அரசு வேளாண்மை அமைச்சகத்தின் அதிகாரிகள் அம் மாநாட்டில் ஒப்புக்கொண்டனர்.

மாநாட்டில், பின்வருமாறு குறிப்பிடப்பட்டன :—

1. மாநிலத்தின் தேவைகளில் 60 சத வீதம் தொகுப்பின் கீழ் வராத இருப்புகளிலிருந்து வழங்கப்படும் (உள்நாட்டு உர உற்பத்தியாளர்களால் உற்பத்தி செய்து வழங்குதல்).

2. மாநிலத்தின் தேவைகளில் 40 சத வீதம் தொகுப்பின் கீழ் வரும் இருப்புகளிலிருந்து வழங்கப்படும்.

[1974 மார்ச் 19

3. 1974 சூலைக்குப் பின்னர், உரங்களை இறக்குமதி செய்வதற்காக வெளிநாட்டு நிறுவனங்களுடன் ஒப்பந்தம் எதுவும் இது வரை செய்து கொள்ளப்படவில்லை.

4. உள்நாட்டு உர உற்பத்தியாளர்களுக்கு மின்சக்தி முதலியவற்றை வழங்குவதன் மூலம் அவர்களுக்குத் தேவைப்படும் உதவிகளைச் சம்பந்தப்பட்ட மாநில அரசுகள் அளிக்க வேண்டும்.

மாநாட்டில் முடிவு செய்துள்ளவாறு 1974-ஆம் ஆண்டு குறுவை பருவத்திற்கு வட்டார வாரியாக ஒதுக்கப்பட்ட உரங்களின் அளவு கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| | நைட்ரஜன். | பாஸ்பாரிக் அமிலம். | பொட்டாஷ். |
|---|---|---|---|
| | | (மெட்ரிக் டன்னில்.) | |
| தமிழ்நாடு | 1,30,000 | 40,000 | 40,000 |
| ஆந்திர பிரதேசம் | 1,24,000 | 50,000 | 20,000 |
| கருநாடகம் | 59,000 | 26,000 | 20,000 |
| கேரளம் | 22,000 | 12,000 | 15,000 |

1974-ஆம் ஆண்டு குறுவைப் பருவ காலத்தில் உள்நாட்டு உரத் தயாரிப்பாளர்கள் தமிழ்நாட்டிற்குக் கீழ்க்கண்டவாறு நைட்ரஜன் உரங்களை வழங்குவர் :—

| | மெட்ரிக் டன். |
|---|---|
| சென்னை உரத் தொழிற்சாலை, சென்னை | 32,912 |
| "பாக்ட்", ஆலப்புழை | 7,555 |
| "பாக்ட்", கொச்சி | 15,000 |
| நெய்வேலி பழுப்பு நிலக்கரிக் கழகம் | 14,650 |
| E.I.D. பாரி | 3,138 |
| ஜூவாரி ( Zuari ) கோவா | 5,000 |
| கோரமண்டல் | 280 |
| மொத்தம் | 78,535 |



1974 மார்ச் 19]

1974, குறுவைப் பருவ காலத்திற்கு, தொகுப்பிலிருந்து உரங்களை இந்திய அரசு தற்போது வழங்கத் தொடங்கியுள்ளது.

## நகர்ப்புற கம்போஸ்ட் உரம்.

பசுந்தழை உரம், கரிம உரம் ஆகியவற்றை நன்கு கிடைக்கச் செய்ய சிறப்பு நடவடிக்கைகளைத் தமிழ்நாடு அரசு மேற்கொள்ளும். அப்போதுதான், நைட்ரஜன் உரங்கள் பற்றுக்குறையைப் போக்க ஓரளவுக்கு இந்த நடவடிக்கைகள் உதவும். இரண்டு மாநகராட்சிகளில் ஒவ்வொன்றும் ரூபாய் 60 லட்சம் செலவில் இயந்திரங்களைக் கொண்டு கம்போஸ்ட் உரம் தயாரிக்கும் பிரிவுகள் இரண்டை அமைக்கக் கருதப்பட்டுள்ளது. இம் முயற்சியில், முதல் நிலை, தேர்வு நிலை, சிறப்பு நிலை நகராட்சிகள் அக்கறை கொள்வதற்கான முயற்சிகளையும் தமிழ்நாடு வேளாண்-தொழில் கழகம் மேற்கொண்டுவருகிறது. செலவில், 33-1/3 சதவீதம் என்ற வீதத்தில் உதவித் தொகை வழங்க இந்திய அரசு முன்வந்துள்ளது. அதிகமான நிதியுதவி அளிக்குமாறு இந்திய அரசிடம் கேட்கப்பட்டு வருகிறது.

## பயிர்ப் பாதுகாப்பு.

பயிர்ப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ், அரசு, வேளாண்மைக் கிடங்குகள் மூலமாக, குடியானவர்களுக்குப் பயிர்ப்பூச்சிக் கொல்லி மருந்துகளை வழங்கி வருகின்றது.

பரவலாகப் பயன் படுத்தப்பட்டு வரும் என்டிரின், D.D.T. B.H.C. முதலிய மலிவான மருந்துகள் கடும் பற்றுக் குறையாக உள்ளன. இறக்குமதிக் கட்டுப்பாடுகளின் காரணமாகவும், உள்நாட்டில் தயாரிக்கப்படும் மருந்துகளில் கணிசமான பகுதி மலேரியா ஒழிப்புத் திட்டத்திற்கு அனுப்பப்படுவதினாலும் மேற்குறிப்பிட்ட மருந்துகளில் பற்றுக் குறை ஏற்பட்டுள்ளது. முக்கியமான பயிர்ப்பூச்சிக் கொல்லி மருந்துகள் வழங்கு நிலையை ஈடுசெய்வதற்காக 100 டன் என்டிரின் வகை மருந்துகளையும், 3,000 டன் B.H.C மருந்துகளையும் இறக்குமதி செய்யுமாறு மாநில அரசு இந்திய அரசைக் கேட்டுக்கொண்டுள்ளது. 1973-74-ல் (28—2—1974 வரையில்) 1,22,000 லிட்டர் என்டிரின் (20 சதவீதம் அடர்த்தியுள்ள குழம்பாக மாற்றக் கூடியது) 14,000 டன் B.H.C. (10 சத வீதம்) வழங்கப்பட்டன.

இத் துறையைச் சேர்ந்த பல்வேறு பயிர்ப் பாதுகாப்புத் தொகுப்பு ஏற்பாடுகளின்கீழ் வைத்துவரப்படுகிற விசைத் தெளிப்பான்கள் தூவு கருவிகளின் எண்ணிக்கை 10,000 என்றும் மதிப்பிடப்படுகிறது. ஐந்தாவது திட்டக் கால அளவில் மொத்தம் ரூ. 10 லட்சம் செலவில் 5,000 விசைத் தெளிப்பான்களை வாங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இவற்றில் 1,000 தெளிப்பான்கள் 1974-75-ல் வாங்கப்படும்.

1974-75-ல் ரூ. 6.85 லட்சம் செலவில் காஞ்சிபுரம், கோயில்பட்டி, ஆடுதுறை, கோயம்புத்தூர், மதுரை, சேலம், திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் தற்போது செயல்பட்டு வரும் பயிர்ப்பூச்சிக் கொல்லி மருந்து பரிசோதனை ஆய்வுக் கூடங்களை வலுப்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. மேற்கொண்டும் அதிகமான அளவில் மருந்து மாதிரிகளைப் பரிசோதனை செய்ய இயலச் செய்வதே இதன் நோக்கமாகும்.

## கரும்பு வளர்ச்சி.

கரும்புத் தொழிற்சாலைப் பகுதிகளில் சாலை மேம்பாட்டுப் பணிகளுக்காக 1974-75-ல் ரூ. 100 லட்சம் செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது. இப் பணிக்காக இதுவரை எந்த ஆண்டிலும் செலவிடப்பட்ட தொகையை விட இது அதிகமாகும்.

கரும்பு மேம்பாடு, கரும்பு ஆராய்ச்சி, கரும்புத் தொழிற்சாலைப் பகுதிச் சாலைப் பணிகள் ஆகியவற்றிற்காக கரும்புத் தீர்வை நிதியிலிருந்து செலவிடப்பட்ட தொகை பற்றிய விவரங்கள் வருமாறு :—

| ஆண்டு. | மேம்பாடு | ஆராய்ச்சி. )ரூ. இலட்சத்தில்) | சாலை மேம்பாடு. | மொத்தம். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1969–70 | 13·38 | 6·19 | 30·81 | 50·38 |
| 1970–71 | 16·48 | 6·18 | 33·26 | 55·92 |
| 1971–72 | 13·28 | 7·87 | 30·39 | 51·54 |
| 1972–73 | 18·01 | 8·18 | 50·20 | 76·39 |





முன்னரே அனுமதி வழங்கப்பட்டுள்ள 10 நிலையங்கள் தவிர, 1974-75-ல் விழுப்புரம், திருவண்ணாமலை ஆகிய இடங்களில் ஒட்டுண்ணி வளர்ப்பு நிலையங்கள் இரண்டினை மேற்கொண்டும் தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

1973-74 ஆம் ஆண்டு கரும்பு பருவத்தின் போது, கரும்பிலிருந்து 8.5 சத விதமும் அதற்குக் குறைவாகவும் சர்க்கரை கிடைத்தால் கரும்பு ஆலைகளுக்கு வழங்கப்படும் கரும்பிற்கான விலை மெட்ரிக் டன் ஒன்றுக்கு ரூபாய் 90 ஆக இருக்க வேண்டுமென்றும், கிடைக்கும் சர்க்கரை குவின்டால் ஒன்றுக்கு 0.1 சத விதம் உயரும் ஒவ்வொரு தடவைக்கும் 9.4 காசு மேற்சொன்ன விலையில் கூட்டிக் கொள்ளப்பட வேண்டுமென்றும் இந்த அரசு பரிவுரை செய்தது. ஆலைகளுக்கு வழங்கப்படும் கரும்பிற்கான விலையை மெட்ரிக் டன் ஒன்றுக்கு ரூபாய் 80 ஆக இந்திய அரசு முடிவு செய்துள்ளது. ஆனால், கரும்பிலிருந்து கிடைக்கும் சர்க்கரை சத வீதம் குறித்தும் அதிகமாகக் கிடைக்கும் சர்க்கரை குறித்து கரும்பு விலையில் சேர்த்துக் கொள்ளவேண்டிய உயர்வும் குறித்தும் இவ்வரசு தெரிவித்த கருத்துரையை, இந்திய அரசு ஏற்றுக் கொண்டது. தமிழ்நாட்டில் கரும்பு பயிரிடுபவர்களிடமிருந்து முறையீடுகள் வந்ததன் பேரில் கரும்பாலை உரிமையாளர்கள், கரும்பு உற்பத்தியாளர்கள் ஆகியோரின் கூட்டத்தை அரசு கூட்டியது. கரும்பு உற்பத்தியாளர்களுக்கு அதிக விலை கொடுக்கப்பட வேண்டும் என்று அரசு கருத்துத் தெரிவித்துள்ளது. 1974 அக்டோபர் 1 ஆம் நாளிலிருந்து தொடங்கும் 1974-75 ஆம் ஆண்டுக்காக கரும்பிருலிந்து 8.5 சத விதமும் அதற்குக் குறைவாகவும் சர்க்கரை கிடைத்தால் மெட்ரிக் டன் ஒன்றுக்கு ரூபாய் 95 என்ற விலை கொடுக்கப்பட வேண்டுமென்றும், கிடைக்கும் சர்க்கரை 0.1 சதவிதம் உயரும் ஒவ்வொரு தடவைக்கும் 10 காசு மேற்சொன்ன விலையில் கூட்டிக் கொள்ளப்பட வேண்டுமென்றும் இந்திய அரசு பரிவுரை செய்துள்ளது.

## சிறு பாசனம்

சிறுபாசனத் திட்டத்தின்கீழ், கிணறுகளைத் தோண்டுவதற்காகப் பல்வேறு வகை துளையிடும் கருவிகளை இத்துறை வாடகைக்குக் கொடுக்கிறது. துறையிடம் உள்ள பல்வேறு வகை

[1974 மார்ச் 19

துளையிடும் கருவிகளின் விவரங்கள் கீழே கொடுக்கப் பட்டுள்ளன :—

| | |
|---|---|
| பெர்குஷன் துளையிடும் கருவிகள் | 52 |
| சுழல் துளையிடும் கருவிகள் | 46 |
| காலிக்ஸ் துளையிடும் கருவிகள் | 18 |
| ஹாமர் வகை துளையிடும் கருவிகள் | 11 |
| கையால் இயக்கப்படும் துளையிடும் கருவிகள் | 457 |
| பாறை உடைக்கும் கருவிகள் | 137 |
| காற்றழுத்தக் கருவிகள் | 8 |
| ஆழமாகத் துளையிடும் கருவிகள் | 16 |
| கழிவுப் பொருளை அகற்றும் கருவிகள் | 25 |

1974-75 ஆம் ஆண்டில் ரூபாய் 27,30,000 செலவில் கீழ்க்காணும் யந்திரங்களையும் சாதனங்களையும் வாங்க அரசு அனுமதி வழங்கி யுள்ளது :—

சுழல் துளையிடும் கருவிகள்—3.

வாகன் துளையிடும் கருவிகள்—2.

லாரிகள்—4.

பற்றவைப்பு கருவிகள்—5.

கொட்டகை—1.

(வேளாண்மைத் துறையிடம் தற்போது 164 பாறை உடைப்புக் கருவிகள் உள்ளன. 1974-75-ல் ரூபாய் 15.70 லட்சம் செலவில் 30 பாறை உடைப்புக் கருவிகளையும், 30 கழிவுப் பொருள் அகற்றும் கருவிகளையும் வாங்குவதற்கு அரசு கருதியுள்ளது. இம் மாநிலத்தில் ஊராட்சி ஒன்றியங்களிடமுள்ள பாறை உடைப்புக் கருவிகள் அனைத்தையும் நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்வதற்காக அவற்றை மேற்படி ஒன்றியங்களிடமிருந்து வேளாண்மைத் துறை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டுள்ளது.



1974 மார்ச் 19]

இத்திட்டம் தொடங்கிய நாளிலிருந்து இந்நாள் வரை (31—1—1974 வரை) துறை தோண்டிய கிணறுகளின் மொத்த எண்ணிக்கை பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

(i) தனியார் குழாய்க் கிணறுகள் 19,983.

(ii) கிணறுகளில் துளைபோடுதல் 5,438.

(iii) வடிமுனைக் குழாய்க் கிணறுகள் 24,438.

( ) கிணறுகளை ஆழப்படுத்துதல் 8,337.

## மண்வளச் சோதனை ஆய்வுக் கூடங்கள்

இம் மாநிலத்தில் தற்போது 13 மண்வளச் சோதனை ஆய்வுக் கூடங்கள் செயல்பட்டு வருகின்றன. இவற்றுடன், இந்திய அரசால் வழங்கப்பட்ட மண்வளச் சோதனை ஆய்வுக்கூட இயல் ஊர்திகள் இரண்டு ஆடுதுறையிலும், கோயில்பட்டியிலும் செயல்பட்டு வருகின்றன. மூன்றாவது ஆய்வுக்கூடம் இந்திய அரசால் வழங்கப் படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. 1974-75-ல், தருமபுரி மாவட் டத்தில் ரூபாய் 2.58 லட்சம் மொத்தச் செலவில் (மாநில அரசுச் செலவில்) மண்வளச் சோதனை ஆய்வுக் கூட இயல் ஊர்தி ஏற்படுத்தக் கருதப்பட்டுள்ளது. மண்வளமூட்டும் நுண்மங்களைப் பகுப்பாய்வு செய்ய வசதியளிக்க வேண்டி, உதக மண்டலம், கோவில்பட்டி, காஞ்சிபுரம், ஆடுதுறை ஆகிய இடங்களில் உள்ள மண்வளச் சோதனை ஆய்வுக் கூடங்களை ரூபாய் 3.58 லட்சம் மொத்த செலவில் தரம் உயர்த்தவும் கருதப்பட்டுள்ளது.

பயிர் உற்பத்தியைப் பெருக்குவதற்காக, மண்வளச் சோதனை விவரங்களை ஒட்டி உரங்களைப் பயன்படுத்த உழவர்களுக்கு இயலும் வகையில் மண்வளத்தை இலவசமாகப் பகுப்பாய்வு செய்து அதுபற்றி உழவர்களுக்குத் தெரிவிப்பதே மண்வளச் சோதனை ஆய்வுக் கூடங்களின் நோக்கமாகும். 1972-73-ல் மண் வளச் சோதனை ஆய்வுக் கூடங்களில் 436,121 மாதிரிகளும் 1973-74-ல் 594,000 மாதிரிகளும் பகுப்பாய்வு செய்யப்பட்டன.

## தோட்டக்கலை

### பழ மேம்பாட்டுத் திட்டம்—

இத்திட்டத்தின்கீழ் தமிழ் நாட்டில் பழ உற்பத்தியை மேம்படுத்துவதற்காக பழ உற்பத்தியாளர்களுக்கு 1973-74-ல் ரூபாய் 7 லட்சத்திற்கு நீண்ட காலக் கடன்கள் வழங்கப்பட்டன. மதுரை, கன்னியாகுமரி, திருநெல்வேலி ஆகிய மாவட்டகளில் அதிக பரப்பின்கீழ் கியூ (Kew) வகை அன்னாசி பயிரிடுவதற்கான திட்டமும், வட ஆற்காடு மாவட்டத்தில் அன்னாசி பயிரிடுவதற்கான மற்றொரு திட்டமும் 1974-75-ல் செயல்படுத்தப்படும். தமிழ் நாட்டில் வெப்ப மண்டலப் பகுதிகளில் உற்பத்தியாகும் பழங்கள் குறித்து தீவிர ஆராய்ச்சிகளை மேற்கொள்ள 1974-75 ஆம் ஆண்டில் பழ ஆராய்ச்சி நிலையம் ஒன்று அமைக்கப்படும்.

### மாதிரி பழத் தோட்டங்கள்—

கீழே குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் அமைந்துள்ள ஒன்பது பழத் தோட்டங்கள்—நாற்று பண்ணைகளுடன் தென் ஆர்க்காடு மாவட்டத்தில் மேலும் ஒரு பழத் தோட்டம் 1974-75 ஆம் ஆண்டில் அமைக்கப்படும்:—

ஆத்தூர்—செங்கற்பட்டு மாவட்டம்.

குடப்பட்டு—வட ஆர்க்காடு மாவட்டம்.

மருங்குளம்—தஞ்சாவூர் மாவட்டம்.

கோடைக்கானல்—மதுரை மாவட்டம்.

பூவாணி—இராமநாதபுரம் மாவட்டம்.

குற்றாலம்—திருநெல்வேலி மாவட்டம்.

பெரியகுளம்—மதுரை மாவட்டம்.

திம்மபுரம்—தருமபுரி மாவட்டம்.

குன்னூர்—நீலகிரி மாவட்டம்.

பழ உற்பத்தியாளர்களுக்கு இந்தப் பழத் தோட்டங்கள்—நாற்றுப் பண்ணைகள் மூலமாக தரமான பயிரிடும் பொருள்கள் ஈடுசெய் விலையில் வழங்கப்படுகின்றன.





அரசுப் பழத் தோட்டங்கள்—நாற்றுப் பண்ணைகளிலிருந்து 1974 பிப்ரவரி வரை வழங்கப்பட்ட செடிகளும் விதைகளும்.

| செடிகள். | எண்ணிக்கை. |
|---|---|
| 1. மாம்பழம் | 30,703 |
| 2. எலுமிச்சை வகை செடிகள் | 15,557 |
| 3. கொய்யா, ஏனைய பழங்கள் | 36,310 |
| 4. கொடி திராட்சை பதியம் போடுதல் | 14,067 |
| 5. பூஞ்செடிகள் | 8,210 |
| 6. குரோட்டன்ஸ், அலங்காரச் செடிகள் | 7,867 |
| 7. ஆப்பிள் | 1,343 |
| 8. பீச் பழ மரங்கள் | 881 |
| 9. பேரிக்காய் | 4,053 |
| 10. பிளம் பழ மரங்கள் | 7,362 |
| 11. நறுமணப் பொருள் விளையும் செடிகள் | 11,629 |
| 12. பல்வகை | 55,276 |
| மொத்தம் | 1,93,258 |

| விதைகள். | கி.கி. | கிராம்கள். |
|---|---|---|
| 1. வெண்டை | 12 | 350 |
| 2. கத்திரி | 13 | 000 |
| 3. தக்காளி | 22 | 100 |
| 4. கொத்தவரங்காய் | 81 | 600 |
| 5. பப்பாளி | 0 | 500 |
| 6. சனல் | 39 | 000 |
| 7. சோயா பீன்ஸ் | 2 | 000 |
| 8. வேர்க்கடலை | 2020 | 000 |
| 9. பயறுகள் | 180 | 000 |

மலைப் பகுதி மேம்பாடு.

மலைப் பகுதிகளில் தோட்டப் பயிரை மேம்படுத்துவதற்கான திட்டம், வட ஆர்க்காடு, சேலம், திருச்சிராப்பள்ளி, மதுரை ஆகிய மாவட்டங்களில் தோட்டப் பயிரை மேம்படுத்தவும், மலைப் பகுதிகளில் வசிப்பவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், பழங்குடி மக்களின் நிலையை மேம்படுத்தவும் வகை செய்கிறது. 1971-72-ல் இத்திட்டத்திற்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. இது தொடர்ந்து நிறைவேற்றப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின்கீழ் பணி புரியும் துணைப் பணியாளர்களுடன், சேலம், துறையூர் (திருச்சிராப்பள்ளி மாவட்டம்), திண்டுக்கல் (மதுரை மாவட்டம்) ஆகிய இடங்களைத் தலைமையிடங்களாகக் கொண்டு மூன்று மாவட்ட வேளாண்மை அதிகாரிகளும், திருப்பத்தூரை (வட ஆர்க்காடு மாவட்டம்) தலைமையிடமாகக் கொண்டு உதவி தோட்டக்கலை வல்லுநர் ஒருவரும் உள்ளனர். கோடைக்கானலிலுள்ள தோட்டக்கலை வல்லுநர் இத்திட்டத்தின் முழுப் பொறுப்பையும் ஏற்றுள்ளார். 1974-75-ல், வட ஆர்க்காடு, சேலம், திருச்சிராப்பள்ளி, மதுரை ஆகிய மாவட்டங்களில் முக்கியமான மலைப் பகுதிகளிலுள்ள பழங்குடியினருக்கு வழங்கப்படும் பயிர்டு பொருட்கள் மீது 50 சதவீத உதவித் தொகை அனுமதிக்கக் கருதப்பட்டுள்ளது. 1974-75-ல் இத்திட்டத்தின்கீழ் 1,450 ஏக்கர் நிலம் கொண்டுவரப்படும்.

இந்திய-ஜெர்மனி நீலகிரி மேம்பாட்டுத் திட்டம்.—இந்திய-ஜெர்மனி நீலகிரி மேம்பாட்டுத் திட்டம் 31—3—1974 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. தொடர்புள்ள அதிகாரிகளுடன் பேச்சு வார்த்தைகள் நடத்தப்பட்டுள்ளன. இத்திட்டத்தை மற்றுமோர் 5 ஆண்டுகளுக்கு நீட்டிக்குமாறு இந்திய அரசிடம் கேட்கக் கருதப்பட்டுள்ளது.

இந்திய-ஜெர்மனி நீலகிரி மேம்பாட்டுத் திட்டத்தின் காரணமாக, உருளைக்கிழங்கு பயிரிடப்படும் பகுதி, 1969-70-ல் தாசானிட் திட்டம் தொடங்கப்பட்டபோது இருந்ததுடன் ஒப்பிடுகையில் சுமார் 2,500—3,000 ஏக்கர் உயர்ந்துள்ளது. 1974-75-ல் சராசரியாக ஒரு ஏக்கருக்கு 5 மெட்ரிக் டன் உற்பத்தியுடன் சுமார் 23,300 ஏக்கர் நிலத்தில் உருளைக்கிழங்கு பயிரிடப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



மேம்படுத்தப்பட்ட காய்கறி வகைகளைப் பயிரிடுவதன்கீழ் 1,700 ஹெக்டேர் நிலம் கொண்டுவரப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் 90,000 டன் காய்கறிகளும், 1 லட்சம் காளிபிளவரும் கிடைக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்திய-ஜெர்மனி நீலகிரி மேம்பாட்டுத் திட்டப் பயன்கள்.—(i) மொத்தம் 100 ஹெக்டேர் பரப்புள்ள 8 அரசு விதைப் பண்ணைகளில் சீரமைப்பு மேம்பாட்டுப் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

(ii) சோதனைகள் பலவற்றை நடத்துவதன் மூலம் உருளைக்கிழங்கு, காய்கறிகள், தானியங்கள், கால்நடைத் தீவனம் முதலியவற்றைப் பயிரிடுவது குறித்து அடிப்படை புள்ளிவிவரங்களை இத்திட்டம் சேகரித்து முனைப்பு நடவடிக்கைகள் என்ற தலைப்பில் அவற்றை வெளியிட்டது.

(iii) நூண்கிருமிகளால் தாக்கப்படாத உருளைக் கிழங்கு விதைகளை உழவர் நிலங்களில் உள்ள ஒரு பகுதியில் விதைத்து அவற்றைப் பெருக்கவும், தரமான விதைகளை வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தரப்படுத்தப்பட்ட இந்த விதைகளைப் பயன்படுத்துவதால் விளைச்சல் சுமார் 50 சதவீதம் உயருமென்று கணக்கிடப்படுகிறது.

(iv) 131 உருளைக் கிழங்கு வகைகளைச் சோதனை நடத்தியதில் மிகு விளைச்சல் தரக்கூடியதும் நோய் எதிர்ப்புச் சக்தியுள்ளதுமான 5 வகைகள் தெரிந்தெடுக்கப்பட்டு பெருக்கப்பட்டன.

(v) உருளைக்கிழங்கில் காணப்படும் பொன்னிறப் புழுக்களை ஒழிப்பதற்கான திட்டம் ஒன்று வகுக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டது. தாசானிட் பயன்படுத்தப்பட்டதன் விளைவாக, உதகமண்டலத்தில் பாசனம் பெறும் பகுதியில் விளைச்சல் 100 சதவீதம் உயர்ந்தது.

(vi) உள்ளூர் காய்கறி வகைகளைவிட மிகுபயன் அளிக்கும் 15 காய்கறி வகைகள் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளன. இந்தக் காய்கறி விதைகள் 4,000 கிலோ கிராம் இறக்குமதி செய்யப்பட்டு இதில் ஆர்வம் கொண்டுள்ள குடியானவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. தெரிந்தெடுக்கப்பட்ட வகைகள் பெருக்கப்பட்டு வருகின்றன.

) நீலகிரி மலையில் கிடைக்கும் காய்கறிகள், மலர்களின் விற்பனைக்கு ஏற்பாடு செய்வது பற்றி தகவலறியும் பொருட்டு, அவை குறித்த விற்பனை ஆய்வுப் பணி 5 மாநகரங்களில் தனியார் விற்பனை ஆய்வு நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டு, அந்த ஆய்வை மேற்கூறிய நிறுவனம் நடத்தியது.

(viii) ஆஸ்திரேலிய 'பெரி' பழவகைகள் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளன. இதுவரை 60,000 பதியங்கள் குடியானவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

(ix) மால்ட் தயாரிப்பதற்காக பார்லி பயிரிடுவது குறித்து பரிவுரை செய்யப்பட்டு விரைவுத் திட்ட அடிப்படையில் குடியானவர் நிலங்களில் அப்பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(x) மிகுபயன் தரும் நெல், இஞ்சி ஆகியவற்றின் வகைகள் கூடலூர் வட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இப் பகுதியில் மும்முர வளர்ச்சிப் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

(xi) புதிய வகை கால்நடைத் தீவனப் பயிர்கள் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளன.

) உற்பத்திப் பணிக்காக, மாவட்டத்திலுள்ள குடியான வர்களுக்குக் கடன் வழங்குவதற்குச் சிறு உழவர் கடன் திட்டம் கொண்டு வரப்பட்டது.

(xiii) மாவட்ட மண்வள வரைபடம் ஒன்று தயாரிப் பதற்காக, தனியார் நிலங்களிலிருந்து மாதிரிக்காக மண் சேகரிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதைத் தவிர, தனியார் நிலங்களில் மண் பகுப்பாய்வும் நடத்தப்படுகிறது.

( ) உழுதல், சரிவு பாத்திகள் அமைத்தல், கிராமப்புறங் களில் சாலைகள் போடுதல் ஆகியவற்றிற்கு டிராக்டரும், மண் அகற்றும் கனரக இயந்திரங்களும் வாடகைக்கு கொடுக்கப்படு கின்றன.

## பருத்தி மேம்பாடு

பருத்தி, தமிழ்நாட்டில் பயிரிடப்படும் முக்கியமான ஒரு வணிகப் பயிராகும். சுமார் 8.4 லட்சம் ஏக்கர் நிலத்தில் பருத்தி பயிரிடப்படுகிறது. நான்காவது ஐந்தாண்டு திட்ட இறுதியில்



பருத்தி உற்பத்தி ஒவ்வொரு பொதியும் 180 கிலோகிராம் எடை யுள்ள 4 லட்சம் பஞ்சுப் பொதிகளாக இருக்கும். ஆனால், ஆண்டு ஒன்றுக்கு 11 லட்சம் பஞ்சுப் பொதிகள் தேவைப்படுகின்றன. இம் மாநிலத்தில் பருத்தி உற்பத்தியைப் பெருக்க கீழ்க்காணும் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

(1) மும்முரப் பருத்தி மேம்பாட்டுத் திட்டம்.—இத் திட்டம் மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டமாகும். இத் திட்டம் 1971 முதல் கோயம்புத்தூர், திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கோயம்புத்தூர் மாவட்டத்தில் 2,00,000 ஏக்கர் நிலத்தில் பாசனம் பெறும் பருத்தியும், திருநெல் வேலி மாவட்டத்தில் 50,000 ஏக்கர் பரப்பில் மானவாரி பருத்தியும் பயிரிடப்படுகிறது. பாசனம் பெறும் பருத்திப் பயிருக்கு, பயிர்ப் பாதுகாப்பு இரசாயனங்கள், செய்முறை விளக்கப் பாத்தி கள், பயிர்ப் பாதுகாப்பு சாதனங்களுக்கு உதவித் தொகை வழங்கப்படுகிறது. மானவாரிப் பருத்திப் பயிருக்கு, பூச்சிக் கொல்லி மருந்துகள், யூரியா செய்முறை விளக்கப் பாத்திகள், பயிர்ப் பாதுகாப்புச் சாதனங்கள் ஆகியவற்றிற்கு உதவித்தொகை வழங்கப்படுகிறது. இந்திய அரசிடமிருந்து கிடைக்கும் நிதிக் குட்பட்டு, ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் இத்திட்டம் தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.

(2) பருத்தி முனைப்புத் திட்டம்.—இத்திட்டம், ஸ்ரீவில்லிப் புத்தூர், சேலம், பெரியகுளம், திருச்சிராப்பள்ளி, சிவகாசி, திருமங்கலம் ஆகிய இடங்களில் 2.05 லட்சம் ஏக்கர் பரப்பில் முனைப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ், பண்ணைத் திட்டங்களையொட்டி பருத்திப் பயிரிடுவோருக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் கடன் வழங்குகின்றன. செய்முறை விளக்கப் பாத்திகளுக்காக அரசு உதவித் தொகை வழங்குகிறது.

(3) ஒருங்கிணைந்த பருத்தி மேம்பாட்டுத் திட்டம்.—ஏற் கெனவே பருத்தி பயிரிடப்படும் பாசனம் பெறும் பகுதிகளிலும் மானவாரி பகுதிகளிலும் பல்வேறு புதிய பாசனத் திட்டங்களின் கீழ் பண்படுத்தப்பட்ட பகுதிகளிலும் நவீன பயிரிடு முறைகளைப் பின்பற்றுவதன் மூலம் பருத்தி உற்பத்தியைப் பெருக்குவதும், 3.87 லட்சம் ஏக்கர் நிலத்தில் பருத்தி பயிரிடுவதுமே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின் கீழ், செய்முறை விளக்கப் பாத்தி களுக்காக அரசு உதவித் தொகை வழங்கி வருகிறது.

1974-75-ல் வைகை அணைப் பகுதியில் ரூபாய் 2,42,600 செலவில் தரமான பருத்தி வகைகளின் மூல விதைகளைப் பெருக்கும் பணி ஒரு சிறப்புத் திட்டமாக மேற்கொள்ளப்படும். இத்திட்டத்தின் மூலம் சுமார் 350 மூட்டைகள் (ஒவ்வொன்றும் 45 கிலோ கிராம் எடையுள்ளது) மூல விதைகள் உற்பத்தி செய்யப்படும்.

### ஒருங்கிணைந்த புன்செய் நில வேளாண்மை மேம்பாட்டுத் திட்டம்

இந்திய அரசிடமிருந்து முழு உதவி பெறும் திட்டமாகிய ஒருங்கிணைந்த புன்செய் நில வேளாண்மை மேம்பாட்டுத் திட்டம், தமிழ்நாட்டில் இரண்டு வட்டங்களில், அதாவது திருநெல்வேலி மாவட்டத்தில் கோவில்பட்டியிலும், புதுக்கோட்டை மாவட்டத்தில் புதுக்கோட்டையிலும் செயலில் உள்ளது. கோவில்பட்டியில் இத்திட்டம் 1970, செப்டம்பர் திங்கள் முதல் 10 கிராமங்களிலும், புதுக்கோட்டையில் இத்திட்டம் 1971 செப்டம்பர் திங்கள் முதல் 8 கிராமங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. 1973-74-ஆம் ஆண்டு இறுதிக்குள் 8,000—6,000 ஏக்கரில் கொண்டுவர இருந்த இத்திட்டகள் நான்காவது ஐந்தாண்டு திட்டத்தின் எஞ்சிய திட்டமாக ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 25,000 ஏக்கர் நிலத்திற்கு நீட்டிக்கப்படவிருக்கின்றன.

நவீன புன்செய் சாகுபடி முறைகளை கையாளுவதில் புன்செய் சாகுபடியாளர்களுக்கு உதவுவதும் பயிர்ப் பாதுகாப்புப் பொருட்கள், விதைகள், பண்ணை இயந்திரங்கள் போன்ற அவசியமான பொருட்களை அவர்களுக்கு வழங்குவதுமே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத் திட்டங்களின் கீழ், உழவர்களுக்குச் சலுகை வீதங்களில் பயிரிடு பொருட்கள் வழங்கப்படுகின்றன. ஏரிகளைத் தூர் எடுத்துப் புதுப்பித்தல், பானக் கால்வாய்களைத் துப்புரவு செய்தல், புதிதாகக் கிணறுகள் வெட்டுதல், ஏற்கனவேயுள்ள கிணறுகளை ஆழப்படுத்தல் ஆகிய திட்டப்பணிகள் இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றன. மேற்கூறிய பணியை நிறைவேற்றுகையில், திட்டங்கள் மேற்கொள்ளப்படும் கிராமங்களிலுள்ள மக்களுக்கு வேலைவாய்ப்பளிக்கப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ், கூட்டுறவு வங்கிகள் போன்ற கடனுதவி நிறுவனங்கள் குறுகிய காலக் கடன்களை வழங்குகின்றன. நடுத்தர, நீண்டகாலக் கடன்கள் இந்திய அரசால் வழங்கப்



படுகின்றன. இந்திய அரசிடமிருந்து பெறப்படும் மானியங்கள் உதவித் தொகைகளாக வழங்கப்படுகின்றன.

வழங்கப்படும் ஒவ்வொரு கடனுடன் கீழ்க்காணும் வீதங்களில் உதவித் தொகை வழங்கப்படுகிறது.

| | சதவீதம் |
|---|---|
| (1) கால்நடைப் பராமரிப்புத் திட்டங்கள் | 33 |
| (2) இலைகள் மீது மருந்து தெளித்தல் | 50 |
| (3) சிறுபாசனம் | 25 |
| (4) நிரந்தரப் பணிகள் | 25 |
| (5) குடியானவர்களுக்குப் பயிற்சி அளித்தல், செய்முறை விளக்கம், பண்ணை இயந்திரங்கள் வழங்குதல் உட்பட அடிப்படை வசதிகள். | 100 |

இவ்விரு திட்டங்களும் தொடங்கப்பட்டதிலிருந்து அவற்றின் கீழ் இதுவரை ஏற்பட்ட செலவைக் கீழ்க்காணும் விவர அறிக்கை காட்டுகிறது :

| | தொடக்கம் முதல் பயன்படுத்தப்பட்ட மொத்தத் தொகை. | தொடக்கம் முதற்கொண்டு மொத்தக் கடன் 31-12-1973-ஆம் நாளன்று உள்ளவாறு. |
|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| கோவில்பட்டி .. ... ... | 3·655 | 2·97 |
| புதுக்கோட்டை .. .. | 12·909 | 1·855 |
| | 16·564 | 4·825 |

### விற்பனை வசதி

சிறந்த முறையில் விற்பனை செய்வதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்கத்துடனும், பல கைகள் மாறுவதால் விளைபொருள்களின் விலை ஏறிக்கொண்டே போவதைக் குறைத்து நுகர்வோர் கொடுக்கிற ரூபாயில் உரிய பங்கை

[1974 மார்ச் 19

உற்பத்தியாளர் பெற இயலும்பொருட்டு, இதுவரை பதினொரு அங்காடிக் குழுக்கள் அமைக்கப் பட்டுள்ளன. அக்குழுக்களின் கட்டுப்பாட்டின்கீழ் 136 முறைப்படுத்தப்பட்ட அங்காடிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. சேலம் மாவட்டத்தில் அங்காடிக் குழு ஒன்று அமைக்கப்படும்.

1973-74-ஆம் ஆண்டில், அங்காடிக் குழுக்களுக்கு கடன்கள் வழங்க வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 11 லட்சம் ஒதுக்கப் பட்டுள்ளது. முறைப்படுத்தப்பட்ட அங்காடிகளின் மேம் பாட்டுக்காக அங்காடி குழுக்களுக்கு 1974-75-ஆம் ஆண்டிலும் தொடர்ந்து கடன் வசதி அளிக்கக் கருதப்பட்டுள்ளது.

உழவர்களின் வருமானத்தை அதிகப்படுத்தவும், உற்பத்திப் பொருள்களின் தரக்கப்பட்டுப்பாட்டை உறுதிப்படுத்தவும் இம் மாநிலத்தில் இதுவரை 44 விளைபொருள் தரப்பிரிவு நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. 1974-75 ஆம் ஆண்டில் மேலும் 10 நிலையங்களைத் திறக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதுவரையில் 12 தரப்பிரிவு ஆய்வுக்கூடங்கள் ஏற்படுத்தப் பட்டுள்ளன. நெய், எண்ணெய் ஆகியவற்றைத் தரப்படுத்து வதற்கு கோயம்புத்தூர் மாவட்டம், பல்லடத்தில் ஒன்றும், சேலம் மாவட்டம், ராசிபுரத்தில் மற்றொன்றுமாக 1974-75-ல் மேலும் இரண்டு தரப்பிரிவு ஆய்வுக்கூடங்கள் திறக்கத் திட்ட மிடப்பட்டுள்ளது. கீழ்க்கண்ட பொருள்கள், தரம்பிக்கப் பட்டு வருகின்றன :

1. நிலக்கடலை.
2. எள்.
3. உருளைக் கிழங்கு.
4. வெல்லம்.
5. பழங்கள் (எண்ணிக்கையில்).
6. கப்பாஸ் பருத்தி முதலியன.

எல்லாப் பொருட்களையும் 'அக்மார்க்' தரத்தின்கீழ் தரப் படுத்துவதற்காக, வேளாண்மைப் பொருள்களை வணிக முறையில் தரப்படுத்த எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுவருகின்றன. திருப்பூர், இராஜபாளையம், பொள்ளாச்சி, பெருந்துறை, புதூர்



974 மார்ச் 19]

ஆகிய இடங்களில் "கப்பாஸ்" பருத்தித் தரப்பிரிவு நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. 1974-75-ஆம் ஆண்டில் சங்கரன் கோவிலிலும் "கப்பாஸ்" பருத்தித் தரப்பிரிவு நிலையம் ஒன்றை ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு வேளாண்மை விற்பனை வாரியம் தயாரித்த ரூ. 36 கோடி செலவாகக் கூடிய முறைப்படுத்தப்பட்ட அங்காடிகளின் மேம்பாட்டுக்கான திட்ட அறிக்கை ஒன்று உதவிபெறுதற்காக உலக வங்கிக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

திட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பணிகளாவன :

(1) முறைப்படுத்தப்பட்ட மொத்த அங்காடிகளின் எண்ணிக்கையை 220 ஆக உயர்த்தி, ரூ. 2,367.38 லட்சம் செலவில் முறைப்படுத்தப்பட்ட அங்காடிகளின் மேம்பாடு.

(2) ரூ. 600 லட்சம் செலவில் தகவல் தொடர்பு வசதிகள் செய்து கொடுத்தல்.

(3) ரூ. 616.58 லட்சம் செலவில் போக்குவரத்து வசதிகள் செய்து கொடுத்தல்.

(4) ரூ. 26.46 லட்சம் செலவில், செய்முறைப் பதப்படுத்தும் வசதிகள் செய்து கொடுத்தல்.

(5) ரூ. 22.50 லட்சம் செலவில் 17 இடங்களில் பழங்கள், காய்கறிகளுக்கான முறைப் படுத்தப்பட்ட அங்காடிகள் திறத்தல்.

(6) ரூ. 9 லட்சம் செலவில் கால்நடைச் சந்தைகளை மேம்படுத்துதல்.

### வேளாண்மை மறுநிதி உதவிக் கழகம்.

1974-75?ஆம் ஆண்டில், வேளாண்மை மறுநிதி உதவிக் கழகத்தினால் ஏற்பளிக்கப்பட்ட கீழ்க்கண்ட திட்டங்கள் நிறை வேற்றப்படும் :—

1. மதுரை மாவட்டத்தில் ரூ. 137 லட்சம் நிதி ஒதுக்கீட்டுடன் ,000 ஏக்கரில் ஒன்றும், கன்னியாகுமரி மாவட்டத்தில் ரூ. 122.50 லட்சம் செலவில் 3,500 ஏக்கரில் மற்றொன்றுமாக இரண்டு தென்னை வளர்ப்புத் திட்டங்கள்.

[1974 மார்ச் 19

2. கன்னியாகுமரி மாவட்டத்தில், ரூ. 7.50 லட்சம் செலவில் 750 ஏக்கரில் கோக்கோ பயிரிடும் திட்டம்.

3. மதுரை மாவட்டத்தில், ரூ. 100 லட்சம் மதிப்பீட்டுச் செலவில், 1,000 ஏக்கர் பரப்பில் திராட்சை பயிரிடும் திட்டம்.

4. திருச்சிராப்பள்ளி, இராமநாதபுரம், தென் ஆர்க்காடு மாவட்டங்களில் முறையே ரூ. 20 இலட்சம், ரூ. 60 இலட்சம், ரூ. 40 லட்சம் செலவில் முறையே 5,000 ஏக்கர், 15,000 ஏக்கர் 10,000 ஏக்கர் பரப்பில் மூன்று முந்திரி பயிரிடும் திட்டங்கள்.

மேற்சொன்ன திட்டங்களுடன், பின்வரும் திட்டங்களும் பரிசீலனையில் உள்ளன :—

1. செங்கற்பட்டு, திருநெல்வேலி, கோயம்புத்தூர் மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் 1,500 ஏக்கர் பரப்பில் முறையே ரூ. 60 லட்சம், ரூ. 35.25 லட்சம், ரூ. 30 லட்சம் செலவில் தென்னை வளர்ப்புத் திட்டங்கள்.

2. ரூ. 60 லட்சம் செலவில், 2,000 ஏக்கர் பரப்பில் ஜெரேனியம் வளர்ப்புத் திட்டம்.

3. சேலம், நீலகிரி மாவட்டங்களில் 250 ஏக்கர், 2,500 ஏக்கர் பரப்பில் முறையே ரூ. 7.50 லட்சம், ரூ. 75 லட்சம் செலவில் இரண்டு காப்பி பயிரிடும் திட்டங்கள்.

4. கால்நடை வளர்ப்புத் திட்டம், கோழிப் பண்ணைத் திட்டம், கோயம்புத்தூர், சேலம் மாவட்டங்களில் ரூ. 18 லட்சம் செலவிலும், நீலகிரி, கோயம்புத்தூர் மாவட்டங்களில் முறையே ரூ. 18.45 லட்சம், ரூ. 11.25 லட்சம் செலவில் கலப்புப் பண்ணைப் பிரிவுகள் ஏற்படுத்துதல் ஆகியவை அரசின் பரிசீலனையில் உள்ளன.

### அனைத்து நாடுகள் வளர்ச்சிச் சங்கத் திட்டம்.

அனைத்து நாடுகள் வளர்ச்சிக் கழகத் திட்டம் ரூ. 190 லட்சம் மூலதன செலவில், 25,000 ஏக்கர் நிலத்தைச் சமப்படுத்த, வகை செய்கின்றது. இந்நிதி ஒதுக்கத்தைக் கொண்டு, ரூ. 63.11 லட்சம் மூலதனத்தில், கோயம்புத்தூர் மாவட்டம், பரம்பிக்குளம் ஆழி யாறுத் திட்டத்தின் இரண்டாவது கட்டத்தின்கீழ் 11,000 ஏக்கர் நிலத்தைப் பண்படுத்தும் பணி எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.



1974 மார்ச் 19]

அனைத்து நாடுகள் வளர்ச்சிச் சங்கத்தின் கடன் வசதியுடன் 1974-75-ஆம் ஆண்டில் கன்னியாகுமரி மாவட்டம், சித்தார் பட்டணம்கால் பகுதியில் ரூ. 45 லட்சம் மதிப்பீட்டுச் செலவில் 3,000 ஏக்கர் நிலத்தைச் சமப்படுத்தவும், தஞ்சை மாவட்டம், தஞ்சாவூர் வட்டம், கும்பகோணத்தில் ரூ. 127.58 லட்சம் மதிப்பீட்டு செலவில் 27,000 ஏக்கர் நிலம் வடிகால் அமைக்கவும் திட்ட மிடப்பட்டுள்ளது. இத் திட்டங்கள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

### டிராக்டர்கள் வழங்கல்.

அனைத்து நாடுகள் வளர்ச்சிச் சங்கத்தின் மூலம் 2,500,000 டாலர் மதிப்புள்ள (இந்திய மதிப்பு ரூ. 1,88,00,000) 750 டிராக்டர் களையும், உதிரிப் பாகங்களையும் இறக்குமதி செய்யக் கருதப் பட்டுள்ளது. இத்திட்டம் தற்போது இந்திய அரசின் பரிசிலனையில் உள்ளது.

### துளைக் கிணறுகள் தோண்டும் இயந்திரமும், மண்வாரி இயந்திரமும் வாங்குதல்.

துளைக் கிணறுகள் தோண்டும் இயந்திரங்கள் வாங்குதற்கான ஒப்பந்தப் புள்ளிகள் குறித்த ஆவணங்கள் இந்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளன. இவற்றிற்கு அனைத்து நாடுகள் வளர்ச்சிக் கழகத்தால் ஏற்பளிக்கப்பட்டுள்ளது. இந்த ஒப்பந்தப் புள்ளி அறிவிப்பு பற்றிய விவரங்களை முதன்மையான நாளிதழ்களில் வெளியிட வேளாண்மைத்துறை இயக்குநர் நடவடிக்கை எடுத்து வருகிறார்.

மண்வாரி இயந்திரம் குறித்த ஒப்பந்தப் புள்ளி ஆவணங்களைக் குறித்து இந்திய அரசு தெரிவித்த ஆலோசனைகளின் அடிப்படை யில், வேளாண்மைத்துறை இயக்குநர் அவர்களுடன் கலந்து கொண்டு, அரசு முடிவு செய்யும்.

### வேளாண்மைக்கல்வி.

**வேளாண்மைப் பள்ளிகள் :**

இம்மாநிலத்தில் 14 வேளாண்மைப் பள்ளிகள் உள்ளன. அவற்றில் 13 வேளாண்மைப் பள்ளிகள் மாநில வேளாண்மைத் துறையால் நடத்தப்படுகின்றன. ஒரு பள்ளி வடார்க்காடு

மாவட்டம் காட்பாடியில், தனியார் அமைப்பு ஒன்றினல் நடத்தப்படுகிறது. குடியானவர்களுடைய பிள்ளைகளுக்கு தொழில் நுட்ப அறிவில் முன்னேற்றம் அளிக்க ஆண்டொன்றுக்கு பள்ளி ஒன்றில், 20 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். தற்போது இந்தப் பள்ளிகள் தற்காலிகக் கொட்டகைகளில் உள்ளன. படிப்படியாக, 1974-75-ஆம் ஆண்டிலிருந்து நிரந்தரக் கட்டிடங்கள் கட்டக் கருதப்பட்டுள்ளது.

### திருச்சிராப்பள்ளி மாவட்டம் குடுமியான் மலை "அண்ணுப் பண்ணையில்" உள்ள மாநில வேளாண்மைப் பயிற்சி நிலையம்.

வேளாண்மையில் பல துறைகளிலும் நவீன வளர்ச்சியுடன் பல நிலைகளில், வேளாண்மைத்துறை தொழில் நுட்பப் பணியாளர்களுக்கு பயிற்சி அளிக்க திருச்சிராப்பள்ளி மாவட்டம் குடுமியான் மலை "அண்ணுப் பண்ணை"-யில் மாநில வேளாண்மைப் பயிற்சி நிலையம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது.

### உழவர்கள் பயிற்சி நிலையம்.

உழவர்கள் பயிற்சி நிலையங்கள் ஏழு உள்ளன. அவற்றில் 5 வேளாண்மைத் துறையின் கீழும், 2 வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் கீழும் உள்ளன. இந்த நிறுவனங்களில் கீழ்க்கண்டவர்களுக்காக 5 நாட்கள் பயிற்சி அளிக்கப்படுகிறது :—

(i) குடியானவர்கள்.

( ) குடியானவப் பெண்கள்.

(iii) குடியானவர் விவாதக்குழு கூட்டுநர்கள்.

குடியானவர் நிலங்களில் அவ்வப்போது உலாவரும் பயிற்சியும், செய்முறை விளக்கங்களும் ஒரு நாளைக்கு அளிக்கப்படுகின்றன. ஒவ்வொரு குடியானவர் பயிற்சி மாவட்டத்திலும், இத்தகைய பயிற்சி செய்முறை விளக்கங்கள் ஆண்டொன்றுக்கு 100 முறை நடத்தப்படுகின்றன.

அடுத்துவரும் ஆண்டுகளில், குடியானவர்கள் பயிற்சி நிலையங்களுக்கு அதிக வசதிகள் வழங்கப்படும்.



### வேளாண்மைப் பல்கலைக்கழகம்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் 1971 ஜூன் முதல் நாளிலிருந்து செயல்படத் தொடங்கியது. பலவகைப் பயிர்கள் குறித்த விரிவான ஆராய்ச்சி, ஆராய்ச்சி நிறுவனங்கள் வளர்ச்சி, கல்வி நிறுவனங்கள் முன்னேற்றம் ஆகியவை குறித்துத் தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் அதிகக் கவனம் செலுத்தி வருகிறது.

விதைத் தொழில் நுட்பத்தில் முன்னேற்றம் காண 1973-74-ஆம் ஆண்டில் புதிய மண்வளத் தொழில் நுட்பப்பிரிவு ஒன்று தொடங்கப்பட்டது. 1972-73 கல்வி ஆண்டிலிருந்து வேளாண்மைப் பொறியியல் பட்ட வகுப்பு இருக்கைகளின் எண்ணிக்கை 40-ஆக இருந்தது. இது 1973-74-ஆம் ஆண்டில் 50 ஆக அதிகரிக்கப் பட்டது. 20 இருக்கைகளுடன், 1973-74 ஆம் ஆண்டில், அறிவியல் பட்டப்படிப்பில் தோட்டக்கலைப்படிப்பு B. Sc. (Harticulture) ஒன்றும் தொடங்கப்பட்டது. ஆறு மாணவர்களுடன் இரண்டாண்டு அறிவியல் பட்டமேற்படிப்பு M. Sc. ஒன்று விதைத் தொழில் நுட்பத் துறையால் தொடங்கப்பட்டது. கோயம்புத்தூர் மற்றும் மதுரை வேளாண்மைக் கல்லூரியில் அறிவியல் பட்டப்படிப்பில் (வேளாண்மை) B. Sc. (Agriculture) உள்ள மொத்த இடங்கள் 222 ஆகும்.

இப்பல்கலைக்கழகத்திற்கு 1974-75-ஆம் ஆண்டுக்கான மொத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு ரூ. 266.54 லட்சம் ஆகும். இதில், இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் குழுவின் ஆதரவு பெற்ற இத் திட்டத்திற்கு ரூ. 53.554 லட்சம் நிதி உதவி கிடைக்கும். இப் பல்கலைக்கழகத்திற்கு கல்லூரிப் பயிற்சிக் கட்டணங்கள், பண்ணை அல்லது ஆராய்ச்சி நிலையம் ஆகியவற்றின் மூலம் ஏறத்தாழ ரூ. 18 லட்சம் அளவுக்கு வருவாய் கிடைக்கும். 1974-75-ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசு ஏற்கும் செலவுத் தொகை ரூ. 195 லட்சமாக மதிப்பிடப்பட்டுள்ளது. ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் பலவகை வளர்ச்சிப் பணிகளுக்காக இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் குழு மற்றும் இந்திய அரசு ஆகியவற்றின் மூலம் நிதி உதவி பெறுவதற்காக இது உலக வங்கியின் நாட்டத்தைப் பெற்றுள்ளது.

**சிறு உழவர்கள் வளர்ச்சி நிறுவனம், குறைந்த அளவில் நிலம் வைத்துள்ள சிறு உழவர்கள், மற்றும் பண்ணைத் தொழிலாளர்களுக்குரிய வளர்ச்சி நிறுவனம்.**

திருநெல்வேலி, மதுரை, கடலூர், சிறு உழவர்கள் வளர்ச்சி நிறுவனம்; செங்கம், சேலம், குறைந்த அளவில் நிலம் வைத்துள்ள சிறு உழவர்கள் மற்றும் உழவுத் தொழிலாளர்களுக்குரிய வளர்ச்சி நிறுவனம் ஆகியவற்றின் கீழ்வரும் திட்டங்கள் 1974-75 ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். இதுவரை ஐந்து நிறுவனங்களுக்கும் 1973-74 ஆம் ஆண்டில் மொத்தத் தொகையாக ரூ. 72.96 லட்சம் கொடுக்கப்பட்டுள்ளது. 156,833 உழவர்கள் இதன் மூலம் பயன் அடைந்துள்ளனர்.

சிறு உழவர்கள் வளர்ச்சி நிறுவனம், தென்னார்க்காடு மாவட்டத்தில் மேற்கொண்டு ஆறு வட்டாரங்களிலும் குறைந்தளவு நிலமுள்ள உழவர்கள், பண்ணைத் தொழிலாளர்கள் நிறுவனம், வடஆர்க்காடு மாவட்டத்தில் மேற்கொண்டும் ஒரு வட்டாரத்திலும், செயல்பட இந்திய அரசு அண்மையில் தங்களது இசைவைத் தெரிவித்துள்ளது. இவ்வாறாக, சிறு உழவர்கள் வளர்ச்சி நிறுவனங்கள் குறைந்த நிலமுள்ள உழவர்கள், பண்ணைத் தொழிலாளர்கள் வளர்ச்சி நிறுவனங்கள் திட்டம் இம்மாநிலத்தில் 52 வளர்ச்சி வட்டாரங்களில் செயல்பட்டு வருகின்றது. விவரம் வருமாறு:—

| | |
|---|---|
| மதுரை | 18 |
| தென்னார்க்காடு | 18 |
| திருநெல்வேலி | 11 |
| வடார்க்காடு | 3 |
| சேலம் | 2 |
| | 52 |

**தமிழ்நாடு வேளாண்-தொழில் கழகம்.**

தமிழ்நாடு வேளாண்-தொழில் கழகம் 1968 ஆம் ஆண்டிலிருந்து செயல்பட்டு வருகிறது. இக்கழகம் 1968-70 இக்கால அளவில் தவணைக் கொள்முதல் நிதியுதவித் திட்டத்தைச் செயல்படுத்தியது.



10,684 விசை ஏற்றங்கள், 325 டிராக்டர்கள் ஆகியவற்றை வாங்குவதற்காக 11,009 பேர்களுக்கு ரூபாய் 312.04 லட்சம் தொகை முன்பணமாக வழங்கியது. இக்கழகத்தின் நடவடிக்கைகளில் ஒன்று இறக்குமதி செய்யப்பட்ட டிராக்டர்களை வழங்குவதாகும்; இது 3,239 டிராக்டர்களை வழங்கியுள்ளது.

விசை உழவுக் கருவிகளுடன் பெருமளவில் தரையில் மருந்து தெளித்தல், டிராக்டர்களுக்கு உதிரிப் பாகங்களை விற்பனை செய்தல், வேளாண் கருவிகளைத் தயாரித்தல் ஆகியவற்றில் இக்கழகம் ஈடுபட்டுள்ளது. இக் கழகம் காஞ்சிபுரம், சேலம், திருச்சிராப்பள்ளி, விழுப்புரம், மதுரை, திருநெல்வேலி ஆகிய இடங்களில் வட்டார நிலையங்களும், மதுராந்தகம், பொன்னேரி, பட்டுக்கோட்டை, புதுக்கோட்டை, திருவண்ணாமலை, தேனி, பரமக்குடி ஆகிய இடங்களில் துணை நிலையங்களும் நடத்துகிறது. கோயம்புத்தூரில் ஒரு வட்டார நிலையமும், மற்ற இடங்களில் எட்டு துணை நிலையங்களும் திறக்க இக்கழகத்திடம் செயற்குறிப்பு ஒன்று உள்ளது. வேளாண் பணி நிலையங்களைத் தொடங்க இக்கழகம் வேலையற்ற தொழில் நுட்பப் பணியாளர்களுக்குப் பயிற்சி அளிக்கும் திட்டம் ஒன்றைச் செயல்படுத்துகிறது. வட்டார வளர்ச்சி அளவிலான பண்டகசாலைகள் மூலமாக உழவர்களுக்கு வழங்க, வேளாண்மைத் துறைக்கு பயிர்ப் பூச்சிக்கொல்லி மருந்துகளை வழங்குவதிலும் இக்கழகம் ஈடுபட்டுள்ளது. பயிர்ப் பூச்சிக்கொல்லி மருந்துகளைத் தயாரிப்பதற்காக மாநிலத்தில் பின்தங்கிய மாவட்டம் ஒன்றில் தொழிற்சாலைத் தொகுதி ஒன்றை அமைப்பதற்குத் தற்காலிகமாக முடிவு செய்யப்பட்டுள்ளது.

உரங்களை வழங்குவதையும், பழம், பழப் பொருட்கள் ஆகியவற்றை விற்பனை செய்வதையும் இக்கழகம் மேற்கொண்டுள்ளது. கீழ்க்காணும் திட்டங்களுக்கான செயற் குறிப்புகள் இக்கழகம் கொண்டுள்ளது:—

1. மீன்வலை தயாரிக்கும் தொழிற்சாலை.
2. மக்காச்சோளம் அரைவை ஆலை.
3. எண்ணெய்த் தொழிற்சாலை.
4. ஆவரம்பட்டைத் தாவர எண்ணெய் பிரித்தெடுத்தல்.

[1974 மார்ச் 19

5. ரப்பருக்கு வரும் நோயைத் தடுப்பதற்காக ரசாயனப் பொருள் தயாரித்தல்.

6. இரும்பை அதனுடைய தாதுப் பொருளிலிருந்து எளிதாகப் பிரிப்பதற்கு பயன்படுத்தப்படும் 'தெர்மிசெம்' தயாரித்தல்.

7. அடிப்படை புரத உணவைத் தயாரித்தல்.

8. தூய்மைப்படுத்தப்பட்ட சாராயத்தைத் தயாரிப்பதற்கான வடிப்பு ஆலை.

மாவுப்பொருள் (Starch) க்ளுகோஸ், டெக்ஸ்ட்ரோஸ் (Dextrose)

இது ஒருவகையான சர்க்கரைப் பொருளாகிய டெக்ஸ்ட்ரின் (Dextrin) ஆகியவற்றை உற்பத்தி செய்வதற்கு மக்காச்சோள அரைவை ஆலை ஒன்றை நிறுவுவதற்கான அனுமதிக் கடிதம் ஒன்றை இந்திய அரசிடமிருந்து தமிழ்நாடு வேளாண்-தொழில் கழகம் பெற்றுள்ளது. மருந்துப்பொருள் தயாரித்தல், பஞ்சாலை, காகிதம் ஆகிய தொழிற்சாலைகளில் டெக்ஸ்ட்ரினும், டெக்ஸ்ட்ரோசும் பயன் படுத்தப்படுகின்றன. இத்திட்டத்திற்கான மூலதனச் செலவு சுமார் ரூ. 9.00 கோடி என எதிர்பார்க்கப் படுகிறது. கடன் வழங்கு நிறுவனங்கள், வணிக வங்கிகள் ஆகியவற்றின் உதவியுடன் நிதிவாயில்கள் திரட்டப்படும். புதுக்கோட்டை மாவட்டத்தில் இந்த மக்காச்சோள அரைவை ஆலை அமைக்கப்படும். இம் மாவட்டம் பின்தங்கிய பகுதி யாகையால், பின்தங்கிய பகுதிக்கு அளிக்கப்படுகின்ற சலுகைகளை இத்தொழிற்சாலை அடையலாம். இத் திட்டத்திற்கான கட்டிட வேலைகள் 1974-75-ல் தொடங்கப்படும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

தமிழ்நாடு-வேளாண் பொறியியல்-பணிக் கூட்டுறவு கூட்டமைப்பும் அதனுடன் இணைந்த சங்கங்களும்.

இந்திய அரசின் ஐந்து லட்சம் பேருக்கு வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ், 300 வளர்ச்சி வட்டார அளவில், வேளாண் பொறியியல்-பணிக் கூட்டுறவு நிலையங்களை அமைக்கும் திட்டத்தை தமிழ்நாடு வேளாண்-பொறியியல்-பணிக் கூட்டுறவு கூட்டமைப்பு



1974 மார்ச் 19]

செயல்படுத்தி வருகிறது. மேற்படி 30 நிலையங்களைப் பதிவு செய்யும் பணி, 1974 ஆம் ஆண்டு மார்ச் முடிவடைவதற்குள் முடிக்கப்படும் என்று திட்டமிடப்பட்டுள்ளது. இதுவரை 192 நிலையங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இதில் 75 நிலையங்கள், நிர்வாக இயக்குநர் நியமிக்கப்பட்டுள்ள நிலையில் செயல்பட்டு வருகின்றன.

வேளாண்மை உற்பத்திக் குழு.

வேளாண் தொழில் கழகத்திற்காக பழ விற்பனை, பழச்சாறு குறித்துத் தொழில்நுட்பப் பொருளாதார ஆய்வுகள் மேற் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வேளாண் தொழில் குறித்த பல்வேறு பொருள்கள் பற்றிய ஆய்வுகள் மேற்கொள்ளத் திட்டமிடப் பட்டுள்ளன. அடுத்து வரும் ஆண்டில் அதன் நடவடிக்கைகள் விரிவாக்கப்படும்.

## இணைப்பு IV.

[539-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க]

### கால்நடை வளர்ப்பு கொள்கைக் குறிப்பு—1974-75

### கோரிக்கை எண் 22—கால்நடை வளர்ப்பு 1974-75.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

" கோரிக்கை எண் 22—கால்நடை வளர்ப்பு" என்ற தலைப்பின் கீழ் 4,59,44,000 ரூபாய்க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் படவேண்டுமென நான் முன்னுரைக்கிறேன்.

1969 ஆம் ஆண்டில், கால்நடை வளர்ப்புத் துறையானது, கால்நடை வளர்ப்புத் துறை என்றும், கால்நடை மருத்துவக் கல்வி ஆராய்ச்சித் துறையென்றும் இரு வேறு துறைகளாகப் பிரிக்கப்பட்டது.

கால்நடை வளர்ப்புத் துறையின் பணி, வட்டாரத் துணை இயக்குநர்கள் அறுவரைக் கொண்ட வட்டார அடிப்படையில் பிரிக்கப்படும் வகையில், கால்நடை வளர்ப்புத் துறை 1969 ஆம் ஆண்டு இறுதியில் சீரமைக்கப்பட்டது. சீரமைக்கப்பட்ட அமைப்பின் கீழ், மையக் கிராமத் திட்டங்கள் தொடர்பான பணி, கால்நடை வளர்ப்பு மும்முரத் திட்டம் ஆகியவை அனைத்தும் கால்நடை வளர்ப்புத் துறையின் இயல்பான பணிகளில் ஒன்றாகச் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளன.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் வரையில், ஐந்தாண்டுத் திட்டக் காலங்களில் செய்யப்பட்ட நிதி ஒதுக்கீடு, செலவு ஆகியவை குறித்த விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| | ஒதுக்கீடு. | செலவு. |
|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| முதலாவது ஐந்தாண்டுத் திட்டம் | 56.28 | 51.05 |
| இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் | 216.18 | 200.15 |
| மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் | 352.25 | 341.20 |
| விரைவுத் திட்டம் (1964-66) | 210.76 | 182.72 |



நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு முன்னர் :

| | (ரூபாய் இலட்சத்தில்.) | |
|---|---|---|
| 1966-67 ஆண்டுத் திட்டம் | 105.22 | 119.15 |
| 1967-68 ஆண்டுத் திட்டம் | 80.70 | 84.70 |
| 1968-69 ஆண்டுத் திட்டம் | 79.44 | 80.21 |
| நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் | 235.01 | 155.55 (31—12—1973 வரை.) |

ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கும், ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தின் முதலாவது ஆண்டுத் திட்டத்திற்கும் (1974-75), கீழ்க்கண்டவாறு நிதி ஒதுக்கீடுகள் செய்யப் பட்டுள்ளன :—

| | கால்நடை வளர்ப்புத் துறை. | கால்நடை மருத்துவக் கல்வி ஆராய்ச்சித் துறை. |
|---|---|---|
| ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டம் | 1,000.04 | 535.24 |
| முதலாவது ஆண்டு | 41.24 | 41.21 |

ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்ட நிதி ஒதுக்கீட்டில் கால்நடை வளர்ப்புத் துறைக்கென்று எவ்வெவ்வாறு நிதி ஒதுக்கம் செய்யப் பட்டுள்ளது என்ற விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| | |
|---|---|
| (1) கால்நடை வளர்ப்பு | 510.71 |
| (2) கோழி வளர்ப்பு | 25.00 |
| (3) செம்மறியாடு வளர்ப்பு | 84.75 |
| (4) பன்றி வளர்ப்பு | 36.70 |
| (5) கால்நடை சுகாதாரம் | 203.69 |
| (6) கால்நடை நோய்த் தடுப்பு நுண்ணுயிர் உற்பத்தி | 54.03 |

[1974 மார்ச் 19

| | |
|---|---|
| (7) கால்நடைத் தீவனப் பயிர்—தீவன உற்பத்தி | 65.01 |
| (8) நிர்வாக அமைப்பை வலுப்படுத்தல் | 5.45 |
| (9) ஆடுமாடு வெட்டுமிடங்களை நவீனப்படுத்த உள்ளாட்சி மன்றங்களுக்கு நிதியுதவி | 9.70 |
| மொத்தம் | 1,000.04 |

ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டநிதி ஒதுக்கீட்டில், கால்நடை மருத்துவக் கல்வி ஆராய்ச்சி துறைக்கு எவ்வெவ்வாறு நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது என்ற விவரம் கீழே கொடுக்கப் பட்டுள்ளது :—

நிறுவனங்கள்—

| | |
|---|---|
| (1) சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி | 244.37 |
| (2) கோழிப்பண்ணை ஆராய்ச்சி நிலையம், தேனாம்பேட்டை. | 20.00 |
| (3) கால்நடை ஆராய்ச்சி நிலையம், காட்டுப்பாக்கம். | 165.08 |
| (4) செம்மறியாடு வளர்ப்பு ஆராய்ச்சி நிலையம், உதகமண்டலம். | 23.50 |
| (5) குடியானவர் பயிற்சி நிலையம், ஹோசூர். | 5.00 |
| (6) கால்நடை மருத்துவ ஆராய்ச்சிப் பண்ணை, காட்டுப்பாக்கம். | 77.29 |
| மொத்தம் | 535.24 |



1974 மார்ச் 19]

### மாநிலக் கால்நடை மேம்பாட்டு வாரியம்.

கால்நடை வளர்ப்புத் துறை பொறுப்பிலுள்ள அமைச்சரைத் தலைவராகக் கொண்ட மாநிலக் கால்நடை மேம்பாட்டு வாரியமொன்றை அரசு அமைத்துள்ளது. துறையின் மேம்பாட்டுக்கு இவ்வாரியம் செய்யும் பரிவுரைகள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

### கால்நடை மேம்பாட்டு மும்முரத் திட்டம்.

கால்நடை மேம்பாட்டு மும்முரத் திட்டப்பணி, கால்நடை வளர்ப்புத் துறையின் முறையான பணிகளுடன் இணைக்கப்பட்டதன் விளைவாக கால்நடை மேம்பாட்டுத் திட்டப்பணியின் முக்கியத்துவம் குறைந்தது. இதன் காரணமாக, கால்நடை வளர்ப்பு மும்முரத் திட்டத்தின்கீழ் இதுவரை ஏற்பட்ட முன்னேற்றம் அப்படியே தேக்க நிலையில் நின்று விட்டது. கால்நடை வளர்ப்பு மும்முரத் திட்டப் பணிகளைத் தீவிரமாக்கும் பொருட்டு, 1973-74 ஆம் ஆண்டில், ரூ. 15 லட்சம் மொத்தச் செலவில் அரசு இத்திட்டத்தை மதுரையில் மீண்டும் தொடங்கியது. தமிழ்நாட்டில் நல்ல தரமான கால்நடைகளை உற்பத்தி செய்வதுடன் அனைத்து வகையிலும் ஒருங்கிணைந்த கால்நடை மேம்பாடு, தீவன உற்பத்தி, நோய்த் தடுப்பு, பால் பண்ணை விரிவாக்கப் பணி ஆகியவற்றிற்கு இத்திட்டம் வகை செய்கிறது. 1974-75 ஆம் ஆண்டில், திருநெல்வேலி மாவட்டத்திலும், கால்நடை மேம்பாடு மும்முரத் திட்டத்தைத் தொடங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது. ஐந்தாவது ஐந்தாண்டு திட்டக் காலத்தில், ரூ. 190 லட்சம் மொத்தச் செலவில் கால்நடை மேம்பாடு மும்முரத் திட்டங்கள் நான்கைத் தொடங்கக் கருதப்பட்டுள்ளது.

### மையக் கிராமத் திட்டம்.

மையக் கிராமத் திட்டத்தை மீண்டும் தொடங்குவதையும் அரசு பரிசீலனையில் செய்தது. இனப் பெருக்கம் செய்யக்கூடிய 10,000 பசுக்களையும் எருமைகளையும் கொண்ட பகுதியொன்றில் குறிப்பிட்ட அளவில் கால்நடை இனப் பெருக்கம் செய்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும். செயற்கை முறையில் கருத்தரிக்கச் செய்து, இனப்பெருக்கம் செய்யப்படும். 1973-74 ஆம் ஆண்டில், மதுரையில் மையக் கிராமத் திட்டத்தை மீண்டும் தொடங்க அரசு அனுமதியளித்தது. 1974-75 ஆம்

ஆண்டிலும் மையக் கிராமத் திட்டத்தைச் செயல்படுத்துவது அரசின் பரிசிலனையிலுள்ளது. ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ரூ. 98 இலட்சம் மொத்தச் செலவில் 64 மையக் கிராம வட்டாரங்கள் அமைக்கக் கருதப்பட்டுள்ளது.

### மும்முர கிராம வளர்ச்சி முகாம்கள்.

செங்கற்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த படப்பை கிராமத்திலும், திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த நட்டாத்தி கிராமத்திலும், தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த வடசேரி கிராமத்திலும் கோழியின வளர்ச்சியை முக்கியமாகக் கொண்டு, கால்நடை வளர்ப்புப் பணிகளில் அனைத்து வகையிலும் மேம்பாடு காணும்பொருட்டு, மும்முர கிராம வளர்ச்சி முகாம்களை அரசு தொடங்கியுள்ளது. இந்த முகாம்கள் செயல்படும் விதம், அக்கிராமங்களைச் சேர்ந்த குடியானவர்களின் முனைப்பான ஒத்துழைப்பையும் அவர்களுக்கு ஆதாயம் தரும் முன்னேற்றத்தையும் அளித்திருக்கிறது.

### குடியானவர்கள் பயிற்சித் திட்டம்.

ஹோசூர் மாவட்டக் கால்நடைப் பண்ணையில், குடியானவர்கள் பயிற்சித் திட்ட மொன்றை அரசு தொடங்கியுள்ளது. அறிவியல் முறையிலான நிர்வாகம், கோழி-கால்நடை வளர்ப்பு ஆகியவற்றில் குடியானவர்களுக்கு மூன்று மாத காலத்திற்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இதுவரை, நான்கு அணிகளில் 184 பேருக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. பயிற்சி பெறுவோர் ஒவ்வொருவருக்கும் திங்களொன்றுக்கு ரூ. 65 வீதம் பயிற்சி உதவித் தொகை வழங்கப்படுகிறது.

### கால்நடை உதவியாளர் பயிற்சித் திட்டம்.

ஒரத்தநாடு மாவட்டக் கால்நடைப் பண்ணையில், கால்நடை உதவியாளர்கள் பயிற்சித் திட்டத்தை 1974-75 முதற்கொண்டு மீண்டும் தொடங்க அரசு முடிவு செய்துள்ளது.

### பணியிருப்புப் பயிற்சியும், நினைவூட்டு பயிற்சியும்.

கால்நடை வளர்ப்பு உதவி இயக்குநர் பதவித் தரத்திலும், அதற்கு மேற்பட்ட பதவித் தரத்திலும் உள்ள அதிகாரிகளுக்குப்



பணியிருப்புப்பயிற்சியும், நினைவூட்டு பயிற்சியும் அளிக்கும் திட்டத்திற்கு அரசு அனுமதியளித்துள்ளது. இராணிப்பேட்டையிலுள்ள கால்நடை நோய்த்தடுப்பு மருத்துவ நிலையத்திலும், ஹோசூரிலுள்ள கால்நடைப் பண்ணையிலும் பத்து அதிகாரிகள் கொண்ட அணி அணியாக அவர்களுக்கு மூன்று திங்களுக்கு பயிற்சியளிக்கப்படும். இப்பயிற்சித் திட்டம் விரைவில் தொடங்கும்.

### ஆய்வுக் கூடத் தொழில் நுட்பப் பணியாளர் பாடப்பயிற்சித் திட்டம்.

கால்நடை மருத்துவக் கல்வி-ஆராய்ச்சித் துறையில் மேற்கொள்ளப்படும் பல்வேறு சோதனைகள், ஆராய்ச்சிகள் ஆகியவற்றிற்குப் பயன்படும் நவீன சாதனங்களை இயக்கும் வகையில் அறிவியல் திறமை பெற்றவர்கள் கிடைக்கும் வகையில் ஆய்வுக் கூடத்தொழில் நுட்ப பணியாளர் பாடப் பயிற்சித் திட்டமொன்றைத் தொடங்க அரசு உத்தேசித்துள்ளது. இப்பாடப் பயிற்சித் திட்டம் விரைவில் தொடங்கும்.

## கழகங்கள்.

### கோழியின வளர்ச்சிக் கழகம்.

தமிழ் நாட்டில் கோழியின வளர்ப்பு நடவடிக்கைகளுக்கு ஆக்கம் அளிக்கும் வகையில், அரசு 12—7—1973 ஆம் நாளன்று தமிழ் நாடு கோழியின வளர்ச்சிக் கழகத்தை நிறுவியது. இக் கழகம் மக்களின் பொருளாதார நிலையை உயர்த்துவதுடன் மக்களுக்குத் தேவையான சத்துணவுப் பொருள்களையும் வழங்குகிறது. கழகத்தை அமைப்பதற்குத் தேவையான தொடக்க செலவினங்களுக்காக அரசு ரூ. 25,000-க்கு ஒப்பளித்துள்ளது. இதற்கு அனுமதி வழங்கப்பட்ட மூலதனம் ஒரு கோடி ரூபாயாகும். சென்னையிலும் அதைச் சுற்றிய பகுதிகளிலும், திருச்சி, தஞ்சாவூர் மாவட்டங்களிலும் உள்ள பல்வேறு கோழியின கூட்டுறவுச் சங்கங்களில் இருந்து முட்டைகளைச் சேகரித்தல், விற்பனை ஆகியவைகளை இக்கழகம் கவனித்து வருகிறது. இக் கழகம் ஒவ்வொரு நாளும் சுமார் 60,000 முட்டைகளை விற்பனை செய்கிறது. மொத்தம் ரூபாய் 81.00 இலட்சம் செலவிலான

"ஐந்து இலட்சம் பேருக்கு வேலை வாய்ப்புத் திட்டத்தை" நிறைவேற்றும் பணி இக்கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மத்திய அரசால், மூன்றாண்டுக் காலத்திற்கு வழங்கப்படுகின்ற ரூபாய் 12.00 இலட்சம் நிதி உதவியுடன், படித்து வேலையில்லாத 500 பேர்கள் சொந்தமாக கோழி வளர்ப்புப் பிரிவுகளைத் தொடங்க இத்திட்டம் வகை செய்கிறது. இவ்வாறு அரசின் உதவியுடன் சொந்தத்தில் கோழி வளர்ப்புப் பிரிவுகளைத் தொடங்குபவர்களுக்கு தேனாம்பேட்டையில் உள்ள கோழியின ஆராய்ச்சி நிலையத்திலும், காட்டுப்பாக்கத்தில் உள்ள கோழிப் பண்ணையிலும் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. இப் பயிற்சித் திட்டம் முடிவடைந்துள்ளது. பயிற்சி பெற்றுள்ளவர்கள் இத்திட்டத்தின்கீழ் கோழி வளர்ப்புப் பிரிவுகளைத் தொடங்குவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. 500 கோழியினப் பிரிவுகள் ஓராண்டுக்கு 500 இலட்சம் முட்டைகளை வழங்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதன் மூலம் 5,000 சிறு விவசாயிகளுக்கு, தங்கள் பண்ணைகளில் கோழிக் குஞ்சுகளை வளர்த்தலுக்கு வகை செய்வதன் மூலம் துணைத் தொழில்களுக்கு வகை செய்யப்படுகின்றது. இக்கழகம் உணவிற்காக மாநிலத்திற்கு 2,25,000 கோழிகளை கொடுப்பதன் மூலம் 225 டன்கள் கோழி இறைச்சி கிடைக்கும். இத்திட்டத்திற்கு அரசு ரூ. 5,34,750-க்கு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இத்திட்டத்திற்கான மத்திய அரசின், நிலையான வட்டியில்லா பண மூலதனம் ரூ. 11.25 இலட்சம். உதவித் தொகைக்கான பங்கு ரூ. 75,000.

இந்திய ஸ்டேட் வங்கியின் கடனுதவியுடன் கோழியின வளர்ப்புக்கான மும்முரத் திட்டம் 1972 ஆம் ஆண்டில் திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் மாவட்டங்களில் தொடங்கப்பட்டுள்ளது. திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் 100 பேர்களைக் கொண்ட 17 சங்கங்கள் அமைக்கப்படவிருக்கின்றன. இவர்கள் ஒவ்வொருவரும் 100 கோழிகளைப் பராமரிப்பார்கள். கோழிக் கூடங்கள் அமைத்தல், தளவாடங்கள் வாங்குதல், கோழிகள், தீனி ஆகியவை வாங்குதல் இவற்றிற்காக ஒவ்வொருவருக்கும் ரூ. 2,300 முன்பணம் அளிக்கப்படும். இதன்படி 1,700 தொழில் முனைவர்கள் 1.7 இலட்சம் கோழிகளைப் பராமரித்து வருவர். தஞ்சாவூர் மாவட்டத்திலும் இதேபோல 26 சங்கங்கள் உதவி அளிக்கப்படவிருக்கின்றன. இதன்படி 2,000 தொழில் துறை



முனைவர்கள் 2.6 இலட்சம் கோழிகளைப் பராமரிப்பு செய்வர். இத்திட்டம் 1972 நவம்பரில் தொடங்கப்பட்டது. 1974 ஜனவரி இறுதியிலான நிலவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| | திருச்சிராப் பள்ளி. | தஞ்சாவூர். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| 1974 ஜனவரி வரை வழங்கப்பட்ட கடன். | 35.00 | 14.61 |
| தொடங்கப்பட்டு இயங்கும் மொத்த கோழியினப் பிரிவுகள். | 1,530 | 947 |
| தொடங்கப்பட்ட மொத்த கோழிகளின் எண்ணிக்கை. | 1,54,800 | 51,705 |

## இறைச்சி தொழிற் கழகம்

இந்திய அரசு கேட்டுக்கொண்டதன் பேரில் சென்னையில் ஓர் இறைச்சி தொழிற் கழகத்தை அமைக்கவும், செங்குன்றத்தின் அருகில் புழல் கிராமத்தில் ஆடு, மாடு இறைச்சி தொழிற்கூடம் கட்டவும் மாநில அரசு கருதியுள்ளது. இக்கூடத்தினை மத்திய அரசும், மாநில அரசும் இணைந்து நிறுவவேண்டுமென மத்திய அரசு ஆலோசனை கூறியுள்ளது—

(அ) முதலீடு செய்யப்பட்ட மூலதனத்தின் 1/3 பாகம் மூன்று பங்குதாரர்களால் சேர்ந்து வழங்கப்படும்.

(இ) எஞ்சிய 2/3 பாகம் சுலபத் தவணை முறைகளில் வேளாண்மை மறுநிதிக் கழகம் மற்றும் நிதி உதவி நிறுவனங்கள் மூலம் கடனாக அளிக்கப்படும்.

மேலே பிரிவு (அ)-ல் குறிப்பிடப்பட்ட முதலீடு செய்யப்பட்ட மூலதனத்தில் 1/3 பாகத்தில், மத்திய அரசு 50 சதவீதத்தை ஏற்கும். எஞ்சிய 50 சதவீதச் செலவை மாநில அரசும் இதில்

பங்கு பெறும் நிறுவனமும் சமமாக ஏற்கும். இந்த நிலையான வட்டியில்லா பங்கு மூலதனத்தை வேளாண்மைத் தொழிற் கழகமும் மாநில அரசும் பங்கிட்டுக்கொள்ளலாமா என்பது பரிசீலனையில் உள்ளது. 2,000 செம்மறி ஆடுகள், 150 மாடுகள் இறைச்சி எடுப்பதற்காக பக்குவப்படுத்தப்பட நாள் ஒன்றுக்கு எட்டுமணி நேரம் கொண்ட முறை மாற்றுப் பணிக்கான இத் தொழிற் கூட மதிப்பீடு ஏறத்தாழ ரூ. 62.25 இலட்சம்.

## கால்நடைக் கணக்கெடுப்பு.

தமிழ்நாட்டின் கால்நடைகளின் கணக்கெடுப்பு 31—1—1974 முதல் 28—2—1974 வரையில் நடைபெற்றது. 1—3—1974 ஆம் நாள் இறுதியாக சரிபார்க்கப்பட்டு முடிவு செய்யப்பட்டது. புள்ளிவிவர இயக்குநாரிடம் இப்பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது.

## கால்நடைக் காப்பு நிதி.

தமிழ்நாட்டில் கால்நடைக் காப்புநிதித் திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்த வேண்டுமென்று இந்திய அரசு ஆலோசனை கூறியவாறு, கால்நடை மரண விதத்தை ஆய்வு செய்யும் முன்னோடித் திட்டம் ஒன்று 1966 ஜூலை முதல் 1969 மார்ச் வரையில் செங்கற்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த ஸ்ரீபெரும்புதூர், காஞ்சிபுரம் வட்டங்களில் செயலிலிருந்து வந்தது. இத் திட்டத்திற்கு இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகம் முழு நிதி உதவியும் அளித்தது. அக்கால அளவில், தெரிந்தெடுக்கப்பட்ட 60 கிராமங்களில் கால்நடைகளின் இறப்பு விகித ஆய்வு நடத்தப் பட்டது. சேகரிக்கப்பட்ட புள்ளிவிவரங்கள் இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. மத்திய அரசின் வேளாண்மை அமைச்சகம், மத்திய அரசின் நிதி அமைச்சகத்திற்கு, மும்முர கால்நடை வளர்ப்புத் திட்டப் பகுதிகளில் இத் திட்டத்தை செயல்படுத்துவதற்கு மாநில அரசைக் கலந்து ஆலோசிக்குமாறு எழுதியுள்ளது. மத்திய அரசிடமிருந்து மேற்கொண்டும் கடிதம் எதிர்பார்க்கப்படுகிறது.



## மத்தியப் பண்ணைகள்.

இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகம், மதுரை மாவட்டம், கொடைக்கானல் வட்டம், மன்னவனூரில், செம்மறியாடு மற்றும் கம்பள ஆராய்ச்சி நிலையம் ஒன்றை நடத்தி வருகிறது.

2. இம் மாநிலத்தில் அலமாதியில் (செங்கற்பட்டு மாவட்டம்) மத்திய கால்நடை வளர்ப்புப் பண்ணை ஒன்றை மத்திய அரசு நடத்தி வருகிறது. நல்ல தரமான எருமைகளை வளர்த்து வழங்குவதே இதன் நோக்கமாகும். அலமாதியில் பண்ணை இருக்கும் நிலமும், கட்டிடமும் மத்திய அரசுக்கு மாற்றப் பட்டுள்ளன.

3. தஞ்சாவூரில் உள்ள ஈச்சங்கோட்டையில் மத்திய ஜெர்ஸி இனப் பண்ணை ஒன்றை அமைப்பதற்கான செயற்குறிப்பு முன்னரே மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டது. இது மத்திய அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

4. சேலம் மாவட்டத்தில் பச்சபாலமலை சமவெளிகளில் செம்மறியாடு ஆராய்ச்சி நிலையம் ஒன்று அமைப்பதற்கான செயற் குறிப்பு முன்னரே மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இது அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

## பால் பெருக்கு செயற் திட்டம்.

ஹொசூரில் உள்ள மாவட்டக் கால்நடைப் பண்ணையில் உள்ள கால்நடைகள் மற்றும் பால் பண்ணையின் வளர்ச்சிக்காகவும் கால்நடைகளுக்குத் தேவையான தீவன-தீவன தானியங்கள் ஆகியவற்றை உற்பத்தி செய்யவும் தேவையான ரூ. 129 இலட்சம் செலவிலான விரிவான திட்டம் ஒன்று வரையப்பட்டு, குஜராத் மாநிலத்தில் பரோடாவில் உள்ள இந்திய பால் பண்ணைக் கழகத் தலைவருக்கு அனுப்பப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான முழுச் செலவிற்கும் ஒப்புதல் வழங்குமாறு கேட்கப்பட்டுள்ளது. இத் திட்டத்திற்கு ஒப்புதல் வழங்கப்படின், கணிசமான அளவில் கால்நடை வளர்ப்பை செம்மைப்படுத்தும் வகையில் ஓசூரில் உள்ள மாவட்ட கால்நடைப் பண்ணை வலுப்படுத்தப்படும்.

[1974 மார்ச் 19

## கால்நடை தொற்றுநோய் நீக்க நிலையத்தை ஏற்படுத்துதல்.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், பம்பாய், சென்னை, கல்கத்தா, டில்லி, அமிர்தசரஸ் ஆகிய 5 இடங்களில் எல்லா வகையாலும் நிறைவு பெற்ற கால்நடை தொற்றுநோய் நீக்க நிலையங்களை ஏற்படுத்துவதென இந்திய அரசு முடிவு செய்தது. இதற்குத் தேவைப்படும் மனையைத் தருமாறு இந்த அரசை அவர்கள் கேட்டுக் கொண்டனர். கால்நடை தொற்றுநோய் நீக்க நிலையத்தை ஏற்படுத்துவதற்காக சைதாப்பேட்டை வட்டம் அரசங்கழனியிலுள்ள ஐந்து ஏக்கர் நிலத்தை இந்த அரசு தரும் என்று இந்திய அரசுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. நிலத்தின் மதிப்பிற்கேற்ற தொகை கொடுப்பதற்கான நடைமுறைகள் இந்திய அரசிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றன.

வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் கால்நடைகள் மூலம் தொற்றக்கூடிய நோய்களிலிருந்து கால்நடைகளைப் பாதுகாப்பதே சென்னையில் ஏற்படுத்தப்படும் இந்த தொற்று நோய் நீக்க நிலையத்தின் நோக்கமாகும். தற்போது வெளிநாடுகளிலிருந்து கால்நடைகள் இறக்குமதி செய்யப்படுகின்றன. அவை விமான நிலையத்திற்கு அல்லது துறைமுகங்களுக்கு வந்து சேரும் போது தொற்றுநோய் நீக்கம் செய்வதற்கான அனைத்து வசதிகளும் அளிக்கப்பட வேண்டும். இல்லையெனில், உள்ளூர் கால்நடைகள் வெளிநாட்டு நோய்களால் பாதிக்கப்படும்.

## கால்நடை நோய்த் தடுப்பு மருத்துவ நிலையம்—ராணிப்பேட்டையிலுள்ள மத்திய ஆய்வுக் கூடம்.

மருந்துப் பொருள் கட்டுப்பாட்டு ஆணையின் தேவையை நிறைவு செய்யவும், நோய்த்தடுப்பு மருந்தை உற்பத்தி செய்வதற்கும் ஏற்ற நவீன கட்டிடத்தையும், ஆய்வுக் கூடத்தையும் பெறவும் இந்நிலையத்தை விரிவுபடுத்துவதற்காகவும் ராணிப் பேட்டையிலுள்ள கால்நடை நோய்த் தடுப்பு மருத்துவ நிலையத்தில் மத்திய ஆய்வுக்கூடக் கட்டிடத்தைக் கட்டுவதற்கு அரசு ரூ. 16 லட்சத்தை அனுமதித்துள்ளது. இக்கட்டிடம் முடிவடையும் நிலையில் உள்ளது. ரூ. 4.41 லட்சம் செலவில் உயர்தர கலப்பின மாடுகளுக்கான வெக்கை நோய்த் தடுப்பு மருந்து தயாரிக்கும் திட்டம் ஒன்றிற்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.



1974 மார்ச் 19]

## பசு பாதுகாப்புப் பணி குறித்த மத்தியக் குழு.

இம் மாநிலத்தின் முதலமைச்சரை அல்லது முதலமைச்சரால் நியமிக்கப்படக்கூடிய வேறு ஒரு அமைச்சரை உறுப்பினராகக் கொண்டு ஆவினக் காப்புக் குழு மாற்றியமைக்கப்பட்டது. குழுவின் இரண்டாவது கூட்டத்தில் உணவுத் துறை அமைச்சருக்குப் பதிலாக வேளாண்மைத் துறை செயலாளர் கலந்து கொண்டார். நான்காவது கூட்டத்தில் வேளாண்மைத்துறை அமைச்சர் கலந்து கொண்டார். இந்திய அரசியலமைப்பின் 48-வது பிரிவின்கீழ் கால்நடைகளைப் பாதுகாக்கவும், மேம்படுத்தவும், பசுக்களையும், கன்றுகளையும் வெட்டுவதைத் தடுக்கவும், இந்த மாநில அரசு சட்டம் ஒன்றை இயற்ற வேண்டும் என்றும் ஆவினக் காப்புக் குழு வற்புறுத்தி வந்தது. 1—7—1958-லிருந்து செயலுக்கு வந்த தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு கால்நடைப் பாதுகாப்புச் சட்டம் என்றழைக்கப்படும் ஒரு சட்டத்தை இந்த அரசு எற்கெனவே இயற்றியுள்ளது என்று இந்திய அரசுக்குத் தெரிவிக்கப்பட்டது. அச் சட்டத்தின்படி, சான்றிதழ்கள் இல்லாமல் கால்நடைகளை வெட்டுவதை இந்த அரசு தடை செய்துள்ளது. கால்நடைகள் 10 ஆண்டுகளுக்கு மேற்பட்டு இருந்தாலொழியவும், அது வளர்ப்பதற்கு தகுதியற்றதாகவும் அல்லது காயம், முடம், அல்லது தீர்க்க முடியாத பிற நோய்கள் காரணமாக அந்தக் கால்நடை நிரந்தரமாக பயனற்றதாகப் போயிருந்தாலன்றி மற்றபடி பொருத்தமான அதிகாரியால் அத்தகைய சான்றிதழ்கள் கொடுக்கப்படக் கூடாது என்றும் வகை செய்யப்பட்டுள்ளது. மேல்முறையீடு செய்து கொள்வதற்கும் மறு ஆய்வு மனுக்கள் செய்துகொள்வதற்கும் சட்டத்தில் விதித் துறைகள் செய்யப் பட்டுள்ளன.

மேற்சொன்ன சூழ்நிலைகளில் இம் மாநிலத்திற்காக மேற் கொண்டும் சட்டம் இயற்றத் தேவையில்லை என்றும் தற்போதுள்ள சட்டமே போதுமானதென்றும் இந்திய அரசுக்குத் தெரிவிக்கப் பட்டது.

## நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் உள்ள பணிகள்.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், கால்நடை வளர்ச்சி, மையக் கிராமத் திட்டம், கால்நடை வளர்ப்பு மும்முரத் திட்டம், சிறிய பாற்பண்ணைப் பிரிவுகளுக்கு நிதி உதவி, செம்மறி

ஆடு, வெள்ளாடு வளர்ப்பு, பன்றி வளர்ப்பு, கோழி வளர்ப்பு, கால்நடை மருத்துவப் பணி, வெக்கை நோய் ஒழிப்பு, உயிரியல், பொருள்களை தடுப்புமருந்து உற்பத்தி செய்தல் ஆகிய பணிகள் வழக்கமான முறைப்படி நிறைவேற்றப்பட்டுள்ளன.

## கால்நடை வளர்ச்சி.

இம் மாநிலத்தில் உள்ள மாவட்டக் கால்நடைப் பண்ணைகளில் காங்கேயம், உம்பளாச்சேரி, அலிக்கார், ஆலம்பாடி, பர்கூர், புலிக்குளம் போன்ற கால்நடைகள் வளர்க்கப்பட்டு வருகின்றன. 1973-74-ல் இம் மாநிலத்தில் நல்ல கால்நடை வகைகளைப் பெறும் பொருட்டு ரூபாய் 2.4 லட்சம் செலவில் ஜெர்ஸி வகையைச் சேர்ந்த 28 காளைகளும், 32 இளம் பசுக்களும் ஆஸ்திரேலியாவிலிருந்து வாங்கப்பட்டன. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதிவரை ஆஸ்திரேலியாவிலிருந்தும், அமெரிக்காவிலிருந்தும் 47 காளைகளும், 20 இளம் பசுக்களும் நன்கொடையாகப் பெறப்பட்டன. அடுத்துவரும் ஆண்டுகளில் பொலிகாளைகளைத் தொடர்ந்து வழங்கும்பொருட்டு கால்நடைப் பண்ணைகளில் நன்கொடையாகப் பெறப்பட்ட வெளிநாட்டு கால்நடை மந்தைகள் இதில் இருக்கும். ஏனைய நாடுகளிலிருந்து தரமுள்ள வெளிநாட்டு காளைகளை வாங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

## செம்மறி ஆடு வளர்ப்பு.

உதகமண்டலம் செம்மறி ஆடு வளர்ப்பு ஆராய்ச்சி நிலையத்தில் ஆராய்ச்சி செய்யவும், சோதனை நடத்துவதற்காகவும் ரஷ்யாவிலிருந்து 40 செம்மறி ஆடுகளும், 10 ஆட்டுக்கடாக்களும், 1965 ஆம் ஆண்டில் இறக்குமதி செய்யப்பட்டன. 1972-ல் இதற்காக மீண்டும் 100 செம்மறி ஆடுகளும் 25 ஆட்டுக்கடாக்களும் இறக்குமதி செய்யப்பட்டன.

## கம்பளி மேம்பாடு.

நீலகிரி, கோயம்புத்தூர், கொடைக்கானல் பகுதிகளில் தரமுள்ள வெள்ளைநிற செம்மறி ஆட்டுக் கம்பளிகள் கிடைக்கின்றன. இந்தியாவிலுள்ள செம்மறி ஆடுகள் அனைத்திலும் நீலகிரி செம்மறி ஆடுகளிலிருந்து கிடைக்கும் கம்பளி





நேர்த்தியான கம்பளி ஆகும். இவை அங்காடியில் அதிக விலைக்கு விற்கப்படுகின்றன. நீலகிரியில் தற்போது வெள்ளை செம்மறி ஆடுகள் 7,000 உள்ளன. இவற்றின் எண்ணிக்கையைப் பெருக்க வேண்டும். கிடைக்கும் கம்பளியின் அளவை அதிகப்படுத்தும் நோக்குடன் மெரினோ வகை செம்மறியாடுகளின் கலப்பினம் வளர்ப்பது உதகமண்டலத்திலுள்ள செம்மறி ஆடு வளர்ப்பு ஆராய்ச்சி நிலையத்தில் மேற்கொள்ளப்படுகிறது. நேர்த்தியான கம்பளி உள்ள செம்மறி ஆடுகளை வளர்க்க ரஷ்யாவிலிருந்து 175 மெரினோ செம்மறி ஆடுகள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. உள்ளூர் செம்மறி ஆடுகளை தரம் உயர்த்துவதற்காக 40 காரிடால் செம்மறி ஆடுகளை வாங்குவதற்காக ஆணைகள் அனுப்பப்பட்டுள்ளன. நீலகிரி செம்மறி ஆட்டிலிருந்து ஆண்டொன்றுக்கு 0.9 கிலோ கிராம் கம்பளி மட்டுமே கிடைக்கிறது. நடத்தப்பட்ட சோதனைகள் கணிசமான பலனைக் காட்டுகின்றன. கலப்பின ஆடுகள் 2.7 கிலோ கிராம் கம்பளியைத் தருகின்றன. உயர்ந்த அளவு நேர்த்தியான கம்பளியைப் பெறுவதற்கு ஆராய்ச்சி விரிவுத் திட்டங்கள் மேற்கொள்ள கருதப்படுகின்றன.

## செம்மறி ஆடு வளர்ப்பிற்காக வேளாண்மை மறு நிதி உதவிக் கழக சிறப்புத் திட்டம்.

வேளாண்மை மறு நிதி உதவிக் கழகத்தின் நிதி உதவியுடன் தமிழ்நாட்டில் மொத்தம் ரூபாய் 83 லட்சம் செலவில் செம்மறி ஆடு வளர்ப்பதற்கான திட்டம் ஒன்றுக்கு 1973-ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. திருநெல்வேலி, சேலம், மதுரை, வட ஆற்காடு, இராமநாதபுரம், கோயம்புத்தூர், செங்கற்பட்டு, தருமபுரி ஆகிய மாவட்டங்களில் உள்ள 39 செம்மறி ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக இத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

## கால்நடை மருத்துவப் பணிகளும் கால்நடை சுகாதாரமும்.

இம் மாநிலத்தில் கால்நடை மருத்துவ மனைகள் 35-ம், கால்நடை மருந்தகங்கள் 522-ம், 1,943 துணை நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன. இந்த நிலையங்கள் அனைத்திலும், கால்நடை நோய்களையும், கால்நடை இறப்புகளையும் தடுக்க நோய்த்தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

## வெக்கை நோய் ஒழிப்புத் திட்டம்.

மாநிலங்களுக்கிடையேயான எல்லைகளில், சோதனைச் சாவடிகளையும் கண்காணிப்புப் பிரிவுகளைப் ஏற்படுத்துவதன் மூலம் அதிக அளவில் தொற்றுகின்ற வெக்கை நோயினைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

## கால்நடை நோய்த்தடுப்பு மருத்துவ நிலையம், ராணிப்பேட்டை.

இந்த நிலையம் ஆண்டொன்றுக்கு ரூபாய் 13 லட்சம் மதிப்புள்ள அம்மைப்பால் உற்பத்தி செய்கிறது. 1972-73-ல் ரூபாய் 10 லட்சம் மதிப்புடைய அம்மைப்பாலும், ஏனைய தடுப்பு மருந்துகளும் இந்த நிலையத்திலிருந்து இம் மாநிலத்தின் பல்வேறு நிலையங்களுக்கு அனுப்பப்பட்டன. பிற மாநிலங்களுக்கு இந்த மருந்துப் பொருள்களை விற்றதின்மூலம் ரூபாய் 2,62,290 வசூலிக்கப்பட்டுள்ளது. 1972-73-ல் ரூபாய் 1 லட்சம் ஆதாயம் பெறப்பட்டுள்ளது. 1973-74-ல் புதிய தடுப்பு மருந்துப் பொருட்களை உற்பத்தி செய்வதன் மூலம் இந்த ஆதாயம் இரு மடங்காக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## கோழி வளர்ப்பு.

கோழி இன வளர்ப்புக்கான முகவாமைப்பு கோழி இன வளர்ச்சிக் கழகமாகும். தற்போதுள்ள 130 கோழி வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள் அடுத்த ஆண்டில் போதிய அளவு வலுப்படுத்தப்பட்டு மேம்படுத்தப்படும். கோழித் தீனிக்கான பொருள்களை உற்பத்தி செய்வதற்கான வசதிகளும் அடுத்த ஆண்டில் மேம்படுத்தப்படும்.

## கால்நடை தீவன மேம்பாடு.

1973-74-ல் கால்நடைப் பண்ணைகளிலும், பிற நிலையங்களிலும் கால்நடைத் தீவன மேம்பாட்டுக்காக அரசு ரூபாய் 50,000 அனுமதித்துள்ளது.

## பணிகள்.

நான்காவது திட்டத்தின் இறுதிவரை சில்லரைச் செலவு நிதியிலிருந்து ஊதியம் பெறும் 1,590 மஸ்தூர்கள் முறையான பணியாளர் அமைப்பின்கீழ் கொண்டு வரப்பட்டனர்.



## ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்ட நடவடிக்கைகள்

ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் கால்நடை வளர்ப்புத் துறைக்காக ரூபாய் 1,000.04 லட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அதில் ரூபாய் 41.24 லட்சம் 1974-75 ஆண்டுத் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. 1974-75-ல் நிறைவேற்றக் கருதியுள்ள திட்டங்கள் அதன் செலவு விவரங்களுடன் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| | (ரூபாயில்.) |
|---|---|
| 1. ராணிப்பேட்டை கால்நடை நோய்த்தடுப்பு மருத்துவ நிலையத்தின் நுண்ணுயிர் மருத்துவப் பிரிவை வலுப்படுத்துதல். | 2,45,000 |
| 2. இருபத்தைந்து கால்நடை மருத்துவ மருந்தகங்களை அமைப்பதற்கான திட்டம். | 6,97,900 |
| 3. வட்டத் தலைமையிடங்களிலுள்ள கால்நடை மருந்தகங்களை, கால்நடை மருத்துவ மனைகளாக உயர்த்துதல். | 1,79,200 |
| 4. உதகமண்டலத்தில் பன்றி வளர்ப்புப் பிரிவு அமைத்தல். | 1,38,000 |
| 5. ஹொசூர் மாவட்டக் கால்நடைப் பண்ணையில் உறையவைத்த விந்து சேமிப்பு நிலையத்தை ஏற்படுத்துதல். | 1,81,000 |
| 6. வெளிநாட்டுப் பன்றிகளைத் தருவித்தல். | 75,000 |
| 7. கொருக்கையிலுள்ள கால்நடைப் பண்ணையை எல்லாவகையிலும் நிறைவு பெற்ற மாவட்டக் கால்நடைப் பண்ணையாகத் தரம் உயர்த்தல். | 2,18,400 |
| 8. மோக் நோயிற்கு எதிராக நோய்த்தடுப்பு மருந்து உற்பத்தி செய்வதற்கான திட்டம். | 2,16,200 |

[1974 மார்ச் 19

(ரூபாயில்.)

| | |
|---|---|
| 9. செயற்கை முறை இனவிருத்திக்காக முர்ரா எருமைகளை வாங்குதல். | 83,500 |
| 10. தமிழ்நாட்டில் வளர்ப்பதற்காக வெளிநாட்டு கால்நடைகளை வாங்குதல். | 5,00,000 |
| 11. திருநெல்வேலியிலுள்ள மாவட்ட கால்நடை பண்ணையில், கால்நடைத் தீவன உற்பத்திப் பிரிவு ஒன்றை ஏற்படுத்துதல். | 1,42,000 |
| 12. புதுக்கோட்டை, செட்டிநாடு ஆகிய இடங்களிலுள்ள மாவட்டக் கால்நடைப் பண்ணைகளை விரிவு படுத்துதல். | 79,200 |
| 13. கால்நடைத் தீவன உற்பத்தியை விரிவுபடுத்தும் பணி (அடையாள நிதி ஒதுக்கீடு). | 100 |
| 14. ஆடு, மாடுகள் இறைச்சிக்காகப் பக்குவப் படுத்தும் இடங்களை, நவீனப்படுத்துவதற்கு, உள்ளாட்சி மன்றங்களுக்கு நிதி உதவி யளிக்கும் திட்டம். | 1,00,000 |
| 15. கோழி வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதி உதவி. | 1,00,000 |
| 16. ராணிப்பேட்டை கால்நடை மருத்துவ நோய்த் தடுப்பு நிலையத்தில், கோமாரி நோய்த்தடுப்பு ஆய்வகத்தை ஏற்படுத்துவதற்கான திட்டம். | 10,00,000 |
| 17. ராணிப்பேட்டை, கால்நடை மருத்துவ நோய்த் தடுப்பு நிலையத்தில், விந்து நீர்மமும், விந்துக் கலவையும் தயாரிப்பதற்கான திட்டம். | 1,68,800 |
| மொத்தம் | 41,24,300 |



1974 மார்ச் 19]

## கால்நடை மருத்துவக் கல்வி-ஆராய்ச்சித் துறை.

கால்நடை மருத்துவக் கல்வி-ஆராய்ச்சித் துறை 6—8—1969-ல் ஏற்படுத்தப்பட்டது. கால்நடை மருத்துவக் கல்வி-ஆராய்ச்சித் துறையின்கீழ், கீழ்க்கண்ட பிரிவுகள் அடங்கும் :—

(1) சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி, சென்னை.

(2) கோழி இன ஆராய்ச்சி நிலையம், தேனும்பேட்டை.

(3) கால்நடை ஆராய்ச்சி நிலையம், காட்டுப்பாக்கம்.

(4) செம்மறியாட்டு இனப்பெருக்க ஆராய்ச்சி நிலையம், சத்தியநல்லா.

## சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி.

இக் கல்லூரியில் பி.வி.எஸ்சி. எம்.வி.எஸ்சி, பட்டப் படிப்புகளுக்கான பாட முறைகள் உள்ளன. ஒவ்வொரு ஆண்டும் பி.வி.எஸ்சி. பட்டப் படிப்புக்கு 136 மாணவர்களும், எம்.வி.எஸ்சி. பட்டப் படிப்புக்கு 48 மாணவர்களும் சேர்க்கப்படுகின்றனர். இந்திய அரசு, தமிழ்நாடு அரசு ஆகியவற்றால் அளிக்கப்பட்ட தாராள படிப்பு உதவித் தொகை, சென்னை கல்வி கடன் விதிகளின் கீழ் வழங்கப்பட்ட கடன்கள் ஆகியவற்றின் மூலம், 1972-73 ஆம் ஆண்டில் 598 மாணவர்கள் பயனடைந்துள்ளனர்.

சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் 25 சிறப்புத் துறைகள் உள்ளன. எல்லாவகையிலும் நிறைவு பெற்ற கால்நடை மருத்துவமனை இந்தக் கல்லூரியில் உள்ளது. ஒவ்வோர் ஆண்டும், இந்த மருத்துவ மனையில் 1,00,000-க்கு மேற்பட்ட கால்நடைகளுக்குச் சிகிச்சையளிக்கப்பட்டு வருகிறது. சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியை மேம்படுத்துவதற்கான கருத்துரைகளை வழங்குவதற்கு, இந்த மருத்துவக் கல்லூரியில் கௌரவப் பார்வையாளர்கள் குழு ஒன்று உள்ளது. இந்தக் கல்லூரி 12,000 நூல்களையும், 6,500 பழந் தொகுதிகளையும், சஞ்சிகைகளையும் கொண்ட நல்லதொரு நூல் நிலையத்தைப் பெற்றுள்ளது. ஐநூறு மாணவர்கள் தங்குவதற்கு வசதியான விடுதியை இக்கல்லூரி கொண்டுள்ளது. பட்ட மேற்படிப்பு மாணவர்கள் 100 பேர் தங்குவதற்காக ரூ. 8.65 லட்சம் செலவில் தனியான ஓர் விடுதி கட்டப்பட்டு வருகிறது.

### ஆராய்ச்சி.

இந்த துறையில் பல்வேறு ஆராய்ச்சிப் பணிகள் நிறைவேறி வருகின்றன. இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்திடமிருந்து 6 திட்டங்கள் முழு நிதி உதவி பெறுகின்றன. ஐந்து திட்டங்கள் 50 சதவீத நிதி உதவி பெறுகின்றன. பதினாறு திட்டங்களுக்கு மாநில அரசு உதவியளிக்கிறது. இந்த துறையினால் 14 திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு உள்ளன. இத் துறை மேலும் 5 இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத் திட்டங்களை வெகு விரைவில் நிறைவேற்றத் திட்டமிட்டுள்ளது. வெவ்வேறு ஆய்வுத் திட்டங்களை பரிசீலிக்கவும், முன்னேற்ற அறிக்கைகளை ஆய்வு செய்வதற்கும் கால்நடை மருத்துவ அறிவியலுக்கான மாநில ஆய்வுக் குழு அங்கு செயல்பட்டு வருகின்றது. இந்தக் குழு ஆய்வுச் சஞ்சிகையை (கெய்ரான்) வெளியிடுகிறது.

### கோழியின ஆராய்ச்சி நிலையம், தேனாம்பேட்டை.

சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் உருவாக்கப்பட்ட 'மேயர்' கோழி வகையைக் கொண்டு இந்த வகைக் கோழியினங்களை அதிக அளவில் பெருக்குவதற்கு இந்த வளர்ச்சிப் பணியின் மீது அதிக நாட்டம் செலுத்தக் கருதப்பட்டுள்ளது இந்தப் பணி காட்டுப்பாக்கம் கால்நடைப் பண்ணை ஆராய்ச்சி நிலையத்திற்கு இந்த ஆண்டு மாற்றப்படும். 1972-73 ஆம் ஆண்டுகளில் இந்த நிலையம் 2.98 லட்சம் முட்டைகளையும், 31—12—197 வரை ஏறத்தாழ 2.48 லட்சம் முட்டைகளையும் உற்பத்தி செய்துள்ளது. இறைச்சிக்கான அகில இந்திய ஒருங்கிணைந்த ஆராய்ச்சித் திட்டம், இந்த நிலையத்தில் செயல்பட்டு வருகிறது.

### கால்நடை ஆராய்ச்சி நிலையம், காட்டுப்பாக்கம்.

இப் பண்ணையில் இறைச்சிக்காக என்றே புதியவகை செம்மறியாடுகளை வளர்க்கும் பொருட்டு, மெட்ராஸ் ரெட், மாண்டியா இனம் அகிய செம்மறியாடுகளின் இனப் பெருக்கும் மேற்கொள்ளப் பட்டிருக்கிறது. பன்றி வளர்ப்பவர்களுக்கு அளிப்பதற்காக உயர்ந்த இனப் பன்றிகளை உற்பத்தி செய்வதற்காக 100 பெண் பன்றிகள் கொண்டதாக இப் பண்ணையை மேம்படுத்துவதற்கும் பன்றி வளர்ச்சி பற்றிய ஆராய்ச்சிப் பணி இப் பண்ணையில் நடைபெறுகிறது.



### செம்மறியாட்டு இனப்பெருக்க ஆராய்ச்சி நிலையம், சந்தியநல்லா.

தென்னகத்திலேயே சிறந்த வகை கம்பளி உரோமத்தை உற்பத்தி செய்யும் ஒரே ஆராய்ச்சி நிலையமான இந் நிலையத்தில், உள்நாட்டுச் செம்மறியாட்டை, ரஷ்ய செம்மறியாட்டுடன் சேர்த்துப் புதிய வகையினை உருவாக்கும் ஆராய்ச்சி நடைபெற்று வருகிறது. இக் காரியத்திற்காக "மெரினோ" இனச் செம்மறியாடுகள் இறக்குமதி செய்யப்படுகின்றன. ரூ. 2.50 லட்சம் செலவில், போதுமான சாதனங்களுடன், கம்பளி பகுப்பாய்வு ஆய்வுக் கூடமும், மருத்துவ ஆய்வுக் கூடமும் தொடங்கக் கருதப் பட்டுள்ளது. நேர்த்தியான கம்பளிக்கான செம்மறியாடுகள் குறித்த அகில இந்திய ஒருங்கிணைந்த ஆராய்ச்சித் திட்டத்தை இந்த ஆண்டு செயல்படுத்தக் கருதப்பட்டுள்ளது.

மேச்சேரி, மாண்டியா ஆடுகளின் உடலியல் சம்பந்தமான ஆராய்ச்சிகளுக்கான, இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தின் திட்டம் கொளத்தூரில் செயல்பட்டு வருகிறது. இந்த திட்டம் மேற்கொண்டும் ஓராண்டு 9 திங்களுக்கு நீடிக்கக் கருதப் பட்டுள்ளது.

### இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தின் நிதி உதவி.

இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகம், தனிப்பட்ட மானியங்கள், திட்ட மானியங்கள் ஆகிய வழிகளில், இத்துறையின் பல்வேறு ஆராய்ச்சிப் பணிகளுக்குத் தனது நிதி உதவியை நீட்டித்துள்ளது. 1969-70 ஆம் ஆண்டிலிருந்து, இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தால் ரூ. 40.21 லட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது. ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தால் வழங்கப் படும் நிதி உதவி ரூ. 46.89 லட்சமாகயிருக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

ஐந்தாம் ஐந்தாண்டுத் திட்டத்தில், கால்நடை மருத்துவக் கல்வி—ஆராய்ச்சிக்கு ரூ. 535.24 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. அதில் 1974-75 ஆம் ஆண்டு, ஆண்டு திட்டத்திற்கு ரூ. 41.21 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. செயல்படுத்தக் கருதப்பட்டிருக்கும்

(ரூபாயில்.)

திட்டங்கள் அவற்றின் செலவுத் தொகையுடன் கீழே குறிப்பிடப் பட்டுள்ளன :—

| | (ரூபாயில்.) |
|---|---|
| 1. சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் பெரிய விலங்குகளுக்கு மருத்துவச் சிகிச்சைக் கட்டிடம் கட்டுதல். | 5,00,000 |
| 2. சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் சிறிய விலங்குகளுக்கு மருத்துவச் சிகிச்சைக் கட்டிடம் கட்டுதல். | 1,15,000 |
| 3. சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் சிறிய விலங்குகளை அங்கேயே வைத்து சிகிச்சையளிப்பதற்காக மருத்துவக் கட்டிடம் கட்டுதல். | 1,00,000 |
| 4. சந்திய நல்லா செம்மறியாட்டு வளர்ப்பு ஆராய்ச்சி நிலையத்தில் ஆட்டுக் கொட்டகையும், காவலர் இல்லங்களும் கட்டுதல். | 1,50,000 |
| 5. சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி, இறைச்சி ஆய்வகத்திற்கு மேல் இரண்டாவது மாடிக் கட்டிடம் கட்டும் திட்டம். | 1,00,000 |
| 6. சந்திய நல்லா செம்மறியாட்டு வளர்ப்பு ஆராய்ச்சி நிலையத்திலுள்ள கம்பளி பகுப்பாய்வு, மருந்தக ஆய்வகம் ஆகியவைகளை வலுப்படுத்துதல். | 2,50,000 |
| 7. சந்திய நல்லா செம்மறியாட்டு வளர்ப்பு ஆராய்ச்சி நிலையத்தில் நிர்வாகக் கட்டிடம் கட்டுதல். | 1,50,000 |
| 8. சந்திய நல்லா செம்மறியாட்டு வளர்ப்பு ஆராய்ச்சி நிலையத்தில் கம்பிவேலி அமைத்தல். | 1,00,000 |
| 9. காட்டுப்பாக்கம் கால்நடைப் பண்ணை ஆராய்ச்சி நிலையத்தில் மாணவர் விடுதியை கட்டுவதற்கான திட்டம். | 1,00,000 |



| | (ரூபாயில்.) |
|---|---|
| 10. காட்டுப்பாக்கம் கால்நடைப் பண்ணை ஆராய்ச்சி நிலையத்திலுள்ள கோழியினப் பெருக்கப் பணியை விரிவுபடுத்துவதற்கான திட்டம். | 1,47,700 |
| 11. சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி டோபின் ஹாலுக்குப் பதிலாக கட்டிடம் கட்டுவதற்கான திட்டம். | 2,00,000 |
| 12. சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி ஆய்வக விலங்கு மருந்தகத் துறை கட்டிடம் கட்டுதல். | 1,50,000 |
| 13. சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் பால்பண்ணை—விரிவாக்கப் பிரிவு—அரங்குக் கட்டிடம் கட்டுதல். | 4,00,000 |
| 14. காட்டுப்பாக்கம் கால்நடைப் பண்ணை ஆராய்ச்சி நிலையத்தில் பணியாளர் இல்லங்கள் கட்டுதல். | 1,00,000 |
| 15. காட்டுப்பாக்கம் கால்நடைப் பண்ணை ஆராய்ச்சி நிலையத்திற்கு இயந்திரக் கலப்பை வாங்குதல். | 43,500 |
| 16. காட்டுப்பாக்கம் கால்நடைப் பண்ணை ஆராய்ச்சி நிலையத்தில் கிணறுகள் தோண்டுதல். | 50,000 |
| 17. சந்திய நல்லா செம்மறியாட்டு ஆராய்ச்சி நிலையத்தில் பணியாளர் இல்லங்கள் கட்டுதல். | 1,00,000 |
| 18. காட்டுப்பாக்கம் அருகே, கால்நடைத் தீவன ஆராய்ச்சி நிலையம் அமைத்தல். | 46,200 |
| 19. ஆடு மாடுகள் கலப்பின இனப்பெருக்க ஆராய்ச்சிக்கான திட்டம். | 3,40,900 |
| 20. சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் தற்போதுள்ள பிரிவுகளை வலுப்படுத்துவதற்கான திட்டம். | 3,00,000 |

[1974 மார்ச் 19

(ரூபாயில்.)

| | |
|---|---|
| 21. ஒரத்தநாடு மாவட்ட கால்நடைப் பண்ணையில் கால்நடை உதவியாளர் பாட முறையை மீண்டும் கொண்டுவருதல். | 72,000 |
| 22. இறைச்சிக்காக ஆராய்ச்சியின் மூலம் புதிய இன ஆடுகளை உண்டாக்குதல் திட்டம். | 1,46,100 |
| 23. சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி பட்ட மேற்படிப்பு மாணவர் விடுதிக்கு மேல் 2 மாடிகள் கட்டுதலும் மரச்சாமான்கள் வாங்குதலும். | 50,000 |
| 24. சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி மாணவர் விடுதியில் மேல்நிலை நீர்த் தொட்டியுடன் திறந்த கிணறு தோண்டுவதற்கான நிதி ஒதுக்கீட்டுத் திட்டம். | 50,000 |
| 25. சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி விடுதியில் பால்பண்ணை செய்முறை விளக்கப் பிரிவு தொடங்குவதற்கான திட்டம். | 59,900 |
| 26. சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி பணியாளர் எண்ணிக்கையை அதிகரித்தலும், கருவிகள் வாங்குதலும். | 2,00,000 |
| 27. சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் செயற்கை முறை இன விருத்திப் பிரிவுக்கான கட்டிடம் கட்டுதல். | 1,00,000 |
| மொத்தம் . . | 41,21,300 |

# Index to Tamil Nadu Legislative Assembly Debates.

TENTH SESSION OF THE FIFTH LEGISLATIVE ASSEMBLY UNDER THE CONSTITUTION OF INDIA

15TH, 16TH, 18TH & 19TH MARCH 1974.

VOLUME L (Nos. 1 to 4).

A

PAGES

ABDUL JABBAR, THIRU V. M.—

Budget, 1974–75, G.D. ... ... ... 70–76

Coimbatore-Madras Highways, road improvement work ... ... ... ... ... ... 160

Dam across river Noyyal ... ... ... 18–19

ACCIDENTS—

Electrocution of Cows at Velachery, details ... [illegible]

ADITANAR, THIRU Si. Pa.—

Budget, 1974–75 Voting : ... ... ...

Agriculture ... ... ... ....

Capital Outlay on Agriculture ... ... ...

Animal Husbandry ... ... .... 531, 536, 537, 546-549, 622-623, 629-647

AGRICULTURE—

Fertilisers, supply in Cheranmahadevi Union ... 313–314

A—*cont.*

PAGES

ALAGAMUTHU, THIRU T. P.—
  Allotment of time to members for discussion (Point of Order) ... ... ... ... ... 543-544

ALAGARSAMY, THIRU S.—
  Budget, 1974–75, Voting—
    Agriculture ... ... ...
    Capital Outlay on Agriculture ... ...
    Animal Husbandry ... ... ... 534–535,
    ... ... ... ... ... ... 534–535, 536, 538, 604-608
    Registration Department ... ... 178,
    Welfare of the Backward Classes, etc. ... ... 213-220

ANANDANAYAKI, THIRUMATHI T. M.—
  Allotment of time to Members for discussion (Point of Order) ... ... ... ... 542
  Budget, 1974-75, Voting—
    Agriculture ... ... ...
    Capital Outlay on Agriculture ... ...
    Animal Husbandry ... ... ... 539
    Motor Vehicles Acts—Administration ...
    Road Transport Schemes ... ... ...
    Capital Outlay on Road Transport Schemes ...
    Statitionery and Printing ... ...... 82–86
    Registration Department ... ... ...
    Welfare of the Backward Classes, etc. ... 228–235
  Labour Welfare Fund, details ... ... 24–25
  Slum Clearance Board, activities ... ... 525-526
  Supermarket, Madurai, working ... ... 520-521

ANBAZHAGAN, THIRU K.—
  Budget, 1974-75, Voting—
    Medical ... ... ... ...
    Public Health ... ... ... ...
  Capital Outlay on Public Health, Sanitation and Water-Supply ... ... ... ... ... 326, 327, 328, 329
  Urban Development ... ... ... ... 330-336, 341–342, 343, 347, 349, 351, 352–353, 354–355, 358–359, 361–362, 364, 365, 368–369, 385–386, 388, 397, 398–399, 401–416

ANNAMALAI, THIRU C. V. M.—
  Budget, 1974–75, Voting—
    Agriculture ... ... ... ...
    Capital Outlay on Agriculture ... ...
    Animal Husbaudry ... ... 572–576

ARCHAEOLOGY—
  Collections, renovation ... ... ... ... 148
  Excavations ... ... ... ... 148
  Old forts, renovation ... ... ... ... 149–150

ARTISTS—
  Financial assistance ... ... ... ... 293–297
  South Indian Artists Association, aid for building 297

ARUMUGAM, THIRU C.—
  Budget, 1974–75, Voting—
    Motor Vehicles Act—Administration ... ...
    Road Transport Schemes ... ... ...
    Capital Outlay on Road Transport Schemes ...
    Stationery and Printing ... ...... ... 71–75

PAGES

ARUMUGAM, THIRU S.—
Budget, 1974-75, Voting—
Agriculture ... ... ... ...
Capital Outlay on Agriculture ... ... ...
Animal Husbandry ... ... ... ... 608-611

B.

BALAKRISHNAN, THIRU K.—
Budget, 1974-75, Voting—
Agriculture ... ... ... ...
Capital Outlay on Agriculture ... ... ...
Animal Husbandry ... ... ... ... 579-582

BALASUNDARAM, THIRU V.—
Ayurvedic system for termination of pregnancy ... 154-157
Munroe bridge, widening ... ... ... 316-317

BILL(S)—
Appropriation (Vote on Account) Bill, 1974—
Message from Governor ... ... ... 36
Int. .. ... ... ... ... ... 36-37
Consid., ... ... ... ... ... 174-176
Consid. Cl., ... ... ... ... ...
Motion to pass, ... ... ... ...
Passed ... ... ... ... ... 176
Motor Vehicles Taxation Bill, 1974—
Message from Governor ... ... ... 534
Int., ... ... ... ... ... 534

BOARDS—
Slum Clearance, activities ... ... ... 525-526



PAGES

BOMMAN, THIRU K. H.—
Budget, 1974-75, Voting—
Registration Department ... ... .. 177
Welfare of the Backward Classes, etc. ... 202-205, 209-210

BOOKS AND PUBLICATIONS—
"Tamil Arasu", details ... ... ... ... 13-15

BRIDGES AND CULVERTS—
Across Nallaru between Angeripalayam and Chettipalayam villages ... ... ... ... 309-310
Grand Anicut, widening ... ... ... ... 158-159
Munroe—, widening ... ... ... 316-317
Road—across vaigai on Padmathur—Thiruppa-Chethi link road ... ... ... ... 309

BROADCASTINGS—
Television Course, introduction ... ... ... 1-8

BUILDINGS—
Government quarters, rent ... ... ... ... 502-503

C.

CHAIR—
Announcements—
House Committee, election to ... ... ... 174
Privileges Committee, election to ... ... ... 173
Adjournment Motion—Rulings and observations
*Strike in Basin Bridge Power House and consequent fall in production of electricity.*—
Consent was withheld after the statements made by the Chief Minister and the Minister for Electricity ... ... ... ... 533

PAGES

CHAIR—*cont.*
Rulings and Observations—*cont.*
Attendance in the House—
On 16th March 1974, on his attention being drawn to lack of quorum in the House, a Member of the Panel of Chairmen who occupied the Chair observed : "Though many Members sign the attendance register, it is regrettable that they have not come into the House but are sitting in the lobbies. They might so adjust themselves and see that too many did not sit in the lobbies and adequate Members sat in the House, to ensure that there was always quorum in the House. Lack of quorum did not speak well of either the Members or the House. Even the Ministers should not keep the Treasury Benches vacant. They could dispose of the files in the House itself. It is the duty and responsibility of the Members belonging to the ruling and opposition parties as well as the Ministers to ensure quorum in the House at all times" ... ... ... ... 205–209

Later when the Speaker was in the Chair, the Chief Minister explained that Ministers tried to be present in the House as far as possible but just as it will not be possible for all the Members to be present in the House at all times due to preoccupations, the Ministers too, due to indisposition or due to their being engaged in equally important official duties outside the House may not find it possible to be present in the House at all times. Even if Ministers were in their Chamber, they were listening to the speeches as loudspeakers have been fixed in their Chambers. He sought the protection of the Speaker in the matter lest it should give the impression that they were not discharging their duties properly by attending the House.



PAGES

CHAIR—*cont.*
Rulings and observations—*cont.*
Attendance in the House—*cont.*
The Speaker observed that the very idea of providing loudspeakers in the Ministers' Chambers was to enable them to hear the speeches made in the House when they found it not possible to attend the House due to other important official duties to be discharged from their respective Chambers. So, even if they were not actually present in the House, their presence in their Chambers and hearing the speeches could be construed as their presence in the House ... ... 222

Business of the House—
Can be conducted only in accordance with the decisions of the Business Advisory Committee and time allotted accordingly ... ... 49

Debate—
*Allotment of Time*—
With reference to the complaints made by some Members of opposition parties that adequate time was not given for them to express their views fully, the Speaker quoting statistics observed that the opposition Members were given comparatively more time than the ruling party Member They would have to consider whether the number of questions to be taken up on each day might be reduced or the time for question hour might be increased. The Leaders of parties would do well to meet, discuss and come to a decision on the matter and apprise him of the same ... 539–546

*Leader of the Opposition to be the last speaker*—
Normally after the speech of the Leader of the Opposition other Members should not talk and only the Minister should reply. But, in the House, as only the Leader of a

PAGES

CHAIR—*cont.*

Rulings and observations—*cont.*

Debate—*cont.*

*Leader of the Opposition to be the last speaker*—cont.

party which had at least 24 Members could be recognised as a Leader of the Opposition and as the leader of an opposition party could not be considered as the Leader of the Opposition, there was nothing wrong in the Chair allowing a Member to speak after the leader of an opposition group had spoken ... ... ... ... 390

***Members to speak with the permission of the Chair***—

No Member should speak in the House without the permission of the Chair. It was not proper for Members to indulge in mutual exchanges, sitting. All the Members should strictly adhere to this ruling. ... ... ... ... ... 299

When a Member alleged that the Minister for Agriculture did not know about agriculture, the Minister retorted whether the Member knew about sugarcane cultivation and put him some questions regarding the same. Then the Member challenged that the Minister should resign, if he answered his questions and he would resign, otherwise.

The Speaker observed that he would remind all Members and Ministers alike—not to convert the House into an election platform. It was not fair for both the Member and the Minister to indulge in such exchanges inside the House. He appealed to the Members not to bring the House to such a state of affairs ... ... ... ... 571–572, 611



PAGES

CHAIR—*cont.*

Rulings and observations—*cont.*

Decorum—

Imputation of motives against any Minister or the Chair should be avoided ... ... 564–565, 566

Demands for Grants—

After the Minister's reply to a Demand no new details should be given on the pretext of seeking a clarification ... ... ... ... 118–119

Cut Motions—

At the time of voting on Demands for Grants and Cut Motions a Member could only say whether he pressed or withdrew his cut motion. He could neither give expression to new ideas nor insist that the Minister should answer all the points raised by him ... ... ... 118–1..

***Supply of 'Performance Budget etc.' in advance***—

On 16th March, 1974, a Member rising on a point of order complained that contrary to the earlier directions of the Speaker, the Performance Budget relating to the Backward Classes Demand was circulated to Members only on the day of discussion, and as such they could not be expected to make their contributions to the debate. He urged the Speaker to give a direction to the Ministers that in future when a Demand was taken up, the Performance Budget and other connected papers should be circulated to the Members the previous day itself.

The Speaker observed that he would discuss the matter with the Ministers and ask them to see that such a situation did not recur ... ... ... ... ... 276

PAGES

CHAIR—*cont.*

Rulings and Observations—*cont.*

Members' Presence—

On a point of order raised by a Member of the ruling Party about the absence of the Members of the A.D.M.K. and the Communist Party, the Chair observed that Members could not be compelled to be present in the House always ... ... ... ... 349

Point of Order—

*Alleged threatening attitude of a Member—*

A Member rising on a point of order brought to the notice of the Speaker that he had not given any ruling on the point raised by another Member alleging that the former Deputy Speaker had used threatening language against him. He wanted protection both inside the House and in the Constituency.

The Chair reiterated its earlier ruling that Members should speak only after getting the permission of the Chair and that it was not proper to express their views sitting. He deprecated such practices and ordered the Press not to give any credence to such talks and not to publish the same. Such talks would not also form part of the proceedings of the House.

When the former Deputy Speaker said that he also knew how to make insinuating personal remarks the Speaker observed that it was not proper for the Member to take this attitude and it was the responsibility of the Chair to protect the dignity of the House as and when Members indulged in such talks ... ... ... ... 322-3



PAGES

CHAIR—*cont.*

Rulings and observations—*cont.*

One should not pave the way to another point of order, while making a clarification in respect of a point of order. ... ... 323

Procedure—

*Handing over of documents—*

It was not in order for a Member to hand over anything direct to the Minister but should hand over the same through the Speaker 83

Questions and Answers—

*Supplementary questions—*

A Member rising on a point of order pleaded for expunction of a supplementary question which indirectly referred and related to the Leader of his Party.

The Speaker ruled out the point of order with the observation that no reference was made in the supplementary to any person in particular ... ... ... ... ... 299-324

After a question has been put and answered and the next question has been taken up, it is not proper to revert to the previous question and allow supplementaries ... ... 298

*Opportunity to put—*

All Members could not be given a chance to put supplementaries on all questions in the limited time available ... ... ... 519-521

*Relevancy—*

Supplementaries should relate to the main question, as it is not possible for the Ministers to answer questions in general 307

Should relate to the main question, but not contain suggestions ... ... ... ... 318

PAGES

COLLEGE(S)—
Engineering Colleges, introduction of Sandwich course in ... ... ... ... 506–507

COMMITTEE(S)—
House, election (M) ... ... ... ... 173–174
Privileges, election (M) ... ... ... ... 173

CO-OPERATIVES—
Agricultural Marketing Society, Lalgudi dissolution 522–523
Park Town Co-operative Stores, profit earned in 1970–71 ... ... ... ... ... 521–522
Spinning Mill at Melur, expansion ... ... 512–513
Supermarket, Madurai, working ... ... ... 520–521

D.

DAM(S)—
—across river Noyyal ... ... .. ... ... 18–19
Wallaja, widening ... ... ... ... 310

DENNIS, THIRU N.—
Artists, financial assistance for ... ... ... 293–297
Budget 1974–75—Voting—
Agriculture—
Capital Outlay on Agriculture Animal Husbandry 538
Medical
Public Health
Capital Cutlay on Public Health, Sanitation and Water Supply. 327,328
Urban Development.
Registration Department ... ... ...
Welfare of the Backward Classes, etc. ...
Cinema Theatre, seating arrangement ... ... 526–527
Course in Television, introduction ... ... 1–3
Egg sales in Milk Kiosks, Madras ... ... 171–172
Hand-pulled rickshaws, compensation for ... 317



PAGES

DENNIS, THIRU N.—*cont.*
Budget, 1974–75—Voting—*cont.*
Khus—Khus, Production ... — ... 310–311
Mukhya Sevikas of Women's Welfare Department, emoluments ... ... ... ... 18
Mulberry plantations, cultivation ... ... 514–516
Police Academy, Alamadi ... ... ... 143–145
Police personnel, apprehension for doubling currency notes ... ... ... ... 145–148

DEVANDIRAN, THIRU A.—
Government quarters, rent ... ... ... 502–503
Old forts, renovation ... ... ... ... 149–150

DISEASES—
Epilepsy, research on ... ... ... ... 150–152

DISTRICT ADMINISTRATION—
Ottapidaram, upgrading as taluk ... ... ... 517

DORAISAMY, THIRU S.—
Archaeological collections, renovation ... ... 148
Bridge across Nallaru between Angeripalayam and Chettipalayam villages ... ... ... ... 309–310
Science Laboratories in Tiruppur Union Schools ... 505–506
Stadium at Coimbatore ... .. ... ... 507–508

E.

ELECTRICITY—
Domestic consumption, restrictions ... ... 26–28
Strike in Basin Bridge Thermal Station (A.M.) ... 528–533

EMPLOYMENT—
Half a Million Jobs Programme, details ... ... 161–167

ETTIAPPAN, THIRU P.—
Budget, 1974–75, Voting—
Welfare of the Backwad Classes, etc.
Registration Department ... ... ... 200–202

## F.


PAGES

FACTORIES—

Soap—setting up ... ... ... ... ... 168-169

FILMS—

Children, production ... ... ... ... 3-5

FINANCIAL BUSINESS :

Budget (Vote on Account), 1974-75—

Land Revenue Department ... ... ...

State Excise Department ... .. ... ...

Motor Vehicles Acts—Administration ... ...

General Sales Tax and other taxes and Duties—Administration ... ... ... ... ...

Stamps Administration ... ... ... ...

Registration ... ... .. ... ...

State Legislature ... ... ... ...

Elections ... ... ... ... ... ...

Head of State, Ministers and Headquarters Staff

Milk Supply Schemes ... .. ... ...

District Administration ... ... ... ...

Administration of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959 ...

Administration of Justice ... ... ... 29-36

Jails ... ... ... ... ... ...

Police ... ... ... ... ...

Firce Services ... ... ... ... ...

Education ... ... .. ... ...

Medical ... ... ... ... ... ...

Public Health ... ... ... ... ...

Agriculture ... ... ... ... ...

Fisheries ... ... ... ... ...

Animal Husbandry ... ... ... ... ...

Co-operation ... ... ... ... ...

Industries ... ... ... ... ... ...

Cinchona ... ... . ... ...

Handlooms and Textiles ... .. ... ...

Khadi ... ... ... ... ... ...

PAGES

FINANCIAL BUSINESS—*cont.*

Community Development Projects, etc. ...

Labour including Factories ... ... ...

Welfare of the Scheduled Tribes and Castes, etc.

Welfare of the Backward Classes, etc. ...

Housing ... ... ... ... ...

Urban Development ... ... ... ...

Civil Supplies ... ... ... ... ...

Irrigation ... ... ... ... ...

Public Works—Buildings ... ... ...

Public Works—Establishment and Tools and Plant

Roads and Bridges ... . ... ...

Road Transport Schemes ... ... ...

Relief on account of Natural Calamities ...

Pensions and Other Retirement Benefits ...

Miscellaneous ... ... ... ... ...

Sationery and Printing ... ... ... ...

Forest Department ... ... ... ...

Compensation and Assignments ... ...

Compensation to Zamindars ... ... ...

Capital Outlay on Public Health, Sanitation and Water Supply ... ... ... ...

Capital Outlay on Agriculture ... ... ...

Capital Outlay on Industrial Development ...

Capital Outlay on Irrigation ... ... ...

Capital Outlay on Public Works—Buildings ...

Capital Outlay on Roads and Bridges ... ...

Capital Outlay on Road Transport Schemes ...

Capital Outlay on Forests ... ... ...

Miscellaneous Capital Outlay .. ... ...

Loans and Advances by the State Government ... 29-36

Budget, 1974-75, Voting—*cont.* :

Agriculture Capital Outlay on Agriculture, Animal Husbandry ... ... ... ... ... 534-648

Medical; Public Health: Capital Outlay on Public Health, Sanitation and Water Supply; Urban Development ... ... ... ... 326-417

F.—*cont.*


PAGES

FINANCIAL BUSINESS—

Motor Vehicles Acts, Administration, Road Transport Schemes, Capital Outlay on Road Transport Schemes, Stationery and Printing ... 37–122

Welfare of the Backward Classes, etc., Registration Department ... ... ... ... 176–243

FISHERIES—

Fishing at Pulicat Lake ... ... ... 508–509

Ice plant at Arumbakkam ... ... ... ... 509–510

FOODGRAINS—

Scoji supply ... ... ... ... 23


G


GANAPATHY, THIRU N.—

Budget, 1974-75, Voting:

Welfare of the Backward Classes, etc., Registration Department ... ... ... ... 187–191

GOPAL, THIRU K. P.—

Budget, 1974–75, Voting:

Motor Vehicles Acts—Administration, Road Transport Schemes, Capital Outlay on Road Transport Schemes, Stationery and Printing 39

Welfare of the Backward Classes, etc. Registration Department ... ... ... ... 177

GURUSAMI, THIRU N. V.—

Budget, 1974–75, Voting:

Motor Vehicles Acts—Administration Road Transport Schemes, Capital Outlay on Road Transport Schemes, Stationery and Printing 69–71




H


PAGES

HANDE, DR. H. V.—

Allotment of time to Members for discussion (Point of order) ... ... ... ... ... 540

Budget, 1974–75, voting:

Agriculture Capital Outlay on agricultural Animal Husbandry ... ... ... ... 537–540

Medical; Public Health; Capital Outlay on Public Health, Sanitation and Water Supply; Urban Development ... ... ... ... ... 326, 328, 330, 390–396, 397–398, 399–401

Motor Vehicles Acts—Administration, Road Transport Schemes, Stationery and Printing ... 37, 53–59

Strike in Basin Bridge Thermal Station (A.M.) ... 530

HANDLOOMS—

Coloured cotton sarees, reservation for ... ... 510–512

HARIJAN WELFARE—

Cuddalore taluk, allotment of house-sites ... 17

Pennalurpet sub-taluk, allotment of house-sites ... 302–303

Pollachi taluk, allotment of house-sites ... ... 304–308

Thiruppuvanam, allotment of ... ... 15–17

Hospitals and Dispensaries:

ESI Hospital for Mettur ... ... ... 25–26

Institutions of Indian Medicine, details ... 152–154

HOSTEL(S).

Tiruchirappalli district, supply of nutritious food in 308–309


I.


ILANGOVAN, THIRU G.—

Bridge at Grand Anicut, widening ... ... 158–159

INDUSTRIES—

Industrial Cadre of Officers ... ... ... 167–168

INSTITUTE(S)—

Film Institute, Adyar, introdution of course in Television ... ... ... ... ... 1–3

J

PAGES

IRRIGATION—

Pazhavarur river, surplus water ... ... ... 159

JAMES, THIRU J.—

Allotment of time to members for discussion (point of order) ... ... ... ... ... 539–541

Budget, 1974–75 voting:

Agricultural Capital Outlay on Agriculture, Animal Husbandry, ... ... ... ... 535, 537

Motor Vehicles Acts—Administration, Road Transport Schemes, Capital outlay on Road Transport Schemes, Stationery and Printing ... 40, 41

JOTHI VENKATACHELLUM, THIRUMATHI.—

Budget, 1974–75, Voting:

Medical, Public Health Capital Outlay on Public Health, Sanitation and Water Supply, Urban Development ... ... ... ... 337–344

Welfare of the Backward Classes, etc., Registration Department ... ... ... ... 192–196

K

KAMATCHI, THIRU K.—

Alleged threatening of a member by another (Point of Order) ... ... ... ... ... ...

KANDAPPAN, THIRU S.—

Allotment of time to members for discussion (Point of Order) ... ... ... ... 540-541

KANDASAMI, THIRU Manali C.—

Budget, 1974–75, voting:

Medical, Pubic Health, Capital Outlay on Public Health, Sanitation and Water Supply, Urban Development ... ... ... ... ... 377–380



PAGES

KANDASAMY, THIRU K.—

Budget, 1974-75, Voting:

Motor Vehicles Acts—Administration Road Transport Schemes, Capital Outlay on Road Transport Schemes, Stationery and Printing 79–82

Welfare of the Backward Classes, etc., Registration Department ... .. ... ... 212–215

KANNAN, THIRU. M. R.— ...

Budget, 1974-75, Voting:

Medical, Public Health Capital Outlay on Public Health, Sanitation and Water Supply. Urban Development ... ... ... ... 383-385

KARUNAINATHAN, THIRU J.—

Budget, 1974–75, voting:

Welfare of the Backward Classes, etc., Registration Department ... ... ... ... 191–192

KARUNANIDHI, DR. M.—

Appropriation (Vote on Account) Bill, 1974 ... 35–37, 174–175, 176

Budget, 1974–75, Voting:

Welfare of the Backward Classes, etc., Registration Department ... ... ... 220–221, 222, 241–242

Strike in Basin Bridge Thermal Station (A.M.) ... 531–532

KESAVALU, THIRU D.—

Budget, 1974–75, Voting:

Motor Vehicles Acts—Administration Road Transport Schemes, Capital Outlay on Road Transport Schemes, Stationery and Printing 67–69

KHUS-KHUS—

Production ... ... ... ... ... 310–311

KITTAPPA, THIRU N.—

Archaeological excavations ... ... ... 148

Cycle rickshaws, distribution ... ... .. 317–320

PAGES

KITTAPPA THIRU N.—*cont.*

Films for children, production ... ... ... 3-5
Half a million jobs programme, details ... 161-167
Institutions of Indian Medicine, details ... ... 152–154
Jeeps, purchase ... ... ... ... ... 169–171
Mayuram-Manalmedu Highway, widening ... 510
Mayuram Municipal High School building, grant 297–298
Park Town Co-operative stores, profit earned in 1970–71 ... ... ... ... ... 521–522
Pazhavaru river, surplus water ... ... ... 159
Riverside porambokes in Mayuram, encroachment ... 510
South Indian Artists Association, aid for building 297
Workshop for Transport buses at Mayuram, construction ... ... ... ... ... 171

KOTHANDARAMIAH, THIRU K. S.—

Budget, 1974–75, Voting :
Agriculture, Capital Outlay on Agriculture, Animal Husbandry ... ... ... 535, 536, 538, 611–614

Budget, 1974–75, Voting—*cont.*
Medical, Public Health, Capital Outlay on Public Health, Sanitation and Water Supply, Urban Development ... ... ... ... 327
Motor Vehicles Acts—Administration, Road Transport Schemes, Capital Outlay on Road Transport Schemes, Stationery and Printing ... ... 38, 91–94
Welfare of the Backward Classes, etc., Registration Department ... ... ... ... 179

KOVAI CHEZHIAN, THIRU—

Budget, 1974–75, Voting :
Agriculture, Capital Outlay on Agriculture, Animal Husbandry ... ... ... 537, 564–572

Medical, Public Health, Capital Outlay on Public Health, Sanitation and Water Supply, Urban Development ... ... ... ... ... 329



PAGES

KRISHNAMOORTHI, THIRU V. (NELLIKUPPAM)—
Budget, 1974–75, voting :
Agriculture. Capital Outlay on Agriculture, Animal Husbandry ... ... ... 559–564

KRISHNAN, THIRU K. R.—
Budget, 1974–75, Voting :
Agriculture, Capital Outlay on Agriculture, Animal Husbandry ... ... ... ... 589–591

KUMARASAMI, THIRU K. N.—
Budget, 1974–75, Voting :
Agriculture, Capital Outlay on Agriculture, Animal Husbandry ... ... ... ... ... 536

L

LABOUR—
Welfare Fund, details ... ... ... ... 24–25
Workers' Education Centres ... ... ... 523–525

LANDS—
Riverside porambokes in Mayuram, encroachment 510

LATHEEF, THIRU M. A.—
Allotment of time to members for discussion (Point of Order) ... ... ... ... 544
Budget, 1974–75, Voting :
Agriculture, Capital Outlay on Agriculture, Animal Husbandry ... ... ... 535
Medical, Public Health, Capital Outlay on Public Health, Sanitation and Water Supply, Urban Development ... ... ... ... ... 350–3[illegible]
Motor Vehicles Acts—Administration, Road Transport Schemes, Capital Outlay on Road Transport Schemes, Stationery and Printing ... 37, 41, 62–66, 105, 116, 118, 119
Welfare of the Backward Classes, etc., Registration Department ... ... ... ... 178

LAW AND ORDER—
Hoarding of kerosene, cases ... ... ... 23

LIBRARY—
Connemera, working hours ... ... ... 503–505

## M

| | Pages |
|---|---|
| MALAIKANNAN, Thiru V.— | |
| Budget, 1974–75, Voting : | |
| Medical, Public Health, Capital Outlay on Public Health, Sanitation and Water Supply, Urban Development ... ... ... ... ... | 370–372 |
| MARIMUTHU, Thiru A. R.— | |
| Budget, 1974–75, Voting : | |
| Agriculture, Capital Outlay on Agriculture, Animal Husbandry ... ... ... ... ... | 549–559 |
| Registration Department Welfare of the Backward classes etc. ... ... ... | 235-236 |
| Strike in Basin Bridge Thermal Station (AM) | 529–530 |
| MARUDACHALAM, Thiru N.— | |
| Budget, 1974–75, Voting : | |
| Medical, Public Health, Capital Outlay on Public Health, Sanitation and Water Supply Urban Development ... ... ... ... ... | 325 |
| MEDICAL— | |
| Ayurvedic system for termination of pregnancy | 154-157 |
| MOTION(S)— | |
| Ad. Motions : | |
| Strike in Basin Bridge Thermal Station ... | 528–533 |
| House Committee, election ... ... ... | 173–174 |
| Privileges Committee, election ... ... ... | 173 |
| MUNUSAMI, Thiru R. R.— | |
| Electrocution cases at Velacherry, details ... | 527 |
| Epilepsy, research on ... ... ... ... | 150–152 |
| Nandanam-Kottur boat service, details ... ... | 24 |
| Symposium on Ground Water, details ... | 11-13 |
| MUTHIAH, Thiru M.— | |
| Deputy Collectors, recruitment ... ... | 517–519 |
| Ottapidaram, upgrading as taluk ... ... ... | 517 |
| MUTHUSAMY, Thiru P.— | |
| Budget, 1974–75, Voting : | |
| Welfare of the Backward Classes, etc., Registration Department ... ... ... ... | 215–218 |



## M—*cont.*

| | Pages |
|---|---|
| MUTHUSELVAN, Thiru P. S.— | |
| Budget, 1974–75, Voting : | |
| Medical, Public Health, Capital Outlay on Public Health, Sanitation and Water supply, Urban Development ... ... ... ... | 357–360 |

## N

| | Pages |
|---|---|
| NALLASAMY, Thiru S.— | |
| Budget, 1974–75, Voting : | |
| Welfare of the Backward Classes, etc., Registration Department ... ... ... | 226–228 |
| NATARAJAN, Thiru N. V.— | |
| Budget, 1974–75, Voting : | |
| Welfare of the Backward Classes, etc., Registration Department ... ... ... ... | 176–177, 178, 179, 236–241 |
| NEDUNCHEZHIYAN, Dr. V. R.— | |
| Allotment of time to members for discussion, (Point of Order) ... ... ... ... | 544-545 |
| Correction to a reply for a supplementary question (St.) | 528 |
| House Committee, election (M) ... ... | 173–174 |
| Privileges Committee, election (M) ... ... | 173 |

## P

| | Pages |
|---|---|
| PALANISAMY, Thiru M.— | |
| Higher Grade Teachers, Vellakoil Union Schools ... | 10 |
| PALANISAMY, Thiru N. K.— | |
| Budget, 1974–75, Voting : | |
| Medical, Public Health, Capital Outlay on Public Health, Sanitation and Water Supply, Urban Development ... ... ... ... ... | 327, 328, 372–376 |

PAGES

PALANISAMY, THIRU N. K.—*cont.*

Coloured cotton sarees, reservation for Handlooms ... 510–51[illegible]
Course in Television, introduction ... ... ... 1–[illegible]
Cycle rickshaws, distribution ... ... ... 317–32[illegible]
Domestic power consumption, restrictions ... 26–2[illegible]
E.S.I. Hospital for Mettur ... ... ... 25–2[illegible]
Government Employees, reclassification of grades 499–50[illegible]
Half a Million Jobs Programme, details ... 161–167
Industrial Cadre of Officers ... ... ... 167–16[illegible]
Political sufferers, educational concessions to children ... ... ... ... ... ... 5–1[illegible]
Sandwich Course in Engineering Colleges, introduction ... ... ... ... ... 506-507
Sooji, supply ... ... ... ... ... 2[illegible]

PALANISAMY, THIRU N.—

Budget, 1974-75, Voting:
Medical, Public Health, Capital Outlay on Public Health, Sanitation and Water Supply, Urban Development ... ... ... ... ... 376–377

PANCHAYATS—

Drinking Water Supply Scheme, investigation charges ... ... ... ... ... ... 157–15[illegible]

PAPERS LAID ON THE TABLE—

Agricultural Produce Markets Act, 1959, notifications ... ... ... ... ... ... 122, 418
Demand—Capital Outlay on Public Health, Sanitation and Water Supply, speech of Minister for Public Health (English and Tamil) ... ... 650
Demand for Medical Grants, 1974-75, speech of Minister for Health (English and Tamil) ... 650
Demand for Public Health Grants, 1974-75, speech of Minister for Health (English and Tamil) ... 650



PAGES

PAPERS LAID ON THE TABLE—*cont.*

Demands for Advance Grants during 1974-75, notice (English and Tamil) ... ... ... 245
District Municipalities Act, 1920, notifications ... 122, 123.
Madras City Municipal Corporation Act, 1919, notification ... ... ... ... 244, 649, 418
Nationalised Transport in Tamil Nadu, 1973–74, review (English and Tamil) ... ... ... 123
Performance Budget on Health Services and Family Planning, 1974–75 ... ... ... ... 650
Performance Budget on Medical Education, 1974–75 650
Performance Budget on Transport, 1974–75 ... 245
Policy note on Demand—Urban Development, 1974-75 (English and Tamil) ... ... 650
Policy note on Leprosy Beggars Rehabilitation programme for 1974-75 under Demand No. 18 (Tamil) ... ... ... ... ... 650
Registration Department policy note (English and Tamil) ... ... ... ... ... 418
Road Transport in Tamil Nadu, 1973–74, review (English and Tamil) ... ... ... ... 244
Road Transport Schemes and Capital Outlay on Road Transport Schemes, Transport Minister's speech (English and Tamil) ... ... ... 244
Stationery and Printing Department, review (English and Tamil) ... ... ... ... ... 244
Stationery and Printing, Transport Minister's speech (English and Tamil) ... ... ... 244
Town and Country Planning Act, 1971, notifications ... ... ... ... ... ... 244, 417, 418
Vote on Account for expenditure in 1974–75 ... 245
Weights and Measures (Enforcement) Act, 1958, notification ... ... ... ... ... 122
Welfare of the Backward Classes, etc., policy note (Tamil) ... ... ... ... ... ... 245

P.—*cont.*

PAGES

PARANDHAMAN, THIRU A.—
Drinking Water Supply Schemes, investigation charges ... ... ... ... ... ... 157–158

PLANTATION(S)—
Cardamom, production ... ... ... ... 311-313

POLICE—
Academy, location at Alamadi ... ... ... 143–145
Apprehension for doubling currency notes ... 145–148

POLITICAL SUFFERERS—
Educational concessions to children ... ... 5–10

PONCHOKKALINGAM, THIRU P.
Budget, 1974-75, Voting:
Allotment of time for Members for discussion Husbandry ... ... ... ... ... 614–618

PONNAPPA NADAR, THIRU R.—
Allotment of tme for Members for discussion (Point of Order) ... ... ... ... 541-542
Budget, 1974-75, Voting:
Agriculture, Capital Outlay on Agriculture, Animal Husbandry ... ... ... ... 618–629
Medical, Public Health, Capital Outlay on Public Health, Sanitation and Water Supply, Urban Development ... ... ... ... 329, 330, 385–389

PONNUMALAI, THIRU T.—
Budget, 1974-75, Voting:
Agriculture, Capital Outlay on Agriculture, Animal Husbandry ... ... ... ... ... 598–601

POULTRY—
Egg sales in Milk Kiosks, Madras ... ... .. 171–172



R

PAGES.

RAJANGAM, THIRU N.—
House sites for Harijans, Cuddalore ... ... 17

RAMACHANDRAN, THIRU S.—
Budget, 1974-75, Voting:
Motor Vehicles Acts—Administration, Road Transport Schemes, Capital Outlay on Road Transport Schemes, Stationery and Printing 37, 38, 40, 41–44, 50, 85, 102–115, 120
Motor Vehicles Taxation Bill, 1974 ... ... 534

RAMALINGAM, THIRU R.—
Budget, 1974-75, Voting:
Agriculture, Capital Outlay on Agriculture, Animal Husbandry ... ... ... 594-596

RAMAN, THIRU O. P.—
Strike in Basin Bridge Thermal Station (A.M.) ... 532–533

RAMASAMY, THIRU G.—
Connemara Library, working hours ... ... 503–505

RICKSHAWS—
Compensation to persons surrendering hand-pulled 317–320
Cycle-rickshaws, free distribution from Chief Minister's Fund ... ... ... ... ... 317–320

ROAD(S)—
Approach road to bridge near Aladiyur, formation 22
Coimbatore-Madras Highway, road improvement work ... ... ... ... ... ... 160
Mayuram-Manalmedu Highway, widening ... 510
Thottiyam-Srinivasanallur road, repairs ... ... 21–22
Trees on road side, Madras City, felling ... 314–316

## S.

PAGES.

SANGUMUTHU THEVAR, THIRU S.—
Approach road to bridge near Aladiyur, formation ... 22
Manimuthar-Ambasamudram bus service ... 320–321
Trees in road sides in Madras City, falling ... 314–316

SCHOOL(S)—
Girls High School, opening at Thiruppuvanam ... 298–302
Gummudipoondi High School, extension ... 10–11
Mayuram Municipality High School building, grant 297–298
Tiruppur Union, provision of Science Laboratories 505–506

SELVARAJ, THIRU M.—
Budget, 1974–75, voting:
Motor Vehicles Acts—Administration Road Transport Schemes, Capital Outlay on Road Transport Schemes, Stationery and Printing ... ... 59–62

SERICULTURE—
Mulberry plantations, cultivation ... ... 514–516

SERVICES—
Deputy Collectors, recruitment ... ... ... 517–519
Government Employees, reclassification of grades 499–502
Mukhya Sevikas of Women's Welfare Department, emoluments ... ... ... ... ... 18

SHANMUGASUNDARAM, THIRU A. P.—
Harijans of Periapothur and Anamalai villages, house sites for ... ... ... ... ... 304–308

SIVAPRAKASAM, THIRU D. S. A.—
Fertilisers, supply in Cheranmahadevi Union, ... 313–314
Kerosene hoarding, cases ... ... ... 23
"Tamil Arasu", details ... ... ... ... 13–15



## S—*cont.*

PAGES

SOMASUNDARAM, THIRU N.—
Budget, 1974–75, Voting:
Welfare of the Backward Classes, etc., Registration Department ... ... ... ... 210–212

SONIAH, THIRU T.—
Girls High School, opening at Thiruppuvanam ... 298–302
House sites for Harijans, Thiruppuvanam ... 15–17
Kattikulam tank in Manmadurai Union, deepening 20–21
Kizhapasalai tank in Manamadurai Union, deepening ... ... ... ... ... ... 19–20
Milaganur tank in Manamadurai Union, deepening 20
Road bridge across Vaigai on Padamathur-Thiruppachethi link road ... ... ... ... ... 309

SOUNDARAPANDIAN, THIRU P.—
Budget, 1974–75, Voting:
Agriculture, Capital Outlay on Agriculture, Animal Husbandry ... ... ... ... 533
Motor Vehicles Acts—Administration, Road Transport Schemes, Capital Outlay on Road Transport Schemes, Stationery and Printing ... 39–40
Welfare of the Backward Classes, etc., Registration Department ... ... ... ... 177, 179, 187
Cardamom, production ... ... ... ... 311–313
Co-operative Agricultural Marketing Society, Lalgudi, dissolution ... ... ... ... 522–523
Fishing at Pulicat Lake ... ... ... ... 508–509
Government Employees, reclassification of grades 499–502
Hostels in Tiruchirappalli district, Supply of nutritious food ... ... ... ... ... 308–309
Sugar factories, opening in North Arcot district ... 513–514
Thottiyam-Srinivasanallur road, repairs ... ... 21
Workers' Education Centres ... ... ... 523–525

PAGES.

SPORTS—
Stadium at Coimbatore ... ... ... ... 507–508

STATEMENT(S)—
Correction to reply for a supplementary question 528

SUBBIAH, THIRU A. K.—
Allotment of time to members for discussion (Point of Order) ... ... ... ... ... 544

Budget, 1974–75, Voting :
Agriculture, Capital Outlay on Agriculture, Animal Husbandry ... ... ... ... 582–585
Medical, Public Health, Capital Outlay on Public Health, Sanitation and Water Supply Urban Development ... ... ... ... ... 327–328
Welfare of the Backward Classes, etc., Registration Department ... ... ... ... 177, 178, 222–224

SUBBIAH THIRU A. R.—
Budget, 1974–75, Voting :
Motor Vehicles Acts—Administration, Road Transport Schemes, Capital Outlay on Road Transport Schemes, Stationery and Printing ... ... 51–53

SUBRAMANIAM, THIRU A.—
Budget, 1974–75, Voting :
Agriculture, Capital Outlay on Agriculture, Animal Husbandry ... ... ... ... ... 536
Medical, Public Health, Capital Outlay on Public Health, Sanitation and Water Supply, Urban Development ... ... ... ... ... 327, 328, 329–330



PAGES

SUBRAMANIAM, THIRU K. M.—
Budget, 1974–75, Voting :
Agriculture, Capital Outlay on Agriculture, Animal Husbandry ... ... .. ... ... 538, 601–603
Medical, Public Health, Capital Outlay on Public Health, Sanitation and Water Supply, Urban Development ... ... ... ... 380–383

SUGAR—
Factories, opening in North Arcot district ... ... 513–514

SUNDARA BHARATHI, THIRU SOWDI S.—
Budget, 1974–75, Voting :
Agriculture, Capital Outlay on Agriculture, Animal Husbandry ... ... .. ... ... 535, 537, 538, 591–593

SURENDRAN, THIRU M.—
Budget, 1974–75, Voting :
Medical, Public Health, Capital Outlay on Public Health, Sanitation and Water Supply, Urban Development ... ... ... ... ... 361–370
Motor Vehicles Acts—Administration, Road Transport Schemes, Capital outlay on Road Transport Schemes, Stationery and Printing ... ... 38–39

SURULIVEL, THIRU M.—
Budget, 1974–75, Voting :
Motor Vehicles Acts—Administration, Road Transport Schemes, Capital Outlay on Road Transport Schemes, Stationery and Printing ... 75–79

SWAMIDHAS, THIRU A.—
Budget, 1974–75, voting :
Agriculture, Capital Outlay on Agriculture, Animal Husbandry ... ... ... ... ... 576–579
Motor Vehicles Acts—Administration, Road Transport Schemes, Capital Outlay on Road Transport Schemes, Stationery and Printing ... ... 37

T—*cont.*


| | PAGES |
|---|---|
| TANGAMANI, THIRU K. T. K.— | |
| Allotment of time to members for discussion (Point of order) ... | 542–543 |
| Budget, 1974–75, Voting : | |
| Motor Vehicles Acts — Administration, Road Transport Schemes, Capital Outlay on Road Transport Schemes, Stationery and Printing ... | 38, 39, 41, 94–101 |
| Welfare of the Backward Classes, etc., Registration Department ... ... ... ... | 177, 211–212 |
| Performance Budget and connected papers circulation in advance (Point of Order) ... ... ... | 176 |
| Strike in Basin Bridge Thermal Station (A.M.) ... | 528–529, 533, |
| TANKS— | |
| Kattikulam tank in Manamadurai Union, deepening ... ... ... ... ... ... | 20–21 |
| Kizhapasalai tank in Manamadurai Union, deepening ... ... ... ... ... ... | 19–20 |
| Milaganur tank in Manamadurai Union, deepening | 20 |
| TEACHERS— | |
| Higher Grade, Vellakoil Union Schools ... | 10 |
| TELEVISION— | |
| Course, introduction in Film Institute, Adyar ... | 10 |
| THEATRES— | |
| Cinema, seating arrangements ... ... | 526-527 |
| THIRUPPATHY, THIRU K.— | |
| Co-operative Spinning Mill at Melur, expansion ... | 512–513 |

| | PAGES. |
|---|---|
| THYAGARAJAN, THIRU E. S.— | |
| Budget, 1974–75, Voting : | |
| Welfare of the Backward Classes, etc., Registration Department ... ... ... ... | 224–226 |
| TRANSPORT AND COMMUNICATIONS— | |
| Cycle rickshaws, free distribution from Chief Minister's Fund ... ... ... ... | 317-320 |
| Hand-pulled rickshaws, compensation to person surrendering ... ... .. ... ... | 317 |
| Jeeps, purchase ... ... ... ... ... | 169–171 |
| Manimuthar-Ambasamudram bus service, ... | 320–321 |
| Nandanam-Kottur boat service, details ... ... | 24 |
| Uthukkottai-Ambathur bus service ... ... | 321 |
| Workshop at Mayuram, construction ... ... | 171 |


## V


| | |
|---|---|
| VADIVEL, THIRU S.— | |
| Budget, 1974–75, voting : | |
| Motor Vehicles Acts—Administration, Road Transport Schemes, Capital Outlay on Road Transport Schemes, Stationery and Printing ... ... | 40 |
| VEERASAMI, THIRU N.— | |
| Budget, 1974–75, Voting : | |
| Motor Vehicles Acts—Administration, Road Transport Schemes, Capital Outlay on Road Transport Schemes, Stationery and Printing ... | 86–91 |
| VENKATASWAMY, THIRU B.— | |
| Allotment of time to members for discussion (Point of Order) ... ... ... ... ... | 543 |
| Budget, 1974–75, Voting : | |
| Agriculture, Capital Outlay on Agriculture, Animal Husbandry ... ... ... ... | 535, 538, 596–598 |

| | PAGES |
|---|---|
| VEZHAVENDAN, THIRU K.— | |
| Budget, 1974–75, Voting : | |
| Medical, Public Health, Capital Outlay on Public Health, Sanitation and Water Supply, Urban Development ... ... ... ... ... | 344–350 |
| Gummudipoondi High School, extension ... ... | 10–11 |
| Harijans of Alapakkam and Annathanakakkavakkam Colonies, house-sites for ... ... ... ... | 302–303 |
| Harijans of Ayhinjiwakkam colony, house sites for | 303 |
| Ice plant, Arambakkam ... ... ... | 509–510 |
| Uthukottai-Ambattur bus service ... ... | 321 |
| WAHAB, THIRU K. A.— | |
| Budget, 1974–75, voting : | |
| Agriculture, Capital Outlay on Agriculture, Animal Husbandry ... ... ... ... ... | 537, 538, 586–589 |
| Motor Vehicles Acts—Administration, Road Transport Schemes, Capital Outlay on Road Transport Schemes, Stationery and Printing | 39 |
| Welfare of the Backward Classes, etc., Registration Department ... . . ... ... | 178, 196–200 |
| Soap Factories, setting up ... ... ... ... | 168 |
| Wallaja dam, widening ... ... ... ... | 310 |
| WATER SUPPLY— | |
| Symposium on Ground Water, details ... ... | 11–13 |

61647

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

---

Messrs. Account Test Institute. Egmore, Madras-8.
The City Book Co., Mylapore, Madras-4.
Messrs. Higginbothams (Private) Limited Madras-2.
Messrs. New Century Book House (Private) Limited, Madras-2.
Messrs. P. Varadachari & Co., Madras-1.
Messrs. C. Subbiah Chetty & Sons. Madras-5.
Sri S. S. Srinivasaraghavan, Royapettah, Madras-14.
The Educational Agencies, Book-sellers, Madras-1.
The Universal Book House, Moore Market, Madras-3.
Messrs. C. Sitaraman & Co., Madras-14.
Messrs. Mohan Pathipagam and Book Depot, Madras-5.

### IN MUFASSAL OF TAMIL NADU.

Sri E. M. Gopalakrishna Kone, Madurai Madurai district.
Sri A. Venkatasubban, Vellore, North Arcot district.
Messrs. Bharatha Matha Book Depot. Thanjavur, Thanjavur district.
Messrs P. V. Nathan & Co., Kumbakonam, Thanjavur district.
Messrs. Appar Book Stall, Thanjavur.
Messrs. P. N. Swaminathasivam & Co., Pudukkottai, Tiruchirappalli district.
Messrs. S. Krishnaswami & Co., Tiruchirappalli district.
Messrs. Palaniappa Brothers, Tiruchirappalli district.
Sri S. R. Subramania Pillai, Tirunelveli, Tirunelveli district.
Messrs. Nellai Puthaga Nilayam, Book-sellers, 10, Thana Muna Buildings, Tirunelveli Junction.
Sri B. Aruldoss, Villupuram Town, South Arcot district.
Sri V. B. Ganesan, Villupuram, South Arcot district.
Messrs. Vasantham Stores, Book-sellers, Cross Cut Road, Coimbatore.
Messrs Mercury Book Company, 223, Raja Street. Coimbatore.
Sri S. M. Jagannathan, Book-sellers and Publishers, Nagercoil, Kanyakumari.
Messrs. A. K. Chandriah Chettiar and Sons, Salem-1.
Messrs. Meenakshi Pathippagam, Pudukkottai.
Messrs. K. V. Narayana Iyer and Sons, Dindigul, Madurai district.
Messrs. Balaji Book House, Vellore, North Arcot district.
Messrs. Jayakumari Stores, Nagercoil Kanyakumari district.
Messrs. Baby Stores Book-sellers, Villupuram, South Arcot district.
Messrs. Dinamani Stores, Coimbatore-18.
Messrs. Bharathi Puthaga Nilayam, Publishers and Book-sellers, 1-B Town Hall Road, Madurai-1.

### IN OTHER STATES.

Messrs. Jain Book Agencies, New Delhi-1.
Messrs. International Book House. Trivandrum.
Messrs. Firma K. L. Mukhopadhyay, Calcutta-12.
Messrs. Book Links Corporation. Narayanaguda, Hyderabad-29.
Messrs. The Book Syndicate. Hyderabad-1.
Messrs. Labour Law Publications, Hyderabad.

---

PUBLISHED UNDER RULES 234 AND 237 OF THE TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY RULES AND PRINTED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, MADRAS.